ஸ்ரீதேசிகப்பிரபந்தம்—உரை

பரிசோதகர்

வ. ந. ஸ்ரீராமதேசிகாசார்யர்

ஒப்பிலியப்பன்ஸந்நிதி

திருநாகேசுவரம் P. O.

(தஞ்சாவூர் ஜில்லா)

பதிப்பாளர் & ப்ரகாசகர்

R. ரங்கஸ்வாமி ஐயங்கார் B. A., B. L.

அட்வகேட்

செல்வம் நகர் :: தஞ்சாவூர்.

ஸ்ரீதேசிகப்பிரபந்தம் - உரை

பரிசோதகர்

"வித்யாவிசாரத"

வங்கீபுரம் நவநீதம் ஸ்ரீராமதேசிகாசார்யர்

சிரோமணி & வித்வான்

ஒப்பிலியப்பன்ஸந்நிதி

பதிப்பாளர் ப்ரகாசகர்

வழுத்தூர். R. ரங்கஸ்வாமி ஐயங்கார், B.A., B.L.,

அட்வகேட்

செல்வம் நகர் : : தஞ்சாவூர்.

இரண்டாம் பதிப்பு
1958


விலை ரூ. 6=00.

சாரதா விலாஸ பிரஸ்
கும்பகோணம்.

श्रीः

श्रीमते निगमान्तमहादेशिकाय नमः

जीवनं जगतां जीयात् किमप्यपगतस्पृहम् ।
स्वतन्त्वं सर्वतन्त्रेषु वेङ्कटेशाह्वयं महः ॥



தூப்புலில் அர்ச்சைவடிவங்கொண்டு எழுந்தருளியுள்ள
ஸ்ரீமந்—நிகமாந்தமஹாதேசிகன்

FOREWORD

BY

SRIMAN V. V. SRINIVASA AIYANGAR.

Reprint from the Text Publication — 1941.

By my friend, the editor of this publication, I have been asked to furnish it with a foreword. I think I can suspect why I have been so asked. I think I have been the foremost to prick him into unflagging activity in the task undertaken by him, of bringing out a scholarly edition of *Sri Vedanta Desika's* Tamil works popularly known as *Desika Prabandham.* And I suppose he was entitled in his turn to avenge himself on me by condemning me to write a foreword.

I console myself however with the reflection that a foreword, especially to such an edition, is not uncalled for. Many decades ago, a great Tamil scholar set up for the Tamil land an idea and ideal of scholarship especially in the publication and printing of ancient Tamil works. But in spite of such actual example, the standard set up by him has been found unapproachable. He was left severely alone almost without a second. It is therefore a matter for gratification that in the preparation of the text of the present publication the editor has brought to bear ideas and ideals reminiscent of that great scholar.

I know personally somewhat of the care and trouble and zeal with which the learned editor of this publication has been able to find out and fix up the proper readings. He has not spared himself nor has he spared the large number of competent scholars whom he consulted almost with regard to every one of the questions relating to the text which came up for decision and determination. It was exemplary. It was beyond all praise. The grateful thanks, therefore, of all lovers of Tamil and devotees of *Sri Vedanta Desika,* are due to him for having brought to bear on this edition such rare and invaluable gift of sensitive scholarship coupled with his marvellous capacity for taking infinite pains.

As regards *Sri Vedanta Desika's* Tamil works collected together and familiar to the students of Tamil and to the devotees of *Sri Vedanta Desika* as *Desika Prabandham,* I feel I am not competent, to speak. It seems to me however that a few ideas of my own in the matter may, with ample apologies, be submitted for the consideration

of scholars and readers. It is not perhaps so well known or appreciated as it deserves to be, that it is to *Sri Vedanta Desika* we owe almost entirely the conception of *Ubhaya Vedanta*, an expression which at the present day is quite familiar to all Sri Vaishnavites of South India. The expression *Ubhaya Vedanta* does not signify two Vedantas one in Sanskrit and the other in Tamil. Nor would it be accurate to say that it is the same Vedanta or Vedantic thought that is given expression to in Sanskrit and in Tamil respectively. *Ubhaya Vedanta* is the characteristic expression specially patented by and for Vaishnavites who are the followers of the Visishta Adwaitic school. *Visishta Adwaita* is best defined as the philosophy which describes the essence of all existence as one in two and two in one. I fancy that *Ubhaya Vedanta* thus means the Vedantic thought which is one in two and two in one. The Vedantic thought is the same and yet not the same. You may call it one if you like. You may call it two if you like. But in essence it is only one in two and two in one. In other words it has been reserved only for the Ubhaya Vedantins, for the followers of the Visishta Adwaitic school of thought, to be endowed with a religion and philosophy thus presented in differentiated non-dualistic form. They are the richer for it. They are the greater for it. They are the happier for it. It will take a volume or indeed many volumes to deal in detail with this aspect, but it seems to me it is not necessary at any rate here and now.

If true religion should be popular and if popular religion should be true, it would appear to be necessary to be presented in this twin form. Authority on one side and realisation on the other are seen here wedded to one another. *Gnana* and *Bhakti* are seen here functioning together. Transcendental metaphysics and logic are seen here in mutual love and affection with inner inspiration and direct enjoyment. The sweetness of Tamil is superadded to the pure milk of Sanskrit. It will thus be seen and appreciated how the Ubhaya Vedanta of South Indian Vaishnavitism is a Visishta Adwaita itself and the consummate and supreme spiritual synthesis of one in two and two in one, the ideal of all synthesis. The harmony indicated by such a synthesis is at once the fulfilment of process and product and the ultimate goal of all evolution.

Amongst the greatest contributions made by that great Acharya, was the declaration and demonstration of the identity

of the two Vedantas, the postulation and the insistence on the necessity for an intimate and proper appreciation of both the Vedantas. A perfect appreciation of each of the Vedantas should be and could be only through the medium of the other. He has made no secret of his view in the matter. The astounding declaration has been made by him that large parts of the teachings in Sanskrit Veda and Vedanta are made clear and limpid to the understanding only through the medium of the Tamil Veda.

As Brahmans classify and describe themselves as being of *Rig Veda*, *Yajur Veda* and *Sama Veda* he has announced himself to be of, and belong to, the Tamil Veda.

It is well known that the Sri Vaishnavas of South India are divided into two classes respectively called *Vadagalais* and *Thengalais* which I suppose mean respectively those who espouse the Northern language, that is to say the Sanskrit Veda and those who espouse the Southern language, that is to say the Tamil Prabandhams.

It must fall to be noted as an irony that those who worship this great Acharya as their Jagadguru should call themselves Vadagalais, that is to say those who adopt more or less exclusively the Sanskrit Veda and Vedanta. When the great Acharya has proclaimed himself to belong to the Tamil Veda, the only appropriate expression by which it seems to me that the Vadagalais can call themselves as true disciples of *Sri Vedanta Desika* is that they are not Vadagalais but *Ubhaya Kalais*.

When the history of religious thought and evolution in South India should come to be written in proper perspective, I have no doubt that the great Acharya *Sri Vedanta Desika*, will be recognised and designated as the apostle of the doctrine of redemption by renunciation or what is called *Prapatti*. The doctrine is no doubt as old as the Upanishads. The Gita has proclaimed it to be the final article of faith. But even though it was accepted by all Vedantins more or less, even *Sri Ramanuja* did not seek to make a separate school of it and it was reserved only for *Sri Vedanta Desika* to reduce it almost to the form of a science and to build up a whole system of Vedantic thought based on it.

In this respect his compositions in Tamil are quite as valuable and significant as his writings in Sanskrit. Contrasting and considering his works in Sanskrit as well as in Tamil, the claim

cannot possibly be regarded as extravagant that there is perhaps no important pronouncement by him in Sanskrit which has not found its place in his Tamil works, though one cannot be so sure that the essence of everything that he has written in Tamil finds a place in his Sanskrit writings. In a word his contribution to Sri Vaishnavism and to Sri Ramanuja's school of religion has been to reduce it to a proper logical system, and so to say enthrone it in a fortress as it were, unassailable by any kind of opponents for all time and to acclaim and reveal its true identity to be the doctrine systematised by him as Prapatti. I am quite conscious that this doctrine of Prapatti constituted by him into what seems almost a separate school of thought, has not only failed to be properly understood by many of his critics and opponents, but has been almost jeered at as too childish and simple to be regarded as a means of salvation. When it comes to be considered according to its requirements and conditions as promulgated by the great Acharya it will undoubtedly be realised that the doctrine promulgated by him did not and could not consist merely of a formal ceremony as understood by most people today but is perhaps in its essential nature more difficult of accomplishment than salvation by *Gnana*, *Bhakti* or *Karma*. It seems to me that in fact and truth, the Prapatti as propounded by him is a synthesis of all the other means of salvation. The Prapatti Yoga as expounded by him is theoretically and practically comprehensive of all other Yogas.

If becoming one with the divine is the ultimate end and goal of the human self or *Jeevatma*, then the union that is brought about by *Gnana* or knowledge, *Bhakti* or devotion, *Karma* or action, must each be a relatively limited and incomplete one. Such ideally perfect union can be fulfilled only when the individual self becomes organically united with the supreme self so that it comes to live, move and have its being in the divine, thenceforward during the remainder of earthly life or in the life beyond.

This great doctrine which in modern language may be described as an organisation in which the individual will become organised with the divine will is a doctrine which is more clearly and fundamentally the doctrine of Visishta Adwaita and is capable of furnishing us with a kind of Universal solvent, with a formula of fruitful application to the innumerable spheres of human life and activity in modern times. It is perhaps with reference to the problem of the relationship between the individual and the society

பற்றி ஒரு செ...யக்ரந்தங்கள்
(14—11—1369
முடையானுடைபரிசுத்தி
மன்னனுடையி
ஸம்பவம் நடந்தி
லென்று சிலரும்தம்
தம்
கை

ஒரு சிற்பி ஸ்கை
விக்ரஹம் செய்தருளம்
வேண்டுமென்றும் ம்
போலவே ஒரு திருவிவரணம்
இன்று மிக்க விபவ
மெய்யனது திருக்கோரதிபாத்ய
கள் கருதுகிறுர்கள். திருங்க்ரஹம்
இடங்களில் ஸ்ரீதேசிக
மில்லே. ஸர்வேசுவரனுருதயம்
நின்றது இவர்புரிந்த தொ

திக்குநிறைபுகழாளரா
விக்ரஹங்கள்மூலமாகவும்
உலகத்தை வாழ்வித்துவருகி
எண்ணுக்கடங்காதவை. அ
நாம் அறிந்தவரையில் நமக்கு
பெயர்களைத் தனியே குறித்.
வாழ்வு; பெருஞ்செல்வம். தமிழ
கலந்த தேன்மொழியிலும் ப
ஆநந்தத்தையும் நமக்கு ஊட்டும்)
மரைப் போற்றியுகப்பதும் புந்தி
வளர்ப்பதும் மிகச் சிறியனவல்
பெற்றதற்கு !

"வாழியணி தூப்புல் வருநி
வாழியவன் பாதார விந்த
கோதிலாத் தாண்மலரைக்
தீதிலா நல்லோர் திரள்."

ஸாரஸாரம்
விரோதபரிஹாரம்
நிகமபரிமளம் (லுப்தம்)
திருமுடியடைவு ,,

தமிழ்ப்பிரபந்தங்கள்

அமிருதரஞ்சனி
அதிகாரசங்கிரகம்
அமிருதாசுவாதினி
பரமபதசோபானம்
பரமதபங்கம்
மெய்விரதமான்மியம்
அடைக்கலப்பத்து
அருத்தபஞ்சகம்
ஸ்ரீவைணவதினசரி
திருச்சின்னமாலே
பன்னிருநாமம்
திருமந்திரச்சுருக்கு
துவயச்சுருக்கு
சரமசுலோகச்சுருக்கு
கீதார்த்தசங்கிரகம்
மும்மணிக்கோவை
நவமணிமாலே
பந்து
கழல்
அம்மானே
ஊசல்
ஏசல் } (லுப்தம்)
பிரபந்தசாரம்
ஆகாரநியமம்

श्रीमते निगमान्तमहादेशिकाय नमः

சென்னே,
தாரணஞு புரட்டாசித்
திருவோணம்.
(28—9—1944) } தி.

श्रीः

श्रीमते निगमान्तमहादेशिकाय नमः

ஸ்ரீதேசிகதர்சநஸாரஸங்க்ரஹம்

[வ. ந. ஸ்ரீராமதேசிகதாஸன் – ஒப்பிலியப்பன்ஸந்நிதி]

[இங்கு ஸ்ரீதேசிகப்பிரபந்த வியாக்கியானத்திற்கு வேண்டிய அளவிற்கு நம் ஸித்தாந்தத்தின் ஸாரமான அம்சங்கள் வரையப்படுகின்றன. இவற்றையும் மற்ற அம்சங்களையும் ஆசார்யர்கள்பக்கல் விரிவாய்க் கேட்டு உணர்க.]

வேதமே மூலப்ரமாணம்

உலகிற் பிறந்த ஒவ்வொருவரும் சேதநம் அசேதநம் ஈசுவரன் என்னும் தத்துவங்களை அறிந்து, பக்தி ப்ரபத்தி ஆகிய ஹிதங்களுள் ஒன்றை அநுஷ்டித்து, மோக்ஷமாகிய புருஷார்த்தத்தைப் பெற முயலவேண்டும். இவையனைத்தும் வேதபாகங்களில் விளக்கிக்கூறப்பட்டுள்ளன. ஸம்ஸாரலோகத்திலுள்ளோர்க்கு வேதமே கைவிளக்காகும். வேதம் ஒன்றே அநாதியாய் அநந்தமாய் அபௌருஷேயமாய் ஸ்வதந்த்ரமான ப்ரமாணமாய்நிற்கும். மற்றைச் சாஸ்த்ரங்கள் அனைத்தும் வேதத்தை மூலமாகக் கொண்டு நின்றே ப்ரமாணமாகவேண்டும். வேதவேதாந்தங்களின் அர்த்தத்தை உலகிலுள்ள அனைவரும் அறிந்து உஜ்ஜீவிக்க வேண்டுமென்று திருவுள்ளங்கொண்டு ஆழ்வார்கள் அவற்றின் கருத்தை ஆய்ந்தெடுத்துத் தமிழில் நாலாயிரதிவ்யப்பிரபந்தமாக வெளியிட்டருளினர்.

ஆழ்வார்கள்

அவ்வாழ்வார்கள் பதின்மர்:—பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார் : என்பவர். எம்பெருமானுடைய குணாநுபவத்தில் ஆழ்ந்துகிடந்தமைபற்றி 'ஆழ்வார்' எனத்திருநாமம் வாய்த்தது. இவர்கள் அனைவரும் அவதார புருஷர்கள். சிலர் அயோநிஜர்கள். [உலகில் தற்காலம் விபரீதாநுஷ்ட்டானத்திற்காகத் திருப்பாணாழ்வாரைத் தாழ்ந்த குலத்தோருக்கு உதாஹரணமாக்கி மேடைப் பிரசங்கங்களில் தோன்றியவாறு பேசுவதன் காரணம் அவ்வாழ்வாரை அயோநிஜரான அவதார புருஷரெனவும் பாணர்குலத்தில் வளர்ந்து வந்ததால் அவருக்கு அப்பெயர் வந்ததெனவும் அறியாமையேயாம்.] இவ்வாழ்வார்கள் தவிர ஆண்டாள் மதுரகவிகள் திருவரங்கத்தமுதனார் ஆகிய மூவரும் அருளிச்செய்த பாசுரங்களும் சேர்ந்தே இருபத்துநான்கு பிரபந்தங்கள் கொண்ட நாலாயிரதிவ்யப்ரபந்தமாகின்றது. இவ்வாழ்வார்களில் நம்மாழ்வாரே மிக முக்கியராய் நிற்பவர்; இவர் ப்ரபந்நஸந்தாநகூடஸ்தர் எனவும் வழங்கப்பெறுவர். இவருடைய அருளிச்செயலான திருவாய்மொழியின் இனிமையையும் அர்த்த புஷ்டியையும் அளவிட்டுக்கூறமுடியாது. இதன் வியாக்கியாநமே பகவத்விஷயமெனப்படும்.

ஆசார்யர்கள்

ஸ்ரீமந்நாராயணனே அனைவர்க்கும் முதல்வனான ஆசார்யன். ஆசார்யர்களில் பெரியபிராட்டி இரண்டாமவளாக விளங்குகின்றாள். பின் விஷ்வக்ஸேநர் மூன்றாவது ஆசார்யன். இதற்குப் பின்னரே ஆசார்யபரம்பரை பூலோகத்தில் தொடங்குகின்றது. அடுத்த ஆசார்யன் நம்மாழ்வார். நம்மாழ்வாருக்கு விஷ்வக்ஸேநர் ஸ்ரீவைகுண்டத்திலிருந்து எழுந்தருளிப் பஞ்சஸம்ஸ்காரம் செய்தருளினார். நம்மாழ்வார் ஆழ்வார் கோஷ்டியிற்போல் ஆசார்யகோஷ்டியிலும் முதன்மைபெற்று விளங்குகின்றார். இவருக்கு அடுத்த ஆசார்யன் ஸ்ரீமந் நாதமுனிகள். நம்மாழ்வாருக்கு நாதமுனிகள் பல நூற்றாண்டுகள் பிந்தியவரேயாயினும் இவர் மஹாயோகியாதலால் இவருடைய யோகநிலையில் நம்மாழ்வார் காட்சியளித்து அருள்புரிந்து திவ்யப்ரபந்தத்தையும் உபதேசித்து ஆசார்யரானார். மேலும் நம்மாழ்வார் திருவடிகளில் நேரில் கைங்கர்யம் செய்த ஸ்ரீமதுரகவிகளிடமிருந்து அவர்வம்சத்தினரான ஸ்ரீபராங்குசதாஸர்வாயிலாக நாதமுனிகளுக்கு ஸம்ப்ரதாயம் வந்தபடியாலும் நம்மாழ்வார் அவருக்கு ஆசார்யரானார். நாதமுனிகளுக்குப் பிறகு முறையே உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார் ஆகிய இவர்கள் ஆசார்யர்களானார்கள். ஆளவந்தார் நாதமுனிகளுடைய பௌத்திரராவார். இவரும் ஆசார்ய பரம்பரையில் முக்கியமானவர்; பல கிரந்தங்களின் வாயிலாக உலகிற்கு மஹோபகாரம்செய்தருளியவர். இவருடைய ஸ்ரீஸூக்திகள் ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸ்ரீஸூக்திகளுக்கு மூலமாய்நிற்பன. ஆளவந்தாருடைய சிஷ்யர் பெரியநம்பிகள்.

ஸ்ரீபாஷ்யகாரர்

பெரியநம்பிகளுடைய சிஷ்யரே நம் ஸித்தாந்தப்ரவர்த்தகரான ஸ்ரீபாஷ்யகாரர். இவரை எம்பெருமானார், உடையவர், ராமாநுஜன் எதிராஜர் என்ற பல திருநாமங்களால் வழங்குவதுண்டு. நம் ஸித்தாந்தத்தைப் பிறமதத்தினரின் கையில் அகப்பட்டுச் சீர்குலையாதவாறு காப்பாற்றியவர் இவரே. இவர் அருளிச்செய்தவை ஒன்பது க்ரந்தங்கள். அவை—ஸ்ரீபாஷ்யம், தீபம், ஸாரம், வேதார்த்தஸங்க்ரஹம், ஸ்ரீகீதா பாஷ்யம், சிறியகத்யம், பெரியகத்யம், ஸ்ரீவைகுண்டகத்யம், நித்யம்: என்பன. இவற்றுள் ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு உரையான ஸ்ரீபாஷ்யம் தலைசிறந்துநிற்கும். ஸ்ரீதேசிகன் இந்த ஸ்ரீஸூக்திகளைப் பரிசயம் செய்தே தம் வாழ்நாள் முழுவதையும் கழித்ததாக அருளிச்செய்கிறார். மேலும் ஸ்ரீபாஷ்யகாரரே ப்ரபந்நன் அநுஷ்டிக்கவேண்டிய கைங்கர்யங்களுள் ஸ்ரீபாஷ்யகாலக்ஷேபம் செய்வதையும் சொல்வதையுமே முதலாவதாக விதித்துள்ளார். ஆசார்யர்களின் வரிசையை ஒரு ஹாரமாகக்கொண்டால் அதில் ஸ்ரீபாஷ்யகாரரை நாயகமணியாகவே கொள்ளவேண்டும். இவர் சிதறியிருந்த பல ஆசாரங்களைச் சீர்திருத்தி வேதத்தால் விதிக்கப்பட்ட ஆசாரங்களை உலகுக்கு வெளியிட்டுக் காத்தார். மானிடர் தத்தம் வர்ணாச்ரமதர்மங்களைச் சிறிதும் வழுவாது நடத்துமாறு செய்து அவற்றைக் காத்தவர் இவரே. வேதங்களுடைய தாத்பர்யத்தை இவர் நேரில் கண்டறிந்து அவற்றைத் தழுவிய மற்ற ப்ரமாணத்திற்கும் ஏற்றவாறு உலகினர் நடக்கவேண்டிய முறைகளைப் போதித்து உலகிற்கு வழிகாட்டியாய் நின்றார். [ஆனால் தற்காலத்தில் பொதுக்கூட்டங்களில் மேடைமீது ஏறித் துணிந்து பேசுமவர்கள்

தோன்றியவாறு தங்களுக்குச் சாதகமாகக் கூறிக்கொள்கிறபடி அத்தகைய ஆசாரச் சீர்திருத்தங்களை இவர் செய்யவேயில்லை] இவர் ஆபத்துக்காலத்திலுங்கூடச் சிறிதளவும் சாஸ்த்ரங்களுக்கும் தம் ஸூக்திகளுக்கும் முரணுக நடந்ததேயில்லை. இவருடைய ஸ்ரீஸூக்திகளை நன்கு அறிந்து அவற்றைக்கொண்டு இவருடைய கொள்கைகளை நிர்ணயிப்பதே முறையாம். இங்ஙனன்றி உலகில் பலவகையாய்த் தோன்றிய இவருடைய சரிதைகளை ஆதாரமாகக்கொண்டு செய்யும் ஆசாரச் சீர்திருத்தம் ஆசாரங்களின் சீரைத் திருத்துவதாகவே முடியும். இவருடைய ஸ்ரீஸூக்திகளின் உண்மைப்பொருளை அறிவது ஸதாசார்யர்களின் திருவடிகளில் வணங்கி வழிபட்டுக் காலக்ஷேபம் செய்தாலன்றிக் கைகூடாததேயாம்.

நிற்க, ஸ்ரீபாஷ்யகாரருடைய திருவடிகளில் ஆச்ரயித்தவர்களில் முக்கியமானவர் திருக்குருகைப்பிரான்பிள்ளான். இவரே திருவாய்மொழிக்குத் திருவாறுயிரப்படியென்ற மிகச் சிறந்த ஒரு வியாக்கியானமிட்டவர். இவருக்குப் பின் முறையே கடாம்பியாச்சான், எங்களாழ்வான், நடாதூர் அம்மாள், கடாம்பிஅப்புள்ளார் ஆகிய இவர்கள் ஆசார்யர்களாகின்றனர்.

ஸ்ரீதேசிகன்

கடாம்பி அப்புள்ளாருடைய திருவடிகள் நம் ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகன். இவர் அப்புள்ளாருக்கு மருமானுமாவர். ஸ்ரீதேசிகனைப் பற்றி இங்கு எதை எழுதுவது? எதை விடுவது? ஸ்ரீபாஷ்யகாரருடைய திருவடி திருமுடி ஸம்பந்தம்பெற்ற ஆசார்யர்களே ஆசார்யபதவிக்கு ஏற்றவர் என்று ஸ்ரீபாஷ்யகாரர்விஷயத்தில் ஸ்ரீதேசிகன் அருளிச்செய்ததை நாம் ஸ்ரீதேசிகன்விஷயத்திலும் கொள்வதே உசிதமாகும். எந்த அம்சத்திலும் வேறொருவரையோ வேறொன்றையோ நாம் நாடவேண்டாதபடி ஸகலாம்சங்களையும் தம் எண்ணிறந்த ஸ்ரீஸூக்திகளின் வாயிலாக ஸ்ரீதேசிகன் நமக்கு அருளிய மஹோபகாரத்தை எவ்வாறு அளவிடமுடியும்? ஸ்ரீதேசிகனை நமக்கு ஆசார்யனுக அளித்த மஹோபகாரத்திற்கே நாம் எம்பெருமானிடம் எந்நாளும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். ஸ்ரீதேசிகன் அருளிச்செய்த எளிய காவ்யங்களிலும் நம்மால் அளவிடவும் அறியவும் முடியாத பல அர்த்த விசேஷங்கள் உள்ளனவென்று ஸ்ரீதேசிகஸூக்திகளிலொன்ருகிய யாதவாப்யுதயத்திற்கு உரையிட்ட பிற மதத்தினரான ஸ்ரீ-அப்பயதீக்ஷிதரும் வாயாரப் புகழ்ந்துபேசியுள்ளார்.

ஸ்ரீதேசிகனுக்குப் பிறகு ஆசார்யபரம்பரை பிரியும் வகையைத் தத்தம் ஸம்ப்ரதாயமுறைப்படி கேட்டுணர்க.

ஆசார்யனது உபகாரம்

ஒவ்வொரு சேதநனும் தான் உஜ்ஜீவிப்பதற்காக ஸாத்துவிகர்களான பாகவதர்களை நாடி அவர்களுடன் நெருங்கிப் பழகி அவர்களின் உதவியால் ஓர் ஆசார்யனை அடைந்தேயாகவேண்டும். அங்ஙனம் ஆசார்யனை அடைந்து தனக்கு முக்திபெற வழிகாட்டவேண்டுமென்று அவனைப் பிரார்த்திப்பான். ஆசார்யன் இவனுக்கு அவசியமான சில அர்த்தங்களை உபதேசித்துத் தன் வர்ணுச்சிரமதர்மங்களி

னின்று வழுவாதிருக்குமாறு போதிப்பான்; பின் எம்பெருமானுடைய சின்னங்களாகிய சங்கசக்கரங்களை இவன்தோள்களில் பொறிப்பான். இங்ஙனம் செய்யப்படுவதே 'ஸமாச்ரயணம்' 'பஞ்ச ஸம்ஸ்காரம்' என்று உலகில் வழங்கும். ஸ்ரீவைஷ்ணவனுவதற்கு இதுவே முக்கியமான அறிகுறியாகும். இது ஸ்த்ரீகளுக்கும் ஸகல வர்ணத்தோருக்கும் பொதுவாகும். இதைப் பெறாமல் ஸ்ரீவைஷ்ணவனாக முடியாது. ஸமாச்ரயணகாலத்தில் திருமந்த்ரம் த்வயம் சரமசுலோகம் என்னும் மூன்று ரஹஸ்யங்களையும் ஆசார்யன் அர்த்தத்தோடு உபதேசிப்பான். இந்த ரஹஸ்யங்களைத் தினந்தோறும் இயன்றவரை அர்த்தஜ்ஞாநத்தோடு சிஷ்யன் ஜபம்செய்யவேண்டும். பின் ஆசார்யன் சிஷ்யனுக்கு க்ரந்தகாலக்ஷேபம்செய்துவைத்து விசேஷ ஜ்ஞாநத்தை உண்டாக்குவான். அதன்பின் இவனுக்குப் பரந்யாஸத்தைச் செய்விப்பான். இப்படி ஸமாச்ரயணம் காலக்ஷேபம் ப்ரபத்தி ஆகிய மூன்றும் சிலருக்கு ஒரே ஆசார்யனிடமும், சிலருக்கு வெவ்வேறு ஆசார்யர்களிடமும் நேருவதுண்டு. இவ்வாறு ஆசார்யன் சிஷ்யனுக்குச் செய்யும் உதவி பலனைக் கருதியன்று. தன் கன்றுக்கு இரங்கிப் பாலைச் சொரியும் தாய்ப்பசு எத்தகைய பலனைக் கருதுகின்றது? அதுபோல் சிஷ்யன் உஜ்ஜீவிக்கவேண்டுமென்ற ஓர் எண்ணமே ஆசார்யனை அங்ஙனம் செய்யத் தூண்டுகின்றது.

சிஷ்யனது கடமை

ஆசார்யனையே தெய்வமாகப் பற்றவேண்டும். பரமரஹஸ்யமான அர்த்தங்களை உபதேசித்துத் தன்னை நல்வழிப்படுத்திய ஆசார்யனுக்கு எவ்வகையாலும் கைம்மாறு செய்யமுடியாதென்பதை நினைத்து அவன்பால் நன்றிபாராட்டவேண்டும். அவன்செய்த உபதேசத்தை விபரீதமான ஒழுக்கத்தால் வீணாக்கக்கூடாது. ஆசார்யனை ப்ரகாசிப்பித்தலும், மந்த்ரங்களையும் அவற்றின் அர்த்தங்களையும் மறைத்தலும் சிஷ்யனுக்குக் கடமைகளாம். ஆசார்யனைப் பூஜிப்பதும், த்யானிப்பதும், அவனது புகழை வெளியிடுவதும், திருநக்ஷத்ர உத்ஸவம் முதலியன நடத்துவதும் ஆகிய அனைத்தும் அவனிடத்து நாம் பெற்ற மஹோபகாரத்திற்குச் சிறிதும் ஈடாகாவென்பதை உணரவேண்டும். எம்பெருமானே ஆசார்யனது வடிவுகொண்டு தன்னை வாழ்விக்கவந்ததாகவே சிஷ்யன் கருதவேண்டும்.

காலக்ஷேபம்செய்தல்

ஆசார்யன்ஸந்நிதியில் சிஷ்யன் காலக்ஷேபம்செய்யவேண்டிய க்ரந்தங்களுள் முக்கியமானவை :—(1) ஸ்ரீபாஷ்யகாரர் ப்ரஹ்மஸூத்ரங்களுக்கு வியாக்கியாநமாக அருளிச்செய்த ஸ்ரீமத்பாஷ்யம். (2) ஸ்ரீபாஷ்யகாரர் ஸ்ரீபகவத்கீதைக்கு வியாக்கியாநமாக அருளிச்செய்த ஸ்ரீமத் கீதாபாஷ்யம். (3) ஸ்ரீதேசிகன் அருளிச்செய்த ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரம். (4) திருக்குருகைப்பிரான்பிள்ளான் திருவாய்மொழிக்கு வியாக்கியாநமாக அருளிச்செய்த ஸ்ரீபகவத்விஷயம்: என்பன. இவையே க்ரந்தசதுஷ்டயமெனப்படும். இவற்றின் காலக்ஷேபத்திற்கு முன்பே புராண இதிஹாஸங்கள் முதலியவற்றைக் கேட்டறிவதால் விவேகம் ஏற்பட்டுக் காலக்ஷேபம்செய்ய யோக்யதை உண்டாயிருக்கப் பெறவேண்டும். பகவத்விஷயகாலக்ஷேபத்திற்கு முன்பே திருவாய்மொழி முழுவதையும் ஆசார்யனிடம் அத்யயநம்செய்யவேண்டும்.

கீழ்க்கூறிய காலக்ஷேபக்ரந்தங்கள் தவிர மற்ற ஆசார்ய ஸ்ரீஸூக்திகளையும் மற்ற முக்கியமான ஸம்ப்ரதாயார்த்தங்களையுமெல்லாம் தமது சக்திக்கும் அறிவுக்கும் தக்கவாறு ஆசார்யன்பக்கல் அவசியம் கேட்டறியவேண்டும். இந்த நான்கு க்ரந்தங்களையும் காலக்ஷேபம்செய்யச் சக்தியற்றவர்கள் மூன்றாவது க்ரந்தத்தை மட்டுமாவது காலக்ஷேபம்செய்வது மிக அவசியம்.

மூன்று ரஹஸ்யங்கள்

திருமந்த்ரம்:—இது 8 எழுத்துக்கள் கொண்டது; அதனால் திருவஷ்டாக்ஷரமெனப் பெயர்பெற்றது. இது மந்த்ரங்கள் அனைத்திலும் சிறந்தது; பல விசேஷார்த்தங்களைக்கொண்டது; ஸகலபலன்களையும் அளிக்கவல்லது; ஸ்த்ரீகளும் நான்காம்வருணத்தாரும் இதை அநுஸந்திக்கலாம். ஆனால் அவர்கள் ப்ரணவத்தின் ஸ்தானத்தில் 'அம்' என்ற அக்ஷரத்தை வைத்தே அநுஸந்திக்கவேண்டும்.

த்வயம்:—இது 25 அக்ஷரங்கள் கொண்டது; உபநிஷத்தில் தனித்துநின்ற இரண்டு வாக்யங்களை ஒன்றுசேர்த்து மந்த்ரமாக்கி எம்பெருமானால் அருளப்பட்டது. இதை ஒருகால் உச்சரித்தாலும் மோக்ஷம்வரையிலுள்ள பலனைப் பெறலாம். இது எல்லா வகுப்பினரும் அநுஸந்திக்க உரியது.

சரமசுலோகம்:—இது 32 அக்ஷரங்கள் கொண்டது. இது ஸ்ரீபகவத்கீதையில் கடைசியிலுள்ள ஸூக்தியாகும்; கண்ணனது திருப்பவளச் செவ்வாயினின்று வெளிவந்த மந்த்ரம் இது. இது ப்ரபத்தியை விதிக்கும் ஸூக்தியாகும்.

இந்த மூன்று ரஹஸ்யங்களும் முறையே 3, 6, 12 பதங்கள் கொண்டுள்ளன. இவற்றை ஆசார்யன் ஸமாச்ரயணகாலத்தில் அர்த்தத்தோடு சிஷ்யனுக்கு உபதேசிப்பான். பின் சிஷ்யன் தினந்தோறும் இவற்றை ஜபம் செய்யவேண்டும். இவற்றின் தாத்பர்யமே ஸ்ரீதேசிகனுடைய ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரமென்னும் அரிய பெரிய ஸூக்தியில் முக்கியமாய் விளக்கப்படுகின்றது. சில்லறை ரஹஸ்யங்களிலும் சிலவற்றில் சுருக்கியும் சிலவற்றில் இவ்வர்த்தங்களில் ஒரு சங்கையும் வரவொட்டாது விளக்கியும் கூறப்பட்டுள்ளன. இவற்றின் அர்த்தவிசேஷங்களை இப்பிரபந்தத்தில் திருமந்திரச்சுருக்கு, துவயச்சுருக்கு, சரமசுலோகச்சுருக்கு—உரையிற் காண்க.

இனி ஸ்ரீவைஷ்ணவர் ஒவ்வொருவரும் அறியவேண்டிய தத்துவம், ஹிதம், புருஷார்த்தம் ஆகிய இவை விளக்கப்படுகின்றன:—

தத்துவம்

தத்துவங்கள் மூன்று. அவையாவன:— சேதநம், அசேதநம், ஈசுவரன்: என்பவை.

சேதனன்

அறிவுள்ள ஜீவாத்மா சேதநன் எனப்படுவான். இவனுக்கு ஜ்ஞாநம் ஒரு குணமாய் நிற்கும். இந்த ஜ்ஞாநம் தர்மபூதஜ்ஞாநமெனப்படும். ஜீவனுடைய ஸ்வரூபமும் ஜ்ஞாநமயமாகவே நிற்கும்.

ஆதலின் ஜீவன் தர்மிபூதஜ்ஞாநமென்னப்படுவான். இந்த ஜீவாத்மா தனக்கு எப்பொழுதும் தோன்றிக்கொண்டேயிருப்பான். தன்னை நான் என்று அறியும்போது தர்மபூதஜ்ஞாநம் உதவவேண்டுமென்பதில்லை. ஆனால் ஜீவன் தன்னைத் தவிர வேறு எந்தப் பொருளையும் தன் தர்மபூதஜ்ஞாநத்தால் மட்டுமே அறியமுடியும். தன் ஸ்வரூபத்தைத் தர்மபூதஜ்ஞாநத்தைக் கொண்டும் அறியலாம். ஜீவன் அணுவாகவும் ஆநந்தஸ்வரூபமாகவும் நிற்பவன்; சரீரத்திற்காட்டிலும் வேறுபட்டவன்; அழிவற்றவன்; எம்பெருமானுக்கு அடியனாகவே நிற்பவன்,

இத்தகைய ஜீவாத்மாக்கள் எண்ணற்றவர்; அவர்கள்—பத்தர், முக்தர், நித்யர் என மூவகைப்படுவர். அநாதியான கர்மபந்தத்திற்கு உட்பட்டு இந்த ஸம்ஸாரத்தில் உழல்பவர் பத்தர். கர்மபூமியில் நின்று ஸதாசார்யஸம்பந்தம்பெற்றுப் பக்திப்ரபத்திகளுள் ஒன்றை அநுஷ்டித்துப் பின் மோக்ஷத்தைப் பெற்றவர் முக்தர். எம்பெருமானைப்போல் ஒருகாலும் கர்மஸம்பந்தமேயின்றி அவனுக்கு எப்பொழுதும் கைங்கர்யம் செய்துகொண்டேயிருப்பவர் நித்யர். அநந்த கருட விஷ்வக்ஸேநாதியர் இவ்வகுப்பைச் சேர்ந்தவர்.

அசேதநம்

அறிவில்லாத வஸ்து அசேதநமென்னப்படும். அசேதநத்தால் கிடைக்கக்கூடிய பலனை அநுபவிப்பவன் சேதநனே. இந்த அசேதநம் த்ரிகுணம் காலம் சுத்தஸத்துவம் என மூன்று வகைப்படும்.

த்ரிகுணம்:—இதுவே மூலப்ரக்ருதி. இது ஸத்துவம் ரஜஸ் தமஸ் என்னும் மூன்று குணங்களையுடையதாதலின் த்ரிகுணமெனப்படும். இந்த ப்ரக்ருதி எப்பொழுதும் மாறுபாட்டை (பரிணாமத்தை) அடைந்துகொண்டேயிருக்கும். இந்த ப்ரக்ருதியில் உள்ள மூன்று குணங்களும் ஸமமான அளவில் உள்ளபோது மஹாப்ரளயம் ஏற்படும் அந்தக் குணங்கள் ஏற்றத்தாழ்வை அடையும்போது இந்த ப்ரக்ருதி பலவகைத் தத்துவங்களாய் மாறுகின்றது. ப்ரக்ருதியில் ஏற்றத்தாழ்வுள்ள பாகம் மஹாந் என்னும் தத்துவமாக மாறுகின்றது. இந்த மஹாந், ஸத்துவம் முதலிய குணங்கள் மிகுத்து நிற்பதுபற்றி ஸாத்துவிகம் ராஜஸம் தாமஸம் என மூன்றுவகைப்படும். மஹானிலிருந்து அஹங்காரம் என்னும் தத்துவம் பிறக்கின்றது. அதுவும் முற்கூறிய வகையில் மூன்றுவகைப்படும்.

அவற்றில் ஸாத்துவிக அஹங்காரத்திலிருந்து இந்த்ரியங்கள் பதினொன்றும் உண்டாகின்றன. அவையாவன:— ஜ்ஞாநேந்த்ரியம் ஆறு (-மனம், காது, கண், நாக்கு, மூக்கு, உடல் என்பன), கர்மேந்திரியம் ஐந்து (-வாக்கு, கால், கை, பாயு, உபஸ்த்தம் என்பன) ஆகியவை. தாமஸாஹங்காரம் தந்மாத்ரங்கள் மூலமாய்ப் பூதங்களை உண்டாக்குகின்றது. அதன் க்ரமம் வருமாறு:— தாமஸ அஹங்காரத்திலிருந்து முறையே சப்ததந்மாத்ரம், ஆகாசம், ஸ்பர்சதந்மாத்ரம், வாயு, ரூபதந்மாத்ரம், தேஜஸ், ரஸதந்மாத்ரம், ஜலம், கந்ததந்மாத்ரம், பூமி : என்பன. தந்மாத்ரை என்பது முந்தியநிலை முழுதும் கழியாமலும் பிந்தியநிலை முழுதும் வராமலும் இருக்க நடுவிலுள்ள ஒரு நிலை. இந்நிலையிலுள்ள த்ரவ்யம் தந்மாத்ரம் எனப்படும். உதாஹரணம்:—ஸ்பர்சதந்மாத்ரம் என்பது ஆகாசத்தின் நிலை

முழுதும் நீங்காமலும் வாயுவின் நிலைமை முழுதும் வராமலுமுள்ள ஒரு நிலையுள்ள த்ரவ்யம். இந்த நிலை பாலின் தன்மை முழுதும் நீங்காமலும் தயிரின் தன்மை முழுதும் வராமலுமிருக்கும் நிலைமையைப் போன்றதாம்.

ராஜஸமான அஹங்காரம் மற்ற இரண்டு அஹங்காரங்களும் தத்தம் வேலையைச் செய்யும்போது அவற்றுக்குத் துணையாய்நின்று உதவிசெய்யும்.

மற்றொரு வஸ்துவாக மாறுபடுந்தன்மையது ப்ரக்ருதியெனப் படும். மாறுபட்ட வஸ்து விக்ருதியெனப்படும். தான் மற்றொரு வஸ்துவாக மாறுபடுவதாகவும் மற்றொரு வஸ்துவின் மாறுபாடாகவும் உள்ளது ப்ரக்ருதிவிக்ருதியெனப்படும். இம்முறையில் மூலப்ரக்ருதியை ப்ரக்ருதியாகவும். பதினொன்று இந்த்ரியங்களையும் பூமியையும் விக்ருதி யாகவும், மஹாந் முதல் கந்ததந்மாத்ரம் வரையில் உள்ளவற்றை ப்ரக்ருதிவிக்ருதிகளாகவும் அறிந்துகொள்க. நம் சரீரம் ப்ரக்ருதி, மஹாந், அஹங்காரம், ஐந்து பூதங்கள் ஆகிய இவற்றால் ஆகியது. இந்த்ரியங்களுக்கு இருப்பிடமாயுள்ளது.

காலம் :— காலம் என்பது எங்கும் பரந்து நிற்கும் ஒரே த்ரவ்யம். இதில் ஸத்துவம் முதலிய குணங்களில்லை. எதிர், நிகழ், கழிவு முதலிய வ்யவஹாரங்களுக்கு இதுவே காரணமாகும். நிமிஷம் விநாடி நாழிகை முதல் பரார்த்தம் வரையிலுள்ள பாகங்களெல்லாம் இந்தக் காலத்தி னுடையனவே. இக்கர்மலோகத்திலுள்ள மாறுபாடுகளெல்லாம் இந்தக் காலத்தின் நியமத்திற்கு உட்பட்டே எம்பெருமானுடைய ஸங் கல்பத்தால் நடப்பன. ஸ்ரீவைகுண்டத்தில் முன் பின் என்ற அள விற்குக் காலம் உளதேயாயினும் அதன் ஸம்பந்தமின்றி அனைத்தும் எம்பெருமானது ஸங்கல்பத்தால் மட்டும் நடப்பனவாகும்.

சுத்தஸத்துவம் :— சுத்தஸத்துவமென்பது ரஜோகுணம் தமோ குணம் ஆகிய இரண்டுமின்றி ஸத்துவகுணத்திற்கு மாத்திரம் ஆதார மான ஒரு த்ரவ்யம். ஸ்ரீவைகுண்டத்திலுள்ள அனைவருடைய சரீரங் களும் அங்குள்ள மண்டபம் கோபுரம் ப்ராகாரம் முதலிய ஸகல வஸ் துக்களும் இந்தச் சுத்தஸத்துவமயமானவை. இந்த ஸத்துவம் ஸ்ரீவைண்டத்திலிருந்து மேலே எல்லையேயின்றி எங்கும் பரவி நிற்கும். [கீழ்க் கூறிய தர்மபூதஜ்ஞாநமும் அசேதநத்தில் சேர்ந்ததேயாதலின் இங்கு நான்காவது அசேதநமாகக் கூறவேண்டியதேயாயினும் தர்ம பூதஜ்ஞாநமுடைய வஸ்து என்ற பொருள்கொண்ட சேதநம் என்ற பதத்தில் தர்மபூதஜ்ஞாநம் விசேஷணமாய் நிற்பதால் இங்குத் தனித்துக் கூறுதொழிந்தது.]

ஈசுவரன்

ஸ்ரீமந்நாராயணனே ஸர்வேசுவரன். இவன் எப்பொழுதும் மாறு படாத தன்மையுடையவன் ; ஜ்ஞாநஸ்வரூபமாய்நிற்பவன் ; இங்குத் தான் இருக்கிறான் என்று தேசத்தால் அளவிட்டுக் கூறமுடியாதவன் ; இப்பொழுதுதான் இருக்கிறான் என்று காலத்தைக்கொண்டும் வரை யறுக்கமுடியாதவன் ; இன்ன வஸ்துவின் ஸ்வரூபமாக மட்டும் இருக் கிறான் என்று வஸ்துவாலும் எல்லையிட்டுப் பேசமுடியாதவன் ; எவ் விடத்திலும் எக்காலத்திலும் எல்லா வஸ்துக்களின் ஸ்வரூபமாகவும்

நிற்பவன்; ஆநந்த ஸ்வரூபமாய் விளங்குபவன். இவனிடம் தோஷம் ஒன்றும் தட்டாது. சேதநம் அசேதநம் ஆகிய ப்ரபஞ்சம் முழுதும் இவனுக்குச் சரீரமாய்நிற்கும். இவன் அனைவருக்கும் உபாயமாகவும் பலனாகவும் நிற்கின்றான்; அனைத்தையும் படைப்பவன்; காப்பவன்; அழிப்பவன்; எல்லோரினும் மேம்பட்டவன்; அனைத்துக்கும் ஆதாரமாய் நிற்பவன்; அனைத்தையும் அடக்கியாள்பவன்; அனைத்தினுடைய பலனையும் அனுபவிப்பன்; தன்னை அடைந்தவருடைய ஸகல கர்மங்களையும் போக்குபவன்; ஸகல வேதங்களாலும் போற்றப்படுமவன்; ஸகலகர்மங்களாலும் தானே ஆராதிக்கப்பட்டுப் பலனைத் தருபவன்; ப்ரஹ்மா முதலிய ஸகல தேவர்களையும் படைப்பவன். அவர்கள் அனைவரும் இவன்கட்டளைக்கு அஞ்சிநடப்பவர்களே. இவன் தன் ஸ்வரூபத்தாலும் திருமேனியாலும் குணங்களாலும் தன்னையொழிந்த அனைத்தினும் மேம்பட்டவன். இயற்கையாகவே ஸகல கல்யாண குணங்கள் நிறைந்தவன்; இவன் விரும்பிப் பெறமுடியாதது ஒன்றுமில்லை. எந்த நிலையிலும் பிராட்டி இவனை விட்டு க்ஷணமும் பிரிவதில்லை.

இவனுடைய திருமேனி, பரம் வ்யூஹம் விபவம் அந்தர்யாமி அர்ச்சை என ஐந்து வகைப்படும். பரரூபம்—ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளியுள்ள பரவாஸுதேவனுடைய ரூபம். வ்யூஹம்:— வாஸுதேவன் ஸங்கர்ஷணன் ப்ரத்யும்நன் அநிருத்தன் எனப்படும் ரூபங்கள். விபவம்:— மத்ஸ்யம் கூர்மம் முதலிய அவதாரங்கள். அந்தர்யாமி:— எல்லோருடைய ஹ்ருதயத்திலும் ஸூக்ஷ்மமான உருவத்துடன் நிற்கும் நிலை. அர்ச்சை:— திவ்ய தேசங்களில் திருமேனிகொண்டு எழுந்தருளியுள்ள நிலையும், மற்றும் பக்தர்களின் வேண்டுகோளின்படி அவரவர் விருப்பத்திற்கேற்றவாறு திருமேனிகொண்டு நிற்கும் நிலையும்.

பெரிய பிராட்டியாகிய லக்ஷ்மியும் ஈசுவரதத்துவத்தில் சேர்ந்தவளே. இவ்விருவரையும் தவிர மற்ற அனைவரும் ஜீவதத்துவத்திற் சேர்ந்தவர்களேயாவர். பிராட்டியும் எம்பெருமானைப்போல் எங்கும் நிறைந்து நிற்பவள்; ஸர்வேசுவரனைப்போல் நமக்கு உபாயமாகவும் பலனாகவும் நிற்கின்றாள். உலகில் புத்திரனுக்கு நன்மையைச் செய்வதில் தந்தையும் தாயும் தங்களுக்குள் ஒரு வரையறை ஏற்படுத்திக்கொண்டு தத்தம் கடமைகளைச் செய்வது போல் உலகிற்கே தந்தையும் தாயுமான எம்பெருமானும் பிராட்டியும் நமது க்ஷேமத்தை நாடித் தங்களுக்குள் சில அம்சங்களைத் தமது ஸங்கற்பத்தால் வகுத்துக்கொண்டிருக்கின்றனர். இதைக்கொண்டு அவ்விரு தத்துவங்களைப் பிரித்துப் பார்ப்பது நமக்கு ஏற்றதன்று. ப்ரபத்தியை அநுஷ்டிக்கும்போது முதலில் பிராட்டியைப் புருஷகாரமாகக்கொண்டு ப்ரபத்தியைச் செய்தே அவ்விருவரையும் பின்பு சரணமடையவேண்டும் புருஷகாரமாவது:— பலன்தரவல்ல சேதநனை நெருங்குவதற்குப் பலனை விரும்புமவனால் உபாயமாக வரிக்கப்பட்ட மற்றொரு சேதநன்.

ஹிதம்

ஹிதமாவது:— மோக்ஷத்திற்கு ஸாதநமாக அநுஷ்டிக்கப்படும் உபாயம். ஆகவே, மோக்ஷத்திற்கு உபாயமான பக்தியும் ப்ரபத்தியும் ஹிதமெனப்படும்.

பக்தியோகம்:— இது பலவகைப்படும். இதை மோக்ஷம் பெறும் வரையில் அநுஷ்டித்துக்கொண்டேயிருக்கவேண்டும். பலன் பெற

நெடுங்காலம் கழியவேண்டும். அங்கங்களுடன் அநுஷ்டிக்கும் முறை மிகக் கடினமானது. இக்காலத்தில் இந்தப் பக்தியோகத்திற்கு அதிகாரிகள் இலரென்றே கூறலாம். ஸ்ரீமந்நாதமுனிகள் போல்வாரே இதற்கு அதிகாரிகளாவர்.

ப்ரபத்தி :— அத்தகைய பக்தியோகத்தை அநுஷ்டிக்க இயலாதவர் ப்ரபத்தியை மோக்ஷோபாயமாகக் கொள்வர். இந்த ப்ரபத்தியே பரந்யாஸம், சரணாகதி, பரஸமர்ப்பணம், உபாயாநுஷ்டாநம் என்ற பெயர்களால் வழங்கும். (ஸாதாரண அதிகாரிகள் இதை அத்ருஷ்டம் என்றும் வழங்குவதுண்டு.) இந்த ப்ரபத்தி (1) ஸ்வநிஷ்டை (2) உக்திநிஷ்டை (3) ஆசார்யநிஷ்டை (4) பாகவதநிஷ்டை என நால்வகைப்படும். (விளக்கத்தை 242-வது பாசுரவுரையிற் காண்க.) இவற்றில் ஸ்வநிஷ்டை தற்காலம் மிகச் சிலருடைய அநுஷ்டாநத்திலேயே வருகின்றது. உக்திநிஷ்டையும் ஆசார்யநிஷ்டையும் ஸ்ரீமத் - அஹோபிலமடத்தில் ஸ்ரீமத் - அழகியசிங்கர்ஸந்நிதியில் அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. பெரும்பாலும் ஆசார்யநிஷ்டையும் சிறுபான்மை பாகவதநிஷ்டையும் ஸ்ரீமத் - முநித்ரயஸம்ப்ரதாயத்தில் ஸ்ரீமத் - ஸ்வாமிகள் அனைவர் ஸந்நிதியிலும் அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. ஆகவே இந்த நால்வகையினுள் ஒன்றைக் கைக்கொள்ளாவிடில் மோக்ஷம் பெற முடியாதென்பது நம் பூர்வாசார்யர்களின் த்ருடமான ஸித்தாந்தம். இந்த ப்ரபத்தியைக் குறித்த பலனுக்காக ஒருமுறை அநுஷ்டித்தால் விரும்பிய பலனை நினைத்த காலத்தில் பெறலாம். ஒரே பலனுக்காக இதை இருமுறை அநுஷ்டிக்கக்கூடாது. இச்சரீரம் உள்ளவரையில் கர்மபலன்களை அநுபவித்துச் சரீரமுடிவில் மோக்ஷத்தைப் பெறவிரும்பி ப்ரபத்தியை அநுஷ்டித்தால் அங்ஙனமே பெறலாம். இதற்கு த்ருப்தப்ரபத்தியென்று பெயர். இச்சரீரம் உள்ளவரையிலும் கூட ஸம்ஸாரபந்தத்தைப் பொறுக்காமல் இந்த க்ஷணமே மோக்ஷம் பெறவேண்டுமென்று விரும்பி ப்ரபத்தியை அநுஷ்டித்தால் அந்த க்ஷணமே மோக்ஷம் பெறுவதில் சிறிதும் ஐயமில்லை. இதற்கு ஆர்த்தப்ரபத்தியென்று பெயர். இங்ஙனம் ஸகல பலன்களையும் நினைத்தபோதே அளிக்கும் சக்தி இந்த ப்ரபத்தி ஒன்றுக்கே உளது. இதற்கு ஜாதி நியமமில்லை. எல்லாச் சாதியினரும் இதை உபாயமாகப் பற்றலாம். எல்லாப்ராணிகளுக்கும் இது மோக்ஷோபாயமாக ஆகும். இதன் அங்கங்களின் விளக்கத்தை 241-வது பாசுரவுரையிற் காண்க.

ப்ரபந்நனது கடமை :— ப்ரபத்தியை அநுஷ்டித்தவன் ப்ரபந்நன் எனப்படுவான். இவன் மறுபடி அநுஷ்டிக்கவேண்டிய உபாயம் ஒன்றுமில்லை. ஒரு கவலையுமின்றி மோக்ஷத்தை எதிர்பார்த்து நிற்கவேண்டியதே. ஆனால் தனக்கு ஏற்பட்ட நித்ய - நைமித்திக கர்மங்களை ஒருபோதும் கைவிடக்கூடாது. அவற்றை ஒரு பலனுக்கு ஸாதநமாகச் செய்யாது எம்பெருமானுடைய உகப்புக்காகவே செய்ய

வேண்டும். எம்பெருமான் திருவடிகளில் பக்தியையும் ஜ்ஞாநத்தையும் தவிர வேறு ஒரு பலனையும் விரும்பக்கூடாது. தன் சக்திக்கு ஏற்றவாறு பகவத்கைங்கர்யங்களைச் செய்துகொண்டும் ஆசார்யஸ்ரீஸூக்திகளில் பரிசயம் செய்துகொண்டும் அர்ச்சாரூபியாய் எழுந்தருளியுள்ள திவ்யதம்பதிகளிடம் ஈடுபட்டும் நிற்க வேண்டும். இதுகாறும் வீணே கழிந்த நிலையை நினைந்து மனம் வருந்தாது இப்பொழுது ஸதாசார்யகடாக்ஷத்தால் வந்த பாக்யத்தை நினைத்து மகிழவேண்டும். ஆஹாரநியமத்திற் கூறியபடி ஸாத்துவிகமான உணவையே உண்டு ஸத்துவகுணம் தலையெடுத்து நிற்கப் பெறவேண்டும். தினந்தோறும் தன் க்ருஹத்தில் பகவதாராதநம் இல்லாமல் உணவுகொள்ளக்கூடாது. பாகவதர்களுக்கும் தன்னைத் தாஸனாக அநுஸந்தித்து ஆசார்யனுக்கும் பாகவதர்களுக்கும் இயன்றவரை கைங்கர்யம் செய்யவேண்டும். தன்பெருமை பேசக்கூடாது. பிறரைப் பழிக்கக்கூடாது. எப்பொழுதும் த்வயத்தை அநுஸந்திக்கவேண்டும், உலகஸுகங்களை வெறுத்து எம்பெருமானையே நாடவேண்டும். ஆசார்யன் செய்த மஹோபகாரத்தை எப்பொழுதும் நினைக்கவேண்டும். மனம் வாக்கு காயம் ஆகிய முக்கரணங்களாலும் பாகவதாபசாரம் புரியக்கூடாது. வேறு தெய்வத்தின் ஸம்பந்தமே கூடாது. மரணகாலத்தில் ஸகல இந்த்ரியங்களும் ஒடுங்கிப் பேசவும் முடியாத நிலைமையில் உற்றார் உறவினர் இவர்களில் யாரும் தனக்காக வேறுதெய்வத்தை நாட விரும்பினாலும் அதை அநுமதிக்கக்கூடாது. வேறு தெய்வத்தின் ஸம்பந்தம் பாகவதாபசாரம் ஆகிய இரண்டுமே ப்ரபத்தியின் பெருமையைக் கூடக் குறைக்க முற்படவல்லன. ஆதலின் இவ்விரண்டிலும் மிக்க கவனத்துடன் நடக்கவேண்டும்.

ப்ரபந்நனுக்குப் பாபமின்மை :—ப்ரபத்தியின் பெருமையை அறிந்து அதை உபாயமாகப் பற்றிய ப்ரபந்நன் எம்பெருமானிடம் அளவற்ற அன்புகொண்டவனாதலின் அவன் திருவுள்ளத்திற்கு எதிராக அவன் கட்டளையை மீறி மனப்பூர்வமாய்ப் பாபம்செய்யத் துணியமாட்டான். அறியாமற் செய்யும் பாபங்கள் இவனிடம் சேரா. அவை ப்ரபத்தியின் பெருமையால் கழிந்துபோம். தேசம் காலம் முதலிய நிமித்தங்களின் தோஷத்தால் புத்திபூர்வமாய்ப் பாபம்செய்ய நேரிடினும் அதற்கு வருந்திப் பின்னும் பாபம் செய்யாது ப்ராயச்சித்தம்செய்ய முற்பட்டுச் செய்துமுடித்தால் பாபம் கழிந்துபோம். சாஸ்த்ரங்களில் கூறப்பட்ட பெரிய ப்ராயச்சித்தம் செய்யச் சக்தியற்றவனுக்கு அதற்காகப் பின்னும் ப்ரபத்தி செய்வதே ப்ராயச்சித்தமாகும். இங்ஙனம் செய்யாதவர்களையும் எம்பெருமான் இக் கர்மபூமியிலேயே தண்டித்துப் பரிசுத்தனாக்குகின்றான். எவ்வகையினும் ப்ரபந்நனுக்கு மோக்ஷம் நிச்சயம். நரகமில்லை.

ப்ரபந்நனுக்கு மரணத்தில் நியமமின்மை :—ப்ரபந்நன் நல்ல க்ஷேத்ரத்தில் உத்தராயணத்தில் சுக்லபக்ஷத்தில் பகலில் மரிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தமில்லை. மற்ற ஸாதாரண அதிகாரிகளுக்கு இவை அவசியமானவை. ப்ரபந்நனுக்கு எந்த இடத்தில் எப்பொழுது மரணம் வரினும் யாதும் குறையில்லை.

ஜீவன் சரீரத்தினின்று வெளியேறும் முறை :—ஸர்வேசுவரன் ஜீவனைச் சரீரத்தினின்று அகற்ற முற்படும்போது முதலில் வாக்கு முதலிய கர்மேந்த்ரியங்களையும் கண் முதலிய ஜ்ஞாநேந்த்ரியங்களையும் மனத்தில் சேர்க்கின்றான். இத்தகைய மனத்தை ப்ராணவாயுவுடன் சேர்த்து அவையனைத்துடனும் கூடிய ப்ராணவாயுவை ஜீவனோடு சேர்க்கின்றான். ஜீவனுடைய சரீரத்தில் முதுகின் மேற்புறத்தில் தூண்போன்ற மூன்று எலும்புகள் ஒன்றுகூடி நிற்கின்றன. அவை 'த்ரிஸ்தூணம்' என்று வழங்கும், எம்பெருமான் அவற்றைக் கடைந்து அங்கிருந்து ஐந்துபூதங்களின் ஸூக்ஷ்மாம்சங்களை எடுக்கின்றான். அவன் த்ரிஸ்தூணத்தைக் கடையும்போது ஜீவாத்மாவுக்கு உண்டாகும் வேதனையைப் போக்க அவனைத் தன்மீது அணைத்துக் கொள்கின்றான். இதுவரையில் உள்ள அம்சங்கள் மரிக்கும் அனைவருக்கும் பொதுவாகும். இதன்பின் ப்ரபந்நனை ஜீவனைச் சரீரத்தினின்று கிளம்பி நிற்கும் 101-நாடிகளில் வேறு கதியில் செல்லும் 100-நாடிகளாலின்றி ஸுஷும்நை, ப்ரஹ்மநாடி, மூர்த்தந்யநாடி யெனப்படும் 101-வதான நடுநாடிவழியாய் வெளியேற்றி அர்ச்சிராதி மார்க்கத்தில் நடத்திச்செல்கின்றான்.

அர்ச்சிராதிமார்க்கம் :—சரீரத்திலிருந்து தனிநாடிவழியே வெளியேறிவந்த ஜீவனை அக்நிதேவதை, பகலின்தேவதை, சுக்லபக்ஷதேவதை, உத்தராயணதேவதை, வர்ஷதேவதை, வாயுதேவதை, ஸூர்யன், சந்த்ரன், மின்னல்தேவதை, வருணன், இந்த்ரன், ப்ரஹ்மா ஆகிய இவர்கள் வரவேற்றுத் தக்க உபசாரங்களைச் செய்து தத்தம் எல்லைகளைக் கடத்தி வழிநடத்திவிடுவார்கள். இதுவே அர்ச்சிராதி மார்க்கமெனப்படும்.

புருஷார்த்தம்

பரமபதம்சேர்தலும். பரிபூர்ணபகவதநுபவமும் :— ப்ரபந்நனை ஜீவாத்மா அர்ச்சிராதிகதி முடிந்தபிறகு ஸ்ரீவைகுண்டத்தை நெருங்குவான்; அங்குச் செல்வதற்காக அதுகாறும் ப்ரபத்தியின் ப்ரபாவத்தால் நிறுத்திவைக்கப்பட்ட ஸூக்ஷ்மசரீரத்தைப் போகவிடுவான்; பின் அங்கு உள்ள விரஜையென்னும் அம்ருதமயமான நதியைத் தன் ஸங்கற்பத்தாலே தாண்டுவான். உடனே எம்பெருமான் ப்ரக்ருதி ஸம்பந்தமில்லாத சுத்தஸத்துவமயமான சரீரத்தை அவனுக்குக் கொடுப்பான். பின் அவன் அங்குள்ள ஐரம்மதீயம் என்னும் திவ்ய தடாகத்தைக் கடந்து ஸோமஸவநம் என்னும் அரசமரத்தை

அடைவான். அங்கு 500 திவ்யாப்ஸரஸ் ஸ்த்ரீகள் கையில் மாலை, மை, வாஸனைப்பொடி முதலிய உபசாரப்பொருள்களைக்கொண்டு இவனை வரவேற்பர். பின் அவர்கள் இவனுக்கு ப்ரஹ்மாலங்காரம் செய்வித்துச் சுத்தஸத்துவமயமான மணம் சுவை தேஜஸ் ஆகியவற்றை இவனிடம் புகச்செய்வார்கள். பின் அங்குள்ள பல நித்யஸூரிகள் எதிர்கொண்டழைப்பர். அங்கிருந்து திவ்யகோபுரத்திற்குச் சென்று அங்குக் காவல் புரிந்து நிற்கும் இந்த்ரன் ப்ரஜாபதி என்னும் த்வாரபாலகர்களை நெருங்க, அங்குள்ள நித்யஸூரிகளும் மஹர்ஷிகளும் இவனைத் தத்தம் இடத்திற்கு எழுந்தருளவேண்டுமென்று ப்ரார்த்தித்து இவன் திருவடிகளைத் திவ்யதீர்த்தத்தால் கழுவிநிற்பர்; பின்னும் பல திவ்ய ஸ்த்ரீகள் வாஸனைப்பொடி பூர்ணகும்பம் தீபம் முதலியவற்றை ஏந்திவந்து உபசரிப்பர். பின் இவன் ஆநந்தமயமான திவ்யமண்டபத்தில் ப்ரவேசிப்பான்; அங்கு நித்யஸூரிகளும் முக்தர்களும் பகவத்குணங்களைப் பேசி மகிழும் கோஷ்டியைக் கண்டுகளிப்பான். அந்தக் கோஷ்டியில் இவனுடைய ஆசார்யர்கள் இவனைக் கண்டு தாம் செய்த க்ருஷி பலித்ததெனப் பெருமிதம்கொண்டு நிற்பர். இவன் அவர்கள்பால் தன் நன்றியைக் காட்டி வணங்கி நிற்பான். பின் அந்தத் திவ்ய மண்டபத்தில் திவ்யபர்யங்கத்தில் ஆதிசேஷன்மீது பெரியபிராட்டி, பூமிதேவி, நீளாதேவி ஆகிய நாச்சிமாருடன் எழுந்தருளியுள்ள ஸ்ரீமந்நாராயணனைக் கண்ணாரக் கண்டு அவனது ரத்நபர்யங்கத்தில் ஏறித் திவ்யதம்பதிகளுடன் கலந்துபேசி இவன் பேராவல்கொண்டிருந்தபடியே, இதுகாறும் இவன் இழந்திருந்த இழவெல்லாம் தீர அவனைக் கண்டு அவனைப்போன்ற குணங்களைப்பெற்று அவன் திருவடிகளின் கீழே அநந்த—கருட—விஷ்வக்ஸேநர் முதலிய நித்யஸூரிகோஷ்டியுள் புகுந்து கலந்து எல்லாவிடத்திலும் எல்லாக்காலங்களிலும் எல்லா நிலைமைகளிலும் எல்லாவகைக் கைங்கர்யஸித்தியையும் பெற்று ஆநந்தக்கடலுள் மூழ்கிநிற்பான். இவனுக்கு அங்கிருந்து ஒருபோதும் திரும்புதல் இல்லை. இவன் தன் இஷ்டப்படி நடப்பதும் பகவத்கைங்கர்யத்தில் அடங்கியதே. தன் இச்சையுடன் ப்ரக்ருதிமண்டலத்திற்கு வந்து சென்றாலும் இவனுக்குச் சிறிதும் பகவதநுபவரஸத்திற்கு இடையூறென்பதேயில்லை. இம்முறையைக்கொண்டே இவனுக்குத் திரும்புதல் இல்லையென்பது. இத்தகைய பகவதநுபவமே பரிபூர்ண ப்ரஹ்மாநுபவமெனப்படும். இதுவே பரமபுருஷார்த்தமாம்.

இன்னும் பற்பல விஷயங்களை உரையில் ஆங்காங்குக் கண்டுகொள்க.

ஸ்ரீதேசிகதர்சநஸாரஸங்க்ரஹம் முற்றும்

श्रीमते निगमान्तमहादेशिकाय नमः

श्रीः

श्रीमते निगमान्तमहादेशिकाय नमः

ஸ்ரீதேசிகப்பிரபந்தம் — விஷய அகராதி

[இந்நூலில் அடங்கிய விஷயங்கள் அகராதிவரிசையில் பாசுரங்களின் தொடரெண்ணுடன் கொடுக்கப்படுகின்றன.]

அர்த்தபஞ்சகம்

உபாயம் 254, 255
ப்ரஹ்மஸ்வரூபம் 248, 249
பலன் 256, 257
பலனுக்கு விரோதி 252, 253
ஜீவஸ்வரூபம் 250, 251

ஆஹாரநியமம்

கைக்கொள்ள உரியன 396, 400
விலக்க உரிய அங்கம் 386, 387
,, கறிவகை 388, 389
,, நீர் 402
,, பால்வகை 401
,, வஸ்துக்கள் 390, 395
,, வெற்றிலை 403

ஆசார்யன்

ஆசார்யசிஷ்யர்களின் ஸம்பந்தம் 41
ஆசார்யபரம்பரை 42
ஆசார்யர்களின் பெருமை
ஆளவந்தார் 44
எம்பெருமானுர் 43, 128
நாதமுனிகள் 45
மடைப்பள்ளியாச்சான் 133
ஆசார்யன்கடமை 76
ஆசார்யன்கருணை 109
ஆசார்யனது உபகாரம் 7, 9, 11, 12, 16, 17, 23, 33, 35, 46, 47, 92, 96, 155, 156
ஆசார்யஸூக்தியின் பெருமை 5
ஆசார்யாநுஷ்டாநம் 2
ஆசார்யோபதேசத்தின் பெருமை 120, 122, 129

ஆழ்வார்கள்

ஆண்டாள் 376, ஆழ்வார்களின் கோஷ்டி 40, 383. குலசேகராழ்வார் 374, திருப்பாணாழ்வார் 378, திருமங்கையாழ்வார் 379, திருமழிசையாழ்வார் 371, திருவரங்கத்தமுதனர் 380, தொண்டரடிப்பொடியாழ்வார் 377, நம்மாழ்வார் 372, பூதத்தாழ்வார் 369, பெரியாழ்வார் 375, பேயாழ்வார் 370, பொய்கையாழ்வார் 368, மதுரகவிகள் 373, முதலாழ்வார்கள் காட்டிய வழி 89

உபாயம்

உபாயங்களின் பிரிவு 55
உபாயமும் பலனும் 27, 30, 38
பிறர்கூறும்உபாயகண்டநம் 198, 199
ஸாத்யோபாயம் 70
ஸித்தோபாயம் 69

ப்ரபத்தி

அஞ்ஜலியின் பெருமை 119
ப்ரபத்திக்கு அதிகாரி 56
ப்ரபத்திக்குப் பிந்திய கைங்கர்யம் 61
ப்ரபத்தியில் அஹங்காராதிகளை ஒழித்தல் 25
ப்ரபத்தியின் அங்கங்கள் 57, 241
ப்ரபத்தியின் கரணமந்த்ரம் 239
ப்ரபத்தியின் பெருமை 200
ப்ரபத்தியின் வகை 242
ப்ரபத்தியின் ஸ்வரூபம் 58, 246, 255
ப்ரபத்தியே சிறந்த உபாயம் 54, 237
ப்ரபத்தியை அநுஷ்டித்தல் 106, 126, 245
ப்ரபத்தியை ஒரேமுறை செய்தல் 243
ப்ரபத்தி ஸகலபலனையும் தருதல் 240
புருஷகாரப்ரபத்தி 347

பக்தி

பக்தியின் அங்கங்கள் 254

ப்ரபந்நன்

ப்ரபந்நன் ஸம்ஸாரத்தில் இருக்கக் காரணம் 153
ப்ரபந்நனது தேற்றம் 244
ப்ரபந்நனது பெருமையின் மிகுதி 72
ப்ரபந்நனது பெருமையின் வரையறை 71
ப்ரபந்நனது நிஷ்டை 8, 10, 15, 18, 19, 22, 59, 60, 112, 211
ப்ரபந்நனது மரணத்தில் நியமமின்மை 66
ப்ரபந்நனது மரணப்ரகாரம் 67
ப்ரபந்நனது வாஸஸ்தலம் 65
ப்ரபந்நனுக்குச் சாஸ்த்ரமே கைவிளக்கு 63
ப்ரபந்நனுக்குப் பாபம் சேராமை 64, 143

கீதையின் ஸாரார்த்தம்

முழுத் தாத்பர்யம் 326
1 வது அத்யாயம் 327, 2 வது-328, 3 வது-329, 4 வது 330, 5 வது-331, 6 வது-332, 7 வது-333, 8வது-334, 9 வது-335, 10 வது-336, 11 வது-337, 12 வது-338, 13 வது-339, 14 வது-340, 15 வது-341, 16 வது-342, 17 வது-343, 18 வது - 344, கீதையின் பயன் 345.

சிஷ்யன்

சிஷ்யன்கடமை 77

தத்துவங்கள்

தத்துவங்களின் உவமானம் 28
தத்துவங்களின் நிலை 80
தத்துவங்களின் விளக்கம் 51
தத்துவஜ்ஞாநத்தின் அவசியம் 3,4,29

அசேதநம்

அசேதநத்தின் வகை 24
அசேதநஸ்வரூபம் 159, 160

ஈசுவரன்

ஈசுவரஸ்வரூபம் 161, 162, 248, 249
ஈசுவரன் அபயமளித்தல் 111
ஈசுவரன் அபராதியையும் காத்தல் 110, 114
ஈசுவரனது உபகாரம் 32, 88, 104, 123, 125, 127
ஈசுவரனது கருணை 39
ஈசுவரனுடைய ஸ்வரூபநிரூபக தர்மங்கள் 248
ஸ்ரீமந்நாராயணனே பரதேவதை 52

சேதநம்

ஜீவர்களின் வகை 26
ஜீவஸ்வரூபம் 14, 124, 158, 250, 251
ஜீவேசுவரர்களின் நிலை 121
ஜீவேசுவரஸம்பந்தம் 49

திவ்யதேசங்கள் கோயில்

திருவரங்கத்தின் பெருமை 81
திருவரங்கன் திருவடிப்பெருமை 90

திருமலை

திருவேங்கடத்தின் பெருமை 82

பெருமாள்கோயில்

அத்திகிரிப் பெருமை 83
கச்சியின் ஸ்தலபுராணவரலாறு—
பிரமபதம் முதலியன அழியுந் தன்மை 238
பிரமன் எம்பெருமானைக் காண முயலுதல் 212
பிரமன் கச்சியைக் காணல் 216, 217
பிரமன் தன்னுலகம்சேர்தல் 232
பிரமன் தன்னை வெறுத்திடல் 213
பிரமன் பாரதநாடு சேர்தல் 214
பிரமன் மகிழ்தல் 227
பிரமன்மீது சினங்கொண்ட ஸரஸ்வதிநதியின் வேகம் 219
பிரமன் வசிட்டனைத் தூதனுப்பல் 218
பிரமன் விசுவகர்மனுக்குக் கட்டளையிடல் 215
பிரமனது பஞ்சகால ஆராதநோபதேசம் 231
பிரமனுக்காக எம்பெருமான் அணையாதல் 220
பிரமனுக்கு வரமளித்தல் 230
பிரமனுடையபகவதநுபவம் 228, 229

பிரமனுடைய யாகவேதியில்
பேரருளாளன் அவதாரம் 222
பேரருளாளன் குணவிசேஷங்கள் 226
பேரருளாளன் சரிதையைக்
கூறும் பிரதிக்கினை 209
பேரருளாளன் பொதுப்பெருமை 278
பேரருளாளன் மங்களாசாஸனம் 208
பேரருளாளனது நித்யவாஸம் 233
பேரருளாளனைத் துதித்தல் 221,
223, 224, 225
பேரருளாளனைப் பாட அனை
வரையும் அழைத்தல் 210

திருவயிந்திரபுரம்

தேவநாதன் தசாவதாரசரிதமும்
ஸ்தலபுராணவரலாறும் 358
தேவநாதன் திருவடிப்பெருமை 357
தேவநாதன் திவ்யசேஷ்டிதங்கள் 359
தேவநாதன்பெருமை 356
தேவநாதன்வடிவழகுவர்ணனை 362
தேவநாதன்விஷயமாய்ச்
செவிலி அறத்தொடுநிற்றல் 355
தேவநாதன் விஷயமாய்த்
தோழியிரங்கல் 349, 352
தேவநாதன் விஷயமான
பிரபந்தங்கள் 366
தேவநாதனது குணாநுபவம் 353
தேவநாதனது மாசிமக உத்ஸவம் 360
தேவநாதனிடம் அந்திம
ஸ்ம்ருதியை வேண்டல் 361
தேவநாதனிடம் பரஸமர்ப்பணம் 365
தேவநாதனிடம் ஸூக்தியின்
ஸமர்ப்பணம் 348
தேவநாதனுடைய பரத்வ
ஸௌலப்யங்கள் 354
தேவநாதனை அநுபவித்தல் 350
தேவநாதனைப்பற்றிய சேஷத்வம் 351
தேவநாதனை யமபாதை
யொழித்தல் வேண்டல் 363, 364

திவ்யப்பிரபந்தம்

'அமலனாதிபிரான்' பெருமை 130,
131, 132
திவ்யப்ரபந்தத்தால் வரும் பலன் 40
தொகுத்த எண் 381, 382

பஞ்சகாலங்கள்

அபிகமநம் 259, 260
இஜ்யை 263, 264
உபாதாநம் 261, 262
யோகம் 267, 268
ஸ்வாத்யாயம் 265, 266

பரமதகண்டநம்

அத்வைதமதகண்டநம் 175, 176
கணாதமதகண்டநம் 183, 184
சார்வாகமதகண்டநம் 165, 166
திருவாழியாழ்வான் துதி 154, 207
ந்யாயமதவிளக்கம் 185, 186
பரமதகண்டநத்தால் வரும் பலன் 201
பரமதகண்டநம்செய்த ஸ்தலம் 206
பாசுபதமதகண்டநம் 193, 194
பாசுபதர்க்கு உபதேசம் 195
பாஸ்கர—யாதவமத
கண்டநம் 179, 180
பொதுப்படைக் கண்டநம் 163, 164
மாத்யமிகமதகண்டநம் 167, 168
மீமாம்ஸகமதகண்டநம் 187, 188
யோகமதகண்டநம் 191, 192
யோகாசாரமதகண்டநம் 169, 170
வைபாஷிகமதகண்டநம் 173, 174
வையாகரணமதகண்டநம் 181, 182
ஜைநமதகண்டநம் 177, 178
ஸாங்க்யமதகண்டநம் 189, 190
ஸௌத்ராந்திகமத
கண்டநம் 171, 172

பன்னிருநாமம்

கேசவன் 280, கோவிந்தன் 283, த்ரி
விக்ரமன் 286, தாமோதரன் 291,
நாராயணன் 281, பத்மநாபன் 290,
மதுஸூதநன் 285, மாதவன் 282,
வாமநன் 287, விஷ்ணு 284
ஸ்ரீதரன் 288, ஹ்ருஷீகேசன் 289

பாகவதர்கள்

பாகவதகைங்கர்யம் 62
பாகவதர்களின் பெருமை 6

பாஞ்சராத்ரம்

பாஞ்சராத்ரத்தின்பெருமை 196, 197

மோக்ஷம்

மோக்ஷத்தின் படிகள்—
அர்ச்சிராதிமார்க்கம் 67, 146, 147
ஆசையறுதல் 138, 139
உபாயாநுஷ்டாநம் 142, 143
ஒன்பது படிகளின் கோவை 152
கர்மபலனுக்கு அஞ்சுதல் 140, 141
பரமபதம் சேர்தல் 148, 149
பரிபூர்ணபகவதநுபவம் 68, 150, 151, 202
மனந்தளர்தல் 136, 137
மோக்ஷத்தை ப்ரார்த்தித்தல் 107
விவேகம் 134, 135
ஜீவன் வெளியேறுதல் 144, 145

ரஹஸ்யங்கள்

ரஹஸ்யங்களின் நிஷ்டை 31
ரஹஸ்யங்களின் வகை 108
ரஹஸ்யங்களின் ஸாரம் 48
ரஹஸ்யஜ்ஞானத்தின் முக்கியத் தன்மை 13, 20, 21

சரமசுலோகம்

அஹம்சப்தார்த்தம் 321
ஏகசப்தார்த்தம் 318
சரணசப்தார்த்தம் 319
சரமசுலோகத்தால் வரும் பலன் 93
சரமசுலோகத்தின் அர்த்தம் 36, 37, 75, 86, 87, 276, 277, 315
சரமசுலோகத்தின் அவதாரம் 85, 105
த்வாசப்தார்த்தம் 322
'மா சுச:' அர்த்தம் 325
'மாம்' அர்த்தம் 317
'மோக்ஷயிஷ்யாமி' அர்த்தம் 324
'வ்ரஜ' சப்தார்த்தம் 320
வராஹசரமசுலோகஸாரம் 115, 116, 117, 118
'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய' அர்த்தம் 316
'ஸர்வபாபேப்ய:' அர்த்தம் 323

த்வயம்

சதுர்த்தியின் அர்த்தம் 312
சரணசப்தார்த்தம் 307
ஶரணசப்தார்த்தம் 308
த்வயத்தால் வரும் பலன் 102
த்வயத்தின் அர்த்தம் 74, 275
த்வயத்தின் அவதாரம் 303
த்வயத்தின் பத்துப் பொருள் 34, 314
தன்மையொருமையின் பொருள் 310
நம:சப்தார்த்தம் 313
நாராயணசப்தார்த்தம் 306
'பத்' வினைப்பகுதியின் பொருள் 309
'மதுப்' விகுதியின் அர்த்தம் 305
ஸ்ரீசப்தார்த்தம் 103, 304, 347
ஸ்ரீமந்நாராயணசப்தார்த்தம் 311

திருமந்திரம்

அகாரார்த்தம் 293
அயநசப்தார்த்தம் 300
உகாரார்த்தம் 295, 296
சதுர்த்தியின் அர்த்தம் 100, 294, 301
திருமந்த்ரத்தால் வரும் பலன் 84, 101
திருமந்த்ரத்தின் அர்த்தம் 73, 269 முதல் 274 வரை
திருமந்த்ரார்த்தத்தின் அருமை 302
நம:சப்தார்த்தம் 98, 298
நாரசப்தார்த்தம் 299
நாராயணசப்தார்த்தம் 99
ப்ரணவார்த்தம் 97, 113
மகாரார்த்தம் 297

ஸம்ப்ரதாயம்

விவேகம்பெறுதல் 53
ஸம்ப்ரதாயத்தில் சேர்தல் 1, 203, 204, 205
ஸம்ப்ரதாயத்தின் அதிகாரி 91
பலப்ரபந்தங்களின் முடிவுரை 79, 94, 95, 234, 235, 236, 247, 258, 279, 292, 346, 384, 404, 405

श्रीमते निगमान्तमहादेशिकाय नमः

श्रीः
श्रीमते निगमान्तमहादेशिकाय नमः

உரையில் விளக்கிய அம்சங்கள்

(பின்வரும் எண்கள் பக்கத்தைக் குறிப்பன.)

அவதாரரஹஸ்யம் 323, 345
ஆதிவாஹிகர் 54, 110
கர்மஜ்ஞாநபக்தி யோகங்களின் ஸ்வரூபம் 44
கோவர்த்தனோத்தரணம் 412
கௌதமசாபவரலாறு 190
சரீராத்மபாவஸம்பந்தம் 14
சரீரிலக்ஷணம் 39
சலம் 114, 188
சேஷனுக்கு அருளியது 241
ஜயத்ரதவதம் 112
த்ரிபுராஸுரவிருத்தாந்தம் 411
த்ரிஸ்தூணக்ஷேபம் 133
தேனம்பாக்கம் வேதியர் 292
ப்ரணவமும் அர்ஜுநரதமும் 84
ப்ரதாநப்ரதிதந்த்ரம் 39
ப்ரபத்தியும் அம்பெய்தலும் 252
ப்ரபந்நனது கர்மம் நீங்கும் வகை . 51, 130
பக்தியிலும் ப்ரபத்திக்கு இடம் 43
பீஜாங்குரந்யாயம் 259
புருஷகாரம் 261
புருஷார்த்தம் 32
மடலூர்தல் 139
“यमेवैष” விளக்கம் 56
ஸ்ரீசப்தார்த்தவிளக்கம் 307
ஸ்வநிஷ்டையின் அடையாளங்கள் 48
ஸரஸ்வதியின் ப்ரணயகலஹம் 218
ஹைஹதுகர் 35

இரண்டு

உபாயம் 55, ஜ்ஞாநம் 109, த்வாரம் 132, ப்ரபத்தி 261, ப்ரமம் 41, விசேஷணம் 255.

மூன்று

கடன் 61, தாபம் 315

நான்கு

சரீரம் 259, ப்ரபத்தி 249, குணங்கள் 322, வருணங்கள் 212.

ஐந்து

காலங்கள் 264, திருமேனி 311, ப்ரபத்தியின் அங்கம் 248.

ஆறு

சமயம் 77, குணங்கள் 279.

ஏழு

கடல் 104, த்வீபம் 214, மலை 209, முக்திக்ஷேத்திரம் 245.

எட்டு

சிவன் உருவம் 68, ஐசுவர்யம் 69, குணம் 7, 69, பகவத்குணம் 68, குலபர்வதம் 68, சித்திகள் 68, திக்பாலர் 68, திசை 68, பக்தி 68, பிரகிருதி 68, புஷ்பம் 68, யோகாங்கம் 69, ரஸம் 69.

ஒன்பது

த்வாரம் 132, வர்ஷம் 214.
பத்து வகை ஸம்பந்தம் 32
பதினொன்று இந்த்ரியம் 132
பதினான்கு உலகம் 209
நூற்றொரு நாடிகள் 53

श्रीमते निगमान्तमहादेशिकाय नमः

श्री:

श्रीमते निगमान्तमहादेशिकाय नम:

பிரபந்த அட்டவணை அகராதி

		பக்கம்	பாசுர எண்
1	அடைக்கலப்பத்து	244	11
2	அதிகாரசங்கிரகம்	29	56
3	அமிருதரஞ்சனி	2	39
4	அமிருதாசுவாதினி	82	37
5	அருத்தபஞ்சகம்	254	11
6	ஆகார நியமம்	442	21
7	கீதார்த்தசங்கிரகம்	336	21
8	சரமசுலோகச்சுருக்கு	318	11
9	திருச்சின்னமாலை	270	11
10	திருமந்திரச்சுருக்கு	294	10
11	துவயச்சுருக்கு	305	12
12	நவமணிமாலை	405	10
13	பரமதபங்கம்	142	54
14	பரமபதசோபானம்	118	21
15	பன்னிருநாமம்	286	13
16	பிரபந்தசாரம்	420	18
17	மும்மணிக்கோவை	389	10
18	மெய்விரதமான்மியம்	206	29
19	ஸ்ரீவைணவதினசரி	264	10
		மொத்தம் பாசுரம்	405
	பிள்ளையந்தாதி	454	20

श्रीः
श्रीमते निगमान्तमहादेशिकाय नमः

இப்பிரபந்தத்தில் அமைந்த பாக்களின் வகை

வெண்பா	பாசுரம்
குறள்வெண்பா	2
நேரிசைவெண்பா	15
(செந்தொடை) வெண்டுறை	1
ஆசிரியப்பா	
நிலைமண்டிலவாசிரியப்பா	4
நேரிசையாசிரியப்பா	1
அறுசீராசிரியச்சந்தவிருத்தம்	2
அறுசீராசிரியவிருத்தம்	12
எழுசீராசிரியச்சந்தவிருத்தம்	2
எழுசீராசிரியவிருத்தம்	2
எண்சீராசிரியச்சந்தவிருத்தம்	1
எண்சீராசிரியவிருத்தம்	133
பன்னிரண்டுசீராசிரியச்சந்தவிருத்தம்	1
பதின்மூன்றுசீராசிரியச்சந்தவிருத்தம்	1
பதினான்குசீராசிரியச்சந்தவிருத்தம்	3
பதினாறுசீராசிரியச்சந்தவிருத்தம்	3
பதினாறுசீராசிரியவிருத்தம்	1
இருபத்தெண்சீராசிரியவிருத்தம்	2
கலிப்பா	
கொச்சகக்கலிப்பா	23
கட்டளைக்கலித்துறை	185
கலிவிருத்தம்	11
	405

ஸ்ரீ:

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

ஸ்ரீதேசிகப் பிரபந்தம்

மூலமும் உரையும்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

பொதுத் தனியன்

रामानुजदयापात्रं ज्ञानवैराग्यभूषणम् ।
श्रीमद्वेङ्कटनाथार्यं वन्दे वेदान्तदेशिकम् ॥

உரை:— रामानुजदयापात्रं ஸ்ரீபாஷ்யகாரருடையவும், அப்புள்ளாருடையவும் க்ருபைக்குப் பாத்ரமானவரும், ज्ञानवैराग्य-भूषणं - ஜ்ஞானத்தையும் வைராக்யத்தையும் ஆபரணமாகக் கொண்டவரும், श्रीमद्वेङ्कटनाथार्यं - திருவேங்கடமுடையானுடைய (திருமணியின்) அவதாரமாயுள்ளவருமான, वेदान्तदेशिकं - ஸ்ரீவேதாந்ததேசிகனை, वन्दे - வணங்குகின்றேன்.

(இதன் விசேஷவுரைகளைப் பகவத்விஷயத்தனியனுரையில் காண்க).

வெண்பா

சீரொன்று தூப்புற் றிருவேங் கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியு—ளோரொன்று
தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.

உரை :— தாரணியில் வாழ்வார்க்கு – பூமண்டலத்தில் வஸிப்பவருக்கு, வான் ஏறப் போமளவும் வாழ்வு – பரமபதம் ஏறிச் செல்லுமளவாயுள்ள வாழ்க்கைக்கு, சீர் ஒன்று தூப்புல் திருவேங்கடமுடையான் – திருக்கல்யாணகுணங்கள் பொருந்தியவரும் தூப்புலில் திருவேங்கடமுடையானுடைய (திருமணியின்) திருவவதாரமாயுள்ளவருமான ஸ்ரீதேசிகன், பார் ஒன்றச் சொன்ன பழமொழியுள் – உலகத்தோர் ஈடுபடும்படி அருளிச்செய்த ப்ராசீன திவ்ய ஸூக்திகளுக்குள், ஓரொன்று தானே அமையாதோ?–ஏதாவது ஒரு பாகமே போதாதோ? (போதும்).

[இவ்விரண்டு பொதுத்தனியனையும் மேல் வரும் எல்லாப் பிரபந்தங்களிலும் முதலில் அநுஸந்தித்துக் கொள்க.]

தனியனுரை முற்றிற்று

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

அமிருதாஞ்சனி—உரை

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான்திருவடிகளே சரணம்

[விஷயச்சுருக்கம்]

ஸம்ப்ரதாயத்தில் பிறரால் சில கலக்கங்கள் வந்ததைக் கண்டு ஸ்ரீதேசிகன் அவற்றை நீக்கக்கருதி முதலில் ஸம்ப்ரதாயபரிசுத்தி என்ற ரஹஸ்யத்தை அருளிச்செய்து, தத்துவங்களையும் ரஹஸ்யார்த்தங்களையும் நன்கு அறிந்து உலகம் வாழப் பின்னும் ஸாரதீபம் வரையிலுள்ள 16 ரஹஸ்யங்களையும் அருளிச்செய்தார். இங்ஙனம் மணிப்ரவாள நடையில் ஸ்ரீதேசிகன் அருளிச்செய்த 17 ரஹஸ்யங்களே சில்லரை ரஹஸ்யங்களின் முதற்பாகமாக வழங்குகின்றன.

ஸ்ரீதேசிகன் பெரும்பாலும் ஒவ்வொரு ரஹஸ்யத்தின்தொடக்கத்திலும் முடிவிலும் அந்த அந்த ரஹஸ்யத்தின் விஷயத்தைச் சுருக்கிச் சில பாசுரங்களை அருளிச்செய்திருக்கிறார். இவ்வாறு 17-ரஹஸ்யங்களிலும் அருளிச்செய்யப்பட்ட 39-பாசுரங்களும் ஒரு ப்ரபந்தமாகத் தொகுக்கப்பட்டு "அமிருதரஞ்சனி" என்று வழங்குகிறது.

அம்ருதத்தைப்போல் அல்லது அம்ருதத்தைக் காட்டிலும் இப்பிரபந்தம் அநுஸந்திப்பவரின் உள்ளத்தை மகிழ்விப்பதால் இது இப்பெயர்பூண்டிருக்கலாம். இதில் ஸ்ரீதேசிகன் ஆசார்யனது அருள் பெற்றுத் தாம்உஜ்ஜீவித்ததைக் கூறி, சேதனம் அசேதனம் ஈசுவரன் என்னும் மூன்று தத்துவங்களின் ஸ்வரூபத்தைப் பிரித்துக் காட்டி திருமந்த்ரம் த்வயம் சரமசுலோகம் என்னும் மூன்று ரஹஸ்யங்களின் அர்த்தத்தைச் சுருக்கி வெளியிடுகிறார்.

ஆசார்யனது பேருதவி

கட்டளைக்கலித்துறை

1 தம்பர மென்றிரங் கித்தள ராமனந் தந்தருளா
லும்பர் தொழுந்திரு மாலுகந் தேற்கு முபாயமொன்று
னம்பிற வித்துயர் மாற்றிய ஞானப் பெருந்தகவோர்
சம்பிர தாயமொன் றிச்சதிர்க் குந்நிலை சார்ந்தனமே. 1

[இதுவும் அடுத்த பாசுரமும் ஸம்ப்ரதாயபரிசுத்தியைச் சேர்ந்தவை]

உரை:— தம் பரம் என்று இரங்கி – (நம்மைக் காப்பது) தம் பொறுப்பு என்று (நம் மீது) இரக்கம் வைத்து, அருளால் – க்ருபையி

ஞல், தளரா மனம் தந்து – கலங்காத மனத்தைக் கொடுத்து, உம்பர் தொழும் திருமால் – நித்யஸூரிகளால் வணங்கப்படும் எம்பெருமான், உகந்து ஏற்கும் உபாயம் ஒன்ருல் - மகிழ்ந்து ஏற்றுக்கொள்ளக்கூடிய (ப்ரபத்தியென்னும்) ஒரே உபாயத்திஞல், நம் பிறவித் துயர் மாற்றிய– நம்முடைய ஸம்ஸாரதுக்கத்தை ஒழித்தவர்களும், ஞானப் பெரும் தகவோர் – ஞானத்தையும் மிக்க கருணையையும் உடையவர்களுமான ஆசார்யர்களுடைய, சம்பிரதாயம் ஒன்றி – ஸம்ப்ரதாயத்தில் சேர்ந்து, சதிர்க்கும் நிலை சார்ந்தனம் – (சிறிய உபாயத்தால் பெரிய பலனை அடையும்) சிறந்த நிலையைப் பெற்ருேம்.

கருத்து:— மிகுந்த ஜ்ஞானத்தையும் நம்மீது அளவற்ற கருணை யையுமுடைய ஆசார்யர்கள் நம்மை உஜ்ஜீவிக்கச் செய்வதைத் தம் பொறுப்பாகக் கொண்டனர்; நமக்குத் தத்துவார்த்தங்களை உப தேசித்து, நம் மனம் ஒன்ருலும் கலங்காதவாறு செய்தனர்; எம் பெருமான் மகிழ்வுடன் ஏற்கும் ப்ரபத்தி என்னும் உபாயத்தை அநுஷ் டிக்கச் செய்து நம் பிறவியையொழித்தனர். இத்தகைய ஆசார்யர்களு டைய ஸம்ப்ரதாயத்தில் நாம் ஈடுபட்டு மோக்ஷாநந்தத்தைப் பெறும் பாக்கியமடைந்தோம். 1

ஆசார்யர்களின் வழியைப் பற்றினமை

அகவல்

௨ கடலமு தத்தைக் கடைந்து சேர்த்த
திருமா லடிகாட் டியநந்
தேசிகர் தந்நிலை பற்றிச்சேர்ந் தோமே. 2

உரை,— கடல் கடைந்து – கடலைக் கடைந்து, அமுதத்தைச் சேர்த்த – (தேவருக்கு) அமுதத்தைக் கொடுத்த, திருமால் அடி காட்டிய– எம்பெருமானுடைய திருவடிகளை (நமக்கு உபாயமாகக்) காட்டிக் கொடுத்த, நம் தேசிகர் தம் நிலை–நம் ஆசார்யர்களின் அநுஷ்டாநத்தை, பற்றிச் சேர்ந்தோம் – (சிறந்ததாகப்) பற்றி ஈடுபட்டோம்.

கருத்து:— முன்பு கடலைக் கடைந்து தேவர்களுக்கு அமுதை அளித்தான் எம்பெருமான். அந்த அமுதத்தைக் காட்டிலும் மிகப் போக்யமாயுள்ள அவன் திருவடிகளை உபாயமாக ஆசார்யர்கள் நமக்குக் காட்டிக்கொடுத்தனர். அவர்களுடைய அநுஷ்டாநத்தை மிகச் சிறந்ததாகப்பற்றி அதில் ஈடுபட்டோம். 2

தத்துவஜ்ஞானத்தின் இன்றியமையாமை

குறள்வெண்பா

௩ முத்திக் கருள்சூட மூன்றைத் தெளிமுன்ன
மித்திக்கா லேற்கு மிதம். 3

[தத்துவபதவீ]

உரை:—முத்திக்கு அருள் சூட - மோக்ஷத்திற்கு(க் காரணமான பகவானுடைய) க்ருபையைப் பெறுவதற்கு, மூன்றை - (சேதநம், அசேதநம், ஈசுவரன் என்னும்) மூன்று தத்துவங்களை, முன்னம் தெளி- முதலில் தெளிந்துகொள், இத் திக்கால் இதம் ஏற்கும் - இந்த வழியால் உபாயம் பொருந்தும்.

கருத்து:— சேதநனே! மோக்ஷத்திற்கு நேரான காரணம் எம் பெருமானது அருளேயாம். அதைப் பெறுவதற்கு முதலில் தத்துவம் மூன்றையும் நன்கு அறிந்து அதன்மூலம் உபாயத்தை அநுஷ்டிக்க வேண்டும். 3

ஸம்ஸாரதுக்கத்தைப் போக்கும் வழி

4 மூன்றி லொருமூன்று மூவிரண்டு முந்நான்குந்
தோன்றத் தொலையுந் துயர். 4

[ரஹஸ்யபதவீ]

உரை:— மூன்றில் - மூன்று ரஹஸ்யங்களில், ஒரு மூன்றும் - மூன்று பதங்களுள்ள திருமந்த்ரமும், மூவிரண்டும் - ஆறு பதங்களுள்ள த்வயமும், முந்நான்கும் - பன்னிரண்டு பதங்களுள்ள சரமசுலோக மும், தோன்ற - (அவற்றின் அர்த்தத்துடன்) மனத்தில் விளங்க, துயர் தொலையும் - (ஸம்ஸார) துக்கம் ஒழிந்துபோம்.

கருத்து:— திருமந்திரம் த்வயம் சரமசுலோகம் ஆகிய மூன்று ரஹஸ்யங்களையும் அர்த்தத்துடன் அறிந்தால் உபாயத்தை அநுஷ் டித்து ஸம்ஸாரதுக்கத்தைப் போக்கிக்கொள்ளலாம். 4

ஆசார்ய ஸ்ரீஸூக்திகளின் பெருமை

வெண்பா

5 உயிரு முடலு முடலாக வோங்கித்
தயிர்வெண்ணெய் தாரணியோ டுண்டான்—பயிரிற்
களைபோ லசுரரைக் காய்ந்தான்றன் கையில்
வளைபோலெம் மாசிரியர் வாக்கு. 5

[பாசுரம் 5, 6—தத்துவநவநீதம்]

உரை:— உயிரும் - சேதநமும், உடலும் - அசேதநமும், உட லாக - (தனக்குச்)சரீரமாய் நிற்க, ஓங்கி - உயர்ந்து, தயிர் வெண்ணெய்- தயிரையும் வெண்ணெயையும், தாரணியோடு உண்டான் - பூமியோடு உண்டவனும், பயிரில் களைபோல் - (ஸாது ஜநங்களாகிய) பயிருக்குக் களைபோன்ற, அசுரரை - அஸுரர்களை, காய்ந்தான் தன் - கொன்ற வனுமான பகவானுடைய, கையில் வளைபோல் - கையில் (அணிந் திருக்கும்) வளைபோல் அல்லது (தரிக்கும்) சங்கம்போல், எம் ஆசிரியர் வாக்கு - எம்முடைய ஆசார்யர்களின் ஸூக்திகள் (ப்ரகாசிக்கின்றன.)

கருத்து:— எம்பெருமானுக்கு இந்தச் சேதநமும் அசேதநமும் சரீரமாகும். அவன் அவற்றுள் அந்தர்யாமியாய் நிற்கின்றான். அவன் கண்ணனாய்ப் பிறந்து தயிரையும் வெண்ணெயையும் உண்டதுபோல் ப்ரளயகாலத்தில் ப்ரபஞ்சம் முழுவதையும் தன் வயிற்றில் கொள்கின்றான்; மேலும் பயிருக்குக் களைபோல் ஸாதுக்களைத் துன்புறுத்தும் துஷ்டர்களைக் கொன்று துன்பத்தை நீக்குகின்றான். இத்தகைய பெருமை வாய்ந்த எம்பெருமானுடைய திருக்கையில் அணியும் வளை போல் அல்லது சங்கம்போல் நம் ஆசார்ய ஸ்ரீஸூக்திகள் அமைந்துள்ளன. அந்த ஸூக்திகள் பிறமதத்தினரை வெல்வதற்குக் கருவியாயமைந்தமையால் எம்பெருமான் கையில் வெற்றிச் சின்னமாய் அணியும் வளையாகவும், ஜ்ஞாநத்தை வளர்க்கவல்லனவாதலின் ஜ்ஞாநத்தைத் தரவல்ல சங்கமாகவும் வருணிக்கப்பட்டன. 5

பாகவதர்களின் சிறப்பு

கட்டளைக்கலித்துறை

6 அலையற்ற வாரமு தக்கட லக்கட லுண்டமுகில்
விலையற்ற நன்மணி வெற்பு வெயினில வோங்குபக
றுலையுற் றனவென்பர் தூமறை சூடுந் துழாய்முடியாற்
கிலையோத் தனவவன் பாதம் பணிந்தவர்க் கெண்ணுதற்கே.

உரை:— தூமறை சூடும் – பரிசுத்தமான வேதத்தால் துதிக்கப்படுகிறவனும், துழாய் முடியாற்கு – திருத்துழாயைத் திருமுடியில் அணிந்தவனுமான பகவானுக்கு, அலை அற்ற ஆர் அமுதக் கடல் – அலையில்லாத நிறைந்த அமுதமயமான கடலும், அக்கடலுண்ட முகில்– அந்தக் கடலை (முழுதும்) பருகிய மேகமும், விலை அற்ற நல் மணி வெற்பு – விலை மதிக்க முடியாத சிறந்த நீல ரத்ந மலையும், வெயில் நிலவு ஓங்கு பகல் – வெயிலும் நிலவும் சேர்ந்து ப்ரகாசிக்கும் பகலும், துலை யுற்றன என்பர் – உபமானமாயின என்று (கவிகள்) கூறுவர். (ஆனால்) அவன் பாதம் பணிந்தவர்க்கு – அவ்வெம்பெருமானுடைய திருவடிகளைச் சரணமடைந்த தொண்டர்க்கு, ஒத்தன – ஒத்த பொருள்கள், எண்ணுதற்கே இ(ல்)லை – (மனத்தால்) நினைப்பதற்கும் இல்லை.

கருத்து:— ஒருவராலும் இயற்றப்படாது அபௌருஷேயமாய் விளங்கும் வேதாந்தங்களால் போற்றப்படுகின்ற எம்பெருமானுக்கு உபமானமாக அலையேயில்லாத அமுதக்கடல், கடல்நீரை முழுதும் பருகிய மேகம், விலை மதிக்கமுடியாத இந்த்ர நீல பர்வதம், வெயிலும் நிலவும் சேர்ந்து ப்ரகாசிக்கும் பகல் என்னும் அஸம்பாவிதமான பொருளைக் கற்பித்துக் கவிகள் கூறுவர். ஆனால் அவன் திருவடிகளை அடைந்த பாகவதர்களுக்கு உபமானமான பொருள்கள் மனத்தால் நினைப்பதற்கும் இல, ஆக பாகவதர்கள் எம்பெருமானிலும் சிறந்தவர் என்னலாயிற்று. 6

ஆசார்யர்கள் உபதேசித்த அர்த்தங்கள்

வெண்பா

7 உத்தி திகழு முரைமூன்றின் மும்மூன்றுஞ்
சித்த முணரத் தெளிவித்தார்—முத்திதரு
மூல மறையின் முடிசேர் முகில்வண்ணன்
சீல மறிவார் சிலர். 7

[பாசுரம் 7, 8—ரஹஸ்யநவநீதம்]

உரை:— முத்தி தரும் - மோக்ஷத்தைக் கொடுக்கவல்லவனும், மூல மறையின் முடி சேர் – (ஜ்ஞானத்திற்குக்) காரணமான வேதத்தின் அந்தத்தில் புகழப்படுகிறவனும், முகில் வண்ணன் – மேகம் போன்ற நிறமுடையவனுமான பகவானுடைய, சீலம் – குணங்களை, அறிவார் சிலர் – அறிந்த சில ஆசார்யர்கள், உத்தி திகழும் – உரைகளுள் சிறந்த. உரை மூன்றின் – ரஹஸ்யங்கள் மூன்றினுடைய, மும்மூன்றும் – ஒன்பது அர்த்தங்களையும், சித்தம் உணர – (நம்) மனம் அறியும்படி, தெளிவித்தார் – மயக்கமற உபதேசித்தனர்.

கருத்து:— மோக்ஷத்தைத் தருபவனாக வேதாந்தங்களால் பேசப்படுகின்ற எம்பெருமானது பெருமையை நன்கறிந்த ஆசார்யர்கள், அனைத்திலும் சிறந்த மூன்று ரஹஸ்யங்களிலுள்ள ஒன்பது அர்த்தங்களையும் நமக்கு உபதேசித்தனர்.

திருமந்த்ரத்தில் மூன்று அர்த்தங்கள்— 1 எம்பெருமானிடம் நம் ஸ்வரூபத்தை ஸமர்ப்பித்தல் 2 நம்மை ரக்ஷிக்கவேண்டிய கடமையை ஸமர்ப்பித்தல் 3 ரக்ஷித்தலின் பலனை ஸமர்ப்பித்தல் என்பன.

த்வயத்தில் மூன்று அர்த்தங்கள்— 1 உபாயம் 2 பலன் 3 (அவித்யையாகிய) விரோதியொழிகை என்பவை.

சரமசுலோகத்தில் மூன்று அர்த்தங்கள்— 1 சரணமடைபவன் செய்யுங்கார்யம் 2 சரணமடைந்தவனுக்கு எம்பெருமான் செய்யுங் கார்யம் 3 சரணமடைந்தபின் சேதநன் இருக்கவேண்டிய முறை என்பவை. 7

இவ்வுலகிலேயே வைகுந்த வாழ்வு

எண்சீராசிரியவிருத்தம்

8 எனக்குரிய னெனதுபர மென்பே றென்னு
திவையனைத்து மிறையில்லா விறைக்க டைத்தோந்
தனக்கிணையோன் றில்லாத திருமால் பாதஞ்
சாதனமும் பயனுமெனச் சலங்க டீர்ந்தோ
முனக்கிதமென் றொருபாக னுரைத்த துற்றோ
முத்தமனு மவனுதவி யெல்லாங் கண்டோ
மினிக்கவரு மவைகவர விகந்தோஞ் சோக
மிமையவரோ டொன்றினிநா மிருக்கு நாளே. 8

உரை:— எனக்கு உரியன் –(நானே) எனக்கு ஸ்வாமி, பரம் எனது –(என்னை) ரக்ஷிக்கும் கடமையும் என்னுடையதே, என் பேறு—(அதன்) பலனும் என்னுடையதே, என்னுது – என்று நினையாமல், இவை அனைத்தும் – ஸ்வரூபம் பரம் பலன் எல்லாவற்றையும், இறை இல்லா இறைக்கு அடைத்தோம் -(தனக்கு ஒரு) நாயகன் இல்லாத பகவானிடம் ஸமர்ப்பித்தோம், தனக்கு இணை ஒன்று இல்லாத – தனக்கு ஸமமான ஒரு வஸ்து இல்லாத, திருமால் பாதம் – எம்பெருமானுடைய திருவடியே, சாதனமும் பயனும் என – உபாயமும் பலனும் என்று நினைத்து, சலங்கள் தீர்ந்தோம் – தீய செயலை ஒழிந்தோம். உனக்கு இதம் என்று – உனக்கு(ப் பலன் பெறுவதற்கு) நன்மையான உபாயம் என்று, ஒரு பாகன் – நிகரற்ற (அர்ஜுனனது) தேர்ப்பாகனை கண்ணன், உரைத்தது உற்றோம் – உபதேசித்ததை (சரணாகதியை) ஏற்று அநுஷ்டித்தோம். உத்தமனும் அவன் – உயர்ந்தவனாகிய பகவானுடைய, உதவி எல்லாம் கண்டோம் – உபகாரங்களையெல்லாம் பெற்றோம். இனிக்க –(நம்) மனம் மகிழும்படி, வருமவை கவர—வரப்போகும் (அர்ச்சிராதிமார்க்கம் பகவதநுபவம் முதலிய) விஷயங்கள் (நம் மனத்தைக்) கவர, சோகம் இகந்தோம் – துன்பத்தை விட்டொழித்தோம். இனி நாம் இருக்கும் நாள் – இனி நாம் (இவ்வுலகில்) இருக்கும் நாள், இமையவரோடு ஒன்று – நித்யஸூரிகளின் காலத்திற்கு ஸமமானது.

கருத்து:— "நானே எனக்கு ஸ்வாமி; என்னைக் காக்கும் கடமையும் என்னதே; அதன் பலனும் என்னுடையதே" என்ற விபரீதஜ்ஞானங்கள் நீங்கப்பெற்று அவையனைத்தையும் எம்பெருமானிடமே ஸமர்ப்பித்தோம். அவன் திருவடிகளையே உபாயமாகவும் பலனாகவும் கொண்டோம். கண்ணன் அர்ஜுனனுக்கு உபதேசித்த ப்ரபத்தியையே நமக்கும் ஏற்ற உபாயமாகக் கருதி அதை அநுஷ்டித்தோம். இன்னும் சரண்யன் செய்த உபகாரங்கள் அனைத்தையும் பெற்றோம். பின் நமக்கு வரப்போகும் அர்ச்சிராதிமார்க்கம் பகவதநுபவம் முதலிய ஆநந்தங்களை நினைத்து மனக்கவலை நீங்கப்பெற்றோம். இத்தகைய சிறப்புடன் நாம் இனி இக்கர்மபூமியில் இருக்கும் வாழ்வும் நித்யஸூரிகளுடைய வாழ்வை ஒத்ததேயாம். 8

ஆசார்யர்களின் உபதேசஸாரம்

வெண்பா

9 தத்துவங்க ளெல்லாந் தகவா லறிவித்து
முத்தி வழிதந்தார் மொய்கழலே—யத்திவத்தி
லாரமுத மாரு மிருநிலத்தி லென்றுரைத்தார்
தாரமுத லோதுவித்தார் தாம். 9

[*பாசுரம் 9, 10, 11—தத்துவமாத்ருகை*]

உரை:— தாரம் முதல் - ப்ரணவத்தை முதலக்ஷரமாகக் கொண்ட (திருமந்த்ரம் முதலிய) ரஹஸ்யங்களை, ஓதுவித்தார்தாம் - உபதேசித்த ஆசார்யர்கள், "தத்துவங்களெல்லாம் - "தத்துவங்களின் ஸ்வரூபத்தை முழுதும், தகவால் அறிவித்து - (நம்மிடம் உள்ள) க்ருபையினுல் உபதேசித்து, முத்தி வழி தந்தார் - மோக்ஷத்தின் உபாயத்தை உபதேசித்த ஆசார்யர்களுடைய, மொய்கழலே - வலிய திருவடிகளே, அத் திவத்தில் - அந்தப் பரமபதத்தில், ஆர் அமுதம் (ஆம்) - நிறைந்த அமுதமாகும், இரு நிலத்தில் - அகன்ற இப்பூமியில், ஆறு ஆம்" - உபாயமுமாகும்", என்று உரைத்தார் - என்று உபதேசித்தனர்.

கருத்து:— நம் ஆசார்யர்கள் நமக்குச் செய்த உபதேசத்தின் ஸாரமாவது—தத்துவங்களின் ஸ்வரூப ஸ்வபாவங்களை உபதேசித்து மோக்ஷோபாயத்தைக் காட்டிக்கொடுத்த ஆசார்யர்களின் திருவடிகளே இவ்வுலகில் உபாயமாகவும் ஸ்ரீவைகுண்டத்தில் அநுபவிக்கும் பலனுகவும் ஆவன—என்பதாம். *9*

விவேகிகளின் செயல்

கட்டளைக்கலித்துறை

10 திருநா ரணனெனுந் தெய்வமுஞ் சித்து மசித்துமென்று
பெருநான் மறைமுடி பேசிய தத்துவ மூன்றிவைகேட்
டோருநா ளுணர்ந்தவ ருய்யும் வகையன்றி யோன்றுகவா
ரிருநா லெழுத்தி னிதயங்க ளோதிய வெண்குணரே. 10

உரை—: திருநாரணன் எ(ன்)னும் தெய்வமும் - ஸ்ரீமந்நாராயணன் எனப்படும் ஈசுவரனும், சித்தும் - சேதனமும், அசித்தும் என்று - அசேதநமும் என்று, பெரு நான்மறை முடி பேசிய - பெரிய நான்கு வேதங்களின் அந்தத்தில் சொல்லப்பட்ட, இவை தத்துவம் மூன்று - இந்த மூன்று தத்துவங்களையும், ஒரு நாள் கேட்டு உணர்ந்தவர் - (தம்முடைய பாக்யம் பக்வமான) ஒரு நாளில் (ஆசார்யர்களிடம்) கேட்டு அறிந்தவர்களும், இரு நாலு எழுத்தின் - அஷ்டாக்ஷரத்தின், இதயங்கள் ஓதிய - தாத்பர்யத்தை அநுஸந்தித்தவர்களும், எண்குணர் - எட்டு ஆத்மகுணங்களையுடையருமான பெரியோர்கள், உய்யும் வகையன்றி - (தாம்) உஜ்ஜீவிப்பதற்கு உபாயத்தைத் தவிர, ஒன்று உகவார் - வேறென்றையும் மனத்திற் கொள்ளமாட்டார்கள்.

கருத்து:— சேதநம் அசேதநம் ஈசுவரன் என்னும் தத்துவங்களின் ஸ்வரூப ஸ்வபாவங்களை வேதாந்தங்கள் கூறுகிறபடியே ஆசார்யர்களிடம் தம் பாக்யம் பரிபக்வமான நாளில் கேட்டறிந்து திருவஷ்டாக்ஷரத்தின் பொருளையும் நன்கு உணர்ந்த விவேகிகள் வேறென்றையும் நாடாது தாம் உஜ்ஜீவிக்கும் வழியிலேயே ஊற்றங் கொள்வர். *10*

எட்டுக்குணங்கள்— 1 கருணை 2 பொறுமை 3 பொறாமையின்மை 4 பரிசுத்தம் 5 வருந்தாமை 6 நன்மையை நினைத்தல் 7 லோபமின்மை 8 ஆசையின்மை — என்பன.

ஆசார்யர்கள் காட்டிய தத்துவங்கள்

எண்சீராசிரியவிருத்தம்

11 காரணமா யுயிராகி யனைத்துங் காக்குங்
கருணைமுகில் கமலையுட னிலங்கு மாறு
நாரணனார் வடிவான வுயிர்க ளெல்லா
நாமென்று நல்லடிமைக் கேற்கு மாறுந்
தாரணிநீர் முதலான மாயை காலந்
தனிவானென் றிவையுருவாந் தன்மை தானுங்
கூரணிசீர் மதியுடைய குருக்கள் காட்டக்
குறிப்புடனாங் கண்டவகை கூறி னோமே. 11

உரை :—காரணமாய் – (எல்லாவற்றுக்கும்) காரணமாய், உயிராகி- (எல்லாவற்றுக்கும்) அந்தர்யாமியாய், அனைத்தும் காக்கும் – ஸகலத்தையும் ரக்ஷிக்கின்ற, கருணை முகில் – கருணையாகிய நீரைப் பொழியும் மேகம் போன்றவனான பகவான், கமலையுடன் இலங்குமாறும் – பிராட்டியுடன் ப்ரகாசிக்கும் ப்ரகாரத்தையும், நாரணனார் வடிவான – எம்பெருமானது சரீரமான, உயிர்கள் எல்லாம் – ஜீவாத்மாக்களெல்லாம், நாம் என்று – "நாம் முன் நாம் முன்" என்று (போட்டியிட்டு), நல் அடிமைக்கு ஏற்குமாறும் – சிறந்த கைங்கர்யம் செய்வதற்குத் தகுந்தவர்களாயிருக்கும் ப்ரகாரத்தையும், தாரணி நீர் முதலான மாயை – பூமி ஜலம் முதலிய பூதங்களாய் மாறுகிற மூலப்ரக்ருதி, காலம் தனிவான் – காலம், சுத்தஸத்துவம், என்று இவை – என்ற இந்த அசேதநதத்துவங்கள், உருவாம் தன்மை தானும் – (ஸ்தூலமான) உருவமுள்ளனவாயிருக்கும் ஸ்வபாவத்தையும், கூர் அணி சீர் மதியுடைய – ஸூக்ஷ்மமான அழகிய சிறந்த ஜ்ஞானத்தையுடைய, குருக்கள் காட்ட – ஆசார்யர்கள் உபதேசிக்க, குறிப்புடன் – கவனத்துடன், நாம் கண்ட வகை – நாம் அறிந்தபடியே, கூறினோம் – (இந்த ரஹஸ்யத்தில்) வெளியிட்டோம்.

கருத்து:— அனைத்துக்கும் காரணமாயும் அந்தர்யாமியாயும் நின்று காக்கும் ஸர்வேசுவரன் கருணையாகிய நீரைப் பொழியும் காளமேகமாய்ப் பிராட்டியுடன் பிரகாசிக்கின்றான். அவனுக்குச் சரீரமாயுள்ள ஜீவர்கள் "நாம் முன், நாம் முன்" என்று போட்டியிட்டு ஸ்ரீவைகுண்டத்தில் எம்பெருமானுக்கு இடைவிடாது கைங்கர்யம் செய்ய உரிமையுடையவர்கள். ப்ரக்ருதி காலம் சுத்தஸத்துவம் ஆகிய அசேதநங்கள் ஸ்தூலமான உருவமுடையனவாய் நிற்கின்றன. இந்த மூன்று தத்துவங்களின் ஸ்வரூபத்தையும் ஸ்வபாவத்தையும்

ஸூக்ஷ்மார்த்தத்தையறிந்த ஆசார்யர்கள் நமக்கு உபதேசித்தபடியே இந்த ரஹஸ்யத்தில் வெளியிட்டோம். 11

ஆசார்யோபதேசத்தால் தெளிந்தமை

வெண்பா

12 அப்படி நின்ற வமலன் படியெல்லா
மிப்படியெம் முள்ளத் தெழுதினு—ரெப்படியு
மேரார் சுருதி யோளியா லிருணீக்குந்
தாரா பதியனையார் தாம். 12

[பாசுரம் 12, 13— ரஹஸ்யமாத்ருகை]

உரை :—ஏர் ஆர் – பெருமை பொருந்திய, சுருதி ஒளியால் – வேதாந்தமாகிய நிலவினால், எப்படியும் இருள் நீக்கும் – எவ்விதத்திலும் அஜ்ஞாநமாகிய இருளைப் போக்குகின்ற, தாராபதி அனையார் தாம் – நக்ஷத்ரங்களுக்கு அரச(னை சந்த்ர)னைப்போன்ற ஆசார்யர்கள், அப்படி நின்ற – அவ்வாறு (நம்மால் அறியமுடியாதபடி) நின்ற, அமலன் படியெல்லாம் – குற்றமற்ற எம்பெருமானுடைய ப்ரகாரங்களை யெல்லாம், இப்படி – இந்த ரஹஸ்யத்தில் கூறியபடி, எம் உள்ளத்து எழுதினர் – நம் மனத்தில் பதியும்படி உபதேசித்தனர்.

கருத்து:— உலகில் சந்த்ரன் தன் நிலவினால் இருளைப் போக்கு கின்றான். அதுபோல் நம் ஆசார்யர்கள் வேதாந்தோபதேசத்தால் நம் அஜ்ஞாநத்தை ஒழிக்கின்றனர். அவர்கள் நம்மால் அறியமுடியாத பகவானுடைய ப்ரகாரங்களை நமக்கு உபதேசித்தபடியே இந்த ரஹஸ்யத்தில் வெளியிட்டோம். 12

ஆத்மாவை உய்விக்கும் அர்த்தங்கள்

கட்டளைக்கலித்துறை

13 செம்பொற் கழலிணைச் செய்யா ளமருந் திருவரங்க
ரன்பர்க் கடியவ ராயடி சூடிய நாமுரைத்தோ
மின்பத் தொகையென வெண்ணிய மூன்றி லெழுத்தடைவே
யைம்பத் தொருபொரு ளாருயிர் காக்கு மமுதெனவே. 13

உரை:— செம் பொன் கழல் இணை – சிவந்த பொன் போன்ற இரண்டு திருவடிகளையுடைய, செய்யாள் அமரும் திருவரங்கர் – பிராட்டி வீற்றிருக்கும் (திருமார்பையுடைய) ஸ்ரீரங்கநாதருடைய, அன்பர்க்கு அடியவராய் – தொண்டர்களுக்குத் தொண்டர்களாய், அடி சூடிய நாம்— (அவர்களுடைய) திருவடிகளை (த்தலையில்) சூடிய நாம், இன்பத் தொகை என – ஆநந்தத்தின் கூட்டம் என்று, எண்ணிய மூன்றில் – எண்ணப்பட்ட ரஹஸ்யங்கள் மூன்றில், எழுத்து அடைவே – அக்ஷரங் களின் வரிசையில், ஆர் உயிர் காக்கும் அமுது என – அருமையான

ஜீவாத்மாவை உஜ்ஜீவிக்கச் செய்யும் அம்ருதம் என்று சொல்லும் படி, ஐம்பத்தொரு பொருள் – ஐம்பத்தொன்று அர்த்தங்களை, உரைத்தோம் – (இந்த ரஹஸ்யத்தில்) கூறினோம்.

கருத்து:— சிவந்த பொன்போன்ற திருவடிகளையுடைய பெரிய பிராட்டியார் நித்யவாஸஞ்செய்யும் திருமார்பினையுடைய திருவரங்கனுடைய அடியவர்களுக்கு அடியவராய்நின்று அந்தப் பாகவதர்களின் திருவடிகளை முடியிற்சூடி நிற்கின்றோம். இந்தப் பாக்யம் பெற்ற நாம் ஆநந்தத்தின் வடிவமென்னலாம்படியுள்ள மூன்று ரஹஸ்யங்களின் 51-அர்த்தவிசேஷங்களை இந்த ரஹஸ்யத்தில் விளக்கினோம். இவை சரீரத்தைமட்டும் காக்கும் அமுதம்போலன்றி உயிரையும் காக்கும் அமுதமாகும். *[51 அர்த்தங்களை ரஹஸ்யத்திலே காண்க.]* 13

ஜீவாத்மாவின் ஸ்வரூபம்

14 யானறி யுஞ்சுட ராகிநின் றேன்மற்றும் யாதுமலேன்
வானம ருந்திரு மாலடி யேன்மற்றோர் பற்றுமிலேன்
தானமு தாமவன் றன்சர ணேசர ணென்றடைந்தேன்
மான மிலாவடி மைப்பணி பூண்ட மனத்தினனே. 14

[பாசுரம் 14, 15—ரஹஸ்யஸந்தேசம்]

உரை:— யான் – ஜீவாத்மாவாகிய நான், அறியும் சுடராகி நின்றேன் – மற்றைப் பொருள்களை அறிபவனுகவும் ஜ்ஞாநஸ்வரூபனுகவும் நிற்கின்றேன்; மற்றும் யாதும் அ(ல்)லேன் – மற்ற அசேதநத்திற்காட்டிலும் வேறுபட்டிருக்கின்றேன்; வான் அமரும் – பரமபதத்தில் எழுந்தருளியிருக்கின்ற, திருமால் அடியேன் – எம்பெருமானுக்குத் தாஸன்; மற்று ஓர் பற்றும் இலேன் – வேறு ஒரு பொருளிலும் உரிமை இல்லாதிருக்கின்றேன்; மானம் இலா – அளவு இல்லாத, அடிமைப் பணி – கைங்கர்யமாகிற ஸாம்ராஜ்யத்தை, பூண்ட மனத்தினன் – இறுகப் பற்றிய மனத்தையுடைய யான், தான் அமுதாம் அவன் தன் – தான் (அநுபவிக்க) அமுதம் போன்ற எம்பெருமானுடைய, சரணே – திருவடிகளையே, சரண் என்று அடைந்தேன் – உபாயமென்றடைந்தேன்.

கருத்து:—ஜீவாத்மாவாகிய நான் என்னுடைய தர்மபூதஜ்ஞாநத்தால் பிற பொருள்களை அறிபவனுகவும், என்னை அறிய வேறொரு ஜ்ஞாநம் வேண்டாதபடி தானே ஜ்ஞாநஸ்வரூபனுய் ப்ரகாசிப்பவனுகவும் இருக்கின்றேன்; அசேதநங்களைக் காட்டிலும் வேறுபட்டவன்; ஸ்ரீமந்நாராயணனுக்கே எப்போதும் அடியன். வேறு ஒரு வஸ்துவிலும் எனக்கு உரிமையில்லை. ஸ்ரீவைகுண்டத்திற்குச் சென்று எம்பெருமானுக்கு இடைவிடாது கைங்கர்யம் செய்யவேண்டுமென்று அவா மிகுந்து, தெவிட்டாத அமுதமாய் நிற்கும் எம்பெருமானுடைய திருவடிகளைச் சரணமடைந்தேன். 14

ப்ரபத்தியின் பெருமை

15 சீலங் கவர்ந்திடுந் தேசிகர் தேசின் பெருமையினுற்
றூலங்க ளன்ன துரிதங்கண் மாய்ந்தன துஞ்சறருங்
கோலங் கழிந்திடக் கூறிய காலங் குறித்துநின்றே
மேலிங்கு நாம்பிற வோம்வேலை வண்ணனை மேவுதுமே.

[இப்பாசுரத்திற்கு ரஹஸ்யஸந்தேசவிவரணத்தில் ஸ்வாமி தேசிகன் தாமே உரையிட்டருளியிருக்கிறார். அதைத் தழுவி இங்கே பொருள் எழுதப்படுகின்றது—]

உரை:—சீலம் - நற்குணத்தையும் நல்லொழுக்கத்தையும், கவர்ந்திடும் - கைக்கொண்ட, தேசிகர் தேசின் பெருமையினால்-ஆசார்யர்கள் செய்த ப்ரபத்தியாகிய தேஜஸ்ஸின் ப்ரபாவத்தால், தூலங்கள் அன்ன - பஞ்சுகள் போன்ற துரிதங்கள் மாய்ந்தன - பாபங்கள் ஒழிந்தன. துஞ்சல் தரும் - அஜ்ஞாநத்தைத் தருகின்ற, கோலம் கழிந்திட - இச் சரீரம் அழிவதற்கு, கூறிய காலம்-(பகவான்) ஸங்கல்பித்த காலத்தை, குறித்து நின்றோம் - எதிர்பார்த்து நிற்கின்றோம்; மேல் இங்கு - இனி இக்கர்மபூமியில், நாம் பிறவோம் - நாம் பிறக்கமாட்டோம்; வேலை வண்ணனை மேவுதும் - கடல் போன்ற நிறமுடைய பரமபத நாதனைச் சேர்ந்துவிடுவோம்.

கருத்து:— நம் ஆசார்யர்கள் நற்குணமும் நல்லொழுக்கமும் நிரம்பப்பெற்றவர்கள். அவர்கள் அநுஷ்டித்த ப்ரபத்தியின் பெருமையால் நம்முடைய எண்ணிறந்த பாபங்கள் அனலிலிட்ட பஞ்சுப்பொதி போல் ஒழிந்து விட்டன. அஜ்ஞாநத்தை மேன்மேலும் வளர்த்து அழியும் இந்தக் கர்மசரீரம் நீங்கிப் பரமபதம் சென்று எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்ய அவன் ஸங்கல்பித்த காலத்தை எதிர்பார்த்து நிற்கின்றோம். இனி எவ்வகையாலும் நமக்கு மறுபிறவியில்லை. 15

ஆசார்யோபதேசத்தால் வந்த லாபம்

16 வண்மை யுகந்த வருளால் வரந்தரு மாதவனு
ருண்மை யுணர்ந்தவ ரோதுவிக் கின்ற வுரைவழியே
திண்மை தருந்தெளி வொன்றுற் றிணியிரு ணீங்கியநாந்
தண்மை கழிந்தனந் • தத்துவங் காணுந் தரத்தினமே. 16

[பாசுரம் 16, 17—தத்துவரத்நாவளி]

உரை:— வண்மை உகந்த அருளால் - (வேண்டுமளவுக்கு அதிகமாக அளிக்கும் தன்மையாகிய) ஔதார்யத்துடன் கூடிய க்ருபையினால், வரம் தரும் மாதவனுர் - வேண்டிய வரத்தைத் தருகின்ற எம்பெருமானுடைய, உண்மை உணர்ந்தவர் - ஸ்வரூபத்தை அறிந்த ஆசார்யர்கள், ஓதுவிக்கின்ற உரை வழியே - உபதேசிக்கின்ற ரஹஸ்யங்களின் வழியாக (உண்டான), திண்மை தரும் தெளிவு ஒன்றால் -

மனவுறுதியைத் தரும் ஒரு ஜ்ஞாநத்தால், திணி இருள் நீங்கிய நாம் – திடமான அஜ்ஞாநம் நீங்கப் பெற்ற நாம், தண்மை கழிந்தனம்–தாழ்வு நீங்கப்பெற்றோம்; தத்துவம் காணும் தரத்தினம் – தத்துவங்களை அறியக்கூடிய பெருமையுடையோமானோம்.

கருத்து:— ஸர்வேசுவரன் அடியார்களுக்கு வேண்டிய பலனை அளவுக்கு அதிகமாக அளிக்கவல்ல கருணை நிரம்பியவன். அவன் ஸ்வரூபத்தையும் ஸ்வபாவத்தையும் நன்கு உணர்ந்த ஆசார்யர்களின் உபதேசத்தால் நாம் அஜ்ஞாநம் ஒழியப்பெற்றோம். இதுகாறும் இருந்த தாழ்வுநீங்கித் தத்துவங்களை அறியவல்ல பெருமை பெற்றோம்.

வேதாந்தங்கள் பேசும் உண்மை

17 நாரா யணன்பர னுமவ னுக்கு நிலையடியோஞ்
சோரா தனைத்து மவனுடம் பென்னுஞ் சுருதிகளாற்
சீரார் பெருந்தகைத் தேசிக ரெம்மைத் திருத்துதலாற்
றீரா மயலகற் றுந்திறம் பாத்தெளி வுற்றனமே. 17

உரை:—சீர் ஆர் – சிறப்புப் பொருந்திய, பெருந்தகை – மிக்க கருணையுடையவர்களான, தேசிகர் - ஆசார்யர்கள், "நாராயணன் பரன் – "ஸ்ரீமந்நாராயணனே ஸர்வோத்தமன்; நாம் அவனுக்கு நிலை அடியோம் - (சேதநராகிய) நாம் அவ்வெம்பெருமானுக்கு நித்ய தாஸர்கள்; சோராது அனைத்தும் – ஒன்றும் விடாமல் (சேதநம் அசேதநம்) எல்லாம், அவன் உடம்பு" – அவனுக்குச் சரீரமாக உள்ளன", என்னும் சுருதிகளால் – என்று வெளியிடும் வேதங்களைக்கொண்டு, எம்மைத் திருத்துதலால் – எம்மைச் சீர்திருத்தியதால், தீரா மயல் அகற்றும் – (வேறொன்றாலும்) நீங்காத அஜ்ஞாநத்தைப் போக்கக்கூடியதும், திறம்பாத் தெளிவு உற்றனம்–(மறுபடி நம்மை விட்டு) நீங்காததுமான ஜ்ஞாநத்தை அடைந்தோம்.

கருத்து:—"ஸ்ரீமந்நாராயணனே எல்லோரினும் மேம்பட்டவன்; சேதநர்களாகிய நாம் அவனுக்கு எந்நாளும் அடியர்; சேதநம் அசேதநமாகிய ப்ரபஞ்சம் முழுதும் அவனுக்குச் சரீரம்" என்று வேதாந்தங்கள் முழுதும் ஒருமுகமாய்ப் பேசுகின்றன. இவ்வர்த்தங்களைக் கருணை மிக்க நம் ஆசார்யர்கள் உபதேசித்து நம்மை நல்வழிப்படுத்தியதால் அஜ்ஞாநத்தை நீக்கவல்ல விசேஷஜ்ஞாநத்தைப் பெற்றோம். 17

ப்ரபந்நனுக்குப் பொறுப்பு நீங்கியமை

18 ஒன்றே புகலென் றுணர்ந்தவர் காட்டத் திருவருளா
லன்றே யடைக்கலங் கொண்டநம் மத்தி கிரித்திருமா
லின்றே யிசையி னிணையடி சேர்ப்ப ரினிப்பிறவோ
நன்றே வருவதெல் லாநமக் குப்பர மொன்றிலதே. 18

[பாசுரம் 18, 19—ரஹஸ்யரத்நாவளி]

[இப்பாசுரமும் அடுத்த பாசுரமும் ஸ்ரீ தேசிகனுலேயே உரை யிடப்பட்டுள்ளன. அதைத் தழுவி இங்கே பொருள் எழுதப்படு கின்றது—]

உரை:— உணர்ந்தவர் – (அர்த்தபஞ்சகத்தையும் சரீராத்ம பாவம் முதலிய ஸம்பந்தத்தையும்) அறிந்த ஆசார்யர்கள், ஒன்றே புகலென்று - ஸ்ரீமந்நாராயணன் ஒருவனே உபாயம் என்று, காட்ட – உபதேசிக்க, அல்லது, ஒன்றே புகல் என்று உணர்ந்தவர் – எம்பெரு மானே உபாயம் என்று அறிந்த ஆசார்யர்கள், காட்ட – அவன் திருவடி களில் நம்மை ஸமர்ப்பிக்க, திரு அருளால் – (ப்ரத்யுபகாரத்தை எதிர் பாராத) சிறந்த அவனுடைய க்ருபையினுல், அல்லது பிராட்டியின் க்ருபையாலே, அன்றே - அப்பொழுதே, அடைக்கலம் கொண்ட – ரக்ஷிக்கப்படவேண்டிய வஸ்துவாக ஏற்றுக்கொண்ட, நம் அத்திகிரித் திருமால் - நம்முடைய ஹஸ்திகிரிநாதரான பேரருளாளர், இன்றே – இப்பொழுதே, இசையின் – (முக்தியைப் பெற நாம்) ஸம்மதித்தால், இணை அடி சேர்ப்பர் – (தம்முடைய) இரண்டு திருவடிகளில் சேர்த்துக் கொள்வார்; இனிப் பிறவோம் - இனி மறுபடியும் (இக்கர்மபூமியில்) பிறக்கமாட்டோம்; வருவது எல்லாம் – இனி (இச்சரீரம் அழியுமளவும்) வரும் இன்பங்களும் துன்பங்களும் ஆகிய எல்லாம், நன்றே – நமக்கு அநுகூலங்களே; நமக்குப் பரம் ஒன்று இலது - இனி நாம் உஜ்ஜீவிப் பதற்காகச் செய்யவேண்டிய பொறுப்பு ஒன்றும் நமக்கு இல்லை.

கருத்து:-அர்த்தபஞ்சகத்தையும் சரீராத்மபாவஸம்பந்தத்தையும் நன்கு அறிந்த நம் ஆசார்யர்கள் ஸ்ரீமந்நாராயணனே உபாயம் என்று தாம் அறிந்து நமக்கும் உபதேசித்து அவன்திருவடிகளில் நம்மை ஸமர்ப்பித்தனர். ஸர்வேசுவரனுகிய பேரருளாளன் இயற்கையாக நம்மீது உள்ள அருளாலும் பிராட்டி பரிந்து பேசுதலாலும் நம்மைக் காக்கவேண்டிய வஸ்துவாக உடனே ஏற்றுக்கொண்டான். நாம் இன்றைக்கே மோக்ஷத்தைப்பெற இசைந்தாலும் அவன் அளிக்க முற்பட்டுநிற்கின்ருன். இனி நமக்கு மறுபிறவி ஒருகாலுமில்லை. இக்கர்மபூமியில் இருக்கும் நாள் வரும் இன்பமும் துன்பமும் நமக்கு அநுகூலமேயாம். நாம் உஜ்ஜீவிப்பதற்காக இனிச் செய்யவேண்டியது நமக்கு ஒன்றுமில்லை.

அர்த்தபஞ்சகம்— 1 எம்பெருமான் 2 ஜீவன் 3 உபாயம் 4 பலன் 5 பலத்திற்கு விரோதி என்பன.

சரீராத்மபாவஸம்பந்தம்—எம்பெருமான் ஆத்மாவாக, சேதநமும் அசேதநமும் அவனுக்குச் சரீரமாயிருப்பதாகிய ஸம்பந்தம். 18

ப்ரபந்நன் தன் மனத்தைத் தேற்றல்

எண்சீராசிரியவிருத்தம்

19 சிறுபயனிற் படியாத தகவோ ரெம்மைச்
சேர்க்கவடைக் கலங்கோண்ட திருமா ருனே
மறுபிறவி யறுத்தழியா வானில் வைக்கு
மனமேநீ மகிழாதே யிருப்ப தேன்கோ
லுறுவதுனக் குரைக்கேனிங் கிருக்குங் கால
மோருபிழையும் புகுதாத வுணர்த்தி வேண்டிப்
பேறுவதேலா மிங்கேநாம் பேற்று வாழப்
பேரடிமை யாலேதேன் றிகழே னீயே. 19

உரை:—சிறு பயனில் படியாத – அற்ப பலன்களில் கருத்தைச் செலுத்தாதவரும், தகவோர் – பிறர்துக்கத்தைப் போக்கவிருப்ப முடையருமான ஆசார்யர்கள், எம்மைச் சேர்க்க – எங்களை (எம்பெருமான் திருவடிகளில்) ஸமர்ப்பிக்க, அடைக்கலம் கொண்ட திருமால் – (எம்மை) ரக்ஷிக்கப்படவேண்டிய வஸ்துவாக ஏற்றுக்கொண்ட ஸ்ரீமந்நாராயணன், தானே மறு பிறவி அறுத்து – தானே மறுபடி இப்பூமியில் பிறப்பதற்குக் காரணமான கர்மங்களை எல்லாம் ஒழித்து, அழியா வானில் வைக்கும் – அழிவில்லாத பரமபதத்தில் வைப்பான்; (இப்படியிருக்க) மனமே! நீ மகிழாதே இருப்பது என் கொல்? – ஓ மனமே! நீ மகிழ்ச்சியடையாது இருப்பது எதனுல்? இங்கு இருக்கும் காலம் – இவ்வுலகில் (நீ) இருக்கவேண்டிய காலம் வரையிலும், உனக்கு உறுவது உரைக்கேன் – உனக்குப் பொருத்தமான ஒன்றைக் கூறுகின்றேன், (கேள்) ஒரு பிழையும் புகுதாத – (பகவதபசாரம் முதலிய) ஒரு குற்றமும் ஏற்படாமைக்குக் காரணமான, உணர்த்தி வேண்டி – தத்துவஜ்ஞானத்தை அபேக்ஷித்து, பெறுவது எ(ல்)லாம் – (பரமபதத்தில்) பெறக்கூடிய கைங்கர்யங்களை யெல்லாம், இங்கே நாம் பெற்று வாழ – இக் கர்மபூமியிலே நாம் பெற்று மகிழ்வதற்கு, (நீ செய்ய வேண்டியது யாதெனில்), பேரடிமையால் – இங்குச் செய்யும் பெரிய கைங்கர்யத்தால், ஏது என்று – பயன் என்ன? என்று, இகழேல் – நீ உபேக்ஷிக்காமலிருக்க வேண்டும்.

கருத்து:—மனமே! நம் ஆசார்யர்கள் அற்பபலனை நாடாதவர்கள்; பிறர்துக்கம் காணச் சகியாது அதைப் போக்க முற்படுமவர்கள். இவர்கள் நம்மை எம்பெருமான் திருவடிகளில் ஸமர்ப்பித்தனர். அவனும் நம்மை ஏற்றுக்கொண்டான்; இனி நாம் மறுபடியும் இக்கர்மபூமியில் பிறவாது செய்து ஒருகாலும் அழியாத ஸ்ரீவைகுண்டத்தில் நம்மைச் சேர்ப்பான். இப்படியிருக்க, நீ ஏன் மகிழ்ச்சியடையாதிருக்கின்ருய்? நீ இவ்வுலகில் இருக்கும்வரை உனக்கு ஏற்றதொன்றைக் கூறுகின்றேன். கேட்பாயாக. இங்கு இருக்கும்நாள் எம்பெருமானுக்குச் செய்யும்

கைங்கர்யத்தை வீணென்று நினையாதிருந்தால் பரமபதத்திற்குப் போய்ச் செய்யவேண்டிய கைங்கர்யங்களை யெல்லாம் இக்கர்ம பூமியிலேயே பெற்றுவாழலாம். இவ்வாறு இருப்பின் பகவதபசாரம் முதலிய ஒருதோஷமும் நம்மை அணுகாது; விசேஷஜ்ஞாநமும் உண்டாம். [இப்பாசுரம் தம் திருவுள்ளத்தைக்குறித்துத் தேற்றுவதாகும்.] *19*

பிறமதங்களைக் கண்டித்தமை

கட்டளைக்கலித்துறை

20 சாக்கியர் சைனர்கள் சார்வாகர் சாங்கியர் சைவர்மற்றுந்
தாக்கியர் நூல்கள் சிதையத் தனிமறை யின்கருத்தை
வாக்கிய முப்பதி னுல்வகை செய்து வியாகரித்தோந்
தேக்கி மனத்து ளிதனைத் திணியிரு ணீங்குமினே. 20

[*பாசுரம் 20, 21, 22 — ரஹஸ்யரத்னவளிஹ்ருதயம்*]

உரை:—சாக்கியர் – பௌத்தர்களும், சைனர்கள் - ஜைனர்களும், சார்வாகர் – சார்வாகர்களும், சாங்கியர் – ஸாங்க்யர்களும், சைவர் – சைவ (பாசுபத) ர்களும், மற்றும் – இன்னும், தாக்கியர் – தார்க்கிகர்களும், ஆகிய இவர்களுடைய, நூல்கள் சிதைய – மதநூல்கள் அழிந்து போம்படி, தனி மறையின் கருத்தை – நிகரற்ற வேதத்தின் தாத்பர்யத்தை, வாக்கியம் முப்பதினுல் – முப்பது வாக்யங்களமைந்த இந்த ரஹஸ்யத்தினுல், வகை செய்து – பிரித்துக்காட்டி, வியாகரித்தோம் – விளக்கினேம்; இதனை மனத்துள் தேக்கி – இந்த ரஹஸ்யத்தை (உங்கள்) மனத்துள் நிலைநிறுத்தி, திணி இருள் நீங்குமின் – வலிய அஜ்ஞாநமாகிய இருளை ஒழித்துக்கொள்ளுங்கள்.

கருத்து:— முப்பது வாக்யம் அடங்கிய இந்த ரஹஸ்யத்தில் ஸகலவேதாந்தார்த்தங்களையும் பொதிந்து கூறினேம். இனிப் பௌத்தர், ஜைநர், சார்வாகர், ஸாங்க்யர், சைவர், தார்க்கிகர் முதலிய பிறமதத்தினரின் மதநூல்கள் தலைக்காட்டமுடியாது. இத்தகைய ரஹஸ்யத்தை மனத்தில் பதியவைத்து உங்கள் அஜ்ஞாநத்தைப் போக்கிக்கொள்க. *20*

பிறமதத்தினரின் வாதங்களைத் துணித்தமை

21 தள்ளத் துணியினுந் தாய்போ லிரங்குந் தனித்தகவா
லுள்ளத் துறைகின்ற வுத்தமன் றன்மை யுணர்ந்துரைத்தோ
முள்ளோத்த வாதியர் முன்னே வரினெங்கண் முக்கியர்பால்
வெள்ளத் திடையி னரிபோல் விழிக்கின்ற வீணர்களே. 21

உரை:—தள்ளத் துணியினும்–நாம் (எம்பெருமானை வெறுத்துத்) தள்ளிவிடத் துணிந்தாலும், தாய்போல் இரங்கும் – தாய் (தன்னுடைய குழந்தையிடம் கருணைவைப்பது) போல் நம்மிடம் கருணைவைக்கும்படி

யான, தனித் தகவால் – ஒப்பற்ற குணத்தால், உள்ளத்து உறைகின்ற (நம்) ஹ்ருதயத்தில் வஸிக்கின்ற, உத்தமன் தன்மை – எம்பெருமானுடைய ஸ்வபாவத்தை, உணர்ந்து உரைத்தோம் - அறிந்து (இந்த ரஹஸ்யத்தில்) வெளியிட்டோம்; முள் ஒத்த வாதியர் – (நம் ஸித்தாந்தத்திற்கு) முள்ளைப்போன்ற வாதிகள், எங்கள் முக்கியர்பால் – எங்களுடைய ஆசார்யர்களிடம், முன்னே வரின் - எதிரே (வாதத்திற்கு) வந்தால், வெள்ளத்து இடையில் - ஆற்றுவெள்ளத்து நடுவில், நரிபோல் விழிக்கின்ற வீணர்கள் - நரிபோல் அகப்பட்டுக்கொண்டு விழிக்கும் பயனற்றவர்களாக ஆகிவிடுவார்கள்.

கருத்து:— உலகில் புத்திரன் தன் தாயிடம் வெறுப்புக் கொண்டாலும் தாய் அவனைப் புறக்கணியாது அவனது நன்மையையே நாடுவாள். அங்ஙனமே நாம் எம்பெருமானை வெறுத்துத் தள்ளினாலும் அவன் இயற்கைக் கருணையால் நம்மைக் கைவிடாது நம் உள்ளத்திலேயே குடிபுகுந்து நம்மைக் காக்கின்றான். இத்தகைய ஸர்வேசுவரனுடைய ஸ்வரூபஸ்வபாவங்களை ஆசார்யர்பால் கேட்டுணர்ந்தபடி இதில் வெளியிட்டோம். நம் ஸித்தாந்தத்திற்கு முள்ளைப்போல் இருந்து தீங்குவிளைவிக்கப்பார்க்கும் வாதிகள் நம் ஆசார்யர்களோடு வாதம்புரிய வந்தால் பெரிய வெள்ளத்தின் நடுவே அகப்பட்ட நரியைப்போல் கதியின்றித் தோற்றொழிவார்கள். 21

உபதேசம்பெற்ற மனத்தின் ஒற்றுமை

22 செய்யேன் மறமேன்ற தேசிகன் றாதை யவனுரைத்த
மெய்யே யரும்பொருள் சூடிய வெண்மதி காதலியாம்
பொய்யே பகைபுல னையிரண் டொன்று பொருங்கருவி
கையேறு சக்கரக் காவலன் காவ லடைந்தவர்க்கே. 22

உரை:— கை ஏறு சக்கரக் காவலன் – திருக்கையில் ஏறி வீற்றிருக்கும் சக்ராயுதத்தையுடைய ரக்ஷகனான எம்பெருமானுடைய, காவல் அடைந்தவர்க்கு – ரக்ஷணத்தில் அடங்கிய பாகவதருக்கு, 'மறம் செய்யேல்' என்ற – 'பாபத்தைச் செய்யாதே' என்று உபதேசித்த, தேசிகன் தாதை – ஆசார்யனே தந்தையாவான். அவன் உரைத்த – அவன் உபதேசித்த, மெய்யே – உண்மைப்பொருள்களே, அரும் பொருள் – அருமையான செல்வமாகும். சூடிய எண்மதி – (அப்பொருளைக்) கைக்கொண்ட எட்டுக் குணங்களையுடைய புத்தியே, காதலி ஆம் – காதலுக்குரிய மனைவியாக ஆகும். பொய்யே – விபரீதஜ்ஞானமே, பகை-பகைவனாகும். ஐ இரண்டு ஒன்று புலன் - பதினொன்று இந்த்ரியங்களும், பொரும் கருவி – போர்புரிதற்கு உரிய கருவிகளாகும்.

கருத்து:— பாகவதர்களின் விரோதிகளை ஒழிப்பதற்காகத் தானே திருக்கையில் ஏறிவீற்றிருக்கும் திருவாழியைக் கொண்ட பகவான் தன் அடியார்களைக் காக்கும் பொறுப்பை ஏற்றுள்ளான். அத்தகைய அடியார்களுக்கு ஆசார்யன் பாபத்தைச் செய்யாதவாறு உபதேசிக்கின்றான். அவ்வாசிரியன் அவர்களுக்கு நன்மை கூறும்

தந்தை போன்றவனாவான். அவன் உபதேசித்த ரஹஸ்யார்த்தங்களே அவர்களுக்குச் சேமித்தற்கு உரிய அருமையான செல்வம் போன்றவை. அவ்வர்த்தங்களைக் கைக்கொண்ட எட்டுக்குணங்களையுடைய புத்தியே அவ்வடியார்களுக்குப் பிரியையான மனைவி போன்றதாகும். சரீராத்ம ப்ரமம், ஸ்வதந்த்ராத்மப்ரமம் முதலிய விபரீதஜ்ஞானங்களே தீங்கு விளைவிக்கும் பகைவனைப் போன்றதாகும். வசப்படுத்திய பதினொன்று இந்த்ரியங்களே அப்பகைவனை ஒழிக்கும் கருவியாகும். (சரீராத்மப்ரம-ஸ்வதந்த்ராத்மப்ரமங்கள், புத்தியின் *8* குணங்கள், *11* இந்த்ரியங்கள் இவற்றின் விளக்கம் முறையே *51, 84, 145* பாசுரவுரையிற் காண்க.)*22*

வேதாந்தஸாரங்களை ஆசார்யர்கள் கண்டமை

எண்சீராசிரியச்சந்தவிருத்தம்

௨௩ அந்தமி லாதி தேவ னழிசெய் தடைத்த
வலைவே லையோத மடையச்
சேந்தமிழ் நூல்வ குத்த சிறுமா மனிச்சர்
சிறுகைச் சிருங்கை யதுபோற்
சந்தமே லாமு ரைப்ப விவையென் றுதங்க
ளிதயத் தடக்கி யடியோம்
பந்தமே லாம றுக்க வருடந் துகந்து
பரவும் பொருள்க ளிவையே. ௨௩

[பாசுரம் 23, 24—தத்துவத்ரயசுளகம், அசேதநாதிகாரம்]

உரை:—அந்தம் இல் - அழிவு இல்லாதவனும், ஆதி தேவன் - ஸர்வ காரணமாயுள்ளவனுமான எம்பெருமான், அழிசெய்து - (ப்ரளய காலத்தில்) அழித்து, அடைத்த - பிறகு படைத்த, அலை வேலை ஓதம் அடைய - அலையுள்ள கடல்நீர் முழுதும், செந்தமிழ் நூல் வகுத்த - சிறந்த தமிழ் நூல்களை வகுத்தவரும், சிறு மா மனிச்சர் - (உருவத்தில்) சிறியரும் (ப்ரபாவத்தில்) பெரியருமான அகஸ்த்ய மஹாமுனிவருடைய, சிறு கைச்சிருங்கையதுபோல் - சிறிய கையின் சிருங்கையில் அடங்கிவிட்டதுபோல், சந்தம் எ(ல்)லாம் - வேதங்களெல்லாம், உரைப்ப இவை என்று - சொல்லும் விஷயங்கள் இவையே என்று, தங்கள் இதயத்து அடக்கி - (ஆசார்யர்கள்) தங்கள்மனத்து அடக்கி வைத்து, அடியோம் - தாஸர்களான நம்முடைய, பந்தம் எ(ல்)லாம் அறுக்க - கர்மபாசங்களை எல்லாம் ஒழிக்க, அருள் தந்து உகந்து - நம்மீது கருணைகொண்டு மகிழ்ந்து, பரவும் பொருள்கள் இவையே - (நமக்குச்) சிறக்கப் பேசி உபதேசிக்கும் அர்த்தங்கள் இந்த ரஹஸ்யத்தில் நாம் கூறியவையே.

கருத்து:— ஸர்வேசுவரன் ப்ரளயகாலத்தில் அழித்துப் பின் படைத்த கடல்நீர்முழுவதையும் அகஸ்த்யமுனிவர் தம் உள்ளங்கையில் அடக்கிப் பருகிவிட்டார். அதுபோல் ஸகல வேதாந்தங்களின் ஸாரார்த்தம் முழுவதையும் நம் ஆசார்யர்கள் தம் மனத்தில் பதித்துக் கொண்டனர். அவர்கள் நாம் கர்மபாசம் நீங்கி உஜ்ஜீவிக்கவேண்டு

மென்று அருள்கொண்டு ஸாரார்த்தத்தை நமக்கு உபதேசித்தனர். அதை நாம் இந்த ரஹஸ்யத்தில் வெளியிட்டோம். 23

அசேதநப்பொருள்களின் விளக்கம்

கட்டளைக்கலித்துறை

24 முக்குண மாயையின் மூவெட்டின் கீழ்வரு மூவகையு
மிக்குண மின்றி யிலங்கிய காலச் சுழியினமு
நற்குண மோன்றுடை நாகமு நாரா யணனுடம்பாய்ச்
சிற்குண மற்றவை யென்றுரைத் தாரேங்க டேசிகரே. 24

உரை:—முக்குண மாயையின் – (ஸத்துவம், ரஜஸ், தமஸ் என்னும்) மூன்று குணங்களையுடைய மூலப்ரக்ருதியின், மூ எட்டின் கீழ் வரும் – இருபத்துநான்கு தத்துவங்களின் கீழே பிரிகின்ற, மூவகையும் – (ப்ரக்ருதி, விக்ருதி, ப்ரக்ருதி – விக்ருதி என்ற) மூன்று வகையும், இக்குணம் இன்றி இலங்கிய – இந்த மூவகைக் குணமும் இல்லாமல் ப்ரகாசிக்கின்ற, காலச் சுழி இனமும் — சுழல்கின்ற காலத்தின் வகுப்பும், நற்குணம் ஒன்றுடை நாகமும் – ஸத்துவகுணம் ஒன்றையேயுடைய பரமபதமாய் மாறுகின்ற சுத்தஸத்துவமும், (ஆக இந்த மூன்று அசேதநமும்) நாராயணன் உடம்பாய் – எம்பெருமானுக்குச் சரீரமாய், சிற்குணம் அற்றவை என்று—அறிவென்னும் குணமில்லாதவை என்று, எங்கள் தேசிகர் உரைத்தார் - எங்களுடைய ஆசார்யர்கள் உபதேசித்தனர்.

கருத்து:— ப்ரக்ருதி காலம் சுத்தஸத்துவம் ஆகிய அசேதநங்கள் மூன்றினுள் ஸத்துவம் ரஜஸ் தமஸ் என்னும் முக்குணங்களைக் கொண்ட மூலப்ரக்ருதி, ப்ரக்ருதி, விக்ருதி, ப்ரக்ருதி-விக்ருதி என்று மூன்று வகையாய்ப் பின் இருபத்துநான்குவகையாகப் பிரிகின்றது. காலத்திற்கு மூன்று குணங்களும் கிடையா. அதுவும் பலவிதமாய்ப் பிரிகின்றது. சுத்தஸத்துவத்தின் மாறுபாடுதான் ஸ்ரீவைகுண்டமும் அதிலுள்ள பொருள்களும். ஆக இந்த மூன்று அசேதநங்களும் எம்பெருமானுக்குச் சரீரமாய்நிற்பவை; அறிவென்னும் குணம் இல்லாதவை. இவ்வம்சங்களை நம் ஆசார்யர்கள் உபதேசித்தனர்.

தத்துவங்கள் பிரியும் வகையை முதலிலுள்ள ஸ்ரீதேசிகதர்சந ஸார ஸங்க்ரஹத்திற் காண்க. 24

ஜீவன் உஜ்ஜீவிக்கச் செய்யவேண்டுவன

வெண்பா

25 எனதேன் பதுமியா னேன்பது மின்றித்
தனதேன்று தன்னையுங் காணு—துனதேன்று
மாதவத்தான் மாதவற்கே வன்பரமாய் மாய்ப்பதனிற்
கைதவத்தான் கைவளரான் காண். 25

[பாசுரம் 25, 26-தத்துவத்ரயசுளகம், ஜீவாதிகாரம்]

உரை:—எனது என்பதும் - (இந்த வஸ்து) என்னுடையது என்று நினைப்பதாகிய மமகாரமும், யான் என்பதும் – (அசேதநமான சரீரத்தையே ஆத்மாவாக நினைத்து) அதையே நான் என்று எண்ணுவதாகிய அஹங்காரமும், இன்றி-நீங்கப்பெற்று, தன்னையும்-ஜீவாத்மாவாகிய தன்னையும் ,தனது என்று காணுது-தன்னுடைய ஸ்வாமி என்று நினையாமல், (அதாவது – ஸ்வதந்த்ராத்ம ப்ரமம் இல்லாமல்) * மாதவத்தால் – உயர்ந்த தவமெனப்படும் சரணுகதியாகிய உபாயத்தால், உனது என்று – எல்லாம் உன்னுடையதே என்று, மாதவற்கே வன்பரமாய் – எம்பெருமானுக்கே திடமான பொறுப்பாக, மாய்ப்பதனில் – தன்னுடைய ஸம்பந்தத்தை அறுத்து அவனிடம் ஸமர்ப்பிப்பதில், கைதவத்தான் – (மனம் சுத்தமாயில்லாத) வஞ்சனையுடையவன், கைவளரான் – மேம்பாடுஅடையமாட்டான் (உஜ்ஜீவிக்க மாட்டான்). (காண் – அசை)

கருத்து:— இந்த வஸ்து என்னுடையது என்று நினைப்பது மமகாரம். சரீரத்தையே ஆத்மாவாக நினைப்பது அஹங்காரம். தன்னை ஸ்வதந்த்ரனுகக் கருதுவது ஸ்வதந்த்ராத்மப்ரமம். இவை மூன்றும் ஒழியப்பெறவேண்டும். தன் ஸ்வரூபம், தன்னைக் காக்கும் பொறுப்பு, அதனுல் வரும் பலன் ஆகிய எல்லாவற்றையும் எம்பெருமானது பொறுப்பென நினைந்து அவை அனைத்திலும் தன் ஸம்பந்தத்தை அடியோடறுத்து எம்பெருமானிடம் ஸமர்ப்பிக்கவேண்டும். இவ்வாறு செய்பவனே உஜ்ஜீவிக்கமுடியும். 25

மூவகைப்பட்ட ஜீவர்

கட்டளைக்கலித்துறை

26 பல்வினை வன்கயிற் ருற்பந்த முற்றுழல் கின்றனரு
நல்வினை மூட்டிய நாரண ஞர்பதம் பெற்றவருந்
தொல்வினை யென்றுமில் லாச்சோதி வானவ ருஞ்சுருதி
செல்வினை யோர்ந்தவர் சீவரென் ருேதச் சிறந்தனமே. 26

உரை :— சுருதி செல் வினை ஓர்ந்தவர் – வேதம் செல்லுகிற வழியை அறிந்த நம் ஆசார்யர்கள், பல் வினை வன் கயிற்ருல் - பல வகைப்பட்ட கர்மங்களாகிற வலிய பாசத்தால், பந்தம் உற்று – பிணிக்கப்பட்டு, உழல்கின்றனரும் – ஸம்ஸாரத்தில் துன்பப்படுமவராகிய பத்தர்களும், நல்வினை மூட்டிய நாரணனுர் – நல்ல உபாயத்தை அநுஷ்டிக்கச் செய்த எம்பெருமானுடைய, பதம் பெற்றவரும் – திருவடிகளை (ப் பரமபதத்தில்) அடைந்தவர்களான முக்தர்களும், தொல் வினை – அநாதியான கர்மஸம்பந்தம், என்றும் இல்லா – ஒருபோதும் இல்லாதவர்களான, சோதி வானவரும் - ஒளியுள்ள நித்யஸூரிகளும், சீவர் என்று ஓத – ஜீவர்கள் (ஆவார்கள்) என்று உபதேசிக்க, (அவ்வறிவினுல்) சிறந்தனம் – சிறப்படைந்தோம்.

* " तस्मात् न्यासमेषां तपसामतिरिक्तमाहुः "

கருத்து:— கர்மபாசத்தால் கட்டுண்டு ஸம்ஸாரத்தில் உழல்பவர் பத்தராவர். உபாயத்தை அநுஷ்டித்து மோக்ஷத்தை அடைந்தவர் முக்தர். ஒருபோதும் கர்மஸம்பந்தம் இன்றி எம்பெருமானைப்போல் நின்று அவனை அநுபவிப்பவர் நித்யஸூரிகள். இங்ஙனம் மூவகைப் பட்ட ஜீவரையும் வேதநெறிகளை நன்கறிந்த நம் ஆச்சார்யர்கள் நமக்கு விளக்கிக் காட்டினர். 26

ஈசுவரனது உதவி

வெண்பா

27 ஆரணங்க ளெல்லா மடிசூட மேனின்ற
காரணமா யொன்றாற் கலங்காதா—னாரணனே
நம்மேல் வினைகடியு நல்வழியிற் றானின்று
தன்மேனி தந்தருளுந் தான். 27

[பாசுரம் 27, 28, 29, 30 – தத்துவத்ரயசுளகம், ஈசுவராதிகாரம்]

உரை :— ஆரணங்கள் எல்லாம் – வேதங்கள் அனைத்தும், அடி சூட – தன் திருவடிகளைப் போற்றி நிற்க, மேல் நின்ற – எல்லோரினும் மேம்பட்டுநின்றவனும், காரணமாய் – எல்லாவற்றுக்கும் காரணமா யிருந்து, ஒன்றால் கலங்காதான் – காரியப் பொருள்களில் உள்ள தோஷம் ஒன்றும் தட்டாதவனுமான, நாரணனே – ஸ்ரீமந் நாராயணனே, நம் மேல் வினை கடியும் – நம்மிடம் மேன்மேலும் வ்ருத்தியடைகின்ற கர்மங்களைப் போக்கக் கூடிய, நல் வழியில் – நல்ல உபாயத்தின் ஸ்தானத்தில், தான் நின்று – தான் இருந்து, தன் மேனி – தன் திருமேனியை, தான் தந்தருளும் – (நாம் அனுபவிப்பதற்குத்) தானே கொடுத்தருள்வான்.

கருத்து:— வேதங்கள் அனைத்தும் ஸர்வேசுவரன் திருவடி களையே போற்றுகின்றன. அவன் எல்லோரினும், மேம்பட்டவன்; அனைத்துக்கும் காரணமாய் நிற்பவன். ஆயினும், காரியப்பொருள் களிலுள்ள தோஷம் ஒன்றும் அவனிடம் தட்டாது. மேன்மேலும் வளர்ந்துகொண்டேவருகின்ற நம்முடைய கர்மங்களை ஒழிக்க எம்பெருமான் திருவடிகளில் ப்ரபத்தியைச் செய்துவிட்டால் நம்மால் அநுஷ்டிக்கமுடியாத பக்தியோகம் முதலிய கடின உபாயங்களின் ஸ்தாநத்தில் அவன் தானே நின்று மோக்ஷத்தைக் கொடுப்பான். 27

மூன்று தத்துவங்களின் உவமை

கட்டளைக்கலித்துறை

28 குடன்மிசை யொன்றியுங் கூடியு நின்ற கொடுந்துயரு
முடன்மிசைத் தோன்று முயிரு முயிர்க்குயி ராமிறையுங்
கடன்மிசைக் கண்ட தரளத் திரளவை கோத்தபொன்னூன்
மடன்மிசை வார்த்தை யதன்பொரு ளென்ன வகுத்தனமே.

உரை :— குடல் மிசை – சரீரத்தில், ஒன்றியும் கூடியும் நின்ற – ஒன்றுபட்டும் சேர்ந்தும் இருப்பதும், கொடுந் துயரும் – கொடிய துன்பத்தைத் தருகின்றதுமான ப்ரக்ருதியென்னும் அசேதநமும், உடல் மிசைத் **தோன்றும்** உயிரும் – சரீரத்தில் இருந்து நடத்தும் ஜீவாத்மாவென்னும் சேதநமும், உயிர்க்கு உயிர் ஆம் இறையும் – ஜீவாத்மாவுக்கும் அந்தர்யாமியாயுள்ள ஸர்வேசுவரனும், (முறையே) கடல் - கடலாகவும், (கடல்)மிசைக்கண்ட – கடலிலுள்ள, தரளத் திரள்- முத்துக்களின் குவியலாகவும், *அவை கோத்த பொன் நூல் – அந்த முத்துக்களைக் கோத்த தங்க நூலாகவும் (இருக்கின்றனவென்னும் விஷயம்). மடல் மிசை – காதுகளில் (ரஹஸ்யமாய் ஆசார்யர்கள் உபதேசித்த), வார்த்தையதன் பொருள் என்ன – வாக்கியங்களின் அர்த்தம் என்று, வகுத்தனம் – (இந்த ரஹஸ்யத்தில் நாம்) பிரித்துக் காட்டினோம்.

கருத்து:— ப்ரக்ருதியென்னும் அசேதநம் சரீரத்தோடு ஒன்றுபட்டுநின்று ஸம்ஸாரதுக்கத்தைத் தருகின்றது. இந்தச் சரீரத் தில் ஜீவாத்மா புகுந்து நடத்துகின்றான். இந்த ஜீவனுக்கும் அந்தர்யாமியாய் ஸர்வேசுவரன் நிற்கின்றான். இந்த மூன்று தத்துவங் களுள் ப்ரக்ருதி கடல்போன்றது. ஜீவாத்மாக்கள் கடலிற் கண்ட முத்துக்கள்போன்றவை. இவற்றைத் தரித்துநிற்கும் ஸர்வேசுவரன் முத்துக்களைக் கோப்பதற்கேற்ற தங்கத்தாலாகிய நூல் போன்றவன். இந்த ஸாரார்த்தங்களை ஆசார்யர்கள் நமக்கு உபதேசிக்க, நாம் இந்த ரஹஸ்யத்தில் விளக்கினோம். 28

பிறமதத்தினரது வலையில் விழாமை

29 தத்துவந் தன்னில் விரித்திடத் தோன்று மிரண்டுதனிற்
பத்தி விலக்கிய பாசண்டர் வீசுறும் பாசமுரு
ரெத்திசை யுந்தொழு தேத்திய கீர்த்திய ரேண்டிசையார்
சுத்த ருரைத்த சுளக மருந்திய தூயவரே. 29

உரை :— எத்திசையும் தொழுது ஏத்திய கீர்த்தியர் – எத்திசையி லுள்ளோரும் வணங்கிப் புகழ்கின்ற கீர்த்தியுடையரும், எண் திசை ஆர் சுத்தர்–எல்லா ப்ரகாரத்தாலும் நிறைந்த பரிசுத்தியுடையவருமான நம் ஆசார்யர்கள், உரைத்த சுளகம் – உபதேசித்த (விஷயங்கள் அடங்கிய) இந்தத் தத்துவத்ரயசுளகமென்னும் ரஹஸ்யத்தை, அருந்திய – உட்கொண்டு அநுபவித்த, தூயவர் – பரிசுத்தர்கள், தத்துவம் தன்னில் – (மூன்று) தத்துவங்களுக்குள், விரித்திடத் தோன்றும் – விளக்கிக் கூறும்போது (முக்கியமாய்த்) தோன்றுகிற, இரண்டு தனில் – (சேதநம் ஈசுவரன் என்னும்) இரண்டு தத்துவங் களில், பத்தி விலக்கிய – (அவற்றின் ஸ்வரூபத்தையும் ஸ்வபாவத்தை

* " मयि सर्वमिदं प्रोतं सूत्रे मणिगणा इव "

யும் உள்ளபடி அறியாது வெறுப்பவர்களான) அன்பற்ற, பாசண்டர் வீசுறும் – நாஸ்திகர்கள் வீசுகின்ற, பாசம் உறார் – பாசத்தில் அகப்பட மாட்டார்கள்.

கருத்து:— மஹாபரிசுத்தர்களான நம் ஆசார்யர்களின் பெருமையை உலகிலுள்ளோர் அனைவரும் புகழ்கின்றனர். அந்த ஆசார்யர்கள் உபதேசித்த விஷயங்களையே அமைத்து இந்தத் 'தத்துவ த்ரயசுளகம்' என்னும் ரஹஸ்யத்தை இயற்றினோம். இதை நன்கு அறிந்தவர் சேதநன் ஈசுவரன் இவர்களின் ஸ்வரூபத்தையும் ஸ்வபாவத்தையும் அறியாது பிதற்றும் பாஷண்டிகளான பிறமதத்தினர் வீசும் வலையுள் அகப்படமாட்டார்கள். (சுளகம் எனுஞ்சொல் ஆசமநமுத்திரையிலுள்ள நீரைக் குறிப்பதுபற்றி 'அருந்திய' எனுஞ் சொல் பிரயோகிக்கப்பட்டது) *29*

மாதவன் திருவடிகளே உபாயமும் பலனும்

30 வினைத்திரண் மாற்றிய வேதியர் தந்தநல் வாசகத்தா
லனைத்து மறிந்தபி னாறும் பயனு மேனவடைந்தோ
மனத்தி லிருந்து மருத்தமு தாகிய மாதவனார்
நினைத்தன் மறத்த லரிதாய நன்னிழ னீள்கழலே. 30

உரை:— வினைத் திரள் மாற்றிய – (நம்மிடம் உள்ள) பாபக் கூட்டங்களை ஒழித்த, வேதியர் தந்த நல் வாசகத்தால் – ஆசார்யர்கள் அருளிய நல்ல உபதேசத்தால், அனைத்தும் அறிந்த பின் – (தத்துவம் ரஹஸ்யம் முதலிய) எல்லாவற்றையும் அறிந்த பிறகு, மனத்தில் இருந்து – (நம்முடைய) ஹ்ருதயத்தில் நித்யவாஸம் செய்து, மருந்து அமுதாகிய – (கர்மபந்தத்தை ஒழிக்கும்) மருந்தாகவும் (அநுபவிப்பதற்கு நல்ல) அம்ருதமாகவும் ஆகியவனான, மாதவனார் – ஸ்ரீமந் நாராயணனுடையதும், நினைத்தல் மறத்தல் அரிதாய – (பெருமையைப் பார்த்தால்) நினைக்கவும் (இனிமையைப் பார்த்தால்) மறக்கவும் முடியாததும், நிழல் – (சரணமடைந்தவனுடைய தாபத்தைப்போக்க வல்ல குளிர்ந்த) நிழலுடையதுமான, நல் நீள் கழலே – சிறந்த நீண்ட திருவடியே, ஆறும் பயனும் என அடைந்தோம் – உபாயமும் பலனும் என்று அநுஸந்தித்து அடைந்தோம்.

கருத்து:—எம்பெருமான் நம் ஹ்ருதயத்தில் நித்யவாஸம் செய்து கர்மபந்தத்தை நீக்கும் மருந்தாகவும் அநுபவிக்கத் தெவிட்டாத அமுதமாகவும் விளங்குகின்றான். இவனுடைய திருவடிகளின் பெருமையைப் பார்த்தால் இவை நம் மனத்தால் நினைக்கவும் முடியாதவை. இவற்றின் இனிமையைப் பார்த்தால் விடவும் முடியாதவையாம். இந்தத் திருவடிகளின் நிழல் ஸம்ஸாரதாபத்தைப் போக்கவல்லதாகும். ஆசார்யர்களின் உபதேசத்தால் ஸாரார்த்தங்களை அறிந்த நாம் இத்தகைய திருவடிகளையே உபாயமாகவும் பலனாகவும் பற்றினோம். *30*

ரஹஸ்யங்களில் கூறிய நிஷ்டையைப் பெறுதல்

வெண்பா

31 ஓதுமறை நான்கதனி லோங்குமோரு மூன்றினுள்ளே
நீதி நெறிவழுவா நிற்கின்றேம் — போதமரும்
பேரா யிரமுந் திருவும் பிரியாத
நாரா யணனருளா லும். 31

[பாசுரம் 31, 32-ரஹஸ்யத்ரயசுளகம், திருமந்த்ராதிகாரம்]

உரை:—போதம் அரும் – (அர்த்தம்) அறிவதற்கு அரிதான (அல்லது போது அமரும் – நாவாகிய புஷ்பத்தில் பொருந்திய), பேராயிரமும் – ஸஹஸ்ரநாமமும், போது அமரும் திருவும் – (தாமரைப்) பூவில் அமர்ந்திருப்பவளான பிராட்டியும், பிரியாத – எப்பொழுதும் சேர்ந்திருக்கின்ற, நாராயணன் அருளால் – நாராயணனுடைய க்ருபையால், ஓதும் மறை நான்கதனில் – அத்யயநம் செய்யப்படுகின்ற வேதங்கள் நான்கினில், ஓங்கும் ஒரு மூன்றினுள்ளே – உயர்ந்து நிற்கும் நிகரற்ற மூன்று ரஹஸ்யங்களில் (சொல்லப்பட்ட), நீதி நெறி – ஸந்மார்க்கத்து நிஷ்டையில், நாம் வழுவா(து)நிற்கின்றேம் – நாம் தவறாமல் நிலைபெற்றிருக்கின்றேம்.

'போதமரும்' என்ற தொடரைப் பேராயிரத்திலும் திருவிலும் அந்வயிக்க. ஸஹஸ்ரநாமம் பகவானுடைய புகழையே வெளியிடுதலால் 'பேராயிரமும் பிரியாத' என்னப்பட்டது.

கருத்து:— அருமையான அர்த்தவிசேஷங்களைக்கொண்டு நம்மால் அநுஸந்திக்கப்பெறும் ஸஹஸ்ரநாமம் முழுதும் ஸ்ரீமந் நாராயணனுடைய புகழையே பேசுகின்றது. இத்தகைய சிறப்புக் கொண்ட எம்பெருமான் தாமரையில் அமர்ந்த பிராட்டியுடன் பிரியாதுநின்று நமக்கு அருள்புரிகின்றான். இவ்வருளால், வேதங்களில் சிறந்து நிற்கும் மூன்று ரஹஸ்யங்களில் கூறப்பட்ட நல்ல நிஷ்டையைப் பெற்றேம். *31*

ஈசுவரனின் உபகார பரம்பரை

எண்சீராசிரிய விருத்தம்

32 ஊன்றந்து நிலைநின்ற வுயிருந் தந்தோ
ருயிராகி யுள்ளொளியோ டுறைந்த நாதன்
றூன்றந்த வின்னுயிரை யெனதென் றுமை
னல்லறிவுந் தந்தகலா நலமுந் தந்து
தான்றந்த நல்வழியாற் றூழ்ந்த வென்னைத்
தன்றனக்கே பரமாகத் தானே யெண்ணி
வான்றந்து மலரடியுந் தந்து வானோர்
வாழ்ச்சிதர மன்னருளால் வரித்திட் டானே. 32

உரை:—ஊன் தந்து – சரீரத்தைக் கொடுத்து, நிலே நின்ற உயிரும் தந்து – அழியாத ஜீவாத்மாவையும் கொடுத்து, ஓர் உயிராகி – ஒரே அந்தர்யாமியாகி, உள் ஒளியோடு உறைந்த நாதன் – (சேதநா சேதநங்களுக்குள்) தன் ப்ரகாசம் போன்ற பிராட்டியுடன் வஸிக்கும் ஸ்வாமியான எம்பெருமான், தான் தந்த இன் உயிரை – தான் கொடுத்த இனிய ஜீவாத்மாவை, எனது என்னுமல் – எனக்கே சேஷமென்று நினைக்காமல் இருக்கும்படி, நல் அறிவும் தந்து – உயர்ந்த ஜ்ஞாநத்தையும் கொடுத்து, அகலா நலமும் தந்து – (எப்போதும்) நீங்காத ஆநந்தத்தையும் கொடுத்து, தான் தந்த நல் வழியால் – தான் (உலகிற்குக் காட்டிக்) கொடுத்த சிறந்த உபாயமாகிய சரணுகதியினுல், தாழ்ந்த என்னே–திருவடிகளில் வணங்கிய என்னே, தன் தனக்கே பரமாக – காப்பது தனக்கே பொறுப்பாக, தானே எண்ணி – தானே நினைத்து, வான் தந்து – (வருங்காலத்தில்) பரமபதத்தைக் கொடுத்து, மலர் அடியும் தந்து – மலர்போன்ற தன் திருவடிகளேயும் கொடுத்து, வானேர் வாழ்ச்சி தர – நித்யஸூரிகளுடைய வாழ்வையும் கொடுப்பதற்கு, மன் அருளால் – திடமான தன் க்ருபையால், வரித்திட்டான் – ஸங்கல்பித்துவிட்டான். (வரணம் செய்துவிட்டான்)

கருத்து:— எம்பெருமான் ஜீவர்களுக்குச் செய்யும் உதவி அளவிடற்பாலதன்று. முதலில் சரீரத்தைக்கொடுத்து அழியாத ஜீவனேயும் கொடுத்து அந்தச் சரீரத்திலும் ஜீவனுக்குள்ளும் பிராட்டியுடன்புகுந்து அந்தர்யாமியாய் நிற்கின்றுன். ஆத்மாவை ஸ்வதந்த்ரனென்று நினேயாமல் எம்பெருமானுக்குச் சேஷமென்ற சிறந்த ஜ்ஞாநத்தையும் ஆநந்தத்தையும் அளிக்கின்றுன். பின் ப்ரபத்தியென்னும் உபாயத்தைக் காட்டி அதை அநுஷ்டிக்கச்செய்து அவன் பொறுப்பைத் தானே ஏற்றுக்கொள்கின்றுன். சரீரம் கழிந்ததும் ஸ்ரீவைகுண்டத்தை அடைவித்துத் தன் திருவடிகளுக்குக் கைங்கர்யம் செய்து நித்யஸூரிகளோடொக்க வாழுமாறுசெய்ய ஸங்கல்பித்து விட்டான். என்னே அவன் செய்யும் உபகாரம்!!! 32

நித்யஸூரிவாழ்வைப் பெறல்

வெண்பா

33 திருமா லடியிணேயே திண்சரணுக் கோண்டு
திருமா லடியிணேயே சேர்வா—ரோருமா
லருளா லருளாத வானேர்கள் வாழ்ச்சி
யருளா னமக்களித்தா ராய்ந்து. 33

[பாசுரம் 33, 34, 35 – ரஹஸ்யத்ரயசுளகம், த்வயாதிகாரம்]

உரை:— திருமால் அடி இணேயே – ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடிகள் இரண்டையுமே, திண் சரணுக் கொண்டு – திடமான உபாய

மாகக் கொண்டு, திருமால் அடி இணையே சேர்வார் – ஸ்ரீமந்நாராயண னுடைய திருவடிகள் இரண்டையுமே பலனாக அடைபவரான ஆசார்யர்கள், ஒரு மால் – நிகரற்ற எம்பெருமான், அருளால் அருளாத – தன் க்ருபையினால் (இதுவரை நமக்கு) அருளாத, வானோர்கள் வாழ்ச்சி – நித்யஸூரிகளின் வாழ்வை, அருளால் – (நம்மீது உள்ள) கருணையால், ஆய்ந்து – ஆராய்ந்து பார்த்து, நமக்கு அளித்தார் – நமக்கு அநுக்ரஹம் செய்தனர்.

கருத்து:— ஸ்ரீமந்நாராயணன் திருவடிகளையே உபாயமாகவும் பலனாகவும் கொண்ட ஆசார்யர்கள் இதுகாறும் நமக்கு எம்பெருமான் அருளாத மோக்ஷாநந்தத்தை நாம் பெறுவதற்கு ஏற்ற வழியைத் தேடிக் காட்டித்தந்தனர். (த்வயத்தின் இருபகுதிகளின் பொருளும் முதலிரண் டடிகளில் கூறியது காண்க.) 33

த்வயத்தின் பத்து அர்த்தங்கள்

கட்டளைக்கலித்துறை

34 சேர்க்குந் திருமகள் சேர்த்தியின் மன்னுதல் சீர்ப்பெரியோற்
கேற்குங் குணங்க ளிலக்காம் வடிவி லிணையடிகள்
பார்க்குஞ் சரணதிற் பற்றுத னங்கிலை நாம்பெறும்பே
றேற்கின்ற வெல்லைக ளெல்லாக் களையற வெண்ணினமே.

த்வயத்தில் அடங்கிய பத்து அர்த்தங்களும் இதில் வெளியிடப் படுகின்றன. இதன் உரையை 314-வது பாசுரத்திற் காண்க. 34

வருங்கால வாழ்வு

35 திருமா லடியிணை சேர்ந்து திகழ்ந்த வடிமைபெறத்
திருநா ரணன்சரண் திண்சர ணாகத் துணிந்தடைவோ
ரொருநா ளுரைக்க வுயிர்தரு மந்திர மோதியநாம்
வருநாள் பழுதற்று வாழும் வகையதின் மன்னுவமே. 35

உரை:— திருமால் அடி இணை சேர்ந்து – ஸ்ரீமந்நாராயண னுடைய திருவடிகள் இரண்டையும் அடைந்து, திகழ்ந்த அடிமை பெற – சிறப்புற்ற கைங்கர்யத்தைப் பெறுவதற்கு, திரு நாரணன் சரண் – ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடிகளையே, திண் சரணாக-வலிய உபாய மாக, துணிந்து அடைவோர் – தெளிந்து அடைந்த ஆசார்யர்கள், உயிர் தரும் மந்திரம் – உஜ்ஜீவிக்கச் செய்யும் த்வயமென்னும் மந்திரத் தை, ஒரு நாள் உரைக்க – (நம்முடைய பாக்யம் பரிபக்வமான) ஒரு நாளில் உபதேசிக்க, ஓதிய நாம் – (அதை) அநுஸந்தித்த நாம், வரும் நாள் பழுது அற்று – இனி வரப்போகும் நாளில் (அஹங்கார – மம காரங்களாகிற) குற்றமற்று, வாழும் வகையதில் மன்னுவம் – ஜீவிக்கும் ப்ரகாரத்தில் ஊற்றமுடையராய் நிலைத்திருப்போம்.

கருத்து:— ஸ்ரீமந்நாராயணன் திருவடிகளையே உபாயமாகவும் பலனாகவும் கொண்ட நம் ஆசார்யர்கள் நமக்கு த்வயத்தை உபதேசிக்க, அதனால் இனி வருங்காலத்தில் அஹங்கார - மமகாரங்கள் நீங்கி வாழும்வகையைப் பெற்றோம். 35

பலன் தர ஈசுவரனது விரைவு

வெண்பா

36 மற்றொரு பற்றின்றி வந்தடைந் தார்க்கெல்லாங்
குற்ற மறியாத கோவலனார்—முற்றும்
வினைவிடுத்து விண்ணவரோ டொன்றவிரை கின்றார்
நினைவுடைத்தாய் நீமனமே நில்லு. 36

[பாசுரம் 36, 37, 38, 39— ரஹஸ்யத்ரயசுளகம், சரமசுலோகாதிகாரம்]

உரை:- மனமே!-மனமே!, மற்று ஒரு பற்று இன்றி-வேறு ஒரு கதியும் இல்லாமல், வந்து அடைந்தார்க்கு எல்லாம் - தம்மை வந்தடைந்த எல்லாருடைய விஷயத்திலும், குற்றம் அறியாத - (அவர்கள் செய்த) குற்றத்தைப் பொருட்படுத்தாத, கோவலனார் - கோபாலனான கண்ணபிரான், முற்றும் வினை விடுத்து - (நம்முடைய) ஸகலகர்மங்களையும் ஒழித்து, விண்ணவரோடு ஒன்ற விரைகின்றார் - நித்யஸூரிகளோடு (நாம்) ஒன்றுசேர விரைகின்றார்; நீ நினைவு உடைத்தாய் - நீ (இந்த விஷயத்தை) நினைத்துக்கொண்டே, நில் - கவலையற்று இருப்பாயாக.

'நில்லு' என்னுமிடத்தில் உகரம் சாரியையாய் நின்றது.

கருத்து:— மனமே! வேறு கதியின்றி வந்து சரணமடைந்தவர் எத்தகைய குற்றம் செய்திருப்பினும் அதை எம்பெருமான் பொருட்படுத்தமாட்டான். இத்தகைய ஸர்வேசுவரன் இப்பொழுது நம் கர்மங்கள் முழுவதையும் வேரறுத்து நித்யஸூரிகளின் கோஷ்டியில் நம்மைச் சேர்க்க விரைகின்றான். இதை நினைந்து இனி நீ கவலையற்றிரு. 36

கவலையற்ற நிலையைப் பெறல்

கட்டளைக்கலித்துறை

37 எல்லாத் தருமமு மென்னை யிகழ்ந்திடத் தானிகழா
தெல்லாந் தனதென வெல்லா முகந்தரு டந்தபிரான்
மல்லார் மதக்களி றொத்த வினைத்திரண் மாய்ப்பனென்ற
சொல்லா லினியொரு காற்சோகி யாத்துணி வுற்றனமே. 37

உரை:— எல்லாத் தருமமும் - (பக்தியோகம் முதலிய) எல்லா உபாயங்களும், என்னை இகழ்ந்திட - (அவ்வுபாயங்களை அநுஷ்டிக்கச்

சக்தியில்லாத) என்னை வெறுத்துக் கைவிட்டுவிடவும், தான் இகழாது- (ஈசுவரனுன) தான் (என்னை) வெறுத்துத் தள்ளிவிடாமல், எல்லாம் தனது என – (அவ்வுபாயங்களின் ஸ்தாநத்தில் நின்று அவை கொடுக்கும் பலனைக்கொடுக்கவேண்டிய கடமை) முழுதும் தன்னுடையதென்று (நினைத்து). உகந்து – மகிழ்ந்து, எல்லாம் – ஸகலபலன்களையும், அருள் தந்த பிரான் – (எனக்குக்) கிருபைசெய்த எம்பெருமானுடைய, "மல் ஆர் மதக் களிறு ஒத்த – பலம் நிறைந்த மதயானை போன்ற, வினைத் திரள் – பாபக்கூட்டங்களை, மாய்ப்பன் – ஒழித்து விடுவேன்", என்ற சொல்லால் – என்ற (சரமசுலோக) வாக்யத்தால், இனி ஒருகால் – இனி ஒருநாளும், சோகியாத் துணிவு உற்றனம் – துக்கிக்கவேண்டாதபடி தைர்யத்தை அடைந்தோம்.

கருத்து:— பக்தியோகம் முதலிய மற்ற உபாயங்களை அநுஷ்டிக்கச் சக்தியற்ற என்னை அவ்வுபாயங்கள் கைவிட்டு நீங்கின. என் ப்ரபத்தியால் மகிழ்ந்த ஸர்வேசுவரன், தானே அந்த அந்த உபாயங்களின் ஸ்தானத்தில் நின்று பலனை அருள முற்பட்டான். இவ்வெம்பெருமான் சரமசுலோகத்தில் எல்லாப் பாபங்களையும் ஒழித்து விடுவதாய்க் கூறிய உறுதியை நினைந்து இனி ஒருகாலும் வருந்தாதவாறு தைரியத்தையடைந்தோம். 37

மாதவன் திருவடிகளே உபாயமும் பலனும்

38 வினைத்திரண் மாற்றிய வேதியர் தந்தருள் வாசகத்தா
லனைத்து மறிந்தபி ஞறும் பயனு மேனவடைந்தோ
மனத்தி லிருந்து மருத்தமு தாகிய மாதவனார்
நினைத்தன் மனத்தி லரிதாகி நின்றன நீள்கழலே. 38

இதன் உரையை 30-வது பாசுரத்தில் காண்க. தந்தருள் வாசகம்-கருணையினுல் செய்த உபதேசம். நின்றனவாகிய திருவடிகளை என்று அங்வயம். 38

எம்பெருமானது கருணைவெள்ளம்

எழுசீர்ச் சந்தவிருத்தம்

39 எட்டி லாறி ரண்டி லோன்றி லேங்கு மாறி யம்புவார்
விட்ட வாறு பற்று மாறு வீடு கண்டு மேவுவார்
சிட்ட ரான தேசு யர்ந்த தேசி கர்க்கு யர்ந்துமே
லெட்டு மூன்று மூட றுத்த தேந்தை மாலி ரக்கமே. 39

உரை:—எந்தை மால் இரக்கம்– எம்முடைய ஸ்வாமியான பகவானுடைய கருணையானது, எட்டில் – எட்டு அக்ஷரம் அமைந்த திருமந்த்ரத்திலும், ஆறு இரண்டில் – ஆறு பதங்களாய் இரண்டு பகுதியாயுள்ள த்வயத்திலும், ஒன்றில்-ஒரு சுலோகமாய் அமைந்த சரமசுலோகத்

திலும், எங்கும் ஆறு இயம்புவார் - (இவற்றில்) எங்கும் உபாயமே (சொல்லப்பட்டிருப்பதாய்) உபதேசிப்பவர்களும், விட்ட ஆறு - (நம்மால் முடியாதென்று) விடப்பட்ட (பக்தியோகம் முதலிய) உபாயத்தையும், பற்றும் ஆறு-கைக்கொள்ளும் உபாயமான ப்ரபத்தியையும், வீடு கண்டு - (அதன் பலமான) மோக்ஷத்தையும் நன்கு அறிந்து, மேவுவார் - அதில் ஊற்றமுடையவர்களும், சிட்டரான - ஜ்ஞாநம், வைராக்யம், அநுஷ்டாநம் ஆகிய இவை பொருந்தியவர்களும், தேசு உயர்ந்த - தேஜஸ் நிறைந்தவர்களுமான, தேசிகர்க்கு - ஆசார்யர்களுக்காக, உயர்ந்து - ஓங்கி உயர்ந்து, மேல் எட்டு மூன்றும் - மேல் உள்ள இருபத்துநான்கு வஸ்துக்களாய் மாறுகிற ப்ரக்ருதியின் ஸம்பந்தத்தையும், ஊடறுத்தது - (நமக்கு) ஒழித்துவிட்டது.

கருத்து:— நம் ஆசார்யர்கள் ரஹஸ்யங்கள் மூன்றிலும் உபாயமே முக்கியமாய்க் கூறப்பட்டிருப்பதாக உபதேசிக்கின்றனர். அவர்கள் நம்மால் செய்யமுடியாதென்று கைவிட்ட பக்தியோகத்தையும், கைக்கொள்ளும் ப்ரபத்தியையும், அதன் பலனை மோக்ஷத்தையும் நன்கு அறிந்தவர்கள். ஜ்ஞாநம் அநுஷ்டாநம் வைராக்யம் ஆகிய இவற்றால் பெருமைபெற்று விளங்கும் இத்தகைய ஆசார்யர்களுடைய அருளை நாம் பெற்றதால் எம்பெருமானுடைய கருணையும் நம் மீது மிக ஓங்கி ஸம்ஸாரபந்தத்தை வேரறுத்துவிட்டது. 39

அமிருதரஞ்சனி - உரை முற்றிற்று

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

ஸ்ரீ:

அதிகாரசங்கிரகம்—உரை

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

[விஷயச்சுருக்கம்]

நம் ஸம்ப்ரதாயத்தில் காலக்ஷேபத்தில் ப்ரதானமாய் விளங்குவது ''ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம்'' என்னும் தேசிகஸ்ரீஸூக்தி. இது 32-அதிகாரங்கள் கொண்டது; மணிப்ரவாளநடையில் அமைந்தது. இந்த அதிகாரங்களின் அர்த்தத்தைச் சுருக்கிக் கூறுவதால் இப்ப்ரபந்தம் இப்பெயர் பெற்றது.

ஸ்ரீதேசிகன் இதில் பத்து ஆழ்வார்கள், மதுரகவிகள், எட்டு ஆசார்யர்கள், இவர்களைப் புகழ்ந்து பேசி, ஆசார்யபக்தியின் அவசியத்தை வெளியிட்டு, தனியே எம்பெருமானார், ஆளவந்தார்,

நாதமுனிகள் என்னும் ஆசார்யர்கள் நம் ஸித்தாந்தத்திற்குச் செய்த உபகாரத்தைக் கூறி, பின் ஒவ்வோர் அதிகாரத்தின் அர்த்தத்தையும் சுருக்கி அந்தாதித்தொடையிலமைந்த பாசுரங்களால் வெளியிட்டு, கோயில் - திருமலை - பெருமாள்கோயில் ஆகிய திவ்யதேசங்களுக்கு ஒவ்வொரு பாசுரமிட்டு, திவ்யப்ரபந்தத்தைப் பாடியருளிய ஆழ்வார் களுள் முதல்வரான முதலாழ்வார்கள் காட்டிய விளக்கைக்கொண்டு இப்பிரபந்தம் அருளிச்செய்ததாகக்கொண்டு அம்மூவரையும் விசேஷித் துப் புகழ்ந்து, பக்தர்களால் விடவொண்ணாத ஸ்ரீரங்கநாதன் திருவடி களின் பெருமையை ஒரு பாசுரத்தால் விளக்கி, இந்தப்பிரபந்தத்திற்கு அதிகாரிகளை ஒரு பாசுரத்தால் காட்டி, ஆசார்யர்களின் உபகாரத்தை அநுஸந்தித்து முடிக்கிறார்.

தெளியாத மறை நிலங்கள் ப்ரபந்தங்களால் தெளிதல்

எண்சீராசிரியவிருத்தம்

40 பொய்கைமுனி பூதத்தார் பேயாழ் வார்தண்
பொருநல்வருங் குருகேசன் விட்டு சித்தன்
றுய்யகுல சேகரனம் பாண நாதன்
றொண்டரடிப் பொடிமழிசை வந்த சோதி
வையமெலா மறைவிளங்க வாள்வே லேந்து
மங்கையர்கோ னென்றிவர்கண் மகிழ்ந்து பாடுஞ்
செய்யதமிழ் மாலைகளுந் தெளிய வோதித்
தெளியாத மறைநிலங்க டெளிகின் றோமே. 1

[பாசுரம் 1-முதல் 6-வரை – குருபரம்பராஸாரம்]

உரை:—பொய்கை முனி – பொய்கையாழ்வார், பூதத்தார் – பூதத்தாழ்வார், பேயாழ்வார் – பேயாழ்வார், தண் பொருநல் வரும்– குளிர்ந்த தாம்ரபர்ணிநதிக்கரையில் அவதரித்த, குருகேசன் – திருக் குருகூர்க்குத் தலைவரான நம்மாழ்வார், விட்டுசித்தன் – பெரியாழ்வார், துய்ய குலசேகரன் – (பாகவதர்களின் விஷயத்தில்) பரிசுத்த (மான மனத்தையுடையவ)ரான குலசேகராழ்வார், நம் பாணநாதன் – நம் முடைய திருப்பாணாழ்வார், தொண்டரடிப்பொடி – தொண்டரடிப் பொடியாழ்வார், மழிசை வந்த சோதி – திருமழிசையில் அவதரித்த தேஜஸ்வியான திருமழிசையாழ்வார், வையம் எ(ல்)லாம் மறை விளங்க– உலகம் முழுதும் வேதாந்தார்த்தங்கள் ப்ரகாசிக்கும்படி, வாள் வேல் ஏந்தும் – வாளையும் வேலையும் தரித்த (எம்பெருமானிடம் மந்த்ரோப தேசம்பெற்ற), மங்கையர்கோன்–திருமங்கையாழ்வார், என்று இவர்கள்– என்ற இவ்வாழ்வார்கள், மகிழ்ந்து பாடும் – (பகவதநுபவத்தால்)

ஸந்தோஷமடைந்து பாடிய, செய்ய தமிழ் மாலைகள் – நேர்மையான தமிழ்த் திவ்யப்ரபந்தங்களை, நாம் தெளிய ஓதி – நாம் (அர்த்தத்துடன்) தெளிவாய் அத்யயநம்செய்து, தெளியாத மறை நிலங்கள் – நன்கு விளங்காமலிருந்த வேதபாகங்களை, தெளிகின்றோம் – நன்கு அறிகின்றோம்.

கருத்து:— பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், குலசேகராழ்வார், திருப்பாணாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியபதின்மரும் பகவானை நன்கு அநுபவித்து மகிழ்ந்து அதற்குப் போக்குவீடாகப் பாடியருளிய திவ்யப்ரபந்தங்களை நாம் அர்த்தத்துடன் குருமுகமாய் அத்யயநம்செய்து இதுவரை நமக்கு நன்கு விளங்காதிருந்த வேதபாகங்களின் அர்த்தங்களையெல்லாம் நன்கு அறியப் பெற்றோம்.

'தண்பொருநல்' என்று குளிர்ந்த தாம்ரபர்ணியைக் கூறியதால், நம்மாழ்வாரின் திருவுள்ளம் அனைவரும் வாழவேண்டுமென்று குளிர்ந்து நின்றமை ஸூசிக்கப்பட்டது.

'துய்ய குலசேகரன்' என்றதால், பாகவதர்களிடம் இவர்க்கு உள்ள ஈடுபாட்டைக் குறைக்கக் கருதிய மந்திரிகள், பாகவதர்கள் ரத்நஹாரத்தை அபஹரித்தார்களென்று கூறியும் அவர்களுக்காகத் தாம் குடப்பாம்பிற் கையிடும்படி பரிசுத்தமான எண்ணமுடைமை காட்டப்பட்டது.

'நம் பாணநாதன்' என்றது திருப்பாணாழ்வாருக்கு முநிவாஹநன் என்று பெயர்பெறும்படியும், தமக்கு வேதாந்தாசார்யன் என்று திருநாமம் விளங்கும்படியும் ஸ்ரீரங்கநாதன் அநுக்ரஹித்ததைக் கருதியாம்.

'மழிசைவந்த சோதி' என்றதால், பெரும்புலியூரில் யாகஸபைக்கு இவ்வாழ்வார் எழுந்தருளியபோது அங்குள்ள அந்தணர்கள் இவருடைய தேஜஸ்ஸைக் கண்டு கூசி, மேலே உச்சரிக்கவேண்டிய வேதமந்த்ரத்தையும் மறக்கும்படி நேர்ந்தமை காட்டப்பட்டது.

'வையமெலாம்.........மங்கையர்கோன்' என்றதால், இவர் வாளையும் வேலையும் ஏந்தி ஸர்வேசுவரன் பக்கல் ஆடையாபரணாதிகளைக் கவரப்புக, அச்சமயத்தில் அவன் உபதேசித்த திருமந்த்ரத்தால் இவர் ஞானச்சுடர் பெற்று ஸகலலோகங்களிலும் வேதார்த்தங்கள் ப்ரகாசமாம்படி ப்ரபந்தங்களை அருளிச்செய்தமை கூறப்பட்டது. 1

[மதுரகவிகள் ஆசார்யபக்திக்கு வழிகாட்டியவராதலால் அவர் பாடிய கண்ணிநுண்சிறுத்தாம்புப் பாசுரங்களின் பத்து ஸாரார்த்தங்களையும் அமைத்துத் தனியே அவர்விஷயமாக ஒரு பாசுரமிட்டருள்கிறார்—]

மதுரகவி காட்டியதே நல்வழி

41 இன்பத்தி லிறைஞ்சுதலி லிசையும் பேற்றி
லிகழாத பல்லுறவி லிராக மாற்றிற்
றன்பற்றில் வினைவிலக்கிற் றகவோக் கத்திற்
றத்துவத்தை யுணர்த்துதலிற் றன்மை யாக்கி
லன்பர்க்கே யவதரிக்கு மாய னிற்க
வருமறைக டமிழ்செய்தான் ருளே கொண்டு
துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டுந்
தோல்வழியே நல்வழிக டுணிவார் கட்கே. 2

உரை:— அன்பர்க்கே – பாகவதர்களுக் (கு அநுக்ரஹம் செய்வதற்) காகவே, அவதரிக்கும் – இக்கர்மபூமியில் அவதரித்தவனான, ஆயன் – கோபாலனான கண்ணன், நிற்க – ஸுலபனாய் இருக்கும் போது, (அவனை அநாதரித்துவிட்டு), இன்பத்தில் – ஆநந்தரூபமான அநுபவத்திலும், இறைஞ்சுதலில் – சரணமடையும்விஷயத்திலும், இசையும் பேற்றில் – நாம் அங்கீகரிக்கும் புருஷார்த்தமாயிருப்பதிலும், இகழாத பல் உறவில் – விலக்காத பலவகையான ஸம்பந்தத்திலும், இராகம் மாற்றில் – தகாத விஷயங்களில் விருப்பத்தை ஒழிக்கும் விஷயத்திலும், தன் பற்றில் – தன் விஷயமாய்ப் பற்றுதலை உண்டாக்குவதிலும், வினை விலக்கில் – பாபங்களை ஒழிப்பதிலும், தகவு ஒக்கத்தில் – கருணையின் அபிவ்ருத்தியிலும், தத்துவத்தை உணர்த்துதலில் – தத்துவ ஜ்ஞானத்தை உண்டுபண்ணுவதிலும், தன்மை ஆக்கில் – தன் ஸ்வபாவத்தை அருள்வதிலும், அருமறைகள் தமிழ்செய்தான் – அருமையான வேதங்களைத் தமிழிலே (ப்ரபந்தமாக) அருளிச்செய்த நம்மாழ்வாருடைய, தாளே கொண்டு – திருவடிகளையே (சரணமாகப்) பற்றி, துன்பு அற்ற – வருத்தம் தீர்ந்த, மதுரகவி – மதுரகவிகள், தோன்றக் காட்டும் – உலகில் எல்லோரும் அறியும்படி வெளியிட்ட, தொல்வழியே – (ஆசார்யனை அடைவதென்கிற) அநாதியான மார்க்கமே, துணிவார்கட்கு – (அற்பவிஷயங்களை வெறுக்கக் கூடிய) நிச்சயஜ்ஞானம் உடையவர்களுக்கு, நல் வழிகள் – சிறந்த வழிகளாகும்.

புருஷார்த்தம்:— மனிதனால் விரும்பப்படும் பலன்.

கருத்து:— எம்பெருமானுக்கும் ஜீவனுக்கும் பத்துவிதஸம்பந்தங்கள் உள. அவையாவன:– 1. ஆநந்தரூபமான பகவானுடைய அநுபவம். 2. அவனைச் சரணமாக அடைதல். 3. அவனையே தன் ஸ்வரூபத்திற்குத் தக்க பலனாகக் கொள்ளுதல். 4. அவனோடு பல்வகை உறவையுடைமை. 5. தகாத விஷயங்களில் ஆசையை அவனால் ஒழிக்கப்பெறுதல். 6. அவன்விஷயமான பற்று உண்டாகப்பெறுதல். 7. பாபங்களை ஒழிக்கப்பெறுதல். 8. அவனுடைய கருணைக்கு இலக்காயிருத்தல்.

9. அவனால் தத்துவஜ்ஞானம் உண்டாகப்பெறுதல். 10. அவன் தன்னைப்போலாக்கப்பெறுதல்: என்பனவாம். மதுரகவிகள் தம் வாழ் நாளில் கண்ணன் இவ்வுலகில் எழுந்தருளியிருந்தபோதிலும் அவனிடம் ஈடுபடாமல் ஆழ்வாரையே பற்றி இந்தப் பத்துவகையான ஸம்பந் தத்தையும் ஆழ்வார்விஷயத்திலேயே கொண்டு "கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்னும் பிரபந்தத்தைப் பாடியருளினர். இங்ஙனம் மதுரகவிகள் காட்டிய (ஆசார்யனை அடைதல் என்ற) வழியே அற்பஸுகங்களை விலக்கும் தைர்யமுடைய ஆஸ்திகர்க்குச் சிறந்த தாம்.

ஸ்ரீமதுரகவிகள் ஆழ்வார் திருவடிவாரத்திற்கு வரும்போது கண் ணன் இப்பூமியிலேதான் எழுந்தருளியிருந்தான். இதையறிந்தும் மதுர கவிகள் அவனைப் புறக்கணித்து ஆழ்வாரையே சிறந்த கதியாகப் பற்றினதால் 'ஆயன் நிற்க' என்னப்பட்டது. 2

ஸ்ரீபாஷ்யகாரருக்குப் பிறகு ஸம்ப்ரதாயம் சிறிது பிரிவதால் அவருக்கு முன்பு பொதுவாயுள்ள ஆசார்யபரம்பரையை அநுஸந்திக் கிறார்—

ஆசார்ய பரம்பரையின் அநுஸந்தானம்

42 என்னுயிர்தந் தளித்தவரைச் சரணம் புக்கி
யானடைவே யவர்குருக்க ணிரைவ ணங்கிப்
பின்னருளாற் பெரும்பூதூர் வந்த வள்ளல்
பெரியநம்பி யாளவந்தார் மணக்கா னம்பி
நன்னெறியை யவர்க்குரைத்த வுய்யக் கொண்டார்
நாதமுனி சடகோபன் சேனை நாத
னின்னமுதத் திருமகளென் றிவரை முன்னிட்
டெம்பெருமான் றிருவடிக ளடைகின் றேனே. 3

உரை:— என் உயிர் தந்து – என்னுடைய ஜீவாத்மாவை (எம் பெருமானுக்குச் சேஷமென்ற ஜ்ஞானத்தை)க் கொடுத்து உளதாக்கி, அளித்தவரை – உஜ்ஜீவிப்பித்த ஆசார்யரை, யான் சரணம் புக்கு – அடியேன் சரணமடைந்து, அவர் குருக்கள் நிரை – அவருடைய ஆசார்யர்களின் வரிசையை, அடைவே வணங்கி – க்ரமமாக வணங்கி, பின் – பிறகு, அருளால் – (உலகு உஜ்ஜீவிக்கவேண்டுமென்ற) கருணையால், பெரும்பூதூர் வந்த வள்ளல் – ஸ்ரீபெரும்பூதூரில் அவதரித் தவரும் (உலகிற்கு எம்பெருமானைக் காட்டிக்கொடுத்ததால்) கொடை யாளருமான ஸ்ரீபாஷ்யகாரரும், பெரியநம்பி ஆளவந்தார் மணக்கால் நம்பி – பெரியநம்பியும் ஆளவந்தாரும் மணக்கால்நம்பியும், அவர்க்கு – அந்த மணக்கால்நம்பிக்கு, நல்நெறியை உரைத்த – சிறந்த உபாய மான ப்ரபத்தியை உபதேசித்த, உய்யக்கொண்டார் – உய்யக்கொண் டாரும், நாதமுனி - நாதமுனிகளும், சடகோபன் – நம்மாழ்வாரும்,

சேனை நாதன் – ஸ்ரீவிஷ்வக்ஸேநரும், இன் அமுதத் திருமகள் – இனிய அமுதம்போன்ற பிராட்டியும், என்று இவரை முன்னிட்டு – என்ற இந்த ஆசார்யர்களை முற்பட வணங்கி, எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேன் – ஸர்வேசுவரனுடைய திருவடிகளைப் பற்றுகின்றேன்.

கருத்து:—எனக்கு நல்லுபதேசங்களைச் செய்து என் ஆத்மாவைப் பரமபுருஷனுக்கு அடியனென்று காட்டிக்கொடுத்த என் ஆசார்யனை யும், அவருக்கு ஆசார்யன், அவருக்கு ஆசார்யன் என்ற முறையில் ஸ்ரீபாஷ்யகாரர் வரையில் உள்ள ஆசார்யபரம்பரையையும் வணங்கிப் பின் ஸ்ரீபாஷ்யகாரர், பெரியநம்பி, ஆளவந்தார், மணக்கால்நம்பி, உய்யக்கொண்டார், நாதமுனி, நம்மாழ்வார், விஷ்வக்ஸேநர், பெரிய பிராட்டி ஆகிய இவர்களை முன்னிட்டுக்கொண்டு எல்லார்க்கும் பரமாசார்யனான ஸ்ரீமந்நாராயணன் திருவடிகளைச் சரணமடை கின்றேன். 3

இப்படி ஒரு கோஷ்டியில் ஆசார்யர்களை வணங்கி, இந்த ஆசார்ய பரம்பரையில் உபகாராதிசயத்தாலே மிக முக்கியர்களாயுள்ள ஸ்ரீபாஷ்யகாரர், ஆளவந்தார், நாதமுனிகள் ஆகிய மூவர்விஷயமாகவும் தனித்தனியே பாசுரமிட்டருள்கிறார்—

ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸூக்திகளில் பரிசயம்

கட்டளைக்கலித்துறை

43 ஆரண நூல்வழிச் செவ்வை யழித்திடு மைதுகர்க்கோர்
வாரண மாயவர் வாதக் கதலிகண் மாய்த்தபிரா
னேரணி கீர்த்தி யிராமா னுசமுனி யின்னுரைசேர்
சீரணி சிந்தையி னேஞ்சிந்தி யோமினித் தீவினையே. 4

உரை:— ஆரணநூல் வழிச் செவ்வை-வேதாந்தசாஸ்த்ரத்தின் வழியின் நேர்மையை, அழித்திடும் – கெடுப்பவர்களான, ஐதுகர்க்கு – ஹைதுகர்களுக்கு, ஓர் வாரணமாய் – நிகரற்ற யானையாய் வந்து, அவர் வாதக் கதலிகள் – அவர்களுடைய வாதமாகிய வாழைகளை, மாய்த்த பிரான் – ஒழித்த உபகாரகரும், ஏர் அணி கீர்த்தி – (உலகுக்கே) பொருந்திய அலங்காரமாய் உள்ள புகழையுடையவருமான, இராமானுசமுனி – ஸ்ரீபாஷ்யகாரருடைய, இன் உரை சேர் – இனிய ஸூக்திகளில் பொருந்திய, சீர் அணி சிந்தையினேம் – சிறப்புப்பெற்ற மனத்தையுடையோமானேம்; இனித் தீவினை சிந்தியோம் – இனிமேல் கொடிய கர்மங்களை (மனத்தாலும்) நினைக்கமாட்டோம்.

கருத்து:— வேதாந்தங்களுக்குத் தம் மனம்போனவாறு அர்த்தத்தைக் கற்பித்துக் கெடுக்கப்பார்க்கும் ஹைதுகர்களுக்கு ஸ்ரீபாஷ்யகாரர் ஒரு மத யானையாய்நின்று அவர்களுடைய வாதமென் னும் வாழையை முறித்துத் தள்ளினர். அவருடைய ஸ்ரீஸூக்தி களிலேயே ஈடுபட்ட நாம் இனித் தகாதசெய்கைகளை மனத்தாலும் கருதோம்.

ஹைதுகர்கள்:— எந்த விஷயங்களை நாம் எடுத்துக்கூறினாலும், வேதம் முதலிய ப்ரமாணங்களைக் கொள்ளாமல் ஹேதுவையே (காரணத்தையே) கேட்பவர்கள். 4

ஆளவந்தாரின் உபகாரம்

44 நீளவந் தின்று விதிவகை யானினை வொன்றியநா
மீளவந் தின்னும் வினையுடம் பொன்றி விழுந்துழலா
தாளவந் தாரென வென்றரு டந்து விளங்கியசீ
ராளவந் தாரடி யோம்படி யோமினி யல்வழக்கே. 5

உரை:— நீள வந்து – வெகு காலமாக (இந்த ஸம்ஸாரத்தில்) வந்து பிறந்து, இன்று – இந்த ஜந்மத்தில், விதிவகையால் – ஒரு பாக்ய விசேஷத்தால், நினைவு ஒன்றிய நாம் – (நல்விஷயங்களைப் பற்றிய) நினைவை அடைந்திருக்கும் நாம், மீள வந்து – மறுபடியும் (இக் கர்ம பூமியில்) பிறந்து, இன்னும் வினை உடம்பு ஒன்றி – இன்னமும் கர்ம சரீரத்தில் சேர்ந்து, விழுந்து உழலாது – (நரகாதிகளில்) விழுந்து துன்பமுறாதபடி (செய்யத் திருவுள்ளம் பற்றி), ஆள வந்தார் என – "(நம்மை) ரக்ஷிக்க வந்தார்" என்று சொல்லும்படி. வென்று – (ப்ரதி வாதிகளை) ஜயித்து, அருள் தந்து – (நம்மீது) கருணைபுரிந்து, விளங்கிய சீர் – ப்ரகாசிக்கும் குணங்களையுடையரான, ஆளவந்தார் அடியோம் – ஆளவந்தாருக்கு நாம் தாஸர்கள் ஆனோம்; இனி அல்வழக்குப் படியோம் – இனிமேல் தகாத ஒழுக்கங்(களைப் போதிக்கும் அபசாஸ்த்ரங்)களில் ஈடுபடமாட்டோம்.

கருத்து:— நெடுங்காலமாக இக்கர்மபூமியில் நாம் உழல்கின்றோம். இந்த ஜந்மத்தில் பாக்யவிசேஷத்தால் (ஆத்மா தேஹத்திற் காட்டிலும் வேறுபட்டிருத்தல் முதலிய) ஸாரார்த்தங்களை அறிந்த நம்மை மறுபடியும் இவ்வுலகிலே பிறவாது செய்யும் கருணையுடன் ஆள்வதற்கு வந்தார் என்னும்படியுள்ள ஆளவந்தாருக்கு நாம் தாஸர் களானோம். இனித் தகாத விஷயங்களைப் போதிக்கும் பிறமதத்தினரின் நூல்களில் ஈடுபடமாட்டோம். 5

நாதமுனிகளைத் தொழும் பெருமிதம்

45 காளம் வலம்புரி யன்னநற் காத லடியவர்க்குத்
தாளம் வழங்கித் தமிழ்மறை யின்னிசை தந்தவள்ளன்
மூளுந் தவநெறி மூட்டிய நாத முனிகழலே
நாளுந் தொழுதெழு வோநமக் கார்நிகர் நானிலத்தே. 6

உரை:— காளம் வலம்புரி அன்ன – காஹளம் என்னும் வாத்யத்தையும் வலம்புரிச்சங்கத்தையும் போன்றவர்களும், நல் காதல்- சிறந்த குருபக்தியையுடையவர்களுமான, அடியவர்க்கு – (கீழையகத் தாழ்வான் மேலையகத்தாழ்வான் என்னும் இரண்டு) சிஷ்யர்களுக்கு,

தாளம் வழங்கி – தாளவித்யையாகிய கந்தர்வவேதத்தை விளக்கி உபதேசித்து, தமிழ் மறை – தமிழ் வேதமாகிய திவ்யப்ரபந்தத்தின், இன் இசை தந்த வள்ளல் – இனிய (தேவ) கானத்தையும் உபதேசித்த மஹோபகாரகரும், மூளும் தவநெறி மூட்டிய – (முமுக்ஷுக்களால்) தீவ்ரமாய்க் கைக்கொள்ளப்படுகின்ற யோக மார்க்கத்தை (உலகில்) நடையாடச்செய்தவருமான, நாதமுனி கழலே – நாதமுனிகளின் திருவடிகளையே, நாளும் தொழுதெழுவோம் – தினந்தோறும் வணங்குவோம்; (இப்படிச் செய்வதால்) நானிலத்து-பூமியில், நமக்கு நிகர் ஆர்?–நமக்கு ஸமமானவர் யார்? (ஒருவருமில்லை).

கருத்து:— ஸ்ரீமந்நாதமுனிகள் தம்மிடம் அளவற்ற பக்தியையுடைய கீழையகத்தாழ்வான் மேலையகத்தாழ்வான் என்னும் இரண்டு மருகருக்குத் தாளவித்யையாகிய கந்தர்வவேதத்தையும் அதில் அமைத்துப் பாடுவதற்குத் திவ்யப்ரபந்தத்தையும் உபதேசித்தருளி, யோகமார்க்கத்தையும் இவ்வுலகிற்குக் காட்டிக்கொடுத்தருளினர். இத்தகைய பெருமை வாய்ந்த அவர் திருவடிகளையே தினந்தோறும் வணங்கி உஜ்ஜீவிப்போம். இந்தப் பாக்கியம் பெற்ற நமக்கு நிகர் இவ்வுலகில் யாவர் உளர்?. 6

ரஹஸ்யங்களின் பொருளை அறியும் பாக்யம்

46 ஆளு மடைக்கல மென்றெமை யம்புயத் தாள்கணவன்
ருளிணை சேர்ந்தெமக் கும்மவை தந்த தகவுடையார்
மூளு மிருட்கள் விளமுயன் றோதிய மூன்றினுள்ள
நாளு முகக்கவிங் கேநமக் கோர்விதி வாய்க்கின்றதே. 7

[பாசுரம் 7, 8 – உபோத்காதாதிகாரம்]

உரை:— எ(ம்)மை அடைக்கலம் (ஆக) ஆளும் என்று – 'எம்மைக் காக்கவேண்டிய வஸ்துவாகக்கொண்டு காப்பான்' என்று (துணிந்து), அம்புயத்தாள் கணவன் – தாமரையில் வசிக்கும் பிராட்டியின் நாதனை எம்பெருமானுடைய, தாள் இணை சேர்ந்து – திருவடிகள் இரண்டையும் உபாயமாகப்பற்றி, எமக்கும் அவை தந்த– எங்களுக்கும் அத்திருவடிகளையே (உபாயமாகக் காட்டித்) தந்த, தகவு உடையார் – க்ருபையையுடைய ஆசார்யர்கள், மூளும் இருட்கள் வி(ள்)ள முயன்று – (நம்மிடம்) வ்ருத்தியடைகின்ற (அஜ்ஞாநமாகிய இருள் ஒழியவேண்டுமென்று ப்ரவர்த்தித்து, ஓதிய மூன்றின் - உபதேசித்த மூன்று ரஹஸ்யங்களின், உள்ளம் – தாத்பர்யத்தை, இங்கே நாளும் உகக்க – இவ்வுலகில் எந்நாளும் (அநுஸந்தித்து) மகிழும்படி, நமக்கு ஓர் விதி – நமக்கு ஒரு பாக்ய விசேஷம், வாய்க்கின்றது! – வாய்த்திருக்கின்றது!!

கருத்து:— நம் ஆசார்யர்கள் 'ஸ்ரீமந்நாராயணன் திருவடிகளைச் சரணமடைந்தால் அவன் நம் பொறுப்பை ஏற்றுக்கொண்டு

காப்பான்' என்று துணிவுகொண்டு அவன்திருவடிகளைப் பற்றி அவற்றையே நமக்கும் சிறந்த உபாயமாகக் காட்டிக்கொடுத்தனர்; மேன்மேலும் நம்மிடத்து வளரும் அஜ்ஞானமாகிய இருளை ஒழிக்க வேண்டுமென்று நம்பால் கருணைகொண்டு நமக்கு மூன்று ரஹஸ்யங்களின் அர்த்தத்தையும் உபதேசித்தருளினர். அவ்வர்த்தத்தை இக்கர்மபூமியில் எந்நாளும் அநுஸந்தித்து மகிழப்பெற்றோம். என்னே நம் பாக்கியவிசேஷம்!!! 7

ஆசார்யகடாக்ஷம் வரின் கர்ப்பவாஸமில்லை

(அந்தாதித்தொடை)

47 திருவுடன் வந்த செழுமணி போற்றிரு மாலிதய
மருவிட மென்ன மலரடி சூடும் வகைபெறுநாங்
கருவுடன் வந்த கடுவினை யாற்றில் விழுந்தொழுகா
தருவுட னைந்தறி வாரருள் செய்ய வமைந்தனரே. 8

உரை:— திருவுடன் வந்த செழுமணிபோல் - பிராட்டியுடன் (கடலில்) அவதரித்த சிறந்த கௌஸ்துபரத்நம்போல்,திருமால் இதயம்— எம்பெருமானுடைய திருமார்பு, மருவு இடம் என்ன - வஸிக்கும் ஸ்தலம் என்று சொல்லலாம்படி (உள்ளவர்களும்), மலர் அடி – தாமரைமலர் போன்ற அவன் திருவடிகளை, சூடும்வகை-முடியில் தரிக்கும்தன்மையை, பெறும் நாம்–பெறுவதற்கு உரிமையுள்ள(வர்களுமான) நாம்,கருவுடன் வந்த – கர்ப்பத்துடன் வந்த, கடு வினை ஆற்றில் – கொடிய கர்மமாகிய நதியின் ப்ரவாஹத்தில், விழுந்து ஒழுகாது – விழுந்து (கரைகாணாது ப்ரவாஹத்தின் வழியே) செல்லாதவாறு, அருவுடன் ஐந்து அறிவார் - ஸூக்ஷ்மார்த்தங்களுடன் அர்த்தபஞ்சகத்தை அறிந்த நம் ஆசார்யர்கள், அருள் செய்ய – க்ருபையைச்செய்ய, அமைந்தனர் – பொருந்தி நின்றார்கள்.

கருத்து:— கடலில் அவதரித்த பிராட்டி எம்பெருமானுடைய திருமார்பை உறைவிடமாகக்கொண்டாள். அங்ஙனமே அவளோடு கடலில் தோன்றிய கௌஸ்துபரத்னமும் அவன்திருமார்பில் அணியப்பெற்றது. அத்தகைய கௌஸ்துபரத்நத்தைச் சரீரமாகக்கொண்ட நித்யஸூரியையே தமக்கு அபிமாநிதேவதையாகக்கொண்ட ஜீவர்களாகிய நாம் அவன்திருவடிகளில் நித்யகைங்கர்யம் செய்ய உரிமையுடையோம். ஆயினும் கர்மப்ரவாஹத்தில் அகப்பட்டு அதைப் பெறாதிருக்கிறோம். ஸூக்ஷ்மார்த்தங்களையும் அர்த்தபஞ்சகத்தையும் அறிந்த நம் ஆசார்யர்கள் நம்மீது கருணைகொண்டு, வேண்டிய அர்த்தங்களை உபதேசித்து உஜ்ஜீவிப்பிக்கமுற்பட்டனர். இனிக் கவலை ஏன்?

அர்த்தபஞ்சகம்—விளக்கம் 50-வது பாசுரவுரையிற் காண்க. 8

ஸாரத்தையே கைக்கொள்ளல்

48 அமையா விவையெனு மாசையி ஞலறு மூன்றுலகிற்
சுமையான கல்விகள் சூழவந் தாலுந் தோகையிவையென்
றிமையா விமையவ ரேத்திய வெட்டிரண் டெண்ணியநஞ்
சமயா சிரியர் சதிர்க்குந் தனிநிலை தந்தனரே. 9

[ஸாரநிஷ்கர்ஷாதிகாரம்]

உரை :— இவை அமையா - "இப்போது நாம் கற்ற வித்யைகள் போதாதவை (இன்னும் கற்கவேண்டும்)", எனும் ஆசையினல் - என்ற ஆசையால், உலகில் சுமையான - உலகில் வீண்சுமையாயுள்ள, அறு மூன்று கல்விகள் - பதினெட்டு (வித்யாஸ்தாநங்களாகிய) கல்விகள், சூழ வந்தாலும் - முழுவதும் கற்கப்பட்டாலும், இவை தொகை என்று - இத்தனை கல்விகளும் எண்ணிக்கைதான் என்று (நிச்சயித்து) இமையா இமையவர் ஏத்திய - ஜ்ஞாநம் சுருங்காத நித்யஸூரிகளாலும் கொண்டாடப்படுகின்ற, எட்டு இரண்டு - எட்டெழுத்துக்களையுடைய திருமந்த்ரமும் த்வயமும் சரமசுலோகமும் ஆகிய ரஹஸ்யத்ரயத்தையும், எண்ணிய - அநுஸந்தித்த, நம் சமய ஆசிரியர் - நம்முடைய ஸித்தாந்தப்ரவர்த்தகரான ஆசார்யர்கள், சதிர்க்கும் தனி நிலை - (ஸாரத்தையே கைக்கொள்ளும்) சிறந்த ஒப்பற்ற நிலைமையை, தந்தனர் - (நமக்கும்) கொடுத்தனர்.

கருத்து:— 'எவ்வளவு கற்றாலும் போதா. இன்னும் கற்க வேண்டும்' என்று அவா மிகுத்துப் பதினெட்டு வித்யாஸ்தாநங்கள் முழுவதையுமே கற்றாலும் அவையெல்லாம் வீண்சுமையாய் எண்ணளவில் நிற்குமேயன்றி வாழ்விப்பதற்கு ஏற்றவையாகா என்று நம் ஆசார்யர்கள் நிச்சயித்து நித்யஸூரிகளும் போற்றும் பெருமைவாய்ந்த மூன்று ரஹஸ்யங்களே உஜ்ஜீவிக்க மிகவும் ஸாரமான ஸாதநமெனக் கண்டு அவற்றைத் தாமும் அநுஸந்தித்து நாமும் அந்த ஸாரத்தையே ஏற்குமாறு செய்தனர். 9

சேதநமும் அசேதநமும் ஈசுவரனுக்குச் சரீரம்

49 நிலைதந்த தாரக ஞய்நிய மிக்கு மிறைவனுமா
யிலதோன் றெனுவகை யெல்லாந் தனதெனு மேந்தையுமாய்த்
துலையோன் றிலையென நின்ற துழாய்முடி யானுடம்பாய்
விலையின்றி நாமடி யோமெனும் வேதியர் மெய்ப்பொருளே. 10

[ப்ரதாநப்ரதிதந்த்ராதிகாரம்]

உரை:— வேதியர் மெய்ப் பொருள் - வேதாந்தத்தை அறிந்த பெரியோர்களின் ஸத்யமான ஸித்தாந்தம், நிலை தந்த தாரகனாய் - (ஸகல வஸ்துக்களையும்) ஸ்வரூபத்தையும் வாழ்வையும் கொடுத்துத் தரிப்பவனாய். நியமிக்கும் இறைவனுமாய் - அவற்றை நியமநம்செய்யும்

ஈசுவரனுமாய், இலது (இது) ஒன்று என வகை - "தனக்குச் சேஷமல்லாத வஸ்து (இது) ஒன்று" என்று கூறமுடியாதபடி, எல்லாம் தனது எனும் எந்தையுமாய் - ஸகல வஸ்துவும் தனக்குச் சேஷம் என்று சொல்லப்படும் ஸ்வாமியுமாய், துலை ஒன்று இலை என நின்ற - (இவனுக்கு) ஸமமான வஸ்து ஒன்றும் இல்லை என்று சொல்லும்படி நின்றவனும், துழாய் முடியான் - திருத்துழாயை முடியிற் சூடியவனுமான எம்பெருமானுக்கு, உடம்பாய் - சரீரமாய், விலை இன்றி - ஒரு தனிக்காரணமுமின்றி, நாம் அடியோம் எனும் - ஜீவர்களாகிய நாம் தாஸர்கள் என்று கூறும்.

கருத்து:— அனைத்தையும் தரிப்பவனாய் ப்ரவர்த்திக்கச் செய்பவனாய் எல்லாவற்றின் ப்ரயோஜநத்தையும் பெறுபவனாய் நிகரற்று விளங்கும் ஸர்வேசுவரனுக்குச் சரீரமான நாம், ஒரு தனிக் காரணமுமின்றி அவனுக்கு நித்யதாஸராவோம் என்பதே வேதாந்திகளின் ஸத்யமான ஸித்தாந்தமாகும்.

ஸர்வேசுவரன் ஸகல வஸ்துக்களுக்கும் ஸ்வரூபத்தையும் வாழ்வையும் கொடுத்துத் தாங்குகின்றான். இதற்கு (धा) தாரகத்வம் என்று பெயர். தன் ஸங்கல்பத்தால் ஸகலவஸ்துக்களுக்கும் ஸ்வரூபத்தையும் வாழ்வையும் கொடுத்துக் கார்யங்களில் ப்ரவர்த்திக்கச் செய்கின்றான். இது நியந்த்ருத்வம் எனப்படும். மேலும் அவ்வெம்பெருமான், தன் ப்ரயோஜநத்தையே சேதநாசேதநங்கள் தம்முடைய ப்ரயோஜநமாய்க்கொண்டு நிற்கும்படிசெய்து அதனால் பெருமையை அடைகின்றான். இது சேஷித்வம் எனப்படும். இந்த மூன்று ஸம்பந்தங்களும் தன்னிடமிருந்தால்தான் மற்றொன்றைத் தனக்குச் சரீரமாகக் கொள்ளமுடியும். இவை எம்பெருமானிடம் நிலைபெற்றிருப்பதால் அவன் ஸகலவஸ்துக்களையும் சரீரமாகக்கொண்டு நிற்கின்றான். அசேதநமும் நாமும் அவனுக்குச் சரீரமாய் நிற்கின்றோம். அவனுக்கும் நமக்கும் உள்ள சரீராத்மபாவமென்னும் இந்த ஸம்பந்தமே ப்ரதாந ப்ரதிதந்த்ரம் எனப்படும்.

ப்ரதாநப்ரதிதந்த்ரம்:— வேறு ஒரு ஸித்தாந்தத்திலும் ஏற்றுக் கொள்ளப்படாமல் நம் ஸ்ரீவிசிஷ்டாத்வைதஸித்தாந்தத்திற்கே உள்ள முக்கியமான விஷயம். ஈசுவரனுக்கும் சேதநாசேதநங்களுக்குமுள்ள சரீராத்மபாவத்தைப் பிறமதத்தினர் ஒருவரும் இசையவில்லையாதலின் அது அவ்வாறாயிற்று. 10

ஈசுவரன், ஜீவன், உபாயம், பலன், விரோதி எனும் ஐந்து பொருள்கள்

50 பொருளொன் றெனநின்ற பூமக ளாத னவனடிசேர்ந்
தருளொன்று மன்ப னவன்கோ ளுபாய மமைந்தபயன்
மருளொன் றியவினை வல்விலங் கென்றிவை யைந்தறிவா
ரிருளொன் றிலாவகை யெம்மனந் தேற வியம்பினரே. 11

[அர்த்தபஞ்சகாதிகாரம்]

உரை:— (1) பொருள் ஒன்று என நின்ற – புருஷார்த்தம் (பலன்) ஒன்றுதான் என்று சொல்லும்படி நின்றவனும், பூமகள் நாதன்– பிராட்டியின் நாதனுமான எம்பெருமானும், (2) அவன் அடி சேர்ந்து– அவன் திருவடிகளைச் சரணமடைந்து, அருள் ஒன்றும் அன்பன் – (அவன்) க்ருபையிலே ஒன்றுபட்டு நிற்க உரியனான ஜீவனும், (3) அவன் கொள் உபாயம் – அந்த ஜீவன் கைக்கொள்ளுகின்ற உபாயமும், (4) அமைந்த பயன் (அந்த ஜீவஸ்வரூபத்திற்குத்) தகுந்த பலனும் (5) மருள் ஒன்றிய – அஜ்ஞானத்தோடு சேர்ந்த, வினை வல் விலங்கு என்று – கர்மமாகிய வலிய விலங்கும் ஆகிய, இவை ஐந்து அறிவார் – இந்த அர்த்தபஞ்சகத்தை அறிந்த ஆசார்யர்கள், இருள் ஒன்று இலா வகை – அஜ்ஞானம் ஒன்றும் இல்லாதபடி, எம் மனம் தேற – எம்முடைய மனம் தெளியும்படி, இயம்பினர் – உபதேசித்தனர்.

கருத்து:— (1) பரமபுருஷார்த்தமாய்நிற்கும் ஸ்ரீமந்நாராயணன் (2) அவன் திருவடிகளில் நித்யகைங்கர்யம் செய்ய உரிமையுள்ள ஜீவன் (3) அந்த ஜீவன் தனக்கு ஏற்றதாய்க் கைக்கொண்ட பக்தி–ப்ரபத்திகளில் ஓர் உபாயம் (4) தன் ஸ்வரூபத்திற்கு ஏற்ற மோக்ஷாநந்தமாகிய பலன் (5) அதற்கு இடையூறாய்நிற்கும் கர்மமாகிய விலங்கு ஆகிய இந்த அர்த்தபஞ்சகத்தை அறிந்த நம் ஆசார்யர்கள் நம் அஜ்ஞானம் நீங்குமாறு நமக்கும் அர்த்தபஞ்சகத்தை உபதேசித்தருளினர். 11

மூன்று தத்துவங்களின் ஆராய்ச்சி

51 தேற வியம்பினர் சித்து மசித்து மிறையுமென
வேறு படும்வியன் றத்துவ மூன்றும் வினையுடம்பிற்
கூறு படுங்கொடு மோகமுந் தானிறை யாங்குறிப்பு
மாற நினைந்தரு ளான்மறை நூறந்த வாதியரே. 12

[தத்துவத்ரயசிந்தாதிகாரம்]

உரை:—மறை நூல் தந்த ஆதியர் – வேதாந்தசாஸ்த்ரத்தை உபதேசித்த முன்னோர் (ஆசார்யர்கள்), வினை உடம்பில் – கர்மத்தினால் ஏற்பட்ட இச்சரீரத்தில், கூறுபடும் – பங்கிட்டுக்கொண்டு வளருகின்ற, கொடு மோகமும் – கொடிய சரீராத்மப்ரமமும், தான் இறையாம் குறிப்பும் – ஸ்வதந்த்ராத்மப்ரமமும், மாற நினைந்து – (நமக்கு) ஒழிய வேண்டுமென்று திருவுள்ளங்கொண்டு, சித்தும் அசித்தும் இறையும் என – சேதநமும் அசேதநமும் ஈசுவரனும் என்று, வேறுபடும் – வேறுபட்டுநிற்கின்ற, வியன் தத்துவம் மூன்றும் – ஆச்சர்யமான தத்துவங்கள் மூன்றையும், அருளால் – (நம்மீதுள்ள) க்ருபையினால், தேற இயம்பினர் – (நம்மனம்) தெளியும்படி உபதேசித்தனர்.

கருத்து:— வேதாந்தசாஸ்த்ரத்தை உபதேசித்த ஆளவந்தார் ஸ்ரீபாஷ்யகாரர் முதலிய பூர்வாசார்யர்கள் சேதநராகிய நமக்குச்

சரீராத்மப்ரமமும் ஸ்வதந்த்ராத்மப்ரமமும் ஒழிந்து நாம் வாழ வேண்டுமெனத் திருவுள்ளங்கொண்டு ஒவ்வொன்றும் வெவ்வேறு ஸ்பாவங்களைப் பெற்று விசித்ரமாய் நிற்கும் சேதநம் அசேதநம் ஈசுவரன் என்னும் மூன்று தத்துவங்களைப் பிரித்து ஸித்தித்ரயம் ஸ்ரீபாஷ்யம் முதலிய ஸூக்திகளில் விளக்கியருளினர்.

சரீராத்மப்ரமம்:— அசேதநமான சரீரத்தையே ஆத்மாவாக நினைப்பது.

ஸ்வதந்த்ராத்மப்ரமம்:— ஜீவாத்மாவை எம்பெருமானுக்குச் சேஷமாக நினையாமல் ஸ்வதந்த்ரனாக நினைப்பது. *12*

எம்பெருமானே பரதேவதை

52 வாதியர் மன்னுந் தருக்கச் செருக்கின் மறைகுலையச்
சாது சனங்க ளடங்க நடுங்கத் தனித்தனியே
யாதி யெனுவகை யாரண தேசிகர் சாற்றினர்நம்
போதம ருந்திரு மாதுட னின்ற புராணனையே. 13

[பரதேவதாபாரமார்த்யாதிகாரம்]

உரை:—வாதியர் – துர்வாதிகள், மன்னும் தருக்கச்செருக்கின் – ஸ்திரமான தர்க்கம்செய்யும் கர்வத்தாலே, மறை குலைய – வேதம் நடுங்கும்படியும், சாது சனங்கள் அடங்க நடுங்க – ஸாதுக்களான பெரியோர்களெல்லாம் நடுங்கும்படியாகவும், தனித்தனியே ஆதி எனு வகை – தங்கள் தங்கட்குத் தோன்றியபடி (ப்ரஹ்மா இந்த்ரன் முதலியவரை) ஜகத்காரணம் என்று சொல்லாதபடி, ஆரணதேசிகர் – வேதாந்தசாஸ்த்ரத்தின் ஆசார்யர்கள், போது அமரும் திருமாதுடன் நின்ற – தாமரைப்பூவில் வீற்றிருக்கும் பெரியபிராட்டியுடன் நின்ற, நம் புராணனையே – அநாதிபுருஷனான நம் நாராயணனையே, சாற்றினர்– (ஜகத்காரணமென்று) ஸ்தாபித்தனர்.

கருத்து:— துர்வாதிகள் தங்களுக்குத் தர்க்கத்திலுள்ள அறிவின் கர்வத்தால், வேதங்கள் சிதைந்து ஸாதுக்கள் நடுங்கும்படி ப்ரஹ்மா இந்திரன் முதலிய தேவருள் தத்தமக்குத் தோற்றியவாறு ஒவ்வொருவரை ஜகத்காரணமென்று பிதற்றினர். வேதாந்தத்தின் உண்மைப் பொருளையறிந்த நம் ஆசார்யர்கள் அந்தப் பிதற்றல்களைக் கண்டித்து ப்ரமாணங்களைக்கொண்டு ஸ்ரீமந்நாராயணனையே ஜகத்காரணமாக ஸ்தாபித்தனர். *13*

மோக்ஷத்தை விரும்புதல்

53 நின்ற புராண னடியிணை யேந்து நெடும்பயனும்
பொன்றுத லேநிலை யென்றிடப் பொங்கும் பவக்கடலு
நன்றிது தீயதி தென்று நவின்றவர் நல்லருளால்
வென்று புலன்களை வீடினை வேண்டும் பெரும்பயனே. 14

[முமுக்ஷுத்வாதிகாரம்]

உரை:— நின்ற புராணன் – (பிராட்டியுடன்) நின்ற அநாதி புருஷனான பகவானுடைய, அடி இணை ஏந்தும் – திருவடிகள் இரண்டையும் ஏந்திக் கைங்கர்யம்செய்வதாகிய, நெடும் பயனும் – பெரிய (மோக்ஷ) புருஷார்த்தத்தையும், பொன்றுதலே நிலை என்றிட – அழிந்துபோதலே ஸ்வபாவமென்னலாம்படி, பொங்கும் பவக் கடலும் – (மேன்மேலும்) வ்ருத்தியடைகிற ஸம்ஸாரமாகிய ஸமுத்ரத்தையும், இது நன்று – இது (மோக்ஷம்) சிறந்தது; இது தீயது – இது (ஸம்ஸாரம்) கெட்டது, என்று நவின்றவர் – என்று உபதேசித்த ஆசார்யர்களின், நல் அருளால் – சிறந்த க்ருபையாலே, புலன்களை வென்று – இந்த்ரியங்களை ஜயித்து, பெரும் பயன் – பெரிய பலனான, வீடினை வேண்டும் – மோக்ஷத்தையே (சேதநன்) அபேக்ஷிப்பான்.

கருத்து:— பிராட்டியைப் பிரியாதுநிற்கும் அநாதிபுருஷனாகிய எம்பெருமானுடைய திருவடிகளைத் தலையிற்சூடிக் கைங்கர்யம் செய்வதாகிய மஹாபுருஷார்த்தமே மோக்ஷமெனப்படும். இது ஒரு நாளும் அழிவில்லாது நடந்துகொண்டேயிருக்கும். மேன்மேலும் வளர்ந்துகொண்டே வரும் ஸம்ஸாரஸமுத்ரமோ அழிந்துபோவதே இயற்கையாயுள்ள பலனைக்கொண்டது. இவ்விரண்டையும் ஆசார்யர்கள் ஆராய்ந்துபார்த்து முன்னதே சேதநனுக்கு ஏற்றதென்றும் பின்னது ஏற்றதன்றென்றும் உபதேசித்தனர். பிறரை வாழ்விப்பதையே பலனாகக்கொண்ட அவர்களின் அருளால் தத்துவஜ்ஞானம் பெற்ற சேதநன் தன் இந்த்ரியங்களை அற்பவிஷயங்களிலிருந்து விலக்கி மோக்ஷத்தையே பெற விரும்புவான். 14

மோக்ஷோபாயத்திற்கு அதிகாரிகளின் பிரிவு

54 வேண்டும் பெரும்பயன் வீடென் றறிந்து விதிவகையா
னீண்டுங் குறுகியு நிற்கு நிலைகளுக் கேற்குமன்பர்
மூண்டொன்றின் மூல வினைமாற் றுதலின் முகுந்தனடி
பூண்டன்றி மற்றோர் புகலோன் றிலையென நின்றனரே. 15

[அதிகாரிவிபாகாதிகாரம்]

உரை:—வேண்டும் பெரும் பயன் – (தாம்) அபேக்ஷிக்கத்தகுந்த பெரிய பலன், வீடு என்று அறிந்து – மோக்ஷமே என்று அறிந்து, நீண்டும் குறுகியும் நிற்கும் – வெகுகாலம் அநுஷ்டிக்கவேண்டியதாயும் க்ஷணகாலத்தில் அநுஷ்டிக்கவேண்டியதாயும் இருக்கும், நிலைகளுக்கு – (பக்தி, ப்ரபத்தியென்னும்) உபாயங்களுக்கு, விதிவகையால் ஏற்கும் அன்பர் – ஸுக்ருதத்தின் தாரதம்யத்தாலே அதிகாரிகளான பாகவதர்கள், ஒன்றில் மூண்டு – (இரண்டில்) ஒருபாயத்திலே முயன்று, மூல வினை மாற்றுதலில் – (ஸம்ஸாரத்திற்குக்) காரணமான கர்மங்களை ஒழிப்பதில், முகுந்தன் அடி பூண்டு அன்றி – எம்பெருமானுடைய

திருவடிகளில் ப்ரபத்தி செய்தலைத்தவிர, மற்று ஓர் புகல் – வேறு ஓர் (சிறந்த) உபாயம், ஒன்று இலை என – ஒன்றும் இல்லை என்னும்படி, நின்றனர் – நின்றார்கள்.

கருத்து:— பாகவதர்களில் தங்களுடைய ஸுக்ருததாரதம்யத்திற்குத் தக்கபடி சிலர் பக்தியோகத்தையும், சிலர் ப்ரபத்தியையும் தமக்கு ஏற்றதாகக் கொள்ளுகின்றனர். பக்தியோகத்தை அநுஷ்டிப்பவர்களுக்கு ப்ரபத்தியை மோக்ஷத்திற்காக அநுஷ்டிக்கவேண்டாத போதிலும், உபாயத்தை அநுஷ்டிப்பதற்கு இதுவரை விரோதியாயிருந்த கர்மம் கழியும் அம்சத்திற்காக ப்ரபத்தியை அவசியம்-அநுஷ்டித்தே ஆகவேண்டும். 15

பக்தி – ப்ரபத்திகள் மோக்ஷோபாயங்கள்

55 நின்ற நிலைக்குற நிற்குங் கருமமு நேர்மதியா
னன்றென நாடிய ஞானமு நல்குமுட் கண்ணுடையா
ரோன்றிய பத்தியு மோன்று மிலாவிரை வார்க்கருளா
லன்று பயன்றரு மாறு மறிந்தவ ரந்தணரே. 16

[உபாயவிபாகாதிகாரம்]

உரை:—நின்ற நிலைக்கு உற நிற்கும்–ஸ்திரமான (உபாயத்தில்) முயலும் நிலைக்குத் தகுந்தபடி நிற்கின்ற, கருமமும்–கர்மயோகத்தையும், நேர்மதியால் – ஸூக்ஷ்மமான புத்தியால், நன்று என நாடிய – (ஆத்மாவைக் காண்பதற்கு) அநுகூலம் என்று அநுஷ்டிக்கப்படுகின்ற, ஞானமும் – ஜ்ஞாநயோகத்தையும், நல்கும் உள் கண் உடையார் ஒன்றிய – (ஜீவனுடைய ஸ்வரூபத்தைப் பகவானுக்குச் சேஷமாகவே காண்பதால் ஸுகரூபமாயிருந்து)விரும்பப்படும்(ஆத்மஸாக்ஷாத்காரமாகிய)ஜ்ஞாநக் கண்ணைப் பெற்றவர்கள் கைக்கொண்ட,பத்தியும்-பக்தியோகத்தையும், ஒன்றும் இலா விரைவார்க்கு – (இந்தக் கர்மயோகம் முதலியவற்றில்) ஒன்றிலும் சக்தியற்றவர்களாய் (மோக்ஷத்தைப் பெறுவதற்குமாத்ரம்) விரைபவர்களுக்கு, அன்று–அவர்கள் விரும்பியபோதே, அருளால் பயன் தரும் ஆறும் – பகவத்க்ருபையின் மூலமாய்ப் பலனைத் தரவல்ல உபாயமாகிய ப்ரபத்தியையும், அறிந்தவர் அந்தணர் – (அவ்வவற்றின் ஸ்வரூபத்தோடு தெளிவாய்) அறிந்துகொண்டவர் (வேதமறிந்த) ப்ராஹ்மணர் (ஆவர்).

கருத்து:— மனத்தை வசப்படுத்துவதற்கு ஸாதநமாய், பக்தியோகத்தில் புகுவதற்கு இன்றியமையாததாய் விளங்கும் கர்மயோகத்தையும், ஆத்மஸாக்ஷாத்காரத்திற்கு ஸாதநமாயுள்ள ஜ்ஞாநயோகத்தையும், ஆத்மஸாக்ஷாத்காரம் பெற்றபின் கைக்கொள்ள வேண்டிய பக்தியோகத்தையும், இவற்றில் ஒன்றிலும் சக்தியற்றவர்களாய் மோக்ஷத்தைப் பெறுவதற்குமட்டும் விரைபவர்களுக்கு அன்றே

பலன்தரும் உபாயமாகிய ப்ரபத்தியையும் தெளிவாய் அறிபவர் வேதமறிந்த ப்ராஹ்மணராவர்.

கர்மயோகம்–பலனில் பற்றில்லாமல் செய்யப்படும் காம்ய கர்மங்களோடும் நித்ய - நைமித்திக கர்மங்களோடும் கூட நியமத்தோடு அநுஷ்டிப்பதாய் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு விசேஷகர்மம், இது பகவதாராதநம், தபஸ், தாநம், யாகம் முதலிய பலவகைப்படும். இது அநுஷ்டிக்க எளிதாயுள்ளது.

ஜ்ஞாநயோகம்—எம்பெருமானுக்குச் சரீரமான தன் (ஜீவாத்ம) ஸ்வரூபத்தை எப்பொழுதும் சிந்தித்துக்கொண்டேயிருக்கை.

பக்தியோகம்—எம்பெருமானை இடைவிடாது இச்சரீரம் விடுமளவும் த்யாநம் செய்திருக்கை. இந்தப் பக்தியோகம் மோக்ஷத்திற்கு நேரான உபாயமாகும்.

ப்ரபத்தி—எம்பெருமானைச் சரணமடைதல். பக்தியோகம், செய்வதற்குக் கடினமாகையால் அதை அநுஷ்டிக்கமுடியாமல் ப்ரபத்தியை அநுஷ்டிப்பவர்களுக்கு எம்பெருமான் அந்தப் பக்தியோகத்தின் ஸ்தாநத்தில், தானே நின்று அது கொடுக்கும் பலனை வேண்டும்போது கொடுக்கின்றான். *16*

ப்ரபத்தியைச் செய்ய உரிய அதிகாரி

56 அந்தண ரந்திய ரெல்லையி னின்ற வனைத்துலகு
நொந்தவ ரேமுத லாக நுடங்கி யனன்னியராய்
வந்தடை யும்வகை வன்றக வேந்தி வருந்தியநம்
மந்தமி லாதியை யன்ப ரறிந்தறி வித்தனரே. 17

[ப்ரபத்தியோக்யாதிகாரம்]

உரை :—வன் தகவு ஏந்தி வருந்திய-வலிய க்ருபையைவைத்து(ச் சேதநர்களை உஜ்ஜீவிப்பிக்க) முயன்றவனும், நம் அந்தம் இல் ஆதியை-அழிவு இல்லாதவனும் ஜகத்காரணமுமான நம் பகவானை, அந்தணர்-ப்ராஹ்மணர் (முதல்), அந்தியர் - சண்டாளர் (வரையில் உள்ள), எல்லையில் நின்ற– (இந்த) எல்லையில் அடங்கிய, அனைத்து உலகும்—ஸர்வலோகங்களும், நொந்தவரே முதலாக – (ஸம்ஸாரதாபத்தால்) வருந்தியவரே முக்கியமா(ன அதிகாரிகளா)கி, நுடங்கி – (வேறு உபாயத்தை அநுஷ்டிக்க முடியாதபடியால்) துவண்டுபோய், அனன்னியராய் வந்து – வேறு பலனையும் வேறு ரக்ஷகனையும் கொள்ளாதவராய் வந்து, அடையும் வகை - சரணமடையும் ப்ரகாரத்தை, அன்பர் அறிந்து – பாகவதர்களான ஆசார்யர்கள் தாம் அறிந்து, அறிவித்தனர் – (நமக்கும்) உபதேசித்தனர்.

கருத்து:— ஸர்வேசுவரன் அழிவற்றவன்; ஜகத்காரணமாய் நிற்பவன். அவனுக்கு நம்மீது உள்ள அருள் நாம் எத்தகைய குற்றம்

செய்திடினும் குறைவுபடாது. நம்மிடம் தற்செயலாய் ஏற்பட்ட புண்யம் முதலிய அற்ப வியாஜத்தையே கொண்டு அவன் நம்மை உஜ்ஜீவிப்பிக்க வழிதேடுகின்றான். இத்தகைய எம்பெருமான் திருவடிகளில் பிராமணர்முதல் பஞ்சமர்வரையிலுள்ள ஸகலஜாதியினரும் ப்ரபத்தியை அநுஷ்டிக்கலாம். இதற்கு ஜாதி முதலிய நியமம் கிடையாது. ஸம்ஸாரதாபத்தால் வருந்தி வேறு உபாயத்தையும் வேறு பலனையும் வேறு தெய்வத்தையும் நாடாத யாவரும் இந்த ப்ரபத்திக்கு அதிகாரிகளாவர். இவ்விஷயங்களை அறிந்து ஆசார்யர்கள் நமக்கு உபதேசித்தனர். *17*

ப்ரபத்தியின் அங்கங்கள்

57 அறிவித் தனரன்ப ரையம் பறையு முபாயமில்லாத்
துறவித் துனியிற் றுணையாம் பரனை வரிக்கும்வகை
யுறவித் தனையின்றி யொத்தா ரெனநின்ற வும்பரைநாம்
பிறவித் துயர்செகுப் பீரேன் றிரக்கும் பிழையறவே. 18

[பரிகரவிபாகாதிகாரம்]

உரை:— உறவு இத்தனை இன்றி – (நம்முடன்) ஸம்பந்தம் சிறிதும் இல்லாமல், ஒத்தார் என நின்ற – (நமக்கு) ஸமமானவர் என்று கூறும்படி நின்ற, உம்பரை – (ப்ரஹ்மா ருத்ரன் முதலிய) தேவர்களை, பிறவித் துயர் செகுப்பீர் –(எங்கள்) "ஸம்ஸார துக்கத்தைப் போக்குவீராக", என்று நாம் இரக்கும் – நாம் யாசிப்பதாகிய, பிழை அற – குற்றம் இல்லாதுபோம்படி, ஐயம் பறையும் – (நம்மால் அநுஷ்டிக்கமுடியுமா? என்று) ஸந்தேஹத்தை வெளியிடக்கூடியதான, உபாயம் இல்லா – (பக்தியோகம் முதலிய) உபாயத்தை அநுஷ்டிக்க முடியாமையாகிய, துறவித் துனியில் – வறுமையால் உண்டான துர்த்தசையில், துணை ஆம் பரனை–ஸஹாயமாக நிற்கும் ஸர்வேசுவரனை, வரிக்கும் வகை – சரணமடையும் ப்ரகாரத்தை, அன்பர் அறிவித்தனர் – (நம்மிடம்) அன்புள்ள ஆசார்யர்கள் உபதேசித்தனர்.

பிழையற, வகை, அன்பர், அறிவித்தனர் என்று அந்வயம்.

கருத்து:— பக்தியோகம் முதலிய உபாயங்கள் 'நம்மால் அநுஷ்டிக்கமுடியுமோ முடியாதோ' என்ற ஸந்தேஹத்தைத் தருவன. அவற்றில் சக்தியில்லாது பலனைப் பெறுவதற்கு மட்டும் பேரவாக் கொண்டு நிற்கும் நமக்கு எம்பெருமானது பெருமையைக் கண்டு அஞ்சி விலகாது, எளிமையைக் கண்டு நெருங்கி வகுத்த அங்கங்களுடன் கூடிய ப்ரபத்தியை அநுஷ்டிக்கும் வகையை நம் ஆசார்யர்கள் உபதேசித்தனர். அவர்கள் இங்ஙனம் அருளாவிடில் மனந்தெளியாத நாம் நமக்குச் சமமாய் நிற்கும் ப்ரஹ்மா ருத்ரன் முதலிய தேவர்களிடம்

போய் ஸம்ஸாரதுக்கத்தைப் போக்கும்படி யாசிக்க நேரிட்டிருக்கும், அவ்வாறு செய்யாது நம் ஆசார்யர்கள் காத்தனர். 18

ப்ரபத்தியின் ஸ்வரூபம்— விளக்கம்

58 அறவே பரமென் றடைக்கலம் வைத்தன ரன்றுநம்மைப்
பெறவே கருதிப் பெருந்தக வுற்ற பிரானடிக்கீ
ழுறவே யிவனுயிர் காக்கின்ற வோருயி ருண்மையைநீ
மறவே லெனநம் மறைமுடி சூடிய மன்னவரே. 19

[ஸாங்கப்ரபதநாதிகாரம்]

உரை:— மறை முடி சூடிய - வேதாந்த(மாகிய ஸாம்ராஜ்ய)த்தில் முடிசூடிநிற்கின்ற, நம் மன்னவர் – அரசர்களாகிய நம் ஆசார்யர்கள், உறவு ஏய் இவன் உயிர் காக்கின்ற - (தன்) ஸம்பந்தம் பொருந்திய சேதநனுடைய ஸ்வரூபத்தைக்காப்பவனும், ஓர் உயிர் - (உலகுக்கெல்லாம்) ஒரே அந்தர்யாமியாயிருப்பவனுமான எம்பெருமானுடைய, உண்மையை நீ மறவேல் என - ஸ்பாவத்தை நீ மறவாதே என்று (சிக்ஷித்து), அன்று நம்மைப் பெறவே கருதி – அநாதியாக நம்மை அடைவதற்கே ஊற்றமுடையனாயிருந்து, பெரும் தகவு உற்ற – அளவற்ற க்ருபையை வைத்தவனாகிய, பிரான் அடிக் கீழ் – எம்பெருமானுடைய திருவடியின்கீழ், பரம் அறவே என்று – (சேதநனுடைய) பொறுப்பு அற்றுப்போகவேண்டுமென்று (நினைத்து), அடைக்கலம் வைத்தனர் – ரக்ஷிக்கப்படவேண்டிய வஸ்துவாக ஸமர்ப்பித்தனர்.

கருத்து:— எம்பெருமான் நமக்கும் அவனுக்கும் உள்ள நித்யமான ஸம்பந்தத்தாலேயே நம்மைக் காக்கக் கடமைப்பட்டுள்ளான். அநாதிகாலமாக நம்மைப் பெறக்கருதி நம்மீது கருணையைப் பொழிகின்றான். இத்தகைய ஸர்வேசுவரன்திருவடிகளில் காக்கப்படவேண்டிய வஸ்துவாக வேதாந்தத்தின் கரைகண்ட நம் ஆசார்யர்கள் நம்மை ஸமர்ப்பித்தனர்.

மறையில் முடிசூடியிருக்கையாவது— வேதாந்தத்தின் அர்த்தங்களை நிச்சயம்செய்யும் வல்லமைபெற்றிருக்கை.

மன்னவர், பிரானடிக்கீழ், அடைக்கலம், வைத்தனர் என்று அந்வயம். 19

ப்ரபத்திக்குப்பின் கவலையற்ற நிலை

59 மன்னவர் விண்ணவர் வானே ரிறையோன்றும் வான்கருத்தோ
ரன்னவர் வேள்வி யனைத்து முடித்தன ரன்புடையார்க்
கென்ன வரந்தர வென்றநம் மத்தி கிரித்திருமான்
முன்னம் வருந்தி யடைக்கலங் கோண்டநம் முக்கியரே 20

[க்ருதக்ருத்யாதிகாரம்]

உரை:— அன்பு உடையார்க்கு – (தன்னிடம்) பக்தியுடையவர் களுக்கு, என்ன வரம் தர என்ற -(அவர்களைச் சேர்ந்தவர்களுக்குமுள்பட மோக்ஷம் கொடுத்தபின்னும் இன்னும்) எந்த வரத்தைக் கொடுக்க லாம் என்ற சிந்தனையுடைய, நம் அத்திகிரித் திருமால் – ஹஸ்திகிரியில் எழுந்தருளியுள்ள நம் பேரருளாளனால், முன்னம் வருந்தி – முன்பே முயன்று, அடைக்கலம் கொண்ட – ரக்ஷிக்கப்படவேண்டிய வஸ்துவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட, நம் முக்கியர் – நமக்கு முக்கியர்களான ப்ரபந்நர் கள், மன்னவர் – (நமக்கு) அரசர்களாகவும், விண்ணவர் – நித்யஸூரி களாகவும், வானோர் இறை ஒன்றும் வான் கருத்தோர் - நித்யஸூரி களுக்குத் தலைவனான எம்பெருமான் எழுந்தருளியுள்ள பரமபதத் திலேயே கருத்தைச் செலுத்துமவர்களாகவும், அன்னவர் - பரமஹம் ஸர்களாகவும் அல்லது ஹம்ஸ பக்ஷிபோல் ஸாரத்தையே க்ரஹிப்பவர் களாகவும், வேள்வி அனைத்தும் முடித்தனர் – ஸகல யாகங்களையும் செய்துமுடித்தவர்களாகவும் ஆவார்கள்.

கருத்து:— தன் பக்தர்களுக்கு, (அவர்களைச் சார்ந்தவர்க்குங் கூட) மோக்ஷம் வரையிலுள்ள பலனைக் கொடுத்தும் திருப்தியடை யாது இன்னும் என்ன வரத்தைக் கொடுக்கலாமென்று சிந்தைகொள் பவன் நம் பேரருளாளன். அவன் திருவடிகளைச் சரணமடைந்த ப்ரபந்நர்கள் நமக்கு அரசர்களாகவும் நித்யஸூரிகளாகவும் பரமபதத் திலேயே கருத்தைச் செலுத்துபவர்களாகவும் பரமஹம்ஸர்களாகவும் ஹம்ஸம்போல் ஸாரத்தையே கொள்பவர்களாகவும் ஸகல யாகங்களை யும் செய்துமுடித்தவர்களாகவும் ஆவர். 20

ப்ரபந்நன் தன்னிடம் சிறந்த அடையாளங்களைக் காணல்

60 முக்கிய மந்திரங் காட்டிய மூன்றி னிலையுடையார்
தக்கவை யன்றித் தகாதவை யொன்றுந் தமக்கிசையா
ரிக்கரு மங்க ளெமக்குள வென்னு மிலக்கணத்தான்
மிக்க வுணர்த்தியர் மேதினி மேவிய விண்ணவரே. 21

[ஸ்வநிஷ்டாபிஜ்ஞாநாதிகாரம்]

உரை:— முக்கிய மந்திரம் காட்டிய – முக்கியமான மந்த்ரமாகிய திருமந்த்ரத்தால் வெளியிடப்பட்ட, மூன்றில் நிலை உடையார் – (ஸ்வரூபம், உபாயம், புருஷார்த்தம் ஆகிய) மூன்றில் நிஷ்டையுடைய வர்கள், தக்கவை அன்றி – (தமக்கு) உசிதமான நல்ல கர்மங்களைத் தவிர, தகாதவை ஒன்றும் – தகாத கர்மங்களுள் ஒன்றையும், தமக்கு இசையார் – தமக்கு (ச் செய்யத்தக்கதாக) அங்கீகரிக்கமாட்டார்கள்; இக் கருமங்கள் – (ஸ்வநிஷ்டையின் அடையாளமாகிய) இச் செய் கைகள், எமக்கு உள என்னும் – எமக்கு இருக்கின்றன என்பதாகிய, இலக்கணத்தால் – அடையாளத்தோடு, மிக்க உணர்த்தியர் – சிறந்த நிச்சயஜ்ஞாநத்தை உடையரான (அந்த) அதிகாரிகள், மேதினி மேவிய – பூமியில் அவதரித்துள்ள, விண்ணவரே – நித்யஸூரிகளாகவே ஆவார்கள்.

கருத்து:— திருமந்திரத்தில் கூறப்படும் மூன்று நிஷ்டைகளை யுடையவர் தமக்கு உசிதமான நித்யநைமித்திக கர்மங்களையன்றித் தகாத கர்மங்களைச் செய்யத் துணியமாட்டார்கள். ஸ்வநிஷ்டைகளின் அடையாளங்களைத் தம்மிடத்து நிச்சயமாய்க் கண்ட ப்ரபந்நர்கள் பூமியிலுள்ள நித்யஸூரிகளெனக் கொள்ளப்படுவர்.

ரஹஸ்யார்த்தங்களை அறிந்து ப்ரபத்தியை அநுஷ்டித்தவனுக்குப் பல விசேஷச் செய்கைகள் ஏற்படும். இவை ஸ்வநிஷ்டைக்கு அடையாளமாகும். நிஷ்டையாவது—ஸ்வரூபம், உபாயம், புருஷார்த்தம் இவற்றைப் பற்றி நிச்சயமாயுள்ள ஜ்ஞாநம். தன்னிடம் தோற்றுகின்ற பல விசேஷச் செய்கைகளைக்கொண்டு தன்னிடம் அந்த அந்த நிஷ்டை இருப்பதாக அறிந்து மகிழலாம்.

ஸ்வரூபநிஷ்டையின் அடையாளங்கள்—1. பிறர் தன்னை அவமதித்தால் அது தன் ஆத்மஸ்வரூபத்தில் தட்டாமையை எண்ணி வருத்தமற்றிருக்கை, 2. தன்னை அவமதித்துத் தன் பாபத்தை வாங்கிக் கொள்ளும் பிறரிடம் தயையுடைமை, 3. தான் நினைத்துக்கொள்ள வேண்டிய தன் குற்றங்களை எடுத்துக்கூறி நினைவூட்டியதற்கு அவர்களிடம் நன்றியறிதல், 4. பிறர் எம்பெருமானால் தூண்டப்பட்டே தன்னை அவமதிப்பதாக எண்ணி அவர்கள்பால் மனம் வேறுபடாமை, 5. தன் குற்றத்தைப் பிறர் வெளியிட்டதால் தன் பாபம் கழிகின்றதென்று மகிழ்தல்: ஆகியவை.

உபாயநிஷ்டையின் அடையாளங்கள்— 1. ஸர்வேசுவரனே கதி என்று நினைக்கை. 2. மரணம் வந்தாலும் அதை விருந்தாளியாக நினைத்து மகிழ்தல், 3. எம்பெருமான் ரக்ஷகனாக இருக்கும் தைர்யத்தால் மனம் தேறுகை. 4. பரந்யாஸம் செய்தபிறகு அதே பலனைப் பற்றப் பின் ஒரு யத்நமும் செய்யாமை, 5. அநிஷ்டத்தை ஒழித்து இஷ்டத்தைக் கொடுப்பது பகவானுடைய பொறுப்பு என்றிருக்கை: என்பனவாம்.

புருஷார்த்தநிஷ்டையின் அடையாளங்கள்— 1. சரீரபோஷணத்தில் கவலையற்று எல்லாம் பகவத்ஸங்கல்பத்தால் நடப்பதாக நினைத்துச்சாஸ்த்ரங்களால் விலக்கப்படாத போகங்கள் தன் யத்நமில்லாமல் தாமே வந்தால் தன்னுடைய கர்மம் கழிவதாக எண்ணி விலக்காமல் அநுபவிக்கை, 2. இன்பம் வந்தால் மகிழ்ச்சியும் துன்பம் வந்தால் சோகமுமின்றி மஹாபலமான பகவத்கைங்கர்யத்தில் ஆவலுடைமை, 3. பகவதநுபவத்தைப்பெற மிகவிரைதல்: ஆகியவை. 21

ப்ரபத்திக்குப்பின் இங்குச் செய்யும் கைங்கர்யம்

61 விண்ணவர் வேண்டி விலக்கின்றி மேவு மடிமையெல்லா
மண்ணுல கத்தின் மகிழ்ந்தடை கின்றனர் வண்டுவரைக்
கண்ண னடைக்கலங் கொள்ளக் கடன்கள் கழற்றியாம்
பண்ணம ருந்தமிழ் வேத மறிந்த பகவர்களே. 22

[உத்தரக்ருத்யாதிகாரம்]

வண் துவரைக் கண்ணன்—அழகிய த்வாரகாநகரத்தில் வஸிக்கும் கண்ணன், அடைக்கலம் கொள்ள – ரக்ஷிக்கத்தக்க வஸ்துவாக ஏற்றுக் கொண்டபின், கடன்கள் கழற்றிய –(தேவ - முனி-பித்ருக்களின்) கடன் களைத் தீர்த்தவர்களும், பண் அமரும் நம் தமிழ் வேதம் அறிந்த – இசை நிறைந்த நம் தமிழ்வேதமாகிய திவ்யப்ரபந்தத்தை அறிந்தவர்களுமான, பகவர்கள் – பாகவதர்கள், விண்ணவர் வேண்டி – நித்யஸூரிகள் ப்ரார்த் தித்து, விலக்கு இன்றி – தடையின்றி, மேவும் அடிமை எல்லாம் – அன்புடன் செய்கின்ற கைங்கர்யம் எல்லாவற்றையும், மண் உலகத்தில்- இந்தப் பூலோகத்தில், மகிழ்ந்து அடைகின்றனர் – ஸந்தோஷித்து அநுஷ்டிக்கப்பெறுகின்றனர்.

கருத்து:— எம்பெருமான் ப்ரபந்நர்களின் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின் தேவர் முதலியோரிடம் அவர்கள் பட்ட கடன் நீங்கி விடும். இத்துணைப் பெருமையுடன் தமிழ்வேதமாகிய திவ்யப்ரபந் தத்தைக் கற்றறிந்த பாகவதோத்தமர்கள், ஸ்ரீவைகுண்டத்தில் நித்ய ஸூரிகள் ப்ரார்த்தித்துப் பெறவேண்டிய கைங்கர்யங்கள் முழுவதை யும் இம்மண்ணுலகிலேயே அடைந்துவிடுகின்றனர்.

பூமியில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் தேவர்-முனிவர்- பித்ருக்கள் ஆகியவர்களிடம் கடன்பட்டே தீருகிறான், தேவர்களின் கடன் யாகம்செய்வதாலும், முனிவர்கடன் வேதாத்யயநத்தாலும், பித்ருக்களின் கடன் ஸந்ததி பிறப்பதாலும் நீங்குகின்றன. ஆனால் பரந்யாஸம்செய்த அதிகாரிக்கு இக்கடன்கள் தாமே நீங்கிவிடுகின்றன.

பாகவதகைங்கர்யமே எல்லைநிலம்

62 **வேத மறிந்த பகவர் வியக்க விளங்கியசீர்**
நாதன் வகுத்த வகைபெறு நாமவ னல்லடியார்க்
காதர மிக்க வடிமை யிசைந்தழி யாமறைநூ
னீதி நிறுத்த நிலைகுலை யாவகை நின்றனமே. **23**

[புருஷார்த்தகாஷ்டாதிகாரம்]

உரை:— வேதம் அறிந்த – வேத(ாந்த)த்தை அறிந்த பகவர் வியக்க – பாகவதர்கள் ஆச்சர்யமடையும்படி, விளங்கிய சீர் – ப்ரகாசிக் கின்ற கல்யாண குணங்களையுடைய, நாதன் வகுத்த வகை – எம்பெரு மான் நியமித்த (பாகவதர்க்கும் அடிமையாகிய) ப்ரகாரத்தை, பெறும் நாம்–பெற்ற நாம், அவன் நல் அடியார்க்கு–அவ்வெம்பெருமானுடைய சிறந்த அடியவர்களுக்கு, ஆதரம் மிக்க – அன்பு மிகுந்த, அடிமை இசைந்து – கைங்கர்யத்தை ஏற்று, அழியா மறை நூல் – அழியாத வேதமாகிய சாஸ்த்ரத்தால், நீதி நிறுத்த – நீதியோடு வ்யவஸ்தை செய்யப்பட்ட, நிலை – அநுஷ்டாநம், குலையாவகை நின்றனம் – கெடாதபடி நடந்தோம்.

கருத்து:—வேதாந்தங்களை நன்கு உணர்ந்த பாகவதர்கள் எம் பெருமானுடைய திருக்கல்யாண குணங்களை நினைந்து நினைந்து

ஆச்சர்யமுறுவர். அவ்வெம்பெருமானுடைய அடியார்களான நாம் அவனடியார்களான மஹான்களுக்கு அன்புடன் கைங்கர்யத்தைச் செய்ய முற்பட்டுச் சாஸ்த்ரம் கூறிய வழிபிறழாது நடந்தோம். 23

ப்ரபந்நன் சாஸ்த்ரங்களை மீறாமை

63 நின்றன மன்புடை வானோர் நிலையி னிலமளந்தா
னன்றிது தீயதி தென்று நடத்திய நான்மறையா
லின்று நமக்கிர வாதலி னிம்மதி யின்னிலவே
யன்றி யடிக்கடி யாரிரு டீர்க்க வடியுளதே. 24

[சாஸ்த்ரீயநியமநாதிகாரம்]

உரை:— நிலம் அளந்தான் – (த்ரிவிக்ரமாவதாரத்தில்) பூமியை அளந்த எம்பெருமான், இது நன்று – இது செய்யத்தக்கது, இது தீயது– இது செய்யத்தகாதது, என்று நடத்திய - என்று வழிகாட்டிய, நான் மறையால் – நான்கு வேதங்களால் (காட்டப்பட்ட மார்க்கத்தால்), அன்புடை வானோர் நிலையில் – (அளவற்ற) பக்தியுள்ள நித்யஸூரிகள் (செய்வது போன்ற) கைங்கர்யத்தில், நின்றனம் – நின் (று அநுஷ்டிக்கப் பெற்)றோம்; இன்று – இந்த ஸம்ஸாரதசையில், நமக்கு இரவு ஆதலின் - நமக்கு (ப்ரக்ருதிஸம்பந்தமாகிய இருளைத் தரும்) ராத்ரி யாதலால், அடிக்கடி ஆர் இருள் தீர்க்க - திரும்பத் திரும்ப (வ்ருத்தியாகி) நிறைந்துநிற்கும் (அஜ்ஞாநமாகிய) இருளைப் போக்குவதற்கு, இம்மதியின் நிலவே அன்றி – இந்த (வேதமாகிய) சந்த்ரனுடைய ப்ரகாசமாகிய ஸ்ம்ருதியைத் தவிர, அடி உளதே? – உபாயம் வேறு இருக்கின்றதோ?

கருத்து:— இந்த ஸம்ஸாரதசையாகிய இரவில் நமக்கு மேன் மேலும் வளர்ந்துவருகிற அஜ்ஞாநமாகிய இருளைப்போக்க வேதமாகிய சந்திரனுடைய நிலவுபோன்றிருக்கும் ஸ்ம்ருதிமுதலிய ப்ரமாணங்களைத் தவிர வேறு ஸாதனம் ஒன்றுமில்லை. ஆதலின் எல்லாத் தேவரினும் மேம்பட்டுநிற்கும் எம்பெருமான் வேதமாகிய மூலத்தைக்கொண்டு சாஸ்த்ரங்களால் நன்மை - தீமைகளை விளக்கி வழிகாட்டுகின்றான். அந்தச் சாஸ்த்ரங்களில் கூறிய முறை வழுவாது பகவத்கைங்கர் யத்தை அநுஷ்டித்து நித்யஸூரிகளைப் போன்றவரானோம். 24

ப்ரபந்நனுக்குப் பாபம் சேராமை

64 உளதான வல்வினைக் குள்ளம் வெருவி யுலகளந்த
வளர்தா மரையிணை வன்சர ணுக வரித்தவர்தாங்
களைதா னெனவெழுங் கன்மங் துறப்பர் துறந்திடிலு
மிளைதா நிலைசேக வேங்கள் பிரானருட் டேனெழுமே. 25

[அபராதபரிஹாராதிகாரம்]

உரை:— உளிதான — (தம்மிடம்) உள்ள, வல் வினைக்கு — வலிய பாபத்திற்கு, உள்ளம் வெருவி — மனம் அஞ்சி, உலகு அளந்த — உலகத்தை (த்ரிவிக்ரமாவதாரத்தில்) அளந்தவையும், வளர் தாமரை இணை— வளர்ந்த தாமரைபோன்றவையுமான இரண்டு திருவடிகளையும், வன் சரணாக வரித்தவர் தாம் — திடமான உபாயமாகப் பற்றின ப்ரபந்நர்கள், களைதான் என எழும் — (பகவதநுபவமாகிய பயிருக்குக்) களை (இடையூறு) என்னும்படி வ்ருத்தியடைகின்ற, கன்மம் (பாபமெனப்படும்) துஷ்கர்மங்களை, துறப்பர் — (செய்யாமல்) விட்டுவிடுவார்கள்; துறந்திடிலும் — அப்படி விட்டவளவிலும், இளைதாம் நிலை [illegible]சக — தாழ்ந்த (விவேகமற்ற) நிலைமை ஒழியும்படி, எங்கள் பிரான் — எங்கள் ஸ்வாமியான பகவானுடைய, அருள் தேன் — க்ருபையாகிய தேன், எழும் — வ்ருத்தியடையும். (எம்பெருமான் அருள்புரிவான் என்று தாத்பர்யம்.)

கருத்து:— தன்னிடம் உள்ள பாபங்களுக்கு அஞ்சி எம்பெருமான் திருவடிகளில் ப்ரபத்தியை அநுஷ்டித்த சேதநன் இங்குள்ள நாள் பகவத்கைங்கர்யம் முதலிய பலனுக்கு இடையூறாய்நிற்கக்கடவ பாபங்களைப் புத்திபூர்வமாக ஒருகாலும் செய்யமாட்டான். அவ்வாறு பாபம் செய்யக் காரணமான அவிவேகம் ஒருகால் அவனிடம் இருந்திடினும் அந்தப் பாபத்திற்குக் காரணமாயுள்ள பாபமும் ஒழியவேண்டுமென்று ப்ரபத்தியைச்செய்துவிடின் அவனிடம் உள்ள அவிவேகமும் ஒழிந்து பாபம்செய்ய வழியில்லாதுபோம்.

ப்ரபத்திக்குமுன் செய்த பாபங்களெல்லாம் ப்ரபத்தியினால் தொலைந்துபோம். ப்ரபத்திக்குப்பின் காலதேசாதிகளை முன்னிட்டு ஆபத்தில் அறிந்து செய்யும் பாபங்களும், அறியாமல் செய்யும் பாபங்களும் ப்ரபந்நரிடம் வராமலே ஒழிந்துபோம். ப்ரபத்திக்குப் பின் ஆபத்து இல்லாதபோது அறிந்துசெய்யும் பாபங்கள் பின் செய்யும் ப்ராயச்சித்தத்தால் நசித்துப்போம். அவை கழியும் முறை பின்வருமாறு :— பாபம்செய்ய நேரிட்டதற்கு வருந்திப் பச்சாத்தாபமடைவதால் கால்பங்கும், பிறகு பாபம் செய்யாது நிறுத்திவிடுவதால் கால்பங்கும், ப்ராயச்சித்தம் செய்ய முயல்வதால் கால் பங்கும், ப்ராயச்சித்தம் செய்து முடிப்பதால் கால்பங்கும் ஆக, பாபம் முழுதும் தீர்கிறது. ப்ராயச்சித்தங்களில் சிறந்தது மறுபடியும் ப்ரபத்தி செய்வதே; இதுவே ப்ராயச்சித்த ப்ரபத்தியெனப்படும். ப்ராயச்சித்தம் செய்யாத முருடர் இவ்வுலகிலேயே சில தண்டனையைப் பெறுவர். ஆக, எவ்வகையிலும் ப்ரபந்நனுக்கு நரகமோ மறுபிறவியோ கிடையாது.

பாகவதர்களின் உறைவிடமே வாஸத்திற்கு ஏற்றது

65 தேனார் கமலத் திருமக ளுதன் றிகழ்ந்துறையும்
வானா டுகந்தவர் வையத் திருப்பிடம் வன்றருமக்
கானா ரிமயமுங் கங்கையுங் காவிரி யுங்கடலூ
நானா நகரமு நாகமுங் கூடிய நன்னிலமே. 26

[ஸ்தாநவிசேஷாதிகாரம்]

உரை:— தேன் ஆர் கமலத் திருமகள் நாதன் – தேன் நிறைந்த தாமரையில் எழுந்தருளியுள்ள பிராட்டியின் நாயகனை எம்பெருமான், திகழ்ந்து உறையும் – ப்ரகாசித்துக்கொண்டு நித்யவாஸம்செய்கின்ற, வான் நாடு – பரமபதத்தை, உகந்தவர் – அடையவிரும்பி ப்ரபத்தி செய்தவர், வையத்து இருப்பிடம் – இவ்வுலகத்தில் வஸிக்கும் இடம் (எதுவோ அதுவே), வன் தருமக் கான் ஆர் இமயமும் – கடுந்தவம் புரியுமிடமான வநம் நிறைந்த இமயமலையும், கங்கையும் – கங்காதீரமும், காவிரியும் – காவேரீதீரமும், கடலும் – கடலிலுள்ள சுவேதத்வீபமும், நாறு நகரமும் – வேறு பல க்ஷேத்ரங்களும், நாகமும் – பரமபதமும், கூடிய நல் நிலம் – (ஆகிய இவை அனைத்தும்) கூடிய நல்ல ஸ்தலமுமாம்.

கருத்து:— வேறு பலன் ஒன்றையும் நாடாது மோக்ஷத்தையே விரும்பி ப்ரபத்தியை அனுஷ்டித்த பரமைகாந்திகள் வஸிக்கும் இடமே இமயமலையிலுள்ள திவ்யதேசம், கங்காதீரம், காவேரீதீரம், கடற்கரையிலுள்ள சுவேதத்வீபம், அயோத்திமுதலிய புண்யக்ஷேத்ரம், ஸ்ரீவைகுண்டம் ஆகிய இவையனைத்தும் கூடிய புண்யக்ஷேத்ரமாம். பாகவதர்கள் நிறைந்த பகவத்க்ஷேத்ரம் கிடைக்கப்பெறாதபொழுது பாகவதர்கள் வஸிக்கும் க்ஷேத்ரமே ப்ரபந்நனுக்கு வாஸத்திற்கு உரியதாம். 26

ப்ரபந்நனது மரணத்துக்கு நியமமில்லாமை

66 நன்னில மாமது நற்பக லாமது நன்னிமித்த
மென்னலு மாமது யாதானு மாமங் கடியவர்க்கு
மின்னிலே மேனி விடும்பய ணத்து விலக்கிலதோர்
நன்னிலே யாநடு நாடி வழிக்கு நடைபெறவே. 27

[நிர்யாணாதிகாரம்]

உரை:— நல் நிலை ஆம் – (பரமபதத்திற்குக் கொண்டு சேர்ப்பதால்) நல்ல ஸ்வபாவத்தை உடையதான, ஓர் – தனியாகச் செல்லுகிற, நடு நாடி வழிக்கு – (எல்லா நாடிகளுக்கும்) நடுவிலுள்ள ப்ரஹ்மநாடியாகிய வழியில், நடைபெற – ஸஞ்சாரம்பெறுவதற்காக, மின் நிலை மேனி – மின்னலைப்போல் (அழியும்) ஸ்வபாவத்தையுடைய சரீரத்தை, விடும் பயணத்து – விட்டுச் செல்லும் ப்ரயாணத்தில், அடியவர்க்கு – ப்ரபந்நருக்கு, அங்கு – தேசம் காலம் நிமித்தம் இவற்றில், விலக்கு இலது – இது கூடாதென்ற நியமம் இல்லை, யாதானும் ஆம் – ஏதேனும் ஆம்; அது – ப்ரபந்நர் புறப்படுகின்ற அத்தேசமே, நல் நிலம் ஆம் – நல்ல தேசம் ஆகும்; அது – புறப்படுகின்ற அக்காலமே, நல்பகல் ஆம் – சிறந்த பகற்காலம் ஆகும்; அது – புறப்படுகின்ற அந்நிமித்தமே, நல் நிமித்தம் என்னலும் ஆம் – சிறந்த நிமித்தம் என்று சொல்லப்படும்.

கருத்து:— ப்ரபந்நனுகிய ஜீவன் ப்ரஹ்மநாடியாகிய தனிநாடியின் வழிக்குச் செல்ல இச்சரீரத்தை விட்டுப் புறப்படுவதற்கு க்ஷேத்ரம் காலம் நிமித்தம் ஆகிய இவை சிறந்திருக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை. அவை எத்தகையனவாயினும் சிறந்தனவேயாம்.

சேதநருடைய ஹ்ருதயத்திலிருந்து முக்கியமாய் நூற்றொரு நாடிகள் கிளம்புகின்றன. அவற்றில் நூறு நாடிகளின் வழியாகச் செல்பவர் மற்ற லோகங்களைச் சேர்வர். ப்ரபந்நர் அந்த நாடிகளின் நடுவிலுள்ள ஒரு தனிநாடி வழியே சென்று அர்ச்சிராதிமார்க்கத்தால் பரமபதம் சேர்வர். இந்தத் தனி நாடிக்கே ஸுஷும்நை, ப்ரஹ்மநாடி, மூர்த்தந்யநாடி எனப் பெயர்களுமுண்டு. இது ஹ்ருதயத்தின் மத்தியில் எழும். 27

அர்ச்சிராதிமார்க்கம்—விளக்கம்

67 நடைபெற வங்கி பகலொளி நாளுத்த ராயணமாண்
டிடைவரு காற்றி ரவியிர வின்பதி மின்வருணன்
குடையுடை வானவர் கோன்பிர சாபதி யென்றிவரா
லிடையிடை போகங்க ளெய்தி யெழிற்பத மேறுவரே. 28

[கதிவிசேஷாதிகாரம்]

உரை :— (இப்படி மோக்ஷத்திற்குச் செல்லுகின்ற ஜீவர்கள் சரீரத்திலிருந்து வெளியேறி ஸூக்ஷ்மசரீரத்துடன்) நடைபெற – நடந்துசெல்ல, (அப்பொழுது) அங்கி – அக்நியும், பகல் – பகலின் தேவதையும், ஒளி நாள் – சுக்லபக்ஷதேவதையும், உத்தராயணம் – உத்தராயணதேவதையும், ஆண்டு – வர்ஷதேவதையும், இடை வரு காற்று – (வர்ஷத்திற்கும் ஸூர்யனுக்கும்) நடுவே வருகிற வாயு தேவதையும், இரவி – ஸூர்யனும், இரவின் பதி – இரவுக்குத் தலைவனை சந்த்ரனும், மின் – மின்னல் தேவதையும், வருணன் – வருணனும், குடையுடை வானவர் கோன் –(தன்னுடைய தலைமை தோற்றும்படி) குடையைத் தரிப்பவனும் தேவர்களுக்குத் தலைவனுமான இந்த்ரனும், பிரசாபதி – ப்ரஜாபதியும், என்று இவரால் – ஆகிய இந்தத் தேவர்களால் (வழிகாட்டப்பட்டுச் செல்லும்போது), இடை இடை – நடுவே நடுவே, போகங்கள் எய்தி – போகங்களை அடைந்து, எழில் பதம் – ப்ரகாசிக்கின்ற பரமபதத்தை, ஏறுவர் – அடைவார்கள்.

கருத்து:— மோக்ஷத்தையடையும் சேதநன் இச்சரீரத்தைவிட்டு வெளியேறி ஸூக்ஷ்மசரீரத்துடன் செல்லும்போது அக்நிதேவதை, பகலின்தேவதை, சுக்லபக்ஷதேவதை, உத்தராயணதேவதை, வர்ஷதேவதை, வாயுதேவதை, ஸூர்யன், சந்திரன், மின்னலின் தேவதை, வருணன், இந்த்ரன், ப்ரஜாபதி ஆகிய ஆதிவாஹிகர்கள் வழிகாட்டி உபசாரம் செய்ய, கர்மத்தின் பலமாகவின்றி இவன் அநுஷ்டித்த உபாயத்தின் மஹிமையால் கிடைக்கும் போகங்களைப் பெற்றுக் கடைசியில் ஸ்ரீவைகுண்டத்தை அடைவான்.

இப்பாசுரத்தில் கூறியபடி அக்நி முதல் ப்ரஜாபதிவரையில் உள்ளவர்களே ஆதிவாஹிகர் எனப்படுவர். இவ்வாறு செல்லும் வழியே அர்ச்சிராதிமார்க்கமெனப்படும்.

எழுத்து மிகுந்து தளை வழுவுமாதலால் 'வானவர்கோமான்' என்று பாடம் கொள்ளத்தகாது. *28*

மோக்ஷத்தில் பரிபூர்ணமாய் ப்ரஹ்மத்தை அநுபவித்தல்

68 ஏறி யெழிற்பத மெல்லா வுயிர்க்கு மிதமுகக்கு
நாறு துழாய்முடி நாதனை நண்ணி யடிமையினங்
கூறு கவர்ந்த குருக்கள் குழாங்கள் குரைகழற்கீழ்
மாறுத லின்றி மகிழ்ந்தெழும் போகத்து மன்னுவமே. 29

[பரிபூர்ணப்ரஹ்மாநுபவாதிகாரம்]

உரை:— எழில் பதம் ஏறி – (நாம்) அழகிய பரமபதத்தில் ஏறி, எல்லா உயிர்க்கும் – ஸகலஜீவர்கள்விஷயத்திலும், இதம் உகக்கும் – (அவர்கள் செய்யும் சிறிய) உபாயத்தைக்கொண்டு மனம் மகிழ்ப வனும், நாறு துழாய் முடி – மணக்கின்ற திருத்துழாய்மாலையைத் திரு முடியில் அணிந்தவனுமான, நாதனை – ஸர்வேசுவரனை, நண்ணி – ஸமீபித்து, அடிமையில் நம் கூறு கவர்ந்த – (அவன்) கைங்கர்யத்தில் நமக்குள்ள பாகத்தை (நாம் பெறவேண்டுமென்று) விரும்பிய, குருக்கள் குழாங்கள் – ஆசார்யர்களின் கூட்டங்களுடைய, குரை கழல் கீழ் – (சதங்கை) ஒலியுள்ள திருவடிகளின் கீழ், மாறுதல் இன்றி – திரும்புதல் இல்லாமல், எழும் போகத்து – வளர்கின்ற பகவதநுப வத்தில், மகிழ்ந்து மன்னுவம் – மகிழ்வுடன் நிலை பெறுவோம்.

கருத்து:— ஸர்வேசுவரன் எல்லா ஜீவர்களிடமும், அவர்கள் செய்யும்சிறிய உபாயத்தாலே மனமகிழ்ந்து பலனை அளிக்க முற்படுகின்றான். அவன் திருவடிகளில் நம் ஆசார்யர்கள் நித்யகைங்கர்யம் செய்து வருகின்றனர். அவர்கள் நமக்கும் அந்தக் கைங்கர்யம் கிட்டவேண்டு மென்று விரும்பினர். அதன்படியே நாம் ஸ்ரீவைகுண்டநாதனை அடைந்து நம் ஆசார்யர்களின் திருவடிகளின்கீழ் அடங்கி நின்று பகவதநுபவத்தை இடைவிடாது பெற்று அதிலேயே மண்டி நிற்போம். *29*

ஸ்ரீமந்நாராயணனே ஸித்தோபாயம்

69 மன்னு மனைத்துற வாய்மருண் மாற்றரு ளாழியுமாய்த்
தன்னினை வாலனைத் துந்தரித் தோங்குந் தனியிறையா
யின்னமு தத்தமு தாலிரங் குந்திரு நாரணனே
மன்னிய வன்சரண் மற்றோர்பற் றின்றி வரிப்பவர்க்கே. 30

[ஸித்தோபாயசோதநாதிகாரம்]

உரை:— மன்னும் அனைத்து உறவாய் - திடமான ஸகலவித பந்துவுமாய், மருள் மாற்று - அஜ்ஞாநத்தைப் போக்கவல்ல, அருள் ஆழியுமாய் - கருணைக்கடலுமாய், தன் நினைவால் - தன் ஸங்கல்பத்தால், அனைத்தும் தரித்து - ஸகலவஸ்துக்களையும் தாங்கி(ரக்ஷித்து), ஓங்கும் தனி இறையாய் - உயர்ந்துநின்ற நிகரற்ற ஸ்வாமியுமாய், இன் அமுதத்து அமுதால் - இனிய அமுதத்திற்பிறந்த அமுதமாயுள்ள பிராட்டியின் புருஷகாரத்தால் (இடை நின்று பரிந்து பேசுகையால்), இரங்கும்-இரக்கமடைபவனுமாயுள்ள, திருநாரணனே-பிராட்டியுடன் கூடிய ஸ்ரீமந்நாராயணனே, மற்று ஓர் பற்று இன்றி - வேறு (பக்தி யோகம் முதலிய) ஒருபாயமுமில்லாமல், வரிப்பவர்க்கு - சரணமடைந்தவர்க்கு, மன்னிய - (முன்பே) நிலைபெற்ற, வன் சரண் - திடமான ஸித்தோபாயம் (ஆவான்).

கருத்து:— ஸ்ரீமந்நாராயணன் ஸர்வவிதபந்து; நம் அஜ்ஞாநத்தை ஒழிக்கக் கூடிய கருணைக்கடல்; தன் ஸங்கல்பத்தாலே அனைத்தையும் தரித்து நிகரற்றுநிற்பவன்; பெரியபிராட்டி நமக்குப் புருஷகாரமாய்நின்று பரிந்துபேச, நம்மிடம் பின்னும் கருணை வளரப்பெற்றவன், இத்தகைய ஸ்ரீமந் நாராயணனே வேறு உபாயம் அநுஷ்டிக்கச் சக்தியில்லாது ப்ரபத்தியை அநுஷ்டிப்பவர்களுக்கு மற்ற உபாயத்தின் ஸ்தாநத்தில்நின்று பலன் கொடுக்கும் ஸித்தோபாயமாகின்றான்.

ஸித்தோபாயம் — நம்மால் செய்யப்படவேண்டியதாயன்றி முன்பே உள்ள உபாயம்; ஸர்வேசுவரன்.

ஸாத்யோபாயம் — நம்மால் செய்யப்படும் உபாயம்; பக்தி - ப்ரபத்திகள். 30

பக்தி-ப்ரபத்திகள் ஸாத்யோபாயங்கள்

70 வரிக்கின்ற னன்பரன் யாவரை யென்று மறையதனில்
விரிக்கின்ற துங்குறி யொன்றால் வினையரை யாதலினு
முரைக்கின்ற நன்னெறி யோரும் படிகளி லோர்ந்துலகந்
தரிக்கின்ற தாரக னூர்தக வாற்றரிக் கின்றனமே. 31

[ஸாத்யோபாயசோதநாதிகாரம்]

உரை:— பரன் - பரமபுருஷன், யாவரை - எவரை, வரிக்கின்றனன் என்று - வரிக்கின்றானோ (அவராலேயே பரமபுருஷன் அடையப் படுகின்றான்) என்று, மறையதனில் - வேதத்தில், விரிக்கின்றதும் - விரித்துரைக்கப்படுகின்ற (பகவான் சேதநரை வரிப்பதாகிய) செய்கையும், வினையரை - கர்மவசப்பட்டவரை, குறி ஒன்றால் - ஒருபாயத்தினாலேதான்; ஆதலின் - ஆதலால், நாம் - நாம், உரைக்கின்ற நல் நெறி - (சாஸ்த்ரங்களில்) சொல்லப்படுகின்ற (பக்தி-ப்ரபத்தியென்னும்) சிறந்த உபாயங்களை, ஓரும் படிகளில் - ஆராயவேண்டிய ப்ரகாரங்களில், ஓர்ந்து - தெளிந்து, உலகம் தரிக்கின்ற - உலகத்தைத் தாங்கி

நிற்பவனும், தாரகனார் – (ஸம்ஸாரத்திலிருந்து நம்மைக்) கடத்துபவனுமாகிய பகவானுடைய, தகவால் – க்ருபையினால், தரிக்கின்றனம் – உஜ்ஜீவிக்கின்றோம்.

கருத்து:— சேதநன் பக்தி – ப்ரபத்திகளுள்ஒன்றை அநுஷ்டித்த பின்பே ஸர்வேசுவரன் அவனை ஏற்றுக்கொண்டு பலன் தருகின்றான் என்று உபநிஷத்துக் காட்டுகின்றது. ஆகவே அவ்வுபாயங்கள் எம்பெருமானுக்கு நம்மீது உள்ள மனக்கலக்கத்தைப் போக்கி நமக்கு மோக்ஷம் தரக் காரணமான அருளை உண்டாக்குவதற்கு மட்டும் உதவுவனவென்றும், அவனே ப்ரதாநமான ஸித்தோபாயமென்றும் தெளிந்து நம் சக்திக்கு ஏற்ற உபாயத்தை அநுஷ்டித்து எம்பெருமானால் உஜ்ஜீவிக்கப்பெற்றோம்.

“यमेवैष वृणुते तेन लभ्यः” என்று உபநிஷத்வாக்யம் ஒன்று இருக்கின்றது. "பரமபுருஷன் எந்த ஜீவனைத் தேர்ந்தெடுக்கின்றானோ அந்த ஜீவனாலேதான் பரமபுருஷன் அடையத் தக்கவன்" என்பது அதன் பொருள். இதனால் கர்மவசப்பட்ட சேதநனைப் பகவான் தேர்ந்தெடுப்பதற்குக் காரணம் சேதநன் செய்யும் உபாயமேதான் என்று ஸித்திக்கிறது. இல்லாவிடில் ஸகல ஜீவர்களுக்கும் மோக்ஷம் ஸித்திக்க நேரிடும். அந்த வாக்யத்தில் “यं” (எவனை) என்று ஓர் அதிகாரியைக் குறிப்பிடுவதால் பரமபுருஷன் தேர்ந்தெடுப்பதற்குக் காரணமான ஒரு விசேஷகுணம் அந்தச் சேதநனிடம் இருக்கவேண்டுமென்று ஏற்படுகின்றதன்றோ? அந்தக் குணம் பக்தி-ப்ரபத்திகளில் ஒன்றை அநுஷ்டிக்கையே என்று நம் ஆசார்யர்களின் ஸித்தாந்தம். 31

ப்ரபந்நன் பெருமைக்குச் சாஸ்த்ரம் கூறும் வரையறை

71 தகவாற் றரிக்கின்ற தன்னடி யார்களைத் தன்றிறத்தின்
மிகவா தரஞ்செயு மெய்யருள் வித்தகன் மெய்யுரையி
னகவா யறிந்தவ ராரண நீதி நெறிகுலைத
லுகவா ரெனவெங்க டேசிக ருண்மை யுரைத்தனரே. 32

[ப்ரபாவவ்யவஸ்தாதிகாரம்]

உரை:— தகவால் தரிக்கின்ற – (தன்) கருணையால் நிலைபெற்று நிற்கின்ற, தன் அடியார்களை – தன்னுடைய தாஸர்களாகிய ப்ரபந்நர்களை, தன் திறத்தில் – தன் ஸ்வபாவத்தைக் கொடுத்துத் தன்னைப் போல் செய்வதில், மிக ஆதரம் செ(ய்)யும் – மிகவும் ஆவலை அடைபவனும், மெய் அருள் – வீணாகாத க்ருபையையுடையவனும், வித்தகன்– அதிசயச் செய்கையை உடையவனுமான கண்ணபிரானுடைய, மெய் உரையின் – ஸத்யமான சொல்லாகிய சரமசுலோகத்தின், அகவாய் அறிந்தவர் - தாத்பர்யத்தை அறிந்த (வ்யாஸர் முதலிய)வர்கள், ஆரண நீதி நெறி குலைதல் – வேதாந்தங்களில் கூறப்பட்ட ந்யாய மார்க்கம் சிதைவதை, உகவார் என – ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று, உண்மை – ஸத்யமான அர்த்தத்தை, எங்கள் தேசிகர் – எங்கள் ஆசார்யர்கள், உரைத்தனர் - (எமக்கு) உபதேசித்தனர்.

கருத்து:— எம்பெருமான் தனது அருளால் தன்னைச் சரணமடைந்த ப்ரபந்நர்களுக்குத் தன்னைப்போன்ற குணங்களைக் கொடுத்து அவர்களை முக்தராக்க மிக்க ஆவலுடையனுயிருக்கின்றான். இப்படிக் கருணை சுரந்து நிற்கும் அவன் கண்ணனாய் நின்று உபதேசித்த சரமசுலோகத்தின் தாத்பர்யத்தை நன்கு அறிந்த வியாஸர் முதலிய மஹர்ஷிகள் ப்ரபந்நனுடைய பெருமையைச் சாஸ்த்ரங்களுக்கு முரண்பாடாக அளவுக்கு மீறி இசையமாட்டார்கள். இந்தத் தத்துவார்த்தத்தை நம் ஆசார்யர்கள் உபதேசித்தனர். 32

ப்ரபந்நனது பெருமையின் அளவின்மை

72 உண்மை யுரைக்கு மறைகளி லோங்கிய வுத்தமனார்
வண்மை யளப்பரி தாதலின் வந்து கழல்பணிவார்
தண்மை கிடக்கத் தரமள வென்ற வியப்பிலதா
முண்மை யுரைத்தன ரோரந் தவிர வுயர்ந்தனரே. 33

[ப்ரபாவரக்ஷாதிகாரம்]

உரை:— உண்மை உரைக்கும் மறைகளில் – ஸத்யத்தையே பேசும் வேத(ாந்த)ங்களில், ஓங்கிய உத்தமனார் – (புகழப்பட்டு) உயர்ந்துநின்ற எம்பெருமானுடைய, வண்மை அளப்பு அரிது – பெருமையை அளவிடுவது முடியாதது; ஆதலின் – ஆதலால், வந்து கழல் பணிவார் – வந்து (அவன்) திருவடிகளைச் சரணமடைவாருக்கு, தண்மை கிடக்க – (ஜாதி முதலியவற்றால்) தாழ்வு இருந்ததேயாகிலும், தரம் அளவு – (அவர்களுடைய) பெருமை அளவிடக்கூடியது, என்ற இயப்பு – என்ற சொல், இலது ஆம் உண்மை – இல்லையென்பதாகிய உண்மையை, உயர்ந்தனர் – சிறந்த நம் ஆசார்யர்கள், ஓரம் தவிர – பக்ஷபாதமில்லாமல், உரைத்தனர் – உபதேசித்தனர்.

கருத்து:— உண்மையே பேசும் தன்மையுடைய வேதாந்தங்கள் எம்பெருமானது பெருமையை அளவிடமுடியாதெனப் புகழ்கின்றன. இந்த எம்பெருமானுடைய திருவடிகளைச் சரணமடைந்த ப்ரபந்நர்கள் ஜாதிமுதலியவற்றால்தாழ்ந்தவராயினும் அவர்களுக்கு ப்ரதாநபலனாகிய மோக்ஷத்திலும் பகவானுடைய அபிமாநத்திலும் குறையில்லை. ஆதலின் அவர்களின் பெருமை அளவுபடுத்திக் கூறவியலாததாம். இந்தத் தத்துவார்த்தத்தையும் நம் ஆசார்யர்கள் பக்ஷபாதமின்றி உபதேசித்தனர். 33

திருமந்திரத்தின் பொருள்

73 உயர்ந்தனன் காவல னல்லார்க் குரிமை துறந்துயிராய்
மயர்ந்தமை தீர்ந்துமற் றோர்வழி யின்றி யடைக்கலமாய்ப்
பயந்தவ னாரணன் பாதங்கள் சேர்ந்து பழவடியார்
நயந்தகுற் றேவலெல் லாநாடு நன்மனு வோதினமே. 34

[மூலமந்த்ராதிகாரம்]

உரை:— உயர்ந்தனன் - (எல்லோரினும்) உயர்ந்து நிற்பவனும், காவலன் – ரக்ஷகனுமான பகவானை (த் தவிர), அல்லார்க்கு உரிமை துறந்து - மற்றவர்க்கு அடிமையாந்தன்மையை விட்டு, உயிராய் - (அசேதநத்திற்காட்டிலும் வேறுபட்ட) ஜீவனாய், மயர்ந்தமை தீர்ந்து- அஜ்ஞாநம் தீர்ந்து, மற்று ஓர் வழி இன்றி – வேறு ஒருபாயமும் இல்லாமல், அடைக்கலமாய் - ரக்ஷிக்கப்படவேண்டிய வஸ்துவாக ஆகி, பயந்தவன் நாரணன் – (உலகத்தைப்) படைத்தவனான நாராயணனுடைய, பாதங்கள் சேர்ந்து – திருவடிகளை உபாயமாய்ப் பற்றி, பழ அடியார் நயந்த – அநாதிதாஸர்களான நித்யஸூரிகள் விரும்பிய, குற்றேவல் எல்லாம் நாடும் – கைங்கர்யங்களை எல்லாம் (ப்ரார்த்திப்பதை) வெளியிடுகின்ற, நல் மனு – சிறந்த மந்த்ரமாகிய திருவஷ்டாக்ஷரத்தை, ஓதினம் – (அர்த்தத்துடன் உபதேசிக்கப்பெற்று) அநுஸந்தித்தோம்.

கருத்து:— எம்பெருமான் ஸகலஜகத்துக்கும் காரணமாய் எல்லோரினும் மேம்பட்டுநிற்பவன்; அனைத்தையும் காப்பவன். அசேதனத்தைக் காட்டிலும் வேறுபட்டுநிற்கும் ஜீவராகிய நாம் அவனுக்கே அடியராய் நிற்கின்றோம். அஹங்கார–மமகாரங்கள் கழியப்பெற்ற நாம் வேறு உபாயத்தை அநுஷ்டியாமல், உலகங்களைப் படைத்த ஸ்ரீமந் நாராயணன் திருவடிகளையே உபாயமாகப்பற்றி நம் பொறுப்பை ஸமர்ப்பித்து ஸ்ரீ வைகுண்டத்தில் நித்யஸூரிகள் பரமப்ரீதியுடன் செய்யும் கைங்கர்யத்தைப் பிரார்த்திக்கின்றோம். இவ்வர்த்தங்களைக் கூறுகின்ற திருமந்திரத்தை ஆசார்யர்பால் அத்யயநம் செய்தோம். *34*

த்வயத்தின் பொருள்

74 ஓது மிரண்டை யிசைத்தரு ளாலுத வுந்திருமால்
பாத மிரண்டுஞ் சரணெனப் பற்றிநம் பங்கயத்தா
ளுதனை நண்ணி நலந்திகழ் நாட்டி லடிமையெல்லாங்
கோதி லுணர்த்தி யுடன்கொள்ளு மாறு குறித்தனமே. 25

[த்வயாதிகாரம்]

உரை:— ஓதும் இரண்டை இசைத்து – (வேதத்தில்) அத்யயநம் செய்யப்படுகின்ற இரண்டு வாக்யங்களை ஒன்றுசேர்த்து, அருளால் உதவும் திருமால் – க்ருபையினால் (த்வயமாக நமக்கு) உபகரித்த எம்பெருமானுடைய, பாதம் இரண்டும் சரண் எனப் பற்றி – திருவடிகள் இரண்டையும் உபாயமாகப் பற்றி, நம் பங்கயத்தாள் நாதனை நண்ணி- தாமரையில் வஸிக்கும் நம் பிராட்டியின் நாயகனான பகவானை நெருங்கி, நலம் திகழ் நாட்டில் – ஆநந்தம் பெருகுகிற தேசமாகிய பரமபதத்தில், அடிமை எல்லாம் – கைங்கர்யங்கள் எல்லாவற்றையும், கோது இல் உணர்த்தியுடன் – (நாம் செய்கிறோம், நாம் அனுபவிக்கிறோம் என்று நினைத்தல் முதலிய) குற்றமில்லாத நிச்சய

ஜ்ஞாநத்தோடு, கொள்ளுமாறு – அடையும் ப்ரகாரத்தை, குறித்தனம் – (த்வயத்தில்) அநுஸந்தித்தோம்.

கருத்து:— ஸ்ரீமந்நாராயணன் கடவல்லியில் பிரித்து அநுஸந்திக்கப்படுகின்ற இரண்டு வாக்யங்களை ஒன்றுசேர்த்து த்வயமாக்கி நமக்கு அருள்புரிந்தான். பெரிய பிராட்டியாரோடு கூடிய அவனுடைய திருவடிகளையே உபாயமாகப்பற்றி ஸ்ரீவைகுண்டத்திற்குச் சென்று அவனையே நெருங்கி அஹங்காரமமகாரங்களின்றிக் கைங்கர்யம் செய்வோம் என்கிற அர்த்தத்தை த்வயத்தில் அநுஸந்தித்தோம். 35

சரமசுலோகத்தின் பொருள்

75 குறிப்புடன் மேவுந் தருமங்க ளின்றியக் கோவலனுர்
வெறித்துள வக்கழன் மெய்யர ணென்று விரைந்தடைந்து
பிரித்த வினைத்திரள் பின்றொட ராவகை யப்பெரியோர்
மறிப்புடை மன்னருள் வாசகத் தான்மரு ளற்றனமே. 36

[சரமசுலோகாதிகாரம்]

உரை:—குறிப்புடன் மேவும்–மனவொருமையுடன் அநுஷ்டிக்கப் படவேண்டிய, தருமங்கள் இன்றி – (பக்தியோகம் முதலிய) உபாயங்களைச்செய்யமுடியாமல். அக் கோவலனுர் – அந்தக் கண்ணனுடைய, வெறித்துளவக் கழல் – வாஸனையுடைய திருத்துழாய் சேர்ந்த திருவடிகளை, மெய் அரண் என்று – ஸத்யமான உபாயம் என்று, விரைந்து அடைந்து – (ஆவலுடன்) விரைந்து பற்றி, பிரித்த வினைத்திரள் – (அதனுல்) ஒழிக்கப்பட்ட பாபக்கூட்டம், பின் தொடரா வகை – திரும்பவும் வராதபடி, மறிப்பு உடை – வளைத்து வசப்படுத்துவதும், அப் பெரியோர் – அந்தப் பெரிய கண்ணனுடைய, மன் அருள் வாசகத்தால்– திடமான க்ருபையினுல் வெளிவந்ததுமான சரமசுலோகமென்னும் ஸூக்தியால், மருள் அற்றனம் – அஜ்ஞாநம் நீங்கப்பெற்றோம்.

கருத்து:— கண்ணபிரான், மிக்க கவனத்தோடு சிரமப்பட்டு அநுஷ்டிக்கவேண்டிய பக்தியோகம் முதலிய உபாயங்களைக் கைக்கொள்ளமுடியாமல் தன் திருவடிகளைச் சரணமடைந்த ப்ரபந்நர்களுடைய பாபக்கூட்டங்கள் அனைத்தையும் மறுபடியும் தொடராதபடி ஒழித்துவிடுவதாகத் திடமான அருளால் சரமசுலோகத்தில் வெளியிட்டான். அதன் அநுஸந்தாநத்தால் நமது அஜ்ஞாநம் நீங்கிச் சோக மொழிந்து பலனில் ஐயம் நீங்கி நம்மைக்காக்கும் பொறுப்புத் தீர்ந்து எப்பொழுதும் மகிழ்வுற்றிருக்கின்றோம். 36

ஆசார்யன் செய்யும் உபகாரம்

76 மருளற்ற தேசிகர் வானுகப் பாலிந்த வையமெல்லா
மிருளற் றிறைவ னிணையடி பூண்டுய வெண்ணுதலாற்
றெருளுற்ற செந்தொழிற் செல்வம் பெருகிச் சிறந்தவர்பா
லருளுற்ற சிந்தையி னுலழி யாவிளக் கேற்றினரே. 37

[ஆசார்யக்ருத்யாதிகாரம்]

உரை:— மருள் அற்ற தேசிகர்–அஜ்ஞானமில்லாத ஆசார்யர்கள், வான் உகப்பால் – (தாங்கள்) பரமபதம்செல்ல விரும்பியதாலும், இந்த வையம் எல்லாம் – இந்த உலகம் முழுதும், இருள் அற்று – அஜ்ஞானம் நீங்கி, இறைவன் இணை அடி – எம்பெருமானுடைய இரண்டு திருவடிகளையும், பூண்டு உய எண்ணுதலால் – உபாயமாகப்பற்றி உஜ்ஜீவிக்க வேண்டுமென்று நினைத்ததாலும், அருள் உற்ற சிந்தையினால் – க்ருபை நிறைந்த மனத்தோடு, தெருள் உற்ற – விவேகத்துடன் கூடிய, செம் தொழில் செல்வம் பெருகி – நேரிய கைங்கர்யமாகிய ஸம்பத்து வ்ருத்தியாகி, சிறந்தவர் பால் – உயர்ந்துநின்ற சிஷ்யர்கள்பக்கல், அழியா விளக்கு – அழியாத (ஸம்ப்ரதாயமாகிய) தீபத்தை, ஏற்றினர் – ஏற்றி வைத்தனர் (உபதேசித்தனர்).

கருத்து:— அஜ்ஞானலேசமுமில்லாத நம் ஆசார்யர்கள் ரஹஸ்யார்த்தங்களை அபாத்ரத்தில் உபதேசிக்காது சேமித்து வைத்திருந்தனர். தாங்கள் பரமபதம்செல்லவிரும்பியபோது இந்த ஸம்ஸாரிகள் அனைவரும் அஜ்ஞானம் நீங்கி எம்பெருமான்திருவடிகளில் ப்ரபத்தியை அநுஷ்டித்து உஜ்ஜீவிக்கவேண்டுமென்று குளிர்ந்த எண்ணங்கொண்டனர். விவேகத்தைப்பெற்றுப் பகவத்கைங்கர்யத்தில் சிரத்தையுள்ள சிறந்த சிஷ்யர்களிடம், ஒருகாலும் அழியாத ஸம்ப்ரதாயமென்னும் தீபத்தை ஏற்றிவைத்து உலகமெங்கும் பரவும்படி செய்தருளினர்.

[எழுத்து மிகுந்து தளை வழுவுமாதலின் 'இறையவன்' என்று பாடம் கொள்ளத்தகாது.] 37

சிஷ்யனது கடமை

77 ஏற்றி மனத்தெழின் ஞான விளக்கை யிருளனைத்து
மாற்றின வர்க்கொரு கைம்மாறு மாயனுங் காணகில்லான்
போற்றி யுகப்பதும் புந்தியிற் கோள்வதும் பொங்குபுகழ்
சாற்றி வளர்ப்பதுஞ் சற்றல்ல வோமுன்னம் பெற்றதற்கே. 38

[சிஷ்யக்ருத்யாதிகாரம்]

உரை:—மனத்து – (நம்முடைய) மநஸ்ஸிலே, எழில் ஞான விளக்கை ஏற்றி–ப்ரகாசிக்கின்ற ஜ்ஞானமாகிய தீபத்தை ஏற்றி, இருள் அனைத்தும் மாற்றினவர்க்கு–அஜ்ஞானம் முழுவதையும் ஒழித்த ஆசார்யர்கள் விஷயத்தில், ஒரு கைம்மாறு – (செய்யக்கூடிய) ஒரு ப்ரத்யுபகாரத்தை, மாயனும் காணகில்லான்–எம்பெருமானும் கண்டறிவதற்கு முடியாதவனாவன்;(ஆதலின் நாம்), போற்றி உகப்பதும்–(ஆசார்யனைப்) புகழ்ந்து மகிழ்வதும், புந்தியில் கொள்வதும்–மனத்தில் த்யானிப்பதும், பொங்கு புகழ் சாற்றிவளர்ப்பதும் – நிறைந்துள்ள கீர்த்தியைப் பறை சாற்றி (மேன்மேலும்) வ்ருத்திசெய்வதும் (ஆகிய இவையெல்லாம்),

முன்னம் பெற்றதற்கு – (நாம் ஆசார்யனிடமிருந்து) முன்பு பெற்ற உதவிக்கு, சற்று அல்லவோ – மிகவும் ஸ்வல்பமன்றோ?.

கருத்து:— ஆசார்யன் சிஷ்யர்களுக்குத் தத்துவம் உபாயம் புருஷார்த்தம் ஆகிய இவற்றை உபதேசித்து ஜ்ஞானமாகிய தீபத்தை ஏற்றி அஜ்ஞானத்தை ஒழித்துவிடுகின்றான். இத்தகைய ஆசார்யன் விஷயத்தில் செய்யக்கடவ ப்ரதியுபகாரத்தைக் காண்பதற்கு ஸர்வஜ்ஞனாய் அதிசயச்செய்கையுடையனான ஸர்வேசுவரனாலும் முடியாது. மற்றவர்களால் எவ்வாறு முடியும்? ஆயினும் உலகில் சிஷ்யர்கள் ஆசார்யனைப் புகழ்ந்து மகிழ்கின்றனர்; மனத்தால் தியானிக்கின்றனர்; அவனுடைய கீர்த்தியைப் பேசிப் பேசி வளர்க்கின்றனர். இவையனைத்தும் அவனிடம் உள்ள அன்பிற்குப் போக்கு வீடாகச் செய்வதன்றி அவனிடம் பெற்ற மஹோபகாரத்திற்குச் சிறிதளவும் ஈடாகமாட்டா. 38

ஸ்ரீமத்-ரஹஸ்யத்ரயஸாரத்தின் நான்கு பகுதிகள்

78 முன்பெற்ற ஞானமு மோகந் துறக்கலு மூன்றுரையிற்
றன்பற்ற தன்மையுந் தாழ்ந்தவர்க் கீயுந் தனித்தகவு
மன்பற்றி நின்ற வகையுரைக் கின்ற மறையவர்பாற்
சின்பற்றி யென்பயன் சீரறி வோர்க்கிவை செப்பினமே. 39

[பாசுரம் 39, 40- நிகமநாதிகாரம்]

உரை:— மன் பற்றி நின்ற வகை – மன்னனாகிய பகவானை (ச்சரணமாக)ப்பற்றி உயர்ந்து நின்ற ப்ரகாரத்தை, உரைக்கின்ற மறையவர்பால் – உபதேசிப்பவரும் வேதார்த்தங்களை அறிந்தவருமான ஆசார்யர்கள் பக்கல், சீர் அறிவோர்க்கு – சிறந்த அறிவைப் பெற விரும்பும் அதிகாரிகளுக்கு, முன் பெற்ற ஞானமும் – முன் ஆசார்யனிடமிருந்து பெற்ற விவேகமும், மோகம் துறக்கலும் – கலக்கம் தெளிதலும், மூன்று உரையில் – ரஹஸ்யம் மூன்றில், தன் பற்று அது அன்மையும் – (பகவானுக்கே சேஷமாகித்) தன் ஸ்வாதந்த்ர்யம் இல்லாமையும், தாழ்ந்தவர்க்கு ஈயும்தனித் தகவும்-வந்து பணிந்தவர்க்கு உபதேசிக்கக் காரணமான நிகரற்ற க்ருபையும் (ஆகிய), இவை செப்பினம் – இந்த விஷயங்களை (இக்கிரந்தத்தில்) வெளியிட்டோம். (இதை அநுபவிக்காமல்) சின் பற்றி என் பயன்? – அற்ப விஷயங்களில் ஈடுபட்டு என்ன பயன் ?

கருத்து:— ப்ரபத்தியின் பெருமையை உபதேசிக்கும் ஆசார்யன் பக்கல் விவேகத்தைப் பெறவேண்டுமென்று விரும்பும் ஆஸ்திகர்களான சிஷ்யர்களுக்கு மிகப் பயன்படுமாறு இந்த ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரமென்னும் நூலை இயற்றினோம். இதில் முதலில் தத்துவம் உபாயம் புருஷார்த்தம் ஆகிய இவற்றின் ஸ்வரூபஸ்வபாவங்களை ஆசார்

யனிடமிருந்து பெற்றவாறே நன்கு விளக்கினேம். பின் அவற்றில் வரும் ஆக்ஷேபங்களுக்கெல்லாம் ப்ரமாணங்களைக்கொண்டு ஸமாதாநம் கூறி அவற்றை ஸ்தாபித்தோம். அதன் பின் ரஹஸ்யங்கள் மூன்றிலும் அர்த்தங்கொள்ளும் முறைகளை விளக்கி அவற்றில் முக்கியமாய் ஜீவன் எம்பெருமானுக்கே சேஷமென்றும் சுதந்திரமில்லாதவன் என்றும் கூறப்படுவதாகவும் வெளியிட்டோம். அதற்கும் பின் ஸத்ஸம்ப்ரதாயத்தைப் பெறவிரும்பிவந்து அடிபணியும் சிஷ்யர்களாகிய நல்ல பாத்ரத்தில் உபதேசிக்குமாறு கருணைசுரந்துநிற்கும் ஆசார்யனுடைய பெருமை முதலியவற்றை விரித்தோம். இத்தகைய ஸாரார்த்தங்களை அடக்கிக்கொண்டிருக்கும் இந்த ஸ்ரீஸூக்தியை அநுபவியாது அற்பவிஷயங்களில் ஈடுபடுவதால் பயன் யாதுமில்லை. 39

இந்தப் பாசுரங்கள் தமிழை அழகுசெய்தல்

79 சேப்பச் செவிக்கமு தென்னத் திகழுஞ் செழுங்குணத்துத்
தப்பற் றவருக்குத் தாமே யுகந்து தருந்தகவா
லொப்பற்ற நான்மறை யுள்ளக் கருத்தி லுறைத்துரைத்த
முப்பத் திரண்டிவை முத்தமிழ் சேர்ந்த மொழித்திருவே. 40

உரை:— செழும் குணத்துத் தப்பு அற்றவருக்கு – சிறந்த குணங்களில் வழுவாத அதிகாரிகள் விஷயத்தில், தாமே உகந்து தரும் தகவால்– (பகவானும் பாகவதர்களும்) தாமே மகிழ்ந்து தரும் க்ருபையால், ஒப்பற்ற நால் மறை – நிகரற்ற நான்கு வேதங்களின், உள்ளக் கருத்தில் – தாத்பர்யத்தில், உறைத்து – (நன்கு) பரிசயம் செய்து, உரைத்த– கூறப்பட்டவையும், செப்பச் செவிக்கு அமுது என்ன – உச்சரிக்கும்போது காதுக்கு அமுதம் என்று சொல்லும்படி, திகழும் – ப்ரகாசிப்பவையுமான, இவை முப்பத்திரண்டு – இந்த முப்பத்திரண்டு பாசுரங்களும், முத்தமிழ் சேர்ந்த – (இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ், என்னும்) மூன்றுவகைத் தமிழ் சேர்ந்த, மொழித் திரு – பாஷைக்கே அலங்காரமாகும்.

கருத்து:— பகவானும் பாகவதர்களும் நற்குணங்களில் வழுவாத அதிகாரிகளிடம் மகிழ்ந்து அருள்புரிகின்றனர். அவர்களின் அருளைத் துணைகொண்டு வேதாந்தத்தில் நன்கு பரிசயம் செய்து இப்பாசுரங்களை இயற்றினேம். இவை அர்த்தமறியாமல் அநுஸந்திப்பினும் செவிக்கு இனிய அமுதம் போன்றவையாம். அந்தாதியாய் அமைந்த இந்த முப்பத்திரண்டு பாசுரங்களும் இயல் இசை நாடகம் என மூவகைப்பட்ட தமிழ்ப்பாஷைக்கே அலங்காரமாய் விளங்குவனவாம்.

இங்கு 'முத்தமிழ் சேர்ந்த' என்னும் தொடருக்குக் கவியின் சிறப்பு, விஷயத்தின் பெருமை, வாக்யங்களின் அழகு ஆகிய மூன்று அம்சங்கள் நிறைந்த என்றும், சொற்சுவை, பொருட்சுவை, இசைக்கு ஏற்றமை ஆகிய மூன்றும் அமைந்த என்றும், ஆசுகவி, சித்ரகவி,

இனிமை ஆகிய மூன்றும் பெற்ற என்றும் பழையவுரைகள் பொருள் கூறும்.

இந்தப் பாசுரத்தோடு அந்தாதித்தொடை முடிவுற்றது. *40*

தத்துவங்கள் ஈசுவரன் திருமேனியில் நிற்கும்நிலை

எண்சீராசிரியவிருத்தம்

80 **புருடன்மணி வரமாகப் பொன்று மூலப்**
பிரகிருதி மறுவாக மான்றண் டாகத்
தெருள்மருள்வா ளுறையாக வாங்கா ரங்கள்
சார்ங்கஞ்சங் காகமனந் திகிரி யாக
விருடிகங்க ளீரைந்துஞ் சரங்க ளாக
விருபூத மாலைவன மாலை யாகக்
கருடனுரு வாமறையின் பொருளாங் கண்ணன்
கரிகிரிமே னின்றனைத்துங் காக்கின் றானே. **41**

[தத்துவத்ரயசிந்தநாதிகாரம்]

உரை:— கருடன் உரு ஆம் மறையின்–கருடனுடைய சரீரமாய் நிற்கின்ற வேதத்தின், பொருள் ஆம் கண்ணன் – அர்த்தமாய் நிற்கின்ற எம்பெருமான், புருடன் - ஜீவன், மணிவரம் ஆக – ரத்நங்களுள் சிறந்த கௌஸ்துபரத்நமாக, பொன்று மூலப் பிரகிருதி – அழியாத மூலப் பிரகிருதி, மறு ஆக - ஸ்ரீவத்ஸமென்னும் மறுவாக, மான் தண்டு ஆக-மஹான் என்னும் தத்துவம் கௌமோதகி என்னும் கதையாக, தெருள் வாள் ஆக – ஜ்ஞாநம் நந்தகமென்னும் கத்தியாக, மருள் (வாள்) உறை (ஆக) – அஜ்ஞாநம் (கத்தியின்) உறையாக, ஆங்காரங் கள் சார்ங்கம் சங்கு ஆக – தாமஸாஹங்காரமும் ஸாத்விகாஹங்காரமும் முறையே சார்ங்கமென்னும் வில்லும், பாஞ்சஜந்யமென்னும் சங்கும் ஆக, மனம் திகிரி ஆக - மநஸ் ஸுதர்சநமென்னும் சக்ரமாக, இருடிகங்கள் ஈரைந்தும் சரங்கள் ஆக – (ஜ்ஞாநேந்த்ரியங்கள் ஐந்து, கர்மேந்த்ரியங்கள் ஐந்து ஆகிய) இந்த்ரியங்கள் பத்தும் அம்புகளாக, இருபூதமாலை வனமாலை ஆக - (தந்மாத்ரங்கள் ஐந்து, பூதங்கள் ஐந்து ஆகிய) இருவித பூதங்களின் வரிசையும் வநமாலையாக (இப்படி ஸகலதத்துவங்களும் தனக்கு ஆயுதமாகவும் ஆபரணமாகவும் நிற்க), கரிகிரிமேல் நின்று - ஹஸ்திகிரிமேல்நின்று, அனைத்தும் காக்கின்றான்– ஸகலத்தையும் ரக்ஷிக்கின்றான்.

கருத்து:— பேரருளாளன், சேதநம் அசேதநம் என்னும் தத்து வங்கள் அனைத்தையும் தனக்கு ஆபரணமாகவும் ஆயுதமாகவும் கொண்டு 'குன்றின் மேலிட்ட விளக்கு' என்னலாம்படி ஹஸ்திகிரியின் மேல் அனைவரும் கண்டு களிக்குமாறு நின்று உலகத்தைக் காத்தருள் கின்றான்.

ஜீவன் கௌஸ்துபமாய் நிற்கின்றான் என்றால் ஜீவனுக்கு அபிமாநிதேவதையும் கௌஸ்துபத்திற்கு அபிமாநிதேவதையும் ஒன்று என்று தாத்பர்யம். இங்ஙனமே மேலும் கண்டுகொள்வது. 41

திருவரங்கத்தின் பெருமை

81 ஆராத வருளமுதம் பொதிந்த கோயி
லம்புயத்தோ னயோத்திமன்னற் களித்த கோயி
றோலாத தனிவீரன் றொழுத கோயி
றுணையான வீடணற்குத் துணையாங் கோயில்
சேராத பயனெல்லாஞ் சேர்க்குங் கோயில்
செழுமறையின் முதலெழுத்துச் சேர்ந்த கோயி
றீராத வினையனைத்துந் தீர்க்குங் கோயி
றிருவரங்க மெனத்திகழுங் கோயி லானே. 42

[பாசுரம் 42, 43, 44-ஸ்தாநவிசேஷாதிகாரம்]

உரை:—ஆராத-(எவ்வளவு அநுபவித்தாலும்) தெவிட்டாததும், அருள் அமுதம் பொதிந்த - கருணையே வடிவுகொண்டதுமான (ஸ்ரீரங்கநாதனென்னும்) அமுதம் நிறைந்த, கோயில் - ஸந்நிதியும், அம்புயத்தோன் - தாமரையில் வஸிக்கும் ப்ரஹ்மா, அயோத்தி மன்னற்கு அளித்த கோயில் - அயோத்யைக்கு அரசனான இக்ஷ்வாகுவுக்குக் கொடுத்த கோயிலும், தோலாத - தோல்வியே அடையாத, தனி வீரன் - நிகரற்ற வீரனாகிய ஸ்ரீராமன், தொழுத கோயில் - ஆராதித்த கோயிலும், துணையான வீடணற்கு-(ஸ்ரீராமனுக்கு) ஸஹாயமாயிருந்த விபீஷணனுக்கு, துணை ஆம் கோயில் - ரக்ஷகமாயிருந்த ஸந்நிதியும், சேராத பயன் எல்லாம் - (வேறு இடத்தில்) பெறமுடியாத பலன்களையெல்லாம், சேர்க்கும் கோயில் - அடைவிக்கும் கோயிலும், செழுமறையின் - சிறந்து நிற்கும் வேதத்தின், முதல் எழுத்துச்சேர்ந்த கோயில் - முதல் அக்ஷரமாகிய ப்ரணவத்தோடு (வடிவத்தால் ப்ரணவாகாரமான விமானத்தோடு) சேர்ந்த கோயிலும், தீராத வினை அனைத்தும் - (மற்றவற்றால்) நீங்காத பாபங்களை முழுதும், தீர்க்கும் கோயில் - ஒழிக்கும் கோயிலும், திருவரங்கம் எனத் திகழும் - திருவரங்கம் என்று விளங்கும், கோயில்தான் - திவ்யதேசமேதான்.

கருத்து:— திருவரங்கமென்னும் திவ்யதேசம், எவ்வளவு அநுபவித்தாலும் தெவிட்டாத அமுதமாய்க் கருணையே வடிவுகொண்டாற்போன்ற ஸ்ரீரங்கநாதன் நித்யவாஸம் செய்யப்பெற்றது; ப்ரஹ்மாவினால் இக்ஷ்வாகு என்னும் அரசனுக்கு அளிக்கப்பட்டது; ஸ்ரீராமபிரானும் வணங்கி ஆராதித்த பெருமையுடையது; அவனுக்குத் துணையாய் நின்று உதவிய விபீஷணாழ்வானுக்குத் துணையாயது;

வேறெங்கும் பெறமுடியாத பலன்களையெல்லாம் அளிக்கவல்லது; ப்ரணவவடிவங்கொண்ட விமானத்தோடு சேர்ந்துநிற்பது; ஸகல பாபங்களையும் போக்கவல்லது. இத்தகைய ஸ்தாநம் திவ்யதேசங்களுள் தலைசிறந்து நிற்கப்பெற்றதாம்.

ஸ்ரீரங்கவிமாநம் அயோத்யைக்கு அரசனான இக்ஷ்வாகுவுக்கு ப்ரஹ்மாவினால் கொடுக்கப்பட்டு, முறையே அவன்வம்சத்து அரசர்களுக்கெல்லாம் வந்து ஸ்ரீராமனுக்கும் கிடைத்துப் பிறகு விபீஷணனிடம் ஸ்ரீராமனால் அளிக்கப்பட்டுப் பின் ஸ்ரீரங்கத்தில் விபீஷணனால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டது. ஸ்ரீரங்கவிமாநம் ப்ரணவம்போன்ற உருவமுடையதாகும். 42

திருவேங்கடமலையின் பெருமை

82 கண்ணனடி யிணையெமக்குக் காட்டும் வெற்பு
கடுவினைய ரிருவினையுங் கடியும் வெற்பு
திண்ணமிது வீடென்னத் திகழும் வெற்பு
தெளிந்தபெருந் தீர்த்தங்கள் செறிந்த வெற்பு
புண்ணியத்தின் புகலிதெனப் புகழும் வெற்பு
பொன்னுலகிற் போகமெலாம் புணர்க்கும் வெற்பு
விண்ணவரு மண்ணவரும் விரும்பும் வெற்பு
வேங்கடவெற் பெனவிளங்கும் வேத வெற்பே. 43

உரை:—கண்ணன் அடி இணை – எம்பெருமானுடைய திருவடிகளிரண்டையும், எமக்குக் காட்டும் வெற்பு – எங்களுக்குக் காட்டித் தருகின்ற திருமலையும், கடு வினையர் – கொடிய பாபத்தையுடையவர்களின், இரு வினையும் – (புண்யபாபங்களாகிய) இரண்டு கர்மங்களையும், கடியும் வெற்பு – ஒழிக்கும் திருமலையும், திண்ணம் – நிச்சயமாக, இது வீடு என்ன – இந்த ஸ்தலம் பரமபதமே என்று கூறும்படி, திகழும் வெற்பு – ப்ரகாசிக்கும் திருமலையும், தெளிந்த பெரும் தீர்த்தங்கள் – தெளிவுள்ள பெரிய (புண்ய) தீர்த்தங்கள், செறிந்த வெற்பு – நிறைந்த திருமலையும், புண்ணியத்தின் புகல் இது – புண்ணியத்தின் இருப்பிடம் இது, எனப் புகழும் வெற்பு – என்று புகழப்படும் திருமலையும், பொன் உலகில் போகம் எ(ல்)லாம் – பரமபதத்தில் அடையும் அநுபவங்களையெல்லாம், புணர்க்கும் வெற்பு – (இங்கேயே) அடைவிக்கும் திருமலையும், விண்ணவரும் மண்ணவரும் – நித்யஸூரிகளாலும் பூலோகத்திலுள்ளோராலும், விரும்பும் வெற்பு – விரும்பப்படும் திருமலையும், வேங்கட வெற்பு என விளங்கும் – திருவேங்கடமலை என்று ப்ரகாசிக்கின்ற, வேத வெற்பே – *வேதத்தில் போற்றப்பட்ட திருமலையேயாகும்.

* गिरिं गच्छत काणे विकटे

கருத்து:— திருவேங்கடமென்னும் திருமலை எம்பெருமானுடைய திருவடிகளை அடியார்களுக்குக் காட்டித்தரவல்லது; எத்தகைய கொடிய பாபம் செய்தவராயினும் தன் ஸமீபஸ்தலங்களில் வஸித்ததாலேயே ஸகலகர்மங்களையும் ஒழிக்கக்கூடியது; இதுவே பரமபதமென்று சொல்லும்படி பெருமைபெற்றது; கோனேரி, பாபநாசம் முதலிய பல புண்யதீர்த்தங்கள் நிறைந்தது; புண்யத்தின் உறைவிடமென்னும்படியுள்ளது; பரமபதத்தில் சென்று அடையக்கடவ பகவதநுபவங்களையெல்லாம் இங்கேயே அளிக்கவல்லது; ஸ்ரீ வைகுண்டத்திலுள்ள நித்யஸூரிகளும் பூமியிலுள்ள பாகவதர்களும் விரும்பி ஈடுபடுவது; வேதத்தில் புகழப்படுவது. இத்தகைய பெருமையுடைய திருமலை பாகவதர்கள் வஸிக்க உரியதாம். *43*

காஞ்சியின் பெருமை

அறுசீர்ச் சந்தவிருத்தம்

83 உத்தமவ மர்த்தலம மைத்ததோரே
ழிற்றனுவி னுய்த்த கணையா
லத்திரவ ரக்கன்முடி பத்துமோரு
கோத்தேனவு திர்த்த திறலோன்
மத்துறுமி குத்ததயிர் மோய்த்தவேணெய்
வைத்ததுணு மத்த னிடமா
மத்திகிரி பத்தர்வினை தோத்தறவ
றுக்குமணி யத்தி கிரியே. **44**

உரை:— உத்தம அமர்த்தலம் – உயர்ந்த போர்க்களத்தில், அமைத்தது ஒர் எழில் தனுவின் – அமைக்கப்பட்ட நிகரற்ற அழகிய வில்லினின்றும், உய்த்த கணையால் - செலுத்தப்பட்ட அம்பினால், அத்திர அரக்கன் முடி பத்தும் – அஸ்த்ரபலமுள்ள ராக்ஷஸனாகிய ராவணனுடைய தலைகள் பத்தையும், - ஒரு கொத்து என – ஒரு குலை என்று சொல்லும்படி, உதிர்த்த திறலோன்–அறுத்துக் கீழே தள்ளின பலமுடைய இராமனும், மத்து உறு – மத்தினால் கடையத் தகுந்த, மிகுத்த தயிர் – அதிகமான தயிரையும், வைத்தது மொய்த்த வெ(ண்)ணெய் – (யசோதையால்) வைக்கப்பட்ட அதிகமான வெண்ணெயையும், உ(ண்)ணும் அத்தன் – உண்ட கண்ணனுமான ஸ்வாமியினுடைய, இடம் ஆம் – வாஸஸ்தலமாகிய, அத்திகிரி – ஹஸ்திகிரி என்னும் காஞ்சீக்ஷேத்ரம், பத்தர் வினை – பக்தர்களுடைய பாபங்களை, தொத்து அற அறுக்கும் - ஸம்பந்தம் இல்லாமல் ஒழிக்கவல்ல, அணி அத் திகிரியே – அழகிய அந்தச் சக்ராயுதம் போன்றதேயாகும்.

ஹஸ்திகிரி வினையை ஒழித்துவிடும்; அத் திகிரி அணியே — அந்தச் சக்ராயுதம் (பகவானுடைய கைக்கு) அழகிற்குத்தான் என்றும் பெரியோர் உரையிட்டிருக்கின்றனர்.

கருத்து:— உலகிலேயே பெரிய ஒரு போர்க்களத்தில் நிகரற்ற வில்லினுல் எய்த அம்பினுல் ராவணனுடைய பத்துத்தலைகளையும் ஒரே கொத்தாக உதிர்த்துத் தள்ளித் தன் பெருமையைக் காட்டியருளிய சக்கரவர்த்தித்திருமகனும், யசோதை கடைந்துவைத்த தயிரையும் வெண்ணெயையும் வாரியுண்டு தன் எளிமையைக் காட்டியருளிய கண்ணபிரானும் பேரருளாளனுய் நின்று அனைவரும் கண்டு களிக்குமாறு உறையுமிடமாகிய ஹஸ்திகிரியென்னும் திவ்யதேசமே அடியார்களின் பாபங்களைப் போக்கவல்ல திருவாழியாழ்வான் போன்றதாகும். எம்பெருமான் கையில் தரித்திருப்பது அழகிற்குமட்டுமேயாம். 44

திருமந்த்ரம் ஸகலபலன்களையும் தருகை

எழுசீராசிரியவிருத்தம்

84 எட்டுமா மூர்த்தி யெண்கண னெண்டிக்
கேட்டிறை யெண்பிர கிருதி
யேட்டுமா வரைக ளீன்றவெண் குணத்தோ
னெட்டெணு மெண்குண மதியோர்க்
கேட்டுமா மலரெண் சித்தியெண் பத்தி
யெட்டியோ காங்கமெண் செல்வ
மெட்டுமா குணமெட் டெட்டெணுங் கலையெட்
டிரதமே லதுவுமெட் டினவே. 45

[திருமந்த்ராதிகாரம்]

உரை:— எட்டு மா மூர்த்தி - எட்டுப் பெரிய உருவங்களையுடையனுன சிவனையும், எண் கணன் – (நான்கு முகங்களையுடையனுதலால்) எட்டுக் கண்களையுடைய ப்ரஹ்மாவையும், எண் திக்கு–எட்டுத் திசைகளையும், எட்டு இறை - எட்டுத் திக்பாலகர்களையும், எண் பிரகிருதி - எட்டுத் தத்துவங்களையும், எட்டு மா வரைகள் - எட்டுப் பெரிய குலபர்வதங்களையும், ஈன்ற – படைத்தவனும், எண் குணத்தோன் – எட்டுக் குணங்களையுடையவனுமான எம்பெருமானுடைய (பெருமையை வெளியிடுகிற), எட்டு எ(ண்)ணும் – அஷ்டாக்ஷரத்தை (அர்த்தத்துடன்) அநுஸந்திப்பவரும், எண் குணமதியோர்க்கு – எட்டுக் குணங்களுள்ள புத்தியையுடையருமான விவேகிகளுக்கு, எட்டு மா மலர் – எட்டுப் பெரிய புஷ்பங்களும், எண் சித்தி – எட்டுவித ஸித்திகளும், எண் பத்தி – எட்டு வகைப் பக்தியும், எட்டு யோகாங்கம் – யோகத்தின் எட்டு அங்கங்களும், எண் செல்வம் – எட்டு ஐசுவர்யங்களும், எட்டு மா குணம் – (முக்திபெற்ற பின் வரும்) எட்டுப் பெரிய குணமும், எட்டு எட்டு எணும் கலை – எட்டை எட்டால் பெருக்கி எண்ணப்படும் (அறுபத்துநான்கு) கலைகளும், எட்டு இரதம் மேலதுவும்–

எட்டுரஸங்களுக்கும் மேலான சாந்தி (அடக்கம்) எனும் ரஸமும் (ஆகியன வ எல்லாம்), எட்டின - கிட்டிவிடுகின்றன.

சிவனுக்கு எட்டு உருவங்கள் - 1 பூமி, 2 ஜலம், 3 தேஜஸ், 4 வாயு, 5 ஆகாசம், 6 சந்த்ரன், 7 ஸூர்யன், 8 யஜமாநன் : என்பன.

எட்டுத் திசைகள் — 1 கிழக்கு, 2 தெற்கு, 3 மேற்கு, 4 வடக்கு, 5 தென்கிழக்கு, 6 தென்மேற்கு, 7 வடமேற்கு, 8 வடகிழக்கு : என்பன.

எட்டுத் திக்பாலர்— 1 இந்த்ரன், 2 யமன், 3 வருணன், 4 குபேரன், 5 அக்நி, 6 நிருருதி, 7 வாயு, 8 ஈசாநன் : என்பவர்.

எட்டு ப்ரக்ருதி— 1 ப்ரக்ருதி, 2 மஹான், 3 அஹங்காரம், 4 பூமி, 5 ஜலம், 6 தேஜஸ், 7 வாயு, 8 ஆகாசம் : என்பன.

எட்டுக் குலபர்வதம்– 1 ஹிமவான், 2 நிஷதம், 3 விந்த்யம் 4 மால்யவான், 5 பாரியாத்ரகம், 6 மந்தரம், 7 மலயம், 8 மேரு, : என்பன.

பகவானுடைய எட்டுக் குணங்கள் - 1 கர்மத்திற்கு வசப்படாதிருத்தல், 2 கிழப்பருவமில்லாமை, 3 சாவில்லாமை, 4 சோகமில்லாமை, 5 பசியில்லாமை, 6 தாகமில்லாமை, 7 போகத்திற்குரிய அழிவற்ற வஸ்துக்களையுடைமை, 8 நினைத்ததை முடிக்கவல்லமை : என்பன.

புத்தியின் எட்டுக் குணங்கள் - 1 விஷயத்தை மனத்தில் வாங்குகை, 2 மனத்தில் தரிக்கை, 3 மறுபடி நினைக்கை, 4 பிறருக்கு எடுத்துக்கூறுகை, 5 பிறர் கூறாத விஷயங்களையும் அறிகை, 6 பிறர் கூறியதில் வேண்டாத சிலவற்றைத் தள்ளுகை, 7 விஷயங்களைத் தெளிவுடன் அறிகை, 8 உண்மையான அர்த்தங்களை அறிகை: என்பன.

எட்டுப் புஷ்பங்கள்:— 1 அஹிம்ஸை, 2 இந்த்ரியங்களை அடக்குதல், 3 ஸகல ஜந்துக்களிடமும் கருணை, 4 பொறுமை, 5 ஜ்ஞாநம், 6 தபஸ், 7 த்யாநம், 8 ஸத்யம்: என்பன.

எட்டுச் சித்திகள்:— 1 வேதத்தை அத்யயநம் செய்தல், 2 அதன் அர்த்தத்தை அறிதல், 3 ஆராய்ந்து அர்த்தத்தை நிச்சயித்தல், 4 தான் கண்ட அர்த்தத்தை உறுதிசெய்ய வித்வான்களுடன் கலத்தல், 5 ஸித்தாந்தார்த்தத்தை எப்பொழுதும் மனத்தால் பரிசயம் செய்தல், 6 தன்னைப் பற்றிவரும் துன்பமில்லாமை, 7 ஐந்து பூதங்களாலும் வரும் துன்பமில்லாமை, 8 தெய்வத்தால் வரும் துன்பமில்லாமை: என்பன.

எட்டுப் பக்திகள்:— 1 பாகவதர்களிடம் அன்புவைத்தல், 2 பகவானை ஆராதிப்பதில் மகிழ்வுகொள்ளல், 3 பகவானுடைய சரித்ரத்தைக் கேட்பதில் ஆவல்கொள்ளல், 4 அவனைப்பற்றிப் பேசினாலும் நினைத்தாலும் கேட்டாலும் குரல் தழுதழுத்துக் கண்ணீர்பெருகி மயிர்க்கூச்செறிதல், 5 அவனைத் தானே ஆராதிக்க முயலுதல்,

6 அவனுக்குச் செய்யும் கைங்கர்யங்களில் டம்பமற்று இருத்தல், 7 அவனையே த்யானித்தல், 8 அவனிடம் அற்பபலன்களை யாசியாமை: என்பன.

யோகத்தின் எட்டு அங்கங்கள்:— 1 யமம்(–அஹிம்ஸை, ஸத்யம், திருடாமை, காமத்தை அடக்குதல், பொருளைச் சேர்க்கமுற்படாமை), 2 நியமம்(–பரிசுத்தி, உள்ளதைக் கொண்டு திருப்தியடைதல், வ்ரதம் தவம் முதலியன செய்தல், வேதாந்தபரிசயம் செய்தல், எல்லாக் கர்மங்களையும் பகவானிடம் ஸமர்ப்பித்தல்), 3 ஆஸநம்(–பத்மாஸநம் பத்ராஸநம் முதலியன), 4 ப்ராணாயாமம்(–சுவாஸத்தை அடக்குதல்), 5 ப்ரத்யாஹாரம்(–இந்த்ரியங்களை உலக விஷயத்திலிருந்து திருப்புதல்), 6 தாரணை(–பகவானுடைய திருமேனியை மனத்திற் கொள்ளுதல்), 7 த்யாநம்(–இடைவிடாது பகவானை த்யாநித்தல்), 8 ஸமாதி(–அவ்வாறு த்யாநித்து நேரில் கண்டாற்போன்ற நிலைமையை அடைதல்): என்பன. [இந்த ஸமாதிதான் அங்கியாகிக் கீழேகூறிய ஏழையும் அங்கமாகக் கொள்கிறது].

எட்டு ஐசுவர்யங்கள்:— 1 அணிமா – சரீரத்தைச் சிறிதாக்கிக் கொள்ளல், 2 மஹிமா – பெரிதாக்கிக்கொள்ளல், 3 லகிமா – இலேசாகச் செய்தல், 4 கரிமா – கனமாக்கிக்கொள்ளல், 5 வசித்வம்-எல்லாவற்றையும் தன் வசமாக்கிக்கொள்ளல், 6 ஈசத்வம் – எல்லாவற்றுக்கும் தலைவனாயிருத்தல், 7 ப்ராப்தி – நினைத்தபொருளைப் பெறுதல், 8 ப்ராகாம்யம் – நினைத்தவிடம் செல்லும் வல்லமை: என்பன.

எட்டுக் குணங்கள்:— கீழ் எம்பெருமானுக்குச் சொன்ன எட்டுக் குணங்கள். அல்லது, 1 ஸகல ஜந்துக்களிடமும் கருணை, 2 பொறுமை, 3 பொறாமையில்லாமை, 4 பரிசுத்தம், 5 வருந்தாமை, 6 நன்மையை நினைத்தல், 7 லோபமின்மை, 8 ஆசையின்மை: என்பன.

அறுபத்துநான்கு கலைகளை வேறு நூல்களிற் காண்க.

எட்டு ரஸங்கள்:– 1 சிருங்காரம், 2 வீரம், 3 சோகம், 4 அற்புதம், 5 ஹாஸ்யம், 6 பயம், 7 இழிப்பு, 8 கோபம்: என்பன.

கருத்து:— திருமந்த்ரார்த்தத்தை அநுஸந்திப்பவருக்குக் கீழே கூறிய பலன்களில் பெறமுடியாதது ஒன்றும் இல்லை. 45

சரமசுலோகப் பொருள் விளக்கம்

எண்சீராசிரிய விருத்தம்

85 ஒண்டொடியா டிருமகளுந் தானு மாகி
யொருநினைவா லீன்றவுயி ரெல்லா முய்ய
வண்டுவரை நகர்வாழ வசுதே வற்காய்
மன்னவற்குத் தேர்ப்பாக னாகி நின்ற

தண்டுளவ மலர்மார்பன் ருனே சொன்ன
தனித்தருமந் தானெமக்காய்த் தன்னை யென்றுங்
கண்டுகளித் தடிசூட விலக்காய் நின்ற
கண்புதையல் விளையாட்டைக் கழிக்கின் ருனே. 46

[பாசுரம் 46-முதல் 49-வரை சரமசுலோகாதிகாரம்]

உரை:— வண் துவரைநகர் வாழ - அழகிய த்வாரகா நகரத்தி லுள்ளவர் உஜ்ஜீவிப்பதற்கு, வசுதேவற்கு ஆய் – வசுதேவனுக்குக் குமாரனாய் அவதரித்து, மன்னவற்குத் தேர்ப் பாகனாகி நின்ற – அர் ஜுநனுக்குத் தேர் ஓட்டும் பாகனாகி நின்றவனும், தண் துளவ மலர் மார்பன் – குளிர்ந்த திருத்துழாயுடன் பூவைத் திருமார்பில் அணிந்த வனுமான கண்ணபிரான், ஒண் தொடியாள் திருமகளும் - அழகிய கைவளைகளையுடைய பிராட்டியும், தானும் ஆகி – தானும் ஒன்றுகூடி, ஒரு நினைவால் ஈன்ற – ஒரேவிதமான ஸங்கல்பத்தால் படைத்த, உயிர் எல்லாம் உய்ய – ஜீவாத்மாக்களெல்லாம் உஜ்ஜீவிப்பதற்காக, தானே சொன்ன – தானே (சரமசுலோகத்தில்) வெளியிட்ட, தனித் தருமம் – நிகரற்ற உபாயமாக, எமக்குத் தான் ஆய் – எமக்குத் தானே யாகி நின்று (யாம் பரந்யாஸம் செய்ய அவன் தானே உபாயமாய் நின்று), தன்னை என்றும் கண்டு களித்து அடி சூட – தன்னை(ப் பரம பதத்தில்) எப்பொழுதும் ஸேவித்து மகிழ்ந்து திருவடிகளை (நம் முடி யில்) தரித்துக் கைங்கர்யம் செய்வதற்கு, விலக்காய் நின்ற - தடையா யிருந்த, கண்புதையல் விளையாட்டை – (ப்ரக்ருதியைக் கொண்டு தத்துவ ஜ்ஞாநத்தை ஒழிப்பதாகிய) கண்பொத்தும் விளையாட்டை, கழிக்கின்றான் – நீக்குகின்றான்.

கருத்து:— ஸர்வேசுவரன் மஹாபுண்ய க்ஷேத்ரமாகிய த்வார கையிலுள்ளவர்கள் தன்னைக்கண்டு உய்யுமாறு வஸுதேவனுக்குத் தவப்புதல்வனாய் அவதரித்தான்; அர்ஜுநனுக்குத் தேர்ப்பாகனாய் அமர்ந்து தன் எளிமையின் உச்சநிலையை வெளியிட்டருளினான். இத்தகைய கண்ணன் முன்பு தானும் பிராட்டியுமாய் நின்று ஒருமுக மான ஸங்கல்பத்தால் படைத்த ஜீவாத்மாக்கள் அனைத்தும் உஜ்ஜீ விக்கவேண்டுமென்று திருவுள்ளங்கொண்டு அர்ஜுநனை வியாஜமாய் வைத்துச் சரமசுலோகத்தை உலகுக்கு உபதேசித்தான்; அதிலே கூறப்பட்ட ஸித்தோபாயமாகவும் தானே நின்று நம்மைக்காக்கும் பொறுப்பைத் தானே ஏற்றுக்கொண்டான். இனி, இதுகாறும் மோக்ஷத்தைப் பெற்று அவன்திருவடிகளுக்கு இடைவிடாது கைங் கர்யம் செய்வதற்கு இடையூறாக ப்ரக்ருதியைக்கொண்டு நமக்குத்தத்து வத்தை மறைத்துச் செய்த கண்புதையல் விளையாட்டைக் கைவிட முற்பட்டு நிற்கின்றான். இனி விரைவில் மோக்ஷம் பெறலாம். 46

சரமசுலோகத்தில் உள்ள "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்னும் வாக்யத்திற்கு ஆறு அர்த்தங்கள் வெளியிடப்படுகின்றன—

சரமசுலோகம்—பொருள் விளக்கம்

86 * மூண்டாலு மரியதனின் முயல வேண்டா
முன்னமதி லாசைதனை விடுகை திண்மை
வேண்டாது சரணநெறி வேறோர் கூட்டு
வேண்டிலய னத்திரம்போல் வெள்கி நிற்கு
நீண்டாகு நிறைமதியோர் நெறியிற் கூடா
நின்றனிமை துணையாக வென்றன் பாதம்
பூண்டாலுன் பிழைகளெலாம் பொறுப்ப னென்ற
புண்ணியனுர் புகழனைத்தும் புகழு வோமே. 47

உரை:—(1) அரியதனில் மூண்டாலும் - செய்யமுடியாத உபாயத்தைச் செய்யத்தொடங்கிவிட்டாலும், முயல வேண்டா - (இனி அதில்) தலையிடவேண்டா; (2) முன்னம்-முதலிலேயே, அதில்–அவ்வுபாயத்தில், ஆசைதனை விடுகை - (செய்வதற்கு) ஆசையையே ஒழித்துவிடுகை, திண்மை – வலிமையாம் (சிறந்ததாம்); (3) சரணநெறி - சரணுகதி, வேறு ஓர் கூட்டு வேண்டாது – (குறிப்பிட்ட ஐந்து அங்கங்களைத் தவிர) வேறு ஒரு ஸஹாயத்தை எதிர்பாராது; (4) வேண்டில் - (சேதநன், அறியாது வேறு அங்கங்களையும் செய்ய) விரும்பிவிட்டால், அயன் அத்திரம் போல் – ப்ரஹ்மாஸ்த்ரம் (வேறு அஸ்த்ரத்தைப் பொறுக்காதது) போல், வெள்கிநிற்கும்–(சரணுகதியும் பலன்கொடுப்பதற்குக்) கூசி நின்றுவிடும்; (5) நீண்டாகும் - நீண்ட காலம் அநுஷ்டிக்கப்பட வேண்டியதும், நிறை மதியோர் நெறியில் - பூர்ணமான ஜ்ஞாநமுடையாருக்கு உரியதுமான (பக்தியோகம் முதலிய) உபாயத்தில், கூடா(நீ)-ப்ரவர்த்தியாதிருக்கும் நீ, (6) நின் தனிமை – உன்னுடைய உதவியற்ற நிலைமையை, துணையாக – ஸஹாயமாகக் கொண்டு, என்றன் பாதம் பூண்டால்–என் திருவடிகளை உபாயமாக அடைந்தால், உன் பிழைகள் எ(ல்)லாம் பொறுப்பன் – உன் பாபங்களை முழுதும் பொறுத்துக்கொள்வேன், என்ற புண்ணியனுர் – என்று (சரமசுலோகத்தில்) அருளிச்செய்த கண்ணபிரானுடைய, புகழ் அனைத்தும் புகழுவோம்-கீர்த்தியை முழுதும் துதிப்போம். 47

* अतोऽशक्ताधिकारित्वमाकिञ्चन्यपुरस्क्रिया ।
अनङ्गभावो धर्माणामशक्यारम्भवारणम् ॥
तत्प्रत्याशाप्रशमनं ब्रह्मास्त्रन्यायसूचनम् ।
सर्वधर्मपरित्यागशब्दार्थाः साधुसम्मताः ॥

சரமசுலோகத்தில் உள்ள 'ஏகம்' என்னும் பதத்திற்கு ஆறு அர்த்தங்களை அருளிச்செய்கிறார்—

சரமசுலோகம்—பொருள் விளக்கம்

87 * சாதனமு நற்பயனு நானே யாவன்
சாதகனு மென்வயமா யென்னைப் பற்றுஞ்
சாதனமுஞ் சரணநெறி யன்று னக்குச்
சாதனங்க ளிந்நிலைக்கோ ரிடையி னில்லா
வேதனைசேர் வேறங்க மிதனில் வேண்டா
வேறெல்லா நிற்குநிலை நானே நிற்பன்
றூதனுமா நாதனுமா மென்னைப் பற்றிச்
சோகந்தீ ரேனவுரைத்தான் சூழ்கின் றானே. 48

உரை:— (1) சாதனமும் - உபாயமாகவும், நல் பயனும் - சிறந்த பலனாகவும், நானே ஆவன் - நானே இருப்பேன்: (2) சாதகனும் - உபாயத்தைச் செய்பவனும், என் வயமாய் - எனக்கு அடங்கியவனா யிருந்து, என்னைப்பற்றும் - என்னைச் சரணமடைவான்; (3) உனக்கு- (சேதநனாகிய) உனக்கு, சரணநெறி - சரணாகதி, சாதனமும் அன்று - நேர் உபாயமாகவும் ஆகாது, (பலன் கொடுக்குமாறு செய்விக்கும் வ்யாஜம்தான் சரணாகதி); (4) சாதனங்கள்-(பக்தி முதலிய) உபாயங் கள், இந் நிலைக்கு - இந்தச் சரணாகதிக்கு, ஓர் இடையில் நில்லா - ஒரு ஸம்பந்தமுடைய நிலையில் நிற்கா; (அதாவது-பக்தியோகாதிகள் ப்ரபத்திக்கு ஸஹாயமாகமாட்டா என்றபடி) (5) வேதனை சேர்-சிரமத் துடன் (செய்யக்) கூடிய, வேறு அங்கம்-வேறு (சில) அங்கங்கள், இதனில்-இந்த ப்ரபத்திக்கு, வேண்டா-வேண்டுவதில்லை; (6) வேறு எல்லாம் – மற்ற உபாயங்கள் எல்லாம், நிற்கும் நிலை–நிற்கும் ஸ்தானத் தில், நானே நிற்பன் – நானே நின்று பலம் தருவேன்; தூதனும் ஆம் – (பக்தருக்காகத்) தூது செல்லும்படி எளியனும், நாதனும் ஆம் - (எல்லோருக்கும்) ஸ்வாமியுமான, என்னைப் பற்றி – என்னைச் சரண மடைந்து, சோகம் தீர் – (உன்) துக்கத்தைப் போக்கிக்கொள், என உரைத்தான் – என்று (சரமசுலோகத்தில்) உபதேசித்த கண்ணன், சூழ்கின்றான் – (தானே நம்மை விடாது) வளைத்துக்கொள்கின்றான்.

86, 87 இவற்றின் விளக்கத்தை முறையே 316, 318-பாசுரங் களின் உரையிற் காண்க. 48

* प्राप्यस्यैव प्रापकत्वं स्वप्राधान्यनिवारणम् ।
प्रपत्तेर्व्याजमात्रत्वमन्योपायैरनन्वयः ॥
तदङ्गैरप्यसंबन्धस्सर्वसाध्येष्वभिन्नता ।
इत्थमर्थाष्षडाचार्यैरेकशब्दस्य दर्शिताः ॥

மோக்ஷம் பெறப் பின்வாங்குதல்

88 தன்னினைவில் விலக்கின்றித் தன்னை நண்ணார்
நினைவனைத்துந் தான்விளைத்தும் விலக்கு நாத
னெங்நினைவை யிப்பவத்தி லின்று மாற்றி
யிணையடிக்கீ ழடைக்கலமேன் றெம்மை வைத்து
முன்னினைவால் யாமுயன்ற வினையால் வந்த
முனிவயர்ந்து முத்திதர முன்னே தோன்றி
நன்னினைவா லிசையுங் கால மின்றோ
நாளையோவெ வென்றுநகை செய்கின் றானே. 49

உரை:— தன் நினைவில் விலக்கு இன்றி – தான் ஸங்கல்பித்த விஷயத்தில் (ஒருவராலும்) தடை இல்லாமலிருந்தும், தன்னை நண்ணார் – தன்னை நெருங்காத விரோதிகளுக்கு, நினைவு அனைத்தும் – ஆசையை எல்லாம், தான் விளைத்தும் விலக்கும் நாதன் – தான் உண்டு பண்ணியும் (அந்தப் போகங்களை அநுபவிக்காமல்) தடைசெய்பவனான எம்பெருமான், இப் பவத்தில் – இந்த ஸம்ஸாரத்தில், எம் நினைவை – எங்களுக்குள்ள ஆசையை, இன்று மாற்றி – இன்று ஒழித்து, இணையடிக்கீழ் – இரண்டு திருவடிகளின் கீழ், அடைக்கலம் என்று – ரக்ஷிக்கப்படவேண்டிய வஸ்துவாக, எம்மை வைத்து–எங்களை ஏற்றுக்கொண்டு, முன் நினைவால் யாம் முயன்ற–முன்பு அஹங்காராதிகளால் யாம் செய்த, வினையால் வந்த முனிவு அயர்ந்து – கர்மத்தால் ஏற்பட்ட கோபம் தீர்ந்து, முத்தி தர முன்னே தோன்றி – மோக்ஷத்தைக் கொடுப்பதற்காக முன் (பலவகையாய்) அவதரித்து (நிற்கும் போதும்), நல் நினைவால் நாம் இசையும் காலம் – நல்ல ஜ்ஞானத்தால் நாம் (பரமபதம் செல்ல) உடன்படும் காலம், இன்றோ நாளையோ என்று – இன்றைக்கோ நாளைக்கோ என்று, நகை செய்கின்றான் – நம்மைப் பரிஹாஸம்செய்கின்றான்.

கருத்து:— ஸர்வேசுவரன் ஸங்கல்பித்த விஷயத்தை ஒருவரும் தடை செய்யமுடியாது. அவன், தன்னையடையாத விரோதிகளுக்கு எல்லாவகை ஆசைகளையும் உண்டாக்கி அவர்கள் அந்தப் போகங்களை அடையமுடியாது தானே தடைசெய்கின்றான். இத்தகைய எம்பெருமான் நம்மீது அருள்புரிந்து நமக்கு ஸம்ஸாரத்திலுள்ள நசையைத் தீர்த்தான்; தன் திருவடிகளின் கீழே நம்மைக் காக்கவேண்டிய வஸ்துவாகக்கொண்டான்; முன்பு அஹங்கார–மமகாரங்களால் நாம் செய்த கர்மங்களால் தனக்கு உண்டான கோபம் தீர்ந்தான்; நமக்கு மோக்ஷத்தையளிக்க முற்பட்டுப் பல அவதாரங்களையும் செய்து நம்மோடு கலந்து பரிமாறினான். இப்படியிருந்தும் இந்த அருமையை யறியாத நாம் ஸம்ஸாரத்தை விட மனங்கொள்ளாது 'இன்றைக்கு, நாளைக்கு' என்று காலம் தாழ்த்துவதைக்கண்டு அவன் பரிஹஸிக்கின்றான். என்னே நம் அறியாமை!!!

"நான் மோக்ஷம்கொடுப்பதற்கு விரைந்தாலும் சேதநன் ஸம்ஸாரத்தை விட மனங்கொள்ளாது 'இன்று ஆகட்டும், நாளை ஆகட்டு' மென்று காலம் தாழ்க்கின்றான், என்னே இவன் அறியாமை!!" என்று பகவான் பரிஹஸிக்கின்றான் என்பது பொருள். 49

முதலாழ்வார்களின் உதவி

கட்டளைக்கலித்துறை

89 பாட்டுக் குரிய பழையவர் மூவரைப் பண்டொருகான்
மாட்டுக் கருடரு மாயன் மலிந்து வருத்துதலா
ஞட்டுக் கிருள்செக நான்மறை யந்தி நடைவிளங்க
வீட்டுக் கிடைகழிக் கேவெளி காட்டுமம் மெய்விளக்கே 50

[ஆசார்யக்ருத்யாதிகாரம்]

உரை:—மாட்டுக்கு அருள் தரும் மாயன் – (தன்னுடைய) செல்வமான சேதநர்க்கு அருள்புரிகின்றவனும் அதிசயச்செய்கையுடையவனுமான எம்பெருமான், பாட்டுக்கு உரிய – (சிறந்த பாசுரங்களால் தன்னைப்) பாடுதற்குத் தக்கவர்களான, பழையவர் மூவரை – முதலாழ்வார்களாகிய மூவரையும், பண்டு ஒருகால் – முன்பு ஒருகாலத்தில் (த்வாபரயுகத்தில்), மலிந்து வருத்துதலால்–அதிகமாக நெருக்கியதால், வீட்டுக்கு இடைகழிக்கே–(திருக்கோவலூரிலுள்ள ஒரு) வீட்டின் இடைகழியிலேயே (அம்மூவரிடமிருந்து அவதரித்த), அம் மெய் விளக்கு – (மூன்று திருவந்தாதியாகிய) அந்த ஸத்யமான தீபம், நாட்டுக்கு இருள் செக – உலகத்திற்கெல்லாம் அஜ்ஞாநம் நீங்கவும், நான்மறை அந்தி நடை விளங்க–நான்கு வேதங்களின் அந்தத்தில் கூறிய மார்க்கம் ப்ரகாசிக்கவும், வெளிகாட்டும் – (பக்தி-ப்ரபத்தியென்னும் உபாயங்களை) ப்ரகாசிப்பிக்கும்.

கருத்து:— ஸர்வேசுவரன் முதலாழ்வார்களைக்கொண்டு மூன்று திருவந்தாதிகளைப் பாடுவித்து உலகிலுள்ள அஜ்ஞாநத்தைப் போக்கிப் பக்திப்ரபத்திகளாகிய உபாயங்களை வெளியிட்டு உலகத்தை உஜ்ஜீவிப்பித்தருளினன். [அங்ஙனமே அடியேன்மூலமாய் அவ்வெம்பெருமான் ப்ரவர்த்திப்பித்த இந்த ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரமென்னும் ஸூக்தியும் தத்துவம் உபாயம் புருஷார்த்தம் ஆகிய இவற்றை விளக்கி உலகை உஜ்ஜீவிக்கச்செய்யும்.]

த்வாபரயுகத்தில் ஒருநாள் இரவில் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்னும் முதலாழ்வார் மூவரும் திருக்கோவலூரில் மழைக்காக ஒரு வீட்டின் சிறிய இடைகழியில் ஒதுங்க, எம்பெருமானும் இவர்களின் திருமேனிஸம்பந்தத்தையும், திருவந்தாதிகளின் திருவவதாரத்தையும் விரும்பி அவ்விடத்திலேயே வந்து நெருக்க, பிறகு இவர்களும் அவனைக் கண்டுகொண்டு மூன்று திருவந்தாதிகளையும் பாடியருளினர். 50

அரங்கன் அடியிணைகளின் பெருமை

பதினாறுசீராசிரியவிருத்தம்

90 உறுசகட முடையவொரு காலுற் றுணர்ந்தன
வுடன்மருத மோடியவொரு போதிற் றவழ்ந்தன
வுறிதடவு மளவிலுர லோடுற் றுநின்றன
வுறுநேறியோர் தருமன்விடு தூதுக் குகந்தன
மறநேறியர் முறியபிரு தானத் துவந்தன
மலர்மகள்கை வருடமலர் போதிற் சிவந்தன
மறுபிறவி யறுமுனிவர் மாலுக் கிசைந்தன
மனுமுறையில் வருவதோர்வி மானத் துறைந்தன
வறமுடைய விசயனமர் தேரிற் றிகழ்ந்தன
வடலுரக படமடிய வாடிக் கடிந்தன
வறுசமய மறிவரிய தானத் தமர்ந்தன
வணிகுருகை நகர்முனிவர் நாவுக் கமைந்தன
வேறியுடைய துளவமலர் வீறுக் கணிந்தன
விழுகரியோர் குமரனேன மேவிச் சிறந்தன
விறலசுரர் படையடைய வீயத் துரந்தன
விடலரிய பேரியபெரு மாண்மேன் பதங்களே. 51

[*பாசுரம் 51-முதல் 56-வரை நிகமநாதிகாரம்*]

உரை:— விடல் அரிய பெரிய பெருமாள் மென் பதங்கள் – விடவொண்ணாத ஸ்ரீரங்கநாதனுடைய மெல்லிய திருவடிகள்,

உறு சகடம் உடைய - வலிய சகடாஸுரன் பிளந்துபோம்படி, ஒருகால் உற்று உணர்ந்தன - முன்பு (க்ருஷ்ணாவதாரத்தில்) கூர்ந்து கவனித்திருந்தன.

உடன் மருதம் ஒடிய – சேர்ந்திருந்த மருதமரங்கள் ஒடிந்து போகும்படி, ஒருபோதில் தவழ்ந்தன – ஒரு காலத்தில் தவழ்ந்தன.

உறி தடவும் அளவில்–(தயிர், வெண்ணெய் வைத்த) உறியைத் தொட்டபொழுது, உரலோடு உற்று நின்றன – உரலோடு பொருந்திக் (கட்டப்பட்டு) நின்றன.

உறு நெறி ஓர் தருமன் – தகுந்த நல்வழியில் நடக்கிற நிகரற்ற தர்மபுத்திரன், விடு தூதுக்கு உகந்தன – (துர்யோதநன்பால்) அனுப்பிய தூதாகச் செல்கைக்கு மகிழ்ந்து நடந்தன.

மறநெறியர் முறிய – கோப(த்தைக் கைக்கொண்டு அம்) மார்க்கத்திலே செல்லுகிற துஷ்டர்கள் அழிந்துபோம்படி, பிருதானத்து வந்தன – ப்ருந்தாவநத்தில் வந்து ஸஞ்சரித்தன.

மலர்மகள் கை வருட–தாமரையில்வஸிக்கும் பிராட்டி தன் கையி ஞல் தடவவும், மலர்போதில் சிவந்தன– (அது பொறுக்காமல்) மலர்ந்த புஷ்பத்தைக்காட்டிலும் சிவந்தன.

மறு பிறவி அறும் முனிவர் – மறுபடியும் (இக்கர்மபூமியில்) பிறவியை நீக்கவிரும்பும் முனிவர்களின், மாலுக்கு இசைந்தன – பக்திக்குத் தக்க விஷயமாய் நின்றன.

மனுமுறையில் வருவது – (ப்ரஹ்மாவினிடமிருந்து) மனுவம்சத் தில் வந்த, ஒர் விமானத்து உறைந்தன – ஒப்பற்ற ஸ்ரீரங்கவிமானத்தில் நித்ய வாஸம்செய்தன.

அறம் உடைய விசயன் அமர் – தர்மமுடைய அர்ஜுநன் வீற்றிருந்த, தேரில் திகழ்ந்தன – தேரில் நின்று ப்ரகாசித்தன.

அடல் உரக படம் மடிய – வலிமையுள்ள (காளியனென்னும்) ஸர்ப்பத்தினுடைய படம் நசுங்கும்படி, ஆடிக் கடிந்தன – நடனமாடி அழித்தன.

அறு சமயம் அறிவு அரிய–ஆறுமதங்களாலும் அறியவொண்ணுத, தானத்து அமர்ந்தன – (பரமபதமென்னும்) ஸ்தாநத்தில் அமர்ந்தன.

அணி குருகை நகர் முனிவர் – (பூமண்டலத்திற்கே) அலங்காரமா யுள்ள திருக்குருகூர் என்னும் ஆழ்வார்திருநகரிக்குத் தலைவரான நம்மாழ்வாருடைய, நாவுக்கு அமைந்தன – நாவினுல் பாடுவதற்குத் தக்க விஷயமாகப் பொருந்திநின்றன.

வெறியுடைய துளவமலர்–வாஸனையுடைய திருத்துழாயினிடத்து மிக்க, வீறுக்கு அணிந்தன – பெருமைக்குப் பொருந்திய அழகுடையன வாய் நின்றன.

விழுகரி ஒர் குமரன் என – (உத்தரையின் கர்ப்பத்திலிருந்து) விழுவதாயிருந்த கரிக்கட்டையை ஒப்பற்ற, அழகிய (பரீக்ஷித்து என்னும்) இளைஞனென்று கூறும்படி, மேவிச் சிறந்தன – (அக்கரிக் கட்டையைப்) பொருந்தி உயர்ந்தன.

விறல் அசுரர் படை – வீரமுள்ள அஸுரர்களின் ஸேனை, அடைய வீயத் துரந்தன – முழுதும் நசித்துப்போம்படி துரத்தின. (ஸ்ரீரங்க நாதன்திருவடிகளே இத்தனை கார்யங்களையும் செய்து பெருமை பெற்றன).

கருத்து:— பக்தர்களால் விடமுடியாது எப்பொழுதும் அநு பவிக்கத் தெவிட்டாத அமுதமாய்நிற்கும் ஸ்ரீரங்கநாதனுடைய மெல்லிய திருவடிகளே முன் க்ருஷ்ணவதாரத்தில் சகடாஸுரன் தொலையும்படி உதைத்தனவும், இரண்டு மருதமரங்கள் ஒடிந்துபோகுமாறு தவழ்ந் தனவும், வெண்ணெயைத் திருடியதற்காக உரலிலே கட்டப்பட்ட னவும். தர்மனுடைய வேண்டுகோளுக்கிரங்கித் துரியோதனன்பால் தூதுசெல்ல மகிழ்ந்து உடன்பட்டனவும், பல துஷ்டர்களை அழிக்கப்

பிருந்தாவனத்தில் ஸஞ்சரித்தனவும், பெரியபிராட்டி தன் தளிர்க் கையால் வருடுவதைக்கூடப் பொறுக்காது புஷ்பங்களைக்காட்டிலும் சிவந்துநின்றனவும், முமுக்ஷுக்களான மஹர்ஷிகளின் பக்திக்கு இலக்காய்நின்றனவும், ஸ்ரீரங்கவிமானத்தில் நித்யவாஸம்செய்தனவும், அர்ஜுநனுடைய தேரில் பாகனாய்நின்றனவும், காளியனுடைய படம் நசுங்குமாறு நடனமாடினவும், பிறமதத்தினருக்குக் கிட்டக்கருதவும் முடியாத பரமபதத்தில் அமர்ந்தனவும், நம்மாழ்வார் தம் ஸூக்திகளின்வாயிலாகச் சுவைப்பதற்குத் தக்கனவும், திருத்துழாயைச் சூடி அழகு பெற உரியனவும், உத்தரையின் கர்ப்பத்திலிருந்த கரிக்கட்டையைப் பரீக்ஷித்து என்னும் இளங்குமரனாக்கினவும், மிக்க வீரமுள்ள அஸுரஸேனையை முழுதும் அழித்தனவும் ஆம். இத்தகைய திருவடிகளையே உபாயமாகவும் பலனாகவும் கொண்டு அடியார்கள் உஜ்ஜீவிப்பார்களாக.

[இப்பாசுரத்தில் 'பெரியபெருமாள்' எனுந்தொடர், ஸத்ய வ்ரத மாஹாத்ம்யமென்ற ரஹஸ்யத்தில் 'பெடையிரண்டை' எனும் பாசுரத்தின் அவதாரிகையில் பேரருளாளனையே பெரியபெருமாளாக ஸ்வாமி தாமே அருளிச்செய்ததைத் தழுவிப் பேரருளாளனைக் குறிப்பதாகவும், 'மனுமுறையில்...............உறைந்தன' எனுந்தொடர் ஸ்ரீபட்டர் அருளிய ஸ்ரீரங்கராஜஸ்தவம் 78-வது சுலோகத்தை அடியொற்றிப் பேரருளாளனே திருவரங்கத்தில் பள்ளிகொண்டதைக் காட்டுவதாகவும் பேரருளாளனிடம் மிக ஈடுபட்ட பெரியோர் ரஸோக்தியாகப் பணிப்பர்.]

அறுசமயங்கள்- 1 ஸாங்க்யமதம், 2 கணாதமதம், 3 பௌத்தமதம், 4 பதஞ்ஜலிமதம், 5 ஜைநமதம், 5 சைவமதம் : என்பன. 51

நம் ஸம்ப்ரதாயத்தில் ஈடுபட்டுச்சேர்தல்

எண்சீராசிரியவிருத்தம்

91 * மறையுரைக்கும் பொருளெல்லா மெய்யென் றோர்வார்
மன்னியகூர் மதியுடையார் வண்கு ணத்திற்
குறையுரைக்க நினைவில்லார் குருக்க டம்பாற்
கோதற்ற மனம்பெற்றார் கோள்வார் நன்மை
சிறைவளர்க்குஞ் சிலமாந்தர் சங்கே தத்தாற்
சிதையாத திண்மதியோர் தெரிந்த தோரார்
பொறைநிலத்தின் மிகும்புனிதர் காட்டு மெங்கள்
பொன்றாத நன்னெறியிற் புகுது வாரே. 52

* आस्तिक्यवान् निशितबुद्धिरनभ्यसूयुः सत्संप्रदायपरिशुद्धमनास्सदर्थी ।
सङ्केतभीतिरहितस्सतृणेष्वसक्तः सद्वर्तनीमनुविधास्यति शाश्वतीं नः ॥

உரை:—மறை உரைக்கும் பொருள் எல்லாம் – வேதத்தில் கூறப்படும் அர்த்தங்களை எல்லாம், மெய் என்று ஓர்வார் – ஸத்யமென்று நிச்சயிக்கும் ஆஸ்திகர்களாயும், மன்னிய கூர் மதி உடையார்–திடமான கூரிய புத்தியையுடையவர்களாயும், வண் குணத்தில் – (பிறருடைய) சிறந்த குணத்தில், குறை உரைக்க நினைவு இல்லார் – குற்றம் கூறுவதற்கு எண்ணம் இல்லாதவர்களாயும், குருக்கள்தம்பால் – ஆசார்யர்களிடம், கோது அற்ற மனம் பெற்றார் – குற்றமற்ற மனத்தைப் பெற்றவர்களாயும், நன்மை கொள்வார் – நல்ல விஷயங்களையே கைக்கொள்பவராயும், சிறை வளர்க்கும் சில மாந்தர் சங்கேதத்தால்–சிறைபோன்ற ஸம்ஸாரத்தை வ்ருத்தி செய்பவர்களான சில (ஸாதாரண) மனிதர்களுடைய கட்டுப்பாட்டினால், சிதையாத திண் மதியோர் – கெட்டுப் போகாத வலிய மனத்தையுடையவர்களாயும், தெரிந்தது ஓரார் – (ஸாதாரணமாய் உலகில்) தெரியும் அற்பபலங்களில் கருத்தைச் செலுத்தாதவர்களாயும் உள்ள அதிகாரிகள், நிலத்தில் பொறை மிகும் – பூமியிற்காட்டினும் பொறுமை மிகுந்த, புனிதர் காட்டும் – பரிசுத்தர்களான ஆசார்யர்களால் காட்டப்பட்ட, எங்கள் பொன்றாத நல் நெறியில் – எங்களுடைய அழியாத நல்ல மார்க்கத்தில், புகுதுவார் – (ஈடுபட்டுச்) சேருவர்கள்.

கருத்து:— வேதார்த்தங்களில் மிக்க நம்பிக்கையுள்ள ஆஸ்திகர்களும், ஸூக்ஷ்மபுத்தியையுடையவர்களும், பிறர்பால் அஸூயை கொள்ளாதவர்களும், ஆசார்யர்களிடம் ஸம்ப்ரதாயத்தை உபதேசிக்கப்பெற்றவர்களும், ஸாரமான விஷயங்களையே கைக்கொள்ளுமவர்களும், ஸம்ஸாரத்தில் ஈடுபட்டுநிற்கும் பாமரரின் கட்டுப்பாட்டுக்கு வசப்படாதவர்களும், அற்ப பலனில் பற்றில்லாதவர்களுமான அதிகாரிகள் பரமஸாத்துவிகர்களான நம் ஆசார்யர்களால் காட்டப்பட்ட இந்த நல்வழியில் நடந்து உஜ்ஜீவிக்கப்பெறுவர். ஆக எவ்வழியாலும் நம் ஸம்ப்ரதாயம் இடையீடின்றிச் சாசுவதமாய் விளங்கும். 52

இப்பிரபந்தத்தில் கூறிய வழியே சிறந்ததாம்

கட்டளைக்கலித்துறை

92 இதுவழி யின்னமு தென்றவ ரின்புலன் வேறிடுவா
ரிதுவழி யாமல வென்றறி வாரெங்க டேசிகரே
யிதுவழி யெய்துக வென்றுகப் பாலெம் பிழைபொறுப்பா
ரிதுவழி யாமறை யோரரு ளால்யா மிசைந்தனமே. 53

உரை:–இன் புலன்–(உலகத்தோரால்) இனியனவாகக்கொள்ளப்படும் அற்பவிஷயங்களை, வேறு இடுவார் – (நமக்குத் தகா என்று) வேறாகப்பிரி (த்து விலக்கிவை)ப்பவர்களும், இது வழி ஆம் – (உபாயாநுஷ்டானத்தால் உண்டான) இந்த பகவத்க்ருபையே மோக்ஷத்திற்கு முக்கியமான உபாயம்; அ(ல்)ல என்று அறிவார் – (மற்றவை முக்கிய உபாயம்) அல்ல என்று அறிபவர்களுமான, எங்கள் தேசிகரே–எங்கள்

ஆசார்யர்கள்தாம், இது வழி - இதிற்கூறப்பட்ட ப்ரபத்திமார்க்கம், எய்துக என்று - நிலைபெற்று நடந்திடுகவென்று (நினைத்து), உகப்பால்- (உலகுக்கு உபதேசிப்பதில்) மகிழ்ச்சியால், எம்பிழை பொறுப்பார் - எங்களுடைய அபராதங்களைப் பொறுப்பவர்களாக ஆகி, இது வழி – இந்த ப்ரபந்தத்தில் கூறப்பட்ட மார்க்கமே, இன் அமுது என்றவர் – இனிய அமுதம் (போன்றது)என்று உபதேசித்தவர் ஆவர்.(ஆதலால்), மறையோர் அருளால் - வைதிகரான ஆசார்யர்களின் க்ருபையால், இது வழியா - (அவர்கள் காட்டிய) இந்த வழியையே நல்ல வழியாக, யாம் இசைந்தனம் - யாங்கள் ஏற்றுக்கொண்டோம்.

கருத்து:— நம் ஆசார்யர்கள் உலகத்தோரால் போக்யமாகக் கொள்ளப்படும் அற்பபலன்களைத் தம் ஸ்வரூபத்திற்கு ஏற்பனவல்ல வென்று விலக்கி, உபாயத்தை அநுஷ்டிப்பதாலே உண்டாகும் எம் பெருமானது அருளே மோக்ஷத்திற்கு முக்கிய உபாயமென்றும் மற்றது அன்றென்றும் உறுதிகொண்டு, நாம் இப்பொழுது இப்பிர பந்தத்தில் விளக்கிக்கூறிய ப்ரபத்திமார்க்கம் சாசுவதமாக நடந்திட வேண்டுமென்று திருவுள்ளங்கொண்டு, நம்மை உஜ்ஜீவிக்கச் செய் வதில் உள்ள பேராவலால் நம்மிடம் உள்ள குற்றங்களைப் பொறுத் தருளி, நமக்கு இந்த ப்ரபத்திமார்க்கத்தையே இனிய அமுதமென உபதேசித்தனர். நாம் இந்த ப்ரபத்திமார்க்கத்தையே கைக்கொண் டோம். 53

சரமசுலோகத்தால் கவலையற்ற தன்மை

93 எட்டு மிரண்டு மறியாத வெம்மை யிவையறிவித்
தேட்டவொண் ணுத விடந்தரு மேங்களம் மாதவனுர்
முட்ட வினைத்திரண் மாள முயன்றிடு மஞ்சலென்ருர்
கட்டேழில் வாசகத் தாற்கலங் காநிலை பெற்றனமே. 54

உரை:— எட்டும் இரண்டும் அறியாத எம்மை - எட்டும்+இரண் டும் - பத்து என்று கூட்டத்தெரியாதபடி அறிவற்ற எங்களுக்கு, அல்லது, எட்டு அக்ஷரங்களுள்ள திருமந்த்ரம், இரண்டாகிய த்வயம், சரமசுலோகம் ஆகிய(மூன்று)ரஹஸ்யங்களையும் அறியாத எங்களுக்கு, இவை அறிவித்து - (ஆசார்யன் மூலமாக) இந்த ரஹஸ்யார்த்தங்களை உபதேசித்து, எட்ட ஒண்ணுத இடம் தரும் - (உபாயத்தைச் செய்யா மல்) எட்ட முடியாத இடமாகிய பரமபதத்தைத் தருகின்ற, எங்கள் அம் மாதவனுர் - எங்களுடைய அந்த (க்ருஷ்ணனுக அவதரித்த) ஸ்ரீமந்நாராயணன், "வினைத்திரள் முட்ட மாள–கர்மவர்க்கம் முழுதும் அழிந்துபோகும்படி, முயன்றிடும் - (ப்ரபத்தியில்) முயலுவீராக. அஞ்சல் என்ருர் – அஞ்சாதொழிக" என்று கூறியருளினுர், கட்டு எழில் வாசகத்தால் – (அவருடைய) வலிய அழகுபெற்ற அந்தச் சரமசுலோகத்தால், கலங்கா நிலை பெற்றனம் – கவலையற்றிருக்கும் நிலையை அடைந்தோம்.

கருத்து:— ரஹஸ்யார்த்தங்களை அறியப்பெறாத நாம் எட்டும் இரண்டும் கூடினால் பத்தாம் என்று கூறவும் முடியாத நிலைமையில் பகவத்பக்தியின் பெருமையை அறியாது இருக்கிறோம். ஸ்ரீமந்நாராயணன் நமக்கு ஆசார்யன்முகமாய் ரஹஸ்யார்த்தத்தை உபதேசித்து ஸ்ரீவைகுண்டத்தைத் தர முன்வந்துள்ளான். அவன் முன்பு சரம சுலோகத்தில் உங்கள் கர்மம் முழுதும் நீங்குவதற்கு ப்ரபத்தியை அநுஷ்டித்துப் பயமற்று இருப்பீர்களாக என்று உபதேசித்ததை நினைந்து உறுதியுடன் கவலையற்றிருக்கிறோம்.

[எட்டும்+இரண்டும்=பத்து. பத்து என்ற சொல் பக்தியைக் குறிக்கும். ஆகவே, பக்தியை அறியாத என்றும் பொருள் கூறுவதுண்டு] 54

இக்கிரந்தத்தால் சிறந்த நிஷ்டை பெறல்

94 வானு ளமர்ந்தவ ருக்கும் வருந்த வருநிலைக
டானுள ளுயுகக் குந்தர மிங்கு நமக்குளதே
கூனுள நெஞ்சுக ளாற்குற்ற மெண்ணி யிகழ்ந்திடினுந்
தேனுள பாத மலர்த்திரு மாலுக்குத் தித்திக்குமே. 55

உரை:— வானுள் அமர்ந்தவருக்கும் – ஸ்வர்க்கத்திலுள்ள இந்த்ராதிதேவருக்கும் அல்லது பரமபதத்தில் இருப்பவரான நித்யஸூரிகளுக்கும் கூட, வருந்த வரும் - மிக்க ப்ரயாஸத்தால் கிடைக்கக்கூடிய, நிலைகள் தான் உளனாய் – (இப் பிரபந்தத்திற்கூறிய) நிஷ்டைகள் தன்னிடம் இருக்கப்பெற்றவனாய், உகக்கும் தரம் – (இந்த நிஷ்டையுடையவரைக் கண்டு) மகிழும் பெருமை, இங்கு நமக்கு உளதே! – இக் கர்மபூமியில் நமக்கு உண்டாயிற்றே! (என்னே நம் பாக்கியம்!). கூன் உள நெஞ்சுகளால் – கோட்டமுள்ள (வக்ரமான) மனத்தால், குற்றம் எண்ணி இகழ்ந்திடினும் – (சிலர் இந்த க்ரந்தத்திலும் இதை எழுதிய நம்மிடத்திலும்) தோஷமிருப்பதாய் நினைத்து வெறுத்தாலும், தேன் உள பாதமலர் – தேன் நிரம்பிய திருவடித்தாமரையையுடையனான, திருமாலுக்குத் தித்திக்கும் – எம்பெருமானுக்கு மிகப் போக்யமாயிருக்கும். (மகிழ்ச்சியைச்செய்யும்.)

கருத்து:— இந்த ப்ரபந்தத்திலே கூறிய நிஷ்டைகள் இந்த்ரன் முதலிய தேவருக்கும் நித்யஸூரிகளுக்கும் எளிதில் பெறக்கூடாதனவாம். ஆசார்ய கடாக்ஷத்தால் இந்த நிஷ்டைகள் நமக்கு வரவும் இவையுடையாரைக்கண்டு மகிழவும் இக்கர்மபூமியில் நமக்கு வாய்த்ததே. என்னே நம் பாக்கியம்!!! இனி வக்ரபுத்தியுடைய சிலர் இப் பிரபந்தத்திலும் இதை இயற்றிய நம்மிடத்தும் தோஷமிருப்பதாய்க் கருதி வெறுத்தபோதிலும் எம்பெருமான்திருவுள்ளத்திற்கு இப்பிரபந்தம் மிகப் போக்கியமாகவே அமையும்.

தளை வழுவுமாதலின் 'வருமிந்நிலைகள்' என்று பாடம் கொள்ளத்தகாது. 55

ஸ்ரீ ஹயக்ரீவனே ஆசார்யனாய் நின்று உபதேசித்தமை

95 வெள்ளைப் பரிமுகர் தேசிக ராய்விர காலடியோ
முள்ளத் தெழுதிய தோலையி லிட்டனம் யாமிதற்கென்
கொள்ளத் துணியினுங் கோதென் றிகழினுங் கூர்மதியீ
ரெள்ளத் தனையுக வாதிக ழாதெம் மெழின்மதியே. 56

உரை:— வெள்ளைப் பரிமுகர் – வெள்ளையான குதிரைபோன்ற முகமுடைய ஸ்ரீஹயக்ரீவன், தேசிகர் ஆய் - ஆசார்யராக அவதரித்து, விரகால்-உபதேசமென்னும் ஸாதநத்தால் (எழுதுகோலால்), அடியோம் உள்ளத்து எழுதியது – அடியோங்களுடைய மனத்தில் எழுதிய விஷயத்தை, யாம் ஓலையில் இட்டனம் – நாம் ஏட்டில் எழுதினோம். இதற்கு என்?- (ஆதலால்) இந்த க்ரந்தத்திற்குத் தோஷம் ஏது?, கூர்மதியீர்! - கூர்மையான புத்தியுடையவர்களே!, கொள்ளத் துணியினும் – (இந்த க்ரந்தத்தின் பெருமையைக்கண்டு நீங்கள்) ஏற்றுக்கொள்ளத் துணிந்தாலும், எம் எழில் மதி-நம்முடைய (உறுதிபூண்ட) அழகிய மனம், எள் அத்தனை உகவாது – எள்ளளவுகூட மகிழ்ச்சியை அடையாது; கோது என்று இகழினும் – குற்றமுள்ளது என்று (சிலர் அஸூயையால் நினைத்து) வெறுத்தாலும், (எள்ளத்தனை) இகழாது - (நம் மனம் அவர்களை எள்ளளவும்) வெறுக்கமாட்டாது.

கருத்து:— ஸ்ரீஹயக்ரீவனே நமக்கு ஆசார்யனாய் வடிவுகொண்டு நம் உள்ளத்தில் எழுதியருளிய இவ்விஷயங்களை அனைவரும் அறிந்து உஜ்ஜீவிப்பதற்காக ஓலையில் எழுதினோம். ஆகவே, ஸ்ரீஹயக்ரீவனே நேரில் அருளிய இந்த ஸூக்திக்குத் தோஷம் ஏதும் சொல்ல வழியில்லை. அறிவாளிகளே! இந்த ஸூக்தியின் அருமையைக்கண்டு நீங்கள் ஏற்றுக் கொண்டாலும் அதனால் எம் மனம் எள்ளளவும் மகிழாது; அஸூயையால் குற்றமுள்ளதென்று வெறுத்திட்டாலும் எம் மனம் உங்களை எள்ளளவும் வெறுக்காது. ஸ்ரீ ஹயக்ரீவனையே முக்கிய கர்த்தாவாகக் கொண்டு அவதரித்த இந்நூலைக் கைக்கொள்வதால் மகிழ்பவனும், வெறுத்திடுவதால் நிக்ரஹிப்பவனும் அவனேயாம்.

உலகில் ஓலையிலிட்டதை உள்ளத்து எழுதிக்கொள்வர். நாம் பரிமுகன் நம் உள்ளத்து எழுதியதை ஓலையில் இட்டனம் என்றதன் அழகு சிந்திக்கத்தக்கது. 56

அதிகாரசங்கிரகம் - உரை முற்றிற்று

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

ஸ்ரீ :

அமிருதாசுவாதினி—உரை

சீராரர்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

[விஷயச்சுருக்கம்]

ஸாரஸாரம்முதல் முனிவாஹனபோகம் வரையில் மணிப்ரவாள நடையிலமைந்த ஸ்ரீ தேசிகனுடைய ரஹஸ்யங்கள் சில்லறைரஹஸ்யத்தின் மற்றொரு பாகமாக வழங்குகின்றன. இவற்றின் விஷயம் அடங்கியமைந்த பாசுரங்களைத் தொகுத்து ஒரு ப்ரபந்தமாக்கி "அம்ருதாஸ்வாதினி" எனப் பெயரிட்டனர் பெரியோர். அமுதம்போன்ற விஷயங்கள் தன்னுள் அடங்கப்பெற்று, நம்மை அநுபவிக்கச்செய்வதால் இது இப்பெயர்பெற்றிருக்கும்.

இதிலும் திருமந்த்ரம் முதலிய மூன்று ரஹஸ்யங்களின் தாத்பர்யம் கூறப்படுகின்றது. மேலும் ஸ்ரீமத்ராமாயணத்தின் முக்கிய ஸாரமான காகசரணாகதி, விபீஷணசரணாகதி முதலியனவும் ப்ரஸ்தாவிக்கப்படுகின்றன. வராஹநயினாருக்கும் பூமிப்பிராட்டிக்கும் இடையே நடந்த ஸம்பாஷணையால் அவதரித்த வராஹசரமசுலோகத்தின் பொருள், அஞ்ஜலியின்பெருமை முதலியனவும் இதில் கூறப்படுவதுடன் மற்ற ரஹஸ்யங்களின் விஷயங்களும் சுருக்கியருளப்பட்டும், அதியற்புதமான ஸம்பாஷணையாக அமைந்த ஒரு பாசுரத்தால் ஸ்ரீபாஷ்யகாரரின் கீர்த்தி வெளியிடப்பட்டும், அமலனாதிபிரானின் ஸாரார்த்தத்துடன் இது முடிவடைகின்றது.

வாழ்நாளின் பயன்

கட்டளைக்கலித்துறை

96 மூலங் கிளையென வொன்றிரண் டான மொழியிரண்டு
மேலோன் றிலையென நின்றவவ் வித்தகன் றன்னுரையுங்
காலங் கழிவதன் முன்னங் கருத்துறக் கண்டிடவே
ஞாலம் புகழுநந் தேசிகர் தாநமை வைத்தனரே. 1

[பாசுரம் 1-முதல் 6-வரையில் ஸாரஸாரம், திருமந்த்ராதிகாரம்]

உரை:— ஞாலம் புகழும் – உலகத்தால் புகழப்படுகின்ற, நம் தேசிகர் – நம்முடைய ஆசார்யர்கள், மூலம் கிளை என–வேரும் கிளையும் என்று சொல்லும்படி, ஒன்று இரண்டு ஆன – (முறையே) ஒரு வாக்யமாயும் இரண்டு பகுதியாயும் உள்ள, மொழி இரண்டும் – (திருமந்த்ரம், த்வயம் என்னும்) மந்த்ரங்கள் இரண்டையும், மேல் ஒன்று இலை என நின்ற – (இதற்கு) உயர்ந்தது ஒன்றும் இல்லை என்னும்படி நின்ற,

அவ் வித்தகன் தன் உரையும் – அதிசயச்செய்கையையுடைய அந்தக் கண்ணனுடையவாக்ய (மான சரமசுலோக)த்தையும், காலம் கழிவதன் முன்னம் – (நம்முடைய) வாழ்நாள் கழிவதற்கு முன்பு, கருத்து உறக் கண்டிடவே – உள்ளத்தில் பதிந்து அநுபவிக்கும்படி, ந(ம்)மை வைத்தனர் – நம்மை நிறுத்தினர்கள். (தாம்–அசை)

கருத்து:— நம் ஆசார்யர்கள் ரஹஸ்யங்கள் மூன்றையும் அவற்றின் தாத்பர்யத்தோடு நம் வாழ்நாட்களுள் நாம் அறிந்து உஜ்ஜீவிக்குமாறு செய்தனர்.

திருமந்திரத்தால் ஸ்வரூபம் முதலியவற்றை நன்கு அறிந்து பின் த்வயத்தால் ப்ரபத்தியை அநுஷ்டிக்கவேண்டியதுபற்றி அவை முறையே வேராகவும் கிளையாகவும் கூறப்பட்டன. சரமசுலோகம் வேறொன்றைத் தேடவேண்டாதபடி உபாயத்தை விளக்கி விதிப்பதால் நிகரற்றதென்னலாயிற்று. 1

திருமந்த்ரம்–ப்ரணவத்தின் அர்த்தம்

எண்சீராசிரியவிருத்தம்

97 காரணமுங் காவலனு மாகி யென்றுங்
கமலையுடன் பிரியாத நாத ஞன
நாரணனுக் கடியேஞ னடிமை பூண்ட
நல்லடியார்க் கல்லான்மற் றேருவர்க் கல்லே
ஞரணங்கள் கோண்டகமும் புறமுங் கண்டா
லறிவாகி யறிவதுமா யறுநான் கன்றிச்
சீரணிந்த சுடர்போலத் திகழ்ந்து நின்றேன்
சிலைவிசயன் றேரனைய சிறுவே தத்தே. 2

உரை:— சிலை விசயன் தேர் அனைய – (சிறந்த) வில்லையுடைய அர்ஜுநனுடைய தேரைப்போன்ற, சிறு வேதத்து – சிறிய வேதமாகிய ப்ரணவத்தில், காரணமும் – எல்லாவற்றுக்கும் மூலகாரணனும், காவலனும் ஆகி – ஸர்வரக்ஷகனுமாகி இருந்து, என்றும் கமலையுடன் பிரியாத நாதனை – எப்பொழுதும் பிராட்டியை விட்டுப் பிரியாத ஸ்வாமியான, நாரணனுக்கு நான் அடியேன் – எம்பெருமானுக்கு நான் தாஸன்; அடிமை பூண்ட நல் அடியார்க்கு அல்லால் – (பகவானுக்கு) அடிமை பெற்ற சிறந்த பாகவதரையும் தவிர, மற்று ஒருவர்க்கு அல்லேன் – வேறு ஒருவருக்கும் தாஸன் அல்லன்; ஆரணங்கள் கொண்டு - வேதங்களின் உதவியைக்கொண்டு, அகமும் புறமும் கண்டால் – (ஜீவாத்மாவாகிய என் ஸ்வரூபத்தை) உள்ளும் புறமும் ஆராய்ந்து பார்த்தால், அறிவாகி – ஜ்ஞானமே வடிவாய், அறிவதுமாய்–தர்மபூதஜ்ஞானத்தாலே மற்றைப் பொருளை அறிபவனுமாய், அறுநான்கு அன்றி – இருபத்து நான்கு தத்துவங்களாகிய அசேதநத்தில் வேறுபட்டு, சீர் அணிந்த

சுடர்போல – சிறப்புப் பொருந்திய தேஜஸ்போல, திகழ்ந்து நின்றேன்– ப்ரகாசித்து நிற்கின்றேன்.

கருத்து:— ஸர்வேசுவரன் எல்லாவற்றுக்கும் முதற்காரணமாய் நிற்பவன்; அனைத்தையும் காப்பவன்; பிராட்டியை ஒருபோதும் பிரியாதவன்; சேதநனாகிய ஜீவன் ஜ்ஞாநஸ்வரூபமாய் நிற்பவன்; ஜ்ஞாநத்தைக் குணமாகவும் கொண்டவன்; அசேதநத்திற்காட்டிலும் வேறுபட்டுநிற்பவன். இத்தகைய ஜீவனாகிய யான் எம்பெருமானுக்கு அடியன்; அவனுடைய தாஸர்களாகிய பாகவதர்களுக்கும் தாஸன்; வேறொருவனுக்கும் அடியனல்லன். இதுவே அர்ஜுநன்தேர்போன்ற ப்ரணவத்தின் ஸாரார்த்தமாம். இதுவே வேதாந்தங்களால் கண்ட பொருள்.

அர்ஜுநனுடைய தேரில், தலைவனான க்ருஷ்ணன் முன்பும் அடியனான அர்ஜுநன் பின்பும் வீற்றிருந்ததுபோல, ப்ரணவத்தில் தலைவனான பகவானைக் கூறும் அகாரம் முன்பும், அடியனான ஜீவனைக் கூறும் மகாரம் பின்பும் இருப்பதால் ப்ரணவத்திற்கு அர்ஜுநன் தேரை ஒப்பிடுவது முன்னோர்களின் வழக்கு. 2

திருமந்த்ரம்– நம: என்னும் சப்தத்தின் பொருள்

கட்டளைக்கலித்துறை

98 யானென தென்பதொன் றில்லையேன் செய்வ தவனையல்லா
லான தறிந்திடுந் தன்னடி யார்க்கெனை யாட்படுத்தித்
தானெனை நல்கி நடத்துகின் றான்றன் னருள்வழியே
நானுனை வீடுசெய் வேனென்ற நந்திரு நாரணனே. 3

உரை:— நான் உ(ன்)னை வீடு செய்வேன் என்ற – நான் உனக்கு ஸம்ஸாரபந்தத்தை நீக்கி முக்தி கொடுப்பேன் என்று உறுதிகூறிய, நம் திருநாரணன் – நம்முடைய ஸ்ரீமந்நாராயணன், தான் எனை நல்கி– தானும் என்னிடம் அன்புவைத்து, ஆனது அறிந்திடும் – தகுந்த நல்ல விஷயத்தை அறிந்தவர்களான, தன் அடியார்க்கு – பாகவதர்களுக்கும், எனை ஆட்படுத்தி – என்னைத் தாஸனாகச் செய்து, தன் அருள் வழியே– தன்னுடைய கருணை செல்லும்வழியில், நடத்துகின்றான் – (என்னை) நல்வழிப்படுத்துகின்றான். (உபாயத்தில் மூட்டி அநுஷ்டிக்கச்செய்கின்றான்.) யான் எனது என்பது – நான் என்றும் என்னுடையது என்றும் கூறுவதற்குத் தகுந்த பொருள், ஒன்று இல்லை – ஒன்றும் இல்லை; அவனை அல்லால்–அவ்வெம்பெருமானையன்றி, செய்வது என்?– செய்யத்தக்கது என்ன இருக்கின்றது?

கருத்து:— ஸ்ரீமந்நாராயணன் 'உனக்கு ஸம்ஸாரபந்தத்தைப் போக்கி முக்தியைக் கொடுப்பே'னென்று சரமசுலோகத்தில் உறுதி கூறினான். அவன் என்னிடமுள்ள அன்பினால் என்னைப் பாகவதர்களுக்கும் அடியனாக்கினான்; தன் அருளால் ப்ரபத்தியில் மூட்டி அநுஷ்

டிக்கச்செய்தான்; என்னுடைய அஹங்கார—மமகாரங்களைப் போக்கி 'நான்' 'என்னுடையது' என்று கூறுவதற்கில்லாது செய்தான். அவ்வெம்பெருமானுக்குப் பரதந்த்ரனான அடியேன் அவனருளன்றி என் செய்யவல்லேன்?

"யான் எனது இலை" என்றதால் அஹங்கார—மமகாரங்கள் கழிகையும், 'என் செய்வது' என்றதால் தனக்குச் சுதந்திரமில்லாமையும், இரண்டாவது அடியால் பாகவதர்க்கும் அடியனாயிருக்கையும், மூன்றும் அடியால் சரணாகதியும் ஆகிய அர்த்தங்கள் நமச்சப்தத்திற்கு வெளியிடப்பட்டன. 3

திருமந்த்ரம் — நாராயணசப்தத்தின் அர்த்தம்

99 யாதா மிவையனைத் தும்படைத் தேந்து மிறைவனுமாய்க்
கோதாங் குணங்க ளுடன்குறு காத குணத்தனுமாய்
மாதா பிதாவென மன்னுற வாய்க்கதி யென்னநின்றான்
போதார் திருவுடன் பொன்னருள் பூத்தநம் புண்ணியனே. 4

உரை:— போது ஆர் திருவுடன் – புஷ்பத்தில் வஸிக்கும் பிராட்டியுடன், பொன் அருள் பூத்த – சிறந்த கருணை மிகுந்தவனும், நம் புண்ணியன் – நம் புண்யமே வடிவெடுத்தாற் போன்றவனுமான எம்பெருமான், யாதாம் இவை அனைத்தும் – எவ்வகைப்பட்ட பொருளுமான இந்தச் சேதநாசேதநங்கள் எல்லாவற்றையும், படைத்து ஏந்தும் இறைவனுமாய் – ஸ்ருஷ்டித்துக் காப்பாற்றும் ஸ்வாமியாக இருந்து, கோது ஆம் குணங்களுடன் – குற்றம் எனப்படும் இழிகுணங்களுடன், குறுகாத குணத்தனுமாய் – சேராத குணமுடையனுமாக இருந்து, மாதா பிதா என – தாயும் தந்தையும் என்னலாம்படி, மன் உறவாய் – திடமான பந்துவுமாக இருந்து, கதி என்ன நின்றான் – (அவனே) கதி என்னும்படி நிற்கின்றான்.

கருத்து:— பிராட்டியுடன் கருணைக்கடலாய் நம் புண்ய ஸ்வரூபனாய் நிற்கும் எம்பெருமான் எல்லாவற்றையும் ஸ்ருஷ்டிப்பவனாகவும், காப்பவனாகவும், ஸ்வாமியாகவும், இழிகுணங்களின்றிச் சிறந்த குணங்கள் நிறைந்தவனாகவும், ஸர்வவிதபந்துவாகவும், கதியாகவும் நாராயணசப்தத்தால் அறியப்படுகின்றான். 4

திருமந்த்ரம்—நாராயணசப்தத்தின்மேலுள்ள சதுர்த்தியின் பொருள்

எண்சீராசிரியவிருத்தம்

100 இருவிலங்கு கழித்திடரா முடலந் தன்னி
லிலங்குநடு நாடியினா லெம்மை வாங்கி
யொருவிலங்கு நெறியல்லா வழியான் மன்னு
முயர்வானி லேற்றியுயிர் நிலையுந் தந்து

பேருவிலங்கா மருடன்ஞற் றன்ன டிக்கீழ்ப்
பிரியாத வமரருடன் பிணைத்துத் தன்ஞ
ருருவிலங்கு மிசைவிக்கு மும்பர் போக
முகந்துதருந் திருமாலே யுகந்தோ நாமே. 5

உரை:— இரு விலங்கு கழித்து – (புண்யபாபகர்மங்களாகிய) இரண்டு விலங்குகளையும் ஒழித்து, இடர் ஆம் உடலம் தன்னில்– (முக்திக்குத்) தடையாயுள்ள இந்தச் சரீரத்தில், இலங்கும் நடு நாடியினுல் – ப்ரகாசிக்கின்ற நடுநாடியாகிய ப்ரஹ்மநாடியினுல், எம்மை வாங்கி – ஜீவாத்மாவாகிய எம்மை (இச்சரீரத்தினின்று பிரித்து) எடுத்து, ஒரு விலங்கு நெறி அல்லா வழியால் – (தூமாதிமார்க்கத்தைப் போல்) ஸம்ஸாரத்திலேயே மறுபடி பிணைக்கும் வழியாக இல்லாத அர்ச்சிராதிமார்க்கத்தால், மன்னும் உயர் வானில் ஏற்றி–சாசுவதமான உயர்ந்த பரமபதத்தில் ஏற்றிவைத்து, உயிர் நிலையும் தந்து – ஜீவனுக்குக் (கர்மஸம்பந்தத்தால் இதுவரை மறைந்திருந்த) குணங்களையும் கொடுத்து, பெருவிலங்கு ஆம் அருள் தன்னுல்– (பக்தர்களை விடாமல் கட்டிப் பிடித்துக் காப்பதால்) பெரிய விலங்குபோன்ற க்ருபையினுல், தன் அடிக்கீழ்ப் பிரியாத அமரருடன் பிணைத்து – தன் திருவடிக்கீழ்(க்ஷணமும்)பிரியாதிருந்து கைங்கர்யம் செய்யும் நித்யஸூரிகளுடன் ஒன்றுகூட்டி, அங்கு – பரமபதத்தில், தன் ஆர் உருவில்– தன்னுடைய பரிபூர்ணமான ஸ்வரூபத்தில், மிசைவிக்கும் உம்பர் போகம் – ஊட்டும் நித்யஸூரிகளின் அநுபவத்தை, உகந்து தரும் திருமாலே – (நம்மிடம்) மகிழ்ந்து கொடுக்கும் எம்பெருமானை(ப்பற்றி), நாம் உகந்தோம் - நாம் (அறிந்து) மகிழ்ந்தோம்.

கருத்து:— ஸ்ரீமந்நாராயணன் உபாயத்தை அநுஷ்டித்த ஜீவனுடைய புண்யபாபங்களாகிய கர்மங்களை ஒழிக்கின்ருன்; பின், முக்திக்குத் தடையாகவிருந்த இச்சரீரத்தினின்று ப்ரஹ்மநாடியால் ஜீவாத்மாவை எடுத்து அர்ச்சிராதிமார்க்கத்தால் பரமபதத்தை அடைவிக்கின்ருன்; கர்மஸம்பந்தத்தால் மறைந்துகிடந்த குணங்களைத் தருகின்ருன்; ஜீவன் மறுத்தாலும் வலிந்து பிடித்து இழுத்து நன்மை செய்யக் கடவதான தன் க்ருபையால் இந்த ஜீவனை நித்யஸூரி கோஷ்டியில் ஒன்றுசேர்த்துத் தன் பரிபூர்ணுநுபவத்தைத் தருகின்ருன். இவ்வர்த்தமே நாராயணசப்தத்தின்மேலுள்ள நான்காம்வேற்றுமை யுருபின் பொருளாகும். 5

திருமந்த்ரத்தின் திரண்டபொருள்

101 உறவையிசைந் திறையில்லா வோருவற் கேன்று
மோண்சுடரா யோரேழுத்தி லோங்கி நின்ரேந்
துறவறமுந் தூமதியுந் துயரந் தீர்வுந்
தூயவர்கட் கானமையு மிரண்டி லுற்ரே

மறமுயலு மனைத்துறவா யனைத்து மேந்து
மம்புயத்தாள் கணவனைநா மணுகப் பெற்றோம்
பிறவியறுத் தடிசூடி யடிமை யெல்லாம்
பிரியாத வமரருடன் பெற்றோ நாமே. 6

உரை:— ஓர் எழுத்தில் – ஓர் எழுத்தாகிய ப்ரணவத்தில், இறை இல்லா ஒருவற்கு – (தனக்கு ஒரு) நாயகன் இல்லாத எம்பெருமானோடு, என்றும் உறவை இசைந்து-எப்போதும் (நமக்கு உள்ள சேஷத்வம் என்னும்) ஸம்பந்தத்தை ஏற்றுக்கொண்டு, ஒண் சுடராய் – அழகிய ப்ரகாசஸ்வரூபமாய், ஓங்கி நின்றோம் – உயர்ந்து நின்றோம்; இரண்டில் – இரண்டு அக்ஷரமாயுள்ள நம: சப்தத்தில், துறவறமும் – (அஹங்கார மமகாரங்களை) விடுகையாகிய முக்கியதர்மமும், தூமதியும் – பரிசுத்தமான ஜ்ஞாநமாகிய சரணாகதியும்,துயரம் தீர்வும்-(தன்னைஸ்வதந்த்ரனாய் நினைத்தலாகிய) துன்பம் நீங்குதலும், தூயவர்கட்கு ஆனமையும் – பரிசுத்தரான பாகவதர்க்கு அடியனானமையும், (ஆகிய அர்த்தங்களை), உற்றோம் – அடைந்தோம்;(மேல் நாராயணசப்தத்தில்) அறம் முயலும்– (சரணமடைந்தவனைக் காப்பதாகிய) தர்மத்திலேயே யத்நமுள்ளவனும், அனைத்து உறவாய் அனைத்தும் ஏந்தும் – ஸகலவிதபந்துவுமாய் ஸகல வஸ்துக்களையும் ரக்ஷிப்பவனுமான, அம்புயத்தாள் கணவனை – தாமரையில் வஸிக்கும் பிராட்டியின் கணவனான எம்பெருமானை, நாம் அணுகப் பெற்றோம் – நாம் நெருங்கி அனுபவிக்கும் பாக்யத்தைப் பெற்றோம்; (மேல் நான்காம் வேற்றுமையில்) பிறவி அறுத்து – மறுபிறவி ஒழியப்பெற்று, அடி சூடி – திருவடிகளை (நம் முடியில்) சூடி, அடிமை எல்லாம் – கைங்கர்யங்கள் முழுவதையும், பிரியாத அமரருடன்- (பகவானை க்ஷணமும்) பிரியாத நித்யஸூரிகளுடன் (சேர்ந்து), நாம் பெற்றோம் – நாம் செய்யப்பெற்றோம்.

கருத்து:— ப்ரணவத்தால், ஜ்ஞாநஸ்வரூபமாய் நிற்கும் நமக்கு எம்பெருமானோடு என்றைக்கும் உள்ள சேஷத்வம் என்ற ஒரு ஸம்பந்தத்தை அறிந்து பெருமைபெற்றோம். நமச்சப்தத்தால் அஹங்கார – மமகாரங்கள் ஒழியப்பெறுதலும், சரணாகதியும், தன்னை ஸ்வதந்த்ரனாய் நினைத்தல் நீங்குதலும், பாகவதர்களுக்கு அடிமையாந்தன்மையுமாகிய அர்த்தங்களை அநுஸந்தித்தோம். நாராயண சப்தத்தால், ஸகலவித பந்துவாய் ஸகலவஸ்துக்களையும் ரக்ஷிப்பவனுமான ஸ்ரீமந்நாராயணனுடைய குணங்கள் முதலியவற்றை அறியப்பெற்றோம், மேலுள்ள நான்காம்வேற்றுமையுருபால், ஸம்ஸாரம் ஒழிந்து எம்பெருமான் திருவடிகளைத் தலையிற் சூடி நித்யஸூரிகளோடு சேர்ந்து இடைவிடாது கைங்கர்யம்செய்து அநுபவித்தலாகிய அர்த்தத்தை உணர்ந்தோம். 6

த்வயம்—சரணுகதியைப் பற்றுதல்

102 கருமமென ஞானமென வதனுற் கண்ட
வுயிர்கவருங் காதலெனக் கானி லோங்கு
மருமறையாற் றருநிலேயி லிந்நா ளெல்லா
மடியேனே யலேயாத வண்ண மெண்ணித்
தருமமுடை யாருரைக்க யான றிந்து
தனக்கென்று வடிமைக்காம் வாழ்ச்சி வேண்டித்
திருமகளோ டொருகாலும் பிரியா நாதன்
றிண்கழலே சேதுவெனச் சேர்கின் றேனே. 7

[பாசுரம் 7, 8, 9– ஸாரஸாரம், த்வயாதிகாரம்]

உரை:— கருமம் என ஞானம் என–கர்மயோகமும் ஜ்ஞாநயோகமும், அதனுல் கண்ட – அவை இரண்டாலும் ஸாக்ஷாத்கரித்த, உயிர் – ஜீவாத்மாவை, கவரும் – வசப்படுத்தித் தன்னிடத்தில் ஈடுபடச் செய்கின்ற, காதல் என – பக்தியோகமென்னும் உபாயமுமாகிய, கானில் ஓங்கும் – (அநுஷ்டிக்க அரியனவாயிருப்பதால்) காடுபோன்ற இவற்றில் உயர்ந்து நிற்பதாயும், அருமறையால் தரும் நிலேயில் - அருமையான வேதத்தால் உபதேசிக்கப்படுவதுமான நிஷ்டையில், இந்நாள் எல்லாம்- இந்த நாள் முழுவதும், அடியேனே அலேயாத வண்ணம் எண்ணி - தாஸனுகிய யான் அநுஷ்டிக்கமுயன்று துன்பமுறுதபடி திருவுள்ளங்கொண்டு, தருமமுடையார் உரைக்க – தர்மத்தை அறிந்த ஆசார்யர்கள் (அடியேனுக்குச் சரணுகதியை) உபதேசிக்க, யான் அறிந்து, அடியேன் (அதை) அறிந்துகொண்டு, தனக்கு என்று அடிமைக்கு ஆம் – எனக்கு என்றுது (மமகாரம் இல்லாமல்) செய்யும் கைங்கர்யத்திற்குத் தக்க, வாழ்ச்சி வேண்டி – வாழ்க்கையை விரும்பி, திருமகளோடு ஒருகாலும் – பிரியா நாதன் – பிராட்டியை விட்டு எப்பொழுதும் பிரியாத எம்பெருமானுடைய, திண்கழலே சேது என – வலிய திருவடிகளே (ஸம்ஸாரத்தைக் கடக்கும்) அணே என்று உறுதிகொண்டு, சேர்கின்றேன் – (அவற்றை உபாயமாக) அடைகின்றேன்.

கருத்து:— வேதங்களிற் கூறப்பட்ட கர்மயோகம் ஜ்ஞாநயோகம் பக்தியோகம் ஆகிய கடினமான உபாயங்களே அடியேன் செய்யத்தொடங்கி வீண் துன்பமுறுதபடி செய்யவேண்டுமென்று ஆசார்யர்கள் திருவுள்ளங்கொண்டு மிக எளிய ப்ரபத்தியை அடியேனுக்கு உபதேசித்தருளினர். அதை யறிந்த அடியேன் பரமபதத்தில் அஹங்காரமமகாரங்களின்றி நித்ய கைங்கர்யம் செய்யும் வாழ்க்கையைப்பெற விரும்பினேன்; பின், ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடிகளே ஸம்ஸாரத்திற்குத் தக்க அணேயாகுமெனத் துணிந்து அவற்றை உபாயமாகப் பற்றினேன்.

கர்மயோகத்தாலும் ஜ்ஞாநயோகத்தாலும் ஜீவாத்மா ஸாக்ஷாத்கரிக்கப்படுவதால் 'அதனுல் கண்ட' என்றுர், இந்த மூன்று யோகங்களும்

அநுஷ்டிக்க அரியனவாயிருத்தலால் அவற்றை வநமாக வர்ணித்தார். அவ்வுபாயங்களில் நிஷ்டையாவது – அவற்றில் ஈடுபட்டுநிற்றல். 7

த்வயம்—ஸ்ரீசப்தத்தின் ஆறு பொருள்கள்

103 வினைவிடுத்து வியன்குணத்தா லெம்மை யாக்கி
வெருவுரைகேட் டவைகேட்க விளம்பி நாளுந்
தனையனைத்து மடைந்திடத்தா னடைந்து நின்ற
தன்றிருமா துடனிறையுந் தனியா நாத
னினைவழிக்கும் வினைவழிக்கு விலக்காய் நிற்கு
நிகரில்லா நேடுங்குணங்க ணிலைபெ றத்தன்
கனைகழற்கீ ழடைக்கலமாக் காட்சி தந்து
காரணனுந் தன்காவல் கவர்கின் றானே. 8

உரை:— வினை விடுத்து – (தன்னை அடைந்தவர்களின்) கர்மங்களைப் போக்கி, வியன் குணத்தால் எம்மை ஆக்கி – அதிசயிக்கத்தக்க (தன் சிறந்த கருணை முதலிய) குணத்தால் எம்மைப் பக்குவப் படுத்தி, வெருவுரை கேட்டு –('பாவிகளான எங்களை எம்பெருமான் ஏற்றுக்கொள்ளச் செய்யவேண்டும்' என்று தாஸர்கள்) அச்சத்துடன் புலம்பும் குரலைக்கேட்டு, அவை கேட்க விளம்பி – அந்தப் புலம்பல்களை எம்பெருமான் கேட்க விண்ணப்பித்து, நாளும் தனை அனைத்தும் அடைந்திட – எப்பொழுதும் தன்னை எல்லாம் சரணமடைய, தான் அடைந்து நின்ற – (அவர்களை உஜ்ஜீவிப்பிக்கைக்காகத்) தான் எம்பெருமானை அடைந்து நின்றவளான, தன் திருமாதுடன் – தனக்கே உரியளான பிராட்டியுடன், இறையும் தனியா நாதன் – க்ஷணமும் பிரியாதிருக்கும் எம்பெருமான், நினைவு அழிக்கும் வினை வழிக்கு – நல்ல அறிவைப் போக்குகிற பாபமார்க்கத்திற்கு, விலக்காய் நிற்கும் – தடையாய் நிற்பவையும், நிகர் இல்லா – ஒப்பற்றவையுமான, நெடுங் குணங்கள் நிலைபெற – அளவற்ற (தன்னுடைய) குணங்கள் நிலைபெற்று நிற்பதற்காக, தன் கனை கழல் கீழ் – ஒலிக்கும் வீரக்கழலையணிந்த தன் திருவடிகளின் கீழ், அடைக்கலமாக் காட்சி தந்து–நம்மை ரக்ஷிக்கப்பட வேண்டிய வஸ்துவாகக் கொண்டு ஸேவையைக் கொடுத்து, காரணனும் தன் காவல் – ஸர்வகாரணனை தன்னுடைய ரக்ஷண ஸ்வபாவத்தை, கவர்கின்றான் – (நிலைநாட்டிக்கொள்ள) விரும்புகின்றான்.

கருத்து:— பிராட்டியைவிட்டு க்ஷணமும் பிரியாதுநிற்கும் ஸ்ரீமந் நாராயணன் சேதநர்களை உஜ்ஜீவிக்கச் செய்தால்தான் தன் திருக் கல்யாண குணங்கள் நிலைபெறுமெனக் கண்டான்; ஜீவர்களை ப்ரபத்தியிலே மூட்டித் தன் திருவடிகளின்கீழ்க் காக்கப்படவேண்டியவர்களாகக் கொண்டு 'ரக்ஷகன்' என்ற தன் பெயரை நிலைநாட்டிக்கொள்கின்றான்.

த்வயத்தின் முற்பகுதியில் பிராட்டியைச் சொல்லும் ஸ்ரீசப்தத்திற்கு ஆறு அர்த்தங்கள் பஞ்சராத்ரசாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ளன. அவை शृणाति–श्रीणाति, शृणोति–श्रावयति, श्रीयते–श्रयते என்ற வ்யுத்பத்தியைக் கொண்டு வந்தவை. அவ்வர்த்தங்களை இப்பாசுரத்தில் முற்பகுதியால் முறையே வெளியிட்டருளினர். விளக்கத்தை 304-வது பாசுரவுரையிற் காண்க. 8

த்வயம்—ஸ்ரீரங்கநாதனைப்பின்று அருள்புரிதல்

104 என்னதியான் செய்கின்றே னென்னு தாருக்
கின்னடிமை தந்தளிப்பா னிமையோர் வாழும்
பொன்னுலகிற் றிருவுடனே யமர்ந்த நாதன்
புனலாரும் பொழிலரங்கந் திகழ மன்னித்
தன்னகல மகலாத தகவா லோங்குந்
தகவுடனே தன்கருமந் தானே யெண்ணி
யன்னையென வடைக்கலங்கொண் டஞ்ச றந்தென்
னழலாற நிழலார வளிக்கின் றானே. 9

உரை:— என்னது, யான் செய்கின்றேன் என்னுதாருக்கு – "இப்பொருள் என்னுடையது" "இதை யான் செய்கின்றேன்" என்னும் மமகார - அஹங்காரங்களில்லாதவர்களுக்கு, இன் அடிமை தந்து அளிப்பான்- இனிய கைங்கர்யத்தைக் கொடுத்துக் காப்பதற்காக, இமையோர் வாழும் பொன் உலகில் – நித்யஸூரிகள் வஸிக்கும் (பரமபதமாகிய) சிறந்த லோகத்தில், திருவுடனே அமர்ந்த நாதன் - பிராட்டியுடன் எழுந்தருளியுள்ள எம்பெருமான், புனல் ஆரும் பொழில் அரங்கம் திகழ மன்னி – நீர்வளம் நிறைந்த சோலை சூழ்ந்த திருவரங்கஸ்தலம் விளங்கும்படி நிலைபெற்றிருந்து, தன் அகலம் அகலாத - தன்னுடைய திருமார்பை விட்டுப் பிரியாத, தகவால் ஓங்கும் - கருணை வடிவமான பிராட்டியின் ஸம்பந்தத்தால் வ்ருத்தியடைகின்ற, தகவுடனே - கருணையுடன், தன் கருமம் தானே எண்ணி - (என்னைக் காப்பதாகிய) தன் கடமையைத் தான் நினைத்து, அன்னை என அடைக்கலம் கொண்டு - பெற்ற தாய் என்னும்படி (என்னைக்) காக்கவேண்டிய வஸ்துவாகக்கொண்டு, அஞ்சல் தந்து – அபயப்ரதாநம் செய்து, என் அழல் ஆற - என் (ஸம்ஸார) தாபமெல்லாம் தீரும்படி, நிழல் ஆர - தன் திருவடிநிழலை நிறையத் தந்து, அளிக்கின்றான் - ரக்ஷிக்கின்றான்.

கருத்து:— ஸ்ரீவைகுண்டத்தில் நித்யஸூரிகளால் இடைவிடாது கைங்கர்யம் செய்யப்பெற்ற ஸ்ரீமந்நாராயணன், அஹங்கார – மமகாரங்களின்றித் தன்னையடைந்தவர்க்குத் தன் கைங்கர்யத்தைச் செய்யும் பாக்யத்தை இங்கேயே அளிக்க நினைந்து ஸ்ரீரங்கத்தில் திருப்பள்ளி கொண்டு நித்யவாஸம் செய்தருள்கின்றான்; அவனுக்குச் சேதநர்பால் இயற்கையாகவுள்ள கருணை தன் திருமார்பில் கருணரூபிணியாய் விளங்கும் பிராட்டியின் ஸம்பந்தத்தால் மேன்மேலும் வளர்கின்றது.

அத்தகைய கருணையுடைய அவன் எனக்குப்பெற்ற தாய்போல்நின்று, காப்பதைத்தன் கடமையாகக்கொண்டு அபயமளித்து, என் ஸம்ஸார தாபமெல்லாம் தீரும்படி தன் திருவடிநிழலைத் தந்தருள்கின்றான். 9

சரமசுலோகம்—கண்ணன் உபதேசித்தல்

105 ஒண்டோடியா டிருமகளுந் தானு மாகி
யொருநினைவா லீன்றவுயி ரெல்லா முய்ய
வண்டுவரை நகர்வாழ வசுதே வற்காய்
மன்னவற்குத் தேர்ப்பாக னாகி நின்ற
தண்டுளவ மலர்மார்பன் றானே சொன்ன
தனித்தருமந் தானெமக்காய்த் தன்னை யென்றுங்
கண்டுகளித் தடிசூட விலக்காய் நின்ற
கண்புதையல் விளையாட்டைக் கழிக்கின் றானே. 10

[பாசுரம் 10-முதல் 14-வரை ஸாரஸாரம், சரமசுலோகாதிகாரம்]

இந்தப் பாசுரத்திற்கு உரையும் கருத்தும் தொடரெண் 85-வது பாசுரத்திற் காண்க. 10

சரமசுலோகம்—ப்ரபத்தியில் மூட்டுதல்

கட்டளைக்கலித்துறை

106 துய்ய மனத்தர் துறையணு காத துணையிலியே
னைய மறுத்துன தாணை கடத்த லகற்றினைநீ
கையமர் சக்கரக் காவல காக்குந் திருவருளால்
வைய மளந்த வடிக்கீ ழடைக்கலம் வைத்தருளே. 11

உரை:—கை அமர் சக்கரக் காவல! – திருக்கையில் அமர்ந்துள்ள சக்கரத்தால் (அடியார்களைக்) காத்தலில் வல்லவனே!, துய்ய மனத்தர் துறை அணுகாத - பரிசுத்தமான மனத்தையுடைய உயர்ந்த அதிகாரிகளால் அநுஷ்டிக்கப்படுகிற (பக்தியோகம் முதலிய) உபாயத்தில் நெருங்குவதற்குக்கூட முடியாதவனும், துணையிலியேன் – வேறு கதியற்றவனுமான எனக்கு, ஐயம் அறுத்து - (பலன் பெறுவதில் உள்ள) ஸந்தேஹங்களைப்போக்கி, உனது ஆணை கடத்தல் – உன்னுடைய கட்டளையை மீறி நடப்பதாகிய அபராதத்தை, நீ அகற்றினை – நீ போக்கிவிட்டாய். (இனி நீ செய்யவேண்டியது யாதெனில்) காக்கும் திரு அருளால் – (உலகமுழுதும்) காக்கவல்ல உன் சிறந்த கிருபையால், வையம் அளந்த அடிக் கீழ் – (முன் த்ரிவிக்ரமனாகி) உலகத்தை அளந்த திருவடிகளின் கீழே, அடைக்கலம் வைத்தருள் - (என்னைக்) காக்க வேண்டிய பொருளாக வைத்து அருளவேண்டும்.

கருத்து: – திருக்கையில் திருவாழியைக்கொண்டு ரக்ஷகனாய் நிற்பவனே! விசேஷஜ்ஞானத்தையும் சக்தியையும் பெற்ற அதிகாரி

களுக்குரிய பக்தியோகம் முதலியவற்றைச் செய்யும் ஆற்றலும் உன்னைத்தவிர வேறு கதியும் இல்லாத அடியேனுக்குப் பலன் பெறுவதிலுள்ள ஸந்தேஹத்தைப்போக்கி இனி உன்னிடம் அபராதப்படாதவாறு செய்தருளினாய். உலகமுழுதையும் தன் நிழலில் ஒதுங்குமாறு அளந்தருளின உன் திருவடியின்கீழ், உபாயத்தை அநுஷ்டித்த என்னையும் காக்கவேண்டிய ஒரு வஸ்துவாகக் கொள்ளவேண்டும். *11*

சரமசுலோகம்—முக்திபெறத் துடித்தல்

எண்சீராசிரியவிருத்தம்

107 அறியாத விடைச்சியரு மறியும் வண்ண
மம்புயத்தா ளுடனந்நா ளவத ரித்த
குறையாது மில்லாத கோவிந் தாநின்
குரைகழற்கீ ழடைக்கலமாங் குறிப்புத் தந்தாய்
வெறியாரு மலர்மகளு நீயும் விண்ணில்
விண்ணவர்க ளடிசூட விருக்கு மேன்மை
குறையாத வினையகற்றி யடிமை கொள்ளக்
குறுகவோரு நன்னாணீ குறித்தி டாயே. 12

உரை:— அறியாத இடைச்சியரும் - ஜ்ஞாநம் இல்லாத இடைப்பெண்களும், அறியும் வண்ணம் - (தன்னை) அறிந்து அநுபவிக்கும்படி, அம்புயத்தாளுடன் அந்நாள் அவதரித்த – தாமரையில் வஸிப்பவளான பிராட்டியுடன் முன்பு (இவ்வுலகில்) அவதரித்தவனும், குறை யாதும் இல்லாத கோவிந்தா! – குறைவு ஒன்றும் இல்லாமல் பரிபூர்ணனுமான எம்பெருமானே!, நின் குரை கழல் கீழ் – உன்னுடைய (கழல்) ஒலிக்கின்ற திருவடிகளின் கீழ், அடைக்கலம் ஆம் குறிப்புத் தந்தாய்–காக்கப்படவேண்டிய வஸ்துவாக ஆகும்படியான உள்ளக் கருத்தை (எனக்கு)க் கொடுத்தாய்; வெறி ஆரும் மலர் மகளும் நீயும் – வாஸனை நிறைந்த தாமரையில் உள்ள பிராட்டியும் நீயுமாக, விண்ணவர்கள் அடி சூட – நித்யஸூரிகளும் முக்தர்களும் உன் திருவடிகளைத் தம் முடியிற் சூடிக் கைங்கர்யம் செய்ய, விண்ணில் இருக்கும் மேன்மை - ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளியுள்ள நிலையில் நின்று, குறையாத வினை அகற்றி – எங்களிடம் குறையாது நிறைந்துள்ள கர்மங்களை ஒழித்து, அடிமை கொள்ள - (எங்கள்) கைங்கர்யத்தையும் நீ ஏற்பதற்கு, குறுக ஒரு நல் நாள் – விரைவில் கிட்டும்படி ஒரு நல்ல காலத்தை, நீ குறித்திடாய் – நீ குறிப்பிட்டருளவேண்டும்.

கருத்து:— விசேஷஜ்ஞாநம் இல்லாத இடைப்பெண்களும் தன் பெருமையை அறிந்து ஈடுபடுமாறு பிராட்டியோடு முன்பு அவதரித்து அதனால் குறைவில்லாது பரிபூர்ணனாய்ப் ப்ரகாசிப்பவனே! உன் திருவடிகளைச் சரணமடைவதற்கேற்ற நல்ல எண்ணத்தை எனக்குக்

கொடுத்தருளினாய். ஸ்ரீவைகுண்டத்தில் நித்யஸூரிகளும் முக்தர்களும் இடைவிடாது செய்யும் கைங்கர்யத்தைப் பிராட்டியுடன் ஏற்றுநிற்கும் உனக்கு அதே நிலையில், நானும் கர்மங்கள் நீங்கப் பெற்று அத்தகைய கைங்கர்யம் செய்யுமாறு ஒரு நல்ல காலத்தை விரைவில் கிட்டும்படி செய்தருள்வாயாக. *12*

மூன்று ரஹஸ்யங்கள் காட்டும் அர்த்தங்கள்

108 தத்துவமுஞ் சாதனமும் பயனுங் காட்டுந்
 தாரமுத லிருநான்குந் தன்க ருத்தான்
முத்திவழி நாமுயலும் வகையே காண
 முகுந்தனிசைத் தருள்செய்த வைந்நா லைந்தும்
பத்திதனிற் படிவில்லார் பரஞ்சு மத்தப்
 பார்த்தன்றேர் முன்னேதாங் தாழ நின்ற
வுத்தமனு ருத்தமநல் லுரைநா லேட்டு
 முணர்ந்தவர்தா முகந்தெம்மை யுணர்வித் தாரே. 13

உரை:— தத்துவமும் சாதனமும் பயனும் காட்டும் – தத்துவத்தையும் உபாயத்தையும் பலனையும் வெளியிடுகின்ற, தாரம் முதல் இரு நான்கும் – ப்ரணவத்தை முதலாகக்கொண்ட எட்டு அக்ஷரங்கள் அமையப்பெற்ற திருமந்த்ரத்தையும், முத்திவழி – மோக்ஷத்தின் உபாயத்தில், நாம் முயலும் வகையே காண – நாம் அநுஷ்டிக்கும் ப்ரகாரத்தைக் காண்பதற்காக, முகுந்தன் தன் கருத்தால் – எம்பெருமான் தன் திருவுள்ளத்தால், இசைத்து அருள் செய்த – (வேதத்தில் பிரிந்திருந்த இரு பாகங்களை) ஒன்றுகூட்டி (உலகுக்கு) அருள் புரிந்த, ஐந்நாலைந்தும் – இருபத்தைந்து அக்ஷரங்கள் அமைந்த த்வயத்தையும், பத்திதனில் படிவு இல்லார் – பக்தியோகத்தில் ஈடுபடமுடியாதவர்கள், பரம் சுமத்த – (தம்மைக்) காக்கும் பொறுப்பை (அவன்மீது) சுமத்த, பார்த்தன் தேர் முன்னே – அர்ஜுநனுடைய தேரின் முன்னே, தாழ நின்ற – (பாகனாகத்) தாழ்ந்து நின்றவனான, உத்தமனுர் – ஸர்வேசுவரனுடைய, உத்தம நல் உரை நாலெட்டும் – உயர்ந்த நல்லுபதேசமாகிய முப்பத்திரண்டு அக்ஷரங்கள் பொருந்திய சரமசுலோகத்தையும், உணர்ந்தவர் – (அர்த்தத்துடன்) அறிந்த ஆசார்யர்கள், எம்மை உகந்து– நம்மை விரும்பி, உணர்வித்தார் – உபதேசித்தனர்.

கருத்து:— எட்டு அக்ஷரங்கொண்ட திருமந்த்ரம் தத்துவத்தையும் உபாயத்தையும் புருஷார்த்தத்தையும் காட்டும். வேதத்தில் தனித்துக் கிடந்த இரண்டு பகுதிகளை எம்பெருமான் தானே ஒன்றாக்கி அருள்புரிந்த இருபத்தைந்து அக்ஷரங்கொண்ட த்வயம் ப்ரபத்தியை நாம் அநுஷ்டிக்கவேண்டும் முறையைக் காட்டும். அர்ஜுநனது தேரில் பாகனாய் நின்று தன் எளிமையைக் காட்டிய கண்ணன் தானே அருளிச்செய்த முப்பத்திரண்டு அக்ஷரங்கொண்ட சரம

சுலோகம் பக்தியோகத்தில் சக்தியற்ற ப்ரபந்நர்கள் சுமத்திய பாரத்தைக் கண்ணன் ஏற்றுக்கொண்டு அந்த அந்த உபாயங்களின் ஸ்தாநத்தில் நிற்கும் நிலையைக் கூறும். இந்த ரஹஸ்யங்களின் அர்த்தத்தை ஆசார்யர்கள் நன்கு உணர்ந்து அன்புடன் நமக்கும் உபதேசித்தருளினர். தாம்—அசை. *13*

ஆசார்யர்களின் பலனை எதிர்பாராத தன்மை

கட்டளைக்கலித்துறை

109 **பரக்கும் புகழ்வரும் பைம்பொருள் வாய்த்திடும் பத்தர்களா**
யிரக்கின் றவர்க்கிவை யீந்தா லறமுள தென்றியம்பார்
கரக்குங் கருத்துடைத் தேசிகர் கன்றென நம்மையெண்ணிச்
சுரக்குஞ் சுரவிகள் பொற்சொரி கின்றனர் சொல்லமுதே. 14

உரை:— கரக்கும் கருத்துடைத் தேசிகர் – (ரஹஸ்யார்த்தங்களை) ரஹஸ்யமாய் வைத்துக்கொள்ளத் திருவுள்ளங்கொண்ட நம் ஆசார்யர்கள், பத்தர்களாய் இரக்கின்றவர்க்கு – பக்தியுள்ளவர்களாய் வந்து ப்ரார்த்திக்கும் அதிகாரிகளுக்கு, இவை ஈந்தால் – இந்த ரஹஸ்யார்த்தங்களை உபதேசித்தால், பரக்கும் புகழ் வரும் – (நாட்டில்) பரவுகின்ற கீர்த்தி உண்டாகும்; பைம்பொருள் வாய்த்திடும் – மிகுந்த செல்வம் கிடைக்கும்; அறம் உளது – புண்யமும் உண்டாகும்; என்று இயம்பார் – என்று (நினைத்து) உபதேசிக்கமாட்டார்கள்; நம்மைக் கன்று என எண்ணி – நம்மைக் கன்றுபோல் நினைத்து, சுரக்கும் சுரவிகள்போல் – (தம் கன்றுக்குப் பாலைப்) பெருக்கும் காமதேனுக்கள் போல், சொல் அமுது – உபதேசமாகிய அமுதத்தை, சொரிகின்றனர்– பொழிகின்றனர்.

கருத்து:— ஆசார்யர்கள் ரஹஸ்யார்த்தங்களை அபாத்திரத்தில் உபதேசிக்காமல் சேமித்துவைத்திருக்கின்றனர்; மிக்க ஆசார்ய பக்தியுடன் வந்து பிரார்த்திக்கும் நம்போன்ற சிஷ்யர்களுக்கு அவ்வர்த்தங்களைப் பொழிகின்றனர். இவ்வாறு அவர்கள் உபதேசிப்பது தன் கன்றுக்குப் பாலைச்சுரக்கும் காமதேனுவைப்போல் அருளால் மட்டுமேயன்றி, தம் புகழ் நாட்டில் பரவுவதையோ, செல்வம் சேருவதையோ, புண்யம் வருவதையோ கருதியன்று. *14*

ஸ்ரீமந்நாராயணனே உபாயம்

110 **சோகந் தவிர்க்குஞ் சுருதிப் பொருளொன்று சொல்லுகின்றே**
நாகந் தனக்கு மிராக்கதர்க் குந்நமக் குஞ்சரணு
மாகண் டலன்மக னுகிய வாவலிப் பெறியவோர்
காகம் பிழைத்திடக் கண்ணழி வேசெய்த காகுத்தனே. 15

[பாசுரம் 15-முதல் 19-வரை அபயப்ரதாநஸாரம்]

உரை:— சோகம் தவிர்க்கும்- ஸகலதுக்கங்களையும் ஒழிக்கக் கூடிய, சுருதிப் பொருள் ஒன்று - வேதத்தின் ஸாரார்த்தம் ஒன்றை, சொல்லுகின்றோம் – வெளியிடுகின்றோம். (அதாவது—) ஆகண்டலன் மகன் ஆகிய – இந்த்ரனுடைய புத்திரனாகிய, ஆவலிப்பு ஏறிய – கர்வம் கொண்ட, ஓர் காகம் பிழைத்திட – ஒரு காகன் குற்றம் செய்ய, (அவன்) உயிர்வாழுமாறு, கண் அழிவே செய்த காகுத்தனே – ஒரு கண்ணை மாத்திரம் அழித்த இராமபிரான் ஒருவனே, நாகம் தனக்கும்- ஸ்வர்க்கலோகத்திலுள்ள தேவர்களுக்கும், இராக்கதர்க்கும்-ராக்ஷஸர்களுக்கும், நமக்கும் - (முக்தியைவிரும்பும்) நமக்கும், சரண் ஆம் – உபாயமாக ஆவான். (நாகம் – இடவாகுபெயர்.)

கருத்து:— இந்திரனுக்குப் புதல்வனாய் மிக்க அஹங்தைகொண்டு பிராட்டியின் திருவடிகளில் பெரும்பிழைசெய்த காகனையும் உயிரைப்போக்காது ஒரு கண்ணைமாத்திரம் அழித்துக் காத்தருளிய ஸ்ரீராமனே தேவர்களுக்கும் ராக்ஷஸர்களுக்கும் நம்போன்ற சேதநருக்கும் உபாயமாவான். இதுவே ஸகல துக்கங்களையும் போக்க வல்ல வேதத்தின் ஸாரார்த்தம். *15*

இராமபிரான் செய்த அபயப்ரதாநம்

எண்சீராசிரியவிருத்தம்

111 * ஒருக்காலே சரணாக வடைகின் றூற்கு
முனக்கடிமை யாகின்றே னென்கின் றூற்கு
மருக்காதே யனைவர்க்கு மனைவ ராலு
மஞ்சேலென் றருள்கொடுப்ப னிதுதா னேது
மிருக்காலு மெழின்முனிவர் நினைவி னாலு
மிவையறிவார் செயலுடனென் னிசைவி னாலு
நெருக்காத நீள்விரத மெனக்கோன் றென்னு
நெறியுரைத்தார் நிலையுணர்ந்து நிலைபெற் றோமே. 16

உரை:— ஒருக்காலே சரணாக அடைகின்றூற்கும் – ஒருமுறையே (என்னைச்)சரணமாக அடைந்தவனுக்கும், உனக்கு அடிமை ஆகின்றேன் என்கின்றூற்கும் - உனக்குத் தாஸனாக இருக்கின்றேன் என்று அநுஸந்தித்தவனுக்கும், அருக்காதே - சிறிதும் குறைவின்றி, அனைவர்க்கும் அனைவராலும் - ஸகலப்ராணிகளுக்கும் ஸகலப்ராணிகளாலும், அஞ்சேல் என்று அருள் கொடுப்பன் – பயமடையாமலிருக்கும்படி அபயப்ரதாநம் செய்வேன்; இதுதான்- இவ்வாறு செய்வதுதான், ஓதும் இருக்காலும் – அத்யயநம் செய்யப்படும் வேதத்தாலும், எழில்

* सकृदेव प्रपन्नाय तवास्मीति च याचते ।
अभयं सर्वभूतेभ्यो ददाम्येतत् व्रतं मम ॥
श्रुतिः स्मृतिः सदाचारः स्वस्य च प्रियमात्मनः ।
सम्यक्सङ्कल्पजः कामो धर्ममूलमिदं स्मृतम् ॥

முனிவர் நினைவினாலும் – பெருமை பொருந்திய முனிவர்களால் செய்யப் பட்ட ஸ்ம்ருதியினாலும், இவை அறிவார் செயலுடன் – வேதத்தையும் ஸ்ம்ருதியையும் அறிந்த பெரியோர்களின் அநுஷ்டாநத்தாலும், என் இசைவினாலும் – என் உடன்பாட்டாலும், எனக்கு நெருக்காத – எனக்கு நீக்கமுடியாத, ஒன்று நீள் விரதம் – ஒரு பெரிய வ்ரதம் (ஆகும்), என்னும் நெறி உரைத்தார்–என்று சரணாகதிமார்க்கத்தை உபதேசித்த ஸ்ரீராமபிரானுடைய, நிலை உணர்ந்து – உறுதியை நினைந்து, நிலை பெற்றோம் – (நாம்) அமைதி பெற்றோம்.

கருத்து:— ஸ்ரீராமபிரான் முன் விபீஷணனை ஏற்றுக்கொள்ளும் போது தன் கருத்தைப் பின்வருமாறு வெளியிட்டான்—'ஒருகால் என்னைச் சரணமடைந்தவனுக்கும் உனக்குத் தாஸனாக ஆகின்றேன் என்றவனுக்கும் ஒரு பிராணிக்கும் ஒரு பிராணியாலும் பயம் உண்டாகாத படி அபயம் கொடுப்பேன். இதுவே வேதம், ஸ்ம்ருதி, ஸதாசாரம், என் உள்ளக்கருத்து ஆகிய இவ்வனைத்தையும் தழுவிய பெரிய வ்ரதமாகும்' என்று. இங்ஙனம் சரணாகதியின் பெருமையை வெளியிட்ட எம்பெருமானுடைய உறுதியை நினைந்து மனவமைதி பெற்றோம். 16

இழிவான பலனைப் பற்றாமை

கட்டளைக்கலித்துறை

112 பொன்னை யிகழ்ந்து விருகங்கள் புல்லிய புல்லுகந்தான்
மன்ன ரெடுப்பதப் பொன்னல தேமன் னுலகனைத்துந்
தன்னை யடைந்திடத் தானருள் செய்யுந் தனிச்சிலையோன்
பொன்னடி நாமடைந் தோம்புற மாரென்கொல் செய்திடினே.

உரை:— விருகங்கள் – மிருகங்கள், பொன்னை இகழ்ந்து – பொன்னை (அதன் பெருமையறியாது) வெறுத்துவிட்டு, புல்லிய புல் உகந்தால் – அற்பமான புல்லையே ப்ரியமாகக்கொண்டாலும், மன்னர் எடுப்பது – அரசர்கள் (விரும்பி) எடுத்துக்கொள்வது, அப் பொன் அலதே? – அப் பொன்னைத் தவிர வேறு உண்டோ? (அதுபோல்), மன் உலகு அனைத்தும் – நிலைபெற்ற உலகம் முழுதும், தன்னை அடைந்திட – தன்னைச் சரணமாக அடைய, தான் அருள் செய்யும்–தான் க்ருபை செய்பவனும், தனிச் சிலையோன் – நிகரற்ற வில்லையுடையவனுமான ஸ்ரீராமபிரானுடைய, பொன் அடி நாம் அடைந்தோம் – அழகிய திருவடிகளை நாம் சரணமாகப்பற்றினோம். ஆர் புறம் செய்திடின் என்கொல்? – (இதற்கு மாறாக) யார் வேறு எந்தக் கார்யத்தைச் செய்தாலும் (நமக்கு) என்ன (நஷ்டம்)?

கருத்து:— உலகில் மிருகங்கள் பொன்னைக் கண்டால் அதை ஒதுக்கித் தள்ளிவிட்டுத் தம் உணவுக்கேற்ற புல்லையே விரும்பி ஏற்றுக் கொள்ளும். ஆனால் அரசர்கள் அப்பொன்னையே மிக விரும்பிக் கைக் கொள்வார்கள். அதுபோல் பகவானுடைய திருவடிகளின் பெருமையை

அறியாத அற்பர்கள் அவற்றை நாடாது வேறு அற்பபலன்களையே கொள்வார்கள். அதனால் நமக்கு என்ன நஷ்டம்? நாம் தன்னைச் சரணமடைந்த அனைவருக்கும் அருள்புரிய முற்பட்டுநிற்கும் பகவானுடைய திருவடிகளையே தஞ்சமாகப் பற்றினோம். 17

மற்ற யோகங்களுக்கும் ப்ரபத்தியின் உதவி

113 வேதத் திரளின் விதியுணர்ந் தோர்கள் விரித்துரைத்த
காதற் கதியையு ஞானத்தை யுங்கரு மங்களையுஞ்
சாதிக்க வல்ல சரணு கதிதனி நின்றநிலை
யோதத் தோடங்கு மேழுத்தின் றிறத்தி லுணர்மின்களே.

உரை:— வேதத்திரளின் – வேதங்களுடைய கூட்டத்தின் (வேத வேதாந்தங்களின்), விதி உணர்ந்தோர்கள் – கட்டளையை அறிந்த பூர்வாசார்யர்கள், விரித்து உரைத்த – தெளிவாக வெளியிட்ட, காதல் கதியையும் – பக்தியாகிய உபாயத்தையும், ஞானத்தையும் – ஜ்ஞானயோகத்தையும், கருமங்களையும் – கர்மயோகத்தையும், சாதிக்கவல்ல – முடித்துக் கொடுக்கச் சக்தியுள்ள, சரணுகதி – ப்ரபத்தியானது, தனி நின்ற நிலை – (தானே ஸகலபலத்தையும் கொடுப்பதாய்த்) தனித்த உபாயமாகவும் நின்ற பெருமையை, ஓதத் தொடங்கும்–வேதத்தை அத்யயநம் செய்யும் போது முதலில் அநுஸந்திக்கப்படுகின்ற, எழுத்தின் திறத்தில் – (முதல்)எழுத்தாகிய ப்ரணவத்தினுடைய ஸ்வபாவத்தால், உணர்மின்கள் – அறிவீர்களாக.

கருத்து—ஸகலவேத வேதாந்தங்களின் தாத்பர்யத்தையும் நன்கு அறிந்த பூர்வாசார்யர்கள் கர்மயோகம் ஜ்ஞானயோகம் பக்தியோகம் ஆகிய இவற்றின் ஸ்வரூபத்தை விளக்கி வெளியிட்டனர். அவ்வுபாயங்களை அநுஷ்டிக்கும்போது ஆங்காங்கே செய்ய முடியாத அம்சங்களில் ப்ரபத்தியை அநுஷ்டித்தால் அவை நிறைவேறினவாகும். இங்ஙனம் ப்ரபத்தி மற்ற உபாயங்களையும் ஸாதித்துத் தரவல்ல பெருமைபெற்று, தானே ஸகலபலன்களையும் கொடுக்கும் ஸ்வதந்த்ரமான ஒருபாயமாகவும் நிற்கும் நிலையை ப்ரணவத்தால் நன்கு அறிவீர்களாக.

இங்குக் கூறிய யோகங்களின் ஸ்வரூபவிளக்கத்தை 55-வது பாசுரவுரையில் காண்க. 18

இராமபிரான் பிறர்பிழைபொறுத்தல் — காகன் வரலாறு

எண்சீராசிரியவிருத்தம்

114 மூவுலகுந் தன்பிழையைத் தானே சாற்ற
முனிவர்களுந் தேவர்களு முனிந்த வந்நாட்
டாவரிதா யெங்கும்போய்த் தளர்ந்து வீழ்ந்த
தனிக்காகந் தானிரந்த வுயிர்வ ழங்கிக்

காவலினி யெமக்கெங்குங் கடனென் றெண்ணிக்
காணநிலே யிலச்சினையன் றிட்ட வள்ள
லேவல்பய னிரக்கமிதற் காறென் றோது
மெழிலுடையா ரிணையடிக்கீ ழிருப்போ நாமே. 19

உரை:—மூ உலகும் - மூன்று உலகங்களிலும் (அலேந்து), தன் பிழையை- (பிராட்டியிடம்) தான் செய்த அபராதத்தை, தானே சாற்ற-தானே வெளியி(ட்டுப் பேசித் தன்னைக் காக்கும்படி வேண்)ட, முனிவர் களும் தேவர்களும் - ருஷிகளும் தேவதைகளும், முனிந்த அந்நாள் - (அவன்மீதே) கோபித்துத் துரத்திய அக்காலத்தில், தாவு அரிதாய்- வேறு புகலிடம் கிடைக்காமல், எங்கும் போய் - நாடெங்கும் சுற்றி, தளர்ந்து வீழ்ந்த - சோர்ந்து (இராமனுடைய திருவடி யிலேயே வந்து) விழுந்த, தனிக் காகம் இரந்த - உதவியற்ற காகன் யாசித்த, உயிர்வழங்கி - உயிர்ப்பிச்சையளித்து, இனி எங்கும் காவல் எமக்குக் கடன் - இனிமேல் எவ்விடத்திலும் (யாரையும்) ரக்ஷித்தலே எம்முடைய கடமை, என்று எண்ணி - என்று திருவுள்ளங்கொண்டு, காண நிலே இலச்சினை - ஒற்றைக் கண் குருடாகும் சாசுவதமான அடையாளத்தை, அன்று இட்ட வள்ளல்-அப்பொழுது (காகனுக்குச்) செய்த பெருங்கொடையாளனாகிய இராமபிரானுடைய, ஏவல் பயன் - கைங்கர்யமே (நமக்குச் சிறந்த) புருஷார்த்தமாகும்; இதற்கு ஆறு - இந்தப் பலனைப் பெறுவதற்கு உபாயம், இரக்கம் என்று ஓதும் - (நாம் செய்யும் ப்ரபத்தியால் அவனுக்கு நம்மிடம் உண்டாகும்) தயைதான் என்று உபதேசித்த, எழில் உடையார் - தேஜஸ் பொருந்தியவர்களான ஆசார்யர்களின், இணை அடி கீழ் - இரண்டு திருவடிகளின் கீழும், நாம் இருப்போம் - நாம் நிலைபெறுவோம்.

கருத்து:— பிராட்டியிடம் மஹாபராதம் செய்த காகன் மீது ஸ்ரீராமபிரான் ப்ரஹ்மாஸ்த்ரத்தைப் பிரயோகித்தபோது காகன் தான் செய்த பிழையைப் பேசித் தன்னைக் காக்குமாறு உலகமுழுதும் சுற்றித்திரிந்து அனைவரையும் வேண்டினான். மஹர்ஷிகளும்தேவர்களும் அவன்மீது கோபங்கொண்டு துரத்திவிட்டனர். நாடெங்கும் சுற்றி வேறு புகலிடம் கிடைக்காது தளர்ந்து ஸ்ரீராமன்திருவடிகளிலேயே வந்து விழுந்து உயிர்ப்பிச்சை கேட்டான். ப்ரபந்நரான அனைவரையும் காத்தலையே தனது கடமையாகக்கொண்ட சரண்யன் தன் அஸ்த்ரம் வீணாகாது அவனது ஒற்றைக்கண்ணை மாத்திரம் குருடாக்கிச் சாசுவதமாய் அவ்வடையாளமிட்டு உயிரையளித்தான். இத்தகைய பெருங் கொடையாளனாகிய இராமபிரானுடைய கைங்கர்யமே நமக்குப் புருஷார்த்தம். அதைப்பெற முக்கியமான உபாயம் ப்ரபத்தியின் வசப்பட்ட அவனது அருளே. இவ்வர்த்தங்களை

ஆசார்யர்கள் உபதேசித்தனர். அவர்களின் திருவடிநிழலில் நின்று மகிழ்வோமாக.

இங்குக் காகனது வரலாற்றை வெளியிட்டமையால் நாம் அபராதம்செய்திருப்பினும் வேறு கதி இல்லையென்று அறிந்து எம்பெருமானைச் சரணமடைந்தால் நம்மையும் காப்பனென்றதாயிற்று. தான்– அசை. 19

பூமிதேவிக்கு வராஹநயினர் உபதேசம்

கட்டளைக்கலித்துறை

115 திருத்தம் பேரியவர் சேருந் துறையிற் சேறிவிலர்க்கு
வருத்தங் கழிந்த வழியரு ளேன்றநம் மண்மகளார்
கருத்தோன்ற வாதி வராக முரைத்த கதியறிவார்
போருத்தந் தேளிந்துரைக் கப்போய் யிலாமதி பேற்றனமே.

[பாசுரம் 20 முதல் 23 வரை–ரஹஸ்ய சிகாமணி]

உரை:— திருத்தம் பெரியவர் – திருந்திய ஜ்ஞானம் அநுஷ்டானம் இவற்றால் பெரிய மஹர்ஷிகளால், சேரும் துறையில் – அநுஷ்டிக்கப் படும் (பக்தியோகம் முதலிய) உபாயத்தில், செறிவு இலர்க்கு – முயல்வ தற்கு வேண்டிய அதிகாரம் இல்லாதவர்க்கு, வருத்தம் கழிந்த – சிரமமில்லாமல் எளிதில் அனுஷ்டிக்கக்கூடிய, வழி அருள் என்ற – உபாயத்தைத் தேவரீர் அருள்புரியவேண்டுமென்று ப்ரார்த்திக்க, நம் மண்மகளார் – நம் பூமிதேவியினுடைய, கருத்து ஒன்ற – எண்ணத்திற்கு ஏற்ப, ஆதிவராகம் உரைத்த – ஆதிவராஹப் பிரானய் அவதரித்த எம்பெருமான் வெளியிட்ட, கதி அறிவார் – (ப்ரபத்தியென்னும்) உபாயத்தின் ஸ்வரூபத்தை அறிந்த நம் ஆசார்யர் கள், பொருத்தம் தெளிந்து உரைக்க – நம் தகுதியைக் கண்டு (அவ்வுபாயத்தையே) உபதேசிக்க, பொய் இலா மதி பெற்றனம் – அழிவு இல்லாத ஜ்ஞானத்தைப் பெற்றோம்.

கருத்து:— பூமிப்பிராட்டி முன்னொருகால், ஜ்ஞானமும் சக்தியு மில்லாத ஸாதாரணஅதிகாரிகள் பக்தியோகத்தை அநுஷ்டிக்கமுடி யாமல் ஸம்ஸாரத்தில் உழல்வதைக் கண்டு மனமுருகித் தாய்க்கு உள்ள கருணையாலே அவர்களை உய்விக்கக் கருதினாள். ஸ்ரீவராஹநயினரிடம் ஸுலபமாய் அனைவரும் அநுஷ்டிக்கும்படி ஓர் உபாயத்தை வெளி யிடுமாறு கேட்டாள். அவன் இரண்டு சுலோகங்களால் ப்ரபத்தியை வெளியிட்டான். அவையே வராஹசரமசுலோகமாய் வழங்குகின்றன. அவற்றில் வெளியிட்ட ப்ரபத்தியே நமக்கு ஏற்ற உபாயமெனக்கண்டு ஆசார்யர்கள் உபதேசித்தனர், அதனால் சிறந்த ஜ்ஞானத்தைப் பெற்றோம். 20

ஸ்ரீவராஹசரமசுலோகத்தின் பொருள்விளக்கம்

எண்சீராசிரியவிருத்தம்

116 * இடம்பெற்ரு ரெல்லாமென் னுடலாய் நிற்ப
விடர்பிறப்பென் றிவையில்லா வென்னை யன்பா
லடம்பற்ரு மவனென்று நினைந்தான் யாவ
னவனுவி சரியும்போ தறிவு மாறி
யுடம்பிற்ரு ருபலம்போற் கிடக்க நானே
யுய்யும்வகை நினைந்துயர்ந்த கதியா லென்ற
னிடம்பெற்றென் னுடன்வாழ வெடுப்ப னென்ற
வெம்பெருமா னருள்பெற்று மருள்செற் ரேமே. 21

உரை:— இடம் பெற்ருர் எல்லாம் - (உலகில்) இடம் பெற்றுள்ள யாவரும் (ஸகலவஸ்துக்களும்), என் உடலாய் நிற்ப-எனக்குச் சரீரமாய் நிற்க, இடர் பிறப்பு என்று - நாசமும் பிறவியும் ஆகிய, இவை இல்லா என்னை - இந்தத் தோஷங்கள் இல்லாத (ஸர்வேசுவரனை) என்னை, அன்பால் - ப்ரீதியுடன், "அவன் அடம் பற்று ஆம் –" "அவன் (ஒரு நாளும் கைவிடாத) திடமான கதியாக ஆவான்", என்று யாவன் நினைந்தான் - என்று எவன் நினைந்தவனுய்ச் சரணமடைகின்ருனே, அவன் ஆவி சரியும்போது - அவனுடைய உயிர் நீங்குங்காலத்தில், அறிவு மாறி - தன் நினைவை இழந்து, தாரு உபலம் போல் உடம்பில் கிடக்க - கட்டை போலும் கல்போலும் (தன்) சரீரத்தில் கிடக்கும் போது, உய்யும் வகை நானே நினைந்து - (அந்தச் சேதநன்) உஜ்ஜீவிக்க வேண்டிய ப்ரகாரத்தை, நானே செய்ய நினைந்து, உயர்ந்த கதியால் - சிறந்த அர்ச்சிராதிகதியால், என்றன் இடம் பெற்று - என்னுடைய ஸ்தாநமாகிய பரமபதத்தைப் பெற்று, என்னுடன் வாழ - என்னேடு இருந்து (ஸகலகைங்கர்யங்களையும் செய்து) வாழும்படி, எடுப்பன் என்ற - உயர்த்திவைப்பேன் என்று அருளிச்செய்த, எம்பெருமான் அருள் பெற்று - ஸ்ரீவராஹப்பிரானுடைய க்ருபையைப் பெற்று, மருள் செற்ரேம் - அஜ்ஞாநம் ஒழியப்பெற்ரேம்.

கருத்து:— வராஹப்பிரான் பூமிதேவியிடம் வெளியிட்ட வராஹ சரம சுலோகத்தின் தாத்பர்யம்—உலகம் முழுதும் எனக்குச் சரீர மாகும். எனக்குப் பிறவியும் மரணமும் இல்லை. என்னையே திட மான கதியாகக்கொண்டு சரணமடைந்தவன் மரணகாலத்தில் தன்

* 1 स्थिते मनसि सुस्वस्थे शरीरे सति यो नरः ।
धातुसाम्ये स्थिते स्मर्ता विश्वरूपं च मामजम् ॥

2 ततस्तं म्रियमाणं तु काष्ठपाषाणसन्निभम् ।
अहं स्मरामि मद्भक्तं नयामि परमां गतिम् ॥ (வராஹசரமசுலோகங்கள்)

நினைவிழந்து கட்டைபோலும் கல்லுப்போலும் தன் சரீரத்தில் கிடக்கும்போது அவனை அர்ச்சிராதிகதியால் பரமபதத்திற்கு அழைத்துச் சென்று எனக்கு ஸகல கைங்கர்யங்களையும் செய்யுமாறு செய்வேன்— என்பதாம். இங்ஙனம் வராஹப்பிரான் கூறிய உறுதியை நினைந்து நாம் அஜ்ஞாநம் நீங்கப்பெற்றோம். 21

ப்ரபந்நனுக்கு முக்திநிலையில் கர்மங்கள் வெளியேறல்

கட்டளைக்கலித்துறை

117 இரண்டுரை யாதநம் மேன முரைத்த வுரையிரண்டின்
றிரண்ட பொருள்க டேளிந்தடி சூடினந் திண்ணருளாற்
சுருண்டநஞ் ஞானச் சுடரொளி சுற்றும் பரப்பதன்முன்
புரண்டது நம்வினை போமிடம் பார்த்தினிப் போமளவே. 22

உரை:— இரண்டு உரையாத – இரண்டுவார்த்தை சொல்லாத (சொன்ன சொல் தவறாத), நம் ஏனம் உரைத்த – நம்முடைய வராஹப்பிரான் அருளிச்செய்த, உரை இரண்டின் – சரமசுலோகம் இரண்டின், திரண்ட பொருள்கள் தெளிந்து – ஸாரமான அர்த்தங்களை (நாம்) அறிந்து, திண் அருளால் – (அவனுடைய) வலிய க்ருபையினால், அடி சூடினம் – (அவன்) திருவடிகளையே உபாயமாகவும் பலனாகவும் கொண்டோம். சுருண்ட நம் ஞானச் சுடர் ஒளி – (கர்மஸம்பந்தத்தால் எல்லா விஷயத்தையும் அறியமுடியாது) சுருங்கியுள்ள நம் ஜ்ஞாநமாகிய தேஜஸ்ஸின் ப்ரகாசம், சுற்றும் பரப்பதன் முன் – எல்லாவிடத்திலும் பரவுவதற்கு முன் (எல்லாவற்றையும் அறியும் சக்தியைப் பெறுவதற்கு முன்), நம் வினை புரண்டது – நம்முடைய கர்மம் அகன்றுவிட்டது. இனி போம் இடம் பார்த்து – இனித் தாம் போகத்தக்க இடத்தைப் பார்த்து, போம் அளவே – (அவை) போகவேண்டிய அளவேயுள்ளது.

கருத்து:— வாக்குறுதி தவறாத வராஹப்பெருமாள் அருளிய சரமசுலோகம் இரண்டின் பொருளையும் நன்கு அறிந்தோம். அவனது அருளால் அவன் திருவடிகளையே உபாயமாகவும் பலனாகவும் பற்றினோம். இந்தக் கர்மலோகத்தில் கர்மவசத்தால் சுருங்கிக்கிடந்த நம் ஜ்ஞாநம் முக்தியில் விகாஸத்தைப் பெறுவதற்குமுன்பே வினைகள் அனைத்தும் நம்மை விட்டு நீங்கிவிட்டன. இனிச் சேரவேண்டிய இடத்திற்குப் போய்ச் சேரவேண்டிய அளவேயுள்ளது. என்ன ஆச்சர்யம்!!!

தர்மபூதஜ்ஞாநம் கர்மபூமியில் கர்மத்தால் எல்லாவற்றையும் அறிய முடியாது சுருங்கிக்கிடக்கின்றது. முக்திபெற்றதும் அந்த ஜ்ஞாநம் மலர்ந்து எல்லாவற்றையும் அறிகின்றது.

சேதநன் முக்திபெறும்போது எல்லாக் கர்மங்களும் ஒழியவேண்டியவையாதலின் அவனுடைய புண்யகர்மம் அவனுடைய நண்பர்களிடமும், பாபகர்மம் விரோதிகளிடமும் போய்ச் சேருமென உபநிஷத்துக் கூறுகின்றது. 22

மரணத்திற்கு அஞ்சுபவர்க்கு நல்லுரை கூறல்

118 மலையும் குலையுமென் றெண்ணியும் வன்பெரும் புண்டிரங்கித்
தலையும் வெளுத்தபின் ருனே யழிய விசைகின்றிலீ
ரலையுங் கடல்கொண்ட வைய மளித்தவன் மெய்யருளே
நிலையென்று நாடி நிலைநின்ற பொய்ம்மதி நீக்குமினே. 23

உரை:— மலையும் – (ஸ்திரமென்று நாம் நினைக்கும்) மலையும், குலையும் – (ஒரு காலத்தில்) சிதறிப்போம், என்று எண்ணியும் – என்று அறிந்திருந்தும், வன் பெரும் புண் திரங்கி-வலிய பெரிய புண்ணுயுள்ள சரீரம் மடிப்புவிழுந்து, தலையும் வெளுத்த பின் – தலையும் நரைத்துப் போன பின்பும், அழிய இசைகின்றிலீர்! – மரணமடைய மனமில்லா திருக்கும் சேதநர்களே!, அலையும் கடல் கொண்ட – அலைநிறைந்த ப்ரளயஸமுத்ரத்தால் கொள்ளப்பட்ட, வையம் அளித்தவன் – உலகத்தை (அக்கடலிலிருந்து எடுத்து) ரக்ஷித்த ஸ்ரீவராஹப்பிரானுடைய, மெய் அருளே - ஸத்யமான க்ருபையால் அவதரித்த ப்ரபத்தியே. நிலை என்று நாடி – ஸ்திரமான உபாயமென்று அறிந்து, நிலை நின்ற – (உங்களிடம் வெகு காலமாக) வேரூன்றி நிற்கின்ற, பொய்மதி நீக்குமின் – அஜ்ஞானத்தை ஒழித்துக்கொள்வீர்களாக. தான் – அசை.

கருத்து:— சேதநர்களே! சாசுவதமென்று நாம் நினைக்கும் பெரிய மலையும் ஒரு காலத்தில் உருத்தெரியாது சிதறிப்போகின்ற தன்றோ? இதை நீங்கள் அறிந்திருந்தும் உங்கள் சரீரத்தை ஸ்திரமென்று மயங்கி நிற்கின்றீர்கள். உங்கள் சரீரத்தில் மடிப்புக்கள் விழுந்து தலை நரைத்தபின்னும் மரணத்தை வெறுக்கின்றீர்கள். உங்களுக்கு உள்ள அஜ்ஞானத்தைப்போக்கிக்கொள்ள ஒரு வழி உளது- ப்ரளயகாலத்தில் கடலுள் அழுந்திய பூமியை எடுத்துக் காத்தருளிய கருணாமூர்த்தியான ஸ்ரீ வராஹப்பெருமான் அருளிய ப்ரபத்தியையே உபாயமாகக்கொண்டு உஜ்ஜீவிப்பீர்களாக. 23

கைகூப்புதலின் பெருமை

119 * கண்ணன் கழற்றொழக் கூப்பிய கையின் பெருமைதனை
யெண்ணங் கடக்க வெழுனைத் துறைவ ரியம்புதலாற்
றிண்ண மிதுவென்று தேறித் தெளிந்தபின் சின்மதியோர்
பண்ணும் பணிதிகள் பாற்றிப் பழந்தொழில் பற்றினமே. 24

[அஞ்ஜலிவைபவம்]

* त्वदङ्घ्रिमुद्दिश्य कदापि केनचित् यथा तथा वाऽपि सकृत्कृतोऽञ्जलिः ।
तदैव मुष्णात्यशुभान्यशेषतः शुभानि पुष्णाति न जातु हीयते ॥

ஸ்ரீ ஆளவந்தார் ஸ்தோத்ரம் 28

உரை:— கண்ணன் கழல் தொழ – எம்பெருமானுடைய திருவடிகளை வணங்குவதற்காக, கூப்பிய கையின் – கூப்பப்பட்ட கைகளின் (அஞ்ஜலியின்), பெருமைதனை – ப்ரபாவத்தை, எமுனைத்துறைவர்– ஆளவந்தார் (யாமுநமுனிவர்), எண்ணம் கடக்க – நம் நினைவின் எல்லையை மீறியதாக, இயம்புதலால் – (ஒரு சுலோகத்தால்) அருளிச்செய்தபடியால், இது திண்ணம் என்று–இதுவே திடமான ஸித்தாந்தம் என்று, தேறித் தெளிந்த பின் – (நாம்) நிச்சயித்துத் தெளிந்த பிறகு, சின்மதியோர் பண்ணும் – அற்பபுத்தியையுடையவர்கள் செய்கின்ற, பணிதிகள் பாற்றி – வாதங்களை ஒழித்து, பழந்தொழில் பற்றினம் – பழமையாய் வந்த செய்கையாகிய ப்ரபத்தியை (உபாயமாக)க் கொண்டோம்.

கருத்து:— எம்பெருமானுடைய திருவடிகளை வணங்குவதாகச் செய்யும் அஞ்சலியின் பெருமை அளவிறந்ததென்று ஆளவந்தார் ஸ்தோத்ரரத்நத்தில் ஒரு சுலோகத்தில் அருளிச்செய்தார். அதுவே உறுதியான ஸித்தாந்தமென்று நாம் நிச்சயித்தறிந்துகொண்டோம். இவ்விஷயத்தில் முரண்பட்ட கொள்கையையுடைய பிறர் புரியும் வாதங்களையெல்லாம் கண்டித்தொழித்து இத்தகைய அஞ்சலியை அநுஷ்டித்தோம்.

கைகளைக் கூப்புவதற்கு அஞ்ஜலி என்று பெயர். இச்செய்கை (அம்-ஜலயதி) எம்பெருமானை நீர்ப்பண்டமாக உருகச் செய்தலால் இதற்கு இப்பெயர் வந்தது. இது ஓர் அடையாளமாகும். இதைக் கண்டு எம்பெருமானுக்கு உண்டாகும் மகிழ்ச்சி கூறற்பாலதன்று. எம்பெருமானிடம் பரந்யாஸம்செய்தவன் தன்னைக்காத்துக்கொள்ள மறுபடியும் ஒரு கார்யமும் செய்யவேண்டாதபடி நிற்கும் நிலையையும் காட்டுகின்றது அஞ்ஜலி. 24

முக்கியமான பொருள்களையே கைக்கொள்ளல்

எண்சீராசிரியவிருத்தம்

120 பொங்குபுன லாறுகளிற் புவன மேல்லாம்
பொற்கழலா லளந்தவன்றன் ருளால் வந்த
கங்கையெனு நதிபோலக் கடல்க ளேழிற்
கமலைபிறந் தவனுகந்த கடலே போலச்
சங்குகளி லவனேந்துஞ் சங்கே போலத்
தாரிலவன் றண்டுளவத் தாரே போல
வேங்கள்குல பதிகளிவை மேலா மேன்றே
யெண்ணியநல் வார்த்தைகளு மிசைகின் றேமே. 25

[பாசுரம் 25, 26, 27— ப்ரதாநசதகம்]

உரை:— பொங்கு புனல் ஆறுகளில் – பெருகிவருகின்ற ஜலத்தையுடைய (உலகிலுள்ள) ஆறுகளுக்குள் புவனம் எல்லாம் – உலகமுழுதும்,

பொன் கழலால் அளந்தவன்றன் – (த்ரிவிக்ரமாவதாரத்தில் தன்னுடைய) அழகிய திருவடிகளால் அளந்த எம்பெருமானுடைய, தாளால் வந்த – திருவடிகளிலிருந்து வந்த, கங்கையெனும் நதிபோல – கங்கை என்னும் நதி (சிறப்புற்றது) போலவும், கடல்கள் ஏழில்-ஏழு ஸமுத்ரங்களுக்குள், கமலை பிறந்து – பிராட்டி அவதரித்ததனுல், அவன் உகந்த கடலே போல – அவ்வெம்பெருமானுக்கு ப்ரியமான திருப்பாற்கடல் (சிறப்புற்றது) போலவும், சங்குகளில் – சங்குகளுக்குள், அவன் ஏந்தும் சங்கே போல – அவ்வெம்பெருமான் (திருக்கையில்) ஏந்துகின்ற (பாஞ்சஜந்யமென்னும்) சங்கம் (உயர்ந்தது) போலவும், தாரில் – புஷ்பமாலைகளுக்குள், அவன் தண் துளவத் தாரேபோல – அந்தப் பகவான் அணியும் குளிர்ந்த திருத்துழாய்மாலை (சிறப்புற்றது) போலவும், எங்கள் குலபதிகள் – எங்கள் ப்ரபந்நகுலத்திற்குத் தலைவர்களான ஆழ்வார் முதலியவர்கள், இவை மேல் ஆம் என்றே எண்ணிய – இவையே சிறந்தவை ஆகும் என்று நிச்சயித்து அநுஸந்தித்த, நல் வார்த்தைகள் – நல்ல உபதேசங்களை, நாம் இசைகின்றோம் – நாம் அங்கீகரித்து நடத்துகின்றோம்.

கருத்து:— உலகில் நீர் நிறைந்து ஓடிவரும் நதிகள் பல இருப்பினும் எம்பெருமானுடைய திருவடியிலிருந்து அவதரித்த கங்கையே சிறந்து நிற்கின்றது. கடல் ஏழினுள்ளும் பிராட்டி அவதரிக்கப்பெற்ற திருப்பாற்கடலே ஸர்வேசுவரனுக்குப் பிரியமாய்ப் பெருமைமிக்கு விளங்குகின்றது. பலவகைப்பட்ட சங்குகளுக்குள்ளும் அவன் திருக்கையில் ஏறிநிற்கும் பாக்யம் பெற்ற வலம்புரிச்சங்கமே பெருமை மிக்கதாம். மணம் மிக்க புஷ்பமாலைகள் பலவற்றினுள்ளும் எம்பெருமான் மகிழ்வோடு தரிக்கும் திருத்துழாய்மாலையின் சிறப்பு மற்றவற்றுக்கு வராது. இங்ஙனமே உலகில் விளங்கும் சாஸ்த்ரங்கள் பலவற்றினுள்ளும் ப்ரபந்நர்குலத்திற்குத் தலைவரான நம்மாழ்வார் முதலிய மஹாத்மாக்களுடைய ஸ்ரீஸூக்திகளே மேம்பட்டவை எனத்துணிந்து ஏற்று அவற்றின்படி நடக்கின்றோம்.

த்ரிவிக்ரமாவதாரத்தில் ப்ரஹ்மலோகத்திற்குச் சென்ற திருவடிக்கு ப்ரஹ்மா திருமஞ்சனம்செய்ய அந்தத் தீர்த்தம் கங்கையாய்ப் பெருகியது.

கடல் ஏழு— உப்பு, பால், தேன், நெய், கருப்பஞ்சாறு, தயிர் சுத்தஜலம் இவற்றால் ஆகியவை. 25

சரண்யனே ஆசார்யனாய் அவதரித்துக் காத்தல்

121 சீர்க்கடலின் றிரையென்னத் தகவான் மிக்க
தேசிகராய்த் திண்ணிருளாங் கடலை நீக்கிப்
பாற்கடலோன் றிருவணையாய் நின்று பாரங்
காணாத பவக்கடலைக் கடத்து கின்ற

நீர்க்குமரக் கலமென்ன விறைவ ரின்ப
மெழுந்தழியுங் குமிழியென விகந்தோ ழிந்தோ
மார்க்கினிநா மென்கடவோ நமக்கு மாரென்
கடவாரென் றடைந்தவர்கட் கறிவித் தோமே. 26

உரை:— பாற்கடலோன் - திருப்பாற்கடலில் பள்ளிகொண்ட எம்பெருமான், சீர்க் கடலின் திரை என்ன – சிறப்புற்ற ஸமுத்ரத்தின் அலையென்னும்படி (மேல்மேல் வருகின்ற), தகவால் மிக்க தேசிகர் ஆய் – கருணைமிகுந்த ஆசார்யராக அவதரித்து, திண் இருள் ஆம் கடலை நீக்கி – (நம்மை அஜ்ஞானமாகிய) வலிய இருள் என்னும் கடலினின்றும் நீக்கி, திரு அணையாய் நின்று – சிறந்த அணையாய்த் தானே நின்று, பாரம் காணாத - கரை காணமுடியாத, பவக் கடலைக் கடத்துகின்ருன் – ஸம்ஸாரமாகிய ஸமுத்ரத்தினின்றும் (நம்மைக்) கரையேற்றுகின்ருன்; ஈர்க்கும் மரக்கலமென்ன – (மனிதரை) இழுத்துச்செல்லுகின்ற ஓடமென்னப்படுமவரான, இறைவர் இன்பம் – (ப்ரஹ்மா முதலிய) தேவர்களின் ஸுகமும், எழுந்து அழியும் குமிழி என – (நீரில்) கிளம்பி அமிழும் நீர்க்குமிழி (போல்நிலையாதது) என்று (நினைத்து), இகந்துஒழிந்தோம்–(அதில் விருப்பத்தை) விட்டொழித்தோம்; அடைந்தவர்கட்கு – (நம்மை வந்து) அடைந்தவர்களுக்கு, நாம் இனி ஆர்க்கு என் கடவோம் - (ப்ரபந்நரான) நாம் இனி யாருக்கு எவ்விஷயத்தில் கடமைப்பட்டுள்ளோம்?, நமக்கும் ஆர் என் கடவார் – நமக்கும் யார் எவ்வகையில் கடமைப் பட்டுள்ளார்? (எம்பெருமானும் நாமுமே ஒருவருக்கொருவர் கடமைப்பட்டுள்ளோம்), என்று அறிவித்தோம் – என்று உபதேசித்தோம்.

கருத்து:—ஸர்வேசுவரனே கருணைமிக்க ஆசார்யனுக அவதரித்து நம்முடைய அஜ்ஞானமாகிய இருளைப் போக்கித் தானே ஸம்ஸாரமென்னும் கடலுக்கு அணையாய் நின்று நம்மைத் தாண்டுவிக்கின்ருன். ஆதலின் ப்ரஹ்மா முதலிய தேவர்களின் போகமும் நீர்க்குமிழிபோல் அழியுந்தன்மையதெனக்கண்டு அவற்றில் ஆசையை ஒழித்தோம். ப்ரபந்நரான நாம் இனி யாருக்குக் கடமைப்பட்டவராவோம்? நமக்கும் ஸர்வேசுவரனைத்தவிர வேறு யாரும் கடமைப்பட்டவரல்லர். ஸர்வேசுவரனும் நாமுமே ஒருவருக்கொருவர் கடமைப்பட்டிருக்கின்ருேம். இவ்விஷயங்களை நம்மிடம் வந்தடைந்தவர்களுக்கும் உபதேசித்தோம்.

ப்ரஹ்மாதிதேவர், சேதநருக்கு அற்பபலன்களையே தரவல்லராய் எம்பெருமானுடைய உதவியின்றிக் கார்யம்செய்ய வல்லமையற்றிருக்கின்றனர். ஆதலின், சிறிதுதூரமே மனிதரை இழுத்துச் செல்லவல்லதும் பிறர் உதவியின்றிச் செல்லமுடியாததுமான மரக்கலம் அவர்களுக்கு உவமானமாக்கப்பட்டது. 26

வஸ்துக்களின் ஏற்றத்தாழ்வை அறிதல்

122 காசினியின் மணியனைத்துங் காயா வண்ணன்
கடைந்தெடுத்த கவுத்துவத்தின் சீர்மைக் கோவ்வா
காசிமுத லாகியநன் னகரி யெல்லாங்
கார்மேனி யருளாளர் கச்சிக் கோவ்வா
மாசின்மனந் தெளிமுனிவர் வகுத்த வெல்லா
மாலுகந்த வாசிரியர் வார்த்தைக் கோவ்வா
வாசியறிந் திவையுரைத்தோம் வையத் துள்ளீர்
வைப்பாக விவைகொண்டு மகிழ்மி னீரே. 27

உரை:— காசினியில் மணி அனைத்தும் - பூமியிலுள்ள ரத்நங்கள் முழுதும், காயா வண்ணன் கடைந்து எடுத்த - காயாம்பூவைப்போன்ற நிறமுடைய எம்பெருமான் (கடலைக்) கடைந்து (தனக்காக) எடுத்த, கவுத்துவத்தின் சீர்மைக்கு ஒவ்வா - கௌஸ்துபமென்னும் ரத்நத்தின் சிறப்புக்கு ஒப்பாகா; காசி முதலாகிய நல் நகரி எல்லாம்-காசி முதலிய புண்ய ஸ்தலமெல்லாம், கார்மேனி அருளாளர் கச்சிக்கு ஒவ்வா – மேகம் போன்ற திருமேனியையுடைய பேரருளாளர் எழுந்தருளியிருக்கும் காஞ்சிபுரத்திற்கு ஈடாகா; (அவைபோல) மாசு இல் - குற்றமற்ற, மனம் தெளி முனிவர் - மனத்தெளிவையுடைய மஹர்ஷிகள், வகுத்த எல்லாம் – வெளியிட்ட (வேதம் ஸ்ம்ருதி, புராணம்) எல்லாம், மால் உகந்த ஆசிரியர் – எம்பெருமானுடைய க்ருபைக்கு உரியரான (நம்மாழ்வார் முதலிய) ஆசார்யர்களின், வார்த்தைக்கு ஒவ்வா – ஒரு வார்த்தைக்கு ஸமமாகா; வாசி அறிந்து இவை உரைத்தோம்-(பொருள்களின்) தாரதம்யம் அறிந்து இவ்விஷயங்களை (ஏற்றத்தாழ்வுகளை)க் கூறினோம். வையத்துள்ளீர்! – உலகத்திலுள்ளோர்களே!, நீர் இவை வைப்பாக கொண்டு மகிழ்மின் – நீங்கள் இவ்விஷயங்களைச் சேமநிதியாக ஏற்று மகிழ்வீர்களாக.

கருத்து:— பூமியிலுள்ள உயர்ந்த ரத்நங்கள் அனைத்தும் பெருமையில், எம்பெருமான் கடலைக் கடைந்து தனக்காக எடுத்துத் தன் திருமார்பில் தரித்த கௌஸ்துபம் என்னும் ரத்நத்திற்கு ஈடாகா. காசி முதலிய புண்ணிய க்ஷேத்ரங்கள் அனைத்தும் பேரருளாளனுகிய மேகம் கருணையாகிய நீரைப் பொழிந்து நிற்கும் இடமாகிய காஞ்சி க்ஷேத்ரத்திற்குச் சமமாகா. பரிசுத்தமான மனத்தோடு மஹர்ஷிகள் வெளியிட்ட வேதம் ஸ்ம்ருதி புராணம் ஆகிய அனைத்தும் ஸர்வேசுவரனால் கொண்டாடப்பெற்ற நம்மாழ்வார் முதலிய ஆசார்யர்களின் ஒரு ஸ்ரீஸூக்திக்கு நிகராகா. ஆஸ்திகர்களே! இவ்வாறு வஸ்துக்களின் தாரதம்யத்தை அறிந்து இந்த ரஹஸ்யத்தில் நாம் கூறிய ப்ரதாநமான அர்த்தங்களையெல்லாம் நம் முன்னோர் தேடிவைத்த சேமநிதியாகக் கொண்டு மகிழ்வீர்களாக: 27

எம்பெருமான செய்யும் மஹோபகாரங்கள்

123 அந்தமிலாப் பேரின்ப மருந்த வேற்கு
மடியோமை யறிவுடனே யென்றுங் காத்து
முந்தைவினை நிரைவழியி லோழுகா தெம்மை
முன்னிலையாந் தேசிகர்த முன்னே சேர்த்து
மந்திரமு மந்திரத்தின் வழியுங் காட்டி
வழிப்படுத்தி வானேற்றி யடிமை கொள்ளத்
தந்தையென நின்றதனித் திருமா ளுளிற்
றலைவைத்தோஞ் சடகோப னருளி ளுலே. 28

[பாசுரம் 28, 29, 30 — உபகாரஸங்க்ரஹம்]

உரை:— அந்தம் இலாப் பேர் இன்பம் – அளவற்ற பெரிய மோக்ஷாநந்தத்தை, அருந்த ஏற்கும் அடியோமை – அநுபவிப்பதற்குத் தகுதியுள்ள தாஸர்களான எம்மை, என்றும் அறிவுடனே காத்து – எப்பொழுதும் நித்யமான தர்மபூதஜ்ஞாநத்துடன் ரக்ஷித்து, எம்மை – எங்களை, முந்தை நிரை வினைவழியில் ஒழுகாது - அநாதியாய்த் தொடர்ந்துவரும் கர்மப்பெருக்கில் (கரையேருமல்) ஆழ்ந்து செல்லாதவாறு, முன் நிலை ஆம் – (நமக்கு அருள்புரிய) முதல் ஸ்தாநத்தில் நிற்கின்ற, தேசிகர் தம் முன்னே சேர்த்து - ஆசார்யர்கள் பக்கல் கொண்டுசேர்த்து, மந்திரமும் – திருமந்த்ரம் முதலிய மந்த்ரத்தையும், மந்திரத்தின் வழியும் காட்டி – அந்த மந்த்ரத்தில் சொல்லப்படும் (ப்ரபத்தியென்னும்) உபாயத்தையும் உபதேசித்து, வழிப்படுத்தி – அவ்வுபாயத்தை அநுஷ்டிக்கும்படியும் செய்து, வான் ஏற்றி-பரமபதத்தில் சேர்த்து, அடிமை கொள்ள – (நாம் செய்யும்) கைங்கர்யத்தை ஏற்றுக்கொள்ளுவதற்கு, தந்தை என நின்ற – (இவ்வளவு மஹோபகாரம் செய்ய முற்பட்டதால்) தகப்பன் என்னும்படி நின்ற, தனித் திருமால் தாளில் – நிகரற்ற எம்பெருமான் திருவடிகளில், சடகோபன் அருளினுல் – நம்மாழ்வாருடைய க்ருபையாலே, தலைவைத்தோம் – தலை வணங்கப்பெற்ருேம்.

கருத்து:— எம்பெருமானுடைய அடியார்களாய் அவனுக்குப் புத்திரஸ்தாநத்திலுள்ள நம் அனைவருக்கும் மோக்ஷாநந்தத்தைப் பெற உரிமையுண்டு. ஸர்வேசுவரன் இத்தகைய ஜீவர்களாகிய நமக்கு ஸ்வரூபத்தையும் தர்மபூதஜ்ஞாநத்தையும் கொடுத்துக் காக்கின்ருன். பழைய வாஸனையால் மறுபடி கர்மஸமுத்ரத்தில் மூழ்காதவாறுசெய்ய நினைத்து நம்மைச் சிறந்த ஆசார்யன்பக்கல் சேர்த்து அவனிடம் ரஹஸ்யார்த்தங்களை உபதேசிக்கப்பெற்று ப்ரபத்தியை அநுஷ்டிக்குமாறு செய்கின்ருன். பின் நம்மை இச்சரீரம் கழிந்ததும் பரமபதத்திலே சேர்த்து நாம் செய்யும் பரிபூர்ணகைங்கர்யத்தை ஏற்றுக்கொள்ளப் பேராவல்கொண்டு நிற்கின்ருன். இங்ஙனம் மஹோபகாரம் செய்து

தந்தையாய்நிற்கும் எம்பெருமான் திருவடிகளில் நாம் தலைவணங்கப் பெற்றோம். இதற்குக் காரணம் - அந்தத் திருவடிகளின் பெருமையைத் தம் ஸூக்தியின் வாயிலாகக் காட்டித்தந்த நம்மாழ்வாராகிய நம் தாயின் அருளேயாம்.

"அடியோமை என்றும் காத்து" "அடியோமை என்றும் அறிவுடனே காத்து" என்று இரண்டு தொடராக்கிக்கொள்க. எம்பெருமான் ஜீவனுடைய ஸ்வரூபத்தையும் ஸ்வபாவத்தையும் மாற்றவல்லவனாயினும், தன் நித்யமான ஸங்கல்பத்தாலே ஜீவனை நித்யனாக்கி ஜீவஸ்வரூபத்தையும், தர்மபூதஜ்ஞாநத்தை ஜீவனைப் பிரியாத நித்யகுணமாக்கி ஜீவஸ்வபாவத்தையும் காக்கின்றான் என்று தாத்பர்யம் கொள்க.

இப்பாசுரம் நம்மாழ்வார் அருளிச்செய்த திருவிருத்தத்தின் முதற் பாசுரத்தின் வ்யாக்யாநமான உபகாரஸங்ரஹமென்னும் ரஹஸ்யத்தைப்பற்றி எழுந்ததாதலின், இங்கு ஆழ்வாரைக் குறிக்கலாயிற்று. 28

ஜீவஸ்வரூபத்தை அறிதல்

124 தான்றனக்குத் தன்னாலே தோன்றித் தன்னோ
 ரொளியணைக்குங் குணத்தாலுந் தன்னைக் கண்டு
தான்றனக்கென் றறியாத தன்கு ணத்தைத்
 தன்குணத்தாற் றானிறையிற் றானே கூட்டி
யூன்மருத்துப் புலன்மனமா னாங்கா ரங்க
 ளொருமூலப் பிரகிருதி யன்றி நின்ற
நான்றனக்குத் தான்றனக்கென் றிசைவு தந்த
 நாரணனை நான்மறையா னுன்கண் டேனே. 29

உரை:— தான் - ஜீவாத்மாவாகிய தான், தனக்குத் தன்னாலே தோன்றி - தனக்காகத் தானே ('நான்' என்று) தோன்றி, தன் ஓர் ஒளி அணைக்கும் குணத்தாலும் - தன்னுடைய ஒரு ப்ரகாசம்போன்ற தர்மபூதஜ்ஞாநத்தாலும், தன்னைக் கண்டு - ஜீவாத்மாவாகிய தன்னை அறிந்து, தான் தனக்கு என்று அறியாத - (அசேதநமாதலால்) தான் என்றும் தனக்கு என்றும் அறிவில்லாத, தன் குணத்தை - தர்மபூத ஜ்ஞாநத்தை, தன் குணத்தால் - தனக்குக் கிடைத்துள்ள தத்துவ ஜ்ஞாநத்தால், தான் இறையில தானே கூட்டி - தானே ஸர்வஸ்வாமியான எம்பெருமான்விஷயத்திலேயே செலுத்தி, ஊன் - மாம்ஸமயமான சரீரம், மருத்து - ப்ராணவாயுக்கள், புலன் - இந்த்ரியங்கள், மனம் - மனது, மான் - மஹான் என்னும் தத்துவம், ஆங்காரங்கள் - அஹங் காரமென்னும் தத்துவம், ஒரு மூலப்பிரகிருதி - தனியான மூலப்ரக்ருதி, அன்றி நின்ற - ஆகிய அசேதநங்களைக்காட்டிலும் வேறுபட்டு நிற்கின்ற, நான் - ஜீவாத்மாவாகிய நான், தனக்கு - ஸர்வேசுவரனாகிய

தனக்கு (அடியன்), தான் தனக்கு என்று – பகவானாகிய தானே தனக்கு (ஸ்வாமி) என்று, இசைவு தந்த – (நான்) அங்கீகரிக்கும்படி செய்த, நாரணனை – நாராயணனை, நான்மறையால் – நான்கு வேதத்தால், நான் கண்டேன் – (ஒருவாறு) நான் அறிந்தேன்.

கருத்து:— ஜீவாத்மா தன்னைத்தவிர வேறொன்றை அறிவதாயின், தன் குணமாகவுள்ள ஜ்ஞாநத்தாலேயே அறியவேண்டும். இந்த ஜ்ஞாநம் தர்மபூதஜ்ஞாநமெனப்படும். அந்த ஜ்ஞாநத்தையுடைய ஜீவனும் ஜ்ஞாநஸ்வரூபனாகவே இருப்பதால் தர்மிபூதஜ்ஞாநமெனப்படுவான். ஜீவாத்மா தன்னைமட்டும் அறியும்போது தர்மபூதஜ்ஞாநத்தின் உதவி வேண்டியதில்லை. ஜீவாத்மா தானே தோன்றிக் கொண்டிருக்கிறான். இவ்வாறு இருப்பது ஸ்வயம்ப்ரகாசத்வமெனப்படும். ஜீவன், தான் தோன்றுவதால் வரும் பலனைத் தானே பெறுகின்றான். இத்தன்மை ப்ரத்யக்த்வமெனப்படும். ஸூர்யனுடைய ப்ரகாசம் அவனை விட்டுப்பிரியாதிருப்பதுபோல் ஜீவனுடைய தர்மபூதஜ்ஞாநமும் பிரியாமல் ஜீவனுடைய குணமாயிருக்கிறது. ஆகவே, 'ஜீவாத்மா தன்னை அறியும்போது தர்மபூதஜ்ஞாநத்தின் உதவியின்றித் தானே அறியலாம். நித்யனாயிருத்தல், அணுவாயிருத்தல் முதலிய தன்மைகளுடன் ஜீவனை அறிவதாயின் தர்மபூதஜ்ஞாநம் அவசியம் வேண்டும்' என்பது ஸித்தாந்தம். இந்தத் தர்மபூதஜ்ஞாநத்திற்கு அறிவில்லையாதலின் இது அசேதநமாகும். இதை எம்பெருமான் விஷயத்தில் செலுத்தினால்தான் ஜீவன் உஜ்ஜீவிக்கலாம். அங்ஙனம் செய்வதற்குத் தத்துவங்களின் ஜ்ஞாநம் வேண்டும். அது ஏற்பட்டால் சரீரத்திற்காட்டிலும் தான் வேறுபட்டவனென்றும் எம்பெருமானுக்கு அடியனென்றும் விசேஷஜ்ஞாநம் உண்டாகின்றது. இந்த ஜ்ஞாநத்தை அருளிய எம்பெருமானை வேதாந்த சாஸ்த்ரத்தைக் கொண்டு ஒருவாறு அறிந்தேன். *29*

எம்பெருமானது உதவியின் அளவிடமுடியாமை

125 கழியாத கருவினையிற் படிந்த நம்மைக்
காலமிது வென்றொருகாற் காவல் செய்து
பழியாத நல்வினையிற் படிந்தார் தாளிற்
பணிவித்துப் பாசங்க ளடைய நீக்கிச்
சுழியாத செவ்வழியிற் றுணைவ ரோடே
தொலையாத பேரின்பந் தரமே லேற்றி
யழியாத வருளாழிப் பெருமான் செய்யு
மந்தமிலா வுதவியெலா மளப்பா ராரே. 30

உரை:—கழியாத கரு வினையில் – நீங்காத கர்ப்பவாஸத்தைத் தரும் கர்மங்களில், படிந்த நம்மை – அழுந்திக்கிடக்கின்ற நம்மை, இது காலம் என்று–இதுவே தக்க ஸமயமென்று (நினைத்து), ஒருகால்

காவல்செய்து – (நம்முடைய பாக்யம் பக்வமான) ஒரு ஸமயத்தில் ரக்ஷிக்கமுற்பட்டு, பழியாத நல் வினையில்–பழிக்கப்படாத (குற்றமற்ற) நல்ல கார்யமாகிய 'ப்ரபத்திமார்க்கத்தில், படிந்தார் தாளில் பணி வித்து – ஈடுபட்டுள்ள ஆசார்யர்களின் திருவடிகளில் (நம்மை) வணங்கச்செய்து, பாசங்கள் அடைய நீக்கி-கர்மபாசங்கள் முழுதையும் போக்கி, தொலையாத பேரின்பம் தர – அழிவில்லாத பெரிய மோக்ஷ ஸுகத்தைக் கொடுப்பதற்காக, சுழியாத செவ்வழியில் – திரும்புதல் இல்லாத சிறந்த அர்ச்சிராதிமார்க்கத்தால், துணைவரோடே மேல் ஏற்றி - (ஆதிவாஹிகர்களாகிய) துணைவரோடு ஸ்ரீவைகுண்டத்திற்கு ஏற்றி, அழியாத அருள் ஆழிப் பெருமான் செய்யும் – அழியாத வனும் கருணைக் கடலுமாகிய எம்பெருமான் (சேதநனுக்குச்) செய் கின்ற, அந்தம் இலா உதவி எல்லாம் – எல்லையில்லாத உபகாரங்களை எல்லாம், அளப்பார் ஆர்? – அளவிட்டறிபவர் யார்? (ஒருவருமில்லை யென்றபடி.)

கருத்து:— பேரருளாளன் கர்ப்பவாஸத்தைத் தரும் பாபச் செய்கைகளிலேயே ஈடுபட்டுக்கிடக்கும் நம்மைக் காக்கக் கருதி நம் முடைய பாக்யம் பக்குவமான ஸமயத்தில் ஆசார்யன் திருவடிகளில் நம்மை ஆச்ரயிக்கச்செய்கின்றான்; பின் உபாயத்தில் நம்மை மூட்டிக் கர்மபாசங்கள் முழுவதையும் நீக்கி ஆதிவாஹிகர்களைக்கொண்டு அர்ச்சிராதிகதியால் பரமபதம் சேர்ப்பித்து மோக்ஷாநந்தத்தைக் கொடுக்க முற்படுகின்றான். இத்தகைய ஸர்வேசுவரன் நமக்குச் செய்யும் உதவிகளை அளவிட்டறிபவர் யார்?.

இங்கு 'அருளாழிப் பெருமான்' எனும் தொடர் பேரருளாளனைக் குறிக்குமென்பர் பெரியோர்.

சரீரத்தைவிட்டுப் பிரிந்து மோக்ஷத்திற்குச்செல்லும் ஜீவனுக்குத் தங்கள் தங்கள் எல்லைகளில் உபசாரங்களைச்செய்து வழிநடத்துபவர் ஆதிவாஹிகரெனப்படுவர்; 67-வது பாசுரத்தின் உரையிற் காண்க. 30

எம்பெருமானை ஐந்து அங்கங்களுடன் சரணடைதல்

126 நின்னருளாங் கதியன்றி மற்றென் றில்லே
னெடுங்காலம் பிழைசெய்த நிலைக ழிந்தே
னுன்னருளுக் கினிதான நிலையு கந்தே
னுன்சரணே சரணென்னுந் துணிவு பூண்டேன்
மன்னிருளாய் நின்றநிலை யெனக்குத் தீர்த்து
வானவர்தம் வாழ்ச்சிதர வரித்தே னுன்னை
யின்னருளா லினியெனக்கோர் பரமேற் றும
லென்றிருமா லடைக்கலங்கொள் ளென்னை நீயே. 31

[ஸாரஸங்க்ரஹம்]

உரை:— என் திருமால்! – எனக்கு நாதனான எம்பெருமானே!, நின் அருளாம் கதி அன்றி – உன்னுடைய க்ருபையாகிய கதியைத் தவிர, மற்று ஒன்று இல்லேன் – வேறு ஒரு கதியும் இல்லாதவனா யிருக்கிறேன்; நெடுங்காலம் பிழை செய்த நிலை கழிந்தேன் – அநாதிகாலமாக அபராதம் செய்துவந்த நிலைமை (இப்பொழுது) கழியப்பெற்றேன்; உன் அருளுக்கு இனிதான நிலை உகந்தேன் – உன் க்ருபையைப்பெறுவதற்கு(த் தக்க) நல்ல ப்ரபத்திமார்க்கத்தை விரும்பினேன்; உன் சரணே சரண் என்னும் துணிவு பூண்டேன் – உன் திருவடியே உபாயம் என்னும் உறுதியைப் பெற்றேன்; மன் இருளாய் நின்ற நிலை–திடமான அஜ்ஞாநமயமாய் இருந்த நிலைமையை, எனக்குத் தீர்த்து – எனக்குப் போக்கிவைத்து, வானவர்தம் வாழ்ச்சி தர – நித்ய ஸூரிகளின் வாழ்வை (எனக்கு)த் தரும்படி, உன்னை வரித்தேன் – உன்னை ப்ரார்த்தித்துக்கொண்டேன்; இன் அருளால் – (உன்) இனிய க்ருபையால், இனி எனக்கு ஓர் பரம் ஏற்றாமல் – இனிமேல் எனக்கு ஒரு பொறுப்பும் வைக்காமல், நீ என்னை அடைக்கலம் கொள் – நீ என்னைக் காக்கவேண்டிய வஸ்துவாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.

கருத்து:— எனக்குத் தலைவனான ஸர்வேசுவரனே! உன் அருளைத் தவிர அடியேனுக்கு வேறு கதியில்லை. அநாதிகாலமாய் உன் திருவடிகளில் அபராதம் செய்துவந்த நிலை இப்பொழுது நீங்கிவிட்டது. உன் அருளைப்பெறுவதற்கு அநுகூலமாய் நிற்றலையே விரும்பினேன். உன் திருவடிகளே தஞ்சமென்று உறுதிகொண்டேன். என் அஜ்ஞாநத்தை ஒழித்து நித்யஸூரிகளின் வாழ்வை எனக்குத் தந்து காக்குமாறு உன்னை வேண்டிக்கொண்டேன். என்மீது கருணைகொண்டு இனி எனக்கு ஒரு பொறுப்பும் வைக்காமல் என்னைக் காக்கவேண்டிய வஸ்துவாக ஏற்றுக் கொள்வாயாக.

[இப் பாசுரத்தில் முதல்வரியால் கார்ப்பண்யமும், 2-வது வரியால் ப்ராதிகூல்யவர்ஜநமும், 3-வது வரியால் ஆநுகூல்யஸங்கல்பமும், 4-வது வரியால் மஹாவிசுவாஸமும், 5, 6-வது வரிகளால் கோப்த்ருத்வவரணமும், 7, 8-வது வரிகளால் ஆத்மஸமர்ப்பணமும் கூறப்பட்டனவென்றும், ஆக ஐந்து அங்கங்களுடன் கூடிய ப்ரபத்தியை இப்பாசுரம் விளக்குகின்றதென்றும் பெரியோர் பணிப்பர். அங்கங்களின் விளக்கம் 241-வது பாசுரவுரைக் குறிப்பிற் காண்க] 31

பகவத்கைங்கர்யத்தில் மனவுறுதி பெறல்

கட்டளைக்கலித்துறை

127 பரவு மறைக ளெலாம்பதஞ் சேர்ந்தோன்ற நின்றபிரா
னிரவன் றிரவியின் காலத் தழைத்த வெழிற்படையோ
னரவுங் கருடனு மன்புட னேந்து மடியிரண்டுந்
தரவேந் தமக்கரு ளாற்றள ராமனந் தந்தனனே. 32

[பாசுரம் 32, 33, 34— விரோதபரிஹாரம்]

உரை:— பரவும் மறைகள் எல்லாம் – ஸ்தோத்ரஞ்செய்யுந் தன்மையுள்ள வேதங்கள் முழுதும், பதம் சேர்ந்து ஒன்ற - தன் திருவடிகளில் ஈடுபட்டுப் பேசிநிற்க, நின்ற பிரான் – (அதனால்) உயர்ந்து நிற்கும் ஸ்வாமியும், அன்று – அந்நாள், (பாரதப்போரில்) இரவியின் காலத்து – ஸூர்யன் ப்ரகாசிக்கும் பகற்பொழுதிலே, இரவு அழைத்த– ராத்ரியை வருவித்த, எழில்படையோன் – ப்ரகாசமான சக்ராயுதத்தையுடையவனுமான எம்பெருமான், அரவும் கருடனும் – ஆதிசேஷனும் பெரிய திருவடியும், அன்புடன் ஏந்தும்-பக்தியுடன் ஏந்திக் கைங்கர்யஞ் செய்கின்ற, அடி இரண்டும் எம்தமக்குத் தர – திருவடிகள் இரண்டையும் (யாமும் கைங்கர்யம் செய்யும்படி) எமக்குக் கொடுக்க (நினைந்து) அருளால் – க்ருபையால், தளரா மனம் தந்தனன் – சோர்வடையாத மனத்தைக் கொடுத்தருளினன்.

கருத்து:— வேதங்கள் முழுதும் எம்பெருமானுடைய திருவடிகளைப் போற்றுகின்றன. அவ்வெம்பெருமான் பாரதப்போரில் தன் திருவாழியால் பகலிலேயே இரவை வரவழைத்த பெருமையுடையவன். பெரியதிருவடி–திருவநந்தாழ்வான் முதலிய நித்யஸூரிகள் அனைவரும் அவன் திருவடிகளில் பக்தியோடு கைங்கர்யம்செய்கின்றனர். அத்தகைய திருவடிகளை நமக்கும் அருளக்கருதி, அவற்றுக்குக் கைங்கர்யம் செய்யக்கூடிய மனவுறுதியை நமக்கு அருளினன்.

[இப் பாசுரத்தில் - சேஷனும் கருடனும் இயற்கைப் பகையின்றிக் கலந்து கைங்கர்யம் செய்ததும், பகலும் இரவும் கலந்து நின்றதும், ப்ரகாசமான படையால் இரவை அழைத்ததுமாகிய சேராச் சேர்த்தியை ரஸிக்க. இதன் ரஹஸ்யம் விரோதபரிஹாரமன்றோ.]

பாரதயுத்தத்தில் பதினன்காநாள், அர்ஜுநன் தன் புத்திரனை அபிமந்யுவைக் கொன்ற ஜயத்ரதனை அன்று மாலைநேரத்திற்குள் கொல்லாவிடில் அக்னியில் ப்ரவேசிப்பதாய்ச் சபதம் செய்தான். அதை அறிந்த துர்யோதநாதியர் ஜயத்ரதனை வெளியில் விடாமல்மிக்க கவனத்துடன் நிலவறையில் வைத்துக் காத்துவந்தனர். அர்ஜுநன்கவலையை நீக்கக் கண்ணபிரான் தன் சக்ராயுதத்தால் பகற்பொழுதிலேயே ஸூர்யனை மறைத்துவிட்டான். அதனால் இரவாகக் காணப்பட்டது. அர்ஜுநன் தன் சபதத்தின்படி தீயில் புக முயன்றான். அர்ஜுநன் தீயிற்புகுவதை மகிழ்வுடன் பார்க்க எதிரிகள் ஜயத்ரதனை முன்னிட்டுக்கொண்டு வந்தனர். அப்பொழுது கண்ணன் சக்கரத்தை நீக்கியருள மறுபடியும் பகல் வர உடனே அர்ஜுநன் ஜயத்ரதனைக் கொன்றான். இவ்வரலாறு இப்பாசுரத்தின் இரண்டாமடியிற் கூறப்பட்டது.

ஸ்ரீபாஷ்யகாரருடைய திருவடிகளில் ஈடுபட்ட இருவர் ஒரு குளக் கரையில் அமர்ந்து அவருடைய புகழைப்பற்றிப் பேசுவதாக அமைந்த இப்பாசுரம் மிக்க ரஸமுள்ள ஒரு ஸம்பாஷணையாயுள்ளது.

எம்பெருமானார் புகழ்—இருவர் வினா-விடை

பதினாறுசீர்ச்சந்தவிருத்தம்

128 அலர்ந்த வம்பு யத்தி ருந்து தேன ருந்தி யின்னக
லல்கு லார சைந்த டைந்த நடைகோ ளாத தனமேனோ
நலந்த விர்ந்த தால தேன்கோ னாவின் வீறி ழந்ததா
னுவ ணங்கு நாதர் தந்த நாவின் வீறி ழந்ததேன்
சலந்த விர்ந்து வாது செய்து சாடி மூண்ட மிண்டரைச்
சரிவி லேனே னக்க னைத்து ரைத்த வேதி ராசர்தம்
வலந்த ருங்கை நாய னார்வ ளைக்கி சைந்த கீர்த்தியால்
வாரி பால தாம தென்று மாசில் வாழி வாழியே. 33

உரை:— ஒருவர்:— அனம் அலர்ந்த அம்புயத்து இருந்து-ஹம்ஸம் மலர்ந்த தாமரைப்பூவில் உட்கார்ந்து, தேன் அருந்தி - (அதில் உள்ள) தேனைப்பருகி, இன் அகல் அல்குலார்-அழகிய அகன்ற அல்குலையுடைய ஸ்த்ரீகளின், அசைந்து அடைந்த நடை-அசைந்து நடக்கும் நடையை, கொளாதது என்?– கொள்ளாமல் (வருந்தி வாடிக்) கிடப்பதன் காரணம் என்ன? மற்றவர்:– நலம் தவிர்ந்ததால்–தன் பெருமையை அது இழந்து விட்டதால். ஒருவர்:- அது என்கொல்?–அது என்ன? மற்றவர்:–நாவின் வீறு இழந்ததால் – (தன்) நாவிற்குள்ள (பாலையும் நீரையும் பிரிக்கும்) சக்தியை இழந்துவிட்டதால். ஒருவர்:— நா அணங்கு நாதர் தந்த - வாக்குக்குத் தேவதையாகிய ஸரஸ்வதியின் கணவனான ப்ரஹ்மாவால் கொடுக்கப்பட்ட, நாவின் வீறு என் இழந்தது? – நாவின் அந்தச் சக்தியை ஏன் இழந்தது? மற்றவர்:— மூண்ட மிண்டரை - அடிக்கடி வாதத்திற்கு வந்த முருடர்களான வாதிகளை, சலம் தவிர்ந்து வாது செய்து சாடி – குற்றமில்லாது வாதம் செய்து ஜயித்து, சரிவு இலேன் எனக் கனைத்து உரைத்த – (இன்னும் யாவர் வாதம்புரிய வந்தாலும்) தளரமாட்டேன் என்று கர்ஜித்துக் கூறிய, ஏதிராசர் தம் – ஸ்ரீபாஷ்ய காரருடையதும், வலம் தரும் கை நாயனார் – (அடைந்தவர்களுக்குப்) பலத்தைத் தரும் கையையுடைய எம்பெருமானுடைய, வளைக்கு இசைந்த கீர்த்தியால்-சங்கம்போன்றதுமான கீர்த்தி (உலகமெங்கும்) பரவியதால், வாரி பாலது ஆம் - ஜலம் முழுதும் பாலாகிவிட்டதாம்; என்றும் மாசில் அது வாழி வாழி – எக்காலத்திலும் குறைவுபடாத அந்தப் புகழ் வாழக்கடவது.

கருத்து:— ஒரு பொய்கைக் கரையில் இருவர் ஸம்பாஷிக்கின்றனர்:—

ஒருவர்:— இங்கே உள்ள ஓர் அன்னப்பறவை தாமரைப்பூவில் அமர்ந்து அதில் உள்ள தேனைப் பருகவில்லை, அழகிய பெண்களின்

நடையைக் கொள்ளவுமில்லை. ஏன் இவ்வாறு சோர்ந்து கிடக்கின்றது? நீர் அறிவீரா?

மற்றவர்:— அறிவேன். இதற்கு உள்ள பெருமையை இழந்து விட்டதால் வருந்திக்கிடக்கின்றது.

ஒருவர் :—அது என்ன? விளங்கக் கூறும்.

மற்றவர்:—அன்னத்தின் நாவுக்குப் பாலையும் நீரையும் பிரிக்கும் சக்தி உண்டன்றோ; அச்சக்தியை இது இழந்து விட்டதால் வருந்து கின்றது.

ஒருவர் – அன்னங்களுக்கு அந்தச் சக்தி ப்ரஹ்மதேவர் அளித்த தாயிற்றே? அதை ஏன் இது இழக்கவேண்டும்?

மற்றவர்:— கூறுகிறேன். கேளும். ஸ்ரீபாஷ்யகாரருடன் முருடர் களான பிறமதத்தினர் அடிக்கடி வாதத்திற்கு வந்தனர். அவர்களுடன் ஸ்ரீபாஷ்யகாரர் குற்றமற்ற வாதங்களைச் செய்து அவர்களை வென்றார்; இன்னும் வாதம்புரிய எவர் வந்தாலும் பின்வாங்கமாட்டேன் என்று கர்ஜித்துக் கூறியருளினார். அதனால் அவருக்கு எம்பெருமானது சங்கம்போல் தூய வெண்மையான புகழ் வளர்ந்தது. அப்புகழ் உலக மெங்கும் பரவி எல்லாப் பொருள்களும் வெண்மைநிறமாகிவிட்டன. உலகிலுள்ள ஜலம் முழுதும் வெண்மையான பாலாகிவிட்டது. ஆகவே அன்னத்தினிடம் உள்ள பாலையும் நீரையும் பிரிக்கும் சக்தி பயன்பட இடமில்லாது போயிற்று. அந்தச் சக்தியால்தானே அன்னத்துக்குப் பெருமை. அதை எண்ணித் தன் பெருமை போனதற்கு இவ்வன்னம் வருந்திக்கிடக்கின்றது. குற்றமற்ற அத்தகைய ஸ்ரீபாஷ்யகாரரின் புகழ் என்றும் வாழ்க.

சலம் - வாதம் செய்யும்போது ஏற்படும் ஒருவகைக் குற்றம். ஏதிராசர்— எதிராசர்; செய்யுள்விகாரம், நீட்டல். 33

பிறதெய்வத்தின்பால் ஸாரார்த்தங்களை அறியமுடியாமை

கட்டளைக்கலித்துறை

129 சடையன் றிறலவர் கள்பெரு ஞானக் கடலதனை
யிடையமி ழாது கடக்கினு மீதள வென்றறியார்
விடையுட னேழன் றடர்த்தவன் மெய்யருள் பெற்றநல்லோ
ரடைய வறிந்துரைக் கவ்வடி யோமு மறிந்தனமே. 34

உரை:— சடையன் திறலவர்கள் –* சடையைத் தரிக்கும் சிவ னுடைய பலத்(தால் ஜ்ஞாநத்)தைப் பெற்றவர்கள், பெரு ஞானக் கட லதனை-பெரிய ஜ்ஞாநமாகிய ஸமுத்ரத்தை, இடை அமிழாது கடக்கினும்- நடுவில் அமிழ்ந்துபோகாது தாண்டினாலும் (எவ்வளவு ஜ்ஞாநம்பெற்றா

* ज्ञानं महेश्वरादिच्छेत्

லும்), ஈது அளவு என்று அறியார் – இதுதான் (அந்த ஜ்ஞாநஸமுத்ரத்தின்) அளவு என்று அறியமாட்டார்கள்; அடியோமும்-பாகவதர்களான நாமோவெனில், அன்று ஏழுவிடைஉடன் அடர்த்தவன்-முன் ஒருநாள் ஏழுகாளைகளையும் ஒரே ஸமயத்தில் ஒருசேர அடக்கிய கண்ணனுடைய, மெய் அருள் பெற்ற நல்லோர் – நிலையான க்ருபையைப் பெற்ற சிறந்த ஆசார்யர்கள், அடைய அறிந்து உரைக்க – முழுதும் (ஸாரார்த்தங்களைத் தாங்கள்) அறிந்து (நமக்கு) உபதேசிக்க, அறிந்தனம் – ஜ்ஞாநத்தைப் பெற்றோம்.

கருத்து:— உலகில் சிவனிடமிருந்து ஜ்ஞாநத்தைப் பெறலாம் என்று ஸாதாரண அதிகாரிக்குச் சாஸ்த்ரம் கூறுகின்றது. அவ்வாறு சிவனை உபாஸித்துச் சில அதிகாரிகள் எவ்வளவு ஜ்ஞாநத்தைப் பெற்றாலும் அவர்கள் அறியவேண்டிய ஸாரார்த்தம் அனைத்தையும் அறிந்தவராகார். நாம் கண்ணபிரானுடைய கடாக்ஷம் பெற்ற சிறந்த ஆசார்யர்களின் உபதேசத்தால் ஸாரார்த்தங்கள் முழுவதையும் அறிந்து பெருமைபெற்றோம்.

க்ருஷ்ணாவதாரத்தில் நப்பின்னைப்பிராட்டியை மணக்க விரும்பிய கண்ணன், அவள் தந்தை கந்யாசுல்கமாக வைத்த ஏழு காளைகளையும் தன் பலத்தால் அடக்கி அவளை மணந்துகொண்ட வரலாறு மூன்றாவது அடியால் கூறப்பட்டது. 34

எம்பெருமானைப் பிரியாத நிலைபெறல்

எண்சீராசிரியவிருத்தம்

130 பாவளருந் தமிழ்மறையின் பயனே கொண்ட
பாண்பெருமாள் பாடியதோர் பாடல் பத்திற்
காவலனுங் கணவனுமாய்க் கலந்து நின்ற
காரணனைக் கருத்துறநாங் கண்ட பின்பு
கோவலனுங் கோமானு மான வந்நாள்
பூவைபிணை கோவியர்தங் குறிப்பே கொண்டு
சேவலுடன் பிரியாத பேடைபோற் சேர்ந்து
தீவினையோர் தனிமையெலாந் தீர்ந்தோ நாமே. 35

[பாசுரம் 35, 36, 37 - முநிவாஹநபோகம்]

உரை;— பா வளரும் தமிழ் மறையின்–பாசுரங்கள் நிறைந்துள்ள தமிழ்வேதமாகிய திவ்யப்ரபந்தத்தின், பயனே கொண்ட – ஸாரார்த்தங்களே அடங்கப்பெற்றவையும், பாண்பெருமாள் பாடியது – திருப்பாணாழ்வாரால் பாடப் பெற்றவையுமான, ஓர் பாடல்பத்தில்-(அமலனாதிபிரான் என்னும்) நிகரற்ற பத்துப் பாசுரங்களால், காவலனும் கணவனுமாய் கலந்து நின்ற காரணனை –(அனைத்தையும்) காப்பவனும் நாயகனுமாய் (எல்லா வஸ்துக்களிலும் அந்தர்யாமியுமாய்)க் கலந்து நிற்கின்ற ஸர்வ காரணனான எம்பெருமானை, நாம் கருத்து உற கண்டபின்பு – நாம்

மனத்தில் பதியுமாறு அறிந்தபின்பு, கோவலனும் கோமானுமான அந்நாள் - கோபாலனும் (யதுவம்சத்து) அரசனுமாய் அவதரித்திருந்த அக்காலத்தில், குரவை பிணை - (அவனுடன்) ராஸக்ரீடை புரிந்தவர்களான, கோவியர்தம் குறிப்பே கொண்டு - இடைப்பெண்களின் உள்ளக்கருத்தையே (நாமும்) கொண்டு, சேவலுடன் பிரியாத - ஆண்பறவையை விட்டுநீங்காத, பெடைபோல் சேர்ந்து - பெண் (அன்றில்) பக்ஷிபோல் (நாமும் எம்பெருமானைச்) சேர்ந்து, தீவினையோர் தனிமை எலாம் - பாபிகளுக்குள்ள உதவியற்ற நிலையெல்லாம், நாம் தீர்ந்தோம் - நாம் நீங்கப்பெற்றோம்.

கருத்து-: திருப்பாணாழ்வார் அருளிய அமலனுதிபிரான் என்னும் பிரபந்தம் தமிழ்வேதமெனப்படும் திவ்யப்ரபந்தத்தின் ஸாரம் முழுதும் தன்னுள் அடங்கப்பெற்றது என்னலாம். இங்ஙனம் சிறப்புவாய்ந்த இந்த ஸ்ரீஸூக்தியால் எம்பெருமானையே ஸர்வரக்ஷகனாகவும் ஸர்வேசுவரனாகவும் ஸர்வாந்தர்யாமியாகவும் ஸர்வகாரணமாகவும் அறிந்தோம். இனி முன் கண்ணனிடம் மட்டற்ற காதல்கொண்டு கூடிக் கலந்த இடைப்பெண்களின் நிஷ்டையைப் பெற்று, ஆண் அன்றிலைப் பிரியாதுநிற்கும் பெண் அன்றில்போல் நாமும் எம்பெருமானைச் சேர்ந்து, உதவியற்றநிலைமை நீங்கப்பெற்றோம். 35

'அமலனுதிபிரான்' கூறும் நிஷ்டைபெறல்

131 ஆதிமறை யெனவோங்கு மரங்கத் துள்ளே
யருளாருங் கடலைக்கண் டவனம் பாண
னோதியதோ ரிருநான்கு மிரண்டு மான
வொருபத்தும் பற்றாக வுணர்ந்து ரைத்தோ
நீதியறி யாதநிலை யறிவார்க் கெல்லா
நிலையிதுவே யென்றுநிலை நாடி நின்றோம்
வேதியர்தாம் விரித்துரைக்கும் விளைவுக் கெல்லாம்
விதையாகு மிதுவென்று விளம்பி னோமே. 36

உரை:— மறை ஆதி என ஓங்கும் - (உருவத்தில்) வேதத்தின் முதல் அக்ஷரமாகிய ப்ரணவம் என்னும்படி உயர்ந்துநிற்கின்ற, அரங்கத்துள்ளே - ஸ்ரீரங்கவிமாநத்திற்குள் (ப்ரகாசிக்கின்ற), அருள் ஆரும் கடலை - க்ருபை(யாகிய நீர்) நிறைந்தஅரங்கனாகிய கடலை, கண்டவன் நம் பாணன் - கண்டு அநுபவித்தவராகிய நம் திருப்பாணாழ்வாரால், ஓதியது ஓர் இருநான்கும் இரண்டுமான ஒரு பத்தும் - அருளிச்செய்யப்பட்டனவாய் (நித்யம்) அநுஸந்திக்கத்தக்கனவாய் எட்டும் இரண்டுமான நிகரற்ற அமலனுதிபிரான் பத்துப் பாசுரங்களையும், பற்றாக உணர்ந்து உரைத்தோம் - கதியாக அறிந்து அநுஸந்தித்தோம். நீதி அறியாத -(பிற மதங்களைக் கண்டிப்பதற்கு வேண்டிய) யுக்திகளை அறியாதவர்களாய், நிலை அறிவார்க்கெல்லாம் -

தத்துவங்களின் ஸ்வரூபத்தை (மாத்திரம்) அறிந்தவர்களுக்கெல்லாம், இதுவே நிலை என்று – இந்த ப்ரபந்தமே உறுதிதர வல்லது என்று (நினைத்து), நிலை நாடிநின்றோம். – (இதில் கூறப்பட்ட) நிலைமையை (அநுபவத்தை) அடைய விரும்பிநின்றோம். வேதியர் தாம் விரித்து உரைக்கும் – வேதாந்திகள் தாங்கள் விரிவாக வெளியிடுகின்ற, விளைவுக்கெல்லாம் – பலன்களுக்கெல்லாம், இது விதை ஆகும் என்று – இந்த ப்ரபந்தம் (காரணமான) விதைபோன்றதாகும் என்று, விளம்பினோம் – (இந்த ரஹஸ்யத்தில்) கூறினோம்.

கருத்து:— வேதத்தில் முதலில் அநுஸந்திக்கப்படுகின்ற ப்ரணவத்தின் வடிவுகொண்டது ஸ்ரீரங்கவிமாநம். அதற்குள் கருணையாகிய நீர்நிறைந்த அரங்கனாகிய கடல், காண்பவர் கண் குளிருமாறு திகழ்கின்றது. அந்தக் கடலைக் கண்டு அநுபவித்து நம் திருப்பாணாழ்வார் பாடிய பத்துப் பாசுரங்களையும் நம்மை வாழ்விக்கும் கதியாகப் பற்றினோம். பிறமதங்களைக் கண்டிப்பதற்கு வேண்டிய யுக்திகளின்றித் தத்துவங்களின் ஸ்வரூபத்தைமட்டும் அறிந்தவர்களுக்கெல்லாம் இந்த ப்ரபந்தமே மனவுறுதியைத் தரவல்லதென அறிந்து இதில் கூறப்பட்ட நிஷ்டையை விரும்பிநின்றோம். வேதாந்திகள் கூறும் ஸகல பலன்களுக்கும் இப்பிரபந்தம் விதையாய்நின்று பலன்தருவதாகுமென்று இந்த ரஹஸ்யத்திலே கூறினோம். 36

விசேஷஜ்ஞாநம் பெற ஆசார்யனை நாடுதல்

132 காண்பனவு முரைப்பனவு மற்றொன் றின்றிக்
கண்ணனையே கண்டுரைத்த கடிய காதற்
பாண்பெருமா ளருள்செய்த பாடல் பத்தும்
பழமறையின் பொருளென்று பரவு கின்றோம்
வேண்பெரிய விரிதிரைநீர் வையத் துள்ளே
வேதாந்த வாரியனென் றியம்ப நின்றோ
நாண்பெரியோ மல்லோநா நன்றுந் தீது
நமக்குரைப்பா ருளரென்று நாடு வோமே. 37

உரை:— காண்பனவும் உரைப்பனவும் மற்று ஒன்று இன்றி-(தம்) கண்ணால் காணப்படுவதும் பேசப்படுவதும் வேறு ஒரு வஸ்துவாக இல்லாமல், கண்ணனையே கண்டு உரைத்த – எம்பெருமானையே கண்டு (அவனைப்பற்றியே) பேசியவரும், கடிய காதல் பாண்பெருமாள் – (எம்பெருமானிடம்) அதிகமான பக்தியையுடையவருமான திருப்பாணாழ்வார், அருள் செய்த பாடல் பத்தும் – அருளிச்செய்த (அமலனாதிபிரான் என்னும்) பத்துப்பாசுரங்களையும், பழ மறையின் பொருள் என்று பரவுகின்றோம் – அநாதியான வேதத்தின் ஸாரம் என்று (நினைத்துக்) கொண்டாடுகின்றோம். வேண் பெரிய – விருப்பத்தால் பெரியதும் (எல்லோராலும் மிக விரும்பப்படுகின்றதும்), விரி திரை நீர்-அகன்ற

அலை நிறைந்த (கடல்) நீரால் சூழப்பட்டதுமான, வையத்துள்ளே— இவ்வுலகத்தில், வேதாந்த ஆரியன் என்று - வேதாந்தாசார்யன் என்று, இயம்ப நின்றோம் - (ஸ்ரீரங்கநாதன் தானே) புகழும்படி நிலைபெற்றோம்; (அதனால்), நாம் நாண்பெரியோம் அல்லோம் - நாம் அஹங்காரம் நிறைந்தவர்களாக ஆகமாட்டோம். நன்றும் தீதும் - நல்ல விஷயங்களையும் தீய விஷயங்களையும், நமக்கு உரைப்பார்-நமக்கு உபதேசிக்கும் ஆசார்யர்கள், உளர் என்று நாடுவோம் - இருந்தே தீர்வார்களென்று (துணிந்து அவர்களைத்) தேடியே நிற்போம்.

கருத்து:— திருப்பாணாழ்வார் எம்பெருமானையன்றி வேறொன்றையும் தம் கண்ணாலே காண்பதும் வாயினால் பேசுவதுமில்லை. எம்பெருமானிடம் இத்தகைய காதல்கொண்டுநிற்கும் திருப்பாணாழ்வார் அருளிய பத்துப்பாசுரங்களையும் அநாதியான வேதத்தின் ஸாரமென அறிந்து கொண்டாடுகின்றோம். அனைவரும் கர்மபலனை அநுபவிக்குமிடமாதலால் விரும்பப்படும் இக்கடல்சூழ்ந்த உலகின்கண் 'வேதாந்தாசார்யன்' என்று ஸ்ரீரங்கநாதனே புகழ்ந்து பேசநின்றோம். ஆயினும் இதனால் நாம் அஹங்காரம் கொள்ளாது ஆசார்யகடாக்ஷமே இத்தகைய சிறப்புக்குக் காரணமென நினைந்து இன்னும் விசேஷ ஜ்ஞாநம் பெற உபதேசிக்கும் ஆசார்யர்களைத் தேடியே நிற்போம். *37*

அமிருதாஸ்வாதினி—உரை முற்றிற்று

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

ஸ்ரீ:

பரமபதசோபானம்—உரை

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

சிறப்புத்தனியன்—உரை

व्याजीकृत्य विमुक्तिसौधपदवीसोपानसद्वर्णनं
शारीरार्णवरत्नजातमिह यः प्राचीकशत्सर्वशः ।
तस्मिंस्तिष्ठति वेङ्कटेश्वरकवौ श्रीभाष्यकारोपमे
यं कञ्चित्पुरुषं ह्युपासितुमये मागा मनः स्वस्ति ते ॥

अये मनः! - ஓ மனமே! **यः** - எவர், **विमुक्तिसौधपदवीसोपान-सद्वर्णनं** - மோக்ஷமாகிய மேன்மாடத்திற்கு ஏறும் வழிப்படிகளைக் கூறுவதை, **व्याजीकृत्य** - வ்யாஜமாகக்கொண்டு, **इह** - இப் பூமியில், **शारीरार्णवरत्नजातं** - கடல்போன்ற வேதாந்த சாஸ்த்ரங்களின் அர்த்தமாகிய ரத்நக் குவியலை, **सर्वशः** - முழுதும், **प्राचीकशत्** -

(பரமபதஸோபாநமென்னும் கிரந்தத்தின் மூலமாய்) வெளியிட்டாரோ, तस्मिन् - அந்த, श्रीभाष्यकारोपमे - ஸ்ரீபாஷ்யகாரரை ஒத்தவரான, वेङ्कटेश्वरकवौ - ஸ்ரீவேங்கடநாதனென்னும் மஹாகவி, तिष्ठति - ப்ரகாசிக்கும்பொழுது, यं कञ्चित् पुरुषं हि - வேறு ஒரு அற்பமனிதனை, उपासितुं - பூஜிப்பதற்கு, मा गाः - போகாதே (முயலாதிரு, அவ்வாறு இருந்தால்), - உனக்கு, स्वस्ति - மங்களம் (உண்டாகும்).

तस्मै नमोऽस्तु गुरवे ताद्दशविभवाय वेङ्कटेशाय ।
प्रावर्तयज्जनानां भूमौ परमपदहर्म्यसोपानम् ॥

(यः - எவர்), भूमौ - இப் பூமியிலே, जनानां - ஜநங்களுக்கு, परमपदहर्म्यसोपानं - பரமபதமாகிய மேன்மாளிகைக்குச் செல்லும் படிகளை (வெளியிடும் இப்பிரபந்தத்தை), प्रावर्तयत् - வெளியிட்டாரோ, ताद्दशविभवाय - அவ்வளவு பெருமைவாய்ந்த, तस्मै - அந்த, वेङ्कटेशाय - வேங்கடநாதனென்னும், गुरवे - ஆசார்யனுக்கு, नमः अस्तु - (நம்) வணக்கம் சேரக்கடவது.

தேனேறு தாமரையா டிருமார் பன்றன்
றிண்ணருளா லவனடியில் விவேகம் பெற்றிங்
கூனேறு பவக்குழியை வெறுத்த தற்பி
னூர்விரத்தி யுடன்வினையின் றிரளுக் கஞ்சிக்
கூனேறு பிறையிறையோன் சாபந் தீர்த்தான்
குரைகழலே சரணடைந்து குரம்பை விட்டு
வானேறும் வழிப்படிக ளடைவே கண்ட
வண்புகழ்த்தூப் புல்வள்ள லருள்பெற் றேமே.

தேன் ஏறு தாமரையாள்–தேன் நிறைந்த தாமரைப்பூவில் வஸிக்கும் பிராட்டியை, திருமார்பன்றன் – திருமார்பில் உடையவனான எம்பெருமானுடைய, திண் அருளால்–வலிய க்ருபையினால், அவன் அடியில் விவேகம் பெற்று – அவனுடைய திருவடிகளில் நல்ல ஜ்ஞாநத்தைப் பெற்று, இங்கு – இப்பூமியில், ஊன் ஏறு பவக் குழியை–சரீரத்தையே வ்ருத்திசெய்கிற ஸம்ஸாரமாகிய படுகுழியை, வெறுத்ததற்பின் – வெறுத்துத் தள்ளிய பின், ஊர் விரத்தியுடன் – பரவுகிற வைராக்யத்துடன், வினையின் திரளுக்கு அஞ்சி – பாபக் கூட்டத்தால் வரும் பலனுக்குப் பயந்து, கூன் ஏறு – வளைவு நிறைந்த, பிறை இறையோன் – சந்த்ரகலையைத் தரித்த சிவனுடைய, சாபம் தீர்த்தான் - சாபத்தைப் போக்கிய எம்பெருமானுடைய. குரை கழலே சரண் அடைந்து – (கழல்) ஒலிக்கின்ற திருவடிகளையே சரணமாகப்பற்றி, குரம்பை விட்டு – சரீரத்தை விட்டு, வான் ஏறும் வழிப் படிகள் – பரமபதத்திற்கு

ஏறும் வழியின் படிகளை, அடைவே கண்ட – வரிசையாகக் கண்டறிந்து வெளியிட்ட, வண் புகழ் – சிறந்த புகழையுடைய, தூப்புல் வள்ளல் – தூப்புலில் அவதரித்த தாநசீலரான தேசிகனுடைய, அருள் பெற்றோம் – க்ருபையைப் பெற்றோம்.

ஸ்ரீ:

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

[விஷயச் சுருக்கம்]

இந்தப் பிரபந்தத்தின் பெயரையே கொண்ட ஒரு ரஹஸ்யக்ரந்தத்தையும் மணிப்ரவாளநடையில் அருளிச்செய்திருக்கிறார் நம் தேசிகன். அதிலடங்கிய பாசுரங்களைத் தொகுத்ததால் இப்பிரபந்தம் தோன்றியது. மிக்க உயரத்திலமைந்துள்ள ஓர் இடத்தை அடைவதற்குப் படிகளை அமைத்து ஏறிச்செல்லுதல் உலகமுறையாகும். பரமபதமென்னும் மிக உயர்ந்த ஸ்தாநத்தை அடைவதற்கு ஒன்பது விஷயங்களைப் படிகளாகக் கற்பித்து இப்பிரபந்தத்தில் விளக்குகிறார் ஸ்ரீதேசிகன். ஆதலின் இதற்கு இப்பெயர் வந்தது. (ஸோபாநம்—படி)

இங்குக் கூறிய * 9-படிகளாவன:- (1) தத்துவங்கள் முதலியவற்றை வகுத்து அறிதல் (2) மனந்தளர்தல் (3) உலகஸுகங்களில் ஆசையறுதல் (4) தம் பாபங்களின் மிகுதியால் இனி வரக்கிடக்கும் நரகாநுபவம் முதலிய துன்பங்களுக்கு அஞ்சுதல் (5) எம்பெருமான் மோக்ஷத்தை அருள்வதற்குக் காரணமான உபாயத்தை அநுஷ்டித்தல் (6) இச்சரீரத்திலிருந்து ஜீவன் வெளியேறுதல் (7) அர்ச்சிராதிமார்க்கத்தால் செல்லுதல் (8) ஸ்ரீவைகுண்டமென்னும் திவ்யலோகத்தைச் சேர்தல் (9) அங்கு ஸர்வேசுவரனைக் கண்ணாரக் கண்டு களித்து அநுபவித்து அந்த ஆநந்தத்திலேயே மூழ்கிக்கிடத்தல். இந்த 9-விஷயங்களையும் இப்பிரபந்தத்தில் சுருக்கியும், ரஹஸ்யத்தில் மிக விரித்தும் அருளியிருக்கிறார் ஸ்ரீ தேசிகன்.

ஸம்ப்ரதாயம் வந்த வழி

கட்டளைக்கலித்துறை

133 அடற்புள் ளரசினு மந்தணர் மாட்டினு மின்னமுதக்
கடற்பள்ளி தன்னினுங் காவிரி யுள்ள முகந்தபிரா
னிடைப்பிள்ளை யாகி யுரைத்த துரைக்கு மேதிவரனுர்
மடைப்பள்ளி வந்த மணமெங்கள் வார்த்தையுண் மன்னியதே.

[பொதுப்பாசுரம்]

* विवेकनिर्वेदविरक्तिभीतयः प्रसादहेतूत्क्रमणार्चिरादयः ।
प्रकृत्यतिक्रान्तपदाधिरोहणं पराप्तिरित्यत्र तु पर्वणां क्रमः ॥

உரை:— அடல் புள் அரசினும் – பலமுடைய பக்ஷிகளுக்கு அரசனுகிய கருடனிடத்திற்காட்டிலும் *அந்தணர் மாட்டினும்–ப்ராஹ்மணர்களின் தநமாகிய வேதவேதாந்தங்களிடத்திற்காட்டிலும், இன் அமுதக் கடல் பள்ளி தன்னினும் – இனிய அமுதமாகிய பிராட்டி அவதரித்த திருப்பாற்கடலாகிய திருப்பள்ளியிற்காட்டிலும்,காவிரி–காவிரிக் கரையிலுள்ள ஸ்ரீரங்கம் முதலிய திவ்யதேசங்களில், உள்ளம் உகந்த பிரான்–மனம் மிக மகிழ்ந்து எழுந்தருளியுள்ள எம்பெருமான், இடைப்பிள்ளை ஆகி – இடைச்சிறுவனுய் அவதரித்து, உரைத்தது–வெளியிட்ட பகவத்கீதையின் தாத்பர்யத்தையே, உரைக்கும்–தம் பாஷ்யங்களில் விளக்கியவரான, எதிவரனுர் – யதிகளுள் சிறந்த ஸ்ரீபாஷ்யகாரருடைய, மடைப்பள்ளி வந்த மணம் – திருமடைப்பள்ளி வழியாக வீசிய வாஸனை, எங்கள் வார்த்தையுள் – யாம் வெளியிடும் க்ரந்தங்களுள், மன்னியது – பொருந்தியுள்ளது.

கருத்து;— ஸர்வேசுவரன் பெரியதிருவடியை வாஹநமாகவும் ஆஸனமாகவும் கொண்டவன்; அந்தணர்க்கு அழியாச்செல்வமாகிய வேதாந்தங்களால் போற்றப்பட்டு அவற்றை உறைவிடமாகக்கொண்டவன்; பிராட்டி அவதரித்த திருப்பாற்கடலில் நித்யவாஸம்செய்பவன்; ஆயினும் இந்த ஸ்தானங்களைக்காட்டிலும் ஸ்ரீரங்கம் முதலிய திவ்யதேசங்களிலேயே மனமுவந்து வாழ்ந்து அடியார்களுக்கு அருள் புரிகின்றுன். அவன் உலகத்தை வாழ்விக்க முன்பு அருளிய பகவத்கீதையின் தாத்பர்யத்தை ஸ்ரீ பாஷ்யகாரர் தமது பாஷ்யத்தின் வாயிலாக விளக்கியருளினுர். அவருக்கு அந்தரங்க கைங்கர்யம் செய்து ஸர்வார்த்தங்களையும் பெற்ற திருமடைப்பள்ளியாச்சான் வழியாக வந்த ஸாரார்த்தங்கள் நம்முடைய ஸூக்திகளில் அடங்கிநிற்கின்றன.

இப்பாசுரத்தில் அரசிலும், மாட்டிலும், தன்னிலும், உள்ளும் என்ற பாடத்தைக்கொண்டு, 'புள்ளரசிலும்' என்றதால் எம்பெருமானுடைய பரரூபமும், 'அந்தணர் மாட்டிலும்' என்றதால் அந்தர்யாமிரூபமும், 'கடற்பள்ளிதன்னிலும்' என்றதால் வ்யூஹரூபமும், 'காவிரியுள்ளும்' என்றதால் அர்ச்சாரூபமும், 'இடைப்பிள்ளையாகி' என்றதால் விபவரூபமும் ஆக எம்பெருமானுடைய ஐந்து வகை ரூபங்களும் கூறப்பட்டனவாகவும் பெரியோர் கூறுவர்.

ஸ்ரீபாஷ்யகாரருடைய திருமடைப்பள்ளியில் அந்தரங்ககைங்கர்யம் செய்துவந்து அவரிடமே ஸகலார்த்தங்களையும் கற்றறிந்த கடாம்பியாச்சான் வழியாக நம் ஸம்ப்ரதாயம் வந்து தழைத்தோங்குவதால் ''மடைப்பள்ளி வந்த மணம்'' என்னப்பட்டது.

உண்ணக்கடவ உயர்ந்த பண்டங்களைச் சேமித்துத் திருமடைப்பள்ளியில் வைத்து அனைவருக்கும் வழங்குமாறுபோல் கற்றறிந்து அநுபவிக்க வேண்டிய வேதாந்தத்தின் ரஹஸ்யார்த்தங்களையெல்லாம் ஸ்ரீபாஷ்யகாரர் கடாம்பியாச்சானுக்கு உபதேசித்து, அவர்முகமாய் உலகுக்கு வழங்கச்செய்தபடியால் அவருக்கு மடைப்பள்ளியாச்சானெனத் திருநாமம் வந்தது என்றும் கூறுவர் பெரியோர். 1

* ब्राह्मणानां धनं वेदः
தே. பி. 16

பாசுரம் 2, 3—விவேகம்—1-வது படி

134 கள்ள மனத்துடன் கண்டு முயன்ற கடுவினையா
னள்ளிரு ளாழியி னற்சுவை யைந்தென நாடியவோ
ரள்ளலி ளுைம் விழுந்தழி யாவகை யாரணநூல்
வள்ளல் வழங்கிய வான்படி யான வழியிதுவே. 2

[பாசுரம் 2, 3—விவேகபர்வம்]

உரை:— கள்ளமனத்துடன் – வஞ்சனை நிறைந்த மநஸ்ஸினால், கண்டு – (தத்துவங்களை விபரீதமாய்) அறிந்து, முயன்ற கடு வினையால் – செய்த கொடிய கர்மங்களால், நள் இருள் ஆழியில் – அடர்ந்த (அஜ்ஞாநமென்னும்) இருளாகிய கடலில், ஐந்து நல் சுவை என – (ரூபம், ரஸம், கந்தம், ஸ்பர்சம், சப்தம் என்னும்) ஐந்து புலன்களையும் நல்ல ஸாரங்கள் என்று நினைத்து, நாடிய ஓர் அள்ளலில் – (நம்மால்) தேடப்பட்ட ஒரு பெருஞ்சேற்றில், நாளும் – எப்பொழுதும், விழுந்து அழியாவகை–(நாம்) விழுந்து அழிந்துபோகாமலிருக்கும்படி, வள்ளல் – (ஸகலார்த்தங்களையும் வெளியிடுதலால்) கொடையிற் சிறந்த, ஆரண நூல் – வேதவேதாந்தங்களில், வழங்கிய – உபதேசிக்கப்பட்டதும், வான் படியான – பரமபதத்திற்கு(முதற்)படியாயுள்ளதுமான, வழி – மார்க்கம், இதுவே – இந்தப் பர்வத்திற்கூறப்பட்ட விவேகமே.

கருத்து:–நாம் இதுகாறும் தத்துவங்களைப்பற்றிய விபரீதஜ்ஞாநத்தையே பெற்றுக் கொடிய கர்மங்களை மேன்மேலும் செய்து அஜ்ஞாநமாகிய இருளில் மூழ்கிச் சப்தம் முதலிய அற்பவிஷயங்களையே போக்யமாய்க்கொண்டு அந்தப் பெருஞ்சேற்றில் மூழ்கிக்கிடந்தோம். இத்தகைய நம்மை வாழ்விக்க வேதவேதாந்தங்கள் கருணைகொண்டு விவேகத்தை உபதேசித்தன. பரமபதத்திற்கு உரிய ஒன்பது படிகளுள் முதலாவதாகிய விவேகத்தை இந்த ரஹஸ்யத்தில் முதல் பர்வத்தில் விளக்கினோம். 2

எம்பெருமானைப்பற்றி அறிவதன் அவசியம்

எண்சீராசிரியவிருத்தம்

135 அருவுருவா னவையனைத்து மறிவா ரேனு
மருங்கலைகள் கற்றுரைக்க வல்லா ரேனுந்
தருமவழி யழியாமற் காப்பா ரேனுந்
தனிமறையின் ருற்பரியந் தருவா ரேனு
மிருவினையி னுழுக்கத்தா லேவ லோரா
திங்கேநாஞ் சிறையிருந்த வீனந் தீர்க்குந்
திருமகளார் பிரியாத தேவன் றிண்ணந்
தேருதார் திண்படியி லேரு தாரே. 3

உரை:— அரு உரு ஆனவை – உருவமில்லாத சேதநம் ஸ்தூலமான அசேதநம் ஆகிய, அனைத்தும் அறிவாரேனும் – ஸகலபதார்த்தங்

கலையும் அறிந்தவரேயானாலும், அரும் கலைகள் கற்று – அருமையான கல்வியைத் தாம் கற்று, உரைக்க வல்லாரேனும் – (பிறருக்கும்) உபதேசிக்க ஆற்றலுடையவரேயாயினும், தரும வழி அழியாமல் – தர்மமார்க்கம் அழியாமல், காப்பாரேனும் – (அதன்படி) அநுஷ்டிப்பவர்களேயானாலும், தனி மறையின் – ஒப்பற்ற வேதத்தின், தாற்பரியம் தருவாரேனும் – ஸாரத்தைப் பிறருக்குப் போதிப்பவரேயானாலும், இரு வினையின் ஒழுக்கத்தால் – (புண்யம் பாபம் என்னும்) இரண்டு கர்மங்களின் மார்க்கத்தில் நடத்தலால், ஏவல் ஓராது – (நாம் செய்ய வேண்டிய) கைங்கர்யத்தைப்பற்றி ஆராயாமல், இங்கே நாம் சிறையிருந்த – இந்த ஸம்ஸாரத்தில் நாம் சிறையிருந்தமையாகிய, ஈனம் தீர்க்கும்–தாழ்வைப் போக்குகின்ற, திருமகளார் பிரியாத–பிராட்டியைப் பிரியாதவனான, தேவன் திண்ணம் தேறாதார் – எம்பெருமானுடைய உறுதியைத் தெளிந்துகொள்ளாதவர், திண் படியில் ஏறாதார் – (மோக்ஷத்திற்கொண்டு சேர்க்கும்) திடமான படியில் ஏறமாட்டார்கள்.

கருத்து:— உலகில் சிலர் சேதநாசேதநங்களின் ஸ்வரூபம் முதலியவற்றை நன்கு அறிந்திருக்கலாம்; அருமையான பல கலைகளைத் தாம் கற்றுப் பிறருக்கும் உபதேசிப்பவராயிருக்கலாம்; பல தர்மங்களைத் தாம் அநுஷ்டித்துப் பிறரையும் அநுஷ்டிக்குமாறு செய்திருக்கலாம்; வேதத்தின் ஸாரார்த்தங்களைப் பிறருக்குப் போதிப்பவராயிருக்கலாம். இருந்தும் என்ன பயன்? ஸம்ஸாரத்திலிருந்து சேதநரைக் கரையேற்றும் ஸ்ரீமந்நாராயணனுடைய ஸ்வரூபம் ஸ்வபாவம் முதலியவற்றை அறியாவிடின் மோக்ஷத்தின் படியில் ஏறமுடியாது. 3

பாசுரம் 4, 5—வீண்காலம் கழிந்ததற்கு மனந்தளர்தல்—2-வது படி

கட்டளைக்கலித்துறை

136 மறுத்தார் திருவுடன் மார்பிற் றரித்தவன் வாசகத்தை
மறுத்தார் மயக்கமு மற்றத னால்வந்த மாநரகு
நிறுத்தார் பவத்தி னெடுநா ளுழன்றமை கண்டதனால்
வெறுத்தா ரணநெறி யேவெள்கி யோட விரைவர்களே. 4

[பாசுரம் 4, 5— நிர்வேதபர்வம்]

உரை:— மறு – (ஸ்ரீவத்ஸமென்னும்) மறுவையும், தார்– (வைஜயந்தி என்னும்) மாலையையும், திருவுடன் – பிராட்டியுடன், மார்பில் தரித்தவன் – தன் திருமார்பில் தரித்தவனான எம்பெருமானுடைய, வாசகத்தை – (கீதை முதலிய) உபதேசத்தை, மறுத்தார்–மீறி நடப்பவர்களுடைய, மயக்கமும் – அஜ்ஞாநத்தையும், மற்று – மேலும், அதனால் வந்த மா நரகும் – அந்த அஜ்ஞாநத்தால் வந்த பெரிய நரகங்களையும், நிறுத்தார் – ஆராய்ந்துபார்த்த விவேகிகள், பவத்தில் – ஸம்ஸாரத்தில், நெடுநாள் உழன்றமை கண்டு – வெகுகாலம் துன்ப

முற்றதைக் கண்டு, அதனால் வெறுத்து — அதனால் (ஸம்ஸாரத்தில்) வெறுப்படைந்து, வெள்கி — (இதுவரையில் தாம் நடந்ததற்கு) வெட்கமடைந்து, ஆரணநெறியே ஓட — வேதத்திற் கூறப்பட்ட உபாயத்தை அநுஷ்டிக்க, விரைவர்கள் — (விவேகிகள்) விரைவில் முற்படுவர்.

கருத்து:—ஸ்ரீவத்ஸமென்னும் மறுவையும் ஸ்ரீவைஜயந்தி என்னும் வனமாலையையும் பெரிய பிராட்டியையும் தன் திருமார்பில் தரித்த ஸர்வேசுவரன் சாஸ்த்ரங்களின்வாயிலாக இட்ட கட்டளையை அஜ்ஞாநத்தால் மீறி நடப்பவர்கள் கொடிய நரகங்களை அநுபவிக்கின்றனர். விவேகிகள் இதை ஆராய்ந்துபார்ப்பர்; இதுகாறும் தாமும் ஸம்ஸாரத்தில் உழன்றமையை நினைத்து வெறுத்து, கழிந்த நிலைமைக்கு வெட்கமுறுவர்; பின் வேதாந்தங்களில் கூறிய உபாயத்தை அநுஷ்டிக்க விரைவர். 4

ஸம்ஸாரஸுகத்தின் சிறுமை

எண்சீராசிரியவிருத்தம்

137 வான்பட்ட மன்னிருளின் மயங்கு மாறு
மறித்தோருகா லெனையூழி சென்று லன்றே
ரூன்பட்ட வுடலாழி வினையோ மூக்கி
லோருகரையுங் காணுதே யோழுகு மாறுங்
தேன்பட்ட விடம்போலத் தித்திக் கின்ற
சிறுபயனே யுறுபயனேன் றருந்து மாறுங்
தான்பட்ட படியிங்நேர் தானே கண்டு
தளர்ந்திடுமேல் வளர்ந்திடுமே தக்க வாறே. 5

உரை:— (விவேகம் பெற்ற சேதநன்) வான் பட்ட — மூலப்ரக்ருதி அடையும் நிலையாகிய, மன் இருளில் — வலிய தமஸ்ஸில், மயங்குமாறும் — (ப்ரளயத்தில்) அறிவிழந்து கிடக்கும் நிலைமையையும், எனை ஊழி சென்றால் — (இப்படியே) எவ்வளவோ யுகங்கள் கழிந்தபிறகு, அன்று— ஸ்ருஷ்டிகாலத்தில், மறித்து ஒருகால் — மறுபடியும் ஒருமுறை, ஊன் பட்ட உடல் — மாம்ஸம் சேர்ந்த உடலைத் தருகின்ற, ஓர் வினை ஆழி ஒழுக்கில் — ஒப்பற்ற கர்மங்களாகிய ஸமுத்ரத்தின் வெள்ளத்தில், ஒரு கரையும் காணுதே — ஒரு கரையையும் காணமுடியாமல், ஒழுகுமாறும் — சென்றுழலும் நிலைமையையும், தேன் பட்ட விடம்போல — தேனுடன் கலந்த விஷத்தைப்போல, தித்திக்கின்ற — (ஸ்தூலமாய்ப் பார்த்தால்) ஸுகமாகத் தோன்றுகின்ற, சிறு பயனே — அற்ப பலன்களையே, உறு பயன் என்று — (தனக்குத்) தக்கபலனென்று (கருதி), அருந்துமாறும்— அநுபவிக்கும் வகையையும், இந்நேர் — இவ்வாறே, தான் பட்ட படி — தான் அல்லல்பட்ட ப்ரகாரங்களையும், தானே கண்டு தளர்ந்திடுமேல்— தானே பார்த்து மனம் தளர்ந்தால், தக்க ஆறு வளர்ந்திடுமே — (தன் ஸ்வரூபத்திற்குத்) தக்க உபாயம் வ்ருத்தியாகும்(அநுஷ்டிக்கப்பெறும்).

கருத்து:—விவேகம்பெற்ற சேதநன் ப்ரளயகாலத்தில் தான் சரீர - இந்திரியங்களை இழந்து, அறிவிழந்து மஹாதமஸ் என்னும் பேரிருளில் ஒன்றுபட்டுக் கிடக்கும் நிலையையும், ஸ்ருஷ்டிகாலத்தில் யுகக்கணக்கில் பற்பலவகைச் சரீரங்களைத் தந்து வாட்டுகின்ற கர்ம வெள்ளத்தில் கரைகாணுது உழல்வதையும், தேன் கலந்த விஷம் என்று கூறலாம்படி இனியனவாய்த் தோற்றுகின்ற அற்பபலன் களையே சிறந்தனவாய்க்கொண்டு தானே அநுபவித்துவருவதையும், இன்னும் தான்படும் பல துன்பங்களையும் தானே ஆய்ந்து பார்த்து மனந்தளர்ந்தாளுகில் தக்க உபாயத்தை அநுஷ்டிக்கப்பெறுவான். இங்ஙனம் மனந்தளர்தலே இரண்டாவது படியாகும். 5

பாசுரம் 6, 7–ஸம்ஸாரத்தில் ஆசையறுதல்—3-வது படி

கட்டளைக்கலித்துறை

138 **உலகத் துயர்ந்தவ ரோன்றும் பயனி லுறுந்துயரு**
மலகிற் படாதவப் போகங் கவர்ந்தெழு மம்புயத்தோன்
கலகத் தொழின்மது கைடப ராற்படுங் கட்டமேண்ணிற்
பலகற்ற மெய்யடி யார்படி யாரிக் கடும்பவத்தே. 6

[பாசுரம் 6, 7– விரக்திபர்வம்]

உரை:— உலகத்து உயர்ந்தவர் ஒன்றும் பயனில் - உலகத்தில் உயர்ந்தவர்கள் ஈடுபட்டு அநுபவிக்கின்ற பலனில், உறும் துயரும் – (நடுவே) வரும் துன்பத்தையும், அலகில் படாத – அளவில் அகப்படாத, அப் போகம் கவர்ந்து – ப்ரஹ்மலோகஸுகத்தை அநுபவித்து, எழும் அம்புயத்தோன் – உயர்ந்திருப்பவனும் தாமரையில் இருப்பவனுமாகிய ப்ரஹ்மதேவன், கலகத் தொழில் மது கைடபரால் – சண்டையே தொழிலாகக்கொண்ட மது, கைடபன் என்னும் அஸுரர்களால், படும் கட்டம் எண்ணில் – படுகின்ற கஷ்டங்களையும் நினைத்துப்பார்த்தால், பல கற்ற மெய் அடியார் – பல நூல்களையும் கற்ற உண்மையான அடியார்கள் (பாகவதர்), இக் கடும் பவத்து – இந்தக் கொடிய ஸம்ஸாரத்தில், படியார் – ஈடுபடமாட்டார்கள். (வெறுப்படைவார்கள்).

கருத்து:—இக் கர்மபூமியில் மிகச் சிறந்தவராய் நாம் மதிக்கும் பலர் அநுபவிக்கும் பலன் முழுதும் ஸுகரூபமாகவேயிருப்பதில்லை; அதன் நடுவே துக்கமும் கலந்தே நிற்கின்றது. ப்ரஹ்மதேவன் தன் லோகத்தில் நம்மால் அளவிடப்போகாத ஆநந்தத்தை அநுபவிப்பானெனக் கருதுகின்றோம். அவன் மது-கைடபர்களால் பட்ட துன்பம் எல்லையற்றதாம். இவற்றை ஆராய்ந்துபார்க்கும் விவேகிகள் இந்த ஸம்ஸாரத்தில் ஆசைகொள்ளாது வெறுப்புறுவர்.

முன், மது-கைடபன் என்னும் அஸுரர்கள் ப்ரஹ்மாவினிடமிருந்து வேதங்களை அபஹரித்துச் சென்றதால் ப்ரஹ்மா செயலற்று எம்பெருமானிடம் புலம்ப, அவனும் அவ்வஸுரர்களைக் கொன்று வேதத்தை மீட்டுக் கொடுத்தானென்ற வரலாறு 3-வது அடியிற் கூறப்பட்டது. 6

விவேகிகளுக்கு ஸ்வர்க்கமும் நரகத்தையொத்தல்

எண்சீராசிரியவிருத்தம்

139 தந்திரங்க ளளவிலராய்த் தனத்தான் மிக்க
தார்வேந்தர் தொழவைய மாண்டார் மாண்டார்
சந்திரனுஞ் சூரியனும் வீயுங் காலந்
தாரகையின் வடமுமற்றுத் தனிவா னாளு
மிந்திரனு மேறுயர்த்த வீசன் றானு
மீரிரண்டு முகத்தானு மில்லா வந்நா
ணந்திருமா னிலைகண்டார் நாக மெல்லா
நரகென்று நற்பதமே நாடு வாரே. 7

உரை:— தந்திரங்கள் அளவிலராய் – சேனையை அளவில்லாது பெற்றவர்களாய், தனத்தால் மிக்க தார் வேந்தர் தொழ – செல்வத்தால் பெரியராய் மாலையைத் தரித்தவர்களான அரசர்கள் (தம்மை வந்து) வணங்கும்படி, வையம் ஆண்டார் – உலகத்தை ஆண்டவர் (களான மநு, மாந்தாதா முதலியவர்)கள், மாண்டார் – இறந்தொழிந்தனர்; தாரகையின் வடமும் அற்று – நக்ஷத்ரங்களின் வரிசையும் அழிந்து, சந்திரனும் சூரியனும் வீயும் காலம் – சந்த்ரனும் ஸூர்யனும் அழியுங் காலமாகிய, வான் தனி ஆளும் இந்திரனும் – ஸ்வர்க்கலோகத்தை ஒருவனாய் ஆள்கின்ற தேவேந்த்ரனும், ஏறு உயர்த்த ஈசன்தானும் – காளையைக் கொடியாக உயர்த்த சிவனும், ஈர் இரண்டு முகத்தானும் – நான்கு முகமுடைய ப்ரஹ்மாவும், இல்லா அந்நாள்–இல்லாமற்போன அந்த (மஹாப்ரளய) காலத்தில், நம் திருமால் நிலை கண்டார் – நம் எம்பெருமானது ஸ்தாந(மாகிய பரமபதத்தின் ஸ்வபாவத்) தை அறிந்தவர்கள், நாகம் எல்லாம் – (ப்ரஹ்மலோகம் வரையில் உள்ள) தேவலோகங்களை எல்லாம், நரகு என்று–(பரமபதத்தோடு ஆராயும்போது) நரக(த்திற்கு ஸம)மென்று (நினைத்து), நல் பதமே நாடுவார் – சிறந்த ஸ்தாநமாகிய ஸ்ரீவைகுண்டத்தைப் பெறவே விரும்புவார்கள்.

கருத்து:— அளவற்ற சேனையையுடையவராய்ப் பல சிற்றரசர் தம் அடிபணியுமாறு நின்று இவ்வுலகத்தை முன் ஆண்ட மநு மாந்தாதா முதலிய சக்ரவர்த்திகள் இப்பொழுது எங்கே? அனைவரும் இறந்தொழிந்தனர். அவ்வாறே நக்ஷத்ரங்கள், சந்த்ரஸூர்யர்கள், இந்த்ரன், சிவன், ப்ரஹ்மா முதலிய அனைவரும் இல்லாமற்போகுங் காலமும் ஒன்று உண்டு. அதுவே மஹாப்ரளயமெனப்படும். அப்பொழுதும் அழியாது நிற்பது எம்பெருமானது ஸ்தாநமாகிய பரமபதம் ஒன்றேயாம். அறிவாளிகள் இதன் பெருமையை ஆராயுங்கால் ஸ்வர்க்கம் முதலிய லோகங்கள் நரகமேயென்று நினைத்து ஸம்ஸார ஸுகத்தை வெறுப்பார்கள். இவ்வாறு வெறுப்படைவதே மூன்றாம் படியாகும்.

காலம்(ஆகிய),இல்லா, அந்நாள் என்று அந்வயித்துக்கொள்க.7

பாசுரம் 8, 9 – கர்மபலத்திற்கு அஞ்சுதல் – 4-வது படி

கட்டளைக்கலித்துறை

140 துறவற மேதுணி வார்துணுக் கற்ற விளந்துணிவோ
ருறவில ராதலி னுமுயர்ந் தாருட னுென்றிநின்றோ
மறவழி மாற்றியேம் மையலைத் தீர்த்தவர் மன்னருளாற்
கறவை யுகந்த பிரான்கழல் சூடுங் கருத்தினமே. 8

[*பாசுரம் 8, 9– பீதிபர்வம்*]

உரை:— **துறவறமே** – (ஸம்ஸாரபந்தத்தை நீக்குவதற்காகச் செய்யும்) நிவ்ருத்திதர்மங்களையே, **துணிவார்** – (சிறந்தனவாகத்) துணிந்து பற்றுமவர், **துணுக்கு அற்ற** – ஸம்ஸாரபயம் இல்லாத, **இளம் துணிவோர்** – முதிராத நிச்சயத்தையுடையவர்களோடு, **உறவு இலர்** – ஸம்பந்தம் கொள்ளமாட்டார்கள். **ஆதலின்** – ஆதலால், **நாம் உயர்ந்தாருடன்** – நாம் (அவ்வாறு செய்யாது) சிறந்தவரான பாகவதருடன், **ஒன்றி நின்றோம்** – கலந்து நின்றோம். **மறவழி மாற்றி** – (நம்மைப்) பாபவழியிலிருந்து விலக்கி, **எம் மையலைத் தீர்த்தவர்** – எம்முடைய அஜ்ஞாநத்தைப் போக்கிய ஆசார்யர்களின், **மன் அருளால்** – வலிய க்ருபையால், **கறவை உகந்த பிரான்** – பசுமேய்த்தலை விரும்பிய கண்ணபிரானுடைய, **கழல் சூடும் கருத்தினம்** – திருவடிகளைச் சூடிக் கைங்கர்யம்செய்யும் உறுதியுடையரானோம்.

கருத்து:— ஸம்ஸாரபந்தத்திலிருந்து விடுபடுவதற்குச் சாதநமான சிறந்த தர்மங்கள் நிவ்ருத்திதர்மங்கள் எனப்படும். அவற்றையே கைக்கொள்பவர்கள் ஸம்ஸாரத்திற்கு அஞ்சாத முருடர்களுடன் பழக மாட்டார்கள். ஆதலின் நாம் முமுக்ஷுக்களுடனேயே கலந்து பரிமாறினோம். நம்மைப் பாபமார்க்கத்திலிருந்து விலக்கி அஜ்ஞாநத்தை ஒழித்த ஆசார்யர்களின் கடாக்ஷத்தால் ஸ்ரீவைகுண்டத்திலும் பசுநிரை மேய்த்தலை உவக்கும் கண்ணபிரானது கைங்கர்யத்தையே விரும்பும் மனவுறுதியைப் பெற்றோம். 8

கர்மபலனுக்கு அஞ்சி உபாயத்தில் ஈடுபடுதல்

எண்சீராசிரியவிருத்தம்

141 வந்தனபோல் வருவனவு மனந்த மாகி
மாளாத துயர்தருவல் வினைநே ருப்புக்
கிந்தனமா யெண்ணிறந்த கால மெல்லா
மின்னமுமிப் பவக்குழிக்கே யிழியா வண்ணம்
வெந்ததொரு குழவியைநற் குமர னுக்கும்
வெறித்துளவ வித்தகனார் விதியே கொண்டார்
பந்தனமா மவையனைத்தும் பாறு கைக்குப்
பழமறையின் பரமநெறி பயிலு வாரே. 9

உரை:— வந்தனபோல் – (இதுவரை) வந்த துக்கங்களைப்போல், வருவனவும்–இனி வரப்போகும் துக்கங்களும், அனந்தமாகி – எல்லையற்றனவாகி, மாளாத – அழியாத, துயர் தரு – துக்கத்தைத் தருகின்ற, வல்வினை – வலிய கர்மங்களாகிய, நெருப்புக்கு–அக்நிக்கு, இந்தனமாய் – விறகாய் நின்று, இன்னமும்–இன்னமும், எண்ணிறந்த காலம் எல்லாம் – அளவில்லாத காலம் முழுதும், இப் பவக் குழிக்கே–இந்தஸம்ஸாரமாகிய படுகுழியிலேயே, இழியா வண்ணம் – விழுந்து துன்புறாதபடி (நினைந்து), வெந்தது ஒரு குழவியை – வெந்து கருகிய ஒரு குழந்தையை, நல் குமரனுக்கும் – அழகிய சிறுவனாக்கியவரும், வெறித் துளவ வித்தகனார் – மணமுள்ள திருத்துழாயை அணிந்த அதிசயச் செய்கையையுடையருமான பகவானுடைய, விதியே கொண்டார் – ("பக்தியோகம் செய்" "ப்ரபத்தி செய்" என்ற) கட்டளைகளையே (சிறந்தனவாகப்) பற்றிய சேதநர்கள், பந்தனமாம் அவை அனைத்தும் – (ஸம்ஸாரத்திலேயே) பிணிக்கும் அந்தக் கர்மங்கள் முழுதும், பாறுகைக்கு – அழிவதற்கு, பழமறையின் – அநாதியான வேதத்திற் கூறிய, பரமநெறி – சிறந்த (பக்தி-ப்ரபத்தியாகிய) உபாயங்களில், பயிலுவார் – ஈடுபடுவார்கள்.

கருத்து:— ஸம்ஸாரிகளான சேதநர் இதுகாறும் அநுபவித்த துக்கங்களுக்கு அளவில்லை. இன்னும் வரப்போகும் துன்பங்களுக்கும் எல்லையில்லை. இவ்வாறு கர்மங்களாகிய பெரிய அக்னி மேன்மேலும் துன்பத்தைத் தந்துகொண்டே சேதநர்களை விறகாகக்கொண்டு எரித்துக்கொண்டிருக்கிறது. இங்ஙனமே சேதநர்கள் இந்த ஸம்ஸாரமாகிய படுகுழியில் கிடந்துழல்கின்றனர். இதற்கு அஞ்சிய கூரறிவினரான சிலர் எம்பெருமான் விதித்த கட்டளையை ஏற்றுத் தமது இழிநிலையை நீக்க முற்பட்டுத் தம் கர்மங்கள் முழுதும் நீங்குவதற்கு வேதங்களில் கூறிய பக்தி-ப்ரபத்திகளுள் ஒன்றில் ஈடுபடுவர். இங்ஙனம் ஸம்ஸாரத்திற்கு அஞ்சுவதே நான்காம் படியாகும்.

பாரதயுத்தத்தில் த்ரோணருடைய புத்திரனை அசுவத்தாமனால் ப்ரயோகிக்கப்பட்ட அபாண்டவாஸ்த்ரத்தால் உத்தரையின் கர்ப்பத்தில் வெந்து கரியாகிய குழந்தையை ஸ்ரீ க்ருஷ்ணன், பரீக்ஷித் என்னும் அழகிய ராஜகுமாரனாக்கிய வரலாறு மூன்றுமடியிற் கூறப்பட்டது. *9*

பாசுரம் 10, 11 – உபாயத்தை அநுஷ்டித்தல் – 5 வது படி

கட்டளைக்கலித்துறை

142 **கருமா லையில்வருங் கட்டங் கழிக்குங் கருத்துடையா**
ரோருமால் பெருகு முயோகின் முயன்று மதன்றியுநந்
திருமா லடியிணை திண்சர ணுகு மேனவரித்துந்
தருமா லினியவை தானே யெனத்தக வேண்ணுவரே. 10

[*பாசுரம் 10, 11— ப்ரஸாதநபர்வம்*]

உரை:— கருமாலையில் வரும் கட்டம் — கர்ப்பவரிசையில் (இருப்பதால்) வருகின்ற கஷ்டத்தை, கழிக்கும் கருத்துடையார்—நீக்கும் நினைவுடைய பாகவதர்கள், ஒரு மால் பெருகும்—ஒப்பற்ற பக்தி வ்ருத்தியாகக்கூடிய, உயோகில் முயன்றும் — பக்தியோகத்தில் முயன்று கொண்டும், அது அன்றியும் — அது தவிர (அதில் சக்தியில்லாதவர்கள்), நம் திருமால் அடியிணை — நம்முடைய எம்பெருமானுடைய திருவடிகள் இரண்டே, திண் சரண் ஆகும் — திடமான உபாயமாகும், என வரித்தும் — என்று (நினைத்து அவற்றில்) ப்ரபத்திசெய்தும், மால் — எம்பெருமான், இனியவை — (வரப்போகும்) நன்மைகளை, தானே தரும் என — தானே தருவான் என்று உறுதிகொண்டவராய், தகவு — (அவனது) க்ருபையையே, எண்ணுவர் — எதிர்பார்த்திருப்பர்.

கருத்து:— கர்ப்பவாஸம் முதலிய ஸம்ஸாரதுக்கங்களை ஒழிக்கக் கருதும் பாகவதர்கள் மேன்மேலும் பகவதநுபவரஸம் வளர்ந்துவரக் கூடிய பக்தியோகத்தை அநுஷ்டிப்பர். அதற்குச் சக்தியற்றவர்கள் எம்பெருமானுடைய திருவடிகளில் ப்ரபத்தியை அநுஷ்டிப்பர். இவ்வாறு உபாயத்தைச் செய்துமுடித்தபின் எம்பெருமான் தன் பொறுப்பாக நன்மைகளைச் செய்வானென்று நம்பி அவனது கருணையையே நோக்கிநிற்பர். 10

ப்ரபத்தியால் ஸகல பாபங்களும் நீங்குதல்

எண்சீராசிரியவிருத்தம்

143 முன்சேய்த வினைத்திரளின் முளைத்த தன்றி
முற்றுள்ள முதலரிந்து முளைத்த கூற்றிற்
றன்சேய்ய திருவருளா லிசைவு பார்த்துத்
தழல்சேர்ந்த தூலமேனத் தானே தீர்த்துப்
பின்சேய்த வினையினினை வொன்ரு தோன்றும்
பிழைபோறுத்து வேறுளது விரகான் மாற்று
மேன்சேய்ய தாமரைக்கட் பேருமா னேண்ண
மேண்ணுதா ரேட்டிரண்டு மேண்ணு தாரே. 11

உரை:— முன் செய்த வினைத்திரளில் — முன்பு செய்த பாபக் கூட்டத்தில், முளைத்தது அன்றி — பலன்கொடுக்கத் தொடங்கிய பாபம் தவிர, உள்ள முதல் — (கைம்முதலாக) உள்ள பாபங்களை, முற்று அரிந்து — முழுதும் போக்கி, முளைத்த கூற்றில் — பலன் கொடுக்கத்தொடங்கிய பாகத்தில், இசைவு பார்த்து — (ப்ரபந்நனுடைய) அங்கீகாரத்தை எதிர்பார்த்து (அவன் விரும்பிய காலத்தில்), தன் செய்ய திரு அருளால் — தன்னுடைய ருஜுவான சிறந்த க்ருபையால், தழல் சேர்ந்த தூலம் என — அக்நியில் சேர்ந்த பஞ்சு என்னும்படி, தானே தீர்த்து — தானே போக்கி, பின் செய்த வினையில் — (ப்ரபத்திக்குப்) பிறகு செய்த பாபங்களில், நினைவு ஒன்ருது ஒன்றும் — அறிவு இல்லாமல் (தெரியாமல்) நேர்ந்த, பிழை பொறுத்து — பாபங்

களைப் பொறுத்து, வேறு உளது – தெரிந்து செய்யவேண்டியதாய்த் தீர்ந்த குற்றத்தை, விரகால் மாற்றும் – ப்ராயச்சித்தம் முதலியவற்றில் மூட்டிப் போக்குபவனான, செய்ய தாமரைக் கண் – சிவந்த தாமரை போன்ற கண்களையுடைய, என் பெருமான்–எனக்கு நாதனான ஸர்வேசுவரனுடைய, எண்ணம் எண்ணாதார் – திருவுள்ளத்தின் போக்கை அறியாத மானிடர், எட்டு இரண்டும் எண்ணாதார் – எட்டெழுத்தாகிய திருமந்த்ரம், இரண்டாகிய த்வயம், சரமசுலோகமென்னும் ரஹஸ்யத்ரயத்தையும் அறியாதவர்களே.

* சேதநனுடைய கர்மங்கள் (1) ஸஞ்சிதம் (2) ப்ராரப்தம் என இருவகைப்படும். பின் ஒரு காலத்தில் பலன் கொடுப்பதற்காகத் தனியாய்க் குவிந்து மூட்டையாயிருப்பது ஸஞ்சிதமெனப்படும். பலன் கொடுக்கத் தொடங்கிய கர்மம் ப்ராரப்தம் எனப்படும். பக்தியோகம் ஸஞ்சிதகர்மங்களை மாத்ரம் போக்கும். ப்ரபத்தி, ஸஞ்சிதகர்மங்களைப் போக்கி, ப்ராரப்தத்தில் நாம் இந்தச் சரீரம் உள்ளவரை பலனை அநுபவிக்கவேண்டிய கர்மங்களைத் தவிர மீதியுள்ளவற்றையும் அனல் பஞ்சை எரிப்பதுபோல் போக்கிவிடுகின்றது; ப்ரபத்திக்குப் பிறகு அறியாமல் செய்யும் பாபங்களை இவனிடம் சேராதபடி நீக்கிவிடுகின்றது; காலதேசங்களைக்கொண்டு மனப்பூர்வமாகச் செய்யும்படி நேர்ந்த பாபங்களையும் ப்ராயச்சித்தாதிகளைக்கொண்டு ஒழித்துவிடுகின்றது. (மனப்பூர்வமாய்ச் செய்யும் பாபங்கள் நீங்கும் வகையை 64-வது பாசுரவுரையிற் காண்க). ப்ராயச்சித்தம் செய்யாத முருடருக்கும் இலகுவான தண்டனையைத் தந்து பாபங்களைப் போக்குகின்றது. இச்சரீரம் உள்ளவரையிலும் உள்ள விளம்பத்தைக்கூடப் பொறுக்காது உடனே முக்தி வேண்டுமென்பவனுக்கு உடனேயே ஸகல கர்மங்களையும் போக்கிப் பலனைத் தருகின்றது. என்னே ப்ரபத்தியின் பெருமை !! இத்தகைய பெருமை பக்தியோகத்திற்கு இல்லை. இப்படி ப்ரபத்தியின் வாயிலாக ப்ரபந்நனுடைய ஸகலபாபங்களையும் ஒழித்து ப்ரபந்நனுக்கு எம்பெருமான் அருள்புரிகின்றான். அவனுடைய குளிர்ந்த திருவுள்ளப் போக்கை அறியாதவர்கள் ரஹஸ்யத்ரயத்தின் பொருளை அறியாதவராவர். 11

பாசுரம் 12, 13 – ஜீவன் சரீரத்தினின்று வெளியேறுதல் – 6-வது படி

கட்டளைக்கலித்துறை

144 உறையிட்ட வாளென வூனு ளுறையு முயோகியரை
நறைமட் டொழிவற்ற நற்றுள வேந்திய நாயகன்று
னிறைமட் டிலாத நெடும்பயன் காட்ட நினைந்துடலச்
சிறைவேட்டி விட்டு வழிப்படுத் தும்வகை செய்திடுமே. 12

[பாசுரம் 12, 13—உத்க்ராந்திபர்வம்]

* प्रारब्धेतरपूर्वपापमखिलं प्रामादिकं चोत्तरं
न्यासेन क्षपयन्ननभ्युपगतप्रारब्धखण्डं च नः ।
धीपूर्वोत्तरपाप्मनामजननाज्जातेऽपि तन्निष्कृतेः
कौटिल्ये सति शिक्षयाऽप्यनघयन् क्रोडीकरोति प्रभुः ॥

உரை :— நறை மட்டு ஒழிவற்ற - வாஸனையுள்ள தேன் நீங்காத, நல் துளவு - சிறந்த திருத்துழாய்மாலையை, ஏந்திய நாயகன் - தரித்த ஸர்வேசுவரன், உறையிட்ட வாள் என - உறையிற் செருகிய கத்தி என்னும்படி, ஊனுள் உறையும் உயோகியரை - சரீரத்திற்குள் வஸிக்கும் (பக்தர் ப்ரபந்நர் என்ற) யோகிகளை, மட்டு இலாத நிறை - எல்லையில்லாத பெருமையையுடைய, நெடும் பயன் - பெரிய பலனாகிய மோக்ஷத்தை, காட்ட நினைந்து - அநுபவிக்கச்செய்யத் திருவுள்ளங் கொண்டு, உடலச் சிறை வெட்டி விட்டு - சரீரமாகிய சிறையை ஒழித்து, வழிப்படுத்தும் வகை - பயணப்படுத்துவதாகிய ப்ரகாரத்தை, செய்திடும் - செய்திடுவான், தான் - அசை.

கருத்து:- இந்தக் கர்மசரீரத்துள் இருக்கும் ஜீவாத்மாவுக்கு, உறைக்குள் செருகிய வாளை உபமானமாக வழங்குவதுண்டு. உறையினுள் இருக்கும் வாள் ஒளிகுன்றித் தன் கார்யத்தைச் செய்ய வல்லமையற்றிருக்கும். அங்ஙனமே ஜீவாத்மா சரீரத்தினுள் இருக்கும் வரை தனக்கு இயற்கையாய் உள்ள ஜ்ஞானம் சுருங்கப் பெற்றுத் தனக்கு உரிய பரிபூர்ணமான பகவத்கைங்கர்யத்தைச் செய்யச் சக்தியின்றி நிற்கும். இங்ஙனம் கர்மத்திற்கு வசப்பட்டுக்கிடந்து பின் பக்திப்ரபத்திகளுள் ஒன்றை அநுஷ்டித்த ஜீவாத்மாவுக்கு எம்பெருமான் மோக்ஷத்தை அளிக்கத் திருவுள்ளங்கொண்டு சரீரமாகிய சிறையினின்று அவ்வாத்மாவை வெளியேற்றுகின்றான், 12

ஜீவனைச் சரீரத்தினின்று வெளியேற்றும் முறை

எண்சீராசிரியவிருத்தம்

145 * முன்கருவி யீரைந்து மனத்திற் கூட்டி
முக்கியமா மருத்திலவை சேர்த்த தெல்லா
நன்குணரு முயிரினிற்சேர்த் தைம்பூ தத்தை
நண்ணுவித்துத் தான்றன்பால் வைக்கு நாத
னேன்பதுடன் வாசலிரண் டுடைத்தா யுள்ளே
யொருகோடி துயர்விளைக்கு முடம்பா யொன்றும்
வன்சிறையின் றலைவாச றிறந்து நம்மை
வானேற வழிப்படுத்த மனமுற் றானே. 13

உரை :-முன் - முதலில், கருவி ஈர் ஐந்தும் - (ஜ்ஞாநேந்த்ரியங்கள் ஐந்து, கர்மேந்த்ரியங்கள் ஐந்து ஆக) இந்த்ரியங்கள் பத்தையும்,

* मनसि करणग्रामं प्राणे मनः पुरुषे च तं
झटिति घटयन् भूतेष्वेनं परे च तमात्मनि ।
स्वविदविदुषोरित्थं साधारणे सरणेर्मुखे-
र्नयति परतो नाडीभेदैर्यथोचितमीश्वरः ॥

மனத்தில் கூட்டி – மனஸ்ஸாகிய இந்த்ரியத்துடன் சேர்த்து, அவை – அந்தப் பதினொன்று இந்த்ரியங்களேயும், முக்கியமாம் மருத்தில் சேர்த்து – முதன்மைபெற்ற ப்ராணவாயுவில் சேர்த்து, அது எல்லாம் – அவையனைத்தையும், நன்கு உணரும் – நன்ருய் அறியும் சக்தியுள்ள, உயிரினில் சேர்த்து – ஜீவாத்மாவில் சேர்த்து (அந்த ஜீவாத்மாவை), ஐம்பூதத்தை நண்ணுவித்து – ஐந்து பூதங்களிடம் சேர்த்து (அந்த ஜீவாத்மாவின் களைப்பு நீங்குவதற்காக), தான் தன்பால் வைக்கும் நாதன் – தான் தன்னிடம் வைத்து இளைப்பாற்றும் ஸர்வேசுவரன், ஒன்பதுடன் இரண்டு வாசல் உடைத்தாய்–பதினொன்று த்வாரங்களையுடையதாய், உள்ளே ஒரு கோடி துயர் விளைக்கும் – உள்ளே கோடிக்கணக்கான துன்பங்களைத் தருகின்ற, உடம்பாய் ஒன்றும்–சரீரமாய் (ஜீவனேடு) சேர்ந்திருக்கின்ற, வன் சிறையின் – வலிய சிறையின், தலைவாசல் திறந்து – முதல் வாசலாகிய ப்ரஹ்ம ரந்த்ரத்தைத் திறந்து, நம்மை வான் ஏற வழிப்படுத்த – நம்மைப் பரமபதம் ஏற ப்ரயாணப்படுத்த, மனமுற்ருன் – மனங்கொண்டான்.

கருத்து:–மரணகாலத்தில் எம்பெருமான் முதலில் ஜீவனுடைய ஜ்ஞானேந்த்ரியங்களையும் கர்மேந்த்ரியங்களையும் மனத்தில் சேர்க்கின்ருன்; பின் அந்த மனத்தை ப்ராணவாயுவில் ஒன்றுகூட்டுகின்ருன்; அதன்பின் அந்த ப்ராணவாயுவை ஜீவாத்மாவிடத்துச் சேர்க்கின்ருன்; பிறகு இந்த நிலையைப் பெற்ற ஜீவாத்மாவை ஐந்து பூதங்களுடன் கூட்டுகின்ருன். இதற்குப் பிறகு இதனுல் ஜீவாத்மாவுக்கு உண்டான களைப்பு நீங்குமாறு அதைத் தன்னேடு அணைத்துக்கொள்கின்ருன். பின், பதினொன்று த்வாரமுள்ளதாய், இதுகாறும் அந்த ஜீவனுக்குத் துன்பத்தைத் தந்துநின்ற சரீரமாகிய சிறையினின்றும் அர்ச்சிராதி மார்க்கத்திற்குத் தலைவாசலாகிய ப்ரஹ்மரந்த்ரத்தின் வழியாய் ஜீவர்களாகிய நம்மை வெளியேற்றத் திருவுள்ளங்கொண்டான். இங்ஙனம் சரீரத்தினின்று வெளியேறுவதே ஆருவது படியாகும்.

ப்ராணவாயு, சரீரமும் இந்த்ரியங்களும் நிலைத்திருக்கக் காரணமாயிருத்தலால் முதன்மைபெற்றிருப்பதுபற்றி முக்கிய ப்ராணனெனப்படுமென உபநிஷத்துக் கூறுகின்றது.

ஜ்ஞானேந்த்ரியம் ஐந்து – செவி, வாய், கண், மூக்கு, உடல்: என்பன.

கர்மேந்த்ரியம் ஐந்து – வாய், கை, கால், பாயு, உபஸ்தம்: என்பன.

ஒன்பது த்வாரம்— கண் 2, காது 2, மூக்கு 2, வாய் 1, மலத்வாரம் 1, ஜலத்வாரம் 1: என்பன.

இரண்டு த்வாரம்–நாபித்வாரம், உச்சித்வாரம் (ப்ரஹ்மரந்த்ரம்): என்பன.

பாசுரம் 14, 15- அர்ச்சிராதிமார்க்கம்—7-வது படி

கட்டளைக்கலித்துறை

146 தெருளார் பிரம புரத்திறை சேர்ந்திடர் தீர்ந்தவர்தா
மருளார் பிரம புரச்சிறை தீர்ந்தபின் வந்தெதிர்கொண்
டருளா லமரர் நடத்தவிம் மாயை கடந்ததற்பின்
சுருளார் பவநர கச்சுழ லாற்றின் சுழற்சியிலே. 14

[பாசுரம் 14, 15— அர்ச்சிராதிபர்வம்]

உரை:— தெருள் ஆர் – ஜ்ஞாநம் நிறைந்தவனும், பிரமபுரத்து இறை சேர்ந்து–சரீரத்தின் தலைவனுமான அந்தர்யாமியோடு சேர்ந்து, இடர் தீர்ந்தவர் தாம் – துன்பம் நீங்கி(இளைப்பாறிய) ஜீவர்கள், மருள் ஆர் – அஜ்ஞாநம் நிறைந்த, பிரமபுரச் சிறை - சரீரமாகிய சிறையை, தீர்ந்தபின் – விட்டு நீங்கியபின், அருளால் – (பகவானுடைய) க்ருபையினால், அமரர் – ஆதிவாஹிகர்களான தேவர், எதிர்கொண்டு வந்து நடத்த – எதிர்வந்து அழைத்து நடத்திப்போக, இம்மாயை கடந்ததன் பின் – இந்த ப்ரக்ருதிமண்டலத்தைத் தாண்டிய பிறகு, பவ நரகச் சுழல் ஆற்றின் – ஸம்ஸாரமாகிய நரகமென்னும் சுழல் நிறைந்த நதியின், சுழற்சியில் – சுழலில், சுருளார் – (மறுபடி) சுழலமாட்டார்கள்.

கருத்து:— ஜீவனுடைய சரீரம் ஐந்து பூதங்களாலாகியது. சரீரத்தில் முதுகின் மேற்புறத்தில் தூண்போன்ற மூன்று எலும்புகள் ஒன்றுகூடி நிற்கின்றன. அவற்றுக்கு த்ரிஸ்தூணமெனப் பெயர் வழங்கும். மரணகாலத்தில் ஈசுவரன் அவற்றைக்கடைந்து அங்கிருந்து ஐந்துபூதங்களின் ஸூக்ஷ்மமான அம்சத்தை எடுத்து அதில் ஜீவனைச் சேர்க்கின்றான். இங்ஙனம் கடைதலே த்ரிஸ்தூணக்ஷோபமெனப்படும். இவ்வாறு கடையும்போது ஜீவனுக்கு மிக்க வேதனையுண்டாகும். இந்த வேதனை நீங்குவதற்காக அந்த ஜீவனை ஈசுவரன் தன்மீது அணைத்துக்கொள்கின்றான்.(இவ்வம்சங்கள் மரணமடையும் அனைவருக்கும் பொதுவாகும்)

பின் மோக்ஷத்திற்குச் செல்ல உரியனான ஜீவன் ஸ்தூல சரீரத்தினின்று புறப்பட்டதும் இவனை அக்நி முதலிய ஆதிவாஹிகர்கள் எதிர்சென்றுவரவேற்று வழிநடத்திப்போய் உபசரித்துத் தங்கள் தங்கள் எல்லைவரையில் கொண்டுபோய் விடுவார்கள். இவ்வாறு ப்ரக்ருதிமண்டலத்தைத்தாண்டிச் சென்றவர்கள் பின்னும் ஸம்ஸாரமாகிய நரகத்தில் துன்புறமாட்டார்கள்.

ஈசுவரன், ஜீவனுடைய சரீரத்தில் அந்தர்யாமியாயிருப்பதனால் ப்ரஹ்மத்திற்கு ஸ்தாநமாகிய அச்சரீரம் ப்ரஹ்மபுரமெனப்படுமென உபநிஷத்துக் கூறுகின்றது.

ஆதிவாஹிகர்களின் விவரணத்தை 67-வது பாசுரத்திற் காண்க.

மோக்ஷத்தின் வழிகண்டு மகிழ்தல்

எண்சீராசிரியவிருத்தம்

147 விழியல்லால் வேலில்லை விண்ணின் மாதர்
மேனியல்லால் வில்லில்லை மீன வற்கு
மொழியல்லா லமுதில்லை யென்று முன்னாண்
முத்திவழி முனிந்தடைந்த மோகந் தீர்ந்தோங்
கழியல்லாற் கடலில்லை யென்பார் போலக்
காரியமே காரணமென் றுரைப்பார் காட்டும்
வழியல்லா வழியெல்லாங் கடந்தோ மற்றும்
வானேறும் வழிகண்டோ மகிழ்ந்திட் டோமே. 15

உரை:— முன்னாள் - முன்பு, முத்தி வழி முனிந்து - மோக்ஷ மார்க்கத்தை வெறுத்து, மீனவற்கு - மீனைக் கொடியாகவுடைய மன்மதனுக்கு, விண்ணின் மாதர்—தேவலோக ஸ்த்ரீகளுடைய, விழி அல்லால் வேல் இல்லை-கண்ணல்லது வேறு வேலாயுதம் இல்லை; மேனி அல்லால் வில் இல்லை-(அப்பெண்களுடைய) சரீரத்தைத் தவிர வேறு வில் இல்லை; மொழியல்லால் அமுது இல்லை - (அவர்கள் பேசும்) பேச்சைத்தவிர வேறு அம்ருதம் இல்லை, என்று அடைந்த - என்று (நாம்) அடைந்த, மோகம் தீர்ந்தோம் - மயக்கம் நீங்கப்பெற்றோம். கழி அல்லால் கடல் இல்லை - (கடலின் கழிநீரைமாத்திரம் கண்டு) கழிநீரைத் தவிர வேறு கடல் இல்லை, என்பார்போல - என்று சொல்லும் மூடர்கள்போல, காரியமே காரணமென்று - (ப்ரஹ்மத்தினிடமிருந்து) உண்டான ஜகத்தையே காரணமென்று (கொண்டு அதையன்றி வேறான ப்ரஹ்மமில்லையென்று), உரைப்பார் காட்டும் - கூறுகிற மதாந்தரஸ்தர்களால் காட்டப்படுகின்ற, வழியல்லா வழியெல்லாம்-நல்வழியல்லாத வழிகளையெல்லாம், கடந்தோம் - தாண்டிவிட்டோம்; மற்றும் வான் ஏறும் வழி கண்டோம் - மேலும் பரமபதத்திற்குச் செல்லும் அர்ச்சிராதி மார்க்கத்தை அடைந்தோம்; (அதனால்) மகிழ்ந்திட்டோம் - மகிழ்ச்சியடைந்தோம்.

கருத்து:— இதுகாறும் தீவினையால் மோக்ஷ மார்க்கத்தில் மனம் செலுத்தாதிருந்த நம்மை மன்மதன் தேவமாதர்களின் கண்ணாகிய வேலையும் அவர்களின் உடலாகிய வில்லையும் கொண்டு மயக்க, நாமும் அவர்கள் பேசும் பேச்சையே அமுதமெனக் கருதி ஸ்வர்க்க ஸுகமே பெரிதென மயங்கிக் கிடந்தோம். இப்பொழுது ஸதாசார்ய கடாக்ஷத்தால் அந்த மயக்கம் நீங்கப்பெற்றோம். கடலின் கழிநீரைக் கண்டு அதையே கடலெனக் கருதும் மூடரைப்போல், ப்ரஹ்மத்தினிடமிருந்து உண்டான இந்த உலகத்தைக்கண்டு இதையன்றி இதற்குக் காரணமாய்நிற்கும் ப்ரஹ்மத்தை இசையாது பிதற்றும் பிறமதத்தினர் வீசும் வலையில் விழாது

தப்பினேம்; இப்பொழுது பரமபதத்திற் சேர்க்கும் அர்ச்சிராதிகதியைப் பெறும் பெருமை பெற்றேம். அங்கு ஆதிவாஹிகர்கள் செய்யும் உபசாரங்களாலே ஸம்ஸாரத்தில் அநுபவித்த துக்கங்கள் மாறி மகிழப் பெற்றேம். இந்த அர்ச்சிராதிகதியே ஏழாவது படியாகும். 15

பாசுரம் 16, 17–பரமபதம் சேர்தல்—8-வது படி

கட்டளைக்கலித்துறை

148 வன்பற் றுடன்மயல் பூண்டுமற் றோர்கதி யாலினநா
ளென்பற் றதுபெறுந் தானமு மெத்தனை போதுளதாந்
துன்பற்ற தன்றுணி வாற்றுயர் தீர்க்குந் துழாய்முடியா
னின்புற்ற நல்வழி யாலேற்று நற்பத மெண்ணுவமே. 16

[பாசுரம் 16, 17 — திவ்யதேசப்ராப்திபர்வம்]

உரை:– வன் பற்றுடன் - (நாம் அற்பவிஷயங்களில்) வலிய ஆசையுடன், மயல் பூண்டு – அஜ்ஞாநத்தைப் பெற்று, மற்று ஓர் கதியால்-(நமக்குத்தகாத) வேறு ஒரு வழியில் நடந்ததால், இன நாள் – இங்ஙனே பலநாளாக, பெற்றது என் ?–அடைந்த பயன் யாது?, பெறும் தானமும் – (அவ்வழிகளால்) பெறக்கூடிய (ப்ரஹ்மபதம் வரையிலுள்ள) ஸ்தாநமும், எத்தனை போது உளதாம் ? – எத்தனை காலம் நிலைத்திருக்கும் ?, துன்பு அற்ற – துக்கமில்லாதவனும், தன் துணிவால் – தன்னைப்பற்றிய (பக்தி, ப்ரபத்தி என்னும் உபாயமாகிய) ஜ்ஞாநத்தினால், துயர் தீர்க்கும் – ஸம்ஸார துக்கத்தைப் போக்குபவனும், துழாய் முடியான் – திருத்துழாய்மாலையை முடியில் அணிந்தவனுமான எம்பெருமானால், இன்புற்ற நல் வழியால் ஏற்றும் – ஸுகம் நிறைந்த சிறந்த (அர்ச்சிராதி, மார்க்கத்தால் அடைவிக்கப்படுகின்ற, நல் பதம் எண்ணுவம் – உயர்ந்த பதமாகிய பரமபதத்தை அநுஸந்திப்போம்.

கருத்து:—நாம் இதுகாறும் அற்பமான உலக ஸுகங்களில் ஈடுபட்டு நமக்குத் தகாத வழியில் நடந்துவந்ததால் பெற்ற பயன்யாது ? ஒருகால் நாம் ப்ரஹ்மபதத்தையே பெற்றாலும் அதுவும் எத்தனை காலம் நிலைத்திருக்கும்? ஆதலின் ஸம்ஸாரிகளாகிய நமக்கு எம்பெருமான் காட்டித்தந்த பக்தி-ப்ரபத்திகளுள் ஒன்றை நாம் அநுஷ்டித்து அதனால் பெறப்போகும் ஸ்ரீவைகுண்டமாகிய திவ்யஸ்தாநத்தை அநுஸந்தித்து மகிழ்வோமாக. இப்படி ஸ்ரீவைகுண்டத்தைச் சேர்வதே எட்டாவது படியாகும்.

பக்தி–ப்ரபத்தியாகிய உபாயங்கள் ஜ்ஞாநவிகாஸரூபமாகவே முடிவதால் ஜ்ஞாநமென்னும் பொருள்கொண்ட ' துணிவு 'என்னும் பதத்தால் அவை கூறப்பட்டன. 16

ஸ்ரீவைகுண்டத்தினது ப்ரகாரத்தின் அநுஸந்தாநம்

எண்சீராசிரியவிருத்தம்

149 பண்டையிரு வினையாற்றிற் படிந்து பாரங்
காணாதே யொழுகியநாம் பாக்கி யத்தால்
வண்டமரு மலர்மாதர் மின்னாய் மன்ன
வைசயந்தி மணிவில்லாய் விளங்க வான்சேர்
கொண்டலருண் மழைபொழிய வந்த தொப்பாங்
குளிர்ந்துதெளிந் தமுதாய விரசை யாற்றைக்
கண்டணுகிக் கருத்தாலே கடந்து மீளாக்
கரைகண்டோர் கதியெல்லாங் கதித்திட் டோமே.17

உரை:— பண்டை இரு வினை - அநாதியான (புண்யபாபங்களென்னும்) இரண்டு கர்மங்களாகிய, ஆற்றில் படிந்து - ஆற்றில் ஆழ்ந்து, பாரம் காணாதே - கரையைக் காணமுடியாமல், ஒழுகிய நாம்— (அதன்வழியே) சென்றுகொண்டிருந்த நாம், வண்டு அமரும் மலர் மாதர்-வண்டுகள் மொய்க்கும் தாமரைமலரிலுள்ள பிராட்டி, மின்னாய் மன்ன - மின்னலாக நிலைபெற, வைசயந்தி - வைஜயந்தி என்னும் வநமாலை, மணி வில்லாய் விளங்க - அழகிய வானவில்லாக ப்ரகாசிக்க, வான் சேர் கொண்டல் - (பரமபதமாகிய) ஆகாயத்திலுள்ள எம்பெருமானாகிய மேகம், அருள் மழை பொழிய - கருணையாகிய மழை நீரைச் சொரிய, வந்தது ஒப்பாம் -(அதனால்) வந்ததுபோன்ற, குளிர்ந்து தெளிந்து அமுதாய - குளிர்ந்து கலக்கமற்று அம்ருதமயமான, விரசை ஆற்றை-விரஜாநதியை, கண்டு அணுகி - கண்டு நெருங்கி, கருத்தாலே கடந்து - தம் ஸங்கல்பத்தாலே தாண்டி, மீளாக் கரை கண்டோர் — திரும்புதலில்லாத அக்கரையாகிய ஸ்ரீவைகுண்டத்தை அடைந்தவர்களுடைய, கதி எல்லாம் - ப்ரகாரங்களையெல்லாம், பாக்கியத்தால் - (நம்முடைய) அத்ருஷ்டவிசேஷத்தால், கதித்திட்டோம் — அநுஸந்தித்தோம்.

கருத்து:— அநாதிகாலமாகப் புண்யபாபங்களென்னும் கர்மங்களுக்கு வசப்பட்டு ஸம்ஸாரத்தில் அல்லலுற்ற நாம், ப்ரபந்நர்களான ஜீவர்கள் அர்ச்சிராதிகதியால் சென்று விரஜாநதியைத் தம் ஸங்கல்பத்தாலே கடந்து ஸ்ரீவைகுண்டத்தை அடைவதைப் பாக்ய விசேஷத்தால் அநுஸந்தித்து நாமும் அப்பேறு பெறுவோமென்று மகிழ்கின்றோம்.

இப்பாசுரத்தில் பரமபதத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானை ஆகாயத்திலுள்ள மேகமாகவும், பிராட்டியை (நிலைபெற்ற) மின்னலாகவும், பல நிறமுள்ள திவ்யபுஷ்பங்களால் ஆன வைஜயந்தியென்னும் வநமாலையைப் பல நிறத்துடன் தோன்றும் வானவில்லாகவும், அவனது கருணைவெள்ளத்தை மழைநீர்த்தாரையாகவும், விரஜாநதியை அதனால் பெருகிய அம்ருதமயமான நதியாகவும் வர்ணித்த கவிசாதுர்யம் அநுபவிக்கத் தக்கதாகும். 17

பாசுரம் 18, 19-பரிபூர்ணப்ரஹ்மாநுபவம்—9-வது படி

கட்டளைக்கலித்துறை

150 பூவள ருந்திரு மாது புணர்ந்தநம் புண்ணியனுர்
தாவள மான தனித்திவஞ் சேர்ந்து தமருடனே
நாவள ரும்பெரு நான்மறை யோதிய கீதமெலாம்
பாவள ருந்தமிழ்ப் பல்லாண் டிசையுடன் பாடுவமே. 18

[பாசுரம் 18, 19—ப்ராப்திபர்வம்]

உரை:— பூ வளரும் – பூவில் வஸிப்பவளான, திருமாது – பிராட்டியினுல், புணர்ந்த – அணைத்துக்கொள்ளப்பட்டவனும், நம் புண்ணியனுர் – நம் புண்யஸ்வரூபனுமான எம்பெருமானுக்கு, தாவளமான – வஸிக்குமிடமான, தனித் திவம் சேர்ந்து – ஒப்பற்ற பரமபதம் சேர்ந்து, தமருடனே – (நித்யஸூரிகளும் முக்தருமாகிய) பாகவதர்களுடன் நா வளரும் – நாவில் தங்குகின்ற, பெரு நான் மறை – பெரிய நான்கு வேதங்களில், ஓதிய கீதம் எலாம் – அத்யயநம்செய்யப்படுகின்ற காநம் எல்லாவற்றையும், பா வளரும் – பாக்கள் நிறைந்துள்ள, தமிழ்ப் பல்லாண்டு – தமிழில் திருப்பல்லாண்டு தொடங்கும் ஆழ்வார் திவ்யஸூக்திகளின், இசையுடன் – கீதத்துடன், பாடுவம் – பாடுவோம். (வேதம்-ப்ரபந்தம், இரண்டு கீதங்களையும் பாடுவோம்).

கருத்து:– பெரியபிராட்டியார் எப்பொழுதும் பிரியாது வாழ்கின்ற ஸ்ரீமந்நாராயணனுடைய திவ்யஸ்தானமாகிய ஸ்ரீ வைகுண்டத்தை நாம் அடைந்து அங்கு நித்யகைங்கர்யம்செய்யும் நித்யஸூரிகளுடனும் முக்தர்களுடனும் சேர்ந்து ஸாமகானத்தையும் ஆழ்வார்ஸ்ரீஸூக்திகளின் இன்னிசையையும் பாடி ஸ்ரீவைகுண்டநாதனை எந்நாளும் அநுபவிப்போமாக. 18

முக்த ஜீவனுக்குக் கூறும் ஆறு உபமானங்கள்

எண்சீராசிரியவிருத்தம்

151 அடலுரக முண்டுமிழ்ந்த வருக்கன் போல
வழுக்கடைந்து கழுவியநற் றரளம் போலக்
கடலோழுகிக் கரைசேர்ந்த கலமே போலக்
காட்டுத்தீக் கலந்தோழிந்த களிறே போல
மடல்கவரு மயல்கழிந்த மாதர் போல
வன்சிறைபோய் மன்னர்பதம் பெற்றுர் போல
வுடன்முதலா வுயிர்மறைக்கு மாயை நீங்கி
யுயர்ந்தபத மேறியுணர்ந் தோன்றி னேமே. 19

உரை:— அடல் உரகம் – வலிமையுள்ள (ராகு என்னும்) ஸர்ப்பத்தால் உண்டு உமிழ்ந்த – விழுங்கி(ப் பிறகு) உமிழப்பட்ட, அருக்கன்போல – ஸூர்யன்போலவும், அழுக்கு அடைந்து கழுவிய – அழுக்கு நிரம்பியிருந்து பின் கழுவப்பெற்ற, நல் தரளம் போல – சிறந்த முத்துப்போலவும், கடல் ஒழுகிக் கரை சேர்ந்த – கடலில் திசை தெரியாதோடிப் பின் (தெய்வவசத்தால்) கரையைச் சேர்ந்துவிட்ட, கலமே போல – ஓடம்போலவும், காட்டுத் தீக்கு அலந்து – காட்டுத் தீயால் (சூழப்பட்டு) வருந்தி, ஒழிந்த – (பிறகு அத்துன்பம்) நீங்கிய, களிறேபோல – யானைபோலவும், மடல் கவரும் மயல் கழிந்த – மடலூரும்படியான காமவிச்சை நீங்கிய, மாதர்போல–பெண்கள் போலவும், வன் சிறை போய் – (சிறையிலிருந்து, பின்) வலிய ஆந்தச் சிறை நீங்கி வெளியேறி, மன்னர்பதம் பெற்றார்போல – ராஜபதவியைப் பெற்றவர்போலவும், உடல் முதலா – கர்மசரீரத்திற்குக் காரணமாய், உயிர் மறைக்கும் – ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை (நாம் அறியமுடியாதபடி) மறைப்பதாயுள்ள, மாயை நீங்கி – ப்ரக்ருதியின் ஸம்பந்தம் நீங்கி, உயர்ந்த பதம் ஏறி – உயர்ந்த ஸ்தானமாகிய பரமபதத்தில் ஏறி, உணர்ந்து – (ஸ்ரீ வைகுண்டநாதனை) அநுபவித்து, ஒன்றினோம் – (அவனுடன்) கலந்து ஈடுபட்டோம்,

கருத்து:— ஸம்ஸாரத்தில் உழன்று வருந்திய ஜீவன் ஸம்ஸார பந்தம் நீங்கப்பெற்றுப் பரமபதம் சேருங்கால் பெறும் தேஜஸ்ஸும் பெருமையும் இப்பாசுரத்தில் ஆறு உபமானங்களால் விளக்கப்படுகின்றன. ராஹு என்னும் ஸர்ப்பம் பற்றி விட்டபிறகு ஸூர்யனுக்குப் பிரகாசம் மிக அதிகமாகும். அழுக்கடைந்து நின்ற நன் முத்து நன்கு சுத்தம் செய்யப்பட்டவுடன் தன் இயற்கையான ஒளி வீசப்பெறுகின்றது. கடலிற்சென்ற ஓடம் வழிதப்பிச் சென்று பின் கரை சேர்ந்தவுடன் அதிலுள்ள யாத்ரிகர்கள் அடையும் மகிழ்ச்சிக்கு எல்லை இலது. ஒரு யானை பெரிய காட்டுத் தீயில் அகப்பட்டுத் தவித்து நின்று, பின் தெய்விகமாய் அத்தீ அணைய, அதினின்றும் வெளியேறியபின் அதன் மகிழ்ச்சி கூறுந்தரமன்று. ஒரு தலைவி ஒரு தலைவனை அடையவிரும்பி அது பெறாது மடலூர முற்பட்டுப் பின் இஷ்டஸித்தியைப் பெற்றதும் அவள் பெருமிதங்கொள்வாள். இங்ஙனமே தலைவிக்காக மடலூரும் தலைவனும் தன் இஷ்டம்பெற்று மிக மகிழ்வான். ஓர் அரசன் தன் பிழையால் சிறிதுகாலம் ஒரு சிறையில் இருக்கப்பெற்றுப் பின் பிழையற்றவனெனத் தீர்ந்து சிறைநீங்கி மீண்டும் தனது ராஜ்யத்தைப்பெற்றால் அவன் ஆநந்தக் கடலில் மூழ்கி நிற்பான். அங்ஙனமே இதுகாறும் நம் உண்மையான ஸ்வரூபத்தை அறியாமற்செய்து மறைத்துவந்த ப்ரக்ருதியின் ஸம்பந்தம் நீங்கப் பெற்ற நாம் ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீமந்நாராயணனுடன் கலந்து அவனுக்குக் கைங்கர்யம்செய்து அவனை அனுபவிக்கப்பெற்றோம்.

இங்ஙனம் பரிபூர்ண கைங்கர்யம் செய்து அநுபவித்தலே ஒன்பதாவது படியாகும். இதுவே முக்யமான பலனும் ஆம்,

மடலூர்தல்:— (தமிழிலக்கணத்தின்படி) ஒரு தலைவன், தான் விரும்பிய தலைவியை அடையமுடியாத நிலைமையில் அவளுருவமெழுதிய மடல்கொண்டு ஊரார்காணச் செல்வது. பனங்குருத்தைக் குறிக்கும் மடலென்னும் சொல் இங்கு அதில் வரைந்த சித்திரவுருவத்தையும், குறித்துநின்றது. (மடலூர்தலின் விரிவெல்லாம் தமிழில் அகப்பொருளிலக்கணம் நோக்கி அறிக.)

இப்படித் தாம் விரும்பிய தலைவரை (தலைவியை) அடையமுடியாமையால் மடலூரும் நிலை வந்து, பின் தமது எண்ணம் நிறைவேறியதால் அத்துன்பம் தீர்ந்த ஸ்த்ரீகள் (மானிடர்) இங்கு ஸம்ஸாரபந்தம் நீங்கி முக்திபெறும் ஜீவனுக்கு உதாஹரணமாக்கப்பட்டனர்.

இப்பாசுரத்தில் ஐந்தாவது உபமானத்தில் 'மாதர்போல' என்ற பாடமே மிகுதியாய் வழங்குகின்றது. பெண்ணைக்குறித்து ஆண் மடலூர்தல் உண்டேயன்றி, ஆணைக்குறித்துப் பெண் மடலூர்தல் கிடையாதென்கின்றனர் தமிழிலக்கணநூலார். ஆனால் திருமங்கையாழ்வார் தாம் பெண்தன்மையடைந்து எம்பெருமானிடம் மடலூரத் துணிந்து பாடிய திருமடலில் பெண்கள் மடலூர்வதில்லையென்று தமிழில் வரையறையுண்டாயினும் தாம் அதைக்கொள்ளாது, வடமொழி நூல்களின்படி பெண்கள் தங்கள் காதலை உலகறிய வெளியிட்ட முறையைப் பின்பற்றியே மடலூரத்துணிந்ததாய் அருளிச்செய்தார். இந்த முறையைக்கொண்டு இங்கு 'மாதர்' என்ற பாடத்தைக் கொள்வது நேரியதே. 'மாந்தர்' என்ற பாடத்தைக்கொண்டால், இச்சொல் ஆண்-பெண் என்ற இருபாலரையும் கூறுமாதலின் இரு முறைக்கும் இது பொருந்துமெனக் காண்க.

ஆக மாதர், மாந்தர் என்ற இரண்டு பாடங்களும் பொருந்துமெனக் காண்க. *19*

ஒன்பது படிகளையும் ஒருசேரக் கூறல்

152 மண்ணுலகின் மயறீர்ந்து மனந்த தும்பி
மன்னாத பயனிகந்து மாலே யன்றிக்
கண்ணிலதேன் றஞ்சியவன் கழலே பூண்டு
கடுஞ்சிறைபோய்க் கரையேறுங் கதியே சென்று
விண்ணுலகில் வியப்பெல்லாம் விளங்கக் கண்டு
விண்ணவர்தங் குழாங்களுடன் வேதம் பாடிப்
பண்ணுலகிற் படியாத விசையாற் பாடும்
பல்லாண்டே பல்லாண்டும் பாடு வோமே. 20

உரை:- மண்ணுலகில் மயல் தீர்ந்து-இக்கர்மபூமியில் அஜ்ஞாநம் தீர்ந்து (1 விவேகபர்வம்), மனம் ததும்பி – (வீணே கழிந்த காலத்தை நினைந்து) மனம் தத்தளித்து (2 நிர்வேதபர்வம்), மன்னாத பயன் இகந்து - ஸ்திரமல்லாத ஸம்ஸாரஸுகங்களில் ஆசையொழிந்து (3-விரக்திபர்வம்), மாலே அன்றி–எம்பெருமானைத் தவிர, கண் இலது என்று – (வரப்போகும் நரகத்தைத் தடுக்க வேறு) கதி இல்லை என்று, அஞ்சி – பயந்து (4 பீதிபர்வம்), அவன் கழலே பூண்டு–(பக்தி அல்லது ப்ரபத்தியால்) அவனுடைய திருவடிகளையே பற்றி(5 ப்ரஸாதநபர்வம்), கடும் சிறை போய்-சரீரமாகிய கொடிய சிறையிலிருந்து புறப்பட்டு (6 உத்க்ரமணபர்வம்), கரை ஏறும் கதியே சென்று – (ஸம்ஸார ஸமுத்ரத்தின்) அக்கரைக்குச்செல்லும் அர்ச்சிராதிகதியால் சென்று (7 அர்ச்சிராதிபர்வம்), விண்ணுலகில் – பரமபதத்தில் உள்ள, வியப்பு எல்லாம் – ஆச்சர்யங்களையெல்லாம், விளங்கக் கண்டு – தெளிவாய்க் கண்டு (8 திவ்யதேசப்ராப்திபர்வம்), விண்ணவர் தம் குழாங்களுடன் – நித்யஸூரிகள், முக்தர்கள் ஆகியவர்களின் கோஷ்டிகளுடன், வேதம் பாடி - வேதத்தைப் பாடி, பண் உலகில் படியாத இசையால் – ஸங்கீத வுலகில் அமையாத தெய்வகாநத்தால், பாடும் – பாடப்படுகிற, பல்லாண்டே – பல்லாண்டு என்று தொடங்கும் திவ்யப்ரபந்தத்தையே, பல் ஆண்டும் பாடுவோம் – பலகாலமும் (நித்ய-முக்தர்களுடன்) பாடி எம்பெருமானை அநுபவிப்போம். (9 பராப்திபர்வம்).

கருத்து:— இக்கர்மபூமியில் ஸதாசார்ய கடாக்ஷத்தால் விவேகத்தைப் பெற்று, இதுகாறும் வீணே கழிந்த காலத்திற்கு மனம் தத்தளித்து, ஸம்ஸார ஸுகங்களில் விருப்பம் நீங்கி, வரப்போகும் நரகாநுபவத்திற்கு அஞ்சி, உபாயத்தை அநுஷ்டித்து, சரீரத்தினின்று புறப்பட்டு, அர்ச்சிராதிகதியால் சென்று, பரமபதம் சேர்ந்து, அங்கு நித்யர்களுடனும் முக்தர்களுடனும் வேதத்தை அநுஸந்தித்து ஸங்கீதலோகத்திலேயே அமையாத தெய்வகாநத்தால் ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளையும் பாடிப் பகவத்குணங்களை அநுபவிப்போம். 20

நாம் ப்ரபத்திக்குப் பின்பும் இங்கு இருக்கும் காரணம்

153 மாளாத வினையனைத்து மாள நாம்போய்
வானேறி மலர்மகளா ரன்பு பூணுந்
தோளாத மாமணிக்குத் தொண்டு பூண்டு
தொழுதுகந்து தோத்திரங்கள் பாடி யாடிக்
கேளாத பழமறையின் கீதங் கேட்டுக்
கிடையாத பேரின்பம் பெருக நாளு
மீளாத பேரடிமைக் கன்பு பெற்றோ
மேதினியி லிருக்கின்றோம் விதியி னாலே. 21

உரை:—மாளாத வினை அனைத்தும் – (லகுவாய்) ஒழியாத கர்மங்கள் முழுதும், மாள – நாம் அநுஷ்டித்த உபாயத்தால் ஒழிய, நாம் போய் – நாம் (அர்ச்சிராதிகதியால்) சென்று, வான் ஏறி – பரமபதத்தை அடைந்து, மலர் மகளார் – தாமரையில் வாழும் பிராட்டியுடைய, அன்பு பூணும் – அன்பைப் பெற்றவனும், தோளாத மா மணிக்கு– துளைக்கப்படாத பெரிய (இந்த்ரநீல) ரத்நம்போன்றவனுமான எம்பெருமானுக்கு, தொண்டு பூண்டு – கைங்கர்யத்தை ஏற்று, தொழுது – வணங்கி, உகந்து – மகிழ்ந்து, தோத்திரங்கள் பாடி – ஸ்தோத்ரங்களைப் பாடி, ஆடி – நர்த்தநம்செய்து, கேளாத பழமறையின் – (இதுவரை) கேட்டிராத பழமையான வேதத்தின், கீதம் கேட்டு – திவ்யகாநத்தைக் கேட்டு, கிடையாத பேரின்பம் – (மற்றவர்க்குக்) கிடையாத பெரிய (மோக்ஷ) ஆநந்தம், நாளும் பெருக – எந்நாளும் பெருகும்படி, மீளாத பேரடிமைக்கு – திரும்புதலில்லாத பெரிய கைங்கர்யத்திற்குக் காரணமான, அன்பு பெற்றோம் – (எம்பெருமானுடைய) ப்ரீதியைப் பெற்றோம். விதியினால் – (நம்மைக் கொண்டு சேதநரை உஜ்ஜீவிப்பிக்கத் திருவுள்ளங்கொண்ட எம்பெருமானுடைய) நியமனத்தால், அல்லது – (அர்ச்சாவதாரத்தில் ஈடுபடவும் ஸ்ரீஸூக்திகளை அநுபவிக்கவும் காரணமான) பாக்ய விசேஷத்தால், மேதினியில் இருக்கின்றோம் - இக்கர்மபூமியில் இன்னும் உயிர்தரித்திருக்கின்றோம்.

கருத்து:—நெடுநாளாக நீங்காதிருந்த கர்மங்கள் முழுதும் நாம் அநுஷ்டித்த உபாயத்தால் நீங்கிவிட்டன. பின் பரமபதம் சென்று திவ்ய தம்பதிகளுக்குக் கைங்கர்யம் செய்து ஆநந்தத்தால் ஆடிப்பாடி வேதங்களின் தெய்வ காநத்தைக் கேட்டுப் பின் திரும்பி வராது அவ்வநுபவத்திலேயே மூழ்கிக்கிடக்கும்படி எம்பெருமானது அருளைப் பெற்றுவிட்டோம். ஆயினும் உடனே அவ்வநுபவத்தைப் பெறாது இன்னும் நாம் இக்கர்மபூமியில் இருப்பதற்குக் காரணம் – நம்மைக் கொண்டு சேதநரை வாழ்விக்கத் திருவுள்ளங்கொண்ட ஸர்வேசுவரனுடைய ஸங்கல்பமும், அர்ச்சாவதாரத்தில் ஈடுபட்டு அநுபவிக்கக் காரணமான பாக்ய விசேஷமும், ஸ்ரீபாஷ்யம், அருளிச்செயல் முதலிய திவ்ய ஸூக்திகளை ஸேவித்து அநுபவிக்க வேண்டிய ஸுக்ருத விசேஷமுமேயாம். *21*

பரமபதசோபானம்-உரை முற்றிற்று

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

ஸ்ரீ:

பரமதபங்கம் — உரை

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

[விஷயச்சுருக்கம்]

ஸ்ரீதேசிகன் பிறமதங்களின் முடிவுகளையும் அவற்றிலுள்ள தோஷங்களையும் நம் மதத்தின் மேன்மையையும் அனைவரும் நன்கு உணரவேண்டுமெனத் திருவுள்ளங்கொண்டு மணிப்ரவாளநடையில் பரமதபங்கமென்ற விரிவான ஒரு ரஹஸ்யத்தை அருளிச்செய்தார். அதில் ஒவ்வோர் அதிகாரத்தின் ஆதியிலும் முடிவிலும் அவ்வவற்றின் விஷயத்தைச் சுருக்கியருளிச்செய்த பாசுரங்கள் தொகுக்கப்பட்டுப் ''பரமதபங்கம்'' என்ற ஒரு ப்ரபந்தம் தோன்றியது.

இதில் முதலில் ஸ்ரீதேசிகன், பிறமதங்களைக் கண்டிக்கத் தமக்கு அருள்புரியும்வண்ணம் திருவாழியாழ்வானைத் துதித்து, பிறகு ஆசார்யர்கள் செய்த உபகாரத்தை அநுஸந்தித்து, நம் ஸித்தாந்தத்தின்படி மூன்று தத்துவங்களை விளக்கி, பரமதங்களைக் கண்டிப்பதன் அவசியத்தைக் கூறி, பிறமதங்களில் பொதுவாய் உள்ள தோஷங்களை வெளியிட்டு, சார்வாகமதம், நான்குவகைப்பட்ட (மாத்யமிக-யோகாசார-ஸௌத்ராந்திக-வைபாஷிக) பௌத்தமதம், அத்வைதமதம், ஜைநமதம், பாஸ்கர-யாதவமதம், வையாகரணமதம், கணுதமதம், கௌதமமதம், மீமாம்ஸகமதம், ஸாங்க்யமதம், யோகமதம், பாசுபதமதம் ஆகியவற்றின் முக்கியக் கொள்கையைச் சுருக்கிக் கூறிக் கண்டித்து, பாஞ்சராத்ரசாஸ்த்ரத்தின் பெருமையைப் பேசி, நம் ஸித்தாந்தத்தில் சரணாகதியின் ஸ்வரூபத்தையும் பெருமையையும் வெளியிட்டு, பலன்பெறும் வகையையும் எடுத்துக் காட்டி, நம் பூர்வாசார்யர்கள் கைக்கொண்ட ஸம்ப்ரதாயமே சிறந்தது என்று ஸ்தாபித்து, முடிவில், இவ்வாறு பரமதங்களைக் கண்டிக்கத் தமக்கு அருள்புரிந்துதவிய திருவாழியாழ்வானுடைய பதினறு திருக்கைகளின் வலிமையையும் பேசித் தலைக்கட்டுகிறார்.

திருவாழியாழ்வானைத் துதித்தல்

கட்டளைக்கலித்துறை

154 எண்டள வம்புயத் துள்ளிலங் கும்மறு கோணமிசை
வண்பணி லந்தி கிரிவளை வில்வளை வாய்முசலந்
திண்கையி லங்குசஞ் சீர்திக ழுங்கதை செங்கமல
மேண்படை யேந்திநின் றுனேழி லாழி யிறையவனே. 1

[பாசுரம் 1, 2, 3– ப்ரஸ்தாவநாதிகாரம்]

உரை:—எழில் ஆழி இறையவன்–அழகிய திருவாழியாழ்வானுகிய ஸ்வாமி, எண் தள அம்புயத்துள் – எட்டு இதழ்களுள்ள தாமரைப்பூவி னுள், இலங்கும் அறு கோணம் மிசை – ப்ரகாசிக்கும் ஆறு கோண முள்ள யந்த்ரத்தில், திண் கையில் – வலிய (எட்டுத்) திருக்கைகளில், வண் பணிலம் – அழகிய சங்கம், திகிரி – சக்கரம், வளை வில் – வளைந் திருக்கும் வில், வளை வாய் – வளைந்த வாயையுடைய கோடரி, முசலம் – உலக்கை, அங்குசம் – மாவெட்டி, சீர் திகழும் கதை – பெருமை விளங்கும் கதை, செங்கமலம் – சிவந்த தாமரைமொட்டுப்போன்ற ஆயுதம் (ஆகிய), எண் படை – எட்டு ஆயுதங்களை, ஏந்திநின்ருன் – தரித்துநின்ருன்.

கருத்து:—திருவாழியாழ்வான் எட்டு இதழுள்ள தாமரையில் ஆறு கோணமுள்ள யந்த்ரத்தில், எட்டுக் கைகளிலும் சங்கு, சக்கரம், வில், கோடரி, உலக்கை, மாவெட்டி, கதை, தாமரை போன்ற ஆயுதம் ஆகிய எட்டு ஆயுதங்களை ஏந்திநின்று ப்ரகாசிக்கின்ருன்.
துள்ளிலங், கும்மறு – விரித்தல், செய்யுள்விகாரம். 1

ஆசார்யர்கள் செய்த மஹோபகாரம்

பதினறுசீராசிரியச்சந்தவிருத்தம்

155 விடுநெறி யஞ்சி விடத்தொ டக்கிய
விதியர டைந்து தொழத்த ழைத்தெழு
விழியரு டந்து விலக்க டிக்களை
விரகிலி யம்பி விலக்கி வைத்தனர்
கொடுவினை யென்ப தனைத்தி னைத்தனை
கொணர்தலி கந்த குணத்த னத்தினர்
குருகையில் வந்து கொழுப்ப டக்கிய
குலபதி தந்த குறிப்பில் வைத்தனர்
கடுநர கன்பு கழற்றி மற்றெரு
கதிபெறு மன்பி லெமைப்பொ ருத்தினர்
கமலையு கந்த கடற்கி டைக்கடற்
கருணையு யர்ந்த திடர்க்கொ ருக்கினர்
படுமுத லின்றி வளர்த்த நற்கலை
பலபல வொன்ற வெமக்கு ரைத்தனர்
பழமறை யந்தி நடைக்கி டைச்சுவர்
பரமத மென்ற திடித்த பத்தரே. 2

உரை:— பரமதம் - பிறமதங்கள், பழ மறையந்தி நடைக்கு – பழமையான வேதாந்த மார்க்கத்திற்கு, இடைச்சுவர் - நடுவேயுள்ள சுவர் (போல் தடையாயுள்ளன), என்று – என்று (நினைத்து), அது – அந்த மதங்களாகிய சுவரை, இடித்த பத்தர் – இடித்து ஒழித்த பகவத்

பக்தர்களான எம் ஆசார்யர்கள், விடு நெறி அஞ்சி – நீக்கத்தக்க தீய வழியில் செல்லப்பயந்து, விடத் தொடக்கிய – (அவ்வழியை) விட்டு விலகத் தொடங்கிய, விதியர் – பாக்யமுள்ள யாம், அடைந்து தொழ – (தம்மை) வந்து கிட்டி வணங்க, தழைத்து எழு–(மேன்மேலும்) வ்ருத்தி யாகிப் பெருகுகின்ற, அருள் விழி தந்து – க்ருபையுடன் கூடிய கடாக்ஷத்தைக் கொடுத்து, விலக்கு அடி – (உயர்ந்த பலனைப் பெறமுடியாமல்)விலக்குவதற்குக் காரணமான, களை–களை(போன்ற பாபங்)களை, இயம்பி–(எமக்கு) எடுத்துக்கூறி, விலக்கி–(அப்பாபச்செய்கையிலிருந்து எம்மை) விலக்கி – விரகில் வைத்தனர் – (எம் சக்திக்குத் தக்க) உபாயத்தில் (முயல்வித்து) நிலைநிறுத்தினர்.

(அவ்வாசார்யர்கள்), கொடு வினை என்பதனை – கொடிய கர்மங்களென்று சொல்லப்படுமவற்றை, தினைத்தனை கொணர்தல் இகந்த – சிறிதளவும் சேரவொட்டாது கழித்த, குணத் தனத்தினர் – நற்குணமாகிய செல்வத்தையுடையர்.

குருகையில் வந்து–திருக்குருகூரெனப்படும் ஆழ்வார் திருநகரியில் அவதரித்து, கொழுப்பு அடக்கிய – (பிறமதஸ்தர்களின்) கர்வத்தை (த் தம் ஸூக்தியின் மூலமாக) அடக்கிவிட்ட, குலபதி தந்த – (ப்ரபந்ந குலத்திற்குக்) கூடஸ்தரான நம்மாழ்வார் அருளிய, குறிப்பில் வைத்தனர் – ஸூக்ஷ்மமான கருத்தில் (எம்மை) நிலைநாட்டினர்.

கடு நரகு – கொடிய நரக (த்தைத் தரும் பாபகர்ம) ங்களில், அன்பு கழற்றி–(எமக்கிருந்த) அன்பைப் போக்கி, மற்றொரு கதி பெறும் அன்பில் – மற்றொரு (சிறந்த) கதியாகிய மோக்ஷத்தைப் பெறுவதில் உள்ள ஆசையில், எம்மைப் பொருத்தினர் – எங்களை இசைவித்தனர்.

கமலை உகந்த – பிராட்டியின் அன்பிற்குரிய, கடல் கிடைக்கடல் – (பாற்) கடலில் பள்ளிகொண்டிருக்கும் (நீலக்) கடல்போன்ற எம்பெருமானுடைய, கருணை உயர்ந்த திடர்க்கு – கருணையாகிய உயர்ந்த மேட்டில், ஒருக்கினர் – (எம்மை) ஒன்று சேர்த்தனர்.

படு முதல் இன்றி – அழியும் காரணம் இல்லாமல், வளர்த்த – (ஈசுவரனாலும் மஹர்ஷிகளாலும்) வ்ருத்தி செய்யப்பட்ட, பல பல நல் கலை – பற்பல சிறந்த வித்யைகள், ஒன்ற – (எம்மிடம்) ஒன்றுகூடும்படி, எமக்கு உரைத்தனர் – எங்களுக்கு உபதேசித்தனர்.

கருத்து:— பிறமதங்கள் பழமையான நம் வேதாந்த நெறி பரவுவதற்குத் தடையாயிருந்தன. அவற்றைப் பரமபாகவதர்களான நம் ஆசார்யர்கள் தம் ஸூக்திகளின் வாயிலாகவும் வாதம்புரிந்தும் கண்டித்து ஒழித்தனர். இத்தகைய ஆசார்யர்களைப் பாபமார்க்கத்திற்கு மிகவும் அஞ்சிய நாம் சென்று வணங்கினோம். அவர்கள் நம்மை மிக்க கருணையுடன் குளிரக் கடாக்ஷித்தனர்; நற்பயனைப்பெறத் தடையாயிருந்த பாபங்களால் நமக்கு வரும் தீங்குகளைக் கூறிப்

பாபங்களைச் செய்யாதவாறும் சிறந்த உபாயத்தில் ஈடுபடுமாறும் செய்தனர்; அவர்கள் நமக்குப் பாபமே நேரிடாதவாறு கவனிக்கும் சிறந்த குணங்களையுடையர்; தம் அமுதினும் இனிய பாசுரங்களால் பிறமதங்களைக் கண்டித்தருளியவரும் ப்ரபந்நஸந்தாநகூடஸ்தருமான நம்மாழ்வார் காட்டிய வழியைப் பின்பற்றச் செய்தனர். கொடிய நரகத்தைத் தரும் செய்கைகளுக்கு அஞ்சி மோக்ஷத்தில் பேரவாக்கொள்ளுமாறு செய்தனர்; திருப்பாற்கடலில் ஒரு கருங்கடல் கண்வளர்கின்றதென்னலாம்படி பள்ளிகொண்ட எம்பெருமானை நெருங்கத் தகுதியற்ற நம்மை அவன்கருணைக்கு இலக்காக்கினர்; அழியாத பல சிறந்த வித்யைகளை நமக்கு உபதேசித்தனர். இத்துணை உதவிகளை நம் ஆசார்யர்கள் செய்தருளினர். 2

ஆசார்யர்கள் ஸாரார்த்தத்தையே உபதேசித்தல்

கட்டளைக்கலித்துறை

156 போமுரைக் கும்பொருள் யாமறி யோம்பொரு ளார்மறையிற்
றாமுரைக் கின்றன தாமே யறியுந் தரமுடையா
ராமுரைக் கென்றிவை யாய்ந்தெடுத் தாரண நூல்வழியே
நாமுரைக் கும்வகை நல்லரு ளேந்தி நவின்றனரே. 3

உரை:— பொருள் ஆர் மறையில் - உண்மைக்கருத்து நிறைந்துள்ள வேதத்தில், போம் உரைக்கும் பொருள் - (தகாததென்று) நீக்கக்கூடியதும் (தக்கதென்று) சொல்லக்கூடியதுமான விஷயத்தை, யாம் அறியோம் - (ஆசார்யோபதேசத்திற்குமுன்) யாம் அறியமாட்டோம். தாம் உரைக்கின்றன – தம்மால் உபதேசிக்கப்படும் விஷயங்களை, தாமே அறியும் – தாமே (நேரில்) கண்டறியும்படியான, தரம் உடையார் – பெருமையுடைய நம் ஆசார்யர்கள், நல் அருள் ஏந்தி – (நம் பக்கல்) சிறந்த க்ருபையைக் கொண்டு, ஆய்ந்து – (வேதத்தை) ஆராய்ந்து, இவை உரைக்கு ஆம் என்று – இவ்விஷயங்கள் உபதேசிக்கத் தக்கனவாகும் என்று, எடுத்து – பொறுக்கியெடுத்து, ஆரண நூல் வழியே – வேதமார்க்கத்தைத் தழுவியே, நாம் உரைக்கும் வகை – நாம் (இந்த க்ரந்தத்தில்) விளக்கும்படி, நவின்றனர் – (நமக்கு) உபதேசித்தனர்.

கருத்து:—உண்மைப் பொருள்கள் நிறைந்த வேதம் ஒரு பெருங்கடல். அதில் நீக்குமவையும் கைக்கொள்ளுமவையும் ஆசார்யனது உபதேசமின்றி அறியமுடியாதவை. நம் ஆசார்யர்களோ தாம் கூறும் ஒவ்வொன்றையும் தம் அநுபவத்தால் நேரில் காணும் ஆற்றலுடையர். அவர்கள் வேதங்களைத் துருவிப்பார்த்து, நம்மிடம் உள்ள கருணையால் நமக்கு இன்றியமையாத (அவசியமான) விஷயங்களைப் பொறுக்கியெடுத்து நமக்கு உபதேசித்தனர். அதனால் நாம் வேதாந்த மார்க்கத்தைத் தழுவி இந்தக் கிரந்தத்தை இயற்ற வல்லவரானோம். 3

விவேகிகளையும் மயக்கும் பிற மதத்தினரைக் கண்டித்தல்

157 சித்து மசித்து மிறையு மெனத்தெளி வுற்றுநின்ற
தத்துவ மூன்றுந் தனித்தனி காட்டுந் தனிமறையான்
முத்தி வழிக்கிது மூல மெனத்துணி வார்களையுங்
கத்தி மயக்குங் கதகரை நாங்கடி கின்றனமே. 4

[பாசுரம் 4, 5—ஜீவதத்துவாதிகாரம்]

உரை:– சித்தும்–சேதநமும், அசித்தும் – அசேதநமும், இறையும் என – ஈசுவரனும் என்று, தெளிவுற்று நின்ற – தெளியப்பெற்று நின்ற, தத்துவம் மூன்றும் – தத்துவங்கள் மூன்றையும், தனித்தனி காட்டும்– (அவ்வவற்றின் ஸ்வரூபத்தையும் ஸ்வபாவத்தையும்) தனித்தனியாகப் பிரித்து வெளியிடுகின்ற, தனி மறையால் - ஒப்பற்ற வேதத்தால், இது – இந்தத் தத்துவஜ்ஞானம், முத்திவழிக்கு – மோக்ஷமார்க்கத்திற்கு, மூலம் என - காரணமாகும் என்று, துணிவார்களையும் – நிச்சயித்தறிபவர்களையும், கத்தி மயக்கும் – ஆரவாரத்தால் மயக்குகின்ற, கதகரை– ப்ரதிவாதிகளை, நாம் – (ஆசார்யோபதேசம் பெற்ற) நாம், கடிகின்றனம் – (இவ்வதிகாரத்தில்) கண்டிக்கின்றோம்.

கருத்து:—வேதாந்தசாஸ்த்ரம், சேதநம் - அசேதநம் – ஈசுவரன் என்னும் மூன்று தத்துவங்களையும் அவற்றின் ஸ்வரூப - ஸ்வபாவங்களுடன் வகுத்துக் காட்டுகின்றது. விவேகிகள் அந்தத் தத்துவங்களை நன்றாய் அறிந்தனர்; அந்த ஜ்ஞாநமே மோக்ஷத்திற்கு மூலகாரணமென நன்கு கண்டனர். அத்தகைய நிச்சயமுடைய விவேகிகளையும் பிற மதத்தினர் தம் ஆரவாரத்தால் மயக்கப் பார்க்கின்றனர். அவர்களை இவ்வதிகாரத்தில் நன்கு கண்டிக்கின்றோம். 4

மூவகை ஜீவர்கள்பற்றிய கலக்கம் நீக்குதல்

158 முத்தின் வடங்க ளெனமுகுந் தன்புனை மூவகையாஞ்
சித்தி லருஞ்சுரு திச்செவ்வை மாறிய சிந்தைகளாற்
பத்தி லிரண்டுமெய்க் கப்பகட் டும்பர வாதியர்தங்
கத்தில் விழுந்தடைந் தவ்வழுக் கின்று கழற்றினமே. 5

உரை:— முத்தின் வடங்கள் என-முத்துக்களின் ஹாரங்கள் என்னும்படி, முகுந்தன் புனை-எம்பெருமான் தரித்த, மூவகையாம் சித்தில்– (பத்த-முக்த - நித்யஸூரிகளாகிய) மூன்றுவகைப்பட்ட சேதநர்விஷயத்தில், அரும் சுருதிச் செவ்வை மாறிய – (அறிவதற்கு) அருமையான வேதத்தின் நேர்மையை அழித்துப்பேசுகின்ற, சிந்தைகளால் - நினைவுகளால், பத்தில் இரண்டு மெய்க்க – (தாம் கூறும்) பத்துவிஷயங்களில் இரண்டாவது மெய்யாக, பகட்டும் – மயக்குகின்ற, பரவாதியர் தம் – ப்ரதிவாதிகளுடைய, கத்தில் விழுந்து அடைந்த – வீண்பிதற்றலில் மயங்கி (அதனால்) பெற்ற, அழுக்கு–களங்கத்தை (குற்றத்தை), இன்று- (இவ்வதிகாரத்தை எழுதிய) இன்று, கழற்றினம் - நீக்கிவிட்டோம்.

கருத்து:— எம்பெருமான், பத்தர் – முக்தர் – நித்யர் என மூவகையான ஜீவர்களையும் ஒரு முத்துமாலைபோல் தன் திருமார்பில் தரிக்கின்றான். அவர்கள்விஷயமாய்ப் பிறமதத்தினர் வேதத்திற்கு முரணான கொள்கைகளைப்பேசி, அவற்றில் பத்தில் இரண்டேனும் மெய்யாகவேண்டுமெனக் கருதிப் பிதற்றி அறிஞர்களை மயக்கினர். அதனால் ஏற்பட்ட களங்கங்களை இவ்வதிகாரத்தில் ஒழித்து விட்டோம்.

அடைந்த + அழுக்கு = அடைந்தவ்வழுக்கு, விரித்தல் விகாரம். 5

அசேதநதத்துவம் – விளக்கம் – கலக்கத்தை நீக்குதல்

159 நாக்கிய லும்வகை நம்மை யளித்தவர் நல்லருளாற்
பாக்கிய மேந்திப் பரனடி யார்திறம் பார்த்ததற்பின்
றாக்கியர் தங்க டலைமிசை தாக்கித் தனிமறைதான்
போக்கிய மென்றத னிற்பொய்ம் மதங்களைப் போக்குவமே. 6

[பாசுரம் 6, 7—அசித்தத்துவாதிகாரம்]

உரை:— நம்மை - (அறிவற்றிருந்த) நம்மை, நாக்கு இயலும் வகை - நாவினால் (நன்றாய்ப்) பேசும்படி, அளித்தவர் - அருள்புரிந்த ஆசார்யர்களுடைய, நல் அருளால் – சிறந்த க்ருபையினால், பாக்கியம் ஏந்தி - (நல்ல ஜ்ஞாநத்தைப் பெறும்) பாக்யத்தைப் பெற்று, பரன் அடியார் திறம்-ஸர்வேசுவரனுடைய தாஸர் (களான ஜீவர்) களுடைய ஸ்வரூபத்தை, பார்த்ததற்பின் –(முன்அதிகாரத்தில்) ஆராய்ந்தபின்பு, தாக்கியர் தங்கள் –(ஆபாஸயுக்திகளைக்கொண்டே விஷயத்தை ஸாதிக்க முற்படுகின்ற) யுக்திவாதிகளுடைய, தலைமிசை தாக்கி–தலையில் மோதி, தனி மறை – ஒப்பற்ற வேதம், போக்கியம் என்றதனில் – "(ஆத்மாவினால்) அநுபவிக்கப்படும் வஸ்து" எனக் கூறிய அசேதநதத்துவத்தைப்பற்றி வருகின்ற, பொய் மதங்களை - விபரீதக் கொள்கைகளை, போக்குவம்–(இவ்வதிகாரத்தில் நாம்) ஒழித்திடுவோம். தான்—அசை.

கருத்து:— அறிவற்றிருந்த நாம் கருணைமிக்க ஆசார்யர்களின் நல்லுரைகளால் நல்லறிவுபெற்று நன்கு பேசும் வல்லமை பெற்றோம். எம்பெருமானுக்கு அடியார்களான ஜீவர்களைப்பற்றிய விளக்கத்தை முன்னதிகாரத்தில் தந்தோம். இவ்வதிகாரத்தில் ஆபாஸயுக்திகளைக் கொண்டே தம் கொள்கைகளை ஸாதிக்க முற்படும் யுக்திவாதிகளைக் கண்டித்து, ஜீவர்களால் அநுபவிக்கப்படும் வஸ்துவாகிய அசேதநதத் துவத்தைப் பற்றிய தவறான கொள்கைகளை ஒழித்திடுவோம்.

"भोक्ता भोग्यं प्रेरितारं च मत्वा" என்று உபநிஷத்வாக்யம் ஒன்று உளது. இது மூன்று தத்துவங்களின் ஸ்வபாவத்தை வெளியிடுகின்றது. ஜீவனை அநுபவிப்பவனாகவும், அசேதநத்தை அநுபவிக்கப்படும்

வஸ்துவாகவும், ஈசுவரனைச் சேதநாசேதநங்களை ஏவுபவனாகவும் இவ் வாக்யத்தால் அறிகின்றோம். (भोक्ता - அநுபவிப்பவன்; भोग्यं - அநு பவிக்கப்படும் வஸ்து; प्रेरिता - ஏவுபவன்.) 6

அசேதநம்–ஆசார்யோபதேசத்தின்படி விளக்கம்

160 தீவகை மாற்றியன் றோர்தேரி லாரணம் பாடியநந்
தேவகி சீர்மக னார்திறம் பாவருள் சூடியநா
மூவகை யாமறி யாத்தத் துவத்தின் முகமறிவார்
நாவகை யேநடத் துந்நடை பார்த்து நடந்தனமே. 7

உரை:— தீ வகை மாற்றி–(ஜீவர்களிடமுள்ள) தீய ப்ரகாரங்களை நீக்கி (ஒழிக்கக் கருதி), அன்று – பாரதயுத்தகாலத்தில், ஓர் தேரில் – ஒப்பற்ற (அர்ஜுநனுடைய) தேரில் (பாகனாயிருந்து), ஆரணம் பாடிய– வேதத் (தின் அர்த்தத்)தை (க் கீதையின் வாயிலாக) அருளிச்செய்த வரும், நம் தேவகி சீர் மகனார் – தேவகியின் சிறந்த புத்திரருமான நம் கண்ணனுடைய, திறம்பா அருள் – நீங்காத க்ருபையை, சூடிய நாம் – பெற்ற நாம், மூவகை ஆம் – (ப்ரக்ருதி, காலம், சுத்தஸத்துவம் என்று) மூன்றுவகைப்பட்ட, அறியாத் தத்துவத்தின் – அறிவற்ற (அசேதந) தத்துவங்களுடைய, முகம் அறிவார்–ப்ரகாரங்களை (நன்கு) அறிந்த (பராசரர் – வ்யாஸர் – ஆழ்வார் முதலிய)வர்களுடைய, நா வகையே – உபதேசத்தின் வழியாகவே, நடத்தும் – (நம் ஆசார்யர்கள்) நடத்துகின்ற, நடை பார்த்து – ப்ரகாரத்தை ஆராய்ந்து, நடந்தனம்– நடந்தோம். (இவ்வதிகாரத்தில் வெளியிட்டோம்).

கருத்து:— தேவகியின் புத்திரனான கண்ணபிரான் சேதநர்களை வாழ்விக்கக் கருதினான்; பாரதப் போர்க்களத்தில் அர்ஜுனனது தேரில் பாகனாய் நின்றான்; அவனை வியாஜமாக வைத்து வேதாந்தார்த் தங்களையெல்லாம் கீதை என்ற திவ்யஸூக்தியின் வழியாக உலகுக்கு விளக்கியருளினான். அவனுடைய அருளைப் பெற்ற நாம் ப்ரக்ருதி – காலம் - சுத்தஸத்துவம் என்று மூன்றுவகைப்பட்ட அசேதநங்களின் ப்ரகாரங்களை நன்கு அறிந்த வ்யாஸர், பராசரர், ஆழ்வார் முதலியவர் களின் ஸூக்தியைக்கொண்டு நம் ஆசார்யர்கள் உபதேசித்தவாறே இந்த அதிகாரத்தில் விளக்கினோம். 7

ஈசுவரன்—ஆசார்யோபதேசத்தின்படி விளக்கம்

161 வேலைப் புறமகங் காண்பது போல்வேத நன்னெறிசேர்
நூலைப் புறமகங் காண்டலி னுண்ணறி வின்றிநின்றீர்
மாலைப் பெறவழி காட்டிய தேசிகர் வாசகமே
யோலைப் புறத்தி லெழுதுகின் றோமுள் ளெழுதுமினே. 8

[பாசுரம் 8, 9—பரதத்துவாதிகாரம்]

உரை:— வேலை - ஸமுத்ரத்தின், புறம் அகம் - வெளியிலும் உள்ளும் (முழுதும்), காண்பது போல் - காண்பதிற்போல், வேத நல் நெறி சேர் நூலை - வேதத்தின் சிறந்த மார்க்கங்களைப் போதிக்கும் சாஸ்த்ரங்களை, புறம் அகம் காண்டலில் - மேலே தோன்றும் அர்த்தத்தையும் உட்கருத்தையும் அறிவதில், நுண் அறிவு இன்றி நின்றீர்!— ஸூக்ஷ்ம புத்தி இல்லாமல் நின்றவர்களே!, மாலைப் பெற - எம்பெருமானை (நாம்) அநுபவிப்பதற்கு, வழி காட்டிய - உபாயத்தை (நமக்கு)க் காட்டிக்கொடுத்த, தேசிகர் வாசகமே - ஆசார்யர்களுடைய உபதேச(த்தின் ஸார)த்தையே ஓலைப்புறத்தில் எழுதுகின்றோம் - இவ்வோலையின்மேல் எழுதுகின்றோம். உள் எழுதுமின் - (இதை உங்கள்) மனத்துள் பதிவித்துக்கொள்வீர்களாக.

கருத்து:— ஆஸ்திகர்களே! பெருங்கடலை உள்ளும் புறமும் காண்பது இயலாத செயலாகும். அவ்வாறே வேதமார்க்கத்தை நன்கு விளக்கும் சாஸ்த்ரங்களிலும் மேலே தோன்றும் பொருள்களையும் உட்கருத்துக்களையும் அறிவது மிகவும் கடினமான காரியம். அதற்கு நுண்ணிய அறிவு உங்களிடம் இல்லை. ஆதலால் மோக்ஷத்திற்கு ஏற்ற உபாயத்தைக் காட்டிக்கொடுத்த ஆசார்யர்கள் உபதேசத்தின் ஸாரத்தையே இந்தக் கிரந்தத்தில் எழுதுகின்றோம். இதை உங்கள் மனத்தில் பதிய வைத்துக்கொண்டு வாழ்வீர்களாக.

எழுத்துமிக்குத் தளை வழுவுமாதலின் "உள்ளே யெழுதுமினே" என்று பாடங்கொள்ளத் தகாது. 8

ஈசுவரன்—விளக்கம்—கலக்கம் நீங்கல்

162 சிறைநிலை யாம்பவத் திற்சிறு தேனின்ப முண்டுழல்வார்
மறைநிலை கண்டறி யாமயன் மாற்றிய மன்னருளாற்
றுறைநிலை பார மேனத்துளங் காவமு தக்கடலா
மிறைநிலை யாமுரைத் தோமெங் குருக்க ளியம்பினவே. 9

உரை:—சிறை நிலை ஆம் பவத்தில் - சிறையின் தன்மையுள்ள ஸம்ஸாரத்தில், சிறு தேன் இன்பம்-ஒருதுளி தேன்போல் (அற்பமான) ஸுகத்தை, உண்டு உழல்வார் - அநுபவித்து (அதிலேயே) மண்டியிருப்பவர்களுடைய (தும்), மறை நிலை - வேதத்தின் தாத்பர்யத்தை, கண்டு அறியா - தெளிந்து அறியமுடியாத (படி செய்வதுமான), மயல் மாற்றிய - அஜ்ஞாநத்தைப் போக்கிய, மன் அருளால் - வலிய க்ருபையினால், எம் குருக்கள் இயம்பின - எங்கள் ஆசார்யர்கள் உபதேசித்தபடி, துறை நிலை பாரம் என - (ஆநந்தக் கடலில் இறங்கும்) துறையும் நிலையான நிற்குமிடமும் (ஸம்ஸாரத்தின் அக்) கரையும் என்று கூறும்படி, துளங்கா - நிலைகலங்காத, அமுதக் கடல் ஆம் - அம்ருதமயமான ஸமுத்ரமாகிய, இறை நிலை - எம்பெருமானுடைய ப்ரகாரத்தை, யாம் உரைத்தோம் - யாம் (இவ்வதிகாரத்தில்) வெளியிட்டோம்.

கருத்து:— இந்த ஸம்ஸாரவாழ்வு சிறைவாழ்க்கைபோன்றது. இதில் பெறும் ஸுகம் ஒரு தேன்துளி போல் மிக அற்பமானது. இதைப் பெரிதாய் நினைத்து இதிலேயே மண்டியுள்ள சேதநர்கள் வேதாந்தத்தின் பொருள்களைக் கண்டறியாதவாறு அவர்களின் அஜ்ஞாநம் தடைசெய்கின்றது. அதை நம் ஆசார்யர்கள் கருணை நிறைந்த தம் உபதேசத்தால் ஒழிக்க வல்லவர்கள். அவர்கள் எம்பெருமானை நமக்கு ஆநந்தக்கடலில் இறங்கும் துறையாகவும் நிலையான உறைவிடமாகவும் ஸம்ஸாரக் கடலுக்கு அக்கரையாகவும் கலங்காத அமுதப் பெருங்கடலாகவும் விளக்கினர். அதன்படி அவனுடைய ஸ்வரூப-ஸ்வபாவங்களை யாம் இவ்வதிகாரத்தில் வெளியிட்டோம். 9

பிறமதங்களைக் கண்டிப்பதன் பயன்

163 வெறியார் துளவுடை வித்தகன் றன்மையின் மெய்யறிவார்
குறியார் நெடியவ ரென்றொரு குற்றம் பிறர்க்குரையா
ரறியார் திறத்தி லருள்புரிந் தாரண நன்னெறியாற்
சிறியார் வழிக ளழிப்பதுந் தீங்கு கழிப்பதற்கே. 10

[பாசுரம் 10, 11— ஸமுதாயதோஷாதிகாரம்]

உரை:— வெறி ஆர் துளவுடை - வாஸனை மிகுந்த திருத்துழாயையுடையவனும், வித்தகன் - அதிசயச்செய்கையையுடையவனுமான எம்பெருமானுடைய, தன்மையின் - ஸ்வபாவத்தின், மெய் அறிவார் - உண்மையை அறிந்த ஆசார்யர்கள், பிறர்க்கு - பிறர்விஷயத்தில், குறியார் நெடியவர் என்று - குள்ளமானவர் உயரமானவர் என்றாற் போன்ற (அற்பமான), ஒரு குற்றம் உரையார் - ஒரு தோஷத்தையும் சொல்லமாட்டார்கள். (அப்படியாயினும்) ஆரண நல் நெறியால் - வேதத்தைத் தழுவிய சிறந்த மார்க்கத்தைக்கொண்டு, சிறியார் – அற்பர்களான பிறமதத்தாருடைய, வழிகள் அழிப்பதும் – ஸித்தாந்தத்தைக் கண்டிப்பதும், (எதற்காகவென்றால்), அறியார் திறத்தில் – (நம் ஸித்தாந்தத்தை) அறிந்துகொள்ளாத பாமரர் விஷயத்தில், அருள் புரிந்து – க்ருபையை வைத்து, தீங்கு கழிப்பதற்கே – (பிறமதங்களின் தோஷம் தெரியாததால் அவர்களுக்கு வரும்) கெடுதியை நீக்குவதற்கே (யன்றி வேறில்லை).

கருத்து:— நன்மணம் வீசும் திருத்துழாய் மாலையணிந்த, அதிசயச் செய்கைகளையுடைய எம்பெருமானுடைய ஸ்வரூப–ஸ்வபாவங்களை நன்கு அறிந்த நம் ஆசார்யர்கள் பிறர்மீது ஒரு சிறிய குற்றத்தையும் சொல்லத் துணியார். ஆயினும் அவர்கள் வேதநெறியைத் தழுவிப் பிறமதக்கொள்கைகளைக் கண்டிப்பது எதற்காகவெனில், நம் ஸித்தாந்தத்தை நன்கு உணராத ஸாதாரண அதிகாரிகள் பிறமதத்தினரின் வலையில் விழுந்து கெடாமலிருக்க அவர்களிடம் கருணை

கொண்டு, அவர்களுக்குப் பிறமதத்தில் உள்ள தோஷங்களை அறிவிப்பதற்கேயன்றி வேறில்லை. 10

பிறமதங்களில் பொதுப்படத் தோஷம் கூறல்

எண்சீராசிரியவிருத்தம்

164 மிண்டுரைக்க விரகுதருந் தருக்கங் கொண்டே
வேண்டுங்கால் வேண்டுவதே விளம்பு கின்றூர்
கண்டதற்கு விபரீதங் கத்து கின்றூர்
காணுத குறைமறையிற் காட்ட நிற்பார்
பண்டொருத்தன் கண்டுரைத்தே னூனே யென்னப்
பலவகையி லுபாதிகளாற் படிந்து வீழ்வார்
கொண்டலொக்குந் திருமேனி மாயக் கூத்தன்
குரைகழல்சேர் விதிவகையிற் கூடா தாரே. 11

உரை:— மிண்டு உரைக்க – (மேன்மேலும்) விதண்டாவாதம் பேசுவதற்கு, விரகு தரும் – இடம் கொடுக்கின்ற, தருக்கம் கொண்டே– குயுக்திகளைமாத்திரம் கொண்டு, வேண்டுங்கால் – (தமக்கு) வேண்டிய ஸமயத்தில், வேண்டுவதே – இஷ்டமான விஷயத்தை (த் தோன்றிய படி), விளம்புகின்றூர் – கூறுகின்றவ(ரான கணுத-கௌதம-வையாகரண-மீமாம்ஸக)ரும், கண்டதற்கு – (தாம்) நேரில் கண்டதற்கு, விபரீதம் – மாறுபட்ட விஷயங்களை, கத்துகின்றூர் – ஆரவாரமாகப் பேசுகின்றவர்க(ளான பாஸ்கர-யாதவ-அத்வைதிக)ளும், மறையில்– (அபௌருஷேயமான) வேதத்தில், காணுத குறை – காணமுடியாத (பௌருஷேயமென்னும்) குற்றத்தை, காட்டநிற்பார் – எடுத்துக்கூற நிற்பவ(ரான சார்வாக-பௌத்த-ஜைந)ரும், பண்டு ஒருத்தன்-முன்பு (கபிலர், ப்ரஹ்மா, பசுபதி ஆகியவர்களில்) ஒருவன், நானே கண்டு உரைத்தேன் என்ன – நானே (இந்த மதத்தை யோகத்தால்) கண்டுபிடித்து உபதேசித்தேன் என்று கூற, பல வகையில் உபாதிகளால்-பலவகைப்பட்ட (பொருளாசை, ஆஹாரஸௌகர்யம் முதலிய) காரணங்களால், படிந்து – (அந்தஅந்த மதத்தில்) ஈடுபட்டு, வீழ்வார் – அழிந்துபோகின்றவர் (களான ஸாங்க்ய - யோக - சைவர்) களும் (ஆகிய நால்வகையினரும்), கொண்டல் ஒக்கும் திருமேனி-மேகத்தைப் போன்ற திருமேனியையுடைய, மாயக் கூத்தன் – அதிசயச்செய்கையுள்ள எம்பெருமானுடைய, குரை கழல் சேர் – ஒலிக்கின்ற கழல் (பூண்ட திருவடி) களைச் சேருவதற்குரிய, விதி வகையில் கூடாதாரே – பாக்யவிசேஷம் கிடைக்கப்பெறுதவரே (ஆவர்).

கருத்து:— கணுத-கௌதம – வையாகரண – மீமாம்ஸகர்கள் மேன்மேலும் விதண்டாவாதம் பேசுதற்கு இடம் கொடுக்கும் குயுக்திகளைக்கொண்டு தமக்கு வேண்டியபோது வேண்டியவற்றைப் பேசுகின்றனர். பாஸ்கர – யாதவ – அத்வைதிகள், தாம் ப்ரத்யக்ஷமாய்க் காண்

பதையே மாறுபடுத்திப்பேசி ஆரவாரம்செய்வார்கள். சார்வாக-பௌத்த-ஜைநர்கள் ஒருவராலும் இயற்றப்படாது அபௌருஷேய மாய் நிற்கும் வேதத்தைப் பௌருஷேயமென்கின்றனர். ஸாங்க்ய-யோக-சைவ மதத்தினர் தங்கள் மதங்களை முறையே கபிலர்-ப்ரஹ்மா-பசுபதி ஆகியவர் தாமே கண்டுபிடித்ததாய்க் கூறியதை நம்பிப் பொருளாசை ஆஹார ஸௌகர்யம் முதலிய காரணங்களைக்கொண்டு அந்த அந்த மதத்தில் ஈடுபட்டு நிற்கின்றனர். இந்த மதத்தினர் அனைவருக்கும் நீலமேகநிறத்தனான எம்பெருமானுடைய திருவடிகளைச் சேர்ந்து அநுபவித்து மகிழும் பாக்யமில்லை. ஐயோ !!

இப்பாசுரத்தில் சிற்சில ப்ரதாநமான அம்சங்களில் பொதுவான கொள்கைகளையுடைய மதங்களை ஒவ்வொரு வகுப்பாக்கி நான்கு வகையாகப் பிரித்தனர். இவ்வாறு அம்மதங்களில் பொதுப்படையான தோஷங்களைக்கூறியதாலேயே இவ்வதிகாரத்திற்கு ஸமுதாயதோஷாதிகாரம் எனப் பெயர் வந்தது. 11

பாசுரம் 12, 13—சார்வாகமதத்தைக் கண்டித்தல்

கட்டளைக்கலித்துறை

165 கண்டது மெய்யெனிற் காணு மறையி லறிவுகண்டோங்
கண்ட தலாத திலதெனிற் கண்டிலங் குற்றமிதிற்
கண்டது போன்மறை காட்டுவ துங்கண்ட தோத்ததனு
லுண்டது கேட்கு முலோகா யதரேன்று மீறுவதே. 12

[பாசுரம் 12, 13— லோகாயதிகபங்காதிகாரம்]

உரை:— கண்டது - ப்ரத்யக்ஷத்தால் கண்ட வஸ்து, மெய் எனில்- உண்மையானதாகும் என்று கொள்வதாயின், காணும் மறையில் - ப்ரத்யக்ஷத்தால் அறியப்படுகின்ற வேதத்தால், அறிவு கண்டோம் - ப்ரத்யக்ஷமாக ஜ்ஞாநம் (உண்டாவதைக்) காண்கிறோம். கண்டது அலாதது - (மேலும்) ப்ரத்யக்ஷத்தால் அறியப்படாத வஸ்து, இலது எனில் - உண்மையன்று என்று கூறுவதாயின், இதில் - (வேதத்தால் உண்டாகும்) இந்த ஜ்ஞாநத்தில், குற்றம் - ஒரு தோஷத்தையும், கண்டிலம் - காணவில்லை. கண்டதுபோல் - ப்ரத்யக்ஷத்தை (ப்ரமாணமாக ஏற்றுக்கொள்வதை)ப்போல், மறை காட்டுவதும் - வேதத்தால் உண்டாகும் ஜ்ஞாநமும், கண்டது ஒத்ததனுல் - ப்ரத்யக்ஷமென்னும் ப்ரமாணத்தையே ஒத்திருப்பதால், உண்டது கேட்கும் - தாம் உண்டதையே பிறரைக் கேட்டுத் தெரிந்துகொள்ப (வரைப்போன்ற) வர்களான, உலோகாயதர் - சார்வாகமதத்தினர், என்று மீறுவது? - எப்பொழுது (இவற்றை) மீறிப்பேசமுடியும் ?

சார்வாகமதக் கொள்கை— ப்ரத்யக்ஷம் ஒன்றே ப்ரமாணமாகும். ப்ரத்யக்ஷத்தால் அறியப்படும் வஸ்துக்களே உண்மையானவை.

ப்ரத்யக்ஷத்தால் காணப்படாத வஸ்துக்கள் பொய்யானவையே. (ப்ரத்யக்ஷத்திலும் தோஷம் ஒன்றுமில்லாமலிருக்கவேண்டும்.) ஆதலின் வேதத்தில் கூறப்பட்டுள்ள தர்மம், அதர்மம், ஈசுவரன், பரலோகம் முதலிய ஸகலமும் ப்ரத்யக்ஷத்தால் காணப்படாமையால் பொய்யேயாம்—என்பதாம்.

கருத்து:– இவ்வாறு சார்வாகர் ப்ரத்யக்ஷமொன்றையே ப்ரமாண மாகக் கொண்டாலும், வேதத்தில் கூறப்படும் வஸ்துக்களை உண்மை யென்று இசைந்தேயாகவேண்டும். எவ்வாறெனில்—கல்விகற்று வ்யுத் பத்தியுள்ளவர்கள் வேதவாக்யங்களைத் தமது காதினுல் கேட்கும் போதே அவற்றின் அர்த்தம் அவர்களுக்கு ஒருவாறு விளங்குகின்ற தென்பது வெளிப்படையான விஷயம். இப்பொழுது வேதமும் அதனுல் உண்டாகும் அர்த்தஜ்ஞாநமும் ப்ரத்யக்ஷமாகவே ஆகிவிடுகின்றன வல்லவோ? ஆகவே ப்ரத்யக்ஷத்தையே ப்ரமாணமாகக் கொண்ட சார்வாகரும் வேதத்தையும் அதனுல் உண்டாகும் ஜ்ஞாநத்தையும் ப்ரமாணமாகக் கொண்டு அவற்றுக்குப் புலனான தர்மம் அதர்மம் முதலியவற்றை உண்மையென்று இசையவேண்டியதாயிற்றென்பது முதலடியாற் கூறப்பட்டது.

ஆயினும் வேதத்தால் உண்டாகும் ஜ்ஞாநத்தை ப்ரமமாகக் கொண்டு அந்த ஜ்ஞாநத்திற்குப் புலனான வஸ்துக்களைப் பொய்யென்று மறுபடியும் அவர்கள் ஆக்ஷேபிக்கத் துணியலாம். இதற்கும் இடமில்லை. எவ்வாறெனில்— ஒரு ஜ்ஞாநத்தில் ஏதாவது தோஷம் இருந்தாலன்றோ அந்த ஜ்ஞாநத்தை ப்ரமமென்னலாம். இங்கு வேதத் தால் உண்டாகும் ஜ்ஞாநத்தில் ஒரு தோஷமும் ப்ரத்யக்ஷமாகக் காணப்படவில்லை. ஆதலின் தோஷமொன்றுமில்லையென்றே அவர்கள் அவசியம் இசையவேண்டியதாயிற்று. தோஷமாவது:—ஜ்ஞாநத்தை உண்டாக்கும் ஸாதநத்தில் ஏதாவது குற்றம். ஒருவராலும் இயற்றப் படாது அபௌருஷேயமாய் நித்யமாய் ப்ரகாசிக்கும் வேதத்திலோ, அதனுல் உண்டாகும் ஜ்ஞாநத்திலோ எவ்விதத் தோஷமும் காணப் படாததால் ப்ரத்யக்ஷமாகக் காணப்படாத வஸ்துவைப் பொய்யெனக் கொள்ளும் சார்வாகரும் வேதத்தால் அறியப்படுகின்ற வஸ்துவைப் பொய்யெனக் கொள்ளமுடியாதென்பது இரண்டாமடியாற் கூறப் பட்டது.

ஆகவே தோஷம் ஒன்றுமில்லாத ப்ரத்யக்ஷத்தைச் சார்வாகர் ப்ரமாணமாகக் கொண்டாற்போல் தோஷம் ஒன்றுமில்லாத வேதத் தால் உண்டாகும் ஜ்ஞாநமும் ப்ரத்யக்ஷத்தைப்போலாவதுபற்றி அதையும் ப்ரமாணமாகக்கொண்டு நம் இந்த்ரியங்களுக்குப் புலப்படா மல் வேதத்தால் மாத்திரம் விளக்கப்படுகின்ற ஸகலவஸ்துக்களையும் மெய்யாகக்கொள்ளவேண்டியதாயிற்று என்பது மூன்றாமடியாற் கூறப்பட்டது.

உலகில் ஒருவன் தான் உண்ட வஸ்துவின் சுவை எத்தகைய தென்று மற்றொருவனிடம் கேட்டு ஆராயத்துணிவானாகில் அவனை அவிவேகி என்போம். அங்ஙனே ப்ரத்யக்ஷமொன்றே ப்ரமாண மென்று கொள்ளும் தம் மதத்தின்படியே வேதத்தை ப்ரமாணமாகக் கொண்டு அதிற்கூறிய அனைத்தையும் மெய்யாகக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட பிறகும் சார்வாகர் இதைப்பற்றிச் சர்ச்சை செய்யப்புகுவது முற்கூறிய அவிவேகத்தன்மையை ஒத்ததாகும். ஆதலால் அந்தச் சார்வாகர் இவ்வம்சங்களை மீறிப் பேசுவது எப் பொழுது? ஒருபோதுமில்லையென்பது கடைசியடியாற் கூறப்பட்டது. *12*

சார்வாகரின் கொள்கையும் செய்கையும் முரண்படுதல்

எண்சீராசிரியவிருத்தம்

166 கண்டதனாற் காணாத தனுமிக் கின்றார்
கண்டொருத்த னுரைத்ததனைக் கவரு கின்றா
ருண்டுபசி கெடுமென்றே யுணர்ந்துண் கின்றா
ரொன்றாலே யொன்றைத்தாஞ் சாதிக் கின்றார்
பண்டுமுலை யுண்டதனான் முலையுண் கின்றார்
பார்க்கின்றார் பலவல்லாத் தம்மை மற்றுங்
கண்டுமதி கெட்டநிலை காண கில்லார்
காணாத திலதென்று கலங்கு வாரே. 13

உரை:— காணாதது – ப்ரத்யக்ஷத்தால் அறியப்படாத வஸ்து, இலது என்று – (முயற்கொம்புபோல்) சூந்யம் என்று, கலங்குவார் – மனக்கலக்கமுள்ள சார்வாகர், கண்டதனால் – ப்ரத்யக்ஷத்தால் அறிந்த வஸ்துவைக்கொண்டு, காணாதது – (ப்ரத்யக்ஷத்தால்) அறியப்படாத வஸ்து இருப்பதை, அனுமிக்கின்றார் – ஊஹித்தறிகின்றனர். ஒருத்தன் கண்டு – வேறு ஒருவன் (ப்ரத்யக்ஷத்தால்) அறிந்து, உரைத்ததனை – கூறிய விஷயத்தை, கவருகின்றார் – ஏற்றுக்கொள்கின்றனர். உண்டு– உண்டபிறகு, பசி கெடும் என்றே – பசி தொலைந்துபோம் என்றே, உணர்ந்து உண்கின்றார் – அறிந்து உண்கின்றனர். ஒன்றாலே – ஒரு ஸாதநத்தாலே, ஒன்றை – ஒரு வஸ்துவை, தாம் சாதிக்கின்றார் – தாங் கள் ஸாதித்துக்கொள்கின்றனர். பண்டு முலை உண்டு – முன்ஜந்மத்தில் தாய்ப்பாலைப் பருகி, அதனால் முலை உண்கின்றார் – அந்த வாஸனையால் (இந்த ஜந்மத்திலும்) தாய்ப்பாலைப் பருகுகின்றனர். மற்றும் – மேலும், பல அல்லாத் தம்மை – (கை கால் முதலிய) பல அவயவங்களைக் காட்டி லும் வேறுபட்டுநிற்கும் தம் ஜீவாத்ம ஸ்வரூபத்தை, பார்க்கின்றார் – (இது என் சரீரம், இது என் கை என்ற முறையில் ப்ரத்ய க்ஷத்தாலேயே) அறிகின்றனர். கண்டும் – (இப்படித் தம் ஸித்தாந்தத் திற்கு விரோதமான விஷயங்களை) அறிந்தும், மதிகெட்ட நிலை – புத்தி கெட்டுத் தாம் பிதற்றும் நிலையை, காணகில்லார் - (தாங்கள்) அறிந்து கொள்ளவில்லை.

கருத்து:— சார்வாகர், தாம் நேரில் கண்ட புகையைக்கொண்டு காணாத அக்நி இருப்பதாய் அநுமாநம்செய்கின்றனர்; மற்றொருவன் நேரில்கண்டு கூறிய விஷயத்தை நம்பி ஏற்றுக்கொள்கின்றனர். இவற்றால் அவர்கள் முறையே அநுமாநத்தையும் சப்தத்தையும் ப்ரமாணமாக ஏற்றுக்கொண்டதாயிற்று. மேலும் அவர்கள் பசியுள்ளபொழுது உணவுகொண்டால் பசி நீங்கும் என்று அறிந்தே உணவு கொள்கின்றனர். உண்டால் பசி நீங்குமென்பதை உண்பதற்குமுன் அவர்கள் ப்ரத்யக்ஷத்தால் அறிந்ததில்லையன்றோ; மேலும் ப்ரதிவாதிகளிடம் இருவரும் இசைந்த ஒரு காரணத்தைக் கூறி, காணாத வஸ்து இருப்பதாய் ஸாதிக்கின்றனர். இவற்றாலும் அவர்கள் அநுமாநத்தையும் சப்தத்தையும் இசைந்ததாயிற்று. மேலும் நேரில் கண்ட தேஹத்தைத் தவிரக் காணாத ஆத்மாவென்று ஒன்று இல்லையென்று கொண்ட சார்வாகர், குழந்தை பிறந்ததும் தன் தாய்ப்பாலைப் பருகுவதற்கு முற்பிறப்பின் வாஸனையைக் காரணமாகக் கூறுவதன்றி, அதற்கு அவர்கள் வேறு வழிகூற இடமில்லை. இதனால் சரீரத்தைத் தவிர நித்யமான ஆத்மா இருப்பதாய் அவர்களும் இசையவேண்டியதாயிற்று. மேலும், சரீரத்தையே ஆத்மாவாகக் கொண்ட சார்வாகர் 'என் சரீரம், என் கை, என் கால்' என்ற முறையில் ப்ரத்யக்ஷத்தால் பார்க்கும்போது "என்னுடைய" என்ற உணர்ச்சியையுடைய ஆத்மாவைச் சரீரம் முதலியவற்றிற்காட்டிலும் வேறாகவே பார்க்கின்றனரன்றோ? இப்படித் தம் கொள்கைகளுக்கும் செய்கைகளுக்கும் பல முரண்பட்ட அம்சங்களைத் தாங்கள் அறிந்தும் மதிகெட்டுத் தங்கள் கொள்கைகளை விடாதிருக்கின்றனர்—என்றவாறு. *13*

பௌத்தமதத்தினர், மாத்யமிகர்— யோகாசாரர்—ஸௌத்ராந்திகர் — வைபாஷிகர் என நால்வகைப்படுவர். அவர்களின் மதம் கண்டிக்கப்படுகின்றது—

பாசுரம் 13, 14-மாத்யமிகரைக் கண்டித்தல்

கட்டளைக்கலித்துறை

167 காணா திலதேனுங் கல்வியி னாரைக் கடிந்ததற்பின்
கோணார் குதர்க்கங்கள் கொண்டே குழப்பும் பவுத்தர்களி
னாணா தனைத்து மிலதேன்று நால்வகை யன்றிதேன்றும்
வாணா ளறுக்கின்ற மத்திமத் தான்வழி மாற்றுவமே. 14

[*பாசுரம் 14, 15– மாத்யமிகபங்காதிகாரம்*]

உரை:— காணா(த)து – (ப்ரத்யக்ஷத்தால்) காணப்படாத வஸ்து, இலது – கிடையாது, எனும் கல்வியினாரை – என்ற ஸித்தாந்தமுடைய சார்வாகரை, கடிந்ததற்பின் - கண்டித்தபின், கோண் ஆர் – வக்ரத்தன்மை நிறைந்த, குதர்க்கங்கள் கொண்டே – குயுக்திகளை (ஸாதநமாக)க் கொண்டே, குழப்பும் பவுத்தர்களில் – (உலகத்தைக்)

கலக்கும் பௌத்தர்கள் நால்வரில், நாணுது – வெட்கமடையாது, அனைத்தும் இலது என்றும் – ஸகலவஸ்துவும் இல்லையென்றும், இது–இந்த ப்ரபஞ்சம், நால்வகை அன்று என்றும்–நான்குவகையிலும் அடங்காதென்றும் (கொண்டு), வாழ் நாள் அறுக்கின்ற – (கணவன்) வாழும் நாளிலேயே தாலியறுக்கின்ற (ஸ்திரீயைப்போன்ற), மத்திமத்தான் வழி – மாத்யமிகனுடைய ஸித்தாந்தத்தை, மாற்றுவம் – கண்டிப்போம்.

கருத்து:— புத்தருடைய சீடர் நால்வரில் மாத்யமிகன் என்பவன் ''ஸர்வம் சூந்யம்'' என்ற கொள்கையுடையவன். 'ஒரு தத்துவமும் இல்லை' என்று வாய்கூசாது பேசும் இவனே புத்தருக்குப் பிரிய சிஷ்யனும். மெய்யான பொருளை 'ஸத்' என்றும், பொய்யான பொருளை 'அஸத்' என்றும், மெய்யும் பொய்யுமான பொருளை 'ஸதஸத்' என்றும், மெய்யுமன்றிப் பொய்யுமன்றி நிற்குமதை 'ஸதஸத்விலக்ஷணம்' என்றும் வழங்குவதுண்டு. இந்த ப்ரபஞ்சம் இந்த நால்வகையில் எதிலும் அடங்கியதன்று என்கிறான் மாத்யமிகன். இவன் ஸகல லோகநாதனைப் ப்ரகாசிக்கின்ற ஈசுவரனையும் அவனுக்குரிய ப்ரபஞ்ச வஸ்துக்களையும் இல்லையாக்கி, அவனது அருளால் பெறும் பலன்களையும் இழந்தவனாதலின், கணவன் உயிருடன் வாழும் நாளில் மதிகெட்டு அவனை வெறுத்துத் தாலியையறுத்துப்போட்ட பெண்போலாகின்றான். இவன் கொள்கைகளைக் கண்டிக்கின்றோம் இவ்வதிகாரத்தில்—என்றவாறு. *14*

உலகத்தை மாத்யமிகன் கொள்ளையிடாதபடி காத்தல்

எண்சீராசிரியவிருத்தம்

168 மானமிலை மேயமிலை யென்று மற்றோர்
வாதநெறி யிலையென்றும் வாது பூண்ட
தானுமிலை தன்னுரையும் பொருளு மில்லை
தத்துவத்தி னுணர்த்திசய மில்லை யென்றும்
வானவரு மானவரு மனமும் வேள்க
வளம்பேசு மதிகேடன் மத்தி மத்தான்
றேனநெறி கொண்டனைத்துந் திருடா வண்ணஞ்
செழுமதிபோ லெழுமதியாற் சேமித் தோமே. 15

உரை:— வானவரும் – தேவர்களும், மானவரும் – மநுஷ்யர்களும், மனமும் – (தன்) மனமும், வெள்க – கூசும்படி, மானம் இலை – ப்ரமாணம் (ஒன்றும்) இல்லை, மேயம் இலை என்றும் – (ப்ரமாணத்தால்) அறியப்படும் பொருளும் இல்லை என்றும், மற்று ஓர் வாத நெறி – வேறு ஒரு வாதமார்க்கமும், இலை என்றும் – இல்லை என்றும், வாது பூண்ட தானும் இலை – வாதம் புரியும் தானும் இல்லை, தன் உரையும் பொருளும் இல்லை – தன் வாக்யமும் (அதன்) அர்த்தமும் இல்லை, தத்துவத்தின்

உணர்த்தி - தத்துவத்தின் அறிவும், சயம் இல்லை என்றும்-(வாதத்தில்) ஜயமும் இல்லை என்றும் (இப்படி ஸர்வம் சூந்யம் என்று கூறி), வளம் பேசும்-(தன் மதத்தின்) பெருமையைப் பேசுகின்ற, மதிகேடன் - அறிவுகெட்டவனாகிய, மத்திமத்தான் - மாத்யமிகன், தேன நெறி கொண்டு-திருட்டு வழியைக் கைக்கொண்டு, அனைத்தும்-ஸகலதத்துவங்களையும், திருடாவண்ணம் - இல்லையாக்காதபடி, செழுமதிபோல் எழும் - பூர்ணசந்த்ரனைப்போல் வ்ருத்தியடைகின்ற, மதியால் - ஜ்ஞாநத்தால், சேமித்தோம் - (உலகத்தை அவன்கையினின்று) ரக்ஷித்தோம்.

கருத்து:— மாத்யமிகனுடைய கொள்கை, எல்லாம் சூந்யமென்பது. அவன் மதத்தில் ஒரு வஸ்துவை அறியச் சாதநமான ப்ரமாணம் கிடையாது; ப்ரமாணத்தால் அறியப்படும் வஸ்துவும் இல்லை; வாதம் புரியும் முறையும் இல்லை; வாதம் புரியத் தானும் இல்லை; தான் கூறும் வாக்யமும் பொருளும் இல்லை; தத்துவ ஜ்ஞாநம் என்பதும் கிடையாது; வாதத்தில் வெற்றி என்பதுவும் இல்லை. இவ்வாறு மாத்யமிகனுடைய மதக்கொள்கைகள் விசித்திரமாயிருப்பனவாதலின் தேவரும் மநுஷ்யரும் அவற்றைப் பரிஹஸிப்பதுடன் அவனுடைய மனமும் பரிஹஸிக்கின்றதாம். அவன் இப்படி ஸகலத்தையும் சூந்யமாக்கி எம்பெருமானையும் சேதநாசேதநங்களையும் இல்லையாக்கிக் கொள்ளை கொள்ளவிடாமல் அவனுடைய மதக்கொள்கைகளைக் கண்டித்து நம் ஸித்தாந்தத்தைக் காத்தோம் – என்றவாறு. 15

பாசுரம் 16,17–யோகாசாரமதத்தைக் கண்டித்தல்

கட்டளைக்கலித்துறை

169 முற்றுஞ் சகத்தில தென்றே பகட்டிய முட்டரைநாஞ்
சுற்றுந் துறந்து துறையினின் றேதுக ளாக்கியபின்
மற்றொன் றிலது மதிபல வுண்டென்று வஞ்சனையாற்
சற்றுந் துறந்தயோ காசார னைச்சதிக் கின்றனமே. 16

[பாசுரம் 16,17–யோகாசாரபங்காதிகாரம்]

உரை:— சகத்து முற்றும் – உலகம் முழுதும், இலது என்றே - இல்லையென்றே, பகட்டிய முட்டரை – மயக்கிய மூடரான மாத்யமிகரை, நாம் துறையில் நின்றே - நாம் வேதாந்தமார்க்கத்தில் நிலைபெற்று நின்றே, சுற்றும் துறந்து - முழுதும் ஒழித்து, துகளாக்கிய பின் - பொடியாக்கிய பிறகு, பல மதி உண்டு – பலவிதமான ஜ்ஞாநம் உண்டு, மற்று ஒன்று இலது -(ஜ்ஞாநத்தைத் தவிர) வேறு ஒரு வஸ்துவும் இல்லை, என்று - என்று கூறி, வஞ்சனையால் – வஞ்சிக்கக்கருதியதால், சற்றும் துறந்த - அற்பபலனையும் இழந்த, யோகாசாரனைச் சதிக்கின்றனம் - யோகாசாரனைக் கண்டிப்போம்.

கருத்து:— பௌத்தமதத்தினருள் ஒரு வகுப்பினனான மாத்யமிகன், எல்லாம் சூன்யமென்ற தன் கொள்கையை மூடத்தன்மையால் உலகில் ப்ரசாரம்செய்து மக்களை மிகவும் மயக்கிவந்தான். வேதாந்த மார்க்கத்தில் ஊன்றி நின்றபடியே நாம் அவன்மதத்தைக் கண்டித்துப் பொடியாக்கினோம். இவ்வதிகாரத்தில் உலகத்தை வஞ்சிக்கக் கருதிச் சிறிதும் பயன்பெறாது இழந்த யோகாசாரனைக் கண்டிக்கின்றோம்—என்றவாறு.

யோகாசாரனுடைய முக்கியக் கொள்கை:— அறிவு ஒன்றே மெய்யான பொருளாகும். அது பலவகைப்படும். அதைத் தவிர அறிபவனும் அறியப்படும் பொருள்களும் இல்லை—என்பதாம்.

இவன், அறிபவனான தன்னையும் அநுபவிக்கப்படும் வஸ்துக்களையும் இல்லையாக்கியதால் இம்மையிலும் மறுமையிலும் அற்ப பலனையும் பெறாமல் இழந்தானென்பதுபற்றிச் 'சற்றுந் துறந்த' என்னப்பட்டது. 16

யோகாசாரன் இல்லையாக்கிய உலகை ஸ்தாபித்தல்

எண்சீராசிரியவிருத்தம்

170 உளக்கதியை நாமுள்ளி யுள்ளந் தேறி
யுலகத்தா ருகந்திசைய வுலகுண் டென்றோ
மிளக்கவரி தாகியநற் றருக்கஞ் சேர்ந்த
வெழின்மறையி லீசனுட னெம்மைக் கண்டோம்
விளக்குநிரை போன்மதிகள் வேறாய் வேறொன்
றறியாதே விளங்குமென விளம்பு கின்ற
களக்கருத்தன் கண்ணிரண்டு மழித்தோ நாணுக்
காகம்போற் றிரிந்தவனேன் கதறு மாறே. 17

உரை:— நாம் உளக் கதியை - நாம் (ப்ரமாணங்களை அநுஸரித்து நம்)மனம் செல்லுகின்ற முறையை, உள்ளி - ஆராய்ந்து, உள்ளம் தேறி - மனம் தெளிந்து, உலகத்தார் - உலகிலுள்ளோர், உகந்து இசைய - மகிழ்ந்து ஏற்றுக்கொள்ளும்படி, உலகு உண்டு என்றோம் - உலகத்தை உண்மையென்று விளக்கினோம், இளக்க அரிதாகிய - அசைப்பதற்கு முடியாத, நல் தருக்கம் சேர்ந்த - சிறந்த யுக்திகளுடன் கூடிய, எழில் மறையில் - பெருமையுள்ள வேதத்தில், ஈசனுடன் எம்மைக் கண்டோம் - ஈசுவரனையும் (ஜீவர்களாகிய) எங்களையும் வகுத்தறிந்தோம். மதிகள் - ஜ்ஞானங்கள், விளக்கு நிரைபோல் - தீபத்தின் (ஜ்வாலைகளின்) வரிசைபோல், வேறு ஆய் - வெவ்வேறாக இருந்து, வேறு ஒன்று அறியாதே - (தம்மைத் தவிர) வேறு ஒரு வஸ்துவையும் அறியாது, விளங்கும் என-ப்ரகாசிக்கும் என்று, விளம்புகின்ற- கூறுகின்ற, களக் கருத்தன் - கள்ளக் கருத்தையுடைய யோகாசார

னுடைய, கண் இரண்டும் - இரண்டு கண் (போல் முக்கியமான ''அறிபவன் பொய்'', ''அறியப்படும் வஸ்துவும் பொய்'' என்ற அம்சங்)களையும், அழித்தோம் - (ஒருவரும் இசையாமல்) ஒழித்தோம், அவன் - அந்த யோகாசாரன், நாணுக் காகம்போல் திரிந்து-வெட்கமற்ற காகனைப்போல் அலைந்து, கதறுமாறு என் - கதறும்விதம் எத்தகையது!

கருத்து:— யோகாசாரனுடைய கொள்கை—ஒவ்வொரு க்ஷணத்திலும் ஜ்ஞாநம் புதிதுபுதிதாய் உண்டாகி அடுத்த க்ஷணத்திலேயே நசித்து விடுகின்றது. இந்த ஜ்ஞாநம் தன்னைத்தவிர வேறு ஒரு வஸ்துவையும் தனக்கு இலக்காகக் கொள்ளாது. ஆதலின் வெளிப்படையான பொருள்களே கிடையா. க்ஷணந்தோறும் உண்டாகிக்கொண்டிருக்கும் ஜ்ஞாநங்களின் ஸந்ததியே ஆத்மாவெனப்படுகின்றது. ஆனால்—இப்படியாயின் ஆத்மா அநித்யமென்று ஏற்படுகின்றதே, ''அதே ஆத்மா'' என்று உண்டாகும் ஜ்ஞாநத்தாலோ ஆத்மா ஸ்திரமென்று தெரிகின்றதே, ஆதலால் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றதேயென்னில், தீபத்தின் ஜ்வாலை க்ஷணந்தோறும் வெவ்வேறாயினும் ஜ்வாலை ஒரேவிதமாயிருப்பதுபற்றி, 'அதே தீபஜ்வாலை' யென்று அறிவுண்டாவதுபோல் ஜ்ஞாநமும் ஒரேவிதமாய் உண்டாவதால் ''அதே ஆத்மா'' என்ற அறிவு உண்டாகின்றது. உண்மையில் ஆத்மா அநித்யமே—என்பதாம்.

ஸித்தாந்தியான நாம், அவன் இல்லையாக்கிய சேதந - அசேதந - ஈசுவரதத்துவங்களை ப்ரமாணம், அதைத் தழுவிய யுக்தி முதலியவற்றைக் கொண்டு எல்லோரும் மகிழ்ந்து ஏற்குமாறு ஸ்தாபித்தோம். மேலும், அவன், தன் மதத்தில் இருகண்களைப்போல் முக்கியமாய்க் கொண்டிருந்த ''அறிபவன் பொய்'' ''அறியப்படும் வஸ்துவும் பொய்'' என்ற இரண்டு கொள்கைகளையும் கண்டித்து அவன் மதத்தைப் பாழாக்கினேம். பிராட்டியிடம் அபராதியான காகன் காப்பாரின்றி வெட்கமற்று உலகில் திரிந்து ஒற்றைக் கண்ணை மட்டும் இழந்து அல்லலுற்றான். அதுபோல் இந்த யோகாசாரன் இரண்டு கொள்கைகளாகிய இரு கண்களையுமிழந்து கதறித் திரியுமாறு செய்தோம்—என்றவாறு. *17*

பாசுரம் 18, 19 - ஸௌத்ராந்திகமதத்தைக் கண்டித்தல்

171 கட்டளைக்கலித்துறை

பொருளொன் றிலதென்று போதமொன் றுங்கொண்ட பொய்யரைநாங்
தெருள்கொண்டு தீர்த்தபின் காணவொண் ணுப்பொரு டேடுகின்ற
மருள்கொண்ட சூதுரைக் குஞ்சௌத் திராந்திகன் வண்ணிக்கைநா
மிருள்கொண்ட பாழ்ங்கிண றென்றிகழ்ந் தோட வியம்புவமே. 18

[பாசுரம், 18, 19 - ஸௌத்ராந்திகபங்காதிகாரம்]

உரை :— பொருள் ஒன்று – (வெளிப்படையான) வஸ்து ஒன்றும், இலது என்று–இல்லையென்று (நிச்சயித்து), போதம் ஒன்றும் கொண்ட– ஜ்ஞானம் என்ற ஒரே வஸ்துவைக்கொண்ட, பொய்யரை – பொய்யே பேசும் யோகாசாரர்களை, நாம் தெருள் கொண்டு – நாம் (சிறந்த) ஜ்ஞானத்தைக்கொண்டு, தீர்த்த பின் – கண்டித்தபின், காணவொண்ணுப் பொருள் – ப்ரத்யக்ஷத்தால் அறியமுடியாத வஸ்துவை (உண்டு என்று அங்கீகரித்து), தேடுகின்ற – அநுமானத்தாலே ஸாதிக்க முற்படுகின்ற (வனும்), மருள் கொண்ட – அஜ்ஞானத்தால் கைக்கொண்ட, சூது உரைக்கும் – கபடயுக்திகளைப் பேசுகின்ற (வனுமான), சௌத்திராந்திகன் – ஸௌத்ராந்திகனுடைய, வண்ணிக்கை – மதவர்ணநப்ரகாரத்தை, இருள் கொண்ட – இருள் நிறைந்த, பாழ்ங்கிணறு என்று – பாழுங்கிணறு என்று, (ஜநங்கள் நினைத்து), இகழ்ந்து ஓட – வெறுத்து விலகும்படி, நாம் இயம்புவம் – நாம் (கண்டித்துப்) பேசுவோம்.

கருத்து:— யோகாசாரன் வெளிப்படையான வஸ்துவேயில்லையென்றும் ஜ்ஞானம் ஒன்றே உண்டென்றும் கொள்கையுடையன். நாம் பெற்ற சிறந்த ஜ்ஞானத்தால் முன்னதிகாரத்தில் அவனைக் கண்டித்துத் தீர்த்தோம். ஸௌத்ராந்திகன் என்னும் பௌத்தன் வெளிப்படையான வஸ்துவை ஏற்றுக்கொள்கின்றான். ஆனால் தன் அறியாமையால் கபடயுக்திகளைப்பேசி அவ்வஸ்துவை அநுமானத்தால் ஸாதிக்க முற்படுகிறான். அவனுடைய மதக்கொள்கை அஜ்ஞானத்தை மூலமாகக்கொண்ட கபடயுக்திகளே நிறைந்திருப்பதால் இருளடைந்த பாழ்ங்கிணறு போன்றதாகும். விவேகிகள் இந்த மதத்தை வெறுத்து விலகுமாறு இவ்வதிகாரத்தில் ஸௌத்ராந்திகனைக் கண்டிப்போம். 18

ஸௌத்ராந்திகனின் முரண்பாடு

எண்சீராசிரியவிருத்தம்

172 நிலையில்லாப் பொருண்மதியை விளைத்துத் தான்சேர்
நிறங்கொடுத்துத் தானழியுந் தன்னால் வந்த
நிலையில்லா மதிதன்னி னிறத்தைக் காணு
மிதுகாணும் பொருள்காண்கை யென்ற நீசன்
முலையில்லாத் தாய்கொடுத்த முலைப்பா லுண்ணு
முகமில்லா மொழியெனவே மொழிந்த வார்த்தை
தலையில்லாத் தாளுருங் கணக்காய் நின்ற
கட்டளைநாங் கண்டின்று காட்டி னேமே. 19

உரை:— நிலையில்லாப் பொருள் – நிலையற்ற (க்ஷணிகமான) வஸ்துவானது, மதியை விளைத்து–ஜ்ஞானத்தை உண்டாக்கி, தான்சேர்– தான் அடைந்த, நிறம் கொடுத்து –(நீலம், மஞ்சள் முதலிய) நிறங்களை

(அந்த ஜ்ஞாநத்தில்) கொடுத்து, தான் அழியும் – (வஸ்துவாகிய) தான் அழிந்துபோம், தன்னால் வந்த – (வஸ்துவாகிய) தன்னால் உண்டான, நிலையில்லா மதி – அநித்யமான ஜ்ஞாநமானது, தன்னில் நிறத்தைக் காணும் – தன்னிடத்தில் (நீலம், மஞ்சள் முதலிய) நிறங்களை ஸாக்ஷாத்கரிக்கும். இது காணும் – இ(ப்படி ஜ்ஞாநம் தன்னிடத்து நிறங்களைக் காண்ப)துவே, பொருள்காண்கை - வஸ்துஸாக்ஷாத்கார மாகும், என்ற – என்று ஸித்தாந்தம் கொண்டவனும், முலையில்லாத் தாய் கொடுத்த–ஸ்தநமில்லாத தாயினால் கொடுக்கப்பட்ட, முலைப்பால் உண்ணும் – ஸ்தந்யத்தைப் பருகுமவ(ன் போன்றவ)னுமான, நீசன்– அற்பனான ஸௌத்ராந்திகனாலே, முகமில்லா – வாய் இல்லாமற் பேசுகிற, மொழி எனவே – வார்த்தை என்று கூறும்படி, மொழிந்த வார்த்தை–கூறப்பட்ட (தன்ஸித்தாந்த) வாக்கியமானது, தலையில்லா– தலையில்லாத, தாள் ஊரும் – பாதங்கள் நடக்கின்ற, கணக்காய் நின்ற கட்டளை– ரீதியிலே நிற்கின்ற ப்ரகாரத்தை, நாம் கண்டு – நாம் அறிந்து, இன்று காட்டினோம் – இன்று வெளியிட்டோம்.

கருத்து:— ஸௌத்ராந்திகன் யோகாசாரனைப்போல் வெளிப் படைப்பொருள்கள் (பாஹ்யவஸ்துக்கள்) இல்லையென்று கொள்வ தில்லை; அவற்றை ஏற்றுக்கொள்கின்றான். அவன்கொள்கை— வெளிப் பொருள்கள் ஜ்ஞாநத்தையுண்டாக்கித் தம்முடைய வெண்மை மஞ்சள் முதலிய நிறங்களை அந்த ஜ்ஞாநத்தினிடம் கொடுத்துத் தாம் அழிந்து விடுகின்றன. ஆதலின் அழிவதே தன்மையாயுள்ள அந்தப் பொருள்களை இந்த்ரியங்களால் அறியமுடியாது. ஆனால் அப்பொருள்கள் அழிந்து போய்விடினும், ஜ்ஞாநத்தில் கொடுத்த நீலம் வெண்மை முதலிய நிறங்களைக்கொண்டு அநுமாநம் செய்து அப்பொருள்களை அறியலாம். மேலும் அந்தப் பொருள்களால் உண்டாக்கப்பட்ட ஜ்ஞாநமும் ஒரே க்ஷணம் இருந்து நசிக்கின்றது. இந்த ஜ்ஞாநமே ஆத்மாவெனப்படும். இந்த ஜ்ஞாநம் வெளிப்பொருள்களால் தன்னிடம் கொடுக்கப்பட்ட நீலம் மஞ்சள் முதலிய நிறங்களை அநுபவிக்கும். இவ்வநுபவமே வஸ்துஸாக்ஷாத்காரம் எனப்படும்—என்பதாம்.

இக்கொள்கையில்—வஸ்து, தான் பிறந்த பிறகே ஜ்ஞாநத்தை உண்டாக்கவேண்டுமாதலின், க்ஷணகாலமே இருந்து அழிந்துவிடுவ தாய்க்கொண்டுள்ள அந்த வஸ்து, ஜ்ஞாநம் பிறக்கும் க்ஷணத்திலேயே நசித்துவிடுமென இசைந்தேயாகவேண்டும். ஜ்ஞாநம் பிறந்து அடுத்த க்ஷணத்தில்தான் அதனிடம் வஸ்து, நீலம் மஞ்சள் முதலிய நிறங்களைக் கொடுக்கமுடியும். ஆகவே தான் பிறந்து, இரண்டாவது க்ஷணத்தில் அழியுந்தன்மை வாய்ந்த வெளிப்பொருள், மூன்றாவது க்ஷணத்தில் ஜ்ஞாநத்தினிடம் நீலம் முதலிய நிறத்தைக் கொடுப்பதாய் இசைய வேண்டும். அது முற்றிலும் அஸம்பாவிதமாகும். மேலும் அங்ஙனமே ஜ்ஞாநமும் க்ஷணகாலமே இருந்து அழிந்துவிடுவதால், தான் பிறந்த

இரண்டாவது க்ஷணத்தில் வெளிப்பொருளினிடமிருந்து நீலம் முதலிய நிறத்தைப் பெறுவதும், அதற்கு அடுத்த க்ஷணத்தில் தன்னிடம் கொடுக்கப்பட்ட நிறத்தைப் பார்த்தலாகிய வஸ்துஸாக்ஷாத்காரமும் அஸம்பாவிதமேயாம். இத்தகைய ஸௌத்ராந்திகன்கொள்கை ஸ்தநமில்லாத தாயினிடத்து ஸ்தந்யபாநம் செய்வதுபோலும், முகமில்லாமல் வார்த்தைபேசுவதுபோலும், தலையில்லாது பாதம் ஊர்வதுபோலும் உள்ளது என்று கூறி இவ்வதிகாரத்தில் ஸௌத்ராந்திகனைக் கண்டித்தோம்—என்றவாறு. 19

பாசுரம் 20, 21— வைபாஷிகமதத்தைக் கண்டித்தல்

கட்டளைக்கலித்துறை

173 **காண்கின் றவனிலை காட்சியுங் கண்டது முண்டவைதா**
மேண்கோண் டனவன் றிவற்றிற் குணமு நிலையுமிலை
சேண்கோண்ட சந்ததி யாற்சேர்ந்து மோன்றேன நிற்குமேன்ற
கோண்கோண்ட கோளுரை வைபா டிகன்குறை கூறுவமே.20

[*பாசுரம் 20, 21— வைபாஷிகபங்காதிகாரம்*]

உரை:— காண்கின்றவன் – வஸ்துக்களை அறிபவனாகிய ஜீவன் என்பவன், இலை – இல்லை; காட்சியும் – அறிதல் எனும் செய்கையும், கண்டதும் – அறியப்படுகின்ற வஸ்துவும், உண்டு – உண்மையாய் உள்ளவை; அவைதாம் – அந்த அறிகையும் அறியப்படும் வஸ்துவும், ஏண் கொண்டன அன்று – எண்ணிக்கைக்கு அடங்கியனவல்ல; இவற்றில் – இந்த அறிகையிலும் அறியப்படுமவற்றிலும், குணமும் நிலையும் இலை – ஒரு குணமும் நிலைத்துநிற்கும்தன்மையும் இல்லை; சேண்கொண்ட – நெடுங்காலவாழ்வைக்கொண்ட, சந்ததியால் – வரிசையினால், சேர்ந்தும் – (பரமாணுக்கள் ஒன்று) கூடியும், ஒன்று என–ஒன்று என்று கூறும்படி, நிற்கும் என்ற – நிற்கும் என்று கூறிய, கோண் கொண்ட - வக்ரத்தன்மைகொண்ட, கோளுரை–குறளைமொழி பேசுகின்ற, வைபாடிகன் – வைபாஷிகனிடமுள்ள, குறை கூறுவம் - தோஷங்களை விளக்குவோம்.

கருத்து:— வைபாஷிகன்கொள்கை— பொருளை அறிபவனான ஜ்ஞாதா பொய்யாவான்; ஜ்ஞாநமும் அந்த ஜ்ஞாநத்தால் அறியப்படும் வஸ்துவுமே உண்மைப்பொருள்களாம். அந்த ஜ்ஞாநமும் அறியப்படும் வஸ்துவும் எண்ணுக்கடங்காமலிருப்பவை. அவையிரண்டுக்கும் குணமே கிடையாது; நிலைத்துநிற்காமல் க்ஷணகாலமே இருந்து அழியும். வஸ்துக்கள் பரமாணுரூபமாகவே இருக்கும். இப்படியாயின், எண்ணற்ற பரமாணுக்களே குடத்தின் உருக்கொண்டனவென்று தேர்வதால் 'அதே குடம் இது' என்றாகவும் நிலைத்துநிற்ப தாகவும் தோற்றுவது எவ்வாறு பொருந்துமென்னில், பரமாணுக்கள்

எண்ணற்றவையாயினும் அவற்றின் குவியல் ஒன்றேயாதலின் 'குடம் ஒன்று' என்ற எண்ணமும், க்ஷணமே இருந்து அழிபவையாயினும் தீபத்தின் சுடர்கள் ஒரேவிதமாயிருத்தலால் 'அதே சுடர்' என்று அறிவு உண்டாவதுபோல் பரமாணுக்கள் ஒரேவிதமாயிருப்பதுபற்றி 'அதே குடம்' என்ற எண்ணமும் உண்டாகின்றன—என்பதாம். இவ்வாறு வக்ரமாய்ப் பேசுகின்ற வைபாஷிகனது மதத்திலுள்ள குறைகளை இவ்வதிகாரத்தில் விளக்குவோம்—என்றவாறு. 20

வைபாஷிகமதம்—கொள்கை-செய்கை முரண்பாடு

எண்சீராசிரியவிருத்தம்

174 கும்பிடுவா ராரேன்று தேடு கின்றார்
குணங்களையுந் தங்களுக்குக் கூறு கின்றார்
தம்படியைத் தமர்க்குரைத்துப் படிவிக் கின்றார்
தமக்கினிமேல் வீடேன்று சாதிக் கின்றார்
தம்புடவை யுணல்குறித்து நேடிதேண் கின்றார்
சந்ததிக்குத் தவம்பலிக்கத் தாம்போ கின்றார்
செம்படவர் செய்கின்ற சிற்றி னிப்பைச்
சேவகப்பற் றுடனேநாஞ் செகுத்திட் டோமே. 21

உரை:— கும்பிடுவார் – (தம்மை) வணங்குகின்ற சீடர்கள், ஆர் என்று – யாவர் என்று, தேடுகின்றார்-தேடிக்கொண்டேயிருப்பவர்களும், தங்களுக்குக் குணங்களையும் – தங்களுக்கு (அஹிம்ஸை, வைராக்யம் முதலிய) குணங்களிருப்பனவாகவும், கூறுகின்றார் – கூறிக்கொள்பவர்களும், தம் படியை–தம்முடையமதக் கொள்கையை, தமர்க்கு உரைத்து – தம் சிஷ்யர்களுக்கு உபதேசித்து, படிவிக்கின்றார் – (அவர்களையும் அதில்) ஈடுபடச்செய்பவர்களும், இனிமேல் தமக்கு – இனிமேல் தங்களுக்கு, வீடு என்று – மோக்ஷ(ம் கிடைப்பது நிச்சய)மென்று, சாதிக்கின்றார் – உறுதிகூறுபவர்களும், தம் புடவை – தங்களுக்கு (வேண்டிய) ஆடையையும், உணல் குறித்து – ஆஹாரத்தையும் குறித்து, நெடிது எண்கின்றார் – அதிகமாகக் கவலையடைபவர்களும், சந்ததிக்குப் பலிக்க – (தம்) ஸந்ததியாருக்குப் பலன் கிடைப்பதற்காக, தாம் தவம் போகின்றார் – தாங்கள் தவம் புரிபவர்களும், செம்படவர் செய்கின்ற – செம்படவரையொத்தவர்களுமான வைபாஷிகர்கள் கைக்கொண்ட, சிற்றினிப்பை – (கேட்கும்போது மாத்ரம் இனியனவாகத் தோற்றுகின்ற) அற்பரஸமான வாதங்களை, சேவகப்பற்றுடனே – (அவர்களது) வீரச்செருக்குடன், நாம் செகுத்திட்டோம் – நாம் ஒழித்திட்டோம்.

கருத்து:— வைபாஷிகர் ஜ்ஞாநத்தையும் வஸ்துவையும் ஏற்றுக்கொண்டபோதிலும் அவற்றில் குணங்களை இல்லையாக்கி, அவற்றை க்ஷணகாலமே இருப்பனவாகக் கொண்ட கொள்கை, அவர்களின்

செய்கைக்கு முரண்பட்டுநிற்கின்றது. வைபாஷிகர் தங்களுக்குப் பேரும் புகழும் செல்வமும் செழிப்பதற்காகச் சீடர்களைச் சேர்க்க முயல்வதும், அஹிம்ஸை வைராக்யம் முதலிய குணங்கள் தம்மிடம் இருப்பனவாகக் கூறுவதும், தங்கள்மதக்கொள்கைகளைத் தம் சீடர்க்கு உபதேசிப்பதும், சரீரம் நசித்ததும் தங்களுக்கு மோக்ஷ முண்டென்று ஸாதிப்பதும், ஆஹாரம் ஆடை முதலிய சரீரகார்யங் களில் பெருங்கவலை கொள்வதும், தங்கள் ஸந்ததியாருக்குப் பெரும்பயன் கிடைப்பதற்காகத் தாம் தவம்புரிவதுமாகிய செயல்க ளெல்லாம் "எல்லாம் க்ஷணிகம், குணமற்றவை" என்ற கொள்கையோடு முரண்பட்டனவாகுமென இவ்வதிகாரத்தில் விளக்கி, வைபாஷிகர்களின் அற்பரஸமான வாதங்களை அவர்களின் வீரச் செருக்கோடு ஒழித்துவிட்டோம்—என்றவாறு.

வலைபோட்டு மீன்களைப் பிடிக்கும் செம்படவர்போல் வைபாஷிகர் தம் குயுக்திகளை வீசி ஜனங்களைக் கவர்ந்து தம் மதத்தில் சேர்க்க முயலுவதால் செம்படவர் எனப்பட்டனர். பௌத்தர்கள் காஷாயமணிபவரென்ற வழக்கு உண்டாதலின் செம்படவர் (சிவந்த ஆடையை அணிபவர்) என்று கூறியதாகவும் கொள்வதுண்டு. *21*

பாசுரம் 22, 23–அத்வைதமதத்தைக் கண்டித்தல்

கட்டளைக்கலித்துறை

175 வேதங்கண் மௌலி விளங்க வியாசன் விரித்தநன்னூற்
பாதங்க ளான பதினாறி லீசன் படிமறைத்துப்
பேதங்க ளில்லையென் றோர்பிர மப்பிச் சியம்புகின்ற
போதங் கழிந்தவ னைப்புத்தர் மாட்டுடன் பூட்டுவமே.22

[பாசுரம் 22, 23–ப்ரச்சந்நபௌத்தபங்காதிகாரம்]

உரை:— **வேதங்கள் மௌலி** – வேதங்களின் முடியாகிய வேதாந்தசாஸ்த்ரம், **விளங்க** – ப்ரகாசிக்கும்படி, **வியாசன் விரித்த** – வ்யாஸமுனிவரால் விளக்கியருளப்பட்ட, **நல்நூல்**–சிறந்த ப்ரஹ்மஸூத்ரங்களின், **பாதங்களான பதினாறில்** – (நான்கு அத்யாயத்திலுள்ள) பதினாறுபாதங்களில் (நிச்சயிக்கப்பட்ட), **ஈசன் படி மறைத்து** – எம்பெருமானுடைய (குணம் திருமேனி முதலிய)ப்ரகாரங்களை இல்லையாக்கி, **பேதங்கள் இல்லை என்று** – (உலகில்) பேதங்களே இல்லை என்று (கொண்டு), **ஓர் பிரமப் பிச்சு** – நிகரற்ற ப்ரஹ்மத்திற்கு ப்ரமத்தை (அஜ்ஞானத்தை), **இயம்புகின்ற** – கற்பித்துக் கூறுகின்ற, **போதம் கழிந்தவனை**–தத்துவஜ்ஞானம் நீங்கியவனை, **புத்தர் மாட்டுடன்** – புத்தமதத்தினராகிய மாட்டுடன், **பூட்டுவம்** – ஒன்றுசேர்த்திடுவோம்.

*கருத்து:-*உபநிஷத்துக்கள் நேரிய வழியிலேயே அர்த்தம் கொள்ளப் படவேண்டுமென்பதற்காக ஸ்ரீவேதவ்யாஸபகவான் வேதார்த்தங்களை

அடக்கிப் பதினாறு பாதங்கள் கொண்ட நான்கு அத்யாயங்களாக ப்ரஹ்மஸூத்ரத்தை வெளியிட்டார். இந்த வேதாந்தசாஸ்த்ரங்களால் பறையறையப்படுகின்ற எம்பெருமானுடைய திருக்கல்யாணகுணங்கள் ஸ்வரூபம் முதலியவற்றை அத்வைதிகள் ஏற்காது குணமின்றி ஜ்ஞாந ஸ்வரூபமாத்ரமே ப்ரஹ்மமென்றும், அதுவே ஸத்யமென்றும், பொய்யான மற்ற வஸ்துக்கள் மெய்யானவை என்று அந்த ப்ரஹ்மத்திற்குத் தோற்றும்படி அதற்கு ஓர் அஜ்ஞாநம் இருக்கிறதென்றும் கொள்கின்றனர், இவ்வாறு கொண்ட அத்வைதிகளைப் பௌத்த மதத்தினருடன் சேர்த்து இவ்வதிகாரத்தில் கண்டித்திடுவோம்—என்றவாறு. (அடுத்த பாசுரவுரைக்குறிப்பில் விளக்கம் காண்க.) 22

ப்ரஹ்மத்திற்கு அவித்யையின் ஸம்பந்தம் – கண்டநம்

எண்சீராசிரியவிருத்தம்

176 பிரிவில்லா விருளொன்று பிணக்கொன் றில்லாப்
பெருவெயிலை மறைத்துலகங் காட்டு மென்ன
வறிவில்லா வறிவொன்றை யவித்தை மூடி
யகம்புறமென் றிவையனைத்து மமைக்கு மென்பார்
செறிவில்லாப் புத்தருடன் சேர்ந்து கெட்டார்
சீவனையு மீசனையுஞ் சிதைக்கப் பார்த்தார்
நெறியில்லா நேர்வழியுந் தானே யானா
னெடுமாலை நாமடைந்து நிலைபெற் றோமே. 23

உரை :—பிரிவு இல்லா – வேறுபடுதல் இல்லாத, இருள் ஒன்று – ஓர் இருளானது, பிணக்கு ஒன்று இல்லா – விரோதம் ஒன்றும் இல்லாத (மறைக்கமுடியாத), பெருவெயிலை – பெரிய வெளிச்சத்தை, மறைத்து – மறைத்துவிட்டு, உலகம் காட்டும் என்ன – உலகத்தை ப்ரகாசிப்பிக்கும் என்று கூறுவதுபோல், அவித்தை – அவித்யையானது, அறிவு இல்லா – ஜ்ஞாநமென்ற குணமில்லாத, அறிவு ஒன்றை – ஜ்ஞாநஸ்வரூபமான ஒரு ப்ரஹ்மத்தை, மூடி – மறைத்து, அகம் புறம் என்று – (ஆத்மா முதலிய) உள்ளேயுள்ள வஸ்துக்கள் (ஐந்து பூதங்களும் அவற்றாலாகியனவுமாகிய) வெளிப்படையான வஸ்துக்கள் என்று சொல்லப்படுகின்ற, இவை அனைத்தும் – இந்த உலக வஸ்துக்கள் முழுவதையும், அமைக்கும் என்பார் – ஸ்ருஷ்டிக்கும் என்று கூறும் அத்வைதிகள், செறிவு இல்லா – (வைதிகருடன்) சேரத்தகாத, புத்தருடன் – பௌத்த மதத்தோருடன், சேர்ந்து – (மதவிஷயங்கள் சிலவற்றில்) ஒத்திருந்து, கெட்டார் – கெட்டவர்களாகி, சீவனையும் ஈசனையும் – ஜீவாத்மாவையும் ஈசுவரனையும், சிதைக்கப் பார்த்தார் – (அவர்களின் பேதத்தை இசையாது) கெடுக்க முற்பட்டார்கள் ; நாம் - (அம்மதத்தில் சேராத) நாம், நெறியில்லா - (தன்னையடைதற்கு வேறோர்) உபாயமில்லாத, நேர் வழியும் – நேரிய உபாயமாகவும், தானே ஆனான் – தானே ஆகி நிற்பவ

னை, நெடுமாலை – எம்பெருமானை, அடைந்து – சரணமாக அடைந்து, நிலைபெற்றோம் – நம் ஸ்வரூபம் உஜ்ஜீவிக்கப் பெற்றோம்.

கருத்து:- அத்வைதிகளின் முக்கியக் கொள்கை-ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யம். அதனிடத்தில் ஜ்ஞாநம் முதலிய குணங்கள் கிடையா. ஆனால் அது ஜ்ஞாந ஸ்வரூபமாகவே நிற்கின்றது. அந்த ப்ரஹ்மம் ஒன்றுதான். அதைத்தவிர வேறு ஸத்யமான வஸ்துவே கிடையாது. ப்ரஹ்ம ஸ்வரூபத்திற்கு அநாதிகாலமாக மாயை என்ற ஒரு வஸ்துவின் ஸம்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்த மாயைக்குத் தனக்கு ஆதாரமான ப்ரஹ்மத்தை மறைப்பதே இயற்கை. இவ்வாறு மாயையால் மறைக்கப் பட்டதால் ப்ரஹ்மஸ்வரூபம் உள்ளவாறு ப்ரகாசிப்பதில்லை. மாயை யென்பது – ஸத்துவம் ரஜஸ் தமஸ் என்னும் முக்குணமயமாயும், மெய் யென்றும் பொய்யென்றும் கூறமுடியாததாயும், தன் ஆதாரத்தை மறைக்குந்தன்மையுடையதாயும், மேன்மேலும் மாறுபாட்டை அடைவதாயுமுள்ள ஒரு வஸ்து. இது ப்ரஹ்மஸ்வரூபத்தை மறைத்து ப்ருதிவீ, ஜலம் முதலிய மாறுபாடுகளையும், ஜ்ஞாநம், இச்சை, த்வேஷம் முதலிய மாறுபாடுகளையும் உண்டாக்குகிறது—என்பதாம்.

இப்படி இவர்கள் அவித்யையானது ப்ரஹ்மத்தை மறைத்துப் பொருள்களை எல்லாம் படைக்கின்றது என்று கூறுவது, ஓர் இருள் பெரிய ப்ரகாசத்தை மறைத்து உலகிலுள்ள பொருள்களை அவ்விருள் தானே ஜநங்களுக்குக் காட்டுகின்றதாகக் கூறுவதையொத்ததாகுமென இந்தப் பாசுரத்தின் முற்பாதியில் கூறப்பட்டது.

அத்வைதமதக் கொள்கை—ஜ்ஞாநம் ஒன்றே மெய்யாகும். இதுவே ப்ரஹ்மமெனப்படும். மற்ற அனைத்தும் பொய்யேயாம். அந்த ஜ்ஞாநம் அழிவின்றி நித்யமாகவே உள்ளது. அது ஒன்றே. அந்த ஜ்ஞாநத்தில் ஒரு தர்மமும் (தன்மையும்) கிடையாது. தாம் சொல்லும் நித்யத்வமும் ஏகத்வமும் (ஒன்றாயிருக்குந் தன்மையும்) கற்பனையேயாம். உண்மையில் அந்தத் தர்மங்கள் அந்த ஜ்ஞாநத்தில் இல்லை. தாம் ப்ரமாணமாகக் கொண்டுள்ள வேதமும், அது ப்ரமாணமாகுந் தன்மை யும், அதை அறிபவனும், ஜ்ஞாநத்தின் பலனுமாகிய அனைத்தும் பொய்யேயாம்—என்பதாம்.

பௌத்தர்களில் ஒருவனான யோகாசாரனுடைய கொள்கை— ஜ்ஞாநம் ஒன்றே மெய்யாகும். மற்ற அனைத்தும் பொய்யேயாம். அந்த ஜ்ஞாநமும் ஸ்திரமன்று. க்ஷணந்தோறும் அழிந்து புதிது புதிதாய்ப் பல ஜ்ஞாநங்கள் உண்டாகின்றன. ஜ்ஞாநத்தில் ஒரு தர்மமும் (தன்மையும்) கிடையாது. தான் சொல்லும் அநித்யத்வமும் பஹுத்வமும் (பலவாயிருக்கும் தன்மை) கற்பனையேயாகுமன்றி, உண்மையில் அந்தத் தர்மங்கள் (தன்மைகள்) ஜ்ஞாநத்தில் இல்லை. தான் ப்ரமாணமாகக் கொண்டிருக்கும் பௌத்தாகமமும், அது

ப்ரமாணமாகுந்தன்மையும், அதை அறிபவனும், ஜ்ஞாநத்தின் பலனுமாகிய அனைத்தும் பொய்யேயாம் —என்பதாம்.

இந்த இரண்டு மதங்களும், ஜ்ஞாநம் ஒன்று-பல, நித்யம்-அநித்யம் என்ற அம்சங்களில் மாத்திரம் சற்று வேறுபட்டிருப்பதாய்த் தோன்றினும், மற்ற முக்கியமான கொள்கைகளில் ஒன்றுபட்டிருப் பதைக்கொண்டு முந்திய பாசுரத்தில் "புத்தர் மாட்டுடன் பூட்டுவமே" என்னலாயிற்று.

மேலும் பௌத்தர்களில் மற்றொருவனை மாத்யமிகன் 'அனைத்தும் பொய்' என்று கொண்டதால் 'ஜ்ஞாநமும் பொய்' என்று அவன் ஸாதிப்பதும் பொய்யாகி அவனும் அத்வைதிகளைப்போல் ஜ்ஞாநத்தை மெய்யென்று இசைந்ததாயிற்று. இங்ஙனமே ஜ்ஞாநத்தைத்தவிர அனைத்தும் பொய்யென்று கொண்ட அத்வைதிகள் ஜ்ஞாநமாத்ரத்தை மெய்யென்று ப்ரமாணத்தைக்கொண்டு ஸாதிப் பதும் பொய்யாகி மாத்யமிகனைப்போல் ஜ்ஞாநமும் பொய்யென்று அவர்களும் இசையவேண்டியதாயிற்று.

மேலும் பௌத்தர்களில் ஒரு வகுப்பினராகிய வைபாஷிகர்களில் சிலர் (விபஜ்யவைபாஷிகரென்பவர்), அத்வைதிகள் ப்ரஹ்மமென்ற ஒன்றே நித்யமென்று கொண்டாற்போல் நித்யமான ஒரே வஸ்துவை மெய்யென்று இசைகின்றனர்.

இவ்வாறு பௌத்த-அத்வைத மதங்களில் முக்கியமான அம்சங் களில் ஒற்றுமையை ஆய்ந்துணர்க.

இங்ஙனம் வைதிகமதத்திற்குப் புறம்பான புத்தமதத்தினரின் கொள்கையை அத்வைதிகள் தழுவித் தாம் கெட்டதுடன் ஜீவ-ஈச்வர பேதத்தை இசையாது அவர்களையும் கெடுக்கப்பார்த்தனர். அம் மதத்தில் சேராத நாம் நேரிய உபாயமாய் நிற்கும் எம்பெருமானைச் சரணமடைந்து உஜ்ஜீவித்தோம்-என்று இவ்வதிகாரத்தில் விளக்கினோம்—என்றவாறு. 23

பாசுரம் 24, 25— ஜைநமதத்தைக் கண்டித்தல்

கட்டளைக்கலித்துறை

177 சோதனை விட்டொருத் தன்சொல மெய்யெனச் சோகதரைச்
சேதனை யற்றவ ரேன்று சிதைத்தபின் சீவர்கட்கோர்
வேதனை செய்கை வெறுமற மேன்று விளம்பிவைத்தே
மாதவ மேன்று மயிர்பறிப் பார்மயன் மாற்றுவமே. 24

[பாசுரம் 24, 25— ஜைநபங்காதிகாரம்]

உரை:— சோதனை விட்டு-(அபௌருஷேயமான) வேதவிதியைக் கைவிட்டு, ஒருத்தன் - (புத்தனென்னும்) ஒருவன், சொல—

உபதேசிக்க, மெய் என – (அவனது உபதேசத்தை) ஸத்யமென்று கொண்ட, சோகதரை – பௌத்தர்களை, சேதனை அற்றவர் என்று – ஜ்ஞாநம் இல்லாதவர் என்று (விளக்கி), சிதைத்த பின் – (அவர்கள் மதத்தைக்) கண்டித்தபின், சீவர்கட்கு – ஜீவருக்கு, ஓர் வேதனை செய்கை – ஒரு துன்பத்தைச் செய்கை, வெறும் மறம் என்று – வீணான பாபம் என்று, விளம்பி வைத்தே – கூறிக்கொண்டே, மா தவம் என்று – பெரிய தவம் என்று (நினைத்து), மயிர் பறிப்பார் – (தங்கள்) மயிரைப் பறிப்பவர்களான ஜைநர்களின், மயல் மாற்றுவம் – அஜ்ஞாநத்தைப் போக்குவோம்.

கருத்து:— அபௌருஷேயமாய் விளங்கும் வேதத்தை ப்ரமாண மாகக் கொள்ளாது, புத்தன் தன் சீடர்களுக்கு மனம்போனபடி உபதேசித்தான். அதை அவர்கள் மெய்யென்று ஏற்றுக்கொண்டனர். அத்தகைய பௌத்த மதத்தினரையும் (அவர்களைத்தழுவிய அத்வைதி களாகிய ப்ரச்சந்ந பௌத்தரையும்) அறிவற்றவரென்று முன்னதிகாரங் களில் விளக்கி அவர்மதத்தைக் கண்டித்தோம். இவ்வதிகாரத்தில் ஜைநமதத்தினரின் அஜ்ஞாநத்தைப் போக்குவோம்—என்றவாறு.

ஒரு ஜீவனையும் துன்புறுத்தக்கூடாதென்பது ஜைநரின் முக்கியக் கொள்கை. ஆனால் அவர்கள் அதற்கு விரோதமாய்த் தங்கள் மயிரைப் பறித்துத் துன்பம் விளைத்துக்கொள்வதையே பெரிய தவமாகக் கொள்கின்றனர். *24*

ஜைநமதம்— முரண்பட்ட கொள்கை—விளக்கம்

எண்சீராசிரியவிருத்தம்

178 சொன்னார்தாஞ் சொன்னதெலாந் துறவோ மென்றுஞ்
சொன்னதுவே சொன்னதல தாகு மென்றுந்
தின்னாதுந் தின்னுமது மேக மென்றுஞ்
சிறியனுமாம் பெரியனுமாஞ் சீவ னென்று
மன்னாது மன்னுமது மொன்றே யென்றும்
வையமெலாம் விழுகின்ற தென்று மென்றுந்
தென்னாடும் வடநாடுஞ் சிரிக்கப் பேசுஞ்
சினநெறியார் சினமெல்லாஞ் சிதைத்திட் டோமே. 25

உரை:—சொன்னார் தாம் சொன்னது எலாம்–அந்தஅந்த மதத்தை ப்ரவர்த்தித்தவர் சொல்லிய விஷயங்களையெல்லாம், துறவோம் என்றும் – விலக்கமாட்டோம் என்றும், சொன்னதுவே – சொல்லப் பட்ட விஷயமே, சொன்னது அலது – சொல்லப்படாத விஷயமாக, ஆகும் என்றும் – ஆகும் என்றும், தின்னாதும் – உண்ணக்கூடாத பதார்த்தமும், தின்னுமதும் – உண்ணக்கூடிய பதார்த்தமும், ஏகம் என்றும் – ஒன்றுதான் என்றும், சீவன் – ஜீவாத்மா, சிறியனும் ஆம் –

சிறியனாகவும் ஆகும், பெரியனும் ஆம் என்றும் – பெரியனாகவும் ஆகும் என்றும், மன்னாதும் – அநித்யவஸ்துவும், மன்னுமதும்–நித்யவஸ்துவும், ஒன்றே என்றும் – ஒன்றுதான் என்றும், வையம் எலாம் - பூமி முழுதும், என்றும் - எப்பொழுதும், விழுகின்றது என்றும் – கீழே விழுகின்றது என்றும், (இப்படி ஒன்றுக்கொன்று விரோதமாக), தென் நாடும் வடநாடும் – தென்தேசமும் வடதேசமும், சிரிக்கப் பேசும் – பரிஹாஸம் செய்யும்படி பேசுகின்ற, சினநெறியார்–ஜைநமதத்தினருடைய, சினம் எல்லாம் – கோபத் (துடன் கூறும் வாதத்) தை எல்லாம், சிதைத் திட்டோம் - ஒழித்திட்டோம்.

ஜைநமதத்தின் முக்கியக் கொள்கை - ஈசுவரன் இல்லை. உலகத்திற்குப் பரமாணுக்களே காரணமாகும்; உலகத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துவும் உண்மை–பொய்ம்மை, பேதம்-அபேதம், நித்யத்வம்-அநித்யத்வம் முதலிய பலமுரண்பட்ட தன்மையுள்ளதாகும்–என்பதாம். ஒரே வஸ்துவில் முரண்பட்ட தன்மைகள் சேர்ந்திருக்குமென்று அங்கீகரித்தால் இங்ஙனே முரண்பட்ட இன்னும் சில அம்சங்களையும் இசைய நேரிடும் என்று பிறமதத்தினர் ஆக்ஷேபித்தால், ஜைநர்கள் அந்த அந்த அம்சங்களையும் தடையின்றி ஏற்றுக்கொண்டுவிடுகின்றனர். அவர்கள் கூறும் விஷயங்கள் ப்ரமாணங்களோடு விரோதிக்கின்றன என்று பிறர் ஆக்ஷேபித்தால் முரண்பாட்டைக் குணமாகக் கருதும் தங்களுக்கு அதனால் பாதகம் இல்லை என்கின்றனர். இன்னும் வஸ்துக்களில் உண்ணத் தக்கதும் உண்ணத்தகாததும் ஒன்றேயாம்; ஜீவன், தான் இருக்கும் சரீரத்திற்குத் தக்க அளவுள்ளதாகவே இருக்கும்; ஒரே வஸ்து நித்யமாயும் அநித்யமாயுமிருக்கும்; பூமி, பாரம்தாங்காது எப்பொழுதும் கீழே போய்க்கொண்டேயிருக்கின்றது என்பன முதலியவற்றைப் பேசி ஜைநர்கள் நாட்டாருடைய பரிஹாஸத்திற்கு ஆளாகின்றனர். அவர்களின் வாதங்களையெல்லாம் இவ்வதிகாரத்தில் கண்டித்தோம் – என்றவாறு. 25

பாசுரம் 26, 27–பாஸ்கர–யாதவ மதத்தைக் கண்டித்தல்

கட்டளைக்கலித்துறை

179 ஏகாந் திகமொன்று மில்லையேன் றுரைசையைத் தாமுடுப்பார்
சோகாந்த மாகத் துறப்புண்ட பின்றேழில் வைதிகமேன்
றேகாந் திகள்சொன்ன வீசன் படியில் விகற்பமேண்ணும்
லோகாந்த வீணர்தம் வேதாந்த வார்த்தை விலக்குவமே. ௨௬

[பாசுரம் 26, 27–பாஸ்கராதிபங்காதிகாரம்]

உரை :—ஆசையை உடுப்பார் தாம் – திசைகளையே (ஆடையாக) உடுப்பவரான ஜைநர்கள், ஒன்றும் - ஒரு வஸ்துவும், ஏகாந்திகம் இல்லை என்று - ஒரேவிதமான ஸ்வபாவத்தையுடையதன்று என்று கூறிக் கொண்டிருந்து, சோகாந்தமாக - சோர்வையே முடிவாகப்பெற்று, துறப்புண்ட பின் - (நம்மால் கண்டித்து) விலக்கப்பட்ட பின்,

வைதிகம் – வேதவிசாரமே, தொழில் என்று – (தமது) தொழில் என்று (உறுதிகொண்டு), ஏகாந்திகள் சொன்ன – ப்ரஹ்மத்தை ஏகரூபமாகக் கண்ட (வ்யாஸர் பராசரர் முதலிய) வர்களால் விளக்கப் பட்ட, ஈசன் படியில் – ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தில், விகற்பம் எண்ணும் – பேதம் அபேதம் என்ற முரண்பட்ட அம்சங்களைக் கல்பிக்குமவர்களாய், லோகாந்த வீணர் தம் – உலகத்தில் அறிவற்றவர்களாய்ப் பயனற்றவர்களான பாஸ்கர–யாதவர்களுடைய, வேதாந்த வார்த்தை – வேதாந்த (த்தைத் தழுவியனவாக அவர்கள் கூறும்) வாக்யங்களை, விலக்குவம் – கண்டிப்போம்.

கருத்து:— திசையையே ஆடையாகக்கொண்டவர் ஜைநர். அவர்கள் ஒரே ஸ்வபாவத்தையுடையதாக ஒரு வஸ்துவும் இல்லை என்று கூறிக்கொண்டிருந்தனர்; முன்னதிகாரத்தில் நம்முடைய கண்டநத்தால் தளர்ந்து விலகினர். ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை ஒரே நிலையதாகக் கண்டவர் வ்யாஸர்-பராசரர் முதலிய மஹர்ஷிகள். அவர்கள் விளக்கிய ப்ரஹ்ம ஸ்வரூபத்தில் பேதம் அபேதம் என்று முரண்பட்ட அம்சங்களைக் கற்பிக்கின்றனர் பாஸ்கர–யாதவர்கள். அவர்கள் தம் வாதம் வேதாந்தத்தைத் தழுவியதாகக் கூறிக்கொள்கின்றனர். அவர்மதத்தை இவ்வதிகாரத்தில் கண்டித்திடுவோம் – என்றவாறு.

பேதமும் அபேதமும், இருளும் ஒளியும்போல் ஒன்றுக்கொன்று முரண்பட்டுநிற்பதை அறியாது குருடர்களாகி ஸகல பலனையும் இழந்த பாஸ்கர-யாதவர்கள் இங்கு லோகாந்தவீணர் என்னப்பட்டனர். 26

பாஸ்கர – யாதவமதம் – பேதாபேதத்தைக் கண்டித்தல்

எண்சீராசிரியவிருத்தம்

180 ஒன்றெனவும் பலவெனவுந் தோற்று கின்ற
வுலகெல்லா மொருபிரமந் தானே யாக்கி
நன்றெனவுந் தீதெனவும் பிரிந்த வெல்லா
நன்றன்று தீதன்றே யெனநி வின்றார்
கன்றுமலர் பசுவுமல ராகி நின்றே
கன்றாகிப் பசுவாகி நின்ற வண்ண
மின்றுமறை மாட்டுக்கோ ரிடைய ஞான
வேகாந்தி யிசைந்திடநா மியம்பி னேமே. 27

உரை:—ஒன்று எனவும் – ஒரே வஸ்து என்னும்படியாகவும், பல எனவும் – பலவஸ்துக்கள் என்னும்படியாகவும், தோற்றுகின்ற – ப்ரகாசிக்கின்ற, உலகு எல்லாம் – உலகம் முழுவதையும், ஒரு பிரமம் தானே ஆக்கி – ஒரு ப்ரஹ்மஸ்வரூபமாகவே கல்பித்து, நன்று எனவும்– கைக்கொள்ளத்தக்கவை என்றும், தீது எனவும் – விலக்கத்தக்கவை என்றும், பிரிந்த எல்லாம் – (சாஸ்திரங்களில்) பிரித்துக் கூறப்பட்ட

வஸ்துக்களை எல்லாம், நன்று அன்று–சிறந்தனவல்ல, தீது அன்றே–கெட்டனவும் அல்ல, என நவின்றார்–என்று (தம் மதத்தைப் பாஸ்கரர்களும் யாதவர்களும்) கூறினார்கள், கன்றும் அலர் (ஆகி) – கன்றாகவும் ஆகாமல், பசுவும் அலர் ஆகி நின்றே – பசுவாகவும் ஆகாமல் இருந்தே, கன்றாகிப் பசுவாகி – கன்றாகவும் பசுவாகவும் ஆகி, நின்ற வண்ணம் – நின்ற ப்ரகாரத்தை, மறை மாட்டுக்கு – வேதமாகிய பசுவுக்கு, ஓர் இடையனை – ஒப்பற்ற இடையனை, ஏகாந்தி – ஒரே நிலையில் உள்ள எம்பெருமான், இசைந்திட – திருவுள்ளமுகக்கும்படி, இன்று நாம் இயம்பினோம் – இன்று நாம் வெளியிட்டோம்.

பாஸ்கரமதம்—ஜீவனும் ப்ரஹ்மமும் வேறுபடாது ஒன்றாய் நிற்கும். இவ்வாறு நிற்றலாகிய அபேதம் இயற்கையாய் அமைந்தது. அவை வேறுபட்டுநிற்றலாகிய பேதம், புத்தி இந்த்ரியம் சரீரம் முதலியனவாகிய உபாதியைக்கொண்டு ஏற்படுகின்றது. அசேதநத்திற்கும் ப்ரஹ்மத்திற்கும் பேதம் அபேதமென்னும் இரண்டுமே இயற்கையாய் அமைந்தன – என்பதாம்.

யாதவமதம்—ஜீவனுக்கும் ப்ரஹ்மத்திற்கும், அசேதநத்திற்கும் ப்ரஹ்மத்திற்கும் உள்ள பேதம் அபேதம் என்னும் இரண்டுமே இயற்கையாய் அமைந்தன – என்பதாம்.

கருத்து:— இவ்விருதிறத்தினரும்,உலகமுழுதும் பேதமுள்ளதாகவும் அபேதமுள்ளதாகவும் தோற்றுவதாய்க்கொள்கின்றனர். எவ்வாறெனில்— ஒவ்வொரு வஸ்துவும் ஜாதி, வ்யக்தி என்ற இரண்டு நிலைகளைக்கொண்டு நிற்கும். ஜாதியென்பது ஒரேவிதமான பல வஸ்துக்களில் தொடர்ந்து நிற்கும் தன்மை. வ்யக்தியெனுஞ் சொல் குறிப்பிட்ட ஒரொரு வஸ்துவை மாத்ரம் குறிக்கும். பல குடங்களிலும் தொடர்ந்து நிற்கும் குடமாந்தன்மை (கடத்வம்) ஜாதியெனப்படும். குறிப்பிட்ட ஒரு குடம் வ்யக்தி எனப்படும். மேலும் ஒவ்வொரு வஸ்துவிலும் உண்டாக்குந்தன்மை(காரணத்வம்), உண்டாகுந்தன்மை (கார்யத்வம்) என இரண்டு உண்டு. ஆகவே நமக்குத் தோற்றுகின்ற இவ்வுலகம் முழுதும் ஜாதி — காரணம் என்ற நிலையில் அபேதம் (ஒன்றுபடுதல்) உள்ளதாகவும், வ்யக்தி–கார்யம் என்ற நிலையில் பேதம் (வேறுபாடு) உள்ளதாகவும் ஆகின்றது. இப்படியாயின் வெவ்வேறு நிலைகளைக்கொண்டே பேதமும் அபேதமும் ஒன்றுசேருவனவாக முடிதலால் ஒரே . வஸ்துவில் பேதாபேதங்களைக் கொண்டதாக ஆகவில்லையே யென்னில், ஜாதியும் வ்யக்தியும், அவ்வாறே காரணமும் கார்யமும் ஒன்றுக்கொன்று ஒன்றுபட்டும் வேறுபட்டும் நிற்பதாய்க் கொள்வதால் அங்கும் பேதாபேதத்தைக்கொண்டே ஸமாதாநம் கூறிவிடலாம். ஆக இவ்வாறு பேதாபேதங்களுடனேயே உலகம் நடைபெறுகின்றது. இந்த உலகம் முழுதும் ப்ரஹ்மமாகவே இருக்கின்றது. பதார்த்தங்களெல்லாம் நல்லனவுமல்ல, தீயனவுமல்ல—என்றவாறு.

இங்ஙனம் ஸகல ப்ரமாணங்களுக்கும் விரோதமாய் முரண்படுந் தன்மைகள் ஒன்றுசேருவனவாகக்கொண்டு பேதாபேதங்களுடன் உலகம் நடைபெறுவதாகப் பாஸ்கர - யாதவமதத்தினர் கொள்கின்றனர்.

வேதாந்திகளான நாம் பேதம் சரீரத்தைப் பற்றியதென்றும், அபேதம் ஆத்மஸ்வரூபத்தைப் பற்றியதென்றுமிசைந்து விரோதமில்லாமல் பொருத்துகிறோம். எவ்வாறெனில்—கண்ணன் பசுக்களையும் கன்றுகளையும் வனத்திற்கு ஓட்டிச்சென்று மேய்த்துக்கொண்டிருக்கும்போது ப்ரஹ்மா கண்ணனுடைய பெருமையைத் தானும் உலகமும் அறிய விரும்பிப் பசுக்களையும் கன்றுகளையும் ஒளித்துவிட்டான். கண்ணன் ப்ரஹ்மாவை மயக்கவும் கோபாலர்களைத் தேற்றவும் தானே பசுவாகவும் கன்றாகவும் உருவத்தை எடுத்துக்கொண்டு ஒரு வருஷம் விளையாடினனென்று புராணம் கூறுகின்றது. உண்மையில் பகவான் பசுவாகவோ கன்றாகவோ இல்லை. எம்பெருமானுடைய ஸ்வரூபம் ஸகல வஸ்துக்களைக்காட்டிலும் வேறுபட்டதாகும். ஆயினும் பசு, கன்று இவற்றின் தன்மையை எம்பெருமான் அடைந்ததெல்லாம் சரீரத்தின்வாயிலாகவேயன்றி எம்பெருமானுடைய ஸ்வரூபத்தில் அந்தத் தன்மைகள் கிடையா. இங்ஙனமே உண்மையில் உலகத்திலுள்ள வஸ்துக்களைக்காட்டிலும் வேறுபட்டுநிற்கும் எம்பெருமானுடைய ஸ்வரூபத்தை உலகிலுள்ள வஸ்துக்களோடு ஒன்றுபட்டிருப்பதாக ப்ரமாணங்கள் சொல்வதெல்லாம், எம்பெருமான் அந்தஅந்த வஸ்துக்களைத் தனது சரீரமாகக் கொண்டு அவற்றில் அந்தர்யாமியாயிருப்பதுபற்றியே என்று நம் ஸித்தாந்தமாதலின் பாஸ்கர - யாதவர்களைப்போல் பேதம் அபேதம் என்ற முரண்படுந்தன்மைகளை ஒன்றில் இசையவேண்டிய அஸ்வாரஸ்யம் நம் மதத்தில் இல்லையென்றவாறு.

கண்ணனென்னும் இடையன், வேதமென்னும் பசுவைக் கறந்து, கீதையென்னும் பாலமுதத்தை உலகுக்கு ஈந்தவனாதலின் அவனுடைய திருவுள்ளம் உகக்குமாறு நம் ஸித்தாந்தத்தை ஸ்தாபித்தோம்—என்றவாறு.

யாதவமதத்தில் ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்திற்குச் சேதநாசேதநங்களாக மாறுபடுந்தன்மை உளதாகக் கூறுவதைக் கண்டிக்க ஏகாந்தியெனுஞ் சொல்லால் ஒரேநிலையாந்தன்மை கூறப்பட்டது. 27

பாசுரம் 28, 29—வையாகரணமதத்தைக் கண்டித்தல்

கட்டளைக்கலித்துறை

181 சாயா மறைகளிற் சத்தந் தெளிந்திடச் சாற்றுதலாற்
றூயா ரிவரென்று தோன்றநின் றேபல சூதுகளான்
மாயா மதமு மறுசின வாதும் பவுத்தமுஞ்சேர்
வையா கரணர்சொல் லும்மறு மாற்றங்கண் மாற்றுவமே. 28

[பாசுரம் 28, 29—வையாகரணபங்காதிகாரம்]

உரை:-சாயா–(ஸ்வரமும் அக்ஷரமும் மாத்திரையளவும்) தவருமல் உச்சரிக்கவேண்டிய, மறைகளில் – வேதங்களில் உள்ள, சத்தம் தெளிந்திட – பதங்கள் நன்குவிளங்கும்படி, சாற்றுதலால் – (வ்யாகரணசாஸ்த்ரத்தின் உதவியால்) ஸ்தாபித்தபடியால், இவர் – இந்த வையாகரணர், தூயார் என்று தோன்ற நின்றே – பரிசுத்தர் என்று (உலகுக்குத்) தோன்றும்படியிருந்தே, பல சூதுகளால் – பல கபடங்களால், மாயா மதமும் – மாயையைக் கொள்கின்ற அத்வைதமதத்தையும், மறு சின வாதும் – வேருெரு ஜைநமதமென்னும்படியுள்ள பாஸ்கர - யாதவ மதத்தையும், பவுத்தமும் – பௌத்தமதத்தையும், சேர் – (ஒவ்வோர் அம்சத்திலே) ஒத்து நிற்பவர்களான, வையாகரணர் – வையாகரண மதத்தோரால், சொல்லும் – சொல்லப்படுகின்ற, மறு மாற்றங்கள் – எதிர்வாதங்களை, மாற்றுவம் – ஒழித்துவிடுவோம்.

வையாகரணமதம், அத்வைதமதத்தையும் யாதவமதத்தையும் பௌத்தமதத்தையும் ஒவ்வோரம்சத்தில் ஒத்துநிற்கின்றது. எவ்வாறெனில்–

அத்வைதிகளின் கொள்கை—ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யமாகும். நமக்குப் புலப்படும் ஸ்தாவரஜங்கமப் பொருள்களாகிய ப்ரபஞ்சம் முழுதும் பொய்யேயாம். நீர்நசையே கண்டிராத ஒரு பாலைவனத்தில் நடுப்பகலில் ஸூர்யனுடைய கிரணங்கள் பரவுகின்றன. அதனுல் அங்கு உண்மையாயில்லாத நீர்வெள்ளமும் அலைகளும் கண்ணுக்குத் தெரிகின்றன. அங்ஙனமே எங்கும் நிறைந்துநிற்கும் ப்ரஹ்மமென்ற ஒரு வஸ்துவே இந்த ப்ரபஞ்சமாகக் காணப்படுகின்றது. இங்ஙனம் ஒன்று மற்றொென்றாகத் தோன்றுவதே விவர்த்தமெனப்படும். ஆகவே ப்ரபஞ்சம் ப்ரஹ்மத்தின் விவர்த்தமாகும்—என்பதாம்.

வையாகரணர்—அக்ஷரங்களையும் அவற்றாலாகிய பதங்களையும் அவற்றாலாகிய வாக்கியங்களையும் தவிர, ஸ்போடமென்று ஒன்று இருந்து அதுதான் வாக்யங்களின் அர்த்தத்தைத் தோற்றுவிக்கின்றதென்றும் அந்த ஸ்போடமே ப்ரஹ்மமென்றும் கூறுகின்றனர். அவர்களில் ஒரு சாரார் அந்த ஸ்போடமென்னும் ப்ரஹ்மமே இந்த ப்ரபஞ்சமாகக் காணப்படுகிறதென்றும் ஆக ப்ரபஞ்சம் முழுதும் ஸ்போடமென்னும் ப்ரஹ்மத்தின் விவர்த்தமாகுமென்றும் கொள்கின்றனர்.

ஆக, இவற்றால் அத்வைதிகளும் வையாகரணர்களும் இந்த விவர்த்தவாதத்தில் (ப்ரபஞ்சம் ப்ரஹ்மத்தின் விவர்த்தமென்பதில்) ஒத்திருக்கின்றனர்—என்றவாறு.

''மறுசினவாதும்'' என்னுந் தொடர் இங்கு வேருெரு ஜைநமதம் என்னும் பொருள்பெற்று அத்வைதிகளில் ஒரு சாராராகிய யாதவர்களின் மதத்தைக் குறிக்கின்றது. பாஸ்கர-யாதவர்களும் ஜைநரைப் போல் பேதம் அபேதம் முதலிய முரண்படுந்தன்மைகளை ஒரே வஸ்து

வில் இசைவதுபற்றிப் பாஸ்கர-யாதவமதம் ஜைநவேதாந்தமென்று வழங்கும். (178, 180-வது பாசுரவுரைக் குறிப்பிற் காண்க.)

யாதவமதத்தில் ப்ரஹ்மமே ப்ரபஞ்சமாக மாறுபடுவதாகக் கொள்ளப்படுகின்றது. ஒரு வஸ்து, தன் நிலைமை நீங்கி வேறு வஸ்துவாக மாறுபடுதலே பரிணாமமெனப்படும். வையாகரணரில் ஒரு சாரார் சப்தமென்னும் ப்ரஹ்மமே ப்ரபஞ்சமாகப் பரிணாமத்தைப் பெறுவதாய்க்கொண்டுள்ளனர். ஆக, பரிணாமவிஷயத்தில் வையாகரணமதம் யாதவமதத்தை ஒத்திருப்பதாய்க் கூறப்பட்டது.

பௌத்தரும் வையாகரணரில் ஒரு வகுப்பினரும் கொள்ளும் கொள்கை— ஒரு வாக்யத்தில் அடங்கியுள்ள பல பதங்களுக்குத் தனித் தனியே அர்த்தம் அறியப்படுகின்றது. பின் முழுவாக்யத்தின் தாத்பர்யமும் அறியப்படும்போது (முதலில் தனித்தனியே பதங்களின் அர்த்தஜ்ஞானம் உண்டானதைத் தவிர) ப்ரதிபா என்று ஒரு ஜ்ஞானம் உண்டாகின்றது. இந்த ப்ரதிபை என்னுமதே வாக்யமாகவும் வாக்யார்த்தமாகவும் கொள்ளப்படுகின்றது—என்பதாம். ஆக இக்கொள்கை பௌத்த - வையாகரணமதங்களுக்குப் பொதுவாதலின் "பவுத்தமும் சேர்" என்னப்பட்டது.

'வாயாகரணர்' என்று மருவிய பாடமே செய்யுளிலக்கணத்திற்குச் சேருமென்பர் சிலர். 28

வையாகரணர் பிறமதத்தினரால் மயங்கியமை

எண்சீராசிரியவிருத்தம்

182 கலகத்திற் கலங்கிவருங் காணிக் கேல்லாங்
கண்ணுறு சதிரவழி கட்டு வார்போ
லுலகத்தின் மறைசேர்ந்த வுரைக டம்மா
லொருபிழையுஞ் சேராம லுபக ரித்தார்
பலகத்தும் பவுத்தர்முத லான பண்டைப்
பகற்கள்ளர் பகட்டழிக்கப் பரவும் பொய்யாஞ்
சிலகற்றுச் சித்தாந்த மறிய கில்லாச்
சிறுவரினி மயங்காமற் சேமித் தோமே. 29

உரை:— கலகத்தில் – (நிலவிஷயமான) வழக்கில், கலங்கிவரும்– (இன்னாருடையதென்று நிச்சயிக்கமுடியாமல்) ஸந்தேஹத்திற்கு இடமான, காணிக்கு எல்லாம் - நிலங்களுக்கெல்லாம், கண்ணுறு சதிர வழி – கண்ணுறு என்று சொல்லப்படுகின்ற எல்லையை, கட்டுவார் போல் – ஏற்படுத்தி வழக்கைத் தீர்க்கும் மத்யஸ்தர்களைப்போல் (வையாகரணர்), மறை சேர்ந்த-வேதத்தில் உள்ள, உரைகள் தம்மால்– வாக்யங்களால், உலகத்தில் – இவ்வுலகத்தில், ஒரு பிழையும் சேராமல்– (விபரீதமான அர்த்தம் கொடுத்தலாகிய) ஒரு தவறும் நேரிடாதவாறு,

உபகரித்தார் – உதவிசெய்தனர், பல கத்தும் – பல விஷயங்களைப் பிதற்றுகின்ற, பவுத்தர் முதலான – பௌத்தர் முதலிய, பண்டைப் பகற்கள்ளர் – பழமையான பகல் திருடர்களின், பகட்டு அழிக்க – ஆடம்பரம் (விவேகத்தை) ஒழிக்க, பரவும் – (அதனால்) ஆதரிக்கப் படுகின்ற, பொய்யாம் சில கற்று – பொய்யான சில விஷயங்களைக் கற்றுக்கொண்டு, சித்தாந்தம் அறியகில்லா – (வேதாந்திகளான நம்) ஸித்தாந்தத்தை அறியமாட்டாத, சிறுவர் – அல்பஜ்ஞாநமுடையவர் களான வையாகரணர்கள், இனி மயங்காமல்–இனிக் கலக்கமுறாத படி, சேமித்தோம் – (தத்துவார்த்தத்தை விளக்கி அவர்களைக்) காப்பாற்றினோம்.

கருத்து:— உலகத்தில் இன்னாருடையதென்று நிச்சயிக்க முடியாத ஒரு நிலத்தில் இருவர் அதன் உரிமையைப்பற்றி வழக்காடுங் கால் அவ்வழக்கைத் தீர்க்கும்படி வேண்டப்பட்ட மத்யஸ்தர்கள் அந்த நிலத்தை அவரவர்கணக்குப்படி அளந்து ஓர் எல்லையைக் கட்டி அவ் வழக்கைத்தீர்ப்பது இயல்பு. அவ்வெல்லைக்குக் 'கண்ணாறு' எனப் பெயர் வழங்கும்.

அங்ஙனமே வேதவாக்யங்களுக்கு அந்த அந்த மதத்தினர் தத்தமக்குத் தோன்றியவாறு பொருள்கொள்ளாதபடி வையாகரணர் வ்யாகரணசாஸ்த்ரத்தைக்கொண்டு ஒரு வரையறை ஏற்படுத்தி வேதத்தின் உண்மைப் பொருள் காண்பதில் உதவி செய்தனர். இங்ஙனம் வையாகரணர் அநுகூலராயிருந்தும், பௌத்தமதத்தினர் முதலாயினோர் மிக்க ஆடம்பரத்துடன் செய்யும் மதப்ரசாரத்தால் மயங்கி அந்தஅந்த மதங்களில் சிற்சில அம்சங்களைக் கைக்கொண்டு தத்துவார்த்தத்தை அறியமுடியாது கலங்கினர். அவர்களுக்குத் தத்துவார்த்தங்களை வெளியிட்டு அவர்களைக்காத்தோம்—என்றவாறு.

வேதாந்தங்கள் தத்துவார்த்தங்களை விளக்கிக்கொண்டிருக்கும் போதே பௌத்தர் முதலியோர் அவற்றை இல்லையாக்குவதுபற்றிப் 'பகற்கள்ளர்' எனப்பட்டனர். 29

பாசுரம் 30, 31—கணாதமதத்தைக் கண்டித்தல்

கட்டளைக்கலித்துறை

183 கண்ட தலாதன கட்டுத லாற்கண்ட விட்டதனாற்
பண்டுள தான மறைக்குப் பழமையை மாற்றுதலாற்
கோண்டது மீசனைக் கோள்ளா வகையென்று கூறுதலாற்
கண்டக ராய்நின்ற காணாதர் வாதங் கழற்றுவமே. 30

[*பாசுரம் 30, 31— வைசேஷிகபங்காதிகாரம்*]

உரை:— கண்டது அலாதன – (ப்ரத்யக்ஷம் முதலியவற்றால்) காணாத வஸ்துக்களை, கட்டுதலால் – கல்பிக்கையாலும், கண்ட –

(வேதத்தில்) காணும் அம்சங்களை, விட்டதனால் - (அங்கீகரியாமல்) விட்டபடியாலும், பண்டு உளதான - நெடுநாட்களாய் (நித்யமாய்) உள்ள, மறைக்கு - வேதத்திற்கு, பழமையை - அநாதியாந்தன்மையை, மாற்றுதலால்-மாற்றிக்கூறுவதாலும், ஈசனைக் கொண்டதும்-(தாங்கள்) ஈசுவரனை அங்கீகரித்ததும், கொள்ளாவகை என்று-(நாம்) அங்கீகரிக்கத் தகாத (அநுமாநமென்ற) வழியிலேதான் என்று, கூறுதலால்-சொல் வதாலும், கண்டகராய் நின்ற - (நல்வழிக்கு)முள்ளாய் நின்ற, காணுதர்-வைசேஷிகமதத்தினருடைய, வாதம் கழற்றுவம் - வாதத்தை ஒழித் திடுவோம்.

கணுதமதத்தினர் ப்ரத்யக்ஷம் முதலிய எந்த ப்ரமாணத்தாலும் காணமுடியாத சில பதார்த்தங்களைக் கல்பிக்கின்றனர். அவையாவன-ஆவயவங்களைக்காட்டிலும் வேறுபட்ட அவயவி, ஸாமாந்யம், விசேஷம், ஸமவாயம், அபாவம் முதலியனவாம். வேதத்தில் கூறப்பட்ட ப்ரக்ருதி, மஹான் முதலிய தத்துவங்களை இவர்கள் ஏற்காது விட்டனர்; அநாதியாய் ஒரு புருஷனாலும் இயற்றப்படாது ஸர்வே சுவரனைப்போல் நித்யமாய் விளங்கும் வேதத்தை ஈசுவரனால் இயற்றப் பட்டதாகக்கொண்டு பௌருஷேயம் என்று நாக்கூசாது பிதற்று கின்றனர். மேலும் இவர்கள் 'ஈசுவரன் உளன்' என்று இசைந்த போதிலும், வேதாந்திகளான நம்மைப்போல் சப்தப்ரமாணமாகிய வேதத்தால் அறியப்படுமவனாகக் கொள்ளாமல் அநுமாநத்தால் அறியப்படுமவனாகக் கொள்கின்றனர். இவ்வாறு பிதற்றிக்கொண்டு, வைதிகஸித்தாந்தத்திற்கு முள்ளைப்போல் தடையாயிருக்கும் வைசேஷிகமதத்தை இவ்வதிகாரத்தில் கண்டித்திடுவோம்—என்றவாறு. 30

கணுதமதம், ஈசுவரன்—மோக்ஷம் இவற்றில் விபரீதக்கொள்கை

எண்சீராசிரியவிருத்தம்

184 ஆகமத்தை யனுமான மென்கை யாலு
மழியாத மறையழிக்க நினைத்த லாலும்
போகமற்றூ ருபலம்போற் கிடக்கை தானே
புண்ணியர்க்கு வீடென்று புணர்த்த லாலு
மாகமோத்த மணிவண்ணன் படியை மாற்றி
மற்றவனுக் கோருபடியை வகுத்த லாலுங்
காகமோத்த காணுதன் கண்ணை வாங்கிக்
காக்கைக்கா ரேன்றலற்றக் காட்டி னோமே. 31

உரை:— ஆகமத்தை - சப்தம் என்னும் ப்ரமாணத்தை, அனுமா னம் என்கையாலும்-அநுமாநம் (என்னும் ப்ரமாணத்தில் அடங்கியது) என்று கூறுவதாலும், அழியாத மறை - நித்யமான வேதத்தை, அழிக்க நினைத்தலாலும்-அழி (த்து அநித்யமா) க்க எண்ணியதாலும், போகம்

அற்று – (எவ்வித) அநுபவமும் இல்லாது, ஓர் உபலம்போல் – ஒரு கல்லைப்போல், கிடக்கைதானே – கிடப்பதுவே, புண்ணியர்க்கு வீடு என்று – புண்யசாலிகளுக்கு (உள்ள) மோக்ஷம் என்று, புணர்த்தலாலும் – கல்பித்தபடியாலும், மாகம் ஒத்த – ஆகாசத்தைப் போல் தோஷமற்றவனும், மணி வண்ணன் – (நீல) ரத்நத்தின் தன்மையுள்ளவனுமான ஸர்வேசுவரனுடைய, படியை மாற்றி – (ஸ்வரூபம் குணம் முதலிய) ப்ரகாரத்தை மாற்றி, அவனுக்கு – அவ்வீசுவரனுக்கு, மற்று ஒரு படியை வகுத்தலாலும் – (வேத விருத்தமாய்) வேறு ஒரு ப்ரகாரத்தை(க் கல்பித்து)ப் பிரித்துக் கூறியதாலும், காகம் ஒத்த – காகனைப்போன்ற (பகவதபராதியான), காணாதன் கண்ணை வாங்கி – கணாதனுடைய கண்ணைப் பறித்து, காக்கைக்கு ஆர் என்று அலற்ற – (என்னை) ரக்ஷிக்க எவர் உளரென்று கதறும்படி, காட்டினோம் – (அவன்மதத்தைக் கண்டித்து உலகுக்குக்) காட்டினோம்.

கருத்து:-மேலும், கணாதமதத்தினர் சப்தத்தைத் தனி ப்ரமாணமாகக் கொள்ளாமல் அநுமாநத்திலேயே அடக்கிவிடுகின்றனர்; எந்நாளும் அழியாது நித்யமாய் நிற்கும் வேதத்தைப் பௌருஷேயமாக்கி அநித்யமாக்குகின்றனர்; ஜீவன் ஜ்ஞாநம் முதலிய ஸகலகுணங்களையும் இழந்து ஓர் அநுபவமுமின்றி ஒரு கல்லைப்போல் கிடப்பதே அவனுக்கு மோக்ஷமென்கின்றனர்; ஈசுவரன், மண்குடத்திற்குக் குயவன்போல் நிமித்தகாரணமேயன்றி, மண்ணைப்போல் உபாதாந காரணமாகமாட்டானென்கின்றனர்; சிறிதும் ப்ரக்ருதிஸம்பந்த மற்றுச் சுத்தஸத்துவமயமான திருமேனியுடையனும் எல்லையற்ற ஆநந்தம் நிறைந்து நிற்கப்பெறும் ஸர்வேசுவரனைச் சரீரமில்லாதவனென்றும் ஸுகமில்லாதவனென்றும் மொழிகின்றனர். பிராட்டியிடம் அபசாரப்பட்டுக் காகன் தன் கண்ணையிழந்து துன்புற்றான். எம்பெருமானிடம் மஹாபராதம்செய்த இந்தக் கணாதமதத்தினனது கொள்கையாகிய கண்ணை நாம் பறித்துத் தனக்கு ஒரு புகலிடம் இல்லாது கதறுமாறு இவ்வதிகாரத்தில் செய்தோம்—என்றவாறு. 31

பாசுரம் 32, 33–கௌதம (ந்யாய) மதத்தைக் கண்டித்தல்

கட்டளைக்கலித்துறை

185 கோதம நூல்களைக் குற்ற மிலாவகை கூட்டலுமாங்
கோது கழித்தொரு கூற்றிற் குணங்களைக் கொள்ளவுமாம்
யாது மிகந்தொரு நீதியை யாமே வகுக்கவுமாம்
வேதியர் நன்னய வித்தர மென்பது மெய்யுளதே. 32

[பாசுரம் 32, 33–ந்யாயவிஸ்தரவிரோதநிஸ்தாராதிகாரம்]

உரை :— கோதம நூல்களை – கௌதமருடைய (ந்யாய) ஸூத்ரங்களை, குற்றம் இலாவகை – (வேதவிரோதமென்னும்) குற்ற

மில்லாதபடி, கூட்டலுமாம் – கூட்டவும் முடியும்; கோது கழித்து – (வேதவிரோதமென்னும்) குற்றமுள்ள பாகத்தைக் கழித்து, ஒரு கூற்றில் – ஒருபாகத்தில், குணங்களைக் கொள்ளவுமாம் – குணங்களை ஏற்றுக்கொள்வதும் முடியும்; யாதும் இகந்து – (ந்யாயஸூத்ரம்) முழுவதையுமே கழித்துவிட்டு, ஒரு நீதியை – ஒரு ந்யாயக்ரந்தத்தை, யாமே வகுக்கவுமாம் – நாமே புதிதாய் இயற்றவும் முடியும்; (ஆதலின்), வேதியர் – வேதாந்தங்களை நன்கறிந்த (மநு முதலிய) மஹர்ஷிகளால், நல் நய வித்தரம் என்பது – சிறந்த ந்யாய விஸ்தரம் எனக் கூறப்படும் வித்யாஸ்தாநம், மெய் உளதே – ஸத்யமாகவே இருக்கின்றது.

இப்பாசுரத்தில் அறியவேண்டுமவற்றை அடுத்த பாசுரவுரைக் குறிப்பிற் காண்க. 32

கௌதமமதம்—மூன்று வகைகளால் அநுகூலமாக்குதல்

எண்சீராசிரியவிருத்தம்

186 நான்மறைக்குத் துணையாக நல்லோ ரெண்ணு
நாலிரண்டி லொன்றுன நயநூ றன்னிற்
கூன்மறைத்தல் கோதுளது கழித்தன் மற்றோர்
கோணாத கோதில்வழி வகுத்த லன்றி
யூன்மறைத்த வுயிரொளிபோ லொத்த தோவ்வா
துயிரில்லாக் காணாத முரைத்த வெல்லாம்
வான்மறைக்க மடிகோலும் வண்ண மென்றோ
மற்றிதற்கார் மறுமாற்றம் பேசு வாரே. 33

உரை :—நான்மறைக்கு – நான்கு வேதங்களின் அர்த்தத்தை நிச்சயிப்பதற்கு, துணையாக-ஸஹாயமாக, நல்லோர் எண்ணும் – சிறந்த (மநு முதலிய) வரால் குறிக்கப்பட்ட, நாலிரண்டில் ஒன்றுன – எட்டு வித்யாஸ்தாநங்களில் ஒன்றாகிய, நயநூல்தன்னில் – ந்யாயவிஸ்தரத்தில், கூன் மறைத்தல் – (உள்ள) தோஷத்தை மறைத்(து உரிய அர்த்தத்தில் பொருந்தச்செய்)தல், கோது உளது கழித்தல் – குற்றமுள்ள அம்சத்தைக் கழித்(து நல்ல அம்சத்தை ஏற்றுக்கொள்ளு)தல், மற்று ஓர் கோணாத - வேறு ஒரு நேர்மையான, கோது இல் வழி – குற்றமற்ற வழியை, வகுத்தல் அன்றி – ஏற்படுத்துத(லாகிய இம்முறைகளைக் கைக்கொண்டா)லன்றி, ஊன் மறைத்த-சரீரத்தால் மறைக்கப்பட்ட, உயிர் ஒளிபோல் – (பத்த) ஜீவனுடைய தர்மபூதஜ்ஞாநம் (முக்தர்களும் நித்யஸூரிகளுமான இவர்களுடைய தர்மபூதஜ்ஞாநத்திற்கு ஸமமாகாதது) போல், ஒத்தது – (வேதத்தின் அர்த்தத்தை விளக்குவதற்குத்) தகுதிபெற்றுள்ள மற்ற வித்யாஸ்தாநத்தோடு, ஒவ்வாது – (ந்யாயவிஸ்தரம்) ஸமமாகமாட்டாது, உயிரில்லா – உயிர்போன்ற முக்கியமான விஷயங்களைக் கைவிட்ட, காணாதம் – கணாதமதம், உரைத்த எல்லாம் – வெளியிட்ட விஷயங்களெல்லாம், வான் மறைக்க – ஆகாயத்தை மறைப்பதற்கு, மடிகோலும் வண்ணம் என்றோம் –

துணியை விரிக்கும் முறையை ஒத்தவை என்று (முன்பே) விளக்கினோம். மற்று – மேலும், இதற்கு – (நாம் கூறிய) இவ்விஷயத்திற்கு, மறுமாற்றம் – எதிர்வார்த்தையை, ஆர் பேசுவார் – யார் பேசவல்லர்?

கருத்து:— சாஸ்த்ரங்களில் வித்யாஸ்தாநங்கள் பதினான்கென்று வகுக்கப்பட்டுள்ளன. அவையாவன–வேதங்கள் நான்கு (—ருக், யஜுஸ், ஸாம, அதர்வணம்), வேதத்தின் அங்கங்கள் ஆறு (—சிக்ஷா, வ்யாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம்), மீமாம்ஸை, ந்யாயவிஸ்தரம், புராணம், தர்மசாஸ்த்ரம் என்பன. ஆக இந்தப் பதினான்கு வித்யாஸ்தாநங்களில் வேதங்களாகிய நான்கு வித்யாஸ்தாநங்களின் உட்கருத்தையறிய, மற்றைப் பத்து வித்யாஸ்தாநங்கள் துணையாகுமென்று மநு முதலிய மஹர்ஷிகள் கூறுவர். ஆனால் அவற்றுள் புராணமும் தர்மசாஸ்த்ரமும் பெரும்பாலும் வேதவாக்யங்களின் அர்த்தத்தையே ஒருவகையில் கூறுவதால் மற்ற எட்டு வித்யாஸ்தாநங்களைப்போல் வேதத்தின் அர்த்தத்தை நிச்சயிக்க ஸாதனமல்லவெனக்கொண்டு அவையிரண்டையும் விட்டு எட்டு வித்யாஸ்தாநங்களென்று முதலடியிற்கூறப்பட்டது-என்பர். அல்லது—

அவற்றுள் ந்யாயவிஸ்தரம், ப்ரத்யக்ஷம் முதலிய ப்ரமாணங்களையும் அவற்றுக்குப் புலனான வஸ்துக்களையும் பொதுவாகச் சுருக்கமான ஆராய்ச்சியுடன் வெளியிடுகின்றது. மீமாம்ஸை அத்தகைய ப்ரமாணங்களையும் அவற்றுக்குப் புலனான வஸ்துக்களையும் நன்கு விரிவாக ஆராய்ந்து விளக்குகின்றது. ஆக இந்த வித்யாஸ்தாநங்கள் இரண்டும் சுருக்கம்-விரிவு என்ற முறைகளில் சற்று வேறுபட்டிருப்பினும் ப்ரமாணங்களையும் அவற்றுக்குப் புலனான விஷயங்களையும் வெளியிடுதல் என்ற அம்சத்தில் ஒன்றுபட்டிருப்பதால் அவ்விரண்டையும் ஒருவகுப்பாக்கி ஒன்றாகக்கொள்ளலாம். மேலும் வேதம், கர்மகாண்டம் ப்ரஹ்மகாண்டமென இரு கூறாகும். தர்மசாஸ்த்ரமென்னும் வித்யாஸ்தாநம் யாகம் முதலிய கர்மங்களை முக்கியமாய் விளக்குகின்ற கர்மகாண்டத்தின் அர்த்தத்தைத் தெளிவுபடுத்துகின்றது. புராணமென்னும் வித்யாஸ்தாநம் ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் முதலியவற்றையே முக்கியமாய் விளக்குகின்ற ப்ரஹ்மகாண்டத்தின் பொருளை விவரித்துக்காட்டுகின்றது. ஆக இந்த வித்யாஸ்தாநங்கள் இரண்டும் வேதத்தின் வெவ்வேறு பாகத்தை விளக்கிடினும் வேதத்தின் பொருளைத் தெளிவுபடுத்துதல் என்ற பொதுமுறையில் ஒன்றுபட்டிருப்பதால் அவ்விரண்டையும் ஒரு வகுப்பாக்கி ஒன்றாகக் கொள்ளலாம். ஆதலின் இக்கருத்தைக் கொண்டு எட்டு வித்யாஸ்தாநங்கள் என்று இப்பாசுரத்தின் முதலடியில் கூறப்பட்டது—என்றும் பெரியோர் பணிப்பர்.

இவற்றில் ந்யாயவிஸ்தரமென்னும் வித்யாஸ்தாநம் ந்யாயஸூத்ரமென்னும் க்ரந்தத்தை இயற்றிய கௌதமமஹர்ஷியால் முதலில் ப்ரவர்த்திக்கப்பட்டது. அந்நூலில் ப்ரமாணங்களும்

அவற்றுக்குப் புலனுன ப்ரமேயங்களும் விளக்கப்பட்டிருக்கின்றன. ஸ்ரீதேசிகன் கௌதமபக்ஷத்தை ந்யாயபரிசுத்தியென்னும் திவ்யஸூக்தியில் ஆராய்ச்சிசெய்யப் புகுந்து அதற்கு மூன்று கதிகளைக் கல்பித்தருளினுர். அவையாவன—

(1) (கூன்மறைத்தல்)கௌதமஸூத்ரங்கள், வேதம்-ஸ்ம்ருதி-ப்ரஹ்மஸூத்ரம் இவற்றிற்குச் சிலவிடங்களில் முரண்பட்டனவாய் வெளிக்குத் தோற்றினுலும் அவற்றைக் கொஞ்சம் சிரமத்துடன் வேதம் முதலிய ப்ரமாணங்களைத் தழுவிப் பொருள்படுத்திக் கௌதம பக்ஷத்தை ஏற்றுக்கொள்ளல்.

(2) (கோதுளது கழித்தல்) முழுதும் ஏற்றுக்கொள்ளாமலும் முழுதும் கழித்துவிடாமலும் விரோதமுள்ள இடங்களைத் தள்ளி நேரிய விஷயங்களை ஏற்றுக்கொள்ளல்.

(3) (மற்ரூேர் கோணுத கோதில் வழி வகுத்தல்) ப்ரஹ்மஸூத்ர காரர் உதறித்தள்ளியதை அடியொற்றி முழுதையுமே கழித்துவிட்டு வேதாந்தசாஸ்த்ரங்களுக்கு ஏற்பப் புதிய ஸூத்ரங்களைப் படைத்துக் கொள்ளல்—என்பன.

(ஒத்தது ஒவ்வாது) இங்ஙனம் ந்யாயஸூத்ரங்களுக்கு மூன்று வழிகளைக் காட்டி ந்யாயவிஸ்தரத்தை வேதாந்தசாஸ்த்ரத்துக்கு அநுகூலமாக்கிக்கொள்ளவேண்டும். இப்படிச் செய்யாவிடின், வேதத்தின் அர்த்தங்களை விளக்குவதற்குத் தகுதியுள்ள மற்ற ஒன்பது வித்யாஸ்தாநங்களுடன் ஒற்றுமையில்லாததுபற்றி அவ்வகுப்பில் சேரப்பெருது ந்யாயவிஸ்தரம் தனித்துநிற்க நேரும். ஆகவே ஒரு வித்யாஸ்தாநம் குறைந்துவிடுவதால் வித்யாஸ்தாநத்தின் எண்ணைக் குறிக்கும் தர்மசாஸ்த்ரங்களோடு விரோதம் வரும்.

இதற்கு உபமாநம் காட்டப்படுகின்றது — (ஊன் மறைத்த உயிரொளிபோல்) இக்கர்மபூமியில் பத்தஜீவர்களுடைய தர்மபூத ஜ்ஞாநம் கர்மசரீரத்தின் ஸம்பந்தத்தால் சுருங்கிக் கிடக்கின்றது. ஆதலால் பத்தஜீவர்கள் எல்லா விஷயங்களையும் நேரில் கண்டறிய முடியாது, முக்தர்களும் நித்யர்களுமான இவர்களுடைய தர்மபூத ஜ்ஞாநமோ எம்பெருமானுடையதைப்போல் எப்பொழுதும் விரிந்து ஒரேஸமயத்தில் ப்ரத்யக்ஷத்தாலேயே ஸகலவிஷயங்களையும் அறிய வல்லதாகும். ஆதலின் மிகச் சுருங்கிச் சிற்சில வஸ்துக்களையே அறிய வல்ல பத்தனுடைய ஜ்ஞாநம் மிக மிக மலர்ந்து ஸகலவஸ்துக்களையும் நேரில் காணவல்ல நித்யமுக்தர்களின் ஜ்ஞாநத்திற்கு எவ்வாறு இணையாகும்? அதுபோல் கீழ்க்காட்டிய மூன்று கதிகளைப் பெருத பொழுது வேதார்த்தங்களை உள்ளவாறு அறிவிக்கத் திறமையற்ற ந்யாயவிஸ்தரம் வேதார்த்தங்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் ஐயமற அறிவிக்கும் திறமைபெற்று விளங்கும் மற்ற வித்யாஸ்தாநங்களுக்குச் சமமாவது எங்ஙனம்? ஒருகாலுமில்லையென்றவாறு.

இவ்வாறு வேதாந்தஸூத்ரங்களோடு கௌதமஸூத்ரத்தை ஒற்றுமைப்படுத்துவதைக் கௌதமமதத்தினரும் இசைந்தேயாக வேண்டுமென்கிறது— (உயிரில்லாக்..................என்றேும்). ந்யாய ஸூத்ரங்களில் கணுதமதக்கொள்கைக்கு விபரீதமாய்ச் சில ஸூத்ரங்கள் உள. அங்ஙனமே வேதாந்தசாஸ்த்ரங்களுக்கு விபரீதமாகவும் சில ஸூத்ரங்கள் உள. ந்யாயமதஸ்தர்கள் கணுதமதத்திற்கு விரோதம் தங்கள் ஸூத்ரங்களில் இருப் பதைப் பொறுக்காது எவ்வகையானும் இரண்டு மதங்களுக்கும் ஒற்றுமை ஸம்பாதிக்கவேண்டுமென்ற கருத்துடன் பெருமுயற்சியைக் கைக்கொண்டு கணுதமதத்திற்கும் தங்கள்மதத்திற்கும் ஏற்றவாறு பொருள்படுத்தி ஒற்றுமைப்படுத்துகின்றனர். ஆனல் வேதாந்த சாஸ்த் ரத்திற்குத் தங்கள் ஸூத்ரங்களில் விரோதமிருப்பதைப் பெரிதாகக் கருதவில்லை. இது மிகவும் அநுசிதமாகும், எல்லாவற்றுக்கும் மூலமான வேதத்திற்கும் வேதாந்தத்திற்கும் சிறிதளவும் விரோதம் வராது ஸூத்ரங்களைப் பொருள்படுத்துவதே அழகாம். கணுதமதம் வேதம் ஒருவனல் இயற்றப்பட்டதென்றும் ஒரு கல்லைப்போல் அறிவற்றுச் செயலற்றுக் கிடப்பதே மோக்ஷமென்றும் இன்னும் இத்தகைய பல விபரீதக்கொள்கையைக்கொண்டு உயிர்போன்ற முக்கிய விஷயங்களில் மாறுபட்டதாதலின் உயிரில்லாத உடல்போன்ற தாகும். அங்ஙனம் வேதாந்தசாஸ்த்ரத்தின் கொள்கைகளையெல்லாம் கணுதமதத்தினர் ஒழித்துவிடப்பார்ப்பது, ஒருவன் ஆகாசத்தை முழுதும் மறைக்கத் தன் துணியை விரிப்பதுபோல் பயனற்ற செய்கையாகுமென்று முன் அதிகாரத்திலேயே விளக்கிவிட்டோம். ஆக இவ்வாறு மிக்க இழிவான கணுதமதத்தோடு ஒற்றுமையை ஸம்பாதிக்க வீண்முயற்சிகொள்ளாது கௌதமமதத்தினர் வேதாந்த சாஸ்த்ரத்தின் ஒற்றுமையையே பெரிதாகக்கொண்டு அதற்கேற்பத் தங்கள் ஸூத்ரங்களைப் பொருள்படுத்துவதே மிகச் சிறந்ததாகும்.

(மற்றிதற்கார் மறு மாற்றம் பேசுவாரே) இவ்வாறு நாம் கௌதம மதத்தை அநுகூலமாகவும் கணுதமதத்தை விபரீதமாகவும் கொண்ட முறைக்கு மாறுபடப் பேசுபவர் யாவர் உளர்!—என்றவாறு. 33

பாசுரம் 34, 35—மீமாம்ஸகமதத்தைக் கண்டித்தல்

கட்டளைக்கலித்துறை

187 ஈசனு மற்றணங் கும்மில தேன்றேழி ஞன்மறையிற்
பேசிய நல்வினை யாற்பெரும் பாழுக்கு நீரிறைக்கு
நீசரை நீதிக ளானிக மாந்தத்தி னூல்வழியே
மாசின் மனங்கோடுத் தும்மறு மாற்றங்கண் மாற்றுவமே. 34

[பாசுரம் 34, 35-மீமாம்ஸகபங்காதிகாரம்]

உரை:— ஈசனும் – ஸர்வேசுவரனுகிய பரம்பொருளும், இலது – இல்லை; மற்ற அனைங்கும் – பிறதெய்வமும், (இலது) என்று – இல்லையென்று (கொள்கையைக்கொண்டு), எழில் நான்மறையில் – அழகிய நான்கு வேதங்களில், பேசிய நல் வினையால் – வெளியிட்ட நல்ல கர்மங்களால், பெரும் பாழுக்கு – பெரிய பாழ்நிலத்திற்கு, நீர் இறைக்கும் நீசரை – ஜலம் பாய்ச்சுபவர்போன்ற அற்ப (ர்களான மீமாம்ஸக)ரை, நீதிகளால் – ந்யாயங்களின் உதவியால், நிகமாந்தத்தின் நூல் வழியே – வேதாந்தசாஸ்த்ரத்தின் வழியே, மாசு இல் மனம் கொடுத்து-குற்றமற்ற மனத்தைக் கொடுத்து, மறு மாற்றங்கள்—எதிர்வாதங்களை, மாற்றுவம் – கண்டித்திடுவோம்.

கருத்து:—மீமாம்ஸகர்கள் ஈசுவரனையும் மற்ற இந்த்ரன் முதலிய தேவர்களையும் ஏற்றுக்கொள்வதில்லை. மனிதர் செய்யும் யாகம் முதலிய கர்மங்களால் அபூர்வமென்று ஒரு வஸ்து உண்டாகி, அதுவே அந்த அந்தக் கர்மங்களுக்குப் பலனைக் கொடுக்குமெனக் கொள்கின்றனர்; சப்தத்தையே தேவதையாகக் கொள்கின்றனர். ஆக இவர்கள்மதத்தில் தேவதைக்குச் சரீரமும், அந்தத் தேவதை ஹவிஸ்ஸைப் பெறுவதும், ஒரே ஸமயத்தில் பல இடங்களில் நடக்கும் யாகங்களுக்குத் தேவதை செல்வதும், அதனால் அந்தத் தேவதை மகிழ்வதும், பின் கர்மத்தை அநுஷ்டித்தவனுக்குப் பலன்கொடுக்குந் தன்மையும் கிடையா.

இந்த மதத்தில் ஸகலகர்மங்களாலும் ஆராதிக்கப்பட்டு ஸகல கர்மங்களுக்கும் பலனை அளிக்கவல்ல ஸர்வேசுவரனை இல்லையாக்கி அசேதநமான அபூர்வமென்ற ஒரு வஸ்துவைக் கல்பித்து, வேதங்களில் விதிக்கப்பட்ட சிறந்த கர்மங்களை மிகுந்த தேஹசிரமம் பொருட்செலவு முதலியனவற்றோடு வீணே அநுஷ்டிக்கவேண்டுமெனக் கொள்வதால் பாழ்நிலத்தைப் பலன்தருமென மயங்கி அதற்கு நீரிறைப்பது உவமானமாக்கப்பட்டது.

இங்ஙனே மதிமயங்கிக் கிடக்கும் மீமாம்ஸகர்களுக்குச் சிறந்த ந்யாயங்களுடன் வேதாந்தசாஸ்த்ரத்தைக்கொண்டு நற்புத்திகூறிக் கண்டிப்போமென்றவாறு.

இலதென்று இறைக்கும் நீசரை மனம்கொடுத்து மாற்றங்கள் மாற்றுவம் என்று அந்வயம் கொள்க. கொடுத்தும்மறு–மகரம் விரித்தல் விகாரம். *34*

பூர்வ—உத்தரமீமாம்ஸைகள் ஒரே சாஸ்த்ரம்

எண்சீராசிரியவிருத்தம்

188 கனைகடல்போ லொருநீராஞ் சூத்தி ரத்தைக்
கவந்தனையு மிராகுவையும் போலக் கண்டு
நினைவுடனே நிலைத்தரும மிகுந்து நிற்கு
நீசர்நிலை நிலைநாடா வண்ண மெண்ணி

விஊபரவு சைமினியார் வேத நூலே
வேதாந்த நூலுடனே விரகாற் கோத்த
முஊயுடைய முழுமதிநம் முனிவர் சொன்ன
மொழிவழியே வழியேன்று முயன்றிட் டோமே. 35

உரை:— கனே கடல்போல் - சப்திக்கின்ற கடலேப்போல், ஒரு நீராம் – ஒரே நிலேயிலுள்ள, சூத்திரத்தை - மீமாம்ஸாஸூத்ரங்களே, கவந்தனேயும் இராகுவையும் போலக் கண்டு – கபந்தனேயும் ராகுவையும் போல (இரண்டு வெவ்வேறு சாஸ்த்ரமாக)க் கண்டு, நினேவுடனே - அறிவுடனே, நிலேத் தருமம் – ஸ்திரமான தர்மமாகிய ஈசுவரனே, இகந்து நிற்கும் – (இல்லேயென்று) விட்டுநிற்கின்ற, நீசர் நிலே - நீச (ரான மீமாம்ஸக) ருடைய ஸித்தாந்தம், நிலே நாடா வண்ணம் எண்ணி – நிலேபெற்று நிற்காதவாறு நினேந்து, வினே பரவு – கர்மங் களேயே புகழ்கின்ற, சைமினியார் வேதநூலே – ஜைமிநிமுனிவரால் இயற்றப்பட்ட வேத (வ்யாக்கியாநமான) ஸூத்ரத்தை, வேதாந்த நூலுடனே – ப்ரஹ்மஸூத்ரத்துடனே, விரகால் கோத்த – ஸாமர்த்தி யத்தால் சேர்த்(து ஒரே சாஸ்த்ரமாகச் செய்)த, முனேயுடைய முழு மதி – கூர்மையுள்ள நிறைந்த ஜ்ஞாநத்தையுடைய, நம் முனிவர் சொன்ன – நம (போதாயநர், ஸ்ரீபாஷ்யகாரர் ஆகிய) முனிவர் வெளி யிட்ட, மொழி வழியே – ஸ்ரீஸூக்திமார்க்கமே, வழி என்று – (சிறந்த) வழியென்று (நினேத்து), முயன்றிட்டோம் – (அவ்வழியிலே) ப்ர வர்த்தித்தோம்.

கருத்து: —பூர்வமீமாம்ஸையும் உத்தரமீமாம்ஸையாகிய வேதாந்த மும் சேர்ந்து ஒரே சாஸ்த்ரமாகக் கொள்வது நம் ஸித்தாந்தம். கடல் ஒன்றேயாயினும், கீழ்க்கடல் மேல்கடல் எனப் பிரித்துக்கூறப்படு வதுபோல் ஒரே சாஸ்த்ரம் இரண்டு பாகமாய் அமைந்ததுப்பற்றிப் பூர்வமீமாம்ஸை உத்தரமீமாம்ஸை என்று பிரித்துக் கூறப்படுகின்றது. பகவதாராதநரூபமான கர்மங்களே முக்கியமாய் வெளியிடுவதால் கர்ம காண்டமெனப் பெயர்கொண்ட பூர்வமீமாம்ஸையும், அக்கர்மங்களால் ஆராதிக்கப்படும் பகவானே முக்கியமாய்ப் பேசுவதால் ப்ரஹ்மகாண்ட மெனப் பெயர்கொண்ட உத்தரமீமாம்ஸையும் சேர்ந்து ஒரே சாஸ்த்ர மாகும் என்பது போதாயனர் ஆளவந்தார் ஸ்ரீபாஷ்யகாரர் முதலிய முன்னோர்களால் ஸ்தாபிக்கப்பட்டதாகும். மஹாமேதாவிகளான அவர்கள் காட்டிய வழியே சிறந்ததெனக்கொண்டு அவ்வழியே நடந் தோம்——என்றவாறு.

மீமாம்ஸகமதத்தின்படி கர்மகாண்டமாகிய மீமாம்ஸை தனிச் சாஸ்திரமாகும். ப்ரதாநமான ஈசுவரனே இல்லேயாக்கிக் கர்மத்தைக் கொள்ளும் பூர்வமீமாம்ஸை தலேயில்லாத முண்டமென்றும், கர்மத்தைப்பேசாது ஈசுவரனேமாத்திரம் பேசும் உத்தரமீமாம்ஸை உடலில்லாத தலே என்றும் கூறப்படுவதுபற்றிக் 'கவந்தனேயும் இராகுவையும் போல' என்னலாயிற்று. 35

பாசுரம் 36, 37-ஸாங்க்யமதத்தைக் கண்டித்தல்

கட்டளைக்கலித்துறை

189 முக்குண மாய்நின்ற மூலப் பிரகிரு திக்கழியா
வக்குண மற்ற வருத்துணை மற்றதற் கீசனிலை
யிக்கண ணைப்படி யையைந்து மெண்ணின்முன் முத்தியென்னும்
பக்கண வீணர் பழம்பகட் டைப்பழு தாக்குவமே. 36

[பாசுரம் 36, 37--நிரீசுவரஸாங்க்யநிராகரணாதிகாரம்]

உரை:— முக்குணமாய் நின்ற - (ஸத்துவம், ரஜஸ், தமஸ் என்னும்) மூன்றுகுணஸ்வரூபமாய் நின்ற, மூலப்பிரகிருதிக்கு - மூலப்ரக்ருதிக்கு, அழியா - அழியாததும், அக் குணம் அற்ற - அந்த (மூன்று குணங்கள் இல்லாததுமான, அரு துணை - ஜீவன் ஸஹாயமாகும், அதற்கு - அந்த மூலப்ரக்ருதிக்கு, ஈசன் இலை - ஈசுவரன் (என்றொருவன்) இல்லை; இக் கணனைப்படி - இந்த மதத்தின் கணக்கின்படி, ஐயைந்தும் - இருபத்தைந்து தத்துவங்களையும் (அவற்றின் ஸ்வரூப ஸ்வபாவங்களோடு), எண்ணில்-(நன்கு ஆராய்ந்து)அறிந்தால், முத்தி-மோக்ஷம், முன் என்னும் - (மரணத்திற்கு) முன்பே கிடைப்பதாகும் எனக் கூறுகின்ற, பக்கணவீணர் - வேடச்சேரியிலுள்ள வேடர்போல் பாமரர்களாய் வீணே பிதற்றுமவர்களான ஸாங்க்யர்களின், பழம் பகட்டை - நெடுநாளைய ஆடம்பரத்தை, பழுதாக்குவம் - வீணாக்கிவிடுவோம். மற்று - அசைநிலை.

கருத்து:--ஸாங்க்யமதத்தின் முக்கியக்கொள்கை:-தத்துவங்கள், ப்ரக்ருதி ஜீவன் என்ற இரண்டேயாம். ஈசுவரனென்று ஒருவன் இலன். ஸத்துவம், ரஜஸ், தமஸ் ஆகிய மூன்றும் த்ரவ்யங்களேயாம்; குணங்களாகமாட்டா. இம்மூன்றும் குறைவுமிகுதியில்லாது ஸமமாயிருக்கும்போது மூலப்ரக்ருதியெனப்படும். இந்த மூலப்ரக்ருதி அறிவற்றது: அழிவற்றது; ஜீவனால் அநுபவிக்கப்படுவதாகும்; எங்கும் வ்யாபித்து விபுவாய் நிற்கும்; எப்பொழுதும் மாறுபாட்டை அடைந்து கொண்டே நிற்கும். இதுவே அனைத்துக்கும் முதற்காரணமாய் நின்று மஹான் முதலிய தத்துவங்களாக மாறுபாட்டை அடைகின்றது. ஜீவன் அழிவற்றவன்; எங்கும் நிறைந்திருத்தலால் விபு எனப்படுவான்; ஒரு குணமுமில்லாதவன்; ஜ்ஞானஸ்வரூபமாகவே இருப்பவன்; ஒரு செய்கையும் இல்லாதவன்; சரீரந்தோறும் வேறுபட்டு நிற்பவன். இவன் துணையாய் நிற்றலால் ப்ரக்ருதி மாறுபாட்டையடைகின்றது. நொண்டியின் உதவியால் குருடன் நடப்பதுபோல் ஜ்ஞானஸ்வரூபனான ஜீவனுடைய துணையால், செய்யும்சக்தியுள்ள ப்ரக்ருதி தன் கார்யத்தைச் செய்கிறது. இங்ஙனம் ப்ரக்ருதியினாலும் ஜீவனாலுமே உலகம் நடைபெறுவதாயிருக்க, ஈசுவரனென்று ஒருவனைக் கல்பிக்க வேண்டிய அவசியமில்லை. மூலப்ரக்ருதி, மஹான், அஹங்காரம்,

ஐந்து பூதங்கள், ஐந்து தந்மாத்ரங்கள், ஐந்து ஜ்ஞாநேந்த்ரியங்கள், ஐந்து கர்மேந்த்ரியங்கள், மனம், ஜீவன் ஆகிய இருபத்தைந்து தத்துவங்களின் ஸ்வரூபத்தை நன்கு அறிந்தால் மரணத்திற்குமுன்பே முக்தி பெறலாம் என்பதாம். இவ்வாறு இவர்கள், தர்மாதர்மங்களையும் ஈசுவரனையும் அறியாது வேடச்சேரியிலுள்ள வேடர்களைப்போல அறிவிலாது வீணே பிதற்றுவதை இவ்வதிகாரத்தில் கண்டிக்கின்றோம்—என்றவாறு. *36*

ஸாங்க்யமதத்தின் முரண்பாடு---அழிதலே பலன்

எண்சீராசிரியவிருத்தம்

190 ஈசனில னென்பதனு லென்றுஞ் சீவ
ரெங்குமுள ரிலருணர்வை யென்ற வத்தாற்
பாசமெனும் பிரகிருதி தன்னு லென்றும்
பலமுமிலை வீடுமிலை யென்னும் பண்பாற்
காசினிநீர் முதலான காரி யங்கள்
கச்சபத்தின் கால்கைபோ லென்னுங் கத்தா
னுசமல திலைகாணு ஞாலத் துள்ளீர்
நாமிசையாச் சாங்கியத்தை நாடு வார்க்கே. 37

உரை:— ஞாலத்து உள்ளீர் – உலகத்திலுள்ளோர்களே!, ஈசன் இலன் என்பதனுல் – ஈசுவரன் இல்லையென்பதனுலும், சீவர் என்றும் எங்கும் உளர்.–ஜீவர் என்றைக்கும் எல்லாவிடத்திலும் இருப்பவர்; உணர்வை இலர் – ஜ்ஞாநமில்லாதவர்; என்றவத்தால் – என்று கூறுவதாலும், பாசம் எனும் – பாசமெனப்படுகின்ற, பிரகிருதி தன்னுல் – மூலப்ரக்ருதியினுல், என்றும் பலமும் இலை – எப்பொழுதும் (ஸம்ஸாரமாகிய) பலனுமில்லை, வீடும் இலை – மோக்ஷமுமில்லை, என்னும் பண்பால் – என்று சொல்லுகிற முறையினுலும், காசினி நீர் முதலான காரியங்கள் – பூமி ஜலம் முதலிய காரியப்பொருள்கள் (உண்டாவதும் அழிவதும்), கச்சபத்தின் – ஆமையின், கால் கை போல் – கால் கைகள் (நீளுவதும் சுருங்குவதும்) போல், என்னும் கத்தால் – என்று பிதற்றுவதாலும், நாம் இசையாச் சாங்கியத்தை – (இவ்வளவு தோஷமிருப்பதால்) நாம் அங்கீகரிக்கமுடியாத ஸாங்க்ய மதத்தை, நாடுவார்க்கு – பற்றுமவர்க்கு, நாசம் அலது இலைகாணும் – அழிந்துபோவது தவிர வேறு (பலன்) இல்லையென்று அறிவீர்களாக.

கருத்து:-ஸாங்க்யர்கள் ஸகலவேதங்களாலும் போற்றப்படுகின்ற ஸர்வேசுவரனை இல்லையாக்கினர்; வேதத்தில் ஜீவனை அணுவென்றும் ஜ்ஞாநமுள்ளவனென்றும் கூறியதற்கு விரோதமாய், விபு என்றும் அறிவற்றவனென்றும் கொள்கின்றனர்; மேலும் ஜீவனுடைய ஸம்ஸா

ரத்திற்கும், மோக்ஷத்திற்கும் ப்ரக்ருதியே காரணம் என்று கூறிப் பின் இதற்கு விபரீதமாய், ஜீவனுக்கு ஸம்ஸாரமும் மோக்ஷமும் இல்லை யென்றும் ப்ரக்ருதிக்கே ஸம்ஸாரமும் மோக்ஷமும் உண்டென்றும் கூறுகிறார்கள், மேலும், பூமி ஜலம் முதலிய ப்ரக்ருதியின் மாறுபாடுக ளெல்லாம் நித்யமாய் உள்ளவையே யன்றிப் புதிதாய் உண்டாவதோ அழிவதோ இல்லையென்றும், ப்ரளயகாலத்தில் வஸ்து அழிவதாகவும் ஸ்ருஷ்டிகாலத்தில் உண்டாவதாகவும் தோற்றுவதெல்லாம் ஆமை தன் இந்திரியங்களைச் சுருக்குவதும் நீட்டுவதும்போல் தத்துவங்கள் சுருக்கத்தையும் விரிவையும் அடைவதாலேயே யன்றிப் புதிதாய் ஒரு நிலைமையை அடைவதாலல்ல என்றும் கூறுகிறார்கள். ஆக இப்படி விபரீதமாய்ப் பிதற்றுவதால் வேதாந்திகளான நாம் கழித்திட வேண்டியதாய்த் தீர்ந்த ஸாங்க்யமதத்தைப் பற்றுமவர்களுக்குத் தாம் அழிந்துபோவதே பலனாய்முடியும்—என்றவாறு. 37

பாசுரம் 38, 39–யோகமதத்தைக் கண்டித்தல்

கட்டளைக்கலித்துறை

191 தாவிப் புவனங்க டாளிணை சூட்டிய தந்தையுந்திப்
பூவிற் பிறக்கினும் பூதங்க ளெல்லாம் புணர்த்திடினு
நாவிற் பிரிவின்றி நாமங்கை வாழினு நான்மறையிற்
பாவித்த தன்றி யுரைப்பது பாறும் பதர்த்திரளே. 38

[பாசுரம் 38, 39–யோகஸித்தாந்தபங்காதிகாரம்]

உரை :—புவனங்கள் தாவி – (த்ரிவிக்ரமாவதாரத்தில் ஸகல) லோகங்களையும் கடந்துநின்று, தாள் இணை சூட்டிய – திருவடி இரண்டையும் (தலையில்) வைத்து அலங்கரித்த, தந்தை – தந்தையான எம்பெருமானுடைய, உந்திப் பூவில் பிறக்கினும் – நாபிக்கமலத்தில் பிறந்த (பெருமையுடைய)வனாயினும், பூதங்கள் எல்லாம் – ஸகலபூதங் களையும், புணர்த்திடினும் – படைத்தவனாயிருப்பினும், நாவில் – நாக்கில், நாமங்கை – ஸரஸ்வதிதேவி, பிரிவின்றி வாழினும் – பிரியாமல் வாழ்ந்துகொண்டிருப்பினும், நான்மறையில் – நான்குவேதங்களிலும், பாவித்தது அன்றி – அநுஸந்திக்கப்பட்ட விஷயத்தைத் தவிர, உரைப்பது – (யோகமதத்தில்) கூறும் விஷயம், பாறும் பதர்த்திரள் – அழிந்துபோகக்கூடிய பதர்க்கூட்டம் (போல் பயனற்றதாகும்).

கருத்து:—ப்ரஹ்மாவினால் ப்ரவர்த்திக்கப்பட்ட மதம் யோகமத மென்னப்படும். ப்ரஹ்மா எம்பெருமானுடைய நாபிக்கமலத்திற்பிறந்து உலகத்தைப்படைக்கும் பெருமைபெற்று ஸரஸ்வதிக்கு நாதனாயிருந்த போதிலும் அவனுடைய மதக்கொள்கைகள் வேதத்திற்கு விரோதமா யிருப்பனவாதலின் அவை பயனற்ற பதராகுமென்னலாயிற்று. 38

யோகமதம்-தத்துவ-ஹித-புருஷார்த்தங்களில் மாறுபாடு

எண்சீராசிரியவிருத்தம்

192 காரணனு யுலகளிக்குங் கண்ணன் றேசைக்
கண்ணுடி நிழல்போலக் காண்கை யாலுந்
தாரணையின் முடிவான சமாதி தன்னைத்
தனக்கேற்றும் விளக்கென்று தனிக்கை யாலுங்
காரணமா மதுதனக்குப் பயனுஞ் சீவன்
கைவலிய நிலையென்று கணிக்கை யாலுங்
கோரணியின் கோலமெனக் குறிக்க லாகுங்
கோகனகத் தயன்கூறுஞ் சமயக் கூற்றே. 39

உரை:— காரணனுய் – (ஸகல) காரணனுய், உலகு அளிக்கும் – உலகங்களைக் காக்கின்ற, கண்ணன் தேசை – எம்பெருமானுடைய தேஜஸ்ஸை, கண்ணுடி நிழல் போல – கண்ணுடியில் (தெரிகின்ற) நிழலைப் போல, காண்கையாலும் – கண்டறிவதாலும், தாரணையின் முடிவான – தாரணையின் முடிவுநிலையாகிய, சமாதி தன்னை – ஸமாதி யெனப்படும் பக்தியோகத்தை, தனக்கு ஏற்றும் விளக்கு என்று – (ஜீவாத்மாவாகிய) தன்னை அறிவதற்காக ஏற்றப்படுகின்ற தீபமென்று, தனிக்கையாலும் – தனித்துக் கூறுவதாலும், காரணமாம் அது தனக்கு – (பலனைப் பெறக்) காரணமான (பக்தியோகமென்னும்) உபாயத்திற்கு, சீவன் கைவலிய நிலை – ஜீவனுடைய கைவல்யநிலைமையே, பயன் ஆம் என்று–பலனுகும் என்று, கணிக்கையாலும்–நினைப்பதாலும், கோகனகத்து – (எம்பெருமானுடைய நாபிக்) கமலத்தில் உதித்த, அயன் கூறும் – ப்ரஹ்மா வெளியிட்ட, சமயக் கூற்று – (யோக) மதத்தின் மொழி, கோரணியின் கோலம் என-கோமாளிக்கூத்து என்று, குறிக்கலாகும் – குறிப்பிடலாம்.

கருத்து:- இந்த யோகமதத்தில் ப்ரக்ருதி, ஜீவன், ஈசுவரன் என்னும் தத்துவங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. வேதங்களில் ஸகலகல்யாண குணங்களையும் உடையனுய் ஸ்தாபிக்கப்பட்ட ஈசுவரனுக்கு அக்குணங்கள் இயற்கையாயமைந்தனவல்லவென்பது இம்மதக்கொள்கை. ஒரு கண்ணுடியில் ஒரு வஸ்துவின் சாயை தோற்றுவதற்குக் காரணம் ஓர் உண்மைவஸ்து அக்கண்ணுடிக்கு எதிரே இருப்பதன்றே. அங்ஙனமே எம்பெருமானுகிய கண்ணுடியில் குணங்களாகிய சாயைகள் தோற்றுவதற்குக் காரணம் உண்மையில் குணமுடைய சேதநம் அல்லது அசேதநமாகிய வஸ்துவின் ஸம்பந்தமேயென்பது. மேலும் பக்தியோகத்தில் பரமாத்மாவின் ஸாக்ஷாத்காரம் முக்கியமாயிருக்க, அதில் ஜீவாத்மாவின் ஸாக்ஷாத்காரமே முக்கியமென்பது. மேலும் பக்தியோகமாகிய உபாயத்திற்குப் பரமபதத்தில் பகவதநுபவம் பலனுகாதென்றும் அசேதநத்துடன் கலவாத ஜீவனை அநுபவித்தலாகிய

கைவல்யமே மோக்ஷம் என்பதும் இம்மதக்கொள்கை. ஆக, தத்துவம், உபாயம், புருஷார்த்தம் ஆகிய மூன்றிலும் வேதத்திற்கு முரண்பட்ட கொள்கையையுடைய இந்த யோகமதம் ஜனக்கூட்டத்தை வசப் படுத்துவதற்காகச் செய்யும் கோமாளிக்கூத்துப் போன்றதாகும் என்று இப்பாசுரத்தில் வெளியிடப்பட்டது.

தாரணை, ஸமாதி—விவரணத்தை 84-வது பாசுரவுரைக் குறிப்பிற்காண்க.

கைவல்யம் — ஜீவாத்மா தன்னையறிந்து அநுபவித்தல். 39

பாசுரம் 40, 41, 42-பாசுபத (சைவ) மதத்தைக் கண்டித்தல்

கட்டளைக்கலித்துறை

193 சாது சனங்க ளேலாஞ்சச்சை யென்னுஞ் சலம்புணர்த்தார்
கோதம சாபமோன் ருற்கோடுங் கோலங்கள் கோண்டுலகிற்
பூத பதிக்கடி யாரேன நின்றவன் பொய்யுரையால்
வேத மகற்றிநிற் பார்விகற் பங்கள் விலக்குவமே. 40

[40, 41, 42-பாசுரங்கள்— பாசுபதமதபகிஷ்காராதிகாரம்]

உரை:— சாது சனங்களெலாம் - ஸாதுஜனங்களெல்லோரும், சச்சை என்னும் - அஸாரமென்று கழிக்கின்ற, சலம் புணர்த்தார் – சல(ம் என்னும் தோஷ)த்தைக் கைக்கொண்டவர்களாயும், கோதமசாபம் ஒன்ருல் - கௌதமமுனிவருடைய ஒரு சாபத்தினுல், உலகில் கொடுங்கோலங்கள் கொண்டு - உலகத்தில் பயங்கரமான வேஷங்களை அணிந்துகொண்டு, பூதபதிக்கு அடியார் என நின்று - பூதங்களின் நாயக (ஞன சிவ)னுக்கு அடியார்கள் என்னும்படி நின்று, அவன் பொய்யுரையால் - அந்தச் சிவனுடைய பொய்மொழியாகிய பாசுபதநூல்களால், வேதம் அகற்றி நிற்பார்-வேதத்தை (ஆதாரமாகக் கொள்ளாமல்) விலக்கிவைத்து நிற்பவர்க(ளான பாசுபதர்க)ளின், விகற்பங்கள் - பலவகைப்பட்ட மதவிஷயங்களை, விலக்குவம் - கண்டித் திடுவோம்.

கருத்து:— பாசுபதரென்னும் சைவர் கௌதமருடைய சாபத் தால் பயங்கரமான வேஷங்களை அணிந்தனர்; சிவன் உபதேசித்த பொய்மொழி நிறைந்த பாசுபத நூல்களை ப்ரமாணமாகக்கொண்டு வேதத்தை விலக்கிவைத்தனர். அவர்களின் மதக்கொள்கைகளை இவ்வதிகாரத்தில் கண்டிக்கின்ருேம்—என்றவாறு.

சலம்—பிறருடைய உள்ளக்கருத்தை உணராது அவர்மீது பொய்க்குற்றம் சுமத்தல், இங்ஙனம் செய்வதை ஸாதுஜநங்கள் வெறுப்பர். கௌதமர்மீது அவரால் காக்கப்பட்ட அந்தணர் பசுக் கொலையென்னும் பொய்க்குற்றம் சுமத்தியதுபற்றிச் 'சலம்புணர்த்தார் என்னலாயிற்று. கௌதம சாபவரலாற்றை அடுத்த பாசுரவுரையிற் காண்க. 40

சிவன்கண்ட பாசுபதமதம்— அற்பபலனுக்கேயானமை

எண்சீராசிரியவிருத்தம்

194 மாதவனே பரனென்று வையங் காண
மழுவேந்தி மயறீர்க்க வல்ல தேவன்
கைதவமொன் றுகந்தவரைக் கடிய சாபங்
கதுவியதா லதன்பலத்தைக் கருதிப் பண்டை
வேதநெறி யணுகாது விலங்கு தாவி
வேறுக விரித்துரைத்த விகற்ப மெல்லா
மோதுவது குத்திரத்துக் கென்று ரைத்தா
னோதாதே யோதுவிக்கு மொருவன் றனே. 41

உரை:— ஓதாதே – (பிறரிடம்) அத்யயநம்செய்யாமலே, ஓது விக்கும் – பிறருக்கு உபதேசிப்பவனான, ஒருவன் – ஒப்பற்ற எம்பெருமான், மாதவனே பரன் என்று – 'ஸ்ரீமந்நாராயணனே ஸர்வோத்தமன்' என்று, வையம் காண – உலகமுழுதும் அறியும்படி, மழு ஏந்தி – மழுவை(க் கையில்) ஏந்தி, மயல் தீர்க்கவல்ல – அஜ்ஞாநத்தை ஒழிக்க வல்லவனான, தேவன் – மஹேசுவரன், கைதவம் ஒன்று உகந்தவரை – ஒருகபடத்தை மகிழ்ந்(து கைக்கொண்டு கௌதமரிடம் குற்றம் செய்) தவர்களான ப்ராஹ்மணர்களை, கடிய சாபம் கதுவியதால் – (கௌதமருடைய) கொடிய சாபம் பற்றிக்கொண்டதால், அதன் பலத்தைக் கருதி – அந்தச் சாபத்தின் பலனை (க் கொடுக்க) நினைந்து, பண்டை வேதநெறி அணுகாது – அநாதியான வேதமார்க்கத்தை அநுஸரிக்காமல், விலங்கு தாவி – குறுக்கு வழியில் குதித்து, வேறுக – புதியதாக (க்கண்டு), விரித்து உரைத்த – விளக்கி வெளியிட்ட, விகற்பம் எல்லாம்-பலவகைப்பட்ட (சைவ)ஸித்தாந்தங்களையெல்லாம், ஓதுவது – கற்பது, குத்திரத்துக்கு – (அற்பபலனைப்) பெறுவதற்கே, என்று உரைத்தான் – என்று உபதேசித்தான். தான் – அசைநிலை,

கருத்து:— மஹேசுவரன் காய்ந்த மழுவைக் கையிலேந்திநின்று 'ஸ்ரீமந்நாராயணனே எல்லோரிலும் மேம்பட்டவன்' என்று ஆணையிட்டுப்பேசி மக்களின் அஜ்ஞாநத்தைப் போக்கினுன் என்று புராணம் கூறும். அத்தகைய சிவன் கௌதமரிடம் குற்றம் செய்த சில அந்தணர்களைக் கௌதமர் சபித்துவிட்டதால் அந்தச் சாபத்தை உண்மையாக்க நினைந்தான்; வேதத்திற்கு முரண்பட்ட ஒரு புதிய மதத்தைக் கற்பித்து அக்கொள்கைகளை அவ்வந்தணர்க்குப் போதித்துக் கெடுத்தான். தான் பிறரிடம் அத்யயநம் செய்யாமலே பிறருக்கு உபதேசம் செய்யவல்லவனான எம்பெருமான் பாசுபத மதத்தைக் கற்பது உலகில் மிகச் சிறுபலனைப் பெறுவதற்கேயாம் என்று உலகுக்கு உபதேசித்தான் – என்றவாறு.

குத்திரம்:— க்ஷுத்ரமென்னும் வடசொல்லின் சிதைவு; அற்பமெனப்பொருள்படும்.

கௌதமசாபவரலாறு— முன்ஒருகால் பாரதநாட்டில் தண்டகவநத்தில் கௌதமமுனிவர் கடுந்தவம் புரிந்தார். அதனல் மகிழ்ந்து வரம் கொடுக்கவந்த ப்ரஹ்மாவிடம் முனிவர் தம்மிடம் தான்யங்கள் எப்பொழுதும் குறைவுபடாது நிறைந்திருக்கும் வரத்தைப் பெற்ருர். பின் சதச்ருங்கமென்னும் இடத்தில் ஓர் ஆச்சிரமத்தை உண்டாக்கி அதில் வஸித்து வந்தார். தினந்தோறும் வனத்தினின்று தான்யங்களையெடுத்துவந்து நடுப்பகலில் அவற்றைப் பக்குவம் செய்து அந்தணர்களுக்கு இட்டு மகிழ்ந்தார். பின் பன்னிரண்டு வருஷகாலம் மழையேயின்றி நாட்டில் பெரும்பஞ்சம் ஏற்பட்டதால் பசியால் வருந்திய 48000-அந்தணர்கள் கௌதமரிடம் வந்து உணவு கேட்டனர். இவர் அவர்களை வணங்கித் தமது ஆச்சிரமத்திலிருத்தி ஆதரித்து வந்தார். பின் பஞ்சம் நீங்கவே அவ்வந்தணர்கள் கௌதமருடைய பெருமையில் பொருமைகொண்டு அவரிடம் விடைபெருமலும், அவர்மீது ஒரு பொய்க்குற்றம் சாட்டிவிட்டும் புறப்படத்துணிந்து விட்டனர். பின் அவர்கள் தமது மாயையினுல் ஒரு பசுவைப் படைத்து ஆச்சிரமத்தில் விட்டனர். அது தழைத்த பயிர்களை அழித்துநின்றது. அதைப் பார்த்த கௌதமர் பசு அகலுமாறு தன் கமண்டலஜலத்தை அதன்மீது தெளித்தார். ஜலம் அப்பசுவின்மீது படவே, அது பூமியில் விழுந்திறந்தது. இதைப் பார்த்த அவ்வந்தணர்கள் பசுஹத்தி தோஷம் நீங்கும்வரை அவரிடம் உணவுகொள்ளோமென்று கூறிப் புறப்பட்டனர்; போகும்போது கங்காஜலத்தை இறந்த பசுவின்மீது தெளித்தால் பிழைத்துவிடுமென்று கூறிச்சென்றனர். பின் கௌதமர் கடுந்தவம் புரிந்து சிவனிடமிருந்து அவர் ஜடையில் ஒரு பாகத்தை வாங்கிவந்து அதிலுள்ள கங்காஜலத்தைப் பசுவினுடலில் பெருக்கியதும் பசு உயிர்பெற்றது. கௌதமர் தமது ஜ்ஞாநத்ருஷ்டியால் அவ்வளவும் அந்தணர்களுடைய மாயையின் செயலென்று அறிந்தார்; கடுஞ்சினங்கொண்டு அவர்களைச் சிவனைப்போல் பயங்கரவேஷத்தைத் தரித்து வேதவிரோதிகளாய் வேதவிருத்தமான கர்மங்களைச் செய்துகொண்டு பாஷண்டிகளாய் அழிந்துபோகுமாறு சபித்துவிட்டார். அவர்சாபத்தை மெய்ப்பிக்க மஹேசுவரர் பாசுபதமென்னும் சாஸ்த்ரத்தை ப்ரவர்த்திப்பித்து அதன் மூலமாய்ப் பல விபரீதாநுஷ்டாநத்தை விதித்தார். அம்மதத்தைக் கைக்கொண்டவர்களே 'பாசுபதர்' (சைவர்) எனப்படுவர். —வராஹபுராணம். *41*

பாசுபதர்க்கு உய்யும்வழிகூறல்

195 கந்தமலர் மகண்மின்னுங் காரார் மேனிக்
கருணைமுகில் கண்டகண்கண் மயிலா யாலு
மந்தமில்பே ரின்பத்தி லடிய ரோடே
யடிமையெனும் பேரமுத மருந்தி வாழத்

தந்தமதி யிழந்தரனுர் சமயம் புக்குத்
தழல்வழிபோய்த் தடுமாறித் தளர்ந்து வீழ்ந்தீர்
சந்தநெறி நேரறிவார் சரணஞ் சேர்ந்து
சங்கேதத் தவமுனிவீர் தவிர்மி னீரே. 42

உரை:— கந்த மலர் மகள் மின்னும் – மணமுள்ள மலரில் அவதரித்த பிராட்டி (மின்னல்போல்) ப்ரகாசிக்குமிடமாகிய, கார் ஆர் மேனி – கருமைநிறம் நிறைந்த திருமேனியையுடைய, கருணை முகில் – கருணையாகிய நீரைப் பொழியும் பரமபதநாதனுகிய மேகத்தை, கண்ட கண்கள் – ஸேவித்த கண்கள், மயிலாய் ஆலும் - மயிலாய்நின்று ஆடுமிடமாகிய, அந்தம் இல் பேர் இன்பத்தில் - முடிவற்ற பெரிய ஆநந்த ரூபமான ஸ்ரீவைகுண்டத்தில், அடியரோடே – (நித்யஸூரிகளும் முக்தருமாகிய) பாகவதர்களுடன், அடிமை எனும் பேர் அமுதம் – கைங்கர்யமெனப்படும் பெரிய அம்ருதத்தை, அருந்தி வாழ - அநுபவித்து உஜ்ஜீவிக்கும்படி, தந்த - (எம்பெருமான்) கொடுத்த, மதி இழந்து - ஜ்ஞாநத்தை இழந்து, அரனுர் சமயம் புக்கு – சிவனுடைய (பாசுபத) மதத்தில் ப்ரவேசித்து, தழல் வழி போய் – அக்நி (போல் தீமையைத் தரும்) வழியில் சென்று, தடுமாறி – (சேருமிடமறியாது) தடுமாறி, தளர்ந்து வீழ்ந்தீர் - (மனம்) தளர்ந்து வீழ்ந்தவர்களே!, சந்த நெறி – வேத (ாந்த மார்க்கத்தை, நேர் அறிவார் – நேர்மையாக அறிந்த ஆசார்யர்களுடைய, சரணம் சேர்ந்து – திருவடிகளைச் சார்ந்து, சங்கேதத்து அவம் - (பாசுபதமதக்) கட்டுப்பாட்டின் குற்றங்களை, முனிவீர் – வெறுப்பவர்களாகி, நீர் தவிர்மின் – நீங்கள் (அம்மதக்கொள்கைகளை) ஒழித்திடுவீராக.

கருத்து:—மின்னலுடன் கூடி நீரைப்பொழியும் தன்மை வாய்ந்த மேகத்தைக்கண்டு மயில் மகிழ்ந்து ஆடுவது இயல்பு. பிராட்டியாகிய மின்னல் தன் திருமார்பில் மின்ன, கருணையாகிய நீரைப் பொழியும் பரமபதநாதனுகிய மேகத்தைக் கண்டு, அடியார்களின் கண்களாகிய மயில்கள் ஆநந்தக்கூத்தாடும் இடம் பரமபதமாகும். அங்குச்சென்று நித்யமுக்தர்களுடன் கூடிக் கைங்கர்யம் செய்ய உரிமைபெற்றிருந்தும் அவிவேகத்தால் பாசுபதமதத்தில் ப்ரவேசித்து அந்தப் பாக்யத்தை இழந்தவர்கள் இனியாவது அம்மதத்தை வெறுத்து ஸதாசார்யர்களைச் சரணமடைந்து உய்யக் கடவர் —என்றவாறு. 42

பாசுரம் 43, 44—ஸ்ரீபாஞ்சராத்ரசாஸ்த்ரத்தின் விளக்கம்

கட்டளைக்கலித்துறை

196 யாது மிலாதவன் றும்யவர்க் குங்நன்றி யெண்ணியநம்
மாதவ ஞர்வத னத்தமு துண்ணும் வலம்புரிபோல்
வாதுக ளாலழி யாமறை மௌலியின் வான்பொருளே
யோதிய பஞ்சாத் திரமுக வாரை யோழுக்குவமே. 43

[பாசுரம் 43, 44—பகவச்சாஸ்த்ரவிரோதபங்காதிகாரம்]

உரை:— யாதும் இலாத அன்றும் - ஒரு வஸ்துவும் இல்லாது அழிகின்ற மஹாப்ரளயகாலத்திலும் (தான் அழியாது நின்று), யவர்க்கும் நன்றி எண்ணிய – எந்த ஜீவனுக்கும் நன்மையையே செய்ய ஸங்கல்பித்த, நம் மாதவனுர்-நம் பிராட்டியின் நாயகனுன எம்பெருமானுடைய, வதனத்து அமுது உண்ணும் – திருமுகமண்டலத்திலுள்ள அம்ருதத்தைப் பருகுகின்ற, வலம்புரிபோல் - வலம்புரிச்சங்கம்போல், வாதுகளால் அழியா-(ப்ரதிவாதிகளின்) வாதங்களால் அழியாத, மறை மௌலியின்–வேதாந்தத்தின், வான் பொருளே–சிறந்த அர்த்தத்தையே, ஓதிய - வெளியிடுகின்ற, பஞ்சாத்திரம் – ஸ்ரீபாஞ்சராத்ரசாஸ்த்ரத்தை, உகவாரை – (ப்ரமாணமாக ஏற்றுக்கொள்ளாது) வெறுப்பவரை, ஒழுக்குவம் – நம் வழியே நடக்குமாறு செய்வோம்.

எம்பெருமான் தானே அருளிச்செய்த ஸ்ரீபாஞ்சராத்ரசாஸ்த்ரம், பிறமதத்தினரின் வாதங்களால் அழியாத வேதாந்தத்தின் ஸாரார்த்தத்தையே தன்னுள் அடக்கிக்கொண்டு நிற்கும். ஆனதுபற்றி ஸ்ரீபாஞ்சராத்ரசாஸ்த்ரத்திற்கு, எக்காலத்தும் அழியாது நிற்கும் எம்பெருமானுடைய திருப்பவளச்செவ்வாயின் திவ்யாம்ருதத்தைப்பருகும் பாக்யம் பெற்ற வலம்புரிச்சங்கம் உவமானமாக்கப்பட்டது.

இத்தகைய ஸ்ரீபாஞ்சராத்ரசாஸ்த்ரத்தை ஏற்றுக்கொள்ளாது விபரீதமான கொள்கையுடைய பிறமதத்தினரையும் வழிப்படுத்தி நம் ஸித்தாந்தத்தை ஏற்குமாறு செய்வோம்—என்றவாறு.

'பஞ்சராத்திரம்' எனுஞ் சொல் தளைநோக்கிப் 'பஞ்சாத்திரம்' என மருவிநின்றது. பஞ்சராத்ரம் என்ற பாடத்தையே கொண்டு பஞ்சரா, த்ரம்முக, வாரை என்று சீர்பிரித்தலும் ஒருவாறு பொருந்தும். 43

ஸ்ரீபாஞ்சராத்ரம்—பகவான் நேரில் கண்ட சாஸ்த்ரம்

எண்சீராசிரியவிருத்தம்

197 பூவலருந் திருவுந்திப் புனிதன் வையம்
பொன்னடியா லளந்திருவர் போற்ற நின்ற
நாவலருங் கலைகளெலாந் தன்னை நாட
நாடாத நன்னிதியா நணுகு நாதன்
கோவலனுய் நிரையளித்த நிறைபோல் வேதங்
கோவாகக் கோமானு யதன்பால் சேர்த்துக்
காவலிது நல்லுயிருக் கென்று காட்டுங்
கார்த்தயுகக் கதிகண்டோங் கரைகண் டோமே. 44

உரை:— பூ அலரும் - தாமரைப்பூ மலர்கின்ற, திரு உந்தி – (எம்பெருமானது) திருநாபியில் தோன்றிய, புனிதன் – பரிசுத்தனுன ப்ரஹ்மாவின், வையம் – லோகமாகிய ஸத்யலோகம் வரையுள்ள

மேலுலகங்களை, பொன் அடியால் அளந்து – அழகிய திருவடியால் (த்ரிவிக்ரமாவதாரத்தில்) அளந்து, இருவர் போற்ற நின்ற – (ப்ரஹ்மாவும் சிவனுமாகிய) இருவர் ஸ்தோத்ரம் செய்ய (உயர்ந்து) நின்றவனும், நா அலரும் கலைகள் எலாம் – நாவினிடத்து விரிகின்ற (வேதம் முதலிய) சாஸ்த்ரங்கள் முழுதும், தன்னை நாட – தன் ஸ்வரூபத்தை (யறிய)த் தேடி நிற்க, நாடாத நல் நிதியா – தேடவேண்டாத (எளிதில் அடையத்தக்க) சிறந்த சேமநிதியாகவிருந்து, நணுகும் – (சேதநாசேதநங்களுள்) ஒன்றிக்கலப்பவனுமாகிய, நாதன் – எம்பெருமான், கோவலனாய் நிரை அளித்த நிறைபோல் – (முன்) கோபாலனாய்ப் பசுமந்தையைக் காத்த பெருமை போல், வேதம் கோவாக – வேதம் பசுவாய்நிற்க, கோமானாய் – (தான் பசுவைக் கறக்கும்) இடையனாகி, அதன் பால் சேர்த்து – அந்த (வேதமாகிய) பசுவின் பாலை (ஸாரத்தை)ச் சேர்த்து, இது – இந்த ஸாரம், உயிருக்கு – சேதநருக்கு, நல் காவல் என்று காட்டும் – சிறந்த ரக்ஷகமாகும் என்று வெளியிட்ட, கார்த்தயுகக் கதி – க்ருதயுகதர்மங்களைப் போதிக்கும் பஞ்சராத்ர சாஸ்த்ரத்தை, கண்டோம் – நன்கு அறிந்தோம்; கரை கண்டோம் – (ஸம்ஸார ஸமுத்ரத்தின்) கரையை அடைந்தோம்.

கருத்து:— முன் எம்பெருமான் வாமனனாக இருந்து த்ரிவிக்ரமனாக வளர்ந்தபோது அவனுடைய திருவடி ப்ரஹ்மாவின் ஸத்யலோகம் வரை சென்று அளந்தது. அப்பொழுது பிரமன் அதற்குத் திருமஞ்சனம் செய்தான். பின் கீழே பெருகிய அந்தத் தீர்த்தத்தை மஹேசுவரன் தன் முடியில் தாங்கினான். அவ்வெம்பெருமான்பெருமையை அவ்விரு தேவர்களும் போற்றினர். அத்தகைய பகவானுடைய ஸ்வரூபத்தையும் குணங்களையும் அறிவதற்கு வேதம் முதலிய சாஸ்த்ரங்கள் அனைத்தும் முயன்று தேடிக் களைப்படைந்து நிற்கின்றன. அவனோ ஆச்ரிதர்கள் தன்னைத் தேடவேண்டாதபடி மிகவும் எளிய ஒரு சேமநிதியாய்த் தானாகவே அடியார்களிடம் நெருங்கிநிற்கின்றான். அவன் முன்பு பசுநிரையைக் காத்தது போல் இப்பொழுதும் தானே இடையனாய் நின்று வேதமாகிய பசுவைக் கறந்து, அதன் ஸாரமாகிய பாலமுதை எடுத்து ஸ்ரீபாஞ்சராத்ரம் என்னும் சாஸ்த்ரமாகப் பொழிந்தான்; சேதநருக்கு இதுவே நல்ல ரக்ஷகமாகும் என்று உலகுக்கு வெளியிட்டான். க்ருதயுகதர்மத்தைத் தெளிவாய்ப் போதிக்கும் அச்சாஸ்த்ரத்தை நாம் நன்குகற்று ஸம்ஸாரஸமுத்ரத்தினின்று உய்யும் வழிபெற்றோம்—என்றவாறு. 44

இனி மூன்று பாசுரங்களால் பிறமதத்தினர் கூறும் உபாயத்தின் ஸ்வரூபத்தைக் கண்டித்து, நம் ஸித்தாந்தப்படி உபாயத்தின் ஸ்வரூபத்தையும் மேன்மையையும் பேசுகிறார்—

ஸ்ரீமந்நாராயணன் தன் திருவடிகளை உபாயமாகக் காட்டல்

கட்டளைக்கலித்துறை

198 **நமக்கார் துணையென நாமென் றருடரு நாரணனு**
ருமக்கா றிவையென் றடியிணை காட்ட வுணர்ந்தடையு
மெமக்கோர் பரமினி யில்லா திருவினை மாற்றுதலிற்
றமக்கே பரமென்று தாமுய லுந்தரஞ் சாற்றுவமே. 45

[பாசுரம் 45, 46, 47— பரோக்தோபாயபங்காதிகாரம்]

உரை:— நமக்கு – '(ஸம்ஸாரத்தில் கிடக்கும்) நமக்கு, துணை ஆர் என – ஸஹாயம் யார்?' என்று (கலங்கி) நிற்க, நாம் என்று – 'நாம் (ஸஹாயமாய் நிற்போம்') என்று (கூறி), அருள் தரும் – (நம்மீது) அருள்புரிகின்ற, நாரணனுர் – ஸ்ரீமந்நாராயணனுர், உமக்கு இவை ஆறு என்று – '(ஸம்ஸாரிகளான) உமக்கு இவை உபாயம்' என்று, அடி இணை காட்ட –(தம்) இரண்டு திருவடிகளையும் (நமக்குக்) காட்டியருள, உணர்ந்து அடையும் எமக்கு – (அவ்வாறு) அறிந்து (அவற்றைச் சரணமாக) அடைகின்ற எமக்கு, இனி ஓர் பரம் இல்லாது – இனி ஒரு பொறுப்பும் இல்லாமல், இருவினை மாற்றுதலில் – (புண்யபாபங்களாகிய) இரண்டு கர்மங்களையும் ஒழிப்பதில், பரம் தமக்கே என்று – பொறுப்பு தம்முடையதே என்று (நினைந்து), தாம் முயலும் தரம் – (மற்ற உபாயங்களின் ஸ்தாநத்தில் தாமே நின்று பலன் கொடுக்கத்) தாம் முயல்கின்ற பெருமையை, சாற்றுவம் – (இவ்வதிகாரத்தில்) கூறுவோம்.

கருத்து:— சேதநர்கள் 'ஸம்ஸாரத்தில் கிடந்து அல்லலுறும் நமக்குத்துணையாவார் யார்?' என்று கவலையடைய, ஸ்ரீமந்நாராயணனுர் 'நாம் இருக்கின்றோம்; கவலை வேண்டாம்' என்று அருளிச்செய்து, 'இவைஇரண்டுமே உங்களுக்கு உபாயம்' என்று கூறித் தம் இரண்டு திருவடிகளையும் காட்டியருளினுர். அவர், அவற்றைச் சரணமடைந்த நமக்கு ஒரு பொறுப்புமின்றி, கர்மங்களை ஒழிக்கும் பொறுப்பைத் தம்முடையதாகக்கொண்டு, மற்ற உபாயங்களின் ஸ்தாநத்தில் தாமே நின்று பலன் கொடுக்க முயல்கின்ற பெருமையை இவ்வதிகாரத்தில் கூறுவோம்–என்றவாறு. *45*

ஸ்ரீமந்நாராயணன் திருவடியே உபாயம்

எண்சீராசிரியவிருத்தம்

199 **பலத்திலொரு துவக்கற்ற பதவி காட்டிப்**
பல்லுயிருந் தடுமாறப் பண்ணு கின்ற
கலித்திரளின் கடுங்கழுதைக் கத்து மாற்றிக்
கண்ணுடையார் கண்டுரைத்த கதியைச் சொன்னேம்

வலத்திலகு மறுவோன்ருன் மறுவோன் றில்லா
மாமணியாய் மலர்மாத ரோளியா மங்நன்
னலத்திலொரு நிகரில்லா நாதன் பாத
நல்வழியா மல்வழக்கார் நடத்து வாரே. 46

உரை:— பலத்தில் ஒரு துவக்கு அற்ற – பலனில் ஒரு ஸம்பந்தமுமில்லாத (அதாவது ஒரு பலனேயும் கொடுக்காத வீணை), பதவி காட்டி – உபாயத்தை வெளியிட்டு, பல் உயிரும் – (அதைக் கைக்கொண்ட) பல சேதநர்களேயும், தடுமாறப் பண்ணுகின்ற – (பலன் பெருது) தவிக்கும்படி செய்த, கலித்திரளின் – பிறமதத்தினராகிய கலிபுருஷரது கூட்டத்தின், கடும் கழுதைக் கத்து – கொடிய கழுதைக் கூவிளிபோன்ற ஆரவாரக்கூப்பாட்டை, மாற்றி – ஒழித்து, கண் உடையார் – (சிறந்த ஜ்ஞாநக்) கண்களேயுடையவர் (களான பூர்வாசார்யர்) கள், கண்டு உரைத்த – (தாம்) கண்டு (நமக்கு) உபதேசித்த, கதியைச் சொன்னேம் – உபாயத்(தின் ஸ்வரூபத்)தை வெளியிட்டோம். (அவ்வுபாயமாவது—) வலத்துஇலகும் – (திருமார்பின்) வலப்பக்கத்திலுள்ள, மறு ஒன்ருல் – (ஸ்ரீவத்ஸமென்னும்) ஒரு மறுவினேடு, மறு ஒன்று இல்லா – வேறு மறு (குற்றம்) ஒன்றும் இல்லாத, மா மணியாய் – பெரிய நீலரத்நமாகி, மலர் மாதர் ஒளி ஆம் – (தாமரை) மலரிலுள்ள பிராட்டி (மணியாகிய தனக்கு) ப்ரகாசமென்னலாம்படி உள்ளவனும், அந் நல் நலத்தில் – அந்தச் சிறந்த பரிபூர்ணாநந்தத்தில், ஒரு நிகர் இல்லா – ஸமமான ஒருவஸ்து இல்லாதவனுமான, நாதன் பாதம் – எம்பெருமானுடைய திருவடியே, நல் வழி ஆம் – சிறந்த உபாயமாகும், அல்வழக்கு – (இவ்விஷயத்தில்) தகாத விவாதங்களே, ஆர் நடத்துவார்– யார் நடத்தமுடியும்?

கருத்து:— பிறமதத்தினர், உலகுக்கு உபாயத்தின் ஸ்வரூபத்தை விபரீதமாய்க்காட்டி அதைக் கைக்கொண்டவர்கள் ஒரு பலனேயும் பெருது தவிக்குமாறு செய்தவர்களாதலின் அவர்கள் கலிபுருஷர்களாவர். அவர்களது வாதம் கழுதைக்கூவிளியாகும். அவர்கள் மதத்தைக் கண்டித்து, ஞானக்கண் பெற்ற நம் ஆசார்யர்கள் தாம் நன்கு அறிந்து நமக்கு உபதேசித்த சிறந்த உபாயத்தை இவ்வதிகாரத்தில் வெளியிட்டோம். அதாவது – ஸ்ரீவத்ஸமென்னும் மறுவைத் தன் மார்பில் அணிந்து, சிறந்த நீலமணி வடிவுகொண்டு அதன் ப்ரகாசமாகிய பிராட்டியுடன் பிரியாது பரிபூர்ணாநந்தத்தில் நிகரற்றவனை எம்பெருமான்திருவடிகளே நமக்குச் சிறந்த உபாயமாகும். இவ்விஷயத்தில் தகாத வழக்குகளே யார் கூறமுடியும்? – என்றவாறு.

மறுவுனடமையும் மறுவற்றமையும் கூறிய சுவை காண்க. 46

ப்ரபத்தியில் உள்ள ஸௌகர்யமும் சிறப்பும்

200 எல்லார்க்கு மெளிதான வேற்றத் தாலு
மினியுரைக்கை மிகையான விரக்கத் தாலுஞ்
சொல்லார்க்கு மளவாலு மமைத லாலுந்
துணிவரிதாய்த் துணைதுறக்குஞ் சுகரத் தாலுங்
கல்லார்க்குங் கற்றூர்சொற் கவர்த லாலுங்
கண்ணனுரை முடிசூடி முடித்த லாலு
நல்லார்க்குந் தீயார்க்கு மிதுவே நன்று
நாரணற்கே யடைக்கலமாய் நணுகு வீரே. 47

உரை:— எல்லார்க்கும் - ஸகலசேதநருக்கும், எளிதான — (அநுஷ்டிக்க) எளியதாயிருக்கையாகிய, ஏற்றத்தாலும் – பெருமையாலும், இனி – ஒருமுறை அநுஷ்டித்த பின், உரைக்கை - (மறுபடி அதே பலனுக்காக ப்ரபத்திவாக்யத்தை) உச்சரிக்கை, மிகையான — (ப்ரஹ்மாஸ்த்ரந்யாயத்தாலே) அதிகம் என்னும்படியான, இரக்கத்தாலும் – கருணையை (எம்பெருமானுக்கு) உண்டாக்குவதாலும், சொல் — ப்ரபத்திவாக்யம், ஆர்க்குமளவாலும் – பூர்ணமாய் உச்சரிக்கப்பட்ட மாத்ரத்தாலும், அமைதலாலும் – (பலன் கொடுக்கப்) போதுமாகையாலும், துணிவு அரிதாய்-மஹாவிச்வாஸமென்னும் ப்ரபத்தியின் அங்கம் (அநுஷ்டிக்கக்) கடினமாயினும், துணை துறக்கும் – (அதிலும் கடினமான ஜ்ஞாநயோகம் கர்மயோகம் முதலிய) அங்கங்களை விட்டு விடுகையாகிய, சுகரத்தாலும் – ஸௌகர்யத்தாலும், கல்லார்க்கும் – ஜ்ஞாநமில்லாத ஸாதாரண அதிகாரிகளுக்கும், கற்றூர் சொல் — விசேஷ ஜ்ஞாநமுள்ள ஆசார்யர்கள் அநுஸந்திக்கும் ப்ரபத்திவாக்யம், கவர்தலாலும் – பலனைக் கொண்டிருத்தலாலும், கண்ணன் உரை — கண்ணனுடைய திவ்யஸூக்தி (யாகிய கீதை) யின், முடி சூடி – சிகர(மாய் விளங்கும் சரமசுலோக) த்தில் விவரிக்கப்பெற்று, முடித்தலாலும் - (ஸ்ரீகீதையைத்) தலைக்கட்டியபடியாலும், நல்லார்க்கும் — புண்யசாலிகளுக்கும், தீயார்க்கும் – பாபிகளுக்கும், இதுவே – இந்த ப்ரபத்தியே, நன்று ஆம் – சிறந்த உபாயமாகும், (ஆதலின்) நாரணற்கே – ஸ்ரீமந்நாராயணனுக்கே, அடைக்கலமாய் – ரக்ஷிக்கப்பட வேண்டிய வஸ்துவாகவிருந்து, நணுகுவீர் – (அவனைச் சரணமாக) அடையுங்கள்.

கருத்து:— ப்ரபத்தி ஸகலசேதநர்க்கும் மிகச் சுலபமாய் அநுஷ்டிக்கக்கூடியது; ப்ரஹ்மாஸ்த்ரம் ப்ரயோகிக்கப்பட்ட பின்பு மற்ற அஸ்த்ரத்தை அது பொறுக்காததுபோல் ஒருகால் ப்ரபத்தியை அநுஷ்டித்தபின்பு அதே பலனுக்காக மறுபடியும் செய்யவேண்டாதபடி எம்பெருமானுக்குக் கருணையை உண்டாக்குகின்றது; இதன் அங்கங்களில் தெளிவான ஜ்ஞாநமில்லாவிடினும் ஆசார்யன் உபதேசித்த ப்ரபத்திவாக்யத்தை உச்சரித்தாலே பலன் கொடுக்

கின்றது; சிறிய உபாயமாகிய இதனால் பெரிய பலனைப்பெறுவதில் நிச்சயமாகிய மஹாவிசுவாஸமென்னும் அங்கம் ஸித்திப்பது அரிதாயிருப்பினும் பக்தியோகத்தைப்போல் ஜ்ஞாநயோகம் கர்மயோகம் முதலிய அங்கங்களை அநுஷ்டிக்க வேண்டிய அளவு சிரமம் இதில் இல்லை. மேலும் ஜ்ஞாநமில்லாதவர்களுக்கும் ஆசார்யன் செய்த ப்ரபத்தியே போதியதாய்ப் பலனைத் தருகின்றது. இதுவன்றி, பகவத்கீதையின் முடிவில் சரமசுலோகத்தில் ப்ரபத்தியே பேசித் தலைக்கட்டப்பெற்றதாகும். இங்ஙனம் புண்யசாலி – பாபி என்ற பேதமின்றி அனைவருக்கும் செய்யக் கூடியதாய்ப் பக்தியோகத்தைக் காட்டிலும் மிகப் பெருமைபெற்று விளங்கும் ப்ரபத்தியின் மேன்மையையறிந்து நீங்கள் ஸ்ரீமந்நாராயணனையே சரணமாக அடையுங்கள்—என்றவாறு. 47

பிறமதத்தினர் கூறும் பலனுடைய ஸ்வரூபத்தைக் கண்டித்தல்

கட்டளைக்கலித்துறை

201 பண்டை மறைக்குப் பகையென நின்ற பரமதங்கள்
கோண்டவர் கோள்ளும் பயனொன் றிலதேனுங் கூர்மதியால்
வண்டுவ ரைக்கர சானநம் மாயனை வானுலகிற்
கண்டு களிப்ப தேனுங்காத லோன்றைக் கருதுவமே.

[பாசுரம் 48, 49- பரோக்தப்ரயோஜநபங்காதிகாரம்]

உரை:— பண்டை மறைக்கு - அநாதியான வேதத்திற்கு, பகை என நின்ற - விரோதி என்னும்படி நின்ற, பரமதங்கள் – பிறமதங்களை, கொண்டவர் கொள்ளும் - கைக்கொண்டவரால் அடையப்படுகின்ற, பயன் ஒன்று இலது எனும் - பலன் ஒன்றும் இல்லை என்று அறிந்து கூறும்படியான, கூர் மதியால் – ஸூக்ஷ்மமான புத்தியோடு, வண் துவரைக்கு அரசான – அழகிய த்வாரகாநகரத்தின் நாயகனான, நம் மாயனை – அதிசயச்செய்கையுடைய நம் கண்ணனை, வானுலகில் - பரமபதத்தில், கண்டு களிப்பது எனும் – ஸேவித்து ஆநந்திப்பது என்ற, காதல் ஒன்றை - ஆவல் ஒன்றையே, கருதுவம் – எண்ணுவோம்.

கருத்து:— அநாதியான வேதத்திற்கு விரோதியாய் நிற்கும் பிறமதத்தைப் பற்றியவர்கள் இம்மை மறுமைப்பயன் யாதுமிலாது வீண்பாடுபடுவதையறிந்த நாம் எம்பெருமானைப் பரமபதத்தில் அநுபவித்தலாகிய மஹா புருஷார்த்தத்தைப்பெற ஆவலுடையோம்— என்றவாறு. 48

ஸித்தாந்தத்தின்படி பலனுடைய ஸ்வரூபம்

எண்சீராசிரியவிருத்தம்

202 கலந்திகழும் போகங்கள் கண்டு வேள்கிக்
காரியமுங் காரணமுங் கடந்து நாம்போய்க்
குலந்திகழுங் குருக்களடி சூடி மன்னுங்
குற்றேவ லடியவர்தங் குழாங்கள் கூடி

வலந்திகழுந் திருமகளு மற்றி டத்தே
மன்னியமண் மகளாரு நீளை யாரு
நலந்திகழ வீற்றிருந்த நாதன் பாத
நமக்கிதுவே முடியென்ன நண்ணி னோமே. 49

உரை:— கலந்து இகழும் – (விஷம் கலந்த தேன்போல் துக்கத் துடன்) கலந்திருந்து (அதனால்) இகழப்படுகின்ற, போகங்கள் கண்டு வெள்கி – உலகஸுகங்களைப் பார்த்து வெட்கமடைந்து (உபாயத்தை அநுஷ்டித்து), காரியமும் – (மஹான் அஹங்காரம் அல்லது சரீரம் இந்த்ரியம் முதலிய) கார்யங்களையும், காரணமும் – மூலப்ரக்ருதியையும், கடந்து – தாண்டி, நாம் போய் – நாம் (ஸ்ரீவைகுண்டத்திற்குச்) சென்று, குலம் திகழும் குருக்கள் – (அங்கே) கூட்டமாய் ப்ரகாசிக்கின்ற (நம்) ஆசார்யர்களின், அடி சூடி – திருவடியை (நம் தலையில்) சூடி, மன்னும் குற்றேவல் – நிலையான கைங்கர்யத்தைச் செய்கின்ற, அடியவர்தம் – (நித்யஸூரிகளும் முக்தர்களுமாகிய)பாகவதர்களின், குழாங்கள் கூடி – கோஷ்டிகளில் கூடியிருந்து, வலம் திகழும் திருமகளும் – வலப்பக்கத்தில் ப்ரகாசிக்கின்ற லக்ஷ்மியுடனும், இடத்தே மன்னிய – இடப்பக்கத்தில் நித்யவாஸம் செய்கின்ற, மண் மகளாரும் நீளையாரும் – பூமிப்பிராட்டி யுடனும் நீளாதேவியுடனும், நலம் திகழ – ஆநந்தம் மிகும்படி, வீற்றிருந்த நாதன் பாதம் – எழுந்தருளியுள்ள எம்பெருமானுடைய திருவடியை, நமக்கு இதுவே முடியென்ன – “நமக்கு இதுவே கிரீட மாகும்” என்னும்படி, நண்ணினோம் – பொருந்திநின்றோம்.

மற்று – அசை.

கருத்து:— உலகசுகங்களை வெறுத்து, உபாயத்தை அநுஷ்டித்து, ஸம்ஸாரத்தினின்று விடுபட்டு, ஸ்ரீவைகுண்டத்தில் ஆசார்யர்களின் திருவடிகளை வணங்கி, பாகவத கோஷ்டியுள் கலந்து, வலது புறத்தில் பெரிய பிராட்டியும் இடதுபக்கத்தில் ஸ்ரீபூமிநீளாதேவிகளுமாகப் பரமா நந்தபரிதனாய் எழுந்தருளியுள்ள ஸ்ரீமந்நாராயணன் திருவடிகளை முடியில் தரித்துக் கைங்கர்யம் செய்வோம் — என்றவாறு. *49*

வேதத்தைத் தழுவாத மதம் தர்மத்தைப் போதியாமை

கட்டளைக்கலித்துறை

203 மானங்க ளின்றி வகுத்துரைக் கின்ற மதங்களெலாந்
தானங்க ளன்று தரும நெறிக்கென்று சாற்றியபின்
வானங் கவர்ந்து மறைமுடி சூடிய மாதவத்தோர்
ஞானங்க ளொன்ற நடக்கின்ற நல்வழி நாடுவமே. 50

[பாசுரம் 50-முதல் முடிவுவரை — நிகமநாதிகாரம்]

உரை:— மானங்கள் இன்றி – (வேதம் முதலிய) ப்ரமாணங்களைக் கொள்ளாமல், வகுத்து உரைக்கின்ற – (தோன்றியவாறு) பிரித்து

விளக்குகின்ற, மதங்கள் எலாம் – மதங்கள் அனைத்தும், தருமநெறிக்கு – தர்ம மார்க்கத்திற்கு, தானங்கள் அன்று – இடங்களாகமாட்டா, என்று சாற்றிய பின் – என்று ஸ்தாபித்தபின், வானம் கவர்ந்து – பரமபதத்தை ஆசைப்பட்டு, மறை முடி சூடிய – வேதாந்தத்தில் முடிசூடி நிற்பவரும், மா தவத்தோர் – பெரிய தவமாகிய ப்ரபத்தியை அநுஷ்டித்தவருமான நம் பூர்வாசார்யர்கள், ஞானங்கள் ஒன்ற நடக்கின்ற – சாஸ்த்ரங்கள் (ஒன்றுக்கொன்று விரோதமில்லாது) ஒருமுகமாய்ச் சேரும்படி நடக்கின்ற, நல்வழி நாடுவம் – சிறந்த மார்க்கத்தைப் பற்றுவோம்.

கருத்து:— வேதத்தைத் தழுவாத எந்த மதநூலும் தர்மத்தைப் போதிக்கமாட்டாது என்று ஸ்தாபித்து, பூர்வாசார்யர்கள் சாஸ்த்ரங்களில் ஒன்றுக்கொன்று விரோதமில்லாதபடி ஒருமுகப்படுத்தி அதற்குத்தக அநுஷ்டித்த முறையைக் கைக்கொள்வோம்–என்றவாறு.

முன்னோரின் அடிச்சுவட்டைப் பின்பற்றுதல்

கட்டளைக்கலித்துறை

204 தன்னடிக் கீழுல கேழையும் வைத்த தனித்திருமால்
பொன்னடிக் கேற்கின்ற புண்ணியர் கேண்மின் புகலறிவார்
முன்னடி பார்த்து முயலுத லாலவர் சாயையெனப்
பின்னடி பார்த்து நடந்து பெரும்பத மேறுவமே. 51

உரை:— தன் அடிக் கீழ் – தன் திருவடியின் கீழ், உலகு ஏழையும் வைத்த – ஏழுலகத்தையும் நிறுத்தியாள்கின்ற, தனித் திருமால் – ஒப்பற்ற எம்பெருமானுடைய, பொன் அடிக்கு – அழகிய திருவடிகளைப் பெற்று அநுபவிப்பதற்கு, ஏற்கின்ற – தகுதியுள்ள, புண்ணியர் – புண்யசாலிகளே!, கேண்மின்! – (நமக்கு நன்மையான தொன்றைக் கூறுகின்றேன்) கேட்பீராக. புகல் அறிவார் – உபாயங்களின் ஸ்வரூபத்தை அறிந்த நம் ஆசார்யர்கள், முன் அடி பார்த்து – தங்கள் பெரியோர் அடிச்சுவட்டைக் கவனித்து, முயலுதலால்–(அதன்படியே நடக்க) முயலுதலால், அவர் பின் சாயை என – (நாமும்) அவர்பின் நிழல் என்னும்படி, அடி பார்த்து – (அவர்கள்) அடிச்சுவட்டையே கவனித்து, நடந்து – (அவ்வாறே) நடந்து, பெரும் பதம் ஏறுவம் – மிக உயர்ந்த ஸ்தாந (மாகிய பரமபத) த்தை அடைவோம்.

கருத்து:— புண்யசாலிகளே! எம்பெருமான் தன் திருவடிகளின் கீழ் ஸகலலோகங்களையும் வைத்து ஆள்கின்றான். அவன் திருவடிகளை இடைவிடாது அநுபவிக்க எல்லோருக்கும் தகுதி உண்டு. நம் அனைவருக்கும் நன்மையானதொன்றைக் கூறுகின்றோம். கேண்மின்–நம் ஆசார்யர்கள் தங்கள் பெரியோரின் அடிச்சுவட்டையே பின்பற்றி நடந்து வந்தனர். நாமும் நம் ஆசார்யர்கள் சென்ற வழியே சென்று ஸ்ரீவைகுண்டத்தை அடைவோமாக–என்றவாறு. 51

ஸ்ரீவ்யாஸபகவான் காட்டியதே நல்வழி

எண்சீராசிரியவிருத்தம்

205 வையமெலா மிருணீக்கு மணிவி ளக்காய்
மன்னியநான் மறைமௌலி மதியே கொண்டு
மெய்யலது விளம்பாத வியாசன் காட்டும்
விலக்கில்லா நல்வழியே விரைந்து செல்வீ
ரையமற வறுசமயக் குறும்ப றுத்தோ
மணியரங்க ரடியவர்க்கே யடிமை செய்தோ
மையகடல் வட்டத்துண் மற்றுந் தோற்றும்
வாதியர்தம் வாய்ப்பகட்டை மாற்றி னோமே. 52

உரை:— ஐயம் அற - ஸந்தேஹமில்லாமல், அறு சமயக் குறும்பு- ஆறு மதங்களின் வலிமையை, அறுத்தோம் - ஒழித்துவிட்டோம்; அணி அரங்கர் அடியவர்க்கே - அழகிய ஸ்ரீரங்கநாதனுடைய தாஸர்களுக்கே, அடிமை செய்தோம் - கைங்கர்யம் செய்யப்பெற்றோம். மைய கடல் வட்டத்துள் - கருமையான கடல் சூழ்ந்த பூமியுள், மற்றும் தோற்றும் - இன்னும் ஏற்பட்டுள்ள, வாதியர்தம் - வாதிகளுடைய, வாய்ப் பகட்டை - வாய்ப்பேச்சின் ஆடம்பரத்தை, மாற்றினோம் - ஒழித்தோம்; (ஆதலால் இனி) வையம் எல்லாம் - உலகம் முழுதும் (உள்ள), இருள் நீக்கும் - (அஜ்ஞானமாகிய) இருளைப் போக்குகின்ற, மணிவிளக்காய் - ரத்நதீபமாய், மன்னிய - பொருந்திய, நான்மறை மௌலி - நான்கு வேதங்களின் அந்தத்தின், மதியே கொண்டு - ஜ்ஞானத்தையே (ஸாதநமாகக்) கொண்டு, மெய் அலது விளம்பாத - ஸத்ய(மான விஷய)ம் தவிர வேறு பேசாத, வியாசன் காட்டும் - வ்யாஸ மஹர்ஷி (ப்ரஹ்மஸூத்ரத்தின் மூலமாய்க்) காட்டிய, விலக்கு இல்லா- (வேத) விரோதம் இல்லாத, நல் வழியே - சிறந்த மார்க்கத்திலேயே, விரைந்து செல்வீர் - வேகத்துடன் செல்வீர்களாக.

கருத்து:— ப்ரதிவாதிகளின் மதங்களைக் கண்டித்துத் தீர்த்து விட்டபடியால் இனி அவ்விஷயத்தில் ஸந்தேகம் ஏற்பட இடமில்லை. வேதாந்தம் ரத்நதீபமாய் நின்று உலகிலுள்ள அஜ்ஞாநமாகிய இருளைப் போக்குகின்றது. இந்த வேதாந்தத்தின் கரைகண்டு,அதன் ஸாரத்தைத் திரட்டி ப்ரஹ்மஸூத்ரமாக அருளினர் ஸத்யமே பேசுபவரான வ்யாஸ பகவான். அவர் காட்டிய வழியே வேதத்தைத் தழுவிச் சிறந்ததாகும். அதில் செல்வதே சிறந்ததாம். நாங்கள் அவ்வழியே சென்று திருவரங்கனுக்கு மெய்யடியார்களான பாகவதர்க்குக் கைங்கர்யம் செய்யும் பேறுபெற்றோம்—என்றவாறு.

ப்ரஹ்மஸூத்ரத்தில் பக்தி - ப்ரபத்தியாகிய இருவகை உபாயங்களும் கூறப்பட்டுள்ளன. இந்த இரண்டில் சில வகுப்பினருக்கே உரியதாய் விளம்பித்துப் பலன் தருவதான

பக்தியோகத்தைவிட்டு, எல்லோருக்கும் உரிய (விலக்கு இல்லாத) ப்ரபத்திமார்க்கத்தைக் கைக்கொண்டு விரைவில் பலன் பெறுவீர் — என்ற கருத்து 'விலக்கில்லா' 'விரைந்து' என்ற சொற்களால் புலனுவதாகப் பெரியோர் கூறுவர்.

அறுசமயம்—90-வது பாசுரவுரையிற் காண்க. 52

இப்பிரபந்தத்தைத் தலைக்கட்டிய வகை கூறல்

எண்சீராசிரியவிருத்தம்

206 **கோதவமொன் றில்லாத தகவே கொண்ட**
கொண்டலென வந்துலகி லைவர்க் கன்றோர்
தூதுவனு யொருகோடி மறைக ளெல்லாந்
தொடர்ந்தோடத் தனியோடித் துயரந் தீர்த்த
மாதவனுர் வடகோங்கில் வானி யாற்றின்
வண்ணிகைநன் னடங்கண்டு மகிழ்ந்து வாழும்
போதிவைநாம் பொன்னயிந்தை நகரின் முன்னுட்
புணராத பரமதப்போர் பூரித் தோமே. 53

உரை:— கோது அவம் ஒன்று இல்லாத-குற்றம் கேடு ஒன்றுமில்லாத, தகவே கொண்ட — கருணையையே (நீராகக்) கொண்ட, கொண்டல் என — மேகம் என்னும்படி, உலகில் வந்து — இவ்வுலகில் அவதரித்து, அன்று — அக்காலத்தில், ஐவர்க்கு — பஞ்சபாண்டவர்க்கு, ஓர் தூதுவனுய் — நிகரற்ற தூதனுகி, ஒரு கோடி மறைகள் எல்லாம்-ஒப்பற்ற கோடிக்கணக்கான வேதங்களெல்லாம், தொடர்ந்து ஓட — (தன் பெருமையைப் புகழ்ந்து) தொடர்ந்து ஓடிவர, தனி ஓடி — (அதற்கு அகப்படாமல் தானே) தனியாகச்சென்று, துயரம் தீர்த்த — (உலகினுடைய) துக்கத்தைப் போக்கிய, மாதவனுர் — எம்பெருமான்.

கருத்து:— எம்பெருமானுகிய காளமேகம், குறைவு அழிவு இல்லாத கருணையாகிய நீர்நிறைந்து நின்றதால் அந்நீரை மக்கள்மீது பொழிய இவ்வுலகில் அவதரித்தது. இத்தகைய எம்பெருமானைக் காணக் கோடிக்கணக்கான வேதங்கள் வல்லமையற்று, அவன் புகழைப் பாடிப் பின்செல்கின்றன. அவற்றுக்கு அகப்படாமல் நின்று பஞ்சபாண்டவர்க்குத் தூதுவனுய் ஓடி உலகின் துயரைத் தீர்த்தான் ஸர்வேசுவரன்.

இவ்வாறு இப்பாசுரத்தின் முற்பகுதிக்குப் பொருள் கொள்வதில் இடர் ஒன்றுமில்லை. ஆனுல் பிற்பகுதிக்குப் பொருள்காண்பதில் பல இடர் உண்டு. பின்வருமாறு நான்குவகையாய்ப் பொருள் கூறலாம்—

(1) மாதவனுர் — எம்பெருமான், பொன் அயிந்தை நகரில் — அழகிய திருவயிந்திரபுரத்தில் (தெய்வநாயகனுக) அவதரித்து), வட

கொங்கில் – வடபுறத்தில், வானி ஆற்றின் – பெருகுகிற கருடநதியின், வண்ணிகை – புகழத்தகுந்த, நல் நடம் கண்டு – சிறந்த நடனத்தைக் கண்டு, மகிழ்ந்து வாழும்போது – ஸந்தோஷித்து எழுந்தருளியிருந்த போது, முன்னாள் புணராத – முன்பு செய்யப்படாத, இவை பரமதப் போர் – இந்தப் பரமதபங்கஸூக்தியை, நாம் பூரித்தோம் – நாம் தலைக்கட்டினோம்.

திருவயிந்திரபுரத்தில் ஸ்ரீக்ருஷ்ணன் தெய்வநாயகனாக அவதரித்து வடபுறத்தில் பெருகுகிற கருடநதியின் அலைகள் அசைந்து நடனமாடுவதைக் கடாக்ஷித்துக்கொண்டு மகிழ்ந்து எழுந்தருளியிருந்த ஸமயத்தில் அவனைக் கண்ணாரக் கண்டு களித்த நாம், பிறமதக் கொள்கைகளில் ஸ்ரீபாஷ்யம் முதலிய ஸ்ரீஸூக்திகளால் கண்டிக்கப் பட்ட அம்சங்களைத் தவிர, இன்னும் ஆக்ஷேபிக்கக்கூடிய பல அம்சங் களையும் கண்டித்துப் பரமதபங்கத்தைப் பூர்த்திசெய்தோம்— என்றவாறு.

[இவ்வாறு பிற்பகுதிக்குப் பதவுரையும் கருத்துரையும் பழைய வ்யாக்கியானத்தையே தழுவி இங்கு எழுதப்பட்டன. இங்ஙனம் பொருள்கொள்வதில் சிற்சில இடர்கள் உள. 'கொங்கு' எனுஞ்சொல் பக்கம் என்ற பொருளைத் தருவதாகத் தமிழ் நிகண்டுகளிலோ இலக்கிய நூல்களிலோ காணப்படவில்லை. மேலும் 'வானி' எனுஞ் சொல் பவானி நதியையோ அமராவதிநதியையோ கூறுமேயன்றிப் 'பெருகுகிற' என்னும் பொருளைத்தருமாவென்பர் தமிழர். 'வண்ணிகை' யெனுஞ் சொல் 'வர்ணிக்கத் தகுந்த' என்ற பொருளைக் கொடுப்பதும் ஆராய வேண்டியதாகும்.]

(2) வடகொங்கில்–கொங்குநாட்டின் வடபுறத்தில், வானி ஆற் றின் - பவானிநதி(க்கரை)யின்கண், மாதவனார் – ஸ்ரீக்ருஷ்ணனுடைய, வண்ணிகை நல் நடம் கண்டு–வேஷம் பூண்டு ஆடுவதுபோன்ற சிறந்த நடனத்தை ஸேவித்துக்கொண்டு, நாம் மகிழ்ந்து வாழும்போது - நாம் மகிழ்ச்சியுடன் வசிக்குங்காலத்தில், பொன் அயிந்தை நகரில் – அழகிய திருவயிந்திரபுரமென்னும் நகரத்தில், முன்னாள் புணராத – முன்பு ஆரம்பிக்கப்பட்டுக் கூடிவரப்பெறாத, பரமதப் போர் இவை – பரமத பங்கம் செய்கின்ற இந்த ஸூக்திகளை, பூரித்தோம்–பூர்த்திசெய்தோம்.

கொங்குநாடு என்பது கோயம்புத்தூர்–சேலம் ஜில்லாவைச் சார்ந்ததும், மைசூரிலுள்ள ஒரு பகுதியுமான தமிழ்நாடு [தமிழ் அகராதி.]

பரமதபங்கம், திருவயிந்திரபுரத்திலேயே ஆரம்பிக்கப் பட்டிருந்தும் நடுவில் கலாபம் முதலிய இடையூறுகளால் பூர்த்தி செய்யப்பெறாமலிருந்து, ஸ்ரீதேசிகன் கொங்குநாட்டில் எழுந்தருளி யிருக்க நேரிட்டு அப்பொழுது பூர்த்திசெய்யப்பட்டிருக்குமென்றும் சிலர் கருத்து உரைப்பர்.]

[இவ்வாறு பொருள் கொள்ளுமிடத்தும், ஸ்ரீதேசிகன் பவானி நதிக்கரையில் பரமதபங்கத்தைப் பூர்த்திசெய்த ஸ்தலம் இது வென்று விளங்காமலிருக்கின்றது. மேலும் அங்கே எம்பெருமானுடைய ஸந்நிதி இருந்த வரலாறும் புலனாகவில்லை.]

(3) வட கொங்கில் வான் யாற்றின் – வடக்கேயுள்ளதும் பரிமளம் மிகுந்ததுமான சிறந்த (யமுநா) நதி (க்கரை)யின் கண், மாதவனார் – கண்ணன் (செய்தருளிய), வண்ணிகை நல் நடம் – வேஷம் பூண்டு ஆடுவதுபோன்ற சிறந்த நடனத்தை (ராஸக்ரீடை முதலிய திருவிளையாடல்களை), பொன் அயிந்தை நகரில் – அழகிய திருவயிந்திரபுரமென்னும் நகரத்தில், நாம் கண்டு மகிழ்ந்து வாழும்போது – நாம் ஸேவித்துக்கொண்டு மகிழ்ந்து வஸிக்குங்காலத்தில், முன்னாள் புணராத பரமதப்போர் இவை – இதற்கு முன்பு அமையாத பரமதபங்கமாகிய இந்தக் கிரந்தத்தை, பூரித்தோம் – முற்றுவித்தோம்.

இதனால், முன்பு கிருஷ்ணாவதாரத்தில் யமுநாநதிக்கரையில் தான் செய்தருளிய பல திவ்யசேஷ்டிதங்களையெல்லாம் தெய்வநாயகன் திருவயிந்திரபுரத்திலேயே தமக்குக் காட்டியருள, அவ்வநுபவத்தால் மிக மகிழ்ந்திருந்த நிலையில் அபூர்வமான இப்பிரபந்தம் முற்றுவிக்கப் பெற்றது—என்றவாறு.

(4) பொன் அயிந்தைநகரில் – அழகிய திருவயிந்திரபுரத்தில், மாதவனார் – அடியவர்க்குமெய்யன், வடகொங்கில்–கொங்குநாட்டின் வடபுறத்தில் (உற்பத்தியாகின்ற), வானியாற்றின் – பெண்ணையாற்றின், வண்ணிகை நல் நடம் கண்டு – லயத்தோடுகூடிய அழகிய நாட்டியத்தைக் கண்டு, மகிழ்ந்து வாழும்போது – ஸந்தோஷித்து நிற்கும்போது, முன்னாள் புணராத – இதற்குமுன் செய்யப்படாத (விலக்ஷணமான), பரமதப்போர் இவை – பரவாதிகளைவென்ற இந்த ஸூக்திகளை, நாம் பூரித்தோம் – நாம் பூர்த்திசெய்தோம்.

முன் ஒருகால், தைமாதத்து ஐந்தாந்தினத்தில் அடியவர்க்கு மெய்யன் பெண்ணையாற்று உத்ஸவம் கண்டருளும்போது ஸ்ரீதேசிகனும் அநுயாத்ரையாக அங்கு எழுந்தருளியிருந்தார். அப்போது பக்கத்தே பல கிராமங்களிலுள்ள தமிழ்ப் புலவர்களான ஜைனர்கள் பலர் ஸ்வாமியின் பெருமையைக் கேட்டுப் பொறாமை கொண்டு ஸ்வாமியிடம் வந்து வாதத்திற்கு அழைத்தனர். ஸ்ரீதேசிகனும் அடியவர்க்குமெய்யனது திருமுன்பே அவர்களை வாதத்தில் தோற்பித்து அந்த வாதத்தின் போக்கையும் இன்னும் பல்வேறு மதக்கொள்கைகளைக் கண்டிக்கும் முறையையும் தொகுத்துப் பரமதபங்கமென்னும் ரஹஸ்யமாக அமைத்தருளினார்—என்று ஓர் ஐதிகமுளது. அதைக் காட்டுகின்றது இப்பாசுரம்.

'பவ' என்ற சொல்லினின்று 'பவானி' என்ற சொல் தேறுவது போல் 'பிநாகி' என்ற சொல்லினின்று 'பிநாகிநி' என்ற

சொல் தேறுகின்றது. 'பவ' 'பிநாகி' என்ற சொற்கள் 'சிவன்' என்ற ஒரே பொருளைக் குறிப்பன. ஆகவே 'வானி' என்ற சொல்லால் பிநாகிநி (பெண்ணை) நதியைக் கூறுவதில் இடர் ஏதுமிலது. தைமாதத்தில் அவ்வாற்றின் தெளிந்த ஜலம் ஓடும் அழகை அடியவர்க்குமெய்யன் கடாக்ஷித்துக் கொண்டு எழுந்தருளியிருந்தமையை மூன்றுமடி காட்டும். 'முன்னுள் புணராத' என்றதால் அதற்கு முன்பு நடந்த வாதங்கள் வைதிகரான பிறமதத்தினரோடு தேவபாஷையில் முறைப்படி நடந்தவையென்றும், இப்பொழுது நடந்த வாதங்கள் அவைதிகரான பிறமதத்தினருடன் தேசபாஷையில் தற்செயலாக நடந்தவை என்றும் காட்டப்பட்டது.

அன்றியும், தமிழ்நிகண்டு 'வானி' என்ற சொல்லைக் கொடியென்னும் பொருளையுடையதாகக் கூறுவதால் எம்பெருமானுடைய கொடியாகிய கருடனைக் கூறிக் கருடநதியைக் கூறுவதாகவும் கொள்ப. 53

திருவாழியாழ்வானுடைய திருக்கைகளின் பெருமை

பதினாறுசீர்ச்சந்தவிருத்தம்

207 திகிரிமழு வுயர்குந்தந் தண்டங்கு சம்பொறி
சிதறுசத முகவங்கி வாள்வேல மர்ந்ததுந்
தெழிபணில சிலைகண்ணி சீரங்க செவ்விடி
செழியகதை முசலந்தி சூலந்தி கழ்ந்தது
மகிலவுல குகள்கண்ட யாயோர லங்கலி
லடையவடை விலிலங்க வாசின்றி நின்றது
மடியுமரு கணையுமர வாமென்ன நின்றடி
யடையுமடி யரையன்பி லுலஞ்ச லேன்பது
மகிழுமம ரர்கணங்கள் வானங்க வர்ந்திட
மலியுமசு ரர்புணர்த்த மாயந்து ரந்ததும்
வளருமணி மணிமின்ன வானந்தி கொண்டிட
மறைமுறைமு றைவணங்க மாறின்றி வென்றதுஞ்
சிகியிரவி மதியமுமிழ் தேசுந்த வெண்டிசைத்
திணிமருள்செ கவுகந்து சேமங்கள் செய்ததுந்
திகழரவ ணையரங்கர் தேசென்ன மன்னிய
திரிசுதரி சனர்செய்ய வீரேண்பு யங்களே. 54

உரை:— திகிரி – சக்கரமும், மழு – மழுவும், உயர் குந்தம் – மேன்மைபொருந்திய ஈட்டியும், தண்டு – தண்டாயுதமும், அங்குசம்– மாவெட்டியும், பொறி சிதறு சதமுக அங்கி – தீப்பொறிகளைச் சிதறுகின்ற சதமுகாக்நியும், வாள் – வாளும், வேல் – வேலும் (ஆகிய ஆயுதங்கள்), அமர்ந்ததும் – பொருந்திய இடமும்,

தெழி பணிலம் – ஒலிக்கின்ற சங்கமும், சிலே – வில்லும், கண்ணி-பாசமும், சீரங்கம் – கலப்பையும், செவ்விடி – சிவந்த வஜ்ராயுதமும், செழிய கதை – செழுமையுள்ள கதையும், முசலம் – உலக்கையும், திசூலம் – த்ரிசூலமும் (ஆகிய ஆயுதங்கள்), திகழ்ந்ததும் – ப்ரகாசிக்கு மிடமும்,

அகில உலகுகள் – ஸகலலோகங்களும், ஓர் அலங்கலில் – ஒரு மாலேயில், கண்டையாய் – மணிகளாய், அடைய – முழுவதும், அடைவில் – வரிசையாக, இலங்க – ப்ரகாசிக்கும்படி, ஆசு இன்றி – குற்றம் இல்லாது, நின்றதும் – நின்ற இடமும்,

அடியும் அருகணேயும் ஆம் – திருவடிநிலே(பாதுகை)யும் பக்கத்தே சாய்ந்துகொள்ளும் அணேயும் ஆகின்ற, அரவு என்ன நின்று – ஆதிசேஷன் (போல் கைங்கர்யத்தில் ஈடுபட்டவர்) என்னும்படி நின்று, அடி அடையும் அடியரை – திருவடிகளேச் சரணமடையும் பாகவதர்களே, அன்பிஞல் – (அவர்களிடம் உள்ள) அன்பிஞல், அஞ்சல் என்பதும் – அஞ்சவேண்டாமென்று அபயப்ரதாநம் செய்வனவும்,

மகிழும் அமரர் கணங்கள் – மகிழ்வுள்ள தேவர்கூட்டங்களின், வானம் கவர்ந்திட – ஸ்வர்க்கலோகத்தைக் கொள்ளேயிடுவதற்காக, மலியும் அசுரர் புணர்த்த – ஒன்றுகூடித்திரண்ட அஸுரர்கள் செய்த, மாயம் துரந்ததும் – மாயச்செய்கைகளே ஒழித்தனவும்,

வளரும் அணி – நிறைந்துள்ள திருவாபரணங்களிலுள்ள, மணி மின்ன – ரத்நங்கள் ப்ரகாசிக்க, (அந்த ப்ரகாசத்தால்) வான் அந்தி கொண்டிட – ஆகாசம் செவ்வானம் கொண்டாற்போல் ஆக, மறை – வேதம், முறை முறை வணங்க – வகைவகையாகப் போற்றி வணங்கி நிற்க, மாறு இன்றி வென்றதும் – பகைவர் மீதமின்றி ஜயித்தனவும்,

சிகி – அக்நியையும், இரவி – ஸூர்யனேயும், மதியம் – சந்த்ரனே யும், உமிழ் – கக்குகின்ற, தேசு – தேஜஸ்ஸை, உந்த – வீசியெறிதலால், எண் திசை – எட்டுத் திசையிலும், திணி மருள் செக உகந்து – அடர்ந்த அஜ்ஞாநம் ஒழியும்படி (செய்ய) மனங்கொண்டு, சேமங்கள் செய்ததும் – (உலகிற்கு) க்ஷேமங்களேச் செய்தனவும்,

திகழ் அரவு அணே – ப்ரகாசிக்கின்ற ஆதிசேஷனுகிய படுக்கையையுடைய, அரங்கர் – ஸ்ரீரங்கநாதருடைய, தேசு என்ன மன்னிய-தேஜஸ் (வடிவெடுத்துவந்தது) என்னும்படி ஸ்திரமாயிருந்த, திரி சுதரிசனர் – சுழல்கின்ற திருவாழியாழ்வானுடைய, செய்ய ஈர் எண் புயங்கள் – சிவந்த பதிறு திருக்கைகளும் ஆம்.

பரமதங்களேக் கண்டிக்கும்போது திருவாழியாழ்வானது அருள் பெறுவதற்காக இப்பிரபந்தத்தின் முதல் - கடைசிப்பாசுரங்களில் அவர்பெருமையே பேசப்பட்டது.

கருத்து:-திருவரங்கனுடைய சோதியே வடிவெடுத்ததாகக் கூறும் படியுள்ள திருவாழியாழ்வானுடைய பதினாறு திருக்கைகளில், மாலையில் மணிகள்போல் உலகமுழுவதும் அடங்கியிருக்கின்றது. அத்திருக் கைகள் திருவநந்தாழ்வானைப்போல் பகவத்கைங்கர்யத்தை விரும்பிச் சரணமடையும் பாகவதர்களுக்குக் கருணையுடன் அபயப்ரதாநம் செய்கின்றன; தேவர்களின் செல்வத்தைக் கொள்ளையிடும் அஸுரர் களை ஒழிக்கின்றன; மற்றைப் பகைவரையும் அழிக்கின்றன; தம் தேஜஸ்ஸால் உலகில் அஜ்ஞாநத்தைப் போக்கி க்ஷேமத்தைக் கொடுக் கின்றன; ஆதலின் அவற்றின் பெருமை பேசற்பாலதன்று-என்றவாறு.

'த்ரிசூலம்' எனுஞ்சொல் 'திசூலம்' என மருவிநின்றது. 54

பரமதபங்கம்-உரை முற்றிற்று

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

ஸ்ரீ:

மெய்விரதமான்மியம்—உரை

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான்திருவடிகளே சரணம்

[விஷயச்சுருக்கம்]

ஸத்யவ்ரதமாஹாத்ம்யம் என்று ஒரு ரஹஸ்யம் ஸ்ரீ தேசிகனால் மணிப்ரவாளநடையில் அருளிச்செய்யப்பட்டுளது. அதிற் சேர்ந்த பாசுரங்கள் அடங்கப்பெற்றது இப்பிரபந்தம். மெய்விரதம் — ஸத்ய வ்ரதம். இந்த க்ஷேத்ரம் காஞ்சீபுரம், ஹஸ்திகிரி, பெருமாள்கோயில் எனவும் வழங்கப்பெறும். இந்த க்ஷேத்ரத்தில் அநுஷ்டிக்கப்படும் வ்ரதங்கள் முதலிய புண்ய கர்மங்களுக்கு உடனே பலன்கிடைப்பது நிச்சயமாதலின் 'மெய் விரதம்' எனப் பெயர் வந்தது. இந்தத் திவ்ய தேசத்தில் பேரருளாளன் திருவவதாரம் செய்த வரலாறு இப் பிரபந் தத்தால் அநுபவிக்கப்படுகின்றது.

முன்னொருகால் ப்ரஹ்மா நேரில் எம்பெருமானை ஸேவிக்க விரும்பி அதற்கு முயன்றான்; ஜந்மாந்தரபாபத்தால் கார்யம் கைகூட வில்லை; மிக வருந்திப் பாரததேசத்திற்கு வந்து கடுந்தவம் புரிந்தான். அப்பொழுது ஆகாயத்தில் ஓர் அசரீரிவாக்குப் பிறந்தது. ஸத்யவ்ரத மென்னும் க்ஷேத்ரம் சென்று அத்திகிரியை யாகவேதியாகக்கொண்டு அசுவமேதயாகம் புரியுமாறு அது கட்டளையிட்டது. உடனே ப்ரஹ்மா தேவசிற்பியான விசுவகர்மாவை அழைத்து யாகவேதியை அங்கு அமைக்கக் கட்டளையிட்டான். சிற்பியும் அவ்வாறே செய்துமுடித் தான். ப்ரஹ்மாவும் அதற்குக் காஞ்சியெனப் பெயரிட்டு அங்கு அசுவ மேதயாகம் செய்யத் தொடங்கினான்.

ப்ரஹ்மாவின் மனைவி ஸரஸ்வதி ப்ரணயகலஹத்தால் கணவனைப் பிரிந்து தனியே சென்று ஸரஸ்வதியெனும் நதியின் கரையில் தவம் புரிந்துகொண்டிருந்தாள். மனைவியைப் பிரிந்தவனுக்கு யாகம்செய்யத் தகுதியில்லையன்றோ? ஆதலால் அவளை அழைத்துவருமாறு ப்ரஹ்மா தன் புத்திரனான வஸிஷ்டனை அனுப்பினான். அவன் தன் தாயிடம் சென்று தந்தையின் கட்டளையைக் கூறித் தன்னுடன் வரும்படி அழைத்தான். அவள் வர மறுத்தாள். வஸிஷ்டன் திரும்பிவந்து, நிகழ்ந்ததைத் தந்தையிடம் கூறினான். ப்ரஹ்மா ஸாவித்ரி முதலிய மற்ற மனைவியரை வைத்துக்கொண்டு யாகத்தைத் தொடங்கினான்.

அஸுரர்கள், தேவர்களின் பெருமையைப் பொறாதவர்களன்றோ? அவர்கள் இந்த யாகத்தைக் கெடுக்க எண்ணி, ஸரஸ்வதியிடம் போய் "உன் கணவன் உன்னை அவமதித்து யாகம் நடத்துகின்றான்" என்று கூறினர். அவளும் கோபித்து ஒரு நதியாகப் பெருகி யாகசாலையை அழிக்க முற்பட்டாள். இதுகண்ட எம்பெருமான் ஓர் அணையாகத் தானே குறுக்கே படுத்துக்கொண்டான். தடைப்பட்ட ஸரஸ்வதியும் அவ்வெம்பெருமான் கடாக்ஷித்ததால் கோபவேகம் அடங்கிக் கலக்கம் நீங்கித் தன் கணவனிடம் வந்தாள். ப்ரஹ்மா அவளையும் சேர்த்துக்கொண்டு யாகத்தை நடத்தினான்.

யாகத்தின் முடிவில் ப்ரஹ்மா அக்நியில் வபையை ஹோமம் செய்தான். உடனே யாகவேதியின் மத்தியிலிருந்து ஒரு பெரிய தேஜஸ்ஸும், அதன் நடுவில் புண்யகோடி என்னும் விமானமும் தோன்றின. அவ்விமானத்தின் நடுவில் பேரருளாளனும் தேஜோமயனாய் ஆவிர்ப்பவித்தான். ப்ரஹ்மா ஆனந்தக்கடலில் மூழ்கி அவனை நன்றாயநுபவித்துத் துதித்தான். பேரருளாளனும் வேண்டிய வரம் கேட்குமாறு ப்ரஹ்மாவைக் கட்டளையிட்டான். ப்ரஹ்மா அங்கேயே எழுந்தருளியிருக்கும்படி வரம் கேட்டான். பகவானும் இசைந்தான். பின் ப்ரஹ்மா யாகத்தை முடித்து எம்பெருமானிடம் விடைபெற்று ஸத்யலோகம் சென்று பகவத்தியானத்திலேயே மூழ்கிக்கிடந்தான்.

[இவ்வரலாற்றை ஸ்ரீதேசிகன் அந்த அந்த ஸந்தர்ப்பத்திற்கு ஏற்ற பாக்களில் பாடியிருக்கும் அழகை நம்மால் வர்ணிக்கமுடியாது. ஸரஸ்வதிதேவி ப்ரஹ்மாமீது கோபங்கொண்டு ஆவேசத்துடன் யாகத்தைக் கெடுக்கவரும் முறையைக் கூறும் பாசுரத்தைக் கவனிக்கும்போது அவளுடைய ஆவேசத்தையும் கோபத்தையும் நேரில் காண்பதுபோலிருக்கின்றது. பேரருளாளனின் திருமேனியழகையும், அவன் இருபிராட்டிமாருடன் காட்சியளிப்பதையும் தக்க உபமானங்களுடன் வர்ணித்திருக்கும் அழகு நம் உள்ளத்தைக் கொள்ளைகொள்கின்றது. இதனுள் ஸ்ரீபாஷ்யத்தின் பதினாறு பாதங்களின் ஸாரார்த்தங்களையும் ஒரே பாசுரத்தில் அமைத்து அருளிச்

செய்திருக்கும் வல்லமைக்கு ஈரேழுலகையளித்தாலும் ஈடாமோ? அதிகம் கூறுவானேன்? இதன் பெருமை அநுபவித்தே அறியற்பாலது.]

[இப்பிரபந்தத்தில் பாசுரங்களின் பதவுரைக்குப்பின் கருத்துக் களைக் கொடுப்பதோடு நில்லாமல் இந்த ரஹஸ்யத்தில் ஸ்ரீதேசிகன் விரித்துரைத்த அம்சங்கள் முழுவதையும் விடாமல் எளிய தமிழாக்கித் தொடர்ந்து விளக்கியிருத்தலைக் காண்க.]

வாழ்த்துக்கவி

வெண்பா

208 வாழி யருளாளர் வாழியணி யத்திகிரி
வாழி யெதிராசன் வாசகத்தோர் — வாழி
சரணு கதியெனுஞ் சார்வுடன்மற் றொன்றை
யரணுகக் கோள்ளாதா ரன்பு. 1

உரை:— அருளாளர் – பேரருளாளர், வாழி – வாழ்க; அணி அத்திகிரி – (பூமிக்கு) அலங்காரமான ஹஸ்திகிரி, வாழி – வாழ்க; எதிராசன் வாசகத்தோர் – ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸூக்திகளில் ஈடுபட்டவர், வாழி – வாழ்க; சரணுகதி என்னும் சார்வுடன் – ப்ரபத்தி என்னும் உபாயத்துடன், மற்று ஒன்றை – வேறு ஒன்றை, அரணுக – உபாயமாக, கொள்ளாதார் அன்பு – கொள்ளாதவர்களுடைய அன்பும், வாழி – வாழ்க.

பேரருளாளனும், அவன் எழுந்தருளியுள்ள ஹஸ்திகிரியும், ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸம்ப்ரதாயஸ்தர்களும், ப்ரபத்தியாகிய உபாயமும், அதைப் பற்றினவர்களுக்குப் பேரருளாளனிடமுள்ள பக்தியும் நீடூழி வாழ்க—என்று மங்களாசாஸநம் செய்தவாறு. 1

இந்நூலைக்கேட்குமாறு அறிஞரை வேண்டல்

எண்சீராசிரியவிருத்தம்

209 எண்டிசையுங் கடலேழு மலைக ளேழு
மீரேழு வையகமும் படைத்தி லங்கும்
புண்டரிகத் தயன்புணர்த்த பெரிய வேள்விப்
புனிதநறும் போக்கியத்தை யுவந்து வந்து
தொண்டையெனு மண்டலத்தி னடுவிற் பாரிற்
றூநிலமெய் விரதத்துத் தோன்றி நின்ற
கொண்டலருட் குணமேநாங் கூறு கின்றோங்
கூர்மதியீர் குறியாகக் கொண்மி னீரே. 2

உரை:— கூர் மதியீர் ! – கூர்மையான அறிவுபெற்றவர்களே !, எண் திசையும் – எட்டுத் திசைகளையும், கடல் ஏழும் – ஏழு ஸமுத்ரங் களையும், மலைகள் ஏழும்-ஏழு குலபர்வதங்களையும், ஈர் ஏழு வையகமும்–

பதினன்கு லோகங்களையும், படைத்து - ஸ்ருஷ்டித்து, இலங்கும் - ப்ரகாசிப்பவனும், புண்டரிகத்து அயன் – (எம்பெருமானுடைய நாபிக்) கமலத்து உதித்தவனுமான ப்ரஹ்மாவால், புணர்த்த - நடத்தப் பட்ட, பெரிய வேள்வி – பெரிய (அசுவமேத) யாகத்தின், புனித நறும் போக்கியத்தை – பரிசுத்தமான வாஸனையுள்ள ஹவிஸ்ஸை (ப் பெறுவ தற்கு), உவந்து வந்து – மகிழ்ந்து வந்து, தொண்டையெனும் மண்டலத் தின் நடுவில் – தொண்டைமண்டலமென்னும் தேசத்தின் நடுவில், பாரில் தூ நிலம் – பூமியிலேயே மிகப் பரிசுத்தமான ஸ்தலமாகிய, மெய்விரதத்து – ஸத்யவ்ரதமென்னும் க்ஷேத்ரத்தில், தோன்றி நின்ற – அவதரித்து நிலைபெற்ற, கொண்டல் – (பேரருளாளனென்னும்) மேகத்தின், அருள் குணமே – கருணை யென்னும் குணத்தையே, நாம் கூறுகின்றோம் – நாம் (இப்பிரபந்தத்தில்) பேசுகின்றோம்; நீர் - நீங்கள், குறியாக கொண்மின் - (இதனைக்) கவனத்துடன் அறிந்துகொள்க.

எம்பெருமானுடைய திருநாபிக்கமலத்தில் பிறந்து ஸகல லோகங்களையும் படைக்கவல்ல ப்ரஹ்மா எம்பெருமானைக் குறித்துப் பூலோகத்திலேயே மிகப் பரிசுத்தமான ஸத்யவ்ரதக்ஷேத்ரத்தில் செய்த பெரிய அசுவமேதயாகத்தில் ஹவிஸ்ஸைப் பெறுவதற்காக அங்கு அவதரித்து அனைவரும் எந்நாளும் கண்டுகளிக்குமாறு அவ்வடி வுடனே சாசுவதமாய் நின்ற பேரருளாளனுடைய கருணைவெள்ளத் தின் பெருமையை ரஸிகர்களும் பாகவதர்களும் கூரிய அறிவுள்ளவர் களுமான நீங்கள் அனைவரும் கேட்டு மனமகிழவேண்டும். இதற்காக மனத்தில் பாவமும், வாக்கில் ராகமும், கையில் தாளமுமாகப் பொருந்த வேண்டுமென வகுத்த பரதசாஸ்த்ரத்தைத் தழுவி, பண்ணும் இசையும் அமையுமாறு பேரருளாளன்பெருமையைப் பாடுகின்றோம். நீங்கள் அனைவரும் இதனைக் கவனத்துடன் கேட்டருள்வீராக — என்றவாறு.

[இப்பாசுரத்தில் வேள்வியும் ஹவிஸ்ஸும் அக்நியை நினைவூட் டிக்காட்ட, அந்தத் தாபத்தை மறக்கக் கருணைமழை பொழியும் காளமேகத்தைக் குறித்த சுவை காண்க.]

எட்டுத்திசைகளை 84-வது பாசுரவுரையிலும், ஏழுகடல்களை 120-வது பாசுரவுரையிலும் காண்க.

ஏழுமலைகள் — மஹேந்த்ரம், மலயம், ஸஹ்யம், சுக்திமான், ருக்ஷம், விந்த்யம், பாரியாத்ரம் : என்பன.

பதினன்கு உலகங்கள் — அதல, விதல, ஸுதல, தராதல, மஹாதல, ரஸாதல, பாதாளங்கள் என்பன ஏழும் கீழுலகம். பூ:, புவ:, ஸுவ:, மஹ:, ஜந:, தப:, ஸத்யம் என்பன ஏழும் மேலுலகம்,

[வேதாந்தங்கள் ஸகலலோகத்திற்கும் மிக்க நன்மையையே உப தேசிப்பனவாகும். அவற்றின் பொருளைப் புராணங்கள் தெளிவுபடுத்து கின்றன. அவற்றுள் ப்ரஹ்மாண்டபுராணம் மிக முக்கியமாதலின்

முற்பட எண்ணப்பட்டதாகும். அதில் ஸத்யவ்ரதக்ஷேத்ரத்தின் மேன்மையை விளக்கும் வாயிலாகப் பேரருளாளன்பெருமை விவரித்துக் கூறப்பட்டுள்ளது.] 2

தம்முடன் கூடுமாறு புலவரை அழைத்தல்

210 செந்தொடை - வெண்டுறை

வம்மின் புலவீ ரருளாளப் பெருமா ளென்று மருளாழி
யம்மா னென்றுந் திருமகளைப் பெற்றுமே னெஞ்சங் கோயில்கொண்ட
பேரரு ளாளரேன் றும்வியப்பா விருதூ தும்படி கரைபுரண்ட
கருணைக் கடலை யெவ்வண்ணம் பேசுவீ ரீதேன்ன பாங்கே. 3

உரை:— புலவீர் – புலவர்களே!, வம்மின் – வாருங்கள். அருளாளப் பெருமாள் என்றும் – அருளாளப் பெருமாள் என்றும், அருளாழியம்மான் என்றும் – அருளாழியம்மான் என்றும், திருமகளைப் பெற்றும் – பிராட்டியைத் தேவியாகக்கொண்டதுமன்றி, என் நெஞ்சம் – என் மனத்தை, கோயில் கொண்ட – வாஸஸ்தலமாகக்கொண்ட, பேரருளாளர் என்றும் – பேரருளாளர் என்றும், வியப்பா – ஆச்சர்யமாய், விருது ஊதும்படி – விருதுகளைக் கூறிமுழங்கும்படி நின்ற, கரை புரண்ட கருணைக் கடலை – கரை புரண்டுபெருகும் கருணைக் கடலான எம்பெருமானை, எவ்வண்ணம் – எவ்வாறு, பேசுவீர் – (நீங்கள்) பேசவல்லீர்? ஈது- இவ்வாறு செய்வது, என்ன பாங்கு – என்ன நேர்மை?

புலவர்களே! வாருங்கள், பேரருளாளனுடைய கருணையெனும் குணத்தைப் பற்றி ஆழ்வார் முதலிய பரமபாகவதர்கள் ஆச்சர்யமாய்ப் பல விருதுகளைக் கூறி முழங்குகின்றனர். அத்தகைய கருணைக்கடலான பேரருளாளன்பெருமையை நீங்கள் எவ்வாறு பேசமுடியும்? அப்படிச் செய்ய முற்படுவது நேர்மையுமன்று. எம்முடன் வந்து கூடுங்கள். நாம் ஒன்றுகூடி அவன்பெருமையை ஒருவாறு பேசிப்பார்ப்போம்- என்றவாறு.

'அருளாளப் பெருமாள்' 'அருளாழியம்மான்' 'பேரருளாளர்' என்பன கருணையெனும் குணத்தின் காரணமாக அத்திகிரியெம் பெருமானுக்கு வந்த திருநாமங்கள். 3

ப்ரபந்நனுக்குப் பொறுப்பு நீங்கியமை

கட்டளைக்கலித்துறை

211 ஒன்றே புகலேன் றுணர்ந்தவர் காட்டத் திருவருளா
லன்றே யடைக்கலங் கோண்டநம் மத்தி கிரித்திருமா
லின்றே யிசையி னிணையடி சேர்ப்ப ரினிப்பிறவோ
நன்றே வருவ தேலாநமக் குப்பர மோன்றிலதே. 4

இதன் உரையை 18-வது பாசுரத்தில் காண்க

பேரருளாளன் திருவடிகளில் ப ர ந் ய ா ஸ த் தை ச் செய்து மோக்ஷத்தை எதிர்பார்த்திருக்கும் நாம் இனிப் பலனைக் கருதி ஒன்றையும் செய்யவேண்டாவாயினும், இங்கு இருக்குமநாள் நற்பொழுது போக்கி மனமகிழப் பேரருளாளன்பெருமையைப் பேசுகின்றோம்—என்றவாறு. 4

பிரமன் தன் முயற்சி கர்மத்தால் தடைபட, வருந்துதல்

கட்டளைக்கலித்துறை

212 வம்பவிழ் போதமர் மாத ருகந்தவம் மாநிதியைத்
தன்பல மேகோண்டு காணக் கருதிய தாமரையோன்
முன்பல குற்றத்து வல்வினை மோய்க்க முகிழ்மதியா
யம்புலி வேண்டிய பாலனைப் போல வழுதனனே. 5

உரை:— வம்பு அவிழ் – வாஸனையுள்ள மலர்ந்த, போது அமர் – புஷ்பத்தில் வஸிக்கின்ற, மாதர் – பிராட்டியின், உகந்த – அன்புக்கு உரியனான, அம் மா நிதியை – பெரிய சேமநிதிபோன்ற அவ்வெம்பெருமானை, தன் பலமே கொண்டு – தன்னுடைய யோகபலத்தையே கொண்டு, காணக் கருதிய தாமரையோன் – ஸாக்ஷாத்கரிக்க நினைத்த ப்ரஹ்மா, முன் பல குற்றத்து – முன்பு பல தவறான செய்கைகளால் ஏற்பட்ட, வல் வினை மொய்க்க – வலிய கர்மங்கள் சூழ்ந்துகொள்ள, முகிழ் மதியாய்-மழுங்கிய அறிவுடையனாய்,அம்புலி வேண்டிய-(எட்ட முடியாத) சந்த்ரனைப் பிடித்துத் தரும்படி விரும்பிய, பாலனைப்போல – குழந்தையைப்போல, அழுதனன் – (தன் எண்ணம் நிறைவேறாமையால்) அழுதான்.

ச்ரிய: பதியான புருஷோத்தமன் எல்லாவுலகங்களுக்கும் ஒரே தலைவன்; எல்லாவுலகங்களிலும் அந்தர்யாமியாய் நிற்பவன்; எல்லாவுலகுக்கும் ஆதாரமாயுள்ளவன்; எல்லாவுலகுக்கும் ஒரே காரணமாய் விளங்குமவன்; எவ்வகைத் தோஷமும் இல்லாதவன்; எல்லையற்ற திருக்கல்யாண குணங்களையுடையன்; அளவற்ற கருணை—எளிமை—அன்பு—வண்மை—ஐசுவர்யம் இவற்றுக்குப் பெருங்கடலாய்த் திகழ்பவன். இத்தகைய எம்பெருமான், வேறு தெய்வமும், உலகமும், ப்ராணிகளும், வேறு ஒன்றுமேயில்லாமல் இருந்த மஹாப்ரளயத்தில் மஹான்-அஹங்காரம் என்ற வரிசையில் ப்ரஹ்மாண்டம் வரையில் படைத்தான்; பின் தேவர்களையும் மற்ற ஸகல வஸ்துக்களையும் படைப்பதற்காகத் தன் திருநாபிக் கமலத்தில் பிரமனைப் படைத்தான். பிறகு ப்ரஹ்மாவாகிய சரீரத்துள் தானே அநுப்ரவேசித்து, அநுபவிக்கும் ஜீவவர்க்கத்தையும் அநுபவிக்குமிடமான ஸகல லோகங்களையும் அதற்குட்பட்ட போக்ய வஸ்துக்கள்-போகத்திற்கு உபகரணங்கள் ஆகியவற்றையும் பல்வேறு வகையில் விசித்திரமான முறையில் அமையுமாறு படைத்தான்; ஸகல பதார்த்தங்களாகவும் தானே நின்றான்.

பின், தன் வயிற்றுதித்த புத்திரனைத் தனக்கு நேரே சிஷ்யனுமான நான்முகனைப் பதினான்கு உலகங்களுக்கும் தலைவனாக்கிவைத்தருளினன். இவ்வதிகாரம் பெற்ற ப்ரஹ்மா, தன்னுடைய மிக உயர் பிறவியாலும், எல்லாத்திசையிலும் வேதங்களை ப்ரவசனம் செய்தலாலும், ஸரஸ்வதியுடன் இல்லறம் நடத்தலாலும், நான்கு வர்ணங்களையும் படைத்த பல்வகைப்பட்ட ஸாமர்த்யத்தாலும் தனக்கு நிகர் ஒருவருமில்லையெனக் கருதினன்; பிறவி-கல்வி-ஒழுக்கம் இவற்றால் வந்த செருக்கும் சுதந்திரச் செருக்கும் ஏறப்பெற்றான். இவ்வாறு சர்வம் கொண்ட பிரமன், கறந்த பாலுள் மறைந்து நிற்கும் நெய்யேபோல் நேரில் காணமுடியாவிடினும் எல்லாப்பொருள்களிலும் உள்ளே உறைந்து நிற்கும் பெரிய அதிசயச் செய்கையையுடையனைப் பெரிய சேமநிதி போன்றவனான ஸர்வேசுவரனைத் தன் ஸாமர்த்தியத்தால் செய்யக்கூடிய யோகத்தைக்கொண்டு ஸாக்ஷாத்கரிக்கலாமென்று பார்த்தான்; அஜ்ஞானம் – அஹங்காரம் – ஆசை – பகை – மரண பயம் ஆகிய ஐவகைக் கிலேசமும் நீங்கப்பெற்றான்; ஓர் ஆஸநத்தில் அமர்ந்தான்; மேலிமையைக் கீழிமையோடு சேர்த்தான்; இந்த்ரியங்களைப் பட்டிமேயாமல் தடைசெய்தான்; எம்பெருமானிடம் மிக்க பக்தி கொண்டான்; இடையிடாத தியானத்தைச் செய்தான்; இப்படி ஜ்வலித்துக்கொண்டு நின்று, ரத்நதீபவடிவனான எம்பெருமானைச் சாஸ்த்ர முறையில் ஸாக்ஷாத்கரித்து உண்மையைக் காண ஒருப்பட்டான். அப்பொழுது பகவத்ஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரிப்பதற்கு விரோதியாயுள்ள ஒரு மாளாத வலிய கர்மம் இவனை அந்த யோகத்தினின்று விலக்கிவிட்டது. பின் இவனது அறிவு மழுங்கி வானத்திலுள்ள அம்புலியைப் பிடிக்க விரும்பி அது கூடாமையால் அழுது நிற்கும் சிறுவனைப்போல இவன் புலம்பினன்.

நான்கு வர்ணம்:— ப்ராஹ்மணர், க்ஷத்திரியர், வைச்யர், சூத்ரர் என்பன. 5

பிரமன் தன்னை வெறுத்துக்கொள்ளல்

கட்டளைக்கலித்துறை

213 அடங்காக் கரணங்க ளைந்துட னாறு மடக்கிமுன
நெடுங்கால மிந்நில மேநிலை யாப்பூண்டு நீடுறைவான்
சடங்காற் பெரிய தவங்கள்செய் தேனென்ன தன்மையிதேன்
றிடங்காத் திருந்த திசைமுகன் றன்னை யிகழ்ந்தனனே. 6

உரை:— இடம் காத்திருந்த – (தன்னுடைய ப்ரஹ்ம) பதவியை (வழுவாது) ரக்ஷித்துக்கொண்டிருந்த, திசைமுகன் – ப்ரஹ்மா, நெடுங்காலம் – நீண்டகாலம், இந்நிலமே – இந்த ப்ரஹ்மலோகத்தையே, நிலையாப் பூண்டு – ஸ்திரமாயிருப்பதாகக்கொண்டு, நீடு உறைவான் – நெடுநாள் (அப்பதவியில்) வாழவிரும்பி, முனம் - முன்பே, அடங்காக்

கரணங்கள் – அடங்காத இந்த்ரியங்களாகிய, ஐந்துடன் ஆறும் அடக்கி– கர்மேந்த்ரியங்கள் ஐந்துடன் ஜ்ஞாநேந்த்ரியங்கள் ஆறையும் அடக்கி, சடங்கால் பெரிய – வ்ரதங்களால் பெரிய, தவங்கள் செய்தேன் – தபஸ் ஸுகளைச் செய்தேன், இது என்ன தன்மை என்று – (நான் செய்த) இக்கார்யம் எத்தகையது? (எவ்வளவு இழிவானது?) என்று, தன்னை இகழ்ந்தனன் - தன்னையே வெறுத்துக்கொண்டான்.

இப்படிக் கலங்கின ப்ரஹ்மா "என்னே!! என்னே!!! ஸர்வாந்தர் யாமியான ஸர்வேசுவரனைப்பற்றி நான் செய்யும் யோகம் கூடிவரா மைக்குக் காரணம் யாது?" என்று ஆராய்ந்து, குரங்குபோல் நின்ற இடத்தில் நில்லாது சஞ்சலமான மனம் தெளிவடையாதிருப்பதே காரணமாமெனத் துணிந்து இந்த மனக்கலக்கத்திற்குக் காரணமான கர்மவிசேஷத்தைக் கழிக்காமல் இத்தனைநாளும் என்ன கார்யம் செய்தேன்? இந்தப் பதவியையே சாசுவதமெனக் கருதிப் பதினொன்று இந்த்ரியங்களையும் அடக்கிப் பெரிய தவம்புரிந்து இந்த ப்ரஹ்மாண்டத் திலேயே ஏறியும் இறங்கியும் அல்லல்பட நெடுங்காலம் வீணே சரீரத்தையும் துன்புறுத்திக்கொண்டேன் என்று நெஞ்சுருகிக் கண்ணீர்சொரிந்து நெடுமூச்செறிந்து நிலத்தைப் பார்த்திருந்து தன்னையே வெறுத்துக்கொண்டான்—என்றவாறு.

இங்கு, திசைமுகன் என்பதை வினைத்தொகையாகக்கொண்டு திகைத்த முகத்தன் என்றும் பொருள்பெறப் பிரயோகித்த ரஸத்தைச் சுவைக்க.

இந்த்ரியங்கள் பதினொன்று:— ஜ்ஞாநேந்த்ரியம் ஐந்து; கர்மேந்த்ரியம் ஐந்து; மனம் ஒன்று. (விளக்கம்—*145*-வது பாசுர வுரைக் குறிப்பில் காண்க.) *6*

பிரமன் தவம்புரியப் பாரதநாட்டை அடைதல்

எண்சீராசிரியவிருத்தம்

214 விண்ணுலகில் வீற்றிருந்த மேன்மை யாலும்
வேதங்க ளீரிரண்டும் விரித்த லாலுங்
கண்ணனைநான் கருத்துறவே காண்ப னேன்னக்
காணமல் விலக்கியதன் வினையைக் காண
வேண்ணியநற் புவனங்க ளேழு மாறு
மிருமூன்று தீவமுமேட் டிடமும் விட்டுப்
பண்ணியநல் விரதமேலாம் பலிக்கு மேன்று
பாரதத்திற் பங்கயத்தோன் படிந்திட் டானே. 7

உரை:— பங்கயத்தோன் - (பகவானுடைய நாபிக்) கமலத்தில் பிறந்த ப்ரஹ்மா, விண்ணுலகில் - ப்ரஹ்மலோகத்தில், வீற்றிருந்த மேன்மையாலும் – ப்ரஹ்மபதவி வஹித்த பெருமையாலும், வேதங்கள் ஈர் இரண்டும் – வேதங்கள் நான்கையும், விரித்தலாலும் - (உலகுக்கு) வெளியிட்டமையாலும், கண்ணனை – எம்பெருமானை, கருத்து உறவே-

மனத்தில் நிலைபெற்று நிற்கும்படி, நான் காண்பன் என்ன – நான் நேரில் ஸாக்ஷாத்கரிப்பேன் என்று நினைத்து (யத்நம் செய்து), காணுமல் விலக்கிய – அவ்வாறு ஸாக்ஷாத்கரிக்கமுடியாமல் தடைசெய்த, தன் வினையைக் காணு – தன்னுடைய கர்மத்தைக் கண்டு (அதைப் போக்க நினைத்து), எண்ணிய நல் புவனங்கள் ஏழும் ஆறும்–(சாஸ்த்ரங்களில்) கூறப்பட்ட சிறந்த லோகங்கள் பதின்மூன்றையும், இரு மூன்று தீவமும் – ஆறு த்வீபகளையும், எட்டு இடமும் விட்டு – எட்டு வர்ஷங்களையும் விட்டு, பண்ணிய நல் விரதம் எலாம் – செய்யப்படும் சிறந்த வ்ரதங்கள் எல்லாம், பலிக்கும் என்று – பலன்தருமென்று உறுதி கொண்டு, பாரதத்தில் – பாரததேசத்தில், படிந்திட்டான் – வந்து தங்கினன்.

ஆயிரம் கோடி யுகங்கள் எம்பெருமானை முன்பு ஆராதித்ததால் பிரமன் தன் பதவியைப் பெற்றதாகச் சாஸ்த்ரம் கூறும். இப்படி மிகப் பெரிய ஸ்தாநத்தைத் தரக் காரணமான தவத்தைச் செய்து இந்த அதிகாரமாகிய சேற்றில் அழுந்திநின்று அகந்தைகொண்டு செய்த போகம் விஞகிப் பகவானுடைய ஸாக்ஷாத்காரத்தைப் பெறுமல் பச்சாத்தாபத்தையடைந்த ப்ரஹ்மா, எம்பெருமானை ஸாக்ஷாத்கரிக்காமல் தடைசெய்த தன் கர்மத்தைக்கண்டு அதைப் போக்க எண்ணி எம்பெருமானுடைய கடாக்ஷ விசேஷத்தை முன்னிட்டு மோக்ஷத்திற்குக் காரணமான தவத்தைச் செய்வதற்கு உரிய இடம் எது என்று ஆராய்ந்தான். பூமியொழிய மற்ற லோகங்கள் பதின்மூன்றும், பூமியிலும் ஜம்பூத்வீபம் தவிர மற்ற த்வீபங்கள் ஆறும், அதிலும் பாரதவர்ஷம் நீங்க மற்ற வர்ஷங்கள் எட்டும் கர்ம பலன்களையே அநுபவிக்குமிடமாதலின் மிகப் புண்ணியகர்மமான இந்தத் தவத்தைச் செய்ய உரியனவல்லவென்று புறக்கணித்து, எல்லாவற்றுக்கும் தெற்கேயுள்ளதாய் ஸகலதர்மங்களையும் அநுஷ்டிக்க ஏற்றதான பாரதவர்ஷத்தில் வந்து புகுந்தான்—என்றவாறு.

பதினுன்கு உலகங்கள்—209-வது பாசுரவுரையிற் காண்க.

ஏழு த்வீபங்கள்—ஜம்பூ, ப்லக்ஷம், சால்மலி, குசம், க்ரௌஞ்சம், சாகம், புஷ்கரம்—என்பன.

ஒன்பது வர்ஷங்கள்—பாரதம், கிம்புருஷம், ஹரி, இலாவ்ருதம், ரம்யம், ஹிரண்மயகம், குரு, பத்ராச்வம், கேதுமாலம்—என்பன. 7

பிரமன் விசுவகர்மனுக்குக் கட்டளையிடுதல்

அறுசீராசிரியவிருத்தம்

215 எத்திசை நிலனு மெய்தி யருந்தவஞ் செய்த வந்நாள்
சத்திய விரதஞ் செல்வா யென்றவோ ருரையின் சார்வா
லத்திசைச் சென்ற ழைத்தங் குமரரில் லெடுப்பான் றன்னை
யத்தா வேதி செய்யென் றுரையவனங் கிறையு ரைத்தான். 8

உரை:— உரை அணங்கு இறை - வாக்கின் தேவதை (யான ஸரஸ்வதி)க்கு நாயகனுகிய ப்ரஹ்மா, எத்திசை - எல்லாத் திக்கிலு முள்ள, நிலனும் எய்தி - ஸ்தானங்களுக்கும் சென்று, அருந் தவம் செய்த அந்நாள் - (ஒருவராலும்) செய்யமுடியாத தவத்தைச் செய்த அக்காலத்தில், சத்தியவிரதம் - ஸத்யவ்ரதம் என்னும் க்ஷேத்ரத் திற்கு, செல்வாய் என்ற - போ என்ற, ஓர் உரையின் சார்வால் - ஓர் (அசரீரி) வார்த்தையின் ஆதாரத்தால், அத்திசைச் சென்று - அந்த க்ஷேத்ரத்திற் சென்று, அமரர் இல் எடுப்பான் தன்னை அழைத்து - தேவர்களுக்குரிய வீடு (முதலியவற்றை) அமைப்பவ (னுகிய விசுவ கர்ம)னை அழைத்து, அங்கு—அந்த க்ஷேத்ரத்தில், உத்தர வேதி செய் - (யாகம் செய்வதற்கு) உத்தர வேதியைச் செய்து முடிப்பாயாக, என்று உரைத்தான் - என்று கட்டளையிட்டான்.

இப்படி ப்ரஹ்மா பாரததேசத்தில் வந்து புகுந்து தான் முக்கிய மாக நினைத்திருந்த பற்பல புண்யக்ஷேத்ரத்தில் ஒரு காலால் நின்று கொண்டும், கைகளை உயரத்தூக்கிக்கொண்டும், மேன்மூச்சு-கீழ்மூச்சு களை அடக்கிக்கொண்டும், வேறு ஒருவராலும் செய்யமுடியாத தபஸ்ஸைச் செய்தான். இப்படிச் செய்தும் தன் மனம் அந்தர்யாமியான எம்பெருமானைக் காண வல்லமையற்றிருப்பதைக் கண்டு மிக வருந்திக் கிடந்தான். அப்பொழுது ஆகாயத்தில் "ப்ரஹ்மாவே! நீ வெறுக்க வேண்டாம், பகவானைப் பற்றிய யோகத்திற்கு விரோதியாய் இதுகாறும் உன்னிடம் உள்ள கர்மங்கள் கழிகைக்கு ஓர் உபாயத்தை உபதேசிக்கின்றேன். அதிகாரமென்னும் ஆநந்தாநுபவத்தில் அழுந்திக் கிடக்கின்ற நீ ஆயிரம் அசுவமேதயாகங்களைச் செய்தாலன்றி உன் மனம் தெளிவடையாது. ஆனல் இந்த யாகங்களைச் செய்வது மிகக் கடினமென்றும் வெகுகாலம் ஆகுமேயென்றும் நினைந்து நீ அஞ்சினுயே யாகில் அதற்கும் ஒரு வழியுளது. ஸத்யவ்ரதக்ஷேத்ரத்தில் செய்யப் படும் ஓர் அசுவமேதயாகம் ஆயிரம் அசுவமேதத்தின் பலனைத் தரும். இவ்வாறு அளவற்ற பெருமையுடைய அந்த க்ஷேத்ரத்திற்குச் சென்று அதின் நடுவே ஸர்வவியாபியான ஸர்வேசுவரன் நித்யமாய் எழுந்தருளியுள்ள ஸ்ரீஹஸ்திகிரியை யாகவேதிகையாக்கி அங்கு ஸகல யாகங்களிலும் முக்கியமாயுள்ள அசுவமேதயாகத்தாலே, ஸகலயாகங் களின் பாகத்தையும் திருவுள்ளம்பற்றுகின்ற ஸர்வேசுவரனை ஆராதிப் பாயாக" என்று ஓர் அசரீரிவாக்குப் பிறந்தது. அதைக்கேட்டு மிக மகிழ்ந்த ப்ரஹ்மா அப்பொழுதே ஸத்யவ்ரதக்ஷேத்ரத்திற்கு வந்து தேவசிற்பியான விசுவகர்மாவை அழைத்து "நாம் ஸகலபாபங்களுக் கும் ப்ராயச்சித்தமாய் வேதங்களில் விதிக்கப்பட்டு ஸர்வேசுவரனைத் தேவதையாகக் கொண்டுள்ள அசுவமேதயாகத்தை இந்த க்ஷேத்ரத் தில் செய்யக் கருதியுள்ளோம். சிற்பவித்தையில் நிபுணனுன நீ ஹஸ்தி கிரியை நான்கு சதுரமாக வகுத்து அதையே யாகவேதியாக்கி யாக சாலையை அமைப்பாயாக. மேலும் நம்முடைய யாகத்திற்கு வரும்

தேவர்—அஸுரர்—யக்ஷர்—ராக்ஷஸர்—கிந்நரர்—கிம்புருஷர்—ஸித்தர்—வித்யாதரர்—மநுஷ்யர் முதலிய பல திறத்தினரும் நெருக்கமின்றிச் சுகமாய் வஸிக்குமாறு நீண்டு அகன்று உயர்ந்து மிக்க அழகிய ஒரு ராஜதாநியை விரைவில் படைப்பாயாக" என்று மிக விரைந்து கட்டளையிட்டான். 8

காஞ்சியின் பெருமை

216 அறுசீர்ச்சந்தவிருத்தம்

உத்தமவ மர்த்தலம மைத்ததோரே ழிற்றனுவி னுய்த்த கணையா
லத்திரவ ரக்கன்முடி பத்துமோரு கோத்தெனவு திர்த்த திறலோன்
மத்துறுமி குத்தயிர் மோய்த்தவெணெய் வைத்ததுணு மத்த னிடமா
மத்திகிரி பத்தர்வினை தோத்தறவ றுக்குமணி யத்தி கிரியே. 9

இதன் உரையை 83-வது பாசுரத்தில் காண்க,

இங்கு 'தயிர்மொய்த்த வெணெய்' என்பதற்குத் தயிரின்மேல் நிரம்பத் திரண்ட வெண்ணெய் என்றும் பொருள் கூறுவர்.

இங்ஙனம் ப்ரஹ்மா கட்டளையிட, விசுவகர்மன் ஸகலகுணங்களாலும் சிறந்துநிற்கும் ஹஸ்திகிரியை யாகவேதிகையாக்கி இது ஸர்வேசுவரன் நித்யவாஸம் செய்தற்கு உரிய இடமாகும் என்று நினைத்தான். பின் யாகவேதியும் யாகசாலையும் வருமவர்கள் தங்குமிடமும் வகுத்து ஒரு தலைநகரைப் படைத்து அதைப் பிரமனுக்குக் காட்டினான். அதைக் கண்ட பிரமனும் தன் மதிப்பிற்கு உரிய இந்நகருக்குக் காஞ்சியெனப் பெயரிட்டான். 9

பிரமன் விசுவகர்மன் படைத்த காஞ்சியைக் கண்டு மகிழ்தல்

எண்சீராசிரியவிருத்தம்

217 திண்மணிகள் போன்னுடனே சேர்த லாலுஞ்
சிதையாத நூல்வழியிற் சேர்த்தி யாலும்
வண்மையெழு மீரிரண்டு வண்ணத் தாலும்
வானவர்க்கும் வியப்பான வகுப்பி னாலு
மோண்மையுடை வாசிவிளி யோசை யாலு
மொருகாலு மழியாத வழகி னாலு
மண்மகளார்க் கலங்கார மென்ன மன்னு
மதிட்கச்சி நகர்கண்டு மகிழ்ந்திட் டானே. 10

உரை:— திண் மணிகள் - திடமான ரத்நங்கள், பொன்னுடனே - தங்கத்தோடு, சேர்தலாலும் – சேர்த்து இழைக்கப்பெற்றிருப்பதாலும், சிதையாத நூல் வழியில் – அழியாத சிற்பசாஸ்த்ரத்தின் முறையில், சேர்த்தியாலும் - அமைக்கப்பட்டிருப்பதாலும், வண்மை எழும் - கொடை நிறைந்த, ஈர் இரண்டு வண்ணத்தாலும் – நான்கு ஜாதியாரும் நிறைந்திருப்பதாலும், வானவர்க்கும் வியப்பான-தேவர்கட்கும் வியக்கத்

தக்க, வகுப்பினுலும் – அமைப்பினுலும், ஒண்மையுடை – இயற்கையழ கமைந்த, வாசி – குதிரைகளின், விளி ஓசையாலும் – கனைக்கும் குரல் ஓசையினுலும், ஒருகாலும் அழியாத அழகினுலும் – ஒருபோதும் அழியா மல் நிலைபெற்ற அழகினுலும், மண்மகளார்க்கு – பூமிக்கு, அலங்காரம் என்ன – ஆபரணம் என்னும்படி, மன்னும் – பொருந்திய, மதிள் – மதிள்களையுடைய, கச்சி நகர் கண்டு – காஞ்சீபுரத்தைக் கண்டு, மகிழ்ந்திட்டான் – (ப்ரஹ்மா) மகிழ்ச்சியடைந்தான்.

இங்ஙனம் ப்ரஹ்மாவின் கட்டளைப்படி விசுவகர்மனுல் படைக் கப்பட்ட காஞ்சீநகரம், சிற்பசாஸ்த்ரத்தை முற்றும் தழுவியமைந்து நின்றது. பல இடங்களில் உயர்ந்த ரத்நங்கள் பொன்னில் இழைக்கப் பட்டு ஒளி வீசின. ப்ராஹ்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்ரர் என்ற நான்கு வருணத்தோரும் இந்நகரில் தமது கடமையை வழுவாது செய்துவந்தனர். மிக்க அழகு வாய்ந்த உயர்தரக்குதிரைகள் கனைக்கும் குரலோசை இங்கு நிரம்பியிருந்தது; எக்காலத்தும் அழியாத அழகினுல் தேவர்களும் வியப்புறும்படி பூலோகத்திற்கே ஓர் அலங்காரமாக அமைந்த இவ்வழகிய நகரை ப்ரஹ்மா கண்டு மகிழ்ந்தான்–என்றவாறு.

இங்கு ‘ஈரிரண்டு வண்ணத்தாலும்’ என்பதற்கு வெண்மை – கருமை – செம்மை – பசுமை என்ற நான்கு நிறங்களாலும் என்றும், ‘உண்மையுடைவாசி யொளியோசையாலும்’ என்று பாடம்கொண்டு நேர்மையுடைய சிறந்த ப்ரகாசமுள்ள வஸ்துக்களாலும் சிறந்த சப்தங் களாலும் என்றும் பொருள் கொள்வதுமுண்டு. 10

பிரமன் வசிட்டனைத் தன் மனைவியிடம் அனுப்புதல்

எண்சீராசிரியவிருத்தம்

218 காமங்கள் பலகோண்ட வேதங் கோண்டு
கைதவமே செய்வார்க்குக் காண கில்லாப்
பூமங்கை கேள்வனைநான் கண்டு போற்றப்
புண்ணியத்தி னிகரில்லா விரதம் பூண்டேன்
சாமங்கள் கழிவதன்முன் சடக்கே னப்போய்த்
தன்னுற்றிற் றனியிருந்து தவஞ்செய் கின்ற
நாமங்கை வந்திடநீ யழைப்பா யென்று
நன்மகனை நான்முகன்ரு னவின்றிட் டானே. 11

உரை:— நான்முகன் – நான்கு முகங்களையுடைய ப்ரஹ்மா, நல் மகனை – (தன்னுடைய) நல்ல புத்திரனுன வஸிஷ்டனை (அழைத்து), காமங்கள் பல கொண்ட – காம்யகர்மங்கள் பலவற்றை வெளியிடுகின்ற, வேதம் கொண்டு – வேதத்தைக் கொண்டு, கைதவமே செய்வார்க்கு – (பகவத்கைங்கர்யத்தைச் செய்யாது) கபடகார்யங்களையே செய்பவர் களுக்கு, காணகில்லா – ப்ரத்யக்ஷமாய்க்காணமுடியாத, பூ மங்கை கேள்

வனை – பூவில் வாழும் பிராட்டியின் நாதனான எம்பெருமானை, நான் கண்டு போற்ற – நான் நேரில் ஸேவித்து ஸ்தோத்ரம்செய்வதற்காக, புண்ணியத்தில் நிகர் இல்லா – புண்யங்களுக்குள் ஒப்பற்ற, விரதம் பூண்டேன்-(அசுவமேதயாகமாகிய) விரதத்தைத் தொடங்கியுள்ளேன், சாமங்கள் கழிவதன் முன் – யாமங்கள் கழிவதற்கு முன் (காலம் தாழாது), சடக்கு எனப் போய் – விரைவாக (நீ) போய், தன் ஆற்றில்– தன் (பெயருள்ள ஸரஸ்வதி) நதிக்கரையில், தனி இருந்து – தனியாக இருந்து, தவம் செய்கின்ற – தவம் செய்பவளான, நா மங்கை – வாக்கின் தேவதையான ஸரஸ்வதி, வந்திட – (இங்கு) வந்துசேரும்படி, நீ அழைப்பாய் என்று – நீ அழைத்துவருவாயாக என்று, நவின்றிட்டான் – கட்டளையிட்டான். தான் – அசை.

பின் அசுவமேதயாகத்தைச் செய்ய முயன்ற ப்ரஹ்மா, மரீசி முதலிய ப்ரஹ்மர்ஷிகளை ருத்விக்குகளாக்கிக்கொண்டான். அப்பொழுது அவனுக்கு முக்கிய மனைவியான ஸரஸ்வதி ப்ரணயகலஹத்தால் அவனைப் பிரிந்து ஸரஸ்வதீநதிக்கரையில் தவம்புரிந்துகொண்டிருந்தாள். மனைவியில்லாமல் யாகம் செய்யக்கூடாது என்று சாஸ்த்ரம் கூறும். ஆதலின் ப்ரஹ்மா தன் உத்தம புத்திரனான ஸ்ரீவஸிஷ்ட பகவானை அழைத்து "வேதத்தில் கூறப்படும் காம்யகர்மங்களையே செய்பவர் பெரிய பிராட்டியோடுகூடிய எம்பெருமானை ஸாக்ஷாத்கரிக்க முடியாது. ஆதலின் நான் வேறு பலனைக் கருதாது புண்யங்களுள் ஒப்பற்ற அசுவமேதயாகத்தைச்செய்து ஸர்வேசுவரனை ஸாக்ஷாத்கரிக்க விரும்புகின்றேன். நீ ஸரஸ்வதீநதிக்கு விரைவிற்சென்று அங்குத் தனியாயிருந்து தவம்புரியும் என் முக்கிய மனைவியாகிய ஸரஸ்வதியை அழைத்து வா" என்று கட்டளையிட்டான் –என்றவாறு.

ப்ரணயகலஹத்தின் காரணம்— ஒருகாலத்தில் ப்ரஹ்மாவின் ஸபையில் தேவர்களும் முனிவர்களும் நிறைந்திருக்கும்போது லக்ஷ்மீ-ஸரஸ்வதீ ஆகிய இருவருள் சிறந்தவள் யார் என்று விவாதம் வந்தது. அப்பொழுது ப்ரஹ்மா எம்பெருமானுடைய திருமார்பில் வஸிக்கும் பெருமை வாய்ந்த லக்ஷ்மியே சிறந்தவளெனக் கூறினான். அதைக்கேட்டு மிக வருந்திய ஸரஸ்வதி தன் அம்சமாகப் பூமியில் பெருகுகின்ற ஸரஸ்வதீநதியையேனும் நதிகளில் சிறந்ததாகக் கொள்ளவேண்டுமென்றாள். அதற்கு ப்ரஹ்மா எம்பெருமானது திருவடியினின்று அவதரித்த கங்காநதியைக்காட்டிலும் சிறந்த நதி இல்லையென்றான். இதைக் கேட்டுத் தன் கணவன்மீது கோபம் கொண்ட ஸரஸ்வதீ தேவி ஸரஸ்வதீநதிக்கரையில் தவம்புரிந்தாள். 11

[இங்ஙனம் ப்ரஹ்மாவினால் கட்டளையிடப்பட்ட ஸ்ரீவஸிஷ்ட பகவான் ஸரஸ்வதியிடம் சென்று நமஸ்காரம் அபிவாதநம் இவற்றைச் செய்து ப்ரஹ்மா யாகம்செய்வதையும் அவனுடைய கட்டளையையும் கூறி அழைத்தான். அவள் ப்ரணயகலஹம் (ஊடல்) நீங்காததால் வர

மறுத்துவிட்டாள். வஸிஷ்டன் இவ்விஷயத்தைத் தன் தந்தையான ப்ரஹ்மாவிடம் தெரிவித்தான். ப்ரஹ்மா, ஸாவித்ரி முதலிய மற்ற மனைவியரை வைத்துக்கொண்டு யாகம்செய்யத் தொடங்கினன். யாகத்தில் தேவர்கள் மரியாதைசெய்யப்படுவதைக் கண்டு கோபங் கொண்ட அஸுரர்கள் இந்த யாகத்தைக் கலைக்க நினைத்து ஸரஸ்வதீ தேவியிடம் போய்க் கலஹமூட்டினர். அவளும் மிகக் கோபங் கொண்டு ஸரஸ்வதீநதிக்குத் தென்திசையில் வேகவதியென்னும் வேறொரு பெரிய நதியாய்ப் பெருகி ப்ரஹ்மாவின் யாகசாலையை அழிக்க முற்பட்டாள்.]

ஸரஸ்வதீதேவி நதிவடிவங்கொண்டு வரும் மிடுக்கு

219 பதின்மூன்றுசீராசிரியச்சந்தவிருத்தம்

அன்னவடி வாளசையு மன்னநடை யாளுயரு மன்னவர சேறி வருவா
ளத்தனய னத்தனய னுத்திதனை யத்திதென வுத்தி புரியா
ணன்னடைவி டாநடமி தென்னநட வாநடுவு நண்ணுகுவடேறியிழிவா
ணற்பதிக ளற்பதிகள் கற்புரள வற்புதம ருற்க தியினற்
கன்னடைவி டாவிடமி லுன்னதிசி ருவிகட மன்னுகிரி கூட மிடியக்
கட்டவிடை யிற்றுவிழ முற்றும்விழி யுற்றடைய விட்ட ருகுற
வன்னநய சீரயனி தென்னெனவி ழாவமரர் மன்னுபதி யேறி மகிழ
வச்சுதன ணைத்தனுவி லத்திசைவ ரத்தகைய வற்ற ணுகினள். 12

உரை:— அன்னவடிவாள் – ஹம்ஸம்போன்ற அழகையுடையவளும், அசையும் அன்ன நடையாள் – அசைகின்ற ஹம்ஸம்போன்ற நடையையுடையவளும், உயரும் அன்ன அரசு ஏறி வருவாள் – உயர்ந்த ராஜஹம்ஸத்தின்மீது ஏறிக்கொண்டு வருபவளுமான ஸரஸ்வதீதேவி,

அத்தன் அயன் – உயர்ந்தவனுகிய ப்ரஹ்மாவின், அத் தனயன்– அந்தப் புத்திரனன வஸிஷ்டனுடைய, உத்திதனை – வேண்டுகோளை, இது அத்து – இது அஸ்து (அப்படியேயாகுக), என உத்திபுரியாள் – என்று சொல்லாதவளாய்,

இது – இவ்வாறு ப்ரஹ்மா அழைத்தது, நல் நடை விடா – நல்லொழுக்கத்தினின்றும் வேறுபடாத(துபோல் தோற்றுகின்ற), நடம் என்ன – நாடகம் என்று (நினைத்து), நடவா– நடந்து, நடுவு நண்ணு குவடு – வழியிடையே எதிர்ப்படுகின்ற குன்றுமீது, ஏறி இழிவாள் – ஏறி இறங்குபவளாய்,

நல் பதிகள் – நல்ல (ஸமமான) இடங்களிலும், அல் பதிகள் – அப்படியல்லாத (மேடுபள்ளமான) இடங்களிலுமுள்ள, கல் புரள – கற்கள் புரளும்படி, அற்புத – ஆச்சர்யமான, மருற்கதியினல் – வாயு வேகத்தால்,

கல் நடை விடா – பாறைகள் அசைந்து உருளாத, இடம் இல் – இடமில்லாததும், உன்னதி சிரு – உயரம் குறையாததும், விகடம் மன்னு – மேடுபள்ளம் பொருந்தியதுமான, கிரி கூடம் இடிய – மலையின் சிகரம் இடிந்துபோகவும்,

அவ்விடை – அங்கே, கட்டு – மலைப்பக்கம் (தாழ்வரை), இற்று விழ – அடியற்று இடியவும், விழி முற்றும் உற்று அடைய விட்டு – கண்களை நாநாதிசையும் சென்று பொருந்தும்படி செலுத்தி, அருகு உற – (யாகவேதியின்) ஸமீபத்திற்கு வர,

அன்ன – அப்படிப்பட்ட, நய சீர் அயன் – நன்மையையும் சிறப்பையுமுடைய ப்ரஹ்மதேவன், இது என் என – இது என்ன என்று (திகைத்துநிற்க), விழா அமரர் – (யாகமாகிய) உத்ஸவத்திற்கு வந்த (மற்றைத்) தேவர், மன்னு பதி ஏறி – ஸ்திரமான (தங்கள்) ஸ்தானத்திற்குச் சென்று, மகிழ – (தாம் உயிர்பிழைத்து வந்ததற்கு) மகிழ்ந்துநிற்க,

அச்சுதன் – (பக்தர்களைக்) கைவிடாத எம்பெருமான், அணைத் தனுவில் – அணையுருவத்தில், அத்திசை தகைய வர – அங்கே தடுப்பதற்கு எழுந்தருள, அற்று–(வேகங்) கெட்டு, அணுகினள்–நெருங்கினள்.

1 ஸரஸ்வதீதேவி அன்னப்பறவைபோன்ற அழகையும் அதன் நடையையும் உடையவள்; அதையே வாஹநமாகவும் உடையவள்.

2 ப்ரஹ்மாவினால் அனுப்பப்பட்ட வஸிஷ்டன் தன்னை யாகத்திற்கு வரும்படி வேண்டியும், 'அங்ஙனமே யாகுக' என்று கூறாமல், இசைய மறுத்துவிட்டாள்.

3 இங்ஙனம் தன்னை ப்ரஹ்மா அழைத்தது உள்ளன்பின்றி ஒரு நிர்ப்பந்தம் கருதி நடிக்கும் வெளிவேஷமாகிய ஒரு நாடகமேயாம் என்று நினைத்து மிக்க கோபத்துடன் யாகத்தைக் கெடுக்க நதியாய்ப் பெருகிவருகின்றாள். அப்போது நடுவில் எதிர்ப்படுகின்ற கற்குன்றுகளின்மீது ஏறியும் இறங்கியும் வருகின்றாள்.

4 வாயுவேகங்கொண்டு நதி வரும்போது ஸமமான இடங்களிலும் மேடுபள்ளங்களிலும் உள்ள கற்களெல்லாம் புரண்டோடுகின்றன.

5 பெரும்பாறைகளும் அசைந்து உருள்கின்றன. மிக்க உயரமாய் மேடுபள்ளமான மலைச்சிகரங்களெல்லாம் இடிந்துவிழுகின்றன.

6 மலையின் அடிப்பாகங்களும் உடைந்து விழுகின்றன. அவள் இவ்வாறு செய்துகொண்டு நாநாதிசைகளிலும் கண்களைச் செலுத்தித் தான் கெடுக்கவேண்டிய யாகசாலையைத் தேடி யாகவேதியினருகே வந்தாள்.

7 யாகவேதியில் தீக்ஷைபெற்றுநிற்கும் ப்ரஹ்மாவும் இவ்வதிசயத்தைக் கண்டு திகைத்துநின்ருன். யாகத்திற்கு வந்த மற்றைத் தேவரும் மிக்க அச்சங்கொண்டு தமது இருப்பிடம் சென்று தாம் உயிர்பிழைத்து வந்ததற்கு மகிழ்ந்து நின்றனர்.

8 இத்தருணத்தில் பக்தரைக் கைவிடாத எம்பெருமான் ஓர் அணையுருக்கொண்டு எழுந்தருள அதனால் வேகங்கெட்டு யாகசாலையை நெருங்கினுள்—என்றவாறு. 12

எம்பெருமான் நதிநடுவே அணையாய்க் கிடத்தல்

நேரிசைவெண்பா

220 அன்று நயந்த வயமேத மாவேள்வி
போன்ற வுரையணங்கு பூம்புனலாய்—கன்றிவர
வாதி யயனுக் கருள்செய் தணையானுன்
ருதை யரவணையான் ருன். 13

உரை:— அன்று - அப்பொழுது, நயந்த – (ப்ரஹ்மாவினுல்) விரும்பிச் செய்யப்பட்ட, அயமேதம்-அசுவமேதமென்னும், மா வேள்வி– பெரிய யாகம், பொன்ற – அழிந்துபோகும்படி, உரை அணங்கு – வாக்கின் தேவதையான ஸரஸ்வதி, பூம் புனலாய் – அழகிய நதியாக ஆகி, கன்றி வர - கோபித்துக்கொண்டு பெருகிவர, தாதை – (உலகுக்கே) தந்தையும், அரவு அணையான் - ஆதிசேஷனைப் பள்ளியாகக் கொண்டவனுமான எம்பெருமான், ஆதி அயனுக்கு அருள் செய்து – ஸ்ருஷ்டிகாரணனை ப்ரஹ்மாவின்மீது கருணையை வைத்து, தான் – தானே, அணை ஆனுன் –(குறுக்கே) அணையாகப் பள்ளி கொண்டான்.

இங்ஙனம் வாக்குக்குத்தேவதையான ஸரஸ்வதி மிக்க கோபங் கொண்டு ப்ரஹ்மா விரும்பிச் செய்யும் அசுவமேதயாகத்தைக் கெடுக்க வேகவதீநதியாகப் பெருகிவர, ஸகலலோகங்களுக்கும் ஒரே அணையாயுள்ள ஸர்வேசுவரன் ப்ரஹ்மாமீது கருணைகொண்டு அந்த வெள்ளத்தின் நடுவில் பாம்பணையோடு தானும் ஓர் அணையாகிக் கிடந்தான்—என்றவாறு. 13

இங்ஙனம் அணையாக எழுந்தருளியுள்ள எம்பெருமானை மூவுலகத்தோரும் ஸேவித்துத் தம் கண்ணும் மனமும் களித்து இவ்வண்ணம் பேசினர்—

மூவுலகினரும் அவ்வணையைக் கண்டு மகிழ்ந்து பேசுதல்

கட்டளைக்கலித்துறை

221 தரணியின் மன்னி யயனுர் தனித்தவங் காத்தபிரான்
கருணை யெனுங்கட லாடித் திருவணை கண்டதற்பின்
றிரணர கேண்ணிய சித்திர குத்தன் றெரித்துவைத்த
சுருணையி லேறிய சூழ்வினை முற்றுந் துறந்தனமே. 14

உரை:— தரணியில் மன்னி – பூமியில் ஸ்திரமாயிருந்து, அயனார்– ப்ரஹ்மாவினுடைய, தனித் தவம் – ஒப்பற்ற தபஸ்ஸாகிய அசுவமே தத்தை, காத்த பிரான் – காப்பாற்றி மஹோபகாரம் செய்தருளிய எம்பெருமானுடைய, கருணை எனும் கடல் ஆடி - க்ருபையென்னும் கடலில் நீராடி, திரு அணை கண்டதற்பின் - அழகிய (அந்த) அணையை ஸேவித்தபிறகு, நரகுத் திரள் – நரகங்களின் கூட்டத்தை, எண்ணிய – கணக்கிட்டுப்பார்ப்பவனான, சித்திரகுத்தன் (எமனுடைய கணக்கனான) சித்ரகுப்தனால், தெரித்து வைத்த – கணக்குப்பார்த்து எழுதி வைக்கப்பட்ட, சுருணையில் ஏறிய - கணக்கோலையில் குறித்து வைக்கப் பட்ட, சூழ் வினை முற்றும் – (நம்மைச்) சூழ்ந்துநிற்கின்ற பாபங்கள் முழுதும், துறந்தனம் – நீங்கப்பெற்றோம்.

இப் பூவுலகில் ஸ்திரமாய் எழுந்தருளி ப்ரஹ்மாவின் அசுவமேத யாகத்தைக் காத்தருளிய ஸர்வேசுவரனுடைய கருணையாகிய கடலில் நாம் நீராடி அவ்வெம்பெருமானாகிய திருவணையைக் கண்ணாரக் காணப்பெற்றோம். ஆதலின், சித்ரகுப்தன் நரகானுபவத்தைக் கொடுப்பதற்காகக் கணக்கில் எழுதிவைத்திருந்த ஸகல பாபங்களும் இப்பொழுது நீங்கப்பெற்றோம்—என்றவாறு. 14

[இப்படி வேகவதிநதியாய் வந்த ஸரஸ்வதீதேவியின் கோப வேகம் அடங்குமாறு திருவெஃகா என்னும் திவ்யதேசத்தில் பள்ளி கொண்ட எம்பெருமான் கடாக்ஷிக்க, அதனால் அவளும் மனக்கலக்கம் தெளிந்துவர, அவளையும் கூட்டிக்கொண்டு ப்ரஹ்மா அசுவமேத யாகத்தை நடத்தினான். முடிவில் பசுவின் வபையை அக்நியில் ஹோமம் செய்தான்.]

புண்யகோடிவிமானத்துடன் பேரருளாளன் ஆவிர்ப்பவித்தல்

கட்டளைக்கலித்துறை

222 சுகலேச மெண்ணிய சூழ்வினை தீர்க்கத் துணிந்தயனா
ரகலாத வன்புடன் கொண்ட வயமேத வேதியின்மேற்
புகலோங்கு பொன்மலை யன்னவோர் புண்ணிய கோடியுடன்
பகலோன் பகல்விளக் காகப் பரஞ்சுடர் தோன்றியதே. 15

உரை:— அயனார் – ப்ரஹ்மா, சுகலேசம் – அற்பமான (லோக) ஸுகத்தை, எண்ணிய – (பெரிதாக) எண்ணுவதற்குக் காரணமா யுள்ள, சூழ் வினை – சூழ்ந்துநிற்கும் (தம்) பாபங்களை, தீர்க்கத் துணிந்து – ஒழிக்க உறுதிகொண்டு, அகலாத அன்புடன் – நீங்காத பக்தியுடன், கொண்ட – அநுஷ்டித்த, அயமேத வேதியின் மேல் – அசுவமேத யாகவேதியின்மீது, புகல் ஓங்கு – புகழ் நிறைந்துள்ள, பொன் மலை அன்ன - ஸ்வர்ண பர்வதம்போன்ற, ஓர் புண்ணிய கோடியுடன் – ஒப்பற்ற புண்யகோடி என்னும் விமானத்துடன், பகலோன் பகல் விளக்காக – ஸூர்யனும் பகலில் வைத்த விளக்கு

என்னலாம்படி, பரஞ்சுடர் - உத்தமமான(பேரருளாளனாகிய) தேஜஸ், தோன்றியது - ஆவிர்ப்பவித்தது.

இங்ஙனம் ப்ரஹ்மா அற்பமான லோகஸௌகத்தைப் பெரிதாகக் கருதும் தன் கர்மங்கள் அழிவதற்காக எம்பெருமானிடம் அளவற்ற பக்தியுடன் நடத்திய அசுவமேதயாகத்தின் வேதியின்மேல் அக்நியில் பசுவின் வபையை ஹோமம் செய்தவுடன், சித்திரைமாதத்தில் சுக்ல பக்ஷத்தில் சதுர்த்தசிதிதியில் ஞாயிற்றுக்கிழமையுடன் கூடிய ஹஸ்தநக்ஷத்ரத்தில் காலைநேரத்தில், யாகவேதிகையின் நடுவிலிருந்து ஆயிரம் கோடி ஸூர்யர்கள் உதித்தாற்போன்று பேரருளாளனாகிய ஒரு மஹா தேஜஸ்ஸு பொன்னாலாகிய மலைபோன்ற புண்யகோடி என்ற ஒரு விமானத்துடன் ஸூர்யனைப் பகல் விளக்காக்கிக்கொண்டு தோன்றிற்று. 15

இப்படிப் பேரருளாளன் திருவவதரித்தபடியைக் கண்டு நித்ய ஸூரிகள், காளம் வலம்புரி என்ற வாத்யங்களைத் தம் வாயினால் ஊதி அவன்பெருமையைப் பின்வருமாறு வெளியிட்டனர்—

நித்யஸூரிகள் திருச்சின்னம் ஒலித்தல்

எண்சீராசிரியவிருத்தம்

223 பெருமையுடை யத்திகிரிப் பெருமாள் வந்தார்
பேராத வருள்பொழியும் பெருமாள் வந்தா
ரருமறையி னுச்சிதனி னின்றார் வந்தா
ரங்கமுட னவையாகு மரியோர் வந்தார்
திருவுரையாய்த் தாம்பொருளாய் நிற்பார் வந்தார்
திருவருளாற் செழுங்கலைக டந்தார் வந்தார்
மருவலர்க்கு மயக்குரைக்கு மாயோர் வந்தார்
வானேற வழிதந்தார் வந்தார் தாமே. 16

உரை:— பெருமையுடை - (மிகப்) பெருமையுடையரான, அத்திகிரிப் பெருமாள் – ஹஸ்திகிரிநாதர், வந்தார் -- எழுந்தருளினார்; பேராத அருள் பொழியும் – நீங்காத கருணையைப் பொழியும், பெருமாள் வந்தார்; அரு மறையின் உச்சிதனில் – அருமையான வேதத்தின் சிகரத்தில் (வேதாந்தத்தில்),நின்றார்–போற்றப்பட்டுநின்றவர், வந்தார்; அங்கமுடன் – அங்கங்களுடன், அவையாகும் - அந்த வேதஸ்வரூபரான, அரியோர் – அருமையான ஸ்வாமி, வந்தார்; திரு உரையாய் – பிராட்டி சப்தஸ்வரூபமாய்நிற்க, தாம் பொருளாய் – தாம் அர்த்த ஸ்வரூபமாய், நிற்பார் – நிற்பவர், வந்தார்; திரு அருளால் – (தம்) சிறந்த க்ருபையினால், செழும் கலைகள் – உயர்ந்த சாஸ்த்ரங்களை, தந்தார் - (உலகுக்குத்) தந்தவர், வந்தார்; மருவலர்க்கு – (தம்மிடம்) அன்பற்ற நாஸ்திகருக்கு, மயக்கு உரைக்கும் – மோஹநசாஸ்த்ரங்களை வெளியிடு

இன்ற, மாயோர் – வஞ்சகர், வந்தார்; வான் ஏற – பரமபதத்திற்குச் செல்ல, வழி தந்தார் – உபாயத்தை உபதேசித்தவர், வந்தார். தாம் – அசை.

அத்திகிரிப் பெருமாள் மிக்க பெருமையுடையவர்; அடியார்கள் மீது எப்பொழுதும் கருணைமழை பொழியுமவர்; அருமையான வேதாந்தங்களால் போற்றப்படுமவர்; அங்கங்களுடன் கூடிய வேத ஸ்வரூபராய் நிற்பவர்; பிராட்டி சப்தஸ்வரூபையாய் நிற்க அதற்கு அர்த்தமாய் விளங்குமவர்; கருணையின் மிகுதியால் உயர்ந்த சாஸ்த்ரங்களை உலகுக்கு அளித்தவர்; நாஸ்திகர்களுக்கு மோஹந சாஸ்த்ரங்களை வெளியிட்டவர்; ஸ்ரீ வைகுண்டத்தை அடையும் வழி காட்டியவர்: இத்துணைப் பெருமை வாய்ந்த பேரருளாளப் பெருமாள் இங்கு எழுந்தருளினார் என்று நித்யஸூரிகள் மிக மகிழ்ந்து திருச்சின்னவொலி செய்தனர்—என்றவாறு. 16

நித்யஸூரிகள் திருச்சின்னம் ஒலித்தல்

எண்சீராசிரியவிருத்தம்

224 அத்திகிரி யருளாளப் பேருமாள் வந்தா
ரானைபரி தேரின்மே லழகர் வந்தார்
கச்சிதனிற் கண்கோடுக்கும் பேருமாள் வந்தார்
கருதவரந் தருதேய்வப் பேருமாள் வந்தார்
முத்திமழை போழியுமுகில் வண்ணர் வந்தார்
மூலமேன வோலமிட வல்லார் வந்தார்
உத்தரவே திக்குள்ளே யுதித்தார் வந்தா
ரும்பர்தோழுங் கழலுடையார் வந்தார் தாமே. 17

உரை:— அத்திகிரி – ஹஸ்திகிரியிலெழுந்தருளிய, அருளாளப் பெருமாள் – பேரருளாளரென்னும் பெருமாள், வந்தார்; ஆனை பரி தேரின் மேல் – யானை குதிரை தேர் ஆகிய வாஹநங்கள் மீது (எழுந்தருளும்), அழகர் வந்தார்; கச்சிதனில் – காஞ்சீபுரத்தில், கண் கொடுக்கும் – கண்ணைக் கொடுக்கும், பெருமாள் வந்தார்; கருத வரம் தரு – மனஸ்ஸினால் அநுஸந்தித்தால் வேண்டிய வரத்தைக் கொடுக்கும், தெய்வப் பெருமாள் – தேவச்சிரேஷ்டர், வந்தார்; முத்தி மழை பொழியும் – மோக்ஷமாகிய மழையைப் பொழிகின்றவரும், முகில் வண்ணர் – மேகம்போன்ற நிறமுடையவருமான எம்பெருமான், வந்தார்; மூலம் என ஓலம் இட – (முதலையால் பீடிக்கப்பட்ட கஜேந்திரன்) ஆதிமூலமே என்று கூக்குரலிட, வல்லார் – (அந்த யானையைக் காக்கச்) சக்தியுடையவர், வந்தார்; உத்தரவேதிக்குள்ளே – ப்ரஹ்மா ஏற்படுத்திய) உத்தரவேதிக்குள்ளே, உதித்தார்; – ஆவிர்ப்பவித்தவர், வந்தார்; உம்பர் தொழும் – நித்யஸூரிகளால் தொழப்படுகின்ற, கழலுடையார் – திருவடிகளையுடைய எம்பெருமான், வந்தார். தாம் – அசை.

பேரருளாளப்பெருமாள், யானை – குதிரை – திருத்தேர் ஆகிய வாஹநங்கள்மீது அமர்ந்து விளங்கும் அழகர்; கச்சியில் இருந்த ஒரு பக்தருக்குக் கண்ணை அளித்தவர்; தியானித்தால் விரும்பிய பலனைத் தந்தருள்பவர்; முக்தியாகிய மழையைப் பொழியும் காள மேகமாய் நிற்பவர்: முதலையின் வாய்ப்பட்டு அல்லலுற்ற கஜேந்த்ரன் 'மூலமே' என்று ஓலமிட்டபோது வந்து காத்தவர்; பிரமன் செய்த அசுவமேதயாக வேதியின் நடுவில் அவதரித்தவர்; நித்யஸூரிகளும் முக்தரும் வணங்கும் திருவடிகளையுடையவர். இத்தகைய பேரருளாளர் எழுந்தருளினார் என்று நித்யஸூரிகள் திருச்சின்னவொலி செய்தனர்– என்றவாறு.

'கண்கொடுக்கும் என்னும் தொடர் குருடரான ஹாரிதவாரண ப்ருத்யர் என்பவருக்குப் பேரருளாளன் கண்ணைக் கொடுத்தருளிய வரலாற்றினைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். கூரத்தாழ்வானுடைய ஸுந்தரபாஹுஸ்தவத்தில் 126-வது சுலோகத்திற் காண்க. 17

[இப்படித் திருவவதரித்தருளின பேரருளாளனுடைய பெரிய தேஜஸ்ஸில் மதிமயங்கி ஓடிய ப்ரஹ்மாவும் தேவர்களும் முனிவர்களும் மிக்க சிரமத்துடன் ஊன்றி நோக்கியபின் அந்தப் பெரிய தேஜோ மண்டலத்திற்குள் புண்யகோடிவிமாநத்தையும், அதன் நடுவில் பேரருளாளன் யாகத்தின் ஹவிர்ப்பாகத்தை உட்கொண்டதால் அதன் நறுமணம் வீசும் திருப்பவளச் செவ்வாயுடன் ஒளியைப் பொழியும் ஒரு காளமேகம்போல் நின்றருளியபடியையும் கண்டு மகிழ்ச்சி ஆச்சர்யம் இவற்றால் பரவசமாயினர்].

இவ்வாறு பரவசரான அவர்கள் இங்ஙனம் போற்றினார்கள்—

அனைவரும் பேரருளாளன் வடிவழகை வருணித்தல்

225 பன்னிருசீராசிரியச்சந்தவிருத்தம்

இருபரிதி யைந்த மகுடமு மெழின்மதிதி கழ்ந்த வதனமு
மிருவகையி லங்கு குழைகளி லெதிர்பொரவு கந்த மகரமு
மொருதகவு யர்ந்த திருமக ளொளிமறுவின் மன்னு மகலமு
முருவருவு மிழ்ந்த வுதரமு முலகடைய நின்ற கழல்களு
மருவினிடை பொங்கு புனலென மலைகுனிய நின்ற மலையென
மருளறவி ளங்கு மொளியென மலரயனு கந்த பயனென
வருவிலுறை கின்ற வுயிரென வடியவரு கந்த வமுதென
வருமறைக ளொன்றி யடிதொழ வருள்வரதர் நின்ற பெருமையே.

உரை:—இரு பரிதி-(கிரணங்களால்) பெரிய சூர்யனை, இயைந்த மகுடமும் – ஒத்த கிரீடமும், எழில் மதி – ப்ரகாசிக்கும் சந்த்ரன்போல்,

திகழ்ந்த வதனமும் – விளங்குகின்ற திருமுகமண்டலமும், இருவகை இலங்கு குழைகளில் – இரண்டுவகையாக ப்ரகாசிக்கின்ற குண்டலங்களில், எதிர் பொர – எதிரேநின்று சண்டையிடுவதற்கு, உகந்த மகரமும் – விரும்பிய (ன போன்ற) மீன்களும், ஒரு தகவு – ஒப்பற்ற கருணையினால், உயர்ந்த திருமகள் – உயர்ந்துநிற்கும் பிராட்டி, ஒளி மறுவின் – ப்ரகாசிக்கின்ற (ஸ்ரீவத்ஸமென்னும்) மறுவோடு, மன்னும் அகலமும் – நித்யவாஸம் செய்யும் திருமார்பும், உரு அரு – அசேதநத்தையும் சேதநத்தையும், உமிழ்ந்த உதரமும் – ஸ்ருஷ்டித்த திருவயிறும், உலகு அடைய – உலகத்திலுள்ளவர் வந்து சரணமடையும்படி, நின்ற கழல்களும் – நிற்கின்ற திருவடிகளும் ஆகிய இவற்றுடன், அரு மறைகள் – அருமையான வேதங்கள், ஒன்றி அடி தொழ – ஒரேமுகமாய் நின்று திருவடிகளைத் தொழு(து பேசு)ம்படி, அருள் வரதர் நின்ற பெருமை – அருளே வடிவெடுத்த பேரருளாளர் நின்ற பெருமை (எவ்வாறு இருந்ததென்னில்), மருவின் இடை – பாலைவனத்தின் நடுவில், பொங்கு புனல் என–எழும்பிய ஜலம் என்னும்படியாகவும், மலை குனிய – (அத்திகிரியென்னும்) மலை வளையும்படி, நின்ற மலை என – நின்ற மலை என்னும்படியாகவும், மருள் அற – அஜ்ஞாநம் நீங்கும்படி, விளங்கும் ஒளி என – ப்ரகாசிக்கின்ற தேஜஸ் என்னும்படியாகவும், மலர் அயன் – (பகவானுடைய நாபிக்) கமலத்தில் உதித்த ப்ரஹ்மா, உகந்த பயன் என – விரும்பிய பலன் என்னும்படியாகவும், அருவில் உறைகின்ற – சேதநப்பொருளுக்குள் வஸிக்கின்ற, உயிர் என – உயிர் என்னும்படியாகவும், அடியவர் உகந்த – பாகவதர்கள் விரும்புகின்ற, அமுது என – அம்ருதம் என்னும்படியாகவும் (இருந்தது).

பரிதியைந்த - இகரம் தொக்கது - விகாரம்.

பேரருளாளன், தன் கிரீடம் ஸூர்யனைப்போல் ஒளியை வீசவும், திருமுகமண்டலம் சந்த்ரபிம்பத்தைப்போல் குளிர்ந்து நிற்கவும், திருக்காதுகளில் அணிந்த இரண்டு குண்டலங்களிலும் அமைந்துள்ள மீனுருவங்கள் இரண்டும் போரிட முயல்வனபோல் ஒன்றுக்கொன்று எதிர்முகமாய் நிற்கவும், தன் திருமார்பில் ஸ்ரீவத்ஸமென்னும் மறுவும் பெரிய பிராட்டியும் நித்யவாஸம் செய்து விளங்கவும், சேதநாசேதநங்களை ப்ரளயகாலத்தில் வைத்துக் காத்துப் பின் படைக்கும் திருவயிற்றுடனும் உலகிலுள்ளோர் யாவரும்வந்து சரணமடையுமாறு நிற்கின்ற திருவடிகளுடனும், வேதங்களெல்லாம் அந்தத் திருவடிகளைத் தொழுது பேசுமாறு நின்ற பெருமையை ஆய்ந்து பார்க்கின், அவ்வெம்பெருமானை ஸம்ஸாரமாகிய பாலைவனத்தில் தோன்றிய தெய்விகமான ஒரு நீர்நிலையென்றும், ஹஸ்திகிரியென்னும் மலையும் வளைந்து போகும்படி அதன்மீது அழுத்தி நிற்கின்ற ஒரு மலையென்றும், உலகத்துள்ள அஜ்ஞாநம் நீங்குமாறு விளங்கும் ஒரு தேஜஸ் என்றும், ப்ரஹ்மா அடைய விரும்பிய பெரும்பயன் என்றும், ஸகல வஸ்துக்களிலும் நிற்கின்ற அந்தர்யாமியென்றும், பாகவதர்களால் விரும்பப்படும் திவ்யாம்ருதமென்றும் கூறலாகும்—என்றவாறு.

[இவ்வாறு ப்ரஹ்மாவும் மற்றைத் தேவர்களும் மஹர்ஷிகளும் ஆச்சர்யத்தாலும் பக்திப்பெருக்கினாலும் ஏவப்பட்டு வணங்குவதும் எழுவதுமாயிருந்து 'பேரருளாளனுக்கு அடியராகப் பெற்றோமே' என்று தம் பாக்கியத்தை நினைந்து நினைந்து மகிழ்ந்து நின்றார்கள்.]

வேதாந்தார்த்தங்களை வெளியிடுகின்ற ப்ரஹ்மஸூத்ரங்களின் பதினாறு பாதங்களில் புகழப்படுகின்ற குணங்களைப் புகழ்ந்து அவர்கள் பேசுகின்றனர்—

ப்ரஹ்மஸூத்ரங்கள் பேசும் குணங்களைக்கொண்டு துதித்தல்

இருபத்தெண்சீராசிரியச்சந்தவிருத்தம்

226 *சித்த சித்தெனவி ரித்து ரைத்தனவ
னைத்த மைத்துறையு மிறைவனார்
சிறிய பெரியவுரு வடைய வுடலமென
நடல மிலதிலகு நிலையினார்
சித்தி ரத்தெழிலை யொத்த பத்தரொடு
முத்தர் பித்தியெனு முணர்வினார்
சிதைவின் மறைநெறியி லேறிய வுருமுறைகண்
முறிய சிறையரிய நிறைவினார்
கத்து விக்கவல கத்து வித்தைவழி
கற்ற வர்க்கசைவின் மறையினார்
கபிலர் கணசரணர் சுகதர் சமணரரர்
வழிக ளழியுமருண் மொழியினார்
கத்தி லக்கிலும ருக்கு லத்திலும
சித்தி லொக்குமொரு முதல்வனார்
கரண மிடுகடிய பதினொ ரிருடிகமு
மடைய முடியுமடி யிருடியா
ரொத்த னைத்துலகு மொற்றி யொற்றிவரு
மிப்ப வத்திசையி னிசைவினா
ருருவ மருவமெனு முலகின் முடுகிலதி
லுவமை யிலதிலகு தலைவனா

* स्रष्टा देही स्वनिष्ठो निरवधिमहिमाऽपास्तबाधः श्रितात्मः
खात्मादेरिन्द्रियादेरुचितजननकृत् संसृतौ तन्त्रवाही ।
निर्दोषत्वादिरम्यो बहुभजनपदं स्वार्हकर्मप्रसाद्यः
पापच्छिद्ब्रह्मनाडीगतिकृदतिवहन् साम्यदश्चात्र वेद्यः ॥
— அதிகரணஸாராவளி.

ருத்த மப்படிவ குத்த வித்தைகளி
லுத்த ரிக்கவுணர் குணவனு
ருரிய கிரிசைகளி லரிய தோருவிரகு
தேரிய விரையுமவர் பரிவினுர்
சத்த சத்தெனும னைத்த ணைத்தவினை
தோத்த றுக்கவல துணிவினுர்
சரியு மளவிலுரி யவரை யறிவரிய
தமனி நேறிசேருகு விரகினுர்
தத்து வத்திரளு தைத்து தைத்தடைவு
தத்து விக்குமவர் தலைவனுர்
தருகை யுணருமவர் சரண மணுகவிட
லரிய வருள்வரத ரடியமே. 19

முதல் அத்யாயத்தின் ஸாரார்த்தம்

உரை:—சித்து அசித்து என – சேதநம் அசேதநம் என்று, விரித்து உரைத்தன – (சாஸ்த்ரங்களில்) விளக்கிக் கூறப்பட்ட, அனைத்தும் அமைத்து – ஸகலவஸ்துக்களையும் படைத்து, உறையும் இறைவனுர் – (அவற்றுள் அந்தர்யாமியாய்) வஸிக்கின்ற தலைவரா யிருப்பவரும்,

இதனுல், சேதநம் — அசேதநமாகிய ஸகலவஸ்துக்களையும் படைக்கும் தன்மையாகிய முதற்பாதத்தின் ஸாரார்த்தம் கூறப் பட்டது.

அனைத்தும் + அமைத்து = அனைத்தமைத்து; தொகுத்தல்.

சிறிய பெரிய – ஸூக்ஷ்மமும் ஸ்தூலமுமான, உரு அடைய – உருவமுள்ள (சேதநம் அசேதநமென்னும்) வஸ்துக்கள் முழுதும், உடலம் என – (தமக்குச்) சரீரமென்னும்படி நின்று, நடலம் இலது – (அவற்றிலுள்ள) தோஷம் தட்டாது, இலகும் நிலையினுர் – ப்ரகாசிக்கும் ஸ்வபாவமுடையவரும்,

இதனுல் ஸகலவஸ்துக்களையும் சரீரமாகக் கொண்ட தன்மை யாகிய இரண்டாவது பாதத்தின் ஸாரார்த்தம் கூறப்பட்டது.

'இலதிலகும்' என்னும் தொடரில் இலாது என்பது குறுகி 'இலது' என்ருயிற்று. அன்றி, இலதாக – இல்லாததாக என்றும் பொருள் கூறலாம்.

எழில் சித்திரத்தை ஒத்த – அழகிய சித்திரத்தைப்போன்ற, பத்தரொடு முத்தர் – பத்தருக்கும் முக்தருக்கும் (நித்யஸூரிகளுக்கும்), பித்தி எனும் – ஆதாரமான சுவர் என்று கூறப்படுகின்ற, உணர்வினுர்– ஸங்கல்பத்தையுடையவரும்,

சித்திரத்தைச் சுவர் தாங்குவதுபோல் தன் ஸங்கல்பத்தால் ஸர்வேசுவரன் உலகத்தைத் தாங்குகின்றான் என்று பொருள்.

இதனால் வேறொன்றையும் தமக்கு ஆதாரமாகக் கொள்ளாமையாகிய மூன்றாவது பாதத்தின் ஸாரார்த்தம் வெளியிடப்பட்டது.

சிதைவு இல் – அழிவு இல்லாத, மறை நெறியில் – வேதமார்க்கத்தில், எறி – ஒதுக்கப்பட்ட, அ உரு முறைகள் – அந்த அசேதநத்தின் ப்ரகாரங்கள், முறிய – தொலைந்துபோக, சிறை அரிய நிறைவினர் – வரம்பு இல்லாத பெருமையையுடையவரும்,

பிறமதத்தினர் அசேதநமே உலகுக்குக் காரணமென்று வேத விருத்தமாய் வழக்காட, ஸித்தாந்திகள் பல ந்யாயங்களின் உதவியால் வேதாந்த வாக்யங்களை ஆராய்ந்து, அசேதநம் ஜகத்காரணம் ஆகாதென்றும், எல்லையற்ற பெருமையையுடைய ஈசுவரனே ஜகத்காரணம் என்றும் ஸ்தாபித்தனர்.

இதனால் எல்லையற்ற பெருமையுடைமையாகிய நான்காவது பாதத்தின் ஸாரார்த்தம் விளக்கப்பட்டது.

இரண்டாம் அத்யாயத்தின் ஸாரார்த்தம்

கத்துவிக்க வல – (எடுத்த இடமெல்லாம் ஹேதுவை) ஆரவாரத்தோடு கல்பிக்கும்படி செய்யவல்ல, கத்துவித்தை வழி – ஜல்பமென்னும் வாதமார்க்கத்தை, கற்றவர்க்கு – பரிசயம் செய்தவரால், அசைவு இல் – அசைக்க முடியாத, மறையினர் – விசித்திரமான சக்தியாகிய ரஹஸ்யத்தையுடையவரும்,

ப்ரஹ்மத்தை ஜகத்துக்குக் காரணமாகக் கொள்வதில் பிறமதத்தினர் ஜல்பத்தைக் கொண்டு வெளியிட்ட பல தோஷங்களை ப்ரஹ்மம் விசித்திரமான சக்தியைக் கொண்டிருப்பதைக் கொண்டு போக்கியபடியால் ப்ரஹ்மம் ஜகத்காரணமென்பது அசைக்கமுடியாததாயிற்று.

இதனால் ஜகத்காரணத்வத்தில் பிற மதத்தினர் ஸ்ம்ருதிகளுடனும் யுக்திகளுடனும் கல்பித்த விரோதங்கள் நீங்கிய தன்மையாகிய முதற்பாதத்தின் ஸாரார்த்தம் வெளியிடப்பட்டது.

கபிலர் – கபிலரும், கணசரணர் – கணாதரும், சுகதர் – புத்தரும், சமணர் – ஜைநரும், அரர் – பாசுபதரும் (சைவரும்) ஆகிய இவர்களுடைய, வழிகள் அழியும் – மதங்கள் தொலைதற்குக் காரணமான, அருள் மொழியினர்–(ஆச்ரிதரிடம்) அருளாலே (வந்த ஸ்ரீபாஞ்சராத்ரம் என்னும்) ஸ்ரீஸூக்தியை வெளியிட்டவரும்,

பிறமதங்களை ஒழிக்க ஸ்ரீ பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தை வெளியிட்டருளியவர் என்றதால் அச்சாஸ்த்ரத்தைத் தழுவி நடக்கும் ஆச்ரிதர்க்கு அநுகூலமாயிருக்கும் தன்மையாகிய இரண்டாவது பாதத்தின் ஸாரார்த்தம் கூறப்பட்டது.

கத்து இலக்கிலும்–(கம்-இந்த்ரியம்) இந்த்ரியங்களுக்கு இலக்கான ஐந்து பூதங்களிலும், அருக்குலத்திலும் – ஜீவவர்க்கத்திலும், அசித்தில் ஒக்கும் – (மஹான் அஹங்காரம் என்னும்) தத்துவங்களின் விஷயத்திற் போல், ஒரு முதல்வனர் – ஒரே காரணமாயிருப்பவரும்,

இதனல் பஞ்சபூதங்களையும் ஜீவர்களையும் தக்கவாறு ஸ்ருஷ்டிக்கும் தன்மையாகிய மூன்ருவது பாதத்தின் ஸாரார்த்தம் கூறப்பட்டது.

கரணம் இடு — கூத்தாடுகிற, கடிய – கொடிய, பதினெரு இருடிகமும் – (ஜ்ஞானேந்த்ரியம் ஐந்து, கர்மேந்த்ரியம் ஐந்து, மனம் ஆகிய) பதினென்று இந்த்ரியங்களும், அடைய – முழுதும், முடியும் அடி – தோன்றுவதற்குக் காரணமான, இருடியார் – நேரில் எல்லாவற்றையும் காணவல்ல முனிவர்போன்றவரும்,

இதனல் இந்த்ரியம் முதலியவற்றுக்குக் காரணமாந்தன்மையாகிய நான்காவது பாதத்தின் ஸாரார்த்தம் கூறப்பட்டது.

மூன்ரும் அத்யாயத்தின் ஸாரார்த்தம்

ஒத்து – எப்பொழுதும் ஒரே தன்மையதாயிருந்து, அனைத்து உலகும் – (ஸ்வர்க்கம் நரகம் இவற்றுக்குச் செல்லும்) ஸகல ஜீவர்களையும், ஒற்றி ஒற்றி வரும் – தழுவித் தழுவி வருகின்ற, இப் பவத்து – இந்த ஸம்ஸாரத்தை நடத்துதற்கு, இசையும் – ஏற்ற, இசைவினர் – ஸங்கல்பத்தையுடையவரும்,

இதனல் சேதநருக்கு விழிப்பு, ஸ்வப்நம், நித்ரை, மூர்ச்சை, மரணம் ஆகிய நிலைமைகளிலும் நிர்வாஹகராயிருந்து ஸம்ஸாரத்தை நடத்திவைத்தலாகிய முதற்பாதத்தின் ஸாரார்த்தம் வெளியிடப்பட்டது.

உருவம் அருவம் எனும் உலகின் – அசேதநம் சேதநம் என்னப்படும் லோகத்தின், முடுகு இலதில் – தோஷம் இல்லையென்னுமதில், உவமை இலது – ஸமமில்லாமல், இலகு தலைவனர் – ப்ரகாசிக்கின்ற ஸ்வாமியாயிருப்பவரும்,

இதனல் சேதநாசேதநங்களில் கலந்து அந்தர்யாமியாயிருக்கும் போதும் அவற்றிலுள்ள தோஷம் தம்மிடத்துத் தட்டாதிருத்தல் என்ற இரண்டாவது பாதத்தின் ஸாரார்த்தம் வெளியிடப்பட்டது.

உத்தமப் படி – உயர்ந்த ப்ரகாரங்களில், வகுத்த வித்தைகளில் – (பலவகையாய்ப்) பிரிக்கப்பட்ட பக்தியோகங்களில், உத்தரிக்க உணர் குணவனர் – (வேறு உபநிஷத்துக்களிலிருந்து) எடுத்துக்கொள்ளக் கருதப்பட்ட குணங்களையுடையவரும்,

மோக்ஷத்திற்கு ஸாதநமான பக்தியோகம், தஹரவித்யை – சாண்டில்யவித்யை – பரவித்யை முதலிய பல வித்யைகளாகப் பிரிகின்

றது. ஓர் உபநிஷத்தில் கூறப்பட்ட வித்யையை அநுஷ்டிக்கும்போது வேறு உபநிஷத்திலும் கூறப்பட்டுள்ள அதே வித்யையில் சொல்லிய மற்றைக் குணங்களையும் எடுத்துக்கொண்டு அவற்றுடன் கூடிய தாகவும் ப்ரஹ்மத்தை உபாஸிக்கவேண்டும்.

இப்படிப் பலவகைப்பட்ட பக்தியோகத்தால் உபாஸிக்கப்படும் தன்மையாகிய மூன்றாவது பாதத்தின் ஸாரார்த்தம் இதனால் வெளி யிடப்பட்டது.

உரிய கிரிசைகளில் – (பக்தியோகத்திற்கு அங்கமாய்த் தங்களுக் குத்) தக்கனவான வர்ணாச்ரம தர்மங்களில், அரியது ஒரு விரகு – எளி தில் செய்யமுடியாத ஓர் உபாயத்தை, தெரிய விரையுமவர் - அறிய விரைபவரிடம், பரிவினர் - அன்பு (டன் தலைக்கட்டி) வைப்பவரும்,

பக்தியோகத்திற்கு அங்கமான நித்ய-நைமித்திக-காம்யங்களா கிய வர்ணாச்சிரமதர்மங்களை, செய்வதற்கு அரிதான ஸாத்துவிக த்யாகத்துடன் செய்ய முற்படுவோருக்கு அந்தப் பக்தியோகத்தை எம்பெருமான் தலைக்கட்டிவைக்கின்றான்.

ஸாத்துவிகத்யாகம் :—செய்யும் கர்மமும், அதன் பலனும், செய்யும் தன்மையும் தன்னுடையனவென்று நினையாமல் அவற்றை எம்பெருமானிடமே ஸமர்ப்பித்தல்.

இதனால் சேதநர் செய்யும் உரிய கர்மங்களால் மகிழ்ந்து அருள் புரியுந்தன்மையாகிய நான்காம் பாதத்தின் ஸாரார்த்தம் கூறப்பட்டது.

நான்காம் அத்யாயத்தின் ஸாரார்த்தம்

சத்து அசத்து எனும் - புண்யம் பாபம் எனப்படுகின்ற, அனைத்த – (உபாஸிக்கும் ஜீவனைச்) சேர்ந்துள்ள, அனைத்துவினை – ஸகலகர்மங்களும், தொத்து - தொடர்தலை, அறுக்க வல – ஒழிக்க வல்ல, துணிவினர் – உறுதியையுடையவரும்,

இதனால் உபாஸிப்பவர்களுடைய ஸகல கர்மங்களையும் ஒழிக்கும் தன்மையாகிய முதற்பாதத்தின் ஸாரார்த்தம் வெளியிடப்பட்டது.

சரியுமளவில் - சரீரத்தை விடுங்காலத்து, உரியவரை – (பரம பதம் செல்லத்) தக்க ஜீவர்களை, அறிவு அரிய – அறிவதற்கு முடியாத, தமனி நெறி – ப்ரஹ்மநாடி வழியில், செருகு விரகினர் – ப்ரவேசிக்கச் செய்யும் வல்லமையுடையவரும்,

இதனால் மோக்ஷத்திற்குச் செல்லத்தக்கவரை ப்ரஹ்மநாடி வழியில் புகச்செய்தலாகிய இரண்டாவது பாதத்தின் ஸாரார்த்தம் கூறப்பட்டது.

தத்துவத் திரள் – (ப்ரக்ருதியைச் சேர்ந்த ஸகல அசேதந) தத்து வங்களின் கூட்டத்தையும் உதைத்து உதைத்து – (காலால்) உதைத்து

உதைத்து (த் தள்ளி), அடைவு – வரிசையாக, தத்துவிக்குமவர் – (சேதநரை ஸம்ஸாரத்தை விட்டுத்) தாண்டுவிப்பவ (ரான ஆதிவாஹிக) ருக்கு, தலைவனுர் – ஸ்வாமியாயிருப்பவரும்,

இதனுல் ஆதிவாஹிகரைக் கொண்டு சேதநரை ஸம்ஸார மண்டலத்தைத் தாண்டுவித்துப் பரமபதம் சேர்த்தலாகிய மூன்றும் பாதத்தின் ஸாரார்த்தம் கூறப்பட்டது.

தருகை – (எம்பெருமான் பலன்) கொடுப்பதை, உணருமவர் – நினை(ந்து உபாஸநம் செய்)யும் ஜீவர், சரணம் அணுக – (தம்) திருவடிகளை நெருங்கிநிற்க, விடல் அரிய – (அவரை) விடாதவருமான, அருள்வரதர் - கருணையே வடிவெடுத்த பேரருளாளருக்கு, அடியம் – (நாம்) தாஸர்களாயிருக்கின்றோம்.

இதனுல், திரும்புகையில்லாது தம் அநுபவத்தைத் தந்து தம்மைப்போலாக்குகையாகிய நான்காம்பாதத்தின் ஸாரார்த்தம் கூறப்பட்டது.

இத்தகைய பெருமையுடைய பேரருளாளருக்கு அடியராகப் பெற்றோம் – என்று அவர்கள் மகிழ்ந்து வேதாந்தஸாரமான அர்த்தத்தை இவ்வாறு விண்ணப்பம் செய்தார்கள். 19

ப்ரஹ்மா அப்பொழுது பரபரப்பு, மகிழ்ச்சி, பயம் ஆகிய இவற்றையுடையனுய்க் கிட்டிச் சென்று நித்யஸூரிகள் அநுபவித்தற்குரிய எம்பெருமான் திருமேனியை அநுபவித்துத் தான்பெற்ற பேற்றை இவ்வாறு பேசுகிறுன்.—

பிரமன் பேரருளாளன் திருமேனியை அநுபவித்துப் பேசுதல்

எண்சீராசிரியவிருத்தம்

227 திருமகண்மண் மகணீளை முதலா வெல்லாத்
தேவியருந் தன்னுடனே திகழ்ந்து நிற்கத்
தருமமிரு மூன்றுமுத லனைத்துந் தோன்றத்
தன்னனைய சூரியர்தன் னடிக்கீழ் வாழ
வருமறைசே ரளவில்லா வவனி யின்க
ணரவணைமேல் வீற்றிருப்பா லனைத்துங் காக்குங்
கருமணியைக் கரிகிரிமேற் கண்டே னென்றன்
கடுவினைக ளனைத்துங்நான் கண்டி லேனே. 20

உரை:— திருமகள் - லக்ஷ்மி, மண்மகள் – பூமிப்பிராட்டி, நீளை – நீளாதேவி, முதலா எல்லாத் தேவியரும் - முதலிய எல்லாத் தேவிமாரும், தன்னுடனே திகழ்ந்துநிற்க - தன்னுடனே ப்ரகாசித்துக் கொண்டு நிற்க, இரு மூன்று தருமம் முதல் - (ஜ்ஞாநம், சக்தி, பலம், ஐசுவர்யம், வீர்யம், தேஜஸ் என்னும்) ஆறு குணங்கள் முதலிய,

அனைத்தும் தோன்ற - எல்லாக் குணங்களும் ப்ரகாசிக்க, தன் அனைய சூரியர் - தன்னைப் போன்ற நித்யஸூரியர், தன் அடிக் கீழ் வாழ - தன் திருவடிகளின் கீழ்க் கைங்கர்யம்செய்ய, அரு மறை சேர் - அருமையான வேதத்தால் புகழப்படுகின்ற, அளவு இல்லா அவனியின் கண் - அளவிடமுடியாத தேசமாகிய பரமபதத்தில், அரவு அணைமேல் - ஆதிசேஷனாகிய திருப்பள்ளியின்மேல், வீற்றிருப்பால் - எழுந்தருளியிருப்பதாலேயே, அனைத்தும் காக்கும் - ஸகலத்தையும் ரக்ஷிப்பவனான, கருமணியை - நீலரத்நம்போன்ற பேரருளாளனை, கரிகிரிமேல் கண்டேன் - ஹஸ்திகிரியின்மீது ஸேவித்தேன். என்றன் கடு வினைகள் அனைத்தும் - என்னுடைய கொடிய கர்மங்கள் முழுதையும், நான் கண்டிலேன் - நான் காணவில்லை. (கர்மங்கள் தொலைந்தன).

ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீபூமிநீளாதேவியர் முதலிய தேவியர் சூழ்ந்துநிற்க, நித்யஸூரிகளும் முக்தர்களும் தன் திருவடிகளுக்குக் கைங்கர்யம் செய்து நிற்க, திருக்கல்யாண குணங்களனைத்தும் ப்ரகாசிக்கும்படி திருவநந்தாழ்வானாகிய திருப்பள்ளியில் வீற்றிருந்தே தன் கடாக்ஷத்தாலேயே ஸகல லோகங்களையும் ரக்ஷித்தருளுகின்ற எம்பெருமானை இன்று இந்த ஹஸ்திகிரியில் கண்ணாரக் கண்டுகளித்து என் பாபங்கள் அனைத்தும் நீங்கப்பெற்றேன் என்று ப்ரஹ்மா அநுஸந்தித்தான்—என்றவாறு.

'அனைத்து நான்' என்னுந் தொடரில் நகரம் செய்யுள்விகாரத்தால் விரிந்துநின்றது. 20

[இப்படிக் கண்களால் காண அரியனாய் மனோரதத்திற்கு மாத்திரம் புலனாய்நிற்கும் எம்பெருமான் அன்று யாகவேதியில் தன் கண்ணெதிரே காயாம்பூ நிறத்தனாய்க் காட்சியளிப்பதைக் கண்ணாரக்கண்ட ப்ரஹ்மா அந்த க்ஷணத்திலேயே பொங்கிய ஆநந்தக்கடலில் மூழ்கிச் செய்யவேண்டியதையறியாத பித்தனானான்; பின் பேரருளாளனை ப்ரதக்ஷிணம் செய்தான்; அப்ரதக்ஷிணமாக வந்தான்; தூரத்தில் ஓடினான்; ஸமீபத்தில் ஓடிவந்தான்; தன் கையினால் அவன் திருமேனியைத் தொட்டுப்பார்த்தான்; தடவிப்பார்த்தான்; அன்பின் பெருக்கினால் சிறிதுகாலம் இறுகத் தழுவிக்கொண்டான். இப்படி ப்ரஹ்மா மகிழ்ச்சியால் கார்யங்களை முறைதவறிச் செய்து, சிறிது நேரம் ஓடிக் கூடிப் பின் சுயநிலையை அடைந்தான்].

பின்பு ப்ரஹ்மா, பெரியபெருமாளாகிய பேரருளாளன் உபய நாச்சிமாருடன் எழுந்தருளியிருக்கிற நிலையைப் பல படியாக அநுபவிக்கிறான்—

பேரருளாளனை உவமானங்களுடன் பிரமன் அநுபவித்தல்

228 பதினான்குசீராசிரியச்சந்தவிருத்தம்

பேடையி ரண்டையோ ரனம டைந்துபி ரிந்தி டாவகை பேசலாம்
பெருகு மருவிக ளருகு மருவிய பெரிய மணிவரை பயிலலாம்
பிடியி ரண்டோடு களவ மொன்றுபி ணைந்த பேரழ கோதலாம்
பிரிவி லொளியொடு நிழலு மருகுறு மிரவி யிலகுதல் பரவலாங்

கோடியி ரண்டோடு விடவி யொன்றுகு ளிர்ந்த வாறுகு லாவலாங்
குறைவில் சுருதியு நினைவு மிலகிய தரும வருநிலை யென்னலா
மடியி ரண்டையு மடையு மன்பர றிந்த பேரரு ளாளனு
ரணுகு மலர்மக ளவனி மகளோடு கரடி கிரியினி லவிர்தலே. 21

உரை:— அடி இரண்டையும் - (தம்) திருவடிகள் இரண்டையும், அடையும் அன்பர் - அடைபவர்களான பாகவதர்களால், அறிந்த - அநுஸந்திக்கப்பட்ட, பேரருளாளனுர் - பேரருளாளர், அணுகும் - நெருங்கியுள்ள, மலர்மகள் அவனிமகளொடு - பெரியபிராட்டியுடனும் பூமிப்பிராட்டியுடனும், கரடிகிரியினில் - ஹஸ்திகிரியில், அவிர்தல் - ப்ரகாசித்தல், ஓர் அனம் - ஓர் ஆண் ஹம்ஸம், பெடை இரண்டை - இரண்டு பெண் ஹம்ஸங்களை, அடைந்து - சேர்ந்து, பிரிந்திடாவகை - பிரியாமலிருக்கும் ப்ரகாரத்தை, பேசலாம் - (போலுமென்று) சொல்ல லாம்; பெருகும் அருவிகள் - பெருகுகிற அருவிகளை, அருகு மருவிய - பக்கத்தே பெற்றுள்ள, பெரிய மணிவரை - பெரிய ரத்நபர்வதத்தை, பயிலலாம் - (ஒக்குமென்று) அநுஸந்திக்கலாம்; ஒன்று களவம் - ஓர் ஆண்யானை, பிடி இரண்டொடு - இரண்டு பெண்யானைகளுடன், பிணைந்த - சேர்ந்திருந்த, பேர் அழகு - பெரிய அழகை, ஓதலாம் - (போலுமென்று) கூறலாம்; பிரிவு இல் ஒளியொடு - (தன்னைவிட்டுப்) பிரியாத பிரகாசத்தோடு, நிழலும் - சாயையும், அருகு உறும்-பக்கத்தே பொருந்தப்பெற்ற, இரவி - ஸூர்யன், இலகுதல் - ப்ரகாசிப்பதை, பரவலாம் - (ஒக்குமென்று) புகழலாம்; ஒன்று விடவி - ஒரு மரம், கொடி இரண்டொடு - கொடிகள் இரண்டுடன், குளிர்ந்தவாறு - குளிர்ந்துநிற்பதை, குலாவலாம் - (போலுமென்று) கொண்டாடலாம்; குறைவு இல் - குற்றமில்லாத, சுருதியும் நினைவும் - வேதத்தோடும் ஸ்ம்ருதியோடும், இலகிய - (கூடிப்) பிரகாசிக்கின்ற, தரும அருநிலை - தர்மத்தின் ஸூக்ஷ்மம், என்னலாம் - (போலும்) என்று கூறலாம்.

ஹஸ்திகிரியில் பேரருளாளன் பெரியபிராட்டியுடனும் பூமிதேவி யுடனும் சாசுவதமாக ப்ரகாசிக்கும் நிலைக்கு, ஓர் ஆண் அன்னம் இரண்டு பெடைகளுடன் கூடியிருப்பதையும், ஒரு பெரிய ரத்நமலை இரு பக்கத்தும் நீரருவிகள் பெருகியோடநிற்பதையும், ஆண் யானை யொன்று இரண்டு பெண்யானைகளுடன் கூடிக் குலாவுதலையும், ஸூர்யன் சாயையோடும் ஒளியோடும் திகழ்வதையும், ஒரு மரம் இரண்டு கொடிகளுடன் ப்ரகாசிப்பதையும், தர்ம ஸூக்ஷ்மம் வேதங் களோடும் ஸ்ம்ருதிகளோடும் பொருந்திநிற்பதையும் உவமானமாகக் கூறலாம்—என்றவாறு. 21

ப்ரஹ்மா அளவற்ற திருக்கல்யாணகுணங்களுக்குக் கடலாய் நிற்கும் பேரருளாளனுடைய திவ்யகுணங்களை அநுபவிக்கிறுன்—

பிரமன் பேரருளாளன் திவ்யகுணங்களை அநுபவித்துப் பேசுதல்

எண்சீராசிரியவிருத்தம்

229 வேரோப்பார் விண்முதலாங் காவுக் கேல்லாம்
விழியோப்பார் வேதமேனுங் கண்ட னக்குக்
காரோப்பார் கருணைமழை போழியு நீராற்
கடலோப்பார் கண்டிடினுங் காணுக் கூத்தா
னீரோப்பார் நிலமளிக்குந் தன்மை தன்னு
னிலமோப்பார் நேடும்பிழைகள் போறுக்கு நேரா
லாரோப்பா ரிவர்குணங்க ளனைத்துங் கண்டா
லருளாளர் தாமேனினுந் தமக்கோவ் வாரே. 22

உரை:— அருளாளர் – பேரருளாளர், விண்முதலாம் – ஆகாசம் முதலிய(உலகமாகிய), காவுக்கு எல்லாம் – சோலைகள் அனைத்துக்கும், வேர் ஒப்பார் – வேரைப்போல் (ஆதாரமாக) ஆவார்; வேதம் எனும் கண் தனக்கு – வேதம் என்று சொல்லப்படும் (உலகின்) கண்ணுக்கு, விழி ஒப்பார் – நடுவேயுள்ள கருவிழியைப்போன்றவராவார்; கருணை மழை பொழியும் நீரால் – கருணையாகிய மழையைப் பெய்யும் தன்மையால், கார் ஒப்பார் – மேகத்தைப்போன்றவராவார்; கண்டிடினும் – நேரில் பார்த்தபோதிலும், காணுக் கூத்தால் – (ஸ்வரூபத்தை) முழுதும் காணமுடியாமையாகிய அதிசயத்தால், கடல் ஒப்பார் – கடலைப்போன்றவராவார்; நிலம் அளிக்கும் தன்மைதன்னல் – பூமியைக் காப்பாற்றுகின்ற ஸ்வபாவத்தால், நீர் ஒப்பார் – ஜலத்தை ஒத்திருப்பார்; நெடும் பிழைகள் – (நம்முடைய) பெரிய அபராதங்களை, பொறுக்கும் நேரால் – பொறுத்துக்கொள்ளும் ஸ்வபாவத்தால், நிலம் ஒப்பார்-பூமிதேவியைப் போன்றிருப்பார். இவர் குணங்கள் அனைத்தும் கண்டால் – இவருடைய குணங்கள் முழுவதையும் ஆலோசித்தால், ஒப்பார் ஆர் – இவரை ஒத்தவர் யார்?, (ஒருவருமில்லை), தாம் எனினும் – தாமே என்றாலும், தமக்கு ஒவ்வார் – தமக்கு ஒத்தவராகமாட்டார்.

[வேரொப்பார்.........] இப் பிரபஞ்சம் முழுவதும் எம்பெருமானுக்கு லீலைக்காக ஏற்பட்ட நந்தனவனம் போன்றதாகும். நந்தனவனத்திலுள்ள மரங்களை வேர் தரித்துக்கொண்டிருப்பதுபோல் ப்ரபஞ்சம் முழுவதையும் பேரருளாளன் தரித்துக்கொண்டு நிற்பதால் வேர்போன்றவன் ஆவான்.

[விழியொப்பார்.........] கண்ணின் நடுவில் உள்ள கருவிழி முக்கியமானதாகும். வேதத்தைக்கொண்டு உலகிலடங்காத பொருள்களையும் நாம் அறிவதால் நமக்கு வேதம் ஒரு தெய்விகக் கண்போன்றதாகும். இதனுல் போற்றப்பட்டு இதன் நடுவில் பேரருளாளன் ஸாரமாய் விளங்குவதால் வேதமெனும் கண்ணுக்குக் கருவிழிபோன்றவனுவான்.

[காரொப்பார்.........] மேகம், மேடு – பள்ளம் என்பதுபோன்ற பேதம் பாராமல் மழையைப் பொழிந்து குளிரச்செய்வதுபோல், பேரருளாளனும் உயர்ந்தவர் – தாழ்ந்தவர் என்ற பேதம் பாராது அனைவர் மீதும் கருணையாகிய மழையைப் பொழிவதால் மேகம்போன்றவனுவான்.

[கடலொப்பார்.........] நாம் 'கடலைக் கண்டோம்' என்கிறோம். ஆனால் அதன் ஏகதேசத்தைக்கண்டோமேயன்றி முழுதும் கண்டோமல்லோம். அவ்வாறு பேரருளாளனை நாம் அநுபவிக்கின்றோமாயினும் அவனுடைய திருமேனி, குணம் முதலியவற்றின் ஏகதேசத்திலும் முழுதும் காணவல்லேமல்லோம்.

[நீரொப்பார்.........] ஜலம், பூமிமுழுதும் வாடாது காக்கும். அங்ஙனமே பேரருளாளன் உலகிலுள்ளோர் துன்புறாதபடி உஜ்ஜீவிக்கச் செய்வதுபற்றி ஜலம்போன்றவனுவான்.

நிலமொப்பார்.........] பூமிக்குப் பொறுமையே வடிவமென்பது வழக்கு. அவள் பாபிகள் – புண்யசாலிகள் அனைவரையும் பொறுமையோடு தாங்கி நிற்கின்றாள். ஜீவராசிகளுடைய அபராதங்களைப் பொறுத்துக்காப்பதால் பேரருளாளன் பூமிதேவியைப்போன்றவனுவான்.

இப்படி ஒவ்வோர் அம்சத்தில் பேரருளாளனுக்கு ஒவ்வொரு போலியுவமானத்தைத் தேடியெடுத்தாலும் எல்லாக் குணங்களுடனும் கூடிய நிலையில் அவனுக்கு ஓர் உவமானமும் காணமுடியாது. தனக்குத்தானும் நிகராகமாட்டான்—என்று ப்ரஹ்மா அநுபவித்துப் பேசினுன். 22

[இவ்வாறு ப்ரஹ்மா பேரருளாளனுடைய குணங்களைத் தனித்தனியாகவும் சேரவும் அநுபவித்து, நான்குதிசையிலும் முகமுடையவனுதலின் மேற்றிசையிலுள்ள முகத்தாலே யாகசாலையின் மேற்புறத்தில் அணையாகக் கிடக்கும் திருவெஃகா எம்பெருமானையும், கீழ்த்திசையிலுள்ள முகத்தாலே யாகவேதியில் திருவவதரித்தருளிய பேரருளாளனையும் சேர அநுபவித்து 'ஸ்வயம்வ்யக்தமாய்ப் பரஞ்சோதியாயுள்ள ஒரே வஸ்து வேகவதியின் நடுவில் நின்று யாகத்தைக் காத்ததால் உபாயமாகவும், ஹஸ்திகிரியில் யாகவேதியில் யாகத்தின் பலனுக அவதரித்தபடியால் பலனுகவும் காணப்படுகிறது' என்று அநுஸந்தித்தான்.

இங்ஙனம் ப்ரஹ்மா மிக்க மகிழ்ச்சியின் வயப்பட்டு மயிர்க் கூச்செறிந்த மேனியும், ஆநந்தக்கண்ணீர் பெருக்கியகண்களும், தழுதழுத்த குரலும், தளர்ந்த நிலையுமாய்க்கொண்டு தன் அதிகாரச்சுமையை மறந்து எம்பெருமானுடைய கைங்கர்யத்திலேயே ஊன்றிநின்று தொடர்ந்து துதித்துக்கொண்டேயிருந்தான்.]

பேரருளாளன் பிரமனுக்கு அருள்புரிதல்

கட்டளைக்கலித்துறை

230 எந்நில முங்குரத் தாற்குறி செய்த வெழிற்பரிகோண்
டன்ன முயர்த்தசெய் யோனன்று வேள்விசெய் வேதியின்மேன்
முன்னிலை யாகிய மூர்த்திய ஞன்முக மற்றுமுனக்
கேன்ன வரந்தரு வோமென்று நாத னியம்பினனே. 23

உரை:— அன்னம் உயர்த்த – ஹம்ஸத்தைக் கொடியாக உயர்த்தவனும், செய்யோன் – செந்நிறமுடையனுமான ப்ரஹ்மா, எந்நிலமும் – எல்லா நிலத்திலும், குரத்தால் – காற்குளம்பினால், குறி செய்த–அடையாளம் செய்த, எழில் பரிகொண்டு–அழகிய குதிரையைக் கொண்டு, அன்று – அந்நாளில், வேள்வி செய் வேதியின் மேல் – யாகம் செய்த வேதிகையின்மீது, நாதன் – ஸ்வாமியான பேரருளாளன், முன்னிலையாகிய மூர்த்தியன் – எதிரேநின்ற திருமேனியுடையனாகி, நான்முக – "ப்ரஹ்மாவே!, உனக்கு மற்றும் என்ன வரம் தருவோம் – உனக்கு வேறு எந்த வரத்தைக் கொடுக்கவேண்டும்? (கேட்பாயாக)", என்று இயம்பினன் – என்று அருளிச்செய்தான்.

ப்ரஹ்மா செய்த இத்தகைய அசுவமேதயாகத்தில் யாகவேதிகையில் திருவவதரித்துள்ள பேரருளாளன் ப்ரஹ்மாவுக்கு அருள்புரிய முற்பட்டு 'ப்ரஹ்மாவே! உனக்கு வேண்டிய வரத்தைக் கேள். என்னை நேரில் கண்டவர்கள் ஸகல பலன்களையும் பெற வல்லவராவர்' என்று அவனை நோக்கிக் கூறினன். 23

[அப்பொழுது ப்ரஹ்மாவும் பேரருளாளனைக் குறித்து "ஸ்வாமி! தேவரீருடைய திருமேனியை எப்பொழுதும் ஸேவிப்பதற்கு நித்யஸூரிகளே உரியவர். அத்தகைய திருமேனியை நான் கண்டு அநுபவிக்கப் பெற்றேன், இந்தப் பாக்யம்தவிர எனக்கு வேறு ஒரு வரமும் வேண்டுமோ? ஆனால் அடியேன் வேண்டுவது ஒன்றே உளது. அதாவது— ஸம்ஸாரிகள் விபரீதஜ்ஞாநத்தையும் அதனால் வரும் விபரீதாசாரத்தையும் இந்தக் கர்மசரீரத்தையும் அடையாதபடி தேவரீர் எப்பொழுதும் இங்கே எழுந்தருளியிருந்து, வேண்டுவார்க்கு வேண்டிய வரத்தைக் கொடுத்து வாழ்வித்தருளவேண்டும். தேவரீர் ஸ்ரீவைகுண்டத்திலும் திருப்பாற்கடலிலும் நித்யமாக வஸித்தல்போல் இந்த மெய்விரதமென்னும் க்ஷேத்ரத்திலும் நித்யமாக வாஸம் செய்தருளவேண்டும். ஹஸ்திகிரியின் சிகரத்தில் ஸகலலோகங்களாலும் வணங்கப்பட்டு விளங்கும் இந்தப் புண்யகோடிவிமாநத்தில் எல்லாப் பிராணிகளும் எப்பொழுதும் தேவரீரைக் கண்ணாரக் கண்டு களிக்கவேண்டும்" என்று விண்ணப்பம்செய்தான்.

இங்ஙனம் ப்ரஹ்மாவின் விண்ணப்பத்தைச் செவிசாய்த்த பேரருளாளனும், "தேவர்-விலங்குகள்-மானிடர் ஆகிய இவர்களின்

கண்ணுக்குப் புலனாய் இங்கேயே வஸிக்கின்றேன். இது ஸத்யம்'' என்று அருளிச்செய்தான். இதனால் தன் கார்யம் நிறைவேறிய ப்ரஹ்மாவும், யாகத்தைத் தலைக்கட்டி க்ருதயுகத்தில் செய்யவேண்டிய முறைப்படி பேரருளாளனைப் பரிபூர்ணமாக ஆராதித்தான்.]

ப்ரஹ்மா அப்பொழுது அங்குள்ள பரமபாகவதரான மஹர்ஷிகளுக்கு அபிகமநம் முதலிய ஐந்து காலத்திலும் பேரருளாளனை ஆராதிக்கும் முறைகளைச் சுருக்கமாய் உபதேசித்து 'நீங்களும் இங்ஙனம் செய்துவாழுங்கள்' என்கிறான்—

மஹர்ஷிகளுக்குப் பிரமனது உபதேசம்—பஞ்சகால ப்ரக்ரியை

கட்டளைக்கலித்துறை

231 சென்று மலர்பறித் தெந்நாதன் சேவடிப் போதுகந்து
நன்றெனு நீர்சுடர் நன்முக வாச மிலைகொடுத்துக்
கன்ன லிலட்டுவத் தோடன்னஞ் சீடை கறிபடைத்துப்
பின்னுஞ் செவித்தவன் பாதம் பணிமின்க ளென்றனனே. 24

உரை:— சென்று - எம்பெருமானிடம் சென்று (ப்ரபத்தியைச் செய்து), மலர் பறித்து - புஷ்பங்களைப் பறித்து, எந்நாதன் - எம்முடைய நாதனை பகவானுடைய, சேவடிப்போது - சிவந்த திருவடி மலர்களை, உகந்து - விரும்பி, நன்று எனும் - நல்லதென்று சொல்லப்படுகிற, நீர் - ஜலம், சுடர் - தீபம், நல் முகவாசம் இலை - நல்லதாய்த் திருமுகமண்டலத்திற்கு வாஸனை தரும் பண்டம் வெற்றிலை ஆகியவற்றை, கொடுத்து - ஸமர்ப்பித்து, கன்னல் இலட்டுவத்தோடு - சருக்கரைலட்டுடன், அன்னம் சீடை கறி படைத்து - அன்னம் சீடை கறி ஆகியவற்றை ஸமர்ப்பித்து, பின்னும் செவித்து - மறுபடியும் மந்த்ரஜபம்செய்து, அவன் பாதம் பணிமின்கள் - அவனுடைய திருவடிகளை த்யாநம்செய்யுங்கள், என்றனன் - என்று உபதேசித்தான்.

மஹர்ஷிகளே! நீங்கள் ஒவ்வொரு நாளும் காலையில் பேரருளாளனிடம் சென்று ப்ரபத்தியைச் செய்யுங்கள். (அபிகமனம்). பின் அவனுக்குத் திருவாராதநம் செய்வதற்கு வேண்டிய புஷ்பம்–திருத்துழாய் முதலியவற்றை ஸம்பாதியுங்கள். அவன்திருவடிகளின் இனிமையை ஸ்ரீஸூக்திகளால் அநுபவித்து மனத்தைத் தூய்மைப்படுத்திக் கொள்ளுங்கள். (உபாதாநம்). பின் பரிசுத்தமான தீர்த்தம்-தூபம்-தீபம்-வெற்றிலை-பாக்கு முதலியவற்றுடனும் பக்ஷ்யங்களுடனும் வ்யஞ்ஜநங்களுடனும் திவ்யாந்நத்தை அவனுக்கு ஸமர்ப்பித்து ஆராதநம் செய்யுங்கள். (இஜ்யை). பின் ஸ்ரீபாஷ்யம்-திவ்யப்ரபந்தம் முதலிய ஸ்ரீஸூக்திகளை நற்பொழுது போக்கப் பரிசயம் செய்யுங்கள். (ஸ்வாத்யாயம்). பின் அவன் திருவடிகளையே த்யாநம் செய்யுங்கள். (யோகம்). இவ்வாறு பஞ்சகால ப்ரக்ரியையை அநுஷ்டிப்பீர்களாக.

பஞ்சகாலப்ரக்ரியைகளின் விரிவுகளை ஸ்ரீவைணவதினசரியின் விஷயச்சுருக்கத்தில் காண்க.

[இப்பாசுரம் ஸ்ரீதேசிகன் அருளிச்செய்ததன்றென்பர் சிலர்] 24

பிரமன் தன்னுலகம்சென்று யோகத்திலிருத்தல்

கொச்சகக்கலிப்பா

232 ஆழிநிலை வினைகடிவா னயமேத முடித்ததற்பின்
வேழமலை நாயகனார் விடைகொடுக்க விண்ணேறி
நாழிகையில் வானவரை மாற்றியிடு நான்முகன்று
னூழியேலா மழியாத வுயோகமடைந் திருந்தானே. 25

உரை:—நாழிகையில் – அற்பகாலத்தில், வானவரை – இந்த்ராதி தேவர்களை, மாற்றியிடும் – நீக்கி வேறொருவரை நியமிப்பவனும், நான் முகன் – நான்கு முகங்களையுடையவனுமான ப்ரஹ்மா, ஆழி நிலை வினை – கடல்போன்ற கர்மங்களை, கடிவான் – போக்குவதற்காக, அயமேதம் – அசுவமேதயாகத்தை, முடித்ததற்பின் – செய்துமுடித்த பிறகு, வேழமலை நாயகனார் – ஹஸ்திகிரிநாதரான பேரருளாளர், விடை கொடுக்க – அநுமதி கொடுக்க, விண் ஏறி - ப்ரஹ்மலோகம் சென்று, ஊழியெலாம் அழியாத – கற்பகாலத்திலும் அழியாததான, உயோகம் அடைந்து இருந்தான் – பகவானுடைய த்யாநத்தில் அமர்ந்திருந்தான், தான் – அசை.

பின்பு பேரருளாளனும் மிக மகிழ்ந்து 'ப்ரஹ்மாவே! முன் உனக்கு நான் கொடுத்த ப்ரஹ்மபதமாகிய அதிகாரத்தில் குறை தீரும்படி ஸரஸ்வதி ஸாவித்ரி முதலிய உன் தர்மபத்நிகளுடன் உன் லோகத்திற்குச் சென்று எஞ்சிய அதிகாரத்தை நடத்துவாயாக' என்று அருளிச்செய்தான். இதைக்கேட்ட ப்ரஹ்மாவும் அண்டத்திற் குள்ளிட்ட லோகங்களுக்கெல்லாம் மேலேயுள்ள ஸத்யலோகம் சென்று மெய்விரதமென்னும் க்ஷேத்ரத்தின் பெருமையையும் ஸத்ய மான ஸங்கல்பத்தையுடையனான பேரருளாளனுடைய திருவருளையும் அநுஸந்தித்துக்கொண்டு கல்பகாலத்திலும் அழியாத ஸம்பூர்ண பகவதநுபவரஸம் நிறைந்த யோகவிசேஷத்தில் மூழ்கிக்கிடந்து பாக்ய சாலியாயிருந்தான். 25

பேரருளாளன் நான்குயுகங்களிலும் வரமளித்தல்

கட்டளைக்கலித்துறை

233 ஆதி யுகத்தயன் கண்டிட நின்ற வருள்வரதர்
காத லுயர்ந்த களிற்றைத் திரேதையிற் காத்தளித்து
வாதுயர் தேவ குருவுக் கிரங்கித் துவாபரத்திற்
சோதி யனந்தன் கலியிற் றொழுதேழ நின்றனரே. 26

உரை:— ஆதி யுகத்து – முதல் யுகமாகிய க்ருதயுகத்தில், அயன் கண்டிட நின்ற – ப்ரஹ்மா ஸாக்ஷாத்கரிக்கும்படி நின்றவரும், அருள் வரதர் – அருளே வடிவுகொண்டவருமான பேரருளாளர், திரேதையில்— திரேதாயுகத்தில், காதல் உயர்ந்த – (தன்னிடம்) பக்தி மிகுந்திருந்த, களிற்றை – கஜேந்திரனை, காத்தளித்து – (முதலைவாயினின்றும்) காப்பாற்றி அருள்புரிந்து, துவாபரத்தில்–த்வாபரயுகத்தில், வாது உயர் – வாதம்புரிவதில் சிறந்த, தேவ குருவுக்கு – தேவர்களின் குருவான ப்ருஹஸ்பதிக்கு, இரங்கி – கருணைபுரிந்து, கலியில் – கலியுகத்தில், சோதி அனந்தன் – தேஜஸ் மிகுந்த ஆதிசேஷன், தொழுது எழ – ('அநந்தஸரஸ்' என்னும் புஷ்கரிணியின் ஸமீபத்தில் அதன் தலைவனாக இருந்து) வணங்கி உஜ்ஜீவிக்கும்படி, நின்றனர் – (ஹஸ்திகிரியிலேயே நிலைபெற்று) நின்றார்.

முதலடியால் பேரருளாளன் யாகவேதியில் அவதரித்து ப்ரஹ்மாவுக்கு அநுக்ரஹம் செய்தகாலம் கிருதயுகமெனத் தீர்ந்தது.

2-வது அடியில் உள்ள வரலாறு — மஹாசாந்தன் என்ற அந்தணன் த்ரிகூடமலையின் சிகரத்தில் கொடிய தவம் புரிந்தான். இதையறிந்து தன் பதவிக்குத் தீங்குவருமோவென அஞ்சிய இந்த்ரன் அவன் தவத்தைக் கெடுக்கத் தேவமாதரை அனுப்பினான். அந்தணன் மனம் மாறவில்லை. பின் இந்த்ரன் தானே யானைவடிவங்கொண்டு பல பெண் யானைகளுடன் அவ்வந்தணனுக்கு எதிரில் விளையாடினான். அதைக் கண்ட அந்தணன் மனவுறுதிகுலைந்தான்; யானைவடிவத்தையே தானும் பெற்றுப் பல பெண்யானைகளுடன் பலவிடங்களில் திரிந்து விளையாடித் தவநிலையை மறந்தான்; பின் ஸாளக்ராமமென்னும் க்ஷேத்ரத்தில் சக்ரதீர்த்தத்தில் மூழ்க நேரிட அப்பொழுது பழையநினைவு வரப்பெற்று, விஷ்ணுக்ஷேத்ரங்களில் வஸிக்க விரும்பிச் சுற்றிவருங்காலை, கோதாவரிநதிக்கரையில் மிருகண்டுமுனிவர் யானையாகிய இவனைக் கண்டு பூஜித்துப் புண்ய க்ஷேத்ரங்களின் பெருமையைச் சொல்லிவந்தார்; அப்பொழுது காஞ்சியே மிகச் சிறந்ததென்று கூறி அங்குள்ள அநந்தஸரஸ்ஸில் நீராடிப் பேரருளாளனைத் தொழுதால் ஸகலபாபங்களும் ஒழியுமென்றார். அதைக்கேட்ட யானையும் அவ்வாறே செய்தது. தினந்தோறும் 10000-தாமரைப்புஷ்பங்களைப்பறித்துப் பேரருளாளனைப் பூஜித்தது. திரேதாயுகத்தின் கடைசியில் மழையின்றிப் பெரிய பஞ்சம்வந்தது. குளங்கள் வறண்டன. தாமரைப்பூ கிடைக்கவில்லை. பகவானைப் பூஜிக்க இயலாது யானை மிகத் தவித்தது. அப்பொழுது சித்ரகூடமலையிலிருந்து தாமரைமணத்துடன் காற்று வீசியது. அவ்வழிச் சென்று புஷ்பங்கள் நிறைந்த மிகப் பெரியதொரு குளத்தைக் கண்டது. மிக மகிழ்ந்து நீரில் இறங்கிப் புஷ்பங்களைப் பறித்துக் கரையேறும்போது அங்கிருந்த ஒரு பெரிய முதலை யானையின் காலைப் பற்றிக்கொண்டு நீரில் இழுத்துச் சென்றது. உடனே பேரருளாளனைத் தியானித்துச் சரணமடைய, அவ்வெம்பெருமானும் கருடன்மீது ஏறிக்கொண்டு வந்து முதலையைச் சக்கராயுதத்தால் கொன்று யானையைக் காத்தான். யானை தன் கையிலுள்ள புஷ்பங்களை அவன்

திருவடிகளில் ஸமர்ப்பித்தது. முதலேயும் கந்தர்வசரீரம்பெற்றுப் புண்யலோகம் சேர்ந்தது. யானை மனிதவடிவம் பெற்று நிற்க, எம்பெருமான் அவனையும் கருடன்மீது ஏற்றிக்கொண்டு பாகவதர்களின் பெருமையை வெளிப்படுத்தித் தன்னிடம் சேர்ந்தான்.

3-வது அடியில் உள்ள வரலாறு — முன்னொருகால் தேவ ஸபைக்குப் பல முனிவர் வந்தனர். அவர்களை இந்த்ரன் உபசரித்து, 'அதிதிபூஜை முதலியவற்றைச் செய்துகொண்டு வீட்டில் இருத்தல்-தீர்த்தயாத்ரை செய்தல் ஆகிய இவ்விரண்டில் எது சிறந்தது' எனக் கேட்டான். முனிவர்கள் முதலாமதே சிறந்ததென்றனர். தேவ குருவான ப்ருஹஸ்பதி முனிவர்களை அவமதித்துப் பேசி இரண்டாமதே சிறந்ததாமென்றார். ப்ருஹஸ்பதி செருக்குடன் கூறிய இம்முடிவைச் சாஸ்த்ரவிருத்தமெனக் கண்ட அம்முனிவர் சினந்து ப்ருஹஸ்பதியைப் பூமியில் பிறந்து துன்புறுமாறு சபித்தனர். அவரும் அவ்வாறே நர்மதாநதிக்கரையிலுள்ள ஓர் ஏழையந்தணன் வீட்டில் பிறந்தார்; இளம்வயதிலேயே பெற்றோரை இழந்து வேறோரந்தணனால் சிறிது காலம் வளர்க்கப்பட்டார். பின் உடைக்கும் உணவுக்கும் வருந்திப் பல நோய்களால் அல்லல்பட்டுத் தவம்புரியக் கருதிக் கங்கைக்கரையில் உள்ள பரத்வாஜமுனிவரை நெருங்கிச் சரண மடைந்தார். முனிவரும் தம் ஜ்ஞாநத்ருஷ்டியால் அவருடைய முந்திய வரலாற்றை அறிந்து ஹஸ்திகிரிக்குச் சென்று பேரருளாளனைக் குறித்துத் தவம்புரிந்தால் சாபம் நீங்குமென்றார். அந்தணரும் உடனே காஞ்சிக்குச் சென்று அவ்வாறே செய்ய, பேரருளாளன் ப்ரத்யக்ஷமாகி த்வாபரயுகத்தில் தன்னை ஆராதிக்குமாறு கட்டளையிட்டான். அவர் அங்ஙனே ஆராதித்துச் சாபம் நீங்கி உயர்பதத்தைப் பெற்றார்.

4-வது அடியில் உள்ள வரலாறு— முன்னொருகால் எம்பெருமான் வராஹாவதாரம் செய்து பாதாளத்தில் இருந்த அஸுரர்களைக் கொன்று பூமியைக் கைதூக்கிவிட்டான். அப்பொழுது எல்லா லோகங்களையும் தன் தலையால் தாங்கிநிற்கும் ஆதிசேஷன் வராஹ வடிவங்கொண்ட எம்பெருமானைச் சேவிக்க விரும்பிப் பூமியைப் பிளந்துகொண்டு பாதாளத்திலிருந்து கிளம்பிவந்தான். அவன் வந்த இடத்திலுள்ள நீர்நிலை 'அநந்தஸரஸ்' எனப் பெயர்பெற்றது. பேரருளாளன் தன்னைக் கலியுகத்தில் ஆராதிக்கும்படி ஆதிசேஷனுக்குக் கட்டளையிட்டதால் அவன் அந்தக் குளத்திற்குச் சமீபத்திலுள்ள ஒரு புற்றில் வஸித்துக்கொண்டு பேரருளாளனை இன்றும் ஆராதித்து வருகின்றான். 26

பேரருளாளனருளால் இப்பிரபந்தம் பாடினமை

எண்சீராசிரியவிருத்தம்

234 புண்ட ரீகமு யிர்த்தபு ராணனுர்
போய்யின் மாமக வுத்தர வேதியிற்
கோண்ட லாரருண் மாரிபோ ழிந்திடக்
கோண்ட தோருயர் கூர்மதி யன்பினுற்

பண்டை நான்மறை மௌலிப டிந்தயான்
பாரின் மெய்விர தக்கவி பாடினேன்
றொண்டை மண்டல வேதியர் வாழவே
தூய தென்மறை வல்லவர் வாழவே. 27

உரை:— பண்டை – அநாதியான, நான் மறை – நான்கு வேதங்களின், மௌலி – அந்தத்தில் (வேதாந்தத்தில்), படிந்த யான்–ஈடுபட்ட நான், புண்டரீகம் உயிர்த்த – நாபித்தாமரை பிறப்பிக்கப்பெற்ற, புராணனூர் – அநாதியான ப்ரஹ்மாவினுடைய, பொய் இல் மா மக உத்தர வேதியில் – கபடமில்லாது அநுஷ்டிக்கப்பட்ட பெரிய யாகத்தின் உத்தரவேதியில், கொண்டல் – பேரருளாளனாகிய மேகம், ஆர் அருள் மாரி பொழிந்திட – நிறைந்த க்ருபையாகிய மழையைப் பெய்திட்டுநிற்க, கொண்டது – (அதனால்) உண்டான, ஓர் உயர் – ஒப்பற்ற உயர்ந்த, கூர் மதி அன்பினால் – கூர்மையுள்ள அறிவாலும் பக்தியாலும், தொண்டை மண்டல வேதியர் வாழ – தொண்டைநாட்டிலுள்ள வேதங்களைக் கற்ற அந்தணர் நீடூழி வாழவும், தூய தென்மறை வல்லவர் வாழ – பரிசுத்தமான தமிழ்வேதம் வல்லார் வாழவும், பாரில் – இப்பூமியில், மெய்விரதக் கவி – ஸத்யவ்ரதமென்னும் க்ஷேத்ரத்தைப்பற்றிய இப் பாசுரங்களை, பாடினேன் – பாடி முடித்தேன்.

ப்ரஹ்மா செய்த யாகத்தின் வேதிகையில் அவதரித்த பேரருளாளனது அருளாலே கூரிய அறிவையும் பக்தியையும் பெற்று இந்த மெய் விரத மான்மியத்தைப் பாடினேன். பேரருளாளனது ஸம்பந்தம் பெற்றுத் திகழும் தொண்டைமண்டலத்திலுள்ள வைதிகர்களான பரமபாகவதர்களும், ஆழ்வார்களின் அருளிச்செயலில் ஈடுபட்டு நிற்கும் மெய்யடியார்களும் இப்பிரபந்தத்தை அநுஸந்தித்து நீடூழி வாழ்க—என்றவாறு. 27

இப்பிரபந்தத்தைப் பாடி வீறுபெற்றமை

எண்சீராசிரியவிருத்தம்

235 உய்விரத மொன்றின்றி யடைந்தா ருய்ய
வொருவிரதந் தான்கொண்ட வுயர்ந்த மாலைச்
செய்விரத மொன்றாலுந் தெளிய கில்லாச்
சிந்தையினாற் றிசைபடைத்த திசைமு கன்றன்
பொய்விரத நிலமெல்லாம் போயே மீண்டு
புகலிதுவே புண்ணியத்துக் கென்று சேர்ந்த
மெய்விரத நன்னிலத்து மேன்மை யேத்தி
வேதாந்த வாசிரியன் விளங்கி னானே. 28

உரை:— திசை படைத்த – திக்குகளை ஸ்ருஷ்டித்தவனும், திசைமுகன் – (நான்கு) திசைகளிலும் முகத்தையுடையவனுமான

ப்ரஹ்மா, உய் விரதம் – (தாம்) உஜ்ஜீவிப்பதற்கு உபாயம், ஒன்று இன்றி அடைந்தார் – (வேறு) ஒன்றுமின்றிச் சரணமடைந்தவர்கள், உய்ய – உஜ்ஜீவிப்பதற்காக, ஒரு விரதம் – (''சரணாகதரக்ஷணம்'' என்னும்) ஒப்பற்ற வ்ரதத்தை, தான் கொண்ட - தானே கைக் கொண்டவனும், உயர்ந்த மாலே – (அதனால்) உயர்ந்துநிற்பவனுமான எம்பெருமானை, செய் விரதம் ஒன்றாலும் – (தன்னால்) செய்யப்பட்ட வேறு எந்த வ்ரதத்தாலும், தெளியகில்லாச் சிந்தையினால் – நேரில் ஸாக்ஷாத்கரிக்கமுடியாத கவலையினால், பொய் விரத நிலம் எல்லாம் – (பலன் கொடுக்கவில்லையாதலின்) வீணாகப் போகும் வ்ரதங்களையுடைய க்ஷேத்ரங்களுக்கெல்லாம், போய் மீண்டு – போய் (ப் பயனற்று) த் திரும்பி, இதுவே புண்ணியத்திற்குப் புகல் – இந்த க்ஷேத்ரமே புண்ணியத்தைப்பெற ஸாதநமாகும், என்று சேர்ந்த – என்று வந்தடைந்த, மெய்விரத நல் நிலத்து – ஸத்யவ்ரதமென்னும் சிறந்த க்ஷேத்ரத்தின், மேன்மை ஏத்தி - வைபவத்தை (இப்பிரபந்தத்தில்) புகழ்ந்து, வேதாந்த ஆசிரியன் – வேதாந்த தேசிகன், விளங்கினான் – சிறந்து விளங்கினான். தான் – அசை. போயே – ஏ – இசைநிறை.

தன்னைச் சரணமடைந்தவரை வாழ்விப்பதையே வ்ரதமாகக் கொண்ட பேரருளாளனை ஸாக்ஷாத்கரிக்க இயலாது பற்பல க்ஷேத்ரங்களில் அலைந்து தவித்த ப்ரஹ்மா இறுதியில் வந்து பலன்பெற்ற புண்ய க்ஷேத்ரமாகிய மெய்விரதத்தின் மேன்மையை வேதாந்தாசார்யனான யான் இப்பிரபந்தத்தின் வாயிலாகப் பாடி வீறு பெற்றேன் — என்றவாறு.

[வ்யாஸபகவான், வடமொழிவேதங்களை வகுத்து, ப்ரஹ்ம ஸூத்ரங்களை இயற்றி, மஹாபாரதத்தைச்செய்து வேதாசார்யரானார். அங்ஙனமே நம் தேசிகன் (ப்ரபந்தஸாரத்தில்) தமிழ்வேதத்தை வகுத்துக்காட்டி, ரஹஸ்யரத்னாவளி முதலிய ஸூத்ரங்களைச்செய்து, இப் பிரபந்தமாகிய இதிஹாஸத்தைச் செய்தருளி வேதாந்தாசார்யனாக விளங்கினார் — என்று பெரியோர் பணிப்பர்.] *28*

பேரருளாளன் திருவடிகளில் ஈடுபாட்டினால் பாடினமை

நேரிசைவெண்பா

236 சீராருந் தூப்புற் றிருவேங் கடமுடையான்
றாரா ரருளாளர் தாணயந்து — சீராக
மெய்விரத நன்னிலத்து மேன்மை யிதுமொழிந்தான்
கையிற் கனிபோலக் கண்டு. 29

உரை:— சீர் ஆரும் – பெருமை நிறைந்த, தூப்புல் – தூப்புலில் அவதரித்த, திருவேங்கடமுடையான் – ஸ்ரீவேங்கடநாதன் என்னும் தேசிகன், தார் ஆர் அருளாளர் – மாலை நிறைந்த பேரருளாளருடைய, தாள் நயந்து – திருவடிகளையே விரும்பி, மெய்விரத நல் நிலத்து

மேன்மை – ஸத்யவ்ரதமென்னும் சிறந்த க்ஷேத்ரத்தின் பெருமையை, கையில் கனிபோலக் கண்டு – உள்ளங்கையில் (உள்ள நெல்லிக்) கனியைப்போல அறிந்து, சீராக – சிறப்புடன், இது - இந்த ப்ரபந்தத்தை, மொழிந்தான் – வெளியிட்டான்.

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையானாகிய யான் பேரருளாளன் திருவடிகளையே விரும்பி மெய்விரதமென்னும் க்ஷேத்ரத்தின் பெருமையை உள்ளங்கை நெல்லிக்கனிபோலக் கண்டு இந்தப் பிரபந்தத்தை வெளியிட்டேன் — என்றவாறு. 29

மெய்விரதமான்மியம் - உரை முற்றிற்று

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

ஸ்ரீ:

அடைக்கலப்பத்து—உரை

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

[விஷயச்சுருக்கம்]

ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் தாம் பேரருளாளன் திருவடிகளைச் சரணமடையத் திருவுள்ளங்கொண்டார். அங்ஙனே தாம் அவன் திருவடிகளில் அடைக்கலம் புகுந்தமையைப் பத்துப்பாசுரங்களால் வெளியிட்டமையால் இப்பிரபந்தம் இப்பெயர் பெற்றது.

இதில் முதலில் ஸ்ரீதேசிகன் ப்ரபத்திக்கு அதிகாரங்களைக்கூறி, முன் காகன் – விபீஷணன் முதலிய பலர் சரணமடைந்து பயன் பெற்றதை விளக்கி, ப்ரபத்தியின் ஐந்து அங்கங்களை விளக்கி, ஸ்வநிஷ்டை – உக்திநிஷ்டை – ஆசார்யநிஷ்டை – பாகவதநிஷ்டை என்று சரணாகதி பாகுபாடு பெற்றதைக் கூறி, ப்ரபத்திக்குப்பிறகு உள்ள கடமையைக் கூறி, முடிவில் தாம் பேரருளாளனைச் சரணமடைந்து தலைக்கட்டுகிறார். வடமொழியிலும் இதே விஷயத்தைக் கொண்ட ந்யாஸதசகம் என்னும் ஸ்ரீஸூக்தி ஸ்வாமியால் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது.

இப்பிரபந்தம் முழுவதும் கொச்சகக்கலிப்பாவினால் அமைந்ததாம்.
ப்ரபத்தியின் அதிகாரம்—ஆகிஞ்சந்யம்

237 பத்திமுத லாமவற்றிற் பதியெனக்குக் கூடாமல்
லெத்திசையு முழன்றோடி யிளைத்துவிழுங் காகம்போன்
முத்திதரு நகரேழின் முக்கியமாங் கச்சிதனி
லத்திகிரி யருளாளர்க் கடைக்கலநான் புகுந்தேனே. 1

உரை:— பத்தி முதலாமவற்றில் - பக்தியோகம் முதலிய உபாயங்களால், பதி எனக்குக் கூடாமல் - (ஸர்வேசுவரனை) அடைவது எனக்குக் கூடாமற்போக, எத்திசையும் உழன்று ஓடி–எல்லாத் திசைகளிலும் சுற்றித்திரிந்து ஓடி. இளைத்துவிழும் காகம்போல் – சோர்ந்து (ஸ்ரீராமன் திருவடிகளிலே) விழுந்த காகனைப்போல், முத்திதரும் நகர் ஏழில் – மோக்ஷத்தைத்தரும் புண்யநகரம் ஏழினுள், முக்கியமாம் கச்சி தனில் – முக்கியமான காஞ்சீபுரத்தில், அத்திகிரி அருளாளர்க்கு – ஹஸ்திகிரிநாதரான பேரருளாளரிடம், நான் அடைக்கலம் புகுந்தேன் – நான் காக்கப்படவேண்டிய வஸ்துவாகச் சரணமடைந்தேன்.

பிராட்டியின் திருவடிகளில் பெரும்பிழைசெய்து இராமபிரானுடைய சினத்திற்கு ஆளாகித் தன்னைக் காத்துக்கொள்ள மூவுலகும் திரிந்து வேறு கதியற்றுப் பின் அவனையே சரணமடைந்த காகனைப் போல், பக்தி முதலிய கடின உபாயங்களால் பலன்பெறமுடியாத அடியேன் ப்ரபத்தியையே உரிய உபாயமென நினைந்து மோக்ஷத்தைத் தரும் ஏழு க்ஷேத்ரங்களுக்குள் ப்ரதாநமான காஞ்சியில் நித்யவாஸம் செய்தருளும் பேரருளாளனைச் சரணமடைந்தேன்—என்றவாறு.

ஏழு முக்திக்ஷேத்ரம்:— 1 அயோத்யை 2 மதுரை 3 மாயை 4 காசி 5 காஞ்சி 6 அவந்தி 7 துவாரகை என்பனவாம்.

ப்ரபத்தியை அநுஷ்டிப்பதற்கு ஆகிஞ்சந்யம் – அநந்யகதித்வம் என்ற இரண்டும் விசேஷித்த அதிகாரமாகக் கூறப்பட்டுள்ளன. ஆகிஞ்சந்யமாவது—பக்தியோகம் முதலிய வேறு உபாயங்களை அநுஷ்டிக்கச் சாமர்த்தியமில்லாமை. இப்பாசுரத்தில் முதலடியால் ஆகிஞ்சந்யம் என்ற அதிகாரம் கூறப்பட்டதாயிற்று. 1

ப்ரபத்தியின் அதிகாரம் — அநந்யகதித்வம்

238 சடைமுடியன் சதுமுகனென் றிவர்முதலாந் தரமெல்லா
மடையவினைப் பயனாகி யழிந்துவிடும் படிகண்டு
கடிமலராள் பிரியாத கச்சிநக ரத்திகிரி
யிடமுடைய வருளாள ரிணையடிக ளடைந்தேனே. 2

உரை:— சடைமுடியன் என்று–சடைத்தலையனான சிவனும், சதுமுகன் (என்று) – நான்கு முகங்களையுடைய ப்ரஹ்மாவும் (ஆகிய), இவர் முதலாம் தரம் எல்லாம் – இவர்களை முதலாகக்கொண்ட பெருமை முழுதும், அடைய – சிறிதும் ஒழிவின்றி, வினைப் பயன் ஆகி–கர்மங்களின் பலனாகி, அழிந்துவிடும் படி கண்டு – அழிந்துவிடும் தன்மையை ஆராய்ந்துபார்த்து, கடி மலராள் பிரியாத – மணமுள்ள புஷ்பத்திலிருக்கும் பிராட்டியால் பிரியப்பெறாதவரும், கச்சி நகர் அத்திகிரி இடமுடைய – காஞ்சியிலுள்ள ஹஸ்திகிரியை உறைவிடமாகக்கொண்டவருமான, அருளாளர் – பேரருளாளருடைய, இணையடிகள் – இரண்டு திருவடிகளையும், அடைந்தேன் – சரணமடைந்தேன்.

ப்ரஹ்மா – சிவன் முதலிய தேவர்களின் அதிகாரமெல்லாம் கர்மத்தின் பயனாகவேயிருந்து கர்மம் அழிந்ததும் அழிவனவாயிருப்பதையறிந்து அத்தகைய அற்ப ஸுகங்களில் ஆசைவைக்காது, பெருந்தேவித்தாயாருடன் விளங்கும் பேரருளாளனைச் சரணமடைந்தேன்—என்றவாறு.

இப்பாசுரத்தின் முதலிரண்டடிகளால் ப்ரபத்திக்கு அநந்ய கதித்வம் என்ற அதிகாரம் கூறப்படுகின்றது. அநந்யகதித்வமாவது–மோக்ஷத்தைத்தவிர மற்றைப் பலனைப் புறக்கணித்தலும், எம்பெருமானைத்தவிர மற்ற தெய்வத்தை நாடாமையும். இங்கு ப்ரஹ்மா–சிவன் முதலியவர்களின் ஐசுவர்யமும் அழியுந்தன்மையதென்றதால் வேறு அற்பபலனை நாடாமையும், அற்பபலனையே தரவல்ல மற்ற தெய்வங்களை நாடாமையும் கூறப்பட்டன. 2

அனைவரும் ப்ரபத்திக்கு அதிகாரிகள்

239 தந்திரங்கள் வேறின்றித் தமதுவழி யழியாது
மந்திரங்க டம்மாலு மற்றுமுள வுரையாலு
மந்தரங்கண் டடிபணிவா ரனைவர்க்கு மருள்புரியுஞ்
சிந்துரவேற் பிறையவனார் சீலமல தறியேனே. 3

உரை:— அந்தரம் கண்டு – (பக்திக்கும் ப்ரபத்திக்கும் உள்ள) வித்யாஸத்தை அறிந்து, வேறு தந்திரங்கள் இன்றி – (பக்தியோகம் முதலிய வேறு உபாயங்களைக் கைக்கொள்ளாமல், தமது வழி அழியாது–(சாஸ்த்ரங்களில்) தமக்கு விதிக்கப்பட்ட (வர்ணாச்சிரமதர்மங்களின்) வழியிலிருந்து வழுவாது, மந்திரங்கள்தம்மாலும் – வேதமந்திரங்களைக் கொண்டும், மற்றும் உள உரையாலும் – மற்றும் உள்ள (பூர்வாசார்யர்களின்) வாக்யங்களைக்கொண்டும், அடி பணிவார் அனைவர்க்கும் - (தம்) திருவடிகளைச் சரணமடைபவர் எல்லோருக்கும், அருள்புரியும் – அருள் செய்கின்ற, சிந்துரவெற்பு இறையவனார் – ஹஸ்திகிரிநாதரான பேரருளாளருடைய, சீலம் அலது – ஸ்வபாவத்தைத் தவிர, அறியேன் – (வேறொன்றை) அநுஸந்திக்க மாட்டேன்.

பக்தியோகத்தைச் செய்வதில் உள்ள நிர்ப்பந்தங்களையும் ப்ரபத்தியில் எல்லோர்க்கும் உள்ள அதிகாரத்தையும் நினைந்து, வேறு உபாயங்களைச் செய்யாமல், தத்தம் வர்ணாச்ரம தர்மங்களினின்றும் வழுவாதிருந்து, வேதமந்த்ரம் ஆசார்யவாக்யம் முதலியவற்றைக்கொண்டு தன்னைச் சரணமடைந்த அனைவருக்கும் பேரருளாளன், விரும்பிய பலனைத் தருகின்றான். அவன் ஸ்வபாவத்தையே அநுஸந்திக்கின்றேன்—என்றவாறு.

இங்கு, 'சீலம்' என்னும் சொல் ஸௌசீல்யத்தைக் குறிக்குமென்பர். ஸௌசீல்யம்—மிக மேம்பட்டவன் மிகத்தாழ்ந்தவனோடு வேற்றுமையின்றிக் கலந்து பரிமாறல். 3

ப்ரபத்தி எல்லாப் பலனையும் தரவல்லது

240 காகமிராக் கதன்மன்னர் காதலிகத் திரபந்து
நாகமர னயன்முதலா நாகநக ரார்தமக்கும்
போகமுயர் வீடுபெறப் பொன்னருள்செய் தமைகண்டு
நாகமலை நாயகனார் நல்லடிப்போ தடைந்தேனே. 4

உரை:— நாகமலை நாயகனார்–ஹஸ்திகிரிநாதரான பேரருளாளர், காகம் – காகன், இராக்கதன் – (விபீஷணனென்னும்) ராக்ஷஸன், மன்னர் காதலி – (பஞ்சபாண்டவ) அரசர்களின் மனைவியான த்ரௌபதி, கத்திரபந்து–க்ஷத்திரபந்துவென்னும் அரசன், நாகம் – கஜேந்த்ரன் அல்லது (காளியனென்னும்) ஸர்ப்பம், அரன் – சிவன், அயன் முதலா – ப்ரஹ்மா முதலிய, நாகநகரார் தமக்கும் – தேவலோகவாஸிகள் ஆகிய அனைவருக்கும், போகம் – ஸம்ஸார போகத்தையும், உயர் வீடு – உயர்ந்த மோக்ஷத்தையும், பெற – பெறும்படி, பொன் அருள் செய்தமை கண்டு – சிறந்த அருளைப் புரிந்ததை அறிந்து, நல் அடிப் போது – (அவருடைய) சிறந்த திருவடி மலரை, அடைந்தேன் – சரணமடைந்தேன்.

பேரருளாளன், தன்னைச் சரணமடைந்த காகன்–விபீஷணன்–த்ரௌபதி – க்ஷத்திரபந்து என்னும் அரசன் – கஜேந்த்ரன் – காளியனென்னும் ஸர்ப்பம்–சிவன்–ப்ரஹ்மா முதலிய தேவர் ஆகிய அனைவருக்கும் அவரவர் விரும்பியவாறு ஸம்ஸாரபோகத்தையும் மோக்ஷத்தையும் அளித்தலின் அதை நினைந்து அவன் திருவடிகளைச் சரணமடைந்தேன்–என்றவாறு.

ப்ரபத்திக்கு முக்கிய அங்கமான மஹாவிசுவாஸம் வருவது மிகவும் அரிதாதலின், இப்பாசுரம் ப்ரபத்தியால் பலன்பெற்ற பலரை உதாஹரணமாய்க் காட்டி, பலன் பெறுவதில் உறுதியை விளக்குகின்றது – என்று பழைய உரை கூறும். 4

ப்ரபத்தியின் ஐந்து அங்கங்கள்

241 உகக்குமவை யுகந்துகவா வனைத்துமொழிந் துறவுகுண
மிகத்துணிவு பெறவுணர்ந்து வியன்காவ லெனவரித்துச்
சகத்திலொரு புகலில்லாத் தவமறியேன் மதிட்கச்சி
நகர்க்கருணை நாதனைநல் லடைக்கலமா யடைந்தேனே. 5

உரை:— சகத்தில் ஒரு புகலும் இல்லா–உலகில் வேறோர் அடைக்கலமும் இல்லாதவனும், தவம் அறியேன் – மற்ற உபாயத்தைப்பற்றிய அறிவற்றவனுமான அடியேன், உகக்குமவை உகந்து – (பேரருளாளன்) உகந்தவற்றைச் செய்வதையே விரும்பி, உகவா அனைத்தும் ஒழிந்து – (அவன்) உகவாத அனைத்தையும் செய்யாது நீங்கி, மிகத்

துணிவு பெற – (பலன் பெறுவதில்) மிக்க உறுதியாகிய மஹா விசுவாஸத்தை அடைவதற்கு (ஸாதநமாக), உறவு குணம் உணர்ந்து – (பேரருளாளனுக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள) ஸம்பந்தத்தையும் (பகவானுடைய) குணங்களையும் அநுஸந்தித்து, வியன் காவல் என வரித்து – (அவனையே) அதிசயிக்கத்தக்க ரக்ஷகனுகவேண்டுமென்று ப்ரார்த்தித்து, மதிள் கச்சி நகர்க் கருணை நாதனை – (அழகிய) மதிள்கள் சூழ்ந்த காஞ்சியின் கருணையே வடிவாகக்கொண்ட ஸ்வாமியான பேரருளாளனை, நல் அடைக்கலமாய் அடைந்தேன் – சிறந்த கதியாகப் பற்றினேன்.

புகலும் + இல்லா = புகலில்லா ; தொகுத்தல்.

ப்ரபத்திக்கு ஐந்து அங்கங்கள் உள. அவை பின்வருவன :—

1. ஆநுகூல்யஸங்கல்பம் – எம்பெருமான் திருவுள்ளத்திற்கு உகந்தவற்றையே செய்வதாய் உறுதிகொள்ளல்.

2. ப்ராதிகூல்யவர்ஜநம் – அவன் திருவுள்ளத்திற்கு விபரீதமானவற்றைச் செய்யாதிருக்க உறுதிகொள்ளல்; அல்லது அவற்றைச் செய்ய எண்ணங்கொள்ளாமை; அல்லது அவற்றைச் செய்யாது விடுதல்.

3. மஹாவிசுவாஸம் – அவன் நம்மை ரக்ஷிக்கவல்லவனென்று தேறி, தவறாது நம்மை ரக்ஷிப்பானென்று நம்புதல்.

4. கோப்த்ருத்வவரணம் – பக்தியோகம் முதலிய உபாயங்களை அநுஷ்டிக்கச் சக்தியற்ற தம் விஷயத்தில் அருள்புரிந்து அவ்வுபாயங்களின் ஸ்தாநத்தில் நின்று பலன் கொடுக்குமாறு அவனை வேண்டுகை.

5. கார்ப்பண்யம் – பக்தியோகம் முதலிய உபாயங்களில் தமக்கு அதிகாரமில்லாமையையும், எம்பெருமானைத் தவிர வேறு தெய்வத்தினிடமோ, மோக்ஷத்தைத்தவிர வேறு பலனிலோ பற்றில்லாமையையும் அநுஸந்தித்தல்–அல்லது இவ்வநுஸந்தாநத்தால், முன் தமக்கு இருந்த கர்வம் ஒழியப்பெறுதல்–அல்லது எம்பெருமானது கருணை தம்மீது வளர்ந்தோங்கும்படி தாழ்ந்து நின்று அஞ்ஜலி-நமஸ்காரம் முதலியவற்றைச் செய்தல்.

இப்பாசுரத்தில் 'உகக்குமவையுகந்து' என்றதால் ஆநுகூல்ய ஸங்கல்பமும், 'உகவாவனைத்துமொழிந்து' என்றதால் ப்ராதிகூல்ய வர்ஜநமும், 'மிகத்துணிவுபெறவுணர்ந்து' என்றதால் மஹாவிசுவாஸமும், 'காவலெனவரித்து' என்றதால் கோப்த்ருத்வவரணமும், 'புகலில்லாத் தவமறியேன்' என்றதால் கார்ப்பண்யமும், 'அடைக்கலமாயடைந்தேன்' என்றதால் அங்கியான ஆத்ம ஸமர்ப்பணமும் கூறப்பட்டன. ஆக, பேரருளாளன்திருவடிகளில் ஐந்து அங்கங்களுடன் கூடிய ப்ரபத்தியை அநுஷ்டித்தேன் – என்றவாறு. 5

ப்ரபத்தியின் நான்கு வகைகள்

242 அளவுடையா ரடைந்தார்க்கு மதனுரையே கொண்டவர்க்கும்
வளவுரைதந் தவனருளே மன்னியமா தவத்தோர்க்குங்
களவொழிவா ரெமரென்ன விசைந்தவர்க்குங் காவலராந்
துளவமுடி யருள்வரதர் துவக்கிலெனை வைத்தேனே. 6

உரை :— அளவுடையார் – (ப்ரபத்திவிஷயத்தில் தெளிந்த) ஜ்ஞாநமுடையராய், அடைந்தார்க்கும் – சரணமடைந்த ஸ்வநிஷ்டருக்கும், அதன் உரையே – அந்த ப்ரபத்திவாக்யத்தின் அநுஸந்தாநத்தையே, கொண்டவர்க்கும் – (உபாயமாகக்) கொண்ட உக்திநிஷ்டருக்கும், வளவுரை தந்தவன் – பெருமையுள்ள (ரஹஸ்ய) வாக்யத்தை உபதேசித்த ஆசார்யனுடைய, அருளே மன்னிய – க்ருபையிலேயே நிலைபெற்றுநின்ற, மாதவத்தோர்க்கும் – மிக்க புண்ய சாலிகளான ஆசார்யநிஷ்டருக்கும், களவு ஒழிவார் – (எம்பெருமானுக்கே உரிய ஆத்மாவை ஸ்வதந்த்ரனாக நினைத்தலாகிய) திருட்டுக் குற்றம் நீங்கப்பெற்ற பாகவதர்கள், எமர் என்ன – (சேதநர்களை) எம்மைச் சேர்ந்தவரென்று நினைத்து எம்பெருமானிடம் ப்ரபத்தியைச் செய்ய, இசைந்தவர்க்கும் – (அதை உபாயமாக) ஏற்(று அதில் நிலைபெற்)று நின்ற பாகவதநிஷ்டருக்கும், காவலர் ஆம் – ரக்ஷகராக ஆகின்றவரும், துளவ முடி – திருத்துழாயை முடியிற் சூடியவருமான, அருள் வரதர் – அருளே வடிவெடுத்த பேரருளாளருடைய, துவக்கில் – ஸம்பந்தத்தில், எனை வைத்தேன் – என்னை நிலைநிறுத்தினேன்.

ப்ரபத்தி நால்வகைப்படும். அவையாவன:—

1. ஸ்வநிஷ்டை—ப்ரபத்தியாகிய அங்கியையும் அதன் அங்கங்களையும் தெளிவாய் அறிந்து தாமே எம்பெருமானைச் சரணமடைதல்.

2. உக்திநிஷ்டை — ஆநுகூல்யஸங்கல்பம் முதலிய அங்கங்களில் விசேஷ ஜ்ஞாநமில்லாத அதிகாரிகள், எம்பெருமானைத்தவிர வேறு பற்று இல்லாதவராய், நாம் ப்ரார்த்தித்தால் அவன் ரக்ஷிப்பானென்ற நம்பிக்கையுடன் நின்று, பூர்ண ப்ரபத்தியை வெளியிடுவதும் ஆசார்யனால் உபதேசிக்கப்பட்டதுமான வாக்யத்தாலே தம்மைக் காப்பதை அவன் பொறுப்பாகக் கொள்ளவேண்டுமென்னுதல்.

3. ஆசார்யநிஷ்டை — ரஹஸ்யார்த்தங்களை உபதேசித்த ஆசார்யன் எம்பெருமானிடம் செய்யும் சரணாகதியில் அடங்கியிருத்தல்.

4. பாகவதநிஷ்டை — பூர்ண அதிகாரியான ஒரு பாகவதர் எம்பெருமானிடம் செய்யும் சரணாகதியில் அடங்கியிருத்தல்.

இத்தகைய நான்குவகை ப்ரபத்திகளுள் ஏதேனும் ஒன்றை அநுஷ்டித்தவருக்கு விரும்பிய பலனை அருள்கின்ற பேரருளாளனோடு என்னை நெருங்கிய ஸம்பந்தமுடையவனாக்கிக்கொண்டேன் — என்றவாறு.

[ப்ரபத்தியின் வகைகளில் தந்தம் ஸம்ப்ரதாயத்தைத் தழுவிய விரிவுகளையெல்லாம் ஆசார்யர்களிடமிருந்து அறிந்துகொள்க] 6

ப்ரபத்தி செய்தல்—ஒரு பலனுக்காக ஒரேமுறை

243 உமதடிக ளடைகின்றே னென்றொருகா லுரைத்தவரை
யமையுமினி யென்பவர்போ லஞ்சலெனக் கரம்வைத்துந்
தமதனைத்து மவர்தமக்கு வழங்கியுந்தா மிகவிளங்கு
மமைவுடைய வருளாள ரடியிணையை யடைந்தேனே. 7

உரை:— உமது அடிகள் – உம்முடைய திருவடிகளை, அடைகின்றேன் என்று – (சரணமாக) அடைகின்றேனென்று, ஒருகால் உரைத்தவரை – ஒருமுறை உச்சரித்(து பரந்யாஸம் செய்)தவரை, இனி அமையும் – இனிப் (பலன்பெறுவதற்கு இதுவே) போதும், என்பவர் போல் – என்று கூறுபவர்போல், அஞ்சல் எனக் கரம் வைத்தும் – அஞ்சாதீர் என்று (கூறும்) அபயமுத்ரையை வைத்தும், தமது அனைத்தும் – தம் செல்வம் முழுவதையும் (தம்மையுள்பட), அவர் தமக்கு – அந்த ப்ரபந்நருக்கு, வழங்கியும் – அநுபவிக்கக் கொடுத்தும், தாம் மிக விளங்கும் அமைவு உடைய – தாம் மிகவும் ப்ரகாசிக்கும் பூர்த்தியையுடைய, அருளாளர் – பேரருளாளருடைய, அடியிணையை அடைந்தேன் – திருவடிகளிரண்டையும் (சரணமாக) அடைந்தேன்.

பேரருளாளன், ஒருகால் ப்ரபத்தியை அநுஷ்டித்த அதிகாரியைக் குளிர நோக்கி, 'நீ பலன் பெற இதுவே போதும்' என்று தன் திருவுள்ளக்கருத்தை வெளியிடுபவன்போல் அபயமுத்ரையுள்ள தன் திருக்கையைக் காட்டியும், தன்னுடைய ஸகலவஸ்துக்களையும் தன்னையும் அவன் அநுபவிக்குமாறு அப்போதே கொடுத்தும் மிக ப்ரகாசிக்கின்றான். இப்படி ப்ரபந்நனுக்கு உபாயத்தைத் தலைக்கட்டியும் அப்போதே பலனைப் பெறுவித்தும் அருள்கின்ற அவன் திருவடிகளைச் சரணமடைந்தேன்—என்றவாறு. 7

ப்ரபத்திக்குப் பின் வேண்டிய நிலைகள்

244 திண்மைகுறை யாமைக்கு நிறைகைக்குந் தீவினையா
லுண்மைமற வாமைக்கு முளமதியி லுகக்கைக்குந்
தண்மைகழி யாமைக்குந் தரிக்கைக்குந் தணிகைக்கும்
வண்மையுடை யருளாளர் வாசகங்கண் மறவேனே. 8

உரை:— திண்மை குறையாமைக்கும் – மனவுறுதி (மஹாவிசுவாஸம்) குறையாமலிருப்பதற்கும், நிறைகைக்கும் – (ஜ்ஞாநமும் பக்தியும்) நிரம்பிநிற்பதற்கும், தீவினையால் – (முந்திய) பாபகர்மத்தால், உண்மை மறவாமைக்கும் – உண்மையறிவு மறந்துபோகாமலிருப்பதற்கும், உள மதியில் உகக்கைக்கும் – (தனக்கு) உள்ள (தத்துவ) ஜ்ஞாநத்தால் மகிழ்வதற்கும், தண்மை கழியாமைக்கும் –

தாழ்வு (ணர்ச்சி தன்னைவிட்டு) நீங்காதிருப்பதற்கும், தரிக்கைக்கும் - (மோக்ஷம் பெறுமளவும்) உயிர்தரித்திருப்பதற்கும், தணிகைக்கும் - (ஸம்ஸாரதாபத்தை மறந்து) ஆறியிருப்பதற்கும், வண்மையுடை - பெருங்கொடையாளரான, அருளாளர் - பேரருளாளருடைய, வாசகங்கள் - (சரமசுலோகம் முதலிய) உபதேசங்களை, மறவேன் - மறவாதேயிருப்பேன்.

ப்ரபத்தியை அநுஷ்டித்தபின் சேதநனுக்குப் பலன் பெறுவதில் உறுதியான எண்ணம் குறைவுபடாதிருக்கவேண்டும். ஜ்ஞாநமும் பக்தியும் மேன்மேலும் வளரப்பெறவேண்டும், எம்பெருமானுக்கு அடியனாய் வசப்பட்டிருக்குந்தன்மையைப் பழைய கர்மவாஸனையால் மறந்துவிடக்கூடாது, ஸாரமான விஷயத்தைப்பற்றி உள்ள அறிவினால் மகிழ்வு பெற்றிருக்கவேண்டும். தாழ்வுணர்ச்சியைக் கைவிடக்கூடாது. மோக்ஷத்தைப்பெறப் பேராவல் கொண்டிருப்பினும் இச்சரீரம் கழியுமளவும் பதறாது தரித்திருக்கவேண்டும். ஸம்ஸாரத்தில் நேரும் துன்பங்களை மறந்து ஆறியிருக்கவேண்டும். பேரருளாளன் சரமசுலோகம் முதலிய ஸூக்திகளின் வாயிலாகக்கூறிய உறுதிமொழிகளை அநுஸந்தித்தால் இத்தன்மைகளைப் பெறுவது எளிதாகும். ஆதலின் அந்த ஸூக்திகளை எப்போதும் அநுஸந்திக்கின்றேன்—என்றவாறு. 8

ப்ரபத்திக்குப் பின் உள்ள கடமை

245 சுருதிநினை விவையறியுந் துணிவுடையார் தூமொழிகள்
பரிதிமதி யாசிரியர் பாசுரஞ்சேர்ந் தருக்கணங்கள்
கருதியொரு தெளிவாளாற் கலக்கமறுத் தத்திகிரிப்
பரிதிமதி நயனமுடைப் பரமனடி பணிந்தேனே. 9

உரை:— சுருதி - வேதம், நினைவு - ஸ்ம்ருதி (ஆகிய), இவை அறியும் - இவற்றை (நன்கு) அறியக்கூடிய, துணிவு உடையார் - மனவுறுதி பெற்ற ஆழ்வார்களுடைய, தூ மொழிகள் - பரிசுத்தமான திவ்யஸூக்திகளையும், பரிதி மதி - ப்ரகாசிக்கின்ற ஜ்ஞாநத்தையுடைய, ஆசிரியர் - (ஸ்ரீபாஷ்யகாரர் முதலிய) ஆசார்யர்களுடைய, பாசுரம் - ஸ்ரீஸூக்திகளையும், சேர்ந்து-தஞ்சமாகப்பற்றி, அருக்கணங்கள் கருதி- (அதனால் வேதாந்த) ஸூக்ஷ்மார்த்தங்களனைத்தையும் ஆராய்ந்தறிந்து, ஒரு தெளிவாளால் - ஒப்பற்ற தத்துவஜ்ஞாநமாகிய வாளினால், கலக்கம் அறுத்து - அஜ்ஞாநத்தை ஒழித்து, அத்திகிரி - ஹஸ்திகிரியில் எழுந்தருளியிருப்பவனும், பரிதி மதி நயனம் உடை - ஸூர்யனையும் சந்த்ரனையும் கண்களாகவுடையவனுமான, பரமன் - ஒப்பற்ற பேரருளாளனுடைய, அடி பணிந்தேன் - திருவடிகளைத் தொழுதேன்.

வேதம், ஸ்ம்ருதி, ஆழ்வார்ஸ்ரீஸூக்தி, ஆசார்யஸ்ரீஸூக்தி ஆகிய இவற்றில் பரிசயம் செய்து, அதனால் வேதாந்தத்தின் ஸூக்ஷ்மார்த்தங்களையெல்லாம் நன்கு அறிந்து அந்த ஜ்ஞாநத்தால் மனக்கலக்கத்தைப் போக்கிப் பேரருளாளன் திருவடிகளை எப்போதும் தொழுகின்றேன்—என்றவாறு. 9

ப்ரபத்தி—அங்கியான ஆத்மஸமர்ப்பணம்

246 திருமகளுந் திருவடிவுந் திருவருளுந் தெள்ளறிவு
மருமையிலா மையுமுறவு மளப்பரிய வடியரசுங்
கருமமழிப் பளிப்பமைப்புங் கலக்கமிலா வகைநின்ற
வருள்வரதர் நிலையிலக்கி லம்பெனநா னமிழ்ந்தேனே. 10

உரை:— திருமகளும் – பிராட்டியும், திருவடிவும் - (தன்) திருமேனியும், திரு அருளும் – சிறந்த க்ருபையும், தெள் அறிவும் – தெளிந்த ஜ்ஞாநமும், அருமை இலாமையும் – (அடியவர்க்கு) அரியனுந்தன்மை இல்லாமையும், உறவும் – (சேதநாசேதநங்களுடன் உள்ள) ஸம்பந்தமும், அளப்பு அரிய – அளவிடமுடியாத, அடி அரசும் – பழமையான ஆட்சியும், அமைப்பு - படைத்தல், அளிப்பு – காத்தல், அழிப்பு – அழித்தல், கருமமும் – (ஆகிய) கார்யங்களும் (ஆகிய இவை), கலக்கம் இலாவகை நின்ற-மாறுபாடு இல்லாத படி (எப்பொழுதும் ஸ்திரமாய்) நின்ற, அருள் வரதர் நிலை இலக்கில் – பேரருளாளராகிய ஸ்திரமான லக்ஷ்யத்தில், அம்பு என – பாணம் என்னும்படி, நான் அமிழ்ந்தேன்– நான் மூழ்கினேன்.

பேரருளாளன் பிராட்டியை ஒருபோதும் பிரியாதவன்; காண்பவர் மனத்தைக் கவரும் திருமேனியுடையவன்; அடைந்தவர்மீது நிறைந்த கருணைகொண்டவன்; அனைத்தையும் அறிபவன்; பணியுமவர்க்கு எளியன்; சேதநாசேதநங்களைச் சரீரமாகக்கொண்டவன்; அநாதியாக உலகமுழுதும் ஆட்சிபுரிபவன்; அனைத்தையும் படைத்துக் காத்து அழிப்பவன்; இந்தத் தன்மைகள் பேரருளாளனைவிட்டு ஒருபோதும் விலகா. இத்தகைய பெருமை வாய்ந்த அவன் திருவடிகளில் பிரிக்கமுடியாதபடி கலந்தேன்—என்றவாறு.

*உலகில் ஒரு வீரன் வில்லில் அம்பைப் பூட்டி மிக்க கவனத்துடன் குறியைப் பார்த்து எய்தவுடன் அவ்வம்பு அக்குறியின்மீது பாய்ந்து அதனுடன் ஒன்றுபட்டுப்போகின்றது. வேதம் ப்ரபத்திக்கு இந்த உவமானத்தைக் காட்டுகின்றது. ப்ரணவமென்னும் வில்லில் ஜீவனாகிய அம்பைப்பூட்டி ப்ரஹ்மமாகிய குறியில் மனவொருமையுடன் ப்ரயோகித்தால் ஜீவனாகிய அம்பு ப்ரஹ்மமாகிய குறியைச் சேர்ந்து கலந்துவிடுமென்றும், இதுவே ப்ரபத்தியென்றும் வெகு அழகாக விளக்கப்பட்டுள்ளது. இவ்வர்த்தமே 'அம்பென நானமிழ்ந்தேனே' என்ற தொடரால் கூறப்பட்டது. *10*

* प्रणवो धनुः शरो ह्यात्मा ब्रह्म तल्लक्ष्यमुच्यते ।
अप्रमत्तेन वेद्धव्यं शरवत्तन्मयो भवेत् ॥

ப்ரபந்தத்தின் முடிவுரை

247 ஆறுபயன் வேறில்லா வடியவர்க ளனைவர்க்கு
மாறுமதன் பயனுமிவை யொருகாலும் பலகாலு
மாறுபய னெனவேகண் டருளாள ரடியிணைமேற்
கூறியநற் குணவுரைக ளிவைபத்துங் கோதிலவே. 11

உரை:— வேறு ஆறு பயன் இல்லா – (எம்பெருமானைத்தவிர) வேறு உபாயமும் பலனுமில்லாதவர்களான, அடியவர்கள் அனைவர்க்கும் – தாஸர்கள் எல்லோருக்கும், ஆறும் – (ப்ரபத்தியாகிய) உபாயமும், அதன் பயனும் – அவ்வுபாயத்தின் பலனும் ஆகிய, இவை – இவ்விரண்டும் (முறையே), ஒருகாலும் பலகாலும் – ஒருமுறையும் பல முறையும் (செய்யவேண்டியதும் அநுபவிக்கவேண்டியதுமான), ஆறு பயன் – உபாயமும் பலனும் (ஆம்), எனவே கண்டு – என்று ஆராய்ந்தறிந்து, அருளாளர் அடியிணைமேல்–பேரருளாளருடைய திருவடிகள் இரண்டையும்பற்றி, கூறிய நல் குண உரைகள் – பாடப்பட்ட சிறந்த குண முடைய ஸூக்திகளாகிய, இவை பத்தும் – இந்தப் பத்துப் பாசுரங்களும், கோது இல – எவ்வகைக்குற்றமுமில்லாமல் ப்ரகாசிப்பன (ஆகும்).

பாகவதர்கள், பேரருளாளனையே ஸித்தோபாயமாகவும் பலனாகவும் கொண்டவர்கள். அவ்வெம்பெருமான் திருவடிகளில் அவர்கள் செய்யும் ப்ரபத்தி ஒருமுறையே அநுஷ்டிக்கவேண்டியதாகும். ஆனால் அதனால் கிடைக்கும் மோக்ஷமாகிய பலனோ காலத்தின் வரையறையின்றி எப்பொழுதும் அநுபவிக்க உரியதாகும். இவ்விஷயங்களை உணர்ந்து, பேரருளாளன் திருவடிகளைப்பற்றிப் பேசிய பெருமை கொண்ட இந்தப் பத்துப் பாசுரங்களும் குற்றமின்றி விளங்கக் கூடியனவாகும் — என்றவாறு. *11*

அடைக்கலப்பத்து-உரை முற்றிற்று

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

ஸ்ரீ:

அருத்தபஞ்சகம்—உரை

சிரார்தூப்புல் திருவேங்கடமுடையான்திருவடிகளே சரணம்

[விஷயச்சுருக்கம்]

இந்த ப்ரபந்தத்திற்கும் பேரருளாளனே விஷயமாகிறுன்.

முக்தியைப்பெற விரும்புமவன் அர்த்தபஞ்சகமெனப்படும் ஐந்து பொருள்களை முக்கியமாய் உணரவேண்டும். அவையாவன:— 1. நம்மால் அநுபவிக்கப்படவேண்டிய எம்பெருமானுடைய ஸ்வரூபம் 2 அநுபவிக்கும் ஜீவாத்மாவாகிய நம்முடைய ஸ்வரூபம் 3. எம்பெருமானை அடையமுடியாமல் இதுவரையில் உள்ள இடையூறு 4. மோக்ஷத்திற்காகச் செய்யும் உபாயங்கள் 5 முக்கியபலமாகிய பகவதனுபவம்: என்பனவாம். இவை இப்பிரபந்தத்தில் முறையே இரண்டிரண்டு பாசுரங்களால் விளக்கப்படுகின்றன.

இப்பிரபந்தம் முழுதும் கொச்சகக்கலிப்பாவால் அமைந்தது.

பாசுரம் 1, 2—ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம்—விளக்கம்

248 அமலனவி யாதசுட ரளவில்லா வாரமுத
மமலவுருக் குணங்களணி யாயுதங்க ளடியவர்க
ளமலவழி யாதநக ரழிந்தெழுங்கா வுடனெல்லாங்
கமலையுட னரசாளுங் கரிகிரிமேற் காவலனே. 1

உரை:— அமலன் – தோஷமற்றவனும், அவியாத – (ஒருகாலும்) மாறுபாடு இல்லாதவனும், சுடர் – ஜ்ஞாநஸ்வரூபனும், அளவில்லா – அளவிடமுடியாதவனும், ஆர் அமுதம்-நிறைந்த அமுதமாய் நிற்பவனும், கரிகிரிமேல் காவலன் – ஹஸ்திகிரியின்மேலிருந்து காப்பவனுமான பேரருளாளன், அமல உரு-(ரஜோகுணமும் தமோகுணமுமாகிய) தோஷமில்லாத (சுத்தஸத்துவமயமான) திருமேனியும், குணங்கள் – (ஜ்ஞாநம் சக்தி முதலிய) திருக்கல்யாணகுணங்களும், அணி – திருவாபரணங்களும், ஆயுதங்கள் – (சக்கரம் முதலிய) திவ்யாயுதங்களும், அடியவர்கள் – (நித்யஸூரிகளும் முக்தருமாகிய) தாஸர்களும், அமல – (ப்ரக்ருதிஸம்பந்தமாகிய) குற்றமற்றதும், அழியாத - (எப்பொழுதும்) அழியாததுமான, நகர் – (ஸ்ரீவைகுண்டமென்னும்) திவ்யலோகமும், (ஆகிய இவற்றை), அழிந்து எழும் – அழிந்து (மறுபடி) உண்டாகின்ற, காவுடன் - (ப்ரக்ருதிமண்டலமாகிய) சோலையுடன், எல்லாம் – முழுவதையும், கமலையுடன்–பிராட்டியுடன் (கூடிநின்று), அரசாளும் – அரசாள்வான்.

இந்தக் கர்மபூமியில் ஜீவாத்மாக்களே அவ்வவற்றின் கர்மத்திற்குத் தக்கவாறு பலன்பெறச் செய்வதையே எம்பெருமான் பொழுது போக்காகக் கொள்வதால் இந்த ஸம்ஸாரமண்டலத்தை அவன் விளையாடுமிடமான சோலையாகக் கூறுவதுண்டு.

எம்பெருமானுடைய குணங்களுக்கு அளவில்லை. ஒரு பொருளுக்கு உளதாகக் கூறும் குணமானது தன்னைப் பெற்றிருக்கும் பொருளுக்கு மற்றொரு பொருளைக் காட்டிலும் ஒரு பேதத்தைக் காட்டுவதால் அக்குணம் விசேஷணமென்னப்படும். இத்தகைய விசேஷணம் ''ஸ்வரூபநிரூபகவிசேஷணம்'' என்றும் "நிரூபிதஸ்வரூபவிசேஷணம்" என்றும் இருவகைப்படும். ஒரு வஸ்துவின் ஸ்வரூபத்தை எந்தக் குணத்தையுடையதாகக் கூறியே விளக்கினாலன்றி அவ்வஸ்துவின் ஸ்வரூபத்தை அறியமுடியாதோ, அந்தக் குணம் ஸ்வரூபநிரூபகவிசேஷணமெனப்படும். ஒரு வஸ்துவின் ஸ்வரூபத்தை விளக்கியபின் அதன் பெருமை புலப்படுவதற்கு எந்தக் குணங்கள் வெளியிடப்படுகின்றனவோ, அவை நிரூபிதஸ்வரூபவிசேஷணமெனப்படும்.

எம்பெருமானுடைய ஸ்வரூபத்தை ஸத்யத்வம், ஜ்ஞாநத்வம், அநந்தத்வம், ஆநந்தத்வம், அமலத்வம் என்னும் ஐந்து குணங்களையிட்டே விளக்கவேண்டும். ஆதலின் இவ்வைந்தும் ஸ்வரூபநிரூபக விசேஷணமாகும். இந்தக் குணங்கள் இப்பாசுரத்தின் முதலடியிற் கூறப்பட்டன.

1. ஸத்யத்வம்:— எப்பொழுதும் மாறுபடாத தன்மை. இது 'அவியாத' எனும் சொல்லால் கூறப்பட்டது.

2. ஜ்ஞாநத்வம்:— எப்பொழுதும் குறைவுபடாத ஜ்ஞாநஸ்வரூபனும் தன்மை. இது 'சுடர்' என்ற சொல்லால் கூறப்பட்டது.

3. அநந்தத்வம்:— 'இங்குத்தான் இருக்கின்றான்' என்று தேசத்தாலும், 'இப்பொழுதுதான் இருக்கின்றான்' என்று காலத்தாலும், 'இந்த வஸ்துவின் ஸ்வரூபமாகத்தான் இருக்கின்றான்' என்று வஸ்துவினாலும் அளவிடமுடியாதபடி எவ்விடத்திலும் எக்காலத்திலும் எந்த வஸ்துஸ்வரூபனாகவும் நிற்கும் தன்மை. இது 'அளவில்லா' என்றதால் கூறப்பட்டது.

4. ஆநந்தத்வம்:—ஆநந்தஸ்வரூபனாய் நிற்கை. இது 'ஆரமுதம், என்றதால் கூறப்பட்டது.

5. அமலத்வம்:— தோஷங்களில்லாத தன்மை. இது 'அமலன்' என்றதால் கூறப்பட்டது

இவ்வைந்து குணங்களால் எம்பெருமானது ஸ்வரூபத்தை ஒருவாறு அறிந்தபின் ஸௌசீல்யம், காருண்யம், வாத்ஸல்யம் முதலிய அளவற்ற திருக்கல்யாணகுணங்கள் அவன்பெருமையைக் காட்டுகின்றன. இவை நிரூபிதஸ்வரூபவிசேஷணமாகும். இத்தகைய

ஸ்வரூபம், திருக்கல்யாண குணம் முதலியவற்றைக் கொண்ட பேரருளாளன் ப்ரக்ருதிமண்டலமாகிய லீலாவிபூதியையும், ஸ்ரீவைகுண்டமாகிய நித்யவிபூதியையும் பெருந்தேவிப் பிராட்டியுடன் அரசாள்கின்றான்—என்றவாறு. 1

ஸகலவஸ்துக்களும் எம்பெருமானது ஸங்கல்பத்திற்கு அடங்கியன

249 உள்ளபொரு ளனைத்துக்கு முருவநிலை கருமங்க
டெள்ளிசையின் வசமாக்கித் திகழ்ந்துயிரா யுறைகின்றா
னள்ளிருடீர்த் தடியவர்க்கு நலங்கொடுக்குந் திருவுடனே
வள்ளலரு ளாளரெனும் வாரணவெற் பிறையவனே. 2

உரை:- வள்ளல்-பெருங் கொடையாளரான, அருளாளர்எனும்—பேரருளாளரென்னும், வாரண வெற்பு இறையவன் – ஹஸ்திகிரி நாயகனான திருமால், திருவுடன்-பிராட்டியுடன், உள்ள பொருள் அனைத்துக்கும் - உள்ள வஸ்துக்கள் முழுவதிற்கும், உருவம் நிலை கருமங்கள் – ஸ்வரூபம் – ஸ்திதி – ப்ரவ்ருத்தி ஆகியவற்றை, தெள் இசையின் வசம் ஆக்கி – (தன்னுடைய) தெளிவான ஸங்கல்பத்தில் அடங்கியதாகச் செய்து, திகழ்ந்து - ப்ரகாசித்து, உயிராய் உறைகின்றான் – (அவ்வஸ்துக்களுள்) அந்தர்யாமியாய் நித்யவாஸம் செய்பவனாய், அடியவர்க்கு – தன் தாஸர்களுக்கு, நள் இருள் தீர்த்து – நெருங்கிய (ஸம்ஸாரமாகிய) இருளைப் போக்கி, நலம் கொடுக்கும் – (மோக்ஷ) ஆநந்தத்தைக் கொடுப்பான்.

ஸகலவஸ்துக்களிலும் அந்தர்யாமியாய் நின்று அவற்றின் ஸ்வரூபம் ஸ்திதி ப்ரவ்ருத்தி இவற்றைத் தன் ஸங்கல்பத்திற்கு அடங்கியனவாய்க்கொண்டு பெருந்தேவியாருடன் விளங்கும் பேரருளாளன் தன் திருவடிகளைச் சரணமடைபவர்க்கு ஸம்ஸாரபந்தத்தை ஒழித்து மோக்ஷாநந்தத்தைக் கொடுக்கின்றான்—என்றவாறு, 2

பாசுரம் 3, 4 – ஜீவாத்மாவின் ஸ்வரூபம் – விளக்கம்

250 பூதவுடல் புலன்கண்மனம் புல்லாவி புந்தியெனும்
யாதுமல னாயிலகி யானெனுமின் னுண்ணறிவாய்ச்
சேதனனா யடிமையுமா முயிர்க்கெல்லாந் திண்ணுயிராய்த்
தீதலின்றித் திகழுஞ்சீ ரத்திகிரித் திருமாலே. 3

உரை:— சீர் அத்திகிரித் திருமால் – சிறப்புப்பொருந்திய ஹஸ்திகிரியில் உள்ள பேரருளாளன், பூத உடல் - (பூமி, ஜலம், அக்நி, வாயு, ஆகாசம் என்னும் ஐந்து) பூதங்களால் அமைந்த சரீரம், புலன்கள் – இந்த்ரியங்கள், மனம் – மனஸ், புல் ஆவி – (அழிந்துபோவதால்) அல்பமான ப்ராணவாயு, புந்தி – புத்தி, எனும் யாதும் அலனாய் – என்று சொல்லப்படுகின்ற எப்பொருளுமாகாது வேறுபட்டவனாய், இலகி – ப்ரகாசித்து, யான் எனும் – நான் என்று தோற்றுபவனும், இன் – ஆநந்தஸ்வரூபனும், நுண் அறிவு ஆய் - அணுவும்

ஜ்ஞாநஸ்வரூபனும் ஆகியவனுய், சேதனனுய் - ஜ்ஞாநத்தைக் குணமாகவுடையனுய், அடிமையும் ஆம் -(எம்பெருமானுக்கு) அடிமையாயும் ஆகின்ற, உயிர்க்கு எல்லாம் – ஜீவாத்மாவுக்கெல்லாம், திண் உயிராய் – சாசுவதமான அந்தர்யாமியாய், தீதல் இன்றி – அழிவு இல்லாமல், திகழும் – ப்ரகாசிப்பான்.

''திருமால் உயிர்க்கு உயிராய்த் திகழும்'' என்று அந்வயிக்க.

சரீரம் – இந்த்ரியங்கள் – மனம் – ப்ராணவாயுக்கள் – ஜ்ஞாநம் – ஆகிய இவற்றைக்காட்டிலும் ஜீவாத்மா வேறுபட்டவன்;'நான்' என்று தோன்றிக்கொண்டேயிருப்பவன்; தனக்குத் தான் தோற்றுபவன்; அணுவாய், ஜ்ஞாந-ஆநந்த ஸ்வரூபனுய் நிற்பவன் ; ஜ்ஞாநத்தைக் குணமாகவும் கொண்டவன் ; சரீரந்தோறும் வேறுபட்டு நிற்பவன் ; எம்பெருமானுக்கு அடிமையாய் நிற்பதையே ஸ்வரூபமாகக் கொண்டவன். இத்தகைய ஜீவாத்மாவுக்கும் அந்தர்யாமியாய் நின்று பேரருளாளன் ப்ரகாசிக்கின்ருன் — என்றவாறு. 3

ஜீவன் கர்மபலனை அநுபவித்தல்-எம்பெருமானுக்கு லீலாரஸம்

251 தானடைத்த குணங்கருவி தங்கிரிசை வழியோழுக்கி
யூனெடுத்துண் டுமிழ்ந்துழலு முயிர்க்கேல்லா முயிராகிக்
கானடத்திக் கமலையுடன் கண்டுகந்து விளையாடுங்
தேனெடுத்த சோலைகள்சூழ் திருவத்தி யூரானே. 4

உரை :– தேன் எடுத்த – தேனைத் தாங்குகின்ற, சோலைகள் சூழ் – சோலைகளால் சூழப்பட்ட, திரு அத்தியூரான் – அழகிய ஹஸ்திகிரிநாதனுன பேரருளாளன், தான் அடைத்த – தான் (இயற்கையாக ஆன்மாவுக்குக்) கொடுத்த,குணம் கருவி – குணங்களையும் இந்த்ரியங்களையும், தம் கிரிசைவழி - தம் கர்மத்தை அநுஸரித்து, ஒழுக்கி - நடத்தி, ஊன் எடுத்து – சரீரத்தைப் பெற்று, உண்டு - (கர்மபலன்களை) அநுபவித்து, உமிழ்ந்து - (பின்) தள்ளி, உழலும் - (மறுபடியும் அதை ஏற்று) உழல்கின்ற, உயிர்க்கு எல்லாம், ஆன்மாவுக்கெல்லாம், உயிர் ஆகி – அந்தர்யாமியாயிருந்து, கான் நடத்தி – (அவற்றை இந்த ஸம்ஸாரமாகிய) காட்டில் நடக்கச்செய்து (அநுபவிக்கச்செய்து), கமலையுடன் – பெருந்தேவிப்பிராட்டியுடன், கண்டு உகந்து – (அதைப்) பார்த்து மகிழ்ந்து, விளையாடும் – விளையாடுவான்.

அத்தியூரான், உயிராகி, நடத்தி, கண்டு, உகந்து, விளையாடும் - என்று அந்வயிக்க,

பேரருளாளன் தன் ஸங்கல்பத்தால் ஜீவாத்மாவுக்கு அருளிய குணங்கள் இந்த்ரியங்கள் ஆகியவற்றை ஜீவாத்மா தன் கர்மத்திற்குத் தக்கவாறு உபயோகிக்கும்படி செய்கின்ருன். ஜீவாத்மா சரீரத்தைப் பெற்றுக் கர்மத்தின் பலன்களை அநுபவிப்பதும், பின் அவற்றை வெறுத்துத் தள்ளுவதும், பின்னும் அவற்றை விரும்புவதுமாய்

இவ்வாறு ஸம்ஸார ஸமுத்ரத்தில் உழல்கின்றான். இத்தகைய ஜீவாத்மாவுக்குப் பேரருளாளன் அந்தர்யாமியாயிருந்து கர்மபலன்களை அநுபவிக்கச் செய்து பிராட்டியுடன் கண்டு லீலாரஸத்தை அநுபவிக்கிறான் — என்றவாறு. 4

பாசுரம் 5, 6—மோக்ஷவிரோதி—விளக்கம்

252 உய்யுமுற விசையாதே யொத்தவர்க்கே யடிமையுமாய்ப்
போய்யுருவைத் தமக்கேற்றிப் புலன்கொண்ட பயனேகொண்
டையுறவு மாரிருளு மல்வழியு மடைந்தவர்க்கு
மெய்யருள்செய் திடுந்திருமால் வேழமலை மேயவனே. 5

உரை:— வேழமலை மேயவன் திருமால் - ஹஸ்திகிரியில் எழுந்தருளியுள்ளவனும் பெருந்தேவித் தாயாரிடம் மையல்கொண்டவனுமான பேரருளாளன், உய்யும் உறவு - உஜ்ஜீவிப்பதற்குக் காரணமான (சேஷத்வம் முதலிய) ஸம்பந்தத்தை, இசையாதே - (அறிந்து) ஏற்றுக்கொள்ளாமல், ஒத்தவர்க்கே - தம்மைப்போன்ற (கர்மவசர்களான ஜீ) வர்களுக்கே, அடிமையுமாய் - அடியராகவும் இருந்து, தமக்கு - ஜீவர்களான தமக்கு, பொய் உருவை ஏற்றி - அழியுந்தன்மையுள்ள சரீரத்தின் தன்மையை ஏறிட்டுக்கொண்டு (அதாவது-நித்யரான ஜீவர்க்கும், அநித்யமான சரீரத்திற்குமுள்ள வேறுபாட்டை அறியாது மயங்கி), புலன் கொண்ட - இந்த்ரியங்களால் (சிறந்ததாக) ஏற்றுக்கொள்ளப்பட்ட, பயனே கொண்டு - பலனையே (தாமும் சிறந்ததாய்) அங்கீகரித்து, ஐயுறவும் - (ஸித்தாந்தவிஷயங்களில்) ஸந்தேஹத்தையும், ஆர் இருளும் - பூர்ணமான அஜ்ஞாநத்தையும் (கொண்டு), அல் வழியும் - (அதனால்) தகாத வழியையும், அடைந்தவர்க்கு - அடைந்த ஜீவருக்கு, மெய் அருள்செய்திடும் - (ஓர் உபாயத்தின் மூலம்) அழியாத க்ருபையைச்செய் (து மோக்ஷத்தைத் தந்) திடுவான்.

ஜீவாத்மா தனக்கும் ஸர்வேசுவரனுக்கும் உள்ள ஸம்பந்தத்தை அறியாதிருந்து தன்னைப்போன்ற மற்றொரு ஜீவாத்மாவுக்கு அடியனாக மயங்குகின்றான்; நித்யனான தனக்கும் அழிவுள்ள சரீரத்திற்கும் உள்ள வேறுபாட்டை அறியாது அற்பமான இந்த்ரியஸுகங்களையே சிறந்தனவாகக்கொண்டு அவற்றில் ஈடுபடுகின்றான்; ஆசார்யகடாக்ஷம் பெறாமையால் ஸித்தாந்தவிஷயங்களில் மனவுறுதியின்றி அஜ்ஞாநம் நிரம்பப்பெற்றுத் தீய வழியில் புகுந்து கெடப் பார்க்கின்றான். இத்தகைய ஜீவனையும் பேரருளாளன் நல்வழிப்படுத்திக் காக்கின்றான்—என்றவாறு. 5

கர்மபந்தத்தால் ஸம்ஸாரபந்தம்

253 விதைமுளையி னியாயத்தா லடியில்லா வினையடைவே
சதையுடல நால்வகைக்குஞ் சரணளிப்பா னெனத்திகழ்ந்து
பதவியறி யாதுபழம் பாழிலுழல் கின்றார்க்குஞ்
சிதைவிலரு டருந்திருமா றிருவத்தி நகரானே. 6

உரை:— திரு அத்திநகரான் திருமால் - ஸ்ரீஹஸ்திகிரிநாதனும் ஸ்ரீய:பதியுமான பேரருளாளன், விதைமுளையின் நியாயத்தால் – பீஜாங்குரந்யாயத்தால், அடி இல்லா – அநாதியான, வினை அடைவே – கர்மங்களை அநுஸரித்து, சதை – மாம்ஸமயமான, உடலம் நால் வகைக்கும் – நான்கு வகைச் சரீரம் பெற்ற ஜீவர்களுக்கும், சரண் அளிப்பான் – ரக்ஷணத்தைச் செய்வான், எனத் திகழ்ந்து – என்று கூறும்படி (நின்று) ப்ரகாசித்து, பதவி அறியாது – (ஸம்ஸார பந்தத்தை நீக்கும்) வழியை அறியாமல், பழம் பாழில் – அநாதியான ஸம்ஸார மண்டலத்தில், உழல்கின்றார்க்கும் - துன்பப்படுமவர்க்கும், சிதைவு இல் – குறைவு இல்லாத, அருள் தரும் - க்ருபையைச் செய்(து ஸம்ஸாரபந்தத்தை நீக்கு) வான்,

பீஜாங்குரந்யாயம்:— விதையொன்றால் முளை உண்டாகின்றது. அவ்விதை, அதற்கு முன் முளையினால் உண்டாகின்றது. இம்முறையில் பார்க்கின் ஆதிகாரணம் விதையென்றோ முளையென்றோ முடிவுகட்ட முடியாது. இம்முறைக்குத்தான் பீஜாங்குரந்யாயம் எனப் பெயர் வந்தது. இதேபோல் — கர்மத்தால் சரீரம் உண்டாகின்றது. அந்தக் கர்மம் முந்திய சரீரத்தினால் ஏற்படுகின்றது. இங்குக் கர்மத்தையாவது சரீரத்தையாவது முதற்காரணமாக முடிவுகட்ட முடியாதிருப்பது பற்றிப் பீஜாங்குரந்யாயத்தை உவமானமாகக்காட்டி இரண்டையுமே அநாதியென்று முடித்தனர் பெரியோர்.

நால்வகைச்சரீரம்:— 1 தேவசரீரம் 2 மநுஷ்யசரீரம் 3 திர்யக்ச் சரீரம் 4 ஸ்தாவரசரீரம் என்பன. (திர்யக்=ம்ருகம் பறவை முதலியன. ஸ்தாவரம்=அசையாத மரம், கல் முதலியன).

ஸகலஜீவராசிகளையும் காத்தருள்பவனான பேரருளாளன், ஸம்ஸாரபந்தத்தை நீக்க உபாயத்தை அறியாது இக்கர்மபூமியில் கர்மவசத்தால் உழன்று வருந்தும் ஜீவர்க்கு நல்வழிகாட்டிக் காத்தருள் கின்றான்—என்றவாறு. 6

பாசுரம் 7, 8 – பக்திப்ரபத்திகளாகிய உபாயங்கள் (பக்தி – விளக்கம்)

254 எமநியம வாசனங்க ளியலாவி புலனடக்கந்
தமதறியுந் தாரணைக டாரையரு நினைவொழுக்கஞ்
சமமுடைய சமாதிநலஞ் சாதிப்பார்க் கிலக்காகு
மமரர்தொழு மத்திகிரி யம்புயத்தா ளாரமுதே. 7

உரை:— அமரர் தொழும் - தேவர்களால் வணங்கப்படுகின்ற, அத்திகிரி - ஹஸ்திகிரியில் எழுந்தருளியுள்ள, அம்புயத்தாள் - பிராட்டிக்கு, ஆர் அமுது - நிறைந்த அமுதமாயுள்ள பேரருளாளன், எமநியம ஆசனங்கள் - யமம், நியமம், ஆஸனம் ஆகியனவும், இயல் ஆவி அடக்கம் – ஸஞ்சரிக்கின்ற ப்ராணவாயுக்களை அடக்குவதாகிய ப்ராணாயாமமும், புலன் (அடக்கம்) - இந்த்ரியங்களை அடக்குவதாகிய

ப்ரத்யாஹாரமும், தமது அறியும் – (ஜீவர்கள்) தம்முடைய மனத்தால் அறிகின்ற, தாரணைகள் – எம்பெருமானுடைய திருமேனியை நினைத்தலாகிய தாரணையும், தாரை அரு – இடைவிடாத, நினைவு ஒழுக்கம் – நினைவின் தொடர்ச்சியாகிய த்யாநமும், சமம் – மனத்தின் அடக்கமும் (ஆகிய இவற்றை), உடைய – (அங்கமாக) உடையதான, நலம் சமாதி– ஆநந்தரூபமான பக்தியோகத்தை, சாதிப்பார்க்கு – அநுஷ்டிப்பவருக்கு, இலக்கு ஆகும் – குறிப்பொருளா (கி மோக்ஷம் தரு) வான்.

'புலனடக்கம்' என்னும் தொடர் வெளியேயுள்ள ஜ்ஞாநேந்த்ரியங்கள் கர்மேந்த்ரியங்கள் ஆகியவற்றின் அடக்கத்தையும், 'சமம்' என்னுஞ் சொல் உள்ளிந்த்ரியமான மனத்தின் அடக்கத்தையும் புலப்படுத்தியதால் இரண்டாலும் 'ப்ரத்யாஹாரம்' என்னும் அங்கம் கூறப்பட்டது.

இங்குக் கூறப்பட்ட பக்தியோகத்தின் அங்கங்களுடைய ஸ்வரூப விளக்கத்தை *84*-வது பாசுரவுரையில் காண்க.

பேரருளாளன், பக்தியோகத்தை அங்கங்களுடன் அநுஷ்டிப்பவர்க்கு ஸம்ஸாரபந்தத்தை நீக்கி மோக்ஷத்தை அளிக்கின்றான்—என்றவாறு. 7

ப்ரபத்தி—விளக்கம்

255 புகலுலகி லில்லாது போன்னருள்கண் டுற்றவர்க்கு
மகலகிலா வன்பர்க்கு மன்றேதன் னருள்கொடுத்துப்
பகலதனாற் பழங்கங்குல் விடிவிக்கும் பங்கயத்தா
ளகலகிலே னென்றுறையு மத்திகிரி யருண்முகிலே. 8

உரை:— பங்கயத்தாள் - தாமரையில் அவதரித்த திருமகள், அகலகிலேன் என்று – (க்ஷணமும்) பிரியச்சக்தியுடையேனல்லேன் என்று, உறையும் - நித்யவாஸம் செய்யப்பெற்றவனும், அத்திகிரி அருள் முகில் – ஹஸ்திகிரியில் நின்று கருணையாகிய நீரைப் பொழியும் மேகம்போன்றவனுமான பேரருளாளன், உலகில் புகல் இல்லாது – லோகத்தில் வேறு உபாயம் அநுஷ்டிக்க முடியாமல், பொன் அருள் கண்டு - பிராட்டியின் க்ருபையைப் (புருஷகாரப்ரபத்தியால்) பெற்று, உற்றவர்க்கும் - (தன்னைச் சரணம்) அடைந்தவருக்கும், அகலகிலா அன்பர்க்கும் – (தனது அநுபவத்தை விட்டு க்ஷணமும்) பிரிந்திருக்க முடியாத காதலுள்ள பாகவதர்களுக்கும், அன்றே – அவர்கள் வேண்டிய காலத்திலேயே, தன் அருள் கொடுத்து – தன் க்ருபையை வைத்து, பகலதனால் – (மோக்ஷாநுபவமாகிய) பகலால், பழம் கங்குல் – அநாதியான ஸம்ஸாரமாகிய காளராத்ரியை (நீக்கி), விடிவிக்கும் - பொழுதுவிடியச்செய்வான்.

புருஷகாரப்ரபத்தி— எம்பெருமானிடம் ப்ரபத்தியை அநுஷ்டிப்பதற்கு முன் பிராட்டியைப் புருஷகாரமாகக்கொண்டு செய்யும் ப்ரபத்தி.

புருஷகாரம்— பலன் தரவல்ல சேதநனை நெருங்குவதற்காக, பலனை விரும்புமவனால் உபாயமாக வரிக்கப்பட்ட மற்றொரு சேதநன்.

பேரருளாளன், த்ருப்தப்ரபத்தி – ஆர்த்தப்ரபத்தி என்ற இரு வகையில் தந்தம் விருப்பத்திற்கேற்றவாறு ஒன்றை அநுஷ்டித்த ப்ரபந்நருக்கு அவர்கள் வேண்டிய காலத்தில் ஸம்ஸாரமாகிய இராப் பொழுதைக் கழித்து மோக்ஷாநுபவமாகிய பலனைத் தந்தருள்கின்றான்— என்றவாறு.

'புகல்......கண்டு' என்னுந்தொடர் 'அன்பர்க்கும்' என்பதிலும் சேரும்.

த்ருப்தப்ரபத்தி'— இச்சரீரம் உள்ளவரையில் கர்மபலன்களை அநுபவித்து, முடிவில் மோக்ஷத்தைப் பெற விரும்பிச் செய்யும் சரணாகதி.

ஆர்த்தப்ரபத்தி— இச்சரீரம் உள்ளவரையிலும்கூடப் பொறுக்காது இந்த க்ஷணமே மோக்ஷம்பெறவேண்டுமென்று விரும்பிச்செய்யும் சரணாகதி. 8

பாசுரம் 9, 10—மோக்ஷஸ்வரூபம் — விளக்கம்

256 இருவிலங்கு விடுத்திருந்த சிறைவிடுத்தோர் நாடியினாற்
கருநிலங்கள் கடக்கும்வழி காவலராற் கடத்துவித்துப்
பெருநிலங்கண் டுயிருணர்ந்து பிரியாம லருள்செய்யு
முருநலங்கோண் டுறுந்திருவோ டுயரத்தி கிரியானே. 9

உரை:— உரு நலம் கொண்டு – (தனக்கேற்ற) திருமேனியையும் ஆநந்தத்தையும் கொண்டு, உறும் திருவோடு – (தன்னிடம்) பொருந்திய பிராட்டியுடன், உயர் அத்திகிரியான் – உயர்ந்துநிற்கும் ஹஸ்திகிரிநாதனான பேரருளாளன், இரு விலங்கு விடுத்து – (உபாயத்தை அநுஷ்டித்த ஜீவனுக்குப் புண்யமும் பாபமுமாகிய) இரண்டு விலங்கை நீக்கி, ஓர் நாடியினால் – ஒப்பற்ற (மூர்த்தந்ய) நாடியினால், இருந்த சிறை விடுத்து-(ஜீவன் இதுவரை)இருந்த சரீரமாகிய சிறையினின்றும் விடுவித்து, கரு நிலங்கள் – கர்ப்பவாஸத்தைக் கொடுக்கும் ஸ்தாநங்களாகிய லோகங்களை, கடக்கும் வழி – தாண்டிச்செல்லும் வழியாகிய அர்ச்சிராதிமார்க்கத்தை, காவலரால் – (அந்த யாத்ரையில்) பாதுகாப்பவராகிய ஆதிவாஹிகர்களால், கடத்துவித்து – தாண்டுவித்து, பெரு நிலம் கண்டு – பெரிய ஸ்தாநமாகிய பரமபதத்தைப் பார்த்து, உயிர் உணர்ந்து – (ஜீவன் தன்) ஸ்வரூபத்தை (உள்ளவாறே) அறிந்து, பிரியாமல் – (ஈசுவரனாகிய தன்னை விட்டுப்) பிரியாமல் (இருக்கும்படி), அருள்செய்யும் – அருள்புரிவான்.

'விடுத்து' 'கடத்துவித்து' எனுஞ் சொற்கள் பேரருளாளனையும், 'கண்டு' 'உணர்ந்து' என்பவை ஜீவனையும் சேருகின்றன.

"மூர்த்தந்யநாடி" "அர்ச்சிராதிமார்க்கம்" "ஆதிவாஹிகர்" என்பவற்றின் விரிவை 66, 67 – வது பாசுரவுரையில் காண்க.

பெருந்தேவித்தாயார் பேரருளாளனுக்கேற்ற திருமேனியையும் ஆநந்தம் முதலிய திருக்கல்யாணகுணங்களையும் கொண்டு அவனோடு பிரியாது நிற்கின்றார். இத்தகைய பிராட்டியுடன் பெருமைபெற்று விளங்கும் பேரருளாளன், பக்தி-ப்ரபத்திகளில் ஒன்றை அநுஷ்டித்த ஜீவனுக்குப் புண்ய பாபங்களாகிய கர்மங்களைப் போக்கி, அவனை மூர்த்தந்யநாடி வழியாய்ச் சரீரத்தினின்று புறப்படச் செய்து ஆதிவாஹிகரைக் கொண்டு அர்ச்சிராதிமார்க்கத்தைக் கடத்தி, பரமபதத்தை அடைவித்து, ஜீவனாகிய தன் ஸ்வரூபத்தை உள்ளவாறே அவன் அறியச் செய்து, பின் ஒருகாலும் தன்னைப் பிரியாது நித்ய கைங்கர்யம் செய்யும்படி அருள்கின்றான் — என்றவாறு.

குற்றவாளி, விலங்கிடப் பெற்றுத் தண்டனையைச் சிறையில் இருந்து அநுபவித்தல் உலகவழக்கு. இங்கு ஸம்ஸாரியான ஜீவன் குற்றவாளியாகவும், அவனைக் கட்டுப்படுத்தும் புண்யபாபங்கள் விலங்குகளாகவும், கர்மபலன்களை அநுபவிக்குமிடமாகிய சரீரம் சிறையாகவும் கொள்ளப்பட்டன. 9

மோக்ஷத்தில் ஸர்வகைங்கர்யம் பெறுதல்

257 தந்திருமா துடனேதாந் தனியரசா யுறைகின்ற
வந்தமில்பே ரின்பத்தி லடியவரோ டேமைச்சேர்த்து
முந்தியிழந் தனவெல்லா முகிழ்க்கத்தந் தாட்கொள்ளு
மந்தமிலா வருளாழி யத்திகிரித் திருமாலே. 10

உரை:— அந்தம் இலா – அளவற்ற, அருள் ஆழி – கருணைக் கடலாகிய, அத்திகிரித் திருமால் - ஹஸ்திகிரித்திருமாலான பேரருளாளர், தம் திருமாதுடனே – தம்முடைய பிராட்டியுடனே, தாம் – தாம், தனி அரசாய் – நிகரற்ற சக்ரவர்த்தியாய், உறைகின்ற – நித்யவாஸம் செய்யுமிடமான, அந்தம் இல் – அளவு இல்லாத, பேர் இன்பத்தில் – பரமாநந்தமயமான ஸ்ரீவைகுண்டத்தில், அடியவரோடு – (நித்யஸூரிகளும் முக்தர்களுமான) தொண்டர்களோடு, எமைச்சேர்த்து – எங்களை ஒன்றுசேர்த்து, முந்தி இழந்தன எல்லாம் – (கர்மஸம்பந்தத்தால் யாம்) முன்பு இழந்த கைங்கர்யங்களையெல்லாம், முகிழ்க்கத் தந்து – தோன்றுமாறு கொடுத்து, ஆட்கொள்ளும் – (எம்மை) உஜ்ஜீவிக்கச் செய்வார்.

பேரருளாளன் பெருந்தேவித்தாயாருடன் நித்யமாய் அரசாட்சி புரியப்பெற்றதாய் ஆநந்தமே வடிவெடுத்து நின்றாற்போன்றதாயுள்ள ஸ்ரீவைகுண்டத்தில், உபாயத்தை அநுஷ்டித்த ஜீவனைத் தன் திருவடிகளில் நித்யகைங்கர்யம் செய்துவரும் நித்ய-முக்தர்களுடன் ஒன்று

சேர்த்து. இதுகாறும் ஜீவன் கர்மஸம்பந்தத்தால் இழந்திருந்த கைங்கர்யங்களையெல்லாம் அப்பொழுது ஒன்றுகூட்டிச் செய்யுமாறு அருள்புரிகின்றான் — என்றவாறு. 10

முடிவுரை கூறுதல்

258 அயன்பணியு மத்திகிரி யருளாள ரடியிணைமே
னயங்கள்சேறி கச்சிநகர் நான்மறையோர் நல்லருளாற்
பயன்களிவை யனைத்துமேனப் பண்டுரைத்தார் படியுரைத்த
வியன்கலைக ளீரைந்தும் வேதியர்கட் கினியனவே. 11

உரை:— நயங்கள் செறி–நல்ல பயன்கள் பொருந்திய, கச்சி நகர்–காஞ்சிபுரத்தில் எழுந்தருளியுள்ள, நான்மறையோர் - நான்கு வேதங்களையறிந்த பாகவதர்களின், நல் அருளால் – சிறந்த அநுக்ரஹத்தால், இவை அனைத்தும் – இந்தப் பாசுரங்கள் முழுதும், பயன்கள் என – ஸகலபலன்களாயுமிருக்கவல்லன என்னும்படி, பண்டு உரைத்தார் படி – முன்பு உபதேசித்த ஆசார்யர்களின் (மொழியின்) படியே, அயன் பணியும் – ப்ரஹ்மாவினால் வணங்கப்பட்ட, அத்திகிரி அருளாளர் – ஹஸ்திகிரியின் (நாதரான) பேரருளாளருடைய, அடியிணைமேல் – இரண்டு திருவடிகளின்மேல், உரைத்த – கூறிய, வியன் கலைகள் – அதிசயமான கலைகளாகிய, ஈரைந்தும் – இந்தப் பத்துப் பாசுரங்களும், வேதியர்கட்கு– வேதாந்தார்த்தங்களை அறிந்த மஹான்களுக்கு,இனியன-மகிழ்ச்சியைத் தருவனவாகும்.

அத்திகிரியில் நித்யவாஸம்செய்து பேரருளாளனைக் கண்ணாரக் கண்டு களிக்கும் பாக்யம்பெற்ற பரமபாகவதர்களின் திவ்யாநுக்ரஹத்தால் அவ்வெம்பெருமான்மீது இயற்றப்பட்ட இப்பிரபந்தம் முழுதும் பூர்வாசார்யர்களின் வழியையே பின்பற்றியதாகும். இப்பாசுரங்களின் கருத்தை ஆராய்ந்தால் இவற்றால் வேறு பலனை வேண்டாதவாறு இப்பாசுரங்களே பலனாகும் என்னும்படி ஸாரார்த்தத்தைக் கொண்டுள்ளமை விளங்கும். வேதாந்தார்த்தங்களை நன்குணர்ந்த மஹான்களே இப்பாசுரங்களின் இனிமையை அறிய வல்லர்—என்றவாறு.

இப்பிரபந்தத்தில் ஒவ்வொரு பாசுரத்திலும் பிராட்டியின் ஸம்பந்தம் கூறப்பட்டதால் உபாயமாய் நிற்கும்போதும் பலனாய் நிற்கும்போதும் எம்பெருமானோடு பிராட்டிக்குப் பிரியாத ஸம்பந்தம் உண்டென்று உறுதிபட்டது,

அருத்தபஞ்சகம்–உரை முற்றிற்று

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

ஸ்ரீ:

ஸ்ரீ-வைணவதினசரி—உரை

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

[விஷயச் சுருக்கம்]

ஸ்ரீவைஷ்ணவன் தினந்தோறும் செய்யவேண்டிய கார்யங்களை விளக்குவதால் இப்பிரபந்தத்திற்கு இப்பெயர் வந்தது. ஒருநாளை ஐந்து கூறுக்கி ஐந்துகாலங்களிலும் ஐந்துகார்யங்களை ஸ்ரீவைஷ்ணவன் செய்யவேண்டுமென்பது சாஸ்த்ரவழக்கு. அவையாவன:—

1 அபிகமநம் — அன்று முழுதும் நடக்கவேண்டிய கைங்கர்யங்கள் தடையின்றி நடந்தேறவேண்டுமென்று எம்பெருமானிடம் ப்ரார்த்தித்து ப்ரபத்திசெய்தல்,

2 உபாதாநம் — பகவானுடைய ஆராதநத்திற்கு வேண்டிய திருத்துழாய் புஷ்பம் முதலிய ஸாதநங்களைச் சேர்த்தலும், பகவதாராதநத்திற்கு மனம் முக்கிய ஸாதநமாகையால் அது சுத்தமடைவதற்காக ஆழ்வார்களும் ஆசார்யர்களும் அருளிய ஸ்ரீஸூக்திகளின் காலக்ஷேபத்தில் ஈடுபடுதலும்.

3 இஜ்யை-ஸ்ரீபாஞ்சராத்ரசாஸ்த்ரத்திலும் ஆஹ்நிகங்களிலும் சொல்லிய முறைப்படி பகவானுக்குத் திருவாராதநம்செய்தல்.

4 ஸ்வாத்யாயம் — வேதாந்தபாகங்களைப் படித்துப் பரிசயஞ் செய்தல்.

5 யோகம் — பகவானுடைய திருவடிகளை த்யாநம்செய்தலும், தன்னுடைய நித்ராகாலத்திலும் எம்பெருமான்திருவடிகளில் தன் தலையை வைத்திருப்பதாய் த்யாநம்செய்து சயனித்தலும்.

இவ்வாறு ஐந்துகாலக்கார்யங்களையும். பேரருளாளன்விஷயமாக்கி முறையே இரண்டிரண்டு பாசுரங்களால் வெளியிடுகிறார் ஸ்ரீதேசிகன்.

இப்பிரபந்தம் முழுதும் கலிவிருத்தத்தால் அமைந்ததாம்.

பாசுரம், 1, 2 - அபிகமநம்

259 வரியிரு ளழிவழி மனம்வரு முணர்வோடு
கரிகிரி மருவிய கரியவ னடியிணை
பரிவோடு பரவுந லடியவர் பழவுரை
யரியரி யரியரி யரியரி யரியே. 1

உரை:— வரி இருள் - மூடிக்கொண்டிருந்த (நித்திரையாகிய) இருள், அழி வழி – ஒழிந்த பின், மனம் வரும் – மனத்தில் உண்டாகின்ற, உணர்வொடு - நல்ல ஜ்ஞாநத்துடன், கரி கிரி மருவிய – ஸ்ரீஹஸ்திகிரியில் எழுந்தருளியுள்ள, கரியவன் – கரிய நிறங்கொண்ட பேரருளாளனுடைய, அடியிணை – திருவடி இரண்டையும், பரிவொடு பரவும் - அன்புடன் போற்றுகின்ற, நல் அடியவர் - சிறந்த பாகவதர்கள், பழ உரை – வெகு காலமாய் (அநுஸந்திக்கும்) ஸூக்தி, அரி அரி அரி அரி அரி அரி அரியே – ஹரி: ஹரி: ஹரி: ஹரி: ஹரி: ஹரி: ஹரி: என்பவையே.

பேரருளாளன் திருவடிகளை அன்புடன் பணியும் பாகவதர்கள் அதிகாலையில் நித்ரை நீங்கியதும் மனத்தெளிவுபெற்று ஹரி: ஹரி: ஹரி: ஹரி: ஹரி: ஹரி: ஹரி: என்று ஏழுமுறை அநுஸந்திப்பர். இது தொன்றுதொட்டு வந்த முறையாகும். 1

அபிகமநப்ரபத்தி

260 வினைவகை யொழுகிய வெறிநிலை யடையவு
நினைவுடை நிகழ்வெதிர் நிலைநல மணுகிட
மனமுரை கிரிசைகண் மகிழ்மறை நெறிகொடு
தனிமுத லடியிணை யடைபவர் தமரே. 2

உரை:— தமர் – பாகவதர்கள், வினைவகை ஒழுகிய – (தம்முடைய) கர்மத்தை அநுஸரித்து (அதுவரை) நடந்த, வெறி நிலை உடையவும் – அஜ்ஞாநதசை முழுவதையும், நினைவுடை நிகழ்வு – நினைக்கும்படியான நிகழ்காலத்தில், எதிர் நிலை நலம் - வருங்காலத்தில் உண்டாகும் ஆநந்தாநுபவம், அணுகிட – நெருங்கும்படி, மகிழ் மறை நெறி கொடு - மகிழ்வைத் தருகின்ற வேதமார்க்கத்தைக் கொண்டு, மனம் உரை கிரிசைகள் - மனம் வாக்கு தேஹம் ஆகிய வற்றால், தனி முதல் – ஒரே காரணமான பேரருளாளனுடைய, அடியிணை – திருவடியிரண்டையும், அடைபவர் – சரணமடைபவராவர்.

பாகவதர்கள், தம்முடைய கர்மத்தின்படி இதுகாறும் வீணே கழிந்த நிலைமுழுதையும் நினைந்து மனமுருகி, தேறி, பின் அன்று முழுதும் செய்யும் கைங்கர்யம் தடைபடாது நடந்து ஆநந்தம் பெறுவதற்காக மனத்திற்கு மகிழ்வைத்தரும் வேதமார்க்கத்தைக்கொண்டு மனம், வாக்கு, தேகம் ஆகிய முக்கரணங்களாலும் பேரருளாளனைச் சரணமடைவர். இங்ஙனம் செய்தலே அபிகமநம் எனப்படும். 2

பாசுரம் 3, 4—உபாதாநம்

261 மலர்மகண் மருவிய மறுவுடை யிறையவன்
மலரடி கருதிய மனமுடை யடியவர்
மலர்புன லமுதுடன் வகையன வடையவு
மலர்மதி யெமதல வெனவறி பவரே. 3

உரை:— மலர் மகள் மருவிய - தாமரைமலரில் அவதரித்த பிராட்டியோடு கூடியவனும், மறு உடை—(ஸ்ரீவத்ஸமென்ற) மறுவை யுடையவனுமான, இறையவன் – ஸர்வேசுவரனுடைய. மலர் அடி கருதிய – மலர்போன்ற திருவடிகளை த்யானிக்கின்ற, மனமுடை அடியவர் – மனஸ்ஸையுடைய பாகவதர்கள், மலர் புனல் அமுதுடன் – புஷ்பம், தீர்த்தம், அம்ருதம் (என்னலாம்படி நிவேதனம் செய்யத்தக்க வஸ்து) ஆகிய இவற்றுடன், வகையன அடையவும் – (மற்றும் இவற்றின்) வகையைச் சேர்ந்த பொருள்கள் முழுதும், மலர் மதி – மலர்கின்ற (தம்முடைய) ஜ்ஞாநத்தால், எமது அல-எமக்காக அல்ல, (எம்பெருமானுக்கே தகும்), என அறிபவர் – என்று அறிபவராவர்.

பாகவதர்கள், புஷ்பம் தீர்த்தம் ப்ரஸாதம் முதலிய உலகிலுள்ள இனிய வஸ்துக்களெல்லாம் பேரருளாளனுக்கு ஸமர்ப்பித்துத் தம்மீது அவன் திருவுள்ளம் குளிர்வதற்காகவே இருப்பனவென்று துணிந்து அவ்வாறு செய்து மகிழ்வரேயன்றித் தமது உபயோகத்திற்காகவெனக் கருதமாட்டார். 3

திருவாராதநஸாமக்ரியை முறைப்படி ஸம்பாதித்தல்

262 நறையுடை மலர்மக ணலமுற மருவிய
விறையவ னினிதுற வினியவை யெனுமவ
ரறநெறி யிலனெவ னணுகிலு மணுகிலர்
துறையல தெனுமொரு துறைபடு கிலரே. 4

உரை:— இனியவை – (உலகில்) இனிய பொருள்கள், நறை உடை மலர் மகள் – தேன் நிறைந்த மலரில் அவதரித்த பிராட்டியினால், நலம் உற – ஆநந்தம் அடையும்படி, மருவிய இறையவன் – அணையப் பட்ட ஸர்வேசுவரன், இனிது உற – மகிழ்வுறுவதற்காகவே (ஏற்பட் டன), எனும் அவர் – என்று நினைவுகொண்ட பாகவதர்கள், அறநெறி யிலன் - தர்மமார்க்கத்தைத் தழுவாதவன், எவன் அணுகிலும் – எவ் வாறு (தம்மை) நெருங்கினாலும், அணுகிலர்–(தாம் அவனை) நெருங்க மாட்டார்கள்; துறை அலது எனும்–(நேர்மையான வழியன்று என்று சொல்லப்படும், ஒரு துறை - ஒரு வழியில், படுகிலர் – செல்லவும் மாட்டார்கள்.

பாகவதர்கள் பேரருளாளனுடைய திருவாராதநத்திற்கு உரிய வஸ்துக்களை ஸம்பாதிக்கும்போது தர்மமார்க்கத்திலிருந்து பிறழ்ந்த ஒருவன் எவ்வாறு நெருங்கி வேண்டினாலும் அவனிடமிருந்து ஒரு வஸ்துவையும் பெறமாட்டார்; நேர்மையற்ற வழியில் வஸ்துக்களை ஸம்பாதிக்கமாட்டார். ஆக, சாஸ்த்ரம் கூறிய வழியில் பகவதாராதநத் திற்குரிய வஸ்துக்களைச் சேர்த்தலே உபாதாநம் எனப்படும். 4

பாசுரம் 5, 6—இஜ்யை

263 ஒளிமதி யெனவொரு திருவுட னுயர்பவ
னளிமதி முகநகை நலநில வுகவுக
டெளிபுன லமுதன செழுமதி யடியவர்
குளிமுதல் கிரிசைகள் குறைகிலர் வலவே. 5

உரை:— செழு மதி அடியவர் - செழுமையான ஜ்ஞாநத்தை யுடைய பாகவதர்கள், ஒளி மதி என–நிலவும் சந்த்ரனும் என்னும்படி, ஒரு திருவுடன் உயர்பவன் - ஒப்பற்ற பிராட்டியுடன் உயர்ந்து நிற்கும் எம்பெருமானுடைய, நளி மதி முகம் - குளிர்ந்த சந்த்ரனைப்போன்ற திருமுகமண்டலத்தின்கண், நகை நலம் நிலவு உகவுகள் – புன்சிரிப்பாகிய அழகிய நிலவினால் (வெளியாகும்) ஸந்தோஷத்திற்கு (க்காரணமான), தெளி புனல் அமுது அன – தெளிந்த தீர்த்தமும் அடிசிலும் அதுபோன்ற (நிவேதநம் செய்யப்படும்) பிறவஸ்துக்களும் ஆகியவற்றிலும், வல – தம் சக்திக்குத் தக்க, குளி முதல் கிரிசைகள் – திருமஞ்சனம் முதலிய உபசாரங்களிலும், குறைகிலர் - குறைவுபடாது நடந்துகொள்வர்.

பாகவதர்கள், பேரருளாளனுக்குத் திருமஞ்சனம் முதலிய ஸகல உபசாரங்களையும் தம் சக்திக்குத் தக வழுவறச்செய்து, போக்யமான உணவுப்பண்டங்களை அவன்திருவுள்ளம் உகக்கும்படி ஸமர்ப்பித்துத் தாமும் மகிழ்வர். 5

பகவதாராதநம் – உணர்ச்சிவெள்ளம்

264 * வருவதொ ருறவென வளரிள வரசென
மருவுநன் மகனென வனமத கரியென
வருவிலை மணியென வடியவ ரடைபவ
ரருகணை யிறைவனை யருகணை யுடனே. 6

உரை:— அடியவர் – பாகவதர்கள், அருகு அணை இறைவனை– (தம்) ஸமீபத்திலேயே (ஸுலபனாய்) எழுந்தருளியுள்ள எம்பெருமானை, வருவது ஓர் உறவு என – (தம் வீட்டிற்கு) வந்த ஒரு பந்து என்னும்படியும், வளர் இளவரசு என – வ்ருத்தியடைகின்ற இளவரசன் என்னும்படியும், மருவு நல் மகன் என – அணைத்துக்கொள்ளப் படும் சிறந்த புத்திரன் என்னும்படியும், வன மத கரி என – வநத்திலுள்ள மதயானை என்னும்படியும், அரு விலை மணி என – அருமையான விலைமதிப்புடைய (பெறற்கரிய) ரத்னம் என்னும்படியும்

* 'यथा युवानं राजानं यथा च मदहस्तिनम् ।
यथा प्रियातिथिं प्राप्तं भगवन्तं तमर्चयेत् ॥'
'यथा च पुत्रं दयितं तथैवोपचरेद्धरिम् ।'

(அநுஸந்தித்து), அருகணையுடன் - திருவாராதநத்திற்கு வேண்டிய வஸ்துக்களுடன், அடைபவர் – சரணமடைபவராவர்.

பாகவதர்கள் திருவாராதநம் செய்யும்போது பேரருளாளனைத் தம் வீட்டிற்கு அருமையாய் வந்த ஒரு பந்துவாக நினைத்து மகிழ்வர்; நாடு முழுதையும் ஆளவல்ல இளவரசனே வந்திருப்பதாய்க்கொண்டு அதற்குத் தக உபசரிப்பர்; நெடுங்காலம் தவங்கிடந்து அருமையாய்ப் பெற்ற புத்திரனைப்போல நினைத்து அன்புகொள்வர்; மதங்கொண்டு அழகியதாய் விளங்கும் ஒரு யானையைக் கண்டாற்போலக் கண்டுகளிப்பர்; பெறுவதற்கரிய உயர்ந்த ஒரு ரத்நத்தைப் பெற்றாற்போலப் பெருமிதங்கொள்வர்; இத்தகைய உணர்ச்சிகளுடன் சாஸ்த்ரீயமான வஸ்துக்களைக்கொண்டு பாகவதர்கள் பேரருளாளனுக்கு ஸகல உபசாரங்களுடனும் ப்ரஸாதம் முதலியவற்றை நிவேதநம் செய்வர். இங்ஙனம் செய்வதே இஜ்யை எனப்படும். 6

பாசுரம் 7, 8—ஸ்வாத்யாயம்

265 விரைகமழ் மலர்மகண் மிகவுறு மிறையவன்
குரைகழல் குறுகிய குளிர்மதி மதியோடு
வரைநிலை யடியவர் மறைகளின் மறையெனு
முரைநிரை பரவுவ ருளமமு துணவே. 7

உரை:— வரை நிலை அடியவர் - மலைபோன்ற (கலங்காத) நிலையுடைய பாகவதர்கள், விரை கமழ் மலர் மகள் – மணம் வீசுகின்ற மலரில் அவதரித்த பிராட்டி, மிக உறும் இறையவன் – மிகப் பொருந்தி வஸிக்கப்பெறுகின்ற ஸ்வாமியான பேரருளாளனுடைய, குரை கழல் குறுகிய – (சதங்கை) ஒலிக்கின்ற திருவடிகளை நெருங்கியதும், குளிர் மதி – குளிர்ந்த சந்த்ரனைப் போன்றதுமான, மதியொடு – மனத்துடன், உளம் அமுது உண - (அந்த) மனஸ் அம்ருதத்தை அநுபவிப்பதற்காக, மறைகளில் மறை எனும் – வேதங்களுள் சிறந்த ரஹஸ்யங்களாக எண்ணப்படுகின்ற, உரை நிரை - (திருமந்த்ரம் — த்வயம் — சரம சுலோகம் முதலிய) மந்த்ரங்களின் வரிசையை, பரவுவர்–அநுஸந்திப்பர்.

பாகவதர்கள் பேரருளாளனுக்கு ஆராதநம் செய்து அந்த ப்ரஸாதத்தைத் தாமும் ஸ்வீகரித்துக்கொண்டபின் பொழுதை இனிதாகக் கழித்து மனமகிழ்வுபெறுவதற்காக, திருமந்த்ரம் த்வயம் சரமசுலோகம் ஆகிய ரஹஸ்யங்கள் முதலியவற்றின் அர்த்தத்தை அநுஸந்தித்துக்கொண்டிருப்பார்கள். 7

ஸ்வாத்யாயம் – நற்பொழுது போக்குதல்

266 துதிகளு மறிவரு சுருதியி னிறுதியி
னிதயமி தேனமுனி யிறையவ ருரைகளு
மதுரம னுதவிய மறைகளு மடியவர்
விதிவகை பரவுவர் மிகவுள மேழவே. 8

உரை:— அடியவர் – பாகவதர்கள், உளம் மிக எழ – (தம்) மனஸ் மிகவும் உத்ஸாஹமடைவதற்காக, துதிகளும் -(ஸஹஸ்ரநாமம் முதலிய) ஸ்தோத்ரங்களையும், அறிவு அரு சுருதியின் இறுதியின் – அறிவதற்கு அருமையான வேதத்தினுடைய அந்தத்தின் (வேதாந்தத் தின்), இதயம் இது என–தாத்பர்யம் இது என்னும்படி (உள்ள), முனி இறையவர் உரைகளும் – (வ்யாஸர் பராசரர் முதலிய) முநிச்ரேஷ்டர் களின் ஸூக்தி (களாகிய இதிஹாஸ புராணங்)களையும், மன் மதுரம் உதவிய மறைகளும் – (ஆழ்வார்கள் அருளிச்செய்த) மிக இனிமையைத் தருகின்ற (தமிழ்) வேதங்களையும், விதிவகை-(சாஸ்த்ரங்களில் கூறிய) முறைப்படி, பரவுவர் – அநுஸந்தித்து ப்ரவசநம் செய்பவராவர்.

பாகவதர்கள், பின்னும் ஸஹஸ்ரநாமம் முதலிய ஸ்தோத்ரங் களையும் இதிஹாஸ – புராணங்களையும் ஆழ்வார்களின் அருளிச்செயல் களையும் அநுஸந்தித்துப் பிறருக்கும் ப்ரவசநம்செய்துகொண்டிருப்பர். இதுவே ஸ்வாத்யாயம் எனப்படும். 8

9, 10— பாசுரம்—யோகம்

267 அறிவிலர் தலைமிசை யயனடி யெழுதிய
பொறிவகை யெழுவதோர் பொறிநல முகவல
ருறுவது முடையது மிதுவென வருவது
நறுமலர் மகள்பதி நலமுறு நினைவே. 9

உரை:— அறிவு இலர் தலைமிசை – ஜ்ஞாநமில்லாத ஜீவர்களின் தலையில், அயன் அடி எழுதிய – ப்ரஹ்மா ஆதிகாலத்தில் எழுதிய, பொறி வகை எழுவது – எழுத்துக்களைத் தழுவி உண்டாகின்ற, ஓர் பொறி நலம் – ஓர் இந்த்ரியங்களின் ஸுகத்தை, உகவலர் – விரும்பாத வர்களான பாகவதர்கள், உறுவதும் – (தம் ஸ்வரூபத்திற்குப்) பொருந் தியதாகக் கொள்வதும், உடையதும் – (தமக்கு) உடைமையாகக் கொள்வதும், இது என – இந்த யோகமே என்று கூறும்படி, வருவது – தானே வருவது, நறு மலர் மகள் பதி – மணமுள்ள மலரில் அவதரித்த பிராட்டியின் நாதனை எம்பெருமானைப்பற்றியதும், நலம் உறும் – நன்மைபொருந்தியதுமான, நினைவே – த்யாநமே (ஆகும்).

ஜீவனுடைய பிற்காலவாழ்வைப்பற்றி ப்ரஹ்மா அவன்தலையில் முன்னமே எழுதிவிடுகின்றான், அதன்படியே அந்த ஜீவன் போகங்களை இக்கர்மபூமியில் அநுபவிக்கின்றான், விவேகத்தால் இத்தகைய போகங் களை வெறுத்து நல்வழிப்படுபவன் ப்ரஹ்மா எழுதியதையும் பொய் யாக்கிவிடுகின்றான். பேரருளாளன் திருவடிச்சுவையறிந்த பாகவதர்கள் இத்தகைய அற்பஸுகங்களைக் கனவிலும் கருதமாட்டார்கள். அவர்கள் பேரருளாளன்திருவடிகளை இடைவிடாது சிந்திப்பதையே பேரின்பமாகக்கொள்வர்; இதையே தம் ஸ்வரூபத்திற்கு உரியதாயும் தமது உடைமையாகவும் கொண்டு அத்தகைய யோகத்தில் ஈடுபடுவர்.

யோகம் – பாகவதர்கள் அடையும் நிலை

268 பெருகிய நலநிலை பெருமையின் மிகுமய
லுருகிய நிலைமன முயர்முகி ழெழுமுடல்
சோருகிய விழிதிகழ் சுடர்மதி புகுமிறை
கருகிய வுருதிகழ் கரிகிரி யரியே. 10

உரை:— பெருகிய நலம் நிலை – (மேன்மேலும்) வளர்கின்ற (பகவத்தியாநமாகிய) ஆநந்தநிலைமையில், பெருமையின் மிகு மயல் – பெருமையினால் மிகுந்து நிற்கும் (பகவத்) பக்தியினால், உருகிய நிலை மனம் – உருகிய தன்மையையுடைய மனஸ்ஸும், உயர் முகிழ் எழும் உடல் – (மேலே) அரும்பிய மயிர்க்கூச்செறிந்த தேஹமும், சொருகிய விழி – உள்ளே செருகிய விழிகளுமாய், திகழ் – விளங்குகின்ற, சுடர் மதி – ப்ரகாசமான ஜ்ஞாநத்தில், புகும் இறை – புகுந்துநிற்கும் நாயகன் (யாவனெனில்), கருகிய உரு திகழ் – கரிய வடிவோடு ப்ரகாசிக்கின்ற, கரி கிரி அரியே – அத்திகிரிப்பெருமானாகிய பேரருளாளனே.

பாகவதர்கள், பேரருளாளனுடைய அழகிய திருமேனியை த்யாநம் செய்யும்போது ஆநந்தம்பெருகி, மனமுருகி, மயிர்க்கூச்செறிந்து, கண்விழி உள்ளே செருகிநிற்கப்பெறுவர். இத்தகைய ஆநந்தநிலையில் பேரருளாளன்திருமேனியின் த்யாநத்தில் மூழ்கிக் கிடப்பதே யோகம் எனப்படும். *10*

ஸ்ரீ-வைணவதினசரி — உரை முற்றிற்று

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

ஸ்ரீ:

திருச்சின்னமாலை—உரை

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான்திருவடிகளே சரணம்

சிறப்புத்தனியன் — உரை

மன்னுதிரு மந்திரத்தின் வாழ்துவயத் தின்பொருளுந்
துன்னுபுகழ்க் கீதைதனிற் சொன்னவெண்ணன் கின்பொருளு
மன்னவயற் கச்சியரு ளாளர்திருச் சின்னவொலி
யின்னபடி யென்றுரைத்தா னெழில்வேதாந் தாரியனே.

எழில் வேதாந்தாரியன் - மிக்க தேஜஸ் பொருந்திய ஸ்ரீவேதாந்த தேசிகன், அன்ன வயல் கச்சி – அன்னப் பறவைகள் உலாவும் வயல்கள் நிறைந்த காஞ்சிபுரத்தில் (எழுந்தருளியுள்ள), அருளாளர் திருச்சின்ன

ஒலி - பேரருளாளர் (ஸந்நிதியில் ஸேவிக்கும்) திருச்சின்னத்தின் ஓசையில், மன்னுதிருமந்திரத்தின் (பொருளும்) – நிலைபெற்றுநிற்கும் திருவஷ்டாக்ஷரத்தினுடைய அர்த்தவிசேஷங்களும், வாழ் துவயத்தின் பொருளும் – (சேதநரை) உஜ்ஜீவிக்கச்செய்கின்ற த்வயத்தினுடைய அர்த்தவிசேஷங்களும், துன்னு புகழ்-பொருந்திய புகழையுடைய, கீதை தனில் – பகவத்கீதையில், சொன்ன – (கண்ணன்) அருளிச்செய்த, எண்ணுன்கின் – முப்பத்திரண்டு அக்ஷரங்களாலாகிய சரமசுலோகத்தின், பொருளும் – அர்த்தவிசேஷங்களும், இன்னபடி – இவ்வாறு (அமைந்துள்ளன), என்று உரைத்தான் – என்று அருளிச்செய்தான்.

ஏகாந்த மூன்று மெழிலா லுரைசெய்து
மாகாந்தஞ் செய்தருளும் வள்ளலாய்—சாகாந்த
தேசிகனுந் தூப்புற் றிருவேங்க டேசகுரு
வாசகமே யெங்களுக்கு வாழ்வு.

ஏகாந்தம் மூன்றும் – ரஹஸ்யங்கள் மூன்றையும், எழிலால் – அழகோடு, உரைசெய்து – வ்யாக்யானம்செய்து, மாகாந்தம் செய்து – பெருமையுள்ள காந்தம் என்னும் உலோகத்தைப்போல் பிறர்மனதைக் கவர்ந்து, அருளும் – அவர் (உஜ்ஜீவிக்குமாறு) அருள்புரிகின்ற, வள்ளல் ஆய் – பெருங்கொடையாளராகி, சாகாந்த தேசிகனும் – வேதாந்த தேசிகன் என்று பிரசித்திபெற்ற, தூப்புல் திருவேங்கடேசகுரு – தூப்புல் திருவேங்கடமுடையானுடைய, வாசகமே – ஸ்ரீஸூக்தியே, எங்களுக்கு வாழ்வு – எங்களை உஜ்ஜீவிக்கச்செய்வதாகும்.

பரிச்சின்ன மான விருநா லெழுத்தின்பல் வண்மையெலாம்
விரிச்சு நலம்பெற வோதவல் லோர்க்கிந்த மேதினிக்கே
மரிச்சின்ன மீளப் பிறவாமல் வாழ்விக்கு மால்வரதர்
திருச்சின்ன வோசை யினிமையுண் டோமற்றைத் தேவருக்கே.

பரிச்சின்னமான – அளவுபட்ட, இருநாலெழுத்தின் – அஷ்டாக்ஷரத்தின், பல் வண்மை எலாம் – பல்வகைப்பலனையும் அளிக்கவல்ல தன்மை முழுதையும், நலம் பெற – (தாம்) நன்மையை அடையும் பொருட்டு, விரிச்சு ஓதவல்லோர்க்கு – விளக்கி அநுஸந்தாநம்செய்யும் பாகவதர்களை, இந்த மேதினிக்கே – இந்தப் பூமியிலேயே, மரிச்சு இன்னம் மீளப் பிறவாமல் – இறந்து பின்னும் திரும்பிப் பிறக்காமல், வாழ்விக்கும் – உஜ்ஜீவிக்கச்செய்பவரும், மால் வரதர் – (பக்தர்களிடம்) அன்புடையவருமான பேரருளாளருடைய, திருச்சின்ன ஓசை இனிமை – திருச்சின்னத்தின் சப்தத்தின் இனிமை, மற்றைத் தேவருக்கு உண்டோ – மற்றைத் தேவதைகளுக்குப் பெறமுடியுமோ ?

"விரிச்சு" "மரிச்சு" என்பன எதுகைநோக்கிவந்த போலிச் சொற்கள்.

[விஷயச் சுருக்கம்]

எம்பெருமானுடைய ஸந்நிதிகளில் 'திருச்சின்னம்' என்னும் ஒரு வாத்யவிசேஷம் ஸேவிக்கப்படுவதுண்டு. அதன் ஓசையின் காம்பீர்யத்தையும் இனிமையையும் வர்ணிக்க இயலாது. பேரருளாளன்ஸந்நிதியில் ஸேவிக்கப்படும் திருச்சின்னத்தின் ஓசை, ஸ்வாமி தேசிகன் திருவுள்ளத்தைக் கவர்ந்தது. திருமந்த்ரம்-த்வயம்-சரமசுலோகம் என்னும் ரஹஸ்யங்களில் கூறப்படுகிற குணவிசேஷமுள்ள பேரருளாளன் எழுந்தருளுவதைக்காட்டுகிறது அவ்வாத்யத்தின் ஒலி. அந்த வாத்யத்தின் பெயரையே இட்டு இப்பிரபந்தத்தையருளிச்செய்தார் ஸ்ரீதேசிகன்.

[முன்னொருகால், பெருமாள்கோயிலில் திருவீதிகளில் திவ்ய ப்ரபந்தத்தை அநுஸந்திக்கக்கூடாதென்று மதாந்தரஸ்தர் ஆக்ஷேபித்தனர். ஸ்ரீதேசிகன் அவர்களை வாதத்தில் வென்று ப்ரபந்தத்தை வைதிகமென்று ஸ்தாபித்து அந்தக் கோஷ்டியுடன் பேரருளாளனைத் திருவீதிகளில் எழுந்தருளச்செய்தார். அப்பொழுது ஸ்ரீதேசிகனிடமிருந்து இப்பிரபந்தம் அவதரித்ததாகும் — என்றும் பெரியோர் பணிப்பர்.]

ஸ்ரீதேசிகன் இதில், முதலில் 6 பாசுரங்களில் திருமந்த்ரத்தின் ஸாரார்த்தத்தையும், 7-வது பாசுரத்தில் த்வயத்தின் விசேஷார்த்தத்தையும், 8, 9-வது பாசுரங்களில் சரமசுலோகத்தின் முக்கியார்த்தத்தையும் வெளியிட்டுப் பின்னும் ஒரு பாசுரத்தால் பொதுவாகப் பேரருளாளனுடைய பெருமையைப் பேசிக் கடைசியில் ஆசார்யோபதேசத்தின் ஸாரமடங்கிய இப்பிரபந்தத்தின் இனிமையைச் சிற்றின்பத்தில் பற்று இல்லாமல் எம்பெருமானிடம் ஈடுபடுமவரே அநுபவிக்க முடியுமென்று கூறித் தலைக்கட்டுகிறார்.

இதில் ஒவ்வொரு தொடரும் ரஹஸ்யங்கள் மூன்றில் எந்த எந்தப் பாகத்தின் விளக்கமென்பதை ரஹஸ்யங்களில் மிக்க பரிசயத்தாலேயே அறியவேண்டும். ஆயினும் சுருக்கி இங்குக் கூறப்படுகின்றது.

இப்பிரபந்தத்தின் போக்கை ஆய்ந்த பெரியோர் ரஹஸ்யங்கள் மூன்றுமே பேரருளாளன் விஷயமென்று ஸ்ரீதேசிகன் திருவுள்ளம் — என்று பணிப்பர்.

[பேரருளாளன் வீதியில் எழுந்தருளுங்கால் திவ்யப்ரபந்த அநுஸந்தாந விஷயமாய் வந்த வழக்கைத் தீர்த்ததனால் ஸ்ரீதேசிகனிடம் பேரருளாளன் மனமுவந்து தன்னுடைய திருச்சின்னங்கள் இரண்டில் ஒன்றை அவருக்கு அருளியதால் இன்னும் பேரருளாளன்ஸந்நிதியில் ஒற்றைத் திருச்சின்னமே ஸேவிக்கப்படுகிறதென்றும் கூறுப.]

இப்பிரபந்தம் முழுதும் எண்சீராசிரியவிருத்தத்தால் அமைந்ததாம்.

பாசுரம் 1, 2 — ப்ரணவம் - அகாரத்தின் அர்த்தம் - விளக்கம்

269 ஈருலகைப் படைக்கவெண்ணி யிருந்தார் வந்தா
ரேழின்மலரோன் றன்னையன்றே யீன்றார் வந்தார்
மாருதமண் ணீராகு மாயோர் வந்தார்
வானோடெரி தாமாகு மறையோர் வந்தார்
சூரியர்தம் முடன்றுலங்கு தூயோர் வந்தார்
சுரர்களுக்கன் றமுதருள்சுந் தரனார் வந்தார்
வாரிதிசூழ் வையகம்வாழ் வித்தார் வந்தார்
வண்மையுடன் வரந்தருவார் வந்தார் தாமே. 1

உரை:— ஈர் உலகை - (சேதநம் அசேதநம் என்னும்) இரு வகையான லோகத்தையும், படைக்க எண்ணி யிருந்தார் - ஸ்ருஷ்டிக்க ஸங்கல்பித்து நின்றவரான பேரருளாளர், வந்தார் - எழுந்தருளினார்; எழில் மலரோன் தன்னை - அழகிய நாபிக்கமலத்தை ஆஸநமாகக் கொண்ட ப்ரஹ்மாவை, அன்றே ஈன்றார் வந்தார் - ஆதிகாலத்திலேயே ஸ்ருஷ்டித்தவர் வந்தார்; மாருதம் மண் நீர் ஆகும் - வாயு - பூமி - ஜலம் என்னும் பூதங்களாக மாறுபாட்டை அடைகின்ற, மாயோர் வந்தார் - அதிசயச்செய்கையையுடையவர் வந்தார்; வானோடு எரி ஆகும் - ஆகாசத்துடன் அக்நியாகவும் ஆகின்ற, மறையோர் வந்தார் - வேதத்தால் போற்றப்படுகின்றவர் வந்தார்: சூரியர் தம்முடன் - நித்யஸூரிகளுடன், துலங்கு தூயோர் வந்தார் - ப்ரகாசிக்கின்ற பரிசுத்தர் வந்தார்; சுரர்களுக்கு - தேவர்களுக்கு, அன்று - (கடல் கடைந்த) அக்காலத்தில், அமுது அருள் - அம்ருதத்தை வழங்கிய, சுந்தரனார் வந்தார் - அழகர் வந்தார்; வாரிதி சூழ் - கடலால் சூழப்பட்ட, வையகம் வாழ்வித்தார் வந்தார் - லோகத்தை வாழச்செய்தவர் வந்தார்; வண்மையுடன் - கொடைக்குணத்துடன், வரம் தருவார் வந்தார் - வேண்டிய வரத்தைக் கொடுத்தருள்வார் வந்தார். தாம் - அசை.

பேரருளாளர், சேதநம் அசேதநம் ஆகிய ப்ரபஞ்சத்தைத் தம் ஸங்கல்பத்தால் படைப்பவர்; தம் திருவுந்திக்கமலத்தில் ஆதிகாலத்தில் பிரமனைப் படைத்தவர்; பூமி-ஜலம்-தேஜஸ்-வாயு-ஆகாசம் என்ற பஞ்ச பூதங்களாகவும் தாமே மாறுபாட்டை அடைந்தும் அவற்றிலுள்ள தோஷம் சேராதவர்; நித்யஸூரிகளுடன் இருந்து அவர்கள் செய்யும் கைங்கர்யத்தை ஏற்கும் நித்ய பரிசுத்தராயிருப்பவர்; கடல் கடைந்து தேவர்களுக்கு அமுதத்தை அளித்த திவ்யஸௌந்தர வடிவை யுடையவர்; கடல் சூழ்ந்த இவ்வுலகத்தைத் தம் அருளால் காத்தவர்; அடியார்களுக்கு வேண்டிய வரத்தை அளிக்கும் வரதர். இத்தகைய பேரருளாளர் நம் ஊனக் கண்ணுக்கும் இலக்காகும்படி எழுந்தருளினார்--என்றவாறு.

இப்பாசுரமும் அடுத்த பாசுரமும் திருமந்த்ரத்தில் உள்ள ப்ரண வத்தின் அகாரார்த்தத்தைக் கூறுவன. அனைத்தையும் படைத்தல் முதலிய தன்மைகளால் காரணத்வமும், நித்யஸூரிகளால் அநுபவிக் கப்படுதல் முதலியவற்ருல் ரக்ஷகத்வமும் குறிக்கப்பட்டன. 1

ப்ரணவம் - அகாரத்தின் அர்த்தம் - ரக்ஷகத்வம்

270 அருமறையை யூழிதனிற் காத்தார் வந்தா
ரதுதன்னை யன்றயனுக் களித்தார் வந்தார்
தருமவழி யழியாமற் காப்பார் வந்தார்
தாமரையா ளுடனிலங்குந் தாதை வந்தார்
திருவுரையாய்த் தாம்பொருளாய் நிற்பார் வந்தார்
திருவருளாற் செழுங்கலைக டந்தார் வந்தார்
மருவலர்க்கு மயக்குரைக்கு மாயோர் வந்தார்
வானேற வழிதந்தார் வந்தார் தாமே. 2

உரை:— அரு மறையை - அருமையான வேதத்தை, ஊழிதனில் - ப்ரளயகாலத்தில், காத்தார் வந்தார் - காப்பாற்றியவர் வந்தார், அது தன்னை – அந்த வேதத்தை, அன்று – ஸ்ருஷ்டிகாலத்திலே, அயனுக்கு அளித்தார் வந்தார் – ப்ரஹ்மாவுக்கு உபதேசித்தவர் வந்தார்; தரும வழி அழியாமல்–(உலகில்) தர்மமார்க்கம் கெடாமல், காப்பார் வந்தார்– (பல அவதாரங்களைச் செய்து) காப்பவர் வந்தார்; தாமரையாளுடன் - பெரிய பிராட்டியுடன், இலங்கும் - ப்ரகாசிக்கின்ற, தாதை வந்தார் – (உலகுக்குத்) தந்தை வந்தார்; திரு உரையாய் - பிராட்டி சப்தஸ்வ ரூபையாய் (நிற்க), தாம் பொருளாய் நிற்பார் வந்தார் – தாம் (அந்தச் சப்தத்தின்) அர்த்தமாய் நிற்குமவர் வந்தார்; திரு அருளால் – சிறந்த க்ருபையினுல், செழும் கலைகள் – வ்ருத்தியடைகின்ற வித்யை களை (மஹர்ஷிகளின்வழியாக). தந்தார் வந்தார் – (உலகுக்கு) அருளி யவர் வந்தார்; மருவலர்க்கு – (தம்மை) ஆச்ரயிக்காதவர்களுக்கு, மயக்கு உரைக்கும் – (பல) மோஹநசாஸ்த்ரங்களை வெளியி(ட்டு அவர்களை நரகில் விழச்செய்தி) டுமவரான, மாயோர் வந்தார் – வஞ்சக முடையர் வந்தார்; வான் ஏற – பரமபதத்தை அடைய, வழி தந்தார் வந்தார் – உபாயங்களை உபதேசித்தவர் வந்தார்.

பேரருளாளர், அருமையான வேதங்களை ப்ரளயகாலத்தில் அழியாது காத்து ஸ்ருஷ்டிகாலத்தில் பிரமனைப் படைத்து அவ னுக்கு அவற்றை உபதேசித்தவர்; உலகில் தர்மமார்க்கம் அழியா மல் அவ்வப்போது பல்வேறு அவதாரங்களைச் செய்து காத்தவர்: பெரிய பிராட்டியாகிய பெருந்தேவித்தாயார் சப்தஸ்வரூபமாய் நிற்க, தாம் அர்த்தஸ்வரூபமாய் நின்று அவளைச் சற்றும் பிரியாது விளங்கு பவர்; வேதார்த்தத்தை நன்கு விளக்குவதற்காக மிக்க அருளோடு மஹர்ஷிகளின் வாயிலாகத் தர்மசாஸ்த்ரம் இதிஹாஸம் முதலிய

கலைகளை உலகுக்கு அருளியவர்; தம்மிடம் பக்தியில்லாத நாஸ்திகர்களைப் பல மோஹநசாஸ்த்ரங்களைக் கொண்டு மயக்கிக் கெடுத்து நரகில் வீழ்த்துமவர்; மோக்ஷோபாயமான பக்தி-ப்ரபத்திகளை உலகுக்குச் சாஸ்த்ரங்களின் வாயிலாக வெளியிட்டருளியவர். இத்தகைய பேரருளாளர் எழுந்தருளினர்.

இப் பாசுரத்தில் வேதத்தைக் காத்தல் முதலியவற்றால் அகாரத்தின் அர்த்தமாகிய ரக்ஷகத்வம் விளக்கப்பட்டது. 2

நான்காம் வேற்றுமையுருபு, உகாரம், மகாரம்—அர்த்தம்

271 அனைத்துலகுங் காக்குமரு ளாளர் வந்தா
ரனைத்துக்கு மதிபதியாய் நிற்பார் வந்தார்
தினைத்தனையுந் திருமகளை விடாதார் வந்தார்
தேசொத்தார் மிக்காரு மில்லார் வந்தார்
நினைக்கநமக் கின்னறிவு தந்தார் வந்தார்
நிலைநின்ற வுயிர்தோன்ற நினைந்தார் வந்தா
ரெனக்கிவர்நா னிவர்க்கென்ன வினியார் வந்தா
ரெழுத்தொன்றிற் றிகழநின்றார் வந்தார் தாமே. 3

உரை:— அனைத்து உலகும் காக்கும் – ஸகல லோகங்களையும் ரக்ஷிக்கின்ற, அருளாளர் வந்தார் – பேரருளாளர் வந்தார், அனைத்துக்கும் அதிபதியாய் நிற்பார் வந்தார் - ஸகலவஸ்துக்களுக்கும் ஸ்வாமியாய் நிற்பவர் வந்தார்; தினைத்தனையும் – சிறிது (நேரமு)ம், திருமகளை - பிராட்டியை, விடாதார் வந்தார் – விட்டுப்பிரியாதவர் வந்தார் ; தேசு – தேஜஸ்ஸில், ஒத்தார் மிக்காரும் இல்லார் வந்தார் – ஒத்தவரும் மிகுந்தவரும் (வேறொருவர்) இருக்கப்பெறாதவர் வந்தார்; நினைக்க – (தம்மை) நினைக்கும்படி, நமக்கு – (தாஸராகிய) நமக்கு, இன் அறிவு – இனிய ஜ்ஞாநத்தை, தந்தார் வந்தார் – அருளியவர் வந்தார்; நிலைநின்ற – (அழிவற்று) நித்யனான, உயிர் – ஜீவன், தோன்ற – (தன்னை அறிய வேறு ஜ்ஞாநம் வேண்டாதபடி தானே) ப்ரகாசிக்கும்படி, நினைந்தார் வந்தார் – ஸங்கல்பித்தவர் வந்தார்; எனக்கு இவர் – எனக்கு இவர் (ஸ்வாமி), நான் இவர்க்கு – நான் இவருக்கு (அடியன்), என்ன – என்று அநுஸந்திக்க, இனியார் வந்தார் – போக்யமாய்த்தோன்றுமவர் வந்தார்; ஒன்று எழுத்தில் – ஓர் அக்ஷரமான ப்ரணவத்தில், திகழ நின்றார் வந்தார் – (போற்றப்பட்டு) ப்ரகாசிப்பவர் வந்தார். தாம் – அசை.

பேரருளாளர், ஸகல லோகங்களையும் காத்து அவற்றுக்குத் தலைவராய் நிற்பவர்; க்ஷணமும் பெரிய பிராட்டியாகிய பெருந்தேவியைப் பிரியாது இருப்பவர்; ப்ரகாசத்தில் தம்மை ஒத்தவரும் மிக்கவரும் இல்லாதவர்; நாம் தம்மைத் தியானிக்கும்படி நல்லறிவு தந்த

வர்; அழிவற்ற ஜீவர்கள் ஸ்வயம்ப்ரகாசர்களாயிருக்கும்படி ஸங்கல்பித்தவர்; ஒவ்வொரு சேதநனும் "எனக்கு இவர் ஸ்வாமி; நான் இவருக்கு அடியன்" என்று அநுஸந்திக்கும்போது பரம போக்யராய்த் தோன்றுமவர்; ஓரெழுத்தான ப்ரணவத்தாலே போற்றப்படுமவர். இத்தகைய பேரருளாளர் எழுந்தருளினர்--என்றவாறு.

இங்கு 'அனைத்துக்கும் அதிபதியாய்' என்ற தொடர், எல்லாம் எம்பெருமானுக்குச் சேஷம் என்ற பொருளைக் காட்டி அகாரத்தின் மீது ஏறியழிந்த நான்காம்வேற்றுமையுருபின் பொருளைக் கூறும். 'திருமகளை விடாதார்' என்னுமது உகாரத்தின் அர்த்தத்தையும், 'தேசொத்தார் இல்லார்' என்னுமது அவனுக்கே சேஷமென்ற மற்றோர் உகாரார்த்தத்தையும் சொல்லும். 'நினைக்க......தந்தார்' 'நிலைநின்ற......நினைந்தார்' என்னும் தொடர்கள் அவனளித்த ஜ்ஞாநத்தையுடையனாய் ஸ்வயம்ப்ரகாசனாய் நித்யனான ஜீவனுடைய ஸ்வரூபத்தைக் கூறும். 'எனக்கிவர்......' எனுந் தொடரால் ப்ரணவத்தின் அர்த்தம் முழுதும் கூறப்பட்டதாம். 3

திருமந்திரம் - நமச்சப்தத்தின் அர்த்தம் – விளக்கம்

272 நாம்வணங்கத் தாமிணங்கா நிற்பார் வந்தார்
நம்மையடைக் கலங்கொள்ளு நாதர் வந்தார்
நாமெமக்காம் வழக்கெல்லா மறுத்தார் வந்தார்
நமக்கிதுவென் றுரையாமல் வைத்தார் வந்தார்
சேமமெண்ணி யெம்மையன்பர்க் கடைத்தார் வந்தார்
செழுந்தகவாற் றிண்சரணா மீசர் வந்தார்
தாமனைத்துந் தீவினையைத் தவிர்ப்பார் வந்தார்
தமக்கேயா யேமைக்கொள்வார் வந்தார் தாமே. 4

உரை:— நாம் வணங்க – நாம் ஸேவித்தால், தாம் இணங்கா நிற்பார் வந்தார் - தாம் (நமக்குப் பலன் கொடுக்க) உடன்பட்டு நிற்பவர் வந்தார்; நம்மை அடைக்கலம் கொள்ளும் - நம்மைக் காக்க வேண்டிய வஸ்துவாக ஏற்றுக்கொள்பவரான, நாதர் வந்தார் – ஸ்வாமி வந்தார்; நாம் எமக்கு ஆம் - நாம் எமக்கு என்னும் நினைவினால் ஆகின்ற, வழக்கு எல்லாம் – விவாதங்களையெல்லாம், அறுத்தார் வந்தார் – ஒழித்தவர் வந்தார்; இது நமக்கு - இந்த வஸ்து நமக்கு (உரியது), என்று உரையாமல் – என்று கூறாமல், வைத்தார் வந்தார் – (நல்ல அறிவைக் கொடுத்து) நிறுத்தியவர் வந்தார்; சேமம் எண்ணி – (எமக்கு) க்ஷேமத்தைச்செய்ய எண்ணி, எம்மை – எங்களை, அன்பர்க்கு - பாகவதருக்கு, அடைத்தார் வந்தார் – அடிமையாக்கியவர் வந்தார்; செழும் தகவால் – மிக்க க்ருபையால், திண் சரண் ஆம் – வலிய சரணமாக ஆகின்ற, ஈசர் வந்தார் - ஸர்வேசுவரர் வந்தார்; தீ வினையை அனைத்தும் – (நம்) கொடிய கர்மங்களை முழுதும், தாம் தவிர்ப்பார்

வந்தார் – தாமே ஒழிப்பவர் வந்தார்; எமைத் தமக்கேயாய் – எங்களைத் தம் ப்ரயோஜநத்திற்காகவே, கொள்வார் வந்தார் - ஏற்றுக் கொள்ளுமவர் வந்தார். தாம் – அசை.

பேரருளாளர், நாம் அவரைப் பக்தியுடன் வணங்கினால் நமக்கு வேண்டிய பலனைக்கொடுக்க இணங்கி நிற்பவர்; ப்ரபந்நரான நமக்கு ஒரு பொறுப்பும் வைக்காமல் நம்மை ரக்ஷிக்கவேண்டிய பொருளாக ஏற்றுக்கொண்டவர்; 'நாம்' என்ற அஹங்காரத்தையும் 'எமக்கு' என்ற மமகாரத்தையும் நமக்கு ஒழித்தருளியவர்; நமக்கு ஒரு வஸ்துவையும் பற்றிச் சேஷித்வம் (தலைமை) இல்லாமல் எல்லாப் பொருளையும் தமக்கே சேஷமாக்கிக்கொண்டவர்; நமக்கு க்ஷேமத்தைக் கருதி நம்மைப் பாகவதர்களுக்கு அடியராக்கியவர்; மேன்மேலும் நம்மீது வளர்கின்ற அருளால் நமக்கு உபாயமாய் நிற்பவர்; நம் கொடிய கர்மங்கள் அனைத்தையும் ஒழித்தருளுமவர்; நம்மைத் தமக்குச் சேஷமாக்கி அதனால் வரும் ப்ரயோஜநத்தைத் தாமே அடைபவர், இத்தகைய பேரருளாளர் எழுந்தருளினார்—என்றவாறு.

இப் பாசுரம் நமச்சப்தார்த்தத்தைக் கூறும். 'நாம் வணங்க' என்றதால் நமஸ்காரமென்ற பொருளும், 'அடைக்கலம்......' என்றதால் பரஸமர்ப்பணமென்ற பொருளும், 'நாம்......அறுத்தார்' என்றதால் அஹங்காரமமகாரங்கள் ஒழிதல் என்ற அர்த்தமும், 'நமக்கு......வைத்தார்' என்றதால் சேதநனுக்கு யாதையும் பற்றச் சேஷித்வமில்லையென்ற அர்த்தமும், 'அன்பர்க்கடைத்தார்' என்றதால் அர்த்தத்தால் பெறும் பாகவதசேஷத்வமும், 'திண்சரண்' என்றதால் உபாயமாந் தன்மையும், 'வினையனைத்தும்' என்றதால் அநிஷ்டம் கழிதல் என்ற பொருளும், 'தமக்கேயாய்......' என்றதால் சேதநர்க்குக் கைங்கர்யத்திலும் ஸ்வதந்த்ரனாய்ச் செய்யுந்தன்மையும் பலனைப் பெறுந்தன்மையும் இல என்ற பொருளும் கூறப்பட்டன. 4

நாராயணசப்தார்த்தம்—விளக்கம்

273 உலகெல்லா முள்ளேவைத் துமிழ்ந்தார் வந்தா
ருலகுடம்பாய்த் தாமுயிராய் நின்றார் வந்தா
ரலைகடலா யானந்த மடைந்தார் வந்தா
ரளவில்லா வருளாழிப் பெருமான் வந்தா
திலகமெனுந் திருமேனிச் செல்வர் வந்தார்
செழுங்குணங்க ளிருமூன்று முடையார் வந்தா
ரிலகுசுடர் முழுநலமா மினியார் வந்தா
ரெல்லார்க்குங் கதியானார் வந்தார் தாமே. 5

உரை:— உலகு எல்லாம் – உலகங்கள் முழுவதையும், உள்ளே வைத்து – (ப்ரளயகாலத்தில் தம்) வயிற்றினுள் வைத்து (ரக்ஷித்து), உமிழ்ந்தார் வந்தார் – (ஸ்ருஷ்டிகாலத்தில் மறுபடி) படைத்தவர்

வந்தார் ; உலகு உடம்பாய் - (சேதநாசேதநங்களாகிய) உலகம் (முழு தும் தமக்குச்) சரீரமாய் நிற்க. தாம் உயிராய்நின்றார் வந்தார் – தாம் அந்தர்யாமியாய்நின்றவர் வந்தார் ; அலைகடலாய் – (குமிழி, நுரை, அலை முதலிய பல நிலைமையில் மாறுகின்ற) அலைவீசும்கடல்போல் இருந்து (தம் ஸங்கல்பத்தால் பலவிதமான ப்ரபஞ்சமாக ஆகி அதனால்), ஆனந்தம் அடைந்தார் வந்தார் – ஸந்தோஷம் அடைந்தவர் வந்தார் ; அளவு இல்லா அருள் ஆழிப் பெருமாள் வந்தார் – அளவற்ற கருணைக் கடலான பெருமாள் வந்தார் ; திலகம் எனும் – திலகமென்று சொல்லப் படுகின்ற (சிறந்த), திருமேனிச் செல்வர் வந்தார் – திவ்யமங்களவிக்ரஹ மாகிய செல்வத்தையுடையவர் வந்தார் ; செழும் குணங்கள் – சிறந்த குணங்கள், இரு மூன்றும் உடையார் வந்தார் – ஆறும் உடையவர் வந்தார் ; இலகு – (மாறுபடாமல்) ப்ரகாசிக்கின்ற, சுடர் – ஜ்ஞாந ஸ்வரூபரும், முழு நலம் ஆம் – பரிபூர்ணாநந்தஸ்வரூபருமாக ஆகின்ற, இனியார் வந்தார் – (அனுபவிக்க) இனியராயிருப்பவர் வந்தார். எல்லார்க்கும் கதி ஆனார் வந்தார் – ஸகலஜீவருக்கும் பலனைப்பெறுவிக் கும் உபாயமாயும் அநுபவிக்கப்படும் பலனாயுமிருப்பவர் வந்தார். தாம் - அசை.

பேரருளாளர், ஸகலலோகங்களையும் ப்ரளயகாலத்தில் தம் வயிற்றினுள் வைத்து ஸ்ருஷ்டிகாலத்தில் அவற்றைப் படைத்தவர்; சேதநாசேதநங்களாகிய ஸகலவஸ்துக்களையும் தமக்குச் சரீரமாய்க் கொண்டு அவற்றுக்கு உள்ளே உறையும் அந்தர்யாமியாயிருப்பவர்; கடல் நீர், குமிழி–நுரை–அலைமுதலியனவாக ஆவதுபோல் தம் ஸங்கல் பத்தால் சேதநாசேதநங்களாகிய சரீரத்தின் வாயிலாகப் பல்வகை ப்ர பஞ்சமாக ஆகி மகிழ்பவர்; அளவற்ற கருணையங்கடலாயிருப்பவர்; நெற்றிக்குத் திலகம் போல் ஸகலலோகங்களுக்கும் ஓரழகைத் தரும் திவ்யமங்களவிக்ரஹமாகிய செல்வத்தையுடையவர்; மிகச்சிறந்த ஆறு குணங்களையுமுடையவர்; எப்பொழுதும் பரிபூர்ணஜ்ஞாந—ஆநந்த ஸ்வரூபராகவேவிளங்குபவர்; அனைவருக்கும் உபாயமாகவும் பலனாகவும் இருப்பவர். இத்தகைய பேரருளாளர் எழுந்தருளினார்—என்றவாறு.

இப்பாசுரம் — நாராயணசப்தத்தின் அர்த்தத்தைக் கூறும். 'உலகு......உமிழ்ந்தார்' என்றதால் அனைத்துக்கும் ஆதாரமாந்தன்மை யும் காரணமாந்தன்மையும், 'உலகுடம்பாய்......' என்றதால் ப்ரபஞ்சத்திற்கும் ஈசுவரனுக்கும் உள்ள சரீர – ஆத்மபாவமும், அலை கடலாய்......' என்றதால் இரண்டு விபூதிகளையுடைய தன்மையும், 'திலகமெனும்.... ' 'செழுங்குணங்கள்......' என்றதால் முறையே திவ்யமங்களவிக்ரஹம் திருக்கல்யாணகுணங்கள் ஆகிய பொருள்களும், 'இலகு சுடர் முழுநலம்' என்றதால் ஜ்ஞாந – ஆநந்தஸ்வரூபமாய் ப்ரகாசிக்கின்ற திவ்யாத்மஸ்வரூபமும், 'கதியானார்' என்றதால் தானே உபாயமாகவும் பலனாகவும் நிற்றல் என்ற அர்த்தமும் கூறப்பட்டன.

ஆறு குணங்கள்:— 1 ஜ்ஞாநம் 2 சக்தி 3 பலம் 4 ஐசுவர்யம் 5 வீர்யம் 6 தேஜஸ் : என்பன. அல்லது — 1 காக்குந்தன்மை 2 அருள் 3 ஜ்ஞாநம் 4 எளிமை 5 இந்த்ரியங்களின் அடக்கம் 6 மனத்தின் அடக்கம் : என்பன. 5

நாராயணசப்தத்தின்மீதுள்ள நான்காம்வேற்றுமையின் பொருள்

274 அருளாலே விலங்கிரண்டு மழிப்பார் வந்தா
ரஞ்சிறையைக் கழித்தருளு மன்பர் வந்தார்
மருள்வாரா வகைநம்மைக் காப்பார் வந்தார்
வானேற வழிநடத்தி வைப்பார் வந்தார்
தெருளாருந் தெளிவிசும்பு தருவார் வந்தார்
திண்கழற்கீழ் வாழநமக் கருள்வார் வந்தார்
பெருவானி லடிமைநமைக் கொள்வார் வந்தார்
பிரியாமற் காத்தளிப்பார் வந்தார் தாமே. 6

உரை:— அருளாலே – க்ருபையினால், விலங்கு இரண்டும் – விலங்கு (போன்ற புண்யபாபங்களாகிய கர்மங்கள்) இரண்டையும், அழிப்பார் வந்தார் – ஒழிப்பவர் வந்தார் ; அம் – (ஸம்ஸாரிகளுக்குக் கர்மவசத்தால்) அழகிய (தாய்த் தோன்றுகின்ற), சிறையை – (ஸம்ஸாரமாகிய) சிறையை, கழித்தருளும் – போக்கியருள்கின்ற, அன்பர் வந்தார் – (பாகவதர்களிடம்) அன்புள்ளவர் வந்தார் ; மருள் வாரா வகை – (அந்திமகாலத்தில் தீயநினைவுகளைத் தருகின்ற) அஜ்ஞாநம் வராதபடி, நம்மைக் காப்பார் வந்தார் – நம்மைக் காத்தருள்பவர் வந்தார் ; வான் ஏற – பரமபதத்திற்குச் செல்லும்படி, வழி நடத்தி வைப்பார் வந்தார் – அர்ச்சிராதிமார்க்கத்தில் நடத்திவைப்பவர் வந்தார்; தெருள் ஆரும் – (அளைவரும்) ஜ்ஞாநம் நிறைந்து ப்ரகாசிக்கும் இடமாகிய, தெளி விசும்பு – சுத்தஸத்துவமயமான பரமபதத்தை, தருவார் வந்தார் – கொடுத்தருள்பவர் வந்தார் ; திண் கழல்கீழ் – (தம்முடைய) வலிய திருவடிகளின்கீழ், வாழ – (கைங்கர்யம் செய்து) வாழும்படி, நமக்கு அருள்வார் வந்தார் – நமக்கு அருள்புரிவார் வந்தார், பெரு வானில் அடிமை – ஸ்ரீ வைகுண்டத்தில் கைங்கர்யத்தை, நமைக் கொள்வார் வந்தார் – நம்மைக் (கொண்டு செய்வித்து ஏற்றுக்) கொள்பவர் வந்தார் ; பிரியாமல் – (தம்மை விட்டு நாம் ஒருபோதும்) பிரியாமல், – காத்து அளிப்பார் வந்தார் – காத்து அருள்பவர் வந்தார். தாம் – அசை.

பேரருளாளர், அடியார்களின் விலங்குபோன்ற புண்யம் - பாபம் என்ற இரண்டு கர்மங்களையும் ஒழிப்பவர்; சேதநர்கள் போக்யமாய் நினைக்கின்ற ஸம்ஸாரமாகிய சிறையினின்று விடுவிப்பவர்; மரண காலத்தில் கெட்ட சிந்தைகள் வராதவாறு செய்து காத்தருள்பவர்; ஸ்ரீவைகுண்டத்திற்குச் செல்வதற்கு ஏற்ற அர்ச்சிராதிகதியால் நடத்தி

வைப்பவர்; எப்பொழுதும் ஜ்ஞாநத்திற்கு ஸங்கோசம் இல்லாது ப்ரகாசிக்கும் இடமாகிய சுத்தஸத்துவமயமான பரமபதத்தைத் தந்தருள்பவர்; தம்முடைய திருவடிகளுக்குக் கைங்கர்யம் செய்து வாழுமாறு அருள்பவர்; ஸ்ரீவைகுண்டத்தில் நாம் செய்யும் கைங்கர்யத்தை ஏற்றுக்கொள்ளுமவர்; தம்மை விட்டு எந்நாளும் நாம் பிரியாது காத்தருளுமவர், இத்தகைய பேரருளாளர் வந்தார்—என்றவாறு.

இப்பாசுரத்தில்—நாராயணசப்தத்தின் மீதுள்ள நான்காம் வேற்றுமையுருபின் பொருளான கைங்கர்யம் கூறப்படுகின்றது. உபாயத்தை அநுஷ்டித்த சேதநனுக்குக் கர்மங்களை ஒழித்தல் முதல், பிரியாமற் காத்தல் வரை உள்ளனவெல்லாம் பலனுடைய வகுப்பிலே சேருவனவாகும். *6*

த்வயத்தின் அர்த்தம் — விளக்கம்

275 அகலகிலாத் திருமகளா ரன்பர் வந்தா
ரடியிரண்டு மாருகத் தந்தார் வந்தார்
புகலில்லார் புகலாகும் புனிதர் வந்தார்
பொன்னுலகிற் றிருவுடனே திகழ்வார் வந்தா
ரகிலமெலா மானந்த மாஞர் வந்தா
ரடியிணைக்கீழ் வைத்தடிமை கோள்வார் வந்தார்
பகனடுவே யிரவழைக்க வல்லார் வந்தார்
பகலோன்ரு யிரவழித்தார் வந்தார் தாமே. 7

உரை:— அகலகிலாத் திருமகளார் – (க்ஷணமும்) பிரியாத பிராட்டியாரிடம், அன்பர் வந்தார் – அன்புடையார் வந்தார்; அடி இரண்டும் – திருவடி இரண்டையும், ஆருகத் தந்தார் வந்தார் – உபாயமாகக் கொடுத்தவர் வந்தார், புகல் இல்லார் – (வேறு) உபாயம் (அநுஷ்டிக்கச் சக்தி) இல்லாதவருக்கு, புகல் ஆகும் – அவ்வுபாயத்தின் ஸ்தாநத்தில் நிற்கின்ற, புனிதர் வந்தார் – பரிசுத்தர் வந்தார்; பொன் உலகில் – பரமபதத்தில், திருவுடனே திகழ்வார் வந்தார் – பிராட்டியுடன் ப்ரகாசிப்பவர் வந்தார், அகிலம் எலாம் – (லீலாவிபூதி – நித்ய விபூதி ஆகிய) உலகங்கள், (அவன் திருமேனி, குணங்கள் ஆகிய) அனைத்தும், ஆனந்தம் ஆஞர் வந்தார் – (நித்யருக்கும் முக்தருக்கும்) ஆநந்தமாய்த் தோன்றுமாறு நிற்கப்பெற்றவர் வந்தார்; அடியிணைக்கீழ் வைத்து – (நம்மைத்) திருவடி இரண்டின் கீழே சேர்த்து, அடிமை கொள்வார் வந்தார் – (நாம் செய்யும்) கைங்கர்யத்தை ஏற்றுக்கொள்ளுமவர் வந்தார், பகல் நடுவே – பகலின் நடுவிலேயே, இரவு அழைக்க வல்லார் வந்தார் – (பாரதயுத்தத்தில்) இரவைக் கொணரும் வல்லமையுடையவர் வந்தார், பகல் ஒன்ருய் – (முக்தியில்) ஒரே பகலாய், இரவு அழித்தார் வந்தார் – (ஸம்ஸாரமாகிய) இரவைப் போக்கியவர் வந்தார். (தாம் – அசை)

பேரருளாளர், தம்மைவிட்டு க்ஷணமும் பிரியாத பெரிய பிராட்டியின் அன்பிற்கு உரியர்; தம் இரண்டு திருவடிகளையும் அடியார்களுக்கு உபாயமாகக் காட்டித்தந்தவர்; பக்தியோகம் முதலிய வேறு உபாயங்களை அநுஷ்டிக்கச் சக்தியில்லாதார்விஷயத்தில் அந்த அந்த உபாயங்களின் ஸ்தாநத்தில் நிற்பவர்; பரமபதத்தில் பெரியபிராட்டியுடனே எப்பொழுதும் ப்ரகாசிப்பவர்; தம்முடைய செல்வமாகிய லீலாவிபூதி – நித்யவிபூதி – திருமேனி – குணங்கள் ஆகிய அனைத்தும் நித்ய-முக்தர்களுக்கு ஆநந்தமாய்த் தோன்றுமாறு நிற்கப்பெற்றவர்; அடியார்களைத் தம் திருவடிகளின்கீழ் கைங்கர்யங்களைச் செய்வித்து அவற்றை ஏற்றுக்கொள்ளுமவர்; பாரதயுத்தத்தில் பகலின் நடுவிலே இரவை அழைத்த வல்லமையுடையவர்; முக்தியில் ஒரே பகலாக்கி, ஸம்ஸாரராத்ரியை ஒழித்தவர், இத்தகைய பேரருளாளர் வந்தார்— என்றவாறு.

இப்பாசுரம் — த்வயத்தின் பொருளைக் கூறும், 'அகலகிலா' என்னுமது ஸ்ரீசப்தத்தின்மேலுள்ள மதுப்விகுதிக்கும், 'அடியிரண்டு மாருக' எனுந்தொடர் 'சரணௌ சரணம்' என்னும் பாகத்திற்கும் விரிவாகும். 'புகலில்லார்' என்பது 'ப்ரபத்யே' என்ற வினைமுற்றிலுள்ள தன்மைவிகுதியின் பொருளையும், 'புகலாகும்' என்பது மற்ற உபாயங்களின் ஸ்தாநத்தில் எம்பெருமான் நிற்பதையும், 'புனிதர்' எனுஞ்சொல் மஹாவிசுவாஸத்தையும் காட்டும். 'பொன்னுலகில்...' 'அகிலம்...' எனுந்தொடர்கள் 'ஸ்ரீமதே நாராயணாய' என்ற தொடரின் விளக்கமாம். 'அடியிணைக்......' எனுந்தொடர் நான்காம் வேற்றுமையுருபின் பொருளைக்கூறும். 'பகல் நடுவே......' என்னுமது ஸம்ஸாரிகளுக்குக் கர்மத்தால் வரும் ஜ்ஞாநஸங்கோசத்தைக் காட்டுவதின் வாயிலாக நமச்சப்தத்தின் மகாரார்த்தமாகும். 'இரவழித்தார்' என்னுமது விரோதியொழிகையாகிய நமச்சப்தத்தின் அர்த்தத்தைக் கூறும்.

பகல்நடுவே இரவழைத்தது — 127-வது பாசுரக் குறிப்பிலே காண்க.

பாசுரம் 8, 9—சரமசுலோகத்தின் அர்த்தம்—விளக்கம்

276 தருமன்விடத் தாங்தூது போனார் வந்தார்
தரணிபொறுத் திண்பாரந் தவிர்த்தார் வந்தா
ரருமறையின் பொருளனைத்தும் விரித்தார் வந்தா
ரஞ்சினநீ யென்னையடை யென்றார் வந்தார்
தருமமெலாந் தாமாகி நிற்பார் வந்தார்
தாமேநம் வினையனைத்துந் தவிர்ப்பார் வந்தார்
பரமெனது நீபுலம்ப லென்றார் வந்தார்
பார்த்தனுக்குத் தேரூர்ந்தார் வந்தார் தாமே. 8

உரை :—தருமன் விட – தர்மபுத்திரன் அனுப்ப, தாம் தூது போனார் வந்தார் – (துர்யோதநனிடம்) தாமே தூது சென்றவர் வந்தார், தரணி பொறு – பூமியால் பொறுக்கமுடியாத, திண் பாரம் – (ஆச்ரித விரோதிகளாகிய) வலிய சுமையை, தவிர்த்தார் வந்தார் – ஒழித்தவர் வந்தார், அரு மறையின் பொருள் அனைத்தும் – அருமை யான வேதத்தின் அர்த்தம் முழுவதையும், விரித்தார் வந்தார் – (ஸ்ரீகீதையின்வாயிலாக) விளக்கியவர் வந்தார், அஞ்சின நீ – (வேறு உபாயம் அநுஷ்டிக்கமுடியாது) அஞ்சின நீ, என்னை அடை என்றார் வந்தார் – என்னைச் சரணமடைவாயாக என்று கூறியவர் வந்தார், தருமம் எலாம் – ஸகல உபாயங்களும், தாமாகி நிற்பார் வந்தார் – தாமே யாகி நிற்பவர் வந்தார், நம் வினை அனைத்தும் – நம் கர்மங்கள் முழுவதையும், தாமே தவிர்ப்பார் வந்தார் – தாமே தொலைப்பவர் வந்தார், பரம் எனது – (உனக்குப் பலனைக் கொடுத்துக் காக்க வேண்டிய) பொறுப்பு என்னுடையது, நீ புலம்பல் – நீ வருந்தாதே, என்றார் வந்தார் – என்று உறுதிகூறியவர் வந்தார், பார்த்தனுக்கு – அர்ஜுநனுக்கு, தேரூர்ந்தார் வந்தார் – தேரை ஓட்டியவர் வந்தார். தாம் – அசை.

பேரருளாளர், தர்மபுத்திரன் விடுத்த தூதராய்த் துரியோதன னிடம் சென்ற எளிமையுடையர்; தம் அடியார்களுக்கு எதிரிகளை வேரறுத்துப் பூமிக்கு இருந்த பெருஞ்சுமையைப் போக்கியவர்; ஸ்ரீபகவத்கீதையின் வாயிலாக அருமையான வேதாந்தார்த்தங்களைப் பொழிந்தருளியவர்; வேறு உபாயம் அநுஷ்டிக்கச் சக்தியற்று நரகத் திற்கு அஞ்சியவர்களைத் தம்மைச் சரணம் அடையுமாறு உபதே சித்தவர்: அவ்வாறு அடைந்தவர்களுக்குத்தாமே ஸகல உபாயங்களின் ஸ்தாநத்திலும் நிற்பவர்; நம் கர்மங்கள் அனைத்தையும் ஒழிப்பவர்; அடியார்களைக் காக்கும் பொறுப்பைத் தம்முடையதாகக்கொண்டு அவர்களை வருந்தாமலிருக்குமாறு 'மாசுச:' என்று அபயப்ரதாநம் செய்தருளியவர்; அர்ஜுநன்தேரில் பாகனாய் நின்று செலுத்தியவர்; இத்தகைய பேரருளாளர் வந்தார்—என்றவாறு.

இப்பாசுரம்-சரமசுலோகத்தின் அர்த்தமாகும். இதில் 'தருமன்...' என்றதால் அடியாரிடம் கருணையும், 'தரணி......' என்றதால் ஸ்ரீபகவத்கீதை அவதரித்த காரணமும், 'அருமறையின்...' என்றதால் கீதையில் வேதாந்தார்த்தங்களனைத்தும் அடங்கியுள்ளமையும் கூறப் பட்டன. 'என்னை அடை' என்னுமது 'மாமேகம் சரணம் வ்ரஜ' என்ற பாகத்தின் விளக்கமாம். 'தருமமெலாம்.........' என்னுமது ஏகசப்தத்திற்கும், 'தாமே நம்......' என்னுமது 'ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' என்ற தொடருக்கும், 'நீ புலம்பல்' என்பது 'மாசுச:' என்ற பாகத்திற்கும் விரிவாம். 8

கண்ணபிரான் திருவிளையாடல்கள்

277 வஞ்சனைசெய் பூதனையை மாய்த்தார் வந்தார்
மல்லர்மத கரிமாள மலேந்தார் வந்தார்
கஞ்சனைப்போர் கடுஞ்சினத்தாற் கடிந்தார் வந்தார்
கண்ணுதன்முன் வாணன்ரேள் கழித்தார் வந்தார்
வெஞ்சொறர வீடுகொடுத் துகந்தார் வந்தார்
விலக்கில்லா வழிநடத்த விரைந்தார் வந்தார்
பஞ்சவரைப் பலவகையுங் காத்தார் வந்தார்
பாஞ்சாலி குழன்முடித்தார் வந்தார் தாமே. 9

உரை:— வஞ்சனை செய் பூதனையை – (தம்மைக் கொல்ல) வஞ்சனை செய்துவந்த பூதனையை, மாய்த்தார் வந்தார் – கொன்றவர் வந்தார்; மல்லர் – (முஷ்டிகன் முதலிய) மல்லரும், மதகரி – (குவலயா பீடமென்னும்) மதயானையும், மாள – மாண்டுபோகும்படி, மலேந்தார் வந்தார்–போர்செய்தவர் வந்தார்; கஞ்சனை–கம்ஸனை, கடும் சினத்தால்–கொடிய கோபத்தால், போர் – சண்டையில், கடிந்தார் வந்தார் – கொன்றவர் வந்தார்; கண்நுதல் முன் – நெற்றிக்கண் படைத்த சிவனுக்குமுன்னே, வாணன் தோள் – பாணாஸுரனுடைய (ஆயிரம்) தோள்களை, கழித்தார் வந்தார் – அறுத்தவர் வந்தார்; வெம் சொல் தர– (சிசுபாலன்) கொடிய (நிந்தைச்) சொற்களைக் கூற, வீடு கொடுத்து – (அவனுக்கு) மோக்ஷத்தைக் கொடுத்து, உகந்தார் வந்தார்–(அதனால்) மகிழ்ந்தவர் வந்தார்; விலக்கு இல்லா வழி – தடையில்லாத (அர்ச்சிராதி) மார்க்கத்தாலே, நடத்த விரைந்தார் வந்தார்–(சேதநனை) நடத்த விரைபவர் வந்தார்; பஞ்சவரை – பஞ்சபாண்டவர்களை, பலவகையும்– பல வழிகளிலும், காத்தார் வந்தார் – ரக்ஷித்தவர் வந்தார்; பாஞ்சாலி குழல் முடித்தார் வந்தார் – த்ரௌபதியின் (சபதத்தின்படி துர்யோதநனைக் கொல்வித்து அவளுடைய) கூந்தலை முடிக்கச்செய்தவர் வந்தார். தாம்–அசை.

பேரருளாளர், வஞ்சனையால் தம்மைக் கொல்லவந்த பூதனையின் உயிரை உறிஞ்சியவர்; முஷ்டிகன் முதலிய மல்லரையும் குவலயாபீடமென்னும் யானையையும் போர் செய்து மடித்தவர்; தம் மாமனை கம்ஸனைப் போர்புரிந்து கொன்றவர்; மஹேசுவரன் கண்முன்னே பாணாஸுரனுடைய ஆயிரம் தோள்களைக் கழித்தவர்; தம்மைக் கொடிய சொற்களால் நிந்தித்த சிசுபாலனுக்கும் மோக்ஷம் கொடுத்து மகிழ்ந்தவர்; அர்ச்சிராதிமார்க்கத்தாலே ப்ரபந்நரை வழிநடத்த விரையுமவர்; பஞ்சபாண்டவர்களை எல்லாவழிகளிலும் காத்தருளியவர்; துரியோதனனைக் கொல்வித்து த்ரௌபதியின் கூந்தலை முடிக்குமாறு செய்தருளியவர்; இத்தகைய பேரருளாளர் வந்தார்.

இப்பாசுரத்தில் 'மாம்' 'அஹம்'என்ற சொற்களால்தோற்றுகிற குணங்கள் அவன் செய்த லீலைகளைக்கொண்டு விளக்கப்படுகின்றன. நான்கு அடிகளின் எட்டுப்பகுதிகளிலும் முறையே 1 அனைத்தையும் அறியுந்தன்மை 2 அனைத்தையும் செய்யச் சக்தி 3 பக்தர்களின் விரோதியை ஒழிப்பதில் ஆர்வம் 4 தடையற்ற செய்கை 5 ஸர்வாபராதங்களையும் க்ஷமித்தல் 6 மோக்ஷம் அளிப்பதில் உள்ள விரைவு 7 அடியார்களைக் காத்தல் 8 சரணாகதிக்குப் பலன் தருகை ஆகிய குணங்கள் வெளியாகின்றன. 9

மூன்று ரஹஸ்யத்தின் அர்த்தங்களைக் கூறுதல்

278 அத்திகிரி யருளாளப் பெருமாள் வந்தா
ரானைபரி தேரின்மே லழகர் வந்தார்
கச்சிதனிற் கண்கொடுக்கும் பெருமாள் வந்தார்
கருதவரந் தருதெய்வப் பெருமாள் வந்தார்
முத்திமழை பொழியுமுகில் வண்ணர் வந்தார்
மூலமென வோலமிட வல்லார் வந்தா
ருத்தரவே திக்குள்ளே யுதித்தார் வந்தா
ரும்பர்தொழுங் கழலுடையார் வந்தார் தாமே. 10

இதன் உரையை 224-வது பாசுரத்திலே காண்க. 10

அற்பபலனை விரும்பாதார்க்கே இப்பிரபந்தம் ரஸித்தல்

279 மறைத்தலையி லிசையெழுத்தில் வணங்கும் வாக்கின்
மந்திரத்தி னுலெழுத்தாந் திருநா மத்தி
னிறைத்திலகு வேற்றுமையி லிரண்டா மொன்றி
னெடுமாறன் கீதையெலா நிறைந்த சொல்லி
லுறைத்தவர்கண் டுரைத்தபொரு ளான வெல்லா
முயர்விரத வருளாளப் பெருமா டேசின்
றிறத்திலியை திருச்சின்ன மாலை பத்துஞ்
செவிக்கினிதாஞ் சிற்றின்ப மிசையா தார்க்கே. 11

உரை:— மறைத்தலையில் இசை–வேதங்களின் ஆரம்பத்திலும் முடிவிலும் அமைந்த, எழுத்தில் – எழுத்தாகிய ப்ரணவத்திலும், வணங்கும் வாக்கில் – வணக்கத்தைக் கூறும் சொல்லாகிய நமச்சப்தத்திலும், மந்திரத்தில் நாலு எழுத்து ஆம் திருநாமத்தில் – திருமந்த்ரத்தி லுள்ள நான்கு அக்ஷரங்கள் அமைந்த நாராயணசப்தத்திலும், நிறைத்து இலகு – (அந்த நாராயணசப்தத்தைப்) பூர்த்திசெய்து ப்ரகாசிக்கின்ற, வேற்றுமையில்–நான்காம் வேற்றுமையிலும், இரண்டு ஆம் ஒன்றில் – இரண்டு பாகமாயிருந்து ஒரு மந்த்ரமாயுள்ள த்வயத்திலும், நெடுமால்தன் - எம்பெருமானுடைய (ஸூக்தியாகிய), கீதை–

ஸ்ரீபகவத்கீதையிலுள்ள, எல்லாம் நிறைந்த – ஸர்வார்த்தங்களும் தன்னுள் அடங்கப்பெற்ற, சொல்லில் – சரமசுலோகத்திலும், உறைத்தவர் – நன்கு பரிசயம் செய்த ஆசார்யர்கள், கண்டு – (தாங்கள்) அறிந்து, உரைத்த – (நமக்கும்) உபதேசித்த, பொருளான எல்லாம் – அர்த்தங்கள் எல்லாவற்றையும், உயர் விரதம் – (சரணாகதரக்ஷணமென்னும்) உயர்ந்த வ்ரதத்தைக்கொண்டுள்ள, அருளாளப் பெருமாள்– பேரருளாளப்பெருமாளுடைய, தேசின் திறத்தில் இயை – பெருமையின் விஷயத்திலே இயை (த்துரைக்)கின்ற, திருச்சின்னமாலை – திருச்சின்னமாலையாகிய, பத்தும் – பத்துப்பாசுரங்களும், சிறு இன்பம் – அற்பமான (ஸம்ஸார) ஸுகத்தை, இசையாதார்க்கு – (விரும்பி) அங்கீகரிக்காதவர்களுக்கு, செவிக்கு இனிது ஆம் – காதுக்கு மதுரமாயிருக்கும்.

வேதத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் ஓதப்படும் ப்ரணவம் – நம: சப்தம் – நாராயணசப்தம் – அதன் மேலுள்ள நான்காம் வேற்றுமையுருபு இவையடங்கிய திருமந்த்ரத்திலும், இருபகுதியையுடைய ஒரு மந்த்ரமாகிய த்வயத்திலும், கண்ணபிரானது பவளவாயினின்று தோன்றி ஸ்ரீபகவத்கீதையின் ஸாரார்த்தங்கள் அடங்கப்பெற்ற சரமசுலோகத்திலும் மிக்க பரிசயமுள்ள நம் ஆசார்யர்கள் நமக்கு உபதேசித்த அர்த்தங்களை அடக்கிப் பேரருளாளன் விஷயமாய் நாம் பாடிய இப்பிரபந்தத்தின் பாசுரங்கள் பத்தும் ஸம்ஸாரஸுகத்தில் பற்றற்றவர்களின் செவிக்கு இனிமை பயப்பனவாகும்—என்றவாறு,

இன்னும் ரஹஸ்யார்த்தங்களின் விரிவையெல்லாம் மேல்வரும் பிரபந்தங்களின் உரையில் காண்க. 11

திருச்சின்னமாலை – உரை முற்றிற்று

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

ஸ்ரீ:

பன்னிருநாமம்—உரை

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான்திருவடிகளே சரணம்

சிறப்புத்தனியன்—உரை

பன்னிரு நாமந் திருவத்தி யூர்ப்பரன் பாதமேன்று
நன்னிற நாமம் படைதிக்கி யாவையு நாமறியத்
தேன்னந் தமிழ்த்தோடைச் சீரார் கலித்துறை யோதியீந்தான்
மின்னுறு நூலமர் வேங்கட நாதனங் தேசிகனே.

மின் உறு – ப்ரகாசம் பொருந்திய, நூல் அமர் – யஜ்ஞோபவீதம் அமைந்த, வேங்கடநாதன் – தூப்புல் திருவேங்கடமுடையானாகிய, நம் தேசிகன் – நம் ஆசார்யன், பன்னிரு நாமம் – பன்னிரண்டு ஊர்த்வ புண்ட்ரங்களும், திருவத்தியூர்ப்பரன் – பெருமை பொருந்திய ஹஸ்திகிரிக்கு நாதனான பேரருளாளனுடைய, பாதம் என்று – திருவடி (வடிவங்கொண்டன) என்று (நினைத்து), நல் நிறம் – (அந்த அந்தப் புண்ட்ரங்களின் தேவதையாகிய எம்பெருமானுடைய) சிறந்த நிறம், நாமம் – திருநாமம், படை - ஆயுதம், திக்கு – (வஸிக்கும்) திசை (ஆகிய), யாவையும் – அனைத்தையும், நாம் அறிய – நாம் அறியும்படி, – தென்னந்தமிழ் – தெற்கே வழங்கும் அழகிய தமிழினாலாகிய, தொடை – பாட்டுக்களுள், சீர் ஆர் – சிறப்புப் பொருந்திய, கலித்துறை – கட்டளைக்கலித்துறையென்னும் பாவினத்தால், ஓதி ஈந்தான் – அருளிச்செய்து (நாம் அநுஸந்திக்கத்) தந்தருளினான்.

கார்கோண்ட மேனியன் பாதாம் புயத்தைக் கருத்திருத்தி
யேர்கோண்ட கீர்த்தி யிராமா னுசன்ற னிணையடிசேர்
சீர்கோண்ட தூப்புற் றிருவேங்க டாரியன் சீர்மோழியை
யார்கோண்டு போற்றினு மம்மால் பதத்தை யடைவிக்குமே.

கார் கொண்ட மேனியன் – மேகத்தை ஒத்த திருமேனியையுடைய பேரருளாளனுடைய, பாதாம்புயத்தை - திருவடித்தாமரையை, கருத்து இருத்தி – மனத்தில் உறுதியாகத் தியானித்து, ஏர்கொண்ட - அழகிய. கீர்த்தி – புகழையுடைய, இராமானுசன்றன் - ஸ்ரீபாஷ்யகாரருடைய, இணையடி சேர் - இரண்டு திருவடிகளையும் சேர்ந்த, சீர் கொண்ட – பெருமைபெற்ற, தூப்புல் திருவேங்கடாரியன் – தூப்புல் திருவேங்கடமுடையானுடைய, சீர் மொழியை – சிறந்த ஸ்ரீஸூக்தியை, கொண்டு – மனத்திற்கொண்டு, ஆர் போற்றினும் – யார் துதித்தாலும், அம் மால் பதத்தை - அவ்வெம்பெருமானுடைய திருவடிகளை, அடைவிக்கும் – (அந்த ஸ்ரீஸூக்தி) பெறுவிக்கும்.

[விஷயச்சுருக்கம்]

இப் பிரபந்தமும் பேரருளாளன் விஷயமே.

ஸ்ரீவைஷ்ணவர்கள் தம் சரீரத்தில் தினந்தோறும் பன்னிரண்டு திருமண்காப்புக்களைத் தரித்துக்கொள்ளல் மிகவும் அவசியமாகும். கேசவன்முதல் தாமோதரன்வரையில் உள்ள 12 திருநாமங்களைச் சொல்லி அந்த அந்தத் திருமண்காப்புக்களில் அவ்வவ்வெம்பெருமான்களை ஆவாஹனம் செய்து ஸேவிக்கவேண்டும். இப்பிரபந்தத்தில் அவ்வெம்பெருமான்களின் திருமேனிநிறம், அவர்கள் அணிந்திருக்கும் ஆயுதங்கள், அவர்கள் தலைவராய் வீற்றிருக்கும் திசை, நம் சரீரத்தில் புண்ட்ரரூபமாய் அவர்கள் வசிக்கும் பாகம் ஆகியவற்றை ஸ்ரீதேசிகன் வெளியிட்டிருக்கிறார். புண்ட்ரம் தரிக்கும்போது இப் பிரபந்தம் அவசியம் அநுஸந்திக்கவேண்டியதாகும்.

[இப் பிரபந்தம், கேசவன் முதலிய 12 மூர்த்திகளின் திருமேனி நிறம் முதலியவற்றை விளக்கவே முக்கியமாய்த் தோன்றியதாதலின் இதற்குக் கருத்துரை வரையப்படவில்லை.]

இப்பிரபந்தம் முழுவதும் கட்டளைக்கலித்துறையால் அமைந்ததாம்.

280 கேசவ னென்னைக் கீழைத் திசையிலு நெற்றியிலுந்
தேசுடை யாழிக ணான்குடன் செம்பசும் பொன்மலைபோல்
வாசி மிகுத்தேனை மங்காமற் காக்கு மறையதனு
லாசை மிகுத்த வயன்மக வேதியி லற்புதனே. 1

உரை :— மறையதனல் – வேத (ார்த்த நிச்சய) த்தால், ஆசை மிகுத்த அயன் – (பேரருளாளனே பரன் என்று தேறி அவனிடம்) அன்பு மிகுதியாகப் பெற்ற ப்ரஹ்மாவினுடைய, மகவேதியில் – யாக வேதியில் (அவதரித்த), அற்புதன் – அதிசயச் செய்கையையுடைய பேரருளாளன், கேசவனுய் – கேசவனென்னும் திருநாமத்தையுடையனுய், கீழைத் திசையிலும் நெற்றியிலும்- கிழக்குத்திசையிலும் (பாகவதர்களின்) நெற்றியிலும், தேசு உடை ஆழிகள் நான்குடன் – ப்ரகாசமுள்ள சக்கராயுதம் நான்குடன், செம் பசும் பொன் மலைபோல் – சிவந்த மாற்றுயர்ந்த பொன்னினுலமைந்த மலைபோல், நின்று – நிலைபெற்று நின்று, வாசி மிகுத்து – சிறப்பு மிகுந்து, எனை மங்காமல் காக்கும் – என்னைக் கெட்டுப்போகாமல் காப்பான்.

தேவதை:— கேசவன்; நிறம்:— பொன்; ஆயுதம்:— நான்கு சக்கரம்; திசை:— கிழக்கு; புண்ட்ரஸ்தாநம்:— நெற்றி.

चतुश्चक्रं नमस्यामि केशवं कनकप्रभम् । 1

281 நாரண ஞய்நல் வலம்புரி நாலு முகந்தேடுத்து
மூரணி மேக மேனவே யுதரமு மேற்குநின்று
மாரண நூறந் தருளா லடைக்கலங் கோண்டருளும்
வாரண வேற்பின் மழைமுகில் போனின்ற மாயவனே. 2

உரை:— வாரணவெற்பில்-ஸ்ரீஹஸ்திகிரியில், மழை முகில்போல்-குளிர்ந்த மேகம்போல், நின்ற மாயவன் - நிற்கின்ற அதிசயச்செய்கையுடைய பேரருளாளன், நாரணனாய் - நாராயணனாயிருந்து, நல் வலம்புரி நாலும் - சிறந்த வலம்புரிச்சங்கம் நான்கையும், உகந்து எடுத்தும் - மகிழ்ந்து (கையில்) ஏந்தியும், ஊர் அணி மேகம் என - (நிறத்தில்) சஞ்சரிக்கின்ற அழகிய மேகம் என்னும்படியாக, உதரமும் மேற்கும் நின்றும் - வயிற்றிலும் மேற்குத்திசையிலும் நின்றும், ஆரண நூல் தந்து - வேதமாகிய சாஸ்த்ரத்தைப் பிரவர்த்திப்பித்து, அருளால்-க்ருபையால், அடைக்கலம் கொண்டருளும் - (என்னைக்) காக்கப்பட வேண்டிய வஸ்துவாக ஏற்றுக்கொண்டருள்வான்.

தேவதை:— நாராயணன்; நிறம்:— நீலம்; ஆயுதம்:— நான்கு சங்கம்; திசை:— மேற்கு; புண்ட்ரஸ்தாநம்:— வயிறு.

नारायणं घनश्यामं चतुश्शङ्खं नमाम्यहम् । 2

282 மாதவ நாமமும் வான்கதை நான்கு மணிநிறமு
மோது முறைப்படி யேந்தி யுரத்திலு மேலுமல்கிப்
போதலர் மாதுடன் புந்தியி லன்பாற் புகுந்தளிக்குந்
தூதனு நாதனு மாயதோல் லத்தி கிரிச்சுடரே. 3

உரை:— தூதனும் நாதனும் ஆய - (பாண்டவர்களுக்குத்) தூதனாயும் (அனைவருக்கும்) ஸ்வாமியாயும் உள்ள, தொல் அத்திகிரிச்சுடர் - அநாதியான ஸ்ரீஹஸ்திகிரியில் உள்ள தேஜஸ்ஸாகிய பேரருளாளன், மாதவ நாமமும் - மாதவனென்ற திருநாமத்தையும், வான் கதை நான்கும் - வலிய கதை நான்கையும், மணி நிறமும் - (இந்த்ர நீல) ரத்நத்தின் நிறத்தையும், ஓதும் முறைப்படி - (சாஸ்த்ரங்களில்) கூறுகிற முறைப்படி, ஏந்தி - தரித்து, உரத்திலும் மேலும் - மார்பிலும் மேல் (நோக்கும்) திசையிலும், அல்கி - இருந்து, அன்பால் - (என்னிடம்) அன்பினால், புந்தியில் - (என்) மனஸ்ஸில், போது அலர் மாதுடன் - தாமரைமலரில் விளங்கும் பிராட்டியுடன், புகுந்து - ப்ரவேசித்து, அளிக்கும் - காப்பான்.

தேவதை:— மாதவன்; நிறம்:— இந்த்ரநீலம்; ஆயுதம்:— நான்கு கதை; திசை:— ஊர்த்வதிசை; புண்ட்ரஸ்தாநம்:— மார்பு.

माधवं मणिभङ्गाभं चिन्तयामि चतुर्गदम् । 3

283 கோவிந்த னென்றுங் குளிர்மதி யாகிக் கோடியவரை
யேவுந் தனுக்க ளுடன்றெற் கிலுமுட் கழுத்துநின்று
மேவுந் திருவரு ளால்வினை தீர்த்தெனை யாண்டருளும்
பூவன் றொழவத்தி மாமலை மேனின்ற புண்ணியனே. 4

உரை:— பூவன் - (நாபிக்) கமலத்தில் அவதரித்த ப்ரஹ்மா, தொழ - ஸேவி(த்து அனுபவி)க்கும்படி, அத்திமாமலைமேல் நின்ற - ஸ்ரீ ஹஸ்திமஹாகிரியின்மேல் நிலைபெற்றுநின்றவனும், புண்ணியன் - புண்யஸ்வரூபனுமான பேரருளாளன், கோவிந்தன்–கோவிந்தனுகவும், என்றும் குளிர் மதி - (நிறத்தில்) எப்பொழுதும் குளிர்ந்த சந்த்ர னுகவும், ஆகி - இருந்து, கொடியவரை ஏவும் - துஷ்டர்களைப் போக்கு கின்ற, தனுக்களுடன் - (நான்கு) விற்களுடன், தெற்கிலும் - தெற்குத் திசையிலும், உட்கழுத்தும் - கழுத்தின் உட்புறத்திலும், நின்று - நிலைபெற்றுநின்று, மேவும் திரு அருளால் - பொருந்திய சிறந்த கருணையால், வினை தீர்த்து-பாபங்களைப் போக்கி, எனை ஆண்டருளும்- என்னை அடிமைகொள்வான்,

தேவதை:— கோவிந்தன்; நிறம்:— சந்த்ரன்; ஆயுதம்:—நான்கு வில்; திசை:— தெற்கு; புண்ட்ரஸ்தாநம்;— உட்கழுத்து.

चन्द्रभासं चतुश्शार्ङ्गं गोविन्दमहमाश्रये । 4

284 விட்டு வலவயிற் றின்கண் வடக்கும் விடாதுநின்று
மட்டவிழ் தாமரைத் தாது நிறங்கொண்ட மேனியனுய்த்
தோட்ட கலப்பைக ளீரிரண் டாலுந் துயரறுக்குங்
கட்டெழிற் சோலைக் கரிகிரி மேனின்ற கற்பகமே. 5

உரை:— கட்டு எழில் சோலை - மிக்க அழகுள்ள சோலை சூழ்ந்த, கரிகிரிமேல் நின்ற - ஸ்ரீ ஹஸ்திகிரியின்மேல் எழுந்தருளியுள்ள, கற்பகம்– கல்பகவ்ருக்ஷம் போன்ற பேரருளாளன், விட்டு - விஷ்ணுவாக இருந்து, வலவயிற்றின் கண் - வயிற்றின் வலப்புறத்திலும், வடக்கும் - வடதிசை யிலும், விடாது நின்று - நீங்காது தங்கி, மட்டு அவிழ் - தேன் ஒழுகு கின்ற, தாமரைத் தாது நிறம் கொண்ட மேனியனுய் - தாமரையினது மகரந்தத்தின் நிறத்தைக்கொண்ட திருமேனியுடையனுய், தொட்ட கலப்பைகள் ஈர் இரண்டாலும் - (கையில்) ஏந்திய கலப்பைகள் நான்கி னுலும், துயர் அறுக்கும் - (என்) துன்பத்தைப் போக்குவான்.

தேவதை:— விஷ்ணு; நிறம்:— தாமரைத்தாதின் நிறம் (பொன் னிறம்); ஆயுதம்:— நான்கு கலப்பை; திசை:— வடக்கு; புண்ட்ரஸ்தா நம்:— வயிற்றின் வலப்புறம்.

विष्णुं चतुर्हलं वन्दे पद्मकिञ्जल्कसन्निभम् । 5

285 மதுசூ தனனேன் வலப்புயந் தேன்கிழக் கேன்றிவற்றிற்
பதியா யிருந்துபோன் மாதுறை பங்கய வண்ணனுமாய்
முதுமா வினைக ளறுக்கு முயலங்க ளீரிரண்டான்
மதுவா ரிளம்பொழில் வாரண வெற்பின் மழைமுகிலே. 6

உரை:— மது ஆர் – தேன் நிறைந்த, இளம் பொழில் – இளஞ் சோலை சூழ்ந்த, வாரண வெற்பில் – ஸ்ரீஹஸ்திகிரியில் (எழுந்தருளியுள்ள), மழை முகில் – வர்ஷாகால மேகம்போன்ற பேரருளாளன், மதுசூதனன் – மதுஸூதநனாக (இருந்து), என் வலப்புயம் என்று – என் வலது புஜமும், தென் கிழக்கு (என்று) – தென்கிழக்கும் (ஆகிய), இவற்றில்- இந்த ஸ்தாநங்களில், பதியாய் இருந்து-ஸ்திரமாய் இருந்து, பொன் மாது உறை – லக்ஷ்மிப் பிராட்டி வஸிக்கின்ற, பங்கய வண்ணனுமாய் – தாமரையின் நிறமுடையவனாய், முயலங்கள் ஈர் இரண்டால் – உலக்கைகள் நான்கினால், முது மா வினைகள் – (என்னுடைய) அநாதியான பெரிய கர்மங்களை, அறுக்கும் – ஒழிப்பான்.

தேவதை:— மதுஸூதநன்; நிறம்:—தாமரை; ஆயுதம்:— நான்கு உலக்கை; திசை:— தென்கிழக்கு; புண்ட்ரஸ்தாநம்:— வலது புஜம்.

चतुर्मुसलमब्जाभं संश्रये मधुसूदनम् । 6

286 திரிவிக் கிரமன் றிகழ்தீ நிறத்தன் றெளிவுடைவா
ளுருவிக் கரங்களி லீரிரண் டேந்தி வலக்கழுத்துஞ்
செருவிக் கிரமத் தரக்கர்திக் குஞ்சிறந் தாளுமிறை
மருவிக் கரிகிரி மேல்வரந் தந்திடு மன்னவனே. 7

உரை:— கரிகிரிமேல் மருவி - ஸ்ரீஹஸ்திகிரியின் மீது பொருந்தி, வரம் தந்திடும் – (வேண்டிய) வரத்தைக் கொடுத்தருள்கின்ற, மன்னவன் இறை – சக்கரவர்த்தியாகிய பேரருளாளன், திரிவிக்கிரமன் - த்ரிவிக்ரமனாக இருந்து, திகழ் தீ நிறத்தன்-ஜ்வலிக்கின்ற அக்நிபோன்ற நிறமுடையனாய், கரங்களில்–திருக்கைகளில், தெளிவு உடை–ப்ரகாசம் பொருந்திய, வாள் ஈரிரண்டு – வாள் நான்கையும், உருவி ஏந்தி – உருவித் தாங்கி, வலக்கழுத்தும் – கழுத்தின் வலப்புறத்திலும், செரு விக்கிரமத்து – போரில் வலிமையைக் காட்டுகின்ற, அரக்கர் திக்கும் - ராக்ஷஸர்களுடைய திசையாகிய நைருதிதிக்கிலும், சிறந்து ஆளும் - சிறந்து (நின்று) ரக்ஷிப்பான்.

தேவதை:—த்ரிவிக்ரமன்; நிறம்:—அக்நி; ஆயுதம்:–நான்கு வாள்; திசை:—தென்மேற்கு; புண்ட்ரஸ்தாநம்:—கழுத்தின் வலப்புறம்.

अग्निवर्णं चतुःखड्गं भावयामि त्रिविक्रमम् । 7

287 வாமன னென்றன்வா மோதர மும்வாயு வின்றிசையுந்
தாம மடைந்து தருண வருக்க னிறத்தனுமாய்ச்
சேம மரக்கலஞ் செம்பவி யீரிரண் டாற்றிகழு
நாமங்கை மேவிய நான்முகன் வேதியி னம்பரனே. 8

உரை:— நாமங்கை மேவிய-ஸரஸ்வதியோடு பொருந்திய, நான் முகன் வேதியில்-ப்ரஹ்மாவின் யாகவேதியில் (அவதரித்த), நம் பரன்–நம் ஸர்வேசுவரனை பேரருளாளன், வாமனன் - வாமநனுய், என்றன் வாமோதரமும் – என் இடவயிற்றையும், வாயுவின் திசையும்-வாயுவின் திசையான வடமேற்கையும், தாமம் அடைந்து – ஸ்தாநமாகக் கொண்டு, தருண அருக்கன் நிறத்தனுமாய் – உதித்த ஸூர்ய னுடைய நிறமுடையவனுய், சேமமரக்கலம் – (அடியார்களை ஸம்ஸாரஸமுத்ரத்திலிருந்து கரை சேர்த்து) க்ஷேமத்தைக் கொடுக்கும் ஓடமாக (இருந்து), செம் பவி ஈர் இரண்டால் – சிவந்த வஜ்ராயுதம் நான்கினோடு, திகழும் – ப்ரகாசிப்பான்.

தேவதை:— வாமநன்; நிறம்:— இளம் ஸூர்யன்; ஆயுதம்:— நான்கு வஜ்ரம்; திசை:— வடமேற்கு; புண்ட்ரஸ்தாநம்:— வயிற்றின் இடது புறம்,

वामनं बालसूर्याभं चतुर्वज्रं विभावये। 8

288 சீரார் சிரீதர னுய்ச்சிவன் றிக்கு மிடப்புயமு
மேரா ரிடங்கொண் டிலங்குவெண் டாமரை மேனியனுய்ப்
பாராய பட்டய மீரிரண் டாலும் பயமறுக்கு
மாரா வமுதத்தி மாமலை மேனின்ற வச்சுதனே. 9

உரை:— ஆரா அமுது – (எவ்வளவு அனுபவித்தாலும்) தெவிட் டாத அமுதமாகவுள்ளவனும், அத்திமாமலைமேல் – ஸ்ரீஹஸ்திமஹா கிரியின்மேல், நின்ற – நிலைபெற்றவனும், அச்சுதன் – (அடியவர்களைக்) கைவிடாதவனுமான பேரருளாளன், சீர் ஆர் சிரீதரனுய் – சிறப்பு நிறைந்த சிரீதரனுய், சிவன் திக்கும் – சிவனுடைய திசையாகிய வட கிழக்கையும், இடப் புயமும் – இடது புஜத்தையும், ஏர் ஆர் இடம் கொண்டு – அழகு பொருந்திய ஸ்தாநமாகக் கொண்டு, இலங்கு வெண் தாமரை மேனியனுய் – ப்ரகாசிக்கின்ற வெண்மையான தாமரையின் நிறமுடையவனுய், பார் ஆய – பருத்த, பட்டயம் ஈர் இரண்டாலும் – பட்டயம் (என்னும் ஒருவகை வாள்) நான்கினுலும், பயம் அறுக்கும் – (என்) பயத்தைப் போக்குவான்.

தேவதை:—ஸ்ரீதரன்; நிறம்:—வெண்தாமரை; ஆயுதம்:—நான்கு பட்டாக்கத்தி; திசை: –வடகிழக்கு; புண்ட்ரஸ்தாநம்:—இடது புஜம்.

श्रीधरं पुण्डरीकाभं चतुष्पट्टसमाश्रये। 9

289 என்னிடி கேச னிறைகீ ழிடக்கழுத் தென்றிவற்றி
னன்னிலை மின்னுரு வாய்நாலு முற்கரங் கொண்டளிக்கும்
பொன்னகில் சேர்ந்தலைக் கும்புனல் வேகை வடகரையிற்
றென்ன னுகந்து தொழுந்தேன வேதியர் தெய்வமொன்றே. 10

உரை:— பொன் அகில் சேர்ந்து – பொன்னையும் அகிற்கட்டையையும் கொண்டு, அலைக்கும் புனல் – அலைமோதுகின்ற ஜலத்தையுடைய, வேகை வடகரையில் - வேகவதிநதியின் வடகரையில், தென்னன் உகந்து தொழும் - பாண்ட்யராஜன் மகிழ்ந்து வணங்குகின்ற, தேனவேதியர் – தேனம்பாக்கத்திலுள்ள வைதிகப் பெரியோர்களின், ஒன்று தெய்வம் – ஒரே தெய்வமாகிய பேரருளாளன், இடிகேசன் என் இறை – ஹ்ருஷீகேசனென்னும் என் ஸ்வாமியாயிருந்து, கீழ் இடக்கழுத்து என்று - கீழ்ப்பாகமும் கழுத்தின் இடப்புறமும் (ஆகிய), இவற்றில் – இந்த இடங்களில், நல் நிலை மின் உருவாய் – நன்கு நிலைபெற்ற மின்னைப்போன்ற நிறமுடையனாய் (இருந்து), நாலு முற்கரம் கொண்டு – நான்கு சம்மட்டிகளை ஆயுதமாகக்கொண்டு, அளிக்கும் – காப்பான்.

‘இருடிகேசன்’ எனுஞ் சொல் தனை நோக்கி ‘இடிகேசன்’ என மருவியது.

தேவதை:—ஹ்ருஷீகேசன்; நிறம்:—மின்னல்; ஆயுதம்:-நான்கு சம்மட்டி; இடம்:—கீழ்ப்பாகம்; புண்ட்ரஸ்தாநம்:—கழுத்தின் இடப்புறம்.

चतुर्मुद्गरमभ्येमि हृषीकेशं तटित्प्रभम् ।

[பெருமாள்கோயிலுக்கு மிகச் சமீபத்தில் ‘தேனம்பாக்கம்’ என்று ஒரு ஸ்ரீக்ராமம் இருக்கின்றது. அதைக் காஞ்சிபுரத்தின் ஒரு வீதியாகக் கொள்ளலாம். அவ்வூரில் ஸ்ரீபாஞ்சராத்ரசாஸ்த்ரங்களில் கரைகண்ட பரமவைதிகர்களான பாகவதர்கள் எழுந்தருளியிருந்து பரம்பரையாகப் பேரருளாளனைத் தமது குலதெய்வமாகக்கொண்டு பாஞ்சராத்ர ஆகமமுறையில் வழுவாது திருவாராதநம்செய்துவந்தனரென்றும், அவர்களுடைய சிறந்த குணங்களைக் கண்ட ஆஸ்திகசிகாமணியான பாண்ட்யராஜன் ஒருவன் அவர்களுக்கு மிக்க ஸம்மாநமளித்து அவர்களை வணங்கிவந்தானென்றும் ஒரு வரலாறு இப்பாசுரத்தாலும் பெரியோர்களின் கர்ணபரம்பரையாலும் அறியக்கிடக்கின்றது.

மேலும் பெருமாள்கோயில் பாண்டியநாட்டிலடங்கியதாகச் சில காலமிருந்ததாகவும், அப்பொழுது பாண்டியராஜன் பேரருளாளனது அருளால் பெருமைபெற்று வாழ்ந்துவந்ததுபற்றி அவ்வரசன் பேரருளாளனைத் தொழுதுவந்ததாகவும் சிலாசாஸனமுளதென்றும் பெரியோர் பணிப்பர்.] 10

290 எம்பற்ப நாபனு மேன்பின் மனம்பற்றி மன்னிநின்று
வெம்போற் கதிரவ னுயிர மேவிய மேய்யுருவா
யம்போற் கரங்களி லைம்படை கோண்டஞ்ச லேன்றளிக்குஞ்
சேம்போற் றிருமதிள் சூழ்சிந்து ராசலச் சேவகனே. 11

உரை:— செம் பொன் திரு மதிள் சூழ் - சிவந்த பொன்னாலாகிய அழகிய மதிள் சூழ்ந்த, சிந்துராசலச் சேவகன் – ஹஸ்திகிரியில் (உள்ள) மஹாவீரனான பேரருளாளன், எம் பற்பநாபனும் – எம்முடைய பத்ம நாபனுமாகி, என் பின் – என்னுடைய பின்பாகத்தையும், மனம் – மனஸ்ஸையும், பற்றி மன்னி நின்று – பற்றிக்கொண்டு ஸ்திரமாய் நின்று, வெம் பொன் – உஷ்ணமான சிவந்த, ஆயிரம் கதிரவன் – ஆயிரம் ஸூர்யனோடு, மேவிய மெய் உருவாய் – ஒப்பான திருமேனி நிறமுடையனாய், அம் பொன் கரங்களில் – அழகிய சிவந்த திருக்கை களில், ஐம்படை கொண்டு – ஐந்து ஆயுதங்களைத் தரித்து, அஞ்சல் என்று – அஞ்சாதே என்று (கூறி), அளிக்கும்—காப்பான்.

தேவதை:— பத்மநாபன்; நிறம்:— ஸூர்யன்; ஆயுதம்:— சக்கரம், சங்கம், வாள், வில், தண்டு என்னும் ஐந்து ஆயுதங்கள்; ஸ்தானம்:– மநஸ்; புண்ட்ரஸ்தானம் — பின்புறம்.

पञ्चायुधं पद्मनाभं प्रणमाम्यर्करोचिषम् । 11

291 தாமோ தரனேன்றன் றுமங்க ளுலு கரங்களிற்கோண்
டாமோ தரமேன வாகத்தி னுட்புறம் பிற்கழுத்துந்
தாமோ ரிளங்கதி ரோனேன வேன்னு ளிருளறுக்கு
மாமோக மாற்று மதிளத்தி யூரின் மரகதமே. 12

உரை:— மா மோகம் மாற்றும் – பெரிய அஜ்ஞானத்தைப் போக்கு கின்ற, மதிள் அத்தியூரில் – மதிள்சூழ்ந்த ஹஸ்திகிரியில் (உள்ள), மரகதம் – மரகதரத்நம்போன்ற பேரருளாளன், என்றன் தாமோதரன்– என் தாமோதரனாகி, நாலு தாமங்கள் – நான்கு பாசங்களை, கரங்களில் கொண்டு – திருக்கைகளில் ஏந்தி, தரம் ஆமோ என – (இந்தப்) பெருமை (மற்றவருக்கு) உண்டோ என்னும்படி, ஆகத்தின் உள் புறம் – சரீரத்தின் உள்ளேயும் வெளியிலும், பின் கழுத்தும் – கழுத்தின் பின்புறத்தும் (நின்று), தாம் ஓர் இளம் கதிரோன் என – தான் ஓர் உதிக்கின்ற ஸூர்யனென்னும்படி (நிறமுடையனாயிருந்து), என் உள் இருள் அறுக்கும் - எனது மனத்துள் (இருக்கும் அஜ்ஞானமாகிய) இருளைப் போக்குவான்,

தேவதை;— தாமோதரன்; நிறம்:— உதிக்கின்ற ஸூர்யன், (பட்டுப்பூச்சி); ஆயுதம்:— நான்கு பாசம்; இடம்:—சரீரத்தின் உட் புறமும் வெளிப்புறமும்; புண்ட்ரஸ்தானம்:— கழுத்தின் பின்புறம்.

दामोदरं चतुष्पाशमिन्द्रकोपनिभं भजे । 12

292 கத்தித் திரியுங் கலைகளை வெல்லுங் கருத்தில்வைத்துப்
பத்திக் குறுதுணை பன்னிரு நாமம் பயில்பவர்க்கு
முத்திக்கு மூல மெனவே மொழிந்தவிம் மூன்றுநான்குந்
தித்திக்கு மெங்க டிருவத்தி யூரரைச் சேர்பவர்க்கே. 13

உரை:— கத்தித் திரியும் – (ஸாரமில்லாது ஆடம்பரத்தோடு) கத்திக்கொண்டே திரிகின்ற, கலைகளை – (பயனற்ற) வித்யைகளை, வெல்லும்-(வாதத்தில்) ஜயிக்கக்கூடிய (உறுதியையுடைய), கருத்தில்– மநஸ்ஸில், பத்திக்கு உறு துணை – (பகவத்) பக்திக்குத் தக்க ஸாதநமான, பன்னிரு நாமம் – (கேசவன் முதலிய) பன்னிரண்டு திருநாமங்களையும், வைத்து – ஊன்றி அநுஸந்தித்து, பயில்பவர்க்கு – பரிசயம் செய்பவருக்கு, முத்திக்கு மூலம் – மோக்ஷத்திற்குக் காரணம் (ஆகும்), என மொழிந்த – என்னும்படி கூறப்பட்ட, இம்மூன்று நான்கும் – இந்தப் பன்னிரண்டு பாசுரங்களும், எங்கள் திருவத்தியூரரைச் சேர்பவர்க்கே – எங்கள் பேரருளாளரை ஆச்ரயித்த பாகவதர்களுக்கே, தித்திக்கும் – (உள்ளத்திற்கு) இன்பம்கொடுப்பனவாகும்.

பேரருளாளன் திருவடிகளில் ஈடுபட்ட பாகவதர்க்குப் பரம போக்யமான இப்பிரபந்தத்தை அநுஸந்திப்பவர் பகவத்பக்தி பெருகப் பெற்று உபாயத்தை அநுஷ்டித்து மோக்ஷம் பெறுவர்-என்றவாறு. 13

பன்னிருநாமம்–உரை முற்றிற்று

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

ஸ்ரீ:

திருமந்திரச்சுருக்கு—உரை

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

[விஷயச் சுருக்கம்]

சேதநன் உஜ்ஜீவிப்பதற்கு ஸாதநமான ரஹஸ்யங்கள் மூன்று. அவை—திருமந்த்ரம், த்வயம், சரமசுலோகம் என்பனவாம். அவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் மிகப் பெருமைபெற்று விளங்கும். திருமந்த்ரம் – ஸகலமந்த்ரங்களிலும் சிறந்து விளங்குவது; ஸகலவேதங்களின் ஸாரமானது; தீங்குகள் அனைத்தையும் போக்கவல்லது; ஸகல பலன்களையும் அளிக்கவல்லது; ஸகல உபாயங்களையும் தலைக்கட்டி வைக்கவல்ல ஒரு ஸாதநமாவது; ஸகலஜாதியினரும் தத்தம் அதிகாரத்திற்குத் தக்கவாறு வைதிகம் தாந்த்ரிகம் என்று ஸ்ரீபாஞ்சராத்ரத்தில் கூறிய முறையில் அநுஸந்திக்க உரியது; சேதநன் அசேதநம் ஈசுவரன் ஆகிய தத்துவங்களை வெளியிடவல்லது; வேறு மந்த்ரங்களின் உதவி

யின்றி ஸகலபலன்களேயும் அளிக்கவல்லது; சிற்சில மந்த்ரங்கள் சிற்சில பகவந்மூர்த்திக்கு உரியனவாயிருத்தல்போலன்றி ஸகலபகவந்மூர்த்திகளுக்கும் பொதுவானது. மஹர்ஷிகளும் ஆழ்வார்களும் ஆசார்யர்களும் இந்த மந்த்ரத்தையே மிக விரும்பி இதன் பெருமையை அளவிலாது புகழ்ந்து பேசியுள்ளனர். மிகக் கூறுவானேன்? எம்பெருமாஞல் நேரில் இம்மந்த்ரத்தை உபதேசிக்கப்பெற்ற திருமங்கையாழ்வார்போல்வாரே இதன் பெருமையை அறியவல்லர்.

இங்ஙனம் பெருமைபெற்று விளங்கும் திருமந்த்ரம் எட்டு எழுத்துக்கள் கொண்டதாகும். அதஞல் இது அஷ்டாக்ஷரமெனப் பெயர் பூண்டது. உபநிஷத்துத்தானே இத் திருமந்த்ரத்தின் அக்ஷரங்களேக் கணக்கிட்டு இவ்வஷ்டாக்ஷரம் ஸ்ரீமந்நாராயணனேக் காட்டக்கூடியதென்று கூறி இதை ஓதுபவனது பெருமையைப் பரக்கப் பேசியது'.

இத்தகைய திருமந்த்ரத்தைப் பதம் பதமாகப் பிரித்துத் தனித்தனியே பொருளேச் சுருக்கி இந்தப் பிரபந்தத்தில் கூறுவதால் இது 'திருமந்திரச்சுருக்கு' எனப் பெயர்பூண்டது. இப்பிரபந்தம் முழுவதும் ஸம்ஸாரக்கடலில் அழுந்தித் தவிக்கும் சேதநர்பால் மனமிரங்கி அவர்களே விளித்துக் கூறும் உபதேசமாகும். இப்பிரபந்தத்தில் ஸ்ரீதேசிகன் (1) அகாரம் (2) அதன்மீது ஏறி அழிந்துகிடக்கின்ற நான்காம் வேற்றுமையுருபு (3) உகாரம் (4) மகாரம் (5) நம: எனும் பதம் (6) நாரசப்தம் (7) அயநசப்தம் (8) அதன் மீதுள்ள நான்காம் வேற்றுமையுருபு—ஆகியவற்றின் பொருளே முறையே கூறி, முடிவில் இவ்வர்த்தங்களெல்லாம் ஆசார்யர்கள் நிதியைப்போல் பரம ரஹஸ்யமாகச் சேமித்துவைத்தவை என்று கூறித் தலைக்கட்டுகிருர்.

[திருமந்த்ரத்தில் முதற்பதமாகிய ப்ரணவம் அகார-உகார-மகாரங்களாகிய மூன்றெழுத்துக்கள் கொண்டதாகும்.]

இப்பிரபந்தம் முழுவதும் அறுசீராசிரியவிருத்தத்தில் அமைந்ததாம்

ப்ரணவம்—அகாரம்—பொருள் விளக்கம்

293 நாவலர் மறைநா லொன்று நலந்திகழ் மறையோன் ருேரா
தாவலிப் பலேக்கு மோகத் தழுந்திநின் றலமர் கின்றீர்
தூவலம் புரியா மோன்றிற் றுவக்கமாம் வண்ண மோன்ருற்
காவலென் றகரத் தவ்வாய்க் கருத்துறக் காண்மி னீரே. 1

உரை:-- நா அலர் - (உச்சரிப்பவர்களின்) நாவிலே மலர்ந்து நிற்கின்ற, நால் மறை ஒன்றும் நலம் திகழ் - நான்கு வேத(ங்களின் ஸார)மும் பொருந்திய பெருமையுடன் விளங்குகின்ற, ஒன்று மறை - ஒரு ரஹஸ்ய (மாகிய திருவஷ்டாக்ஷர) த்தை, ஓராது - அர்த்தத்துடன்

ஆராய்ந்து அறியாமல், ஆவலிப்பு அலைக்கும் மோகத்து - கர்வத்தால் விளைந்த அஜ்ஞாநத்தில், அழுந்தி நின்று - அமுங்கிக்கிடந்து, அலமர்கின்றீர் - (கரையேற வழியறியாது) தவிக்கும் சேதநர்களே!, தூ வலம் புரியாம் ஒன்றில் - பரிசுத்தமான வலம்புரிச் சங்கம்போன்ற உருவமுடைய ப்ரணவத்தில், துவக்கமாம் வண்ணம் ஒன்றால் - முதலிலுள்ள (அகாரமாகிய) ஓரெழுத்தினால் (உணர்த்தப்படும் பொருள்), காவல் என்று - ரக்ஷிக்கும் தன்மை என்று (அதனை), அகரத்து அவ்வாய் - அகாரத்தில் அவ் என்றவினைப்பகுதியடியாக, நீர் கருத்து உறக் காண்மின் - நீங்கள் (உங்கள்) மனத்தில் பதியுமாறு அறிந்துகொள்க.

ப்ரணவம் ஒன்றுமே ஸகலவேதங்களின் ஸாரமாகும். அதன் அர்த்தத்தை நன்கு உணர்ந்தால் எம்பெருமானுடைய ஸ்வரூபத்தையும் ஜீவனாகிய தன்னுடைய ஸ்வரூபத்தையும் நன்கு அறிந்து அதனால் அஹங்கார மமகாரங்கள் ஒழியப்பெற்று ஸம்ஸார ஸமுத்ரத்திலிருந்து கரையேறப் பெறலாம். இந்தப் பாக்யத்தைப் பெறாத சேதநர்களே! ப்ரணவத்தை ஓர் ஆதாரத்தில் எழுதினால் வலம்புரிச்சங்கம் போல் இருக்கும். இந்த ப்ரணவத்தில் அகாரமே முதல் அக்ஷரமாகும். வடமொழியில் 'அவ்' என்னும் தாது (வினைப்பகுதி) 'காத்தல்' என்னும் பொருளைத் தரும். வ்யாகரணசாஸ்த்ரத்தின்படி 'அவ்' என்னும் வினைப்பகுதியின்மீது தக்க விகுதி பெற்றுத் தேறிய அகாரம் அனைத்தையும் காக்கும் எம்பெருமானைக் கூறும். ஆகவே அகாரத்தால், அனைத்தையும் காக்கவல்ல எம்பெருமானை அநுஸந்தாநம் செய்க—என்றவாறு. 1

நான்காம் வேற்றுமையுருபு—பொருள்விளக்கம்

294 இளக்கமின் மயக்கந் தன்னா லேனக்கியா னுரிய னென்னுங்
களக்கருத் தொன்றே கொண்டு கடுநர கடைந்து நின்றீர்
விளக்குமவ் வெழுத்தி னாலாம் வேற்றுமை யேற்றி வாங்கித்
துளக்கமி லடிமை பூண்டு தூயராய் வாழ்மி னீரே. 2

உரை:— இளக்கம் இல் - நெகிழ்ச்சியில்லாத, (அதாவது - திண்ணியதான), மயக்கம் தன்னால் - அஜ்ஞாநத்தால், யான் உனக்கு உரியன் என்னும் - நான் ஸ்வதந்த்ரன் என்ற, களக் கருத்து ஒன்றே கொண்டு - கள்ளத்தன்மையுள்ள மதியையே கொண்டு, கடு நரகு - கொடிய நரகத்(திற்கு ஒப்பான ஸம்ஸாரத்)தை, அடைந்து நின்றீர் - அடைந்து நின்றவர்களே!, விளக்கும் அவ்வெழுத்தில் - (பகவானுடைய ஸ்வபாவத்தை) விளக்கிக்காட்டுகின்ற அந்த அகாரத்தின் மேல், நாலாம் வேற்றுமை - நான்காம் வேற்றுமையுருபை, ஏற்றி வாங்கி - ஏற்றி விலக்கி, துளக்கம் இல் - மாறுபாடு இல்லாத, அடிமை பூண்டு - சேஷத்வத்தை ஏற்றுக்கொண்டு, தூயராய் - பரிசுத்தராய், நீர் வாழ்மின் - நீங்கள் வாழ்வீர்களாக.

நெடுநாளாக வேரூன்றிக்கிடந்த அஜ்ஞாநத்தாலே, எம்பெருமானுக்கு அடிமையாயுள்ள ஆத்மஸ்வரூபத்தை ஸ்வதந்த்ரமாக நினைத்து அதனால் ஸம்ஸாரஸமுத்ரத்தில் அழுந்திக் கிடக்கின்ற சேதநர்களே! எம்பெருமானுடைய ஸ்வபாவத்தை வெளியிடுகின்ற அகாரத்தின்மேல் நான்காம்வேற்றுமையுருபு ஏறிப் பின் அழிந்திருக்கின்றது. அதன் பொருள் சேஷியைப் பெருமைப்படுத்துந்தன்மையாகும். இதுவே சேஷத்வமெனப்படும். ஆகவே, 'ஸர்வரக்ஷகனான எம்பெருமானுக்கு நான் அடியன்,' என்ற இவ்வர்த்தத்தை நீங்கள் அநுஸந்தித்துக்கொள்க. அதனால் இதுவரை அஹங்காரத்தால் நிலைகுலைந்துநின்ற நிலைமை நீங்கி உஜ்ஜீவிக்கப் பெறலாம்—என்றவாறு, 2

உகாரத்தின் பொருள் — விளக்கம்

295 அப்பொரு ளிகந்து மற்று மழித்தழிந் தெழுவார் தாளி
லிப்பொரு ளிகந்த வன்பா லிரங்கினிர் வணங்கி வீழ்ந்தீ
ருப்பொரு ளுள்ளி மற்றோ ருயிர்தனக் குரிமை மாற்றி
யெப்பொருட் பயனு மீதென் றெண்ணினி ரெழுமி னீரே. 3

உரை :— அப் பொருள் – அகாரத்தின் அர்த்தமாகிய எம்பெருமானை, இகந்து-(சரணமடையாமல்) விட்டு, மற்றும் அழித்து – (அவனையடைவதால் பெறும்) மற்றப் பலன்களையும் விலக்கி, இப்பொருள் – இந்தப் பலன்களையும், இகந்த வன்பால் – இழந்த மஹாபாபத்தால், இரங்கினிர் – மனந்தளர்ந்தவர்களாகி, அழிந்து எழுவார் தாளில் – அழிவதும் பிறப்பதுமே இயற்கையாக உள்ள பிற தேவதைகளின் பாதங்களில், வணங்கி வீழ்ந்தீர் – வணங்கி அதோகதியடைந்தவர்களே!, உப் பொருள் உள்ளி – உகாரத்தின் பொருளை ஆராய்ந்து, மற்று ஓர் உயிர்தனக்கு – (எம்பெருமானைத் தவிர) மற்ற எந்த ஜீவனுக்கும், உரிமை மாற்றி – அடியனுந்தன்மையை விட்டு, எப்பொருள் பயனும் – ஸகலவிஷயங்களின் பலனும், ஈது என்று – இந்த அநுஸந்தாநமே என்று, எண்ணினிர் – (உறுதியாக) நினைத்தவர்களாய், நீர் எழுமின் – நீங்கள் உஜ்ஜீவியுங்கள்.

அகாரத்தின் பொருளாய் நிற்கும் எம்பெருமானைச் சரணமடைதல் உங்களுக்கு முறைமையாகும். அதனால் கைங்கர்யம் முதலிய உயர்ந்த பலன்களைப் பெறலாம். அங்ஙனம் செய்யாத மஹாபாபத்தால் மனந்தளர்ந்து பிறப்பதும் இறப்பதுமே இயற்கையாயுள்ள அற்ப தேவதைகளின் காலில் வீழ்ந்து வணங்கிக் கெட்டீர்கள். இனி உங்களுக்குச் செய்ய அடுப்பதொன்றைக் கூறுகிறேன்—ப்ரணவத்தில் இரண்டாவது அக்ஷரம் உகாரம். இதன் பொருள் மற்றொன்றினுடைய ஸம்பந்தத்தை மறுத்தலாகும். இங்கு எம்பெருமானைச் சொல்லும் அகாரத்துடன் உகாரத்தைச் சேர்த்துப் பொருள்படுத்தும் போது எம்பெருமானையன்றி மற்றொருவனுக்கும் அடியனல்லன் என்று பொருள்படும். இந்த அநுஸந்தாநமே ஸகல சாஸ்த்ரார்த்

தங்களின் ஸாரமென்று அறிந்து நீங்கள் அவ்வநுஸந்தாநத்தைக் கொண்டு உஜ்ஜீவியுங்கள்—என்றவாறு. *3*

296 *உகாரத்தின் மற்றொரு பொருள்—விளக்கம்*

என்றுமோ ரேத மின்றி யிரவியு மொளியும் போல
வொன்றிநின் றுலக ளிக்கு முகமிகந் தடிமை வைத்தீ
ரோன்றுமூன் றெழுத்தா யோன்று மோன்றிலோன் றுடைய முன்னே
யோன்றிய விரண்டை யுள்ளி யுளரேன வுய்ம்மி னீரே. 4

உரை :— என்றும் – எக்காலத்திலும், ஓர் ஏதம் இன்றி – ஒரு தீங்கும் இல்லாது, இரவியும் ஒளியும்போல – ஸூர்யனும் (அவனுடைய) ப்ரகாசமும்போல, ஒன்றிநின்று – கூடியிருந்து, உலகு அளிக்கும் – உலகத்தைக் காக்கின்ற, உகம் இகந்து – (எம்பெருமான் பிராட்டி என்ற) இரு தத்துவத்தையும் (பற்றி அடியராந்தன்மையை) விட்டு, அடிமை வைத்தீர் – (எம்பெருமான் ஒருவனுக்கே) அடிமையை இசைந்தவர்களே!, ஒன்று மூன்று எழுத்தாய் ஒன்றும் – (உச்சரிக்கும் போது) ஒருபதமாய் மூன்று அக்ஷரங்களாய்ச் சேர்ந்து நிற்கின்ற, ஒன்றில் – ஒப்பற்ற ப்ரணவத்தில், ஒன்றுடைய முன்னே ஒன்றிய – (மகாரமென்னும்) ஓர் அக்ஷரத்தின் முன்பு சேர்ந்து நிற்கின்ற, இரண்டை உள்ளி – (அகார உகாரங்களாகிய) இரண்டு அக்ஷரங்களை (அர்த்தத்துடன்) ஆராய்ந்து, உளர் என – பிறந்த பயன்பெற்றவர் என்னும்படி, நீர் உய்ம்மின் – நீங்கள் உஜ்ஜீவியுங்கள்.

ஸூர்யனும் அவனது ப்ரகாசமும் பிரியாதிருப்பது இயல்பு. அங்ஙனமே எம்பெருமானும் பிராட்டியும் கணநேரமும் பிரியாது நின்று உலகத்தைக் காத்துவருகின்றனர். இவ்விருவருக்குமே அடியராக அநுஸந்தித்தல் உங்களது கடமையாகும், அங்ஙனம் செய்யாது எம்பெருமானுக்குமாத்திரம் அடியராகக் கருதுமவர்களே! நீங்கள் இனி அந்த இரண்டு தத்துவங்களைப் பிரித்துப்பாராதீர். ப்ரணவம் மூன்று எழுத்துக்கள் சேர்ந்த ஒரு சொல்லாயிருக்கின்றது. அதில் மூன்றாவது அக்ஷரம் மகாரம். அதற்கு முன்பு அகாரம் உகாரமாகிய இரண்டு அக்ஷரங்கள் உள. உகாரத்திற்குப் பிராட்டியென்று ஒரு பொருள் உண்டு. அகாரமோ எம்பெருமானைக் கூறும். ஆக அந்த இரண்டு அக்ஷரங்களின் அர்த்தமாகிய திவ்யதம்பதிகளுக்கு அடியராக அநுஸந்தித்து நீங்கள் பிறந்த பயனைப் பெற்று உய்வீர்களாக—என்றவாறு. *4*

மகாரத்தின் பொருள்—விளக்கம்

297 **தத்துவ மறுநான் கோடு தனியிறை யன்றி நின்ற**
சித்தினை யுணரா தேன்றுந் திரடோகை யாகி நின்றீர்
மத்தனைத் தனிவி டாதே மையிலா விளக்க மாக்கி
யுத்தம னடிமை யான வுயிர்நிலை யுணர்மி னீரே. 5

உரை:— தத்துவம் அறுநான்கோடு – இருபத்து நான்கு தத்துவங்களும், தனி இறை அன்றி நின்ற – ஒப்பற்ற ஸர்வேசுவரனும் ஆகிய இவற்றில் வேறுபட்டுநின்ற, சித்தினை – சேதநனாகிய ஜீவனுடைய ஸ்வரூபத்தை, உணராது – அறியாமல், என்றும் – எப்பொழுதும், திரள் தொகையாகி நின்றீர் – ஒன்றாகத் திரண்ட பல அறிவிலாப் பொருள்களின் கூட்டமாகநின்ற சேதநர்களே!, மத்தனை – மகாரத்தின் பொருளாகிய ஜீவனை, தனி விடாதே – பிரித்துவிடாமல், மையிலா – குற்றமற்ற, விளக்கம் ஆக்கி-ஜ்ஞாந ஸ்வரூபனாக உணர்ந்து, உத்தமன்– உயர்ந்து நிற்கும் எம்பெருமானுக்கு, அடிமையான – அடியனாந்தன்மையாகிய, உயிர் நிலை – ஜீவனுடைய ஸ்வரூபத்தை, நீர் உணர்மின் – நீங்கள் அறிவீர்களாக.

ப்ரக்ருதி, மஹான், அஹங்காரம், இந்த்ரியங்கள் பதினொன்று, தந்மாத்ரங்கள் ஐந்து, பூதங்கள் ஐந்து-ஆகிய இருபத்துநான்கு அசேதநத்திற்காட்டிலும் ஜீவன் வேறுபட்டவன்; அங்ஙனமே ஈசுவரனைக் காட்டிலும் வேறுபட்டவன். இங்ஙனம் அசேதந-ஈசுவர தத்துவங்களிற் காட்டிலும் வேறுபட்டுநிற்கும் ஜீவனுடைய ஸ்வரூபத்தை நன்கு அறியாமல் பூதங்கள் இந்த்ரியங்கள் இவற்றின் குவியலாய் நிற்கும் அசேதநமான சரீரத்தையே ஆத்மாவெனக்கொண்டு அறிவிழந்து கிடக்கும் சேதநர்களே! மகாரத்தின் அர்த்தமாகிய ஆத்மாவை ஸ்வதந்த்ரனென்று இனி நினையாதீர், ஜ்ஞாநஸ்வரூபனென்பதை உணர்ந்து எம்பெருமானுக்கு அடிமையாயிருப்பதே ஜீவாத்மாவின் ஸ்வரூபமென்பதைக் கண்டறிந்து உஜ்ஜீவியுங்கள்—என்றவாறு.

மகாரம் ஜீவனைக்கூறும், எவ்வாறெனில் – தத்துவஸாகரஸம்ஹிதை முதலிய நூல்களில் மகாரம் ஜீவனைக் கூறுவதாகக் கூறப்பட்டுளது. மேலும் 'மங்' என்ற வினைப்பகுதியிலிருந்து மகாரம் தோன்றுகிறது. அந்த வினைப்பகுதி, ஜ்ஞாநம் என்ற பொருள் கொண்டதாதலின் அந்தப் பகுதியிலிருந்து தோன்றிய மகாரம் ஜ்ஞாநஸ்வரூபனாய் நிற்பவன், ஜ்ஞாநத்தைக் குணமாகக்கொண்டவன் என்ற அர்த்தங்களைத் தந்து, அங்ஙனல்லாத அசேதநத்திற்காட்டிலும் வேறுபட்டு நிற்கும் ஜீவனைக் கூறுகின்றது.

மேலும் 'மஸ்' என்னும் வினைப்பகுதியிலிருந்தும் மகாரம் தோன்றும். இந்த வினைப்பகுதிக்கு அளவு என்று பொருள். மற்ற ப்ரமாணங்களால் அணு என்னும் அளவில் நின்று மகாரம் அணுவான ஜீவனைக் காட்டுகிறது. இதனால் எங்கும் நிறைந்துநிற்பதுபற்றி விபு எனப்படும் ஈசுவரனைக்காட்டிலும் அணுவான ஜீவன் வேறுபட்டவன் என்னலாயிற்று.

ஆகவே ப்ரணவத்தின் அர்த்தத்தை அறிந்தால் சரீரமே ஆத்மா என்ற மயக்கம் நீங்கி, ஜீவாத்மா ஸ்வதந்த்ரன் என்ற அவிவேகமும்

ஒழிந்து, எம்பெருமானுக்குச் சேஷமென்று அநுஸந்தித்து உஜ்ஜீவிக்கலாம்—என்றவாறு. 5

நம: எனும் பதத்தின் பொருள்—விளக்கம்

298 தனதிவை யனைத்து மாகத் தானிறை யாகு மாய
னுனதெனு முணர்த்தி தாரா துமக்குநீ ருரிமை யுற்றீ
ரேனதிவை யனைத்தும் யானே யிறையெனு மிரண்டுந் தீர
மநவெனு மிரண்டின் மாரு வல்வினை மாற்று வீரே. 6

உரை:— இவை அனைத்தும் – "இந்த ஸகலவஸ்துக்களும், தனது ஆக – தனக்குச் சேஷமாய் நிற்க, தான் இறையாகும் – தான் (எல்லாவற்றையும் ஆள்கின்ற) ஈசுவரனாய் நிற்கின்ற, மாயன் – அதிசயச்செய்கையுடைய எம்பெருமானே!, உனது எனும் – (எல்லாம்) உனக்குச் சேஷம்" என்னும், உணர்த்தி தாராது – நினைவைச் செய்யாமல், உமக்கு உரிமை உற்றீர் – உங்களுக்கு நீங்களே உரிமைபூண்டு நிற்கும் சேதநர்களே!, நீர் – நீங்கள், இவை அனைத்தும் எனது – இந்த ஸகலவஸ்துக்களும் எனக்குச் சேஷம், யானே இறை – நான் ஸ்வதந்த்ரன், எனும் இரண்டும் தீர – என்ற இரண்டு மயக்கமும் ஒழிந்திட, மந எனும் இரண்டில் – நம: என்னும் இரண்டு அக்ஷரத்(தின் அர்த்தத்தை அநுஸந்திப்ப)தால், மாரு வல் வினை – (வேறொன்றினாலும்) அழியாத வலிய கர்மங்களை, மாற்றுவீர் – ஒழிப்பீர்களாக.

சேதநர்களே! ஸகலவஸ்துக்களும் எம்பெருமானுக்குச் சேஷமாகும். அவனொருவனே தனக்கொரு நாயகனில்லாத தனிநாயகன். அவன் திறத்து 'எல்லா வஸ்துக்களும் உனக்குச் சேஷமானவை' என்று நீங்கள் அநுஸந்திக்கவேண்டும். அவ்வாறு செய்யாது அஜ்ஞானம் தலையெடுத்து உங்களுக்கு நீங்களே உரியராகி ஸ்வதந்த்ரராய் மயங்கி அழிகின்றீர்கள். நீங்கள் உய்ய ஓர் உபாயம் உளது. அதாவது—

திருமந்த்ரத்தில் இரண்டாவது பதமாக நம: என்ற ஒரு பதம் உளது. அது ந, ம: என்ற இரு சிறு பதம் கொண்டதாகும். ம: என்கிற பதத்திற்கு மகாரத்தால் கூறப்படுகின்ற ஜீவனாகிய எனக்கு என்று பொருள். ந என்ற பதத்திற்கு இல்லையென்று பொருள். இத்துடன் 'ஒரு பொருளும்' என்ற அர்த்தமுடைய 'கிஞ்சித்' என்ற சொல்லை வருவித்துக்கொண்டு ஒரு பொருளும் எனக்குச் சேஷமன்று என்று பொருள்படுத்தவேண்டும். இந்த அநுஸந்தாநத்தால் எல்லாப் பொருளும் என்னுடையவை என்ற அஜ்ஞாநம் ஒழிந்துவிடும். அங்ஙனமே 'ஸ்வாதந்த்ர்யம்' என்ற சொல்லை வருவித்துக்கொண்டால் எனக்குச் சுதந்திரம் இல்லையென்றும் பொருள்படும். இவ்வநுஸந்தாநத்தைப் பெற்றால் நானே ஸ்வதந்த்ரன் என்ற அஜ்ஞாநமும் கழியும். இவ்விரண்டு அநுஸந்தாநமும் வந்தாலன்றி உங்களைக் கீழே வீழ்த்துகிற தீவினை கழியாது. ஆதலால் அவ்வநுஸந்தாநத்தைப் பெற முயல்வீராக—என்றவாறு. 6

நாரசப்தத்தின் பொருள்—விளக்கம்

299 அழிவிலா வுயிர்கட் கேல்லா மருக்கனு யழியா வீசன்
வழியலா வழிவி லக்கு மதியேழ மாய மூர்த்தி
வழுவிலா திவைய னைத்தும் வயிற்றில்வைத் துமிழ்ந்த மாலை
நழுவிலா நார வாக்கி னுடிநீர் நணுகு வீரே. 7

உரை:— அழிவு இலா – அழிவு இல்லாமல் நித்யமாயுள்ள, உயிர்கட்கு எல்லாம் – ஜீவாத்மா எல்லாவற்றுக்கும், வழியலா வழி விலக்கும் – நல்வழியல்லாத (தீய) வழியில் புகாமல் விலக்குகின்ற, மதி எழ – விவேகம் வ்ருத்தியாகும்படி (செய்யவல்ல), அருக்கனுய் – ஸூர்யனுய் (நிற்பவனும்), அழியா ஈசன் – அழிவில்லாத தலைவனும், மாய மூர்த்தி–அதிசயமான திருமேனியுடையவனும், இவை அனைத்தும்– இவ்வுலகம் அனைத்தையும், வழுவு இலாது – குறைவுபடாது, வயிற்றில் வைத்து – (ப்ரளயகாலத்தில் தன்) திருவயிற்றில் அடக்கி, உமிழ்ந்த மாலை – (ஸ்ருஷ்டிகாலத்தில் மறுபடியும்) படைத்தவனுமான எம்பெருமானை, நழுவு இலா – (நாராயணசப்தத்தை விட்டுப் பிரியாத, நாரவாக்கில் – நாரம் என்னும் பதத்தால், நாடி – அநுஸந்தித்து, நீர் நணுகுவீர் – நீங்கள் (அவனை) அடைவீர்களாக.

ஜீவர்களுக்கு அழிவு கிடையாது; நித்யர்களாவர். அவர்கள் தீய வழியிற்புகுந்து கெட்டுப்போகாதபடி நல்லறிவைக்கொடுத்துக் காப்பவன் ஸர்வேசுவரன். அவனும் அழிவற்றவன்; அத்யாச்சர்யமான திருமேனியுடையவன்; இவ்வுலகம் முழுவதையும் ப்ரளயகாலத்தில் தன் திருவயிற்றில் வைத்துக் காத்துப் பின் ஸ்ருஷ்டிகாலத்தில் அவற்றை வெளிப்படுத்துகின்ருன். இத்தகைய சிறப்புடைய எம்பெருமானை நாராயணபதத்தில் ஒரு பாகமாயுள்ள நாரசப்தத்தில் (நரபதத்தால்) அநுஸந்தித்து அவனை அடைந்து உய்வீர்களாக— என்றவாறு.

நார என்னும் பதத்தில் அடங்கியுள்ள 'நர' என்ற சொல்லில் ந, ர என்று இரண்டு சிறு பதங்கள் உள்ளன. 'ர' என்ற பதம் 'ரீ' என்ற வினைப்பகுதியிலிருந்து வந்ததாகும். அந்த வினைப்பகுதிக்கு அழிதல் என்று பொருள். 'ந' என்னும் சொல் இல்லையென்ற பொருளுடையதாதலின், அது 'ர' என்ற பதத்துடன் சேர்ந்து 'நர' என்ருகி, அழியாத வஸ்து என்று பொருள் தந்தது. ஆகவே 'நர' என்னும் பதம் ஜீவனையும் பரமாத்மாவையும் சொல்லாநின்றது. இவ் விஷயமே முதலடியாற் கூறப்பட்டது.

'ந்ரு' என்னும் வினைப்பகுதியிலிருந்து 'நர' என்று ஆகும் போது எல்லா ப்ராணிகளையும் நல்லவழியிற் செலுத்துமவன் என்று பொருள் கிடைக்கின்றது. இவ்வர்த்தமே இரண்டாமடியாற் கூறப் பட்டது.

நரனைச் சேர்ந்தவை நாரங்கள் எனப்படும். இப்பொருளில் எம்பெருமானுடைய திருமேனி, குணங்கள் முதலியனவும் நாரபதத்தால் கூறப்பட்டனவாம். இவ்வர்த்தம் 'மாயமூர்த்தி' என்னும் தொடரால் ஸூசிப்பிக்கப்பட்டதாகின்றது.

நரனிடமிருந்து பிறந்தவை நாரங்கள் என்னப்படும். இதனால் ஈசுவரன் ஸகலவஸ்துக்களுக்கும் காரணம் என்ற அர்த்தம் ஸித்திக்கும். இவ்வர்த்தம் மூன்றாமடியாற் கூறப்பட்டது. 7

அயநசப்தத்தின் பொருள் — விளக்கம்

300 வயனமோன் றறிந்து ரைப்பார் வன்கழல் வணங்க வேள்கி
நயனமுள் ளின்றி நாளு நள்ளிரு ணண்ணி நின்றீ
ரயனமிவ் வனைத்துக் குந்தா னவைதனக் கயன மென்னப்
பயனுமாய்ப் பதியு மான பரமனைப் பணிமி னீரே. 8

உரை:— ஒன்று வயனம் - ஒப்பற்ற வேதத்(தின் அர்த்தத்)தை, அறிந்து உரைப்பார் - (தாம் நன்கு) அறிந்து (பிறருக்கு) உபதேசிப்பவர்(களான ஆசார்யர்)களின், வன் கழல் – வலிய திருவடிகளை, வணங்க வெள்கி – வணங்குவதற்கு வெட்கமடைந்து, உள் நயனம் இன்றி – (அதனால்) உட்கண்(ணாகிய ஜ்ஞாநம்) இல்லாமல், நாளும் – எப்போதும், நள் இருள் – அடர்ந்த (அஜ்ஞாநமாகிய) இருளை, நண்ணிநின்றீர் – அடைந்திருந்தவர்களே!, தான் – (எம்பெருமானாகிய) தான், இவ்வனைத்துக்கும் – இந்த ஸகல ஆத்மாக்களுக்கும், அயனம் – உபாயம், அவை – அந்த ஸகலசேதந — அசேதநங்களும், தனக்கு – (ஈசுவரனாகிய) தனக்கு, அயனம் – ப்ரவேசிக்கப்படும் வஸ்து, என்ன – என்று கூறும்படி, பயனுமாய் – பலனுமாய், பதியுமான – ஆதாரமுமான, பரமனை – ஸர்வேசுவரனை, நீர் பணிமின் – நீங்கள் வணங்குவீர்களாக.

வேதார்த்தங்களை நன்கு அறிந்து உபதேசிப்பவர்களான ஆசார்யர்களின் திருவடிகளை வணங்கி அவர்களின் உபதேசத்தைக் கேட்க வெட்கமடைந்து, அங்ஙனம் செய்யாது ஜ்ஞாநமாகிய கண்ணையிழந்து, எம்பெருமான் அனைத்திலும் உட்புகுந்து அந்தர்யாமியாய் நிற்பதை உணராது மோஹாந்தகாரத்தில் விழுந்துகிடக்கும் சேதநர்களே! நாராயணசப்தத்தில் நாரபதமும் அயநபதமும் சேர்ந்து பொருள்தரும் முறையை உணர்ந்து அவ்வநுஸந்தாநத்தால் எம்பெருமானைச் சரணமடைந்து உய்வீர்களாக — என்றவாறு.

நாராயணபதம், நார - அயநபதங்கள் சேர்ந்த ஒரு பதமாகும். இதை இவ்வாறு இரண்டுவிதமாய் ஒன்றுகூட்டலாம்—

(1) தத்புருஷஸமாஸம். [நாராணாம் அயநம்]. இது வேற்றுமைப்புணர்ச்சியெனப்படும். இது நாரங்களுக்கு அயநமாயிருப்பவன்

என்ற பொருளைத் தரும். அயநம் எனும் சொல் உபாயம், பலன், ஆதாரம் என்ற மூன்று பொருள்களைக்கூறும். நரனாகிய ஜீவாத்மாவின் கூட்டம் 'நாரம்' எனப்படும். எம்பெருமான் சேதநர்களின் கூட்டத்திற்கு உபாயமாகவும் அநுபவிக்கப்படும் பலனாகவும், தன்னிடமிருந்து பிறந்த சேதநாசேதநங்களுக்கு ஆதாரமாகவும் ஆகின்றானென்று தத்புருஷஸமாஸத்தால் ஸித்தித்தது.

(2) பஹுவ்ரீஹிஸமாஸம். [நாரா: அயநம் யஸ்ய] இது அன்மொழித்தொகையெனப்படும். இதனால் நாரங்களை அயநமாகவுடையவன் என்று அர்த்தம் கிடைக்கும். அயநபதம், ப்ரவேசிக்கப்படும் வஸ்து என்ற பொருளைத் தரும். ஆகவே ஸர்வேசுவரன் சேதநாசேதநங்களை ப்ரவேசிக்கப்படும் வஸ்துவாகக் கொண்டவன் என்று ஏற்பட்டது.

மேலும் அயநம் என்றசொல் வசிக்குமிடம் எனவும் பொருள் பெறுவதால் முற்கூறியபடி முதல்ஸமாஸத்தால் சேதந-அசேதநங்களுக்கு இருப்பிடமானவன் என்றும், இரண்டாவது ஸமாஸத்தால் அவற்றைத் தனக்கு இருப்பிடமாகக் கொண்டவன் என்றும் பெரியோர் அநுஸந்திப்பதுண்டு. இவ்வாறாயின் முதற்பொருளில் சேதந அசேதநங்கள் இல்லாதவிடத்திலும் எங்கும் ஸர்வேசுவரன் உளனென்று தேறும், இது பஹிர்வ்யாப்தியெனப்படும். இரண்டாம் பொருளில் சேதந-அசேதநங்கள் உள்ளவிடத்திலே தான் இல்லையென்னவொண்ணாதபடி ஸர்வேசுவரன் கலந்துநிற்பவனென்று தேறும். இது அந்தர்வ்யாப்தியெனப்படும். 8

நாராயணபதத்தின் நான்காம்வேற்றுமையுருபு — பொருள்

301 உயர்ந்தவ ருணர்ந்த வாற்ரு லுவந்தகுற் றேவ லெல்லா
மயர்ந்துநீ ரைம்பு லன்கட் கடிமைபூண் டலமர் கின்றீர்
பயந்திவை யனைத்து மேந்தும் பரமனார் நாம மோன்றில்
வியந்தபே ரடிமை தோற்றும் வேற்றுமை மேவு வீரே. 9

உரை:— உயர்ந்தவர்-(ஜ்ஞாநம் முதலியவற்றால்) சிறந்து நிற்கும் பெரியோர், உணர்ந்தவாற்றால் - (சாஸ்த்ரங்களை ஆராய்ந்து) நிச்சயித்த ப்ரகாரத்தால், உவந்த - (ஆசார்யர்கள்) திருவுள்ளம் உகந்த, குற்றேவல் எல்லாம் - கைங்கரியங்களை எல்லாம், அயர்ந்து - மறந்து, ஐம்புலன்கட்கு - ஐந்து இந்த்ரியங்கட்கும், அடிமைபூண்டு - தொண்டுபட்டு, அலமர்கின்றீர் - தடுமாறிநிற்கின்றவர்களே!, நீர் - நீங்கள், இவை அனைத்தும் - இந்த ஸகலவஸ்துக்களையும், பயந்து - ஸ்ருஷ்டித்து, ஏந்தும் - ரக்ஷிக்கின்ற, பரமனார் - ஸர்வேசுவரனுடைய, நாமம் ஒன்றில் - ஒப்பற்ற (நாராயணன் என்ற) திருநாமத்தின்மீது (நின்று), வியந்த பேரடிமை - விலக்ஷணமான பெரிய கைங்கர்யத்தை, தோற்றும்-

அறிவிக்கின்ற, வேற்றுமை – நான்காம் வேற்றுமையுருபை, மேவுவீர் – இசைவீர்களாக.

சேதநர்காள்! மஹர்ஷிகள் முதலியோர் சாஸ்த்ரங்களை நன்கு ஆராய்ந்து நிச்சயித்த முறையைத் தழுவி ஆசார்யர்களும் பகவத்கைங்கர்யத்தையே புருஷார்த்தமாகக்கொண்டனர். அத்தகைய கைங்கர்யத்தைச் செய்ய உங்கள் அனைவருக்கும் உரிமையுண்டு. தீவினையின் பயனாக அதை மறந்து இந்த்ரியஸுகத்தையே பெரிதாகக்கொண்டு நீங்கள் ஸம்ஸாரஸமுத்ரத்தில் அழுந்திக்கிடக்கின்றீர்கள். உங்களுக்கு ஓர் உபாயம் கூறுகின்றேன்—ஸகல வஸ்துக்களையும் படைத்துக் காப்பவனான ஸர்வேசுவரனுடைய திருநாமமான நாராயணபதத்தின் மேல் நான்காம்வேற்றுமையுருபு உளது. இது கைங்கர்யத்தைக் காட்டும். ஆகவே இந்த வேற்றுமையுருபின் பொருளை ஆராய்ந்து இதை அநுபவிக்க முற்படுங்கள்—என்றவாறு. 9

இவ்வர்த்தங்கள் ரஹஸ்யமாய்ச் சேமிக்கத்தக்கன

302 எண்டிசை பரவுஞ் சீரோ ரெங்களுக் கீந்த வெட்டி
லுண்டவா றுரைப்பார் போல வொன்பது பொருளு ரைத்தோ
மண்டுநான் மறையோர் காக்கு மாநிதி யிவைய னைத்துங்
கண்டவர் விள்ளார் விள்ளக் கருதுவார் காண்கி லாரே. 10

உரை:— எண் திசை – எட்டுத்திசைகளிலும், பரவும் சீரோர் – புகழப்படுகின்ற பெருமையையுடைய நம் ஆசார்யர்கள், எங்களுக்கு ஈந்த – எங்களுக்கு உபதேசித்த, எட்டில் – திருவஷ்டாக்ஷரத்தில், உண்டவாறு உரைப்பார்போல – (தாம்) உண்டமுறையை (ப்பிறருக்கு)க் கூறுபவரைப்போல, ஒன்பது பொருள் – ஒன்பது அர்த்தங்களையும், உரைத்தோம் - (நாம் அநுஸந்தித்தபடியே) வெளியிட்டோம்; மண்டு – (பெருமை) மிக்க, நான்மறையோர் – நான்கு வேதார்த்தங்களையும் கற்றுணர்ந்த நம் ஆசார்யர்களால், காக்கும் – ரக்ஷிக்கப்பட்ட, மா நிதி– பெரிய சேமநிதிபோன்ற, இவை அனைத்தும் – இவ்வர்த்தங்கள் முழுவதையும், கண்டவர் - (நன்கு) உணர்ந்தவர்கள், விள்ளார் - (ஸுலபமாய்) வெளியிடமாட்டார்கள்; விள்ளக் கருதுவார் - (ஸுலபமாய்) வெளியிடக் கருதுமவர், காண்கிலார் - (இவ்வர்த்தங்களை நன்கு) உணர்ந்தவராகமாட்டார்கள்.

நம் ஆசார்யர்களின் பெருமையை உலகம் முழுதும் புகழ்ந்து பேசும். இத்தகைய ஆசார்யர்கள் பரமகிருபையுடன் நமக்குத் திருவஷ்டாக்ஷரத்தை அர்த்தத்தோடு உபதேசித்தனர். அவ்வர்த்தங்களை நன்கு அநுஸந்தித்து மகிழ்ந்தோம். உலகில் தாம் உண்ட முறையைப் பிறருக்குக் கூறுவதுபோல நம்முடைய அநுஸந்தாநத்தின் படியே அவ்வர்த்தங்களை இப்பிரபந்தத்தில் ஒன்பது பாசுரங்களால் விளக்கினோம். ஆசார்யர்கள் பெரிய நிதியாகச் சேமித்துவைத்த இந்த

ரஹஸ்யார்த்தங்களை நன்கு உணர்ந்து அநுபவித்தவர்கள் தகாதவர்க்கு இவற்றைக் கூறத் துணியமாட்டார்கள். இங்ஙனன்றி இவ்வர்த்தங்களைத் தோன்றியவாறு வெளியிட்டுக் கடைத்தெருப்புராணமாக்குபவர் இவ்வர்த்தங்களை உள்ளவாறு அறிந்தவராகமாட்டார்—என்றவாறு. 10

திருமந்திரத்தின் திரண்ட பொருள்

ஸ்ரீமந்நாராயணன் அனைத்தையும் காப்பவன்; பிராட்டியை க்ஷணமும் பிரியாதவன்; அழிவற்றவன்; ஸகல ப்ராணிகளுக்கும் நல்லறிவளித்து நல்வழிப்படுத்துமவன்; விலக்ஷணமான திருமேனியையும் அளவற்ற திருக்கல்யாண குணங்களையும் உடையவன்; ஸகல வஸ்துக்களையும் படைப்பவன்; சேதநர்க்கு உபாயமாகவும் பலனாகவும் நிற்பவன்; சேதநாசேதநங்களுக்கு ஆதாரமாய்நின்று அவற்றுள் பிரவேசித்து அந்தர்யாமியாய் நிற்பவன்.

ஜீவாத்மா ஜ்ஞாநஸ்வரூபன்; ஜ்ஞாநத்தையே குணமாகக் கொண்டவன்; அணுவாய்நிற்பவன்; ஈசுவரனிலும் அசேதநங்களிலும் வேறுபட்டவன்; இவன் எம்பெருமானுக்கும் பிராட்டிக்குமே அடியனாவான். இவனுக்குச் சேஷமானது ஒன்றும் இல்லை. ஸ்ரீமந்நாராயணனுக்கே வசப்பட்டு நிற்பவன்; இவனுக்கு எவ்வகைச் சுதந்திரமும் கிடையாது. இத்தகைய ஜீவாத்மாவாகிய அடியேன் ஸ்ரீமந்நாராயணனுக்கு நித்யகைங்கர்யம் செய்வேன்—என்றவாறு.

திருமந்திரச்சுருக்கு — உரை முற்றிற்று

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

ஸ்ரீ:

துவயச்சுருக்கு—உரை

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான்திருவடிகளே சரணம்

[விஷயச்சுருக்கம்]

முன்னொருகால் பிராட்டி, ஸம்ஸாரஸமுத்ரத்தில் மூழ்கித்தவிக்கும் சேதநர்களைக் கண்டு மனமுருகி, எம்பெருமானிடம் ஜீவர்கள் உஜ்ஜீவிப்பதற்கு ஸாதநமாயுள்ள ஒன்றைக் கூறியருளும்படி கேட்டாள். அதைச் செவியுற்ற எம்பெருமான் உபநிஷத்தில் தனித்துக் கிடந்த இரண்டு வாக்யங்களைச் சேர்த்து எல்லோரும் எக்காலத்திலும் அநுஸந்திக்கும்படி ஒரு மந்த்ரமாக்கி அருள்புரிந்தான். அதுவே த்வயமெனப்படுகின்றது. த்வயம் = இரண்டு. இரண்டு பாகமாயிருந்து முதற்பாகம் உபாயத்தையும், இரண்டாம் பாகம் பலனையும் வெளியிடுவதால் அதற்கு இப்பெயர் வந்தது. (முதற்

பாகம் எம்பெருமானைச் சரணமாக ஜீவன் வரித்தலையும், இரண்டாம் பாகம் ஜீவன் தன்னுடைய ஸ்வரூபத்தையும் தன்னை ரக்ஷிக்கும் பொறுப்பையும் பலனையும் எம்பெருமானிடம் ஸமர்ப்பிப்பதையும் வெளியிடுதலால் த்வயமெனப் பெயர்கொண்டது என்றும் பெரியோர் பணிப்பர்.) இப்பிரபந்தம் அம்மந்த்ரத்தின் அர்த்தத்தைச் சுருக்கி வெளியிடுவதால் "துவயச்சுருக்கு" எனப் பெயர்கொண்டது.

இதில் முதற் பாசுரத்தில் த்வயம் அவதரித்த வகையைக் கூறி, த்வயத்தின் பொருள் 10-என்று தொகுத்துக் கூறி மற்றைப் பாசுரங்களில் முறையே அப் பத்தர்த்தங்களையும் காட்டும் உறுப்புக்களான (1) ஸ்ரீசப்தம், (2) அதன்மீதுள்ள மதுப் என்னும் விகுதி, (3) நாராயண சப்தம், (4) சரண சப்தம், (5) சரணசப்தம், (6) ப்ர என்னும் உபஸர்க்கத்துடன் கூடிய பத் என்னும் வினைப்பகுதி, (7) அதிலுள்ள தன்மையுருபு, (8) பிற்பகுதியிலுள்ள ஸ்ரீமந்நாராயணசப்தம், (9) அதன்மேலுள்ள நான்காம் வேற்றுமையுருபு, (10) நம: சப்தம் என்னும் இவற்றின் பொருளை அருளி, இங்ஙனே கூறிய பத்து அர்த்தங்களையும் இறுதியில் ஒரு பாசுரத்தில் சேர்த்துக் கூறி முடித்தருள்கிறார் ஸ்ரீதேசிகன்.

இப் பிரபந்தம் முழுதும் கட்டளைக்கலித்துறையால் அமைந்ததாம்

துவயம் — அவதரித்த முறை — விளக்கம்

303 இன்னமு திற்பிறந் தாளிதங் கேட்க வுரைத்தபிரான்
பொன்னரு ளான்மறை மௌலியிற் பூண்ட விரண்டிசைத்துத்
தன்னுரை மிக்க தனமி தேனத்தந்த வேதகத்திற்
றுன்னு பொருள்கள்பத் துந்தொலை யாநிதி யாகின்றவே. 1

உரை:— இன் அமுதில் – இனிய அம்ருதத்தில், பிறந்தாள் – அவதரித்த பிராட்டி, இதம் கேட்க – (ஸம்ஸாரிகளுக்கு) ஹிதமாவதை (உபதேசிக்குமாறு) கேட்க, உரைத்த – உபதேசித்த, பிரான் – உபகாரகனான எம்பெருமான், பொன் அருளால் – (தன்) சிறந்த கருணையால், மறை – வேதமானது, மௌலியில் பூண்ட – தன் முடியாகிய (கட) உபநிஷத்தில் கொண்ட, இரண்டு–இரண்டு வாக்யங்களை, இசைத்து–ஒன்று சேர்த்து, இது – "இந்த த்வயம், தன் உரை – தன்னுடைய ஸூக்திகளுள், மிக்க தனம் – சிறந்த தனம் போன்றதாகும்", என – என்று கூறும்படி, தந்த – உபதேசித்த, வேதகத்தில் – (சரணாகதியை) அறிவிக்குமதான த்வயத்தில், துன்னு பொருள்கள் பத்தும் – பொருந்திய அர்த்தங்கள் பத்தும், தொலையா நிதி–அழியாத சேமநிதியாக, ஆகின்ற– ஆகின்றன. ஏ – அசை.

ஸம்ஸாரத்தில் வருந்துகின்ற சேதநர்களாகிய குழவிகளைக் கண்டு பெற்ற தாயாய்நின்று மனம்பொறாத பிராட்டி அவர்கள் உய்யும் வழிகாட்டுமாறு எம்பெருமானை வேண்ட, அதற்கு இசைந்து அவன்

கடவல்லியில் இரண்டிடத்திலிருந்து ஒன்றுதிரட்டி மந்த்ரமாக்கி வெளியிட்டதால் த்வயம் மற்ற எல்லா ஸூக்திகளினும் சிறந்துநிற்கும். அதன் அர்த்தங்கள் பத்தும் பெரிய நிதியாகச் சேமித்துவைக்க உரியனவாம்—என்றவாறு. 1

ஸ்ரீசப்தத்தின் ஆறு அர்த்தங்கள் — விளக்கம்

304 அருவுரு வானவை தன்னை யடைந்திடத் தானடைந்து
வெருவுரை கேட்டவை கேட்பித் தகற்றும் வினைவிலக்கி
யிருதலை யன்புத னாலெமை யின்னடி சேர்த்தருளுந்
திருவுட னேதிகழ் வார்சேறிந் தாரெங்கள் சிந்தையுளே. 2

உரை:— அரு உரு ஆனவை-சேதநம் அசேதநம் ஆகிய அனைத்தும், தன்னை அடைந்திட - தன்னை அடைந்து நிற்க, தான் அடைந்து - (பிராட்டியாகிய) தான் (ஸர்வேசுவரனை அல்லது ஸகல வஸ்துக்களையும்) அடைந்து, வெருவுரை கேட்டு - (சேதநர்கள்) பயத்தால் கூறும் வார்த்தைகளைக்கேட்டு, அவை கேட்பித்து - அவ்வார்த்தைகளை (எம்பெருமானை)க் கேட்பித்து, அகற்றும் வினை விலக்கி-(ஈசுவரனோடு சேரவொட்டாது சேதநர்களை) விலக்கிவைக்கும் கர்மங்களைக் கழித்து, இருதலை அன்புதனால் - (எம்பெருமான் சேதநர்கள் ஆகிய) இரண்டு பக்கங்களிலும் உள்ள அன்பினால், எமை - (ஸம்ஸாரிகளாகிய) எம்மை, இன் அடி - (எம்பெருமானுடைய) இனிய திருவடிகளில், சேர்த்தருளும் - சேர்த்தருளுபவளான, திருவுடனே - பிராட்டியுடனே, திகழ்வார் - ப்ரகாசிப்பவரான எம்பெருமான், எங்கள் சிந்தையுளே - எங்கள் மனத்துள், செறிந்தார் - நித்யவாஸம் செய்தருளினார்.

ஸ்ரீ என்னும் பதம் பிராட்டியைக் கூறும். இப்பதம் வந்த வழியை ஆய்ந்தால் ஆறுவகையாய்ப் பலவகைப் பொருளை இப்பதம் கொடுப்பதாகும். அவையாவன— श्रीयते, श्रयते, शृणोति, श्रावयति, शृणाति, श्रीणाति—என்பனவாம்.

(1) श्रीयते—அடையப்படுகிறாள். உஜ்ஜீவிக்க விரும்புகின்ற ஸகல ப்ராணிகளாலும் அடையப்படுகிறாள்.

(2) श्रयते— அடைகின்றாள். தன்னையடைந்தவர்களை உய்விக்க வேண்டி ஸர்வேசுவரனைத் தான் அடைகிறாள். எல்லோராலும் ஸேவிக்கப்பட்டுத் தானும் எம்பெருமானை ஸேவித்திருக்கிறாளென்றும் கூறலாம். அல்லது — श्रीयते என்றதற்கு எல்லாவஸ்துக்களாலும் ஆதாரமாய் அடையப்படுகிறாளென்றும், श्रयते என்றதற்கு எல்லாப் பொருள்களையும் ப்ரவேசிக்கப்படும் இடமாக அடைகிறாளென்றும் பொருள்கொண்டு ஸகல வஸ்துக்களிலும் எம்பெருமானைப்போல் உள்ளும் புறமும் வியாபித்து நிற்கும் பெருமை கூறப்பட்டதாகவும் கொள்ளலாம்.

(3) शृणोति— கேட்கிறாள். சேதநர்கள் "அபராதிகளான எங்களை ஸர்வேசுவரன் திருவடிகளில் சேர்க்கவேணும்" என்று பயத்தோடு கூறும் வார்த்தையைக் கேட்கின்றாள்.

(4) श्रावयति— கேட்கச்செய்கின்றாள். சேதநர்களுடைய அத்தகைய ஈனக்குரலை ஸர்வேசுவரன் கேட்குமாறு அவனிடம் விண்ணப்பம் செய்கின்றாள். அல்லது—சேதநர்களுக்கு ஹிதமாக எம்பெருமான் கூறிய வார்த்தைகளைக் கேட்டு, அவற்றைத் தக்க ஸமயத்தில் அவனுக்கு நினைவூட்டிச் சேதநரைக் காக்கின்றாள். அல்லது-ஸர்வேசுவரனிடம் உலகத்திற்கு நன்மைகளைக் கேட்டுப் பின் சத்ருக்களும் கேட்குமாறு உபதேசிக்கின்றாள்.

(5) शृणाति— நீக்குகின்றாள். தன்னை அடைந்தவர்களுக்கு உபாயத்தை அநுஷ்டிக்க இடையூறாகவுள்ள கர்மங்கள் முதலியவற்றைப் போக்குகின்றாள்.

(6) श्रीणाति— பரிபக்வநிலையை உண்டாக்குகின்றாள். தன்னை அடைந்தவர்கள் கைங்கர்யம்செய்வதற்குத் தக்கவாறு அவர்களுடைய குணங்களைப் பரிபக்குவமாக்குகின்றாள்.

இத்தகைய பெருமைவாய்ந்த பிராட்டியுடன் ப்ரகாசிக்கும் எம்பெருமான் நம் மனத்தை விட்டகலாது நித்யவாஸம் செய்தருள்கின்றான்—என்றவாறு. 2

ஸ்ரீசப்தத்தின் 'மதுப்' என்னும் விகுதி—பொருள்விளக்கம்

305 ஒருயி ராய்நின்ற வொண்சுட ரின்ப வுருத்தனிலும்
பேருரு வத்திலும் பின்னதிற் றோற்று முருக்களிலு
மோருரு வான வுலகிலு மேற்கு முருக்களினாற்
சேருதன் மன்னுசெய் யாளன்பர் நம்மனஞ் சேர்ந்தனரே.

உரை:— ஓர் உயிராய் நின்ற – (ஸகலவஸ்துக்களிலும்) ஒரே அந்தர்யாமியாய் நின்றதும், ஒண் சுடர் – விளக்கமுள்ள ஜ்ஞாநஸ்வரூபமானதும், இன்ப–ஆநந்தஸ்வரூபமாய்நிற்பதுமான, உருத்தனிலும்–திவ்யாத்மஸ்வரூபத்திலும், பேர் உருவத்திலும் - பெரியதான (பரவாஸுதேவனுடைய) திருமேனியிலும், அதில் பின் தோற்றும் – அதிலிருந்து பிறகு தோன்றுகின்ற, உருக்களிலும் – (வ்யூஹம் முதலிய) உருவங்களிலும், ஓர் உருவான – (பகவானுக்குச்) சரீரமாகவேயுள்ள, உலகிலும் – இந்த ப்ரபஞ்சத்திலும், ஏற்கும் உருக்களினால் – (அவ்வவற்றுக்குத் தக்கபடி) ஏற்றுக்கொள்கின்ற உருவங்களோடு, சேருதல் மன்னு செய்யாள் – நித்யமாய்ப் பொருந்திநிற்கும் பிராட்டியின், அன்பர் – அன்பிற்கு உரிய ஸர்வேசுவரனார், நம் மனம் சேர்ந்தனர் – நம்முடைய நெஞ்சில் நித்யவாஸம்செய்தனர்.

ஸ்ரீமத் என்ற பதத்தில் ஸ்ரீசப்தத்தின்மேலுள்ள 'மதுப்' என்னும் விகுதி, பிராட்டி எம்பெருமானை விட்டுக் கணநேரமும் பிரியாமல் இருக்கும் இருப்பைக் காட்டும். ஸகலவஸ்துக்களிலும் அந்தர்யாமியாய் ஜ்ஞாநாநந்தஸ்வரூபனாய் நிற்கும் எம்பெருமானுடைய திவ்யாத்மஸ்வரூபத்துடன் பிராட்டியின் அத்தகைய திவ்யாத்மஸ்வரூபமும் சேர்ந்துநிற்கின்றது. ஸ்ரீவைகுண்டத்தில் ப்ரகாசிக்கும் பரவாஸுதேவவிக்ரஹத்திலும், வாஸுதேவன் ஸங்கர்ஷணன் முதலிய வ்யூஹவிக்ரஹங்களிலும், ராமன் க்ருஷ்ணன் முதலிய விபவாவதாரங்களிலும், கோயில் திருமலை பெருமாள்கோயில் முதலிய திவ்யதேசங்களில் எழுந்தருளியுள்ள அர்ச்சாவிக்ரஹங்களிலும், ஒவ்வொரு வஸ்துவிலும் புகுந்துநிற்கும் அந்தர்யாமிரூபத்திலும் அவ்வவற்றுக்குத் தக்கவாறு பிராட்டி எம்பெருமானைப் பிரியாது நிற்கின்றாள். எம்பெருமானுக்குரிய ஆண்பாலாகவுள்ள வஸ்துக்களுக்குத் தக்கவாறு பிராட்டியும் தனக்கு உரிய பெண்பாலாகவுள்ள வஸ்துக்களைக் கொண்டு கலந்துநிற்கின்றாள். இவ்வாறு எம்பெருமானுடைய ஸ்வரூபம், ரூபம், விபூதி ஆகிய இவற்றுள் பிராட்டியும் தன் ஸ்வரூபம், ரூபம், விபூதி இவற்றுடன் கலந்து பிரியாதிருப்பதே ஸ்ரீசப்தத்தின் மேலுள்ள 'மதுப்' விகுதியின் பொருளாகும். இத்தகைய பிராட்டியுடன் எம்பெருமான் நம் மனஸ்ஸில் நித்யவாஸம் செய்கின்றான்—என்றவாறு. 3

முற்பகுதி—நாராயணசப்தம் – பொருள் விளக்கம்

306 காரண மாயிறை யாய்க்கதி யாயம ரும்பதியா
யாரண மோது மனைத்துற வாயக லாவுயிராய்ச்
சீரணி யுஞ்சுட ராய்ச்சேறிந் தெங்குந் திகழ்ந்துநின்ற
நாரண னார்நமக் காய்நல்கி நாந்தொழ நின்றனரே. 4

உரை:— காரணமாய் – (உலகத்திற்குக்) காரணமாய், இறையாய் – ஆள்பவராய், கதியாய் – உபாயமாய், பலனாய், அமரும் பதியாய் – (ஸர்வவஸ்துக்களும் தனக்குள்) பொருந்தும்படியான ஆதாரமாய், ஆரணம் ஓதும் – வேதங்களால் கூறப்படுகின்ற, அனைத்து உறவாய் – ஸகலவிதபந்துவுமாய், அகலா உயிராய் – விட்டுப்பிரியாத உயிராய், சீர் அணியும் சுடராய் – திருக்கல்யாணகுணங்களுக்கும் அழகுசெய்யும் ஜ்ஞாநஸ்வரூபராய், எங்கும் செறிந்து – எங்கும் வியாபித்து, திகழ்ந்து நின்ற – ப்ரகாசிக்கின்ற, நாரணனார் – ஸ்ரீமந்நாராயணனார், நமக்காய் – நம்பொருட்டு, நல்கி – க்ருபைசெய்து, நாம் தொழ – நாம் சரணமடையும்படி, நின்றனர் – நிலையாய்நின்றனர்.

நாராயணசப்தத்தில் — நரனிடமிருந்து பிறந்த வஸ்துக்கள் நாரங்கள் என்னும்போது எம்பெருமான் அனைத்துக்கும் காரணமென்று ஏற்பட்டது. 'ந்ரு' என்னும் வினைப்பகுதியிலிருந்து 'நரன்' என்று ஆகும்போது 'ஆள்பவன்' (நியந்தா) என்று ஸித்தித்தது.

'அயநம்' என்னுஞ்சொல் உபாயம், பலன், ஆதாரம் என்ற அர்த்தங்களைக் கூறுவதால் எல்லோருக்கும் உபாயமாகவும் பலனாகவும் ஆகின்றானென்றும், எல்லா வஸ்துக்களும் தனக்குள் அடங்கிக் கிடக்கும்படியான ஆதாரமாகின்றானென்றும் ஏற்பட்டது. நரனுடையவை நாரங்கள் என்னும்போது ஆறும்வேற்றுமையுருபினால் ஸம்பந்தம் தோற்றுவதால் உபநிஷத்து முதலியவற்றில்–தாய், தந்தை, ஸஹோதரன், ஆதாரம், சரணம், தோழன், கதி என்று கூறப்படும் ஸகல வித பந்துவும் ஸ்ரீமந்நாராயணனே என்று முடிந்தது.

பஹுவ்ரீஹி (அன்மொழித்தொகை) ஸமாஸத்தால் நாரங்களை ப்ரவேசிக்கும் இடமாகக் கொண்டவன் என்ற பொருள் வந்து சேதநாசேதநங்களில் உட்புகுந்து அந்தர்யாமியாயிருக்கிறானென்று ஸித்தித்தது.

நரனுடையவை நாரங்கள் என்னும்போது நரனாகிய எம்பெருமானுடைய குணங்கள் முதலியன கூறப்படுவதால் அவற்றையுடையனாந்தன்மை கூறப்பட்டது.

நாரங்களுக்கு இருப்பிடமாயுள்ளவன் என்னும்போது தன் திருமேனியின் ஏகதேசத்தில் ஸகல வஸ்துக்களும் அடங்கிக்கிடக்கும்படி அவற்றை வியாபித்து நிற்பவன் என்று ஸித்தித்தது.

இன்னும் இதன் விரிவெல்லாம் 299, 300-வது பாசுரவுரைக் குறிப்பிற் காண்க.

த்வயத்தின் முற்பகுதியிலுள்ள நாராயணசப்தம் திருமந்த்ரத்திற்போல் பொதுவான குணங்கள் அனைத்தையும் கூறினும், இப்பகுதி ஸர்வேசுவரன் உபாயமாந்தன்மையையே காட்டுவதால், இந்த நாராயணசப்தத்திற்கு அவன் உபாயமாவதற்கு அவசியமான வாத்ஸல்யம் முதலிய குணங்களைக் கூறுவதிலேயே முக்கிய நோக்கமெனத் தெளிக. இத்தகைய குணங்களின் விளக்கத்தை 317-வது பாசுரவுரைக்குறிப்பிற் காண்க. 4

சரணசப்தம்–பொருள் விளக்கம்

307 வானமர் மன்னுரு வாய்வகை யாலதி னலுருவாய்
மீனம தாமைகே ழன்முத லாம்விப வங்களுமா
யூனம ருள்ளுரு வாயொளி யாத வருச்சையுமாந்
தேனமர் சேங்கழ லான்சேர்த்த னன்கழ லேம்மனத்தே. 5

உரை:— வான் அமர் – ஸ்ரீவைகுண்டத்தில் அமர்ந்துள்ள, மன் உருவாய்–நித்யமான ரூபத்தையுடைய (பரவாஸுதேவ) னாய், அதில்–அந்த (ப் பரவாஸுதேவ) ரூபத்திலிருந்து (உண்டான), நால்வகையால் உருவாய்–நான்குவகையோடுகூடிய (வ்யூஹ) உருவத்தையுடையனாய். மீனமது - மத்ஸ்யாவதாரம், ஆமை – கூர்மாவதாரம், கேழல் –

வராஹாவதாரம், முதலாம் விபவங்களுமாய் – முதலிய விபவாவதாரங்களையுமுடையவனாய், ஊன் அமர் – சரீரத்தில் அடங்கியுள்ள, உள்ளுருவாய் – ஸூக்ஷ்மரூபத்தையுடைய அந்தர்யாமியாய், ஒளியாத – மறைவுபடா(து எல்லோரும் அநுபவிக்கத் தகுந்)த, அருச்சையும் ஆம் – அர்ச்சாரூபத்தையுடையனுமாகிற, தேன் அமர் – தேன் நிறைந்துள்ள, செம் கழலான்-சிவந்த திருவடித்தாமரையையுடைய ஸ்ரீமந்நாராயணன், கழல் – (தன்) திருவடிகளை, எம் மனத்து – எம்முடைய மநஸ்ஸில், சேர்த்தனன் – வைத்தருளினான்.

இம்மந்திரத்திலுள்ள சரணசப்தம் எம்பெருமானுடைய திருவடிகளை நேராகக் கூறி அவ்வழியாக அவனுடைய திருமேனியைக் குறிக்கின்றது.

எம்பெருமானுடைய திருமேனி, பரம்—வ்யூஹம்—விபவம்—அந்தர்யாமி—அர்ச்சை என ஐந்துவகைப்படும். (1) பரரூபம்—ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளியுள்ள பரவாஸுதேவனுடைய ரூபம். (2) வ்யூஹம்—வாஸுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன் எனப்படும் ரூபங்கள். (3) விபவம்-மத்ஸ்யம் கூர்மம் முதலிய அவதாரங்கள், (4) அந்தர்யாமி—எல்லோருடைய ஹ்ருதயத்திலும் ஸூக்ஷ்மமான உருவத்துடன் நிற்கும் நிலை. (5) அர்ச்சை — கோயில், திருமலை, பெருமாள்கோயில் முதலிய திவ்யதேசங்களில் திருமேனிகொண்டு எழுந்தருளியுள்ள நிலையும், மற்றும் பக்தர்களின் வேண்டுகோளின்படி அவரவர்விருப்பத்திற்கேற்றவாறு திருமேனிகொண்டு நிற்கும் நிலையும்.

இவ்வாறு நிற்கும் எம்பெருமான் தன் திருவடிகளை நமது நெஞ்சில் வைத்தருளினான்—என்றவாறு. 5

சரணசப்தம்— பொருள் விளக்கம்

308 வேறோ ரணங்கு தொழும்வினை தீர்த்தெமை யாண்டிடுவா
றாறு மதன்பய னுந்தந் தளிக்கு மருளுடையான்
மாறில தாயில கும்மது மெல்லடிப் போதிரண்டா
னாறு துழாய்முடி யானமக் குச்சர ணாயினனே. 6

உரை :— நாறு துழாய் முடியான் – மணங்கமழ்கின்ற திருத்துழாயை முடியிலணிந்த ஸ்ரீமந்நாராயணன், வேறு ஓர் அணங்கு – வேறு ஒரு தெய்வத்தை, தொழும் வினை தீர்த்து – வணங்குதலாகிய செய்கையை நீக்கி, – எமை ஆண்டிடுவான் – எம்மை ஆட்கொள்ளும் பொருட்டு, ஆறும் – உபாயத்தையும், அதன் பயனும் – அதன் பலனையும், தந்து அளிக்கும் – கொடுத்துக் காக்கவல்ல, அருளுடையான் – கருணையுடையனாகி, மாறு இலதாய் – அழிவு இல்லாததாய், இலகும் – ப்ரகாசிக்கின்ற, மது – அம்ருதத்தைப் பெருக்குகின்ற, மெல் அடிப் போது இரண்டால் – மெல்லிய இரண்டு திருவடித் தாமரைகளால், நமக்குச் சரண் ஆயினன் – நமக்கு உபாயமாக ஆயினன்.

இலகும்மது — விரித்தல், செய்யுள்விகாரம்.

என்றும் மணம் மாருத திருத்துழாயை அணிந்த எம்பெருமான், வேறு தெய்வங்களைத் தொழும்படியுள்ள நம் தீவினையைக் கழித்து நம்மை ஆட்கொள்ளத் திருவுள்ளங்கொண்டு, அடைந்தவர்களைக் கைவிடாது காக்கும் தன் திருவடிகளைக் காட்டிக்கொடுத்து நமக்கு உபாயமாய்நின்ருன் — என்றவாறு. இங்ஙன் ஸர்வேசுவரன் உபாயமாய்நிற்பதே சரணசப்தத்தின் பொருள். 6

(ப்ர)பத் - வினைப்பகுதி – பொருள் விளக்கம்

309 பெறுவது நாம்பெரி யோர்பெறும் பேறென நின்றவெமை
வெறுமை யுணர்த்தி விலக்காத நன்னிலே யாதரிப்பித்
துறுமதி யாற்றனை யோண்சர ணென்ற வுணர்வுதந்த
மறுவுடை மார்பனுக் கேமன் னடைக்கல மாயினமே. 7

உரை :—நாம் பெறுவது – (நீசரான) நாம் பெறக்கூடியது, பெரியோர் பெறும் பேறு என – பெரியோர்கள் அடையக்கூடிய பலன் என்று, நின்ற எமை – எதிர்பார்த்திருந்த எம்மை, வெறுமை – (வேறு உபாயத்தில் அதிகாரம்) இல்லாத தன்மையை, உணர்த்தி – அறிவித்து, விலக்காத – விலக்கத்தகாத, நல் நிலே ஆதரிப்பித்து – நல்ல நிஷ்டையை விரும்பச்செய்து, உறு மதியால் – மிகவும் திடமான நம்பிக்கையால், தனே ஒண் சரண் என்ற – தன்னைச் சிறந்த அடைக்கலம் என்று கொள்ளலாம்படியான, உணர்வு தந்த - ஜ்ஞானத்தை அருளிய, மறுவுடை மார்பனுக்கே – (ஸ்ரீவத்ஸமென்ற) மறு விளங்கும் மார்பை யுடைய ஸ்ரீமந்நாராயணனுக்கே, மன் அடைக்கலம் ஆயினம் - மிகவும் ரக்ஷிக்கப்படவேண்டிய வஸ்துவாக ஆனேம்.

'ப்ரபத்யே' என்னும்போது 'பத்' என்னும் வினைப்பகுதி ஜ்ஞானம் என்னும் பொருளைத் தரும். இங்கு அவசியமான ஜ்ஞானம் 'ஸர்வேசுவரன் நம்மைக் காப்பான்' என்ற நம்பிக்கையேயாகும். 'ப்ர' என்னும் உபஸர்க்கம் அத்தகைய நம்பிக்கையின் மிகுதியைக் காட்டும். ஆக அந்த வினைப்பகுதி மஹாவிசுவாஸத்தைக் கூறியதாயிற்று. மஹாவிசுவாஸமாவது — நம்மிடம் எத்தகைய குற்றம் இருப்பினும் நாம் அநுஷ்டித்த ப்ரபத்தியால் வசப்பட்ட எம்பெருமான் நம்மை அவசியம் காத்தருள்வான் என்ற ஒரு நம்பிக்கை. இதுவே ப்ரபத்திக்கு மிக முக்கியமான ஓர் அங்கமாகும். இவ்வங்கத்தைக் கூறவே இதை முன்னிட்டுக்கொண்டு செய்யும் ப்ரபத்தியோகமே இங்குக் கூறப்பட்டதாகின்றது. இந்த மஹாவிசுவாஸத்தாலே, நாம் நீசராயிருந்தும் பக்தியோகத்தை அநுஷ்டித்த மஹர்ஷிகள் முதலிய பெரியோர் பெறும் பலனுகிய மோக்ஷாநந்தத்தைப் பெற உரிமையுண்டு என்று உறுதியுண்டாகி அதில் ஆவலும் உண்டாகின்றது. இத்தகைய நம்மிடம் பக்தியோகம் முதலிய கைம்முதலில்லாத நிலைமையை நாம் அறியுமாறு

ஈசுவரன் அறிவைக் கொடுக்கின்றான். மேலும் நம்முடைய தாழ்நிலை யையும் எம்பெருமானுடைய மேன்மையையும் கண்டு அவனை அணுக அஞ்சி நாமே விலகிவிடாமல் அவனுடைய எளிமையை (ஸௌலப் யத்தை)க் கண்டு அவனை நெருங்கிச் சரணமடையும்படி நல்ல நிலைமை யையும் அவன் கொடுக்கின்றான். பின் மஹாவிசுவாஸத்தையும் அருளித் தன்னைச் சரணமடையுமாறு செய்கின்ற ஸ்ரீமந்நாராயணனால் ரக்ஷிக்கப்படவேண்டிய வஸ்துவாக ஆனோம்—என்றவாறு. ஆக மஹாவிசுவாஸத்துடன் கூடிய ப்ரபத்தியைச் செய்தலே 'ப்ரபத்' என்ற வினைப்பகுதியின் பொருள். 7

ப்ரபத்யே — தன்மையொருமை—பொருள்விளக்கம்

310 அருமறை யாதுந் துறவோ மெனவறிந் தார்கவருங்
கருமமு ஞானமுங் காதலுங் கண்டு முயலகிலோம்
வருவது மிந்நிலை யாய்மய லுற்ற வெமக்குளதோ
திருமக ளார்பிரி யாத்திரு மாலன்றி நற்சரணே. 8

உரை :— அரு மறை யாதும் — அருமையான வேதங்(களுள் விதித்த விதி)களில் எதையும், துறவோம் என — கைவிடமாட்டோம் என்று (நினைத்து), அறிந்தார் கவரும் – அறிவாளர்கள் கைக்கொள் கின்ற, கருமமும் – கர்மயோகமும், ஞானமும் – ஜ்ஞாநயோகமும், காதலும் – பக்தியோகமும் (ஆகிய உபாயங்களை), கண்டு – (அநுஷ் டிக்கக் கடினமாயிருப்பதை) அறிந்து, முயலகிலோம் – (அவற்றில்) ப்ரவர்த்திக்கச் சக்தியற்றிருக்கிறோம். வருவதும் – இனி வருங்கால மும், இந்நிலையாய் – (மற்ற உபாயங்களை அநுஷ்டிக்க முடியாமை யாகிய) இதே நிலைமையாய், மயல் உற்ற – (செய்யவேண்டியதை அறியாது) மயக்கத்தை அடைந்த, எமக்கு – எங்களுக்கு, திருமகளார் பிரியா – பெரியபிராட்டியார் விட்டுநீங்காத, திருமால் அன்றி – எம்பெருமானைத் தவிர, நல் சரண் – சிறந்த உபாயம், உளதோ – இருக்கின்றதோ? (இல்லை).

ப்ரபத்யே என்ற வினைமுற்றில் (க்ரியாபதத்தில்) தன்மை யொருமைவிகுதியால் (உத்தமபுருஷனால்) உபாயத்தை அநுஷ்டிக் கும் அதிகாரியின் ஆகிஞ்சந்யம் தோற்றுகிறது. ஆகிஞ்சந்யமாவது— பக்தியோகம் முதலிய மற்ற உபாயங்களைச் செய்யச் சக்தியில்லாமை. பக்தியோகம் முதலிய உபாயங்கள், வேதார்த்தங்களைச் செவ்வனே அறிந்து, வேதத்தில் விதிக்கப்பட்ட கர்மங்களை வழுவாது நடத்தத் திறனுள்ளவர்களால் மாத்திரம் அநுஷ்டிக்கத்தக்கனவாகும். இத்தகைய சக்தி நம்மிடம் இல்லாமையால் அத்தகைய உபாயங் களைச் செய்ய இதுகாறும் முயலாதிருந்தோம். இனி வருங்காலத் திலும் அவற்றை அநுஷ்டிக்கப் போதிய அதிகாரத்தை நாம் புதிதாய்ப் பெறப்போவதில்லை. இதனால் திகைத்துநிற்கும் நமக்கு ஸ்ரீமந்

நாராயணன்திருவடிகளில் பரந்யாஸம் செய்வதைத் தவிர வேறு சிறந்த உபாயமில்லை—என்றவாறு. 8

[இங்ஙனம் த்வயத்தின் முற்பகுதியின் பொருள் விளக்கப் பட்டது. இனி வரும் பாசுரங்களால் பிற்பகுதியின் பொருள் கூறப் படுகின்றது—]

பிற்பகுதி—ஸ்ரீமந்நாராயணசப்தம்—பொருள் விளக்கம்

311 சுருங்கா வகில மெலாந்துளங் காவமு தக்கடலாய்
நெருங்கா தணைந்துட னேநின்ற நந்திரு நாரணனு
ரிரங்காத காலங்க ளெல்லா மிழந்த பயன்பெறவோர்
பெருங்காத லுற்றினி மேற்பிரி யாமை யுகந்தனமே. 9

உரை:— சுருங்கா அகிலம் எலாம் – குறைவுபடாத ப்ரபஞ்சம் முழுவதுடனும், துளங்கா அமுதக் கடலாய் – அசையாத (அதாவது அலையெறியாத) அம்ருதமயமான ஸமுத்ரம்போன்று (அநுபவிக்கத் தக்கவனாய்) நெருங்காது – (அந்த ப்ரபஞ்சத்தின் தோஷம் தன்னை) அடையாதபடி, அணைந்து–(அந்த ப்ரபஞ்சத்தோடு) சேர்ந்து, உடனே நின்ற – (அந்தர்யாமியாய் எக்காலத்தும்) விட்டுப் பிரியாது நின்ற, நம் திருநாரணனார் – நம் (ஸ்வாமியான) ஸ்ரீமந்நாராயணன், இரங்காத காலங்கள் எல்லாம் – (நம்மீது) இரக்கம்வைக்காது கழிந்த காலங்களில் எல்லாம், இழந்த பயன் பெற–இழந்திருந்த (கைங்கர்யமாகிய) பலனை (யெல்லாம் இப்பொழுது) பெறுவதற்கு, ஓர் பெருங் காதல் உற்று – ஒப்பற்ற மிக்க ஆவல் பூண்டு, இனிமேல் பிரியாமை – இனி (அவனை விட்டு)ப் பிரியாத தன்மையை, உகந்தனம் – விரும்பினோம்.

இங்குள்ள ஸ்ரீசப்தம் (304-வது பாசுரத்தின்படி) பலபொருள் களைக் கொண்டிருப்பினும், இங்கு ஸேவித்தல் என்ற பொருள் கொண்ட 'ச்ரி' என்னும் வினைப்பகுதியிலிருந்து தேறி, நாம் செய்யும் கைங்கர்யத்தை ஏற்றுக்கொள்ள நிற்கும் பிராட்டியின் நிலையைக் கூறும். இதுவே பலனுந்தன்மைக்கு உரியதாம். இவ்வம்சம் 'திரு' என்றதால் புலனாகின்றது.

ஸ்ரீசப்தத்தின்மீதுள்ள மதுப்விகுதி, உபாயமாகும் நிலைமையில் பிராட்டி எம்பெருமானை விட்டுப் பிரியாதுநின்று அவளும் உபாய மாவது போல், பலதசையிலும் அதாவது நாம் பரமபதத்தில் செய்யும் கைங்கர்யத்தை ஏற்றுக்கொள்ளும்போதும் பிராட்டி எம்பெருமானை விட்டுப் பிரியாதிருக்கும் தன்மையைக் காட்டுகின்றது.

இங்குள்ள நாராயணசப்தமும் பல பொருள்கொண்டதே யாயினும், பலனுந்தன்மைக்கு வேண்டிய குணங்களைக் கூறுவதிலேயே முக்கிய நோக்குடையதாம். அவையாவன:— ஸகல ஆத்மாவுக்கும்

ஸ்வாமியாய் நிற்கையும், எல்லையற்ற குணங்கள்-விபூதி-திவ்யமங்கள விக்ரஹம் முதலியவற்றுடன் கூடிநிற்கும் எம்பெருமான் எல்லாவகையாலும் தெவிட்டாத நிகரற்ற அமுதமாயிருக்குந்தன்மையும். 'அகிலம்' 'எலாம்' எனும் சொற்கள் ஸ்வரூபம்-திருமேனி-குணம்-விபூதி ஆகியவற்றையும், 'அமுதக்கடலாய்' எனும் தொடர் அவற்றின் இனிமையையும், 'நம் திருநாரணனுர்' என்ற தொடர் ஸர்வஸ்வாமியாய் நிற்பதையும் காட்டுவன.

ஸகலவஸ்துக்களிலும் அந்தர்யாமியாயிருந்தும் அவற்றிலுள்ள தோஷம் ஒன்றும் தன்னிடத்துத் தட்டாது விளங்கும் எம்பெருமான் இதுகாறும் நமக்கு அருள்புரியாதிருந்த கைங்கர்யங்களையெல்லாம் இப்பொழுது சேர்த்துப்பெறவேண்டுமென்ற ஆசை பெற்று, இனி ஒருபோதும் அவனை விட்டுப் பிரியாத பாக்யத்தையும் விரும்பிநிற்கின்றோம்—என்றவாறு. 9

நாராயணசப்தத்தின் நான்காம்வேற்றுமையுருபு—பொருள்விளக்கம்

312 கடிசூடு மூன்றுங் கழல்பணிந் தார்க்குக் கடிந்திடவே
முடிசூடி நின்ற முகில்வண்ண ஞர்முன் னுலகளந்த
வடிசூடு நாமவ ராதரத் தாலுடுத் துக்களையும்
படிசூடி யன்புட னேபணி செய்யப் பணிந்தனமே. 10

உரை:— கழல் பணிந்தார்க்கு – (தம்முடைய) திருவடிகளைச் சரணமடைந்தவர்க்கு, கடி சூடு மூன்றும் – வெறுக்கத்தக்க தாபங்கள் மூன்றையும், கடிந்திடவே – ஒழித்திடுவதற்கே, முடிசூடி நின்ற – பட்டாபிஷேகம் செய்துகொண்டு நின்ற, முகில் வண்ணனுர் – மேகம் போன்ற நிறமுடைய ஸர்வேசுவரனுடைய, முன் உலகு அளந்த – முன்பு (த்ரிவிக்ரமாவதாரத்தில்) உலகத்தை அளந்திட்ட, அடி சூடும் நாம் – திருவடிகளை முடியிற்சூடிய நாம், ஆதரத்தால் – அன்பினுல், அவர் உடுத்துக் களையும் படி சூடி–அவ்வெம்பெருமான் சாத்திக் களைந்த (ஆடைமுதலிய) சாத்துப்படிகளை (ப்ரஸாதமாக) முடியில் தரித்து, அன்புடனே பணி செய்ய – அன்புடன் கைங்கர்யத்தைச் செய்ய, பணிந்தனம் – வணங்கினின்றோம்.

உலகத்தில் ஜநங்களுக்கு வரும் துன்பங்கள் ஆத்யாத்மிகம் (—சரீரத்தைப்பற்றி வரும் தலைநோய் ஜலதோஷம் முதலியனவும், மனத்தைப்பற்றி வரும் காமம் கோபம் பயம் முதலியனவும்), ஆதிபௌதிகம் (– மிருகம், பக்ஷி, மனிதவர்க்கம் முதலிய பூதங்களால் வருவன), ஆதிதைவிகம் (—குளிர், சூடு, காற்று, மழை முதலியவற்ருல் தெய்விகமாக வருவன) என மூவகைப்படும். எம்பெருமான் தன் திருவடி பணிந்தவர்க்கு இந்தத் தாபங்களை ஒழிக்கவே முடிசூடிநிற்கின்றுன். த்ரிவிக்ரமாவதாரத்தில் உலகமுழுதையும் அளந்தருளின அவன்திருவடிகளைப் பணிந்த நாம் அவ்வெம்பெருமான் சாத்திக்

கொண்டு களைந்த ஆடை சாத்துப்படி முதலியவற்றை ப்ரஸாதமாகப் பெற்றுத் தலையினால் தாங்கி, பரமபக்தியுடன் அவனுக்குக் கைங்கர்யம் செய்ய ஆவல் பூண்டோம்—என்றவாறு.

இங்ஙனம் 'கைங்கர்யம்' என்ற பொருள் நாராயணசப்தத்தின் மேலுள்ள நான்காம்வேற்றுமையுருபினால் பெற்றதாம். எவ்வாறெனில் — நான்காம்வேற்றுமையுருபுக்கு 'அடிமை' பொருளாகும். இவ்வடிமை சேதநனுக்கு எப்பொழுதும் உளதாதலின் இங்குப் பலனாக அதை வேண்டவேண்டிய அவசியமில்லை. ஆதலின் அடிமையின் பலனான கைங்கர்யத்தையே இந்த விகுதி காட்டுகின்றது. 'நாராயணாய' என்ற பதத்திற்குப் பின் 'ஆவேன்' என்ற அர்த்தமுள்ள 'பவேயம்' என்ற ஒரு பதத்தை வருவித்துக்கொண்டு "ஸ்ரீமந்நாராயணனுக்குக் கைங்கர்யம்செய்பவனாக ஆவேன்" என்று பொருள் கூறவேண்டும். *10*

நம:சப்தம் — பொருள்விளக்கம்

313 தனதன் றிவையெனத் தானன் றெனமறை சோன்னவெலா
மெனதென்றும் யானென்று மெண்ணுத லால்வரு மீனமெலா
மனதோன்றி யின்று நமவென்ற தேகொண்டு மாற்றுதலாற்
றனதன்றி யோன்று மிலாத்தனித் தாதை சதிர்த்தனனே. 11

உரை:— மறை – வேதமானது, இவை – இந்த வஸ்துக்கள், தான் அன்று என - தானும் அல்ல என்றும், தனது அன்று என – (சேதநனை) தனக்கு உரியனவுமல்ல என்றும், சொன்ன எலாம் – கூறிய வஸ்துக்களையெல்லாம், யான் என்றும் - நான் என்றும், எனது என்றும் – எனக்கு உரியன என்றும், எண்ணுதலால் வரும் – நினைப்பதால் உண்டாகின்ற, ஈனம் எலாம்–தாழ்வையெல்லாம், தனது அன்றி– தனக்குச் சேஷமாயில்லாமல், ஒன்றும் இலா – ஒரு வஸ்துவும் இருக்கப்பெறாத, தனித் தாதை - ஒப்பற்ற தந்தை(யான எம்பெருமான்), இன்று – இப்பொழுது, மனது ஒன்றி – மனத்திலே பொருந்திநிற்கும்படி, நம என்றதே கொண்டு – 'நம:' என்ற பதத்தைக்கொண்டே, மாற்றுதலால் – ஒழித்துவிடுவதால், சதிர்த்தனன் – பெருமைபெற்றான்.

'தனது' 'எனது' பன்மையொருமைமயக்கம்.

அசேதநமான வஸ்துவைக் கண்டு நான் என்று நினைப்பது அஹங்காரம். இந்த வஸ்து என்னுடையது என்று நினைப்பது மமகாரம். இந்த அஹங்கார மமகாரங்கள் சேதநனை ஸம்ஸாரமாகிய படுகுழியில் வீழ்த்திப் பலதுன்பங்களை விளைவிக்கின்றன. 'நம:' என்ற சொல்லின் அர்த்தத்தை நன்கு உணர்ந்து அநுஸந்தாநத்திற்குக் கொண்டுவந்தால் அவை கழிந்துபோம். எம்பெருமான் அதன் அர்த்தத்தை நம் மனத்துப் பதியும்படி அருளி நம்முடைய அஹங்கார மமகாரங்களை ஒழித்துத் தானும் மேன்மைபெற்றான்—என்றவாறு.

நம: என்னும்போது ந, ம: என்று இரண்டு பதமாகப் பிரித்து, தன்னேடு பொதுவாக ஸம்பந்தமுடையனவாய்த் தோற்றும் வஸ்துக்களிலெல்லாம் தனக்கு ஸம்பந்தமே இல்லையென்று பொருள் கொள்ளவேண்டும். ஆகவே தன் ஸ்வரூபத்தையும் தன் குணம் சரீரம் முதலியவற்றையும் பற்றி வரும் அஹங்கார மமகாரங்கள் கழிவதே நம: சப்தத்தின் பொருளை அறிவதன் பலனுகும். 11

துவயத்தின் பத்து அர்த்தங்கள்

314 சேர்க்குந் திருமகள் சேர்த்தியின் மன்னுதல் சீர்ப்பெரியோற்
கேற்குங் குணங்க ளிலக்காம் வடிவி லிணையடிகள்
பார்க்குஞ் சரணதிற் பற்றுத னங்கிலே நாம்பெறும்பே
றேற்கின்ற வேல்லைக ளேல்லாக் களையற வெண்ணினமே. 12

உரை:— சேர்க்கும் – (எம்பெருமானுடைய திருவடிகளில் நம்மைச்) சேர்க்கின்ற, திருமகள் – பிராட்டியும், சேர்த்தியின் மன்னுதல் – (அவனேடு) சேர்ந்திருப்பதின் ஸ்திரமாந்தன்மையும், சீர்ப் பெரியோற்கு – சீர்மையால் பெரியனை எம்பெருமானுக்கு, ஏற்கும் குணங்கள் – தக்கனவாகிய குணங்களும், இலக்காம் வடிவில் – (ஆச்ரிதர்கள் த்யானிக்க) இலக்கான திருமேனியில் (ஒருபாகமாகிய), இணை அடிகள் – இரண்டு திருவடிகளும், பார்க்கும் சரண் – (சேதநர்களால் ப்ரதாநமாய்க்) கருதப்படுகின்ற உபாயமான ஸ்ரீமந்நாராயணனும், அதில் பற்றுதல் – (உபாயமாகிய) எம்பெருமானிடம் மஹாவிசுவாஸ (த்துடன் கூடிய பரந்யாஸ) மும், நம் நிலே – (வேறு உபாயத்தில் அதிகாரமற்ற) நம்முடைய நிலைமையும், நாம் பெறும் பேறு – நாம் அடைகின்ற ப்ரதாநபலனுகிய ஸ்ரீமந்நாராயணனும், ஏற்கின்ற – (சேதநன்) கைக்கொள்கின்ற, எல்லேகள் – எல்லைகளாகிய பகவத்பாகவதகைங்கர்யம் முதலியனவும், – எல்லாக் களை அறவு – (அஹங்கார மமகாரங்கள் முதலிய) எல்லாக் களைகளும் நீங்கப்பெறுதலும் (ஆகிய பத்து அர்த்தங்களையும்), எண்ணினம் - அநுஸந்தித்தோம்.

(1) 'சேர்க்குந் திருமகள்' என்றதால் (த்வயத்தின் முற்பாதியில்) ஸ்ரீசப்தத்தின் அர்த்தமும், (2) 'சேர்த்தியின் மன்னுதல்' என்றதால் 'மதுப்' விகுதியின் அர்த்தமும், (3) 'ஏற்கும் குணங்கள்' என்றதால் 'நாராயணசப்தத்தின் அர்த்தமும், (4) 'இணையடிகள்' என்றதால் 'சரண' சப்தத்தின் அர்த்தமும், (5) 'பார்க்கும் சரண்' என்றதால் 'ஶரண' சப்தத்தின் அர்த்தமும், (6) 'அதில் பற்றுதல்' என்றதால் 'ப்ர' என்னும் உபஸர்க்கத்துடன் கூடிய 'பத்' தாதுவின் அர்த்தமும், (7) 'நம் நிலே' என்றதால் 'உத்தம புருஷ'னெனப்படும் தன்மைவிகுதியின் அர்த்தமும், (8) 'நாம் பெறும் பேறு' என்றதால் பிற்பகுதியில் 'ஸ்ரீமந்நாராயண' சப்தத்தின் அர்த்தமும் (9) 'எல்லேகள்' என்றதால்

மேலுள்ள நான்காம் வேற்றுமையுருபின் அர்த்தமும், (10) 'களையறவு' என்றதால் 'நம:' சப்தத்தின் அர்த்தமும் கூறப்பட்டன. 12

த்வயத்தின் திரண்ட பொருள்

எல்லோருக்கும் தலைவனாய், எவ்வாற்றானும் அநுபவிக்கத் தெவிட்டாத அமுதமாய்ப் பெரியபிராட்டியாரோடு பிரிவில்லாத ஸ்ரீமந்நாராயணன் திருவடிகளில் எல்லாவிடங்களிலும் எல்லாக் காலங்களிலும் எல்லா நிலைமைகளிலும் எல்லாவகைக் கைங்கர்யங் களையும் செய்ய விரோதியாயிருந்த கர்மங்கள் அனைத்தும் கழியப் பெற்றுப் பரிபூர்ணகைங்கர்யம் செய்யப் பெறுகைக்கு வேறு உபாயங் களில் சக்தியற்ற அடியேன், ஆத்மாவிலும் அடியேனைக் காக்கும் பொறுப்பிலும் அதன் பலனிலும் சிறிதும் ஸம்பந்தம் கொள்ளாதவாறு ஸ்ரீமந்நாராயணன் திருவடிகளில் ஐந்து அங்கங்களுடன் கூடிய ப்ரபத்தியைச் செய்கின்றேன்—என்றவாறு.

துவயச்சுருக்கு – உரை முற்றிற்று

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

ஸ்ரீ:

சரமசுலோகச்சுருக்கு—உரை

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

[விஷயச்சுருக்கம்]

பாரதயுத்தத்தில் போர்க்களத்தில் அர்ஜுநன் தன் பந்துக்களும் ஆசார்யர்களும் தனக்குப் பகையாய்நிற்பதைக் கண்டான்; அவர்களு டன் போர்செய்தால் அவர்கள் இறப்பது உறுதியெனக் கண்டான். அதனால் வரும் பாபத்திற்கு அஞ்சி நிலைகுலைந்தான்; தன் தேரில் பாகனாய் நின்ற கண்ணனைச் சரணமடைந்து தனக்கு ஹிதத்தை உபதேசிக்குமாறு வேண்டினான், கண்ணனும் அவன்மீது கருணை கொண்டு ஸ்ரீபகவத்கீதையின் வாயிலாக நித்யமான ஆத்மஸ்வரூபத் தையும் கர்மயோக – ஜ்ஞாநயோகங்களையும் மோக்ஷம் பெற நேர்க் காரணமான பக்தியோகத்தையும் அவ்வவற்றின் அங்கங்களுடன் உபதேசித்தருளினான். அதைக் கேட்ட அர்ஜுநனும் பக்தியோகம், அநுஷ்டிக்கக் கடினமாயும் விளம்பித்துப் பலன்தருவதாயுமிருப்பதைக் கண்டு மறுபடி கலங்கினான். இதைக் கண்ட கண்ணனும் ஸுலப மாய் விரைவில் பலனைத் தருவதாயுள்ள ப்ரபத்தியை உபதேசித்து ஸ்ரீபகவத்கீதையைத் தலைக்கட்டியருளினான். இந்த ப்ரபத்தியை விதித்த ஸ்ரீஸூக்தியே சரமசுலோகமெனப் பெயர் பெற்று விளங்குகின்றது.

இது கீதையில் முக்கியமாய்நின்று பல விசேஷார்த்தங்களைக் கொண்டுள்ளது. ரஹஸ்யங்களில் இது மூன்றாவதாய்த் திகழ்கின்றது. இத்தகைய சரமசுலோகத்தின் அர்த்தத்தைச் சுருக்கி வெளியிடுதலால் இப்பிரபந்தம் "சரமசுலோகச்சுருக்கு" எனப் பெயர்பூண்டது.

இதனுள் முதற்பாசுரத்தில் சரமசுலோகத்தின் முழுத்தாத்பர்யத்தையும் அருளிச்செய்து, பிறகு 10-பாசுரங்களால் முறையே (1) ஸர்வதர்மாந் பரித்யஜ்ய (2) மாம் (3) ஏகம் (4) சரணம் (5) வ்ரஜ (6) அஹம் (7) த்வா (8) ஸர்வபாபேப்ய: (9) மோக்ஷயிஷ்யாமி (10) மா சுச: என்னும் பாகங்களுக்கு வ்யாக்யாநம் செய்தருளுகின்றார் நம் ஸ்ரீதேசிகன்.

இப்பிரபந்தம் முழுதும் கட்டளைக்கலித்துறையால் அமைந்ததாம்.

சரமசுலோகம்—முழுத்தாத்பர்யம்

315 கல்லா ரகலுங் கருமமு ஞானமுங் காதலுமற்
றெல்லா நிலைகளுக் கேற்ப விதித்த கிரிசைகளும்
வல்லார் முயல்க வலியிழந் தாரென் றனைத்தொழுகென்
றெல்லாத் தரும முரைத்தவ னின்னடி சேர்ந்தனமே. 1

உரை:-கல்லார் – (விசேஷமான) அறிவில்லாதவர்கள், அகலும் – (நம்மால் அநுஷ்டிக்கமுடியாதென்று) விலகக்கூடிய, கருமமும் – கர்மயோகத்தையும், ஞானமும் – ஜ்ஞாநயோகத்தையும், காதலும் – பக்தியோகத்தையும், மற்று – மேலும், எல்லா நிலைகளுக்கு(ம்) – எல்லா நிஷ்டைகளுக்கும், ஏற்ப – பொருந்தும்படி, விதித்த – (கீதையில்) விதிக்கப்பட்ட, கிரிசைகளும் – கர்மங்களையும், வல்லார் – (அநுஷ்டிக்கச்) சக்தியுள்ளவர்கள், முயல்க – செய்ய முயலக்கடவர்; வலியிழந்தார் – (அநுஷ்டிக்கச்) சக்தியற்றவர்கள், என்றனைத் தொழுக என்று – என்னை (அந்த அந்த உபாயங்களின் ஸ்தாநத்தில் வைத்து) வணங்கக் கடவர் என்று (கூறி), எல்லாத் தரும(மு)ம் – ஸகல தர்மங்களையும், உரைத்தவன் – (கீதையின்வாயிலாய்) உபதேசித்த கண்ணனுடைய, இன் அடி – இனிய திருவடிகளை, சேர்ந்தனம் – பற்றினோம்.

சாஸ்த்ரங்களைக் கற்று விசேஷமான ஜ்ஞாநத்தைப் பெற்றவர்களே கர்மயோகம் – ஜ்ஞாநயோகம் – பக்தியோகம் ஆகியவற்றைச் செவ்வனே அநுஷ்டிக்க முடியும். மற்றவர்கள் 'இவற்றை நம்மால் அநுஷ்டிக்க முடியாது' என்று நினைத்துத் தாம் விலக நேரும். ஆதலின் சிறந்த அறிவு பெற்றுக் கைதேர்ந்தவர்கள் அவ்வுபாயங்களை அநுஷ்டிக்கக் கடவர். அதற்குச் சக்தியற்றவர் என்னைச் சரணமடைந்தால் நான் அந்த அந்த அரிய உபாயங்களின் ஸ்தாநத்தில் நின்று அவ்வவற்றின் பலனைக் கொடுப்பேன் என்று அருளிச்செய்த எம்பெருமானுடைய திருவடிகளைச் சேர்ந்தோம் — என்றவாறு.

ஓர் உபாயம் எளிதில் அநுஷ்டிக்க முடியாததாய்க் கடினமாயிருக்க, அதனுல் பலனை அடையமுடியாது வருந்துபவர்கள் என்னைச் சரணமடைந்தால் (ப்ரபத்தியை அநுஷ்டித்தால்) நானே அந்த அந்த உபாயங்களின் ஸ்தாநத்தில் நின்று அவை கொடுக்கும் பலனைக் கொடுப்பேன் என்னுமதே சரமசுலோகத்தின் முழுத்தாத்பர்யமாகும்.

தொழுக+என்று=தொழுகென்று; தொகுத்தல்விகாரம்.

'எல்லாநிலைகளுக்கும்' 'எல்லாத்தருமமும்' என்பவற்றுள் உம்மை செய்யுள்விகாரத்தால் தொக்கது. 1

'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய'—ஆறு அர்த்தங்கள்

316 வெறுமை யுணர்ந்தது முன்னிட்டு வேறங்க மில்லையெனக்
குறியவ னின்னற வேட்டக் குறித்திடுங் கோணைதுறந்
துறுமய னத்திர மேன்னப் பொருநிலை யோர்ந்திடவோ
ரறநெறி யன்றுரைத் தானழி யாவற மாயினனே. 2

உரை:— வெறுமை-(பலனைப் பெறுகைக்குத் தன் கையில் ஓர் உபாயமும்) இல்லாமையை, உணர்ந்து—அநுஸந்தித்து, அது முன்னிட்டு-அந்த இல்லாமையையே முன்னிட்டுக்கொண்டு, வேறு அங்கம் இல்லை என—(வகுத்த அங்கங்களைத் தவிர) வேறு அங்கம் இல்லை என்று கொண்டு, குறியவன் – குள்ளன், இன் நறவு எட்ட – இனிய (கொம்புத்)தேனை அடைய, குறித்திடும் கோணை துறந்து – இலக்கு வைப்பதாகிய துன்பத்தைக் கைவிட்டு, உறும் அயன் அத்திரம் என்ன—(வலிமை) பொருந்திய ப்ரஹ்மாஸ்த்ரம் என்னும்படி, பொரு நிலை-(வேறு சாதனத்தைப்) பொறுக்காத நிலைமையை, ஓர்ந்திட—நன்கு அறியும்படி, ஓர் அற நெறி-ஒரு தர்ம மார்க்கத்தை. அழியா அறமாயினன்-அழியாத தர்மஸ்வரூபியான கண்ணன், அன்று உரைத்தான்—அன்று (போர்க்களத்தில்) உபதேசித்தான்.

'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய' என்ற தொடருக்கு எல்லா உபாயங்களையும் கைவிட்டு என்று பொருள். தர்மமாவது—சாஸ்த்ரத்தையே கொண்டு அறியவேண்டியதாய்ப் பலனைத் தரவல்ல ஒரு ஸாதநம். 'தர்மாந்' என்னும்போது உள்ள பன்மையால் (பஹுவசநத்தால்) தர்மங்களின் பலவகையும் கூறியதாகும். இப்பொழுது 'ஸர்வ' என்னும் பதம், தர்மங்கள் அங்கங்களோடுகூடிய தன்மையைக் காட்டுவதாகும். தர்மபதம் பொதுவாக உபாயம் என்ற அர்த்தத்தைக் குறித்த போதிலும், இங்கு ஸந்தர்ப்பத்தையொட்டி மோக்ஷத்திற்கு உபாயமாக விதிக்கப்பட்டனவாய் அங்கங்களுடன் கூடிய பக்தியோகத்தின் பிரிவுகள் எல்லாவற்றையும் காட்டும்.

இந்த 'ஸர்வதர்மாந்' என்ற தொடருக்கு ஆறு அர்த்தங்கள் கூறப்படுகின்றன. அவையாவன—

(1) வெகுகாலமாக உய்யும் வழியையறியாமல் எக்காலத்திலும் எவ்வகையாலும் பக்தியோகம் முதலிய உபாயங்களை அநுஷ்டிக்க யோக்யதையில்லாமையாலே ஒரு கைம்முதலுமில்லாத தன் நிலையைக் கண்டு வேறு உபாயத்தை அநுஷ்டிக்க ஆசையற்று நிற்கின்ற நீ என்று ஓர் அர்த்தம். இதனால் ப்ரபத்திக்கு அசக்தனை அதிகாரியாகக் கொண்ட தன்மை தோற்றும். இது 'வெறுமையுணர்ந்து' என்ற தொடரால் காட்டப்பட்டது.

(2) ஸகலஉபாயங்களும் உன்னைக் கைவிட்டனவாதலின் ஓர் உபாயமும் உன் கையில் இல்லாமையாகிய ஆகிஞ்சந்யத்தின் அநுஸந்தாநத்தை முன்னிட்டுக்கொண்டு என்று பொருளாம். இவ்வர்த்தத்தால் வேறு உபாயத்தை அநுஷ்டியாதிருத்தலாகிய வெறுமையை அநுஸந்தித்தல் என்னும் கார்ப்பண்யமாகிய அங்கம் விதிக்கப்பட்டதாயிற்று. இது 'அது முன்னிட்டு' என்னும் தொடரால் காட்டப்பட்டது.

(3) ப்ரபத்திக்கு (க் குறிப்பிட்ட அங்கங்களைத் தவிர) வேறு ஓர் அங்கமும் இல்லையாதலின், ப்ரபத்திக்கு அங்கமாக ஒரு தர்மத்தையும் அநுஷ்டிக்காமல் கைவிட்டு என்றும் ஒரு பொருளாம். பக்தியோகங்களில் வர்ணாச்சிரமதர்மங்கள் முதலியன அங்கமாய்நிற்பது பற்றி ப்ரபத்தியிலும் அவை அங்கங்களாய் வரப்புக, ப்ரபத்தி அவற்றை அங்கமாகக் கொள்ளாதென்று ஸித்தித்தது. இதனால் ப்ரபத்திக்கு வேறு அங்கங்களை எதிர்பாராத தன்மை கூறப்பட்டதாயிற்று. இது 'வேறங்கமில்லையென' என்ற தொடரால் காட்டப்பட்டது.

(4) குள்ளன் கொம்புத்தேனைக் குறிவைத்து அதைப் பெற வீண்துன்பப்படுவதுபோல் உன்னாற் செய்யமுடியாத பக்தியோகாதிகளைச் செய்ய நீ படும் வீண் ப்ரயாஸத்தைக் கைவிட்டு என்றும் பொருளாம். இதனால் முடியாத கார்யத்தில் முயற்சியைத் தடுத்தல் என்ற அர்த்தம் கூறப்பட்டது. இது இரண்டாமடியால் காட்டப்பட்டது.

(5) உன்னாற் செய்யமுடியாத உபாயங்களைச் செய்யத் தொடங்கி மெல்ல மெல்ல இக்கார்யத்தை ஸாதித்துவிடுகிறேன் என்ற அற்ப ஆசையையும் கைவிட்டு என்றும் பொருளாம். நீ இவ்வாறு செய்ய விரும்புவது கரைபுரண்டோடும் ஆற்றுவெள்ளத்தில் அமிழ்ந்தவன் கரையிலுள்ள சிறுநாணலைப் பிடித்துக்கொள்ள முயல்வது போலாம். இதனால் முடியாத கார்யத்தில் ஆசையையும் ஒழித்தல் என்ற அர்த்தம் கூறப்பட்டது. இதையும் இரண்டாமடியாலேயே அறியலாம்.

(6) க்ஷணத்திலேயே செய்யக்கூடியதாய்ப் பரமஸௌலபமான ப்ரபத்தியை அநுஷ்டிக்கும்போது இதில் ஸந்தேஹத்தால் வேறு உபாயத்தையும் கலந்துசெய்வதை விட்டுவிட்டு என்றும் பொருளாம். இவ்வாறு ப்ரபத்தியில் நம்பிக்கை குன்றி வேறு உபாயத்தையும்

அநுஷ்டிக்கப்புகுவது ப்ரஹ்மாஸ்த்ரத்தின் சக்தியில் ஐயமுற்று வேறு கயிறுகளையும் சேர்த்து மூடிவதுபோல் வீணாகித் தீங்கையும் விளைக்கும். இதனால் ப்ரஹ்மாஸ்த்ரந்யாயத்தை ஸூசித்தல் என்ற அர்த்தம் கூறப்பட்டது. இது மூன்றாமடியால் காட்டப்பட்டது.

* अतोऽशक्ताधिकारत्वमाकिञ्चन्यपुरस्क्रिया ।
अनङ्गभावो धर्माणामशक्यारम्भवारणम् ॥
तत्प्रत्याशाप्रशमनं ब्रह्मास्त्रन्यायसूचनम् ।
सर्वधर्मपरित्यागशब्दार्थाः साधुसम्मताः ॥ 2

'மாம்' என்ற பதம்—பொருள் விளக்கம்

317 வாரிதி விட்டு மலர்மக ளோடு மதுரைவந்து
பாரத வெஞ்சமர் பார்மகள் பாரஞ் செகவுகந்து
சாரதி யாய்முன்பு தூதனு மாய்த்தள ரும்விசயன்
றேரதி னின்றவ னைத்தேற்றி னான்றிற மாயினமே. 3

உரை:— வாரிதி விட்டு – (திருப்பாற்) கடலை விட்டு, மலர்மகளோடு மதுரை வந்து – மலரில் அவதரித்த பிராட்டியோடு வடமதுரையில் (கண்ணனாய்) அவதரித்து, பார்மகள் – பூமிதேவியினுடைய, பாரம் செக–சுமை ஒழிவதற்காக, வெம் பாரதச்சமர்–கொடிய பாரதயுத்தத்தை, உகந்து – (நடத்த) மனமுவந்து, முன்பு தூதனாய்–(போருக்கு) முன்பு (பாண்டவர்களுக்குத்) தூதனாய், சாரதியுமாய் – (போரில் அர்ஜுநனுக்குத்) தேர்ப்பாகனுமாகி, தளரும் விசயன் தேரதில் நின்று– மனந்தளர்ந்துநின்ற அர்ஜுநனுடைய தேரில் நின்று, அவனைத் தேற்றினான் திறம் – (தத்துவத்தை உபதேசித்து) அவனைத் தேற்றிய கண்ணன் விஷயத்தில், ஆயினம் – அடிமைபூண்டவரானோம்.

கீதாசார்யனான ஸர்வேசுவரன் 'மாம்' என்று கூறித் தன்னுடைய திவ்யமங்களவிக்ரஹத்தைத் தொட்டுக்காட்டுகின்றான். இதனால் வாத்ஸல்யம், ஸ்வாமித்வம், ஸௌசீல்யம், ஸௌலப்யம் ஆகிய நான்கு குணங்கள் முக்கியமாய் வெளியாகின்றன.

1. வாத்ஸல்யம்—தன்னையடைந்தவனுடைய குற்றத்தைப் புறக்கணித்து அவனை ஏற்றுக்கொள்ளுமாறு செய்கின்ற கருணை. இக்குணம் போர்க்களத்தில் எதிரிகளைக் கண்டு முதலில் அவர்கள்பால் அன்பும் கருணையும் சுரந்து, க்ஷத்திரியர்களின் சிறந்த தர்மமான யுத்தத்தை அதர்மமென்று நினைத்துக் கலங்கின அர்ஜுநனைக் கண்ணன் ஆதரித்துத் தேற்றியதால் வெளியாகின்றது.

2. ஸ்வாமித்வம்—ப்ரணவம் முதலியவற்றில் வெளியாகின்றபடி நம்மைப்பற்றி எம்பெருமானுக்கு உள்ள ஒரு ஸம்பந்தம். இக்குணம் 'என்னைக்காட்டிலும் வேறாய்ச் சிறந்தது ஒன்றுமில்லை' யெனக் கண்ணன் தானே பேசியதால் வெளியாகின்றது.

3. ஸௌசீல்யம்—மிகப் பெரியோர் மிக அற்பர்களோடும் ஒரு நீராகக் கலந்துநிற்கை. இக்குணம், அர்ஜுநன் வேண்டுமிடத்தில் 'தேரை நிறுத்து' 'குதிரையைக் கட்டு' என்னும்படி கண்ணன் தன்னைத் தாழநிறுத்தித் தேர்செலுத்தியதால் வெளிப்படுகின்றது.

4. ஸௌலப்யம்—ஸநகர் ஸநந்தநர் முதலிய மஹாயோகிகளுக்கும் கிட்ட இடமல்லாத தன்னை ஸகல ப்ராணிகளும் தம் எச்சிற் கண்ணாலே காணும்படி செய்துகொள்ளல். இக்குணம், அர்ஜுநன் 'உன் விசுவரூபத்தைக் காட்டு' என்றவுடன் கண்ணன் அவ்வாறே காட்டியதாலும், 'உன் பழைய குளிர்ந்த வடிவத்தைக் காட்டு' என்றதும் அங்ஙனே செய்ததாலும் வெளியாகின்றது,

'மாம்' என்ற பதத்தில் எக்காலத்தும் தன்னை விட்டுப்பிரியாத பிராட்டியின் சேர்த்தியும் கூறப்பட்டதென்று 'மலர்மகளோடு' என்னும் தொடரால் காட்டப்பட்டது.

இப்பாசுரத்தில் மூன்று அடிகளில் எம்பெருமானுடைய அவதார ரஹஸ்யமும் ஸூசிக்கப்பட்டதாகின்றது.

*அவதாரரஹஸ்யம்-(1) எம்பெருமானுடைய அவதாரம் இந்த்ர ஜாலம்போலன்றி மெய்யாகவேயிருக்குந்தன்மை. (2) தனக்கு இயற்கையாயுள்ள தன்மைகளை அவதாரகாலத்திலும் விடாதிருத்தல். (3) அவதாரகாலத்திலுமுள்ள திருமேனி, ரஜஸ்-தமஸ்ஸுக்களின் ஸம்பந்தமேயில்லாது சுத்தஸத்துவமாகவேயிருத்தல். (4) தான் இக்கர்மபூமியில் அவதரிப்பதற்குக் கர்மம் முதலியனவன்றித் தன் ஸங்கல்பமே காரணமாயிருத்தல். (5) பூமியில் தர்மம் குறைந்து அதர்மம் தலையெடுக்கும்போது அவதரிக்கும் தன்மை. (6) ஸாதுக்களை ரக்ஷிப்பதே அவதாரத்தின் பலனுந்தன்மை; என்பன.

இப்பாசுரத்தில் 'வாரிதிவிட்டு......மதுரை வந்து' என்னுந் தொடரால் அவதாரரஹஸ்யத்தின் முதல் 4 அம்சங்களும், 'பாரம்செக' என்னுமதால் 5-வது அம்சமும், 'சாரதியாய்......தூதனுமாய்' என்னுமதால் 6-வது அம்சமும் ஸூசிக்கப்பட்டன. இன்னும் திருமந்த்ரம், த்வயம் என்னும் இரண்டு ரஹஸ்யங்களில் எம்பெருமானுக்குக் கூறப்பட்ட குணங்கள் அனைத்தும் இங்கு 'மாம்' என்ற பதத்தில் அநுஸந்திக்கக்கடவன.

* अवतारस्य सत्यत्वं अजहत्स्वस्वभावता ।
शुद्धसत्त्वमयत्वं च स्वेच्छामात्रनिदानता ।।
धर्मग्लानौ समुदयः साधुसंरक्षणार्थता ।
इति जन्मरहस्यं यो वेत्ति नास्य पुनर्भवः ।।

'ஏகம்' என்ற பதம்–பொருள் விளக்கம்

318 தன்னரு ளாற்பெறுஞ் சாதனஞ் சாதக னென்றிவற்றைத்
தன்னுட னெண்ணுத னீங்கத் தனித்தோரு சாதனமாய்ப்
பொன்னரு ளோடுமப் பூமக ளோடும் புகழநின்ற
வின்னுரை யீசனே யேயேக மெண்ண விசைந்தனமே. 4

உரை:— தன் அருளால்–(ஸர்வேசுவரனாகிய) தன் கடாக்ஷத்தால், பெறும்–(சேதநன்) பெறுகின்ற, சாதனம்–உபாயம், சாதகன்–உபாயத்தை அநுஷ்டிக்கும் சேதநன், என்று இவற்றை–என்று கூறப்படுகின்ற இவ்விரண்டையும், தன்னுடன் எண்ணுதல் நீங்க–(எம்பெருமானாகிய) தன்னோடு (ஸமமாக) எண்ணுகை நீங்கும்படி, தனித்து ஒரு சாதனமாய்–தனியாகநிற்கின்ற ஓர் உபாயமாய், பொன் அருளோடும்–பொன்போல் விரும்பத்தக்க கருணையோடும், அப்பூமகளோடும்–பூவில் அவதரித்த அந்தப் பிராட்டியுடனும், புகழ நின்ற–(வேதமும் வைதிகரும்) புகழும்படி நின்ற, இன் உரை-இனிய ஸூக்திகளையருளிச்செய்த, ஈசனையே–ஸ்ரீமந்நாராயணனையே, ஏகம் எண்ண–ஏகம் என்னும் பதத்தின் பொருளாக அநுஸந்திக்க, இசைந்தனம்-அங்கீகரித்தோம்.

* 'ஏக' சப்தத்திற்கு ஆறு பொருள்கள் பூர்வாசார்யர்களால் கொள்ளப்பட்டுள்ளன. அவையாவன:—

(1) 'மாம்' என்ற சொல்லில் ஒருமையினாலேயே ஒருவன் என்று தோன்றும்போது பின்னும் ஏகசப்தம் ஒரு விசேஷார்த்தத்தைக் குறிக்கின்றது. அதாவது—"ஸர்வேசுவரன் என்னால் அனுபவிக்கப்படும் பலனாக உளன், நான் அநுஷ்டிக்கும் உபாயம் அதற்கு ஸாதநம்" என்று தன்னால் அனுஷ்டிக்கப்படும் உபாயத்தை ஈசுவரனோடு ஒரு கோவையில் எண்ணாமல் அவனையே உபாயமாகவும் பலனாகவும் அநுஸந்தித்தலாம். ஆக உபாயம் பலன் ஆகிய இரண்டும் ஸர்வேசுவரனே என்று 'ஏக' சப்தத்தால் புலனாயிற்று. இவ்வர்த்தம் 'சாதனம்–தன்னுடன் எண்ணுதல் நீங்க' என்னும் தொடரால் கூறப்பட்டதாகும்.

(2) 'ஏக' சப்தத்தாலே சேதநனுடைய சுதந்திரம் கழிகை கூறப்படுகிறது. எவ்வாறெனில்—சேதநன் தான் உஜ்ஜீவிப்பதற்கு வேண்டிய உபாயங்களை அநுஷ்டிப்பதால் "பலன் கொடுப்பவனாகிய

* प्राप्यस्यैव प्रापकत्वं स्वप्राधान्यनिवारणम् ।
प्रपत्तेर्व्याजमात्रत्वमन्योपायैरनन्वयः ॥
तदङ्गैरप्यसंबन्धस्सर्वसाध्येष्वभिन्नता ।
इत्थमर्थाष्षडाचार्यैरेकशब्दस्य दर्शिताः ॥

ஈசுவரன் ஓர் உபாயமாவான், அதற்கு ஸாதநத்தை அநுஷ்டிப்பவ வனுகிய நானும் ஓர் உபாயமாவேன்'' என்று ஈசுவரனேடு ஒரு கோவையில் தன்னேயும் உபாயமென்று எண்ணப்புக, அங்ஙனே செய்யாது 'ஏக' சப்தம் தடுக்கின்றது. அதாவது—சேதநன் செய்கை யுடையவன் என்பது உண்மையே. ஆயினும் அவன்செய்கை ஸர் வேசுவரனுடைய ஸங்கல்பத்தால் ஏற்பட்டதன்றோ? எல்லாவற்றையும் செய்யச் சக்தியற்றுச் சிலவற்றையே செய்யவல்லவன் ஜீவன். அவன் செய்கை தடைப்பட்டு நிற்கவும் உரியதாகும். ஆதலின் சேதநன் உபாயத்தை அநுஷ்டிப்பதற்கு ஸர்வேசுவரனுடைய கடாக்ஷம் வேண் டும். அவனுல் தூண்டப்படவேண்டும். அவன் துணைசெய்யாத போது சேதநன் நீட்டவும் முடக்கவும் மாட்டானுய் ஒரு கார்யத்தை யும் செய்யவல்லனுகான். ஸர்வேசுவரன் கொடுத்த சரீரம் இந்த்ரியம் முதலியவற்றைக் கொண்டு அவன் காட்டிய உபாயத்தை அவனுடைய உதவியால் அநுஷ்டித்து அவன் கொடுக்கப்போகும் பலனுக்கு 'மழையை நோக்கிநிற்கும் சாதகப்பறவை' போல் அண்ணுந்துநிற்கிற சேதநனே, ஸ்வதந்த்ரனுய் ஸகலவிஷயங்களிலும் தடையற்றுநிற்கும் ஸங்கல்பத்தையுடையனுன ஸர்வேசுவரனேடு சேர்த்து இரண்டாவது ஸித்தோபாயமாக எண்ணுகை விவேகிக்கு முறையன்று என்று 'ஏக' சப்தத்தால் கூறலாயிற்று. இவ்வர்த்தம் 'சாதகன்—தன்னுடன் எண் ணுதல் நீங்க' என்ற தொடரால் கூறப்பட்டதாகும்.

(3) உபாயம்—ஸித்தோபாயம் ஸாத்யோபாயம் என இரு வகைப்படும். சேதநனுல் செய்யப்படாது முன்பேயுள்ள உபாயமாகிய ஈசுவரன் ஸித்தோபாயம். சேதநனுல் அநுஷ்டிக்கப்படவேண்டிய பக்தி-ப்ரபத்திகள் ஸாத்யோபாயம். ஆக 'ஏக' சப்தம், இங்கு ஸாத்யோபாய மான ப்ரபத்தியை ஸித்தோபாயமான ஈசுவரனேடு ஒரு கோவையாகச் சேர்த்து எண்ணக்கூடாதென்பதைக் காட்டுகின்றது. அதாவது—ப்ரபத்தியும் பக்தியைப்போல் உபாயமாக விதிக்கப்பட்டிருப்பது உண்மையே. ஆயினும் இயற்கையாகக் கருணே சுரந்துநிற்கும் எம் பெருமானுக்குச் சேதநன்மீது உள்ள அதிருப்தியைப் போக்குவதுடன் பக்தி—ப்ரபத்திகளின் சக்தி ஓய்ந்துவிடுகின்றது. பலனுக்கு நேரான காரணம் இயற்கைச் சக்தியும் கருணேயும் நிறைந்து நிற்பவனுன ஸர்வேசுவரனுடைய ஸங்கல்பமே. வேறு உபாயத்தை அநுஷ்டிக்கச் சக்தியற்று ப்ரபத்தியையநுஷ்டித்த சேதநனுக்கு அவனது பொறுப்பை ஸர்வேசுவரன் தானே ஏற்றுக்கொண்டு பக்தியோகம் முதலிய கடினமான உபாயங்களின் ஸ்தாநத்தில் தானே நிற்கின்றுன். வகுத்த அங்கங்களே மாத்திரம் உடைய ப்ரபத்தியை ஒரு வ்யாஜமாகக் கொண்டு பலனே அளிக்கின்றுன். இந்த ப்ரபத்தியும் அவன் செய் விக்கச் செய்கின்றதே. இப்படி வ்யாஜமாத்ரமாய் நிற்கும் ப்ரபத்தியை ஸர்வேசுவரனேடு ஒரு கோவையாகச் சேர்த்து உபாயமாக நினேத்தல் உசிதமன்று என்று 'ஏக' சப்தத்தின்

தாத்பர்யம். இவ்வர்த்தம் ' ஒரு சாதனமாய் ' என்னும் தொடராலே காட்டப்பட்டது.

(4) சேதநன் விரும்பும் பலனுக்கு ஸாதநமாக விதிக்கப்பட்ட மற்ற உபாயங்களை எதிர்பார்க்கவேண்டாதபடி ப்ரபத்திக்குப் பிறகு சேதநனுடைய பொறுப்பை ஏற்றுக்கொண்ட சரண்யன் தனித்து நிற்கும் நிலையை ' ஏக ' சப்தம் காட்டுகின்றது. அதாவது — மற்ற உபாயங்களை அநுஷ்டிக்கச் சக்தியற்று விரைவில் பலனைப்பெற விரும்பி ப்ரபத்தியை அநுஷ்டித்த அதிகாரியின் விஷயத்தில் எம்பெருமான் தனக்கும் ப்ரபத்திக்கும் நடுவில் அவனுக்கு வேறொரு சுமை சுமத்தாமல் அவன்சுமையைத் தானே ஏற்று மற்ற உபாயங்களின் ஸ்தாநத்தில் தானே நின்று வேறோர் உபாயத்தை அவனிடம் எதிர்பாராமல் நின்று பலன்தரும்தன்மை ' ஏக ' சப்தத்தால் வெளியாகின்றது. ' தனித்து ' என்னும் சொல்லால் இவ்வர்த்தம் கூறப்பட்டதாகும்.

(5) எம்பெருமானிடம் ப்ரபத்தியை அநுஷ்டிக்கும்போது இதற்கு வகுத்த அங்கங்களைத் தவிர வேறு அங்கங்களைச் செய்ய வேண்டியனவாக அவன் எதிர்பாராத நிலையை ' ஏக ' சப்தம் காட்டுகின்றது அதாவது — ஸர்வேசுவரனே ப்ரபத்திக்குப் பலனைக்கொடுக்க ஸித்தமாயிருக்கின்றான். ப்ரபத்திக்கு வகுத்த ஐந்து அங்கங்களைத் தவிர வேறு எதுவும் அங்கமாகச் செய்யவேண்டியதன்று. அப்படிச் செய்தாலும் அதற்காக அவன் பலன் கொடுப்பவனல்லன். ஆதலின் வகுத்த அங்கங்களுடன் கூடிய ப்ரபத்தியைத் தவிர வேறு எதையும் ப்ரபத்திக்கு அங்கமாகக்கொண்டு அவனுக்கு உதவிக்காரணமாகக் கூட்டவேண்டாம். அவனே வேறொன்றையும் எதிர்பாராது பலன் தரும்படி தனித்துநிற்கின்றான் என்றதாயிற்று. இவ்வர்த்தமும் ' தனித்து ' என்ற பதத்தாலேயே கூறப்பட்டதாம்.

(6) ஒவ்வொரு பலனைக் குறித்து அவ்வவற்றுக்கு ஸாதநமாகத் தனித் தனியே சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட உபாயங்களை அநுஷ்டிக்க அவசியமான ஜ்ஞாநமின்றியோ, சக்தியின்றியோ, அவ்விரண்டும் இருந்தும் பலன் பெறுவதற்கு உள்ள விளம்பத்தைப் பொறுக்காமலோ வருந்திநிற்கும் அதிகாரியைப் பார்த்து எம்பெருமான் ' நீ அவ்வுபாயங்களில் அலையவேண்டாம். அவை தனித்தனியே கொடுக்கும் பலன்களையெல்லாம் நீ செய்த ப்ரபத்தியின் வசப்பட்ட நான் ஒருவனே கொடுக்கின்றேன் ' என்று கூறி அவன் ஒரே உபாயமாய் நிற்கும் நிலையும் ஏகசப்தத்தின் பொருளாம். இவ்வர்த்தம் ' ஒரு சாதனமாய் ' என்னும் தொடரால் கூறப்பட்டது.

மேலும் சிலர் ' ஏக ' சப்தம் ஸர்வேசுவரன் ஒருவனே உபாயமென்று காட்டுவதாகவும், ஆதலால் எம்பெருமான் உபாயமாகும்போது பிராட்டிக்கு அதில் ஸம்பந்தமில்லையென்று ஏற்படுவதாகவும்

கூறுகின்றனர். இதற்கு ஸமாதாநம்—குணங்கள் திருமேனி இவற்றுடன் கூடியிருத்தலால் எம்பெருமானுடைய தனிமைக்குக் குறைவு வராததுபோல் பிராட்டி உபாயமாவதாலும் அவனது தனிமைக்கு ஒரு குறைவும் வராது. ஆதலின் பிராட்டிக்கும் உபாயமாகும் நிலையிலும் ஸமமான ஸம்பந்தம் உண்டு—என்பதாம். இவ்வர்த்தத்தைத் திருவுள்ளத்துக்கொண்டே 'பொன்னருளோடுமப்பூமகளோடும்' என்னலாயிற்று. 4

'ஶரண' சப்தம் — பொருள் விளக்கம்

319 ஊனி லிணைத்துழல் விக்கும் வினைக்கட லுள்விழுந்த
யானென தான குணங்க ளெனக்கிசை நல்வழியுந்
தானுத வித்தனைத் தந்திட நின்ற தனித்தரும
நானினி வேறோர் பரநணு காவகை நல்கியதே. 5

உரை :— ஊனில் - மாம்ஸமயமான சரீரத்தில், இணைத்து - ஒன்றுசேர்த்து, உழல்விக்கும் - உழலச்செய்கின்ற, வினைக் கடலுள் - கர்மங்களாகிய கடலுள், விழுந்த - விழுந்துகிடக்கின்ற, யான் - என் ஸ்வரூபத்தையும், எனதான குணங்கள் - என்னுடைய குணங்களையும், எனக்கு இசை நல் வழியும் - எனக்கு (அதிகாரத்திற்கு) ஏற்ற (பக்தி ப்ரபத்தி ஆகிய) நல்ல உபாயங்களையும், தான் உதவி - (எம்பெருமானாகிய) தான் கொடுத்து, தனைத் தந்திட நின்ற - தன்னையும் (நாம் அநுபவிக்குமாறு) கொடுக்கும்படி நின்ற, தனித் தருமம் - (எம்பெருமானாகிய) ஒப்பற்ற ஸித்தோபாயம், நான் இனி - நான் இனிமேல், வேறு ஓர் பரம் - வேறு ஒரு பொறுப்பையும், நணுகாவகை - அடையாதபடி, நல்கியது - அருள்புரிகின்றது.

இந்தச் சரீரத்திற்கும் ஆத்மாவுக்கும் உள்ள ஸம்பந்தம் அநாதியான கர்மங்களால் உண்டானதாகும். ஆக, கர்மத்தின் வசப்பட்டு ஸம்ஸாரஸமுத்ரத்தில் அழுந்திக்கிடக்கும் சேதநனுக்கு ஸ்வரூபத்தையும் ஜ்ஞாநம் முதலிய குணங்களையும் அளித்து, அவனது அதிகாரத்திற்குத் தக்க உபாயங்களை அநுஷ்டிக்கச் செய்து, தன்னையும் அநுபவிக்கப்படும் வஸ்துவாகக் கொடுக்கும் எம்பெருமான் சேதநனுக்கு ஒரு பொறுப்பும் வைக்காமல் தானே எல்லாப் பொறுப்பையும் ஏற்றுக் காக்கின்றான்—என்றவாறு.

ஆக, ஶரணசப்தத்திற்கு, மற்ற உபாயங்களை அநுஷ்டிக்கச் சக்தியற்று ப்ரபத்தியை அநுஷ்டிக்கும் சேதநன்விஷயத்தில் மற்ற உபாயங்களின் ஸ்தாநத்தில் எம்பெருமான் நிற்பதுவே பொருளாகும்.

'எனதான குணங்கள்' —பன்மையொருமைமயக்கம். 5

'வ்ரஜ' என்ற பதம்—பொருள் விளக்கம்

320 கடுவினை நாம்பெறும் பேற்றைத் தகைந்தமை கண்டுநம்மேற்
றொடைவில காம லிசைந்தொரு காலந் துணிவுடனே
யுடைமை யடைக்கல மாக வடைக்கு முகப்பதனு
லடையென வன்றுரைத் தானடை வித்தனன் றன்னடியே. 6

உரை:— கடு வினை - கொடிய கர்மமானது, நாம் பெறும் பேற்றை – நாம் அடையவேண்டிய பலனை, தகைந்தமை கண்டு – (பெறாமல்) தடுத்துவிட்டதை அறிந்து, நம்மேல் - நம்மிடத்து, தொடை விலகாமல் – சாஸ்த்ரம் (கூறிய ஆசாரம்) வழுவாமல், இசைந்து – (எம்பெருமானுக்கு உகப்பான கார்யங்களை) ஏற்றுக் கொண்டு, துணிவுடனே – (மஹாவிசுவாஸமாகிய) நம்பிக்கையுடன், உடைமை – (எம்பெருமானது) உடைமையாகிய ஆத்மஸ்வரூபத்தை, அடைக்கலமாக – ரக்ஷிக்கப்படவேண்டிய வஸ்துவாக, ஒரு காலம் – ஒரு முறை, அடைக்கும் உகப்பதனுல் – ஸமர்ப்பிப்பதில் உள்ள மகிழ்ச்சி யோடு, அடை என – (என்னைச் சரணமாக) அடைவாயாக என்று, அன்று – அப்பொழுது (பாரதப் போரில்), உரைத்தான் – (அர்ஜுநனுக்கு) உபதேசித்த கண்ணன், தன் அடி – தன் திருவடி களை, அடைவித்தனன் – (உபாயமாக) அடையச்செய்தான்.

இதுகாறும் நம்முடைய கர்மமானது நாம் அடையவேண்டிய புருஷார்த்தத்தைப் பெறமுடியாது தடுத்துவந்தது. இதை இப் பொழுது நாம் அறிந்தோம். இனி நாம் சாஸ்த்ரம் கூறும் ஆசாரத்தி லிருந்து விலகக் கூடாது. எம்பெருமானுக்குப் பிரியமான கார்யங் களையே செய்யவேண்டும். பலன் பெறுவதில் வலிய நம்பிக்கை இருக்கவேண்டும். எம்பெருமானுக்கு உடைமையான நம் ஆத்மாவை மகிழ்ச்சியுடன் அவனிடம் ஸமர்ப்பிக்கவேண்டும். இங்ஙனம் 'சரணமடை' என்று அர்ஜுநனுக்கு உபதேசித்த கண்ணன் தன் திருவடியை நாம் அடையச் செய்தான்—என்றவாறு.

ஆக, 'வ்ரஜ' என்னும் பதத்தால் ஆத்மாவை எம்பெருமானிடம் ஸமர்ப்பித்தலாகிய பொருள் கூறப்பட்டதாகும்.

'தொடை விலகாமல்' என்றதால் ப்ராதிகூல்யவர்ஜநமும், 'இசைந்து' என்றதால் ஆநுகூல்யஸங்கல்பமும், 'துணிவுடனே' என்ற தால் மஹாவிசுவாஸமும், முதலடியால் கைம்முதல் இல்லாமையை நினைப்பதாகிய கார்ப்பண்யமும், 'அடைக்கலமாக' என்றதால் கோப்த்ருத்வவரணமும், 'அடை' என்றதால் அங்கியான ஆத்மஸமர்ப் பணமும், 'அடைவித்தனன்' என்றதால் ஸாத்துவிகத்யாகமும் கூறப் பட்டன. (ப்ரபத்தியின் அங்கங்களின் விரிவை 241-வது பாசுர வுரையிற் காண்க.) 6

'அஹம்' என்ற சப்தம்—பொருள் விளக்கம்

321 கானென்ற வேதங்கள் காக்கும் பரனென்று காட்டநின்றேன்
றானென் றறிய கிலார்க்கறி விக்குந் தனித்திறலோன்
வானொன்றி னாரோடு மானிட னென்ன வவதரிப்பா
னானென்ற நந்திரு மானமை நற்பதஞ் சேர்த்திடுமே. 7

உரை:— கான் என்ற - காடு என்று சொல்லப்படுகின்ற, வேதங்கள் – வேதங்கள், காக்கும் பரன் என்று – ரக்ஷகனை பரம புருஷன் என்று, காட்ட நின்றேன் – காட்டும்படி நின்றவன், தான் என்று – (எம்பெருமானாகிய) தான் என்று, அறியகிலார்க்கு – அறிய முடியாதவர்க்கு, அறிவிக்கும் தனித் திறலோன் – (தன் பெருமையைத் தானே) அறிவிக்கின்ற ஒப்பற்ற பலத்தையுடையவனும், வான் ஒன்றினாரொடு – பரமபதத்தில் வஸிக்கும் நித்யஸூரிகளோடு, மானிடன் என்ன – மநுஷ்யன் என்று கூறும்படி, அவதரிப்பான் – (பூமியில்) அவதரிப்பவனும், நான் என்ற – அஹம் என்று (சரமசுலோகத்தில்) கூறிக்கொண்டவனுமான, நம் திருமால் – நம் ஸ்ரீமந்நாராயணன், நமை நல் பதம் சேர்த்திடும் – நம்மை (ஸ்ரீவைகுண்டமென்னும்) திவ்ய ஸ்தாநத்தில் சேர்த்திடுவான்.

அர்த்தத்தை எளிதில் அறியமுடியாதபடியால் வனமென்னலாம் படியுள்ள வேதங்களால் ஸர்வரக்ஷகனாகப் போற்றப்படுமவன் ஸர்வேசுவரனே என்று அறியாதார்க்கு எம்பெருமான் தானே தன் பெருமையைப் பேசி வெளியிடுகின்றான். அவன் இவ்வுலகிலுள்ள ஸம்ஸாரிகளை வாழ்விக்க நித்யஸூரிகளை மானிடராக அவதரிப்பித்துத் தானும் அங்ஙனம் அவதரிக்கின்றான். இத்தகைய எம்பெருமான் சரமசுலோகத்தில் 'அஹம்' என்ற பதத்தால் நமக்குத் தன் பெருமையைக் காட்டித் தன் திருவடிகளில் சேர்த்துக் கொள்கின்றான்—என்றவாறு.

ஆகவே, 'அஹம்' பதம் ஸர்வபாபங்களினின்றும் ஆச்ரிதனை விடுவிக்கவேண்டிய அபாரசக்தியையுடைய தன்மையைக் காட்டுகின்றது.

'பெரும்பாதகம் செய்த ஒரு சேதநனை ஸம்ஸாரமாகிய சிறையில் விலங்கிட்டுவைத்திருந்த நான் அவன் செய்த உபாயத்தால் கருணை சுரக்கப்பெற்று அவனுடைய பிழைகளைப் பொறுத்துப் பலன் தரும் போது விலக்கவல்லார் யாருமில்லை; வேறொருவனாலே இவனுக்கு முக்தி கொடுக்கவும் இயலாது, என்ற எம்பெருமானது சக்தியையும் 'அஹம்' பதம் காட்ட வல்லதாகும். 7

'த்வா' என்ற சப்தம்—பொருள் விளக்கம்

322 தன்னிலை காட்டித் தனிமை யுகந்து தனித்தகவா
லன்னிலை தீர வடைக்கலங் கொண்டடி சேர்த்திடவே
பன்னிலை மூல வெழுத்திலும் பாண்டவன் றேர்தனிலு
முன்னிலை கொண்ட பிரானெமை முன்னிலை கொண்டனனே. 8

உரை :— தன் நிலை காட்டி - (ஈசுவரனை) தன் ஸ்வரூபத்தை வெளியிட்டு, தனிமை உகந்து – (வேறு உபாயங்களை அநுஷ்டிக்க முடியாமையாகிய நம்முடைய) தனிமையைத் திருவுள்ளத்திற்கொண்டு, தனித்தகவால் - ஒப்பற்ற கருணையினால், அல் நிலை தீர – (நம்முடைய அஜ்ஞாநமாகிய) இருள் (நிறைந்த) நிலைமை நீங்கும்படி, அடைக்கலம்-கொண்டு – (நம்மைக்) காக்கப்படவேண்டிய வஸ்துவாகக் கொண்டு, அடி சேர்த்திட – (தன்) திருவடியில் சேர்த்துக்கொள்ள(க் கருதி), பல் நிலை – பல ஸ்வபாவங்களையுடைய, மூல எழுத்திலும் – (வேதத்தின்) முதலக்ஷரமாகிய ப்ரணவத்திலும், பாண்டவன் தேர்தனிலும் – அர்ஜுநனுடைய தேரிலும், முன் நிலை கொண்ட-முன்னே இருத்தலை (ஏற்று) க் கொண்ட, பிரான் – உபகாரகனான ஸர்வேசுவரன், எமை முன்னிலை கொண்டனன் – எம்மை முன்னிலையாக்கிக்கொண்டான்.

ஸர்வேசுவரன், சேதநம் அசேதநம் இவற்றைக்காட்டிலும் வேறுபட்டுநிற்கும் தன் ஸ்வரூபத்தை நமக்குக் கீதையின் வாயிலாக உபதேசித்தான்; பின் நாம் ஐசுவர்யம் முதலிய பலன்களின் அற்பத்தனத்தையும் அழியுந்தன்மையையும் கண்டறிந்து மோக்ஷத்தைப்பெற ஆசை மிகப்பெற்று அதற்கு உபாயமாக விதிக்கப்பட்ட மற்ற உபாயங்களில் சக்தியற்று நிற்கின்ற நிலையைக்கண்டு 'இவன் தக்க அதிகாரி' யென மகிழ்கின்றான். அத்தகைய ஸர்வேசுவரன் நம் ஜன்மம் வீணே கழிந்த நிலை இனி நீங்கி, நம்மைத் தன் திருவடிகளில் சேர்க்கக்கருதி 'த்வா' என்று நம்மை முன்னிலையாக்கி (உபதேசித்தருளி) னான்—என்றவாறு.

ப்ரணவம் அஷ்டாக்ஷரத்தில் உள்ளபோது அங்கமாகவும் தனியே நின்றபோது அங்கியாகவும் இருப்பதுபற்றிப் 'பல் நிலை' என்னலாயிற்று. அல்லது—ப்ரணவம் தனியே நிற்கும்போது ஒருமாத்திரை இரண்டுமாத்திரை மூன்றுமாத்திரை மூன்றரைமாத்திரை உச்சரிக்கப் பெறுவதால் 'பல் நிலை' எனக் கூறியதாகவும் கொள்வதுண்டு.

ப்ரணவத்தில் முதல் அக்ஷரமாகிய அகாரத்தால் எம்பெருமான் கூறப்படுவதாலும், அர்ஜுநனது தேரில் முன்பக்கத்தில் பாகனாய் வீற்றிருந்ததாலும் 'முன்னிலை கொண்டபிரான்' என்னலாயிற்று.

ஆக, என்னுடைய உபதேசமொழிகளாலே தத்துவம் மூன்றிலும் விவேகம் பிறந்து, ஐசுவர்யம் முதலியவற்றின் அற்பத்தன்மை அழியுந்தன்மை முதலிய தோஷங்களை அறிந்து அவற்றை வெறுத்து, என்னை அநுபவித்தலாகிய பெரிய பலனை அடையவிரும்பி, இதற்காக விதிக்கப்பட்ட மற்ற உபாயங்களை அநுஷ்டிக்கச் சக்தியற்று, உன்னாலே அடையத்தக்கவனாய் ஸகல விரோதிகளையும் ஒழிக்கவல்லவனான என்னிடத்தில் உன் பொறுப்பை ஸமர்ப்பித்துச் செய்யவேண்டிய கார்யத்தைச் செய்துமுடித்து, அதே பலனுக்காக மறுபடியும் அவ்வுபாயத்தைச் செய்யவேண்டாதபடி நிற்கின்ற உன்னை என்று 'த்வா' என்ற சொல்லின் தாத்பர்யம். 8

'ஸர்வபாபேப்ய:—பொருள் விளக்கம்

323 காடுக ளோநர கோகடி தாங்கர ளத்திரளோ
சூடு விடாவன லோதொலே யாநிலே நள்ளிருளோ
சாடு படச்சர ணாலன்று சாடிய சாரதியார்
வீடுசெய் வித்து நமைவிடு விக்கின்ற பாவங்களே. 9

உரை:— அன்று – (கண்ணனாக அவதரித்த) அந்நாள், சாடு பட– சகடாஸுரன் இறக்கும்படி, சரணால் சாடிய – திருவடிகளால் உதைத்தவனும், சாரதியார் – (அர்ஜுநனுடைய) தேர்ப்பாகனுமான கண்ணன், நமை வீடு செய்வித்து – நம்மை (நம் பொறுப்பை) விடும்படி செய்து (பரந்யாஸம் செய்யும்படி செய்து), விடுவிக்கின்ற பாவங்கள் – (நம்மைவிட்டு) ஒழிக்கின்ற பாபங்கள், காடுகளோ – வனங்களோ!, நரகோ – நரகமோ!, கடிது ஆம் – கொடியதான, கரளத் திரளோ – விஷத்தின் கூட்டமோ!, சூடு விடா அனலோ – உஷ்ணம் குறைவுபடாத அக்நியோ! தொலேயா நிலே – நீங்காத நிலேமையுடைய (ஸ்திரமான), நள் இருளோ – அடர்ந்த இருளோ! (எவ்வாறு வர்ணிக்கலாம்?)

பாபமாவது – சாஸ்த்ரத்தைக்கொண்டு அறியவேண்டுமதாய்த் தீங்கை விளேவிக்க ஸாதநமாயிருக்கும் ஒன்று. இங்கு மோக்ஷத்தை விரும்பும் அதிகாரிக்கு ஸ்வர்க்கம் முதலிய ஸுகங்களேக் கொடுக்கும் புண்யங்களும் ஸம்ஸாரத்தை வ்ருத்திசெய்யக்கூடியனவாதலின் அவையும் ஒழியவேண்டியிருத்தல்பற்றிப் பாபசப்தத்தால் கூறப் படுகின்றன. அத்தகைய அதிகாரிக்கு ஸ்வர்க்கமும் நரகமும் ஒன்றேயாம். 'பாபேப்ய:' என்ற பன்மையால் பாபங்களின் எண்ணற்ற தன்மை கூறப்படுகின்றது.

'ஸர்வ' என்னும் பதத்தால் பிற்கூறப்படும் பாபங்களும் சேர்க் கப்படுகின்றன. அவையாவன—(1) அவித்யையால் பகவானே அடைவதற்குத் தடையான கர்மம் உண்டாகின்றது. கர்மத்தால் அவித்யை உண்டாகின்றது. இவ்வாறு கர்மத்திற்குக் காரணமாயும் கார்யமாயும் வரும் அவித்யை (2) உலகஸுகங்களே இதுவரை அநுபவித்த வாஸனே (3) அவற்றில் விருப்பம் (4) ஸ்தூலமாயும் ஸூக்ஷ்மமாயுமுள்ள சரீரத்தை விடுமளவும் ஜீவனேப் பற்றிக்கொண்டு நிற்கும் ப்ரக்ருதிஸம்பந்தம்: என்பனவாம். இன்னும் ப்ரபத்திக்கு முன்பு செய்தவை, பின்பு செய்பவை, ப்ரபத்திக்கு முன்பே ஆரம்பிக்கப்பட்டு ப்ரபத்திக்குப்பின் முடிக்கவேண்டியதாய் உள்ள சில, ஆகிய ஸகல பாபங்களேயும் ஸர்வபாபசப்தம் குறிக்கின்றது.

கண்ணன் தொட்டிலில் கிடந்துறங்கும் இளம்பருவத்திலேயே, கம்ஸனுடைய ஏவுதலால் தன்னேக் கொல்லவந்த சகடாஸுரனே

எளிதில் காலால் உதைத்துத் தொலைத்ததுபோல் ப்ரபந்நனுடைய ஸகலபாபங்களையும் வேரறுத்துத் தீர்ப்பான் — என்றவாறு.

அவன் ஒழிக்கும் பாபங்கள் நம்மால் கண்டறியமுடியாதமை பற்றிக் காடுகளாகவும், பொறுக்கமுடியாத துன்பத்தைத் தருவது பற்றி நரகமாகவும், உள்ளே வளர்ந்து ஆத்மாவைக் கெடுத்துவிடுவது பற்றி விஷமாகவும், ஸம்ஸாரதாபத்தைத் தருவதுபற்றி அக்நியாகவும், சேதநனுக்கு ஸ்வரூபத்தை மறைப்பதுபற்றி நள்ளிருளாகவும் வர்ணிக்கப்பட்டன. *9*

'மோக்ஷயிஷ்யாமி' — பொருள் விளக்கம்

324 **சென்றுயர் வானமர்ந் தவ்வடி யாருடன் சேர்ந்திடவே**
யின்றெனி லின்றுநா ளையெனி ஞளை யினிச்செறிந்து
நின்ற நிலைநின் னனைத்து வினையுநின் விட்டகலக்
கன்றி விடுப்பனென் ருன்கருத் தானமைக் காத்திடுமே. 10

உரை :— சென்று – (அர்ச்சிராதிமார்க்கத்தால்) சென்று, உயர் வான் அமர்ந்து – உயர்ந்துநிற்கும் பரமபதத்தில் பொருந்தி, அவ்வடியாருடன் – அந்த நித்யஸூரிகளோடும் முக்தர்களோடும், சேர்ந்திட – ஒன்ருகக் கலந்து கைங்கர்யம்செய்ய, இன்று எனில் இன்று – இன்றே நீ விரும்பினுல் இன்றைக்கு, நாளை எனில் நாளை – நாளை விரும்பினுல் நாளைக்கு (அதாவது நீ விரும்புவதற்கு ஏற்ப), செறிந்து நின்ற நிலை – அடர்ந்து நின்ற நிலையையுடைய, நின் அனைத்து வினையும் - உன் ஸகல கர்மங்களையும், இனி நின் விட்டு அகல – இனிமேல் உன்னை விட்டு விலகிப்போகும்படி, கன்றி – சினந்து, விடுப்பன் என்ருன் – ஒழித்து விடுவேன் என்று கூறிய எம்பெருமான், கருத்தால் – (தன்) ஸங்கல்பத்தால், நமைக் காத்திடும் – நம்மைக் காத்தருள்வான்.

பரமபதத்தில் சென்று நித்யரோடும் முக்தரோடும் கைங்கர்யம் செய்ய நீ விரும்பும் காலத்திலேயே உன்பால் கருணை வைத்து உன் ஸகல கர்மங்களையும் ஒழித்துவிடுவேன் — என்றவாறு.

ஆக, சேதநன் விரும்பும்போதே முக்தனுகச்செய்வேன் என்பதே 'மோக்ஷயிஷ்யாமி' என்றதன் பொருளாம். *10*

'மா சுச:' — பொருள் விளக்கம்

325 **அறிவு மனைத்து மிலாவடி யோமை யடைக்கலங்கொண்**
டுறவேன நின்ற வேலாமுற வேநின்ற தானெமக்காய்
மறுபிற வித்துயர் வாரா வகைமனங் கொண்டகலா
விறையவ னின்னரு ளாலெங்கள் சோகந் தவிர்த்தனனே. 11

உரை :— மனம் கொண்டு – (நம்) மனத்தை இருப்பிடமாகக் கொண்டு, அகலா இறையவன் – (அதைவிட்டு) நீங்காத ஸர்வேசுவரன்

அறிவும் அனைத்தும் இலா – ஜ்ஞாநமும் வேறு எல்லா(ச் சாதநமு)மில்லாத, அடியோமை – தாஸர்களாகிய எங்களை, அடைக்கலம்கொண்டு – காக்கப்படவேண்டிய வஸ்துவாகக்கொண்டு, உறவு என நின்ற எலாம் – பந்து என்று கூறும்படி நின்ற எல்லாம், உறவே நின்ற தான் – (தன்னிடத்தில்) பொருந்தியிருக்கும்படி நின்ற எம்பெருமானுகிய தான், எமக்கு ஆய் – எம்மை உஜ்ஜீவிப்பிக்கக் கருதி, இன் அருளால் – (தன்னுடைய) இனிய கிருபையால், மறு பிறவித் துயர் – மறுபடியும் ஜந்மமாகிய துன்பம், வாராவகை-நேரிடாதவாறு(செய்து), எங்கள் சோகம் தவிர்த்தனன் – எங்கள் துக்கத்தைப் போக்கியருளினுன்.

ஸகல வஸ்துக்களுக்கும் ஆதாரமாய் நம் மனத்தில் பொருந்தி நிற்கும் ஸர்வேசுவரன் வேறு உபாயங்களில் சக்தியற்றுத் தன்னைச் சரணமடைந்த தாஸர்களாகிய நம்மைக் காக்கத் திருவுள்ளங்கொண்டு மறுபடியும் நம்மை இக்கர்மபூமியில் பிறவாதபடி செய்து நம் துக்கத்தைப் போக்கியருளினுன் — என்றவாறு.

'மா சுச:' என்னுந்தொடர் 'நீ துக்கமடையாதே' என்ற பொருளைத்தருகின்றது. சேதநனுக்குப் பலபடிகளில் துக்கம் ஸம்பாவிதமாதலின் அத்தகைய துக்கங்கள் அனைத்தையும் விட்டுவிடு என்றதாயிற்று. அதன் பொருள்விளக்கம் பின்வருமாறு :—

1. பக்தியோகமாகிய உபாயம் அநுஷ்டிக்கக் கடினமாயிருப்பதையும் விரோதிகள் அதிகமாயிருப்பதையும் பலன்பெற மிகவும் காலத்தாழ்வு ஏற்படுவதையும் கருதி நீ சோகிக்கவேண்டா.

2. ப்ரபத்தியை நீ அநுஷ்டித்தபின்பு உன்னைக் காக்கும் பொறுப்பு என்னுடையதாகி, அதனுல் வரும் பலனை அடைபவனும் நானேயாகி, உன்னைக் காவாவிடில் எனக்குப் பெரிய தீங்கு வரும் என்னலாம்படியான நிலைமையில் நான் இருக்க, என் ஸ்வாதந்த்ர்யத்தாலே உன்னைக் கைவிட்டு விடுவேன் என்று எண்ணி நீ சோகிக்க வேண்டா.

3. ப்ரபத்தி ஸகலஜாதியாருக்கும் அநுஷ்டிக்கத் தக்கதாயிருப்பதால், 'நான் இதற்கு அதிகாரியல்லேன்' என்று நீ சோகிக்க வேண்டா.

4. ப்ரபத்தி மிக எளிதாய் ஒரேமுறை ஒரேக்ஷணத்தில் அநுஷ்டிக்கக் கூடியதாய் வேறு உபாயங்களையும் வருத்த அங்கங்களைத் தவிர வேறு அங்கங்களையும் எதிர்பாராததாய் இருப்பதால், 'வேறு பெரிய உபாயத்தை அநுஷ்டிக்கவேண்டுமே' என்று நீ சோகிக்கவேண்டா.

5. சிறிய உபாயமாகிய ப்ரபத்திக்கு வசப்பட்டுப் பலன்கொடுக்கிற ஸர்வேசுவரனுகிய நான் மிக எளியனுய், மிக நம்பத்தக்கவனுய்,

கருணை நிறைந்தவனாய், தடையற்ற சுதந்திரமுடையவனாயிருப்பதால், ஸித்தோபாயமாய் நிற்கும் என்மீது ஸந்தேஹித்து நீ சோகிக்கவேண்டா.

6. ப்ரபத்தியை அநுஷ்டித்தபிறகு என்னுடைய ப்ரீதியையே பலனாகக்கொண்டு வேறு பலனை விரும்பாமல் செய்யும் நித்யநைமித்திக கர்மங்கள் அனைத்தும் ப்ரபத்திக்கு அங்கமல்லவாகையால், அவற்றை அநுஷ்டிக்கும்போது காலதேசாதிகளைப்பற்றி வரும் குறைகளை நினைந்து அங்கங்களில் குறைவு வருமோவென்று ஐயுற்று நீ சோகிக்க வேண்டா.

7. ப்ரபத்திக்குப்பின் பாபம் நேரிடாதவாறு ப்ரபத்திகாலத்தில் அதற்குக் காரணமான பாபத்திற்கும் சேர்த்து ப்ரபத்திசெய்தோ, அல்லது பாபம் நேர்ந்தபின் ப்ராயச்சித்தமாக ஒரு ப்ரபத்திசெய்தோ தீர்ந்தால், பின் பாகவதாபசாரம் முதலிய பாபங்கள் நேருமோவென்று நீ சோகிக்கவேண்டா.

8. அவ்வாறு முன்பே சேர்த்து ப்ரபத்தி செய்யத்தவறி, ப்ரபத்திக்குப் பிறகு தெரிந்தே பாபம் செய்வோருக்கும் ஒருவாறு பாபங்களை நான் போக்கிவிடுவதால், (64-வது பாசுரவுரையிற் காண்க) நரகம் முதலிய துன்பம் வருமோ என்று நீ சோகிக்கவேண்டா.

9. க்ஷணம்கூட விளம்பத்தைப் பொறுக்காது அப்போதே மோக்ஷம் வேண்டுமென்று ஆர்த்தப்ரபத்தி செய்வோருக்கு அப்போதே மோக்ஷத்தை நான் அளிப்பதால், நரகத்தைப்போன்ற இச்சரீரம் நெடுங்காலம் நிலைபெறுமோ என்று நீ சோகிக்கவேண்டா.

10. 'சரணமடைந்தவனை ஒருபோதும் கைவிடேன்' என்று நான் உறுதிகொண்டிருப்பதால் ப்ரபந்நன் குறிப்பிட்ட காலம் வரையில் மோக்ஷம் கொடுக்க விளம்பித்தாலும் பலன் கொடுப்பதில் சிறிதும் ஐயமில்லையாதலின், சில பாபங்களாலே ப்ரபத்தியாகிய புண்யமும் ஒழிந்து பலன் பெறாமற்போக நேரிடுமோவென்று நீ சோகிக்க வேண்டா.

11. இச்சரீரம் முடிந்தவுடன் மோக்ஷம் கொடுக்கவேண்டு மென்று நீ காலத்தைக் குறித்தபடியால், மறுபிறவிக்குக் காரணமான கர்மங்களாலே மறுபடியும் பிறக்க நேருமோவென்று நீ சோகிக்க வேண்டா.

12. வேறு பலனை நாடாது ப்ரபத்தியைச் செய்தவனுக்கு மோக்ஷத்திற்குத் தடையாயிருந்த ஸகலகர்மங்களும் கழிந்துவிடுகையால், கைவல்யம் (தனியான ஆத்மாவை அநுபவித்தல்) முதலிய இடையூறுகளால் மோக்ஷம்பெற விளம்பமுண்டாகுமோவென்று நீ சோகிக்கவேண்டா.

இப்படி ஸகல சோகங்களும் கழியும்படி என் அநுக்ரஹத்தைப் பெற்ற நீ இனிச் சோகிக்கை ப்ரபத்தியின் பெருமைக்கும், உன் பொறுப்பை ஏற்றுக்கொண்ட என் பெருமைக்கும், என்னிடம் எல்லாப் பொறுப்பையும் வைத்த உன் நிலைமைக்கும் தகுதியன்று. ப்ரபத்திக்கு முன்பு சோகியாமையும் பின்பு சோகிக்கையும் அவிவேகச் செயலாம்—என்றவாறு.

சரமசுலோகத்தில் மிகவும் ஸாரமான பாகம் 'மாசுச:' என்பது. ஆதலின் இதன் தாத்பர்யத்தை ஆசார்யர்கள் தங்கள் சரமதசையில் நல்ல சிஷ்யர்களுக்குப் பரமரஹஸ்மாய் உபதேசிப்பர். 11

சரமசுலோகத்தின் திரண்ட பொருள்

சேதநனே! உன்னுடைய ஜ்ஞாநம் அற்பமானது. சக்தியும் அத்தகையதே. நீ உயிர்வாழ்வது சிறிதுகாலமே. மோக்ஷம்பெற விளம்பத்தை நீ பொறுக்காதிருக்கிறாய். மற்ற உபாயங்கள் உன்னால் அறிந்து அநுஷ்டிக்கமுடியாதவை. மேலும் அவை விளம்பித்துப் பலன் தருவன. ஆதலால் அவற்றில் நீ அலையவேண்டாம். நான் எல்லோர்க்கும் எளியன்; ஸகலலோகங்களுக்கும் சரணமாயிருப்பவன்; அனைத்தையும் காப்பதற்கு வேண்டிய ஸகலகுணங்களையுமுடையன். நீ என்னை ஒருவனையே உபாயமாகக்கொள். என்னிடம் ஐந்து அங்கங்களுடன்கூடிய பரந்யாஸத்தைச் செய். இப்படிச் செய்தவுடன் நீ கடமையைச் செய்தவனாவாய். என்னால் காக்கப்படவேண்டியவனாகி விடுவாய். எனக்கு மிகவும் பிரியனாக ஆகிவிடுவாய். எனக்கு உன்னிடமுள்ள கருணை அளவிடற்பாலதன்று. உன்மீது அருள் புரிய முற்பட்டேன். என் சுதந்திரத்திற்குத் தடையே கிடையாது. என்னுடைய ப்ரவ்ருத்திக்குப் பலனை அடைபவனும் நானேயாவேன். நான் செய்யும் கார்யத்திற்கு என் ஸங்கல்பம் ஒன்றே துணையாகும். உனக்கு உள்ள விரோதிவர்க்கம் பலவகைப்பட்டது; அளவற்றது; உன்னால் ஒழிக்க முடியாதது. அதையெல்லாம் வேரறுத்து விடுவேன். இனி அது தொடராது. என்னையும் என்னுடையவற்றையும் உனக்கு அநுபவிக்கத் தந்து உன்னை எனக்குச் சமமான போகமுடையவனாக்குவேன். இவ்வாறு முழுதும் நீ என்னை அநுபவித்தால் அதற்குப் போக்குவீடாக எங்கும் எப்போதும் எந்நிலையிலும் செய்யத்தக்க கைங்கர்யத்தை உனக்குக் கொடுப்பேன். நீ ஒன்றுக்கும் சோகிக்கவேண்டாம்—என்றவாறு.

சரமசுலோகச்சுருக்கு-உரை முற்றிற்று

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

ஸ்ரீ:

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

கீதார்த்தசங்கிரகம்—உரை

சிறப்புத்தனியன்—உரை

நேரிசைவெண்பா

கட்டப் பொருள்விரித்த காசினியி னுன்மறையி
னிட்டப் பொருளியம்பு மின்பொருளைச்—சிட்டர்தொழும்
வேதாந்த தேசிகனை மேவுவார் தங்கடிருப்
பாதாம் புயமடியேன் பற்று.

காசினியில் – பூமியில், கட்டப் பொருள் விரித்த – (அறிவதற்குக்) கடினமான அர்த்தங்களை விரித்துக்கூறுகின்ற, நான் மறையின் – நான்கு வேதங்களின், இட்டப் பொருள் இயம்பும் - இஷ்டமான அர்த்தங்களை (த் தம் ஸூக்திகளால்) விளக்குகின்ற, இன் பொருளை – (அநுபவிக்க) இனிய வஸ்துவாயுள்ளவரும், சிட்டர் தொழும் – பெரியோர்களால் தொழப்படுமவருமான, வேதாந்த தேசிகனை – ஸ்ரீவேதாந்ததேசிகனை, மேவுவார்தங்கள் – (பக்தியுடன்) உபாஸிப்பவர்களுடைய, திருப்பாதாம்புயம் – திருவடிகளாகிய தாமரை, அடியேன் பற்று – அடியேனுக்கு அடைக்கலமாகும்.

குறள்வெண்பா

கீதை மொழிந்தருளும் வேதாந்த தேசிகனுர்
பாதார விந்தமலர் பற்று.

கீதை மொழிந்தருளும் – கீதையின் ஸாரார்த்தத்தை(த் தமது கீதார்த்தசங்கிரகமென்னும் நூலில்) அருளிச்செய்தவரான, வேதாந்ததேசிகனுர் – ஸ்ரீவேதாந்ததேசிகனுடைய, பாதாரவிந்தமலர் – திருவடிக் கமலப்பூ, பற்று – (அனைவருக்கும்) தஞ்சமாகும்.

[விஷயச்சுருக்கம்]

ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ- பூமி- நீளாதேவியருடன் நித்யஸூரிகளாலும் முக்தராலும் சூழப்பட்டுத் திருமாமணிமண்டபத்தில் வீற்றிருந்து செங்கோல்செலுத்திவருகின்ற ஸ்ரீமந்நாராயணன் இக்கர்மபூமியிலுள்ள ஸாதுக்களைக் காக்கவும், துஷ்டர்களை அழிக்கவும், தர்மத்தை நிலைநாட்டவும் திருவுள்ளங்கொண்டான்; வடமதுரையில் கண்ணனுய்த் திருவவதரித்து எல்லோருக்கும் அணுக மிக எளியனுய்

நின்றான்; தன்னைச் சரணமடைந்த பாண்டவர்க்குத் தூதுசெல்வதைப் பெருமையாகக் கொண்டான்; போர்க்களத்தில் அர்ஜுநனைத் தலைவனாக்கித் தான் பாகனாகித் தேரில் தட்டுமாறித் தாழநின்று அவனுக்கு ஏவல் புரிபவனாயிருந்தான்; அர்ஜுநனைப் பெயரளவில் நிறுத்திவிட்டுத் தானே பகைவர்கூட்டத்தை ஒழிக்கக் கங்கணங்கட்டி நின்றான். இதைக்கண்ட அர்ஜுநன், பந்துக்கள் போரில் மடிவது உறுதியெனக் கண்டான்; தகாத விஷயத்தில் அன்பினால் சோகமும் இரக்கமும் அவனுள்ளத்துப் பெருகின. எதிரே நின்று உயிரிழக்கப் போகும் பந்துவர்க்கத்தையும் ஆசிரியர்கூட்டத்தையும் கண்டான். அவர்கள் தன்னுடன் போர் செய்ய முற்பட்டிருந்தபோதிலும் அவர்களைக் கொல்வதால் தனக்குவரும் பாபத்துக்கு அஞ்சிக் கலங்கி மனமழிந்து நிலைகுலைந்தான்; க்ஷத்திரியர்களுக்குத் தர்மமாயுள்ள யுத்தத்தை அதர்மமென எண்ணிவிட்டான். இங்ஙனம் கலங்கிய அர்ஜுநன் கண்ணனைச் சரணமடைந்தான்; சிஷ்யனாக தனக்கு நன்மையை உபதேசிக்குமாறு வேண்டினான்.

கண்ணன் அவனது துக்கத்தைப் போக்க மனங்கொண்டான்; அவனைக் காரணமாகக்கொண்டு பகவத்கீதையாகிய அமுதத்தை உலகுக்குப் பொழியக் கருதினான்; அர்ஜுநனுக்கு முதலில், சரீரத்திற்காட்டிலும் வேறுபட்டு எம்பெருமானுக்கு அடிமையாய் நித்யமாயுள்ள ஆத்மஸ்வரூபத்தை நன்கு உணர்ந்தவன் மோக்ஷத்தைப் பெறுவதற்குப் பரம்பராகாரணமான கர்மயோக–ஜ்ஞாநயோகங்களையும் நேர்க்காரணமாக விதிக்கப்பட்ட பக்தியோகத்தையும் அவ்வவற்றின் அங்கங்களுடன் உபதேசித்தான்; அர்ஜுநனை நன்கு பரீக்ஷிக்கவேண்டுமென்று திருவுள்ளங்கொண்டு, 'இன்னது மோக்ஷத்திற்கு ஸாதநம், இதையே முக்கியமெனக்கொண்டு செய்' என்று நிச்சயமான வழியைக் காட்டாமல் 'இவ்வுபாயங்களில் நீ விரும்புவதைக் கைக்கொள்' என்று கூறி நிறுத்தினான். அர்ஜுநனும் கண்ணன் தனக்கு நிலையான வழியைக் காட்டாமல் தன்னை உபேக்ஷிப்பதாய் நினைத்து முகத்தில் துக்கம் ததும்ப நின்றான். அதைக் கண்ட கண்ணனும் மறுபடியும் அந்தப் பக்தியோகத்தையே உறுதியாக உபதேசித்துப்பார்ப்போமெனக் கருதினான். முதலில் தான் உபதேசித்த பக்தியோகத்தையே 'இது எல்லாவற்றிலும் மிக ரகஸ்யம்' என்று பீடிகைபோட்டுக்கொண்டு அவன் மிக்க கவனத்தோடு கேட்குமாறு மறுபடி உபதேசித்தான்.

அதைக் கேட்ட பின்பு அர்ஜுநனுடைய சோகம் இரண்டு மடங்காயிற்று. பக்தியோகத்தை அதன் அங்கங்களுடன் அநுஷ்டிப்பது மிகக்கடினம். ஜ்ஞாநமும் சக்தியும் நிறைந்திருக்கவேண்டும். நெடுங்காலம் மிக்க கவனத்துடன் அநுஷ்டிக்கவேண்டும். பலன் விரைவில் கிட்டாது. ஆதலின் அர்ஜுநன் மறுபடி கலங்கிவருந்தினான். அவனுடைய துக்கத்தைக் கண்ட கண்ணன் அவனைத் தக்க பாத்ரமாகக் கருதினான்; அவனைக் காரணமாக வைத்துக்கொண்டு உலகை

வாழ்விக்கத் திருவுள்ளங்கொண்டான்; உடனே மோக்ஷத்திற்கும் மற்றைப் பலன்களுக்கும் ஸாதநமாய் வகுத்த அங்கங்களன்றி வேறோர் அங்கமில்லாததாய் மிகச் சுலபமாய் க்ஷணகாலத்தில் அநுஷ்டிக்கக் கூடியதாய்ப் பரமரஹஸ்யமான ப்ரபத்தியைச் சரமசுலோகத்தால் உபதேசித்தருளினன். அதைக் கேட்ட அர்ஜுநனும் கலக்கம் நீங்கிக் கண்ணனது கட்டளையைச் சிரமேற்கொண்டு நடந்து உஜ்ஜீவித்தான்.

இந்த வரலாறே ஸ்ரீபகவத்கீதையாய்த் திருவவதரித்தது. 18-அத்யாயம் கொண்ட இந்தக் கீதையை உபநிஷத்துக்களின் ஸாரமென்றும் மஹாபாரதத்தின் உயிர்நிலையென்றும் முன்னோர் கொண்டாடுவர். இதற்குக் கண்ணனது திருப்பவளச்செவ்வாயினின்று நேரில் தோன்றிய பெருமை உளது. இதன் மேன்மையையும் அவசியத்தையும் கண்டு ஆளவந்தார் இதன் ஸாரத்தைப் பொதிந்து கீதார்த்தஸங்க்ரஹமென்னும் ஒரு சிறிய திவ்யஸூக்தியை அருளிச்செய்தார். ஸ்ரீபாஷ்யகாரரும், இந்தக் கீதையின் அர்த்தத்தை விபரீதமாக்காதபடி அனைவரும் உள்ளவாறு அறிந்து வாழவேண்டுமென்ற குளிர்ந்த எண்ணங்கொண்டு ஒரு பாஷ்யமிட்டருளினர். ஸ்ரீதேசிகனும் இந்தப் பாஷ்யத்திற்குத் தாத்பர்யசந்த்ரிகை என்ற விரிவான ஒரு வ்யாக்யாநத்தை அருளிச்செய்து அதில் பிறமதத்தினரின் அர்த்தங்களைக் கண்டித்து ஸ்ரீபாஷ்யகாரரின் உரையே கண்ணன்கருத்துக்கும் வேதத்துக்கும் இசைந்ததென ஸ்தாபித்தருளினர். கீதார்த்தஸங்க்ரஹத்திற்கும் கீதார்த்தஸங்க்ரஹரக்ஷையென்ற ஓர் அழகிய உரையை ஸ்ரீதேசிகன் அருளிச்செய்துள்ளார். இவ்வாறு முக்கியத்தன்மை வாய்ந்து விளங்கும் ஸ்ரீபகவத்கீதையின் ஸாரார்த்தத்தைத் தமிழ்ப் பற்றுள்ள ஆஸ்திகரும் அறிந்து உய்யும்படி ஆளவந்தார் ஸ்ரீஸூக்தியின் மொழிபெயர்ப்புவடிவத்தில் அமைந்துள்ள இப்பிரபந்தத்தில் ஸ்ரீதேசிகன் அருளிச்செய்தார்.

இப்பிரபந்தம் முழுதும் கட்டளைக்கலித்துறையால் அமைந்ததாம்.

கீதை முழுவதின் ஸாரார்த்தம்—விளக்கம்

326 கருமமு ஞானமுங் கொண்டெழுங் காதலுக் கோரிலக்கென்
றருமறை யுச்சியு ளாதரித் தோது மரும்பிரமந்
திருமக ளோடு வருந்திரு மாலென்று தானுரைத்தான்
றரும முகந்த தனஞ்சய னுக்கவன் சாரதியே. 1

உரை:— தருமம் உகந்த – தர்மத்தில் விருப்பமுள்ள, தனஞ்சயனுக்கு – அர்ஜுநனுக்கு, அவன் சாரதி - அவனுடைய தேர்ப்பாகனாகிய கண்ணன், கருமமும் ஞானமும் கொண்டு – கர்மயோகத்தையும் ஜ்ஞாநயோகத்தையும் (ஸாதநமாகக்) கொண்டு, எழும் –

வ்ருத்தியடைகின்ற, காதலுக்கு – பக்தியோகத்திற்கு, ஓர் இலக்கு என்று – ஒரே லக்ஷ்யம் என்று, அரு மறை உச்சியுள் – (அறிதற்கு) அருமையான வேதாந்தத்தில், ஆதரித்து ஓதும் – கொண்டாடிக் கூறப்படுகின்ற, அரும் பிரமம் – (அடைதற்கு) அரிய ப்ரஹ்மம், திருமகளோடு வரும் – (எப்பொழுதும்) பெரியபிராட்டியாரோடு தோன்றுகின்ற, திருமால் என்று – ஸ்ரீமந்நாராயணனே என்று, தான் உரைத்தான் – தானே அருளிச்செய்தான்.

முதலில் கர்மயோகத்தை அநுஷ்டித்து மனத்தை வசப் படுத்திக் கொண்டபின் ஜ்ஞாநயோகத்தை அநுஷ்டித்து அதனால் ஆத்மாவின் ஸாக்ஷாத்காரத்தைப் பெற்றுப் பக்தியோகத்தை அநுஷ்டிக்கவேண்டியது பற்றிக் 'கருமமும் ஞானமும் கொண்டெழும் காதலுக்கு' என்னலாயிற்று.

வேதாந்தங்கள் முழுதும் இத்தகைய பக்தியோகத்திற்கு இலக்காயிருப்பவன் ஸ்ரீமந்நாராயணனாகிய பரப்ரஹ்மமே என்று கூறும். தர்மத்தில் கருத்தூன்றிய அர்ஜுநனுக்குக் கண்ணன், தன்னையே அத்தகைய பரப்ரஹ்மமாகக் கூறி வெளியிட்டான்—என்றவாறு.

ஸ்ரீபகவத்கீதையின் 18-அத்யாயங்களை ஆறு ஆறு அத்யாயங் களாகப் பிரித்து மூன்று ஷட்கமாகக் கொண்டனர் முன்னோர். முதல் ஷட்கத்தில் கர்மயோகமும் ஜ்ஞாநயோகமும், இரண்டாவது ஷட்கத் தில் பக்தியோகமும், மூன்றுவது ஷட்கத்தின் முற்பாதியில் சேதநம், அசேதநம், அவற்றின் சேர்க்கையாகிய ப்ரபஞ்சம் இவற்றின் ஸ்வரூபஸ்வபாவங்களும், ஸர்வேசுவரனது உண்மை நிலைமையும், பிற் பாதியில் கர்மம் – ஜ்ஞாநம் – பக்தி ஆகிய இவற்றை அநுஷ்டிக்கும் முறை, சாஸ்த்ரத்திற்குக் கட்டுப்பட்ட தன்மை முதலியனவும் ப்ரதாந மாய் விளக்கப்படுகின்றன.

இப்பாசுரத்தில் 'கருமமுஞானமும்' என்றதால் முதல் ஷட்கத்தின் அர்த்தமும், 'காதலுக்கு' என்றதால் இரண்டாம் ஷட்கத்தின் அர்த்தமும், 'அரும்பிரமம்' என்று சேதநாசேதநங் களைக் காட்டிலும் வேறுபட்டு நிற்கும் ப்ரஹ்மத்தைச் சொல்லியதால் மூன்றுவது ஷட்கத்தின் முற்பாதியின் அர்த்தமும், 'தருமமுகந்த' என்று சாஸ்த்ரத்திற்குக் கட்டுப்பட்ட தன்மை சொன்னதால் பிற்பகுதியின் அர்த்தமும் கூறப்பட்டன. 1

* स्वधर्मज्ञानवैराग्यसाध्यभक्त्येकगोचरः ।
नारायणः परं ब्रह्म गीताशास्त्रे समीरितः ॥ 1

*இவ்வாறே ஒவ்வொரு பாசுரத்தின் உரைக்குறிப்பின் முடிவிலும் அந்த அந்தப் பாசுரத்திற்கு மூலமான ஆளவந்தார் அருளிய கீதார்த்தஸங்க்ரஹசுலோகங்கள் கொடுக்கப்படுகின்றன.

ज्ञानकर्मात्मिके निष्ठे योगलक्ष्ये सुसंस्कृते ।
आत्मानुभूतिसिद्ध्यर्थे पूर्वषट्केन चोदिते ॥ 2

मध्यमे भगवत्तत्त्वयाथात्म्यावाप्तिसिद्धये ।
ज्ञानकर्माभिनिर्वर्त्यो भक्तियोगः प्रकीर्तितः ॥ 3

प्रधानपुरुषव्यक्तसर्वेश्वरविवेचनम् ।
कर्म धीर्भक्तिरित्यादिः पूर्वशेषोऽन्तिमोदितः ॥ 4

1-வது அத்யாயத்தின் ஸாரம்—விளக்கம்

327 உகவை யடைந்த வுறவுடை யார்போர லுற்றவந்நாட்
டகவுட னன்பு கரைபுர ளத்தரு மத்தளவின்
மிகவுள மஞ்சி விழுந்தடி சேர்ந்த விசயனுக்கோர்
நகையுட னுண்மை யுரைக்க வமைந்தன ஞரணனே. 2

உரை:— உகவை அடைந்த – களிப்பையுடையராயிருந்த, உறவுடையார் – பந்துக்கள், பொரலுற்ற அந்நாள் – போர்செய்தலை மேற்கொண்டுவந்துநின்ற அக்காலத்தில், தகவுடன் – கருணையுடன், அன்பு கரை புரள – அன்பு கரைபுரண்டோட, தருமத்து அளவில் – தர்மத்தைப்பற்றிய ஜ்ஞாநத்தில், உளம் மிக அஞ்சி – மனம் மிகப் பயந்து, விழுந்து அடி சேர்ந்த – திருவடிகளில் விழுந்து சரணமடைந்த, விசயனுக்கு – அர்ஜுநனுக்கு, நாரணன் – (கண்ணனுக அவதரித்த) ஸ்ரீமந்நாராயணன், ஓர் நகையுடன் – ஒப்பற்ற புன்சிரிப்புடன், உண்மை உரைக்க – (ஆத்மாக்களின்) உண்மையை உபதேசிக்க, அமைந்தனன் – பொருந்திநின்றுன்.

பீஷ்மர் முதலிய பந்துக்களும் த்ரோணர் முதலிய ஆசார்யர்களும் தங்களிடம் மிக்க அன்புடையராயிருந்தனர். அவர்களே இப்பொழுது தங்களை எதிர்த்துப் போர்செய்யப் போர்க்களத்தே வந்து நின்றதை அர்ஜுநன் கண்டான். தகுதியற்ற அவர்கள்மீது அர்ஜுநனுக்கு அன்பும் கருணையும் கரைபுரண்டோடின. அதனுல் க்ஷத்திரியர்களுக்குச் சிறந்த தர்மமாயுள்ள யுத்தத்தை அதர்மமெனக் கருதி அர்ஜுநன் அஞ்சினுன்; பகைவராய்நிற்பவர்களை எதிர்க்கத் துணியவில்லை; வில்லையும் அம்பையும் கீழே போட்டுவிட்டுத் தேரினடியில் அயர்ந்து உட்கார்ந்தான்; பின் கண்ணனைச் சரணமடைந்து தனக்கு நன்மையை உபதேசிக்க வேண்டினுன். கண்ணனும் புன்சிரிப்புடன் ஜீவாத்மா பரமாத்மா இவர்களின் ஸ்வரூபம், பகவானை அடைய உபாயம் முதலிய ஸகலவேதாந்தங்களின் ரஹஸ்யார்த்தங்களை

இனிமை மிக எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய வகையில் அநாயாஸ மாக அர்ஜுநனுக்கு உபதேசிக்கத்தொடங்கினன்—என்றவாறு. 2

अस्थानस्नेहकारुण्यधर्माधर्मधियाऽऽकुलम् ।
पार्थं प्रपन्नमुद्दिश्य शास्त्रावतरणं कृतम् ॥ 5

2-வது அத்யாயத்தின் ஸாரம்—விளக்கம்

328 உடல மழிந்திடு முள்ளுயி ரொன்றழி யாதெனைப்போல்
விடுமது பற்று விடாத தடைத்த கிரிசைகளே
கடுக வுனக்குயிர் காட்டு நினைவத னுலுளதாம்
விடுமய லென்று விசயனைத் தேற்றினன் வித்தகனே. 3

உரை :— வித்தகன் – அதிசயச்செய்கையுடைய கண்ணன், உடலம் – சரீரம், அழிந்திடும் – அழிந்துபோகும், உள் உயிர் ஒன்று – சரீரத்திற்குள் இருக்கும் ஜீவாத்மாவாகிய ஒரு வஸ்து, என்னைப் போல் – (பரமாத்மாவாகிய) என்னைப்போல், அழியாது – நாசமடை யாதிருக்கும், பற்று – (பலன் முதலியவற்றில்) பற்றுதல், விடுமது – விடத்தக்கதாகும், அடைத்த கிரிசைகள் – விதிக்கப்பட்ட கர்மங்கள், விடாதது – விடத்தகாதவையாகும், அதனுல் – (பற்று இல்லாமல் செய்த) அந்தக் கர்மயோகத்தால், உயிர் காட்டும் நினைவு – ஆத்மஸ்வ ரூபத்தைக் காட்டக்கூடிய ஜ்ஞாநயோகம், கடுக – விரைவில், உனக்கு உளதாம் – உனக்கு ஏற்படும், மயல் – மோஹத்தை, விடு என்று – விட்டுவிடு என்று, விசயனை – அர்ஜுநனை, தேற்றினன் – தெளிவித் தான்.

[உடலம்.........எனைப்போல்] அர்ஜுநனே! ஸர்வேசுவரனுகிய நான் அழிவற்று நித்யனுய்நிற்பவன். இவ்விஷயத்தில் சிறிதும் ஸந்தேஹமில்லை. இவ்வாறே ஜீவாத்மாக்களும் அழியாது நித்யமா யிருப்பவர்களென்பதில் ஸந்தேஹமில்லை. ஆனுல் 'இறந்தான்' 'பிறந்தான்' என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? என்று கேட்கலாம். அதற்கும் இடமில்லை. குழவிப்பருவம் இளம்பருவம் வாலிபம் முதுமை முதலிய பருவங்களில் ஒரு பருவத்தினின்று மற் ருென்றுக்குச் சரீரத்திலுள்ள ஜீவன் போகும்போது இறந்ததாக நினைத்து ஒருவரும் வருந்துவதில்லை. இதற்குக் காரணம் ஆத்மா அழிவற்றவன் என்ற நிச்சயமேயாகும். இங்ஙனமே ஜீவன் ஒரு சரீரத்தைவிட்டு மற்ருென்றுக்குச் செல்வதே இறத்தல் எனக் கூறு வதுபற்றி இதற்கும் ஆத்மாவை நித்யனென உணர்ந்தவன் வருந்த் மாட்டான். ஆத்மாவை ஆயுதத்தால் வெட்டமுடியாது; தீயால் எரிக்கமுடியாது; நீரினுல் நனைக்கமுடியாது; காற்றினுல் உலர்த்த முடியாது. ஜீவன் அழிவற்றவன்; எங்கும் ஊடுருவிச் செல்லுமாறு மிக ஸூக்ஷ்மமானவன். இத்தகையஆத்மாவைக் கொல்லமுடியாது.

ஆத்மாவைக் கொல்லுபவனுக ஒருவனை நினைப்பதும் ஆத்மாவைக் கொல்லப்பட்டதாகக் கருதுவதும் அறிவற்ற செயலாம். உலகத்தில் ‘இறத்தல்’ என்பது நித்யமான ஆத்மா ஒரு சரீரத்தை விட்டுப் பிரிவதேயாகும். இப்பொழுது போரில் உன்னுல் கொல்லப்படும் பகைவர்களின் அந்த அந்த ஆத்மா ஸ்வர்க்கலோகத்திற்குச் சென்று இழந்த சரீரத்திற்காட்டிலும் சிறந்த சரீரத்தையே பெற்று உயர்ந்த ஸுகத்தை அனுபவிக்கப்போவதால் நீ மகிழ்ச்சிகொள்வதே முறையாகும். கந்தலாடைகளைக் கழற்றியெறிந்து புதிய ஆடையை அணிவதற்கு ஒருவனும் வருந்தமாட்டானன்றே?

ஜீவன் அழியாவிடினும் சரீரம் அழிந்துபோமேயென்று ஒருகால் வருந்துகின்றுயோ? அதுவும் முறையன்று. இச்சரீரம் பஞ்சபூதங்களாலாகியது; நித்யனை ஜீவன் தான் செய்த கர்மங்களின் பலனை அநுபவிப்பதற்கு உரிய இடமாகவே அமைந்துள்ளது. ஆதலின் கர்மம் கழிந்ததும் சரீரம் அழிந்துபோம். சரீரத்திற்கு மாறுபாட்டை அடைவதே இயற்கை. போரில் நீ அடிக்காவிடினும் அவர்கள் சரீரம் எப்படியும் அழிந்தே தீரும். ஆதலால் சரீரம் அழிவதற்கும் வருந்த இடமில்லை.

[விடுவது............கிரிசைகளே] சாஸ்த்ரங்களால் ஆத்மாவின் ஸ்வரூபத்தை நன்கு தெளிந்து, பின் கர்மங்களை அநுஷ்டிக்கும்போது அவற்றின் பலனில் பற்றுவைக்காது பகவத்கைங்கர்யமென்றே அநுஸந்தித்துச் செய்யவேண்டும். பலனில் பற்றுதலைமட்டும் விடவேண்டுமேயன்றி விதிக்கப்பட்ட கர்மங்களை ஒருபோதும் விடக்கூடாது. யுத்தமென்பது க்ஷத்திரியனுக்குத் தன் கடமையாகும். ந்யாயமான யுத்தத்தைக் காட்டிலும் க்ஷத்திரியனுக்கு நன்மையைத் தருவது ஒன்றுமில்லை. ஆதலின் நீயும் பலனைக் கருதாது உன் கடமையெனக் கருதிப் பகவத்கைங்கர்யமெனக்கொண்டு ந்யாயமான யுத்தமென்ற கர்மயோகத்தைச் செய்தால் கடைசியில் மோக்ஷத்தையும் பெறுவாய்.

[கடுக.........உளதாம்] இத்தகைய கர்மயோகத்தாலே மனம் வசப்பட்டபின் ஸர்வேசுவரனுக்குச் சரீரமாயுள்ள ஆத்மாவின் ஸ்வரூபத்தை இடைவிடாது சிந்தித்தலாகிய ஜ்ஞாநயோகம் ஸித்தித்துப் பின் ஆத்மஸாக்ஷாத்காரம் ஏற்படும். ஆதலின் ஆத்மஸ்வரூபத்தையும், யுத்தமாகிய கர்மயோகம் ஆத்மஸாக்ஷாத்காரத்திற்கு ஸாதநமென்பதையும் அறிந்துகொண்டு ‘சரீரமே ஆத்மா’ என்ற அஜ்ஞாநத்தைப் போக்கிக்கொள்.

இவ்விஷயங்களை இரண்டாம் அத்யாயத்தில் கண்ணன் அர்ஜுநனுக்கு உபதேசித்தான்—என்றவாறு.

தேரில் பாகனுய்நின்றபோதே ஆசார்யனுகவும் நின்று உபதேசித்த அதிசயச்செய்கையை நினைந்து ‘வித்தகன்’ என்னலாயிற்று.

விடாதது......கிரிசைகள்—பன்மையொருமைமயக்கம். 3

नित्यात्मासङ्गकर्मेहागोचरा साङ्ख्ययोगधीः ।
द्वितीये स्थितधीलक्षा प्रोक्ता तन्मोहशान्तये ॥ 6

3-வது அத்யாயத்தின் ஸாரம்—விளக்கம்

329 சங்கங் தவிர்ந்து சகஞ்சதிர் பெற்ற தனஞ்சயனே
பொங்குங் குணங்கள் புணர்ப்பனைத் தும்புக விட்டவற்று
ணங்கண் ணுரைத்த கிரிசை யெலாமென வுங்நவின்ரு
ரேங்கும் மறிவர்க ளேயென்று நாத னியம்பினனே. 4

உரை:— நாதன் – ஸர்வேசுவரனாகிய கண்ணன், சகம் – உலகத்தில், சதிர் பெற்ற – பெருமை பெற்ற, தனஞ்சயனே – அர்ஜுநனே !, சங்கம் தவிர்ந்து – (கர்மபலன்களில்) பற்று விட்டு, பொங்கும் குணங்கள் – (மாறிமாறி) வ்ருத்தியடைகின்ற (ஸத்துவம், ரஜஸ், தமஸ் ஆகிய மூன்று) குணங்களால் நிகழும், புணர்ப்பு அனைத்தும் – கார்யங்கள் எல்லாவற்றையும், அவற்றுள் புகவிட்டு – அந்தக் குணங்களுக்குள் ஏற்றிவைத்து, உரைத்த கிரிசை எலாம் – (சாஸ்த்ரங்களில்) விதிக்கப்பட்ட கர்மங்கள் எல்லாவற்றையும், நங்கண் – (ஈசுவரனாகிய) நம்மிடத்தில் (ஸமர்ப்பிக்கவேண்டும்). எனவும் நவின்ரூர் – என்று அநுஸந்தித்த பெரியோர்கள், எங்கும் அறிவர்களே என்று – எல்லா விஷயங்களையும் அறிந்தவர்களே (ஆவர்) என்று, இயம்பினன்–உபதேசித்தான்.

[சகம்............தனஞ்சயனே] கீழ், கர்மயோகம் அநுஷ்டித்து மனத்தை வசப்படுத்திப் பின் ஜ்ஞாநயோகம் அநுஷ்டிக்கவேண்டுமென்று கூறப்பட்டது. இங்கு ஜ்ஞாநயோகத்தை நேராகவே செய்ய அதிகாரமுள்ளவன் கர்மயோகத்தை ஏன் அநுஷ்டித்துத் துன்புறவேண்டும் என்று ஓர் ஆக்ஷேபம் வரக்கூடும். அதற்குப் பரிஹாரம்—கர்மயோகத்தைச் செய்யாவிடில் ஜ்ஞாநயோகமே ஸித்திக்காது. பலனில் பற்றில்லாது கர்மயோகத்தைச் செய்து எம்பெருமானது அன்பைப் பெறவேண்டும். அதனல் பாபம் கழியும். பின் மனம் தெளிவடையும். அதனல் ஆசை, பகை முதலிய குற்றங்கள் மனத்தினின்று அகலும். பின் இந்த்ரியங்கள் வசப்பட்டுநிற்கும். அதனல் ஜ்ஞாநயோகம் ஸித்திக்கவேண்டும். இம்முறையன்றி நேராக ஜ்ஞாநயோகத்தையே தொடங்குபவன், ஏழு மாடங்களுள்ள ஒரு கோபுரத்தைக் கட்டவிரும்பியவன் முதலில் ஏழாவது மாடத்தைக் கட்டமுயல்வதுபோல் பரிஹஸிக்கப்படுதற்கு உரியனுவான்.

மேலும் ப்ரளயம் தவிர மற்றைக் காலங்களில் யாதொரு வேலையும் செய்யாது க்ஷணகாலமும் எவனும் இருக்கமுடியாது. ஜீவன் தன் வயமின்றி ஸத்துவம் முதலிய குணங்களால் எதையாவது செய்யும்படி தூண்டப்படுகிருன். கர்மயோகம், செய்வதற்கு எளிது. இதில் தவறு

கள் நேரா. இதைச் செய்யாமலிருக்கமுடியாது. கர்மயோகத்தைக் கைவிட்டால் சரீரவாழ்க்கையும் நடைபெறாது. ஜ்ஞாநயோகத்திற்கு அதிகாரிகளான ஜநகர் முதலிய மஹான்களும் கர்மயோகத்தை அநுஷ்டித்துப்போந்தார்கள். மேலும் நீ உலகத்தில் மிகப் பெருமை பெற்று நாட்டார் உன் கை பார்த்து நடக்கும்படி பெரியோனாயிருப்ப தால் நீ கர்மயோகத்தைக் கைவிடுவதைக் கண்டு ஜ்ஞாநயோகத்தில் அதிகாரமில்லாதாரும் ஜ்ஞாநயோகத்தையே தொடங்கி அழிந்து போவர். அந்தப் பாபம் உன்னைச் சேருவதுடன் ஜ்ஞாநயோகத்தி னின்று உன்னைத் தள்ளியும் விடும்.

[சங்கம்தவிர்ந்து] கர்மயோகம் செய்யும்போதும் பகவானுடைய மகிழ்ச்சியைத் தவிர, ஸ்வர்க்கம் முதலிய ஒரு பலனையும் விரும்பக் கூடாது.

[பொங்கும்..................அவற்றுள் புகவிட்டு] ஸத்துவம், ரஜஸ், தமஸ் ஆகிய மூன்றும் ப்ரக்ருதியின் குணங்களாம். சேதநனுடைய சரீரத்தில் இவை மூன்றும் மிகுவனவும் குறைவனவுமாயிருக்கின்றன. இந்தக் குணங்கள் சில கார்யங்களைச் செய்கின்றன. (14 வது அத்யா யத்தில் விவரிக்கப்படும்,) ஜீவன் இக்கார்யங்களைச் செய்பவனாகத் தன்னை நினைத்துக்கொள்கின்றான். இதற்குக் காரணம் சரீரத்தையே ஆத்மாவென நினைத்திருப்பதேயாகும். இங்ஙனன்றி ஆத்மஸ்வரூபத்தை உள்ளவாறு அறிந்தவன், அத்தகைய கார்யங்களைச் செய்யுந்தன்மை ஆத்மாவுக்கு இயற்கையாய் அமைந்ததன்றென்றும் ஸத்துவம் முதலிய குணங்களின் ஸம்பந்தத்தால் வந்ததேயென்றும் அநுஸந்திப் பான். இதுவே குணங்களில் கர்த்ருத்வத்தை அநுஸந்தித்தல் எனப்படும்.

[நங்கண்.........அறிவர்களே] இத்தகைய கர்மங்கள் அனைத்தும் ஸர்வேசுவரனால் செய்யப்படுகின்றனவென்றும், ஸர்வேசுவரன் தன்னுடைய அடியனாகிய ஜீவனைக்கொண்டு தன்னுடையவையான ஸாதநங்களால் தானே மகிழும்பொருட்டுத் தன்னுடைய கார்யங்களைத் தானே செய்விக்கின்றான் என்றும் அநுஸந்தித்துக் கார்யங்களைச் செய்யவேண்டும். இத்தகைய அநுஸந்தாநமுள்ளவர் ஸகலசாஸ்த்ரங் களின் ஸாரத்தையும் நன்கு அறிந்தவராவர்.

இவ்வகையில் தன் கடமையான யுத்தத்தைச் செய்யுமாறு மூன்றும் அத்யாயத்தில் அர்ஜுநனுக்குக் கண்ணன் உபதேசித்தான்— என்றவாறு.

'நங்கண்ணுரைத்த' 'எங்குமறிவர்' 'எனவுநவின்றார்'— ணகர-மகர-நகரங்கள் விரிந்தது செய்யுள்விகாரம். 4

असक्त्या लोकरक्षायै गुणेष्वारोप्य कर्तृताम् ।
सर्वेश्वरे वा न्यस्योक्ता तृतीये कर्मकार्यता ॥ 7

4-வது அத்யாயத்தின் ஸாரம்—விளக்கம்

330 பிறவாமை தந்திடத் தானே பிறக்கும் பெருமைகளுந்
துறவாக் கிரிசைக டூமதி தன்னாற் றுலங்குகையு
மிறவா வுயிர்நன் னிலைகண் டிடுமுல கின்னிலையு
மறைவாழு மாயவ னேயனுக் கன்றறி வித்தனனே. 5

உரை:— மறை வாழும் – வேதத்தில் (போற்றப்பட்டு) வாழ்கின்ற, மாயவன் - (எம்பெருமானாகிய) கண்ணன், நேயனுக்கு – நண்ப(னாகிய அர்ஜுந)னுக்கு, பிறவாமை தந்திட – (தன்னை அடைந்தவருக்கு) மறுபிறவியில்லாமையை அருள்வதற்காக, தானே பிறக்கும் பெருமைகளும் – (ஸர்வேசுவரனாகிய) தானே (கர்மபூமியில்) பிறத்தலால் உண்டாகும் பெருமைகளும், துறவாக் கிரிசைகள் – விடமுடியாத கர்மங்கள், தூ மதிதன்னால் – பரிசுத்தமான (ஆத்மஸ்வரூபத்தைப் பற்றிய) ஜ்ஞானத் (தைத் தம்முள் அடக்கிக்கொண்டிருப்ப) தால், துலங்குகையும் – (ஜ்ஞானயோகமாக) ப்ரகாசித்தலும், இறவா உயிர்– அழிவற்ற ஆத்மாவின், நல் நிலை – நல்ல ஸ்வபாவத்தை, கண்டிடும் – அறிந்த, உலகின் – அதிகாரியின், நிலையும் – மேன்மையும் (ஆகிய இவற்றை), அன்று – பாரதப்போரன்று, அறிவித்தனன் – உபதேசித்தான்.

[பிறவாமை............ பெருமைகளும்] ஸாதுக்களான ஸம்ஸாரிகளை இக்கர்ம பூமியில் மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து அல்லற்படாதவாறு செய்ய நினைந்து ஸர்வேசுவரன் தானே பல அவதாரங்களைச் செய்து அவர்களை உஜ்ஜீவிக்கச்செய்கின்றான். அவனுடைய அவதாரரஹஸ்யத்தை அறிபவர் மறுபிறவியின்றி மோக்ஷத்தைப் பெறுவர்.

அவதாரரஹஸ்யம்:— (1) எம்பெருமானுடைய அவதாரம் இந்த்ரஜாலம்போல் பொய்யானதன்று; உண்மையானதே. (2) நம்முடைய ஜ்ஞானம் இக்கர்மபூமியில் சுருங்கிக்கிடப்பதுபோல் எம்பெருமானுடைய ஜ்ஞானம் அவன் அவதரித்திருக்குங்காலத்திலும் சுருங்குவதில்லை. அவன் தனக்கு இயற்கையாயுள்ள பிறவாமை, அழியாமை, எல்லாவற்றுக்கும் தலைமை முதலிய தன்மைகளை விடாதபடியே அவதரிக்கின்றான். (3) இங்கு அவதரித்துள்ள அவனுடைய திருமேனி நம்முடைய சரீரத்தைப்போல் ஸத்துவம், ரஜஸ், தமஸ் ஆகிய மூன்று குணங்களால் ஆகியதன்று; சுத்தஸத்துவமயமானது. (4) அவனுடைய பிறப்பு நம்மைப்போல் கர்மத்தால் வருவதன்று; தன் ஸங்கல்பத்தாலேயே வருவதாகும். (5) அவனுடைய பிறப்பு நம்முடையதுபோல் கர்மம் பரிபக்குவமாகும் காலத்தில் வருவதன்று; வர்ணாச்சிரமதர்மங்கள் குறைந்து அதர்மம் தலையெடுக்குங்காலத்தில் வருவதாம். (6) அவனுடைய அவதாரத்திற்குப் பலன் ஸுகதுக்கங்கள் கலந்த பலனை அநுபவிப்பதன்று. அவனைக் காணாது உயிர்தரிக்கமாட்டாமல் அவனைப்

பிரிந்த க்ஷணகாலத்தையும் ஆயிரம் கல்பகாலமாக நினைந்து அங்கம் குலைந்து அழிகின்ற சிறந்த பக்தருக்குத் தன் உருவத்தையும் செய்கையையும் காட்டுவது, பேசுவது முதலியவற்றால் அவர்கள் உயிர்தரிக்குமாறு செய்வதும், அவர்களுக்கு எதிரிகளாயுள்ள துஷ்டர்களை அழிப்பதும், தர்மத்தை ஸ்தாபிப்பதுமே அவதாரத்திற்குப் பலனாகும்.

ஆக இந்த 6 அம்சங்களே அவதாரரஹஸ்யமெனப்படும்.

* अवतारस्य सत्यत्वं अजहत्स्वस्वभावता ।
शुद्धसत्त्वमयत्वं च स्वेच्छामात्रनिदानता ॥
धर्मग्लानौ समुदयः साधुसंरक्षणार्थता ।
इति जन्मरहस्यं यो वेत्ति नास्य पुनर्भवः ॥

[துறவாக்................. துலங்குகையும்] கர்மங்களை ஒருவனும் விடமுடியாதெனக் கீழே கூறப்பட்டது. இத்தகைய கர்மங்களைப் பலனில் பற்றுவைக்காது செய்யவேண்டும். ப்ரக்ருதியின் ஸம்பந்தம் நீங்கிப் பரிசுத்தமான ஆத்மஸ்வரூபத்தை அநுஸந்திப்பவன் ஸத்துவம் முதலிய குணங்களாலே செய்யப்படும் கார்யங்களில் ஆத்மாவாகிய தன்னைக் காரணமாக நினைக்கமாட்டான்; மேலும் ப்ரக்ருதியின் குணமாகிய ஸத்துவம் முதலிய மூன்றையும், இளைத்தல் – பருத்தல், வெண்மை – கருமை முதலிய சரீரத்தின் தன்மைகளையும் ஆத்மாவைப் பற்றியனவாகவும் நினைக்கமாட்டான். இத்தகைய அதிகாரி ப்ரக்ருதிஸம்பந்தமற்ற ஆத்மஸ்வரூபத்தை அநுஸந்தித்துக் கொண்டே கர்மங்களை அநுஷ்டிப்பான். ஆக, கர்மயோகம் ஆத்மஜ்ஞாநத்தைத் தன்னுள் அடக்கிக்கொண்டிருப்பதால் ஜ்ஞாநயோகமாகவும் ஆகின்றது. மேலும் மோக்ஷத்தை விரும்புமவன் தான் செய்யும் ஸகல கர்மங்களையும் பரப்ரஹ்மத்தின் ஸ்வரூபமாகவே நினைத்துச் செய்யவேண்டுமாதலாலும் கர்மயோகம் ஜ்ஞாநஸ்வரூபமாகின்றது.

'கிரிசைகள்' என்ற பன்மையால் தன் அறிவுக்கும் சக்திக்கும் விருப்பத்திற்கும் ஏற்றவாறு முக்கியமாய்க் கைக்கொள்ளப் பட்டனவாய்க் கர்மயோகத்தின் பிரிவுகளான தேவதாராதநம், இந்த்ரியங்களை அடக்குதல், ப்ராணாயாமம், யாகம், தானம், ஹோமம், தவம், புண்யதீர்த்தஸ்நாநம், புண்யக்ஷேத்ரயாத்ரை, வேதத்தை ஆவ்ருத்திசெய்தல், வேதார்த்தபரிசயம் செய்தல் முதலியன கூறப்பட்டன.

[இறவாவுயிர் நிலையும்] கீழே கூறியபடி ஜ்ஞாநயோகமாகவும் ஆகின்ற கர்மயோகத்தில் கர்மம் என்ற ஓர் அம்சமும் ஜ்ஞாநம் என்ற ஓர் அம்சமும் உளவெனத் தீர்ந்தது. இவ்விரண்டு அம்சங்களில் ஜ்ஞாநாம்சமே ப்ரதாநமாகும். ஏனெனில், இந்த ஜ்ஞாநாம்சம் தினந்தோறும் பழக்கம் செய்யச்செய்ய உறுதிப்பட்டு

ஆத்மாவை ஸாக்ஷாத்கரிக்கும்படி செய்கின்றது. இந்த ஸாக்ஷாத்காரத்தைப் பெற்றவனுக்கு அஹங்கார – மமகாரங்கள் கழிந்துவிடும்; எல்லா ஆத்மாக்களின் ஸ்வரூபமும் ஜ்ஞாநஸ்வரூபமாயிருப்பதுபற்றி ஸமமென்றும் அங்ஙனமே பரமாத்மஸ்வரூபமும் ஜீவாத்மஸ்வரூபமும் ஸமமென்றும் அறிவு உண்டாகும். இத்தகைய அதிகாரி ஆத்மஜ்ஞாநமாகிய தெப்பத்தால், அநாதிகாலமாகச் செய்துள்ள அளவற்ற பாபங்களாகிய கடலைக் கடந்துவிடுவான். பெரிய தீ விறகுகளை எரித்துவிடுவது போல் ஆத்மஜ்ஞாநம் இவனுடைய புண்யபாபங்களாகிய ஸகல கர்மங்களையும் ஒழித்துவிடுகின்றது. இங்ஙனம் இவனுடைய பெருமை அளவிடற்பாலதன்று.

இவ்வர்த்தங்களை விசித்திரமான அவதாரங்களால் மிக்க பெருமையுடையனாக வேதாந்தங்களால் போற்றப்படும் கண்ணன் தன் நண்பனான அர்ஜுநனுக்கு நான்காவது அத்யாயத்தில் உபதேசித்தான்—என்றவாறு.

உலகின்னிலையும்— னகரம்விரிந்தது செய்யுள்விகாரம் 5

प्रसङ्गात् स्वस्वभावोक्तिः कर्मणोऽकर्मताऽस्य च ।
भेदा ज्ञानस्य माहात्म्यं चतुर्थाध्याय उच्यते ॥ 8

5-வது அத்யாயத்தின் ஸாரம்—விளக்கம்

331 கண்டேளி தாங்கரு மம்முயிர் காட்டக் கடுகுதலு
மண்டி யதன்படி யின்மனங் கோள்ளும் வரிசைகளுங்
கண்டறி யாவுயி ரைக்காண லுற்ற நினைவுகளும்
வண்டுவ ரேச னியம்பினன் வாசவன் மைந்தனுக்கே. 6

உரை:— வண் துவரேசன்-வளம்மிக்க த்வாரகைக்கு நாயகனான கண்ணன், வாசவன் மைந்தனுக்கு – இந்திரனுடைய புத்திரனான அர்ஜுநனுக்கு, கண்டு – (சாஸ்த்ரங்களைக்கொண்டு) அறிந்து, எளிதாம் – (அநுஷ்டிக்க) ஸுலபமான, கருமம்-கர்மயோகம், உயிர் காட்ட– ஆத்மாவைக் காட்டுவதற்கு, கடுகுதலும்-விரைதலும், அதன் படியில்– அந்தக் கர்மயோகத்தின் ப்ரகாரங்களில், மண்டி – ஈடுபட்டு, மனம் கொள்ளும் வரிசைகளும் – மனத்தில் நினைக்கவேண்டிய ப்ரகாரங்களும், கண்டு அறியா உயிரை – (நேரில்) கண்டறியமுடியாத ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை, காணலுற்ற – (எங்கும் ஜ்ஞாநஸ்வரூபமாகப்) பார்க்கும்படியான, நினைவுகளும் – (பரிபக்வமடைந்த) ஜ்ஞாநங்களும் (ஆகிய இவற்றை) இயம்பினன் – உபதேசித்தான்.

[கண்டெளிதாம்.........கடுகுதலும்] கர்மயோகம் ஜ்ஞாநயோகத்தைப்போலன்றி அநுஷ்டிக்க மிகவும் எளிதாகும்; பலனையும் விரைவில் தரும். எங்ஙனே என்னில்—கர்மயோகத்திற்கு அதிகாரியான ஒருவன்

சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டு எம்பெருமானுக்கு மகிழ்ச்சியைத் தரும் கர்மயோகத்தைச் செய்யமுயல்கின்றான். அதனால் அவனுக்கு ரஜோ குணமும் தமோகுணமும் நீங்கி ஆசை த்வேஷம் முதலியனவும் ஒழி கின்றன. அதனால் மனம் தெளிவடைகின்றது. முன்செய்து பழகிய கர்ம யோகத்திலே மனத்தைச் செலுத்துவதால் மனம் வசப்படுகின்றது. அதனால் மற்ற இந்த்ரியங்களும் வசப்படுகின்றன. பின் ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபத்தை அறிந்த இவனுக்கு ஜ்ஞாநஸ்வரூபமான எல்லா ஆத்மாக்களும் ஒரேவிதமானவை என்ற நிச்சயம் உண்டாகின் றது. இவ்வாறு அறிந்து மிகச் சுலபமான கர்மயோகத்தைச் செய் பவன் விரைவிலே ஆத்மஸாக்ஷாத்காரத்தைப் பெறுகின்றான். ஜ்ஞாந யோகம், செய்வதற்கு மிகக் கடினமாய் வெகுகாலம் கழித்துப் பலனைத் தருகின்றது.

[மண்டி............வரிசைகளும்] கண் முதலிய ஜ்ஞாநேந்த்ரியங் களும், வாக்கு முதலிய கர்மேந்த்ரியங்களும், ப்ராணவாயுக்களும் சரீரத்தில் நின்று தத்தம் கார்யங்களைச் செய்யும்போது ஜீவாத்மா வாகிய தன்னை அவ்வேலைகளைச் செய்பவனாக நினையாமல், கர்மத்தால் வந்த இந்த்ரியங்கள் ப்ராணவாயுக்கள் இவற்றின் ஸம்பந்தத்தாலேயே ஜீவனுக்கு அவற்றைச் செய்யும் தன்மை உள்ளதாகக் கருதவேண்டும். ஜ்ஞாநஸ்வரூபனாக உள்ள ஜீவனுக்கு இயற்கையில் அந்தத் தன்மை இல்லையென உணரவேண்டும்,

[கண்டறியா...............நினைவுகளும்] ஜீவன் ஆசார்யனுடைய உபதேசத்தாலே ஆத்மஸ்வரூபத்தை உள்ளவாறு அறியவேண்டும். பின் அதிலேயே பழகிவந்தால் சரீரத்தையே ஆத்மாவெனக் கருதுத லாகிய விபரீத ஜ்ஞாநம் ஒழியும்; ஆத்மஸாக்ஷாத்காரத்தைப்பெற உறுதிபூண்டு உலகத்தில் தனக்கு ப்ரியமானதொன்றைப் பெற்றால் மகிழாமலும் அப்ரியமான விஷயத்திற்கு வருந்தாமலும் இருக்க வேண்டும். இவ்வாறு இருக்கும் அதிகாரி கல்விகற்று வணக்கமுள்ளவ னிடத்தும், ஸாதாரணப்ராஹ்மணனிடத்தும், பசுவினிடத்தும், யானையினிடத்தும், நாயினிடத்தும், அதைத் தின்கின்ற சண்டாள னிடத்தும் ஆத்மஸ்வரூபத்தைப் பார்க்கும்போது எல்லா ஆத்மாக்களை யும் ஸமமாகப் பார்க்கவேண்டும். அந்த அந்தச் சரீரம் வேறுபட் டிருப்பினும் பரிசுத்தமான ஆத்மஸ்வரூபம் அனைத்தும் ஜ்ஞாநஸ்வரூப மாயிருப்பதுபற்றி ஸமமாகும்.

இவ்விஷயங்களை ஐந்தாம் அத்யாயத்தில் கண்ணன் அர்ஜுந னுக்கு உபதேசித்தான்—என்றவாறு.

கருமம்முயிர்—மகரம் விரிந்தது செய்யுள் விகாரம். 6

कर्मयोगस्य सौकर्यं शैघ्र्यं काश्चन तद्विधाः ।
ब्रह्मज्ञानप्रकारश्च पञ्चमाध्याय उच्यते ॥ 9

6-வது அத்யாயத்தின் ஸாரம்—விளக்கம்

332 யோக முயற்சியும் யோகிற் சமநிலை நால்வகையும்
யோகி னுபாயமும் யோகுத னால்வரும் பேறுகளும்
யோகு தனிற்றன் றிறமுடை யோகுதன் முக்கியமு
நாகணை யோகி நவின்றன னன்முடி வீரனுக்கே. 7

உரை :—நாக அணை யோகி - திருவநந்தாழ்வானாகிய திருப்பள்ளியில் யோகநித்ரைகொண்டருள்கின்ற எம்பெருமானாகிய கண்ணன், நன் முடி வீரனுக்கு - சிறந்த கிரீடத்தையுடைய வீரனாகிய அர்ஜுநனுக்கு, யோக முயற்சியும் - (ஜீவாத்மாவைப்பற்றிய) யோகாப்யாஸத்தின் முறையும், யோகில் - யோகத்தில், சமநிலை நால்வகையும் - ஸமமாகப் பார்க்குந்தன்மையின் நான்குவகையும், யோகின் உபாயமும் - யோகத்தின் ஸாதநங்களும், யோகுதனால் வரும் - யோகத்தால் உண்டாகின்ற, பேறுகளும் - பலன்களும், யோகுதனில் - (கீழ்க்கூறிய நான்கு நிலையுள்ள) யோகத்தைக்காட்டிலும், தன் திறமுடை - தன்னைப் பற்றியதான, யோகுதன் முக்கியமும் - பக்தியோகத்தின் முக்கியத்தன்மையும் (ஆகிய இவற்றை), நவின்றனன் - உபதேசித்தான்.

[யோகமுயற்சியும்] கர்மயோகத்தைக் கைக்கொண்டவன் தினந்தோறும் யோகம்செய்ய விதிக்கப்பட்ட காலத்தில் மனத்தை ஆத்மாவிடத்தில் செலுத்தி யோகத்தைத் தொடங்கவேண்டும். ஜனங்கள் இல்லாது நிச்சப்தமான இடத்தில் தனியாக இருந்து கவலைகளையொழித்து ஆத்மாவையன்றி வேறொன்றையும் விரும்பாதுகின்று யோகம் செய்யவேண்டும். ஒரு வஸ்துவையும் தன்னுடையதென்று உரிமைபாராட்டக்கூடாது. பாஷண்டி பதிதன் முதலிய அசுத்தமனிதர்களுக்குச் சொந்தமான இடத்திலோ, அவர்களுக்குச் செல்வாக்கு உள்ள இடத்திலோ யோகம் செய்யக்கூடாது. இடம் இயற்கையாகவே சுத்தமாயிருக்கவேண்டும். மரம் முதலியவற்றால் செய்யப்பட்டு அசையாதிருக்கும் ஆஸநத்தைத் திடமாகப் பூமியில் பதியும்படி அமைக்கவேண்டும். மெத்தென்றிருக்கும்படி அதன்மேல் ஒரு வஸ்த்ரத்தை விரிக்கவேண்டும். அந்த வஸ்த்ரம் சுருங்காமலிருப்பதற்கும் பரிசுத்தமாவதற்கும் அதன்மீது மான்தோலை விரிக்கவேண்டும். பின்னும் பரிசுத்தமாவதற்கும் ஸத்துவகுணம் வளர்வதற்கும் எல்லாவற்றுக்கும் மேல் தருப்பையைப் பரப்பவேண்டும். இத்தகைய ஆஸநத்தில் அமர்வதால் மனத்தெளிவு வரும். பின்புறத்தில் ஒரு சாய்மணை இருக்கவேண்டும். இல்லாவிடின், பின்புறத்தில் தாங்கிநிற்க முயல நேரிட்டு அதனால் யோகத்திற்குத் தடை நேரும்.

நின்றால் சிரமமும் படுத்தால் தூக்கமும் வருமாதலின் இரண்டும் கூடா. மனத்தை ஒருமுகப்படுத்தி யோகத்தைச் செய்யவேண்டும். மனத்தின் விபரீதப்போக்குகளையும் இந்த்ரியங்களையும் அடக்கிக்

கொள்ளவேண்டும். சரீரத்தின் நடுப்பாகத்தையும் தலையையும் கழுத்தையும் கோணலின்றி நேராக வைத்துக்கொள்ளவேண்டும். அசைக்கக்கூடாது. சாய்மனை இருப்பதால் பின்புறத்தைத் தான் தாங்கி நிற்க முயலவேண்டியதில்லை. ஆதலின் அங்கம் அசைவதற்கு இடம் இல்லை. இவ்வாறே வெகுநேரம் இருக்கமுடியும்.

வெளியேயுள்ள ஒரு வஸ்துவையும் பார்க்கக்கூடாது. கண்ணை மூடிக்கொள்ளவும் கூடாது. தூக்கம் வராதிருக்குமாறு தன் மூக்கின் முனையையே நோக்கவேண்டும். மனம் மகிழ்வுற்றிருக்கவேண்டும். பயமடையக்கூடாது. கொங்கையுடன்கூடிய மாம்ஸபிண்டம் என்னும்படியுள்ள மங்கையரை விருப்பத்தோடு நினைப்பது, காண்பது, பேசுவது முதலியன யாவும் கூடா. மிக்க கவனம் வேண்டும். பகவானிடம் கருத்தைச் செலுத்தவேண்டும். இதனால் மனம் சுத்தமடைந்து வேறொன்றையும் நாடாத நிலையையடையும். அதனால் ஆத்மாவைப்பற்றிய யோகம் நன்கு நடைபெறும்.

யோகம் செய்பவன் அதிக உணவைக் கொள்ளக்கூடாது. பட்டினி கிடக்கவும் கூடாது. அதிகமாய் நடக்கக்கூடாது. நடக்காமலிருக்கவும் கூடாது. அதிகத் தூக்கம் – முழுதும் விழித்தல், அதிக வேலை – வேலையேயில்லாமை இவை கூடா. எல்லாம் குறிப்பிட்ட அளவுக்குக் கைக்கொண்டால் யோகம் அநுஷ்டிக்க எளிதாகும். இல்லாவிடில் தடை உண்டாகும்.

காற்று இல்லாத இடத்தில் வைத்த தீபம் அசையாது ஒளி குன்றாதிருப்பதுபோல், யோகத்தைச் செய்பவனுடைய ஆத்மஸ்வரூபம் மற்ற விஷயங்கள் அனைத்தினின்றும் மனம் நீங்கப்பெற்று ஒரே ஜ்ஞான ஸ்வரூபமாய் ப்ரகாசிக்கும். அப்பொழுது மனத்திற்குப் பெருமகிழ்ச்சி ஏற்படும்; அளவற்ற ஸுகம் உண்டாகும். அந்த அநுபவத்திலேயே யோகி வெகுநேரம் இருப்பான்; யோகம் ஓய்ந்தபிறகும் அவ்வநுபவத்தையே விரும்புவான். யோகத்தில் இருக்கும்போது நற்குணமுள்ள புத்திரனுடைய மரணம் முதலிய பெரிய துன்பம் வந்தாலும் அவனுக்கு உற்சாகம் குன்றாது; யோகத்திற்கும் தடை வராது. இத்தகைய யோகத்தின் சிறப்பை அறிந்து முற்கூறிய முறைப்படி யோகாப்யாஸத்தைச் செய்யவேண்டும்.

[யோகிற் சமநிலை நால்வகையும்] யோகாப்யாஸம் செய்பவனுக்கு அந்த யோகம் பக்குவமாவதற்குத் தக்கவாறு நான்கு நிலைகள் வருகின்றன. அவற்றுள் முந்திய நிலைக்குப் பிந்திய நிலை பக்குவமானதாகும். அவையாவன–

(1) ஸகலமான ஜீவாத்மாக்களும் ப்ரக்ருதியின் ஸம்பந்தமற்ற பரிசுத்தமான நிலைமையில் ஜ்ஞாநஸ்வரூபமாகத் தோன்றுகின்றன. இந்த அநுஸந்தாநமுள்ள அதிகாரி, தன் ஆத்மாவை மற்ற ஆத்மாக்கள்

போன்றதாகவும், மற்ற ஆத்மாக்களைத் தன் ஆத்மாவைப் போன்ற தாகவும் பார்ப்பான். எல்லா ஆத்மாக்களும் ஒரே தன்மையனவாக இருப்பதுபற்றி ஓர் ஆத்மாவைக் கண்டால் எல்லா ஆத்மாக்களும் அதே தன்மையுள்ளனவாகப் பார்க்கப்பட்டனவாம். ஆக ஜ்ஞாந ஸ்வரூபமாயிருப்பதில் ஆத்மாக்கள் ஒன்றுக்கொன்று ஸமமாயிருப் பதைக் காண்பதுவே ஸமதர்சநத்தின் முதல்நிலையாகும்.

(2) புண்ய பாபங்கள் கழிந்து பரிசுத்தமான ஜீவன் ஈசுவரனைப் போன்றவனுவான், ஆகவே ஸகல ஆத்மாக்களும் ஈசுவரனும் ஸம மாயிருப்பதால் ஜீவாத்மா பரமாத்மா ஆகிய இரண்டினுள் ஒன் றைக் கண்டவன் மற்றொன்றையும் 'இதுபோன்றதே,' என்று பார்ப்பான். ஆக, பரிசுத்தமான ஜீவாத்மாக்களைப் பரமாத்மா வுக்குச் சமமாகப்பார்ப்பதுவே இரண்டாவது நிலையாகும். இது முந்திய நிலையைக் காட்டிலும் பரிபக்குவமான நிலையாகும்.

(3) கர்மஸம்பந்தமில்லாமலும் சுருங்குதலில்லாத ஜ்ஞாநஸ்வ ரூபமாகவும் நிற்கும் ஜீவாத்மா பரமாத்மாவைப்போன்றவனுவான். இவ்வாறு யோகதசையில் அநுஸந்திப்பவன் இதன் ஸம்ஸ்காரத்தை மிகப்பெற்று யோகம் கலைந்த காலத்திலும் இவ்வநுஸந்தாநம் தொடர்ந்து நிற்கப்பெறுவான். இவ்வாறு தன் ஆத்மாவையும் பிற ஆத்மாக்களையும் யோகம் கலைந்த காலத்திலும் ஈசுவரனுக்குச் சமமாக அநுஸந்திப்பதுவே மூன்றும் நிலையாகும். இது முந்திய நிலையைக் காட்டிலும் பரிபக்குவமானதாகும்.

(4) ஸகல ஆத்மாக்களும் குறைவுபடாத ஜ்ஞாநஸ்வரூபமாயி ருப்பதால் ஸுகதுக்கங்களை ஸமமாகப் பாவிக்கவேண்டும். அதாவது- உலகில் ஒருவனுக்குப் புத்திரன் பிறந்தால் மற்றொருவனுக்கு மகிழ்ச்சி யும், ஒருவனுடைய புத்திரன் இறந்தால் மற்றொருவனுக்கு வருத் தமும் உண்டாவதில்லை. ஆனால் யோகி இவ்வகையின்பமும் துன்ப மும் தனக்கு வந்திடினும் முறையே மகிழ்ச்சியும் வருத்தமும் கொள் ளாதிருப்பான். இவ்வாறு ஸுக துக்கங்களை ஸமமாகப் பாவிப்பதே நான்காம் நிலையாகும். இதுவே ஜீவாத்மாவைப் பற்றிய யோகத்தின் உச்சநிலையாகும்.

இவ்வாறு ஸமதர்சனம் நால்வகைப்படும்.

[யோகினுபாயமும்] சேதநனுடைய மனம் நெடுங்காலம் அற்ப விஷயங்களிலேயே ஒன்றுபட்டுப் பழகிவிட்டபடியால் அதை அடக்கி ஆத்மாவினிடத்தில் செலுத்தி யோகம் செய்வது மிகக் கடினமே. ஆயினும், ஆத்மா இயற்கையாக அழிவற்றிருப்பதையும், ஜ்ஞாநம் ஆநந்தம் இவற்றின் ஸ்வரூபமாயிருப்பதையும், கர்மத்திற்கு வசப்படா திருப்பதையும், தோஷங்கள் தட்டாதிருப்பதையும் ஆராய்ந்து பார்த்துப் பழகினல் மனம் ஆத்மாவினிடத்தில் ஈடுபட்டு யோகத் திற்கு அநுகூலமாகிவிடும். அவ்வாறே ஆத்மாவைத் தவிர மற்ற

வஸ்துக்களில் உள்ள தோஷங்களைச் சிந்தித்தால் வைராக்யம் ஏற்பட்டு ஆத்மாவைப்பற்றிய யோகத்தில் மனம் ஈடுபட்டுவிடும். இதுவே யோகத்தின் உபாயமாகும்.

[யோகுதனல் வரும் பேறுகளும்] சிரத்தையோடு யோகத்தைச் செய்யத்தொடங்கியவன், பிறகு அதில் மிகத் திடமான பழக்கமில்லாமையால் தொடங்கும்போதே யோகத்திலிருந்து தவறிவிட்டாலும் அவனுக்குத் தீங்கு ஒன்றும் வருவதில்லை. எவ்வகையான போகங்களை அநுபவிக்க ஆசைப்பட்டிருந்து பின் யோகத்திலிருந்து தவறினனே, அவ்வகைப் போகங்களை மஹாபுண்யசாலிகள் அநுபவிக்கும் புண்யலோகங்களில் பல வர்ஷங்கள் இருந்து அவ்வாசை தீரும்வரையில் யோகத்தின் மஹிமையால் அநுபவித்துப் பிறகு பெரியோரின் குலத்தில் வந்து பிறந்து அப்பெரியோரின் சேர்க்கையால் மறுபடியும் யோகாப்யாஸத்தைத் தொடங்குவான்.

யோகம் பரிபக்குவமான நிலையில் ஸித்தி பெறுவதற்கு முன் தவறினனேயாகில் யோகாப்யாஸம் செய்துகொண்டிருப்பவர்களும் யோகத்தை உபதேசிக்க வல்லமையுடையவர்களுமான பெரியோர்களுக்குப் புத்திரனுகவோ மற்ற உறவினனுகவோ பிறப்பான். அதனுல் முந்திய தேஹத்திலிருந்தபடி யோகத்தைப்பற்றிய உணர்ச்சியே உண்டாகித் தூங்கி விழித்தவனைப்போல் மறுபடியும் ஸித்தி பெற முயல்வான். பின் இடையூறு இல்லாமல் ஸித்திபெறுவான். இவையனைத்தும் யோகத்தின் மஹிமையாலேயேயாம்.

யோகம் ஆரம்பிக்காமல் ஆரம்பிக்க விரும்பியபொழுதே அந்த விருப்பத்திலிருந்து நழுவிவிட்டால் யோகத்தின் மஹிமையால் மறுபடியும் அவ்விருப்பம் உண்டாகப்பெற்றுப் பின் கர்மயோகம் ஜ்ஞாநயோகம் இவற்றைச் செய்து ஜ்ஞாநாநந்தஸ்வரூபனுன ஆத்மாவை ஸாக்ஷாத்கரிக்கப் பெறுவான்.

இவ்வாறு யோகத்தின் ஸம்பந்தமுள்ள ஒவ்வொருவனும் எந்த நிலையில் வழுவினுலும் இறுதியில் ஸித்தியைப் பெற்றுவிடுவான்.

[யோகுதனில்...............முக்கியமும்] பக்தியோகத்தைச் செய்பவன் அளவற்ற பக்தியோடு எம்பெருமானை க்ஷணம் பிரிந்தாலும் உயிர் தரிக்கமாட்டாத நிலையுடையனுய், பகவானை அடைந்து அநுபவிக்கப் பேராவல் கொண்டு மிக விரைபவனுய், எம்பெருமானையே நேரில் உபாஸிப்பவனுதலின் அவனே கீழ்க்கூறிய யோகிகளைக் காட்டிலும் மிகச் சிறந்தவனுவன். அவன் செய்யும் யோகமே முற்கூறிய யோகங்களினும் சிறந்ததாம்.

ஸர்வேசுவரனைப்பற்றிய யோகம் சிறந்து நிற்பதிலும் வஸுதேவ புத்திரனுய் அவதரித்த கண்ணன் திருமேனியை இலக்காய்க்கொண்டு அநுஷ்டிக்கும் பக்தியோகமே மிகச் சிறந்ததாமென்று ஸூசிக்கப்பட்டதாகின்றது.

இவ்விஷயங்களை ஆறுவது அத்யாயத்தில் கண்ணன் அர்ஜுந னுக்கு உபதேசித்தான்—என்றவாறு.

நாக + அணை = நாகணை—தொகுத்தல், செய்யுள்விகாரம். 7

योगाभ्यासविधिर्योगी चतुर्धा योगसाधनम् ।
योगसिद्धिः स्वयोगस्य पारम्यं षष्ठ उच्यते ॥ 10

7-வது அத்யாயத்தின் ஸாரம்—விளக்கம்

333 **தானின்ற வுண்மையைத் தன்றனி மாயை மறைத்தமையுந்**
தானன்றி மாயை தனைத்தவிர்ப் பான்விர கற்றமையு
மேனின்ற பத்தர்க ணால்வரின் ஞானிதன் மேன்மைகளுந்
தேனின்ற செங்கழ லான்றெளி வித்தனன் பார்த்தனுக்கே. 8

உரை:—**தேன் நின்ற** – தேன் தங்கியிருக்கின்ற, **செம் கழலான்**– சிவந்த திருவடி (த் தாமரை) யையுடைய கண்ணன், **பார்த்தனுக்கு**– அர்ஜுநனுக்கு, **தான் நின்ற உண்மையை** - (ஈசுவரனாகிய) தான் (மற்ற வஸ்துவைக் காட்டிலும்) விலக்ஷணமாய்நின்ற தத்துவத்தை, **தன் தனி மாயை** – தனக்குச் சேஷமான ஒப்பற்ற ப்ரக்ருதி, **மறைத்த மையும்** – மறைத்துநிற்பதும், **தான் அன்றி** – தன்னைத் தவிர, **மாயை தனைத் தவிர்ப்பான்** – ப்ரக்ருதியின் ஸம்பந்தத்தை ஒழித்தற்கு, **விரகு அற்றமையும்** – உபாயம் ஒன்றுமில்லாதிருத்தலும், **மேல் நின்ற** – (முன்னவருக்குப் பின்னவர்) உயர்ந்தவர் என்னும்படிநின்ற, **பத்தர்கள் நால்வரில்** (ஆர்த்தன், அர்த்தார்த்தி, ஜிஜ்ஞாஸு, ஜ்ஞாநி என்ற) பக்தர்கள் நால்வரில், **ஞானிதன் மேன்மைகளும்** – ஜ்ஞாநியின் ஏற்றங்களும் (ஆகிய இவற்றை), **தெளிவித்தனன்** – தெளிவாக உபதேசித்தான்.

[**தானின்ற மறைத்தமையும்**] ஸர்வேசுவரன் சேதந-அசேதநங்களைக்காட்டிலும் வேறுபட்டவன்; அவற்றைத் தனக்குச் சேஷமாகக் கொண்டவன்; அவற்றுக்குக் காரணமாயிருப்பவன். அவை அவனிடத்திலேயே லயத்தையடைகின்றன; அவனுக்குச் சரீரமாயிருக்கின்றன. அவன் ஜ்ஞாநம் முதலிய ஸகலமான திருக்கல்யாணகுணங்களுக்கும் இருப்பிடமானவன்; எவ்வகையாலும் அவனே மிகச் சிறந்தவன். அவனைக்காட்டிலும் சிறந்தவன் இல்லை. இத்தகைய அவனது பெருமையைச் சேதநர் அறியாதவாறு எம்பெருமானால் படைக்கப்பட்டு அவனுக்குச் சேஷமான மாயை மறைத்துவிடுகின்றது. இம்மாயையே ப்ரக்ருதியெனப்படும். இது ஸத்துவம் ரஜஸ் தமஸ் என்னும் மூன்று குணங்களடங்கியது. இதுவே சரீரம் இந்த்ரியம் முதலியனவாக மாறுபாட்டை அடைகின்றது.

[**தானன்றி.........விரகற்றமையும்**] இவ்வாறு எம்பெருமானது பெருமையை மறைக்கும் மாயையைக் கடந்து அவனை உபாஸிப்பதற்கு

உபாயம் அவனது திருவடியைச் சரணமடைவதேயாகும். இந்த மாயையை ஒழிக்க எம்பெருமானைச் சரணமடைவதைத் தவிர வேறு உபாயமில்லை,

[மேனின்ற..............மேன்மைகளும்] எம்பெருமானைச் சரண மடைந்து உபாஸிக்கும் புண்யசாலிகள் நால்வர். அவர்களாவார் – ஆர்த்தன், அர்த்தார்த்தி, ஜிஜ்ஞாஸு, ஜ்ஞாநி : என்பவர்.

(1) ஆர்த்தன் — ஐசுவர்யத்தை இழந்து பின் அதை அடைய விரும்புமவன். (2) அர்த்தார்த்தி — புதிதாக ஐசுவர்யத்தைப் பெற விரும்புமவன். (3) ஜிஜ்ஞாஸு—ப்ரக்ருதிஸம்பந்தமற்ற பரிசுத்தமான ஆத்மஸ்வரூபத்தை அடைய விரும்புமவன். (4) ஜ்ஞாநி—பகவானுக்கு அடிமையாயிருத்தலையே இயல்பாகக்கொண்ட தன் ஆத்மஸ்வரூபத்தை அறிந்து, ப்ரக்ருதிஸம்பந்தமற்ற அதை அநுபவிப்பதுடன் ஓய்ந்து விடாமல் பகவதநுபவத்தையே சிறந்த பலனாகக்கொள்பவன். இந்த நால்வகையினரும் வேறு தேவதையை உபாஸிக்காமல் எம்பெருமானையே உபாஸிப்பவர்கள். இவ்வுலகில் பெரும்பாலோர் பழைய வாஸனையால் அறிவுகெட்டு அற்ப பலனுக்காக இந்த்ரன் முதலிய தேவதைகளைப் பூஜிக்கின்றனர். இவ்வாறன்றி எம்பெருமானையே உபாஸிக்கும் இந்த நால்வகையினரை இவ்வுலகில் காண்பதும் அரிதே யாகும். இந்த நால்வருள்ளும் ஜ்ஞாநியின் மேன்மை சொல்லுந்தர மன்று. முதல் மூன்று வகையினரும் தாங்கள் விரும்பிய பலனைப் பெறும்வரை எம்பெருமானிடம் ஈடுபட்டிருப்பர்; தாங்கள் பலனை விரும்பியதால் அதற்குச் சாதனமாகவுள்ள எம்பெருமானிடமும் அவர்கள் பக்தியைக் கொள்ளவேண்டியதாயிற்று. ஜ்ஞாநியோ எம் பெருமானைத் தவிர வேறு பலனைக் கனவிலும் கருதாதவனாதலின் எப்பொழுதும் அவனிடமே ஈடுபட்டிருப்பன்; அவனிடமே பக்தியைக் கொண்டிருப்பன். மேலும் ஜ்ஞாநிக்கு எம்பெருமான்மீது உள்ள காதலை அளவிட்டுக் கூறுவதற்கு அனைத்தையும் அறியவும் செய்யவும் வல்லமைகொண்ட எம்பெருமானாலும் முடியாது. அன்றியும் பகவானைப் பிரிந்து அவன் க்ஷணங்கூட உயிர்தரிக்கமாட்டான். அவன் இந்நிலையிலிருப்பதுபற்றி எம்பெருமானும் அவனைப் பிரிந்து க்ஷணமும் உயிர்தரிக்கமாட்டானென்னும்படி ஜ்ஞாநியைத் தனக்கு உயிராகக் கொண்டுள்ளான். பகவானுக்கு அடிமையாயிருத்தலே ஆத்மாவின் ஸ்வரூபமென்பதை அறிந்து பகவானைச் சரணமடைவதென்பது முன் பற்பல புண்யஜந்மங்களைத் தொடர்ந்து பெற்றவனுக்கே வரக்கூடிய தாகும். இத்தகைய மஹாபாக்யம் பெற்ற ஜ்ஞாநியை உலகில் காண்பது அரிதினும் அரிதாகும்.

இவ்வர்த்தங்களை ஏழாம் அத்யாயத்தில் கண்ணன் அர்ஜுநனுக்கு உபதேசித்தான்—என்றவாறு. 8

स्वयाथात्म्यं प्रकृत्याऽस्य तिरोधिः शरणागतिः ।
भक्तभेदः प्रबुद्धस्य श्रैष्ठ्यं सप्तम उच्यते ॥ 11

8-வது அத்யாயத்தின் ஸாரம்—விளக்கம்

334 ஆராத செல்வமு மாருயிர் காணு மரும்பயனும்
பேராது தன்கழற் கீழம ரும்பெரு வாழ்ச்சிகளுஞ்
சோரா துகந்தவர் தூமதி கொள்வதுஞ் செய்வனவுந்
தேரா விசயனுக் குத்திரு நாரணன் செப்பினனே. 9

உரை :— திருநாரணன் – ஸ்ரீமந்நாராயணன் ஆகிய கண்ணன், தேரா விசயனுக்கு – தெளிவுபெறாத அர்ஜுநனுக்கு, ஆராத – போதுமென்று தோன்றாத, செல்வமும் – ஐசுவர்யத்தையும், ஆர் உயிர் காணும் – அருமையான ஜீவனைக் கண்டு அநுபவிப்பதாகிய, அரும் பயனும்–அருமையான பலனையும், தன் கழல் கீழ் – (ஸர்வேசுவரனாகிய) தன் திருவடியின் கீழ், பேராது அமரும் – பிரியாது தங்குதலாகிய, பெரு வாழ்ச்சிகளும் – பெரிய வாழ்வுகளையும், சோராது – குறைவுபடாது (பெறவேண்டுமென்று), உகந்தவர் – விரும்பிய அதிகாரிகள், தூ மதி கொள்வதும் – பரிசுத்தமான (தம்) மனத்தால் அறியவேண்டியனவும், செய்வனவும் – அநுஷ்டிக்க வேண்டியனவும் (ஆகிய இவற்றை), செப்பினன் – உபதேசித்தான்.

[ஆராத செல்வமும்] இந்த்ரன், ப்ரஹ்மா, ருத்ரன் இவர்களுடைய போகங்களைக்காட்டிலும் மிகச் சிறந்துள்ள போகம் ஐசுவர்யம் எனப்படும். இதை விரும்புமவர் ஐசுவர்யார்த்திகளென்னப்படுவர். இழந்த செல்வத்தை அடைய விரும்பும் ஆர்த்தரும், நூதனமான செல்வத்தை விரும்பும் அர்த்தார்த்திகளும் இங்கு ஐசுவர்யார்த்திகள் என்று ஒரு வகுப்பாக்கப்பட்டனர்.

[ஆருயிர்காணும் அரும்பயனும்] ப்ரக்ருதியின் ஸம்பந்தம் நீங்கிப் பரிசுத்தமான ஆத்மாவை ஸாக்ஷாத்கரித்து அநுபவிப்பது கைவல்யம் எனப்படும். இதை விரும்புமவர் கைவல்யார்த்திகள் எனப்படுவர்.

[பேராது.........வாழ்ச்சிகளும்] எம்பெருமானுடைய திருவடியின்கீழே பிரியாதுநின்று எப்போதும் எங்கும் எந்த நிலைமையிலும் எல்லாவகைக் கைங்கர்யங்களையும் செய்கை மோக்ஷம் எனப்படும். இதை விரும்புமவர் மோக்ஷார்த்திகள் எனப்படுவர்.

[சோராது.........செய்வனவும்] இத்தகைய மூவகை அதிகாரிகள் அறியவேண்டிய விஷயங்களும் கைக்கொள்ளவேண்டிய விஷயங்களும் இவ்வத்யாயத்தில் கூறப்படுகின்றன.

ஐசுவர்யார்த்தி அறியவேண்டியன— (1) ஆகாசம் முதலிய பூதங்களும், அவற்றில் இருந்து அழிந்துபோகக்கூடிய சப்தம் ஸ்பர்சம்

ரூபம் ரஸம் கந்தம் ஆகியவையும். இவை அதிபூதமெனப்படும், (2) இந்த்ரன் ப்ரஹ்மா ருத்ரன் முதலிய ஸகலதேவதைகளின் ஸ்தாநத்திற்கும் மேலே நின்று, அவர்கள் அநுபவிக்கும் போகத்தைக் காட்டிலும் மேம்பட்ட போகத்தை அநுபவிக்கும் நிலை. இது அதிதைவமெனப்படும்.

கைவல்யார்த்தி அறியவேண்டியன—(1) ப்ரக்ருதியின் ஸம்பந்தம் நீங்கிப் பரிசுத்தனான ஜீவாத்மாவின் ஸ்வரூபம். இது தத்ப்ரஹ்மமெனப்படும். இதை அநுபவிக்கத்தக்கதாக அறியவேண்டும். (2) அசேதநமான ப்ரக்ருதி. இது அத்யாத்மமெனப்படும். (3) ஸ்த்ரீகளுடன் சேருவதால் உண்டாகி மனுஷ்யன் முதலிய பிறவியைத் தருகின்ற விஸர்க்கம். இது கர்மமெனப்படும். இதற்குக் காரணமான வினை, இதனால் ஏற்படும் கர்ப்பவாஸம் முதலியன. இவற்றை விலக்கத்தக்கனவாக அறியவேண்டும்.

மோக்ஷார்த்தி அறியவேண்டியன— ஒவ்வொரு கர்மத்தையும் அநுஷ்டிக்கும்போது இந்த்ரன் முதலிய தேவர் எம்பெருமானுக்குச் சரீரமாயிருப்பவர் என்பதுவும் அவர்களுக்கு அந்தர்யாமியாய் நிற்கும் ஸர்வேசுவரனே அந்த அந்தக் கர்மத்தால் ஆராதிக்கப்படுகின்றான் என்பதுவும் ஆம். இத்தகைய எம்பெருமானே அதியஜ்ஞன் எனப்படுவான். இந்த அநுஸந்தாநம் ஐசுவர்யார்த்தி, கைவல்யார்த்தி ஆகிய இவர்களுக்கும் பொதுவானதாகும்.

மூவகையினரும் கைக்கொள்ளவேண்டிய அம்சங்களாவன—

ஐசுவர்யார்த்தி தன்னுடைய நித்ய நைமித்திக கர்மங்களுக்கு விரோதமில்லாத எல்லாக் காலங்களிலும் பகவானை த்யாநம் செய்தும், தினந்தோறும் யோகத்திற்காகக் குறித்த காலத்தில் பக்தியோகத்தைச் செய்தும் பழகிவரவேண்டும். அதனால் மனம் வேறு விஷயத்தில் செல்லாமலிருக்கும். பின் இறக்குங்காலத்தில் எம்பெருமானையே த்யாநம் செய்யவேண்டும். அவ்வாறு செய்வதால் பரமபுருஷனை எத்தகைய ப்ரகாரங்களுடன் கூடியவனாக மரணகாலத்தில் நினைக்கின்றானோ, அத்தகைய பரமபுருஷனுக்குச் சமமான ஐசுவர்யத்தைப் பெறலாம்.

கைவல்யார்த்தி கண் காது முதலிய ஜ்ஞாநேந்த்ரியங்களை அற்ப விஷயங்களில் செல்லாதவாறு அடக்கி, ஹ்ருதயகமலத்தில் உள்ள எம்பெருமானிடம் செலுத்தி அசையாது ஈடுபட்டுநின்று, ப்ரணவத்தை அநுஸந்தித்துச் சிரஸ்ஸில் ப்ராணனை வைத்துப் பின் இறக்கவேண்டும். இங்ஙனம் மரிப்பவன் ப்ரக்ருதியின் ஸம்பந்தமற்றுப் பகவானைப் போன்ற ஆத்மாவை அநுபவிக்கப்பெறுவான்.

மோக்ஷார்த்தி எப்பொழுதும் பகவானைத் தவிர வேறொன்றிலும் மனத்தைச் செலுத்தமாட்டான்; எம்பெருமானை க்ஷணம் பிரிந்தாலும்

உயிர்தரிக்கமாட்டான். அவனைப் பிரிய எம்பெருமானாலும் முடியாது. இத்தகைய அதிகாரிக்குப் பக்தியோகத்திற்குத் தடையை நீக்கித் தலைக் கட்டிவைத்துப் பரமபதம் சேர்த்துத் தன் கைங்கர்யத்தை அருளுதல் வரையில் உள்ள பலனையெல்லாம் எம்பெருமான் தன் பொறுப்பாகக் கொண்டு கொடுத்தருள்வான்.

இறக்கும்போது பகவானை த்யானிப்பதே அந்திமஸ்ம்ருதி யெனப்படும்.

அர்ச்சிராதிகதியை நினைத்தலும் (67-வது பாசுரவுரையில் காண்க) பிந்திய இருவகை அதிகாரிகளுக்கும் கைக்கொள்ளத்தக்க தாகும்.

இவ்விஷயங்களை எட்டாம் அத்யாயத்தில் கண்ணன் அர்ஜுந னுக்கு உபதேசித்தான்—என்றவாறு. 9

ऐश्वर्याक्षरयाथात्म्यभगवच्चरणार्थिनाम् ।
वेद्योपादेयभावानामष्टमे भेद उच्यते ॥ 12

9-வது அத்யாயத்தின் ஸாரம்—விளக்கம்

335 தன்மேன்மை யுந்தன் பிறப்பிற் றளராத் தனிநிலையும்
பன்மேனி நண்ணினன் பாற்பிரி யாவன்ப ராசைகளும்
புன்மேனி விண்ணவர் பாற்புரி யாததன் பத்திமையு
நன்மேனி நாரணன் றனர னுக்கு நவின்றனனே. 10

உரை :— நல் மேனி – சிறந்த திருமேனியையுடைய, நாரணன் – ஸ்ரீமந்நாராயணன் (கண்ணன்), நரனுக்கு – அர்ஜுநனுக்கு, தன் மேன்மையும் – (ஈசுவரனை) தன்னுடைய மேம்பட்ட தன்மையும், தன் பிறப்பில் – தன் அவதாரங்களில், தளராத் தனிநிலையும் – குறையாத பரத்வமும், பல் மேனி – (தேவர், மனுஷ்யர் முதலிய) பலவகைச் சரீரங் களில், நண்ணினன்பால் – அந்தர்யாமியாயுள்ள தன்மீது, பிரியா அன் பர் ஆசைகளும் – பிரியாத அன்பையுடைய மஹாத்மாக்கள் ஆசை (யோடு செய்யும் கைங்கர்யங்) களும், புல் மேனி – அற்பமா (ய் அழிந்து போவதா) ன சரீரத்தையுடைய, விண்ணவர்பால் – தேவர்மீது, புரியாத– செலுத்தாத, தன் பத்திமையும் – தன்னைப்பற்றிய பக்தியோகமும் (ஆகிய இவற்றை), நவின்றனன் – உபதேசித்தான். தான் – அசை.

[தன் மேன்மையும்] எம்பெருமான் இந்தச் சேதநாசேதநங்களுக் குள் தன் ஸ்வரூபத்தை மறைத்துக்கொண்டு அந்தர்யாமியாயிருந்து இவற்றைச் சூழ்ந்துநிற்கின்றான். இவற்றின் ஸ்வரூபமும் ரக்ஷணமும் எம்பெருமானுடைய ஸ்வரூபத்தால் ஏற்பட்டவை. தன் ஸங்கல்பத் தால் ஸகல வஸ்துக்களையும் உண்டாக்கிக் காத்து அவற்றைக் காரியங் களில் ஏவுகின்றான்; அவை அடையும் பயன்களைத் தன்னுடையன

வாகக் கொண்டுள்ளான்; ஸகலவஸ்துக்களையும் சரீரமாகக்கொண்டு நிற்கின்றான்; அனைத்தையும் ப்ரளயகாலத்தில் தன் ஸங்கல்பத்தால் அழித்துப் பின் படைக்கின்றான்; சேதநருக்கு அவரவர் செய்த கர்மத்திற்குத் தக்கவாறு பலன் கொடுப்பவனாதலின் கருணையின்மை பக்ஷபாதம் முதலிய தோஷங்களற்றவனாவான். சேதநரின் கர்மத்தை அநுஸரித்து அவன் கொள்ளும் ஸங்கல்பத்தால் உலகமுழுதும் நடைபெறுகின்றது. இவையனைத்தும் எம்பெருமானுடைய பெருமையேயாகும்.

[தன் பிறப்பில் தளராத் தனிநிலையும்] எம்பெருமான் இக்கர்மபூமியிலுள்ளோர் அனைவரும் தன்னை அடைவதற்குத் தான் மநுஷ்யனாக அவதரித்தும் தன் குணங்களையும் பெருமையையும் சற்றும் குறைத்துக் கொள்ளாதவாறு விளங்குகின்றான். அவனுடைய எளிமையைக் கண்டு அவனை ஒரு ஸாதாரண மனுஷ்யனாகக் கருதக்கூடாது.

[பன்மேனி..................ஆசைகளும்] எம்பெருமான்மீது அளவற்ற பக்தியையுடைய பாகவதர்கள் தமக்குள்ள பக்தியினால் பற்பல கைங்கர்யங்களைச் செய்வார்கள். அவையாவன—எம்பெருமானுடைய திருநாமத்தை அநுஸந்தித்தல், உடல் முழுதும் சிலிர்த்தல், குரல் தழுதழுத்தல், ஸ்ரீமந்நாராயணன் முதலிய விசேஷமான திருநாமங்களைக் கூறல், அர்ச்சித்தல், கோயில் திருநந்தவநம் முதலியவற்றை அமைத்தல், பூமியில் மணல் கல் சேறு முதலியவற்றைக் கவனியாது ஸாஷ்டாங்க ப்ரணாமம் செய்தல், எப்பொழுதும் பகவதநுபவத்தை விரும்புதல் : ஆவனவாம்.

ஸ்வர்க்கம் முதலிய அற்பபலனை விரும்புமவர் ஸமர்ப்பிக்கும் வஸ்துக்கள் எம்பெருமானுடைய திருவடிகளைச் சேரும். வேறு பலனைக் கருதாது பரமைகாந்தியான அதிகாரி ஓர் இதழையோ, புஷ்பத்தையோ, பழத்தையோ, சுத்தஜலத்தையோ ஸமர்ப்பித்தாலும் எம்பெருமான் தன் முடியால் ஏற்று, அவனது உள்ளத்தின் சுத்தியைக் கண்டு மகிழ்ந்து, கிடைக்க அரிய வஸ்துவைப் பெற்றாற்போல் உவந்து அநுபவிப்பான்.

[புன்மேனி............பத்திமையும்] பக்தன் சரீரத்தைப் போஷிக்க வேண்டிய கர்மங்களையும் வர்ணாச்ரமதர்மங்களையும் எம்பெருமானுடைய உவப்புக்காக அவனாலே செய்விக்கப்பட்டனவென் நினைந்து அநுஷ்டித்துக்கொண்டு கீழ்க்கூறிய கீர்த்தநம் அர்ச்சித்தல் முதலிய கைங்கர்யங்களை மகிழ்வுடன் செய்வான்; மேலும் உலகம் முழுதும் எம்பெருமானுக்கு அடிமைப்பட்டதென அநுஸந்தித்துக்கொண்டு, அவனுடைய திருக்கல்யாண குணங்களையும் உள்ளத்து நினைத்துக் கொண்டிருப்பான்; வேறு தெய்வத்தை மனத்தாலும் நினையான்; இத்தகைய பக்தியோகத்தை உயிர் உடலினின்று நீங்கும்வரை உள்ளபடி அநுஷ்டித்துப் பின் பலனைப் பெறுவான்.

இவ்விஷயங்களை ஒன்பதாவது அத்யாயத்தில் கண்ணன் அர்ஜுநனுக்கு உபதேசித்தான்—என்றவாறு. 10

स्वमाहात्म्यं मनुष्यत्वे परत्वं च महात्मनाम् ।
विशेषो नवमे योगो भक्तिरूपः प्रकीर्तितः ॥ 13

10-வது அத்யாயத்தின் ஸாரம்—விளக்கம்

336 எல்லை யிலாததன் சீலமா மின்னமு தக்கடலு
மேல்லை யிலாத விபூதி யேலாந்தன தானமையு
மேல்லையில் பத்தி தனையேழு விக்கத் திருவருளா
லேல்லையி லீச னியம்பின னிந்திரன் மைந்தனுக்கே. 11

உரை:— எல்லையில் ஈசன் – அளவற்ற (ஸ்வரூபம் – ஸ்வபாவம் முதலியவற்றையுடையனான) ஸர்வேசுவரன், இந்திரன் மைந்தனுக்கு – இந்த்ரனுடைய புத்திரனான அர்ஜுநனுக்கு, எல்லையில் பத்திதனை எழுவிக்க – அளவற்ற பக்தியையுண்டாக்கி வ்ருத்திசெய்வதற்காக, எல்லையிலாத – அளவற்ற, தன் சீலமாம் – தன் திருக்கல்யாண குணங்களாகிய, இன் அமுதக்கடலும் – இனிய அம்ருதமயமான ஸமுத்ரமும், எல்லையிலாத விபூதி எலாம் – அளவிட்டுக் கூறமுடியாத ப்ரபஞ்சம் முழுவதும், தனது ஆனமையும் – தன் நியமனத்துக்குட்பட்டனவாயிருத்தலும் (ஆகிய இவற்றை), திரு அருளால் – சிறந்த கருணையோடு, இயம்பினன் – உபதேசித்தான்.

[எல்லையிலாத............கடலும்] தேவர்களும் மஹர்ஷிகளும் இந்த்ரியங்களுக்குப் புலப்படாத விஷயங்களையும் அறிபவர்கள்; மற்றவர்களைக் காட்டிலும் அறிவில் மேம்பட்டவர்கள். இத்தகைய அவர்களுடைய ஸ்வரூபமும் ஜ்ஞாநமும் சக்தியும் எம்பெருமானால் கொடுக்கப்பட்டனவேயாகும். அந்த ஜ்ஞாநமும் அவர்களின் புண்யத்திற்கேற்றவாறு கொடுக்கப்பட்டதாதலின் அளவிடற்குரியதேயாம். ஆதலின் அவர்கள் எம்பெருமானுடைய திருநாமம், செய்கை, ஸ்வரூபம், ஸ்வபாவம் முதலியவற்றை உள்ளவாறு அறியமுடியாது. உலகத்தில் அரசன் மற்ற மானிடனைப்போல் இருந்தே ஒரு கர்மவசத்தால் அப்பதவியை அடைகின்றான். இந்த்ரன் ப்ரஹ்மா முதலியவர்களும் மற்ற ஸம்ஸாரிகளைப்போலவிருந்தே கர்மவசத்தால் அப்பதவியை அடைந்துள்ளனர். எம்பெருமானே சேதநாசேதநங்களில் உள் புகுந்து உயிராய் நின்று ஆள்பவனாய், தோஷங்கள் அற்றவனாய், ஸகல கல்யாண குணங்களுக்கும் இருப்பிடமாயிருக்கின்றான். ஆதலின் சேதநாசேதநங்களைக் காட்டிலும் வேறுபட்டவனாகின்றான், எம்பெருமானுடைய இத்தகைய ஸ்வரூபத்தையும் ஸ்வபாவத்தையும் அறிபவன் தனக்குப் பக்தி உண்டாவதற்குத் தடையாயிருந்த பாபங்கள் நீங்கப்பெற்றுப் பக்தி உண்டாகப் பெறுவான்.

[எல்லையிலாத.........ஆனமையும்] ஸகலப்ராணிகளுக்கும் ஒரு கார்யத்தைச் செய்யவோ அதிலிருந்து விலகவோ உரியனவான மன நிலைகள் எம்பெருமானுடைய ஸங்கல்பத்தாலேயே ஏற்படுகின்றன. கடந்த மந்வந்தர காலத்தில் உலகத்தைப் படைப்பதற்காக ப்ரஹ்மா வின் மனத்திலிருந்து பிறந்த ப்ருகு முதலிய ஏழு மஹர்ஷிகளும், காப் பதற்காக ஏற்பட்ட ஸாவர்ணிகர்களென்னும் நான்கு மநுக்களும் அவன் ஸங்கல்பப்படி நடக்கக் கடமைப்பட்டுள்ளனர். எல்லா நிலை மைகளிலுமுள்ள எல்லா வஸ்துக்களுக்கும் அந்த அந்த நிலைமையைக் கொடுக்கவல்லனவாய் நமக்குப் புலப்பட்டோ புலப்படாமலோ இருக் கக்கூடியவை அனைத்தும் பகவானே. அவனை அந்தர்யாமியாகக் கொள்ளாத வஸ்துவே உலகில் இல்லை. சேதநாசேதநங்களாகிய இவ் வுலகம் கார்யம் என்ற நிலைமையிலோ, காரணம் என்ற நிலைமையிலோ, ஸ்தூலமான தன்மையிலோ ஸூக்ஷ்மமான தன்மையிலோ, உற்பத்தி யிலோ, ரக்ஷணத்திலோ, செய்கையிலோ எம்பெருமானுடைய ஸங் கல்பத்தைச் சிறிதும் மீறி நடக்கமுடியாது. ஸர்வேச்வரன் தனக்கு உள்ள அடக்கியாளும் சக்தியில் கோடி கோடியில் ஒரு பாகத்தை வைத்துக்கொண்டு அவ்வஸ்துக்களில் வியாபித்து நிற்கின்றான்.

[எல்லையில்...எழுவிக்க] ஆக ஸர்வேச்வரன் ஸகலகல்யாணகுணங் களுடன் விளங்குவதையும் அவனே ப்ரபஞ்சத்திற்குக் காரணமா யிருந்து அனைத்தையும் நடத்துவதையும் அறிந்தவர்கள் எம்பெருமான் மீதே மனத்தைச் செலுத்துவார்கள்; அவனுடைய அநுபவமில்லாது க்ஷணம்கூட உயிர்தரிக்கமாட்டார்கள்; தங்கள் தங்களால் அநுபவிக் கப்பட்ட திருக்கல்யாண குணங்களை ஒருவருக்கொருவர் தெளிய அறிவித்துக்கொள்வார்கள்; அதிமாநுஷமாய் அற்புதமாய் இனியன வான அவனுடைய சரிதங்களையே பிறருக்குச் சொல்லிக்கொண்டும் பிறரிடம் கேட்டுக்கொண்டும் இரண்டு நிலைகளிலும் மகிழ்வுற்றிருப் பார்கள். இவ்வாறு உண்டான பக்தி மேன்மேலும் வளர்ந்து வருகின் றது.

இவ்விஷயங்களைப் பத்தாவது அத்யாயத்தில் கண்ணன் அர்ஜுநனுக்கு உபதேசித்தான்—என்றவாறு.

எம்பெருமானுடைய திருக்கல்யாண குணங்கள் அநுஸந்திக்க இனியனவாய் அளவற்றிருப்பதுபற்றி 'இன்னமுதக்கடல்' என்னலா யிற்று.

தளை வழுவுமாதலின் 'எல்லையிலாத பத்தி' என்ற பாடம் தகாது. 11

स्वकल्याणगुणानन्त्यकृत्स्नस्वाधीनतामतिः ।
भक्त्युत्पत्तिविवृद्ध्यर्थो विस्तीर्णा दशमोदिता ॥ 14

11 வது அத்யாயத்தின் ஸாரம்—விளக்கம்

337 எல்லாந் தனக்குரு வாயிலங் கும்வகை தானுரைத்துச்
சொல்லா லறிந்தது சோராமற் கண்டிட வேண்டுமென்ற
வில்லாள னுக்கன்று மெய்க்கண் கொடுத்திது வேறுமுண்டோ
நல்லார்கள் காண்பரென் றுந்நவின் றுனங்க ணயகனே. 12

உரை:— நங்கள் நாயகன் - நம்முடைய நாயகஞன கண்ணன், எல்லாம் - ஸகலவஸ்துக்களும், தனக்கு உருவாய்-(எம்பெருமாஞகிய) தனக்குச் சரீரமாய், இலங்கும் வகை - ப்ரகாசிக்கும் விதத்தை, தான் உரைத்து-தான் உபதேசித்து சொல்லால் அறிந்தது-(தன்னுடைய) உபதேசத்தால் அறிந்துகொண்ட (ஐசுவர்யத்) தை, சோராமல் - குறைவுபடாமல் (முழுவதையும்), கண்டிட வேண்டும் என்ற-ப்ரத்யக்ஷ மாகக் காணவேண்டும் என்று ஆசைகொண்ட, வில்லாளனுக்கு - (சிறந்த) வில்லாளியான அர்ஜுநனுக்கு, அன்று - அப்பொழுதே, மெய்க் கண் கொடுத்து - (தன் ஸ்வரூபத்தை) உள்ளவாறு காணும் படியான (தெய்விகக்) கண்ணைக் கொடுத்து, இது - இவ்வாறு (தன்னைக் காண்பதற்கு) ஸாதநம், வேறும் உண்டோ - (பக்தியைத் தவிர) வேறு ஏதாவதும் உண்டோ? (ஒன்றுமில்லை), நல்லார்கள் - (பக்திமான்களான) ஸாதுக்கள், காண்பர் என்று - ஸாக்ஷாத்கரிக்கப் பெறுவார்கள் என்று, நவின்றுன் - உபதேசித்தான்.

[எல்லாம் தனக்கு.........உரைத்து] கீழ் 10-அத்யாயங்கள் வரை உபதேசிக்கப்பெற்ற அர்ஜுநன் கண்ணனை நோக்கிப் பின்வருமாறு விண்ணப்பம் செய்துகொண்டான்- "தாமரைக்கண்ணு! சரீரத்தையே ஆத்மாவாக நினைத்து மயங்கிக்கிடந்த என்மீது நீ கருணைகொண்டு ஆத்மாவைப்பற்றிய உண்மையை உபதேசித்து என் கலக்கத்தைப் போக்கியருளினுய். மற்ற வஸ்துக்கள் அனைத்தும் பரமாத்மாவாகிய உன்னிடமிருந்து பிறவியையும் நாசத்தையும் அடைகின்றனவென்பதை யும் கேட்டறிந்தேன். சேதநாசேதநங்களாகிய ஸகல வஸ்துக்களுக்கும் நீயே தலைவனென்றும், ஜ்ஞாநம் பலம் முதலிய திருக்கல்யாணகுணங் களால் நீயே எல்லோரினும் மேம்பட்டவனென்றும், எல்லாப் பொருள் களையும் சரீரமாகக்கொண்டு அவற்றுக்கு ஆதாரமாயிருப்பவ னென்றும், உலகில் நினைத்தல் இமைத்தல் முதலிய ஸகலமான செய்கையும் உன் ஸங்கல்பத்தால் ஏற்பட்டனவென்றும் அறிந்ததுடன் இன்னும் உன் பலவகைப் பெருமையையும் கேட்டறிந்தேன். அவை முழுதும் உண்மையேயென்று உறுதிகொண்டேன்.

[சொல்லால்.........வில்லாளனுக்கு] இங்ஙனம் உன் பெருமையை உன் வாயிஞலேயே பேசிக் கேட்கும் பாக்யம் பெற்ற நான் அத்தகைய பெருமைக்கு ஏற்ற உன் திருமேனியை ஸேவிக்க விரும்புகிறேன். அத்தகைய விசுவரூபமாகிய உன் திருமேனியை நான்

ஸேவிக்கமுடியும் என்று நீ கருதினால், உன் திருமேனி முழுவதையும் (ஸகலமான குணம், விபூதி, வடிவங்கள் முதலியவற்றுடன் கூடிய ரூபத்தை) எனக்குக் காட்டியருளவேண்டும்''

[அன்று மெய்க்கண் கொடுத்து] இங்ஙனம் உத்ஸாஹத்துடன் மகிழ்ச்சிப்பெருக்கினால் குரல் தழுதழுத்துக் கேட்ட அர்ஜுநனைக் குறித்துக் கண்ணன் பின்வருமாறு அருளிச்செய்தான்—''அர்ஜுந! நூற்றுக் கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் உள்ளனவாய்ப் பலவிதமாய்த் தெய்விகமாய்ப் பல நிறங்களைக் கொண்ட என் திருமேனிகளைப் பார். இவ்வுலகில் நீயும் பிறரும் நேரில் கண்டனவும் சாஸ்த்ரங்களால் அறிந்தனவுமான வஸ்துக்களையும், ஸகலலோகங்களிலும் ஸகலசாஸ்த்ரங்களிலும் அறியப்படாத ஆச்சர்யங்களையும் என் திருமேனியில் பார். என்னுடைய இந்தச் சரீரத்தின் ஒரு பாகத்திலேயே ஸகல வஸ்துக்களையும் காண்பாய். இன்னும் பாண்டவர்கள் கௌரவர்களை ஜயித்தல் முதலியவற்றையும் என் சரீரத்தின் ஏகதேசத்தில் பார். உன்னுடைய கண் மாம்ஸமயமாயிருத்தலால் குறிப்பிட்ட சில வஸ்துக்களையே காணவல்லது. இக்கண்ணால் என் விசுவரூபத்தைப் பார்க்கமுடியாது. தெய்விகமான கண்ணைத் தருகிறேன். அதைக்கொண்டு நீ நன்கு காணமுடியும்.'' இங்ஙனம் கூறிக் கண்ணன் தெய்விகக் கண்ணைக் கொடுத்துத் தன்னுடைய விசுவரூபத்தை அர்ஜுநனுக்குக் காட்டியருளினான்.

அவ்வுருவம் மிக்க ப்ரகாசத்துடன் பலவகைப்பட்ட பல முகங்களையும் கண்களையும் உடையதாய் ஆச்சர்யமயமாய்க் காணப்பட்டது; தெய்விகமான பல ஆபரணங்களையும் உயர்ந்த மாலைகளையும் ஆடைகளையும் அணிந்து பலவகைப்பட்ட திவ்யாயுதங்களைக் கையில் தூக்கிப் பிடித்து நின்றது; எல்லாத் திசைகளிலும் முகங்களையுடையதாய் உயர்ந்த சந்தனத்தைப் பூசிக்கொண்டு ஆச்சர்யமான பல வஸ்துக்களுக்கும் ஆதாரமாய் விளங்கியது. ஒரே ஸமயத்தில் உதித்த ஆயிரக்கணக்கான ஸூர்யர்களைப்போல் ஜ்வலிக்கும் அந்த விசுவரூபத்தின் ஏகதேசத்தில் பல்வகைப்பட்ட உலகங்களெல்லாம் ஒதுங்கிக் கிடப்பதைக் கண்ட அர்ஜுநன் ஆச்சர்யமுற்று மெய்சிலிர்த்துத் தண்டம்போல் விழுந்து வணங்கிக் கைகளைக் கூப்பிப் பலபடிகளால் எம்பெருமானைப் புகழ்ந்தான்; அவனது பெருமையை அறியாது தோழனெனக்கொண்டு தான் செய்த அபராதங்களையெல்லாம் பொறுத்தருளுமாறு வேண்டினான்; பயங்கரமான அந்த விசுவரூபத்தை மறைத்துக்கொண்டு குளிர்ந்த பழைய வடிவத்தையே காண்பிக்குமாறு ப்ரார்த்தித்தான். கண்ணனும் அவன்வேண்டுகோளுக்கு இணங்கி அவ்வாறே காட்சியளித்தான். அந்த விசுவரூபத்தைக் காண்பதற்குத் தேவர்களும் எப்பொழுதும் பேராவல் கொண்டுள்ளனர். ஆனால் அந்தப் பாக்கியம் அவர்களுக்குக் கிட்டவில்லை. அத்தகைய பாக்கியத்தைப் பெற்றதற்கு அர்ஜுநனைக் கண்ணன் மிகப் புகழ்ந்தான்.

[இது வேறுமுண்டோ] பக்தியில்லாமல் செய்கின்ற வேதாத்ய யநம் முதலியன, யாகம், தாநம், ஹோமம், தவம் ஆகிய இவற்றால் பகவானைக் காணமுடியாது. வேறு பலனை நாடாது வேறு தெய்வத்தைப் பற்றாது பக்தியைக் கொண்டால் சாஸ்த்ரத்தின் உதவியால் அவனது உண்மையான ஸ்வரூபத்தை அறியவும், அவனை உள்ளவாறு ஸாக்ஷாத்கரிக்கவும், அவனை அடைந்து உள்ளவாறு அநுபவிக்கவும் முடியும்.

[நல்லார்கள் காண்பர்] வேதாத்யயநம் முதலிய ஸகலகர்மங்களையும் பகவானுக்கு ஆராதனமாகக்கொண்டு அநுஷ்டிப்பவனையும், ஸகலகர்மங்களுக்கும் அவனையே பலனாகக் கொண்டிருப்பவனையும், பகவானிடம் உள்ள அன்பின் பெருக்கினால் அவனுக்குக் கைங்கர்யம் செய்தாலன்றி உயிர்தரிக்கமாட்டாமல் எப்பொழுதும் கைங்கர்யங்களைச் செய்பவனையும், பகவானிடமே அன்புடையனாதலின் மற்றொன்றில் பற்று இல்லாதவனையும், ஸம்ஸாரத்தில் உள்ள அற்பஸுக துக்கங்களைப் பொருட்படுத்தாது பகவானிடமே விருப்பமுடையனாதலாலும் தனக்கு வரும் துன்பத்திற்குத் தன் பாபமே காரணமென்று நினைத்தலாலும் ஸகல ப்ராணிகளும் எம்பெருமானுக்கு வசப்பட்டவை என்று கருதுவதாலும் ஸகல ப்ராணிகளிடமும் பகையற்றவனையுமுள்ள அதிகாரி தன் அஜ்ஞாநம், விபரீதஜ்ஞாநம், இவற்றுக்குக் காரணமான கர்மம் முதலியன ஆகிய இவை அனைத்தும் வேருடன் அறுக்கப் பெற்றுப் பகவானையே அநுபவித்துக்கொண்டிருப்பான்.

இவ்விஷயங்களைப் பதினொன்றாவது அத்யாயத்தில் கண்ணன் அர்ஜுநனுக்கு உபதேசித்தான்—என்றவாறு.

என்றுந்நவின்றான்—நகரம் விரிந்தது செய்யுள்விகாரம். 12

एकादशे स्वयाथात्म्यसाक्षात्कारावलोकनम् ।
दत्तमुक्तं विदिप्राप्त्योर्भक्त्येकोपायता तथा ॥ 15

12-வது அத்யாயத்தின் ஸாரம்—விளக்கம்

338 தன்கழ லிற்பத்தி தாழா ததுமதன் காரணமா
மின்குண சிந்தையு மீதறி யாக்கவ் வடிமைகளுந்
தன்கரு மங்க ளறியா தவர்க்கி லகுநிலையுந்
தன்கழ லன்பர்க்கு நல்லவன் சாற்றினன் பார்த்தனுக்கே. 13

உரை:— தன் கழல் அன்பர்க்கு – தன் திருவடிகளில் பக்தியை அநுஷ்டிப்பவருக்கு, நல்லவன் – அநுகூலனான கண்ணன், பார்த்தனுக்கு - அர்ஜுநனுக்கு, தன் கழலில் பத்தி – (ஈசுவரனான) தன் திருவடிகளிற்செய்யும் பக்தியோகம், தாழாததும் – (பலன்கொடுக்கத்) தாமதியாமையும், அதன் காரணமாம் – அந்தப் பக்தியோகத்திற்குக்

காரணமாகின்ற, இன் குணசிந்தையும் – (எம்பெருமானுடைய) இனிய குண நினைவும் (அதாவது – இனிய குணங்களை நினைத்துப் பழகுதலும்), ஈது அறியார்க்கு – இதை (ச் செய்ய) அறியாதவர்க்கு, அவ்வடிமைகளும் – அந்தக் கைங்கர்யங்களும், தன் கருமங்கள் – தனக்கு விதித்த பகவத்கைங்கர்யங்களை, அறியாதவர்க்கு – (செய்ய) அறியாதவருக்கு, இலகு நிலையும் – ஸுலபமான (ஆத்மத்யாநமாகிய) உபாயமும் (ஆகிய இவற்றை), சாற்றினன் – உபதேசித்தான்.

[தன் கழலில் பத்தி தாழாததும்] சரீரகார்யம் நடைபெறுவதற்கு வேண்டிய பயிரிடுதல் முதலிய தொழில்களையும், உயிர்வாழ முக்கிய ஸாதநமாயுள்ள உண்பது முதலிய செய்கைகளையும், யாகம் தாநம் ஹோமம் தவம் முதலிய வைதிககர்மங்களையும் பகவானிடம் ஸமர்ப்பித்து அவனிடமே மனத்தைச் செலுத்தி வேறு பலனைக் கருதாது அவனையே பலனாகக்கொண்டு அவனுடைய த்யாநம் அர்ச்சநம் நமஸ்காரம் ஸ்தோத்ரம் கீர்த்தநம் முதலியவற்றைச் செய்து உபாஸித்தலாகிய பக்தியோகத்தைச் செய்பவனை அதுவரை மோக்ஷம் பெறத் தடையாயிருந்த ஸம்ஸாரமாகிய ஸமுத்ரத்திலிருந்து மிக விரைவில் கரையேற்றி ஸர்வேசுவரன் முக்தியையளிப்பான், ஜீவாத்மாவை உபாஸிப்பவனும் ப்ரக்ருதிஸம்பந்தமில்லாத ஜீவாத்மாவின் ஸாக்ஷாத்காரமாகிய பலனைப் பெற்றபோதிலும் அவன் நெடுநாளாகச் சரீரத்தையே ஆத்மாவாக நினைத்திருந்தவனாதலின் அவன் ஸகலமான இந்த்ரியங்களின் வேலைகளையும் நிறுத்தி ஆத்மாவினிடம் மனத்தைச் செலுத்துவதென்பது மிகக் கடினமாகும். ஆதலால் பலன் பெறுவதற்குக் காலவிளம்பம் ஏற்படும், ஆக, அதினும் எளிதாய்ச் சிறந்த பலனை விரைவில் தருவதாயுள்ள பக்தியோகத்தை அநுஷ்டிக்க வேண்டும்.

[அதன் காரணமாம் சிந்தையும்] உலகவிஷயங்களிலேயே ஈடுபட்டுப் பழகிய மனத்தைப் புதிதாக எம்பெருமானிடம் விரைவில் ஒருமுகப்படுத்துவது மிகக் கடிநமே. ஆயினும், எம்பெருமானுடைய திருக்கல்யாணகுணங்களை மிக்க அன்புடன் நினைத்து நினைத்துப் பழகினால் மனம் ஸ்திரமாய் ஸமாதாநமடைந்து அவனைப் பெறலாம்.

[ஈதறியார்க்கு அவ்வடிமைகளும்] வெகுகாலமாகப் பழகியனவும் கண்ணுக்குப் புலப்படுவனவும் விரைவில் கிடைப்பனவுமான இனிய வஸ்துக்களில் ஈடுபட்ட மனத்தை எம்பெருமான்மீது செலுத்துவது முடியாது; ஆதலின் ஏதாவது வேறு கார்யங்களைச் செய்வதிலேயே பழைய வாஸனையால் மனம் ஈடுபடுமென்னில்–திருக்கோயில் கட்டுதல், திருநந்தவனம் அமைத்தல், தீபம் ஏற்றுதல், திருவாராதநம் நடப்பித்தல், திருநாமத்தை அநுஸந்தித்தல், ப்ரதக்ஷிணம் செய்தல், துதித்தல், நமஸ்கரித்தல் முதலிய கைங்கர்யங்களைச் செய்யவேண்டும். அப்பொழுது அந்த அந்தக் கைங்கர்யங்கள் மிகப் பரிசுத்தமானவை

யாதலாலும் ஒவ்வொரு கைங்கர்யத்திலும் எம்பெருமானைப்பற்றி நினைத்தேயாகவேண்டுமாதலாலும் விரைவில் அத்தகைய பழக்கம் உண்டாகி மனம் ஒன்றுபட்டுப் பின் அதன்வழியாக எம்பெருமானை அடையலாம்.

[தன் கருமங்கள்...... நிலையும்] தனக்கு வேண்டிய கார்யங்களி லேயே மனத்தைச் செலுத்திப் பழகியவனுக்குப் பக்தியோகத்திற்கு மூலமான பகவத்கைங்கர்யத்தில் மனம் செல்லாதாகில்—வேறு பலனைக் கருதாது எம்பெருமானது உகப்பிற்காகவே கர்மயோகத்தை அநுஷ்டித்தால் அதனால் பாபம் நீங்கி மனத்திலுள்ள ஆசை பகை முதலியனவும் கழியும். பின் ஜீவாத்மாவைப்பற்றிய த்யாநம் நடை பெற்று அவித்யை முதலியன கழிந்து எம்பெருமானுக்கு அடிமையாய் நிற்கும் ஆத்மஸ்வரூபத்தை எம்பெருமானுக்குச் சமமான நிலைமையில் ஸாக்ஷாத்கரிக்கப்பெறலாம். பின் பக்தியோகம் வேறு ஒன்றையும் வேண்டாது தானே கைகூடிவரும்.

இங்குக் கர்மயோகத்தைச் செய்பவன் கைக்கொள்ளவேண்டிய தயை பொறுமை அடக்கம் முதலிய நற்குணங்களும் கூறப்பட்டன வாகக் கொள்க.

இப்படி மிகப் பெருமை வாய்ந்த பக்தியோகம் மோக்ஷத்திற்கு உபாயமாகவும், அநுஷ்டிக்கும்போது மிகவும் இனியதாயிருப்பதால் தானே பலனாகவும் ஆகின்றது. இதை அநுஷ்டிக்கும் அதிகாரிகள் எம்பெருமானுக்குப் பிரியமானவர்கள் என்ற அர்த்தம் 'தன் கழல் அன்பர்க்கு நல்லவன்' என்ற தொடரால் கூறப்பட்டது.

இவ்விஷயங்களைப் பன்னிரண்டாவது அத்யாயத்தில் கண்ணன் அர்ஜுநனுக்கு உபதேசித்தான்—என்றவாறு. *13*

भक्तेः श्रैष्ठ्यमुपायोक्तिरशक्तस्यात्मनिष्ठता ।
तत्प्रकारस्त्वतिप्रीतिर्भक्ते द्वादश उच्यते ॥ 16

13-வது அத்யாயத்தின் ஸாரம்—விளக்கம்

339 ஊனின் படியு முயிரின் பிரிவு முயிர்பெறுவார்
ஞானம் பெறுவகை யுஞ்ஞான மீன்ற வுயிர்ப்பயனு
மூனின் றதற்கடி யும்முயிர் வேறிடு முள்விரகுந்
தேனின்ற பாதன் றெளிவித் தனன்சிலைப் பார்த்தனுக்கே. 14

உரை :—தேன் நின்ற பாதன் - தேன் தங்குகின்ற திருவடி(த் தாமரை)யையுடைய கண்ணன், சிலைப் பார்த்தனுக்கு - வில்லைத் தாங் கும் அர்ஜுநனுக்கு, ஊனின் படியும் - சரீரத்தினுடைய ஸ்வரூபமும், உயிரின் பிரிவும் - ஜீவாத்மா (சரீரத்தைக் காட்டிலும்) பிரிந்து நிற்குந் தன்மையும், உயிர் பெறுவார் - ஆத்மாவை அடைபவர், ஞானம்

பெறு வகையும் – அந்த ஆத்மஜ்ஞாநத்தைப் பெறுவதற்கு வேண்டிய உபாயங்களும், ஞானம் ஈன்ற – ஆத்மாவை அறியச் சாதனமான குணங்களால் அடையப்படுகின்ற, உயிர்ப் பயனும் – ஆத்மாவாகிய பலனும், ஊன் நின்றதற்கு – சரீரம் நிற்பதாகிய ஸம்ஸாரத்திற்கு, அடியும் – காரணமும், உயிர் வேறிடும் – ஆத்மாவை(ச் சரீரத்தினின்று) வேறுபடக் காண்பதற்கு வேண்டிய, உள் விரகும் – மனத்தால் செய்ய வேண்டிய உபாயமும் (ஆகிய இவற்றை), தெளிவித்தனன் – விளக்கி யருளினன்.

[ஊனின் படியும்] ஜீவன் ஓர் இடத்தில் இருந்துகொண்டே போகங்களை அநுபவிக்கவேண்டுமாதலின் அதற்கு உரிய இடமாகவிருக்கும் சரீரம் க்ஷேத்ரமென வழங்கும். உலகத்தில் விதை விதைத்துப் பலன் அடையும் நிலத்திற்கு க்ஷேத்ரமெனப் பெயர் உண்டு. கர்மமாகிய விதையின் பலனை ஜீவன் சரீரத்திலிருந்தே அநுபவிப்பதால் சரீரம் க்ஷேத்ரமென்னப்படுகின்றது. இத்தகைய சரீரம் – பூமி, ஜலம், தேஜஸ், வாயு, ஆகாசம் ஆகிய ஐந்து பூதங்களாலும், ப்ரக்ருதி, மஹான், அஹங்காரம் என்னும் தத்துவங்களாலும் உண்டாக்கப் படுகின்றது. ஜ்ஞாநேந்த்ரியம் ஐந்து, கர்மேந்த்ரியம் ஐந்து, மனம் ஒன்று ஆகிய பதினொன்று இந்த்ரியங்கள்; ரூபம், ரஸம், கந்தம், சப்தம், ஸ்பர்சம் ஆகிய ஐந்து விஷயங்கள் ஆகிய இவற்றுக்குச் சரீரம் இருப்பிடமாயிருக்கின்றது. இச்சை, த்வேஷம், ஸுகம், துக்கம் ஆகிய நான்கும் ஜீவனுடைய தர்மபூதஜ்ஞாநத்தின் விகாரமேயாயினும் ஜீவாத்மா சரீரத்தோடு சேருவதால் உண்டாவதால் சரீரத்தின் விகாரம் (மாறுபாடு) என்னப்படும். ஜீவன் ஸுகதுக்கங்களை அநுபவிப்பதற்கு உரிய இடமாயிருப்பதுவே சரீரத்தின் ப்ரயோஜநமாகும். ஐந்து பூதங்கள் கூடிய கூட்டமே சரீரமென்னப்படும்.

[உயிரின் பிரிவும்] சரீரத்திலுள்ள அவயவங்களில் ‘என் தலை’ ‘என் கை’ என்ற முறையில் தனித்தனி உறுப்பினையும், ‘என் சரீரம்’ என்ற முறையில் சரீரம் முழுவதையும்பற்றி ஜ்ஞாநம் உண்டாகிப் பின் ‘இதை நான் அறிகிறேன்’ என்று எண்ணமும் உண்டாகின்றது. இது என்பது அறியப்படும் வஸ்து. இந்த அறியப்படும் வஸ்துவைக் காட்டிலும் வேறுபட்டுநின்று அறிபவனான ஜீவன் க்ஷேத்ரஜ்ஞன் என்னப்படுவான்.

[உயிர் பெறுவார் ஞானம் பெறுவகையும்] சரீரத்தை விட்டுப் பரிசுத்தமாய்நிற்கும் ஆத்மாவின் ஸ்வரூபத்தை அறிவதற்குச் சில குணங்கள் அவசியமானவையாகும். அவையாவன:— 1 கல்வி, குலம், வைபவம் முதலியன தன்னிடம் நிறைந்திருப்பதுபற்றிப் பெரியோரை அவமதிக்கும்படியான கர்வமில்லாமை 2 சாஸ்த்ரங்களில் விதிக்கப் பட்டுத் தன்னுடைய கடமையென எண்ணிச் செய்யவேண்டிய தர்மங்களைத் தன்னைத் தார்மிஷ்டனெனப் பிறர் புகழவேண்டுமெனக் கருதிச்

செய்யாமை 3 மனம் வாக்கு தேஹம் ஆகிய முக்கரணங்களாலும் பிறருக்கும் தனக்கும் துன்பம் செய்யாமை 4 பிறர் தன்னைத் துன்புறுத்தினாலும் அவர்கள்மீது மனம் மாறுபடாமை 5 பிறர் விஷயத்தில் மனத்தில் ஒன்று, பேச்சில் வேறொன்று, செய்கையில் மற்றொன்று என்ற முறையில்லாமல் முக்கரணங்களாலும் ஒரேவிதமாயிருத்தல் 6 ஆத்மஸ்வரூபத்தைப்பற்றிய ஜ்ஞாநத்தை உபதேசிக்கும் ஆசார்யனிடத்தில் வணங்கி வழிபட்டு ஸந்தேஹங்களைக் கேட்டறிந்து பக்தியுடன் நெடுங்காலம் பணிவிடை செய்தல் 7 ஆசை முதலிய தோஷங்களால் மனம் அசுத்தமாகின்றது. பொய்பேசுவது முதலியவற்றால் வாக்குக்கு அசுத்தி உண்டாகின்றது. சாஸ்த்ரங்களில் விலக்கப்பட்ட பண்டங்களை உட்கொள்ளுவது முதலியவற்றால் தேஹம் அசுத்தமாகின்றது. இந்த) மூவகைக் குற்றமும் அற்று ஆத்மஜ்ஞாநத்தைப் பெறுவதற்கும் அதன் ஸாதநங்களை அநுஷ்டிக்கவும் உரியனாயிருத்தல். (இந்த உரிய தன்மை ப்ரத்யக்ஷம் முதலியவற்றாலன்றிச் சாஸ்த்ரத்தாலேயே அறியப்படவேண்டும்.) 8 வேதாந்தங்களில் கூறப்பட்ட தத்துவார்த்தங்களில் பிற மதத்தினரால் கலக்கமுறாதபடி ஸந்தேஹமற்று இருத்தல் 9 இயற்கையாக வெளிவிஷயங்களில் பட்டிபுகும் மனத்தை ஆத்மஸ்வரூபத்தைத் தவிர மற்றவற்றிலிருந்து திருப்புதல் 10 ஆத்மாவைத் தவிர மற்ற விஷயங்கள் (துக்கத்தால் ஸாதிக்கவேண்டியிருத்தல் துக்கம் கலக்கப்பெறுதல் அழியுந்தன்மை முதலிய) தோஷமயமாயிருப்பதை அடிக்கடி நினைந்து அவற்றில் ஈடுபட அஞ்சுதல் 11 சரீரத்தையே ஆத்மாவாக நினைப்பதாகிய சரீராத்மப்ரமமும், தன்னுடையதல்லாததைத் தன்னுடையதெனக் கருதுவதாகிய மமகாரமும் இல்லாதிருத்தல் 12 சரீரத்துடனிருக்கும்போது பிறப்பு, இறப்பு, கிழப்பருவம், நோய் இவற்றால் உண்டாகும் துன்பமாகிய தோஷம் விலக்கமுடியாதிருப்பதைப் பலகாலும் சிந்தித்தல் 13 ஆத்மாவைத் தவிரத் தன்னுடையனவாகத் தோற்றும் வஸ்துக்களில் பற்று இல்லாதிருத்தல் 14 புத்திரன் மனைவி வீடு முதலியவற்றில் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கர்மங்களுக்கு வேண்டியவளவு மாத்திரம் பற்றுக்கொண்டு மற்ற வகையில் அதிகப் பற்றில்லாதிருத்தல் 15 தன் ஸங்கல்பத்தால் வருகின்ற புத்திரன் மனைவி முதலிய விஷயங்களில் இஷ்டமான பலன்களால் மகிழ்ச்சியும் விரும்பத்தகாத பலன்களால் வருத்தமும் இல்லாது ஒரே மனப்பாங்குடனிருத்தல் 16 மற்றைத் தேவதைகளை விட்டு ஸர்வேசுவரனான கண்ணனிடமே நிலையான பக்திகொள்ளுதல் 17 ஜநங்கள் இல்லாத ஏகாந்தமான இடத்தில் வஸித்தல் 18 ஸத்துவ குணமில்லாத ஜநக்கூட்டத்தில் வெறுப்படைதல் 19 ஆத்மாவைப் பற்றிய ஜ்ஞாநத்தை இடைவிடாது பெற்றிருத்தல் 20 தத்துவ ஜ்ஞாநத்தை உண்டாக்கவல்ல சிந்தனையில் ஈடுபட்டிருத்தல்—என்பனவாம். இத்தகைய குணங்களே சேதநன் ஆத்மாவை ஸாக்ஷாத்கரிப்பதற்குச் சாதநமாகும்.

[ஞானமீன்ற உயிர்ப்பயனும்] கீழே கூறிய ஸாதநங்களால் ஸாக்ஷாத்கரிக்கவேண்டிய ஜீவனுடைய ஸ்வரூபம் பலவகைகளில் தெளிவுபடுத்தப்படுகின்றது — ஜீவாத்மாவுக்குப் பிறப்பும் இறப்பும் இல, எம்பெருமானுக்குச் சரீரமாதலின் அவனுக்கு அடியனாந் தன்மையே ஆத்மாவுக்கு இயற்கையாகும். சரீரத்திற்காட்டிலும் வேறுபட்ட ஜீவன் ஸம்ஸாரபந்தம் நீங்கிய நிலையில் சுருங்காத ஜ்ஞாநமுடையவனுவான். ஜீவஸ்வரூபம், சரீரம் இந்த்ரியம் முதலிய வற்றைப் பெற்றுக் காரியமாய் நிற்கும் நிலையில் 'ஸத்' என்றும், இவற்றைப் பெறாது காரணமாய்நிற்கும் நிலையில் 'அஸத்' என்றும் கூறப்படும். ஆனால் ஸம்ஸாரபந்தமின்றிப் பரிசுத்தமாய் நிற்கும் நிலைமையில் கர்மத்தால் ஏற்பட்ட அந்த இரண்டு நிலைமையுமில்லா திருப்பதுபற்றி ஆத்மஸ்வரூபம் ஸத் என்றும் அஸத் என்றும் கூறப்படாது. மேலும் பரிசுத்தமான நிலைமையில் ஜ்ஞாநமும் சக்தியும் சுருங்கப்பெறாது எம்பெருமானுக்குச் சமமாய்நிற்பதால் எங்கும் கை, கால், கண், தலை, முகம், காது ஆகிய இவற்றின் கார்யங்களைச் செய்யவல்லது; தன் தர்மபூதஜ்ஞாநத்தால் எல்லா வஸ்துக்களையும் வியாபித்துநிற்கும். பரிசுத்தமான ஆத்மஸ்வ ரூபத்திற்கு இந்த்ரியங்கள் இல்லாவிடினும் இந்த்ரியங்களின் தொழில்களைக்கொண்டு அது எல்லாவிஷயங்களையும் அறியத் தகுதியுடையது; இயற்கையாக இந்த்ரியங்களின் தொழில் களின்றியே எல்லாவற்றையும் அறியக்கூடியது; இயற்கையாய்த் தேவர் மனிதர் முதலிய சரீரத்தில் ஸம்பந்தமில்லாதிருப்பது: ஆனால் அத்தகைய சரீரத்தைத் தாங்கிநிற்கச் சக்தியுடையது; இது கர்ம ஸம்பந்தத்தால் ஸத்துவம் முதலிய குணங்களை அநுபவிக்கும்; பரிசுத்த மான நிலைமையில் அநுபவிக்கும் சக்தியை எப்போதும் பெற்றிருக்கும். பரிசுத்தனான ஆத்மாவுக்குச் சரீரம் கிடையாதாதலின் சரீரத்திற்கு வெளியே இருக்கின்றது; முக்தனான நிலைமையில் இஷ்டப்படி உரு வத்தை எடுத்துக்கொள்ளும்போது சரீரத்திற்கு உள்ளும் இருக்கின் றது. இயற்கையாகக் காலால் நடக்க வல்லமையற்றது; சரீரத்துடன் இருந்தால் காலால் நடக்கவல்லது. ஜீவாத்மா சரீரத்திற்குள் இருந்த போதிலும் மிகச் சூக்ஷ்மமாதலின் தேஹத்திற்காட்டிலும் வேறுபட்ட தென ஸம்ஸாரிகளால் அறியமுடியாது. ஆத்மாவை ஸாக்ஷாத்கரிப்ப தற்குச் சாதனமாகக் கீழே கூறிய நற்குணங்களைப் பெறாது தீயகுணங் களுள்ளவருக்குத் தம் தேஹத்திலிருந்தாலும் ஆத்மஸ்வரூபத்தை அறியமுடியாது. அத்தகைய நற்குணங்களைப் பெற்றவருக்குச் சமீபத்திலேயே இருந்து ஸாக்ஷாத்கரிக்க உரியது. ஜீவன் சரீரத்தைத் தாங்கிநிற்பதாலும் அந்நம் முதலியவற்றை உண்பதாலும் தாங்கப்படும் சரீரத்திற்காட்டிலும் உண்ணப்படும் அந்நத்திற்காட்டிலும் வேறு பட்டவனாக அறியலாம். அந்நம் முதலியவற்றை உண்டபிறகு அவை பலவகையாய் மாறுபாட்டை அடையும்போது ரேதஸ் கர்ப்பம்

முதலியனவாகவும் ஆவதற்கு ஜீவனே காரணமாவான். ஆதலின் மாறுபடும் வஸ்துவைக் காட்டிலும் மாறுபாட்டுக்குக் காரணமான ஜீவன் வேறுபட்டவனே. தீபம் ஸூர்யன் ரத்நம் முதலிய தேஜஸ்ஸுக்களைக்கூட ஆத்மாவே தர்மபூதஜ்ஞாநமென்ற குணத்தைக்கொண்டு ப்ரகாசிப்பிக்கின்றது; ப்ரக்ருதியைக்காட்டிலும் வேறுபட்டு அதை அநுபவிக்கக்கூடியதாதலின் முக்கியமாய் நிற்கக்கூடியது; ஜ்ஞாநஸ்வரூபமாகவே அறியப்படுவது; எல்லாப் பிராணிகளுடைய ஹ்ருதயத்திலும் தான் நேராகவும் மற்ற அவயவங்களில் தர்மபூதஜ்ஞாநத்தாலும் இருப்பது. இத்தகைய ஆத்மஸ்வரூபத்தைக் கீழ்க்கூறிய 20 குணங்களாகிய ஸாதநங்களால் ஸாக்ஷாத்கரிக்கலாம்.

[ஊன் நின்றதற்கடியும்] தேவர் மனிதர் முதலிய சரீரங்கள் ப்ரக்ருதியின் மாறுபாடேயாகும். அந்தச் சரீரங்களில் ஜீவன் இருப்பதால் அச்சரீரத்தின் ஸம்பந்தத்தால் ஏற்பட்ட ஸத்துவம் முதலிய குணங்களால் வரும் ஸுகதுக்கங்களில் ஜீவனுக்குப் பற்று உண்டாகின்றது. துக்கத்திலும் பற்று உண்டாகக் காரணம் துக்கத்தை ஸுகமென மயங்குவதேயாம். அதன் பின் ஜீவன் அதற்குச் சாதனமாயுள்ள புண்யபாபங்களைச் செய்கின்றான். பின் அந்தப் புண்ணியபாபங்களின் பலனை அநுபவிக்கச் சிறந்த அல்லது தாழ்ந்த பிறவிகளில் அவனது கர்மத்திற்கேற்றவாறு பிறக்கின்றான்; பின் மறுபடியும் கர்மத்தைச் செய்கின்றான்; மறுபடி பிறக்கின்றான். கீழ்க்கூறிய 20 குணங்களைப் பெற்று அதனால் ஆத்மஸாக்ஷாத்காரம் பெறும்வரை ஜீவன் இவ்வாறு ஸம்ஸாரக்கடலில் சுழன்றுகொண்டேயிருப்பான். ஆகவே ஸத்துவம் முதலிய குணங்களால் ஏற்படுகின்ற ஸுகதுக்காதிகளில் பற்று வைப்பதே ஸம்ஸாரபந்தத்திற்குக் காரணமாகும்.

[உயிர் வேறிடுமுள்விரகும்] உலகத்திலுள்ள அசையாப்பொருள் அசையும்பொருள் ஆகிய எல்லாம், சரீரமும் ஜீவனும் ஒன்றுசேர்ந்தே பிறந்தவையாகும். அவற்றில் ஜீவன் தேவனாயிருத்தல் மனிதனாயிருத்தல் முதலிய சரீரத்தின் தன்மைகளைப் பெறமாட்டான்; அந்த அந்தத் தேஹம் இந்த்ரியம் மனம் ஆகிய இவற்றுக்குத் தலைவனாயிருக்கின்றான். இத்தகைய ஆத்மாவை ஜ்ஞாநமுடையவனாயிருத்தல் ஜ்ஞாநமாகவேயிருத்தல் என்ற வகையில் ஒரேவிதமாக இருப்பவனாகவும், சரீரம் அழிந்தபோதிலும் அழியாதவனாகவும் அறியவேண்டும். சேதநன் நீட்டி முடக்கிச் செய்யும் செய்கைகள் அனைத்தையும் ப்ரக்ருதியால் செய்யப்படுவனவாகவே கருதவேண்டும். ஜ்ஞாநஸ்வரூபனாகவே இருக்கும் ஆத்மா, கர்மங்களைச் செய்யும் கர்த்தாவாகமாட்டானென்று அறியவேண்டும். ஜீவனுக்கு ப்ரக்ருதியின் ஸம்பந்தம், சரீரத்தில் தலைவனாய்நின்று அதை வேலையில் ஏவுதல், அதனால் உண்டாகும் ஸுகதுக்கங்களை அநுபவித்தல் ஆகியவையெல்லாம் கர்மத்தால் ஏற்பட்டவையென்று உணரவேண்டும். தேவத்தன்மை-மனிதத்தன்மை குறுமை-நெடுமை முதலிய தன்மைகள் சரீரத்தைப்பற்றியனவென்றும்

ஆத்மாவைப்பற்றியனவல்லவென்றும் உணரவேண்டும். சேதநனுக்குப் புத்திரன் பேரன் முதலிய மாறுபாடுகள் ஏற்படுவதெல்லாம் ப்ரக்ருதியினாலேயேயன்றி ஜீவனுக்கு அதில் ஸம்பந்தமில்லை; ஜீவன் மற்றொன்றால் உண்டாக்கப்படாமையால் அழிவற்றவன்; ஸத்துவம் முதலிய குணங்கள் ஆத்மாவில் இல்லையாதலின் ஒரு கார்யத்திலும் கர்த்தாவாக ஆகாமலும், சரீரத்தில் இருக்கும்போதும் அதிலுள்ள தோஷங்கள் தன்னிடம்சேரப்பெறாமலும் ஜீவன் நிற்கின்றான் ஆகாயம் எல்லா வஸ்துக்களோடும் சேர்ந்திருந்தபோதிலும் மற்ற வஸ்துக்களைக் காட்டிலும் அது ஸூக்ஷ்மமாயிருப்பதால் அந்த அந்த வஸ்துவின் குணமோ தோஷமோ அதில் சேருவதில்லை. அவ்வாறே ஆத்மஸ்வரூபம் தேவர்-மனிதர் முதலிய எல்லாத் தேஹங்களிலும் இருப்பினும் ஆகாயத்தைக்காட்டிலும் மிகச் சூக்ஷ்மமானதாயிருத்தலால் சரீரத்தின் குண தோஷங்கள் ஆத்மாவில் சேருவதில்லை. ஒருவனை ஸூர்யன் தன் பிரகாசத்தால் எல்லாவுலகங்களையும் ப்ரகாசிக்கச்செய்வதுபோல் ஜீவன் உள்ளும் புறமும் கால்முதல் தலைவரையிலும் சரீரம் முழுதையுமே தன்னுடைய ஜ்ஞாநத்தாலே ப்ரகாசிக்கச் செய்கிறான். ஆகவே பல அவயவங்களின் கூட்டமாகிய சரீரத்திற்காட்டிலும், அதை முழுவதும் ஒருவனாய்நின்று அறிபவனாகவிருக்கும் ஜீவாத்மா வேறுபட்டவனென்று ஸித்தித்தது.

இவ்விஷயங்களைப் பதின்மூன்றாவது அத்யாயத்தில் கண்ணன் அர்ஜுநனுக்கு உபதேசித்தான்—என்றவாறு.

'வகையுஞ்ஞானம்' 'அடியும்முயிர்' – ஞகர-மகரங்கள் விரிந்தது செய்யுள்விகாரம். *14*

देहस्वरूपमात्माप्तिहेतुरात्मविशोधनम् ।
बन्धहेतुर्विवेकश्च त्रयोदश उदीर्यते ॥ 71

14-வது அத்யாயத்தின் ஸாரம்-விளக்கம்

340 முக்குண மேயுயிர் முற்றவுங் கட்டிட மூண்டமையு
முக்குண மேயனைத் தும்வினை கொள்ள முயன்றமையு
முக்குண மாயை கடத்தலு முக்கதி தந்தளிப்பு
முக்குண மற்ற பிரான்மொழிந் தான்முடி யோன்றனக்கே. 15

உரை :— முக்குணம் அற்ற பிரான் - மூன்று குணங்களுமில்லாத எம்பெருமான், முடியோன்தனக்கு – கிரீடமணிந்த அர்ஜுநனுக்கு, முக்குணமே - (ஸத்துவம் ரஜஸ் தமஸ் என்னும்) மூன்று குணங்களுமே, உயிர் முற்றவும் – ஜீவாத்மாக்கள் அனைத்தையும், கட்டிட – (ஸம்ஸாரத்தில்) அகப்படச்செய்வதற்கு, மூண்டமையும் – முயன்றமையும், முக்குணமே – அந்த மூன்று குணங்களுமே, வினை அனைத்தும் கொள்ள – செய்கைமுழுவதையும் (தம்மால் செய்யப்படுவனவாகக்) கொள்ள, முயன்றமையும் – முயற்சிகொண்டமையும், முக்குண மாயை –

மூன்று குணங்களாலாகிய ப்ரக்ருதிஸம்பந்தத்தை, கடத்தலும் – நீக்கிக்கொள்வதும், முக்கதி – (ஐசுவர்யம் கைவல்யம் மோக்ஷம் ஆகிய) மூன்று கதிகளையும், தந்து அளிப்பும் – கொடுத்துக் காக்கும்விதமும் (ஆகிய இவற்றை), மொழிந்தான் – உபதேசித்தான்.

[முக்குணமே........மூண்டமையும்]

ஸத்துவகுணம் வஸ்துக்களின் உண்மையை அறிவதற்கும், ஸுகத்தை அநுபவிப்பதற்கும், ஆரோக்கியத்தைப் பெறுவதற்கும் காரணமாகும். இந்த ஸத்துவகுணம் ஜீவனுக்கு ஜ்ஞானத்திலும் ஸுகத்திலும் பற்றுதலை உண்டாக்குகின்றது. அந்தப் பற்றினல் ஜீவன் அவற்றுக்கு ஸாதநமான லௌகிக–வைதிககர்மங்களைச் செய்கின்றான்; பின் அவற்றின் பலனை அநுபவிப்பதற்கு ஸாதநமான பிறவிகளில் பிறக்கின்றான். ஆக, ஸத்த்வகுணம் ஜீவனுக்கு ஸுகத்திலும் ஜ்ஞானத்திலும் பற்றை உண்டாக்குவதன் மூலம் ஜீவனை ஸம்ஸார பந்தத்தில் அகப்படச்செய்கின்றது.

ரஜோகுணம் ஆண் பெண் இருபாலருக்கும் ஒருவருக்கொருவர் காதலை உண்டாக்குகின்றது; சப்தம் முதலிய ஸகலவிஷயங்களிலும் ஆசையையும், புத்திரன் நண்பன் முதலியவர்களிடம் சேர விருப்பத்தையும் தருகின்றது. சேதநன் கார்யங்களைச் செய்ய ஆவல்கொண்டு பின் அவற்றைச் செய்கின்றான். அச்செய்கைகள் பாபமாகவோ புண்யமாகவோ இருந்து அவற்றின் பலனை அநுபவிப்பதற்குச் சாதனமான பிறவிகளில் பிறக்கச்செய்கின்றன. ஆகவே செய்கையில் பற்றுதலை உண்டாக்கி அதன்மூலமாய்ப் பிறவியைக் கொடுத்து ரஜோகுணம் ஸம்ஸாரபந்தத்தை ஜீவனுக்குத் தருகின்றது.

தமோகுணம் வஸ்துக்களின் உண்மையை அறியாது விபரீதமாய் அறிவதால் பாபம் செய்ய நேரிட்டு அதனால் உண்டாகின்றது. அக்குணத்தால் மறுபடியும் விபரீதஜ்ஞாநம் உண்டாகின்றது. இந்தத் தமோகுணம், ஜீவனுக்குச் செய்யவேண்டிய கடமையை விட்டு மற்றைக் கார்யத்தில் ப்ரவர்த்திக்கக் காரணமான அஜாக்ரதையையும், கார்யம் செய்யாமலிருக்கும்படியான சோம்பலையும், இந்த்ரியங்களை விஷயங்களிற் செலுத்திச்செலுத்தி அவையனைத்தும் களைப்படைந்தபோது ஓய்ந்துநிற்பதாகிய தூக்கத்தையும் ஸ்வப்நத்தையும் கொடுத்து அதன் மூலமாய் ஸம்ஸாரபந்தத்தைத் தருகின்றது.

[முக்குணமே...........முயன்றமையும்] ஜீவன் இயற்கையாகப் பரிசுத்தனாயிருப்பவன்; செய்யுந்தன்மை (கர்த்ருத்வம்) இல்லாதவன்; ஜ்ஞாநஸ்வரூபமாக இருப்பவன்; இத்தகைய ஆத்மாவுக்குப் புண்ய பாபங்கள் முதலிய கர்மங்களில் கர்த்ருத்வம் இயற்கையில் இல்லை, ஸத்துவம் முதலிய குணங்களின் ஸம்பந்தத்தால் வருகின்றது. குணங்களின் ஸம்பந்தம் முந்திய கர்மாவினால் ஏற்படுகின்றது. உண்மையில் கர்த்ருத்வம், ஸத்துவம் முதலிய மூன்று குணங்களுக்கே உளது.

[முக்குண மாயை கடத்தலும்] வேறு தேவதையை மனத்தால் கூட நினைக்காமல் பக்தியோகத்தால் எம்பெருமானையே உறுதியாக உபாஸிப்பவன் இந்த ஸத்துவம் முதலிய குணங்களின் ஸம்பந்தம் நீங்கப்பெறுவான்.

[முக்கதி தந்தளிப்பும்] எம்பெருமானிடம் பக்திக்கு அங்கமான ப்ரபத்தியை அநுஷ்டித்துப் பின் பக்தியோகத்தையும் அநுஷ்டிப்பவன், நெடுங்காலம் அநுபவிக்கப்படுவதும் இந்த்ரன் ப்ரஹ்மா முதலியவர்களின் போகத்திற்காட்டிலும் மிக மேம்பட்டதுமான ஐசுவர்யத்தையும், ஈசுவரனைப்போல் பரிசுத்தமான ஆத்மாவை அநுபவிப்பதாகிய கைவல்யத்தையும், எம்பெருமானை இடைவிடாது அநுபவித்து நித்யகைங்கர்யம் செய்வதாகிய மோக்ஷத்தையும் எம்பெருமானிடமிருந்து பெறுவான்.

இவ்விஷயங்களைப் பதினான்காவது அத்யாயத்தில் கண்ணன் அர்ஜுநனுக்கு உபதேசித்தான்—என்றவாறு.

'கிரீடி' என்று அர்ஜுநனுக்கு வடமொழியிலுள்ள பெயரை நினைத்து 'முடியோன்' என்னலாயிற்று. *15*

गुणबन्धविधा तेषां कर्तृत्वं तन्निवर्तनम् ।
गतित्रयस्वमूलत्वं चतुर्दश उदीर्यते ॥ 18

15-வது அத்யாயத்தின் ஸாரம்—விளக்கம்

341 மூவெட் டினுமதின் மோக மடைந்த வுயிர்களினு
நாவெட் டெழுத்தோடு நல்வீடு நண்ணின நம்பரினு
மேவெட்டு வன்குண விண்ணோர் களினும் விசயனுக்குத்
தாவிட் டுலகளந் தான்றனை வேறென்று சாற்றினனே. 16

உரை:— தாவிட்டு உலகு அளந்தான் – (த்ரிவிக்ரமாவதாரத்தில்) தாவி உலகத்தை அளந்த எம்பெருமான், விசயனுக்கு – அர்ஜுநனுக்கு, மூவெட்டினும் – இருபத்துநான்கு தத்துவங்களாகிய ப்ரக்ருதியிற்காட்டிலும், அதில் மோகம் அடைந்த – அந்த ப்ரக்ருதியின் ஸம்பந்தத்தால் அஜ்ஞாநத்தைப் பெற்றுள்ள, உயிர்களினும் – (பத்த) ஜீவர்களைக்காட்டிலும், நா எட்டு எழுத்தொடு – நாவினால் உச்சரிக்கப்படவேண்டிய திருவஷ்டாக்ஷரத் (தின் அநுஸந்தாநத்)தால், நல் வீடு நண்ணின – சிறந்த மோக்ஷத்தைப்பெற்ற, நம்பரினும் – உயர்ந்தவர் (களான முக்தர்) களைக்காட்டிலும், மேவு எட்டு வன் குண விண்ணோர்களினும் – பொருந்திய எட்டு வலிய குணங்களையுடைய நித்யஸூரிகளிற்காட்டிலும், தன்னை வேறு என்று – தன்னை வேறுபட்டவன் என்று, சாற்றினன் – உபதேசித்தான்.

[மூவெட்டினும்] ப்ரக்ருதி, மஹான், அஹங்காரம், ஜ்ஞாநேந்த்ரியங்கள் ஐந்து, கர்மேந்த்ரியங்கள் ஐந்து, மனம், பூதங்கள் ஐந்து, தந்மாத்ரங்கள் ஐந்து ஆக இருபத்துநான்குதத்துவங்களையும் தனக்குச் சரீரமாகக்கொண்டுள்ள எம்பெருமான் அந்தத் தத்துவங்களின் வேறுபட்டு நிற்கின்றான்.

[அதில் மோகமடைந்த உயிர்களினும்] ப்ரக்ருதியின் ஸம்பந்தம் நீங்காது ஸம்ஸாரமண்டலத்திலேயே உழன்று கர்மபலன்களை அநுபவித்துக்கொண்டிருப்பவர் பத்தரெனப்படுவர்.

[நாவெட்டெழுத்தொடு............நம்பரினும்] ஸம்ஸாரத்திலே முதலில் அல்லல்பட்டுப் பின் நல்வழிப்பட்டுத் திருவஷ்டாக்ஷரம் முதலிய ரஹஸ்யார்த்தங்களை அறிந்து உபாயத்தை அநுஷ்டித்து முக்தியை அடைந்தவர் முக்தரெனப்படுவர்.

[மேவெட்டு..............விண்ணோர்களினும்] ஒருகாலும் ஸம்ஸார பந்தமின்றி எம்பெருமானைப்போலவே பிறப்பும் இறப்பும் இல்லாது எப்பொழுதும் எட்டுக் குணங்கள் விளங்கப்பெற்று ஜ்ஞாநம் சுருங்காதுநிற்பவர் நித்யரெனப்படுவர். (எட்டுக் குணங்களின் விளக்கத்தை 84-வது பாசுரத்தின் உரையிற் காண்க.) எம்பெருமான் கீழ்க்கூறிய அசேதநப்பொருள்களினும் இங்ஙனே மூவகைச் சேதநப் பொருள்களினும் வேறுபட்டு அவற்றுள் அந்தர்யாமியாயிருந்து அவற்றைத் தாங்கிநின்று அவ்வனைத்துக்கும் ஈசுவரனாய் விளங்குகின்றான். இவ்வம்சங்களால் ச்ருதி-ஸ்ம்ருதிகளில் புருஷோத்தமன் என்று புகழப்படுகின்றான்.

இவ்வம்சங்களைப் பதினைந்தாவது அத்யாயத்தில் கண்ணன் அர்ஜுநனுக்கு உபதேசித்தான்—என்றவாறு. 16

अचिन्मिश्राद्विशुद्धाच्च चेतनात् पुरुषोत्तमः ।
व्यापनाद्भरणात् स्वाम्यादन्यः पञ्चदशोदितः ॥ 19

16-வது அத்யாயத்தின் ஸாரம்—விளக்கம்

342 ஆணை மருதவர் தேவரல் லாவழக் கோரசுரர்
கோணை மராத குணச்செல்வ நீகுறிக் கோண்மறையைப்
பேணிய தத்துவ மும்பிணி யற்ற கிரிசைகளுங்
காணித னல்விச யாவென்று கண்ண னியம்பினனே. 17

உரை:— கண்ணன் - கண்ணன், விசயா - அர்ஜுநனே!, ஆணை - (என்னுடைய) ஆஜ்ஞையை, மருதவர் – மறுக்காதவர், தேவர் – தேவர்கள் (ஆவர்); அல்லா வழக்கோர் - அப்படியல்லாத (என்னுடைய கட்டளையை மீறுகின்ற) நடையுடையவர், அசுரர் – அஸுரராவர். கோணை மராத - வக்ரத்தன்மை கலவாத, குணச்செல்வ - குணமாகிய

செல்வத்தையுடையவனே!, நீ மறையைக் குறிக்கொள் – நீ வேதத்தையே ஆதாரமாகக்கொள்வாயாக; பேணிய – கொண்டாடப் படுகின்ற, தத்துவமும் – பரதத்துவமும், பிணி அற்ற –(பலனில் பற்று வைப்பதாகிய) தீங்கு இல்லாத, கிரிசைகளும் – கர்மங்களும் (ஆகிய இவற்றை), இதனால் – இந்த வேதத்தால், காண் என்று – அறிந்து கொள் என்று, இயம்பினன் – உபதேசித்தான்.

கீழ் மூன்று அத்யாயங்களால் சேதநம் அசேதநம் ஈசுவரன் என்னும் மூன்று தத்துவங்களின் தன்மை முதலியன விளக்கப்பட்டன. இனி மூன்று அத்யாயங்களால் அநுஷ்டாநத்தைப்பற்றிய விஷயங்கள் முதலியன விளக்கப்படுகின்றன. இவ்வனைத்திலும் உறுதி சாஸ்த்ரங்களாலேயே ஏற்படவேண்டும். மனிதர் இத்தகைய சாஸ்த்ரங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். ஆகவே இவ்வத்யாயத்தில் தேவர் அஸுரர் என்ற பிரிவுகூறிச் சாஸ்த்ரத்திற்குக் கட்டுப்படுந்தன்மை கூறப்படுகின்றது—

[ஆணைமருதவர் தேவர்] எம்பெருமானுடைய கட்டளையாகிய சாஸ்த்ரங்களைத் தழுவிநடப்பவர் தேவர் எனப்படுவர். அவர் அவ்வாறு நடப்பதே தெய்வீகமான செல்வமெனப்படும். அத்தகைய செல்வமுள்ளவருக்குச் சில குணங்கள் உண்டாகும். அவையாவன–1 பின்வரும் துன்பத்திற்கு முன்வரும் காரணத்தைக் கண்டதனால் உண்டாகும் உணர்ச்சி பயமெனப்படும். அது இல்லாதிருத்தல் 2 ரஜஸ் தமஸ் என்னும் குணங்களோடு மனம் கலவாது சுத்தமாயிருத்தல் 3 ஸம்ஸார ஸம்பந்தமின்றி நிற்கும் பரிசுத்தமான ஆத்மஸ்வரூபத்தைப்பற்றிய விவேகத்தில் நிலைபெற்றிருத்தல் 4 ந்யாயமான வழியில் ஸம்பாதித்த பொருளைத் தக்க பாத்திரத்தில் கொடுத்தல் 5 சப்தம் முதலிய விஷயங்களில் மனம் செல்லாதிருக்குமாறு பழக்குதல் 6 பலனைக் கருதாமல் பகவானுக்கு ஆராதநரூபமாய் நித்ய–நைமித்திக கர்மங்களைச் செய்தல் 7 ஸர்வேசுவரனை எம்பெருமானையும் அவனை ஆராதிக்கும் முறைகளையும் வேதம் முழுதும் விளக்குகின்றதென்று நினைத்து வேதாப்யாஸம் செய்தல் 8 பகவானை மகிழ்விக்கச் செய்யும் கர்மங்களை அநுஷ்டிப்பதற்குத் தமக்கு அதிகாரத்தைத் தரும் க்ருச்சிரம் சாந்த்ராயணம் ஏகாதசியுபவாஸம் முதலிய வ்ரதங்களை அநுஷ்டித்தல் 9 பிறர்விஷயத்தில் மனம் வாக்கு தேஹம் ஆகிய முக்கரணங்களின் செய்கையும் ஒரேவிதமாயிருத்தல் 10 தம்மையும் பிறரையும் துன்பப்படுத்தாதிருத்தல் 11 ப்ராணிகளுக்கு நன்மையாயுள்ள, தாம் கண்ட விஷயங்களை உள்ளபடி உரைத்தல் 12 பிறருக்குத் துன்பம் விளைவிக்கும்படியான மனமாற்றமில்லாதிருத்தல் 13 தம்முடைய நன்மைக்கு எதிரான வஸ்துக்களைக் கைவிடுதல் 14 வெளியிந்த்ரியங்களை அற்பவிஷயங்களில் செல்லாதபடி தடுத்துப் பழக்கம் செய்தல் 15 பிறருக்குத் தீங்கு விளைவிக்கும் வார்த்தைகளைப் பிறரிடம் தெரிவியாதிருத்தல் 16 பகைவன் நண்பன் என்ற பாகுபாடின்றி ஸகல ப்ராணி

களுடைய துக்கத்தையும் பொறுக்காது அதைப் போக்க விரும்புதல் 17 தகாத சப்தம் முதலிய விஷயங்களில் ஆசையற்றிருத்தல் 18 ஸாது ஜநங்களோடு சேர்ந்திருக்க உரியராயிருத்தல் 19 செய்யத் தகாத கார்யங்களைச் செய்வதில் வெட்கமடைதல் 20 ஆசைப்படுதற்குரிய விஷயங்களைக் கண்டும் மனம் சலியாமை (விளையாட்டு, பரிஹாஸம், வேட்டை, சூதாட்டம் முதலியவற்றில் ஈடுபடாமையும் இதனுள் அடங்கும்) 21 துஷ்டர்களால் அவமதிக்கப்படும்படி கோழையாயில்லா திருத்தல் 22 பிறரால் துன்பமடைந்தாலும் அவர் விஷயத்தில் மனம் மாறுபடாதிருத்தல் 23 பெரிய ஆபத்து வந்திடினும் சாஸ்த்ரீயங் களான கர்மங்களைச் செய்வதில் உறுதி குலையாதிருத்தல் 24 சரீரம் வாக்கு மனம் இவற்றுக்கு அசுத்தமான புருஷனுடைய ஸம்பந்தம் அசுத்தமான வஸ்துக்களை உபயோகிப்பது முதலியவற்றால் அசுத்தம் ஏற்படுவதால் கர்மங்களைச்செய்ய உரிமையில்லாது போம், அங்ஙன் வராது பாதுகாத்தல். இவ்வுரிமை சாஸ்த்ரத்தாலேயே அறியப்படும். 25 பிறர் தம் தம் இஷ்டப்படி நடப்பதைத் தடுக்காதிருத்தல் 26 தகாத விஷயத்தில் கர்வம் கொள்ளாதிருத்தல்; என்பனவாம்.

[அல்லா வழக்கோர் அசுரர்] எம்பெருமானுடைய ஆஜ்ஞை யாகிய சாஸ்த்ரங்களை மீறிநடக்கும் தன்மையுடையர் அஸுரர் எனப்படுவர். அவர் அவ்வாறு நடப்பதில் மிக ருசியுடை யராவதுபற்றி அங்ஙனம் நடப்பதும் செல்வமெனப்படுகின்றது. அவர்கள் எத்தன்மையராயிருப்பவரென்பது விளக்கப்படு கின்றது — அவர்கள் எம்பெருமானுடைய கட்டளைப்படி நடப்பதென்ற எண்ணமில்லாமல் தம்மைத் தார்மிஷ்டரென்று பிறர் புகழவேண்டுமென விரும்பித் தர்மங்களைச் செய்வார்கள்; உலகஸுகங்களை அளவுக்கு மீறி அநுபவித்து மகிழ்ந்து, செய்யத் தக்கது தகாதது என்ற விவேகத்தை இழப்பர். அவர்களுக்கு ஆசார் யனையும் பகவானையும் ஸேவிப்பது முதலியவற்றால் மகிழ்ச்சி உண்டா வதற்கு இடமேயில்லை; தம் கல்விக்கும் குலப்பிறப்புக்கும் வீர்யத் திற்கும் ஏற்றவாறின்றி அளவுக்கு மீறிக் கர்வமடைவர்; பிறருக்குத் துன்பம் விளைக்கக்கூடிய மனப்பாங்கையுடையராய், ஸாதுக்களும் சாஸ்த்ரங்களும் விலக்கும்படியான ஸ்வபாவமுடையராயிருப்பர்; பிற ஆகமங்களில் பரதத்துவத்தையும் தாழ்ந்த தத்துவத்தையும் மாறுபடச் சொல்லியிருப்பதை நம்பியதாலும் வேதத்திற்கு விபரீதமான ஆசாரங் களைக் கைக்கொண்டதாலும் மேம்பட்ட தத்துவம்—கீழ்ப்பட்ட தத்து வம், செய்யத்தக்கது—தகாதது ஆகியவற்றில் விவேகமில்லாதிருப்பர்; ஸ்வர்க்கம் முதலிய பலனுக்கும் மோக்ஷத்திற்கும் ஸாதநமாய் வேதங் களில் விதிக்கப்பட்ட தர்மங்களைப் பலகாலும் அவர்களுக்கு எடுத்துப் போதித்தாலும் தமோகுணத்தின் மிகுதியால் அவர்கள் அறியமாட் டார்கள். வைதிககர்மங்களைச் செய்யச் சாஸ்த்ரங்களால் ஏற்படுகின்ற அதிகாரம் பாஹ்யம் என்றும் ஆந்தரம் என்றும் இருவகைப்படும்

அவர்களிடம் அசுத்தப் பழக்கத்தாலும் அவசியம் செய்யவேண்டிய கர்மங்களைச் செய்யாததாலும் பாஹ்யமான சுத்தியில்லை; ஆத்மகுண மில்லாமையால் ஆந்தரமான சுத்தியும் அவர்களிடம் இல்லை. அவ்வதி காரத்தைத் தரக்கூடிய ஸந்த்யாவந்தநம் முதலிய ஆசாரமும் அவர் களிடம் கிடையா. வஞ்சனையையும் ஹிம்ஸையையும் இயற்கையாகக் கொண்டவர்களாதலின் தாம் கண்டபடி ப்ராணிகளுக்கு நன்மையைக் கூறுவதாகிய ஸத்யம் அவர்களிடம் இலது. இவ்வுலகம் ப்ரஹ்மத்தி னிடமிருந்து உண்டாவதால் ப்ரஹ்மஸ்வரூபமாகுமென்று அவர் கொள்வதில்லை. இவ்வுலக முழுதும் ப்ரஹ்மத்தால் தாங்கப்படுகின்ற தென்பதையும் அவர்கள் ஏற்பதில்லை. இவ்வுலகமுழுதும் ஸர்வேசு வரனுக்கு அடங்கியதென்றும் அவர்கள் கூறுவதில்லை; ப்ரஹ்மா சிவன் முதலியவர்களை ஸர்வேசுவரனாகக் கற்பித்துக் கூறுவர். ஆணும் பெண்ணும் கூடுவதால் மநுஷ்யன் பசு முதலிய பிறவி ஏற்படுகின்ற தென்றும் இங்ஙனமல்லாத பிறவியே இல்லையென்றும் ஆகையால் உலக முழுதும் காமத்தையே காரணமாகக் கொண்ட தென்றும் நினைப்பர். இங்ஙனம் விபரீத ஜ்ஞாநத்தைக் கொண்டவர்களாய், அறியப்படுகின்ற சரீரத்திற்காட்டிலும் அறிபவனான ஆத்மா வேறு என்று அறியமாட்டார்; தம் கொள்கைகளால் தம்மையும் தம் முடன் சேரும் பிறரையும் கெடுப்பர்; பெறமுடியாத வஸ்துவைப் பலனு கக் கருதிப் பெற விரும்பி அதற்காகக் களவு முதலிய அநியாயமான வழியில் பொருள் ஸம்பாதிப்பர்; இன்றோ நாளையோ மரிக்கப்போகும் அவர்கள் ப்ரளயகாலம்வரை செய்து முடிக்கவேண்டிய கார்யங்களைப் பற்றிக் கவலைகொள்வர்; காமபோகமேயன்றி வேறு பரமபுருஷார்த் தம் இல்லையென்று துணிவுகொண்டிருப்பர்; ஆசையாகிய நூற்றுக் கணக்கான பாசங்களால் பிணைக்கப்பட்டுக் காமம் கோபம் இவற்றுக்கு வசப்பட்டு, அநியாயமான வழியால் பொருளைச் சம்பாதிக்க விரும்புவர். மோக்ஷத்திற்கு ஸாதநமான பரமபுருஷனுடைய ஆராதநத்தில் கொள்ளவேண்டிய சிரத்தை அவர்களுக்கு அநர்த்தத்தைத் தருவதும் மிக அற்பமாயுள்ளதும் க்ஷணகாலமே நிற்பதுமான ஒரு ஸுகாபாஸ விஷயத்தில் ஏற்படும். தம்முடைய ஜ்ஞாநம், சக்தி, பொருள், குலம் முதலியவற்றைப்பற்றிப் பெருமிதம் கொள்வர். ஈசுவரன் அத்ருஷ்டம் இவற்றின் உதவியின்றிக் கார்யம் செய்யக் கருதுவர்; தங்களைத் தாங்களே கொண்டாடிக்கொள்வர்; எல்லாவற்றையும் தாமே செய்வதாகக் கருதிக் கடைசியில் ஒன்றும் செய்யாதிருப்பர். இத்தகைய அஸுரத்தன்மையுடையவர்களைப் பகவான் எப்பொழுதும் நரகத்தில் தள்ளுகிறான்.

[கோளை மராத குணச் செல்வ] கண்ணன் இவ்வாறு தேவர் அஸுரர் எனப் பிரித்து அவர்களின் தன்மைகளை விளக்கியதும் அர்ஜுநன் தான் எவ்வகையில் சேர்ந்தவனோவென்று நிச்சயமில்லாது, மறுபடியும், அபாரமான ஸம்ஸாரக் கடலுள் மூழ்க

வேண்டுமோவென மிக அஞ்சினுன். கண்ணன் அதைக் கண்டு 'நற்குணமாகிய தெய்வீகச் செல்வமுடைய பாண்டுபுத்திரனே!' என்று விளித்து, 'தார்மிகர்களுள் தலைசிறந்த பாண்டுவின் புத்திரனுன நீ அஸுரத்தன்மையுடையனுகமாட்டாய்' என்று உணர்த்தி அவனது அச்சத்தைப் போக்கி மேலும் பேசுகின்றுன்.

[மறையை நீ குறிக்கொள், பேணிய............இதனுல் காண்] ஆகவே, கைக்கொள்ளத்தக்கவை விலக்கத்தக்கவை என்று பிரித்தறிவதற்குச் சாஸ்த்ரமே கைவிளக்காகவேண்டும். தர்ம சாஸ்த்ரம் இதிஹாஸம் புராணம் சிஷ்டாசாரம் ஆகிய இவற்றின் உதவியால் அர்த்தம் நிச்சயிக்கப்பட்ட வேதங்களைக்கொண்டு எம்பெருமாஞகிய தத்துவத்தையும், அவனை மகிழச்செய்வனவாய் அவனைப் பெறச் சாதநமாய்ப் பலனில் பற்று இல்லாமல் செய்ய வேண்டிய கர்மங்களையும் அறிந்துகொண்டு பக்தியோகத்தை அநுஷ்டிக்க வேண்டும்.

இவ்விஷயங்களைப் பதினுருவது அத்யாயத்தில் கண்ணன் அர்ஜுநனுக்கு உபதேசித்தான்—என்றவாறு. 17

देवासुरविभागोक्तिपूर्विका शास्त्रवश्यता ।
तत्त्वानुष्ठानविज्ञानस्थेम्ने षोडश उच्यते ॥ 20

17-வது அத்யாயத்தின் ஸாரம்—விளக்கம்

343 மறைபொருந் தாதவை வல்லசு ரர்க்கு வகுத்தமையு
மறைபொருந் துந்நிலை யின்வன் குணப்படி மூவகையு
மறைநிலை தன்னை வகுக்குங் குறிமூன்றின் மேன்மையுமம்
மறையுமிழ்ந் தானுரைத் தான்வாச வன்றன் சிறுவனுக்கே. 18

உரை :—அம் மறை உமிழ்ந்தான் - அந்த வேதத்தை வெளியிட்டவனுன கண்ணன், வாசவன்றன் சிறுவனுக்கு - இந்த்ரனுடைய புத்திரனுன அர்ஜுநனுக்கு, மறை பொருந்ாதவை - வேத (மாகிய சாஸ்த்ர)த்திற்கு விபரீதமான கர்மங்கள், வல் அசுரர்க்கு - வலிய அஸுரஸ்வபாவமுடையவர்க்கு, வகுத்தமையும் - பிரித்துக்கூறப்பட்டமையும், வன் குணப்படி - வலிய (ஸத்துவம் முதலிய) குணத்தின்படி, மறை பொருந்தும் நிலையின் - சாஸ்த்ரங்களைத் தழுவிய கர்மாநுஷ்டாநத்தின், மூவகையும் - மூன்றுவகைப்பட்ட தன்மையும், மறை நிலை தன்னை - வேதத்தில் விதிக்கப்பட்ட கர்மாநுஷ்டாநத்தை, வகுக்கும் - (மற்றவற்றினின்று) வேறுபடுத்திக் காட்டுகின்ற, குறி மூன்றின் - (ஓம், தத், ஸத் என்ற) மூன்று லக்ஷணங்களின், மேன்மையும் - உயர்வும் (ஆகிய இவற்றை), உரைத்தான்-உபதேசித்தான்.

[மறைபொருந்ாதவை......வகுத்தமையும்] வேதத்திற்கு விபரீதமாகச் சில ஆகமங்கள் உள. அவற்றில் விதிக்கப்பட்ட கர்மங்கள்

மறைபொருந்தாதவையாகும். வேதத்தில் கூறப்பட்ட கர்மங்களிலும், அதிகாரமில்லாதவர்களால் இடம், காலம், த்ரவ்யம், செய்யும்முறை இவற்றில் தழுவவேண்டிய நிர்ப்பந்தங்களைப் புறக்கணித்துத்தோன்றிய வாறு செய்யப்படும் கர்மங்களும் மறைபொருந்ாதவையெனப்படும். இத்தகைய கர்மங்கள் ஆஸுரக்கொள்கையருக்கே ஏற்றனவாம். மிக்க சிரமத்துடன் டம்பம் அஹங்காரம் காமம் ராகம் பலம் இவற்றுடன் தம் தேஹத்தையும் பரமாத்மாவின் அம்சமான ஆத்மாவையும் மிகுந்த துன்பத்திற்குள்ளாக்கி யாகம் முதலிய கர்மங்களைச் செய்பவர் ஆஸுரக் கொள்கையுடையவராவர். அவர்களுக்கு ஸுகலேசமும் கிடையாது; நரகத்தில் வீழ்ந்து தவிப்பர்.

[மறை பொருந்தும்......மூவகையும்] சாஸ்த்ரங்களில் விதிக்கப் பட்ட யாகம் தவம் தாநம் ஆகிய மூன்று கர்மங்களில் ஒவ்வொன்றும், அதை அநுஷ்டிப்பவருக்கு ஸத்துவம் முதலிய மூன்று குணங்களில் ஒவ்வொன்று மிகுந்து நிற்பதுபற்றி மூன்று வகைப்படும். அக்குணங் களில் ஒவ்வொன்று மிகுந்து நிற்பதன் காரணம் ஆஹாரங்களில் உள்ள வேறுபாடேயாகும். ஆஹாரமும் ஸாத்துவிகம் – ராஜஸம்– தாமஸம் என மூவகைப்படும்.

ஸத்துவகுணமுள்ளவருக்கு இனிப்புடன் பசையுள்ளதாய், பலம் முதலியவற்றுடன் சரீரத்தை நல்ல நிலைமையில் வைக்கக் கூடியதாய், பார்க்கும்போதே மகிழ்விக்கக்கூடியதாய் உள்ள ஸாத்துவிக ஆஹாரமே ப்ரியமாம். இத்தகைய உணவை உட்கொள்ளுவதால் ஆயுஸ் ஸத்துவ குணம் ஜ்ஞாநம் பலம் ஆரோக்யம் ஸுகம் மகிழ்ச்சி ஆகிய இவை வ்ருத்தியடையும்.

ரஜோகுணமுள்ளவருக்குக் காரம் – புளிப்பு – அதிகஉப்பு – மிக்க உஷ்ணம் உடையதும், மிக்க குளிர்ச்சி-மிகக் கொடியதன்மை இவற் றைக் கொண்டிருப்பதால் உபயோகிக்கமுடியாததும், பசையில்லாது மிகக்கடினமானதும், பித்தத்தை மிகத் தரவல்லதுமான ராஜஸ ஆஹாரமே ப்ரியமானதாம். இதனுல் துக்கம்–பச்சாத்தாபம்–நோய் ஆகியவை உண்டாகும்.

தமோகுணமுள்ளவருக்கு, மிகக் காலம் சென்றதும், இயற்கைச் சுவையை இழந்ததும், துர்க்கந்தம் வீசியதும், காலம் கடந்ததால் வேறு சுவையைக் கொண்டதும், தந்தை ஆசார்யன் முதல்தமையன் இவர்களுடையதல்லாத எச்சிலாகியதும், எம்பெருமானுக்கு நிவேதநம் செய்யப்படாமலும் வைசுவதேவம் முதலியவற்றில் உபயோகிக்கப்படா மலும் உள்ளதுமான தாமஸ ஆஹாரமே ப்ரியமானதாகும். இதனுல் தமோகுணமே வ்ருத்தியாகும்.

இத்தகைய உணவிற்கேற்றவாறு ஸத்துவம் முதலிய குணங்கள் மிகுந்து, அவற்றுக்கேற்றவாறு அநுஷ்டிக்கப்படும் யாகம்–தவம்–தாநம் ஆகிய கர்மங்களும் மூவகைப்படும்.

ஸாத்துவிகயாகம் — எம்பெருமானது உகப்பைத் தவிர வேறு பலனை விரும்பாத பெரியோர்களால் மனத்தை ஒருமுகப்படுத்திச் சாஸ்த்ரம் கூறியபடி மந்த்ரம் த்ரவ்யம் செய்கை முதலியவற்றை உபயோகித்து எம்பெருமானுடைய ப்ரீதியையே பலனாகக்கொண்டு செய்யப்படும் யாகம்.

ராஜஸயாகம் — பலனைக் கருதியும் தமக்குப் புகழ் வரவேண்டுமென நினைத்தும் டம்பத்திற்காகச் செய்யும் யாகம்.

தாமஸயாகம்—நல்லொழுக்கமுள்ள வித்வான்களான அந்தணர்களின் அநுமதியைப் பெறாமல் தாழ்ந்த வகுப்பினரிடமிருந்து பொருள் முதலியன பெற்றுத் தக்ஷிணைகொடுக்காமலும் சிரத்தையில்லாமலும் செய்யப்படும் யாகம்.

தவம், சரீரம்-வாக்கு-மனம் ஆகிய முக்கரணங்களால் செய்யப்படுவதுபற்றி மூவகைப்படும்.

சரீரத்தால் செய்யும் தவம்:— தெய்வம்-அந்தணர்-குரு-அறிவாளர் இவர்களுக்கு மரியாதை செய்வது, புண்யதீர்த்தஸ்நாநம் முதலியன, முக்கரணங்களும் ஒருவகைப்பட்டிருத்தல், ஸ்த்ரீகளைக் காதலோடு பாராதிருத்தல் முதலியன, பிராணிகளைத் துன்புறுத்தாமை—என்பன.

வாக்கினால் செய்யும் தவம்:— பிறர் மனம் அஞ்சாத வகையில் ஸத்யமாயும் ப்ரியமாயும் நன்மையைத் தருவதாயுமுள்ள வார்த்தையைப் பேசுவதும் ஜபம் செய்வதும்.

மனத்தால் செய்யும் தவம்:— பிறருக்குத் தீங்கு நினையாமை, நன்மைசெய்யக் கருதுதல், மனத்தால் வாக்கின் முயற்சியை அடக்குதல், த்யாநம்செய்யவேண்டிய வஸ்துவினிடத்து மனத்தை நிறுத்தல், ஆத்மாவைத் தவிர வேறொன்றையும் சிந்தியாதிருத்தல்—என்பனவாம்.

இங்ஙனம் முக்கரணங்களால் மூன்றுவகைப்பட்ட தவம், ஸத்துவம் முதலிய முக்குணங்களாலும் மூவகைப்படும்.

ஸாத்துவிகமான தவம்:— பலனை விரும்பாது, எம்பெருமானுடைய ஆராதநம் இது என்று நினைத்து, மிக்க சிரத்தையுடன் சரீரம் முதலிய முக்கரணங்களாலும் செய்யப்படும் தவம்.

ராஜஸமான தவம்:— பிறர் தம்மை மனத்தால் போற்றுதலையும் வாயால் புகழ்தலையும் சரீரத்தால் வணங்குதலையும் கருதியும், பலனை விரும்பியும் டம்பத்திற்காகவும் செய்யும் தவம். இத்தவம், அழிந்துபோகக்கூடிய ஸ்வர்க்கம் முதலிய பலனைத் தரும்; பலனை அநுபவிக்கும்போது கர்மம் முடிந்ததும் கீழே விழுந்துவிடுவோமென்ற அச்சத்தையும் தரும்.

தாமஸமான தவம்:— அவிவேகிகள் பிடிவாதத்துடன் தம் சக்தி அதிகாரம் இவற்றைக் கவனிக்காமலும் பிறரைத் துன்புறுத்துவது கருதியும் செய்யும் தவம்.

தானமும் மேற்கூறிய வகையில் மூவகைப்படும்.

ஸாத்துவிகதானம்:— ஸ்வர்க்கம் முதலிய பலனை விரும்பாமல் எம்பெருமானது முகமலர்ச்சியையே பயனாகக்கொண்டு, குலம்–கல்வி–ஒழுக்கம் இவற்றால் சிறந்த ஒருவனுக்கு, அவன் தமக்கு உதவிசெய்வதைக் கருதாமல் புண்யமான இடத்தில் புண்யமான காலத்தில் செய்யும் தானம்.

ராஜஸதானம்:— பிரதியுபகாரத்தைக் கருதியும், பலனை விரும்பியும், சிறந்த பாகத்தைப் பிறருக்குக் கொடுக்க மனமில்லாது தமக்கு வைத்துக்கொண்டு தாழ்ந்த பாகத்தைத் தானம்செய்வது.

தாமஸதானம்:— கலிங்கம் கீகடம் முதலிய தகாத தேசத்தில், ராத்ரி முதலிய அகாலங்களில், பங்தியைக் கெடுப்பவன் – முட்டாள் – திருடன் – சூதாடி – துதிபாடகன் முதலிய அபாத்ரங்களுக்குப் பாதம் கழுவிவிடுதல் முதலிய மரியாதையின்றியும், உபசாரவார்த்தைகளின்றியும், சாஸ்த்ரங்களில் நம்பிக்கையின்றிப் பரலோக விஷயத்தில் ஸந்தேஹத்தோடும், வாங்கிக்கொள்பவனைக் காட்டிலும் தம்மை உயர்ந்தவராகக் கருதிக்கொண்டும் செய்யும் தானம்.

[மறைநிலை..,............மேன்மையும்] வேதங்களில் விதிக்கப்பட்ட யாகம் தவம் தானம் ஆகிய கர்மங்கள் ஓம், தத், ஸத் என்னும் மூன்று சப்தங்களை உச்சரித்துப் பின் அநுஷ்டிக்கப்படவேண்டும்.

'ஓம்" என்ற பதத்தின் ஸம்பந்தம்— வேதங்களை ஆரம்பிக்கும்போது ஓங்காரத்தை அநுஸந்திக்கவேண்டும். ஸ்வர்க்கம் முதலிய பலனையாவது மோக்ஷத்தையாவது கருதிச் செய்யப்படுகின்ற ஸகல கர்மங்களின் தொடக்கத்திலும் ஓங்காரத்தை அநுஸந்திக்கவேண்டும். இங்ஙனம் வேதங்களும் அவற்றில் விதிக்கப்படும் கர்மங்களும் ஓங்காரத்தின் ஸம்பந்தத்தைப் பெற்றபடியால் அத்தகைய வேதங்களை உச்சரிப்பவர்களும் அக்கர்மங்களை அநுஷ்டிப்பவர்களுமான த்ரைவர்ணிகர் (ப்ராஹ்மணர் க்ஷத்திரியர் வைசியர்) களும் ஓங்காரத்தின் ஸம்பந்தத்தைப் பெறுகின்றனர்.

தத் எனும் பதத்தின் ஸம்பந்தம்— தத் என்னும் பதம் ப்ரஹ்மத்தைக் கூறும். வேறு பலனை விரும்பாது மோக்ஷத்தையே விரும்புகின்ற அதிகாரிகள் வேதாத்யயநம்–யாகம்–தவம்–தாநம் ஆகிய இவற்றைச் செய்கின்றனர். 'தத்' எனும் சொல்லுக்குப் பொருளான ப்ரஹ்மத்தை அடைவதற்கு அக்கர்மங்கள் ஸாதநமாயிருப்பதுபற்றி அக்கர்மங்களும் அக்கர்மங்களைப் போதிப்பது பற்றி வேதங்களும் 'தத்' எனும் பதத்தால் கூறப்படுவனவாகும். மூன்று வருணத்தாரும் அத்தகைய கர்மங்களை அநுஷ்டித்தலாலும் அத்தகைய வேதங்களை ஓதுவதாலும் அவர்களும் 'தத்' சப்தத்தின் ஸம்பந்தமுடையராகின்றனர்.

'ஸத்' எனும் பதத்தின் ஸம்பந்தம்— உலகவழக்கிலும் வேத வழக்கிலும் ஸத் எனும் பதம், 'இருக்கிற' தென்ற பொருளையும் மங்களமான' (சிறந்த) என்ற பொருளையும் தரும். உலகில் ஒரு

மனிதன் செய்யும் ஒரு மங்களமான செயலை 'இது ஸத் கர்மம்' (மங்கள மான செயல்) என்று வழங்குவது உண்டு. வேதம் ஓதிய மூவருணத் தாரும் யாகம்–தவம்–தானம் இவற்றில் ஈடுபட்டிருக்கும் இருப்புச் சிறந் திருப்பதுபற்றி 'ஸத்' என்று கூறப்படுகின்றது. அவ்வாறு ஈடுபட் டிருக்கும் அந்த மூவரும் 'ஸத்' என்ற சொல்லால் வழங்கப்பெறுகின் றனர். அவர்கள் அநுஷ்டிக்கும் யாகம் முதலிய கர்மங்களும் 'ஸத்' என்று கூறப்படுகின்றன. அவர்களை அக்கர்மங்களில் ஈடுபடச்செய்த வேதங்களும் 'ஸத்' என்று கூறப்படுகின்றன. ஆக, அந்தணர்–வேதங் கள்–கர்மங்கள் ஆகிய மூன்றும் 'ஸத்' என்னும் சொல்லின் ஸம்பந்தத் தைப் பெறுகின்றன.

இவ்வம்சங்களைப் பதினேழாவது அத்யாயத்தில் கண்ணன் அர்ஜுநனுக்கு உபதேசித்தான்—என்றவாறு.

'பொருந்துங்நிலையின்'—நகரம் விரிந்தது செய்யுள்விகாரம். 18

अशास्त्रमासुरं कृत्स्नं शास्त्रीयं गुणतः पृथक् ।
लक्षणं शास्त्रसिद्धस्य त्रिधा सप्तदशोदितम् ॥ 21

18-வது அத்யாயத்தின் ஸாரம்—விளக்கம்

344 சத்துவ வீடுடை நற்கரு மந்தா னுகந்தமையுஞ்
சத்துவ முள்ளது தான்குறிக் கோள்வகை செய்ததுவுஞ்
சத்துவ நற்கிரி சைப்பய னுஞ்சர ணுகதியுஞ்
சத்துவ மேதரு வானுரைத் தான்றனிப் பார்த்தனுக்கே. 19

உரை:— சத்துவமே தருவான் – ஸத்துவகுணத்தையே அருள் பவனை கண்ணன், தனிப் பார்த்தனுக்கு – ஒப்பற்ற அர்ஜுநனுக்கு, சத்துவ வீடு உடை – ஸாத்துவிக த்யாகத்தோடு கூடிய, நல் கருமம் – சிறந்த (சாஸ்த்ரீயமான) கர்மங்களை, தான் உகந்தமையும் – (ஈசுவர ணுகிய) தான் விரும்பிய தன்மையும், சத்துவமுள்ளது – ஸாத்துவிக மான கர்மத்தை, தான் குறிக்கொள் வகை செய்ததுவும் – தான் கைக் கொள்வதற்குத் தக்கவாறு (கர்மங்களை மூவகையாகப்) பிரித் ததுவும், சத்துவ நல் கிரிசைப் பயனும் – ஸாத்துவிகமான சிறந்த கர்மங்களின் பலனுகிய முக்தியும், சரணுகதியும்-ப்ரபத்தியும் (ஆகிய இவற்றை), உரைத்தான் – உபதேசித்தான்.

[சத்துவவீடு............உகந்தமையும்] கர்மங்களைச் சேதநன் அநுஷ்டிக்கும்போது கர்த்ருத்வத்தையும் மமதையையும் பலனில் ஸம்பந்தத்தையும் விட்டுவிடவேண்டும். இந்த விடுகையின் விளக்கம் பின்வருமாறு—

கர்த்ருத்வத்தை விடுகை— ஸர்வேசுவரன் தானே தனக்கு அடிய ஞன ஜீவனைக்கொண்டு, தனக்கு அடங்கிநிற்கும் இந்த்ரியம் சரீரம் ப்ராணன் இவற்றால் தன் விளையாட்டையே பலனுகக் கருதிக் கர்மங் களைச் செய்விக்கின்றுனென்று அநுஸந்தித்துச் செய்கையில் தன் உரிமையை விட்டுவிடுதல்.

மமதையை விடுகை — சேதநன் தான் பெறவேண்டிய பலனுக்குச் சாதநமாக இருப்பதால் தான் செய்யும் கர்மத்தைத் தன்னுடைய தாகக் கருதாமல் ஸர்வேசுவரன் தன் உகப்புக்காகத் தானே இக்கர் மத்தைச் செய்விக்கின்றானென்று கருதுகை.

பலனில் ஸம்பந்தத்தை விடுகை— கர்மத்தால் வரும் ஸ்வர்க்கம் முதலிய பலனைத் தான் வேண்டாமல் பலனில் தன் ஸம்பந்தத்தை ஒழித்தல். [பலனுக்கு நேர்காரணம் எம்பெருமானது அருளே யாதலின் கர்மத்தைப் பலனுக்கு உபாயமாகக் கொள்ளாமையாகிய பலோபாயத்வத்யாகமும் இதனுள் அடங்கும்.]

ஆக இங்ஙனம் மூன்று த்யாகங்களோடு கூடிய யாகம் தாநம் தவம் முதலிய வைதிகமான வர்ணாச்சிரமதர்மங்களை ஒருபோதும் விடக்கூடாது. இக்கர்மங்களைப் பகவதாராதநமெனக் கருதி, இறக்கும் வரை விதிக்கப்பட்ட காலங்களில் செய்தே தீரவேண்டும். இவற்றைச் செய்யாது விட்டால் சரீரவாழ்க்கையே தக்க முறையில் நடைபெறாது. ஏனெனில், யாகம் முதலிய வைதிககர்மங்களைச் செய்து அவற்றில் மீதியாயுள்ள சுத்தமான அந்நத்தை உண்டால் மனம் தெளியப்பெற்று எம்பெருமானை இடைவிடாது சிந்தித்துப் பின் முக்தியையடையலாம். இங்ஙனேயன்றித் தன் வயிறுநிறைவதையே முக்கியமாகக்கொண்டு சமைத்துப் பகவதாராதநம் முதலியன செய்யாமல் உணவுகொள்பவர் பாபத்தையே உண்பவராதலின் விபரீதஜ்ஞாநம் உண்டாகிக் கெட் டழிந்துபோவர்.

ஸாத்துவிகத்யாகம்— ஸத்துவகுணம் மேலிட்டதனால் சாஸ்த்ரங் களின் அர்த்தம் தெரிந்து நித்யம் நைமித்திகம் முதலிய வர்ணாச்சிரம தர்மங்களைப் பகவதாராதநமெனக் கருதிக் கீழ்க்கூறியபடி கர்த்ருத்வம், மமதை, பலனுடைய ஸம்பந்தம், கர்மத்தைப் பலனுக்கு உபாயமாகக் கொள்ளுகை ஆகியவற்றை விட்டு அநுஷ்டித்தல்.

இத்தகைய ஸாத்துவிகத்யாகத்துடன் கீழ்க்கூறியவாறு அநுஷ்டிக்கப்படுகிற கர்மங்களே எம்பெருமானுடைய திருவுள்ளத் திற்கு உகப்பானவையாகும்.

ராஜஸத்யாகம் — கர்மங்கள் படிப்படியாக மோக்ஷத்தைத் தரவல்லன என்று அறிந்திருந்தும், கர்மங்கள் அதர்மமாகு மென்ற மயக்கம் இல்லாதிருந்தும், அவை துன்பப்பட்டுப் பொருளைச் சம்பாதித்துச் செய்யவேண்டியனவாயிருப்பதாலும் சரீரத்தைச் சிரமப் படுத்திக்கொள்ளவேண்டுமேயென்ற அச்சத்தாலும் ஜ்ஞாநயோகம் எளிதென நினைந்து வர்ணாச்சிரமதர்மங்களை விடுதல். இந்த த்யாகம் ரஜோகுணத்தால் வருவதாகும்.

தாமஸத்யாகம்— தமோகுணத்தால் அஜ்ஞாநம் தலையெடுத்து நித்யம்-நைமித்திகம் முதலிய பகவதாராதநரூபமான கர்மங்களை ஸம் ஸார பந்தத்தைத் தருவனவாக மயங்கி அக்கர்மங்களையே விடுவது.

இந்த இரண்டு த்யாகங்களும் சாஸ்த்ரங்களுக்கு முரண் பட்டனவாம்.

[சத்துவமுள்ளது..........செய்ததுவும்]

கர்மம் குணங்களின் வகைபற்றி மூவகைப்படும்—

ஸாத்துவிககர்மம் – வர்ணாச்சிரமங்களுக்குத் தக்கவாறும், கீழ்க் கூறிய கர்த்ருத்வம் முதலியவற்றை விட்டும், டம்பத்திற்காகவல்லா மலும், பலனில் பற்று இல்லாமலும், கடமையென்று செய்யப்படும் கர்மம்.

ராஜஸகர்மம்– பலனை விரும்பி,'அதிக சிரமத்தோடு செய்யவேண் டிய இக்கர்மம் என்னாலேயே செய்யப்படுகிற'தென்ற அஹங்காரத் தோடு செய்யப்படும் கர்மம்.

தாமஸகர்மம் — கர்மங்களைச் செய்யும்போது நடுவில் நிகழும் துன்பத்தையும், பணச்செலவையும், தனக்கும் பிறருக்கும் உண்டாகும் ஹிம்ஸையையும், கர்மத்தைச் செய்துமுடிக்கத் தனக்கு வல்லமை உளதாவென்பதையும், யுக்திகளைக்கொண்டும் சாஸ்த்ரங்களாலும் ஆராய்ந்துபார்க்காமலும், ஸர்வேசுவரனே செய்பவன் என்று நினையா மலும் செய்யப்படும் கர்மம்.

ஆதலின் மோக்ஷத்தை விரும்புமவனால் ரஜோகுணத்தையும் தமோகுணத்தையும் விட்டுவிட்டு ஸத்துவகுணமே கைக்கொள்ளத் தக்கது என்று கூறப்பட்டதாகின்றது.

[சத்துவநற்......பயனும்] இவ்வாறு ஸாத்துவிகத்யாகத்துடன் வர்ணாச்சிரமதர்மங்களை அநுஷ்டிக்கும்போது நடுவில் வருகிற இந்த்ரன் முதலிய சப்தங்களால் இந்த்ரன் முதலிய தேவதைகளைப் பூஜித்ததாகாது; இந்த்ரன் முதலிய தேவதைகளுக்கும் அந்தர் யாமியாய்ப் பிரகாசிக்கும் எம்பெருமானையே பூஜித்ததாகும். இப்படி எம்பெருமானை ஆராதித்ததால் அவனுடைய அநுக்ரஹம் ஏற்படு கின்றது. அதனால் எம்பெருமானை அடைய வழி உண்டாகின்றது. ஒவ்வொருபொழுதும் சாஸ்த்ரங்களின்படி அநுஷ்டிக்கப்படும் கர்ம யோகத்தால் மனம்தெளிந்து ஆத்மதத்துவத்தைப்பற்றிய தெளிவான அறிவு பெற்றவன் உலகவிஷயங்களிலிருந்து மனத்தைத் திருப்பி யோகத்திற்குத் தக்கபடி நிறுத்திக்கொள்ளவேண்டும்; பின் இந்த்ரியங் களை ஜயித்தவனையும் கலங்கச்செய்யும் உலகவிஷயங்களினின்று ஒதுங்கிவிடவேண்டும். அப்படிச்செய்வதால் அவற்றில் ஆசையும், அவை கிடைக்கத் தடைபடுவதால் வரும் பகைமையும் தாமே ஒழியும். பின் த்யாநம்செய்வதற்கு விரோதமில்லாத ஏகாந்தமான இடத்தில் இருக்கவேண்டும். அதிகமாக உண்ணாமலும் பட்டினி கிடக்காமலும் மிதமான உணவை உண்ணவேண்டும். நிலையான ஆஸநத்தில் அமர

வேண்டும். ப்ரணவம் முதலிய மந்த்ரங்களைத் தவிர மற்றவற்றை அநுஸந்திக்கக்கூடாது. எம்பெருமானுடைய திருமேனியையே உள்ளத்துக் கொள்ளவேண்டும். சரீரம் கழியும்வரை த்யானத்திலேயே எப்பொழுதும் ஈடுபடவேண்டும். த்யாநம்செய்யப்படும் வஸ்துவைத் தவிர மற்றைப்பொருள்களிலுள்ள தோஷங்களை ஆராய்ந்து அவற்றில் ஆசையை வேரோடறுக்கவேண்டும். அசேதநத்தில் சேதநமென்ற எண்ணமாகிய அஹங்காரத்தையும், அது வளர்வதற்குக் காரணமான பழையவாஸனையையும், அவற்ருல் ஏற்படும் கொழுப்பு காமம் கோபம் இவற்றையும் விடவேண்டும். தன்னுடையதல்லாத பொருளில் தன்னது என்ற எண்ணமாகிய மமகாரத்தையும் விடவேண்டும். இவ்வாறு இருந்து ஆத்மாநுபவத்தையே மஹாஸுகமாகக்கொண்டு த்யாநயோகத்திலேயே மூழ்கிக்கிடப்பவன், ஸம்ஸாரபந்தமற்றுப் பரிசுத்தமான ஆத்மஸ்வரூபத்தைக் காணப்பெறுவான். இப்படி ஜ்ஞாநஸ்வரூபனுய்ப் பகவானது அடிமையையே ஸ்வபாவமாகக் கொண்ட ஜீவாத்மாவை ஸாக்ஷாத்கரிக்கப்பெற்றவன், பகவானைத் தவிரத் துரும்புமுதல் ப்ரஹ்மாவரையிலுள்ள ஸகலவஸ்துக்களையும் திருணமாக நினைத்துப் புறக்கணித்து அவனையே இடைவிடாது அநுபவித்தலாகிய பரபக்தியைப் பெறுவான். இந்தப் பரபக்தியாகிய பக்தியோகத்தால் ஸர்வேசுவரனை ஸாக்ஷாத்கரிக்க வேண்டுமென்று பேரவா உண்டாக, அதனுல் அவன் இவன்மீது அருள்புரிந்து அக்காலத்தில் பரிபூர்ணஸாக்ஷாத்காரத்தைக் கொடுப்பான். இந்த ஸாக்ஷாத்காரம் பரஜ்ஞாநமென்னப்படும். இந்தப் பரஜ்ஞாநம் வந்ததும் 'பெரு விடாய்ப்பட்டவன் அம்ருதமயமான தடாகத்தைக் கண்டாற்' போல் இவனுக்கு ஸர்வேசுவரனை இடைவிடாது முழுதும் அநுபவித்தாலல்லது உயிர்தரிக்கமாட்டாத நிலைமை வந்து எம்பெருமானைக் கதறிக்கதறியழைப்பான். இந்த நிலைமையே பரமபக்தியெனப்படும். இந்த நிலைமையிலுள்ள இவனுடைய ஆர்த்தியைக் கண்ட ஸர்வேசுவரன் மிக விரைந்து மோக்ஷாநந்தத்தை அருள்வான். இதுவே ஸாத்துவிகத்யாகத்தோடு செய்யும் கர்மயோகம் பலன் கொடுக்கும் முறையாகும்.

[சரணுகதியும்] சரமசுலோகத்தில் சரணுகதி விதிக்கப்பட்டிருக்கும் வகையைச் சரமசுலோகச்சுருக்கு—உரையில் தெளிவாய்க் காண்க.

இவ்விஷயங்களைப் பதினெட்டாவது அத்யாயத்தில் கண்ணன் அர்ஜுநனுக்கு உபதேசித்தான்—என்றவாறு. 19

ईश्वरे कर्तृताबुद्धिः सत्त्वोपादेयताऽन्तिमे ।
स्वकर्मपरिणामश्च शास्त्रसारार्थ उच्यते ॥ 22

பலன் கூறல்

345 வன்பற் றறுக்கு மருந்தென்று மாயவன் றானுரைத்த
வின்பக் கடலமு தாமென நின்றவிக் கீதைதனை
யன்பர்க் குரைப்பவர் கேட்பவ ராதரித் தோதுமவர்
துன்பக் கடலுட் டுளங்குகை நீங்கித் துலங்குவரே. 20

உரை:— வன் பற்று – திடமான ஸம்ஸாரபந்தத்தை, அறுக்கும் – ஒழிக்கக்கூடிய, மருந்து என்று – மருந்து என்று, மாயவன் தான் உரைத்த – அதிசயச்செய்கையுடைய கண்ணன் தானே அருளிச்செய்ததும், இன்பக்கடல் – (மஹாபாரதமாகிய) ஆநந்த ஸமுத்ரத்தின், அமுது ஆம் என நின்ற – அம்ருதமாகும் என்னும்படி நிலைபெற்றதுமான, இக் கீதைதனை – இந்தக் கீதையை, அன்பர்க்கு உரைப்பவர் – (தம்மை) அன்புடன் அடைந்தவர்க்கு உபதேசிப்பவர்களான ஆசார்யர்களும், கேட்பவர் – (ஆசார்யர்களிடம்) கேட்பவர்களும், ஆதரித்து ஓதுமவர் – ஆதரம்வைத்து அத்யயநம்செய்பவர்களும், துன்பக் கடலுள் – (ஸம்ஸாரமாகிய) துக்க ஸமுத்ரத்திற்குள், துளங்குகை நீங்கி-உழலுகை நீங்கி, துலங்குவர் – ப்ரகாசிப்பர்.

ஸம்ஸாரத்தில் உழலும் சேதநர்களை அந்த ஸம்ஸாரபந்தத்திலிருந்து விடுவிக்கும் மருந்தாகுமென்று எம்பெருமான் தானே உரைக்கும் பெருமைவாய்ந்தது இக்கீதை. ஸகல தர்மஸூக்ஷ்மங்களும் தன்னுள் அடங்கப்பெற்றுப் படிப்பவர்களுக்குப் பரமாநந்தத்தை விளைவிக்கும் மஹாபாரதம் ஒரு கடலாகும். இக்கீதை அக்கடலுள் எழுந்த ஓர் அமுதம்போன்றதாகும். இத்துணைப் பெருமைவாய்ந்த இந்தக் கீதையைத் தம்மை வந்தடைந்த சீடர்க்கு உபதேசிக்கும் ஆசார்யர்களும், ஆசார்யர்களிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொள்ளும் மாணவர்களும், மிகுந்த பக்தி – சிரத்தையுடன் இதை அத்யயநம் செய்யும் அனைவரும் ஸம்ஸார ஸமுத்ரத்தினின்று நீங்கி ப்ரகாசிப்பர் – என்றவாறு. 20

ப்ரபந்தம் தலைக்கட்டப்பெறல்

346 தீதற்ற நற்குணப் பாற்கடற் றாமரைச் செம்மலர்மேன்
மாதுற்ற மார்வன் மருவவின் கீதையின் வண்பொருளைக்
கோதற்ற நான்மறை மௌலியி னாசிரி யன்குறித்தான்
காதற் றுணிவுடை யார்கற்கும் வண்ணங் கருத்துடனே. 21

உரை:— தீது அற்ற – குற்றம் அற்ற, நல் குண – சிறந்த குணத்தையுடைய (வளும்), பாற்கடல் – திருப்பாற்கடலில் (உண்டான), செம் தாமரைமலர்மேல்-சிவந்த தாமரைப்பூவின்மேல் (வீற்றிருக்கின்றவளுமான), மாது உற்ற – பெரியபிராட்டி எழுந்தருளியுள்ள, மார்வன் – திருமார்பையுடைய கண்ணன், மருவ - ஏற்றுக்

கொள்ளும்படி, இன் கீதையின் – இனிய பகவத்கீதையின், வண் பொருளை – அழகிய தாத்பர்யத்தை, காதல் துணிவு உடையார் – பக்தியையும் மஹாவிசுவாஸமாகிய அங்கத்தை (முக்கியமாகவுடைய ப்ரபத்தியை) யும் அநுஷ்டித்தவர்கள், கருத்துடன் – சிரத்தையுடன், கற்கும்வண்ணம் – கற்று அறியும்படி, கோது அற்ற – எவ்வகைக் குற்றமும் அற்ற, நால்மறைமௌலியின் ஆசிரியன் – நான்குவேதாந்தங்களின் ஆசார்யனுன வேதாந்தாசார்யன், குறித்தான் – கூறினன்.

ஸ்ரீமந்நாராயணனுடைய திருவுள்ளம் உகக்கும்படி ஸ்ரீ பகவத்கீதையின் தாத்பர்யத்தைப் பக்தர் ப்ரபந்நர் அனைவரும் சிரத்தையோடு கற்றுணருமாறு இப்பிரபந்தத்தில் வேதாந்தாசார்யனுகிய யான் வெளியிட்டேன்—என்றவாறு. *21*

कर्मयोगस्तपस्तीर्थदानयज्ञादिसेवनम् ।
ज्ञानयोगो जितस्वान्तैः परिशुद्धात्मनि स्थितिः ॥ 23
भक्तियोगः परैकान्तप्रीत्या ध्यानादिषु स्थितिः ।
त्रयाणामपि योगानां त्रिभिरन्योन्यसंगमः ॥ 24
नित्यनैमित्तिकानां च पराराधनरूपिणाम् ।
आत्मदृष्टेस्त्रयोऽप्येते योगद्वारेण साधकाः ॥ 25
निरस्तनिखिलाज्ञानो दृष्ट्वाऽऽत्मानं परानुगम् ।
प्रतिलभ्य परां भक्तिं तयैवाप्नोति तत् पदम् ॥ 26
भक्तियोगस्तदर्थी चेत् समग्रैश्वर्यसाधकः ।
आत्मार्थी चेत् त्रयोऽप्येते तत्कैवल्यस्य साधकाः ॥ 27
ऐकान्त्यं भगवत्येषां समानमधिकारिणाम् ।
यावत्प्राप्ति परार्थी चेत् तदेवात्यन्तमश्नुते ॥ 28
ज्ञानी तु परमैकान्ती तदायत्तात्मजीवनः ।
तत्संश्लेषवियोगैकसुखदुःखस्तदेकधीः ॥ 29
भगवद्ध्यानयोगोक्तिवन्दनस्तुतिकीर्तनैः ।
लब्धात्मा तद्गतप्राणमनोबुद्धीन्द्रियक्रियः ॥ 30
निजकर्मादि भक्त्यन्तं कुर्यात् प्रीत्यैव कारितः ।
उपायतां परित्यज्य न्यस्येद्देवे तु तामभीः ॥ 31
एकान्तात्यन्तदास्यैकरतिस्तत्पदमाप्नुयात् ।
तत्प्रधानमिदं शास्त्रमिति गीतार्थसंग्रहः ॥ 32

(ஸ்ரீ ஆளவந்தார் அருளிய கீதார்த்தஸங்க்ரஹம் முற்றிற்று)

இவ்வாறு 18 அத்யாயங்களால் கண்ணபிரான் அர்ஜுநனுக்கு உபதேசித்துப் பின்னும் கூறுகின்றான் :— "இப்படி நான் உபதேசித்த பரம ரஹஸ்யமான சாஸ்த்ரத்தைத் தவம் புரியாதவனுக்கு நீ உபதேசிக்கக் கூடாது ; தவம்புரிந்தும் உன்னிடமும் என்னிடமும் பக்தியில்லாதவனுக்கும் உபதேசிக்கக் கூடாது; பக்தி இருந்தும் கேட்க விருப்பம் இல்லாதவனுக்கும் உபதேசிக்கக் கூடாது ; எல்லாத் தகுதியும் இருப்பினும் என் ஸ்வரூபத்தையும் என் ஈசுவரத் தன்மையையும் என் குணங்களையும் கேட்டு அவற்றில் பொறாமையால் தோஷங்களைக் கூறிக்கொண்டிருப்பவனுக்கு எவ்வகையானும் சொல்லக்கூடாது. என்னிடம் உண்மையான பக்தியுடையவர்களுக்கு உபதேசிப்பவன் பரபக்தியைப் பெற்று என்னையே அடைவானென்பதில் ஐயமில்லை. மானிடருள் அவனைக்காட்டிலும் எனக்கு மிகப் பிரியமான செயலைச் செய்தவன் ஒருவனும் இருந்ததுமில்லை; இருக்கப்போவதுமில்லை. ஸகல தர்மங்களையும் வெளிப்படுத்துமதான இந்த நம் ஸம்பாஷணமாகிய கீதையை ஒருவன் அத்யயநம் செய்வானேயாகில், என்னை அநுஸந்தித்தலாகிய ஜ்ஞாநயஜ்ஞத்தால் உண்டாகும் மகிழ்ச்சியை யான் பெறுவேன். இந்தக் கிரந்தத்தை மிக்க சிரத்தையுடன் அஸூயையின்றிக் கற்க வேண்டும். அதற்காக ஓர் ஆசார்யனை அடைந்து அவனடியிலேயே விழுந்து பணியவேண்டும்; வரும் ஸந்தேஹங்களை அவனிடம் கேட்கவேண்டும்; மிக்க பக்தியுடன் அவனுக்கு நெடுங்காலம் பணிவிடை செய்யவேண்டும்; இதனால் திருவுள்ளமுவந்த ஆசார்யன்பால் இந்தக் கீதையை அத்யயநம் செய்தல் வேண்டும்; இவ்வாறு செய்பவன் பக்திக்குத் தடையாயிருந்த கர்மங்களினின்று விடுபட்டுப் புண்யசாலிகளான என் பக்தர்களின் குழாத்தைச் சேர்ந்து பக்தியோகத்தை உபதேசிக்கப்பெற்று அதை அநுஷ்டித்து மோக்ஷத்தைப் பெறுவான். அப்பனே! அர்ஜுந! நான் கூறிய இதனைக் கவனத்துடன் கேட்டு இதன் அர்த்தங்களை உணர்ந்தாயா? அஜ்ஞாநத்தால் மதிமயங்கித்தானே போர் செய்யமாட்டேனென்றாய். அந்த மயக்கம் இப்போது உனக்கு நீங்கியதா?"

இவ்வாறு கண்ணபிரான் கூறியதைக் கேட்ட அருச்சுனன் பின்வருமாறு விண்ணப்பம் செய்தான்—"என் அப்பனே! அடியார்களைக் கைவிடாதவனே! உன் திருவருளால் என் விபரீத ஜ்ஞாநம் ஒழிந்தது.

18 அத்யாயங்களின் ஸாரார்த்தம்—ஸ்ரீதேசிகன் அருளிய சுலோகம்.

अध्यायैः शिष्यमोहस्तदुपशमविधिः कर्मयोगोऽस्य भेदा-
स्तत्सौकर्यादि योगस्तदुचितमहिमा भूतिकामादिभेदः।
भक्तिस्तन्मूलभूमा भजनसुलभता भक्तिशैघ्र्यादि जीवः
त्रैगुण्यं शासिता (आ) ज्ञा तदधिगमपरः सारवर्गश्च गीताः॥

சரீரத்தை ஆத்மாவாக நினைத்தலாகிய மோஹம் ஒழிந்தது; நித்ய நைமித்திகங்களாகிய கர்மங்கள் உனக்கு ஆராதந ரூபங்களாகவே யிருப்பதால் உன்னை அடையப் பரம்பரைக்காரணமாயுள்ள அவற்றை ஸம்ஸாரத்தின் தொடர்பைத் தருவனவாக நினைத்திருந்த மோஹமும் நீங்கியது; இப்படி எல்லா மோஹங்களும் உன் திருவருளால் நீங்கின.

உன் திருவருளால் உண்மையறிவையும் பெற்றேன். ஜீவாத்மா ஸ்வயம்ப்ரகாசமாயிருத்தல் முதலிய தன்மைகளால் அசேதநமான ப்ரக்ருதியைக்காட்டிலும் வேறுபட்டவனென்றும், மாறுபாடு (விகாரம்) முதலியன இல்லாமையால் ப்ரக்ருதியின் தன்மைகளைப் பெருதவனென்றும், ஜ்ஞாநத்திற்கு உறைவிடமானவனென்றும், பரம புருஷனை உனக்குச் சேஷமானவனென்றும், உன்னுல் நியமிக்கப் படுமவனென்றும் உணர்ந்தேன். எல்லாவுலகங்களையும் படைத்துக் காத்து அழித்தலை விளையாட்டாகக் கொண்டவனுய், எவ்வகைத் தோஷமுமில்லாதவனுய், திவ்யமங்களஸ்வரூபனுய், இயற்கையாகவே எல்லையற்ற ஜ்ஞாநம் – பலம் – ஐசுவர்யம் – வீர்யம் – சக்தி – தேஜஸ் முதலிய ஸகல கல்யாண குணங்களுக்குப் பெருங்கடலாய், பரப்ரஹ்மம் என்ற சொல்லால் கூறப்படுகின்ற பரமபுருஷனுயுள்ள உன்னுடைய உண்மையான நிலையை அறியப்பெற்றேன். மேம்பட்ட தத்துவம் – தாழ்ந்த தத்துவம் ஆகியவற்றைப் பற்றிய உண்மையறிவைப் பெற்று அதைப் பரிசயம் செய்துகொண்டு அதனுல் நாடோறும் வளர்ந்துவருவதாய்ப் பரமபுருஷனை உன்னுடைய ப்ரீதியையே பலனுகக் கொண்ட நித்ய – நைமித்திக கர்மங்களை அநுஷ்டிப்பதாலும், சாஸ்த்ரங்களில் விலக்கிய கர்மங்களை நீக்குவதாலும், எல்லா இந்த்ரியங் களின் அடக்கத்தாலும் நிறைவேறக்கூடியதாயுள்ள பக்தியோக மென்னும் உபாஸநத்தால்மட்டுமே அடையக் கூடியவனுயும் ஸகல வேதாந்தங்களாலும் அறியத்தக்கவனுயுமுள்ள பரமபுருஷன் வஸு தேவபுத்திரனுகிய நீயே என்ற ஜ்ஞாநத்தையும் பெற்றேன். அதனுல் பந்துக்களிடம் உள்ள அன்பினுலும் கருணையினுலும் வளர்ந்த விபரீத ஜ்ஞாநத்தால் எனக்கு உண்டான மனச்சோர்வும் ஸந்தேஹங்களும் நீங்கப்பெற்று இயற்கைநிலையை அடைந்து நிற்கின்றேன். இப் பொழுதே யுத்தம் தொடங்கிப் பக்தியோகம் வரையிலுமுள்ள கடமை களைச் செய்து உன் கட்டளைகளை நிறைவேற்றுகின்றேன்'' என்று (விண்ணப்பம் செய்தான்).

கீதார்த்தசங்கிரகம் — உரை முற்றிற்று

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

ஸ்ரீ:

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான்திருவடிகளே சரணம்

மும்மணிக்கோவை—உரை

[விஷயச்சுருக்கம்]

[இனித் திருவயிந்திரபுரம் தெய்வநாயகன்மீது சில பிரபந்தங்களைப் பாடியருளத் திருவுள்ளங்கொண்டு மும்மணிக்கோவை – பந்து – கழல் – அம்மானை – ஊசல் – ஏசல் – நவமணிமாலை என்னும் ஏழு பிரபந்தங்களை ஸ்ரீ தேசிகன் பாடியருளினூர். இவற்றுள் மும்மணிக் கோவை தமிழ்ப்பிரபந்த லக்ஷணத்தின்படி முப்பது பாசுரங்கள் அடங்கியதாக இருந்தே தீரவேண்டும். இப்பொழுது பத்துப்பாசுரங்களே அநுஸந்தாநத்தில் வருகின்றன. மற்ற இருபது பாசுரங்களும் பந்து முதலிய ஐந்து பிரபந்தங்களும் நம் தீவினைப்பயனுய் அநுஸந்தாநபரம் பரையில் வராமல் மறைந்து விட்டன.]

அகவல், வெண்பா, கட்டளைக்கலித்துறை என்ற மூவகைப் பாக்களால் இப்பிரபந்தம் அமைக்கப்பட்டு மூவகைமணிகளால் அமைந்த ஹாரம் போலிருத்தலின் இதற்கு 'மும்மணிக்கோவை' எனப் பெயர் வந்தது. இது அந்தாதித் தொடையாய் அமைந்தது.

இப்பிரபந்தத்தில் முதலில் பிராட்டியின் பெருமையையும், ஸ்ரீசப்தத்தின் ஆறு பொருள்களையும் பேசி, தெய்வநாயகனுடைய திருக்கல்யாண குணங்களைப் புகழ்ந்து, எல்லாப் பொருளாயும் எல்லாப் பந்துவாயுமிருப்பவன் அவனே என்று காரணத்துடன் கூறி, அவனடிகளை உபாயமாகக் கொண்டவர் அவனுக்குச் சமமாகின்ருரென்று வெளியிடுகிருர் நம் தேசிகன்.

இதில் தெய்வநாயகன்மீது ஸ்வாமிக்குள்ள அளவிலாக்காதலால் ஆழ்வார்களைப்போலத் தாமும் அவனை நாயகனுகவும், தம்மை நாயகியாகவும்கொண்டு தோழி, செவிலி ஆகிய இவர்கள் பேச்சாய்ப் பாடிய சில பாசுரங்கள் நம் மனத்தைக் கவர்கின்றன.

பிராட்டியிடம் புருஷகாரப்ரபத்தி

நிலைமண்டிலவாசிரியப்பா

347 அருடரு மடியர்பான் மெய்யை வைத்துத்
தெருடர நின்ற தெய்வநா யகநின்
னருளெனுஞ் சீரோ ரரிவையா னதென
விருள்சேக வெமக்கோ ரின்னொளி விளக்காய்

மணிவரை யன்ன நின்றிரு வுருவி
லணியம ராகத் தலங்கலா யிலங்கி
நின்படிக் கெல்லாந் தன்படி யேற்க
வன்புட னின்னே டவதரித் தருளி
வேண்டுரை கேட்டு மீண்டவை கேட்பித்
தீண்டிய வினைகண் மாண்டிட முயன்று
தன்னடி சேர்ந்த தமருனை யணுக
நின்னுடன் சேர்ந்து நிற்குநின் றிருவே. 1

உரை:— அடியர்பால் - பாகவதர்கள்மீது, மெய்யை வைத்து - மெய்யாக ஒழுகுந்தன்மையை இட்டு, தெருள் தர நின்ற - ஜ்ஞாநத்தை அருள முற்பட்டு நின்ற, தெய்வநாயக - தெய்வநாயகனே!, எமக்கு இருள் செக - எமக்கு (அஜ்ஞாநமாகிய) இருள் ஒழியும்படி, ஓர் இன் ஒளி விளக்காய் - ஒப்பற்ற இனிய ப்ரகாசத்தையுடைய தீபம்போன்ற வளாய், மணிவரை அன்ன - இந்த்ரநீலபர்வதம் போன்ற, நின் திரு உருவில் - உன் அழகிய திருமேனியில், அணி அமர் ஆகத்து - திருவாபரணங்கள் அமர்ந்துநிற்கின்ற திருமார்பில், அலங்கலாய் இலங்கி - மாலையாக ப்ரகாசித்துக்கொண்டு, நின் படிக்கு எல்லாம் - உன் ப்ரகாரங்களுக்கெல்லாம், தன் படி ஏற்க - தன் ப்ரகாரங்கள் ஒத்திருக்குமாறு, அன்புடன் - (உன்னைப் பிரியமாட்டாத) அன்புடன், நின்னோடு அவதரித்தருளி - உன்னோடு (தானும்) அவதரித்தருளி, வேண்டுரை கேட்டு - (ஆச்ரிதர்கள்) ப்ரார்த்திக்கும் உரைகளை (த் தான் முந்துற)க் கேட்டு, மீண்டு அவை கேட்பித்து - மறுபடியும் அவ்வுரை களை (நீ) கேட்குமாறுசெய்து, ஈண்டிய வினைகள் - திரண்ட கர்மங்கள், மாண்டிட முயன்று-ஒழிந்து போக(ச்செய்ய) முயன்று, தன் அடி சேர்ந்த தமர்-தன் திருவடிகளை அடைந்த பாகவதர்கள், உனை அணுக - உன்னை அடையும்படி, நின் அருள் எனும் சீர்-உன் கருணையெனும் குணமே, ஓர் அரிவையானது என - ஒப்பற்ற பெண்வடிவுகொண்டது என்னும் படி, நின்னுடன் சேர்ந்து நிற்கும் - உன்னோடு சேர்ந்து நிற்கின்ற, நின் திருவே - உனக்கும் பெருமையைத் தருபவளான பிராட்டியே, அருள் தரும்—(எங்களுக்கு) அருள்புரிவாள்.

ஸ்ரீதேசிகன் தெய்வநாயகனைச் சரணமடையத் திருவுள்ளங் கொண்டு முதலில் செங்கமலவல்லித்தாயாரிடம் செய்யும் புருஷகார ப்ரபத்தியை முதற் பாசுரத்தால் வெளியிடுகிறார்—

அடியவர்களாகிய எங்களுக்கு அருள்புரிவதில் மெய்யனாய் ஒழுகுவதால் 'அடியவர்க்குமெய்யன்' எனப் பெயர்பெற்று எங்களுக்கு ஜ்ஞாநக்கண்ணை அருள்கின்ற தெய்வநாயகனே! திருவாபரணங்கள் அனைத்தும் தாம் நிறம்பெறுவதற்காக இந்த்ரநீலபர்வதம் போன்ற உன் திருமேனியின் ஒரு பாகமாகிய திருமார்பில் வந்து அமர்ந்து ஒளி

பெறுகின்றன. இத்தகைய திருமார்பில் ஒரு திருமாலைபோல் பிராட்டி க்ஷணமும் பிரியாது வாழ்கின்றாள். நீ இவ்வுலகில் அவதரிக்கும்போது அவளும் உன் திருமேனி முதலியவற்றுக்குத் தக்க திருமேனி முதலியவற்றுடன் அவதரித்தருள்கின்றாள்; தான் ஓர் இனிய ரத்ன தீபமாய்நின்று எங்கள் அஜ்ஞாநத்தைப் போக்குகின்றாள்; அடியார்களின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து உன்னிடம் விண்ணப்பம் செய்து அவர்களின் கர்மங்களை ஒழிக்கின்றாள்; தன் திருவடிகளை அடைந்தவர்களை உன் திருவடிகளை அடையச்செய்து உன் கருணையே வடிவுகொண்டதென்னலாம்படி நிற்கின்றாள். இங்ஙனம் உன்னோடு க்ஷணமும் பிரியாது நின்று உனக்கும் பெருமையைத் தருகின்ற பெரியபிராட்டியே எங்கள் ப்ரபத்தியால் மகிழ்ந்து ஸர்வ விதத்தாலும் எங்களுக்கு அருள் புரிவாள்—என்றவாறு.

"வேண்டுரை..................நின்னுடன் சேர்ந்து" என்னும் தொடரால் ஸ்ரீசப்தத்தின் அர்த்தம் கூறப்பட்டது. விளக்கம் 304-வது பாசுரவுரைக் குறிப்பிற் காண்க. 1

இந்த ஸூக்தி தெய்வநாயகனுக்குப் பரமபோக்யம்

நேரிசைவெண்பா

348 திருமா லடியவர்க்கு மெய்யனார் செய்ய
திருமா மகளென்றுஞ் சேருந்—திருமார்பி
லிம்மணிக் கோவை யுடனேற்கின் றாரென்றன்
மும்மணிக் கோவை மொழி. 2

உரை:— திரு மால் – பிராட்டியிடம் மோஹத்தையுடையவரும், அடியவர்க்கு மெய்யனார் – பாகவதர்களுக்கு மெய்யராய் நடப்பவருமான தெய்வநாயகனார், செய்ய திருமாமகள் – சிவந்த நிறமுடைய பெரியபிராட்டி, என்றும் சேரும் திருமார்பில் – எப்பொழுதும் வாஸம் செய்யும் (தம்) திருமார்பில், இம் மணிக்கோவையுடன் – இந்த (கௌஸ்துபம் முதலிய) ரத்னஹாரத்துடன், என்றன் மொழி மும்மணிக்கோவை – என் மொழியாகிய மும்மணிக்கோவை என்னும் நூலையும், ஏற்கின்றார் – சாத்திக்கொள்கின்றார்.

அடியவர்க்குமெய்யன், பெரியபிராட்டி பிரியாது நித்யவாஸம் செய்யும் தன் திருமார்பில் கௌஸ்துபம் முதலிய ரத்நங்களாலாகிய ஹாரத்தை அணிந்திருப்பதுபோல் இந்தப் பிரபந்தத்தையும் மிக்க ஆதரத்துடன் தன் திருமார்பில் தரித்துக் கொண்டாடுகின்றான். [ஆகவே, எம்பெருமானும் அன்புடன் ஏற்கும் இப்பிரபந்தம் பாகவதர்களுக்கும் மிகப் போக்யமாம்] —என்றவாறு. 2

தோழியின் வாயால் பேசி அநுபவித்தல்

கட்டளைக்கலித்துறை

349 மொழிவார் மொழிவன மும்மறை யாகு மயிந்தையில்வந்
திழிவா ரிழிகவேன் றின்னமு தக்கட லாகிநின்ற
விழிவா ரருண்மெய்யர் மெல்லடி வேண்டிய மெல்லியன்மேற்
பொழிவா ரனங்கர்தம் பூங்கரும் புந்திய பூமழையே. 3

உரை:— மொழிவார் மொழிவன – பேசுபவர் பேச்செல்லாம், மும்மறை ஆகும் – மூன்றுவேதங்களின் ஸாரமாகின்ற (பெருமை வாய்ந்த), அயிந்தையில் வந்து – திருவயிந்திரபுரத்தில் அவதரித்து, இழிவார் – (எம்மிடம்) ஈடுபடு (தற்கு விரும்பு) மவர், இழிக என்று – ஈடுபடுக என்று (நினைந்து), இன் அமுதக் கடலாகி நின்ற – இனிய அம்ருத ஸமுத்ரமாகி நின்றவரும், விழி வார் அருள் – கடாக்ஷத்தினின்று பொழியப்படுகின்ற கருணையையுடையவருமான, மெய்யர் – அடியவர்க்குமெய்யருடைய, மெல் அடி வேண்டிய – மெல்லிய திருவடிகளை விரும்பிய, மெல்லியல் மேல் – மென்மைத்தன்மையுடைய தலைவியின்மேல், அனங்கர் – மன்மதனுர், தம் பூம் கரும்பு உந்திய – தம்முடைய அழகிய கரும்பாகிய வில்லினின்று எழுகின்ற, பூ மழை – புஷ்பமாகிய (அம்பின்) மழையை, பொழிவார் – பெய்வார்.

ஸ்ரீதேசிகனுக்குத் தெய்வநாயகன்மீதுள்ள அளவிலாக் காதல் இங்ஙனே பெண்தன்மையைத் தந்தது. இத்தன்மை தாமாக ஏறிட்டுக்கொள்வதன்றித் தானே பரவசமாய் வருவதாகும். புருஷோத்தமன்முன்பு சுதந்திரலேசமுமின்றிப் பரதந்த்ரமாய்க் கிடக்கும் உலகமுழுதும் பெண்தன்மையதாகுமன்றே! இங்ஙனம் ஸ்ரீதேசிகன் தலைமகளின் தன்மையை அடைந்தார். இந்தத் தலைவிக்குத் தெய்வநாயகன்திருமேனியோடு அப்பொழுதே கலந்து பரிமாற அளவிலாத வேட்கை கிளர்ந்தெழுந்தது; அது கிட்டப் பெறாமையாலே ஆற்றாமை விஞ்சி அவள் மிகத் தளர்ந்தாள். இந்நிலையில் மன்மதனும் அவள்மீது தன் அம்புமாரியைப் பொழிந்து காதலை வளர்த்தான். இங்ஙனம் தெய்வநாயகனை அடையப்பெறாது வருந்தும் தலைவியின் நிலைகண்ட தோழியின் பேச்சாய் எழுந்தது இந்தப் பாசுரம்.

இது தமிழர்களின் அகப்பொருள்துறைகளில் தோழிகூற்றில் ‘இரங்கல்’ என்னும் துறையாம். அதாவது தலைவியின் நிலைமை கண்டு தோழி இரங்கிக்கூறுதல் என்பதாம்.

பெண்டிர், சிறுவர், கிளி, குயில் முதலிய ஸகலஜீவராசிகளும் பேசுகின்ற வாக்யங்களெல்லாம் ஸகலவேதஸாரம் என்னலாம்படி மிகப் பெருமை வாய்ந்தது திருவயிந்திரபுரம். இதில் தெய்வநாயகன் அனைவரும் ஸேவித்து வாழும்படி வந்து அவதரித்து ‘என்னை

அநுபவித்து உஜ்ஜீவியுங்கள்' என்று தன்னைக் காட்டிக்கொடுத்துக் கொண்டு, அநுபவிப்பவர்க்குத் தெவிட்டாத அமுதக்கடலாய்நின்று தன் கடாக்ஷத்தால் அனைவர்மீதும் அருள்மாரியைப் பொழிகின்றான். அவனிடம் அளவிலாக் காதல்கொண்டு அவனை அணையவிரும்பி அது பெறாது வருந்திநிற்கும் தலைவியின்மீது மன்மதனும் தன் கரும்பு வில்லினின்று பூமாரியைப் பெய்து இன்னும் வாட்டுகின்றானே, என்செய்வது?—என்று தோழி இரங்கிக் கூறியவாறு.

ஸ்வாபதேசப்பொருளில் – தெய்வநாயகனை அடைந்து அநுபவிக்கப் பேராவல்கொண்ட இப்பெரியோருக்கு ப்ரக்ருதி ஸம்பந்தம் உடனே அங்ஙன் செய்யாது தடை செய்கின்றதே என்று பாகவதர் இரங்கிக் கூறியதாய்க் கொள்ளலாம். 3

இங்ஙனம் தன்னை அநுபவிக்கப் பார்த்துநிற்கும் ஸ்ரீதேசிகனுக்குத் தெய்வநாயகன் தன் ஸ்வரூபம் ரூபம் குணம் விபூதி ஆகியவற்றைக் காட்டிக்கொடுக்க அவனை அநுபவித்தபடியை இரண்டு பாசுரங்களால் பேசுகின்றார்—

ஸ்வரூபம் முதலியவற்றுடன் தெய்வநாயகனை அநுபவித்தல்

நிலைமண்டிலவாசிரியப்பா

350 மழையி லெழுந்த மோக்குள்போல் வைய
மழியவோன் றழியா வடியவர் மெய்ய
வருமறை யின்பொரு ளாய்ந்தேடுக் குங்காற்
றிருவுட னமர்ந்த தெய்வ நாயக
நின்றிருத் தனக்கு நீதிரு வாகி
யிந்துதன் னிலவுட னிலங்குதன் மையினை
நந்துத லில்லா நல்விளக் காகி
யந்தமி லமுத வாழியாய் நிற்றி
பாற்கட றன்னிற் பன்மணி யன்ன
சீர்க்கணஞ் சேர்ந்த சீலமேல் லையிலை
யடியவர் பிழைக ணின்கருத் தடையா
தடையவாண் டருளு மரசனு நீயே
யுயர்ந்தநீ யுன்னை யெம்முடன் கலந்தனை
யயிந்தைமா நகரி லமர்ந்தனை யெமக்காய்ச்
சித்திர மணியெனத் திகழுமன் னுருவி
லத்திர மணியென வணைத்துநீ யணிதி
விண்ணு ளமர்ந்த வியனுரு வதனு
லெண்ணிய வீரிரண் டுருக்களு மடைதி
பன்னிரு நாமம் பலபல வுருவா
யின்னுரு வெங்கு மெய்திநீ நிற்றி

மீனே டாமை கேழல்கோ ளரியாய்
வானர் குறளாய் மழுப்படை முனியாய்ப்
பின்னு மிராம ரிருவராய்ப் பாரிற்
றுன்னிய பரந்தீர் துவரைமன் னனுமாய்க்
கலிதவிர்த் தருளுங் கற்கியாய் மற்று
மலிவதற் கெண்ணும் வல்வினை மாற்ற
நானு வுருவங் கொண்டுநல் லடியோர்
வானு ரின்ப மிங்குற வருதி
யோருயி ருலகுக் கென்னுநீ திருவோ
டேருயி ரெல்லா மேந்தியின் புறுதி
யாவரு மறியா தெங்குநீ கரந்து
மேவுருச் சூழ்ந்து வியப்பினுன் மிகுதி
கொண்டிட வெம்மை யடைக்கல முலகிற்
கண்டிலங் கதியுனை யன்றிமற் றென்றும்
பல்வகை நின்ற நின்படி யனைத்தினுந்
தொல்வகை காட்டுந் துணிந்துதூ மறையே. 4

உரை:— மழையில் எழுந்த மொக்குள்போல் – மழைநீரினின்று உண்டாகின்ற நீர்க்குமிழிபோல், வையம் அழிய் – உலகம் அழிய (அப்போதும்), ஒன்று அழியா – ஒன்றும் (சிறிதும்) அழியப்பெறாத, அடியவர்மெய்ய – அடியவர்க்குமெய்யனே!, அரு மறையின் பொருள் – அருமையான வேதங்களின் ஸாரத்தை, ஆய்ந்து எடுக்குங்கால் – ஆராய்ந்து சீர்தூக்கும்போது, திருவுடன் அமர்ந்த – பிராட்டியுடன் (பிரியாது) நிற்கின்ற, தெய்வநாயக – தெய்வநாயகனே!, நின் திருத் தனக்கும் – உனக்குப் பெருமையைத் தருகின்ற பிராட்டிக்கும், நீ திருவாகி – நீ பெருமையைத் தருபவனுகி, இந்து – சந்திரன், தன் நிலவுடன் – தன் நிலவுடன், இலங்கு தன்மையினை – பிரகாசிப்பது போன்ற தன்மையுடையனுயினை; நந்துதல் இல்லா நல் விளக்காகி – அவிதல் இல்லாத சிறந்த தீபமாய், அந்தம் இல் – எல்லையில்லாத, அமுத ஆழியாய் நிற்றி – அம்ருதஸமுத்ரமாய் நிற்கின்றாய்; பாற்கடல் தன்னில் – திருப்பாற்கடலில், பல் மணி அன்ன – பல்வகை ரத்னங்கள் (விளங்குவது) போல், சீர்க் கணம் சேர்ந்த – திருக்கல்யாண குணங்களின் கூட்டம் சேர்ந்த, சீலம் – ஸௌசீல்ய (மென்னும் முக்கிய குண) த்திற்கு, எல்லை இலை – எல்லையில்லாதுநின்றாய்; அடியவர் பிழைகள் – பாகவதர்களின் அபராதங்கள், நின் கருத்து அடையாது – உன் திருவுள்ளத்தில் இடம்பெறாதிருக்க, அடைய – அனைத்தையும், ஆண்டருளும் – காத்தருளுகின்ற, அரசனும் நீயே – மஹாராஜனும் நீயே; உயர்ந்த நீ – உயர்ந்துநிற்கும் நீ, உன்னை எம்முடன் கலந்தனை – உன்னை எம்முடன் (ஒரு நீராகக்) கலந்து பரிமாறினை; எமக்காய் – எங்களுக்கு அருள்புரிவதற்காக, அயிந்தைமா

நகரில் – திருவயிந்திரமஹாபுரத்தில், அமர்ந்தனை – நித்யவாஸம் செய்தனை; சித்திர மணி என – விசித்ரமான நீலரத்னம் என்னலாம் படி, திகழும் மன் உருவில் – பிரகாசிக்கும் நித்யமான (உன்) திருமேனியில், அத்திரம் அணி என – அஸ்த்ரம் திருவாபரணம் என்னும்படியான, அனைத்தும் – ஸகலதத்துவங்களையும், நீ அணிதி – நீ அணிந்திருக்கிறாய்; விண்ணுள் அமர்ந்த – ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளியுள்ள, வியன் உருவதனால் – விலக்ஷணமான பரவாஸுதேவரூபத்திலிருந்து, எண்ணிய – (பக்தர்களால்) த்யானிக்கப்படுகின்ற, ஈரிரண்டு உருக்களும் – நான்கு வ்யூஹரூபங்களையும், அடைதி – அடைந்துநிற்கின்றாய்; பன்னிரு நாமம் – பன்னிரண்டு திருநாமங்களையும், பலபல உருவாய் – பற்பல திருமேனிகளையும் உடையவனாய், இன் உரு எங்கும் – போக்யமான (பாகவதர்களின்) சரீரத்தின் எல்லாப் பாகங்களிலும், நீ எய்தி நிற்றி – நீ அடைந்து நிற்கின்றாய்; மீனோடு ஆமை – மத்ஸ்யமும் கூர்மமும், கேழல் – வராஹமும், கோளரியாய் – நரசிங்கமுமாகி, வான் ஆர் – (பின் த்ரிவிக்ரமனாகி) வானத்தை அளாவிய, குறளாய் – வாமனனாய், மழுப்படை முனியாய் – கோடரியென்னும் ஆயுதத்தையுடைய பரசுராமனாய், பின்னும் இராமர் இருவராய் – பின்னும் சக்ரவர்த்தித்திருமகனும் பலராமனுமாகிய இருவராய், பாரில் – பூமியில், துன்னிய – பொருந்திய, பரம் தீர் – பாரத்தைப் போக்குகின்ற, துவரை மன்னனுமாய் – துவாரகைக்கு நாதனான கண்ணனுமாய், கலி தவிர்த்தருளும் – கலியின் கோலாஹலத்தைப் போக்கியருள்கின்ற, கற்கியாய் – கல்கியுமாகி, மற்றும் – மேலும், மலிவதற்கு எண்ணும் – மிகுவதற்கு முற்பட்ட, வல் வினை மாற்ற – வலிய கர்மங்களைப் போக்க, நானா உருவம் கொண்டு – பல்வேறு திருமேனிகளைக் கொண்டு, நல் அடியோர் – ஸாதுக்களான (உன்) அடியார்கள், வான் ஆர் இன்பம் – ஸ்ரீவைகுண்டத்தில் (அடையக்கடவ) பரிபூர்ண ஆநந்தத்தை, இங்கு உற – இங்கு அடையும்படி (செய்ய), வருதி – முற்படுகின்றாய்; உலகுக்கு–ப்ரபஞ்சம் முழுவதிற்கும், ஓர் உயிர் என்னும் நீ – ஒரே ஆத்மா என்னப்படுகின்ற நீ, திருவொடு – பிராட்டியோடு, ஏர் உயிர் எல்லாம் ஏந்தி – ஒத்துநிற்கும் ஜீவாத்மாக்களை எல்லாம் தாங்கி, இன்புறுதி – ஆநந்தமடைகின்றாய்; யாவரும் அறியாது – ஒருவரும் அறியாதபடி, நீ எங்கும் கரந்து – நீ எங்கும் ஒளிந்திருந்து, மேவு உருச் சூழ்ந்து–பொருந்துகின்ற சரீரங்களைச் சூழ்ந்து, வியப்பினால் மிகுதி – ஆச்சர்யத்தால் மிகும்படிநின்றாய்; எம்மை அடைக்கலம் கொண்டிட–எம்மை ரக்ஷிக்கப்படவேண்டிய வஸ்துவாக ஏற்றுக்கொள்ள, உலகில் உன்னை அன்றி – உலகில் உன்னைத் தவிர, மற்றொன்று கதியும் கண்டிலம் – வேறொரு கதியையும் (யாம்) காணவில்லை; பல் வகை நின்ற – பல வகையாய் நிலைபெற்றுநின்ற, நின் படி அனைத்தினும் – உன் ப்ரகாரங்கள் அனைத்தினுடையவும், தொல்வகை – அநாதியான ப்ரகாரத்தை, தூ மறையே – பரிசுத்தமான வேதமே, துணிந்து காட்டும் – துணிந்து விளக்கமுற்படும்.

அடியவர்க்குமெய்யனே! மழைபெய்யும்போது தோன்றி க்ஷணத்திலேயே அழிகின்ற நீர்க்குமிழிபோல் நிலையற்ற ப்ரபஞ்சம் முழுதும் ப்ரளயகாலத்தில் அழிந்தபோதினும் உன் ஸ்வரூபம் ரூபம் குணம் முதலியவற்றில் சிறிதும் மாறுபாடின்றி நீ ப்ரகாசிக்கின்றாய்; ஸகல வேதாந்தங்களையும் ஆய்ந்துபார்த்தால் ச்ரிய:பதியான நீயே பரதத்துவமென்று நிச்சயம் செய்யும்படி நிற்கின்றாய்; உனக்குப் பெருமையைத் தருகின்ற பிராட்டிக்கும் நீ பெருமையைத் தந்து, சந்திரன் நிலவுடன் பிரியாதுநிற்பதுபோல் நீயும் அவளுடன் கூடிநின்று ப்ரகாசிக்கின்றாய்; ஒருகாலும் அவியாத ரத்நதீபமாய் நின்று உலகிற்கு அறிவுச் செல்வத்தையளித்து, ஆச்ரிதர்கள் அநுபவிக்கத் தெவிட்டாத அம்ருத ஸமுத்ரமாய் நிற்கின்றாய்; கடலுள் பலவகையான சிறந்த ரத்னங்கள் விளங்குவதுபோல் உன்னிடம் திருக்கல்யாணகுணங்கள் அனைத்தும் இடம்பெற்றுநிற்க, அவற்றுள் நீசர்களுடனும் கலந்து பரிமாறுதலாகிய ஸௌசீல்யமென்னும் குணம் எல்லையற்று நிற்கப்பெறுகின்றாய்; குடிகளின் பிழையைப் பொறுத்துக் காக்கின்ற மஹாராஜனைப்போல் அடியவர்களின் அபராதங்களைத் திருவுள்ளத்திற் கொள்ளாது கருணையால் க்ஷமித்து அவர்களைக் காத்தருள்கின்றாய்; ஸர்வப்ரகாரங்களாலும் உயர்ந்துநிற்கும் நீ மிகத் தாழ்ந்துநிற்கும் எம்போன்ற நீசர்களுடன் ஒருநீராகக் கலந்துநிற்க ஒருப்பட்டு எங்களுக்கு அருள் புரிவதற்காகத் திருவயிந்திரபுரத்தில் அர்ச்சைவடிவங்கொண்டு நித்யவாஸம் செய்கின்றனை; விசித்ரமான நீலரத்னம்போல் ப்ரகாசிக்கும் உன் திருமேனியில் ஸகலதத்துவங்களையும் திருவாபரணங்களாகவும் திருவாயுதங்களாகவும் தாங்கி நிற்கின்றாய்; பரவாஸுதேவனாக ஸ்ரீ வைகுண்டத்தில் நிற்கின்றாய்; பின், பக்தர்கள் த்யானிக்க எளிதாயிருக்குமாறு வாஸுதேவன் ஸங்கர்ஷணன் ப்ரத்யும்நன் அநிருத்தன் என்ற நான்கு வ்யூஹவடிவங்களையும் கொள்வதுடன் அவற்றிலிருந்து உண்டாகிய கேசவன் முதலிய பன்னிரண்டு வடிவங்களுடன் பாகவதர்களுடைய சரீரத்தின் பாகங்களில் புண்ட்ரரூபமாய் நிற்கின்றாய்; பின் ஸம்ஸாரிகளின் கர்மங்களைப் போக்கிக் காக்க நினைந்து மத்ஸ்யம் கூர்மம் முதலிய பத்து விபவாவதாரங்களையும் எடுத்துக்கொண்டு நின்று, பாகவதர்கள் உன் திருமேனியைக் கண்டு ஸ்ரீவைகுண்டத்தில் அநுபவிக்கும் பரமாநந்தத்தை இக்கர்மபூமியிலேயே அநுபவிக்கச்செய்கின்றாய்; ப்ரபஞ்சத்திற்கெல்லாம் ஒரே ஆத்மாவாய்ப் பிராட்டியோடு நிற்கும் நீ சேதநாசேதநங்களெல்லாம் தன் திருமேனியின் ஏகதேசத்திலே ஒட்டிக் கிடக்கும்படி அவற்றைத் தாங்கி விராட்ஸ்வரூபனாய் நின்று மகிழ்கின்றாய்; ஒருவரும் அறியாதபடி 'கறந்த பாலுள் நெய்' போல் ஸகல வஸ்துக்களிலும் அந்தர்யாமிவடிவங்கொண்டு தங்கி, அதையறிந்தவர் அனைவரும் அதிசயிக்குமாறு நிற்கின்றாய்; இத்தகைய பெருமைமிக்க உன்னையன்றி எம்மைக் காக்க வேறு கதி காண்கிலோம். உன் ஸ்வரூபம் ரூபம் குணம் விபூதி ஆகியவற்றைப் பேச அபௌருஷேயமாய்

அநாதியாய் நிற்கும் வேதம் ஒன்றே துணிந்து முற்படுமேயன்றி மற்றவரால் முடியுமோ? (முடியாது)—என்றவாறு.

இப்பாசுரத்தில் ஸ்வரூபநிரூபகதர்மங்கள் ஐந்தும் கூறப்பட்டன. அவை பின்வருமாறு:— 'நந்துதலில்லா' என்னுமதால் ஸத்யத்வமும், 'நல்' என்னுமதால் அமலத்வமும், 'விளக்கு' என்றதால் ஜ்ஞாநத்வமும், 'அந்தமில்' என்றதால் அநந்தத்வமும், 'அமுதவாழி' என்றதால் ஆநந்தத்வமும் ஸூசிப்பிக்கப்பட்டன. ஸ்வரூபநிரூபக தர்மங்களின் விளக்கம் 243-வது பாசுரவுரைக்குறிப்பிற் காண்க.

தத்துவங்கள் அஸ்த்ரங்களாகவும் அணிகளாகவும் நிற்கும் முறையை 80-வது பாசுரவுரையிற் காண்க.

இப்பாசுரத்தில் த்வயத்தின் முற்பகுதியின் பொருளும் குறிக்கப்படுகின்றது— 'நின் திருத்தனக்கு' என்றதால் 'ஸ்ரீமத்' சப்தத்தின் அர்த்தமும், 'சீர்க்கணஞ் சேர்ந்த.........' என்றதால் 'நாராயண' சப்தத்தின் அர்த்தமும், 'மன்னுருவில்' என்றதால் திருமேனியை ஸூசிப்பிக்கும் சரணசப்தத்தின் அர்த்தமும், 'அடைக்கலம்' என்றதால் 'சரண' சப்தம், 'ப்ரபத்' வினைப்பகுதி இவற்றின் அர்த்தமும், 'கண்டிலங்கதி' என்றதால் தன்மையொருமைவிகுதியின் அர்த்தமும் கூறப்பட்டன. த்வயத்தின் அர்த்தவிளக்கம் துவயச்சுருக்கு-உரையிற் காண்க.

[ஸ்ரீதேசிகன் பெருமாள்கோயிலினின்று திருவயிந்திரபுரத்திற்கு எழுந்தருளிய பின் பேரருளாளனும் ஸ்வாமிக்காக அங்கு எழுந்தருளியதாகவும் இதைக் கருதியே 'அயிந்தைமாநகரிலமர்ந்தனேயெமக்காய்' என்னப்பட்டதாகவும் பெரியோர் பணிப்பர்.] 4

நிச்சய ஜ்ஞாநம் பெற்றுத் தெய்வநாயகனுக்கு அடிமையாதல்

நேரிசைவெண்பா

351 தூமறையி னுள்ளந் துளங்காத் துணிவுதரு
மாமறிவா லார்ந்தடிமை யாகின்றேம்—பூமறையோன்
பாரா யணத்திற் பணியு மயிந்தைநகர்
நாரா யணனுக்கே நாம். 5

உரை:—பூ மறையோன் – நாபிக்கமலத்தில் அவதரித்து வேதப்ரவசனம்செய்யும் ப்ரஹ்மா, பாராயணத்தில் பணியும் – வேதங்களின் அநுஸந்தாநத்தில் வணங்குகின்ற, அயிந்தை நகர் நாராயணனுக்கே – திருவயிந்திரபுரத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீமந்நாராயணனுக்கே, தூ மறையின் – பரிசுத்தமான வேதத்தின், உள்ளம் – தாத்பர்யத்தில், துளங்காத் துணிவு தரும் – கலங்காத நிச்சயார்த்தத்தைத் தருகின்ற, ஆம் அறிவால் நாம் ஆர்ந்து – ஏற்ற ஜ்ஞாநத்தால் நாம் நிறைந்து, அடிமை ஆகின்றேம் – தாஸர்களாக ஆகின்றேம்.

நாம் அபௌருஷேயமான வேதாந்தங்களில் மிகப் பரிசயம் செய்து ஒன்றாலும் கலக்கமுடியாத நிச்சயஜ்ஞானத்தைப் பெற்றோம். இதனால் எக்காலத்திலும் வேதங்களை ப்ரவசநம் செய்யும் ப்ரஹ்மாவினாலும் அந்த வேதங்களால் போற்றப்படுமவனெனக் கொண்டாடி அடிபணியப்படும் தெய்வநாயகனுக்கு நித்யதாஸராய்நிற்கும் பெருமை பெற்றோம்--என்றவாறு.

இங்கு 'நாராயணனார்க்கே நாம் அடிமையாகின்றோம்' என்ற தொடரால் த்வயத்தில் பிற்பகுதியிலுள்ள 'ஸ்ரீமதே நாராயணாய' என்ற தொடரின் அர்த்தமும், 'துளங்காத் துணிவு' என்றதால் 'நம:' என்ற சப்தத்தின் அர்த்தமும் கூறப்பட்டன. 5

தலைவியின் நிலைமை கண்டு தோழி இரங்கிப்பேசுதல்

கட்டளைக்கலித்துறை

352 ஆர்க்குங் கருணை பொழிவா னயிந்தையில் வந்தமர்ந்த
கார்க்கொண் டலைக்கண்ட காதற் புனமயில் கண்பனியா
வேர்க்கு முகிழ்க்கும் விதிர்விதிர்க் கும்வெள்கி வெவ்வுயிர்க்கும்
பார்க்கின் றவர்க்கிது நாமென்கொ லென்று பயிலுவமே. 6

உரை:— ஆர்க்கும் – யாவருக்கும், கருணை பொழிவான் – கருணை (யாகிய நீரைப்) பொழிவதற்காக, அயிந்தையில்–திருவயிந்திரபுரத்தில், வந்து அமர்ந்த – எழுந்தருளி நித்யவாஸம்செய்கின்ற, கார்க் கொண்டலைக் கண்ட – (தெய்வநாயகனென்னும்) கரிய மேகத்தைக் கண்ட, காதல் புனமயில் – காதலையுடைய மலையைச் சார்ந்த சோலையிலுள்ள மயில் (போன்ற சாயலையுடைய தலைவி), கண் பனியா– கண்ணீர்த்துளியரும்பி, வேர்க்கும் – உடல்வியர்க்கும், முகிழ்க்கும் – (அச்சத்தால்) மயிர்க்கூச்செறியும், விதிர்விதிர்க்கும் – நடுங்கும், வெள்கி – வெட்கமுற்று, வெவ்வுயிர்க்கும் – வெய்யதாகப் பெருமூச்சு விடும், பார்க்கின்றவர்க்கு – (இந்நிலைமையைப்) பார்க்கின்றவர்க்கு, நாம் இது என் என்று பயிலுவம்-நாம் இது என்ன என்று கூறுவோம்?. கொல் – அசைநிலை.

கீழே தலைவிக்குத் தெய்வநாயகன் தன் ஸ்வரூபம் ரூபம் முதலியவற்றைக் காட்டிக் கொடுக்க அவள் அவற்றை அனுபவித்து மகிழ்ந்தாள்; பின் அவன் தன் வடிவத்தைச் சட்டென மறைத்துக்கொள்ள அதனால் மனம் பொறாது மிகவும் வருந்திநின்ற அவளது மெய் வேறுபாடுகண்டு தோழி இரங்கிப் பின்வருமாறு கூறுகின்றாள்—

உயர்வு தாழ்வு கருதாது ஆச்ரிதரான அனைவர்மீதும் கருணையாகிய நீரைப் பொழிந்து வாழ்விப்பதற்காகத் திருவயிந்திரபுரத்தில் வந்து எழுந்தருளியுள்ள தெய்வநாயகனாகிய காளமேகத்தைக் கண்ட மலைச்சோலையில் திரியும் மயில் போன்றவளாகிய தலைவி இப்பொழுது

அந்த மேகத்தைப் பிரிந்து கண்ணீர்த்துளியரும்ப, உடல் வியர்க்க, அச்சத்தால் மயிர்க்கூச்செறிய, மேனி நடுங்க, வெட்கமுற்று வெய்ய தாகப் பெருமூச்சுவிடுகின்ற இந்நிலைமையைப் பார்த்துக் கேட்பவர் களுக்கு இது எதனுல் விளைந்ததென்று கூறுவோம்?—என்றவாறு.

ஸ்வாபதேசப்பொருளில் ஸ்ரீதேசிகனுக்குப் பகவதநுபவத்தில் உள்ள ஆர்வத்தின் மிகுதியையும் அது கிடைக்கப்பெருத நிலைமையில் படும் பாட்டையும் கண்டு பாகவதர்கள் வியந்து கூறியதாய்க் கொள்ளலாம். 6

பின்னும் தெய்வநாயகனுடைய குணங்களைப் புகழ்தல்

நிலைமண்டிலவாசிரியப்பா

353 பயின்மதி நீயே பயின்மதி தருதலின்
வெளியு நீயே வெளியுற நிற்றலின்
ருயு நீயே சாயைதந் துகத்தலின்
றந்தையு நீயே முந்திநின் றளித்தலி
னுறவு நீயே துறவா தோழ்தலி
னுற்றது நீயே சிற்றின்ப மின்மையி
ஞறு நீயே யாற்றுக் கருடலி
னறமு நீயே மறநிலை மாய்த்தலின்
றுணைவனு நீயே யிணையிலை யாதலின்
றுய்யனு நீயே செய்யா ளுறைதலின்
காரண நீயே நாரண ஞதலின்
கற்பக நீயே நற்பதந் தருதலி
னிறைவனு நீயே குறையொன் றிலாமையி
னின்பமு நீயே துன்பந் துடைத்தலின்
யானு நீயே யென்னு ளுறைதலி
னெனது நீயே யுனதன்றி யின்மையி
னல்லாய் நீயே பொல்லாங் கிலாமையின்
வல்லாய் நீயே வையமுண் டுமிழ்தலி
னெங்ஙன மாகு மெய்யநின் னியல்பே
யங்ஙனே யொக்க வறிவ தாரணமே. 7

உரை:—பயில் மதி – (உன்னை) அநுபவிக்கவல்ல ஜ்ஞாநத்தை, தருதலின் – அருளியபடியால், பயில் – அநுபவிக்கக்கூடிய, மதி நீயே – சந்திரனும் நீயே; வெளி உற நிற்றலின் – (ஸகலவஸ்துக்களும் உன்னுல்) ப்ரகாசம் அடையும்படி நிற்பதால், வெளியும் நீயே – தேஜஸ்ஸும் நீயே; சாயை தந்து – (தன் திருவடி) நிழலைத் தந்து, உகத்தலின் – மகிழ்ச்சியடைவதால், தாயும் நீயே – (பெற்ற) தாயும் நீயே; முந்தி நின்று – (ஸ்ருஷ்டிக்கு) முன்பு (தனியனுய்) நின்று, அளித்

தலின் – காத்தலின், தந்தையும் நீயே – தகப்பனும் நீயே; துறவாது ஒழிதலின் – எம்மைக் கைவிடாதிருத்தலால், உறவும் நீயே – ஸர்வவித பந்துவும் நீயே; சிற்றின்பம் – (உலகிலுள்ள) அற்பஸுகம், இன்மை யின் – (என் ஸ்வரூபத்திற்குப் பொருந்தியதாக) இல்லாமையால், உற்றதும் நீயே – தக்க பலனும் நீயே; ஆற்றுக்கு – உபாயத்திற்கு, அருள்தலின் – (பலனை) அருள்வதால், ஆறும் நீயே – உபாயமும் நீயே; மற நிலை – பாபங்களின் நிலையை, மாய்த்தலின் – ஒழித்தலின், அறமும் நீயே – தர்மஸ்வரூபியும் நீயே; இணை–(உனக்கு) ஒப்பு, இலையாதலின்– இல்லையாதலால், துணைவனும் நீயே – (எனக்குத் தக்க) ஸஹாயனும் நீயே; செய்யாள் – பெரியபிராட்டி, உறைதலின் – (திருமார்பில்) நித்ய வாஸம்செய்வதால், துய்யனும் நீயே – பரிசுத்தனும் நீயே; நாரணனாத லின் – ஸ்ரீமந்நாராயணனாயிருப்பதால், காரணம் நீயே–ஜகத்காரணமும் நீயே; நல் பதம் – உயர்ந்த ஸ்தாந (மாகிய ஸ்ரீவைகுண்ட) த்தை, தருதலின் – கொடுப்பதால், கற்பகம் நீயே – கற்பகவிருக்ஷமும் நீயே; ஒன்று குறை – ஒரு குறையும், இலாமையின் – இல்லாமையால், இறை வனும் நீயே – ஸர்வேசுவரனும் நீயே; துன்பம் – (ஆச்ரிதர்களின்) துன்பத்தை, துடைத்தலின் – போக்குவதால், இன்பமும் நீயே–ஆநந்த மும் நீயே; என்னுள் – எனக்குள், உறைதலின் – அந்தர்யாமியாயிருப்ப தால், யானும் நீயே – யானும் நின்னில் வேறுபடாதவன்; உனது அன்றி – உனக்குச் சேஷமாயன்றி, இன்மையின் – (ஒருவஸ்துவும்) இல்லையாதலின், எனதும் நீயே–என்னுடைய வஸ்துவும் நீயே; பொல் லாங்கு – தோஷம், இலாமையின் – இல்லாமையால், நல்லாய் நீயே – சிறந்துநிற்பவனும் நீயே; வையம் உண்டு – (ப்ரளயத்தில்) உலகத்தை விழுங்கி, உமிழ்தலின் – (ஸ்ருஷ்டிகாலத்தில்) உமிழ்தலால், வல்லாய் நீயே – ஸமர்த்தனும் நீயே; மெய்ய – அடியவர்க்குமெய்யனே!, நின் இயல்பு – உன் ஸ்வபாவம், எங்ஙனம் ஆகும் – எவ்வாறு இருக் கின்றதோ, அங்ஙனே ஒக்க–அவ்வாறே பொருந்துமாற்றால், அறிவது – அறியவல்லது, ஆரணமே – வேதமே (ஆகும்).

கீழ்க் கூறியவாறு தெய்வநாயகன் ஸ்ரீதேசிகனுக்குத் தன் ஸ்வ ரூபம் முதலியவற்றைக் காட்டி மறைய, ஸ்வாமியும் மனந்தளர்ந்து தம்மை அவன் உபேக்ஷிப்பதற்குக் காரணம் அவனுக்குத் தம்மீது கருணையில்லாமையா, அவனை அநுபவிக்கத் தமக்கு அதிகாரம் இல்லாமையா என்று திகைத்து மனம்புண்ணுகின்றார். இதைக் கண்டு மனம் வருந்திய தெய்வநாயகனும் எதிரே வந்துநின்று "உம் மிடம் நான் கலவாது நிற்பதற்கு நீர் கருதும் இரண்டும் காரணமல்ல. மனுஷ்யாவதாரத்தில் மானிடமுறையைக் கடவாது நடந்தாற்போல் அர்ச்சாவதாரத்திலும் அம்முறை அழியாதிருப்பதற்காக உம்மோடு அணையாது வாளாவிருக்கின்றேன். சோகியாதீர்" என்று ஸமாதாநம் செய்து முன் காட்டாத சில குணங்களைக் காட்டியருள, அவற்றை அநுபவித்துப் பின்வருமாறு பேசுகின்றார்—

அடியவர்க்குமெய்யனே! உன் ஸ்வரூபம் ரூபம் முதலியவற்றை அநுபவிக்கும்படி விசேஷஜ்ஞானத்தை நீ எமக்கு அருளுவதால் தன் நிலவினுல் உலகமுழுவதும் ப்ரகாசிக்கச்செய்யும் குளிர்ந்த சந்திரனுக விளங்குகின்ருய்; உலகில் ப்ரகாசமுள்ள ஸகலவஸ்துக்களும் நீ கொடுத்த ப்ரகாசத்தின் திவலையை வைத்துக்கொண்டு ப்ரகாசிப்பதால் தேஜோமயன் எனப்படுகின்ருய்; உன் திருவடிநிழலின்கீழ் அனைத்தை யும் அடக்கி க்ஷேமமுறச்செய்வதால் அனைத்துக்கும் பெற்ற தாயாயிருக்கின்ருய்; ப்ரளயகாலத்தில் நீ தனியாய் நின்று அசேதநம் போலக் கிடக்கும் ஜீவவர்க்கத்திற்குச் சரீரம் இந்த்ரியம் இவற்றைக் கொடுத்துப் படைத்துக் காப்பதால் அனைத்துக்கும் தந்தையா கின்ருய்; ஒருபோதும் எம்மைக் கைவிடாதுநின்று காப்பதால் ஸகலவிதபந்துவும் நீயேயாகின்ருய்; உலகிலுள்ள அற்பஸுகங்கள் மோக்ஷத்தை விரும்பும் எங்கள் ஸ்வரூபத்திற்கு ஏற்றவையாகா வாதலின் நீயே எங்களுக்குத் தக்க புருஷார்த்தமாகின்ருய்; நாங்கள் அநுஷ்டிக்கும் உபாயத்தால் எங்கள்மீது அருள்புரிந்து பலனைத் தருவ தால் நீயே முக்கியமான உபாயமாய்நிற்கின்ருய்; எங்கள் பாபங்கள் முழுவதையும் ஒழிப்பதால் நீயே தர்மஸ்வரூபியாய் நிற்கின்ருய்; உனக்குச் சமமான வேறொருவன் இல்லாமையால் நீயே எங்களுக்கு ஏற்ற ஸஹாயமாய் நிற்கின்ருய்; எங்கள்மீது உனக்கு உண்டாகும் மனக்கலக்கத்தை நீக்கவல்ல பெரியபிராட்டி உன் திருமார்பில் நித்ய வாஸம்செய்வதால் மனக்கலக்கம் நீங்கிப் பரிசுத்தனுகின்ருய்; நாராயணசப்தத்தால் கூறப்படுவதால் நீயே ஜகத்துக்குக் காரண மாகின்ருய்; உயர்ந்த ஸ்தாநமாகிய ஸ்ரீவைகுண்டத்தையும் அளிப்ப தால் நீயே நினைத்ததைத் தரும் கற்பகவிருக்ஷமாகின்ருய்; ஸ்வரூபம் ரூபம் குணம் விபூதி ஆகியவற்றில் ஒன்றிலும் ஓர் அம்சத்திலும் குறை வில்லாதவனுதலின் நீயே ஸர்வேசுவரனுகப் பிரகாசிக்கின்ருய்; எங்களுக்கு வரும் துன்பத்தை உடனே நீக்கிக் காப்பதால் நாங்கள் உன்னைப் பரமபோக்யமாக அநுபவிக்கும்படி ஆநந்தஸ்வரூபமாய் நிற்கின்ருய்; 'கறந்த பாலுள் நெய்' போல் எங்களுட் புகுந்து அந்தர் யாமியாய் நிற்பதால் எங்களைக் காட்டும் சப்தங்களாலும் நீயே கூறப் படுகின்ருய்: இந்தப் பிரபஞ்சத்தில் உனக்கு உரியதல்லாத ஒரு வஸ்து வும் இல்லையாதலின் எம்முடையதாகக் கருதப்படும் வஸ்துவுக்கும் நீயே ஸ்வாமியாகின்ருய்; ப்ரபஞ்சத்திலுள்ள தோஷம் உன்னிடம் தட்டாது நீ நிற்பதால் திருக்கல்யாணகுணங்களால் நீயே சிறந்து நிற்கின்ருய்; ப்ரளயகாலத்தில் ப்ரபஞ்சம் முழுவதையும் உன் திருவயிற் றில் வைத்துக்காத்துப் பின் படைப்பதால் நீயே ஸர்வவிதசக்தியையும் உடையவனுகின்ருய்; இவ்வாறு அதிசயிக்கத்தக்க உன் பெருமையைப் பேச வேதங்களே ஒருவாறு முற்படும். எங்களால் இயலாது— என்றவாறு. 7

தெய்வநாயகனது பரத்வமும் ஸௌலப்யமும்

நேரிசைவெண்பா

354 ஆரணங்க டேட வயிந்தைநகர் வந்துதித்த
காரணராய் நின்ற கடல்வண்ணர்—நாரணனு
ரிப்படிக்கு மிக்கன் றெடுத்தபா தங்கழுவ
மெய்ப்படிக்க மானதுபோன் வெற்பு. 8

உரை :— ஆரணங்கள் தேட – வேதங்கள் தேடிநிற்க, அயிந்தைநகர் வந்து உதித்த – திருவயிந்திரபுரத்தில் வந்து திருவவதரித்தவரும், காரணராய் நின்ற – (ஸகலஜகத்துக்கும்) காரணமாய் நின்றவரும், கடல் வண்ணர் – கடல்போன்ற நிறத்தையுடையவருமான, நாரணனுர் – ஸ்ரீமந்நாராயணனுராகிய அடியவர்மெய்யர், அன்று – (த்ரிவிக்ரமனுக ஆன) அன்று, இப்படிக்கு மிக்கு – இப் பூலோகத்தின் கண் மிக உயர்ந்து, எடுத்த – (ப்ரஹ்மலோகம் வரையில்) தூக்கிய, பாதம் கழுவ – திருவடியை (ப்ரஹ்மா) திருமஞ்சனம் செய்ய, பொன் வெற்பு – தங்கமலையாகிய மேரு, மெய்ப் படிக்கம் ஆனது – உண்மையான (தீர்த்தத்தை) ஏந்தும் பாத்திரமாக ஆயிற்று.

அடியவர்க்குமெய்யன், த்ரிவிக்ரமாவதாரத்தில் இந்தப் பூமி முழுவதையும் ஒரு திருவடியால் அளந்து மற்றொரு திருவடியை ப்ரஹ்மலோகத்தளவும் செல்லவிட்டபோது ப்ரஹ்மதேவன் அந்தத் திருவடிக்குத் திருமஞ்சனம் செய்ய அவ்வமயம் மஹாமேருபர்வதம் அந்தத் தீர்த்தத்தை ஏந்துகின்ற திருப்படிக்கமாய்நின்றது. என்னே அவன் பெருமை!!! வேதங்கள் அனைத்தும் ஸகலஜகத்காரணமான அவனது பெருமையைக் காணமுடியாது தேடிநிற்க, அவன் இக்கர்மபூமியிலுள்ள அடியார்களைக் காக்க நினைந்து திருவயிந்திரபுரத்தில் வந்து அவதரித்து அனைவர்க்கும் காட்சி தந்து நிற்கின்றுன். என்னே அவன் ஸௌலப்யம் (எளிமை)!!!—என்றவாறு.

இப்பாசுரத்தில் ச்ரிய: பதியானவன் யாசிப்பவனுனதும், பிராட்டியைப் பிரியாதவன் ப்ரஹ்மசாரியானதும், குறளுருவம் கொண்டவனே த்ரிவிக்ரமனுய் வளர்ந்ததும், ஸர்வேசுவரன் தனது பூமியைத் தானே பலியிடம் யாசிக்க நேர்ந்ததும், ஈசுவரர்களெனப் பட்ட இருவருள் தந்தை திருவடியைத் தீர்த்தத்தால் விளக்க – தனயன் அத்தீர்த்தத்தைத் தன் முடியால் ஏந்தியதும், இத்துணை அற்புதமும் போதாதவாறு மஹாமேரு அத்தீர்த்தத்தை ஏந்தும் பாத்திரமாகியதும் வியப்பின்மேல் வியப்பாகும் எனக் குறித்த சுவை அறிக. 8

இங்ஙனம் அடியவர்க்கு மெய்யன் தன் வடிவத்தைக் காட்டுவதும் மறைவதுமாயிருக்க, பூர்ணுநுபவம் கிடைக்கப்பெருத தலைவி வருந்திப் பெரிய மயக்கத்தையடைய, தலைவியின் செவிலித்தாய் தலைவி படும்பாட்டைக் கண்டு நற்றுய்க்குக் கூறுகின்றுள்—

செவிலித்தாய் நற்றாய்க்குக் கூறல்

கட்டளைக்கலித்துறை

355 வெற்புட ளொன்றி யயிந்தையில் வெவ்வினை தீர்மருந்தோன்
றற்புத மாக வமர்ந்தமை கேட்டருள் வேண்டிநிற்கப்
பற்பி லமர்ந்தசெய் யாள்படி காட்டிய பண்புடையெம்
விற்புரு வக்கொடிக் கோர்விலங் காமயல் பெற்றனமே. 9

உரை :— அயிந்தையில் – திருவயிந்திரபுரத்தில், வெவ் வினை தீர் – கொடிய கர்மங்களைப் போக்கவல்ல, ஒன்று மருந்து – ஒப்பற்ற (தெய்வநாயகனென்னும்) மருந்து, வெற்புடன் ஒன்றி – (ஔஷதாத்ரி யென்னும்) திருமலையோடு ஒன்றுபட்டு, அற்புதமாக – அத்யாச்சர்ய மாக, அமர்ந்தமை கேட்டு – நித்யவாஸம்செய்வதைக்கேட்டு, அருள் வேண்டி நிற்க – (அதன்) கடாக்ஷத்தை வேண்டி நிற்க, பற்பு இல் அமர்ந்த – தாமரையாகிய ஸ்தாநத்தில் எழுந்தருளியுள்ள, செய்யாள் – பெரியபிராட்டியுடைய, படி காட்டிய – ப்ரகாரங்களை நினைவூட்டிய, பண்புடை – ஸ்வபாவத்தையுடைய, எம் வில் புருவக் கொடிக்கு – வில்லையொத்த புருவத்தையுடைய கொடிபோன்ற எங்கள் பெண்ணுக்கு, விலங்கா ஓர் மயல் – நீங்காத ஒரு மயக்கம், பெற்றனம்– வரப்பெற்றோம்.

உலகில், மலைகளில் காணப்படும் மருந்து மாந்தரின் நோய் தீர்க்க வல்லதாகும். திருவயிந்திரபுரத்தில் ஔஷதாத்ரியிலிருக்கும் அடியவர்க்கு மெய்யனென்னும் மருந்து கர்மங்களையும் தீர்க்க வல்லதாம் என்ற இதன் அற்புதசக்தியைக் கேட்டு அம்மருந்தை அடைய என் மகள் விரும்பிநின்றாள். தாமரையாகிய ஸ்தாநத்தில் வஸிக்கும் பெரியபிராட்டியைப்போல் என் மகளும் அடியவர்க்கு மெய்யனைப் பிரிந்து தரியாதவள். வில்லைப்போன்ற அவள்புருவமும் தங்கக்கொடியைப்போன்ற அவள்மேனியும் கண்டோரைத் தோற் பித்து அடிமையாக்குவனவன்றோ? இத்தகைய என் மகள் தன் காதலனான அடியவர்மெய்யனது கலவியைப் பெறாமல் பெரிதும் மயங்கிக் கிடக்கின்றாள்—என்றவாறு.

இது அகப்பொருளில் 'செவிலித்தாய் அறத்தொடுநிற்றல்' என்னும் துறையாகும். செவிலித்தாய் அறத்தொடுநிற்றலாவது — தலைவியை மணம் பேசி அயலார் வர, அதை அறிந்த செவிலித்தாய் தலைவியின் கற்புக்கு இழுக்கு நேராதவாறு தாயினிடம் தலைவியின் முன்நிகழ்ச்சி கூறி அயலார்க்கு உடம்படாது தடுத்தல்.

ஸ்வாபதேசப்பொருளில் ஸ்ரீதேசிகன் அடியவர்மெய்யனது பரிபூர்ணாநுபவத்தைப் பெறப் பேராவல்கொண்டு பித்தராய்நிற்கும் நிலையைப் பாகவதர் வியந்துபேசியதாய்க் கொள்ளலாம். 9

தெய்வநாயகனது பெருமை பேசல்

நிலைமண்டிலவாசிரியப்பா

356 பெற்றனை நீயே மற்றுள வெல்லாம்
பெறுவது நின்னை யுறுவது கோள்வார்
நின்னா லன்றி மன்னா ரின்ப
நின்ன் போருட்டுநீ யேன்ன் போருட்டிலை
நின்னுரு நின்று மின்னுருத் தோன்று
நின்றனக் குநிகர் நின்னடி யடைவார்
நின்பா லன்றி யன்பா லுய்யார்
வாரண மழைக்க வந்த காரணனே.

உரை:—வாரணம் அழைக்க – கஜேந்திரன் அழைக்க, வந்த காரணனே – (அப்போதே) வந்துகாத்த காரணவஸ்துவான தெய்வ நாயகனே!, மற்று உள எல்லாம் – மற்றும் உள்ள (சேதநாசேதநங்களை) எல்லாம், நீயே பெற்றனை - நீயே படைத்தாய்; உறுவது கொள்வார் – தக்க உபாயத்தையும் பலனையும் கொள்வார், பெறுவது நின்னை - உபாயமாகவும் பலனாகவும் கொள்வது நின்னையே; நின்னால் அன்றி– உன்னால் அன்றி (வேறொருவராலும்), இன்பம் மன்னார் – ஸுகத்தைப் பெறமாட்டார்கள்; நீ நின்பொருட்டு – நீ (செய்யும் காரியங்கள்) உனக்காகவே; என்பொருட்டு இல்லை – எனக்காக இல்லை; நின் உருநின்றும் – உன் திருமேனியிலிருந்து, மின் உரு – மின்போல் நிலையற்ற தாவரஜங்கமங்கள் அனைத்தும், தோன்றும் – பிறக்கின்றன. நின் அடி அடைவார் – உன் திருவடிகளை அடைவார், நின் தனக்கு நிகர் – உனக்குச் சமமாவார்; நின்பால் அன்பால் அன்றி – உன்னிடம் பக்தியால் அன்றி, உய்யார் – உஜ்ஜீவிக்கமாட்டார்கள்.

அடியவர்க்குமெய்யன், தன் விஷயத்தில் இவ்வாறு அடங்காக் காதல்கொண்டுள்ள இவருக்கு இனியும் முகங்கொடாதொழிந்தால் ஸர்வரக்ஷகனான தன் பெருமைக்குக் குறைவு வந்து இவரையும் இழக்க நேரிடுமென்று அஞ்சித் தன்னை நன்கு அநுபவிக்கச்செய்தான். இங்ஙனம் செய்த அவன் பெருமை இப்பாசுரத்தில் பேசப்படுகின்றது.

முதலையின் வாய்ப்பட்டுத் துன்புற்ற கஜேந்த்ரன் ‘ஆதிமூலமே’ என்று அழைக்க அப்பொழுதே ஓடிவந்து அவனைக் காத்து ஜகத் காரணமென்ற பெயரை ஸ்தாபித்துக்கொண்ட அடியவர்க்கு மெய்யனே! சேதநாசேதநங்களையெல்லாம் படைத்த உன்னையே ஆச்ரிதர்கள் தம் ஸ்வரூபத்திற்குத் தக்க உபாயமாகவும் பலனாகவும் கொள்கின்றார்கள்; பரமாநந்தமாகிய மோக்ஷத்தைக் கொடுப்பவன் நீயே அன்றி, வேறு எவர்க்கும் அதைக் கொடுக்கச் சக்தியில்லை. நீ மற்ற வர்க்காக எதைச் செய்திடினும் அதனால் வரும் பலனை முடிவில்

அடைபவன் நீயே; ஸகல வஸ்துக்களும் உன் திருமேனியிலிருந்து பிறந்தவை; உன்னை வணங்கி வழிபடுமவர் உனக்குச் சமமாவர்; உன்னிடம் பக்தியுள்ளவர்களன்றி மற்றவர் உஜ்ஜீவிக்க வழியில்லை— என்றவாறு. 10

இதற்குப் பின் உள்ள 20 பாசுரங்களும் மறைந்துவிட்டன.

மும்மணிக்கோவை — உரை முற்றிற்று

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

ஸ்ரீ:

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

நவமணிமாலை-உரை

[விஷயச்சுருக்கம்]

இந்த ப்ரபந்தத்தை நவரத்தினமாலையென்றும் வழங்குவதுண்டு. ஆனால் ஸ்வாமி தாமே பெயரிட்டுக்கொடுத்தபடி நவமணிமாலை என்று வழங்குவதே முறையாகும். தமிழ்ப்பிரபந்தங்களுக்குக் கூறிய இலக்கண நூலிலும் 'நவமணிமாலை' யென்ற பெயரே வழங்குகின்றது. வெவ்வேறு நிறமுடைய நவமணிகளால் இயன்ற ஹாரம்போல வெவ் வேறு செய்யுள்கள் ஒன்பது அமையப்பெற்றதாகையால் இதற்கு நவமணிமாலையெனப் பெயர் வந்தது.

இப்பிரபந்தத்தில் முதலில் திருவயிந்திரபுரத்து எம்பெருமானுடைய திருவடிகளின் பெருமையைப் பேசி, பின் அவன் பத்து அவதாரங்களெடுத்த வரலாற்றையும், ப்ரஹ்மா கருடன் திருவநந்தாழ்வான் பூமிதேவி ஆகிய இவர்கள் படைத்த புண்யதீர்த்தங்களை அவன் உகந்து அவற்றின் கரையில் எழுந்தருளியிருப்பதையும் கூறி, மாசிமாதத்தில் தெய்வநாயகன் கடற்கரைக்கு எழுந்தருளித் திருமணற்றேப்பில் கண்டருளும் உத்ஸவத்தைப் புகழ்ந்து, அவ்வெம்பெருமானுடைய வடிவழகையும் அதில் ஈடுபட்டு அதை மறவாதவர்க்கு ஸம்ஸாரபந்தம் நீங்கும்வண்ணத்தையும் வெளியிட்டு, தம்முடைய அந்த்யகாலத்தில் தமக்கு அபயப்ரதானம் செய்யுமாறு தெய்வநாயகனை வேண்டிக்கொண்டு, தெய்வநாயகன் தன்னைப் பாடும்படி தம்மை நியமித்ததற்கிணங்கத் தாம் அவன்மீது வடமொழியில் இரண்டும், தமிழில் ஏழுமாக ஒன்பது ப்ரபந்தங்களைப் பாடியதையும் மொழிந்து தலைக்கட்டுகிறார் ஸ்ரீதேசிகன்.

தெய்வநாயகன் திருவடிகளின் பெருமை

பதினறுசீராசிரியச்சந்தவிருத்தம்

357 ஒருமதி யன்பரு ளங்க வர்ந்தன
வுலகம டங்கவ ளர்ந்த ளந்தன
வொருசடை யொன்றிய கங்கை தந்தன
வுரகப டங்கள ரங்கு கொண்டன
தருமமு யர்ந்ததி தென்ன நின்றன
தருமனி ரந்ததி சைந்து சென்றன
சகடமு டைந்துக லங்க வென்றன
தமர்கள ருந்தும ருந்தி தென்பன
திருமகள் செய்யக ரங்க ளொன்றின
திகழ்துள வுந்தும ணங்க மழ்ந்தன
செழுமணி கொண்டசி லம்பி லங்கின
சிலைதனி லன்றுர ணங்கு மிழ்ந்தன
வருமறை யந்தம மர்ந்த பண்பின
வயன்முடி தன்னில மர்ந்து யர்ந்தன
வருடர வெண்ணிய யிங்தை வந்தன
வடியவர் மெய்யர்ம லர்ப்ப தங்களே. 1

உரை:— அடியவர்மெய்யர் - அடியவர்க்குமெய்யருடைய, மலர்ப் பதங்கள் – (தாமரை) மலர்போன்ற திருவடிகள், ஒரு மதி அன்பர் - (தம்மிடம்) ஒருமுகப்பட்ட பக்தியையுடைய பாகவதர்களின், உளம் கவர்ந்தன – மனத்தை வசப்படுத்திக்கொண்டன; உலகம் அடங்க – ஸகலலோகங்களும் (தமக்குள்) அடங்குமாறு, வளர்ந்து அளந்தன - (பெரியனவாய்) வளர்ந்து அளந்தன; ஒரு சடை ஒன்றிய–(சிவனுடைய) நிகரற்ற ஜடையில் ஒன்றுபட்டு நிற்கின்ற, கங்கை தந்தன – கங்கையைப் பிறப்பித்தன; உரக படங்கள் – (காளியனென்னும்) பாம்பின் படங்களை, அரங்கு கொண்டன – நடனஸ்தலமாகக் கொண்டன; உயர்ந்தது தருமம் – சிறந்ததாகிய உபாயம், இது என்ன நின்றன – இந்தத் திருவடியிணையே என்று அறியும்படி நின்றன; தருமன் இரந்தது – தர்மபுத்திரன் (தூதுசெல்லும்படி) யாசித்ததை, இசைந்து சென்றன – ஏற்று நடந்தன; சகடம் உடைந்து கலங்க – (கண்ணனை நலியவந்த) சகடமாகிய அஸுரன் சிதைந்து கலங்குமாறு, வென்றன – வெற்றிகொண்டன; இது – இந்தத் திருவடியிணை, தமர்கள் அருந்தும் – பாகவதர்கள் (ஸம்ஸாரநோய்தீர) உண்ணக்கடவதான, மருந்து என்பன – அமுதம் என்று சொல்லப் படுவன; திருமகள் – பெரியபிராட்டியாருடைய, செய்ய கரங்கள் – சிவந்த திருக்கைகளோடு, ஒன்றின – ஒன்றுபட்டுநின்றன; திகழ் துளவு உந்தும் – பிரகாசிக்கின்ற திருத்துழாயினின்று எழுப்பப்

பெற்ற, மணம் கமழ்ந்தன – நல்ல வாஸனை வீசப்பெற்றன; செழு மணி கொண்ட – செழுமையான ரத்னங்கள் உள்ளிட்ட, சிலம்பு இலங்கின – சிலம்புகளோடு விளங்கின; அன்று – ஸ்ரீராமாவதாரத்தில், சிலைதனில் – கல்லுருவில் (நின்ற), ஓர் அணங்கு – ஒரு பெண்ணை, உமிழ்ந்தன – வெளிவரச்செய்தன; அரு மறை அந்தம் – அருமையான வேதாந்தங்களில், அமர்ந்த – பொருந்திய, பண்பின – சிறப்புடையன; அயன் முடிதன்னில் – ப்ரஹ்மாவின் முடியில், அமர்ந்து – பொருந்தி, உயர்ந்தன – (இன்னும் மேலே சென்று) உயர்ந்துநின்றன; அருள் தர எண்ணி – அருள் புரியக் கருதி, அயிந்தை வந்தன – திருவயிந்திரபுரத்தில் வந்து அவதரித்தன.

அடியார்களிடம் மெய்யனாய் ஒழுகும் தெய்வநாயகனுடைய இரண்டு திருவடிமலர்களும் அவற்றைத் தவிர வேறு உபாயத்தையும் பலனையும் கொள்ளாத பரமைகாந்திகளின் உள்ளத்தைக் கவர்ந்து எப்பொழுதும் தியானிக்கச்செய்யும் பெருமையுடையன; த்ரிவிக்ரமாவதாரத்தில் ஸகல லோகங்களும் தமக்குள் அடங்கியிருக்குமாறு மிகப் பெரியனவாய் வளர்ந்து ஓங்கி நின்றன; சடையனென்று பேசப்படும் சிவன் தன் பெரிய சடைமுடையில் தாங்கிப் பரிசுத்தனும்படி கங்காநதியை அவதரிப்பித்தன; கிருஷ்ணவதாரத்தில் துஷ்ட நிக்ரஹம் செய்யமுற்பட்டுக் காளியனென்னும் ஸர்ப்பராஜனுடைய படங்களைத் தமக்கு நடனஸ்தலமாகக்கொண்டு நடனம் செய்தன; அடியார்களுக்கு முக்கியமான உபாயமாய்நின்று பலனை அளிக்கவல்லன; தர்மபுத்திரன் வேண்டுகோளுக்கு இணங்கித் துர்யோதனனிடம் தூதுசெல்லவும் துணிந்தன; கண்ணனை நலியத் துணிந்துவந்த அஸுரனுடைய சகடவடிவத்தைத் துகள்துகளாக உடைத்து வெற்றிபெற்றன; ஸம்ஸாரதாபத்தைப் போக்க அடியார்கள் அருந்தும் ஆராத அமுதமென்று சாஸ்த்ரங்களால் பேசப்பெற்றன; பெரியபிராட்டி தன் தளிர்க்கைகளால் வருடும்போது அவற்றோடு இணைந்துநின்றன; எப்பொழுதும் திருத்துழாய்மணம் வீசப் பெற்றன; சிறந்த ரத்னங்களைக்கொண்ட சிலம்புகளும் தம்முடன் ஸம்பந்தம் பெற்று அழகுபெறுமாறுசெய்து பிரகாசித்தன; ஸ்ரீராமாவதாரத்தில் கௌதமசாபத்தால் கல்லாய்நின்று மறைந்திருந்த அஹல்யையைப் பழைய வடிவுகொள்ளுமாறு அருள்புரிந்தன; ஸகலவேதாந்தங்களிலும் நித்யமாய்ப் போற்றப்படுவன; த்ரிவிக்ரமாவதாரத்தில் ப்ரஹ்மலோகம் சென்ற போது ப்ரஹ்மா திருவாராதனம் செய்து தன் தலையில் சூடிநிற்க அதற்கும் மேல் உயர்ந்துநின்றன; இத்தகைய திருவடிகள் தம்மை இக்கர்மபூமியிலுள்ள அனைவரும் எக்காலமும் அநுபவித்து உய்யுமாறுசெய்யத் திருவயிந்திரபுரத்தில் வந்து அவதரித்தன. என்னே அவற்றின் ஸௌலப்யம்!!!-என்றவாறு. 1

தெய்வநாயகனுடைய தசாவதார சரித்திரம்

3கூ8 இருபத்தெண்சீராசிரியச்சந்தவிருத்தம்

மகரம் வளரு மளவில் பௌவ மடைய வுற்ற லைத்தனே
வடிவு கமட மெனவ மர்ந்து கிரித னைத்த ரித்தனே
மலியு மசுர னுரமி டந்து வசுதை யைப்பெ யர்த்தனே
வலிகோ ளவுண னுடல்பி ளந்து மதலை மெய்க்கு தித்தனே
பகரு முலக மடிய ளந்து தமர்க ளுக்க ளித்தனே
பரசு முனிவன் வடிவு கொண்டு பகைவ ரைத்து ணித்தனே
பணிய விசைவி றசமு கன்றன் முடிகள் பத்து திர்த்தனே
படியு முருவில் வருபி லம்ப வசுர னைத்த கர்த்தனே
நகரி துவரை யெனவு கந்து வரைக ரத்தெ டுத்தனே
நடமோ டியலு பரியில் வந்து நலிவ றுக்க வுற்றனே
நலியும் வினைகள் செகும ருந்தி னலமு றைந்த வெற்பினே
நணுகு கருட நதிகி ளர்ந்த புனலு கப்பில் வைத்தனே
யகர முதல வுரைகோண் மங்கை கணவ னுக்க ளித்தனே
யடையும் வினதை சிறுவ னுய்ய வருள்கோ டுத்து யர்த்தினே
யடியு மணியு மெனும னந்த னடிதொ ழுக்க ளித்தனே
யவனி மருவு திருவ யிந்தை யடிய வர்க்கு,மெய்யனே. 2

உரை:— அவனி மருவு – பூமிதேவியால் அடையப்பெற்ற, திருவயிந்தை – திருவயிந்திரபுரத்தில் எழுந்தருளியுள்ள, அடியவர்க்கு மெய்யனே – அடியவர்க்குமெய்யனே!, மகரம் வளருமளவில்–மத்ஸ்ய ரூபங்கொண்டு வளர்ந்தபோது, பௌவம் அடைய உற்று–கடல்முழுதும் பொருந்தி, அலைத்தனை – கலக்கினாய்; வடிவு கமடம் என – (எடுத்துக் கொண்ட) வடிவம் ஆமையினது என்னும்படி, அமர்ந்து – நிலையாய் நின்று, கிரிதனைத் தரித்தனை–மந்தரமலையைத் தாங்கிநின்றாய்; மலியும் அசுரன் – அதிக்கிரமித்த ஹிரண்யாக்ஷனென்னும் அஸுரனுடைய, உரம் இடந்து – மார்பைப் பிளந்து, வசுதையைப் பெயர்த்தனை – பூமியைப் பெயர்த்தெடுத்தருளினாய்; வலிகொள் அவுணன் – பலசாலியான ஹிரண்யகசிபுவினுடைய, உடல் பிளந்து – சரீரத்தைப் பிளந்துகொண்டே, மதலை மெய்க்கு – (அவன்) புதல்வனான ப்ரஹ்லாதனுடைய ஸத்யத்தைக் காப்பதற்கு, (மதலை மெய்க்கு – தூணுருவின்கண்). உதித்தனை – அவதரித்தாய்; பகரும் உலகம் – (பலி தன்னுடையவையெனக்) கூறிய ஸகலலோகங்களையும், அடி அளந்து – திருவடியால் அளந்து, தமர்களுக்கு அளித்தனை – அடியார்களான தேவர்களுக்கு (மீட்டு)க்கொடுத்தனை; பரசுமுனிவன் வடிவு கொண்டு - பரசுராமனாக அவதரித்து, பகைவரை-சத்ருக்க(ளான க்ஷத்திரியர்க)ளை. துணித்தனை - கொன்றனை; பணிய இசைவு இல் – (ஸ்ரீராமனாக அவதரித்த உன்னுடைய) திருவடியில் பணியச்சம்மதி இல்லாத, தசமுகன்றன்–ராவணனுடைய, முடிகள் பத்து உதிர்த்தனை–

தலைகள் பத்தையும் அறுத்துத்தள்ளினை; படியும் உருவில் வரு – (கோபர்களைப்போல்) பொருந்திய வடிவத்தில் வந்த, பிலம்ப அசுரனை – ப்ரலம்பாஸுரனை, தகர்த்தனை – (பலராமனுய்நின்று) ஒழித்தனை; நகரி துவரை என உகந்து – (தன் வாஸத்திற்கு உரிய) நகரம் துவாரகையே என்று மகிழ்ந்து (சிறுவனுய்), வரை கரத்து எடுத்தனை – (கோவர்த்தன) மலையைக் கையில் எடுத்தனை; நடமொடு இயலு பரியில் – நடனத்தோடு பொருந்திநிற்கும் குதிரையின்மீது, வந்து – (கல்கியாய்) அவதரித்து, நலிவு அறுக்க – (கலியினுல் வரும்) துன்பத்தை ஒழிக்க, உற்றனை – பொருந்தினை; நலியும் வினைகள் – (ஸம்ஸாரிகளைத்) துன்புறுத்துகின்ற கர்மங்களை, செகும் மருந்தின்– ஒழிக்கின்ற மருந்துபோல, நலம் உறைந்த வெற்பினை – நன்மை பொருந்திய ஔஷதகிரியை இடமாகக் கொண்டனை; நணுகு கருட நதி கிளர்ந்த – பக்கத்திலுள்ள கருடநதியினின்று எழும்பிய, புனல் – (திவ்ய) தீர்த்தத்தை, உகப்பில் வைத்தனை – மகிழ்ச்சிக்கு உரியதாகக் கொண்டனை; உரை கொள் மங்கை – வாக்கை (த் தனது வடிவமாக)க் கொண்ட ஸரஸ்வதிதேவியின், கணவனுக்கு – நாதனுன ப்ரஹ்மாவுக்கு, அகரம் முதல – அகாரத்தை முதலாகக்கொண்ட ஸகலவேதங்களையும், அளித்தனை – உபதேசித்தனை; அடையும் – (தன்னை) அடைந்த, வினதை சிறுவன் – விநதையின் புத்திரனுன கருடன், உய்ய – உஜ்ஜீவிக்கும்படி, அருள் கொடுத்து – கருணைவைத்து, உயர்த்தினை – (அவனைக்) கொடியாகவும் எடுத்தனை; அடியும் அணையும் எனும் – ஸ்ரீபாதுகையும் பாயலும் (படுக்கை) என்னப்படுகின்ற, அனந்தன் – திருவநந்தாழ்வான், அடி தொழ – திருவடிகளைத் தொழ, களித்தனை – (அதனுல்) மகிழ்ந்தனை.

அடியவர்க்குமெய்யனே! ப்ரளயகாலத்தில் ஹயக்ரீவனென்னும் அஸுரன் வேதங்களை அபஹரித்துக்கொண்டு கடலுள் மூழ்கியபோது நீ பெரிய மீன் வடிவங்கொண்டு கடலுள் புகுந்து அவனைக் கொன்று வேதங்களை மீட்டருளினுய்; முன் தேவரும் அசுரரும் பாற்கடலைக் கடைந்தபோது மத்தாக இருந்த மந்தரமலை கடலுள் அழுந்திவிடாதபடி பெரிய ஆமைவடிவங்கொண்டு கடலுட் புகுந்து அம்மலையைத் தன் முதுகினுல் தாங்கினுய்; ஹிரண்யாக்ஷன் என்னும் கொடிய அஸுரன் தன் வலிமையின் மிகுதியால் பூமியைப் பாயாகச் சுருட்டிக் கொண்டு கடலினுட் புகுந்தகாலை வராஹவடிவங்கொண்டு கடலினுள்ளே சென்று அவ்வசுரனைக் கொன்று பூமியைக் கோட்டு நுனியால் கொண்டுவந்து மறுபடியும் விரித்தருளினுய்; உன்னுடைய பக்தசிகாமணியான ப்ரஹ்லாதன் 'எங்கும் உளன் கண்ணன்' என்று கூறியதை மெய்யாக்க அவன் தந்தையான ஹிரண்யகசிபுவின் மார்பைப் பிளந்துகொண்டே தூணினின்று நரஸிம்ஹனுய் அவதரித்தாய்; தேவராஜ்யத்தை அபஹரித்துக் கொண்ட பலிசக்கரவர்த்தியின் யாகத்தில் வாமநனுய்த் தோன்றி

அவனிடம் மூன்றடி மண் யாசித்து வாங்கி த்ரிவிக்ரமனாக மாறி ஸகல லோகங்களையும் அளந்து தேவராஜ்யத்தை மீட்டுத்தந்தருளினாய்; பரசுராமாவதாரம்கொண்டு, பகைவராய்நின்ற க்ஷத்திரியர்களை வேரறுத்தாய்; சக்கரவர்த்தித் திருமகனாய் அவதரித்து, தன் அடியடையாத ராவணன் தலைகளை உதிர்த்தாய்; பலராமனாய்நின்று, பிருந்தாவனத்தில் இடையனுருக்கொண்டு, தீங்கு செய்யவந்த ப்ரலம்பாஸுரனை ஒழித்தாய்; கண்ணனாய் அவதரித்துக் கோவர்த்தனமலையைத் திருக்கரத்தால் தாங்கி ஸகலப்ராணிகளையும் காத்தருளினாய்: இனி வெள்ளைக்குதிரையின்மீது கல்கியாய் அவதரித்துக் கலியால் வரும் துன்பத்தை நீக்கப்போகின்றாய்; கொடிய வினைகளைத் தீர்க்கும் மருந்தாய்நின்று ஔஷதகிரியை இடமாகக்கொண்டாய்; பக்கத்தே பெருகும் கருடநதியின் தெள்ளிய நீரைக் கண்டு மனமகிழ்கின்றாய்; ப்ரஹ்மதேவனுக்கு அக்ஷராப்யாஸம் செய்வித்து ஸகலவேதங்களையும் உபதேசித்தருளினாய்; தன் திருவடிகளில் வந்தடைந்த கருடனுக்கு அநுக்ரஹம் செய்து அவனைக் கொடியாகவும் உயர்த்தினாய்; உனக்குப் பாதுகையும் பாயலுமாய் நின்று கைங்கர்யம் செய்யும் திருவநந்தாழ்வான் உன் திருவடிகளை வணங்கிநிற்க, அதனால் மகிழ்ந்து அவனுக்கு அருள்புரிந்தாய்; பூமிதேவிக்குப் பாரமாகவுள்ள பாபிகளைக் கொன்று சுமையைக் குறைத்ததற்காக அவள் வணங்கிநிற்கப்பெற்றாய்; இத்தகைய பெருமைவாய்ந்த உன்னை நாங்கள் எவ்வாறு புகழ்ந்துபேச வல்லோம்?—என்றவாறு.

இப்பாசுரத்தில் நான்காம் அடியில் ப்ரஹ்மா, கருடன், ஆதிசேஷன், பூமிதேவி ஆகிய நால்வரையும் குறித்திருப்பது இந்த க்ஷேத்திரத்தைப்பற்றிய புராணவரலாற்றை ஸூசிப்பிக்கின்றது. அதன் விளக்கம் பின்வருமாறு—

இந்த க்ஷேத்ரத்தில் நான்கு புண்யதீர்த்தங்கள் உள. அவை யாவன—

1. ப்ரஹ்மதீர்த்தம்— இந்த ஸ்தலத்தில் முன் ப்ரஹ்மா ஒரு புண்ய தீர்த்தத்தை ஸ்ருஷ்டிக்க, தெய்வநாயகனுடைய ஸம்பந்தத்தால் அந்தத் தீர்த்தம் விரஜாநதியைப்போல் பெருமைபெற்றது. அதன் கரையில் பகவானைக் குறித்துத் தவம்புரிந்த பிரமனுக்கு அவன் வரம் கொடுத்தருளினான்.

2. கருடதீர்த்தம்— கருடன் ஒருகால் தன் அலகினால் பூமியைக் கீற, அதிலிருந்து பெருகிய மஹாநதியே கருடநதியெனப் பெயர்பெற்றுப் புண்ணிய நதியாய்த் திகழ்கின்றது.

3. சேஷதீர்த்தம்—ஆதிசேஷன் முன் ஒருகால் தெய்வநாயகனுக்கு எதிரில் ஒரு புண்யதீர்த்தத்தைப் படைத்தான். அமுதம் போன்ற இதன் நீரைக் கண்டு அடியவர்க்குமெய்யனும் மிகமகிழ்ந்தான்.

இந்தத் தீர்த்தம் கிணறுவடிவுகொண்டு இன்றும் சேஷதீர்த்தமென வழங்குகின்றது.

4. பூமிதீர்த்தம்— முன் அசுரர்களின் பாரம் தாங்காது வருந்திய பூமிதேவி எம்பெருமானைச் சரணமடைய, அவனும் அவளது வேண்டுகோளுக்கிணங்கி அசுரர்களை ஒழித்துப் பூமியின் பாரத்தைத் தீர்த்தருளினான். அவனைத் துதிக்க இந்த க்ஷேத்ரத்திற்கு வந்த பூமிதேவி எம்பெருமான் அஸுரர்களுடன் போர்செய்ததால் சற்றுக் களைப்புற்றிருப்பதாய்க் கண்டு அவனது சிரமத்தைப் போக்கப் புஷ்பங்கள் நிறைந்த ஒரு தீர்த்தத்தைப் படைத்தாள். பின் எம்பெருமானும் அதன் நீரால் களைப்பு நீங்கப்பெற்றான். இதுவே பூமிதீர்த்தமென வழங்குகின்றது.

இந்த நான்கு தீர்த்தங்களிலும் எம்பெருமான் நீராடிப் பருகி மகிழ்ந்து அவர்கள் நால்வரையும் நோக்கி 'நீங்கள் நால்வரும் படைத்த இந்தத் தீர்த்தங்களின் கரையில் தெய்வநாயகன் என்ற பெயருடன் எப்பொழுதும் வஸிக்கின்றேன். இந்தத் தீர்த்தங்களில் ஒருகால் நீராடுபவன் கங்காஸ்நானம் செய்த பலனைப் பெறுவான்' என்று வரம் கொடுத்தருளினான்.

இவ்வரலாறுகளே நான்காமடியால் குறிக்கப்பட்டன. 2

தெய்வநாயகனுடைய திவ்யசேஷ்டிதங்கள்

எழுசீராசிரியச்சந்தவிருத்தம்

359 புரமு யர்த்த வசுரர் கட்கோர் புறமு ரைத்த பொய்யினன்
வரையெ டுத்து மழைத டுத்த மழையொ டொத்த மெய்யினன்
றிரைநி ரைத்த கடலெ ரித்த சிலைவ ளைத்த கையின
னருள்கொ டுத்து வினைத விர்க்கு மடிய வர்க்கு மெய்யனே. 3

உரை:– புரம் உயர்த்த–நகரங்களை மேலே பறக்கும்படிகொண்ட, அசுரர்கட்கு – அசுரர்களுக்கு, ஓர் புறம் உரைத்த பொய்யினன் - (வேத விபரீதமான) ஒரு பிறமதக்கொள்கையை உபதேசித்த பொய்யினனும், வரை எடுத்து – (கோவர்த்தன) மலையை(க் கைவிரலால்) எடுத்து, மழை தடுத்த – (இந்திரன் பெய்த கல்) மழையைத் தடுத்த, மழையொடு ஒத்த மெய்யினன் – மேகம் போன்ற (நிறமுள்ள) திருமேனியையுடையவனும், திரை நிரைத்த – அலைகளை வரிசையாக வீசுகின்ற, கடல் எரித்த – கடலை எரித்த, சிலை வளைத்த கையினன் – வில்லை வளைத்த கையையுடையவனும், அருள் கொடுத்து – கருணையைப் பொழிந்து, வினை தவிர்க்கும் – பாபங்களைப் போக்குகின்ற, அடியவர்க்கு மெய்யனே– அடியவர்க்கு மெய்யனே (ஆவன்).

முன்னொருகால் சிவனைக் குறித்துத் தவம்புரிந்து வரம்பெற்ற மூன்று அஸுரர்கள் ஆகாயத்தில் ஸஞ்சரிக்கும் மூன்றுபட்டினங்களைக்

கொண்டு தாம் நினைத்த இடங்களிலெல்லாம் திரிந்து யாகம் முதலிய கர்மங்களைக் கெடுத்து, அந்தணர்களுக்கும் தேவர்களுக்கும் யாவருக்கும் இன்னல் விளைவித்துவந்தனர். பின் தேவர்கள் எம்பெருமானைச் சரணமடைந்தனர். அவன் தேவர்களுக்கு அபயம் கொடுத்துத் தான் ஒரு பௌத்தனுடைய வேடம் பூண்டு அவ்வஸுரர் இருப்பிடம் சென்று தன்னைத் தார்மிகனென்று கண்டவர் கருதுமாறு தர்மங்களை உபதேசித்துக்கொண்டிருந்தான். அவ்வஸுரர்களும் அவனை நம்பி அவனது உபதேசத்தைக் கேட்க முற்பட்டுநிற்க, அவன் அவர்களுக்குத் தர்மத்தில் உள்ள சிரத்தையைக் குலைத்து அதனால் வலியழிந்தொழிந்து நரகில் வீழச் செய்தான். இவ்வரலாறு முதலடியால் கூறப்பட்டது.

கண்ணன், கோகுலத்தில் இடையர் வழக்கமாய் இந்த்ரனுக்குச் செய்யும் பூஜையைக் கோவர்த்தனமலைக்குச் செய்வித்ததனால் சினங்கொண்ட இந்திரன் கல்மழை பொழிந்தான். அதனால் அனைத்தும் படும் துன்பத்தைக் கண்டு கண்ணன் தன் கைச் சுண்டுவிரலால் அம்மலையைக் குடையாகப் பிடித்து அனைத்தையும் காத்தருளினான். இவ்வரலாறு இரண்டாமடியாற் கூறப்பட்டது.

ஸ்ரீராமாவதாரத்தில் ஸ்ரீராமன் கடலில் அணைகட்ட இடம் கொடுக்குமாறு ஸமுத்ரராஜனைச் சரணமடைந்தான். அற்பனான கடலரசன் ஸ்ரீராமனது பெருமையை அறியாது அவனது வேண்டுகோளுக்குச் செவிசாய்க்கவில்லை. அதனால் சினங்கொண்ட ஸ்ரீராமன் தன் வில்லை நாணேற்றிக் கடலை வற்றச்செய்ய முற்பட்டான். பின் கடலரசன் நடுநடுங்கிவந்து அவன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடந்தான். இவ்வரலாறு மூன்றாமடியாற் கூறப்பட்டது.

இத்தகைய பெருமைவாய்ந்த தெய்வநாயகன் நம்மீது கருணை கொண்டு நம் பாபங்களைப் போக்கியருள்வான்—என்றவாறு. 3

தெய்வநாயகனது மாசிமக உத்ஸவம்—அநுபவம்

கலிவிருத்தம்

360 தேசோத்தா ரில்லை யெனுந்தெய்வ நாயகனார்
வாசக் குழன்மா மலராண் மணவாளர்
வாசித் தேழுமன் மதனார் மணற்றேப்பின்
மாசிக் கடலாடி மகிழ்ந்து வருவாரே. 4

உரை:— வாசக் குழல் – நறுமணமுள்ள கூந்தலையுடைய, மா மலராள் – பெரிய தாமரையில் உதித்த பிராட்டியின், மணவாளர் – நாயகராகிய, தேசு ஒத்தார் இல்லை எனும் – தேஜஸ்ஸில் (தம்மை) ஒத்தவர் இல்லை என்று சொல்லத்தக்க, தெய்வநாயகனார் – தெய்வ நாயகர், மாசிக் கடல் ஆடி – மாசிமகத்தன்று கடலில் நீராடி,

வாசித்து – மணம்மிகுந்து, எழும் – எழுகின்ற, மன் மதன் ஆர் – மிக்க வளம் நிறைந்த, மணல் தோப்பில் – மணல் (நிறைந்த கடற் கரைச்) சோலையில், மகிழ்ந்து வருவார் – (உலாவி) மகிழ்ந்து எழுந்தருள்வார்.

திருமேனியின் ப்ரகாசத்தில் நிகரில்லாளுய் நறுமணம் வீசும் கூந்தலையுடைய பெரியபிராட்டியின் நாயகனுய்நிற்கும் தெய்வநாயகன் மாசிமாதத்து மகத்திருநக்ஷத்ரத்தன்று கடலுக்கு எழுந்தருளி நீராடித் தீர்த்தம் ப்ரஸாதித்துக் கடற்கரையில் மணம்வீசும் வளம்நிறைந்த சோலையில் பத்தியுலாவி எழுந்தருள்கின்ருன்—என்று அநுஸந்தித்தவாறு.

'மன்மதனுர் வாசித்தொழும்' என்று அந்வயங்கொண்டு, இத்தொடரைத் தெய்வநாயகனுக்கு விசேஷணமாக்கி மன்மதனுர் வாசித்தொழும் தெய்வநாயகனுர்–மன்மதன் அழகில் தனக்கும் தெய்வநாயனுக்கும் உள்ள தாரதம்யத்தைக் கண்டு தோற்றுத் தொழப்பெற்ற தெய்வநாயகனுர் என்று பழையவுரை கூறும்.

'வாசித்தொழு மன்மதனுர் மணத்தோப்பில்' என்று பாடங் கொண்டு 'மன்மதனுர் வாசித்தொழு மணத்தோப்பில்' என்று அந்வயம் கொண்டு, மன்மதனுர் வாசித்தொழு–மன்மதனுடைய குதிரைக (ளாகிய கிளிக) ளின் உறைவிடமாகிய, மணத்தோப்பில்– மணம்வீசும் தோப்பில் என்றும் பொருள் கொள்ளலாம். கிளியை மன்மதனுக்குக் குதிரையாகக் கூறுவது தமிழர் வழக்கு.

'வாசித்தொழு மன்மதனு' என்று பாடங்கொண்டு, வாசித் தொழும்–குதிரைநம்பிரானில் தொழத்தக்க, மன்மதனு–மன்மத ஸ்வரூபனுக என்று பொருள்கொண்டு இத்தொடர், முற்காலத்தில் நடந்துவந்த ப்ரஹ்மோத்ஸவத்தின் அவப்ருததினமாகிய மாசிமகத் தில் தெய்வநாயகன் கடலில் தீர்த்தம் ப்ரஸாதித்துக் கடற்கரைச் சோலையில் பத்தியுலாவும்போது குதிரைநம்பிரானில் எழுந்தருளியுள்ள அழகைக் குறிக்குமென்றும் பெரியோர் பணிப்பர்.

[இப்பொழுதும் இவ்வுத்ஸவம் சிறப்புடன் நடந்து வருகின்றது.] 4

தெய்வநாயகன்விஷயமான அந்திமஸ்ம்ருதியை வேண்டல்

அறுசீராசிரியவிருத்தம்

361 உருளுஞ் சகட மோன்றுதைத்தா
யுலக மேழுண் டுமிழ்ந்தளந்தாய்
பொருளு மழலு மிறையாகப்
பூண்டே னடிமை யினின்மீண்டே

னிருளு மருளுந் தருமந்நா
ளெழிலா ராழி சங்கேந்தி
யருளுந் தெருளுந் தரவென்பா
லடியோர் மெய்ய வந்தருளே. 5

உரை:— உருளும் – (தன்னைக் கொல்ல) உருண்டுவந்த, ஒன்று சகடம் – (அஸுரனாகிய) ஒரு சகடத்தை, உதைத்தாய் – உதைத்துக்கொன்றவனே!, ஏழ் உலகம் – ஏழுலோகங்களையும், உண்டு- வயிற்றிற்கொண்டு, உமிழ்ந்து – படைத்து, அளந்தாய் – அளந்த வனே!, அடியோர்மெய்ய – அடியவர்க்குமெய்யனே!, பொருளும் – செல்வத்தையும், அழலும் – அக்னிபோல் மனிதனை எரிக்கவல்ல காமத்தையும், மிறையாகப் பூண்டேன் – குற்றமுள்ளனவாகக் கொண்டேன்; அடிமையினில் மீண்டேன் – (உன்) கைங்கர்யத்தில் திரும்பினேன்; இருளும் – (அஜ்ஞானமாகிய) இருளையும், மருளும் – விபரீதஜ்ஞானத்தையும், தரும் – தருகின்ற, அந்நாள் – அந்த (மரண) ஸமயத்தில், எழில் ஆர் – அழகு நிறைந்த, ஆழி சங்கு – திருவாழியை யும் திருச்சங்கையும், ஏந்தி – (திருக்கையால்) தாங்கி, அருளும் – கிருபையையும், தெருளும் – ஜ்ஞானத்தையும், தர – (எனக்கு) அளிப்ப தற்காக, என்பால் வந்தருள் – என்பக்கத்தில் வந்தருள்க.

இளம்பருவத்தே தொட்டிலிற் பள்ளிகொண்டிருந்தகாலையில் தன்னை நலியவந்த சகடாஸுரனைத் திருவடியால் உதைத்து ஒழித்த வனே! ஏழுலகங்களையும் ப்ரளயகாலத்தில் அழித்து ஸ்ருஷ்டிகாலத்தில் படைத்து த்ரிவிக்ரமாவதாரத்தில் அளந்தவனே! அடியவர்க்குமெய்ய னுய்த் திருவயிந்திரபுரத்தில் அவதரித்த தெய்வநாயகனே! அர்த்தத் தாலும் காமத்தாலும் வரும் தீங்குகளை நினைத்து அவை எனக்கு ஏற்பனவல்லவெனக் கண்டு புறக்கணித்தேன்; இப்பொழுது உனக்குப் பணிசெய்வதையே சிறந்த பயனுகக் கொண்டேன்; அஜ்ஞானமும் விபரீதஜ்ஞானமும் நிரம்பிநிற்கப்பெறும் என் அந்திமகாலத்தில் நான் உன்னை நினையாவிடினும் இப்பொழுது நான் ப்ரார்த்திப்பதையே கொண்டு, அஜ்ஞானமாகிய எதிரியை அழிக்கவல்ல திருவாழியாழ்வானை யும் ஜ்ஞானத்தைத் தரவல்ல திருச்சங்கையும் ஏந்திவந்து எனக்கு அருள்புரியவேண்டும்—என்றவாறு.

'அழல்' எனும் சொல் அக்னியைக் கூறும். இங்கு இது உவம வாகுபெயராய்நின்று அக்னியைப்போலத் தீங்கு தரும் காமத்தைக் கூறியதாம். 5

தெய்வநாயகனது வடிவழகை மறவாதார் முக்தராவர்

எண்சீராசிரியவிருத்தம்

362 வஞ்சனைசெய் பூதனையை மலியுஞ் சாட்டை
மல்லரையோர் மதகளிற்றை வானே ரஞ்சுங்
கஞ்சனைமுன் கடிந்தவனி பாரந் தீர்த்த
காவலனே கோவலனுய் நின்ற கோவே

யஞ்சனமுங் காயாவு மனைய மேனி
யடியவர்க்கு மெய்யனே யயிந்தை வாழு
மஞ்சேனவே யருள்பொழியும் வள்ள லேநின்
வடிவழகு மறவாதார் பிறவா தாரே. 6

உரை:— வஞ்சனை செய் பூதனையை – (தாய்வேடம்பூண்டு) வஞ்சனை செய்யமுற்பட்ட பூதனையையும், மலியும் சாட்டை – ஹிம்ஸித்தலில் மூண்டுவந்த சகடாஸுரனையும், மல்லரை – (கம்ஸன் ஏவிய) மல்லரையும், ஓர் மதகளிற்றை – நிகரற்ற மதயானையாகிய குவலயாபீடத்தையும், வானோர் அஞ்சும் கஞ்சனை – தேவர்களும் அஞ்சும் (வீரமுடைய) கம்ஸனையும், முன் கடிந்து – முன் (ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில்) கொன்று, அவனி பாரம் தீர்த்த – பூமியின் பாரத்தை ஒழித்த, காவலனே – (ஸாது) ரக்ஷகனே!, கோவலனாய் நின்ற கோவே – இடைச்சிறுவனாய் நின்ற ஸ்வாமியே!, அஞ்சனமும் காயாவும் அனைய மேனி – மையையும் காயாம்பூவையும் போன்ற (நிறமுடைய) திருமேனியையுடைய, அடியவர்க்குமெய்யனே – அடியவர்க்குமெய்யனே!, அயிந்தை வாழும் மஞ்சு எனவே – திருவயிந்திரபுரத்தில் நித்யவாஸம் செய்யும் மேகம் என்னலாம்படி, அருள் பொழியும் வள்ளலே – கருணை (யாகிய நீரைப்) பொழியும் கொடையாளனே!, நின் வடிவு அழகு – உன் திருமேனியின் அழகை, மறவாதார் – மறவாத மஹான்கள், பிறவாதாரே – மறுபிறவியொழியப் பெறுவர்.

அடியவர்க்கு மெய்யனே! முன் கிருஷ்ணாவதாரத்தில் பூதனை, சகடாஸுரன், மல்லர், குவலயாபீடம், கம்ஸன் ஆகிய இவர்களைக் கொன்று பூமிக்கு இந்தப் பாபிகளால் நேர்ந்த பாரத்தை ஒழித்து ஸாதுக்களைக் காத்தருளினாய்; இத்துணைப் பெருமையுடையவனாயிருந்தும் இடைச்சேரியில் கோபாலனாய் நின்று நின் எளிமையை உலகுக்குக் காட்டியருளினாய்; திருவயிந்திரபுரத்தில் நித்யவாஸம் செய்யும் ஒரு காளமேகம் என்று வியந்து பேசும்படி அடியவர்மீது கருணையெனும் நீரைப் பொழிந்துநிற்கும் உன் வண்மைக்குணத்தை என்னவென்று உரைப்பேன்!!! மைமலையையும் காயாம்பூவையும் போன்ற நிறமுடைய உன் திருமேனியழகை மறவாது அநுபவிப்பவர் கர்மபந்தம் நீங்கப் பெறுவர்—என்றவாறு. 6

யமவாதனையில்லாது காக்க வேண்டல்

எழுசீராசிரியவிருத்தம்

363 மையுமா கடலு மயிலுமா மழையு
மணிகளுங் குவளையுங் கொண்ட
மெய்யனே யடியோர் மெய்யனே விண்ணோ
ரீசனே நீசனே னடைந்தேன்

கையுமா ழியுமாய்க் களிறுகாத் தவனே
காலனுர் தமரெனைக் கவரா
தையனே வந்தன் றஞ்சலேன் றருடேன்
னயிந்தைமா நகரமர்ந் தானே. 7

உரை:—மையும் – (கண்ணுக்கு இடும்) மையும், மா கடலும் – பெரிய கடலும், மயிலும் – (பலநிறங்கொண்ட) மயிலும், மா மழையும்– பெருமைபெற்ற மேகமும், மணிகளும் – நீலமணிகளும், குவளையும் – கருநெய்தலும் (ஆகிய இவற்றின் தன்மையை), கொண்ட – உடைய, மெய்யனே – திருமேனியுடையவனே!, அடியோர்மெய்யனே – அடியவர்க்குமெய்யனே!, விண்ணோர் ஈசனே – நித்யஸூரிகளுக்குத் தலைவனே!, நீசனேன் – அற்பனான அடியேன், அடைந்தேன் – (உன்னைச் சரணமாக) அடைந்தேன். கையும் ஆழியுமாய் – கையில் ஏந்திய சக்கரத்துடன், களிறு காத்தவனே – கஜேந்த்ரனை ரக்ஷித்தவனே!, தென் அயிந்தைமாநகர் அமர்ந்தானே – அழகிய திருவயிந்தை என்னும் பெரிய நகரத்தில் நித்யவாஸம்செய்தருளுமவனே!, ஐயனே – ஸ்வாமியே!, காலனுர் தமர்–யமனுடைய படர்கள், என்னைக் கவராது – என்னைக்கொண்டு போகாதவாறு, அன்று வந்து – (நான் மரிக்கும்) அந்நாள் எழுந்தருளி, அஞ்சல் என்று அருள் – அஞ்சாதே என்று அருள்வாயாக.

மைக்குவியல், கம்பீரமான கடல், பலநிறங்கலந்த மேனியையுடைய மயில், நீரைப் பொழியும் மேகம், நீலரத்நங்கள், கருநெய்தற்பூ ஆகிய இவையனைத்தினையும் போன்ற திருமேனியையுடைய தெய்வநாயகனே! உன்னைச்சரணமடைந்தேன். முன் திருக்கையிலுள்ள திருவாழியால் முதலைவாய்ப்பட்ட கஜேந்த்ரனைக் காத்ததுபோல், என் அந்திமகாலத்தில் யமதூதர்கள் வந்து என்னை இழுத்துச் சென்று வேதனைசெய்யாதபடி நீ எனக்கு அபயம்கொடுத்துக் காத்தருள்வாயாக—என்றவாறு. 7

தெய்வநாயகனை அபயமளிக்குமாறு வேண்டல்

பதினறுசீர்ச்சந்தவிருத்தம்

364 மஞ்சு லாவு சோலை சூழ யிந்தை மன்னு மன்னுசீர்
வரையெ டுத்து நிரைய ளித்த மாசில் வாசு தேவனே
செஞ்சொ லன்பர் சிந்தை கொண்டு தீதி லாத தூதனய்த்
தேரு மூர்ந்து தேசு யர்ந்த செல்வ தெய்வ நாயக
வெஞ்சொ லாளர் கால தூதர் வீசு பாசம் வந்தென்மேல்
விழுந்த ழுந்தி யான யர்ந்து வீழ்வ தற்கு முன்னநீ
யஞ்ச லஞ்ச லஞ்ச லென்ற ளிக்க வேண்டு மச்சுதா
வடிய வர்க்கு மருளி யக்கு மடிய வர்க்கு மெய்யனே. 8

உரை:—மஞ்சு உலாவு-மேகங்கள் ஸஞ்சரிக்கின்ற, சோலை சூழ் – சோலைகள் சூழப்பெற்ற, அயிந்தை மன்னும் – திருவயிந்திரபுரத்தில் நித்யவாஸம் செய்தருளுமவனும், மன்னு சீர் – நிலைபெற்ற திருக்கல்யாண குணங்களையுடையவனும், வரை எடுத்து – (கோவர்த்தன) மலையை எடுத்து, நிரை அளித்த - பசுநிரையைக் காத்தவனும், மாசு இல் – குற்றம் அற்றவனும், வாசுதேவனே – வஸுதேவ குமாரனும் ஆனவனே!, செம் சொல் அன்பர் – செம்மையுள்ள வார்த்தைகளையுடைய அன்பர்களான பாண்டவர்களின், சிந்தை கொண்டு – எண்ணத்தை ஏற்றுக்கொண்டு, தீது இலாத தூதனாய் – குற்றமற்ற தூதனாகி, தேரும் ஊர்ந்து – (அர்ஜுநனுக்குச் சாரதியாய் நின்று) தேரையும் செலுத்தி, தேசு உயர்ந்த–(அதனால்) தேஜஸ்மிக்க, செல்வ– செல்வ (மாய்நிற்பவ) னே!, தெய்வநாயக-தெய்வநாயகனே!, அச்சுதா– (அடியவரைக்) கைவிடாதவனே!, அடியவர்க்கு – பாகவதர்களுக்கு, மருள் இயக்கும் – அஜ்ஞாநத்தை ஓட்டுகின்ற, அடியவர்க்குமெய்யனே – அடியவர்மெய்யனே!, வெம் சொலாளர் – கொடிய சொற்களையுடைய, காலதூதர்-யமதூதர்களால், வீசு பாசம் – வீசப்படுகின்ற பாசம், என் மேல் வந்து விழுந்து அழுந்தி – என்மீது வந்து விழுந்து அழுந்திநிற்க, யான் அயர்ந்து வீழ்வதற்கு முன்னம் – (அதனால்) நான் தளர்ந்து விழுவதற்கு முன்னமே, நீ – நீ, அஞ்சல் அஞ்சல் அஞ்சல் என்று – அஞ்சாதே அஞ்சாதே அஞ்சாதே என்று (முக்காலும் கூறி), அளிக்கவேண்டும் – காத்தருளவேண்டும்.

மேகங்கள் வந்து தங்கி உலாவும்படி மிக உயர்ந்துநிற்கும் சோலைகளாலே சூழப்பெற்ற திருவயிந்திரபுரத்தில் நித்யவாஸம்செய்து அடியார்களின் அஜ்ஞாநத்தைப் போக்கியருளும் அடியவர்க்குமெய்யனே! முன் இந்திரன் பெய்த கல்மாரியால் வருந்திய பசுக்களைக் காக்கக் கோவர்த்தன மலையைக் கையினால் தாங்கியருளினாய்; உண்மையே பேசுகின்ற பாண்டவர்களின் விருப்பத்தை ஏற்றுக்கொண்டு அவர்களுக்காகத் தூதுசென்று காத்தருளினாய்; போர்க்களத்தில் அர்ஜுநன் போரை நடத்தமுடியாமல் தவித்து நிற்கும்போது அவன்தேரிலே பாகனாயிருந்து அவனை நல்வழிப் படுத்தியதால் உன் பெருமை மிகுதியாய் நிற்கப்பெற்றனை; இவ்வாறு உன் அடியார்களான பலரை ஆபத்துக் காலத்தில் வந்து காத்தருளினாய்; இவற்றை நினைந்து உன்னைச் சரணமடைந்த அடியேன் யமதூதர் வந்து பாசத்தை வீச அதனால் தளர்ந்து வீழ்வதற்கு முன்னமே நீ வந்து முக்காலும் அபயப்ரதாநம்செய்து அடியேனைக் காத்தருளவேண்டும்—என்றவாறு. 8

தம்மை அடைக்கலங்கொள்ளுமாறு தெய்வநாயகனை வேண்டல்

365 கட்டளைக்கலித்துறை

பொருத்தம் பொருந்தலும் போகுந் தவற்றுடன் பொய்ம்மதிமேல்
விருத்தங் கலித்துறை மேவு மழன்மதம் வேறினியென்
றிருத்த மனத்தினிற் சேரா வெமைத்தெய்வ நாயகநின்
வருத்தம் பொருவரு ளான்மன் னடைக்கலங் கொண்டருளே. 9

உரை:— தெய்வநாயக – தெய்வநாயகனே!, பொருத்தம் பொருந்தலும் – (உன் திருவுள்ளத்தோடு) பொருத்தம் (சேதநனிடத்து) உண்டானவளவில், தவற்றுடன் – அபராதங்களுடன், பொய்ம் மதி – அஜ்ஞாநமும், மேல் – மேலும், விருத்தம் – விபரீதஜ்ஞாநமும், கலித்து உறை மேவும் – கிளர்ந்து தங்குதலைப் பொருந்திய, அழல் – அக்கினி போன்ற காமமும், மதம் – செருக்கும், போகும் – விலகிப்போகும். மனத்தினில் திருத்தம் சேரா எம்மை – மனத்தில் திருத்தம் அடையாத எம்மை, வருத்தம் பொரு – (பிறர்) துக்கம் (காணப்) பொறுத, நின் அருளால் – உன் கருணையால், மன் அடைக்கலம் கொண்டருள் - ஸ்திரமாய் ரக்ஷிக்கப்படவேண்டிய வஸ்துவாக ஏற்றுக்கொண்டருள்வாயாக. இனி வேறு என் – இனி (இதினும்) வேறாக (யாம்) வேண்டக்கிடப்பது என்?

தெய்வநாயகனே! உன் திருவுள்ளத்திற்கு ஏற்ற கார்யத்தையே செய்வதாய் உறுதிகொண்ட சேதநனுக்கு அவன் செய்த அபராதங்கள், அஜ்ஞாநம், விபரீதஜ்ஞாநம், மேன்மேலும் அக்னிபோல்வளர்ந்து வரும் காமம், கர்வம் ஆகிய அனைத்தும் ஒழிந்துபோம். என் மனமோ அத்தகைய பரிபக்குவநிலையைப் பெறாதிருக்கின்றது. ஆயினும் பிறருடைய வருத்தம் காணச் சகியாத உன் கருணையால் என்னைக் காக்கவேண்டிய வஸ்துவாகக்கொண்டு உன் திருவடியில் சேர்த்துக் கொள்ளவேண்டும். இதுவன்றி அடியேன் வேண்டுவதற்கு வேறு யாது உளது? ஒன்றுமில்லை—என்று பிரார்த்தித்தவாறு.

அழல்=அக்னி. இங்கு உவமவாகுபெயராய்நின்று தீயைப் போலத் தீங்குதரும் காமத்தைச் சுட்டிநின்றது.

[இப்பாசுரத்திற்குப் பல பெரியோரிடம் பணிந்துகேட்டும் ஏற்ற பொருள் காண இயலவில்லை; பழையவுரைகளும் பயன் தரவில்லை. எனினும் ஒருவாறு பொருள் பொருந்தும்வண்ணம் வரையப்பட்டுளது, இதனினும் சிறந்த பொருள் கிடைப்பின் மறுபதிப்பிற் சேர்க்கப் பெறும்.] 9

முடிவுரை கூறல்

எண்சீராசிரியவிருத்தம்

366 அந்தமில்சீ ரயிந்தைநக ரமர்ந்த நாத
னடியிணைமே லடியுரையா லைம்ப தேத்திச்
சிந்தைகவர் பிராகிருத நூறு கூறிச்
செழுந்தமிழும் மணிக்கோவை செறியச் சேர்த்துப்
பந்துகழ லம்மானை யூச லேசல்
பரவுநவ மணிமாலை யிவையுஞ் சொன்னேன்
முந்தைமறை மொழியவழி மொழிநீ யென்று
முகுந்தனரு டந்தபயன் பெற்றே னானே. 10

உரை:— அந்தம் இல் சீர் - எல்லையற்ற பெருமையையுடைய, அயிந்தை நகர் - திருவயிந்திரபுரத்தில், அமர்ந்த நாதன் - நித்ய வாஸம் செய்கின்ற தெய்வநாயகனுடைய, அடியிணை மேல் – இரண்டு திருவடிகளின்மீது, அடி உரையால் – (எல்லாப் பாஷைகளுக்கும்) மூலமாயுள்ள வடமொழியால், ஐம்பது ஏத்தி - (தேவநாயகபஞ்சாசத் என்னும்) ஐம்பது சுலோகங்களை (இயற்றி)ப் புகழ்ந்து, சிந்தை கவர்– மனத்தைக் கவருகின்ற, பிராகிருதம் நூறு கூறி-ப்ராக்ருத பாஷையால் (அச்யுதசதகம் என்னும்) நூறு (சுலோகங்களைக்)கூறி, செழும் தமிழ்– வளம்மிக்க தமிழ்ப்பாஷையால், மும்மணிக்கோவை – மும்மணிக்கோவை என்னும் பிரபந்தத்தை, செறியச் சேர்த்து – பொருள்பொருந்துமாறு சேர்த்து, பந்து கழல் அம்மானை ஊசல் ஏசல் பரவு நவமணிமாலை – பந்து கழல் அம்மானை ஊசல் ஏசல் (அனைவரும்) கொண்டாடும் நவமணிமாலை ஆகிய, இவையும் சொன்னேன் – இந்தப் பிரபந்தங்களையும் பாடினேன். முந்தை மறை மொழிய – ப்ராசீனமான வேதங்கள் கூற, நீ வழி மொழி என்று – நீ அவ்வர்த்தங்களையே பிரபந்தங்களின் வாயிலாகக் கூறுக என்று, முகுந்தன் அருள் தந்த பயன் - அடியவர்க்குமெய்யன் அருளுடன் நியமித்ததன் பலனை, நான் பெற்றேன் – நான் அடைந்தேன்.

பெருமையில் நிகரற்றுநிற்கும் திருவயிந்திரபுரத்தில் எழுந்தருளியுள்ள தெய்வநாயகன் வேதங்கள் கூறும் அர்த்தங்களை ஸ்தோத்ரரூபமாகப் பாடும்படி அடியேனை நியமித்தான். அதைச் சிரமேற்கொண்டு அவன்திருவடிகளின்மீது எல்லாப் பாஷைகளுக்கும் தாய்ப்பாஷையாகிய ஸம்ஸ்க்ருதத்தில் தேவநாயகபஞ்சாசத் என்னும் ஸ்தோத்ரத்தையும், ஸரஸ்வதிதேவியின் மழலைச்சொல்லாதலின் மனத்தைக் கவரக்கூடிய ப்ராக்ருதபாஷையில் அச்யுதசதகம் என்னும் ஸ்தோத்ரத்தையும், செழுமையுள்ள தமிழ்ப்பாஷையில் மும்மணிக்கோவை, பந்து, கழல், அம்மானை, ஊசல், ஏசல், நவமணிமாலை ஆகிய பிரபந்தங்களையும் பாடி அவனது கட்டளையைத் தலைக்கட்டப்பெற்றேன்.

[இவ்வாறு தெய்வநாயகன் பாடுவித்த இப்பிரபந்தங்கள் அனைத்தும் ஸாத்துவிகர்களுக்கு அநுஸந்திக்க உரியனவாகும்]—என்றவாறு.

[முகுந்தன் என்ற திருநாமம் போகமோக்ஷங்களையளிப்பவன் என்னும் பொருளைத் தரும். மோக்ஷத்தில் பெறக்கடவ பரிபூர்ணாநுபவத்தை அடியவர்க்கு மெய்யன் தமக்கு இவ்வுலகிலேயே அருளியதைக் கருதி ஸ்ரீதேசிகன் இத்திருநாமத்தை இங்கு அநுஸந்தித்ததாகப் பெரியோர் பணிப்பர்] 10

மும்மணிக்கோவையின் மீதி 20 பாசுரங்களும். பந்து, கழல், அம்மானை, ஊசல், ஏசல் ஆகிய பிரபந்தங்கள்ஐந்தும் அகப்படவில்லை.

நவமணிமாலை — உரை முற்றிற்று

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

ஸ்ரீ :

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

பிரபந்தசாரம்-உரை

சிறப்புத்தனியன் – உரை

எண்சீராசிரியவிருத்தம்

ஆரணநான் கின்பொருளை யாழ்வார்க ளாய்ந்தடைவே
யன்புடனே யம்புவியோ ரனைவருமீ டேறவேன்று
நாரணனார் தாள்களிலே நாலாயி ரந்தமிழா
னண்ணியுரை செய்தவற்றை நாடிவகை தொகைசெய்தாய்
பூரணமா ஞானியர்சேர் பொங்குபுகழ்த் தூப்புல்வரும்
புனிதனென்றும் பிள்ளையென்றும் புவியர்புகழ் வேங்கடவா
தாரணியோ ரிங்குகக்கச் சாற்றியநற் ப்ரபந்தசாரந்
தனையுரைத்து வாழுமனந் தந்தருளா யென்றனக்கே. 1

உரை:— அம் புவியோர் அனைவரும்-அழகிய இவ்வுலகிலுள்ளவர் அனைவரும், நாரணனார் தாள்களில் நண்ணி – ஸ்ரீமந்நாராயணன் திருவடிகளில் அடைந்து, ஈடேற என்று-உஜ்ஜீவிக்கவேண்டும் என்று, ஆழ்வார்கள் – ஆழ்வார்கள், அன்புடனே – கிருபையுடனே, ஆரணம் நான்கின் பொருளை – நான்கு வேதங்களின் தாத்பர்யத்தை, அடைவே ஆய்ந்து – முறையாக ஆராய்ச்சிசெய்து, நாலாயிரம் – நாலாயிரம் பாசுரங்களையும், தமிழால் – தமிழ்ப்பாஷையால், உரைசெய்தவற்றை நாடி – அருளிச்செய்தவற்றை ஆராய்ந்து, வகை தொகை செய்தாய் –

வகுப்பாகப் பிரித்து எண்ணிக்கை செய்தவனே!, பூரண மா ஞானியர் சேர் – பரிபூர்ணமான ஜ்ஞானமுடைய பெரியோர்கள் நித்யவாஸம் செய்யப்பெற்றதும், பொங்கு புகழ் – (மேன்மேலும்) வளர்கின்ற புகழையுடையதுமான, தூப்புல் வரும் – தூப்புலில் அவதரித்த, புனிதன் என்றும் – பரிசுத்தன் என்றும், பிள்ளை என்றும் – பிள்ளை என்றும், புவியர் புகழ் வேங்கடவா – உலகிலுள்ளவரால் புகழப்படுகின்ற(தூப்புல்)திருவேங்கடமுடையானே!, தாரணியோர்-பூமியிலுள்ளோர், இங்குஉகக்க - இவ்வுலகிலேயே மகிழ்ச்சிபெறும்படி, சாற்றிய – (நீ) அருளிச்செய்த, நல் ப்ரபந்தசாரம்தனை – சிறந்த ப்ரபந்தஸாரத்தை, உரைத்து வாழும் மனம் – அநுஸந்தித்து உஜ்ஜீவிக்கும்படியுள்ள மனத்தை, என்றனக்குத் தந்தருளாய் - எனக்குக் கொடுத்தருள்வாயாக. 1

எண்சீராசிரியவிருத்தம்

ஆதிமறை யோதிமகி ழயக்கிரிவர் தம்மருளா
லன்புடனே தூப்புனக ரவதரித்தே யிங்குவந்த
வாதியரை வென்றுவந்து வன்புவிமே லெதிராசர்
வாழ்வுறுநற் றெரிசனத்தை வண்மையுட னேவளர்த்து
நீதிநெறி தவருமல னிறுத்தியிடும் வேங்கடவா
நேசமுட னாழ்வார்க ணிலைகளையெல் லாமுணர்ந்து
சாதுசனம் வாழவென்று சாற்றியநற் ப்ரபந்தசாரந்
தனையுரைத்து வாழுமனந் தந்தருளா யென்றனக்கே. 2

உரை :— ஆதி மறை – பழமையான வேதத்தை, ஓதி மகிழ் – (ப்ரஹ்மாவுக்கு) உபதேசித்து மகிழ்ந்த, அயக்கிரிவர்தம் அருளால் – ஹயக்ரீவனுடைய கிருபையால், அன்புடனே – (மானிடர்மீது) அன்புடன், தூப்புல் நகர் அவதரித்து – தூப்புல் நகரத்தில் அவதரித்து, இங்கு வந்த – இப்பூமியில் வந்த, வாதியரை வென்று உவந்து – வாதம் செய்த பிறமதத்தினரைக் கண்டித்து மகிழ்ந்து, வன் புவிமேல்-வலிமை வாய்ந்த பூமியின்மேல், வாழ்வுறு – நிலைபெற்றுநிற்கின்ற, எதிராசர் – ஸ்ரீபாஷ்யகாரருடைய, நல் தெரிசனத்தை – சிறந்த ஸித்தாந்தத்தை, வண்மையுடனே வளர்த்து – (அனைவரும் வாழவேண்டுமென்ற) கொடைக்குணத்தோடு வளர்த்து, நீதி நெறி தவருமல் – வேதமார்க்கம் தவருமல், நிறுத்தியிடும் வேங்கடவா – ஸ்தாபித்த (தூப்புல்) திருவேங்கடமுடையானே! ஆழ்வார்கள் நிலைகளை எல்லாம் உணர்ந்து – ஆழ்வார்களின் தன்மைகளை எல்லாம் அறிந்து, சாது சனம் வாழ என்று – ஸாதுஜநங்கள் உஜ்ஜீவிக்கவேண்டும் என்று கருதி, நேசமுடன் சாற்றிய – அன்புடன் அருளிச்செய்த, நல் ப்ரபந்தசாரம் தனை – சிறந்த ப்ரபந்தஸாரத்தை, உரைத்து வாழும் மனம் – அநுஸந்தித்து உஜ்ஜீவிக்கும்படியுள்ள மனத்தை, என்றனக்குத் தந்தருளாய் – எனக்கு அருள்புரிவாயாக. 2

[விஷயச்சுருக்கம்]

ஸ்ரீதேசிகன், நாலாயிரதிவ்யப்பிரபந்தத்தின்மீது தமக்குள்ள ஈடுபாட்டின் மிகுதியால் இப்பிரபந்தத்தில் ஆழ்வார்கள் அவதரித்த திவ்யஸ்தலம், மாஸம், திருநக்ஷத்ரம், அவர்கள் பெருமை, அருளிச் செய்த ப்ரபந்தங்களின் பெயர், அவற்றின் பாசுர எண், அப்பிரபந்தங்களின் உயிர்நிலையான ஸாரார்த்தம் ஆகிய இவற்றை வெளியிட்டுத் தம்முடைய அநுஸந்தாநத்திற்காக அந்தப் பிரபந்தங்களைத் தமக்கு அருள்செய்யுமாறு அந்த அந்த ஆழ்வார்களைப் பிரார்த்தித்துக் கடைசியில் 2-பாசுரங்களில் ஆழ்வார்கள் திருநாமத்தையும் அவர்கள் அருளிச் செய்த பாசுர எண்களையும் கூறி, ஒரு பாசுரத்தில் ஒரே கோஷ்டியாக அவர்களை அநுபவித்து, அவர்களின் பிரபந்தமே தமக்கு உஜ்ஜீவிக்க ஸாதநமென்று மொழிந்து, திவ்யப்ரபந்தத்தில் தமக்குள்ள பக்தியின் மிகுதியால் தமிழ்மறையோன் என்று தம்மைப் பெருமையுடன் பேசிக் கொண்டு, இந்த ப்ரபந்தஸாரத்தை அநுஸந்திப்பவருக்கு எம்பெருமான் கருணையால் ஸகல க்ஷேமமுமுண்டாமென்று முடித்தருள்கிறார். ஆழ்வார்கள் அருளிய ப்ரபந்தங்களின் ஸாரமான பொருளை இதிலே சிறிய வாக்கியத்தில் அடக்கிக் கூறியபடியால் இதற்கு இப்பெயர் வந்தது.

[ஒரு வேண்டுகோள் :— ஸந்நிதியிலும் திருமாளிகையிலும் திவ்யப்ரபந்தத்தை ஸேவிக்கும்போது அந்த அந்த ப்ரபந்தத்தின் தனியனை அநுஸந்தித்தவுடன் அந்த அந்த ஆழ்வார் விஷயமாய் இப்பிரபந்தத்தில் தேசிகன் அருளிய பாசுரத்தையும் தனியனாக அநுஸந்திப்பது மிகவும் உசிதமாகும். புதிதாய் ஒரு வழக்கத்தைக் கைக்கொள்ளச் சிலர் கூசக்கூடும். பல புதிய சிறந்த வழக்கங்கள் கைக்கொள்ளப் பட்டிருப்பதையும் ஔசித்யத்தையும் கருதி இதையும் கொள்ளலாம். பெரியோர் ஆராய்ந்து நிர்ணயிக்க.]

ஆசார்யவந்தநம்

இப்பிரபந்தம் முழுவதும் எண்சீராசிரியவிருத்தத்தால் அமைந்தது.

367 ஆழ்வார்க ளவதரித்த நாளூர் திங்க
ளடைவுதிரு நாமங்க ளவர்தாஞ் செய்த
வாழ்வான திருமொழிக ளவற்றுட் பாட்டின்
வகையான தொகையிலக்க மற்று மெல்லாம்
வீழ்வாக மேதினிமேல் விளங்க நாளும்
விரித்துரைக்குங் கருத்துடனே மிக்கோர் தங்க
ணீள்பாத நிரந்தரமுந் தொழுது வாழ்த்து
நேசமுட னடியேன்றன் னெஞ்சு தானே. 1

உரை:— ஆழ்வார்கள் அவதரித்த – ஆழ்வார்கள் (இப்பூமியில்) அவதாரம்செய்தருளிய, நாள் – திருநக்ஷத்ரம், ஊர் – திவ்யதேசம், திங்கள் – மாஸம், அடைவு – (முன் பின் என்ற) க்ரமம், திருநாமங்கள் – (அவர்களின்) திருநாமங்கள், அவர்தாம் செய்த – அவர்கள் அருளிச்செய்த, வாழ்வான – (உலகிலுள்ளோர்) உஜ்ஜீவிக்கக் காரணமான, திருமொழிகள் அவற்றுள் – திவ்ய ப்ரபந்தங்களுள், பாட்டின் வகையான தொகை – பாட்டின் வகுப்பின்படி எண்கள், இலக்கம் – (அவரவர் அருளிச்செய்த பாசுரத்தின்) கூட்டிய எண், மற்றும் எல்லாம் – (அந்த அந்த ப்ரபந்தங்களில் வெளியாகும் ஸாரார்த்தம் ஆகிய) பிற எல்லாம், வீழ்வாக – (அனைவரும்) விரும்புமாறு, நாளும் – எந்நாளும், மேதினி மேல் விளங்க – பூமியில் ப்ரகாசிக்கும்படி, விரித்து உரைக்கும் கருத்துடன் - விளக்கிக் கூறவேண்டுமென்ற நோக்கத்துடன், அடியேன்றன் நெஞ்சு – அடியேனுடைய மனம், மிக்கோர்தங்கள்– பெரியோர்களான ஆசார்யர்களுடைய, நீள் பாதம் – நீண்ட திருவடிகளை, நேசமுடன் – அன்புடன், நிரந்தரமும் – இடைவிடாது (எப்பொழுதும்), தொழுது வாழ்த்தும் – வணங்கி வாழ்த்தும்.

ஆழ்வார்கள் அவதரித்த மாஸம், திருநக்ஷத்ரம், திவ்யதேசம், திருநாமங்கள், பிரபந்தம், பாசுரம், இவற்றின் எண் முதலியவற்றை உலகிலுள்ளோர் எந்நாளும் அநுஸந்தித்து உஜ்ஜீவிக்கவேண்டுமென்பதற்காக இயற்றப்படும் இப்பிரபந்தஸாரம் தடையின்றி முடிவுபெறுவதற்காகப் பூர்வாசாரியர்களின் திருவடிகளைத் தொழுகின்றேன்—என்று மங்களமிட்டவாறு. 1

பொய்கையாழ்வார்

368 அருண்மிகுத்த தொருவடிவாய்க் கச்சி தன்னி
லைப்பசிமா தத்திருவோ ணத்து நாளிற்
பொருண்மிகுத்த மறைவிளங்கப் புவியோ ருய்யப்
பொய்கைதனில் வந்துதித்த புனிதா முன்னு
ளிருளதனிற் றண்கோவ லிடைக ழிச்சேன்
றிருவருட னிற்கவுமா லிடைநே ருக்கத்
திருவிளக்கா மேனும்வையந் தகளி நூறுஞ்
செழும்பொருளா வேனக்கருள்செய் திருந்த நீயே. 2

உரை:— பொருள் மிகுத்த – ஸாரார்த்தங்கள் மிகுந்துநிற்கின்ற, மறை விளங்க – வேத (ாந்த) ம் (உலகில்) ப்ரகாசிக்கவும், புவியோர் உய்ய – உலகிலுள்ளோர் உஜ்ஜீவிக்கவும், ஐப்பசிமாதத் திருவோணத்து நாளில் – ஐப்பசிமாதத்தில் திருவோணம் என்ற நாளில், கச்சிதன்னில் – காஞ்சீபுரத்தில், பொய்கைதனில் – திருத் தாமரைப்பொய்கையில், மிகுத்தது அருள் ஒரு வடிவாய் – (சேதநர்

கள்மீது) மிகவளர்ந்த கருணையே ஒரு வடிவுகொண்டதென்னும்படி, வந்து உதித்த – வந்து அவதாரம்செய்த, புனிதா – பரிசுத்த ஸ்வரூபரான பொய்கையாழ்வாரே!, முன்னாள் – முன் ஒருநாள், இருளதனில் – இருளில், தண் கோவல் – குளிர்ந்த திருக்கோவலூரில், இடைகழிச் சென்று – (ஒரு திருமாளிகையின்) இடைகழிக்குச் சென்று, இருவருடன் நிற்கவும் – (நீ பூதத்தாழ்வார் பேயாழ்வார் ஆகிய) இருவருடன் நிற்கவும், மால் இடை நெருக்க – (அப்போது) எம்பெருமான் நடுவில் (புகுந்து) நெருக்க, திரு விளக்கு ஆம் எனும் – (இருளைப் போக்குகின்ற) சிறந்த விளக்காக ஆகும் என்று அருளிச் செய்த, வையம்தகளி – 'வையந்தகளி' என்று தொடங்குகின்ற, நூறும் – (முதல் திருவந்தாதியாகிய) நூறு பாசுரங்களையும், செழும் பொருளா – சிறந்த செல்வமாக, நீ எனக்குத் திருந்த அருள்செய் – நீ எனக்குக் குறைதீர அருள்புரியவேண்டும்.

பொய்கையாழ்வார் ஐப்பசிமாதத்துத் திருவோணத்திருநக்ஷத்ரத்தில் பெருமாள்கோயிலில் யதோக்தகாரியெம்பெருமான் ஸந்நிதிக்கு அருகேயுள்ள ஓர் உயர்தரப் பொய்கையில் தெய்வீகமான ஒரு பொற்றாமரையில் நடுவே அயோநிஜராய் அவதரித்தருளினார். பொய்கையில் அவதரித்ததுபற்றிப் பொய்கையாழ்வார் எனத் திருநாமம் வந்தது. இவருடைய அவதாரத்தால் வேதார்த்தங்கள் உலகில் நன்கு விளங்கவும் அதனால் அனைவரும் உஜ்ஜீவிக்கவும் வழி ஏற்பட்டது. இவ்வாழ்வார் ஒருகால் திருக்கோவலூருக்கு எழுந்தருளியிருந்தபோது அங்குள்ள மிருகண்டுமுனிவர் திருமாளிகையின் இடைகழியில் தங்கினார். பின் பூதத்தாழ்வாரும் பேயாழ்வாரும் அங்கு எழுந்தருள, மூவரும் அச்சிறிய இடைகழியில் ஒன்றுகூடி நின்றனர். இவர்களின் திருமேனிஸம்பந்தத்தையும் திருவந்தாதிகளின் திருவவதாரத்தையும் விரும்பிய எம்பெருமானும் அங்கு வந்து இவர்களின் நடுவே புகுந்து இவர்களை நெருக்கினான். இவர்களும் அறிவுச்சுடர்பெற்று அவனை நன்கு அநுபவித்து ஒவ்வொருவரும் ஒவ்வோர் அந்தாதியைப் பாடியருளினர். அவற்றில் உலகுக்கே வழிகாட்டும் விளக்காய் அமைந்து "வையந்தகளியா" என்று தொடங்கப்பெற்று 100 பாசுரங்கள் கொண்டுள்ள முதற்றிருவந்தாதியைத் தமது நெஞ்சிற் பதியுமாறு அருள்புரிய வேண்டுமென்று ஸ்ரீதேசிகன் பொய்கையாழ்வாரைப் பிரார்த்தித்தவாறு. 2

பூதத்தாழ்வார்

369 கடன்மல்லைக் காவலனே பூத வேந்தே
காசினிமே லைப்பசியி லவிட்ட நாள்வந்
திடர்கடியுந் தண்கோவ லிடைக ழிச்சேன்
றிணையில்லா மூவருமா யிசைந்தே நிற்க

நடுவிலிவ ரோருவருமென் றறியா வண்ண
நள்ளிருளின் மானெருக்க நந்தா ஞானச்
சுடர்விளக்கேற் றியவன்பே தகளி யான
தோடைநூறு மெனக்கருள்செய் துலங்க நீயே. 3

உரை:— கடன்மல்லைக் காவலனே – திருக்கடன்மல்லைக்கு நாதனே!, பூதவேந்தே – பூதத்தாழ்வார் என்னும் ஸ்வாமியே!, காசினி மேல் – இப்பூவுலகின்கண், ஐப்பசியில் – ஐப்பசிமாதத்தில், அவிட்ட நாள் வந்து – அவிட்டமென்னும் திருநக்ஷத்ரத்தில் அவதரித்து, இடர் கடியும் – (வஸிப்பவரின்) துன்பத்தைப் போக்கவல்ல, தண் – குளிர்ந்த, கோவல் – திருக்கோவலூரில், இடைகழிச் சென்று – (ஒரு திருமாளிகை யின்) இடைகழியிற் சென்று, இணையில்லா மூவருமாய் – ஒப்பற்ற (நீங்கள்) மூவரும், இசைந்தே நிற்க – ஒன்றுகூடிநிற்கும்போது, நள்ளிருளில் – மிக்க இருளில், நடுவில் ஒருவரும் இவர் என்று – (இவர் களின்) நடுவில் ஒருவரும் இன்னார் என்று, அறியாவண்ணம்–அறியாத வாறு, மால் நெருக்க – எம்பெருமான் (வந்துகூடி) நெருக்க (அவனைக் காணும்பொருட்டு), நந்தா ஞானச் சுடர் விளக்கு ஏற்றிய – அழியாத ஜ்ஞானமாகிய ப்ரகாசம் நிறைந்த தீபத்தை ஏற்றிய, அன்பேதகளியான– 'அன்பே தகளியா' என்று தொடங்கிய, தொடை நூறும் – (இரண்டாம் திருவந்தாதியாகிய) நூறு பாசுரங்களையும், நீ எனக்குத் துலங்க அருள் செய் – நீ எனக்கு விளங்குமாறு அநுக்ரஹிப்பாயாக.

பூதத்தாழ்வார், ஐப்பசிமாதத்து அவிட்டத்திருநக்ஷத்ரத்தில் திருக்கடன்மல்லையிலே குருக்கத்திப்பூவின் நடுவே அயோநிஜராய் அவதரித்தருளினர். அவர் 'அன்பே தகளியா' என்று தொடங்கி அருளிச்செய்த 100 பாசுரங்கொண்ட இரண்டாந்திருவந்தாதியைத் தம்முடைய அநுஸந்தாநத்திற்கு உரியதாக்குமாறு ஸ்ரீதேசிகன் பூதத் தாழ்வாரைப் பிரார்த்தித்தவாறு.

(சரிதவிளக்கம் 368-வது பாசுரவுரையிற் காண்க) 3

பேயாழ்வார்

370 மாமயிலைப் பதியதனிற் றுலாமா தத்தில்
வருஞ்சதயத் தவதரித்துக் கோவ லூரிற்
றூமுனிவ ரிருவருடன் றுலங்க நின்று
துன்னியபே ரிருணீங்கச் சோதி தோன்றச்
சேமமுட னெடுமாலைக் காணப் புக்குத்
திருக்கண்டே னெனவுரைத்த தேவே யுன்றன்
பாமருவு தமிழ்மாலை நூறு பாட்டும்
பழவடியே னுக்கருள்செய் பரம நீயே. 4

உரை:—மா மயிலைப் பதியதனில் - பெருமைபெற்ற திருமயிலை யென்னும் க்ஷேத்ரத்தில், துலாமாதத்தில் வரும் - ஐப்பசிமாதத்தில் வந்த, சதயத்து அவதரித்து - சதயத்திருநக்ஷத்ரத்தில் அவதரித்து, கோவலூரில் - திருக்கோவலூரில், தூ முனிவர் இருவருடன் - பரிசுத்தர்களான (பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் என்ற) இருமுனிவருடன், துலங்க நின்று - விளங்க நின்று, துன்னிய பேர் இருள் நீங்க - (உலகில்) அடர்ந்த பெரிய (அஜ்ஞாநமாகிய) இருள் நீங்கும்படி, சோதி தோன்ற - (தெய்வீகமான) தேஜஸ் உண்டாக, சேமமுடன் - இன்பத்தோடு, நெடுமாலைக் காணப்புக்கு - எம்பெருமானை (ப்ரத்யக்ஷத்தால்) காணத்தொடங்கி, திருக்கண்டேன் என உரைத்த தேவே - 'திருக்கண்டேன்' என்று (தொடங்கும் ப்ரபந்தத்தை) அருளிச்செய்த ஸ்வாமி!, பரம - (எல்லோரினும்) சிறந்தவனே!, உன்தன் - உன்னுடைய, பா மருவு தமிழ்மாலை - பாக்கள் நிறைந்த தமிழ்மாலையாகிய (மூன்றும் திருவந்தாதியெனும்), நூறு பாட்டும் - நூறு பாசுரங்களையும், பழவடியேனுக்கு - தலைமுறைதலைமுறையாக உன் தாஸனாகியஎனக்கு, நீ அருள்செய் - நீ அருள்புரிவாயாக.

பேயாழ்வார் ஐப்பசிமாதத்துச் சதயத்திருநக்ஷத்ரத்திலே திருமயிலையில் ஆதிகேசவப்பெருமாள் ஸந்நிதிக்கு ஸமீபத்திலுள்ள ஒரு கிணற்றில் மலர்ந்த ஒரு செவ்வல்லிப்பூவில் அயோநிஜராய் அவதரித்தருளினார். அவர் பெரியபிராட்டியை முன்னிட்டே எம்பெருமானை அநுபவித்துத் 'திருக்கண்டேன்' என்று தொடங்கி அருளிச்செய்த 100 பாசுரங்கொண்ட மூன்றாந்திருவந்தாதியைத் தமக்கு அருளுமாறு ஸ்ரீதேசிகன் பேயாழ்வாரைப் பிரார்த்தித்தவாறு.

(சரிதவிளக்கம் 368-வது பாசுரவுரையிற் காண்க.)

இவ்வாழ்வார் காணப்புகுந்தது நெடுமாலை; ஆனால் (முதலில்) கண்டது திருவை என்று அருளிச்செய்த ஸ்வாரஸ்யம் காண்க. 4

திருமழிசையாழ்வார்

371 தைம்மகத்தில் வருமழிசைப் பரனே மற்றைச்
சமயங்கள் பலதேரிந்து மாயோ னல்லாற்
றெய்வம்மற் றில்லையென வுரைத்த வேதச்
செழும்பொருளன் முகன்றேண்ணூற் றுறு பாட்டு
மெய்ம்மிகுத்த திருச்சந்த விருத்தப் பாடல்
விளங்கியநூற் றிருபதுந்தப் பாமன் மெய்யே
வையகத்து மறவாம லுரைத்து வாழும்
வகையடியே னுக்கருள்செய் மகிழ்ந்து நீயே. 5

உரை:— தை மகத்தில் வரும் - தைமாதத்து மகத்திருநக்ஷத்ரத்தில் அவதரித்த, மழிசைப்பரனே—திருமழிசையாழ்வாரே!, மற்றைப் பல சமயங்கள் தெரிந்து – மற்றைப் பல மதங்களையும் (நன்கு) அறிந்து, மாயோன் அல்லால் - அதிசயச்செய்கையையுடைய ஸர்வேசுவரனை யன்றி, தெய்வம் மற்று இல்லை – (உபாஸிக்கத்தக்க) தெய்வம் வேறு இல்லை, என உரைத்த – என்று வெளியிட்ட, வேதச் செழும் பொருள்– வேதத்தின் சிறந்த ஸாரார்த்தமாகிய, நான்முகன் தொண்ணூற்ருறு பாட்டும் - நான்முகன்திருவந்தாதியாகிய தொண்ணூற்ருறு பாசுரங்களையும், மெய் மிகுத்த – தத்துவார்த்தங்கள் நிறைந்த, திருச்சந்த விருத்தப் பாடல் - திருச்சந்தவிருத்தப் பாட்டுக்களாக, விளங்கிய – ப்ரகாசிக்கின்ற, நூற்றிருபதும் – நூற்றிருபதுபாசுரங்களையும், தப்பாமல் – தவருமல், மெய்யே – உள்ளவாறே, வையகத்து – உலகத்தில், மறவாமல் – மறவாது, உரைத்து வாழும்வகை – அநுஸந்தித்து உஜ்ஜீவிக்கும் வண்ணம், நீ மகிழ்ந்து – நீ மகிழ்ச்சிகொண்டு, அடியேனுக்கு – தாஸனாகிய எனக்கு, அருள் செய் – அருள்புரிவாயாக.

திருமழிசையாழ்வார் தைமாதத்து மகத்திருநக்ஷத்ரத்தில் மஹீஸாரக்ஷேத்ரமாகிய திருமழிசையில் அவதரித்தருளினார். இவர் பிற மதங்கள் பலவற்றிலும் புகுந்து ஆராய்ந்து அவற்றின் குற்றங்களை உணர்ந்து 96-பாசுரங்கள்கொண்ட நான்முகன்திருவந்தாதியின்வாயிலாக ‘ஸ்ரீமந்நாராயணனே உபாஸிக்கத்தக்க தெய்வம்’ என்று வேதத்தின் ஸாரார்த்தத்தை ஸ்தாபித்தருளினார். மேலும் திருச்சந்தவிருத்தம் என்ற 120-பாசுரங்கள்கொண்ட பிரபந்தத்தால் ‘ஸகலவஸ்துக்களும் எம்பெருமானுக்குச் சரீரமாய்நிற்பவை’ என்ற உண்மைப்பொருளை விளக்கியுமருளினார். இவ்விரண்டு பிரபந்தங்களையும் தவருது மறவாது உள்ளவாறே அநுஸந்தித்து உஜ்ஜீவிக்கச்செய்யுமாறு இப்பாசுரத்தால் ஸ்ரீதேசிகன் திருமழிசையாழ்வாரைப் பிரார்த்தித்தபடி. 5

நம்மாழ்வார்

372 முன்னுரைத்த திருவிருத்த நூறு பாட்டு
முறையின்வரு மாசிரிய மேழு பாட்டு
மன்னியநற் பொருட்பெரிய திருவந் தாதி
மறவாத படியெண்பத் தேழு பாட்டும்
பின்னுரைத்த தோர்திருவாய் மொழியேப் போதும்
பிழையறவா யிரத்தொருநூற் றிரண்டு பாட்டு
மிந்நிலத்தில் வைகாசி விசாகந் தன்னி
லெழிற்குருகை வருமாரு விரங்கு நீயே. 6

உரை:— வைகாசி விசாகந்தன்னில் – வைகாசிமாதத்துத் திருவிசாகத்திருநக்ஷத்ரத்தில், இந்நிலத்தில்-இவ்வுலகில், எழில் குருகை

வரும் - அழகுபொருந்திய திருக்குருகூரில் அவதரித்த, மாறு - சட கோபனே!, முன் உரைத்த-(நீ) முதலில் அருளிச்செய்த, திருவிருத்தம் நூறு பாட்டும் - திருவிருத்தம் என்னும் பிரபந்தத்தின் நூறு பாசுரங்களையும், முறையின் வரும் - அடுத்து அவதரித்த, ஆசிரியம் ஏழுபாட்டும் - திருவாசிரியம் என்னும் பிரபந்தத்தின் ஏழுபாசுரங்களையும், மறவாதபடி - (எந்நாளும்) மறக்கமுடியாதவாறு, நல் பொருள் மன்னிய - சிறந்த ஸாரார்த்தம் பொருந்திய, பெரியதிரு வந்தாதி - பெரியதிருவந்தாதியின், எண்பத்தேழு பாட்டும் - எண்பத் தேழுபாசுரங்களையும், பின் உரைத்தது - அதன்பின் அருளிச்செய்த, ஓர் திருவாய்மொழி - (நன்கு) அநுஸந்திக்கத்தக்க திருவாய்மொழியின், ஆயிரத்தொரு நூற்றிரண்டு பாட்டும் - ஆயிரத்துநூற்றிரண்டு பாசுரங் களையும், எப்போதும் பிழை அற-எந்நாளும் பிழைநீங்க(அநுஸந்திக்கும் படி), நீ இரங்கு - நீ அருள்புரிவாயாக.

நம்மாழ்வார், வைகாசித்திருவிசாகத் திருநக்ஷத்ரத்தில் பாண்டிநாட்டில் திருக்குருகூர் (ஆழ்வார்திருநகரி) என்னும் திவ்ய தேசத்தில் திருவவதரித்தருளினார்.

இவ்வாழ்வார் உலகவிஷயங்களிலே சிறிதும் நாட்டமின்றித் திருப்புளியாழ்வாரின் அடியிலேயே எழுந்தருளியிருந்து எம்பெருமா னுடைய அநுபவத்திலேயே ஆழ்ந்துகிடந்த நிலைமையிலே பற்பல திவ்ய தேசத்து எம்பெருமான்களும் இவர் முன்பே எழுந்தருளிக் காட்சிதந் தனர். அப்பொழுது வாய்த்த இவருடைய பகவதநுபவமே 100 பாசுரங் கொண்ட திருவிருத்தமாகவும், 7 பாசுரங்கொண்ட திருவாசிரியமாக வும், 87 பாசுரங்கொண்ட பெரியதிருவந்தாதியாகவும், 1102 பாசுரங் கொண்ட திருவாய்மொழியாகவும் அவதரித்தது. இந்தப் பிரபந்தங் கள் நான்கையும் தமக்கு அருளுமாறு ஸ்ரீதேசிகன் நம்மாழ்வாரைப் பிரார்த்தித்தவாறு.

இவ்வாழ்வார் அருளிய பிரபந்தம் நான்கினுள் முதலாவதாகிய திருவிருத்தத்தில் ஆழ்வார் தம் ஞானக்கண்ணாலே எம்பெருமானைக் கண்டு அவன்பக்கல் இந்த ஸம்ஸாரத்தின் இழிவையும் பொறுக்க முடியாமையையும் விண்ணப்பித்து ஸம்ஸாரத்தை ஒழித்தருளும்படி பிரார்த்தித்தார். பகவதநுபவத்திற்கு முக்கிய விரோதியாயுள்ள ப்ரக்ருதிஸம்பந்தம் நீங்குகையே முதலில் வேண்டப்பட்டமைபற்றி ‘முன்னுரைத்த’ என்னலாயிற்று.

இரண்டாவதான திருவாசிரியத்தில் — இவர்வேண்டுகோளைச் செவிசாய்த்த எம்பெருமான் பரமபதத்தில் பெறக்கடவதான தன் அநுபவத்தை இங்கேயே பெறும்படி தன் ஸ்வரூபம் திருமேனி குணம் விபூதி ஆகிய அனைத்தையும் இவருக்குக் காட்டிக்கொடுக்க, இவரும் அவற்றை அநுபவித்து அம்முறையை வெளியிட்டருளினார். ஸ்ரீ

வைகுண்டத்தில் அநுபவிக்கும் முறையையே கைக்கொண்டு இப்பிர பந்தத்தைப் பாடியபடியால் 'முறையின் வரும்' என்னலாயிற்று.

மூன்றுவதாகிய பெரியதிருவந்தாதியில் கீழ்க்கூறியவாறு அநுப வித்த விஷயத்தில் மேன்மேலும் தமக்கு ஆசை கட்டுக்கடங்காது பெருக்கெடுத்தோடும் தன்மையை வெளியிட்டருளினர். ஸம்ஸாரி களுக்கு இனி வரப்போகும் பகவதநுபவத்திற்கு இவ்வாறு பேரவாக் கொண்டு துடிதுடித்து நிற்கும்நிலையே முக்கியமாய் வேண்டப்படுவது பற்றி 'மன்னிய நற்பொருள்' என்னலாயிற்று.

நான்காவதாகிய திருவாய்மொழியிலே தாம் விரும்பியபடி பரிபூர்ணமான பகவதநுபவத்தைப் பெற்று முக்தி பெற்றமையை வெளியிட்டருளினர். எல்லா நிலைகளையும் கடந்து பரமபலமாகிய மோக்ஷாநுபவத்தைப் பெற்றமையைக் கூறியதுபற்றிப் 'பின்னுரைத்த' என்னலாயிற்று. 6

மதுரகவிகள்

373 தேறியமா ஞானமுடன் றிருக்கோ ளூரிற்
சித்திரையிற் சித்திரைநாள் வந்து தோன்றி
யாறியநல் லன்புடனே குருகூர் நம்பிக்
கனவரத மந்தரங்க வடிமை செய்து
மாறனையல் லாலென்று மறந்துந் தேவு
மற்றறியே னெனுமதுர கவியே நீமுன்
கூறியகண் ணிநுண்சிறுத்தாம் பதனிற் பாட்டுக்
குலவுபதி னொன்றுமெனக் குதவு நீயே. 7

உரை:—திருக்கோளூரில் – திருக்கோளூர் என்னும் திவ்யதேசத் தில், சித்திரையில் சித்திரைநாள் – சித்திரைமாதத்துச் சித்திரைத்திரு நக்ஷத்ரத்தில், தேறிய மா ஞானமுடன் – தெளிந்த நிறைந்த அறி வுடன், வந்துதோன்றி – வந்து அவதரித்து, ஆறிய நல் அன்புடனே – பண்பட்ட சிறந்த பக்தியுடன், குருகூர் நம்பிக்கு – திருக்குருகூருக்கு ஸ்வாமியான நம்மாழ்வாருக்கு, அனவரதம்-இடைவிடாது, அந்தரங்க அடிமை செய்து – அந்தரங்க கைங்கர்யம் செய்து, மாறனை அல்லால் – நம்மாழ்வாரை அன்றி, என்றும் – எக்காலத்தும், மறந்தும் – தவறியும், மற்று தேவு அறியேன் எனும் – வேறு தெய்வத்தை அறியேன் என்று கூறிய, மதுரகவியே – மதுர கவியே!, நீ முன் கூறிய – நீ முன்பு அருளிச்செய்த, கண்ணிநுண் சிறுத்தாம்பு அதனில் – கண்ணிநுண்சிறுத்தாம்பு என்று தொடங்கும் பிரபந்தத்தில், குலவு பாட்டு பதினொன்றும் – விளங்குகின்ற பதினொரு பாசுரங்களையும், நீ எனக்கு உதவு – நீ எனக்கு அருள்வாயாக.

ஸ்ரீமதுரகவிகள் சித்திரைமாதத்துச் சித்திரைத்திருநக்ஷத்ரத்தில் திருக்குருகூருக்கு அருகில் உள்ள திருக்கோளூரில் அவதரித்தருளினர். இவர் எழுந்தருளியிருந்த காலத்தில் கண்ணனே இவ்வுலகில் எழுந்தருளியிருந்தும் ஓர் ஆசார்யன் மூலமாகத்தான் எம்பெருமானை அடைய வேண்டுமென்ற துணிவால் அவனை நேரில் பற்ற மனங்கொள்ளாது புறக்கணித்துத் தக்க ஆசார்யனைப் பெறக் காத்துக்கிடந்தார். நம்மாழ்வார் அவதரித்தபின் அவர் திருவடிகளில் ஈடுபட்டு அவர் திவ்ய ஸூக்திகளையும் அவர் திருவடிகளையுமே தமக்குத் தாரக போஷக போக்யங்களாகக் கொண்டு அவருக்கு இடைவிடாது கைங்கர்யம்செய்து பகவத்பக்தியினும் ஆசார்யபக்தியே மிகச் சிறந்ததாமென்று உலகுக்கு நல்வழிகாட்டினர். இவர் நம்மாழ்வார் விஷயமாய் அருளிச்செய்த 11 பாசுரம் அடங்கிய 'கண்ணிநுண்சிறுத்தாம்பு' என்னும் பிரபந்தத்தைத் தமக்கு அருளுமாறு ஸ்ரீதேசிகன் மதுரகவிகளைப் பிரார்த்தித்தவாறு.

எம்பெருமான் விஷயத்தில் எத்துணை ஈடுபட்டவராயினும் ஆசார்யனை அடையாதவர் உஜ்ஜீவிக்கமுடியாதென்று ஸ்ரீமதுரகவிகள் தம் பிரபந்தத்தின்வாயிலாய் விளக்கி ஆசார்ய பக்திக்கு உலகில் முதன் முதலாக வழிகாட்டியதால் 'நீ முன் கூறிய' என்னலாயிற்று.

ஆழ்வார் முதலில் எம்பெருமான்விஷயத்தில் ஈடுபட்டுப் பின்பு பாகவதவிஷயத்தில் ஈடுபட்டார். ஸ்ரீமதுரகவிகள் பகவான்விஷயத்தில் ஈடுபாடின்றி முதலிலேயே பாகவதவிஷயத்தில் ஈடுபட்டுப் பாடியபடியால் 'நீ முன் கூறிய' என்னலாயிற்று—என்றும் பெரியோர் பணிப்பர். 7

குலசேகராழ்வார்

374 பொன்புரையும் வேற்குலசே கரனே மாசிப்
புனர்பூசத் தேழில்வஞ்சிக் களத்துத் தோன்றி
யன்புடனே நம்பெருமாள் செம்பொற் கோயி
லனைத்துலகின் பெருவாழ்வு மடியார் தங்க
ளின்பமிகு பெருங்குழுவுங் காண மண்மே
லிருளிரிய வென்றெடுத்த விசையிற் சொன்ன
நன்பொருள்சேர் திருமொழிநூற் றைந்து பாட்டு
நன்ருக வேனக்கருள்செய் நல்கி நீயே. 8

உரை:— பொன்புரையும் வேல் - பொன்னைப்போல் (ஜ்வலிக்கும்) வேலையுடைய, குலசேகரனே - குலசேகராழ்வாரே!, மாசிப் புனர் பூசத்து - மாசிமாதத்துப் புனர்வஸுநக்ஷத்ரத்தில், எழில் வஞ்சிக் களத்துத் தோன்றி - அழகிய திருவஞ்சிக்களமென்னும் க்ஷேத்ரத்தில் அவதரித்து, அன்புடனே - பக்தியுடன், நம்பெருமாள் - ஸ்ரீரங்கநாத

னுடைய, செம் பொன் கோயில் – சிவந்த பொன்னிலாகிய ஸ்ரீரங்க நகரத்தில் (வஸிக்கின்ற), அனைத்து உலகின் பெரு வாழ்வும் – ஸகல ப்ராணிகளுடைய (ஸ்ரீரங்கத்தில் வாஸமாகிய) பெரிய செல்வத்தையும், அடியார்தங்கள் – பாகவதர்களுடைய, இன்பம் மிகு – ஆநந்தம் மிக்க, பெருங் குழுவும் – பெரிய கோஷ்டியையும், காண – அநுபவிக்க(வும்) ஸேவிக்க(வும் விரும்பி), மண்மேல் (இருள் இரிய) – இந்தப் பூமியில் (அஜ்ஞாநமாகிய இருள் அழிவதற்காக), இருளிரிய என்று – 'இருளிரிய' என்று தொடங்கி, எடுத்த இசையில் சொன்ன – உச்சஸ்வரத்தில் (நீ) அருளிச்செய்த, நன் பொருள் சேர் – சிறந்த ஸாரார்த்தம் பொருந்திய, திருமொழி நூற்றைந்து பாட்டும் – (பெருமாள்) திருமொழி நூற்றைந்து பாசுரங்களையும், நீ நல்கி – நீ (என்மீது) அன்புகொண்டு, நன்றாக எனக்கு அருள்செய் – நன்கு (மனத்திற் பதியுமாறு) எனக்கு அருள்செய்வாயாக.

குலசேகராழ்வார் மாசிமாதப் புனர்பூசத் திருநக்ஷத்ரத்தில் சேரநாட்டில் திருவஞ்சிக்களத்தில் அவதரித்தருளினார். இவர் சேர நாட்டில் தம் தந்தைக்குப் பின் அரசாண்டுவரும்போதும், 'ஸ்ரீமந்நாராயணனே பரதத்துவம்' என்ற கொள்கையையும், ஸ்ரீராமன் கண்ணன் என்னும் விபவாவதாரங்களிலும், கோயில் திருமலை முதலிய திவ்ய தேசத்து அர்ச்சைத் திருமேனிகளிலும் மிக்க ஈடுபாட்டையும் உடையராயும், விசேஷமாய்ப் பாகவதர்களிடம் மிக்க பக்தியுடையராயும் இருந்தார். இவர் திருவரங்கத்தெம்பெருமானது திருவடி நிழலில் வஸிக்கும் பாக்கியம்பெற்ற பாகவதோத்தமர்களின் பெருமையையும், அவர்களின் கோஷ்டியையும் நேரில் ஸேவிக்கவிரும்பி அருளிச்செய்த 105 பாசுரம் அடங்கிய பெருமாள்திருமொழியென்னும் பிரபந்தத்தைத் தமக்கு அருளுமாறு ஸ்ரீதேசிகன் குலசேகராழ்வாரைப் பிரார்த்தித்தவாறு.

இவ்வாழ்வாருடைய நகரத்தில் ஸ்ரீரங்கயாத்ரையே எப்பொழுதும் கோஷிக்கப்படும் வழக்குக்கேற்ப இங்கு 'எடுத்த இசை' என்று அருளிச் செய்த ஸ்வாரஸ்யம் காண்க. 8

பெரியாழ்வார்

375 பேரணிந்த வில்லிபுத்தூ ரானி தன்னிற்
பெருஞ்சோதி தனிற்றோன்றும் பெருமா னேமுன்
சீரணிந்த பாண்டியன்றன் னெஞ்சு தன்னிற்
றியக்கறமால் பரத்துவத்தைத் திறமாச் சேப்பி
வாரணமேன் மதுரைவலம் வரவே வானின்
மால்கருட வாகனனாய்த் தோன்ற வாழ்த்து
மேரணிபல் லாண்டுமுதற் பாட்டு நானூற்
றெழுபத்தோன் றிரண்டுமெனக் குதவு நீயே. 9

உரை:— பேர் அணிந்த – புகழ் பெற்ற, வில்லிபுத்தூர்-ஸ்ரீவில்லிபுத்தூரில், ஆனிதன்னில் – ஆனிமாதத்தில், பெருஞ்சோதி தனில் – ஸ்வாதிநக்ஷத்ரத்தில், தோன்றும் பெருமானே–அவதரித்த (பெரியாழ்வாராகிய) பெரியோனே!, நீ முன் – நீ முன் ஒரு கால், சீர் அணிந்த – சிறப்புப் பொருந்திய, பாண்டியன் தன் – பாண்டியராஜனுடைய, நெஞ்சுதன்னில் – மனத்தில், தியக்கு அற – சோர்வு இன்றி (ப் பதியுமாறு), மால் பரத்துவத்தை – ஸ்ரீமந்நாராயணனுடைய (அனைவரினும்) மேம்பட்ட தன்மையை, திறமாச் செப்பி–நன்றாகப் போதித்து, வாரணம் மேல் – யானையின்மீது, மதுரை வலம் வர – மதுரைப்பட்டணத்தில் ஊர்வலம் வர (அப்போது), வானில் - ஆகாயத்தில், மால் – எம்பெருமான், கருடவாகனனாய்த் தோன்ற–கருடன்மீது ஏறி வந்து வெளிப்பட, வாழ்த்தும்-(நீ) மங்களாசாஸனம்செய்த, ஏர் அணி–அழகு பொருந்திய, பல்லாண்டு முதல் - திருப்பல்லாண்டு முதலாகிய, பாட்டு நானூற்றெழுபத்து ஒன்று இரண்டும் – நானூற்றெழுபத்துமூன்று பாசுரங்களையும், எனக்கு உதவு - (நீ) எனக்கு அருள்வாயாக.

பெரியாழ்வார் ஆனி மாதத்து ஸ்வாதித்திருநக்ஷத்ரத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்தருளினார். பாண்டியராஜனை ஸ்ரீவல்லபதேவன் பொற்காசுகளைக் கிழிச்சீரையில் கட்டிப் பணயமாக வைத்துப் பரதத்துவத்தை நிச்சயம்செய்பவர் அதை எடுத்துக்கொள்ளலாமெனப் பறைசாற்றி, வித்துவான்களின் ஸபையைக் கூட்டினான். அங்கு எழுந்தருளிய பெரியாழ்வார் ஸ்ரீமந்நாராயணனே பரதத்துவமென்று பற்பல ஆதாரங்களைக்கொண்டு ஸ்தாபித்தார். அச்சமயம் பணயமாக வைத்த கிழி இவர் முன்னே தாழ வளைந்துநிற்க அதையும் அறுத்தருளினார். அரசன் ஸந்தேஹம் நீங்கப்பெற்று இவ்வாழ்வாரைப் பட்டத்துயானையின்மீது ஏற்றுவித்து விருதுகளுடன் மதுரைமாநகரம் முழுதும் மஹோத்ஸவம் கொண்டாடி வலம்வரச்செய்தான். அவ்வாறு வலம் வரும்போது இவ்விபவத்தைக் கண்ணாரக் கண்டுகளிக்க எம்பெருமான் பிராட்டியுடன் கருடன்மீது ஏறி ஆகாயத்தில் எழுந்தருளினான். ஆழ்வார் அவனை ஸேவித்து அநுபவித்துப் 'பல்லாண்டு பல்லாண்டு' என்று மங்களாசாஸநம் செய்யத் தொடங்கி அருளிச்செய்த 473 பாசுரங்களடங்கிய பெரியாழ்வார்திருமொழியைத் தமக்கு அருளுமாறு ஸ்ரீதேசிகன் பெரியாழ்வாரைப் பிரார்த்தித்தவாறு. 9

கோதைப்பிராட்டி

376 வேயர்புகழ் வில்லிபுத்தூ ராடிப் பூர
மேன்மேலு மிகவிளங்க விட்டு சித்தன்
றூயதிரு மகளாய்வந் தரங்க னார்க்குத்
துழாய்மாலை முடிசூடிக் கொடுத்த மாதே

நேயமுடன் றிருப்பாவைப் பாட்டா றைந்து
நீயுரைத்த தையோருதிங் கட்பா மாலே
யாயபுகழ் நூறுடனுற் பத்து மூன்று
மன்புடனே யடியேனுக் கருள்செய் நீயே. 10

உரை:— வேயர் - வேயர்குலத்தினருக்கு உரியதும், புகழ் - புகழையுடையதுமான, வில்லிபுத்தூர்-ஸ்ரீவில்லிபுத்தூரில், ஆடிப்பூரம்-திருவாடிப்பூரத் திருநக்ஷத்ரம், மேன்மேலும் மிக விளங்க - (தன்னுடைய அவதாரத்தால்) மேன்மேலும் மிகப்பெருமைபெற்று விளங்கும்படி, விட்டுசித்தன் தூய திருமகளாய் வந்து – பெரியாழ்வாருடைய பரிசுத்தையான புதல்வியாய் அவதரித்து, அரங்கனுர்க்கு - ஸ்ரீரங்கமன்னனுர்க்கு, துழாய்மாலே – திருத்துழாய்மாலேயை, முடிசூடிக் கொடுத்த மாதே – (முதலில்) தன்முடியில் சூடி (ப் பிறகு) கொடுத்த கோதைப்பிராட்டியே!, நேயமுடன் – (அரங்கனிடம்) காதலுடன், நீ உரைத்த – நீ அருளிச்செய்த, திருப்பாவைப் பாட்டு ஆறைந்தும் – திருப்பாவைப் பாசுரங்கள் முப்பதையும், தையொரு திங்கள் பாமாலேயாய – ‘தையொருதிங்களும்’ என்று தொடங்கிய பாமாலே யாகிய, புகழ்-புகழையுடைய, நூறுடன் நாற்பத்துமூன்றும் – நூற்று நாற்பத்துமூன்று பாசுரங்களேயும், அன்புடன் – அன்போடு, நீ அடியேனுக்கு அருள்செய்-நீ தாஸனுன எனக்கு அருள்புரிவாயாக.

ஆண்டாள், திருவாடிப்பூரத் திருநக்ஷத்ரத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரியாழ்வார் திருத்துழாய்ப்பாத்தியைக் கொத்தும்போது அந்நிலத்திலிருந்து அவதரித்தருளினுள். பெரியாழ்வாரும், ஜநகர் ஸீதையைப் புதல்வியாகக் கொண்டதுபோல் ஆண்டாளேத் தம் செல்வப்புதல்வியாகவே பாவித்து ஞானப்பாலேயூட்டிவளர்த்துவந்தார். ஆண்டாளும் திருவரங்கனிடம் அடங்காக்காதல்கொண்டு அவனேயே கணவனுகக் கொள்ளத்துணிந்தாள். தன் தந்தை அரங்கமன்னனுர்க்காகத் தொடுத்துவைத்த பூமாலேயைத் தன் முடியிற் சூடிக் கண்ணுடியில் அவனுக்கேற்ற தன் அழகைக் கண்டு மகிழ்ந்து களேந்துவைத்தாள். அரங்கமன்னனும் அம்மாலேயைத் தான் சூடிக்கொள்வதையே பெருப்பேருகக்கொண்டு மகிழ்ந்தான். பின் அரங்கனும் அவளே அழைத்துவரச்செய்ய, அவள் அவனேடு ஒன்றிக்கலந்தாள்.

இத்தகைய பெருமைவாய்ந்த ஆண்டாள் எம்பெருமான்மீது தீராக்காதல்கொண்டு பாடிய 30 பாசுரங்கொண்ட திருப்பாவையையும், 143 பாசுரங்கொண்ட நாய்ச்சியார்திருமொழியையும் தமக்கு அருளுமாறு ஸ்ரீதேசிகன் ஆண்டாளேப் பிரார்த்தித்தவாறு. 10

தொண்டரடிப்பொடியாழ்வார்

377 மன்னுமதிட் டிருமண்டங் குடிதான் வாழ
மார்கழிமா தக்கேட்டை நாளில் வந்து
துன்னுபுகழ்த் தொண்டரடிப் பொடியே நீமுன்
றுழாய்மாலைப் பணியடிமை செய்து நாளுந்
தென்னரங்க மணவாளற் கன்பு மிக்குச்
செப்பியநற் றிருமாலை நாற்பத் தைந்தும்
பன்னியநற் றிருப்பள்ளி யெழுச்சி பத்தும்
பழவடியே னுக்கருள்செய் பரிந்து நீயே. 11

உரை :— மன்னும் மதிள் – ஸ்திரமான திருமதிள்களையுடைய, திருமண்டங்குடி – திருமண்டங்குடி என்னும் திவ்யதேசம், வாழ – (பெருமைபெற்று) வாழும்படி (அந்த க்ஷேத்ரத்தில்), மார்கழிமாதக் கேட்டைநாளில் – மார்கழிமாதத்துக் கேட்டைத் திருநக்ஷத்ரத்தில், வந்து – அவதரித்து, துன்னு புகழ் – மிக்க புகழையுடைய, தொண்டரடிப்பொடியே – தொண்டரடிப்பொடியாழ்வாரே!, நீ முன் – நீ முற்காலத்தில், தென் அரங்க மணவாளற்கு – அழகிய ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீரங்கநாதனுக்கு, நாளும் – எக்காலத்தும், துழாய்மாலைப் பணி அடிமைசெய்து – திருத்துழாய்மாலை கட்டிச் சாத்தும் கைங்கர்யத்தைச்செய்து, அன்பு மிக்கு – (அதனால் அவன்மீது மேன்மேலும்) பக்தி வளர்ந்து, செப்பிய – அருளிச்செய்த, நல் திருமாலை – சிறந்த திருமாலையென்னும் பிரபந்தத்தின், நாற்பத்தைந்தும் – நாற்பத்தைந்துபாசுரங்களையும், பன்னிய நல் திருப்பள்ளி யெழுச்சி பத்தும் – (சிறப்பித்துச்) சொல்லப்பட்ட சிறந்த திருப்பள்ளி யெழுச்சியின் பத்துப் பாசுரங்களையும், பழவடியேனுக்கு – தொன்று தொட்டு உனக்குத் தாஸனான எனக்கு, பரிந்து – அன்புகூர்ந்து, நீ அருள்செய் – நீ அருள்புரிவாயாக. தான் – அசை.

தொண்டரடிப்பொடியாழ்வார் மார்கழிமாதக் கேட்டைத்திரு நக்ஷத்ரத்தில் சோழநாட்டில் திருமண்டங்குடியென்னும் புண்ய க்ஷேத்ரத்தில் அவதரித்தருளினார். இயற்கையிலேயே ஸத்துவகுணம் தலையெடுக்கப்பெற்ற இவ்வாழ்வார் பகவத்பக்தி விஞ்சி அரங்கனை ஸேவித்துப் பணிசெய்யக் கருதிக் கோயிலுக்குச் சென்று திருநந்தன வனம் அமைத்து அதினின்று புஷ்பங்களை எடுத்து அரங்கனுக்குச் சாத்தி அவ்வெம்பெருமானை அநுபவித்து வந்தார். அவ்வநுபவத்தின் பயனாக அந்த ஆழ்வார் அருளிச்செய்த 45 பாசுரங்கள் அடங்கிய திருமாலையையும், 10 பாசுரங்கள் அடங்கிய திருப்பள்ளியெழுச்சியையும் தமக்கு அருளுமாறு ஸ்ரீதேசிகன் தொண்டரடிப்பொடியாழ்வாரைப் பிரார்த்தித்தவாறு. 11

திருப்பாணாழ்வார்

378 உலகறிய மலிபுகழ்க்கார்த் திகைமா தத்தி
லுரோகிணிநா ளுறந்தைவளம் பதியிற் றோன்றித்
தலமளந்த தென்னரங்கர் பாலு லோக
சாரங்க மாமுனிதோ டனிலே வந்து
பலமறையின் பொருளாற்பாண் பெருமா ளேநீ
பாதாதி கேசமதாய்ப் பாடித் தந்த
சொலவமல னாதிபிரான் பத்துப் பாட்டுஞ்
சோராம லெனக்கருள்செய் துலங்க நீயே. 12

உரை :— பாண்பெருமாளே – திருப்பாணாழ்வாரே!. உலகு அறிய – உலகிலுள்ளோர் அறிவுபெறுவதற்காக, மலி புகழ் கார்த்திகைமாதத்தில் – நிறைந்த புகழையுடைய கார்த்திகைமாதத்தில், உரோகிணி நாள் – ரோஹிணித் திருநக்ஷத்ரத்தில், உறந்தை வளம் பதியில் – உறையூர் என்ற வளம்மிக்க திவ்யதேசத்தில், தோன்றி – அவதரித்து, தலம் அளந்த – (த்ரிவிக்ரமாவதாரத்தில்) பூமியை அளந்த, தென் அரங்கர்பால் – அழகிய ஸ்ரீரங்கநாதன்ஸமீபத்தில், உலோகசாரங்கமா முனி தோள்தனிலே – லோகஸாரங்கமஹர்ஷியின் தோள்மீது, வந்து – எழுந்தருளி, பல மறையின் பொருளால் – பல வேதாந்தங்களின் ஸாரமாக, பாதாதிகேசமதாய் – (ஸ்ரீரங்கநாதனுடைய) திருவடிமுதல் திருமுடிவரையில், நீ பாடித் தந்த – நீ பாடி (உலகுக்கு) அருளிய, சொலவு – பழமொழியாகிய, அமலனாதிபிரான் பத்துப்பாட்டும் – 'அமலனாதி பிரான்' என்று தொடங்கும் பத்துப் பாசுரங்களையும், சோராமல் துலங்க – மறவாமல் விளங்கும்படி, நீ எனக்கு அருள்செய் – நீ எனக்கு அருள்புரிவாயாக.

திருப்பாணாழ்வார் கார்த்திகைமாதத்து ரோஹிணித் திருநக்ஷத்ரத்தில் சோழநாட்டில் உறையூர் என்னும் க்ஷேத்ரத்தில் செந்நெற் பயிர்க்கதிரில் அவதரித்தருளினர். இவர் பாணர்குலத்தில் வளர்ந்து வந்தார். எம்பெருமானது திருவருளால் இயற்கையிலேயே இவருக்குப் பக்தி பெருகி அரங்கனுடைய திருக்குணங்களைப் பாட வேட்கை மிகுந்துநின்றது. தாம் தாழ்ந்த குலத்தில் வளர்ந்ததுபற்றி அரங்கன் கோயிலுள் புக அஞ்சி வெளியிலிருந்தே பாணருக்கு உரிய யாழைக் கையில் ஏந்தி அரங்கனைப் பாடிக்கொண்டே அவன் குணாநுபவத்தில் ஆழ்ந்துகிடந்தார். இவர் இங்ஙனம் இருக்க, அரங்கனுக்குத் தீர்த்தம் கொண்டுசெல்லும் லோகஸாரங்கர் என்ற ஓர் அந்தணர் மார்க்கத்தில் நின்ற இவரைக் குலத்தைக் கருதி விலகிப்போமாறு கூறியும் தம்மை மறந்து அரங்கனை அநுபவித்துநின்ற இவர் அவ்வாறு செய்யாமையால் பலரால் துன்புறுத்தப்பட்டார். இதை நினைத்து வருந்திய அரங்கன் அவ்வந்தணரிடம் பாணரைத் தோளில் எழுந்தருளப்பண்ணிக் கொண்டு தன் ஸந்நிதிக்கு வருமாறு கட்டளையிட்டான். அம்முனிவ

ரும் அஞ்சி அவ்வாறே செய்தார். திருப்பாணாழ்வார் அரங்கனது திருவடிமுதல் திருமுடிவரையில் ஸேவித்து ஈடுபட்டு "அமலனாதி பிரான்" என்று தொடங்கி 10 பாசுரங்களை அருளிச்செய்து அரங்கன் திருவடியில் ஒன்றிக் கலந்தார். அந்தப் பிரபந்தத்தைத் தமக்கு அருளுமாறு ஸ்ரீதேசிகன் திருப்பாணாழ்வாரைப் பிரார்த்தித்தவாறு. 12

திருமங்கையாழ்வார்

379 அறிவுதரும் பெரியதிரு மொழிதப் பாம
லாயிரத்தோ டெண்பத்து நாலு பாட்டுங்
குறியதொரு தாண்டகநா லைந்தா றைந்துங்
குலாநெடுந்தாண் டகமெழுகூற் றிருக்கை யோன்றுஞ்
சிறியமடற் பாட்டுமுப்பத் தேட்டி ரண்டுஞ்
சீர்பெரிய மடறனிற்பாட் டேழுபத் தேட்டு
மிறையவனே கார்த்திகையிற் கார்த்தி கைந்நா
ளேழிற்குரையல் வருகலியா விரங்கு நீயே. 13

உரை:— கார்த்திகையில் கார்த்திகைநாள் – கார்த்திகைமாதத்துத் திருக்கார்த்திகை நக்ஷத்ரத்தில், எழில் குரையல் – அழகிய திருக்குரையலூரில், வரு கலியா – அவதரித்த திருமங்கையாழ்வாரே!, இறையவனே – ஸ்வாமி!, அறிவு தரும் – ஜ்ஞாநத்தைத் தருகின்ற, பெரியதிருமொழி – பெரியதிருமொழியாகிய, ஆயிரத்தோடு எண்பத்து நாலுபாட்டும் – ஆயிரத்தெண்பத்துநான்கு பாசுரங்களையும், ஒரு குறியது தாண்டகம் – ஒப்பற்ற திருக்குறுந்தாண்டகமென்னும் பிரபந்தமாகிய, நாலைந்து – இருபதுபாசுரங்களையும், குலா நெடுந்தாண்டகம் – விளங்குகின்ற திருநெடுந்தாண்டகமாகிய, ஆறைந்தும் – முப்பது பாசுரங்களையும், எழுகூற்றிருக்கை ஒன்றும் – திருவெழுகூற்றிருக்கையென்னும் ஒரு பாசுரத்தையும், சிறிய மடல் – சிறிய திருமடலாகிய, முப்பத்தெட்டு இரண்டு பாட்டும் – நாற்பது பாசுரங்களையும், சீர் பெரிய மடல்தனில் – சிறப்புடைய பெரிய திருமடலில், எழுபத்தெட்டுப் பாட்டும் – எழுபத்தெட்டுப் பாசுரங்களையும், தப்பாமல் – தவறாது (அநுஸந்திக்கும்படி). நீ இரங்கு – நீ (எனக்கு) அருள்புரிவாயாக.

திருமங்கையாழ்வார், கார்த்திகைமாதத்துத் திருக்கார்த்திகை நக்ஷத்ரத்தில் சோழநாட்டில் திருக்குரையலூர் என்னும் புண்ய க்ஷேத்ரத்தில் அவதரித்தருளினர். எம்பெருமானிடம் நேரில் திருமந்த்ரோபதேசம்பெற்ற இவர் உலகிலுள்ளோர் உய்யும்படி அருளிச்செய்த 1084 பாசுரங்கொண்ட பெரியதிருமொழியையும், 20 பாசுரங்கொண்ட திருக்குறுந்தாண்டகத்தையும், 30 பாசுரங்கொண்ட திருநெடுந்தாண்டகத்தையும், ஒரே பாசுரமான திருவெழுகூற்றிருக்கையையும், 40 பாசுரங்கொண்ட சிறிய திருமடலையும், 78 பாசுரங்கொண்ட

பெரியதிருமடலையும் தமக்கு அருளுமாறு ஸ்ரீதேசிகன் திருமங்கை யாழ்வாரைப் பிரார்த்தித்தவாறு.

அர்ச்சையின் பெருமையை விளக்குவதிலேயே முக்கிய நோக்குள்ள பெரியதிருமொழி அர்ச்சையில் மிக ஈடுபடுவதற்கான ஜ்ஞாநவிசேஷத்தைத் தருவதுபற்றி 'அறிவுதரும்' என்னலாயிற்று— என்று பெரியோர் பணிப்பர்.

[சிறியதிருமடல் பெரியதிருமடல் ஆகிய இரண்டுபிரபந்தங்களும் கலிவெண்பாவில் அமைந்ததுபற்றித் தமிழர் தமிழிலக்கணத்தின்படி ஒவ்வொரு பிரபந்தத்தையும் ஒவ்வொரு பாசுரமாகக் கொள்ளவேண்டுமென்பர். ஸ்வாமி ஸ்ரீதேசிகன் முன்னதை 40 பாசுரங்கொண்டதாகவும், பின்னதை 78 பாசுரங்கொண்டதாகவும் கணக்கிட்டு உறுதிப்படுத்திவிட்டமையால் அர்த்தத்திற்கு ஏற்பச் சில அடிகளைச் சேர்த்துப் பாசுரங்களாகக் கணக்கிடுதல் முன்னோர்களின் மரபென அறியக்கிடக்கின்றது. வடமொழியில் நவீனவியாகரணத்திற்கு முரண்பட்ட சில பதப்பிரயோகங்களையும் சில வ்ருத்தங்களையும் பிற வியாகரணத்தைத் தழுவியனவென்றும் ஆர்ஷமென்றும் கொள்வதுபோல் வ்யாஸபராசராதிமஹர்ஷிகளினும் மேம்பட்டு நிற்கும் ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திவிஷயத்திலும் அம்முறையையே கொண்டு வாளாவிருந்து ஸூக்திரஸத்தைப் பருகி உய்வதே நலமன்றி ஸ்வாமி ஸ்ரீதேசிகன் ஸ்தாபித்த விஷயத்தில் சிற்றறிவினரான நாம் ஐயமுற்று ஆராயப்புகுவது அபசாரத்திற்கும் பரிஹாஸத்திற்கும் இடமாம்.

இங்ஙனமே இவ்வாழ்வார் அருளிய ப்ரபந்தங்களின் அவதாரக்ரமத்திலும் சற்று விவாதமுண்டு. இந்தப் பாசுரத்தில் ஸ்வாமி ஸ்ரீதேசிகன் இவ்வாழ்வாருடைய ப்ரபந்தங்களின் க்ரமத்தையும் நிர்ணயித்தருளியபடியால் இந்த விவாதத்திலும் நாம் ஈடுபட உரியோமல்லோம்.] 13

ஸ்ரீபாஷ்யகாரர் — (திருவரங்கத்தமுதனார்)

380 தேசமெலா முகந்திடவே பெரும்பூ தூரிற்
சித்திரையி லாதிரைநாள் வந்து தோன்றிக்
காசினிமேல் வாதியரை வென்ற ரங்கர்
கதியாக வாழ்ந்தருளு மெதிரா சாமுன்
பூசுரர்கோன் றிருவரங்கத் தமுத னருன்
பொன்னடிமே லந்தாதி யாகப் போற்றிப்
பேசியநற் கலித்துறைநூற் றெட்டுப் பாட்டும்
பிழையறவே யெனக்கருள்செய் பேணி நீயே. 14

உரை :— தேசம் எலாம் - நாடு முழுவதும், உகந்திட - மகிழும்படி, பெரும்பூதூரில் - ஸ்ரீபெரும்பூதூரில், சித்திரையில் ஆதிரைநாள் – சித்திரைமாதத்துத் திருவாதிரைத்திருநக்ஷத்ரத்தில், வந்து தோன்றி - வந்து அவதரித்து, காசினிமேல் - பூமியில் (உள்ள), வாதியரை வென்று - வாதிகளை (வாதத்தில்) ஜயித்து, அரங்கர் கதியாக - ஸ்ரீரங்கநாதரையே கதியாக (க் கொண்டு), வாழ்ந்தருளும் - வாழ்ந்தருளிய, எதிராசா – எதிகளுக்கு அரசனாகிய ஸ்ரீபாஷ்யகாரரே!, முன்-முற்காலத்தில், பூசுரர் கோன் – ப்ராஹ்மணர்களுக்குத் தலைவரான, திருவரங்கத்தமுதனார் – திருவரங்கத்தமுதனார் (என்ற பெரியோர்), உன் பொன் அடிமேல் - உன் அழகிய திருவடிமேல், அந்தாதியாகப் போற்றிப் பேசிய – அந்தாதியாகத் துதித்துப் பாடிய, நல் கலித்துறை – சிறந்த கட்டளைக்கலித்துறையில் அமைந்த, நூற்றெட்டுப்பாட்டும் – (இராமானுசநூற்றந்தாதி என்னும்) நூற்றெட்டுப் பாசுரங்களையும், பிழை அற – தவறாது (அநுஸந்திக்கும்படி), நீ வேணி – நீ (என்மீது) அன்புகொண்டு, எனக்கு அருள்செய் – எனக்கு அருள்புரிவாயாக.

ஸ்ரீபாஷ்யகாரர், சித்திரைமாதத்துத் திருவாதிரைத்திருநக்ஷத்ரத்தில், உலகத்தோர் உஜ்ஜீவிக்க, தொண்டைநாட்டில் ஸ்ரீபெரும்பூதூர் என்னும் க்ஷேத்ரத்தில் அவதரித்தருளினர். ஸ்ரீபாஷ்யகாரருடைய திருவடிகளில் அளவற்ற பக்திகொண்டு அவருடைய நியமநத்தால் கூரத்தாழ்வான்திருவடிகளில் ஆச்சிரயித்து உஜ்ஜீவித்த திருவரங்கத்தமுதனார், ஸ்ரீபாஷ்யகாரருடைய நியமநத்தின்மீது ஆழ்வார்களின் ஸம்பந்தத்தைக் குறிப்பிட்டு ஸ்ரீபாஷ்யகாரரின் மீதே கட்டளைக்கலித்துறையில் அந்தாதியாகப் பாடிய 108 பாசுரங்கொண்ட இராமானுசநூற்றந்தாதியைத் தமக்கு அருளுமாறு ஸ்ரீதேசிகன் ஸ்ரீபாஷ்யகாரரைப் பிரார்த்தித்தவாறு.

[இப்பிரபந்தம் திருவரங்கத்தமுதனாரால் ஸ்ரீபாஷ்யகாரர்நியமநத்தின்பேரில் பாடப்பட்டதாதலாலும், இது அனைவரும் அநுஸந்திக்க உரியதென்று ஸ்ரீபாஷ்யகாரராலேயே அங்கீகரிக்கப்பட்டதாதலாலும் ஸ்ரீபாஷ்யகாரர் தாமே இந்தப் பிரபந்தமுள்பட நாலாயிரத்தையும் திருக்குருகைப்பிரான்பிள்ளானுக்கு உபதேசித்தருளியபடியாலும் ஸ்ரீதேசிகன், (பிரபந்தத்தை அருளிச்செய்த) அமுதனாரைப் பிரார்த்திக்காமல் ஸ்ரீபாஷ்யகாரரையே நேரில் பிரார்த்தித்தருளினர்.] 14

ஆழ்வார்கள் அருளிச்செய்த பாசுரங்களின் எண்—விளக்கம்

381 எண்ணின்முத லாழ்வார்கண் மூன்று நூறு
மேழின்மழிசைப் பிரானிருநூற் றேருபத் தாறு
முண்மைமிகு மாறன்மறை யாயி ரத்தோ
டுற்றவிரு நூற்றுத்தோண் ணூறு மாறும்

வண்மையுடை மதுரகவி பத்து மோன்றும்
வஞ்சியர்கோ னூற்றைந்தும் பட்ட நாதன்
பண்ணியனு னூற்றேழு பத்து மூன்றும்
பார்க்கோதை நூற்றேழு பத்து மூன்றே. 15

382 பத்தரடிப் போடிபாட லைம்பத் தைந்தும்
பாணர்புகல் பத்துடனே பரகா லன்சோ
லத்தனுயர் வேங்கடமாற் காயி ரத்தோ
டானவிரு நூற்றேரைம் பத்து மூன்று
முத்திதரு மெதிராசர் போன்ன டிக்கே
மோழிந்தவமு தர்பாட னூறு மேட்டு
மேத்திசையும் வாழவிவர் பாடி வைத்த
விவைநாலா யிரமுமடி யோங்கள் வாழ்வே. 16

உரை:— எண்ணின் – (ஆழ்வார்களின் பாசுரத்தை) எண்ணத் தொடங்கினுல், முதலாழ்வார்கள் மூன்று நூறும் – (பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார் ஆகிய) முதலாழ்வார்கள் (மூவர்) அருளிய 300 பாசுரங்களும், எழில் மழிசைப்பிரான் – தேஜஸ்மிக்க திருமழிசை யாழ்வாரின், இருநூற்றெருபத்தாறும் – 216 பாசுரங்களும், உண்மை மிகு – உண்மைப்பொருள் நிரம்பப்பெற்ற, மாறன் மறை – நம்மாழ்வா ருடைய வேதஸாரமான, ஆயிரத்தோடு உற்ற இருநூற்றுத்தொண் ணூறும் ஆறும் - 1000 பாசுரங்களுடன் கூடிய 296 பாசுரங்களும், வண்மையுடை – (உலகில் ஆசார்யபக்திக்கு வழிகாட்டிய) கொடைக் குணமுள்ள, மதுரகவி பத்தும் ஒன்றும் – மதுரகவிகளின் 11 பாசுரங் களும், வஞ்சியர்கோன் – வஞ்சிநாட்டுக்கு அரசராகிய குலசேகராழ் வாரின், நூற்றைந்தும்–105 பாசுரங்களும், பட்டநாதன்-பெரியாழ்வார் (அருளிய), பண் இயல் – இசைக்கு அமைந்த இலக்கியமாகிய, நானூற் றேழுபத்தும் மூன்றும் – 473 பாசுரங்களும், பார்க் கோதை – பூமியின் அம்சமான ஆண்டாள் அருளிய, நூற்றேழு பத்து மூன்றும் – 173 பாசுரங்களும், 15

பத்தரடிப்பொடி பாடல் – தொண்டரடிப்பொடியாழ்வார் பாட லாகிய, ஐம்பத்தைந்தும் – 55 பாசுரங்களும், பாணர் புகல் – திருப் பாணுழ்வார் அருளிய, பத்துடனே – 10 பாசுரங்களுடன், பரகாலன் சொல் – பகைவருக்கு யமனுய்நிற்கும் திருமங்கையாழ்வார் அருளியன வும், அத்தன் உயர் வேங்கடமாற்கு–(உலகுக்குத்) தந்தையாய் உயர்ந்த திருமலையில் எழுந்தருளியுள்ள திருவேங்கடமுடையானைப் பற்றியனவு மான, ஆயிரத்தோடு ஆன இருநூற்றேரைம்பத்து மூன்றும் – 1253 பாசுரங்களும், முத்தி தரும் – (உலகுக்கு) மோக்ஷமார்க்கத்தைக் காட்டிக்கொடுத்த, எதிராசர் – எதிகளுக்குத் தலைவரான ஸ்ரீபாஷ்யகார ருடைய, பொன் அடிக்கே மொழிந்த – அழகிய திருவடிகளின் விஷய

மாகவே அருளிச்செய்த, அமுதர் பாடல் நூறும் எட்டும் – திருவரங்கத்த் முதனுருடைய பாடலாகிய 108 பாசுரங்களும் (ஆகிய), எத்திசையும் வாழ – எல்லாத் திசையினரும் வாழ்வதற்காக, இவர் பாடிவைத்த – (கீழ்க்கூறிய பதின்மூவராகிய) இவர்கள் அருளிச்செய்த, இவை நாலாயிரமும் – இந்த 4000 பாசுரங்களும், அடியோங்கள் வாழ்வு – அடியோங்கள் உஜ்ஜீவிப்பதற்கு ஸாதநமாகும்.

பதின்மூவர் அருளிச்செய்த 4000 பாசுரங்களும் நமக்கு உஜ்ஜீவிக்க ஸாதநமாகும்—என்றவாறு. 16

ஆழ்வார்களின் கோஷ்டி

383 வையகமெண் பொய்கைபூ தம்பே யாழ்வார்
மழிசையர்கோன் மகிழ்மாறன் மதுர கவிகள்
பொய்யில்புகழ்க் கோழியர்கோன் விட்டு சித்தன்
பூங்கோதை தொண்டரடிப் பொடிபா ணாழ்வா
ரையனருட் கலியனெதி ராசர் தம்மோ
டாறிருவ ரோரோருவ ரவர்தாஞ் செய்த
துய்யதமி ழிருபத்து நான்கிற் பாட்டின்
றொகைநாலா யிரமுமடி யோங்கள் வாழ்வே. 17

உரை:— வையகம் எண் – உலகினரால் அநுஸந்திக்கப்படுகின்ற, பொய்கை – பொய்கையாழ்வார், பூதம் – பூதத்தாழ்வார், பேயாழ்வார் – பேயாழ்வார், மழிசையர்கோன் – திருமழிசையிலுள்ளார்க்குத் தலைவராகிய திருமழிசையாழ்வார், மகிழ் மாறன் – மகிழ்மாலையணிந்த நம்மாழ்வார், மதுரகவிகள் – மதுரகவிகள், பொய்யில் புகழ் – அழியாத புகழையுடைய, கோழியர்கோன்–உறையூரிலுள்ளார்க்குத் தலைவராகிய குலசேகராழ்வார், விட்டுசித்தன் – பெரியாழ்வார், பூங்கோதை–அழகிய ஆண்டாள், தொண்டரடிப்பொடி – தொண்டரடிப்பொடியாழ்வார், பாணாழ்வார் - திருப்பாணாழ்வார், ஐயன் அருள் கலியன் – (நமக்கு) ஸ்வாமியாய் அருள்நிறைந்துநிற்கும் திருமங்கையாழ்வார், எதிராசர் தம்மோடு – ஸ்ரீபாஷ்யகார (ருடைய முக்கியதாஸரான திருவரங்கத்த முதனு) ரோடு, ஆறிருவர் ஓரொருவர் – பதின்மூவராகிய, அவர்தாம் செய்த – அவர்களால் அருளிச்செய்யப்பட்ட, துய்ய தமிழ் – பரிசுத்தமான தமிழினுலாகிய, இருபத்துநான்கின் – 24 பிரபந்தங்களின், பாட்டின் தொகை நாலாயிரமும் – பாசுரங்களின் எண் நாலாயிரமும், அடியோங்கள் வாழ்வு – அடியோங்கள் உஜ்ஜீவிப்பதற்கு ஸாதநமாகும்.

ஆழ்வார்களின் பதின்மூவரும் அருளிச்செய்த 24 பிரபந்தங்களின் 4000 பாசுரங்களும் எம்பெருமானுக்கு நித்யதாஸராகிய நாம் உஜ்ஜீவிக்கச் சிறந்த ஸாதநமாகும்—என்றவாறு.

[இப் பாசுரத்தின் முதலடியில் 7, 8 சீர்களில் ஓசை குறைகின்றது. சுத்த பாடம் அகப்படவில்லை.] 17

பலச்ருதி கூறல்

384 அந்தமிலா வாரணநா லாகி நின்ற
வதன்கருத்தை யாழ்வார்க ளாய்ந்தே டுத்துச்
செந்தமிழா லருள்செய்த வகைதோ கையுஞ்
சிந்தாம லுலகங்கள் வாழ வென்று
சந்தமிகு தமிழ்மறையோன் றூப்புற் றோன்றும்
வேதாந்த குருமோழிந்த ப்ரபந்த சாரஞ்
சிந்தையினு லனுதினமுஞ் சிந்திப் போர்க்குச்
சேமமதாந் திருமாறன் கருணை யாலே. 18

உரை:— நாலாகிநின்ற – (ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்று) நான்காய் நிற்கின்ற, அந்தமிலா – அளவில்லாத, ஆரணம் அதன்-வேதத்தின், கருத்தை-ஸாரத்தை, ஆழ்வார்கள் ஆய்ந்தெடுத்து-ஆழ்வார்கள் (பதின்மூவரும்) ஆராய்ந்து திரட்டி, செந்தமிழால் அருள் செய்த – செம்மைபெற்ற தமிழில் அருளிச்செய்த, வகை தொகையும் – (பிரபந்தங்களின்) வகையும் (பாசுரங்களின்) எண்ணும், சிந்தாமல் – (விபரீதமாய் வகுப்பதால்) கெடாமல், உலகங்கள் வாழ என்று – உலகிலுள்ளோர் வாழவேண்டுமென்று (கருதி), சந்தம் மிகு – அழகு மிகுந்துநிற்கின்ற, தமிழ் மறையோன் – தமிழ் வேதமாகிய திவ்யப்ரபந்தத்தைக் கற்றுணர்ந்தவனும், தூப்புல் தோன்றும் – தூப்புலில் அவதரித்தவனுமான, வேதாந்தகுரு மொழிந்த – வேதாந்த தேசிகனுல் இயற்றப்பட்ட, ப்ரபந்தசாரம்–(இந்தப்) பிரபந்தஸாரத்தை, சிந்தையினுல் – (தம்) உள்ளத்தினுல், அனுதினமும் சிந்திப்போர்க்கு – தினந்தோறும் அநுஸந்திப்பவர்க்கு, திருமால்தன் கருணையால் – ஸ்ரீமந்நாராயணனது அருளால், சேமமதாம் – க்ஷேமமுண்டாம்.

வேதங்கள் அளவற்றவை. அவை ரிக் – யஜுஸ் – ஸாமம் – அதர்வணம் என நான்காய் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றின் ஸாரத்தைத் திரட்டி ஆழ்வார்கள் திவ்யப்பிரபந்தமாய் நமக்கு அருளினர். இந்தப் பிரபந்தங்களின் எண்களையும், இவற்றின் பாசுரங்களின் எண்களையும் எவரும் விபரீதமாகக் கொள்ளாதபடி இவற்றைக் கணக்கிட்டு இப்பிரபந்தத்தில் வேதாந்ததேசிகனுகிய யான் வெளியிட்டேன். இதை அநுஸந்திப்பவர் எம்பெருமான் கருணையால் க்ஷேமத்தைப் பெறுவர்—என்றவாறு.

[உலகில் பிறரை வணங்கி அபிவாதநம் செய்யும்போது ரிக், யஜுஸ் முதலிய தத்தம் சாகையைக் கூறிக்கொள்வதுபோல் இங்கு ஸ்வாமிக்கு அருளிச்செயலில் உள்ள ஈடுபாட்டின் மிகுதியால் தம்மைத் 'தமிழ்மறையோன்' என்று பெருமையோடு கூறிக்கொண்ட ஸ்வாரஸ்யம் காண்க.] 18

பிரபந்தசாரம் — உரை முற்றிற்று

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

ஸ்ரீ:

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

ஆகாரநியமம்-உரை

சிறப்புத்தனியன்-உரை

எண்சீராசிரியவிருத்தம்

சீராரும் வேதாந்த தேசி கர்கோன்
 செழுமறையி னுட்பொருளைச் சிந்தை செய்தே
யாராய்ந்து வாழ்வுறவிப் புவியோர் தங்கட்
 கன்புடனே யாகார நியதி சொன்ன
னேராரு மெதிராச ரருளி னாலே
 யெதிர்ந்தவர்கள் சிங்கமென விங்கு வந்தோன்
சீராரும் வேங்கடவன் றூப்புற் பிள்ளை
 செழுந்திருத்தா ளிணைமலரென் சென்னி மேலே.

ஸ்ரீபாஷ்யகாரருடைய கடாக்ஷத்திற்கு முக்கிய பாத்திரமாகி, அதனால் ப்ரதிவாதிகளாகிய யானைகளை வாதப்போரில் சிங்கமாய் நின்று வென்று கவிதார்க்கிகசிங்கமெனப் புகழப்பட்டுத் தூப்புல் திருவேங்கடமுடையானெனப் போற்றப்படும் ஸ்ரீமந்நிகமாந்தமஹா தேசிகன் வேதங்களின் ஸூக்ஷ்மார்த்தங்களை ஆராய்ந்து, இப்பூவுலகிலுள்ளோர் சாஸ்த்ரம் விலக்கிய தாமஸமான உணவை உட்கொண்டு அதனால் விளைந்த அஜ்ஞானத்தால் செய்வன தவிர்ந்து தவிர்வன செய்து நரகில் விழாது, பகவத்பக்தியை வளர்க்கவல்ல ஸாத்துவிகமான ஆஹாரத்தை உட்கொண்டு உஜ்ஜீவிப்பதற்காக ஆஹாரநியமமென்ற திவ்ய ஸூக்தியை அருளிச்செய்தார். இத்தகைய ஸ்ரீதேசிகன் திருவடிகள் அடியேன்முடியை அலங்கரிப்பனவாம்—என்றவாறு.

[விஷயச்சுருக்கம்]

ஆஹாரவிஷயத்தில் நாம் கடைப்பிடிக்கவேண்டிய முக்கியமான நியமங்களைக் கூறுவதால் இப்பிரபந்தம் இப்பெயர்படைத்தது. ஆஹாரம் சுத்தமாயில்லாவிட்டால் மனம் தெளிவடைவதில்லை. மனந்தெளியாதவன் எந்த நற்காரியத்தையும் செய்ய உரியனாக மாட்டான். இப்பிரபந்தத்தில் முதலில் முனிவர் சாஸ்த்ரங்களில் கூறிய முறையைத் தழுவி நம்மால் உண்ணத்தகாத பதார்த்தங்களை எடுத்துக்காட்டி, பிறகு உண்ணத்தக்க பதார்த்தங்களையும் வெளியிடுகிறார் ஸ்ரீதேசிகன்.

[இப்பிரபந்தம் அநுஷ்டாநத்திற்குமாத்திரம் முக்கியமா யிருப்பதுபற்றிப் பொழிப்புரைமாத்திரமே வரையப்படுகின்றது.]

இப்பிரபந்தம் முழுவதும் எண்சீராசிரியவிருத்தத்தால் அமைந்ததாம்.

இந்த ப்ரபந்தவரலாறு

385 ஆகாரத் திருவகையா நன்றுந் தீது
மருமறைகோண் டேதிராச ரிவைமோ ழிந்தா
ராகாத வழிவிலக்கி யாக்குங் கண்ண
னணைத்துலகும் வாழவிது சாற்றி வைத்தான்
போகாது போக்குவிக்கு முனிவர் சோன்ன
போய்யாத மோழிகளையும் போருந்தக் கேண்மி
னுகாதேன் றவைதவிர்ந்தா மதுவே கோண்ட
வசகரனு மாகங்காத் தருள்பேற் றுனே. 1

ஸகலஜீவராசிகளையும் தீயவழியிலிருந்து விலக்கி நல்வழிப் படுத்தி வாழ்வித்தருளும் கண்ணபிரான், ஸகலலோகத்திலுள்ளவர் களும் சாஸ்த்ரம் விலக்கிய தாமஸமான உணவைத் தள்ளிப் பகவத்பக்தியை வளர்க்கக் கூடிய ஸாத்துவிகமான ஆஹாரத்தை ஏற்று வாழ்வதற்காக ஸ்ரீபகவத்கீதையில் இந்த ஆஹார நியமத்தை அருளிச்செய்தான். ஸ்ரீபாஷ்யகாரர் அந்த ஸூக்தியையும் வேதங்களையும் ஆராய்ந்து நல்லதென்றும் தீயதென்றும் இருவகை யான உணவுகளை ஸ்ரீமத்கீதாபாஷ்யத்தில் விளக்கியருளினர். எளிதில் நீங்காத பாபங்களுக்கும் பிராயச்சித்தம் முதலியனவற்றை விதித்துச் சேதநர்களின் பாபங்களைப் போக்குவிக்கும் கருணை வாய்ந்த மனு முதலிய முனிவர்கள் தங்கள் ஸ்ம்ருதிகளில் இந்த ஆஹாரநியமத்தைப் பற்றிக் கூறிய தவறாத விஷயங்களையும் மூலப்ரமாணமான வேதத் திற்கு ஏற்றவாறு பொருள்படுத்தி அறிவீர்களாக. முன் அஜகரன் என்ற அந்தணன் தகாத பொருள்களை விலக்கி ஸாத்துவிகமான ஆஹாரத்தாலே தன் சரீரத்தை ரக்ஷித்துப் பின் எம்பெருமானது அருள்பெற்று உய்ந்தான்—என்றவாறு.

[அஜகரன் என்ற சொல்லுக்கு மலைப்பாம்பு என்று பொருள். மலைப்பாம்பு, தாமாகவந்து விழும் உணவுப்பொருள்களையே உட் கொண்டு, பெற அரியனவான உணவுகளைப் பெறமுயலாதிருக்கும். விவேகியான சேதநன் தன் வாழ்க்கைக்கு இம்முறையையே கைக் கொள்ளவேண்டுமெனச் சாஸ்த்ரங்கள் கூறும். இம்முறையில் வாழ்ந்து வந்த ஓர் அந்தணனுக்கு 'அஜகரன்' எனப் பெயர் வந்தது.] 1

பாசுரம் 2 முதல் 10 வரை – விலக்கவேண்டிய அம்சங்கள்

386 வாயிலல்லா வாயிலினுல் வந்த சோறும்
வரகுமுத லாகாதேன் றுரைத்த சோறும்
வாயினின்றும் விழுமவைதாம் பட்ட சோறும்
வாய்க்கோண்ட கவளத்தின் மிகுந்த சோறுங்

தீயவர்கண் படுஞ்சோறுந் தீதற் சோறுஞ்
சீரையுரை தும்மலிவை பட்ட சோறு
நாய்முதலா னவைபார்க்குந் தீண்டுஞ் சோறு
நாடுய்தல் லாச்சோறு நண்ணுச் சோறே. 2

பின்வரும் அந்நத்தின் வகைகள் விலக்கப்பட்டனவாம் :—

உரிய வாசலாலன்றிப் புழைக்கடை முதலிய தகாத வழிகளால் கொண்டுவந்தது, வரகு முதலிய தான்யங்களால் ஆக்கியது, வாயினின்று விழுந்த வஸ்துவுடன் ஸம்பந்தப்பட்டது, வாயில் போட்டுக் கொண்ட கவளத்தின் மீதியாயுள்ளது, கொடியவர் கண்ணுல் பார்த்தது, தீய்ந்துபோனது, வஸ்த்ரம் எச்சில் தும்மல் இவை பட்டது, நாய் முதலியவற்ருல் பார்க்கப்பட்டது, அவை தொட்டது, ஏகாதசி முதலிய வ்ரத தினங்களில் சமைத்தது :—என்பன. 2

387 மனிசர்பசு முதலானோர் மோந்த சோறு
மனிசர்தமி லாகாதார் தீண்டுஞ் சோறு
மினிமையுட ஞதரமில் லாதார் சோறு
மீப்புழுநூன் மயிருகிர்க ளிருக்குஞ் சோறு
முனிவரேனுந் துறவறத்தோ ரீந்த சோறு
முனிவர்தங்கள் பாத்திரத்திற் பட்ட சோறு
மனிசரேலி குக்குடங்கள் காகம் பூனை
வாய்க்கொண்ட கறிசோறு மருவாச் சோறே. 3

பின்வரும் அந்நத்தின் வகைகளும் விலக்குதற்கு உரியனவாம் :—

மனிதர் பசு முதலியவற்ருல் முகர்ந்துபார்க்கப்பட்டது, தொடத்தகாத பதிதர் ரோகிகள் முதலியவர்களால் ஸ்பர்சிக்கப்பட்டது, ஆதரத்தோடும் இனிமையாகவும் பேசாமல் இடப்பட்டது, ஈ புழு நூல் மயிர் நகம் ஆகிய இவை ஸம்பந்தித்தது, ஸந்யாஸி கொடுத்தது, ஸந்யாஸியின் பாத்திரத்தில் பட்டது, மனிதர் எலி கோழி காக்கை பூனை இவற்றின் வாய்பட்டது:—என்பன. 3

388 அத்திகள்பே ரார்க்கிறலி வேண்கத் தாரி
யாலரசு நறுவிலிபுங் காயி லாரை
புத்திகோல்லி குறிஞ்சிதான்றி குசும்பை வேளை
புனமுருங்கை முருங்கைசுக முளரி யுள்ளி
சிற்றவரை கோம்மட்டி பண்ணை தோய்யில்
சீங்காடன் றேறலூவை பனைம யூரன்
சுத்தியிலா நிலத்திலவை கடம்பு காளான்
சுரைபீர்க்குச் சணந்தின்ஞர் சுருதி யோரே. 4

பின்வரும் கறிவகைகள் பெரியோர்களால் விலக்கப்பட்டன வாம்:—

அத்திவகைகள், பேரார்க்கு, இறலி, வெள்ளைக்கத்தாரி, ஆல், அரசு, நறுவிலி, புங்கு, ஆயில், ஆரை, திகைப்பூண்டு, குறிஞ்சி, தான்றி, குசும்பை, வேளை, சிவப்புமுருங்கை, நாட்டுமுருங்கை, சுகம், தாமரைக்கிழங்கு, உள்ளி, சிறிய அவரை, தும்மட்டி, பண்ணைக்கீரை, தொய்யிற்கீரை, சீங்காடன், தேறற்காய், ஊவைக்காய், பனை, நாயுருவி, கடம்பு, நாய்க்குடை, சுரைக்காய், பீர்க்கு, சணற்கீரை, மற்றும் அசுத்தமான நிலத்திற் பயிரானவை:—என்பன.

[இங்கு ஸ்ரீதேசிகன் வெண்கத்தாரியைக் குறிப்பிட்டு விலக்கிய படியால் 'எவ்வகைக் கத்தாரியும் உண்ணத்தக்கதல்ல' வென்று சிலர் கூறுவது ஆதாரமற்றதாம். பொதுவாகக் கத்தாரிக்காயைச் சில வசநங்களில் விலக்கியிருப்பினும் ஸ்வாமியின் திருவுள்ளத்தைத் தழுவி அங்கும் வெண்கத்தாரியை அவ்வசநங்கள் குறிப்பதாகக் கொள்வதே முறையாம்.] 4

389 சிறுகீரை சேவ்வகத்தி முருக்கி ரண்டுஞ்
சிறுபசளை பெரும்பசளை யம்ம ணந்தாள்
பறித்தோருவர் கோடாதிருக்கத் தானே சேன்று
பாய்ந்தேடுத்துக் கோள்ளுமவை பகிராக் கூறுங்
குறித்தாலுந் தின்னவோணுக் கைப்பு வர்ப்புங்
கூர்க்குமவை யழலுமவை கோடும்பு ளிப்புங்
கறிக்காகா விவையேன்று கண்டு ரைத்தார்
கார்மேனி யருளாளர் கடகத் தாரே. 5

பின் வரும் வகைகளும் விலக்குதற்கு உரியனவாம்:—

சிறுகீரை, சிவந்தஅகத்தி, முள்முருங்கை, புரசு, சிறுபசளை, பெரும்பசளை, அம்மணந்தாள், பிறர் தோட்டத்தினின்று உரியவர் அநுமதியின்றிப் பறித்தவை, கோஷ்டிக்குப் பொதுவாய் வைத்துள்ள வஸ்துவினின்று செலவாவதற்கு முன் தனக்கென்று எடுத்துக் கொண்டவை, உண்ணமுடியாத கடுங்கசப்பும் மிக்க உப்பும் உள்ளவை, மிக்க காரமும் மிக்க புளிப்பும் உள்ளவை:—என்பன. 5

390 மாலமுது சேய்யாமல் வந்த வேல்லாம்
வருவிருந்தில் வழங்காமல் வைத்த வேல்லாங்
காலமிது வன்றேன்று கழித்த வேல்லாங்
கடையின்வருங் கறி முதல கழுவா வேல்லா

நூலிசையா வழிகளினுல் வந்த வெல்லா
நுகராத துடன்பாகஞ் செய்த வெல்லாஞ்
சீலமிலாச் சிறியோராக் கினவு நல்லோர்
சேலமலங்கள் பட்டனவுந் தின்ஞர் தாமே. 6

பின்வருவனவும் விலக்கவேண்டியன:—

எம்பெருமானுக்கு அமுதுசெய்விக்காதவை, அதிதிகளுக்கு அளிக்காமல் தனக்காக வைத்தவை, 'இந்தக் காலத்தில் இவை உண்ணத்தகா' என்று கழித்தவை, கடையினின்று வாங்கிவந்து கழுவாது சமைத்த கறி முதலியன, சாஸ்த்ரங்களுக்கு மாருன தீய வழியில் ஸம்பாதித்தவை, உண்ணத்தகாத வஸ்துக்களுடன் சேர்த்துச் சமைத்தவை, ஆசாரமற்ற, சிறுவர் சமைத்தவை, ஜலமலங் களுடன் ஸம்பந்தித்தவை:—என்பன. 6

391 தேவர்களுக் கிவையென்று வைத்த வெல்லாஞ்
சிவன்முதலாத் தேவர்களுக் கிட்ட வெல்லா
மாவிமுத லானவற்றுக் காகா வெல்லா
மதுவிதுவென் றறியவரி தான வெல்லா
நாவிலிடு வதற்கரிதா யிருப்ப வெல்லா
நன்றேன்று தம்முள்ள மிசையா வெல்லா
மோவியநா ளோவாத பூவுங் காயு
முத்தமர்க ளட்டுப்பு முகவார் தாமே. 7

பின் வருவனவும் விலக்க உரியன:—

தேவதைகளுக்கு என்று உத்தேசித்துவைத்தவை, சிவன் முதலிய தேவதாந்தரங்களுக்கு நிவேதநம்செய்தவை, ப்ராணவாயு இந்த்ரியம் முதலியவற்றுக்கு அநுகூலமன்றித் தீங்குவிளைப்பவை, 'இது இன்ன வஸ்து' என்று அறியமுடியாதவை, நாவுக்குப் பொறுக்க முடியாத சூடு காரம் முதலியன உள்ளவை, மனத்திற்கு ருசிக்காதவை, அகாலத்தில் பூக்கும் பூ – காய்க்கும் காய் ஆகிய இவை, காய்ச்சிய உப்பில் அழுக்கான உப்பு:—என்பன. 7

392 கிளிஞ்சின்முதல் சுட்டனசுண் ணும்பு தானுங்
கிளர்புனலி லெழுங்குமிழி நுரைக டாமும்
விளைந்ததனின் முதன்மாலுக் கீயா வெல்லாம்
விளைந்தநில மறுகாம்பென் றெழுந்த வெல்லாங்
களைந்தமனத் தார்மற்றுங் கழித்த வெல்லாங்
கடியமுதி னியமத்தார் கழித்த வெல்லாந்
தெளிந்தபுனற் றிருவேங்க டத்து மாறன்
றிருவாணை கடவாதார் தின்ஞர் தாமே. 8

பின்வருவனவும் உபயோகிக்கத் தகாதவையாம்:—

கிளிஞ்சில் முதலியவற்றைச் சுட்டு எடுக்கும் சுண்ணும்பு, நீரிலிருந்து எழும்பிய குமிழி, நுரைகள், நிலத்தில் விளைந்த பொருள்களில் முதலில் எம்பெருமானுக்கு ஸமர்ப்பிக்காதவை, பலன் கொடுத்த பிறகு மறுபடியும் அதே காம்பிலிருந்து விளைந்தவை, பரிசுத்தமனத்தையுடைய பெரியோர்களும் ஆஹாரநியமத்தை முக்கியமாகக்கொண்ட ஸாதுக்களும் கழித்தவை:—என்பன. 8

393 மோரலது சாரங்கள் வாங்கிற் றெல்லா
முழுப்பகலில் விளங்கனியுந் தானந் தானு
மோரிரவி லெள்ளுடனே கூடிற் றெல்லா
மெள்ளதனி லெண்ணெய்தயிர் தருபண் டங்க
ளோர்தவத்தை மந்திரத்தை யோழிப்ப வெல்லா
முண்ணுத நாட்களிலூ ணந்திப் போதூ
ணரணு ரடிபணியு நல்லோர் நாளு
நள்ளிரவி லூணுமிவை யுண்ணுர் தாமே. 9

மோரைத் தவிர ஸாரம் எடுத்த மற்ற வஸ்துக்களை உண்ணக்கூடாது. விளம்பழத்தையும் பொரியையும் பகலில் உண்ணக்கூடாது. எள்கலந்த வஸ்துவை இரவில் விலக்கவேண்டும். இரவில் நல்லெண்ணெயையும் தயிரையும் கலந்து செய்த வஸ்துவை உண்ணக்கூடாது. தவத்தையும் மந்த்ரஜபத்தையும் கெடுப்பனவாகச் சாஸ்த்ரங்களிலே கூறப்பட்டவற்றை உபயோகிக்கக்கூடாது. ஏகாதசி முதலிய வ்ரததினங்களில் ஆஹாரம் கொள்ளக்கூடாது. அந்திநேரத்திலும் பாதிராத்ரியிலும் உண்ணக்கூடாது. 9

394 குளிமுதலா னவைசெய்யா துண்ணு மூணுங்
கூட்டல்லாப் பந்தியிலூண் பிறர்கை யூணு
நளிமதிதீ விளக்காக வுண்ணு மூணு
நள்ளிரவில் விளக்கின்றி யுண்ணு மூணுங்
கிளிமொழியா ளுணுநிற்கக் கணவ னூணுங்
கீழோரை நோக்கூணு மிடக்கை யூணு
மோளிமறையோர் மற்றுமுக வாத வூணு
மோளியரங்க ரடிபணிவா ருகவார் தாமே. 10

ஸ்நாநம் ஸந்த்யை ஜபம் முதலியன செய்யாது உண்ணக்கூடாது. பாகவதகோஷ்டியிலே சேர்ந்து ப்ரஸாதத்தை ஸ்வீகரிக்க வேண்டுமேயன்றித் தனியாக ஒரு பந்தியை அமைத்து அதில் உண்ணக்கூடாது. பிறர்கையாலே பிசைந்துபோடுவதை உட்கொள்ளக்கூடாது. தீபமில்லாமலும், நிலவை அல்லது நெருப்பைத் தீபத்திற்குப்பதிலாகக் கொண்டும் உணவுகொள்ளக்கூடாது. கணவனும் மனைவியும் ஒரே

காலத்தில் உண்ணக்கூடாது. தாழ்ந்தவர்களைப் பார்த்துக்கொண்டு உண்ணுதல் முறையன்று. இடக்கையால் உணவை எடுத்து உண்ணக்கூடாது. மற்றும் வைதிகர்கள் ஏற்காத முறைகளையெல்லாம் விலக்கவேண்டும். *10*

395 எச்சிறனில் வார்க்குந்நெய் யிருபா கங்க
ளிரும்பாலுங் கையாலு மிட்ட வெல்லாம்
பச்சையலாற் கடித்தகுறை பழைய வூசல்
பிறரகத்துப் பாகஞ்செய் தெடுத்த வன்ன
நச்சினவை பழித்தவைமண் ணுற்றந் தீது
நகத்தாலே விண்டவைதாங் காணு முப்பும்
பிச்சுளதா மவைகாடி பின்ன பாகம்
பிசின்கடனிற் சிவந்ததுவும் பிழையூ ணுமே. 11

உண்ணத்தொடங்கியபின் எச்சிலிலையில் பரிமாறிய நெய்யையும், இரண்டுமுறை பக்குவம் செய்த வஸ்துவையும், இரும்பினாலும் கையினாலும் பரிமாறிய வஸ்துக்களையும் உண்ணக்கூடாது. பக்குவம் செய்யாத பச்சையான வஸ்துவை மாத்திரம் கையாலேயே இட வேண்டும். கடித்து மீதிவைத்ததையும் ஊசிய பழைய வஸ்துக்களையும் உபயோகிக்கக்கூடாது. பிறர் வீட்டிலே சமைத்துக்கொண்டுவந்த அன்னம் உண்ணத்தக்கதன்று. பிறர் தமக்கென்று விரும்பிய உணவையும், பிறர் பழித்துப்பேசிய உணவையும் ஏற்றுக்கொள்ளுதல் முறையன்று. மண்ணின் நாற்றம் உள்ளவை, தீதாயுள்ளவை, நகத்தால் விண்டவை, நேரில் காணும் உப்பு, பித்தத்தைத் தருமவை, காடி, விருந்தினருக்கு வேறு - தனக்கு வேறு என்று பிரித்துப் பாகம் செய்தவை ஆகியவற்றை உண்ணுதல் கூடாது. மரத்திலிருந்து பெருகும் பாலிலே பெருங்காயம் தவிர மற்றவற்றை உபயோகிக்கக் கூடாது. *11*

பாசுரம்-12 முதல் 16-வரை—கைக்கொள்ளத்தக்க அம்சங்கள்

396 தாதைநல்லா சிரியன்முதற் றமைய னெச்சி
றரணிசுரர் சோமத்தி லருந்து மெச்சின்
மாதர்கட்குக் கணவனித மான வெச்சின்
மயிர்புழுநூல் விழுந்தாலும் புனித மண்ணின்
மாதவத்துக் கூவிளங்காய் முகவா சத்து
மாதுளங்காய் மரணம்வரிற் கழித்த வெல்லா
மோதிவைத்த வுண்ணுநா ளுகந்த வெட்டு
முளவென்றுங் கழித்தவற்றி னன்று மூணே. 12

தந்தை ஆசார்யன் முதல்தமையன் ஆகிய இவர்களின் எச்சில் உண்ணக்கூடியது. ஸோமயாகத்தில் அந்தணன் சாஸ்திரப்படி

ஸோமபாத்திரத்தில் செய்யும் எச்சிலுக்குத் தோஷமில்லை. மனைவிக்குக் கணவனுடைய எச்சில் ஏற்க உரியது. அந்த அந்நத்தில் மயிர் புழு நூல் இவை விழுந்திருந்தாலும் சுத்தம் செய்தால் தோஷம் போம். தவம்புரிபவர்களே வில்வக்காயை உபயோகிக்கலாம். மாதுளங்காயை எம்பெருமானுக்கு முகவாஸசூர்ணத்திற்கே உபயோகிக்கலாமேயன்றி மற்றைக்காலத்தில் அது விலக்கத்தக்கதாம். பொதுவாய் விலக்கப் பட்ட வஸ்துக்களெல்லாம் ஆபத்துக்காலத்தில் சேர்க்க உரியன. உபவாஸதிநங்களில் ஜலம், கிழங்கு, நெய், பால், யாகத்தின் ஹவிஸ், நிமந்த்ரணம், குருவின் உபதேசம், மருந்து ஆகிய இவை வ்ரதத்தைக் கெடுப்பனவாகா. *12*

397 மாகரும்பின் சாறுதயிர் பானெய் பாக்கு
வளைமிளகு தேனேலம் பனிநீ ராதி
யாகரசந் தூய்தாகு மறியா வெல்லா
மறியாதார்க் கறியளவுந் தூய வாகுஞ்
சாகரங்க டுயனவா முவாக்கள் கூடிற்
சலமெல்லாங் கங்கையதா முபரா கத்தின்
மாகரங்கள் பிணமுதலா மனைத்துங் கொண்டு
வருபுனலுந் தூய்தாகும் வேகத் தாலே. 13

கரும்பின் சாறு, தயிர், பால், நெய், பாக்கு, சங்கம், மிளகு, தேன், ஏலம், பனிநீர் ஆகிய இவையனைத்தும் பரிசுத்தமாய் உபயோகிக் கத் தக்கனவே. எந்த வஸ்துவும் அதன் தோஷத்தை அறியும் வரை யில் உபயோகிக்க உரியதாம். பௌர்ணமியிலும் அமாவாஸ்யையிலும் ஸமுத்ரம் ஸ்நாநம் செய்ய உரியதாகும். க்ரஹணகாலத்தில் எந்த ஜலமும் கங்காஜலம்போன்ற பெருமையுடையதாம். நதியின் வெள்ளம், குதிரை கழுதை பிணம் முதலிய அசுத்த வஸ்துக்களைக் கொண்டு வந்தாலும் வேகத்தாலே பரிசுத்தமாகிவிடுகின்றது. *13*

398 தீயாலே நீரொழிய வெந்த வெல்லாந்
தீயிடுத லொழிந்திடவே பழுத்த வெல்லாந்
தீயாலு நீராலும் வெந்த வற்றிற்
றேறவுலர் நெல்லுமுத லான வெல்லா
மூசாத மாவடக மப்பஞ் சீடை
யுரொட்டிமுத லாமவற்றிற் பழைய தேனுங்
கூசாதே கொண்டிடுமின் புதிய தேனுங்
கொள்ளேன்மின் றன்னிரதங் குலைந்தக் காலே. 14

ஜலத்தின் ஸம்பந்தமின்றித் தீயினால் வெந்த வஸ்துக்கள், அக்னியில் புடம் வைக்காது தாமாகப் பழுத்த பழங்கள், ஜலம் சேர்த்

துத் தீயில் பாகம் செய்தெடுத்த புழுங்கல்நெல் முதலியன, மா வடாம் அப்பம் சீடை ரொட்டி ஆகிய பொருள்கள் பழையனவாயிருந்தபோதி லும் சுவை குறையாதிருந்தால் கூசாது உபயோகிக்கத்தக்கனவாம். புதிதாயினும் சுவை குறைந்திட்டால் எந்த வஸ்துவும் உட்கொள்ளத் தகாததாம். 14

399 தலைப்பயனும் விகாரங்கள் சாக டங்கள்
சக்கரங்க டனக்கடைத்த மருந்து தானுங்
கலக்கமிலா நன்னீரில் வைத்த சோறுங்
கறிமோர்நெய் பாறயிர்கள் கலந்த சோறும்
விலக்கமிலா மாக்கன்னற் கோது மத்தால்
விளைவுறவாக் கியநல்வி காரந் தானு
மிலைக்கறிபோ லிவையனைத்தும் பழைய வேனு
மேங்நாளும் வைத்துண்ண விசைகின் றரே. 15

பால் முதலியவற்றின் சிறந்த மாறுபாடுகளாகிய திரட்டுப்பால் முதலியனவும், சக்கரவடிவமுள்ள தேன்குழல் முறுக்கு முதலியனவும், வைத்யர்களால் குறிக்கப்பட்ட மருந்துகளும், மா வெல்லம் கோதுமை இவற்றால் செய்த பக்ஷ்யங்களும் ஆகிய இவை பழையனவாயினும் வைத்திருந்து உண்ணத்தக்கனவாம். சுத்தமான ஜலத்தில் போட்டு வைத்த அந்நத்தையும் வ்யஞ்ஜநம், மோர், நெய், பால், தயிர் ஆகிய இவை கலந்த அந்நத்தையும் இலை – கறி இவை போல் பழையன வாயினும் உண்ணலாம். 15

400 தயிர்தன்னின் விகாரங்கள் பூவிற் காயிற்
பழத்தில்வருஞ் சாறூச றூய வாகு
முயிரழியா மைக்குண்ணு வூச லுண்ணி
லுறக்கழுவி நெய்தேனிட் டுண்ண லாகும்
பயின்மறைநூ லுரையாத பழைய வூசல்
பழிப்பிலதா நெய்யாலேன் றுரைத்தான் சங்கன்
மயிர்முதலா னவைபின்னும் பட்ட தாயின்
மண்ணீர்மற் றுரைத்தவற்றால் வரங்க ளாமே. 16

தயிரால் செய்யப்படும் தின்பண்டங்கள், பூ காய் பழம் இவற் றின் சாறு ஆகிய இவை சற்று ஊசினாலும் பரிசுத்தமே. ஒருகாலும் உண்ணக்கூடாத ஊசிய பதார்த்தங்களை ஆபத்துக்காலத்தில் உண்ண நேர்ந்தால் நன்றாய்க் கழுவி அவற்றோடு தேனையாவது நெய்யையாவது கலந்து உண்ணலாம். சாஸ்த்ரங்களில் விலக்கப்பட்ட ஊசற்பண்டங் களும் நெய் கலந்தால் உண்ணத்தக்கனவாமென்று சங்கஸ்மிருதியில் கூறப்பட்டுளது. அவற்றிலும் மயிர் முதலிய அசுத்தவஸ்து பட்டால் மண் ஜலம் முதலியவற்றால் பரிசுத்தமாகிவிடும். 16

பாசுரம் 17, 18, 19 – விலக்கவேண்டிய பால் ஜலம் வெற்றிலை—வகை

401 ஒருகுளம்பி யிருகன்றி யோட்ட கப்பா
லுப்புடன்பான் மோருடன்பான் மாதர் தம்பால்
கருவுடைய வற்றின்பால் கன்றி லாப்பான்
மறுகன்ருற் கறந்திடும்பா றிரிந்தி டும்பா
றிருமகளார் கணவனலாத் தேய்வத் தின்பேர்
சின்னமுடை யவற்றின்பால் சேம்ம றிப்பால்
பரிவதிலந் தணர்விலைப்பால் சேம்பி னிற்பா
றீதாம்பா லிவையனைத்தும் பருகாப் பாலே. 17

பின்வரும் பாலின் வகைகள் பருகத்தகாதவை :—

ஒற்றைக்குளம்பையுடைய குதிரை கழுதை இவற்றின் பால், இரட்டைக் கன்றுள்ள பசுவின் பால், ஒட்டகத்தின் பால், உப்புக் கலந்த பால், ஸ்திரீகளின் ஸ்தந்யம், கருவுற்ற பசு முதலியவற்றின் பால், கன்றையிழந்த பசுவின் பால், வேருெரு பசுவின் கன்ருல் கறந்த பால், திரிந்த பால், தேவதாந்தரங்களின் பெயரையும் சின்னத்தையும் தரிக்கும் பசுவின் பால், செம்மறியாட்டின் பால், அந்தணர்களிடம் விலைக்கு வாங்கும் பால், செப்புப்பாத்திரத்தில் வைத்த பால், காய்ச்சும் போது தீய்ந்துபோன பால் : என்பனவாம். *17*

402 கங்கையல்ல திரண்டாநாள் வைத்த நீருங்
கால்கழுவி மிகுநீருங் கலங்க னீருந்
தேங்கினுள தாய்த்தீயாற் காய்ந்த நீருஞ்
சிறுகுழிநீர் வழித்தண்ணீர்ப் பந்த னீருஞ்
சங்கையுடை நீர்வண்ணுன் றுறையி னீருந்
தாரையினு லேச்சிலிது வேன்ற நீருஞ்
சங்குகல மாக்கோண்டு பருகு நீருந்
தரையில்விழா மழைநீருந் தவிரு நீரே. 18

பின்வரும் நீரின் வகைகள் பருகக்கூடாதன :—

கங்காஜலம் தவிர மறுநாள்வைத்த மற்ற ஜலம், கால்கழுவிய பின் மீதியாயுள்ள ஜலம், கலங்கிய ஜலம், தீயில் காய்ச்சிய இளநீர், சிறுகுழியில் தேங்கிய ஜலம், வழியிலுள்ள ஜலம், தண்ணீர்ப்பந்தலில் தரும் ஜலம், ஸந்தேஹத்திற்கு இடமான ஜலம், வண்ணுன் துறையின் ஜலம், தாரையாக விழும்போது எச்சில் கலந்த ஜலம், சங்கைப் பாத்திரமாகக்கொண்டு குடிக்கும் ஜலம், தரையில் விழுவதற்கு முன்புள்ள மழைஜலம் : என்பனவாம். *18*

403 வெற்றிலைமுன் றின்னுதே தின்னும் பாக்கும்
வெற்றிலையி னடிநுனியு நடுவி லீர்க்கும்
வெற்றிலையும் பாக்குமுடன் கூட்டித் தின்னும்
விதவைக்கு முதன்முடிவாச் சிரமத் தார்க்கும்
வெற்றிலையுஞ் சுண்ணும்பி னிலையு மற்றும்
விரதங்கோண் டிடுநாள்வெற் றிலையும் பாக்கும்
வெற்றிலைதின் ஞுநிற்கப் பருகு நீரும்
விதையெனவைத் ததுதினலும் விலக்கி ஞுரே. 19

வெற்றிலையைப்பற்றிய விலக்கு வருமாறு :—

வெற்றிலையைத் தின்ஞுமல் முதலிலே பாக்கைத் தின்னக்கூடாது. வெற்றிலையின் அடி, நுனி, நரம்பு இவற்றைத் தின்னக்கூடாது. ஒரே காலத்தில் வெற்றிலை பாக்கு இரண்டையும் மெல்லக்கூடாது. விதவை, ப்ரஹ்மசாரி, ஸந்யாஸி இவர்கள் வெற்றிலையை உபயோகிக்கக்கூடாது. சுண்ணும்பு வைத்திருந்த வெற்றிலையை உபயோகிக்கக்கூடாது. ஏகாதசி முதலிய வ்ரததினங்களில் வெற்றிலை மிக நிஷித்தமாம். வெற்றிலை போட்டுக்கொள்ளும்போது ஜலத்தைப் பருகக்கூடாது. 19

கூறுத அம்சங்களையும் பெரியோரிடம் கேட்டறிதல்

404 சாதிகுண மாச்சிரமங் தேசங் காலங்
தருமங்க ணிமித்தங்கண் முதலா வோதும்
பேதமுத லாகவோரு திரவி யந்தான்
பிரிந்துநலங் தீங்கினையும் பெற்று நிற்கும்
பாதமிசைப் பிறந்தோர்க்குக் கபிலை யின்பால்
பருகிடலா காதேன்று மறையோர் சொன்ஞு
ராதலிஞு லோதியுணர்ந் தவர்பா லேல்லா
மடிக்கடியுங் கேட்டயர்வு தீர்மி னீரே. 20

பிராமணன் முதலிய ஜாதிகள், ஜ்ஞாநம் அஜ்ஞாநம் முதலிய குணங்கள், பிரம்மசர்யம் முதலிய ஆச்சிரமங்கள், தென்ஞுடு வடநாடு முதலிய பிரிவுபெற்ற தேசங்கள், க்ரஹணம் பர்வம் முதலிய காலங்கள், அவரவர்க்குத் தக்க தர்மங்கள், பாபம் புண்யம் முதலிய நிமித்தங்கள் ஆகிய இப்பிரிவுகளுக்கேற்றவாறு ஒரே வஸ்து கொள்ளவும் விலக்கவும் உரியதாகும். உதாஹரணமாய் – அந்தணர்க்கு விலக்கவேண்டாத கபிலைப்பசுவின் பால் (பகவானுடைய திருவடிகளிற்பிறந்த) நான்காம் வருணத்தோருக்குப் பருக உரியதன்று என்று வேதாந்திகள் கூறுவார்கள். ஆதலின் இத்தகைய உட்பிரிவுக்குத் தக்க முறைகளையெல்லாம் சாஸ்த்ரங்களைக் கற்றுணர்ந்த பெரியோர்பால் அடிக்கடி கேட்டு ஸந்தேஹங்களை ஒழித்துக்கொள்க. 20

முடிவுரை கூறல்

405 கங்கிருளால் விடியாத வுலகுக் கேல்லாங்
கைவிளக்கா மிவையென்று கண்ணன் காட்டும்
போங்குபுக ழாகமங்க டேளியச் சோன்ன
போருளிவைநாம் புண்ணியர்பாற் கேட்டுச் சோன்னே
மங்குடலும் போருளுமல்ல தறியா மாந்தர்
வலையுளகப் பட்டுவரம் பழியா தேன்றும்
பங்கயமா துற்றவரு ளாளர் தம்பாற்
பத்திமிகு பவித்திரங்கள் பயின்மி னீரே. 21

அஜ்ஞாநமே மிகுந்துநிற்கும் இக்கர்மபூமியில் உள்ளவர்களுக்குக் கைவிளக்குப்போல் தத்துவார்த்தங்களைத்தெரிவிக்கக் கண்ணனால்காட்டப்பட்ட சாஸ்த்ரங்களில் உள்ள இவ்வர்த்தங்களை ஆசார்யர்களிடம் கேட்டறிந்து இப்பிரபந்தத்தில் வெளியிட்டோம். அநித்யமான இந்தச் சரீரத்தையும் பொருளையுமே முக்கியமாகக்கொண்டுதிரியும் நாஸ்திகர்களின் சொல்லை நம்பி அவர்களின் வலையுள் அகப்பட்டு மனம்போனவாறு உணவைக்கொண்டு நரகில் விழுந்து அழிந்துபோகாமல் பேரருளாளன்திருவடிகளில் பக்தியை மேன்மேலும் வளர்க்கவல்ல ஸாத்துவிகமான வஸ்துக்களையே உபயோகித்து உஜ்ஜீவிப்பீர்களாக. 21

ஆகாரநியமம் — உரை முற்றிற்று

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

ஸ்ரீதேசிகப்பிரபந்தம் — உரை முற்றிற்று.

श्रीमते निगमान्तमहादेशिकाय नमः

ஸ்ரீ:

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

ஸ்ரீதேசிகன்விஷயமாய் அவர்திருக்குமாரர்

ஸ்ரீநயினாராசார்யர் அருளிச்செய்த

பிள்ளையந்தாதி—உரையுடன்

தனியன்

சீரார்தூப் புற்பிள்ளை யந்தாதி யென்று செழுந்தமிழா
னேராக வேதாந்த தேசிகர் தாளிணைக் கீழ்மொழிந்தா
னேரார் மறைப்பொரு ளெல்லா மெடுத்திவ் வுலகுயவே
சீரா கியவர தாரியன் பாதந் துணைநமக்கே.

உரை:— இவ்வுலகு உய்ய – இந்த லோகம் உஜ்ஜீவிக்கும்படி, ஏர் ஆர் – சிறப்புப் பொருந்திய, மறைப் பொருள் எல்லாம் – வேதங்களின் ஸாரார்த்தம் முழுவதையும், எடுத்து – ஆய்ந்தெடுத்து, செழும் தமிழால் – செழுமையுள்ள தமிழ்ப்பாஷையால், வேதாந்ததேசிகர் தாள் இணைக்கீழ் – ஸ்ரீவேதாந்ததேசிகனுடைய இரண்டு திருவடிகளின்கீழ், சீர் ஆர் – பெருமை பொருந்திய, தூப்புற்பிள்ளையந்தாதி என்று – தூப்புல் ஸ்ரீதேசிகனைப்பற்றிய "பிள்ளையந்தாதி" என்னும் ப்ரபந்தத்தை, நேராக – நேர்மையாக, மொழிந்தான் – அருளிச்செய்தவரான, சீராகிய – கல்யாணகுணமே வடிவெடுத்தாற்போன்ற, வரதாரியன் – வரதாசாரியரென்று திருநாமம்பூண்ட நயினாராசார்யருடைய, பாதம் – திருவடிகளே, நமக்குத் துணை – நமக்குத் துணையாகும்.

[விஷயச்சுருக்கம்]

ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகன் திருக்குமாரராயும் அவர் திருவடிகளிலே ஸகலார்த்தங்களையும் க்ரஹித்து அவருடைய ப்ரதாநசிஷ்யராயும் விளங்கும் வரதாசாரியரென்னும் ஸ்ரீநயினாராசாரியர் ஸ்ரீதேசிகன் திருவடிகளில் பக்தியின் மிகுதியால் அவர்பெருமைகளைத் தாம் அநுபவித்தபடியே அனைவருக்கும் அறிவித்து உஜ்ஜீவிப்பிக்கத் திருவுள்ளங்கொண்டு 20 பாசுரங்கொண்ட பிள்ளையந்தாதியென்னும் இப்பிரபந்தத்தைப் பாடியருளினர். இப்பிரபந்தம் இராமானுசநூற்றந்தாதியைப் பெரும்பாலும் அடியொற்றியதென்னலாம். இதிலே சிற்சில பாசுரங்களில் உள்ள அடைமொழி (விசேஷணங்)கள் ஸ்ரீபாஷ்யகாரருக்கும் ஸ்ரீதேசிகனுக்கும் பொருந்துமாறு பொதுவாய் அமைந்திருக்கின்றன.

இதில் அடங்கிய விஷயங்களின் ஸாரம்:—

“ஸ்ரீதேசிகன்புகழைப் பாடினாலன்றி உஜ்ஜீவிக்க முடியாது. அவர் ஆராய்ந்து கண்ட ஸித்தாந்தமே உஜ்ஜீவிக்க ஸாதநமாகும். திருவேங்கடமுடையானே ஸ்ரீதேசிகனாக அவதரித்தான். தேசிகன் குணங்களைப் பாடி, அவரை மனத்து இருத்தினால் பாபங்கள் பறந்து போம். அவரைப் பற்றினால் ஸகலஸற்குணங்களுமுண்டாகும். அவரது அருளன்றி உபாயமில்லை” என்பனவாம். இங்ஙனே பல விஷயங்களைக் கூறி. திருமந்திரத்திற் கூறிய நிஷ்டையையும், கபடமற்ற பக்தியையும் தமக்கு அருளவேண்டுமென்று வேண்டி, ஸ்வாமி திருமேனி முழுதும் தம் உள்ளத்துப் பதியுமாறு பிரார்த்தித்துப் பல்லாண்டுபாடி, இப்பிரபந்தத்தை அநுஸந்திப்பவர் தம் முடியில் ஸ்ரீதேசிகன் திருவடிகள் விளங்கப்பெறுவரென்று பலன்கூறித் தலைக் கட்டுகிறார்.

இப் பிரபந்தம் முழுதும் கட்டளைக்கலித்துறையால் அமைந்ததாம்

மாமலர் மன்னிய மங்கை மகிழ்ந்துறை மார்பினன்றூட்
டூமலர் சூடிய தொல்லருண் மாறன் றுணையடிக்கீழ்
வாழ்வை யுகக்கு மிராமா னுசமுனி வண்மைபோற்றுஞ்
சீர்மைய னெங்கடூப் புற்பிள்ளை பாதமென் சென்னியதே. 1

உரை:— மா மலர் - பெரிய (தாமரைப்) பூவில், மன்னிய - வீற்றிருக்கும், மங்கை – பெரியபிராட்டி, மகிழ்ந்து உறைமார்பினன் – மகிழ்ச்சியுடன் நித்யவாஸம்செய்யும் திருமார்பையுடையவனான எம்பெருமானுடைய, தாள் தூ மலர் – திருவடிகளாகிய பரிசுத்தமான (தாமரை) மலர்களை, சூடிய – (முடியில்) அணிந்த, தொல் – அநாதியான, அருள் மாறன் – கிருபையையுடைய நம்மாழ்வாருடைய, துணை அடிக் கீழ் – இரண்டு திருவடிகளின்கீழ், வாழ்வை உகக்கும் - வாழ்வை விரும்புகின்ற, இராமானுசமுனி – ஸ்ரீபாஷ்யகாரருடைய, வண்மை போற்றும் சீர்மையன் - ஔதார்யத்தைப் போற்றுவதாகிய மேன்மைக்குணம் பொருந்திய, எங்கள் தூப்புற் பிள்ளை பாதம் – எங்கள் (ஸ்வாமியான) தூப்புல் ஸ்ரீதேசிகனுடைய திருவடி, என் சென்னியது - என் முடியின்மேல் நிற்பதாகும்.

பெரியபிராட்டி க்ஷணமும் பிரியாது திருமார்பில் நித்யவாஸம் செய்யப்பெற்ற எம்பெருமானுடைய திருவடிகளை எப்போதும் தம் முடியிற் சூடிநிற்பவர் நம்மாழ்வார்; ஸகல ஜீவரும் உஜ்ஜீவிக்க வேண்டுமென்று நெடுங்காலமாகக் கருணைசுரந்து நிற்கும் இந்த நம்மாழ்வாருடைய திருவடிகளையே உபாயமாகவும் பலனாகவும் நாடி நின்று பெருமைபெற்றவர் ஸ்ரீபாஷ்யகாரர்; ஸ்ரீபாஷ்யம் முதலிய தம் ஸூக்திகளின் வாயிலாக உலகுக்கு க்ஷேமத்தைச் செய்தருளிய இந்த ஸ்ரீபாஷ்யகாரருடைய ஔதார்யகுணத்தை வாயாரப் புகழ்ந்து பேசுமவர் ஸ்ரீதேசிகன்; இத்தகைய சிறப்பு வாய்ந்த இவர் திருவடிகள் என் முடியை அலங்கரிப்பனவாம்.

இப்பாசுரம் இராமானுசநூற்றந்தாதியின் முதற்பாசுரமான "பூமன்னுமாது" என்னுமதைத் தழுவியதென்னலாம். கீழ்க் கூறிய வாறு அந்வயங்கொள்வதன்றி 'மாமலர்.........சூடிய' 'தொல்லருள் உகக்கும்' 'இராமா.........சீர்மையன்' எனுந்தொடர்களை ஸ்ரீதேசிகனுக்கே அடைமொழியாக்கி எம்பெருமானோடும் ஆழ்வாரோடும் ஸ்ரீதேசிகனுக்கு நேராக ஸம்பந்தம் கூறப்பட்டதாகவும் கொள்வர். 1

சென்னி வணங்கச் சிறுபனி சோரவெங் கண்ணிணைகள்
வெந்நர கங்களும் வீய வியன்கதி யின்பமேவத்
துன்னு புகழுடைத் தூப்புற் றுரந்தரன் றூமலர்த்தாண்
மன்னிய நாள்களு மாகுங்கொன் மாநிலத் தீர்நமக்கே. 2

உரை:— மா நிலத்தீர் – விசாலமான பூமியிலுள்ளவர்களே!, எம் சென்னி வணங்க – எமது தலை வணங்கும்படியும், கண் இணைகள்– கண்கள் இரண்டும், சிறு பனி சோர – (ஆநந்தத்தால்) சிறிய துளிகள் அரும்பும்படியும், வெம் நரகங்களும் வீய – கொடிய நரகங்களும் அழியும்படியும், வியன் கதி இன்பம் மேவ – அற்புதமான மோக்ஷத்தின் ஆநந்தம் பொருந்தும்படியும், துன்னு புகழுடை – மிக்க புகழையுடைய, தூப்புல் துரந்தரன் – தூப்புலின் ஸ்வாமியான ஸ்ரீதேசிகனது, தூ மலர்த் தாள் – பரிசுத்தமான மலர்போன்ற திருவடி, மன்னிய நாள் களும்–(நம்முடியில்) ஸ்திரமாய்ப் பொருந்திவிளங்கும் நாள்களும், நமக்கு ஆகுங்கொல் – நமக்கு வாய்க்குமோ?

விசாலமான பூமியிலுள்ள ஆஸ்திகர்களே! நம்முடைய முடி ஸ்ரீதேசிகன்திருவடிகளை வணங்கிக்கொண்டேயிருக்கவேண்டும். அவற்றைக்கண்ட ஆநந்தத்தால் கண்ணீர்த்திவலைகள் துளிக்க வேண்டும். இப்படியாயின் கொடிய நரகம் நீங்கி நாம் மோக்ஷாநந்தத்தைப் பெறலாம். இத்தகைய பெருமை நமக்குக் கிட்டும்படி ஸ்ரீதேசிகன்திருவடிகள் நம் முடியிலேயே நித்யவாஸம் செய்யும் பாக்கியமும் நமக்கு வாய்க்குமோ?—என்றவாறு.

ஆக, இப்பாசுரத்தால் ஸ்ரீதேசிகன்திருவடிஸம்பந்தமே உயர்ந்த புருஷார்த்தமென்னுமதும், அதைப்பெற்ற பாக்யவான்கள் இம்மையிலும் மறுமையிலும் பெறும் ஆனந்தங்களும் பேசப்பட்டன. முதற் பாசுரத்தில் 'என் சென்னியதே' என்று முடியில் இருப்பதாகக் கூறிய திருவடிகளின் ஸம்பந்தத்தை இப்பாசுரத்தில் 'மன்னிய நாள்களும்' என்று நித்யமாக விரும்பினாராயிற்று. 'நாள்கள்' எனும் பதம், மாதம் வர்ஷம் கல்பகாலம் முதலியவற்றைக் குறிப்பால் உணர்த்தும். 2

மாநிலத் தோதிய மாமறை மன்னிய நற்கலைக
ளானவை செப்பு மரும்பொரு ளத்தனை யேயருளுந்
தூநெறி காட்டு மிராமா னுசமுனித் தோத்திரஞ்செய்
யூனமி றூப்புலம் மானோர் புகழன்றி யுய்விலையே. 3

உரை:— ஆனவை – (சேதநர்களுக்கு) ஹிதமானவற்றை, செப்பும் – வெளியிடுவனவான, மா நிலத்து ஓதிய–அகன்ற இப்பூமியில் அத்யயநம்செய்யப்படுகின்ற, மா மறை – அளவற்ற வேதங்கள், மன்னிய – (அவற்றுக்குப்) பொருந்தியுள்ள, நல் கலைகள் – சிறந்த சாஸ்த்ரங்கள் (ஆகிய இவற்றின்), அரும் பொருள் அத்தனையே – அருமையான அர்த்தங்களை அப்படியே (மிகுதி குறையின்றி), அருளும்–தருபவரும், தூ நெறி – பரிசுத்தமான (சரணாகதி) மார்க்கத்தை, காட்டும் – வெளியிட்டருளியவருமான, இராமானுசமுனித் தோத்திரம் செய் – ஸ்ரீபாஷ்யகாரரை ஸ்தோத்ரம் செய்பவரும், ஊனம் இல் – ஒரு குறைவும் இல்லாதவருமான, தூப்புல் அம்மான் – தூப்புலில் அவதரித்த ஸ்வாமியான ஸ்ரீதேசிகனுடைய, ஓர் புகழ் அன்றி – ஒப்பற்ற புகழைத் தவிர, உய்வு இலை – வாழ்வு (வேறு) இல்லை.

ஸகல ஜீவராசிகளுக்கும் ஹிதமான அம்சங்களையே போதிக்கும் வேதங்கள், அவற்றைத் தழுவிநிற்கும் சாஸ்த்ரங்கள் ஆகிய இவற்றின் உண்மைப்பொருளை உலகுக்கு வெளியிட்டு ப்ரபத்திமார்க்கத்தையும் காட்டிக்கொடுத்த ஆசார்யசிரேஷ்டரான ஸ்ரீபாஷ்யகாரரின் புகழை வாய்வெருவிப்பேசி மகிழ்ந்துநிற்பவரான ஸ்ரீதேசிகனுடைய கீர்த்தியை வாயாரப் புகழ்வதன்றி நமக்கு வேறு வாழ்வு இல்லை—என்றவாறு. 3

உய்யும் வகையிலை யுத்தர வேதியுள் வந்துதித்த
செய்யவண் மேவிய சீரரு ளாளரைச் சிந்தைசெயு
மெய்யவ னெந்தை யிராமா னுசனருண் மேவிவாழு
மைய னிலங்குதூப் புற்பிள்ளை யாய்ந்த பொருளன்றியே. 4

உரை :— உத்தரவேதியுள் – (ப்ரஹ்மா யாகம்செய்த) உத்தர வேதியில், வந்து உதித்த – வந்து திருவவதரித்தவரும், செய்யவள் மேவிய – சிவந்த நிறமுள்ள பிராட்டி நித்யவாஸம்செய்யப்பெற்றவருமான, சீர் அருளாளரை–சிறப்புள்ள பேரருளாளரை, சிந்தை செய்யும் – (எப்போதும்) த்யாநம் செய்பவரும், மெய்யவன் – ஸத்யசீலரும், எந்தை – எமக்கு ஸ்வாமியாயுள்ளவருமான, இராமானுசன் – ஸ்ரீபாஷ்யகாரருடைய, அருள்மேவி வாழும்–கடாக்ஷத்தையே பற்றி வாழ்கின்றவரும், ஐயன் இலங்கு – ப்ராஹ்மணச்ரேஷ்டராய் விளங்குபவருமான, தூப்புற்பிள்ளை ஆய்ந்த – தூப்புல் ஸ்ரீதேசிகன் ஆராய்ந்துகூறிய, பொருள் அன்றி – ஸாரார்த்தங்கள் தவிர, உய்யும் வகை இல்லை – (நமக்கு) உஜ்ஜீவிக்க வேறுவழி இல்லை.

ப்ரஹ்மாவினுடைய அசுவமேதயாகவேதியில் அவதரித்த பெருந்தேவிநாயகனை பேரருளாளனையே எப்பொழுதும் தொழும் பெருமையை உடையவரான ஸ்ரீபாஷ்யகாரருடைய கிருபையையே தமக்கு ஆதாரமாகக்கொண்டு வாழும் ஸ்ரீதேசிகன் தம் ஸூக்தியில் அருளிச்செய்த அர்த்தவிசேஷங்களே நமக்கு ஸாரமும் உஜ்ஜீவிக்க ஸாதநமுமாகும். மற்றவற்றால் கடைத்தேறமுடியாது — என்றவாறு.

பற்பல சாஸ்திரங்களைக் கற்கப் போதிய அறிவும் அவகாசமும் இல்லாத நமக்கு அவற்றின் ஸாரார்த்தங்களை ஸ்ரீதேசிகன் எடுத்துக் காட்டிய மஹோபகாரத்தை இப்பாசுரத்தில் நினைவூட்டியபடி.

ஸ்ரீபாஷ்யகாரருக்கும் ஸ்ரீதேசிகனுக்கும் திருவாராதனத்திலும் யோகத்திலும் விஷயமாயுள்ளது பேரருளாளனது திவ்யமங்கள விக்ரஹமேயென்றும், ஆதலின் 'பேரருளாளரைச் சிந்தை செய்யும்' என்னுந்தொடர் இருவரிடமும் அந்வயிக்குமென்றும் பெரியோர் பணிப்பதுண்டு.

'இராமானுசனருள் மேவி வாழும்' என்னுந் தொடர் 'ராமாநுஜதயாபாத்ரம்' என்னும் தொடரைத் தழுவியதென்று கூறுப. 4

அன்றிவ் வுலகினை யாக்கி யரும்பொரு ணூல்விரித்து
நின்றுதன் னீள்புகழ் வேங்கட மாமலை மேவியும்பின்
வென்றிப் புகழ்த்திரு வேங்கட நாத னெனுங்குருவாய்
நின்று நிகழ்ந்துமண் மேனின்ற நோய்க டவிர்த்தனனே. 5

உரை :— **அன்று** – ஸ்ருஷ்டிகாலத்தில், **இவ்வுலகினை ஆக்கி** – (எம்பெருமான்) இந்த ப்ரபஞ்சத்தைப் படைத்து, **அரும் பொருள் நூல் விரித்து நின்று** – அருமையான அர்த்தங்களையுடைய சாஸ்த்ரங்களைப் பிறப்பித்துக்கொடுத்து, **நீள் புகழ்** – மிக்க புகழையுடைய, **தன் வேங்கடமாமலை** – தன்னுடைய திருவேங்கடமென்னும் பெரிய மலையில், **மேவியும்** – (அர்ச்சாரூபியாகப்) பொருந்தியும், **பின்** – அதன் பின், **வென்றிப் புகழ்** – வெற்றியாலுண்டான புகழையுடைய, **திருவேங்கட நாதன் எனும்** – (தூப்புல்) திருவேங்கடமுடையான் (ஸ்ரீதேசிகன்) என்னும், **குருவாய்**–ஆசார்யரூபியாய், **நிகழ்ந்து நின்றும்** – அவதரித்து நின்றும் (பின்பே), **மண்மேல் நின்ற**–இப்பூமியில் (அதுவரை) ஸ்திரமாயிருந்த, **நோய்கள்** – (ஸம்ஸார) நோய்களை, **தவிர்த்தனன்** – ஒழித்தருளினான்.

ஸர்வேசுவரன் ப்ரளயகாலத்தில் அசேதநம் போலக் கிடந்த பிராணிகளைக் கண்டு மனம்வருந்தி அவற்றுக்குச் சரீரம் இந்திரியங்கள் ஆகியவற்றைக் கொடுத்துப் படைத்தான். மேலும் அந்தச் சேதநர்கள் தீயவழியிற் புகாது நல்வழிப்பட்டு வாழ்வதற்கேற்பச் சாஸ்த்ரங்களைக் கைவிளக்காகத் தந்தருளினான். அதனாலும் தம் அஜ்ஞாநம் நீங்கப் பெறாத ஸகல ப்ராணிகளும் தம் ஊனக்கண்ணாலே கண்டுகளித்து உய்யுமாறு திருவேங்கடமலையில் அர்ச்சாரூபியாய் எழுந்தருளிநின்றான். அப்படியும் அவனை வழிபட்டுச் சேதநர்கள் திருந்தாது ஸம்ஸாரத்தில் அல்லல்படுவதைக் கண்டு தூப்புலில் திருவேங்கடமுடையான் என்னும் ஆசார்யனாய் அவதரித்துத் தன் ஸூக்திகளாலும் உபதேசங்களாலும் உலகை நல்வழிப்படுத்தி ஸம்ஸாரதாபத்தைப் போக்கியருளினான். அதன்பின்பே உலகிற்கு க்ஷேமம் ஏற்பட்டது.

இப்பாசுரம் இராமானுசநூற்றந்தாதி 41-வது பாசுரம் 'மண் மிசையோனிகள்' என்னுமதை நினைவூட்டுகின்றது. 5

வித்தகன் வேதியன் வேதாந்த தேசிக னெங்கடுப்புன்
மெய்த்தவ னுத்தமன் வேங்கட நாதன் வியன்கலைகண்
மொய்த்திடு நாவின் முழக்கொடு வாதியர் மூலமறக்
கைத்தவ னென்றுரைத் தேன்கண்டி லேனென் கடுவினையே. 6

உரை :— **வித்தகன்** – (எல்லாப்படியாலும்) ஸமர்த்தன், **வேதியன்** – வேதார்த்தங்களையறிந்தவன், **வேதாந்த தேசிகன்** – வேதாந்த சாஸ்த்ரத்திற்கு ஆசார்யன், **எங்கள் தூப்புல் மெய்த்தவன்** – எங்கள் மெய்யான தவத்தின் பயனாய்த் தூப்புலில் அவதரித்தவன், **உத்தமன்** – (அனைவரினும்) மேம்பட்டவன், **வேங்கடநாதன்** – வேங்கடநாதன் என்று பெயர்வாய்ந்தவன், **வியன் கலைகள்** – விசித்திரமான ஸகல வித்யைகளும், **மொய்த்திடும் நாவின்** – (தாமேவந்து) கூட்டம் கூட்டமாய்நிற்கும் நாவினுடைய, **முழக்கொடு** – கர்ஜனையாலே, **வாதியர் மூலம் அற** – வாதிகள் வேர் அறுந்துபோகும்படி, **கைத்தவன்** – ஒழித்தவன், **என்று உரைத்தேன்** – என்று (ஸ்ரீதேசிகன் திருநாமங்களையும் குணங்களையும்) அநுஸந்தித்தேன்; **என் கடு வினை** – என் கொடிய பாபங்களில் ஒன்றைக்கூட, **கண்டிலேன்** – யான் காணவில்லை.

ஸ்ரீதேசிகன் – 'ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரர்' எனப் புகழும்படி எல்லாப் படிகளிலும் ஸமர்த்தராய் நிற்பவர்; ஸகல வேதாந்தார்த்தங்களையும் நன்கு அறிந்தவர்; வேதாந்தவித்யைக்கு முக்கிய ஆசார்யராய் விளங்குபவர்; எங்களுடைய நெடுநாள் தவத்தின் பயனாய்த் தூப்புலில் திருவவதரித்தவர்; அனைவரினும் தலைசிறந்துநிற்பவர்; திருவேங்கடநாதன் எனப்பெயர் வாய்ந்தவர்; விசித்திரமான வித்யைகள் அனைத்தும் போட்டியிட்டுக்கொண்டுவந்து செறிந்துநிற்கும் தம் நாவிலிருந்து ஸிம்ஹகர்ஜனம்போல் எழும்பும் வாதங்களால் வாதிகளை வேரறுத்துத் தள்ளியவர் — என்று இத்தகைய அவருடைய திவ்ய கல்யாணகுணங்களையும் திருநாமங்களையும் அநுஸந்தித்தேன். உடனே என் பாபங்கள் அனைத்தும் சென்றவிடம் தெரியாமல் மறைந்து விட்டன. என்னே அவர் பெருமை!!!—என்றவாறு.

இப்பாசுரத்தில் ஸ்ரீதேசிகனுடைய திருநாமத்தின் பெருமையும் பரிசுத்ததன்மையும் பேசப்பட்டன. இது இராமானுசநூற்றந்தாதியின் "சுரக்கும் திருவும்" என்ற 43-வது பாசுரத்தைத் தழுவியதாம். "என்றன் கடுவினைகளனைத்தும் நான் கண்டிலேனே" என்ற ஸ்ரீதேசிக ஸூக்தியையும் இங்கு நினைத்திடுக. 6

வினைகா ளுமக்கினி வேறோ ரிடந்தேட வேண்டுமெனச்
சினமேவி முன்போற் சிதைக்கும் வகையிங் கரிதுகண்டீ
ரெனெனி லிராமா னுசமுனி யின்னுரை சேருந்தூப்புற்
புனிதரென் புந்தி புகுந்து திகழ்ந்து பொருந்தினரே. 7

உரை :— வினைகாள் – பாபங்களே!, சினம் மேவி – (நீங்கள்) கோபத்தை மேற்கொண்டு, முன்போல் – (இதற்கு) முன்போல், என்னைச் சிதைக்கும் வகை – என்னைத் துன்புறுத்தும் வகை, இங்கு அரிது-என்னிடத்து இயலாது, இனி-(ஆதலால்) இனிமேல், உமக்கு வேறு ஓர் இடம் தேடவேண்டும்-உங்களுக்கு (வஸிப்பதற்கு) வேறு ஓர் இடம் தேடிக்கொள்ளவேண்டும். என் எனில்-ஏனெனில், இராமானுச முனி இன் உரை சேரும்-ஸ்ரீபாஷ்யகாரருடைய இனிய ஸ்ரீஸூக்திகள் குடிகொண்ட, தூப்புல் புனிதர் – தூப்புலில் அவதரித்த பரிசுத்தரான ஸ்ரீதேசிகன், என் புந்தி புகுந்து – என் நெஞ்சில் புகுந்து, திகழ்ந்து பொருந்தினர்-பிரகாசித்து (ஸ்திரமாய்) அமர்ந்துவிட்டார்.

கண்டீர் – முன்னிலையசை.

பாபங்களே! ஸ்ரீபாஷ்யகாரருடைய திவ்யஸூக்திகள் தம்முள்ளத்தில் குடிகொள்ளப்பெற்ற ஸ்ரீதேசிகன் என்மனத்தில் புகுந்து நித்ய வாஸம்செய்தருள்கின்றார். ஆதலின், முன்போல் இனி நீங்கள் கோபங் கொண்டு என்னைத் துன்புறுத்தமுடியாதென்பதை உணர்ந்து நீங்கள் வஸிக்க வேறு இடம் பார்த்துக்கொண்டு செல்லுங்கள் — என்றவாறு.

இப்பாசுரம் பெரியதிருவந்தாதியில் 'இங்கில்லை' யென்ற 30-வது பாசுரத்தையும், பெரியாழ்வார்திருமொழி 5-ம்பத்து 'நெய்க்குடத்தை' என்று தொடங்கும் 2-வது பதிகத்தையும் தழுவிநிற்கின்றது.' கீழ்ப் பாசுரத்தில்' கண்டிலேனென் கடுவினையே'என்றுபேசி, இப்பாசுரத்தில் பின்னும் வினைகளை விளித்துப் பேசியதால் இங்கு மேல் புகவிருக்கும் வினைகளை விளித்ததாய்க்கொள்ளவேண்டும். 'போய பிழையும் புகுதருவானின்றனவும்' என்று வினை இருவகைப்பட்டதன்றோ! ஆக இவ்விரண்டு பாசுரங்களாலும் ஸ்ரீதேசிகன் குடிகொண்ட நெஞ்சமும் அவர்புகழைப் பேசும் நாவுமுடையார்திறத்துப் பாவங்கள் சேரா என்னலாயிற்று. 7

பொருந்திப் புவிதனிற் பொய்வாழ்க்கை பூண்கின்ற பூரியர்கா
ளிருந்து நரகி னிடர்கெடு மாற்றை யறிகின்றிலீர்
பொருந்தும் பொருளொன்று கேளீர்பொங் கும்மிவ் விடர்க்கடற்கு
வருந்தாது தூப்புன்மா பூருடன் பாதம் வணங்குமினே. 8

உரை :— புவிதனில் – இப்பூவுலகில், பொருந்தி – அமர்ந்து, பொய் வாழ்க்கை – நிலையற்ற வாழ்க்கையை, பூண்கின்ற – (விரும்பி) அடைகின்ற, பூரியர்காள் – அற்பர்களே!, இருந்து – இவ்வுலகில் இருந்துகொண்டே, நரகின் இடர் – நரகத் துன்பம், கெடும் ஆற்றை – ஒழியும் உபாயத்தை, அறிகின்றிலீர் – அறியாமலிருக்கிறீர்கள். பொருந்தும் – (உங்கள் ஸ்வரூபத்திற்கு) ஏற்றதான, ஒன்று பொருள் – ஒரு விஷயத்தை, கேளீர் – கேட்பீர்களாக; பொங்கும் – (மேன்மேலும்) வளர்கின்ற, இவ் இடர்க் கடற்கு – இந்த (ஸம்ஸார) துக்கமாகிய

கடலுக்கு, வருந்தாது – வருந்த வேண்டாதபடி, தூப்புல் மா பூருடன் – தூப்புலில் அவதரித்த மஹாபுருஷனுகிய ஸ்ரீதேசிகனுடைய, பாதம் வணங்குமின் – திருவடியை வணங்குவீர்களாக.

இந்த ஸம்ஸாரத்திலே அழுந்திக்கிடந்து நிலையற்ற வாழ்வையே இனியதாய்க்கொண்டு நித்யமான ஆநந்தத்தை அநுபவிக்கமுற்படாது திரியும் அற்பர்களே! வரப்போகிற நரகாநுபவத்தை ஒழிக்கும்வழியறியாது கெட்டுப்போகின்றீர்கள். உங்களுக்கு இந்த ஸம்ஸாரமாகிய கடலில். விழுந்து உழலாதிருக்குமாறு ஓர் உபாயம் கூறுகின்றேன். கேட்பீராக. அந்த உபாயமாவது— தூப்புலில் அவதரித்த ஸ்ரீதேசிகனுடைய திருவடிகளைப் பக்தியுடன் வணங்குவதேயாம்—என்றவாறு. 8

வணக்க மொடுக்கம் வழக்க மொழுக்க மிரக்கஞ்சேரு
மிணக்க முறக்க மிழுக்கு மழுக்கு மிகந்துநிற்குங்
குணக்குல மோங்கு மிராமா னுசன்குணங் கூறுந்தூப்பு
லணுக்கனைப் பிள்ளை தனையர ணுக வடைபவர்க்கே. 9

உரை:— குணக் குலம் ஓங்கும்-நற்குணங்களின் கூட்டம் வளரப்பெற்ற, இராமானுசன் – ஸ்ரீபாஷ்யகாரருடைய, குணம் கூறும் – திருக்கல்யாணகுணங்களைப் பேசுகின்ற, தூப்புல் – தூப்புலில் அவதரித்த, அணுக்கனை – பாகவதச்ரேஷ்டனை, பிள்ளைதனை-ஸ்ரீதேசிகனை, அரணுக அடைபவர்க்கு – சரணமாக அடைபவர்க்கு, வணக்கம் – (பெரியோர்களிடம்) பணிவும், ஒடுக்கம் – அடக்கமும், வழக்கம் – நல்ல பழக்கவழக்கங்களும், ஒழுக்கம் – ஸதாசாரமும், இரக்கம் – (பிராணிகளிடம்) தயையும் (ஆகிய குணங்கள்), சேரும் – (தாமே) வந்தடையும்; இணக்கம் – (துஷ்ட) ஸஹவாஸமும், உறக்கம் – தூக்க(மாகிய அஜ்ஞாந)மும், இழுக்கும் – (பலவகைக்) குற்றமும், அழுக்கும்- அசுத்தமும் (ஆகிய தீய குணங்கள்), இகந்துநிற்கும் – விலகிநிற்கும்.

அளவற்ற நற்குணங்கள் நிரம்பப்பெற்ற ஸ்ரீபாஷ்யகாரருடைய பெருமையையே பேசுமவரும் தூப்புலில் தோன்றிய பாகவதச்ரேஷ்டருமான ஸ்ரீதேசிகனைச் சரணமடைந்த பாக்யசாலிகளிடம் பெரியோரிடத்தில் பணிவு, அடங்கியொழுகுந்தன்மை, நல்ல பழக்கம், சிறந்த அநுஷ்டாநம், பிராணிகளிடம் தயை ஆகிய நற்குணங்கள் தாமே வந்துசேரும்; துஷ்டஸஹவாஸம், அஜ்ஞாநம், பல்வகைத் தோஷங்கள், அசுத்தமான தன்மை ஆகிய தீயகுணங்கள் விலகிப்போம். ஆதலின் ஸ்ரீதேசிகனைச் சரணமடைந்து வாழ்வீர்களாக—என்று உலகினருக்கு உபதேசித்தவாறு.

இப்பாசுரம் இராமானுசநூற்றந்தாதி—'பொருந்திய தேசும்' என்ற 32-வது பாசுரத்தைத் தழுவியதாம். இப்பாசுரத்தால், உலகில் நற்குணங்கள் சேரவும், தோஷங்கள் நீங்கவும் வேறோர்

உபாயம் தேடவேண்டாவெனவும் ஸ்ரீதேசிகன் திருவடிஸம்பந்தமே அவற்றைச் செய்யுமெனவும் கூறலாயிற்று. மேலும் இதில் புகழ், செல்வம் முதலிய இம்மைப்பயன்களைக் கூறுது ப்ரபந்நனுக்கு வேண்டிய அம்சங்களைப் பயனாகக் கூறிய ஸ்வாரஸ்யம் காண்க. 9

அடைபவர் தீவினை மாற்றி யருடருந் தூப்புலைய
விடர்தரு மிப்பிற விக்கட றன்னி லமிழ்ந்தவென்னைக்
கடையறப் பாசங் கழற்றிநின் றாளிணை காணும்வண்ண
முடையவ னேயரு ளாயுணர்ந் தார்தங்கள் கற்பகமே. 10

உரை:— அடைபவர் – (தன்னைச் சரணமாக) அடைபவர்களுடைய, **தீவினை மாற்றி** – பாபங்களை ஒழித்து, **அருள் தரும்** – கருணையைப் பொழிகின்ற, **தூப்புல் ஐய** – தூப்புலில் அவதரித்த ஸ்வாமியே!, **உடையவனே** - (எங்களுக்கு) நாதனே!, **உணர்ந்தார் தங்கள்** – (உன் பெருமையை) உணர்ந்தவர்களுக்கு, **கற்பகமே** – கற்பகவிருக்ஷமாய்நின்றருளுமவனே!, **இடர் தரும்** – துன்பங்களைக் கொடுக்கின்ற, **இப் பிறவிக் கடல்தன்னில்** - இந்த ஸம்ஸார ஸமுத்ரத்தில், **அமிழ்ந்த என்னை** – மூழ்கிக்கிடக்கும் அடியேனுக்கு, **பாசம்** – (ஸம்ஸாரபந்தமாகிய) பாசத்தை, **கடை அறக் கழற்றி** – வேரறும்படி போக்கி, **நின் தாள் இணை** – உன் திருவடி இரண்டையும், **காணும் வண்ணம்** – ஸேவி(த்து அநுபவி)க்குமாறு, **அருளாய்**– அருள் புரிவாயாக.

தம்மைச் சரணமடைந்தவர்களுடைய பாபங்களைப் போக்கி அவர்கள்மீது கருணைபொழிந்து நல்வழிப்படுத்தும் தூப்புல் ஸ்வாமியே! தமது பெருமையை உணர்ந்து உபாஸிப்பவர்களுக்குக் கற்பகவிருக்ஷமாய்நின்று வேண்டிய பலனை அளிக்கவல்ல ஸ்ரீதேசிகனே! மேன்மேலும் துன்பத்தையே தரவல்ல இந்த ஸம்ஸாரஸமுத்ரத்தில் அடியேன் மூழ்கித் தவிக்கின்றேன். எனக்கு இந்த ஸம்ஸாரஸம்பந்தத்தை முடிவுபோக வேரறுத்துத் தேவரீர் திருவடிகளை எப்பொழுதும் கண்டு ஸேவிக்குமாறு அருள்புரியவேண்டும் – என்றவாறு.

கீழ்ப்பாசுரம்வரை ஸ்ரீதேசிகன்பெருமையை உலகுக்கு உபதேசித்த இந்நூலாசிரியர் இப்பாசுரம் முதல் பத்துப் பாசுரங்களில் ஸ்ரீதேசிகனையே விளித்து அவர்திருமுன்பே சில விண்ணப்பங்களைச் செய்கிறார். இப்பாசுரத்தில் அடைக்கலமாய் நிற்பதற்கு வேண்டிய குணபூர்த்தி ஸ்ரீதேசிகனிடம் இருப்பதைப் புகழ்ந்து அவர்திருவடிகளிலே பற்றுண்டாகவேண்டும் என்று பிரார்த்தித்தாராயிற்று. 10

கற்பக மேயென்று காசினி யோரைக் கதிக்கமாட்டேன்
வெற்பிடை யேநின்று வெந்தவத் தீயிலும் வேவமாட்டேன்
பற்பல் கலைவல்ல பாவல னேபத்த ரேத்துந்தூப்பு
லற்புத னேயரு ளாயடி யேனுக் கரும்பொருளே. 11

உரை:— பற்பல் கலைவல்ல — பலபல வித்யைகளில் தேர்ந்த, பாவலனே — கவிவன்மையுடையவனே!, பத்தர் ஏத்தும் —பக்தர்களால் புகழப்படுகின்ற, தூப்புல் அற்புதனே — தூப்புலிலவதரித்த ஆச்சரியமான குணசேஷ்டிதங்களுடையவனே!, காசினியோரை — பூமியிலுள்ள மானிடர்களை (நோக்கி,) கற்பகமே என்று — கற்பகவிருக்ஷமே என்று, கதிக்க மாட்டேன் - சொல்லமாட்டேன்; வெற்பிடையே நின்று — மலையில் நின்று, வெம் தவத் தீயிலும் — கொடிய தவமாகிய தீயிலும், வேவ மாட்டேன் — வெந்துபோகமாட்டேன்; (ஆதலின்) அடியேனுக்கு — அடியனாகிய எனக்கு, அரும் பொருள் — பெறற்கரிய பலனாகிய மோக்ஷத்தை, அருளாய் — (பெறும்படி) அனுக்ரஹிப்பாயாக,

உலகிலுள்ள ஸகல வித்யைகளையும் கற்று, பாவலரென்று பக்தர்களால் புகழப்பட்டு, அனைவரும் அதிசயிக்குமாறு நிற்கும் ஸ்ரீதேசிகனே! இவ்வுலகிலுள்ள மானிடரிடம் அற்பப்பலனைப் பெறவிரும்பி அவர்களைக் கற்பகவிருக்ஷமே என்று புகழ்ந்து பேசி என் வாயைக் கெடுத்துக்கொள்ள மாட்டேன். ஸ்வர்க்கஸுகம் முதலியவற்றை விரும்பி மலையில் ஏறிநின்று கொடிய தவத்தைச் செய்யமுற்படமாட்டேன். நான் விரும்பும் பலன் மோக்ஷாநந்தம் ஒன்றேயாம். அதை நான் பெறும்படி செய்யத் தேவரீரே வல்லவர். ஆதலின் அந்த மோக்ஷாநந்தத்தை அடியேன் அடையுமாறு தேவரீர் அருளவேண்டும்— என்றவாறு.

இப்பாசுரத்தில் முதலடி இராமானுசநூற்றந்தாதி — 'நிதியைப் பொழியும்' 'நயவேன்' என்ற 21, 35-வது பாசுரங்களையும், இரண்டாமடி 'கதிக்குப் பதறி' என்ற 14 வது பாசுரத்தையும் அடியொற்றியனவாம். 'அற்புதன்' எனும் ப்ரயோகம் இவ்விரண்டு அந்தாதிகளிலும் உளது. ஸர்வேசுவரனைப்போல் இவ்வாசார்யர்களும் விசித்ரசக்திவாய்ந்தவர்களே. இல்லையேல், ஸம்ஸாரிகளை எப்படி ஆட்கொள்வது? ஆக இப்பாசுரத்தில் நூலாசிரியர் உலகத்தோர் கொடுக்கும் தாழ்ந்த பயன்களிலும், கடுந்தவத்தால் பெறக்கடவ ஸ்வர்க்காதிஸுகங்களிலும் ஆசையின்மையைக் கூறி அம்முகமாய் வேறு பலன்களில் நாட்டமின்மையை வெளியிட்டு மோக்ஷம் பெறத் தமது உரிமையைப் பேசி மோக்ஷோபாயத்தைக் காட்டித்தரவேண்டுமென்று பிரார்த்தித்தாராயிற்று. 11

பொருளான தொன்றுமென் னிற்பொருந் தாதது மன்றியந்தோ
மருளே மிகுத்து மறையவர் நல்வழி மாற்றிநின்றேன்
றெருளார் மறைமுடித் தேசிக னேயெங்க டூப்புற்றேவே
யருளா யினியெனக் குன்னரு ளேயன்றி யாறிலையே. 12

உரை:— தெருள் ஆர் — ஜ்ஞானம் நிறைந்த, மறைமுடித் தேசிகனே — ஸ்ரீவேதாந்ததேசிகனே!, எங்கள் தூப்புல் தேவே - எங்களுக்காகத் தூப்புலில் அவதரித்த தெய்வமே!, என்னில் - என்னிடத்தில்,

பொருளானது ஒன்றும் – ஸாரமான உபாயம் எதுவும், பொருந்தாது-இல்லை; அதுவும் அன்றி - அதுவும் அல்லாமலும், மருளே மிகுத்து-அஜ்ஞானமே அதிகமாகப்பெற்று, மறையவர் நல் வழி - வைதிகர்களின் நல்ல அநுஷ்டானத்துக்கு, மாற்றி நின்றேன் - நேர் விரோதமான நடத்தையைப் பின்பற்றிநின்றேன்; அந்தோ - ஐயோ!. எனக்கு (இந்நிலையிலுள்ள) எனக்கு, இனி - இனிமேல், உன் அருளே அன்றி - உன் கிருபையைத் தவிர (வேறு), ஆறு இல்லை - உபாயம் இல்லை; (ஆதலின்), அருளாய் - அருள்புரிவாயாக.

ஜ்ஞாநம் மிகுத்துநிற்கப்பெற்று வேதாந்தவித்யைக்கு முக்கிய ஆசார்யராய்விளங்கும் ஸ்ரீதேசிகனே! எங்கள்பாக்யத்தால் தூப்புலில் அவதரித்தருளிய எங்கள்குலதெய்வமே! அடியேன், உயர்கதியை அடைவதற்கு ஸாதநமான உபாயங்களில் ஒன்றையும் அநுஷ்டியாதவன்; அஜ்ஞாநமே நிறைந்து, வைதிகர்களின் அநுஷ்டாநத்தில் ஏகதேசத்தையும் கைக்கொள்ளாது தோன்றியவாறு திரிகின்றேன். இனி அடியேன் உஜ்ஜீவிப்பதற்குத் தேவரீருடைய கிருபையைத் தவிர வேறு ஸாதநம் இல்லை. இத்தகைய அடியேனது நிலையை நினைந்து அருள் புரியவேண்டும்—என்றவாறு.

இப்பாசுரம்முதல் மூன்று பாசுரங்களால் நூலாசிரியர் தம் தாழ்ந்த நிலையை (ஆகிஞ்சந்யத்தை) வெளியிடுகின்றாராயிற்று.

அதுவும்+அன்றி=அதுமன்றி,தொகுத்தல்—செய்யுள் விகாரம்.12

ஆறாக வெண்ணு மருங்கரு மஞ்ஞானங் காதல்கொண்டு
வேறாக நிற்கும் விரகெனக் கில்லை விரத்தியில்லை
தேறாத் திண்மதி சீரார் கதியிலுஞ் செம்பொன்மேனி
மாறாத தூப்புன்மா லேமற வேனினி நின்பதமே. 13

உரை:— மாறாத - வேறுபடாத (அழகு குன்றாத), செம்பொன் மேனி - சிவந்த பொன்போன்ற திருமேனியையுடைய, தூப்புல் மாலே-தூப்புல் எம்பெருமானே!, ஆறாக எண்ணும் - (மோக்ஷத்திற்கு) உபாயமாக (ச் சாஸ்த்ரங்களில்) எண்ணப்பட்ட, அரும் கருமம் - அருமையான கர்மயோகத்தையும், ஞானம் - ஜ்ஞாநயோகத்தையும், காதல் - பக்தியோகத்தையும், கொண்டு - கைக்கொண்டு, வேறாக நிற்கும் விரகு - தனித்து (வேறு ஸகாயம் வேண்டாது)நிற்கும் ஸாமர்த்தியம், எனக்கு இல்லை - என்னிடத்திலில்லை; விரத்தி இல்லை - வைராக்யமும் கிடையாது; சீர் ஆர் - (பலவகையிலும்) சிறப்புப் பொருந்திய, கதியிலும் - (ப்ரபத்தியாகிய) உபாயத்திலும், திண் மதி – திடமான புத்தி (மஹாவிசுவாஸம்), தேறாது – ஸித்தித்தாகவில்லை; (பின்னை என்செய்வேனெனின்), இனி- இனிமேல், நின் பதம் - உன் திருவடிகளை, மறவேன் -மறக்கமாட்டேன்.

ஒருபோதும் நிறம்மாறாத பொன்போல் விளங்கும் திருமேனியையுடைய தூப்புற்குலதெய்வமே! உலகில் மோக்ஷத்திற்கு உபாயமாய்

விதிக்கப்பட்டுள்ள கர்மயோகம், ஜ்ஞானயோகம், பக்தியோகம் ஆகிய உபாயங்களை அநுஷ்டித்து வேருெரு துணை நாடாதபடி தனித்து நிற்கும் யோக்யதை எனக்கு இல்லை. மற்றைப்பலன்களில் விருப்ப மில்லாதிருத்தலாகிய வைராக்யத்தைப் பெறும் பாக்யமும் எனக்கு இல்லை. மற்ற உபாயங்களைக் காட்டிலும் பலபடிகளிற் சிறந்துநிற்கும் ப்ரபத்தியை அநுஷ்டிப்பதற்கும், அதன் முக்கிய அங்கமாகிய மஹா விசுவாஸம் உண்டாகவில்லையாதலின் முடியவில்லை. இந்நிலையிலுள்ள அடியேன் இப்பொழுது செய்யக்கூடியது ஒன்றே. அதாவது – தேவரீர் திருவடிகளை ஒருபோதும் மறவாது தியானித்தலாம். இதைக் கொண்டே தேவரீர் என்மீது அருள்புரியவேண்டும்—என்றவாறு.

இப்பாசுரத்தில் நூலாசிரியர் ஸ்ரீதேசிகன் திருவடிகளையன்றித் தமக்கு வேருேர் உபாயமின்மையை வெளியிட்டாராயிற்று.

கருமஞ்ஞானம்— ஞகரம் விரிந்தது, செய்யுள்விகாரம். 13

நின்பதந் தன்னிலும் நேரே யெனக்கில்லை யன்புகண்டாய்
நின்பத மொன்றிய வன்பரி லுந்நேச மில்லையந்தோ
வென்படி கண்டினி யென்பய னேதமி றூப்புலெந்தா
யுன்படி யேயரு ளாயுத வாயெனக் குன்னருளே. 14

உரை:— ஏதம் இல் – எந்தத் தோஷமும் இல்லாத, தூப்புல் எந்தாய்–தூப்புல் ஸ்வாமியே!, எனக்கு–அடியேனுக்கு, நின்பதம் தன்னிலும்-உன் திருவடிகளிலும் கூட, நேரே–நேராக, அன்பு-பக்தி, இல்லை–இல்லை, நின் பதம் – உன் திருவடிகளை, ஒன்றிய – சேர்ந்த, அன்பரிலும் – அடியார்களிடத்தும், நேசம் இல்லை – பிரீதி இல்லை, அந்தோ – ஐயோ, இனி – இனிமேல், என் படி கண்டு – (இத்தகைய) என் தன்மையை நினைந்து, என் பயன் – என்ன லாபம்?, உன் படியே அருளாய் – உனக்கு அநுரூபமான ரீதியிலே கிருபை செய்வாயாக, உன் அருளே – உன் கிருபையையே, எனக்கு உதவாய் – அடியேனுக்குத் தந்தருள்வாயாக.

கண்டாய் — முன்னிலையசை. அன்பரிலுந்நேசம் – நகரவிரித்தல், செய்யுள்விகாரம்.

ஒருகாலும் தோஷலேசமுமின்றித் திகழும் தூப்புலெம்பெருமானே! அடியேன் தேவரீர்திருவடிகளில் நேரே பக்தி உண்டாகப் பெற்றிலேன், தேவரீர் திருவடிகளைப் பணிந்துநிற்கும் பாக்யம் பெற்ற மஹாநுபாவர்களிடமும் பக்திகொள்ளாத நீசனுய் நிற்கின்றேன். இத்தகைய என்னிடம் எந்தக் குணத்தைக் கண்டு தேவரீர் அருள் புரிவீர்? இதனுல் அடியேனைப் புறக்கணிக்காது மேட்டுநிலங்களிலும் ஏறிப் பாயவல்ல தேவரீருடைய இயற்கைக்கருணைவெள்ளத்தை அடியேன்மீதும் சிறிது பாயவிட்டாலன்றி அடியேன் உஜ்ஜீவிப்பதற்கு வேறு வழியில்லை—என்றவாறு.

இப்பாசுரத்தால் நூலாசிரியர் ஸ்ரீதேசிகனையே உபாயாந்தர ஸ்தாநத்திலும் நின்று தமக்குப் பலன் தரும்படி பிரார்த்தித்தாராயிற்று. இவருக்கு ஸித்தோபாயமும் ஸ்ரீதேசிகனேபோலும்!! 14

உன்னரு ளன்றி யெனக்கொரு நற்றுணை யின்மையினு
லென்னிரு வல்வினை நீயே விலக்கி யிதங்கருதி
மன்னிய நற்றிரு மந்திர மோதும் பொருணிலையே
பொன்னரு ளாலரு ளாய்புகழ் தூப்புற் குலவிளக்கே. 15

உரை :— புகழ் – (அனைவராலும்) புகழப்படுகின்ற, தூப்புற் குலவிளக்கே – தூப்புற் குலத்திற்குத் தீபமான ஸ்ரீதேசிகனே!, எனக்கு – அடியேனுக்கு, உன் அருள் அன்றி – உனது கிருபையைத் தவிர, ஒரு நல் துணை – வேறொரு நல்ல ஸஹாயம் (உபாயம்), இன்மையினுல் – இல்லாமையால், நீயே இதம் கருதி – நீயே (அடியேனுடைய) க்ஷேமத்தைச் சிந்தித்து, என் இரு வல் வினை – அடியேனுடைய (புண்யம் பாபம் ஆகிய) இரண்டு வலிய கர்மங்களையும், விலக்கி – நீக்கி, மன்னிய – ஸ்திரமான, நல் திருமந்திரம் – உயர்ந்த திருவஷ்டாக்ஷரமாகிய மூலமந்திரம், ஓதும் – தெரிவிக்கும், பொருள் நிலையே – ஸாரமான நிஷ்டையையே, பொன் அருளால் – போற்றத்தக்க கிருபையால், அருளாய் – அருள்புரிவாயாக.

தூப்புற்குலத்திற்குத் தீபமென்று ஸகல லோகங்களாலும் புகழப்படுகின்ற ஸ்ரீதேசிகனே! அடியேன் தேவரீருடைய கிருபையைத் தவிர வேறு கதியையுடையேனல்லேன். எனது நன்மையை அறியவும் யோக்யதையற்ற அடியேனுக்கு ஹிதமாவதொன்றைத் தேவரீரே நிச்சயிக்கவேண்டும். அடியேனுடைய புண்யம் பாபம் என்ற இரண்டு கர்மங்களையும் போக்கியருளவேண்டும். திருமந்திரத்தால் காட்டப்படுகிற ஸ்வரூபநிஷ்டை, உபாயநிஷ்டை, புருஷார்த்த நிஷ்டை என்ற மூன்று நிஷ்டைகளையும் அடியேன் பெற்று உய்யுமாறு அருள்புரிய வேண்டும்—என்றவாறு. (3 நிஷ்டைகளின் விளக்கத்தை ஸ்ரீதேசிகப் பிரபந்தம் 60-வது பாசுரவுரைக் குறிப்பிற் காண்க).

'தாய்நினைந்த கன்றேயொக்க' என்ற திருமங்கைமன்னன் பாசுரத்தையும் 'यन्मन्यसे मम हितं तदुपाददीथा:' என்ற ஸ்ரீதேசிக ஸூக்தியையும் அடியொற்றித் தம்முடைய நன்மையைச் சிந்திக்குமாறு ஸ்ரீதேசிகனையே பிரார்த்தித்த ஸ்வாரஸ்யம் காண்க. 15

விளக்காகி வேங்கட வெற்பினில் வாழும் விரைமலராள்
வளக்காதல் கொண்டுறை மார்பன் றிறத்து முனதடியார்
துளக்காத லில்லவர் தங்க டிறத்திலுந் தூய்மையெண்ணிக்
களக்காதல் செய்யு நிலைகடி யாய்தூப்புற் காவலனே. 16

உரை:— தூப்புல் காவலனே – தூப்புலில் அவதரித்த ஸர்வரக்ஷகனே!, வேங்கடவெற்பினில்–திருவேங்கடமலையில், விளக்காகி வாழும் –

(ரத்ந) தீபம்போல் வாழ்பவனும், விரைமலராள்–மணம் மிக்க (தாமரை) மலரில் எழுந்தருளியுள்ள பெரியபிராட்டி, வளக் காதல் கொண்டு – மிக்க காதல் கொண்டு, உறை மார்பன் திறத்தும்–நித்யவாஸம்செய்யும் திருமார்பையுடையனுமான திருவேங்கடமுடையானுடைய விஷயத்திலும், துளக்கு ஆதல் இல்லவர்–கலக்கமடைதல் இல்லாதவர்களான, உனது அடியார் தங்கள் திறத்திலும் – உன் தாஸர்கள் விஷயத்திலும், தூய்மை(க் காதல்) எண்ணி – பரிசுத்தமான பக்தியை (அடியேனுக்கு) ஸங்கல்பித்து, களக் காதல் – கபடமான பக்தியை, செய்யும் நிலை – செய்யும் தன்மையை, கடியாய்–(அடியேனுக்குப்) போக்கியருளுவாயாக.

தூப்புலில் அவதரித்து ஸகல லோகங்களையும் உஜ்ஜீவிக்கச் செய்யும் ஸ்ரீதேசிகனே! தனக்கு ப்ரகாசத்தின் ஸ்தாநத்திலுள்ள பெரியபிராட்டி மிகக் காதல்கொண்டு திருமார்பில் நித்யவாஸம் செய்யப்பெற்றவனைத் திருவேங்கடமலையின் உச்சியில் நின்று 'குன்றின்மேலிட்ட விளக்கு' என்னும்படி ஸகல லோகங்களும் ப்ரகாசிக்கும்படியான ரத்நதீபமாய்நிற்கும் திருவேங்கடமுடையானுடைய விஷயத்திலும், ஒருகாலும் கலங்காத உள்ளத்துடன் தேவரீருக்கு அடியராய்நிற்கும் மஹாநுபாவர்கள் விஷயத்திலும் எப்பொழுதும் பரிசுத்தமான எண்ணத்தைக்கொண்டு கபடமற்ற பக்தியைச் செய்யுமாறு தேவரீர் அடியேனுக்கு அருள்புரிவீராக-என்றவாறு.

இப்பாசுரத்தில் பகவத்கைங்கர்யமும் பாகவதகைங்கர்யமும் தமக்குக் கிடைக்கச்செய்யுமாறு பிரார்த்திப்பதால் திருமந்திரம் காட்டும் புருஷார்த்தகாஷ்டையைப் பிரார்த்தித்ததாயிற்று.

இங்கு ஸ்ரீதேசிகபக்தியைப் பிரார்த்தியாமைக்குக் காரணம் திருவேங்கடமுடையானுடைய அவதாரவிசேஷமான ஸ்ரீதேசிகனைத் தனித்துக் கூறவேண்டாமெனத் திருவுள்ளம்போலும். 'தூய்மையெண்ணி' என்னும்போது 'காதல்' எனும் சொல்லை வருவித்துப் பொருள் கொள்க. *16*

காவல ரெங்கள் கடாம்பிக் குலபதி யப்புளார்தந்
தேமலர்ச் சேவடி சேர்ந்து பணிந்தவர் தம்மருளா
ஞவல ருந்தென் வடமொழி நற்பொருள் பெற்றநம்பி
காவல தூப்புற் குலத்தர சேயெமைக் காத்தருளே. 17

உரை:— எங்கள் காவலர் – எங்களைக் காப்பவரும், கடாம்பிக் குலபதி – கடாம்பிவம்சத்திற்குத் தலைவருமான, அப்புளார்தம் – அப்புள்ளாருடைய, தேமலர்ச் சேவடி சேர்ந்து – தேன்பெருகும் (தாமரை) மலர்போன்ற சிவந்த திருவடிகளை ஆச்ரயித்து, பணிந்து – வணங்கி, அவர்தம் அருளால் – அவருடைய கடாக்ஷத்தால், நா அலரும்–வாக்கை மலரச்செய்யும், தென்(மொழி) – தமிழ்வேதம், வடமொழி–ஸம்ஸ்க்ருத வேதம் (ஆகிய இவற்றினுடைய), நல் பொருள் பெற்ற – சிறந்த

ஸாரார்த்தங்களைப் பெற்ற, நம்பி – பூர்ணனே!, காவல – (அனைவரையும்) காப்பவனே!, தூப்புல் குலத்து அரசே – தூப்புல் குலத்திற்கு ஸ்வாமியே!, எம்மை – எங்களை, காத்தருள் – ரக்ஷித்தருள்வாயாக.

தூப்புற்குலத்தலைவராய் அவதரித்து உலகம் முழுவதையும் வாழ்விக்கும் ஸ்ரீதேசிகனே! கடாம்பிவம்சத்திற்குத் தலைவராய் விளங்கிய அப்புள்ளாருடைய திருவடிகளை ஆச்சிரயித்து அவர்கடாக்ஷத்தால் உபயவேதாந்தங்களின் ஸாரார்த்தத்தைக் கற்றுணர்ந்தவரே! எங்களைக் காத்தருள்வீராக—என்றவாறு.

கீழ் 6-வது பாசுரத்தில் "வியன் கலைகள் மொய்த்திடும்" என்று பேசப்பட்ட ஸ்ரீதேசிகனுடைய ஜ்ஞாநமும் ப்ரவசநசக்தியும் ஆசார்ய கடாக்ஷத்தால் வந்தவை என்று இப்பாசுரம் காட்டுகின்றது. ஸ்ரீதேசிகன் ஆசார்யகுணபூர்த்தியுடையராயிருத்தல்போல் சிஷ்யகுண பூர்த்தியுடைமையும், இந்நூலாசிரியருக்கு ப்ராசார்யரான அப்புள்ளாரிடம் உள்ள பக்தியின் மிகுதியும் இப்பாசுரத்திலே காட்டப்பட்டன.

அருடரு மாரண தேசிக னேயெங்க டூப்புற்றேவே
வருகவி தார்க்கிக சிங்கமே வாதியர் வாழ்வறுத்தா
யிருகையுங் கூப்பி யுரைக்குமிவ் விண்ணப்ப மொன்றுகேளா
யுருவ வெனக்கரு ளாயெண்ணு முள்ளமுன் றொண்டரையே. 18

உரை:— அருள் தரும் – (அடைந்தவர்கட்கு) அருள் புரியும், ஆரணதேசிகனே – ஸ்ரீவேதாந்ததேசிகனே!, எங்கள் தூப்புல் தேவே – எங்கள் குடியாகிய தூப்புல் குலத்தில் அவதரித்த தெய்வமே!, வரு – (இவ்வுலகில்) வருகின்ற, கவி தார்க்கிக சிங்கமே – கவிகளுக்குள்ளும் தர்க்கநிபுணருக்குள்ளும் ச்ரேஷ்டனே!, வாதியர் வாழ்வு – ப்ரதிவாதிகளுடைய இருப்பை, அறுத்தாய் – ஒழித்தவனே!, உருவ – அழகுடையவனே!, இரு கையும் கூப்பி – இரண்டு கைகளையும் கூப்பி, உரைக்கும் – (அடியேன்) கூறுகிற, இவ் விண்ணப்பம் ஒன்று – இந்த ஒரு விண்ணப்பத்தை, கேளாய் – கேட்டருள்வாயாக, உன் தொண்டரையே – உன் பக்தர்களையே, எண்ணும் உள்ளம் – நினைக்கும் மனத்தை, எனக்கு அருளாய் – அடியேனுக்குக் கொடுத்தருளவேண்டும்.

ஸகலலோகங்களும் வாழவேண்டுமென்று இயற்கையாகக் கருணை சுரந்துநிற்கும் ஸ்ரீவேதாந்ததேசிகனே! தூப்புலில் அவதரித்து அனைவரும் ஸேவிக்கும்படி நின்ற எங்கள்தெய்வமே! கவிதார்க்கிக ஸிம்ஹமே! ப்ரதிவாதிகளின் வாழ்வை ஒழித்தவரே! அடியேன் இப்பொழுது இருகையுங் கூப்பிச் செய்யும் விண்ணப்பத்திற்குச் செவி சாய்த்து அடியேனுக்கு ஒரு வரம் தந்தருளவேண்டும். அதாவது—தேவரீர்திருவடிகளையே தஞ்சமாகப் பற்றிய மஹாநுபாவர்களிடம் அடியேன் மனம் ஈடுபடும்படி செய்தருள்வதேயாம்—என்றவாறு.

இராமானுசநூற்றந்தாதியில் ' உன் தொண்டர்கட்கேயன்புற்றிருக்கும்படி என்னையாக்கியங்காட்படுத்தே' என்று பிரார்த்தித்தது போல் இங்கும் 'எனக்கருளாய் எண்ணுமுள்ளமுன் தொண்டரையே' என்று புருஷார்த்தகாஷ்டையைப் பிரார்த்தித்தாராயிற்று.

நம்மாழ்வார் திருவிருத்தத்தில் 'மெய்ந்நின்று கேட்டருளாய் அடியேன் செய்யும் விண்ணப்பமே' என்று தாழ்மை மிகுந்து விண்ணப்பித்ததைத் தழுவி அதிலும் தாழ்மை தோன்ற இவர் இங்கு 'இருகையுங்கூப்பியுரைக்குமிவ்விண்ணப்பமொன்று கேளாய்' என்றார் போலும். 18

தொண்ட ருகக்குந் துணையடி வாழிநின் றூமுறுவல்
கொண்ட முகம்வாழி வாழி வியாக்கியா முத்திரைக்கை
வண்டிரு நாமமும் வாழி மணிவட முப்புரிநூல்
கொண்டசீர்த் தூப்புற் குலமணி யேவாழி நின்வடிவே. 19

உரை:— சீர்த் தூப்புல் குல மணியே – சிறப்புப் பொருந்திய தூப்புற்குலத்திற்கு ரத்நமே!, தொண்டர் உகக்கும் – பக்தர்கள் விரும்பும், நின் துணை அடி வாழி – உன் இரண்டு திருவடிகளும் வாழ்க, தூ முறுவல் கொண்ட – பரிசுத்தமான புன்சிரிப்புள்ள, முகம் வாழி – (உனது) திருமுகமண்டலம் வாழ்க, வியாக்கியா முத்திரைக்கை வாழி – வ்யாக்கியானமுத்ரையுடன் கூடிய திருக்கை வாழ்க, வண் திருநாமமும் வாழி – அழகிய திருமண்காப்பும் (உன்னுடைய பெயரும்) (புகழும்) வாழ்க, மணி வடம் – துளஸிமணிமாலையையும் தாமரைமணி மாலையையும், முப்புரிநூல் – யஜ்ஞோபவீதத்தையும், கொண்ட – தரித்திருக்கிற, நின் வடிவு வாழி – (உனது) திவ்யமங்களவிக்ரஹம் வாழ்க.

ஸ்ரீதேசிகனே! அடியார்கள் எப்போதும் மகிழ்ந்து வணங்கும் இரண்டு திருவடிகளும், அடியார்களிடம் உள்ள க்ருபையினால் தோன்றிய புன்சிரிப்பைக் கொண்டுள்ள திருமுகமண்டலமும், சீடர்களின் உள்ளத்துள் ஸகலதத்துவார்த்தங்களையும் நன்கு பதிவிக்கும் சின்னமாகிய வியாக்கியாநமுத்திரையால் அழகுபெற்றுவிளங்கும் திருக்கையும், எம்பெருமானுடைய திருவடிவடிவமுள்ள திருமண்காப்பும் துளஸிமணிகளாலும் தாமரைமணிகளாலும் ஆகிய மாலைகளையும் யஜ்ஞோபவீதத்தையும் தரித்து ப்ரஹ்மதேஜஸ் மிளிரப்பெற்ற தேவரீருடைய திவ்யமங்களவிக்ரஹமும் எப்பொழுதும் அடியேனது உள்ளத்துப் பதிந்து ஒருபோதும் அகலாது வாழ்க—என்றவாறு.

இப்பாசுரத்தால் ஸ்ரீதேசிகனது திருவடி, திருக்கை, திருநாமம், திருமேனி ஆகியவற்றுக்குப் பல்லாண்டுபாடியதாகவும் பெரியோர் கொள்வர். 19

வடிவழ கார்ந்தவண் டூப்புல்வள் ளன்மென் மலரடிமே
லடியவ ரோதவந் தாதி யிருபது மாய்ந்துரைத்தேன்
றிடமுட னீதைத் தினந்தொறு மாதரித் தோதுமன்பர்
முடியிடை நேர்படுந் தூப்புலம் மான்பத மாமலரே. 20

உரை :— வடிவு அழகு ஆர்ந்த – திருமேனியின் ஸௌந்தர்யம் நிரம்பப்பெற்ற, வண் தூப்புல் வள்ளல் – ஒளிபொருந்திய தூப்புலில் தோன்றிய கொடையாளனை ஸ்ரீதேசிகனுடைய, மெல் மலர் அடி மேல் – மெல்லிய தாமரைமலர்போலும் திருவடி விஷயமாக, அடியவர் ஓத – அடியார்கள் அநுஸந்திப்பதற்காக, அந்தாதி இருபதும் – அந்தாதியாக அமைந்த இருபதுபாசுரங்களையும், ஆய்ந்து உரைத்தேன் – ஆராய்ந்து கூறினேன்: திடமுடன் – மனவுறுதியுடன், ஈதை – இந்தப் பிரபந்தத்தை, ஆதரித்து – போற்றி, தினந்தொறும் – ஒவ்வொரு நாளும், ஓதும் அன்பர் – அநுஸந்திக்கும் பக்தர்களின், முடியிடை – தலையில், தூப்புல் அம்மான் – தூப்புல் தலைவனை ஸ்ரீதேசிகனுடைய, பத மா மலர் – திருவடிகளாகிய சிறந்த புஷ்பங்கள், நேர்படும் – (அலங்காரமாய்ச்) சேரும்.

அடியார்களின் உள்ளத்தைக் கவரும் அழகுவாய்ந்த திருமேனியையுடைய ஸ்ரீதேசிகன் திருவடிகளின் பெருமையைப்பேச எல்லையேயில்லையாயினும், அடியார்கள் தினந்தோறும் அநுஸந்திப்பதற்கு ஏற்றவாறு சாஸ்த்ரார்த்தங்களின் ஸாரத்தை அமைத்து இருபது பாசுரங்களைப் பாடினேன். மனவுறுதியுடனும் அன்புடனும் இந்தப் பிரபந்தத்தைத் தினந்தோறும் அநுஸந்திப்பவர்களின் மஹாபாக்ய விசேஷத்தை எவ்வாறு சொல்வது? அவர்கள் முடிமீது ஸ்ரீதேசிகன் திருவடித்தாமரைகள் குடிபுகுந்து எந்நாளும் விலகாதிருப்பனவாம். இதைக்காட்டிலும் சிறந்த புருஷார்த்தம் வேறு என்!—என்றவாறு.

'வெண்குடை நீழலின்கீழ் விரிநீருலகாண்டு' என்று அழியும் பலனைக் கூறிய மற்றைப்பிரபந்தங்கள்போலன்றிக்கே, 'முடியிடை நேர்படுந் தூப்புலம்மான் பதமாமலரே' என்று ஆசார்யோத்தமன் திருவடிஸம்பந்தத்தின் மேற்பட்ட பலனில்லையெனக் காட்டிப் பிரபந்தத்தை இனிது முடித்தருளிய அழகு காண்க. 20

பிள்ளையந்தாதி—உரை முற்றிற்று.

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

ஸ்ரீ:

श्रीमते निगमान्तमहादेशिकाय नमः

ஸ்ரீதேசிகப்பிரபந்தம்—செய்யுளகராதி

[எண்கள் பாசுரங்களின் தொடரெண்களைக் குறிக்கும்]

அகலகிலாத்	275
அடங்காக்	213
அடலுரகம்	151
அடற்புள்	133
அத்திகள்	388
அத்திகிரி	224, 278
அந்தணர்	56
அந்தமில்சீர்	366
அந்தமிலாதி	23
அந்தமிலரப்	123
அந்தமிலாவாரண	384
அப்படிநின்ற	12
அப்பொருள்	295
அமலனவியாத	248
அமையாவிவை	48
அயன்பணியும்	258
அருடரும்	347
அருண்மிகுத்தது	368
அருமறையாதுங்	310
அருமறையை	270
அருவுரு-தன்னை	304
அருவுரு-யனைத்து	135
அருளாலே	274
அலர்ந்த	128
அலையற்ற	6
அழிவிலா	299
அளவுடையார்	242
அறவேபரம்	58
அறியாத	107
அறிவித்தனர்	57
அறிவிலர்	267
அறிவுதரும்	379
அறிவுமனைத்தும்	325
அன்றுநயந்த	220
அன்னவடி	219
அனைத்துலகுங்	271
ஆகமத்தை	184
ஆகாரத்து	385
ஆணைமறுதவர்	342
ஆதிமறை	131
ஆதியுகத்து	233
ஆர்க்குங்கருணை	352
ஆரணங்கடேட	354
ஆரணங்களெல்லா	27
ஆரணநூல்வழிச்	43
ஆராதசெல்வ	334
ஆராதவரு	81
ஆழ்வார்கள்	367
ஆழிநிலை	232
ஆளுமடைக்	46
ஆறுபயன்	247
இடம்பெற்றூர்	116
இதுவழி	92
இரண்டுரை	117
இருபரிதி	225
இருவிலங்குகழித்	100
இருவிலங்குவிடுத்	256
இளக்கமில்	294
இன்பத்தில்	41
இன்னமுதிற்	303
ஈசனிலன்	190
ஈசனுமற்று	187
ஈருலகைப்	269
உகக்குமவை	241
உகவையடை	327
உடலமழிந்	328
உண்மை	72
உத்தம	83, 216
உத்திதிகழும்	7
உமதடிகள்	243
உய்யுமுறவு	252
உய்விரதம்	235
உயர்ந்தவர்	301
உயர்ந்தனன்	73
உயிருமுடலும்	5
உருளுஞ்சகடம்	361
உலகத்து	138
உலகறிய	378
உலகெல்லாம்	273
உள்ளபொருள்	249
உளக்கதியை	170
உளதான	64
உறவையிசை	101
உறுசகடம்	90
உறையிட்ட	144
ஊன்றந்து	32
ஊனிலிணை	319
ஊனின்படி	339
எச்சிறனில்	395
எட்டிலா	39
எட்டுமா	84
எட்டுமிரண்டும்	93
எண்டள	154
எண்டிசைபர	302
எண்டிசையுங்	209
எண்ணின்முதல்	381
எத்திசை	215
எந்நிலமுங்	230
எம்பற்ப	290
எமநியம	254
எல்லாத்தரும	37
எல்லாந்தன	337
எல்லார்க்கும்	200
எல்லையிலாத	336
என்றுமோர்	296
என்னதியான்	104
என்னிடிகேசன்	289
என்னுயிர்	42
எனக்குரியன்	8
எனதென்பதும்	25
ஏகாந்திகம்	179
ஏற்றிமனத்து	77
ஏறியெழிற்	68
ஒண்டொடி	85, 105
ஒருக்காலே	111
ஒருகுளம்பி	401
ஒருமதியன்பர்	357
ஒளிமதியென	263
ஒன்றெனவும்	180
ஒன்றேபுகல்	18, 211
ஓதுமறை	31
ஓதுமிரண்டை	74
ஒருயிராய்	305
கங்கிருளால்	405
கங்கையல்லது	402
கடலமுத	2

கடன்மல்லைக்	369
கடிசூடு	312
கடுவினை	320
கண்டதலாதன	183
கண்டதனாற்	166
கண்டதுமெய்	165
கண்டெளிதாங்	331
கண்ணன்கழல்	119
கண்ணனடி	82
கத்தித்திரியுங்	292
கந்தமலர்	195
கருமமுஞான	326
கருமமென	102
கருமாலையில்	142
கல்லாரகலுங்	315
கலகத்திற்	182
கலந்திகழும்	202
கழியாத	125
கள்ளமன	134
கனைகடல்	188
காகமிராக்	240
காசினியின்	122
காடுகளோ	323
காண்கின்றவ	173
காண்பனவும்	132
காணாதில	167
காமங்கள்பல	218
காரணமாயிறை	306
காரணமாயுயிர்	11
காரணமுங்	97
காரணனாயுலகு	192
காளம்வலம்	45
கானென்ற	321
கிளிஞ்சின்	392
குடன்மிசை	28
கும்பிடுவார்	174
குளிமுதலா	394
குறிப்புடன்	75
கேசவனாய்	280
கோதமநூல்	185
கோதவமொன்	206
கோவிந்தன்	283
சங்கந்தவிர்ந்து	329
சடைமுடியன்	238
சடையன்	129
சத்துவவீடு	344
சாக்கியர்	20
சாதனமும்	87
சாதிகுணம்	404
சாதுசனங்கள்	193
சாயாமறை	181
சித்தசித்தென	226
சித்துமசித்தும்	157
சிறுகீரை	389
சிறுபயனிற்	19
சிறைநிலை	162
சீர்க்கடலின்	121
சீரார்சிரீதர	288
சீராருந்தூப்புல்	236
சிலங்கவர்	15
சுகலேச	222
சுருங்கா	311
சுருதிநினைவு	245
செப்பச்செவிக்கு	79
செம்பொற்	13
செய்யேன்மறம்	22
சென்றுமலர்	231
சென்றுயர்	324
சேர்க்குந்திரு	34, 314
சொன்னார்தாஞ்	178
சோகந்தவிர்	110
சோதனை	177
தகவாற்	71
தத்துவங்கள்	9
தத்துவந்தன்	29
தத்துவமறு	297
தத்துவமுஞ்	108
தந்திரங்கள்வேறு	239
தந்திரங்களளவு	159
தந்திருமாது	257
தம்பர	1
தயிர்தன்னில்	400
தரணியின்	221
தருமன்விடத்	276
தலைப்பயனும்	399
தள்ளத்துணி	21
தன்கழலிற்	338
தன்மேன்மை	335
தன்னடிக்கீழ்	204
தன்னருளாற்	318
தன்னிலைகாட்	322
தன்னினைவில்	88
தனதன்று	313
தனதிவை	298
தாதைநல்	396
தாமோதரன்	291
தாவிப்புவனங்	191
தான்றனக்குத்	124
தானடைத்த	251
தானின்ற	333
திகிரிமழு	207
திண்மணிகள்	217
திண்மைகுறை	244
திரிவிக்கிரமன்	286
திருத்தம்	115
திருநாரணன்	10
திருமகண்மண்	227
திருமகளுந்	246
திருமாலடியவர்க்கு	348
திருமாலடியிணைசே	35
திருமாலடியிணையே	33
திருவுடன்	47
தீதற்ற	346
தீயாலே	398
தீவகைமாற்றி	160
துதிகளு	266
துய்யமனத்தர்	106
துறவறமே	140
தூமறையின்	351
தெருளார்	146
தேசமெலாம்	380
தேசொத்தார்	360
தேவர்களுக்கு	391
தேறவியம்பினர்	51
தேறியமா	373
தேனார்கமலத்	65
தைம்மகத்தில்	371
நடைபெற	67
நமக்கார்	198
நறையுடை	262
நன்னிலமாம்	66
நாக்கியலும்	159
நாம்வணங்கத்	272
நாரணனாய்	281
நாராயணன்	17
நாவலர்மறை	293
நான்மறைக்குத்	186
நிலைதந்த	49

நிலையில்லாப் 172
நின்றநிலைக்கு 55
நின்றபுராணன் 53
நின்றனம் 63
நின்னருளாங் 126
நீளவந்தின்று 44
பண்டைமறை 201
பண்டையிரு 149
பத்தரடிப் 382
பத்திமுதல் 237
பயின்மதி 353
பரக்கும்புகழ் 109
பரவுமறைகள் 127
பல்வினைவன் 26
பலத்திலொரு 199
பாட்டுக்குரிய 89
பாவளருந் 130
பிரிவில்லா 176
பிறவாமை 330
புகலுலகில் 255
புண்டரீகம் 234
புரமுயர்த்த 359
புருடன்மணி 80
பூதவுடல் 250
பூவலருந் 197
பூவளருந் 150
பெடையிரண்டை 228
பெருகிய 268
பெருமையுடை 223
பெற்றனைநீயே 356
பெறுவதுநாம் 309
பேரணிந்த 375
பொங்குபுனல் 120
பொய்கைமுனி 40
பொருத்தம் 365
பொருளொன்றில 171
பொருளொன்றென 50
பொன்புரையும் 374
பொன்னையிகழ்ந்து 112
போமுரைக்கும் 156
மகரம்வளரும் 358
மஞ்சுலாவு 364
மண்ணுலகில் 152
மதுசூதனன் 285
மருளற்ற 76
மலர்மகள் 261
மலையுங்குலையும் 118
மழையிலெழுந்த 350
மற்றொருபற்று 36
மறுத்தார்திரு 136
மறைத்தலை 279
மறைபொருந்தாத 343
மறையுரைக்கும் 91
மன்னவர் 59
மன்னுமதிட்டிரு 377
மன்னுமனைத்து 69
மனிசர்பசு 387
மாகரும்பின் 397
மாதவநாமமும் 282
மாதவனேபரன் 194
மாமயிலைப் 370
மாலமுது 390
மாளாத 153
மானங்களின்றி 203
மானமிலை 168
மிண்டுரைக்க 164
முக்கியமந்திரங் 60
முக்குணமாய் 189
முக்குணமாயை 24
முக்குணமே 340
முத்திக்கருள் 3
முத்தின்வடங் 158
முற்றுஞ்சகத்து 169
முன்கருவி 145
முன்செய்த 143
முன்பெற்ற 78
முன்னுரைத்த 372
மூண்டாலும் 86
மூலங்கிளை 96
மூவுலகுங் 114
மூவெட்டினும் 341
மூன்றிலொரு 4
மையுமாகடலும் 363
மொழிவார் 349
மோரலது 393
யாதாமிவை 99
யாதுமிலாத 196
யானறியுஞ் 14
யானெனது 98
யோகமுயற்சி 332
வஞ்சனை-மலியுஞ் 362
வஞ்சனை-மாய்த்தா 277
வண்மையுகந்த 16
வந்தனபோல் 141
வம்பவிழ் 212
வம்மின்புலவீர் 210
வயனமொன்று 300
வரிக்கின்றனன் 70
வரியிருள் 259
வருவதொர் 264
வன்பற்றறுக்கும் 345
வன்பற்றுடன் 148
வாதியர் 52
வாமனன் 287
வாயிலல்லா 386
வாரிதிவிட்டு 317
வாழியருளாளர் 208
வான்பட்ட 137
வானமர் 307
வானுளமர்ந்த 94
விட்டுவல 284
விடுநெறி 155
விண்ணவர் 61
விண்ணுலகில் 214
விதைமுளை 253
விரைகமழ் 265
விழியல்லால் 147
வினைத்திரள் 30,38
வினைவகை 260
வினைவிடுத்து 103
வெள்ளைப்பரி 95
வெற்புடன் 355
வெற்றிலை 403
வெறியார் 163
வெறுமை 316
வேண்டும் 54
வேதங்கண் 175
வேதத்திரளின் 113
வேதமறிந்த 62
வேயர்புகழ் 376
வேறொப்பார் 229
வேலைப்புறம் 161
வேறொரணங்கு 308
வையகமெண் 383
வையமெலாம் 205

ஸ்ரீ:

श्रीमते निगमान्तमहादेशिकाय नमः

ஸ்ரீதேசிகப்பிரபந்தம் — அரும்பதவுரை

[இப்பிரபந்தத்திலுள்ள கடினபதங்களுக்கு இவ்வுரையிலே ஆண்ட பொருள்கள் மாத்திரமே வரையப்படுகின்றன.]

அ

அகம் — உட்புறம்
அகலம் — மார்பு
அகலுதல் — நீங்குதல்
அகவாய் — தாத்பர்யம்
அகற்றுதல் — போக்குதல், விலக்குதல்
அகில் — அகிற்கட்டை
அகிலம் — ப்ரபஞ்சம், உலகம்
அங்கி — அக்நி
அங்குசம் — மாவெட்டி
அசகரன் — மலைப்பாம்பு, ஓர் [அந்தணன்
அசத்து — தீயது (பாவம்)
அசித்து — அசேதநம்
அஞ்சல் — அபயம்
அஞ்சனம் — மை
அட்டுப்பு — காய்ச்சிய உப்பு
அடங்க — முழுதும்
அடம் — திடம்
அடர்த்தல் — அடக்குதல்
அடல் — வலிமை, பலம்
அடி — காரணம், ஆரம்பம், [பாதுகை, திருவடி
அடிமை—கைங்கர்யம்
அடியுரை-மூலபாஷை(வடமொழி)
அடைக்கலம்-காக்கவேண்டிய [வஸ்து
அடைத்தல்-ஸமர்ப்பித்தல், விதித்தல், படைத்தல், அடிமையாக்குதல், கொடுத்தல்
அடைய — முழுவதும்
அடைவு — வரிசை
அணங்கு — தெய்வம், பெண்
அணி — அலங்காரம், ஆபரணம்,
அணுகுதல் — நெருங்குதல்[அழகு
அணை — படுக்கை
அத்தன்–தந்தை, ஸ்வாமி, உயர்ந் [தவன்
அத்து (அஸ்து) — ஆகுக
அதிபதி — ஸ்வாமி
அந்தணர் — ப்ராஹ்மணர்
அந்தம் — எல்லை, அழிவு, அளவு
அந்தரம் — வித்தியாசம்
அந்தி — முடிவு, மாலைநேரம்
அந்தியர் — சண்டாளர்
அநந்தம் — எல்லையற்ற
அம் — அழகிய
அம்புயத்தாள் – தாமரையிலுள்ள [பிராட்டி
அம்புயத்தோன்–தாமரையிலுள்ள [பிரமன்
அம்புயம் — தாமரை
அமர்த்தலம் — போர்க்களம்
அமரர் — தேவர்
அமலன் — தோஷமற்றவன்
அமைத்தல் — படைப்பு
அமைதல் — பொருந்துதல்
அமைப்பு — படைத்தல்
அமைவு — பூர்த்தி
அயமேதம் — அசுவமேதம்
அயர்தல் — மறத்தல், தீர்தல்
அயர்வு — மறதி
அயன் — பிரமன்
அயனத்திரம் — ப்ரஹ்மாஸ்த்ரம்
அயனம் — உபாயம், ப்ரவேசிக்கப் [படும் வஸ்து
அரங்கு — நடனஸ்தலம்
அரண் — பாதுகாப்பு, உபாயம்
அரவு — ஸர்ப்பம், ஆதிசேஷன்
அரிதல் — போக்குதல்
அரியோர் — அருமையானவர்
அரிவை — இளம்பெண்
அரு — ஸூக்ஷ்மம், ஜீவன்
அருக்கன் — ஸூர்யன்
அருக்குதல் — குறைதல்
அருகணை — பூஜாத்ரவ்யம், [சாய்மணை
அருகு — ஸமீபம்
அருந்துதல் — பருகுதல், அநுப [வித்தல், உட்கொள்ளல்,
அருநிலை — ஸூக்ஷ்மநிலை
அல் — இருள்
அல்வழக்கு — தகாத ஒழுக்கம், [தகாத வழக்கு
அல்வழி — தகாத வழி

அலகு — அளவு
அலங்கல் — (பூ) மாலை
அலத்தல் — வருந்துதல்
அலமர்தல் — தவித்தல்
அலர்தல் — மலர்தல், விரிதல்
அலற்றல் — கதறுதல்
அலைத்தல் — அலைமோதல், கலக்குதல்
அவம் — கேடு, குற்றம்
அவனி — பூமி, தேசம்
அவிர்தல் — ப்ரகாசித்தல்
அவிழ்தல் — மலர்தல்
அவுணன் — ராக்ஷஸன்
அழல் — அக்நி, தாபம்
அழுக்கு — குற்றம்
அள்ளல் — சேறு
அளவு — ஜ்ஞானம்
அளித்தல் — ரக்ஷித்தல், உஜ்ஜீவிப்பித்தல்
அறம்—புண்யம், தருமம்
அன்னவர் — பரமஹம்ஸர்
அனங்கன் — மன்மதன்
அனந்தன் — ஆதிசேஷன்
அனவரதம் — எப்பொழுதும்
அனுதினம் — தினந்தோறும்
அனுமித்தல் — ஊஹித்தல்
அனைய — போன்ற

ஆ

ஆகண்டலன் — இந்திரன்
ஆகம் — சரீரம், மார்பு
ஆகமம் — சப்தப்ரமாணம்
ஆகாதார் — தகாதவர்
ஆசனம் — பக்தியோகத்தின் ஓர் அங்கம்
ஆசு — குற்றம்
ஆசை — திசை
ஆட்கொள்ளல் — அடிமைகொள்ளல், உஜ்ஜீவிப்பித்தல்
ஆட்படுத்தல் — தாஸனுக்குதல்
ஆண்டு — வர்ஷம்
ஆணை — கட்டளை
ஆதரம் — அன்பு, ஆவல்
ஆதி — காரணம்
ஆதியர் — முன்னோர்
ஆயன் — கோபாலன்
ஆர்தல்—நிறைதல், பொருந்துதல்
ஆரணநூல் — வேதாந்தசாஸ்த்ரம்
ஆரணம் — வேதம்
ஆலுதல் — அசைதல்
ஆவலிப்பு — கர்வம், அஜ்ஞானம்
ஆவி — ப்ராணவாயு
ஆழி — கடல், சக்கரம்
ஆறு — உபாயம், நதி
ஆறுதல் — பண்படுதல், தீர்தல், தணிதல்

இ

இயைதல் — ஒத்தல்
இருடிகம் — இந்த்ரியம்
இருதலை — இருபக்கம்
இருநிலம் — அகன்ற பூமி
இருவினை — புண்யமும் பாபமும்
இல் — வீடு, ஸ்தானம்
இலக்கணம் — அடையாளம்
இலக்கம் — எண்
இலக்கு — லக்ஷ்யம்
இலகு — ஸுலபம்
இலகுதல் — இலங்குதல் — ப்ரகாசித்தல்
இலச்சினை—அடையாளம்
இழிதல் — விழுதல், இரங்குதல், ஈடுபடுதல்
இளக்குதல் — அசைத்தல்
இளக்கம் — நெகிழ்ச்சி
இளைதாம்நிலை — தாழ்ந்தநிலை
இறுதி — முடிவு
இறை — ஆள்பவன், நாயகன், ஈசுவரன், க்ஷணம்
இறைஞ்சுதல் — சரணமடைதல்
இறைவர் — தேவர்
இறைவன்—ஸ்வாமி,எம்பெருமான்
இன்பத்தொகை — ஆநந்தக்கூட்டம்
இனநாள் — இத்தனைநாள்

ஈ

ஈண்டுதல் — ஒன்றுகூடுதல்
ஈர்த்தல் — இழுத்துச்செல்லுதல்
ஈனம் — தாழ்வு
ஈனுதல் — படைத்தல்

உ

உகத்தல் — ஏற்றுக்கொள்ளல், மகிழ்தல், விரும்புதல்
உகம் — இரண்டு
உகிர் — நகம்
உட்கண் — ஞானக்கண்
உடலம் — சரீரம்
உணர்த்தி — நினைவு
உணர்வு — ஸங்கல்பம்
உத்தரவேதி — யாகவேதி
உத்தரித்தல்—எடுத்துக்கொள்ளல்

உதரம் — வயிறு
உந்தி — நாபி
உந்துதல் — வீசியெறிதல், எழுப்புதல்
உபராகம் — (ஸூர்ய — சந்த்ர க்ரஹணம்)
உபலம் — கல்
உபாதி — காரணம்
உம்பர் — தேவர், நித்யஸூரிகள்
உமிழ்தல் — படைத்தல், வெளிப்படுதல்
உய்த்தல் — செலுத்தல்
உய்தல் — உஜ்ஜீவித்தல்
உயிர்த்தல் — பிறப்பித்தல்
உயோகம் — த்யாநம்
உரகம் — பாம்பு
உரம் — மார்பு
உரிமை — அடிமை
உரு — அசேதநம், பெரிது, சரீரம்
உரை — உபதேசம், எச்சில்
உரைகொள் மங்கை, உரையணங்கு — ஸரஸ்வதி
உலோகாயதர் — சார்வாகர்
உவா — பருவங்கள்
உழலுதல் — துன்புறுதல்
உள்ளம் — தாத்பர்யம், மனம்
உள்ளுதல் — ஆராய்தல்
உளக்கதி — மனப்போக்கு
உறந்தை — உறையூர்
உறவு — ஸம்பந்தம்
உறுதல் — அடைதல், அனுஷ்டித்தல், பொருந்துதல்
உறைத்தல் — பரிசயம்செய்தல்
உறைதல் — வசித்தல்
உன்னதி — உயர்வு

ஊ

ஊடறுத்தல் — ஒழித்தல், இடையற்றுப்போகச்செய்தல்
ஊர்தல் — ஓட்டுதல், ஸஞ்சரித்தல்
ஊழி — ப்ரளயம், யுகம், கல்பம்
ஊன் — சரீரம், மாம்ஸம்

எ

எட்டு இறை-எட்டுத் திக்பாலகர்
எட்டுதல் — கிட்டுதல்
எட்டுமாமூர்த்தி — எட்டு உருவமுடைய சிவன்
எடுத்த இசை — உச்சஸ்வரம்
எடுத்தல் — சீர்தூக்கல். அமைத்தல்
எண்கணன் - எட்டுக் கண்ணுடைய பிரமன்
எண்ணிறத்தல் — அளவற்று நிற்றல்
எதிராசர் — ஸ்ரீ பாஷ்யகாரர்
எந்தை — எம் ஸ்வாமி
எமம் — பக்தியோகத்தின் ஓர் அங்கம்
எழுனீத்துறைவர் — ஆளவந்தார்
எய்துதல் — செல்லுதல், அடைதல்
எரி — அக்நி
எழில் — அழகு, ப்ரகாசம்
எழுதல் — விருத்தியடைதல், உத்ஸாகமடைதல்

ஏ

ஏகாந்தி—ஒன்றிலே உறுதியுடையன், ஒரே நிலைமையன்
ஏகாந்திகம் — ஒரே தன்மையது
ஏத்துதல் — புகழ்தல்
ஏதம் — தீங்கு
ஏதிராசர் — ஸ்ரீபாஷ்யகாரர்
ஏந்துதல் — ரக்ஷித்தல்
ஏய்தல் — ஒத்தல். பொருந்துதல்
ஏர் — அழகு, பெருமை
ஏர்தல் — பொருந்துதல்; ஒத்திருத்தல்
ஏவல் — கைங்கர்யம்
ஏவுதல் — ஒழித்தல்
ஏற்றல் — தகுதியாயிருத்தல்
ஏறு — காளை
ஏனம் — பன்றி

ஐ

ஐ — அதிசயம்
ஐதுகர் — காரணம்கேட்பவர்
ஐயம், ஐயுறவு — ஸந்தேகம்

ஒ

ஒண்மை — சிறப்பு, அழகு
ஒருக்குதல் — ஒன்றுசேர்த்தல்
ஒருமை — ஒப்பற்றதன்மை
ஒழுக்கம் — நடை
ஒழுக்கு — வெள்ளம்
ஒழுக்குதல்—நடத்துதல் [செல்லல்
ஒழுகுதல் — செல்லுதல், ஆழ்ந்து
ஒளி — ப்ரகாசம், ஞானம்
ஒளிநாள் — சுக்லபக்ஷம்
ஒன்றுதல் — ஒன்றுகூடுதல், கலத்தல், நிறைவேறுதல்,வசித்தல்

ஓ

ஓக்கம் — உயர்வு, அபிவிருத்தி
ஓங்குதல் — எழும்புதல், உயர்தல்
ஓதம் — ஜலம்

ஓதுவித்தல் — உபதேசித்தல்
ஓர்தல் — ஆராய்தல், நிச்சயித்தல், அறிதல், தெளிதல்
ஓலம் — கூக்குரல்

க

கங்கிருள் — அடர்ந்த இருள்
கங்குல் — இரவு
கச்சபம் — ஆமை
கட்டம் — கஷ்டம்
கட்டளை — ப்ரகாரம்
கட்டு — தாழ்வரை, வலிமை
கட்டுதல் — கல்பித்தல்
கடத்தல் — மீறுதல், தாண்டுதல்
கடத்துதல் — கரைசேர்த்தல்
கடல்வட்டம் — கடல்சூழ்ந்த பூமி
கடன் — கடமை
கடி — வாஸனை, மிகுதி
கடிதல்–கண்டித்தல், போக்குதல், வெறுத்தல், கொல்லுதல், அழித்தல்
கடுகுதல் — விரைதல்
கடுவினை — கொடிய கர்மம்
கண் — கதி
கண்டகம் — முள்
கண்டை — மணி
கண்ணுறு — எல்லை
கண்ணி — பாசம்
கண்ணுதல் — நெற்றிக்கண்ணுடைய சிவன்
கண்பனித்தல் — கண்ணீர்விடுதல்
கண்புதையல் — கண்ணும்பூச்சி
கணக்கு — முறை
கணசரணர் — கணுதர்
கணம் — கூட்டம்
கனை — கணக்கிடுதல்
கணிக்கை — நினைத்தல்
கணை — அம்பு
கத்து — பிதற்றல்
கதகர் — வாதிகள்
கதலி — வாழை
கதி — உபாயம், பலன், வழி, ப்ரகாரம்
கதித்தல் — அநுஸந்தித்தல்
கதிரவன் } — ஸூர்யன்
கதிரோன் }
கதுவுதல் — பற்றிக்கொள்ளல்
கந்தம் — வாஸனை

கம் — இந்த்ரியம்
கமடம் — ஆமை
கமலம் — தாமரை, ஓர் ஆயுதம்
கமலை — லக்ஷ்மி
கமழ்தல் — பரிமளித்தல்
கரடி — யானை
கரடிகிரி — அத்திகிரி
கரணம் — இந்திரியம், கூத்து
கரத்தல் — மறைத்தல்
கரம் — கழுதை
கரளம் — விஷம்
கரிகிரி — ஹஸ்திகிரி
கரு — கர்ப்பம்
கருத்து — ஸங்கல்பம், சிரத்தை
கருமம் — கடமை, கருமயோகம்
கருமாலை — கர்ப்பவரிசை
கருவி — இந்த்ரியம்
கருவினை — பாபம்
கல்வி — கொள்கை, வித்யை
கலகம் — சண்டை
கலம் — ஓடம்
கலித்தல் — கிளர்தல்
கலித்திரள் — கலிபுருஷர்களின் கூட்டம்
கலியன் — திருமங்கையாழ்வார்
கலை — சாஸ்த்ரம்
கவந்தன்—தலையில்லாத முண்டம்
கவர்தல் — பலனைக்கொண்டிருத்தல், விரும்புதல், அநுபவித்தல், கைக்கொள்ளல், வசமாக்குதல், ஏற்றுக்கொள்ளல், கொள்ளையிடுதல்
கழல் — திருவடி
கழற்றுதல் — ஒழித்தல்
கழி — உப்பங்கழி
களவம் } — ஆண்யானை
களிறு }
கறவை — பசு
கன்றுதல் — கோபித்தல்
கன்னல் — சருக்கரை
கனைத்தல் — சப்தித்தல்
கா — சோலை
காசினி — பூமி
காட்சி — அறிதல், பெருமை
காணன் — குருடன்
காணி — நிலம்
காதல் — பக்தி, ஆசை

காய்தல் — கொல்லுதல்
காயாவண்ணன் — காயாம் பூவண்ணனை எம்பெருமான்
கார் — கருமை, மேகம்
காலதூதர் — யமதூதர்
காலன் — யமன்
காவல் — ரக்ஷித்தல்
காவலன் — ரக்ஷகன்
காளம் — காஹளம் (ஒரு வாத்யம்)
கான் — காடு
கிரி — மலை
கிரிசை — கருமம்
கிளர்தல் — எழும்புதல்
குக்குடம் — சேவல்
குடல் — சரீரம்
குத்திரம் — அற்பம்
குதர்க்கம் — குயுக்தி
குந்தம் — ஈட்டி
குமரன் — இளைஞன்
குமிழி — நீர்க்குமிழி
குரம் — காற்குளம்பு
குரவை — ராஸக்ரீடை, கைகோத்தாடும் கூத்து
குரைத்தல் — ஒலித்தல்
குலபதி—கூடஸ்தர்
குலம் — கூட்டம்
குலவுதல் — விளங்குதல்
குலாவுதல் — கொண்டாடுதல்
குலைதல் — கெடுதல், சிதைதல், சிதறுதல், நடுங்குதல்
குவடு — குன்று
குவளை — கருநெய்தல்
குழல் — கூந்தல்
குழவி — குழந்தை
குழாம் } — கூட்டம்
குழுவு }
குழை — குண்டலம்
குற்றேவல் — கைங்கர்யம்
குறள் — வாமனன்
குறி — அடையாளம், கவனம், உபாயம், இலக்கு
குறிக்கொள்ளுதல் — ஆதாரமாகக் கொள்ளல்
குறித்தல்—இலக்குவைத்தல்,எதிர்பார்த்தல், கூறுதல், அநுஸந்தித்தல்

குறிப்பு — கவனம், உள்ளக்கருத்து, ஸூக்ஷ்மார்த்தம்
குறியவன் — குள்ளன்
குறியார் — குள்ளர்
குறுகுதல் — விரைதல், சேர்தல்
குறும்பு — தீம்பு, பலம்
குறுமை — சிறுமை
கூட்டு — ஸஹாயம்
கூடம் — சிகரம்
கூடாமை — பெருமை
கூத்து — அதிசயம்
கூறு — பங்கு
கூன் — வக்கிரம்
கேழல் — பன்றி
கேள்வன் — கணவன்
கைதவம் — வஞ்சனை, கபடம்
கைம்மாறு — பிரதியுபகாரம்
கைவளர்தல் — மேம்பாடடைதல்
கொடுமோகம்-கொடியஅஜ்ஞாநம்
கொண்டல் — மேகம்
கோ — ஸ்வாமி, பசு
கோகனகம் — தாமரை
கோண் } — வக்ரத்தன்மை
கோணை }
கோணை — துன்பம்
கோது — குற்றம்
கோதை — ஆண்டாள்
கோமான் — இடையன்
கோயில்-வாஸஸ்தாநம், திருவரங்கம்
கோரணி —கோமாளிக்கூத்து
கோலம் — வேஷம், சரீரம்
கோவியர் — இடைப்பெண்கள்
கோவை — ஹாரம்
கோளரி — நரசிங்கன்
கோளுரை — புறங்கூற்று
கோன் — தலைவன்

ச

சகம் — உலகம்
சங்கம் -- பற்று
சங்கேதம் — கட்டுப்பாடு
சச்சை — அஸாரம்
சடங்கு — விரதம்
சடைமுடியன் } —சடை தரித்த சிவன்
சடையன் }
சத்து — புண்ணியம்
சத்துவவீடு — ஸாத்துவிகத்யாகம்

சதமுக அங்கி — நூறுமுகமுள்ள ஓர் ஆயுதம்
சதிர் — பெருமை
சதிர்த்தல் — சிறத்தல்
சதுமுகன் — நான்குமுகமுள்ள பிரமன்
சந்ததி — வரிசை, மரபு, குலம்
சந்தநெறி — வேதமார்க்கம்
சந்தம் — அழகு, வேதம்
சமணர் — ஜைநர்
சமம் — பக்தியின் ஓர் அங்கம்
சமயம் — மதம்
சமர் — போர்
சமாதி — பக்தியோகம்
சயம் — வெற்றி
சரண் — உபாயம், பாதம்
சரணநெறி — சரணாகதி
சரிதல் — மரித்தல்
சரிவு — தளர்தல்
சலம் — வாதத்தின் ஓர்வகைக் [குற்றம், தீயசெயல்
சற்று — ஸ்வல்பம்
சாக்கியர் — பௌத்தர்
சாகரம் — கடல்
சாடு — சகடம் (அசுரன்)
சாடுதல் — ஜயித்தல், உதைத்தல்
சாதகன் — அநுஷ்டிப்பவன்
சாதனம் — உபாயம்
சாய்தல் — தவறுதல்
சாயை — நிழல்
சார்தல் — அடைதல்
சார்வு — உபாயம், ஆதாரம்
சாரதி — தேர்ப்பாகன்
சாற்றுதல் — கூறுதல், வெளியிடு [தல்
சிகி — அக்நி
சிட்டர் — பெரியோர்
சித்தம் — மனம்
சித்து — சேதநம்
சிதைத்தல் — கெடுத்தல்
சிதைதல் — அழிதல்
சிதைவு — அழிவு, குறைவு
சிந்துதல் — கெடுதல்
சிந்துரவெற்பு } — ஹஸ்திகிரி
சிந்துராசலம் }
சிந்தை — மனம், நினைவு
சிலை — வில், கல்
சிற்றின்பம் — அற்பஸுகம்
சிறை — வரம்பு

சின் — அற்பவிஷயம்
சின்மதியோர் — அற்பபுத்தியுடை [யோர்
சினநெறி — ஜைநமதம்
சினம் — கோபம்
சீர் — குணம், பெருமை, சிறப்பு
சீர்மை — சிறப்பு
சீரங்கம் — கலப்பை
சீரை — துணி
சீலம்—பெருமை, எளிமை,குணம், நல்லொழுக்கம்
சுகதர் — புத்தர்
சுகலேசம் — அற்பஸுகம்
சுடர் — தீபம், தேஜஸ், ஞானம்
சுரர் — தேவர்
சுரவி — காமதேனு
சுருணை — ஓலைத்திரள்
சுருதி — வேதம்
சுருளுதல் — சுழல்தல்
சுவை — ஸாரம்
சுழிதல் — திரும்புதல்
சூரியர் — நித்யஸூரிகள்
சூழ்தல் — வளைத்தல்
செகுத்தல் — ஒழித்தல்
செகுதல் — ஒழிதல்
செம்மை — ருஜுத்தன்மை
செய்யாள் — பிராட்டி
செய்யோன் — சிவந்தவன்
செரு — போர்
செருக்கு — கர்வம்
செவ்வழி — சிறந்த வழி
செவ்வை — நேர்மை
செவி — காது
செவித்தல் — ஜபம்செய்தல்
செழுமதி — பூர்ணசந்திரன்
செற்றல் — ஒழித்தல்
செறிதல் — பொருந்துதல், வளித் தல், நிறைதல், அடர்தல்
செறிவு — சேர்தல், ஈடுபடுதல், வியாபித்தல்
சேண்மை — நெடுமை
சேதனை — ஞானம்
சேது — அணை, உபாயம்
சேமம் — க்ஷேமம், இன்பம்
சேமித்தல் — காப்பாற்றல்
சேவகம் — வீரம்
சேவடி — சிவந்த பாதம்
சேவல் — ஆண்பக்ஷி
சொலவு — பழமொழி

சோகதர் — பௌத்தர்
சோதனை — வேதவிதி
சோதி — ப்ரகாசம்
சோர்தல் — குறைதல், மறத்தல்
சோராது — விடாது

ஞ

ஞாலம் — உலகம்

த

தகர்த்தல் — ஒழித்தல்
தகவு — கருணை, குணம்
தகைதல் — தடுத்தல்
தசமுகன் — பத்துமுகராவணன்
தண்டு — கதையென்னும் ஆயுதம்
தண்மை — குளிர்ச்சி, தாழ்வு
தத்துவித்தல் — தாண்டுவித்தல்
ததும்பல் — தவித்தல்
தந்திரம் — சேனை, உபாயம்
தமனிநெறி — ப்ரஹ்மநாடிவழி
தமிழ்மறை — திவ்யப்ரபந்தம்
தரணி — பூமி
தரணிசுரர் — ப்ராஹ்மணர்
தரம் — பெருமை
தரளம் — முத்து
தரித்தல் — தாங்குதல், உஜ்ஜீவித்தல்
தருக்கம் — யுக்திவாதம்
தருணஅருக்கன் — இளஞ்சூரியன்
தருமம் — உபாயம், குணம்
தலம் — பூமி
தலை — முடிவு
தலைவாசல் — முதல்வாசல்
தலைவைத்தல் — தலைவணங்குதல்
தவநெறி — யோகமார்க்கம்
தவறு — அபராதம்
தவிர்த்தல் — ஒழித்தல்
தவிர்தல் — விடுதல், இழத்தல்
தழல் — அக்நி
தழைத்தல் — வளர்தல்
தளம் — இதழ்
தனஞ்சயன் — அர்ஜுநன்
தனம் — செல்வம்
தனயன் — புத்திரன்
தனிமை — ஒப்பற்ற தன்மை, உதவியற்ற நிலைமை
தனிவான் — சுத்தஸத்துவம், ஸ்வர்க்கம்
தனு — உருவம், வில்
தாக்குதல் — மோதுதல், இடித்தல்
தாதை — தந்தை
தாமம் — பாசம், ஸ்தாநம்
தாமரையாள் — பிராட்டி
தாமரையோன் — பிரமன்
தார் — மாலை
தாரகன் — கடத்துவோன், தரிப்பவன்
தாரகை — நக்ஷத்ரம்
தாரணி — பூமி
தாரணை — பக்தியோகத்தின் ஓர் அங்கம்
தாரம் — ப்ரணவம்
தாரு — கட்டை
தாரையறுதல் — இடைவிடுதல்
தாவளம் — வசிக்குமிடம்
தாவிடுதல் — தாவுதல்
தாவு — பற்றுக்கோடு
தாழ்தல் — தாமதித்தல், வணங்குதல்
தாள் — பாதம்
தானம் — ஸ்தாநம், அவற்பொரி
திக்கு — வழி
திகழ்தல் — விளங்குதல், பெருகுதல், சிறத்தல்
திகிரி — சக்கரம்
திங்கள் — மாதம்
திசைமுகன் — பிரமன்
திடர் — மேடு
திண்ணம் — நிச்சயம், திடம், உறுதி
திண்மை — திடம், வலிமை, மனவுறுதி
திணி — அடர்ந்த
தியக்கு — சோர்வு
திரங்குதல் — சுருங்குதல்
திரள் — கூட்டம்
திரிதல் — சுழலுதல்
திரு — பிராட்டி, அழகு
திருத்தம் — சீர்திருத்தம்
திருமகள் — பிராட்டி
திரை — அலை
திவம் — பரமபதம்
திறம் — விஷயம், ஸ்வரூபம், ஸ்வபாவம்
திறம்புதல் — நீங்குதல்
திறல் — பலம்
தினைத்தனை — தினையளவு, சிறிது
தீங்கு — கெடுதி
தீண்டுதல் — தொடுதல்
தீதல் — அழிதல், தீய்ந்துபோதல்
தீது — குற்றம்
தீயவர் — கொடியவர்
தீர்த்தல் — கண்டித்தல்

தீர்தல், தீர்வு — நீங்குதல்
தீவம் — தீவு
தீவினை — கொடிய கர்மம், பாபம்
துகள் — பொடி
துஞ்சல் — அஜ்ஞாநம்
துணித்தல் — துண்டித்தல்
துணிதல்- நிச்சயித்தல், தெளிதல்
துணிவு-உறுதி, மஹாவிசுவாஸம், ஜ்ஞாநம்
துணுக்கு — பயம்
துய்யன் — பரிசுத்தன்
துயர், துயரம் — துக்கம்
துரத்தல் — ஒழித்தல்
துரிதம் — பாபம்
துலங்குதல் — ப்ரகாசித்தல்
துலாம் — ஐப்பசி
துலை — ஸமம்
துலையுறுதல் — உபமானமாதல்
துவக்கம் — தொடக்கம்
துவக்கு — ஸம்பந்தம்
துழாய்முடியான் — எம்பெருமான்
துளக்கம் — மாறுபாடு
துளங்குதல்-உழலுதல், அசைதல், கலங்குதல்
துளவம் — துளஸி
துறத்தல் — விலக்கல், விடுதல், இழத்தல்
துறவறத்தோர்-ஸந்யாஸிகள்
துறவறம் — நிவ்ருத்திதர்மம்
துறவி — வறுமை
துறை — உபாயம், வழி
துன்னுதல் — பொருந்துதல், மிகுதல்
துனி — துர்த்தசை
தூமறை — பரிசுத்தமான வேதம்
தூயவர், தூயோர் — பரிசுத்தர்
தூலம் — பஞ்சு
தெங்கு — தென்னை
தெருள் — விவேகம்
தெழித்தல் — ஒலித்தல்
தெளிவிசும்பு — பரமபதம்
தென்னன் — பாண்டியராஜன்
தேசு — ப்ரகாசம், பெருமை
தேர்தல் — தெளிதல்
தேவகுரு — ப்ருஹஸ்பதி
தேவு — தெய்வம்
தேறுதல் — தெளிதல், நிச்சயித்தல்
தேனநெறி — திருட்டு வழி
தேனவேதியர்—தேனம்பாக்கத்து அந்தணர்
தொகை — எண்
தொடி — கைவளை
தொடை — சாஸ்த்ரம், பாசுரம்
தொத்து—ஸம்பந்தம், தொடர்ச்சி
தொல் — அநாதி

ந

நகைசெய்தல் — பரிஹஸித்தல்
நச்சுதல் — விரும்புதல்
நடம் — நடனம், நாடகம்
நடலம் — தோஷம்
நடை — மார்க்கம், ப்ரகாரம்
நண்ணுதல்—நெருங்குதல், அடைதல், பொருந்துதல், எதிர்ப்படுதல்
நண்ணுவித்தல் — சேர்த்தல்
நணுகுதல் — அடைதல், ஒன்றிக் கலத்தல்
நந்துதல் — அவிதல், அழிதல்
நம்பர் — உயர்ந்தவர்
நயத்தல் — விரும்புதல்
நயம் — நன்மை, பலன்
நயனம் — கண்
நல்குதல்-விரும்புதல், அருள்புரிதல்
நலம் – ஆநந்தம், நன்மை, பெருமை
நலிதல் — துன்புறுத்தல்
நலிவு — துன்பம்
நவிலுதல் — கூறுதல்
நழுவுதல் — பிரிதல்
நள்ளிருள் — அடர்ந்த இருள்
நளி — குளிர்ந்த
நறவு — தேன்
நறை — வாஸனை, தேன்
நன்றி — நன்மை
நாகணை — சேஷசயனம்
நாகநகர் — தேவலோகம்
நாகம் — பரமபதம், தேவலோகம், யானை
நாகமலை — ஹஸ்திகிரி
நாடுதல் — தேடுதல், பற்றுதல், விரும்புதல், அநுஸந்தித்தல்
நாண் — அஹங்காரம்
நாணுதல் — வெட்குதல்
நாமங்கை — ஸரஸ்வதி
நாயனார் — நாயகர்
நாவணங்கு — ஸரஸ்வதி
நாறுதல் — மணத்தல்
நான்முகன் — பிரமன்
நானிலம் — பூமி
நிகமாந்தம் — வேதாந்தம்

நிகர் — ஒப்பு
நிதி — புதையல்
நியமம்-பக்தியோகத்தின் ஓரங்கம்
நிரை — வரிசை, பசுக்கூட்டம்
நிரைத்தல் — வரிசையாய் வீசுதல்
நிலை — நிஷ்டை, ஸ்வரூபம், ஸ்வபாவம், அநுஷ்டாநம், உபாயம், கைங்கர்யம், உறுதி, ஸ்தாநம், மார்க்கம், நிலைத்திருத்தல், குணம், ப்ரகாரம், நிலைமை
நிலைபெறுதல் — உஜ்ஜீவித்தல்
நிறுத்தல் — வியவஸ்தை செய்தல், [சீர்தூக்கல்
நிறை — பெருமை
நிறைகை — நிரம்புதல்
நிறைத்தல் — பூர்த்திசெய்தல்
நிறைமதியோர் — பூர்ணஜ்ஞாநமுடையவர்
நிறைவு — பூர்த்தி
நினைவு — ஸ்ம்ருதி
நீசன் — அற்பன்
நீடுறைதல் — நெடுநாள் வாழ்தல்
நீதிநெறி — ஸந்மார்க்கம்
நீர் — ஜலம், தன்மை
நுகர்தல் — உண்ணுதல்
நுடங்குதல்—அசைதல், துவளுதல்
நுண்மை — கூர்மை
நூல் — சாஸ்த்ரம்
நெடியவர் — உயரமானவர்
நெடும்பயன் — பெரிய பலன், மோக்ஷம்
நெடுமால் — எம்பெருமான்
நெடுமை — உயர்வு, மிகுதி
நெறி — உபாயம், வழி
நேயன் — நண்பன்
நேர்மதி — ஸூக்ஷ்மபுத்தி

ப

பக்கணம் — வேடச்சேரி
பகட்டு — ஆடம்பரம்
பகட்டுதல் — மயக்குதல்
பகர்தல் — கூறுதல்
பகலோன் — ஸூர்யன்
பகவர் — பாகவதர்கள்
பகை — விரோதி
பகைப்புலன் — போர்க்களம்
பங்கயத்தாள் — பிராட்டி
பங்கயத்தோன் — பிரமன்
பங்கயம் — தாமரை
பசும்பொன்-மாற்றுயர்ந்த பொன்
பட்டநாதன் — பெரியாழ்வார்
பட்டயம் — ஒருவகை வாள்
படி — வகை, பூமி
படிதல்—பொருந்துதல், தங்குதல், ஈடுபடுதல், அழுந்துதல்
படிவித்தல் — ஈடுபடச்செய்தல்
படிவு — ஈடுபாடு
படுதல் — அழிதல்
படை — ஸேனை, ஆயுதம்
பண் — இசை
பண்டு — முன்பு
பண்டை — அநாதி
பண்ணுலகு — ஸங்கீதலோகம்
பண்பு — சிறப்பு, ஸ்வபாவம், முறை
பணி — கைங்கர்யம்
பணிதல் — சரணமடைதல்
பணிதி — வாதம்
பணிலம் — சங்கு
பத்தர் — பாகவதர்கள்
பத்தி — பக்தி, அன்பு
பதம் — ஸ்தாநம்
பதவி — உபாயம்
பதி — ஆதாரம், க்ஷேத்ரம், இடம், ஸ்திரம்
பந்தம் — கர்மபாசம்
பந்தனம் — பிணித்தல்
பயத்தல் — ஸ்ருஷ்டித்தல்
பயிலுதல்—பரிசயம்செய்தல், கூறுதல், ஈடுபடுதல், அநுஸந்தித்தல், அநுபவித்தல்
பரகாலன் — திருமங்கையாழ்வார்
பரஞ்சுடர் — உயர்ந்த தேஜஸ்
பரத்தல் — பரவுதல்
பரத்துவம் — மேம்பட்ட தன்மை
பரம் — பொறுப்பு, கடமை
பரமன் — எம்பெருமான்
பரவாதியர் — ப்ரதிவாதிகள்
பரவுதல் — துதித்தல், சிறக்கப்பெறுதல், அநுஸந்தித்தல்
பரன் — உயர்ந்தவன்
பரி — குதிரை
பரிதல் — அன்புவைத்தல்
பரிதி — ஸூர்யன், பிரகாசம்
பரிமுகர் — ஹயக்ரீவர்
பரிவு — அன்பு
பவம் — ஸம்ஸாரம்
பவி — வஜ்ராயுதம்

பவித்ரம் — பரிசுத்தம்
பழுதாக்குதல் — வீணாக்குதல்
பழுது — குற்றம்
பள்ளி — படுக்கை
பற்பு — தாமரை
பற்று — ஆசை, உரிமை, உபாயம், கைக்கொள்ளல், கதி
பறைதல் — வெளியிடுதல்
பன்னுதல் — சொல்லல்
பா — பாசுரம்
பாக்கியம் — அதிருஷ்டம்
பாங்கு — நேர்மை
பாசண்டர் — நாஸ்திகர்
பாஞ்சாலி — த்ரௌபதி
பாதமிசைப் பிறந்தோர் — பகவானுடைய பாதத்திற் பிறந்த நான்காம் வருணத்தினர்
பாதாதிகேசம் — திருவடிமுதல் திருமுடிவரை
பார் — பூமி, பருமை
பார்த்தன் — அர்ஜுனன்
பாரம் — கரை
பாவித்தல் — அநுஸந்தித்தல்
பாற்கடலோன் — எம்பெருமான்
பாற்றுதல் — ஒழித்தல்
பாறுதல் — அழிதல்
பிச்சு — ப்ரமம்
பிடி — பெண்யானை
பிணக்கு — விரோதம்
பிணி — தீங்கு, நோய், பந்தம்
பிணைத்தல் — ஒன்றுசேர்த்தல்
பிணைதல் — சேர்தல்
பித்தி — சுவர்
பிரமபுரம் — சரீரம்
பிரான் — ஸ்வாமி, உபகாரி
பிரித்தல் — வேறாக்குதல்
பிருதானம் — பிருந்தாவனம்
பிழை — அபராதம், குற்றம், பாபம்
பிறவித்துயர் — ஸம்ஸார துக்கம்
பின்னபாகம் — தனிச்சமையல்
புகல் — உபாயம், இருப்பிடம், [புகழ்
புகலுதல் — கூறுதல்
புடவை — ஆடை
புண்டரீகம் — தாமரை
புணர்த்தல் — படைத்தல், கல்பித்தல், செய்தல், அடைவித்தல்
புணர்ப்பு — கார்யம்
புந்தி — மனம், புத்தி
புயம் — கை
புரளுதல் — அகலுதல்
புராணம் — அநாதி
புராணன் — அநாதிபுருஷன்
புருடன் — ஜீவன்
புலம்பல் — வருந்தாதே
புலன் — இந்த்ரியம், விஷயங்கள்
புவனம் — உலகம்
புவியோர் — உலகினர்
புள் — பக்ஷி
புறம் — வேறு, அயல், வெளி, பிறமதம்
புன்மை — அற்பத்தன்மை
புனல் — ஜலம், நதி
புனிதம் — பரிசுத்தம்
புனைதல் — தரித்தல்
பூசுரர் — அந்தணர்
பூதபதி — சிவன்
பூமகள், பூமங்கை — பிராட்டி
பூமறையோன் — பிரமன்
பூரித்தல் — பூர்த்திசெய்தல்
பூவன் — பிரமன்
பெடை — பெண்பட்சி
பெருஞ்சோதி — ஸ்வாதிநக்ஷத்தி [ரம்
பெருவான் — பரமபதம்
பேணுதல் — அன்புகொள்ளல் [கொண்டாடுதல்
பேர் — புகழ்
பேர்தல் — நீங்குதல்
பேரின்பம் — மோக்ஷம்
பேறு — பலன், புருஷார்த்தம்
பொங்குதல் — வளர்தல், எழும்பு [தல்
பொதிதல் — மூடுதல்
பொய்ம்மதி — அஜ்ஞானம்
பொரல் — சண்டையிடுதல்
பொருங்கருவி — போர்செய்யும் ஸாதனம்
பொருத்தம் — தகுதி
பொருநல் — தாம்ரபர்ணி நதி
பொருள் — செல்வம், தத்துவார்த்தம், ஸித்தாந்தம், புருஷார்த்தம், ஸாரம்
பொல்லாங்கு — தோஷம்
பொழிதல் — பெய்தல்
பொழில் — சோலை
பொறி — இந்த்ரியம்
பொறை — பொறுமை
பொன்மாது — பிராட்டி

பொன்வெற்பு — மேருமலை
பொன்றுதல் — அழிதல்
பொன்னுலகு — ஸ்ரீவைகுண்டம்
போதம் — ஜ்ஞாநம்
போது — புஷ்பம்
போற்றுதல் — துதித்தல்
பௌவம் — கடல்

ம

மகம் — யாகம்
மகரம் — மீன்
மகுடம் — கிரீடம்
மங்குதல் — கெடுதல்
மஞ்சு — மேகம்
மட்டு — தேன், எல்லை
மடல் — காது
மடிகோலுதல் — துணியை வரிந்து கட்டுதல்
மண் — பூமி
மண்டுதல் — ஈடுபடுதல், மிகுதல்
மண்ணவர் — பூவுலகினர்
மண்ணுதல் — கழுவுதல்
மண்மகள் — பூமிதேவி
மணி — ரத்நம்
மணிவண்ணன் — எம்பெருமான்
மத்தன் — மகாரார்த்தமாகிய ஜீவன்
மதகரி, மதகளிறு — மதயானை
மதம் — கொள்கை, கர்வம்
மதலை — குழந்தை, தூண்
மதன் — வளம்
மதி — சந்திரன், ஞானம், புத்தி
மதிகேடன் — அறிவுகெட்டவன்
மதியம் — சந்திரன்
மது — தேன், அமுதம்
மதுரம் — இனிமை
மயக்கம் — அஜ்ஞாநம்
மயர்ந்தமை — அறியாமை
மயல் — அஜ்ஞாநம், பக்தி, மயக்கம்
மரக்கலம் — ஓடம்
மரு — பாலைவனம்
மருத்து — வாயு, ப்ராணவாயு
மருவலர் — விரோதிகள்
மருவிடம் — வசிக்குமிடம்
மருவுதல் — அடைதல், நெருங்குதல், கலத்தல், பொருந்துதல்
மருள் — அஜ்ஞாநம்
மருற்கதி — வாயுவேகம்
மல் — பலம்

மலர்மகள், மலர் மாதர், மலராள் — பிராட்டி
மலரோன் — பிரமன்
மலிதல் — மீறுதல், ஒன்றுகூடுதல், ஹிம்ஸித்தல், மிகுதல், நிறைதல்
மலைதல் — போர்செய்தல்
மழு — கோடரி
மழை — குளிர்ச்சி
மறநிலை — பாபநிலை
மறநெறி — பாபமார்க்கம்
மறம் — பாபம்
மறித்தல் — திருப்புதல்
மறிப்பு — வளைத்துவசப்படுத்தல்
மறு — குற்றம்
மறுமாற்றம் — எதிர்வாதம்
மறை — வேதம், இரகசியம்
மறைமுடி, மறையந்தி — வேதாந்தம்
மறையவர் — வேதாந்திகள்
மறையுச்சி — வேதாந்தம்
மன் — மன்னன், திடம், மிகுதி,
மன்னுதல், — திடமாதல், நிலைபெறுதல், பெறுதல், பொருந்துதல்
மனு — மந்திரம்
மா — பெருமை, குதிரை
மாகம் — ஆகாசம்
மாசு — குற்றம்
மாடு — செல்வம்
மாதவம் — பெரிய தவம், சரணகதி
மாந்தர் — மனிதர்
மாய்தல் — ஒழிதல்
மாயக்கூத்தன், மாயவன், மாயன் — அதிசயச் செய்கையன்
மாயாமதம் — அத்வைதமதம்
மாயை — மூலப்ரக்ருதி
மாயோர் — வஞ்சகர்
மாயோன் — அதிசயச் செய்கையுடையவன்
மாரி — மழை
மாருதம் — காற்று
மால் — எம்பெருமான், பக்தி
மாளுதல் — அழிதல்
மாற்றுதல் — அழித்தல், கண்டித்தல், விலக்குதல்
மாறன் — நம்மாழ்வார்
மாறு — பகைவன்
மாறுதல் — அழிதல்
மான் — மஹான் என்னும் தத்துவம்

மானம் — ப்ரமாணம், அளவு
மானவர் — மனிதர்
மிக்கோர் — பெரியோர்
மிகை — அதிகம்
மிசைவித்தல் — ஊட்டுதல்
மிண்டர் — முரடர்
மிண்டு — விதண்டாவாதம்
மிறை — குற்றம்
மீளுதல் — திரும்புதல்
மீனவன் — மன்மதன்
முக்கியம்-முகத்தில்ஸஞ்சரிக்கின்ற
முகம் — வகை
முகவாசம் — முகத்திற்கு மணம் தருவது
முகில் — மேகம்
முகிழ்த்தல் — மயிர்க்கூச்செறிதல் தோன்றுதல், சுருங்குதல்
முசலம் — உலக்கை
முட்ட — முழுவதும்
முட்டர் — மூடர்
முடி — கிரீடம்
முடிதல் — அழிதல், தோன்றுதல்
முடியோன் — கிரீடி (அர்ஜுநன்)
முடிவாச்சிரமம்-ஸங்யாஸாச்சிரமம்
முடுகு — விரைவு, தோஷம்
முத்தி — மோக்ஷம்
முதல் — காரணம்
முதலாச்சிரமம் — ப்ரஹ்மசர்யம்
முதுமை, முந்தை — அநாதி
முயலம் — உலக்கை
முற்கரம் — சம்மட்டி
முறிதல் — தொலைதல்
முன்னிலை — முதல் ஸ்தானம், எதிரே நிற்றல்
முனிவு — கோபம், வெறுப்பு
முனை — கூர்மை
மூட்டுதல் – அநுஷ்டிக்கச்செய்தல்
மூலம் — வேர், காரணம்
மூலவெழுத்து — ப்ரணவம்
மூளுதல் – செய்யத்தொடங்குதல், விருத்தியடைதல், தீவ்ரமாய்க் கொள்ளல்
மெய் — உருவம், ஸத்யம், சரீரம்
மெல்லியல்– மென்மையுடையவள்
மேதினி — பூமி
மேயம் — அறியப்படும்பொருள்
மேயவன் — வஸிப்பவன்
மேவுதல் — சேர்தல், ஊற்றமடைதல், பொருந்துதல், அன்புடன் செய்தல், ஒப்பாதல், அங்கீகரித்தல்
மை — குற்றம், கருமை
மைந்தன் — புத்திரன்
மையல் — அஜ்ஞாநம்
மொக்குள் — நீர்க்குமிழி
மொய்கழல் — வலிய பாதம்
மொய்த்தல் — நெருங்குதல்
மொழி — பாஷை, மந்த்ரம்
மௌலி — முடி

வ

வகுத்தல் — பிரித்தல்
வகுப்பு — அமைப்பு
வகை — உபாயம், வகுப்பு
வகைசெய்தல் – பிரித்துக்காட்டல்
வசுதை — பூமி
வஞ்சியர்கோன் — குலசேகராழ்வார்
வடம் — ஹாரம்
வண்ணம் — அக்ஷரம்
வண்ணிக்கை — வர்ணித்தல்
வண்ணிகை — வேஷம்
வண்மை–கொடை, சிறப்பு, அழகு
வம்பு — வாசனை
வம்மின் — வாருங்கள்
வயனம் — வேதம்
வரிசை — ப்ரகாரம்
வரித்தல்–சரணமடைதல், ஸங்கல்பித்தல், ஏற்றல், பற்றுதல்
வரிதல் — மூடுதல்
வருணம் — ஜாதி
வரை — மலை
வலம் — பலம், ஊர்வலம்
வலம்புரி — வலம்புரிச்சங்கு
வலி — பலம்
வழக்கு — விவாதம், செய்கை
வழங்கல் — கொடுத்தல்
வழி — உபாயம், மார்க்கம்
வழிப்படுத்தல் — பயணப்படுத்தல்
வழிமொழிதல் — பின்மொழிதல் தழுவிக்கூறல்
வழுவு — குற்றம்
வள்ளல் — கொடையாளர்
வளம் — செழுமை, பெருமை
வளை — கைவளை, சங்கு
வன்பு — பாபம்

வன்மை — திடம்
வாங்குதல் — விலக்குதல்
வாசகம் — ஸூக்தி, உபதேசம்
வாசம் — வாஸனை
வாசவன் — இந்திரன் [குதிரை
வாசி — தாரதமியம், சிறப்பு,
வாசித்தல் — வாஸனைமிகுத்தல்
வாதநெறி — வாதமார்க்கம்
வாமோதரம் — இடவயிறு
வார்தல் — பொழிதல்
வாரணம் — யானை
வாரி — ஜலம்
வாரிதி — கடல்
வாழ்வு — செல்வம்
வான் — ஆகாயம், ஸ்வர்க்கம், பரமபதம், ப்ரக்ருதி, வலிமை, சிறப்பு
வானம் — ஸ்வர்க்கம், பரமபதம்
வானவர், வானோர்—தேவர், நித்ய
வானுலகு — பரமபதம் [ஸூரிகள்
விக்கிரமம் — வலிமை
விகடம் — மேடுபள்ளம்
விகற்பம் - பல்வகை, முரண்பட்ட அம்சம்
விசயன் — அர்ஜுநன்
விடம் — விஷம்
விடவி — மரம்
விடுத்தல் — ஒழித்தல்
விடை — காளை [பரமபதம்
விண் — ஆகாயம், பிரமலோகம்,
விண்ணவர் — நித்யஸூரிகள்
விண்ணுலகு — பரமபதம்
வித்தகன் - அதிசயச் செய்கையன்
விதி — கட்டளை, பாக்யம், ஸுக்ரு
விதிர்விதிர்த்தல்—நடுங்குதல் [தம்
வியத்தல் — அதிசயித்தல்
வியப்பு, வியன் — ஆச்சரியம், விலக்ஷணம்
விரகு — ஸாதநம், உபாயம், சாமர்த்தியம்
விரித்தல் — விளக்குதல்
விருகம் — மிருகம்
விருத்தம் — விபரீதஜ்ஞாநம்
விரை — வாஸனை
விலக்கு — விரோதம், தடை
விலக்குதல் — கண்டித்தல்
விலங்கு — குறுக்கு வழி
விலை — தனிக்காரணம்

விழா — உத்ஸவம்
விழி — கடாக்ஷம்
விள்ளுதல் — வெளியிடுதல், விலகல்
விளக்கம் — ஜ்ஞாநம்
விளம்புதல் — சொல்லுதல்
விளித்தல் — கனைத்தல்
விளைத்தல் — உண்டாக்குதல்
விளைவு — பலன்
விறல் — வீரம்
வினதை சிறுவன் — கருடன்
வினை — செய்கை, கருமம்
வினையர் — கர்மவசர்
வினைவழி — பாபமார்க்கம்
வீடு — மோக்ஷம்
வீடுசெய்தல் — மோக்ஷமளித்தல்
வீணர் — பயனற்றவர்
வீதல் — அழிதல்
வீழ்வு — விருப்பம்
வீறு — பெருமை, சக்தி
வெஞ்சொல் — கொடிய சொல்
வெம்மை — உஷ்ணம், கொடுமை
வெருவுதல் — அஞ்சுதல்
வெருவுரை — பயவார்த்தை
வெவ்வுயிர்த்தல் — உஷ்ணமாக மூச்சுவிடுதல்
வெள்குதல் — கூசுதல், வெட்க
வெளி — தேஜஸ் [மடைதல்
வெளிகாட்டல் — பிரகாசிக்கச்
வெற்பு — மலை [செய்தல்
வெறி — வாஸனை
வெறிநிலை — அஜ்ஞாநதசை
வெறுமை — இல்லாததன்மை,
வேண் — விருப்பம் [வீண்தன்மை
வேண்டுரை — ப்ரார்த்திக்கும் சொல்
வேதகம் — த்வயம்
வேதி — யாகவேதி
வேதியர் — வேதாந்திகள், ஆசார்யர்கள்
வேந்தன், வேந்து — அரசன்
வேயர் — வேயர்குலத்தோர்
வேலை — கடல்
வேழம் — யானை
வேள்வி — யாகம்
வைதிகம் — வேதவிசாரம்
வைப்பு — புதையல்
வையகம், வையம் — உலகம்

श्रीः

श्रीमते निगमान्तमहादेशिकाय नमः

ஸ்ரீதேசிகப்பிரபந்தம் — பிரதிபேதங்கள்

[இதுகாறும் வெளிவந்த பல பதிப்புக்களிலும் ஏட்டுப்புத்தகங்களிலும் உள்ள பிரதிபேதங்கள் கீழே கொடுக்கப்படுகின்றன. இவற்றில் தளைவழு, சீர்சிதைவு, எழுத்துமிகுதி, எழுத்துக்குறை, பொருள்பொருந்தாமை முதலிய பல குற்றங்கள் நிறைந்த பாடங்களும் உள்ளன.]

[கீழ்வரும் எண்கள் முறையே பாசுரம், அடி, சீர் இவற்றின் எண்களைக் காட்டுவன.]

1	3	3	மாற்றிநஞ்
	4	3	ருற்சதிர்க்
		4	குந்நெறி
6	4	4	பணிந்தவ }
		5	ரெண்ணுதற்கே }
8	2	8	டீர்த்தோ
	4	3	விகழ்ந்தோஞ்
		6	டென்றினிநா
10	1	5	மசித்துமென்னும்
11	2	5	நாம்வென்று
	3	6	றிறையுருவாந்
12	3	1	மோரார்
	4	2	பதியணைந்தார்
			பதியணைவார்
13	4	3	ளாருயிர்க்
19	3	2, 3	குரைத்தேனிங்
		6	புகுராத [கிருந்த
20	2	1	தாக்கிய
22	1	4	றேவன் }
		5	கருத்துரைத்த }
	2	2	யருட்பொருள்
	3	4	டொன்றும்
	4	4	காத
23	1	2	லாத
		5	தடைந்த
		8	மறைபோற்
	3	4	திதுவென்
		8	யடையும்
4	3	5	றுத்தினருடந்துகந்த
24	3	4	நாரண }
		5	ஞருடம்பாய்ச் }

25	1	2	பதுமன்றி }
		3	யானென் }
		4	பதுமன்றித் }
26	3	2	யொன்றுமில்
		5	ருஞ்சுருதிச்
	4	1	சொல்வினை
		5	சிறந்தனரே
27	1	3	மடிசூடி
28	1	5	கொடுந்துயர
	2	1	முடன்மிசை
	3	1	கடன்மிசை
		2	கண்டவை
		3	தானத்
		5	போர்த்தபொன்
29	2	3	பாடண்டர் [னூன்
	3	5	ரெண்டிசையாற்
	4	4	மருந்துமத்
			மறிந்தவத்
30	4	2, 3	மனத்தரி, தாகிய
			மறுத்த, லரிதாய
			மனத்தி, லரிதாகி
		4. 5	நின்றன
33	1	2	லடியிணையைத்
		3	திண்சரணு }
		4	கக்கொண்டு }
	3	2	லுருளாத
34	2	1	கீர்க்குங்
		5	லிணையடியைப்
	3	4	னன்னிலை
35	2	2, 3	ரணன்சர ணேசர
36	1	1	மற்றோர்

36	2	4	மற்றும்
	3	2, 3	விண்ணவ ரொன்ற
37	3	1	கல்லார் [விரை
	4	2	லினியொருக்
38	3	3	மருந்தமு
39	1	5	லங்கு
45	1	3	யென்னநற்
	2	3	குமவை
	3	3	விள்ளமுயன்
47	3	5	விழுந்துழலா
48	1	2	திவையென்னு
49	2	2	றிலாவகை
	4	3	யோமென்று
50	4	3	யென்மனங்
53	4	3	வீடிடை
54	3	3, 4	வினைமாய்த்துதலின்
56	3	3	வண்டக
57	2	2	துணியிற் [றிருக்கும்
	4	2-4	துயர்செகுவீரென்
59	1	4	ரிறையெனும்
	3	3	வென்றுநம்
62	4	2	நிறுத்தி
64	2	3	வண்சர
	3	5	துறந்திடினு [வர்க்கு
66	2	3-5	ஶ்ரீபாதாமரங்கரடிய
67	3	3	கோமான்பிர
68	3	2	கவர்ந்து
70	1	2	நன்பரன்
		4	யென்னு
71	2	2	தரஞ்செய்த
	3	2	யறிந்தன
72	3	2-4	கிடந்திடத்தாமள
73	1	1	உயர்ந்தநங் [வென்ன
	3	1, 2	பயந்தவங் நாரணன்
		4	சேர்ந்த
74	1	3	யிசைந்தரு
76	2	2	றிறையவ
		4	பூண்டிட
77	4	3	சத்தல்ல
78	2	1	றன்பெற்ற
79	2	2	றவர்க்குக்
	4	5	முழுத்திருவே
80	2	1, 2	...வாண், மறைவாக
81	1	6	னயோத்திமன்னர்க்
	2	1	ருேராத
83	1	4, 5	மிற்றனுவு யர்த்த
	2	1	லத்திறவ
84	4	3	டெட்டெனுங்

84	4	6	லனவுமெட்
85	2	4	வர்க்காய்
		5	மன்னவர்க்குத்
86	4	3	பொறுப்பே
87	1	6	மென்வசமா
	2	4	மக்குச் [விரைந்து
88	1	6	தான்வருந்தி, தான்
	2	1	னென்னினைவை
		7	றென்னை
	3	2	யான்முயன்ற
89	4	4	காட்டுமிம்
90	1	4	றுணர்ந்தன
		6	முடையவொரு
		11	லூடுற்
		11	லோடொத் }
		12	துகின்றன }
	2	2, 3	முறியவிரு தாநத்
	3	14	நகர்முருகர்
	4	12	தொடர்ந்தன
		15	மாண்மெய்ப்
91	2	8	நம்மை
	3	8	தோர்வார்
92	3	4	பாலென்
93	2	4	மெங்கண்
94	1	2, 3	ளமர்ந்த வர்க்கும்
	1	5	வருமிங்நிலைக
95	4	4, 5	மாதென் னெழின்
96	3	5	கண்டடைவே[மதியே
98	2	5	யாட்படுத்தத்
	4	3	வேனென்று
100	2	2	நெறியில்லா
		6	லேற்றியுயர்
	3	6	வகைபூணப்
101	1	3	வொருவர்க்
		4	தீர்ப்புங் [மையு
		5, 6	துய்யவர்கட் காண்
	4	2	மடைக்கலமாங்
104	1	4, 5	தார்க்குமின்னடிமை
	4	1	யென்னைநய [க்குத்
105	2	4, 5	வர்க்காய் மன்னவர்
106	1	1	தூய
		5	துணையிலியென்
	3	3	காவனீ
108	2	5	முகுந்தனிசைந்
		7	வைந்தா
	3	6, 7	முன்னேதான் ருழ
109	4	2	சுரபிகள்
110	1	5	சொல்லுகின்றேன்

110	2	3	மிராக்கதற்
111	1	4	ரூர்க்கு
		8	ரூர்க்கு
	4	4	றென்று
112	4	4, 5	மாறென்கொல்செய்
113	3	5	னின்றநிலை [திடிலே
116	1	4	நிற்க
		5	விடர்பிறப்பொன்
		8	யன்பாற் }
	2	1	றிடம்பற்ளு }
		3	சரிந்தான்
		6	செறியும்போ
	3	2	னுபலம்போற்
		6	நினைத்துயர்ந்த
	4	2	னுடல்வாழ
117	2	5	திண்ணிருளாற்
	4	5	போமடைவே
119	2	3	யமுனைத்
120	1	5	பொன்கழலா
121	1	6	திணியிருளாங்
	2	1	பார்க்கடலோன்
		8	கின்ளுன் }
	3	1	நீர்க்குமரக் }
		2, 3	கலமன்ன விறைவ
		7	விகழ்ந்தொ
122	1	2	வரையனைத்துங்
		6	கௌத்துவத்தின்
	3	4	தெல்லா
123	1	3, 4	மறிந்த, பேர்க்கு
124	1	5	ரொளியிணைக்குங்
125	1	8	செய்த [ரொளியனைய
	3	7	தலைமே
126	3	3	யெமக்குத்
	4	2	வினியெமக்கோர்
127	4	1, 2	தரவந்தெமக்கரு
128	3	7	மூண்டரைச்,
		8, 9	சருவிலாரெ, செரு
		13	வெதி [விலாரெ
	4	9	வால
129	4	3	கவடி
130	2	6	கருத்துறநான்
	3	5	குரவை புணர்
131	1	7	டவனென்
132	3	1	வீண்பெரிய
	4	1	நாம்பெரியோ
133	1	2	ளரசிலு
		4	மாட்டிலு
	2	2	தன்னிலுங்
133	2	4	யுள்ளு
134	1	4	முயன்று
	2	5	நாடியதோ
137	3	7	றமுந்து
	4	2	படியின்றே
		7	றக்க
138	3	5	கட்டமெண்ணும்
139	2	6	வடமற்றுத்
		8	ளுகு
		4	தீர்ந்தவர்
141	3	5	வெறித்துளப
	4	6	பதமொன்றே
142	2	2, 3	பெருகிய யோகின்
143	1	5	மற்றுள்ள
144	1	4	ளுறைகின்ற
		5	யோகிகளை, யோகிதனை
	2	1	நறுமட்
		2	டெழிலுற்ற
		5	நாயகனுர் }
	3	1	நிறைமட் }
		5	நினைத்துடலச்
	4	5	செப்புவமே
145	2	2	முயிரிற்சேர்த் [தா
146	1	4, 5	சேர்ந்திட, வந்தவர்
	2	1	மிருளார், மருளாற்
	3	3	நடக்கவிம்
	4	4	லாற்றின்றன் }
		5	சூழ்ச்சியிலே }
147	1	8	வர்க்கு
	4	4	மற்ற
	4	3	யாலேறு
149	2	5	வைசந்தி
151	2	5	காட்டுத்தீ
	3	3	மாந்தர்
152	1	4	ளும்பி
		6	பயனிகழ்ந்து
153	1	8	பூண்டு
154	1	3, 4	துளிலங், குமறு
155	2	6	கழ்ந்த
		8	னைத்தினர்
	4	2	லன்றி
156	1	1	பொருளுரைக்
	2	5	தம்முடையா
	3	2	கும்மிவை
158	1	4	தன்பூண்ட
	4	3	தவழுக்
161	3	3	காட்டுநங் [துமினே
	4	4, 5	ரேமுள்ளே யெழு

162	4	5	ளியம்பினரே
165	2	3	திலஃதெனிற்
	3	3	காட்டும
	4	4	யதரின்று
		4, 5	யதரென், றுறுமுவ
166	3	6	பலரல்லாத் [தே
	4	5, 6	காணுதொன்றில
			[தென்று
167	2	5	பௌத்தர்களி
	3	5	யிதன்றென்றும்
168	1	3	யென்னு
		6	யிலையென்னும்
	2	8	யென்னும்
170	4	6	றிரிந்திவனென்
		7	கத்து [ருங்
172	4	1, 2	தலையில்லாக்காலூ
173	2	1	னேண்கொண்
	3	3	யார்சேர்ந்து
		5	நிற்குமென்று
174	3	2	யுடல்குறித்து
			யுடல்குறிது
	4	5	சேவகப்பத்
		6	துடனேநாஞ்
		7	சிதைத்திட்
176	1	1, 8	பிறிவில்லா;மென்ற
177	1	3	தன்சொல்லே
178	4	7, 8	சிதைக்கின்றேமே
179	1	1	ஐகாந்
180	3	2	பசுவ;மவ
	4	6	யறிந்திடநா
182	2	4	டன்ஞு
	3	6	பகடமிக்கப்
		8	பொய்யாய்ச்
	4	1	சிலகத்துச், சிலகத்
		4	கில்லார் [துஞ்
183	1	4	லாற்கண்டு
184	2	1	போகமற்ற
		2	புலம்போலக்
		1	போகமற்று
		2	பலம்போலக்
	3	1	மாகமுற்ற
	4	6	ரென்றலற்றல்
			ரென்றலத்தல்
185	3	2	மிகழ்ந்தொரு
186	3	5	துயரில்லாக்
187	1	3	குமில
188	2	3	மிகழ்ந்து
189	3	5	முத்தியென்றும்

190	2	1	பாசமென்றும்
		4	லென்னும்
	4	1	ஞசமில
192	3	3	பயனுஞ்
	4	5	கோகனதத்
		8	கூறே
193	1	4	யென்றுஞ்
194	2	5	கதுவியஞ
		6	யதின்பலத்தைக்
	3	2	யணுகாத
195	2	6	போகமுத
	4	6	தவமுநீர்
196	1	3	றும்யாவர்க்
			றும்மெவர்க்
	4	2, 3	பஞ்சரா த்ரம்முக
197	1	5	பொன்னடிய
		6	ரளந்திருவர்
		8	நின்று
	2	6	நன்னிதியர்
	3	3	நிரைபோல்
198	1	3	நானென்
	4	4	ருந்தரஞ்
199	3	8	மண்ண
200	4	5	நாரணர்க்கே
		7	நல்கு, நண்ணு
207	1	9	தெளிபணில
		14	முசலந்திரி
			முசலந்த்ரி
	2	9	மணியுமரு
		10	கணையுமல
		11	வாமென்ற
			வாமன்ன
	3	6	ரர்கொணர்ந்த
		8	றந்தலும்
		9	வளரணி
		10	மணிகண்மின்ன
	4	2	மதியுமிழு
		13	திருசுதரி
209	2	7	யுகந்து
		6	விரதத்தில்
	4	6	குறிப்பாகக்
210	2	3	திருமாமகளைப்
	3	3	றும்வியப்பாக
		4	விருதோதும்
	4	3	யிவ்வண்ணம்
			யவ்வண்ணம்
216	1	4, 5	மிற்றனுவுயர்த்த
	2	1	லத்திறவ

217	1	3	சேர்த்த
	2	3	வருணத்
	3	1	முண்மையுடை
		2	வாசியொளி
218	2	2	கேள்வனைநாங்
219	2	12	ருக்க
223	4	1	மருவிலர்க்கு
		3	மாயோன்
224	3	7	வந்தார்
225	1	1, 2	திருபரிதி சைந்த திருபரிதி யிசைந்த
		9	குழல்களி
	2	4	ளொளிமருவி
	3	2	யோங்கு
	4	1	வுருவிலுறை
226	1	16	ரத்தொழிலை [விஞ
		6, 7	வத்திசையுமசை வத்திசையுமிசை [விஞ
		11	முடகிலெனி முடகிலதி முடகிலென
	4	13	நெறிசொருகு
		22	தருக
		23	வுணருமவர்
227	2	6	சூரிகடன்
228	2	3	களப
	4	13	கிரிநிலை
		14	கவர்தலை
229	2	3, 4	பொழிந்தி டுங்காற்
230	3	3	மூர்த்தியுட
	4	3, 4	வோமென்ன வேத
231	2	1	நன்றென
		2	நீர்சுடர்தூவ
		5	வெள்ளிலை கொடுத்துக், விலைகொடுத்துக்
	4	2	செவித்தெம்
		3	பெருமான்பதம்
		3	பாத
		4	மெண்ணுங்கண்
		5	முனிகளென்ருன்
232	1	1	ஆழுநிலை
		4	முடிந்ததற்பின்
	4	3	லோகமடைந் யோகமடைந்
233	2	2	லுயர்த்த
234	1	3	யர்த்தபு

234	3	4	டிந்தநான்
	4	4	வாழ்கவே
		8	வாழ்சவே
235	4	3	மெய்ம்மை
236	3	3	மெய்ம்மை
237	1	2	லாமவற்றின் படியெனக்குக்
239	3	3	ரெல்லார்க்கு
240	1	2	கதர்மன்னர்
241	3	3	தவமிலியேன்
243	2	4	கரம்வைத்துந்
	3	2	மவர்தமக்கும்
		3	வழங்கியுந்தான்
		3	மிகவெள்கு
244	3	1	தண்மைகுறை
245	1	2	விமையறியுந்
	2	3	பாசுரஞ்சேர்த்
		4	துருக்குணங்கள்
247	1	4	ளனைத்துக்கு
	2	1	மாறுமதின்
	3	2	னெனவேகொண்
		4	ரிணையடிமேற்
249	2	1	டெள்ளிசையின்
250	2	2	ஞுயுலகில்
252	2	2	தனக்கேற்றிப்
		4	பயன்கொண்டு
	3	1	மையுறவு
	4	4	மெய்யவனே
253	2	2	நால்வகையுஞ்
		4	னெனத்தவழ்ந்து
254	1	1	யமநியமோ
		2	பாசனங்க
256	4	1	முருநிலங்கொண்
257	1	1	தன்றிருமா
		2	துடனேதான்
	3	3	முழுக்கத்தன்
258	2	1	னயங்கள்சேர்
259	1	2	ளழிவதின் ளழிவதர் ளழிவதன்
		3	முனம்வரு
	2	4	ரடியிணை
261	4	3	வெனவரு
262	1	1	நிறையுடை
	2	4	யெனுமவர்
	3	2	யதிலவ யதிலெவ யிலனவ

264	3	4	ரடைவர்க
	4	1	ளருகணை
265	3	4	மறையெனு
268	1	4	மிகுமையி
	4	1	கருதிய
369	2	3	மாயோன்
		6	தானுகு
	3	1	சூரியர்க
		2	டம்முடனே
		3	துலங்குவார்
270	4	3	மாயோன்
271	2	7	மிலாதார்
	3	2	கின்றறிவு
272	1	2	தாம்வணங்கா
	4	6	ளமைக்கொள்வார்
274	2	6,7	வழிநடத்தவைத்
	3	6	வாழ்ச்சிநமக் [தார்
	4	1	பொருளான
		2	வடிமைநமைக்
		5	பொறியாமற்
275	2	7	புகழ்வார்
			பொலிவார்
	4	6	விரவழித்தார்
276	4	2,3	நீபுலம்பேலென்பார்
277	1	7	மலிந்தார்
278	3	7	வந்தார்
279	4	1	திறத்திலிவை
280	3	1	வாச
281	1	5	முகந்தெடுத்துக்
	2	1	காரணி
			காரண
		5	மேற்குநின்
	3	1	ரூரண
	2	5	மேற்குநின்றே
	3	1	யாரண
282	2	5	மேலுநல்கிப்
	4	3	மாகியதொல்
283	1	2	னென்னுங், னென்று
	3	4	தீர்த்தெம்மை
285	2	2	யிருந்துபண்
286	3	5	தாடுமிறை
289	1	1	என்னிருடீ
			என்னிருடி
290	1	2,3	நாப னென்பின்
		5	மன்னிநின்றே
	2	1	யம்பொற்
291	3	3	ரோவென்ன
292	1	1	கற்றுத்

293	1	5,6	மறையென்றோராத்
			மறையென்றோர
	2	1	தாவலைப், தாவலுப்
		5	றலமரு
	3	4	றுவக்கமா,
			றுடக்கமா
		4	றுலக்கமா
		5	மணிவண்ண
	4	3	தகவாய்க்
294	1	4,5	லெனக்குநானுரியே
	3	2,3	வெழுத்தை நாலாம்
295	1	2	ளிகழ்ந்து
		3,4	மற்றுங் கழித்தழிந்
		4	மிகழ்ந்தழிந்
	1	4	மழிந்தழிந்
	2	2	ளிகழ்ந்த
		4	லிரங்கிநீர்
		6	வீழ்வீ
	3	4	ருயிர்களுக்
	4	4	றெண்ணிநீ
296	2	4	முகமிழந், முகமிகழ்ந்
298	1	6	மாயா
	2	1	வுனதெனு
	3	5	மிரண்டு
300	3	5, 6	கபய மென்றப்
	4	5	படிமி
301	1	4	லுகந்தகுற்
	4	3	தோன்றும்
302	3	1	பண்டுநான்
303	2	5	விரண்டிசைந்து
304	4	3	வார்சிறந்த
305	2	4	றேன்று
306	3	3	ராய்ச்சிறந்
307	1	1	வானவர்
310	1	4	மென்றேயறிந்
311	1	2	வகல
	2	2	தனைத்துட
		3	கழல்படிந்
		5	கடிந்திடவெம்
	3	1	வடிசூடி
313	2	1	தனதென்றுந்
		2	தானென்று
	3	1, 2	மனதொன்ற, வின்று
			மனதொன்ற, நின்று
314	1	2	திருவாளர்
	2	1	கேர்க்குந்
	3	2	சரணத்திற்
		4	னன்னிலை

314	4	3	ளெல்லாங்
315	2	3	கேற்க
	3	5	றனைத்தொழுகவென்
316	1	1	வறுமை
	2	2	னின்றவை
		3	யெட்டக்
		2	னின்னவை
		3	யெட்டக்
		4	குதித்திடுங்
	3	3	மொன்றைப்
318	2	4	தமர்க்கொரு
	3	2	ளோடும்
		4	ளோடுங்
		5	திகழுநின்ற
	4	1	விண்ணுறை
319	1	5	லுள்விழுந்து
	4	3	பரமணு
		5	நல்கின்றதே
320	1	5	கொண்டுநம்மே
	2	1	னடைவில
	4	2	வென்றுரைத்
321	1	3	கற்கும்
		5	காட்ட நின்ற
322	2	1	னன்னிலை
	3	4	பாண்டவர்
		5	தேர்தனிலு
323	3	1	பாடு
324	2	5	யினிச்சிறிது
	3	3	றனைத்து
327	1	5	வுற்றவங்காட்
	1	4	யாருற
		5	வற்றவங்காட்
	4	4	வமைந்தனர்
		5	நாரணரே
330	3	2, 3	வுயிர்நிலைகண்
		2	வுயிர்நிலை
		3	யுங்கண்
	4	1	மறைவாழி
		3	னேயெனக்
		4	கின்றறி
331	1	4	காட்டுங்
	4	2	ரீச
332	2	5	பேரருளும்
334	2	1	பேராத
	4	1	தோரா
335	1	5	தனிமையையும்
	3	5	பத்தியையு
336	1	3	சிலமு
336	3	1	மெல்லையி
		2	லாதபத்
		3	தியெழு
338	2	1	மின்குணர்
341	1	2	டிலுமதின்
		5	வுயிர்களிலு
	2	5	நம்பரிலு
	3	4	களிலும்
342	2	1, 2	கோனை மருத
343	2	3	யும்வன்
	3	5	மேன்மையையு
344	2	5	செய்தனவுஞ்
345	1	3	மருந்தொன்று
	3	3	கேட்டவ
	4	2, 3	கடலிற் றுளங்குகை
346	2	2	மாயன்
347	1	2	மடியவர்பான்
	6	2, 3	ராக மலங்கலா
			ராக வலங்கலா
	8	2	னுன்னே
348	3	1	வின்மணிக்
		4	றென்றனிம்
349	1	3	வும்மறை
	4, 5		யாக வயிந்தையில்வந்
	3	5	மெல்லியர்மேல்
350	2	1	மழியவன்
	4	4	நாயகநீ
	5	1	நின்றிரு
	9	1	பார்க்கட
	10	1	சீர்க்குணஞ்
	16	2	வணியென
		4	யணுகி
	17	1	விண்ணினு
	20	1	யென்னுரு
	25	2	தளிக்குங்
	26	1	நவிவதற்
		2	கென்றும்
			தென்னும்
		3	நல்வினை
	28	2	ருருவ
	30	1	டோருயி
	29	3	கென்னநின்
		4	றிருவுட
	30	1	னேருயி
	22	2	சூழ்ந்த
	35	4	யனைத்துங்
			யனைத்திற்
	36	1	றெல்வகை

350	36	2	காட்டத்
		3	துணிந்தநூ
352	2	5	கண்பணியா
353	8	2	மாய்தலின்
	19	1	னெங்கனு
354	3	2	மிக்கென்
355	3	1, 2	பற்பின் மறந்தசெய் பற்பி னமர்ந்தசெய்
		5	பண்புடையேம்
356	1	4	தெல்லாம்
	4	1 2	நின் பொருட்டன்றி
		3	யென்
	8	4	காரணமே
358	2	5, 6	அமரர் கட்க
		12	பலவு
		17	றிசைமு
		16, 17	விசையி றிசைமு
		20, 21	பத்த றுத்தனை
	3	1	நகரந்
359	1	4	கட்கோர்
360	1	4	நாயகர், நாயகா
	2	4	மணவாளனுர்
	3	2	தொழுமன், தொழமன்
		3	மதனே, மதனு
		4	நன்மணற்றோட்பின் மணத்தோப்பின்
	4	4	வருவிரே, வருவரே
361	1	4, 5	யுலகேழுமுண்
	2	2	மழனு, மயனு
		6	யினிமீண்டே யினிமீண்டென்
	3	4	ளருளா
362	1	6	மதக்களிற்றை
	4	1	மஞ்சலென
		2	வருண்மொழியும்
363	4	4	றருளென்
364	2	14	நாயகா
365	1	2	பொருந்திலும்
		3	போகின்
		4	றவற்றுடன்
	2	5	பேறினியென்
	4	2	பெறுவரு
366	2	5	செந்தமிழ்மும்
	4	2	மொய்யவழி
368	4	2	மெனவையயங்
	4	4	நூருஞ்
		5	செழும்பொருளை
		6	யெனக்கருள்செய்
369	3	2	லொருவருமன்
374	3	2	பெருங்குழூஉக்
375	2	5	றுயக்கறமால்
376	4	2	நூற்றுநாற்
377	4	8	தத்துரோகணி நாளுறையூர்வந்து
	4	1	சொல்லமல, சொல்வமல
379	3	6	மடறதனிற்பாட்
381	4	1	பண்ணியநா
382	1	5	பாணர்புகழ்
	4	5	வென்பவைநா
		6	லாயிரமு
		7	மெங்கள்
383	1	8	கவி
384	1	2, 3	வாரணங்க ளுலாய்
386	1	1	வாசலல்லா
		2	வாசலால்
388	4	5	சுரைபீர்க்குப்
		6	படல்தின்னுர்
389	1	5	சிறுவசனைப்
		6	பெருவசனை
	3	2	தின்னுணுக்
		3	கைப்புங்
		4	துவர்ப்புங்
391	3	6	நம்முள்ள
	4	2	ளொவ்வாத
396	2	8	மாமண் மாகு
398	3	5	யுரட்டிமுத
	4	7, 8	குலைந்த தாலே
400	3	1	பயிர்மறையைப்
		2	போலெடுத்த
402	1	7, 8	கலக்க நீருந்
403	3	1	சுற்றிலிலே
		2	யுஞ்சுண்ணும்
		5	சோகங்கொண்
404	2	5	பிறந்துநலங்
		6	தீங்கதனைப்
	3	5	பருகலா